# நடராஜ சன்மார்க்கம்

## மணி விழா மலர்



புகழ் பூத்த அதிபர்

"வித்தியா விஜய ஸ்ரீ சம்மன"

**திரு.செ.சிவநடராசா**




வெளியீடு

மணிவிழா மலர்க்குழு

யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

2009

அதிபர் செ. சிவஞானம்

மணி விழா

அதிபர் செ. சிவஞானா

மணி விழா

அதிபர் செ. சிவநடராஜா

மணி விழா

# நடராஜ சன்மார்க்கம்

யா / ஏழாலை மேற்கு
சைவ சன்மார்க்க வித்தியாசாலையின்
புகழ்பூத்த அதிபர்
வித்யா விஜயஸ்ரீ சம்மன
திருவாளர் செல்லர் சிவநடராசா
B.A., (SLPS 2.1), G.S.Q – Maths, Special Trd.
அவர்களின்

4108 / 930

# மணி விழா மலர்

வெளியீடு :

மணிவிழா மலர்க்குழு.
யா / ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை,
சுன்னாகம்.

2009.

| | | |
|---|---|---|
| பெயர் | : | நடராஜ சன்மார்க்கம்,<br>திரு. செல்லர் சிவநடராசா அவர்களின் மணிவிழா மலர். |
| பதிப்பு | : | 2009, மாசி. |
| நூலின் பருமன் | : | B4 |
| தாளின் தன்மை | : | 70g |
| அச்சு எழுத்து | : | 12 |
| பக்கங்கள் | : | 406 + xxxii |
| பிரதிகளின் எண்ணிக்கை | : | 500 |
| அச்சுப் பதிப்பு | : | Andra பதிப்பகம், உப்புமடம் சந்தி, கோண்டாவில். |
| வெளியீடு | : | அதிபர் திரு. செல்லர் சிவநடராசா அவர்களின் மணிவிழா மலர்க்குழு,<br>யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை, சுன்னாகம். |
| அமைப்பும் தொகுப்பும் | : | மலர்க்குழு. |
| பதிப்புரிமை | : | அதிபர் செ. சிவநடராசா அவர்களின் மணிவிழா மலர்க்குழு. |
| Name of the Magazine | : | Nadarajah Sanmarkam,<br>Diamond Jubilee Souvenir. |
| Printed | : | February, 2009. |
| Book size | : | B4 |
| Paper weight | : | 70gsm |
| Font size | : | 12 |
| Pages | : | 406 + xxxii |
| Number of copies | : | 500 |
| Printers | : | Andra Digital Image, Uppumadam Junction, Kondavil. |
| Published by | : | Diamond Jubilee Souvenir Committee.<br>J/ Erlalai west Saiva Sanmarka Vidyasalai, Chunnakam. |
| Copy Right | : | Diamond Jubilee Souvenir Committee. |




*அலுவலகக் கடமையில் அதிபர்*

வித்யா விஜயஸ்ரீ சம்மன **செல்லர் சிவநடராசா** B.A., (SLPS 2.1),
G.S.Q – Maths, Special Trd.

# பொருளடக்கம்


நுழைப்புலம் ix

## ஆசியுரையும் வாழ்த்துரையும்

1. சோமசுந்தர தேசிக ஞானசம்மந்த பரமாச்சார்ய சுவாமிகள் x
2. மகாராஜ ஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் xi
3. பாலமனோன் குருக்கள் xii
4. திரு. ஆறு. திருமுருகன் xiii
5. பேராசிரியர் க. குணரத்தினம் xiv
6. பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை xv
7. பேராசிரியர் இ. சண்முகலிங்கன் xvi
8. பேராசிரியர் இ. குமாரவடிவேல் xvii
9. திரு. க. கணேஸ் xviii
10. திருமதி. ச. மஞ்சுளாதேவி xix
11. திரு. இ. இளங்கோவன் xx
12. திரு. வீ. இராசையா xxi
13. திரு. ப. விக்னேஸ்வரன் xxii
14. திரு. செ. குபேரநாதன் xxiii
15. திரு. சி. கிருஷ்ணானந்தன் xxv
16. திரு. தி. க. ஆனந்தராசா xxvi
17. செல்வி. சி. உதயகலா xxvii
18. ஆசிரியர் நலன்புரிச் சங்கம் xxviii
19. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் xxix
20. ஏழாலை முத்தமிழ் மன்றம் xxx
21. மக்கள் மன்றம் – கனடா xxxi

❖ **மணிவிழாக் காணும் நாயகனின் வாழ்க்கைச் சரிதத்தின் ஓர் அத்தியாயம்**
**செல்வி. ந. கவிதா** 1

## கட்டுரைகள்

### சமயம்

1. ஏழாலையில் சைவ ஆலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும் 9
   **திரு. சிவ. சண்முகவடிவேல்**
2. நன்னயக் குணம்பல மன்னிய செல்வன் பொன்னையாபிள்ளையெனும் அருளானந்தசிவம் 21
   **திரு. சி. ரமேஷ்**
3. இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா அவர்கள் 29
   **பண்டிதமணி மு. கந்தையா வெளியீட்டுக் கழகம்**

4. சித்தாந்த வித்தகர் வாழ்வும் வளமும் 33
**திரு. சி. சக்திகிரீவன்**
5. ஆத்மஜோதி முத்தையா 36
**திரு. சி. சக்திகிரீவன்**
6. பெரிய புராணத்தில் பக்தி 39
**வாழ்நாள் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
7. நாவலர் பெருமானின் சிந்தனைகள் 44
**பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்**
8. இந்து நாகரிகத்தில் அறம் – ஓர் அறிமுகம் 47
**பேராசிரியர் கலைவாணி இராமநாதன்**
9. தவமுனிவனின் தமிழ் மந்திரம் 60
**சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்**
10. பெரியபுராணத்தில் திருநின்ற செம்மை 66
**திரு. ஏ. அனுசாந்தன்**

## தமிழ் மொழியும் இலக்கியமும்

11. ஏழ்தலப் புகழூர் மைந்தன் சி. வை. தா 69
**திருமதி. ச. தமிழ்ச்செல்வி**
12. கனகி புராணம் தந்த பைந்தமிழ்ப் புலவர் நட்டுவச் சுப்பையனார் 72
**செல்வி. ர. மகிஷாயினி**
13. பூதத்தம்பி 74
**செங்கை ஆழியான்**
14. ஏழாலையின் எழுத்தாளர்கள் 83
**திருமதி. மு. இந்திராணி**
15. தமிழ் இலக்கண ஆசிரியர்களின் சொற்பாகுபாடு 91
**பண்டிதர் க. நாகலிங்கம்**
16. பண்டிதமணியும் அவர் தமிழ்நடையும் 93
**வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
17. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள் 98
**பேராசிரியர் சி. சிவலிங்கராஜா**
18. பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல் 106
**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
19. இலங்கையர்கோன் சி. வைத்திலிங்கம் ஆகியோர் சிறுதைகள் மறு மதிப்பீடு 111
**கலாநிதி செ. யோகராசா**
20. வள்ளுவத்தில் இலக்கிய உத்திகள் 116
**திரு. ஈ. குமரன்**
21. இலக்கிய வளர்ச்சியில் ஈழத்துச் சஞ்சிகைகள் 120
**திரு. த. சிவசுப்பிரமணியம்**

22. புலவரையிறந்த புகழ்சால் தோன்றல் நற்றமிழ் வித்தகர் நமசிவாயதேசிகர் -
தல இலக்கியப் பனுவல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் நோக்கு 124
**சி. ரமேஷ்**
23. இராமவதாரம் காட்டும் உண்மை 129
**திரு. வ. கோவிந்தபிள்ளை**
24. ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம் குமாரசாமிப் புலவரின்
தமிழ்ப்புலவர் சரித்திரம் - ஓர் ஒப்பாய்வு 134
**திரு. பா. மகாலிங்கசிவம்**
25. தாய்மொழி பேணாத தமிழர்கள் 138
**கவிஞர் சோ. பத்மநாதன்**
26. இப்படிப் போனால் எப்படிப் போகும் 142
**விகடகவி மு. திருநாவுக்கரசு**
27. கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் வழங்கும் வாய்மொழி இலக்கியம் -
சில குறிப்புகள் 146
**திரு. ரமீஸ் அப்துல்லாஹ்**

## சமூக விஞ்ஞானம்

28. அறிவின் வழியான சமூக மேம்பாடு - சாதனைகளும் சவால்களும் 149
**பேராசிரியர் நா. சண்முகலிங்கன்**
29. வறுமையும் அது எதிர்நோக்கும் சவால்களும் அவற்றைத் தவிர்ப்பதற்காக
எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளும், அபிவிருத்திச் செயற்பாடுகளும் -
உடுவில் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய
ஓர் ஆய்வுக் கண்ணோட்டம் 153
**திருமதி மஞ்சுளாதேவி சதீசன்**
30. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 158
**பேராசிரியர் கணேசலிங்கம்**

## பொருளாதாரம்

31. நிதிச் சந்தையின் அறிமுகமும் அதன் நடைமுறைகளும் 170
**திரு. சி. ஜெயவர்மன்**
32. சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவு முறைகள் 172
**திரு. அ. குமாரவேல்**
33. வெளிநாட்டு வர்த்தகத்தில் வங்கிகளின் பங்கு 175
**திரு. நடராஜா**
34. வங்கிகளும் வாடிக்கையாளர்களும் 179
**திரு. மு. சிவநேசன்**

35. ஆயுட் காப்புறுதி : அறிமுகம் 183

திரு. பா. சுதாகரன்

அலுவலக முகாமைத்துவம்

36. அரச அலுவலகங்களின் இருப்பு முகாமைத்துவம் 189

திரு. க. கமலரூபன்

அபிவிருத்தி

37. நாடுகளின் அபிவிருத்தியில் அரசுகளின் பங்கு 193

திரு. சி. கிருஷ்ணானந்தன்

சட்டவியல்

38. பதிவாளர் நாயகத்திணைக்களமும் பிறப்புப் பதிவும் 198

திரு. ப. பிரபாகர்

39. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆதனச் சட்டங்களும் வழியுரிமைகளும் 204

திருமதி. ரதி நகுலேஸ்வரன்

புவியியல்

40. ஏழாலை வரைபடம் 208

திரு. இ. தர்மசீலன்

41. அபிவிருத்திப் பாதையில் சுன்னாகம் 209

வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

42. இலங்கையின் வடகீழ் மாகாணத்தில் மாற்றுச் சக்தி வளங்கள் –

ஓர் புவியியல் நோக்கு 215

பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்

43. இலங்கையில் சக்தி வளம் – சிறப்புப் பார்வை மின்சக்தி வளம் 225

திரு. இ. ஸ்ரீகாந்தன்

44. ஓசோன் படையின் அழிவு 238

கலாநிதி இ. ஸ்ரீகரன்

45. வால் நட்சத்திரங்கள் 241

கலாநிதி. நா. சிவயோகன்

வரலாறு

46. இலங்கைத் தமிழர் வரலாறு மீள் கண்டுபிடிப்பில் தொல்லியற் சின்னங்கள் பெறும்

முக்கியத்துவம் 245

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்

47. யமுனா ஏரி – யாழ்ப்பாண அரசுகால நினைவுச் சின்னம் 253

செல்வி. ச. குமாரதேவன்

**விளையாட்டு**

48. ஒலிம்பிக் வரலாறு பற்றிய ஓர் கண்ணோட்டம் 257
**திரு. சு. இளங்கோவன்**

**கலை**

49. தென்னாட்டின் மூல இசை மரபு – ஓர் ஆய்வு 262
**கலாநிதி. நா. வி. மு. நவரத்தினம்**

50. பண்டைத் தமிழர் இசைக்கருவிகள் 269
**கலாநிதி. மா. வேதநாதன்**

51. பரதநாட்டியம் – ஒரு வரலாற்று நோக்கு 275
**பேராசிரியர் வி. சிவசாமி**

52. பரத நாட்டியமும் இந்து சமயமும் 282
**திருமதி. கிருஷாந்தி இரவீந்திரா**

**கல்வியியல்**

53. யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை வரலாறு 285
**திரு. சிவ. சண்முகவடிவேல்**

54. ஏழாலைக் கிராமப் பாடசாலைகள் பற்றிய வரலாற்று நோக்கு 291
**செல்வி ந. பிரதா**

55. மீள் பாடசாலையாக்கற் சமூகம் 299
**பேராசிரியர் சபா. ஜெயராசா**

56. முன்பள்ளி – ஓர் அறிமுகம் 303
**திரு. அ. பஞ்சலிங்கம்**

57. ஆரம்பக் கல்வியில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மாணவருக்கான வழிநடத்தலும் செயற்பாடும் 305
**திரு. வே. அன்பழகன்**

58. பாடசாலைத் தலைமைத்துவம் 314
**திரு. க. தேவராஜா** – (பீடாதிபதி வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

59. பாடசாலைகளில் முழுத்தர முகாமைத்துவப் பிரயோகங்கள் 321
**திருமதி. அ. வேதநாயகம்**

60. பாடசாலை நிர்வாகத்தில் நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் 324
**திரு. ஸ். ரமேஷ்**

61. பாடசாலைகளில் உள சமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு 327
**செல்வி. சி. உதயகலா**

62. கல்வியின் முக்கியத்துவம் 335
**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**

63. நல்லாசிரியனே ஞானவிளக்கு 338
**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**

64. பரீட்சைகளில் வெற்றி பெறுதல் 340

**திருமதி கோகிலா மகேந்திரன்**

65. சுதந்திர இலங்கையின் கல்வி நிர்வாக மாற்றங்கள் 344

**திரு. க. ஸ்ரீகுமரன்**

66. அடிப்படை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நெறியின் அவசியம் 352

**திருமதி த. அனந்தகிருஷ்ணன்**


## மருத்துவம்


67. சிறுநீரிழிவு 355

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**

68. ஆரோக்கிய வாழ்க்கையும் சித்த மருத்துவ முறையும் 363

**வைத்திய கலாநிதி மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன்**

69. அகுபங்சர் 368

**வைத்திய கலாநிதி K. ஸ்ரீராம்**


### சமூகவியல் தொடர்ச்சி...


70. நெக்டெப் திட்டமும் அதன் செயற்பாடுகளும் 381

**திரு. கி. பிரசன்னா**


## Contributions in English


71. Playing with parai Araivon (herald) in Kooththu (traditional theatre) of the thamils of Sri Lanka. 385

**Mr. S. Jeyasankar**

72. Global warming and climate changes – an overview 391

**Prof. K. Kunaratnam**

73. For banking on banks 399

**Mr. R. Suntharalingam.**

நல்லுதய பானு நடராஜ சன்மார்க்கம்
சொல்லும் பொருளும் சுவைநலத்தாற் – பல்கிப்
பெருவிருந் தென்றே பொலிவா யுலாவக்
கருணா கரப்பிள்ளை காப்பு.

# நுழைப்புலம்

"மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க்கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது"

என்னும் பூதஞ் சேந்தனார் கூற்றுக்கமைய வையத்துள் வாழ்வாங்கு வாழும் பெருந்தகை அதிபர் திரு.செ.சிவநடராசா அவர்கள் அறுபது அகவை காணும் புலமைச் சான்றோன். அனுபவம் சார் உலகியல் ஞானத் தெளிவும், ஆன்மீகம் சார் மெய்யியல் உணர்வும், அறிவுசார் புலமைத் திறனும் மேலோங்கி நிற்கும் இவ் அகவையில் கொண்டாடப்படும் விழாவே சஷ்டியப்தப் பூர்த்தி விழாவாகும்.

கடந்த காலங்களில் திரு. செ. சிவநடராசா அவர்கள் அதிபராகவிருந்த வேளையில் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை அவரின் அரிய முயற்சியினால் உடுவில் கோட்ட மட்டத்தில் மாத்திரமன்றி வலிகாமக் கல்வி வலயத்துக்கப்பாலும் தனக்கு ஒப்புவமையில்லாப் பாடசாலையாக விளங்கியது. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இவராற்றிய அரிய சேவைக்கொப்பாக காத்திரமான முறையிலும், பவித்திரமான வகையிலும் மணிவிழாச் சிறப்பு மலரொன்று வெளியிட வேண்டுமென அதற்கென நியமிக்கப்பட்ட விசேட சபையினரால் தீர்மானிக்கப்பட்டது. அந்த விருப்பின் வெளிப்பாடே "நடராஜ சன்மார்க்கம்" என்ற இம்மலராகும்.

அதிபரின் முகாமைத்துவ ஆற்றலால் பாடசாலை கீர்த்தி பெற்றுத் துலங்கியதைக் கருத்திற் கொண்டு அதிபரின் நாமத்துடன் பாடசாலையின் நாமத்தையும் இணைத்து "நடராஜ சன்மார்க்கம்" என்னும் பெயரில் இம்மலர் வெளிவருவது காலத்தின் தேவையாகும். சமயம், மொழியியல், இலக்கியம், கல்வியியல், சமூகவியல், பொருளாதாரம், அரசியல், சட்டவியல், புவியியல், வரலாறு, விளையாட்டு, மருத்துவம், கலை எனப் பல்துறைசார் அறிஞர்களின் கட்டுரைகள் பல இந்நூலில் இடம்பெற்று ஈழத்தில் தமிழ் ஆய்வுப் போக்குகளை விளக்கி நிற்கின்றன. தன்னலம் கருதா மண்ணலம் கருதி நன்னலம் செய்யும் அனைவரின் அயராத உழைப்பினால் இம்மலர் ஆக்கபூர்வமானதாகவும், அறிவுபூர்வமானதாகவும் வடிவமைப்பில் செம்மையானதாகவும் வெளிவருகின்றது.

காத்திரத் தன்மையான இம்மலருக்குக் கட்டுரைகளைத் தந்துதவிய புலமைச் சான்றோருக்கும், கட்டுரைகளை உரியவர்களிடம் பெறுவதற்குக் கால்கோளாகவிருந்த அனைவருக்கும் குறிப்பாக திரு.க. தேவராசா (பீடாதிபதி, வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்), சோக்கல்லோ சண்முகம் ஆகியோருக்கும், இந்நூலின் கணிப்பொறி அச்சு உருவாக்கத்தில் பங்காற்றிய திரு. த. கஜேந்திரன், செல்வி. சு. தாரணி, செல்வி. ப. சுகிர்தா ஆகியோருக்கும், மெய்ப்புத்திருத்துவதில் உதவியோருக்கும், இந் நூல் உருவாக்கத்திற்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய சு. இளங்கோவன், திரு. க. ஸ்ரீகுமரன், செல்வி. தி. சுகன்யா ஆகியோருக்கும், இவற்றுக்கு மேலாக இந்நூல் நன்முறையில் வெளிவருவதற்கு பொற்குவை தந்துதவிய கொடையாளர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. இம்மலரைச் சிறந்த முறையில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நூலுருவாக்கம் செய்து தந்த Andra நிறுவனத்தாருக்கும் மலர்க்குழுவானது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இப்பணியில் எம்மை அருகில் நின்று ஆற்றுப்படுத்திய ஏழாலை கருணாகரப் பிள்ளையாரை இத்தருணத்தில் மீண்டும் ஒருமுறை மனங்கொள்ளுகின்றோம்.

மணிவிழாக் காணும் அதிபர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து பாடசாலைக்கும், சமூகத்துக்கும் சேவைபுரிய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.

**பதிப்பாசிரியர்கள்.**



# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்!

அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் சிவநடராசா அவர்களைக் கௌரவித்து 'நடராச சன்மார்க்கம்' எனும் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கற்றவர்களையும், கற்றபடி ஒழுகியவர்களையும், சமய ஆசாரம் கொண்டவர்களையும் பல சைவ ஆலயங்களைக் கொண்ட ஏழாலை மேற்கு எனும் புனிதப் பிரதேசத்தில், சைவசன்மார்க்க வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய சிவநடராசா அவர்களின் பணி எல்லோராலும் போற்றத்தக்கதாக அமைந்திருந்தது. அறிவு, ஆற்றல், செயற்திறன், எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றும் திறன், இறைபக்தி, இன்முகம், எல்லோரையும் மகிழ்விக்கின்ற நவஆற்றல் ஒருங்கே அமைந்த சிவநடராஜா அவர்களின் பணி, காலத்திற்கு ஏற்றதாக அமைந்திருந்தது. மண்ணில் பிறந்த மனிதர்கள் யாரேனும் மனிதர்களாக வாழ்வதற்குக் கல்வியே கண்ணெனப் போற்றப்படுகின்றது. இதனை வழங்குவதே பாடசாலைகள் ஆகும். இப்பணியைச் செய்பவர்கள் இறைவன் எனக் கூறப்படுவர். இதனையே எழுத்தறிவித்தவன் இறைவனாவான். இதனையே வள்ளுவரும்,

"தாம் இன்புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

எனக் கூறியுள்ளார். இப்பணிக்காக உழைப்பவர்கள் அதிபர், ஆசிரியர்களும் ஆவர். இவ்வரிசையில் சிவநடராசாவும் இடம்பிடித்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இவர்களுடைய பணிகளை வாழ்த்தி, ஆடலரசனின் பெயரில் நடராஜ சன்மார்க்க மலர் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையட்டும். இக்கௌரவப் பணியைச் செய்யும் அன்பு உள்ளங்களை வாழ்த்துகின்றோம். சிவநடராசா ஓய்வு காலங்களில் சமய, சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு மண்ணில் நல்லவண்ணம் வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**



# ஆசியுரை

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் செயற்பாடுகளைக் கடந்த பல வருடங்களாக அவை எவ்வளவு பயன்பெறும் வளங்களால், அதிபர்களும் ஆசிரியர்களும் முன்நகர்த்தினர் என்பதைக் கண்டுள்ளேன். பன்னிரண்டு ஆண்டுகளாக அதிபர் திரு. செ. சிவநடராசா அவர்கள், வித்தியாலய இருப்பிட அழகு, கட்டடங்களது தூய்மை பேணல், கற்கும் மாணவ மாணவிகளது உடல் நலம், மனநலம், சுகாதாரம், கல்வி கற்பித்தலில் ஏற்றங் கொள்ளவுள்ள ஆற்றுப்படுத்தல்கள், இவ்வாறெல்லாம் தனது அறிவின் சிகரத்தினின்று செயற்பட்ட தர்மசீலர். கிராம மக்களாலும் ஆசிரிய சமூகத்தினராலும், மாணவ மாணவிகளது பெற்றோர்களாலும், அரச உயரதிகாரிகளாலும் நன்கு மதிக்கப்பட்டவர். இப்போது அவருக்கு கௌரவமளிக்கும் சார்பில் "நடராஜ சன்மார்க்கம்" எனும் மலரினை அவரது மணிவிழாவின் சிறப்பம்சமாக வெளியீடு செய்வதும் அவசியம் வேண்டுவதுதான். காலத்தால் அறிந்து செயற்படும் இத் தர்ம கைங்கர்யம் பெரும் பலன்களைத் தந்து நிற்குமென்பதில் ஐயமேயில்லை.

மணிவிழாக்காணும் செ. சிவநடராசா அவர்கள் நீடூழி வாழ்ந்து, எக்காலமும், எவரும் நினைவில் கொள்ளும் சிவதொண்டுகட்கு உயிர்ச்சத்துக்களை வழங்கி, நிறைந்த திருவருட் செல்வங்களோடு இனிதே வாழ, மாவைக் கந்தசுவாமியாரது திருவருட் துணைகள் இவரிடம் இணையவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்**
மாவையாதீனகர்த்தா – பிரதமகுரு.



# ஏழாலை கருணாகரப் பிள்ளையார் பிரதம குருக்களின் ஆசியுரை

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் ஈராறுவருடங்கள் அதிபராக இருந்து ஓய்வு பெறப்போகும் திரு. செல்லர் சிவநடராசா அவர்கள், இப்பாடசாலையில் தன்னால் இயன்ற முயற்சியெடுத்து புனர்நிர்மாண வேலைகளையும், மாணவர்களின் ஒழுக்கம், கல்வி, பாடசாலையின் வளர்ச்சி போன்ற கைங்கரியங்களையும் திறம்படச் செயலாற்றியுள்ளார். இத்தருணத்தில் 2008.11.28ஆம் திகதியில் ஓய்வுபெறும் இவ்வதிபருக்கு எல்லாம்வல்ல திருவருள்மிகு கருணாகரப் பிள்ளையாரின் திருவருளுடன்கூடிய ஆசிகூறுவதில் பெருமையடைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி. விளங்குக உலகமெல்லாம்"

இவ்வண்ணம்,

**அகோரசிவ.சிவஸ்ரீ.பால.பாலமனோன் குருக்கள்,**

(திருவருள் மிகு கருணாகரப் பிள்ளையார் மடாலயம்).



# ஆசிச் செய்தி

ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையின் வியத்தகு வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர் வரிசையில், முதன்மை மிக்கவராகப் போற்றப்படுபவர் உயர்திரு. செ. சிவநடராசா அவர்கள். அர்ப்பணிப்புமிக்க சேவையினால் பலரது பாராட்டைப் பெற்றவர். இணுவில் இந்துக் கல்லூரியில் இவர் ஆற்றிய சேவையையும் யான் நன்கு அறிவேன். தன்னலம் கருதாது மாணவர்களின் கல்வியில் கண்ணும் கருத்துமாக விளங்கிய இப்பெரியாரின் சேவையைக் கௌரவிக்குமுகமாக விழா எடுப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். கல்வித் தெய்வமாகிய சரஸ்வதிக்குச் சிலை எடுத்துப் பாடசாலை வாயிலில் அருள்பெருகச் செய்த அதிபரின் தெய்வீக முயற்சிகளால் இப்பாடசாலை பெற்ற பேறுகள் ஏராளம். பண்டிதர்கள், பாவலர்கள், வித்துவான்கள், சித்தாந்த வித்தகர்கள், பேராசிரியர்கள் பலரைத் தோற்றுவித்த இப்பாடசாலையின் மேன்மைக்குச் சிறப்புச் செய்த அதிபர் அவர்கள், பல்லாண்டு பல்லாண்டுவாழப் பிரார்த்தித்து, எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளால் மணிவிழா நன்றே சிறக்க நல்வாழ்த்தும் ஆசியும் கூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் என்றும் இன்னுரைதானே"

**ஆறு. திருமுருகன்**
தலைவர் ,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



# முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

யா / ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் கடந்த பன்னிரண்டு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி, அப்பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பெரும் தொண்டாற்றிய திரு. சிவநடராசா அவர்கள் இந்த வருட இறுதியில் தமது அறுபதாவது வயதைப் பூர்த்தி செய்து, பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிகிறேன். அவரைக் கௌரவிக்கும் முகமாக ஏழாலைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மலரொன்று வெளியிட இருப்பதையிட்டு அக்கிராமத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும், இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்றவன் என்ற முறையிலும் மகிழ்ச்சியடைகிறேன்.

1940ம் ஆண்டு தொடக்கம் 1944ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏழாலை வடக்கிலுள்ள எனது இல்லத்திலிருந்து ஒரு மைல் தூரத்திற்கும் அப்பால் ஏழாலை மேற்கில் இ ருக்கும் இப்பாடசாலைக்கு நடந்து சென்று கல்வி பயின்றுவந்தேன். அக்கால நினைவுகள் இப்பொழுதும் எனது மனதில் பசுமையாகவும் இனிமையாகவும் உள்ளன. எனது இல்லத்திற்கு அண்மையில் பாடசாலைகள் இருந்தபொழுதும், எனது ஆரம்பக் கல்விக்காக இப்பாடசாலையைத் தேர்ந்தெடுத்ததன் காரணம், அக்காலத்தில் இப்பாடசாலை பிரபல்யமடைந்திருந்தமையும், எனது சிற்றன்னை இப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தமையுமே ஆகும்.

இப்பாடசாலையில் கடமையுணர்வும், கண்ணியமும், ஆற்றலும் மிக்க பல ஆசிரியர்களின் கீழ் சைவசமயச் சூழலில் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர்களில் அதிபர் இடைக்காட்டுச் சுப்பிரமணியம், கந்தசாமி உபாத்தியாயர் என அன்று அழைக்கப்பட்ட பண்டிதர் மு. கந்தையா, வேலுப்பிள்ளை, பூரணம்மா மற்றும் எனது சிற்றன்னை உமையம்மா போன்ற ஆசிரியர்களை இன்றும் நன்றிக்கடனுடன் நினைவு கூருகிறேன்.

இப்பாடசாலையில் பெற்ற ஆரம்பக் கல்வியை அடித்தளமாகக் கொண்டு வேறு பாடசாலைகளில் மேற்படிப்பைத் தொடர்ந்த பல மாணவர்கள் பிற்காலத்தில் வாழ்க்கையில் வெவ்வேறு துறைகளில் முன்னிலை வகித்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

புறச்சூழற் காரணங்கள் சிலவற்றால் சிலகாலமாக இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் தொய்வு நிலை ஏற்பட்டிருந்தது. திரு. சிவநடராசா அதிபராகப் பொறுப்பேற்றபின் அவரின் முயற்சியால் பாடசாலை பலவகையிலும் வளர்ச்சியடைந்து மீண்டும் முன்னிலை வகிக்கின்றது.

திரு. சிவநடராசா இப்பாடசாலைக்கு ஆற்றிய சிறந்த பணிக்காக அவரைப் பாராட்டி ஓய்வுநிலையில் அவர் நலமுடன் வாழ அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. குணரத்தினம்**
ஓய்வுநிலைப் பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தரும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# முன்னாள் துணைவேந்தரின் ஆசிச் செய்தி

திரு. செல்லர் சிவநடராசாவின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இவர் நீண்ட ஆசிரியப்பணி, கல்வி நிர்வாகப்பணி புரிந்து 60 வயது பூர்த்தியானதால் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் பன்னிரண்டு வருடங்கள் அதிபராகக் கடமை புரிந்து கோட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் சிறந்த அதிபர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டவர். இவர் ஜனாதிபதி விருது பெற்றவர்.

மாணவர்களின் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவரது கடின முயற்சியாலும் சரியான வழிகாட்டலாலும் 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் இவரது பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்துள்ளது.

சமூகப் பார்வை கொண்ட இவர் கிராம அபிவிருத்தியிலும் இளைஞர்களின் முன்னேற்றத்திலும் பெரும் ஈடுபாடு கொண்டவர்.

திரு. செல்லர் சிவநடராசா பல்வேறு ஆக்கப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட அவருக்கு இறைவன் நல்ல தேகச் சுகத்தைக் கொடுக்கவேண்டுமென வேண்டுகின்றேன்.

**வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
B.A. (Cey), PhD. Durham
முன்னாள் துணைவேந்தர்.

# துணைவேந்தரின் வாழ்த்து



அதிபர் திரு.செ.சிவநடராசா அவர்களின் சேவை நலனைப் பாராட்டும் கல்வியியல் மலரின் வரவு கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அர்ப்பணிப்புடன் ஆசிரியத்துவத்தின் மாண்புக்குப் பெருமை சேர்ப்பவர். திரு.சிவநடராசா-ஆசிரியர்-பெற்றோர் சமுதாய நலன்விரும்பிகளுடன் ஒருங்கிணைந்த அவரின் தலைமைத்துவத்தில் வித்தியாலய மாணவர்கள் சாதனையின் செல்வர்கள். அவர்கள், சூழமைவின் நெருக்கடிகளையும் தாண்டி வித்தியாசாலை வரலாறு படைக்கின்றது.

மேலான அதிபரின் பணியை மேன்மைப்படுத்தும் வண்ணம், கல்வியியல் சிந்தனைகளினால் அறிவாரம் சூட்டும் இந்த ஆக்கமுயற்சியைப் பாராட்டுகின்றேன்.

'பதவியிலிருந்து ஓய்வு' என்பது வயது கணிப்பு நியமங்களின் வழியானது. உண்மையான சேவை எல்லையற்றது. சமூகப் பயனான எங்கள் அதிபர் சேவை மென்மேலும் சிறக்கவும், நலமான வாழ்வில் அவரும், குடும்பத்தினரும் நிறைந்திடவும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்,**
**துணைவேந்தர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
28.11.2008.



# வாழ்த்துச் செய்தி

ஏழாலை மக்கள் ஏழு ஆலயங்களையும், மடாலயங்களையும் அன்றிக் கல்விக்கூடங்களையும் உருவாக்கி, நாவலர் வழியில் சமயத்தையும் கல்வியையும் இணைத்துப் பணியாற்றி வருவதில் முன்னிற்பவர்கள். இப்பணிகளின் மத்திய நிலையங்களாக இன்று விளங்குவன ஏழாலை மேற்கில் அமைந்துள்ள திருவருள்மிகு கருணாகரப் பிள்ளையார் மடாலயமும் சைவ சன்மார்க்க வித்தியாசாலையுமாகும்.

சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி பயின்ற பலர் நாடு போற்றும் பெரும் அறிஞர்களாகவும், கல்விமான்களாகவும் விளங்குகின்றனர். இவ்வித்தியாசாலையின் கல்விச் செயற்பாடுகள் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக விளங்குவதை அவதானிக்கலாம். இச்சிறந்த செயற்பாடுகளுக்கு அச்சாணியாகக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருபவர் இக்கல்லூரி அதிபர் உயர்திரு செல்லர் சிவநடராசா அவர்களாவார்.

திரு. சிவநடராசா அவர்களது சேவைக்காலத்தில், இவ்வித்தியாசாலை கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், பௌதீக வளங்களைப் பெருக்குவதிலும், சமூகத்துடன் இறுக்கமான தொடர்புகளைப் பேணுவதிலும் முன்னிலை வகித்தது.

திரு. சிவநடராசா அவர்களின் சேவைக்காலத்தில், கல்வி அபிவிருத்தியில் கோட்ட மட்டத்தில் முன்னிலையில் நிற்கும் பாடசாலையாகச் சைவ சன்மார்க்க வித்தியாசாலை தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. சிறந்த கோட்டமட்ட அதிபராக நற்சான்றிதழ் அளித்துப் பாராட்டப்பட்டவர் திரு. சிவநடராசா அவர்கள். இவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையின் பெறுபேறாக இவருக்குச் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. இவரது சேவைக் காலத்தில் அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடமொன்று பொலிவுடன் பாடசாலையின் பௌதீக வளத்தைப் பெருக்கி நிற்கிறது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசுத் தேர்வு முடிவுகள் ஆரம்பக் கல்வியில் மாணவர்களின் சாதனையைப் பறை சாற்றி நிற்கின்றன.

பாடசாலையின் இத்தனை முன்னேற்றத்திற்கும் மூலகாரணமாக விளங்கும் திரு. சிவநடராசா அவர்கள், ஓய்வுக்குரிய வயதை அடைவது காரணமாக 27.11.2008ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவரது சேவையைப் பாடசாலை இழப்பது மனதிற்கு மகிழ்ச்சியைத் தரவில்லையாயினும், காலவோட்டத்தின் நியதியை எவராலும் மாற்றமுடியாது என்பதைச் சீரணித்துத் தானாகவேண்டும். திரு. சிவநடராசா அவர்கள் ஓய்வுபெற்றபின்பும், பாடசாலை வளர்ச்சிக்குத் தம்மாலானதெல்லாம் செய்வார் என்பதில் ஐயமில்லை.

திரு. சிவநடராசா அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியானதாகவும், பயனுள்ளதாகவும் அமையவேண்டுமெனவும், அதற்கு இசைவாக அவருக்கு நல்ல தேக ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் வழங்குமாறும் எல்லாம்வல்ல கருணாகரப் பிள்ளையாரை வேண்டி அமைகிறேன்.

**பேராசிரியர் இ. குமாரவடிவேல்**
விஞ்ஞான பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற மகுட வாசகத்திற்கு ஏற்ப வாழ்ந்து வருபவர் திரு. செல்லர் சிவநடராசா அவர்கள். 1971.09.01இல் ஆசிரியப் பணிக்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இவர், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பணியாற்றியவர்.

படிப்பறிவையும், பட்டறிவையும் மூலதனமாகக் கொண்டு, தான் பிறந்த மண்ணாம் யாழ் மாவட்டத்திற்குத் திரும்பி வந்தபோது "எட்டுத் திசையும் சென்று அறிவுச் செல்வம் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற மஹாகவி பாரதியின் கூற்றுக்கும் இலக்கணமானார்.

தன் ஆசிரியப் பணியாலும், அதிபர் சேவையாலும் 1994இல் சிறந்த ஆசிரியர் விருதையும், 2005ஆம் ஆண்டு "வித்திய விஜய ஸ்ரீ சம்மனய" என்ற சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதினையும் தனக்குரியதாக்கிக் கொண்டார். அத்துடன், எண்ணிறைந்த மாணவ நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்றுக் கொண்டவர்.

மணிவிழாக் காணும் திரு. செல்லர் சிவநடராசா தன் குடும்பத்தினருடன் அமைதியான இனிதான வாழ்வைத் தொடரவும், தான் கற்ற கல்வி அடுத்த சந்ததிக்கும் பயனுறும் வகையில் ஆக்கபூர்வமான முயற்சிகளைத் தொடரவும், எல்லாம்வல்ல இறையருளைத் தியானித்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்!



**க. கணேஷ்,**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.

யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க
வித்தியாசாலையில் பன்னிரண்டு ஆண்டுகள் கடமையாற்றி
கடமையை நிறைவு செய்யும் அதிபர்

## திரு. செ. சிவநடராசா அவர்களின்

# மணிவிழா ஆசிச் செய்தி



ஏழு ஆலயங்கள் சூழ் ஏழாலைப் பதிதனிலே – சைவம்
ஏற்றமுற எழுந்த சைவ சன்மார்க்கமதைக் கல்வித்
தேற்றமுற வைத்த சிவநடராஜா எனும் அதிபர்
ஏற்றமுடன் வாழ வாழ்த்துகிறேன் வாழி!

காலத்தின் சூழ்நிலையால் பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியில் இன்று நிலைத்து நிற்கும் ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை, இன்று தோற்றப் பொலிவுடன் சகல வளங்களையும் கொண்டு, நகரப் பாடசாலைகளுக்குப் போட்டியாக வளங்கொண்டு சிறப்பாக நிமிர்ந்து நின்று கல்வி, கலை, கலாச்சார, சமய ஒழுக்க விழுமியங்களை, ஏழாலைப் பகுதி மக்களுக்கு வாரி வழங்குகின்றது என்றால் அதற்கு உறுதுணையாக இருந்த அதிபர் அவர்களின் அயராத முயற்சியின் பலன் என்றே கூறலாம்.

அன்றைய கல்விச் சமுகத்தினர் 1900ம் ஆண்டுகளில் அழிய இருந்த பாடசாலையை அழியவிடாது பாதுகாத்ததைப் போன்று ஏழாலைக் கிராம மக்களின் அரிய தேவையாம் கல்வி மற்றும், சமயத் தேவையையுணர்ந்து இப்பாடசாலையில் பன்னிரண்டு (12) ஆண்டுகளாகக் கடமையாற்றித் தன் பணிச் சிறப்பால் ஏழாலை வாழ் மக்களின் இதயங்களில் தனக்கென ஒரு இடத்தினைப் பெற்றுக்கொண்ட இவ் அதிபரின் பணி பாராட்டுவதற்குரியதாகும்.

சிரித்த முகமும், நேர்கொண்ட பார்வையும் அமைதியான தோற்றமும், அஞ்சா நெஞ்சமும், சாதித்துக் காட்டும் ஆர்வமும் கொண்ட அதிபராகத் திகழ்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளை மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் போதித்துப் பாடசாலையின் கல்வி, கலை, கலாசார சமய ஒழுக்க வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியது மட்டுமன்றி, ஏழாலை மேற்கில் சிறார்களின் கல்விக்கென உருவாக்கப்பெற்ற இப்பாடசாலையின் பெருமைமிகு தோற்றப் பொலிவை வரவழைக்கத் தன்னாலான முழுச் சேவையையும் மனமுவந்து அளித்து பாடசாலையைப் புதுப் பொலிவுறச் செய்த அதிபர் தம் அயராத பணி என்றென்றும் பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

சமூகத்திற்காக எதைச் செய்யவேண்டுமோ அதனை உரிய நேரத்தில் செய்யவேண்டுமெனும் ஆர்வத் துடிப்புடன், பாடசாலை வளர்ச்சிப் பணியில் இரவு பகல் பாராது, முற்றுமுழுதாகத் தன்னை அர்ப்பணித்ததுடன் மாணவர்களின் கல்வித் தரத்தினூடாக இப்பாடசாலையானது ஏனைய நகரப் பாடசாலைகளுக்குப் போட்டியாக முன்னணி நிலையில் நிலைத்து நிற்பதற்கு ஒரு மாபெரும் உந்துசக்தியாகத் திகழ்ந்த இவரது பணியை, ஏழாலைச் சமூகம் என்றுமே மறக்கமுடியாது.

தன்னலமே கண்ணாயிருக்கும் இந்நாளில் சமூக நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டு கல்விப்பணி, சமூகப்பணி சிறக்கப் பல்வேறு இன்னல்களையும் களைந்து, எதிர்நீச்சல் போட்டு இன்றைய ஏழாலைக் கிராமத்துச் சிறார்களின் கல்வி, கலை, கலாசாரம், சமயம், ஒழுக்க விழுமியங்கள் சிறந்தோங்கவும் ஏழாலை மக்களின் சைவப் பாரம்பரியங்களைக் கட்டி வளர்த்த இப்பாடசாலையின் பெருமையை நிலைநாட்டிப் பாடசாலை பாரினில் வளர்ந்தோங்கவும், பன்னிரண்டு ஆண்டுகளாக ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலைக்கும், ஏழாலைக் கிராமத்திற்கும் ஒரு ஒளி விளக்குப்போன்று வெளிச்சம் கொடுத்த பேரதிபர் தனது அறுபதாவது அகவைதனில் அரச சேவையை விட்டு ஓய்வு பெறினும், அவர் தம் பாடசாலைக் கல்விப் பணியையும் சமூகப்பணியையும் மேலும் தொடர்வார் என்பது உறுதி.

கல்விக்கும் சமூகப் பணிக்கும் பன்னிரண்டு ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்தது மட்டுமன்றி, தனது ஓய்வுக் காலத்திலும் இப்பாடசாலை மென்மேலும் எழுச்சியுறத் தன்னாலான பணிகளை வழங்கவேண்டுமென மணிவிழா நாயகனாம் சிவநடராஜா என்னும் பெருந்தகையாம் அதிபரை வாழ்த்துகிறேன் வாழி!

**திருமதி மஞ்சுளாதேவி சதீசன்**
பிரதேச செயலாளர்,
வலி தெற்கு,
உடுவில்.



# வளம்பெற வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணத்தில் 1995இல் நடந்த இடப்பெயர்வின்போது இடம்பெயர்ந்த உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அணித்தாக உள்ள பாடசாலை யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையாகும்.

இடப்பெயர்வில் இருந்து மீண்டதும் ஊரவர்களின் ஊக்கமும் கல்வி அமைச்சு அலுவலர்களின் அரவணைப்பினாலும், கட்டடங்கள் பல எழுந்தன, மாணவர்களின் தொகையும் அதிகரித்தது.

இக்காலகட்டத்தில் அதிபராகப் பொறுப்பேற்று, பாடசாலையின் விருத்திக்கும் மாணவர்கள் முன்னேற்றத்துக்கும், தலைமைத்துவம் வழங்கியவர் திருவாளர் செ. சிவநடராசா ஆவர். அவரது நிறைவான சேவையைப் போற்றி சைவ சன்மார்க்க கல்விச் சமூகம் மணிவிழாவெடுத்து "நடராஜ சன்மார்க்கம்" எனும் மலரையும் வெளியிடுவது பாராட்டிற்குரியதாகும்.

மலர் சிறக்க, பாடசாலை தொடர்ந்தும் மிளிர எனது நல்லாசிகள்.

**இ. இளங்கோவன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை.

# ஆசிச் செய்தி



ஒரு சமூகத்தை அறிவூட்டிப் பகுத்தறிவு நிறைந்த ஒரு சமுதாயமாக மாற்றியமைப்பதில் ஆசிரியரின் பங்களிப்பு மிக உன்னதமானது. ஒரு கிராமத்தின் குறிகாட்டியாக விளங்கும் பாடசாலைகள் உயிர்த்துடிப்புள்ள நிறுவனமாக இருப்பதால், அக்கிராமத்து மக்களால் நேசிக்கப்படும் நிறுவனமாக அவை விளங்குகின்றன.

அந்த வகையில் ஒரு உயிர்த்துடிப்புள்ள நிறுவனமாக விளங்கும் யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் அதிபராக ஒரு தசாப்தத்திற்கு மேலாகச் சிறப்புடன் இயக்கிவரும் திரு.செல்லர் சிவநடராசா அவர்கள் 2008.11.28 அன்று அகவை அறுபதை நிறைவு செய்து இன்னுமொரு புதிய தசாப்தத்தில் காலடி வைக்கும் நேரத்தில் எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.செல்லர் சிவநடராசா அவர்கள் தனது ஆசிரியர் சேவையை மலையகத்தின் **ஹப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயத்தில்** ஆரம்பித்து மலையகச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது செயற்பட்ட ஒருவர். அவரது சேவையின் விரிவாக்கம் அவரை ஒரு உன்னதமான அதிபர் தரத்திற்கு உயர்த்தியது.

தராதரப்பத்திரமற்ற ஆசிரியராக கல்விச்சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட திரு.செல்லர் சிவநடராஜா அவர்கள் கல்விச் சேவையினூடாகத் தன் வாண்மை விருத்தியை வளர்த்துக்கொண்டவர். இன்று ஒரு பட்டதாரியாக உயர்ந்து ஆசிரியர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் அதே வேளை அதிபர் பணியைச் சிறப்புடன் ஆற்றியதால் ஏழாலை கல்விச் சமூகம் மணிவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாட முன்வந்திருப்பது எதிர்காலத்தில் இவரைப்போன்ற அதிபர்களையும் ஊக்குவிக்கும் ஒரு நல்முயற்சியாகும்.

கல்விச்சேவையில் ஆசிரியராக, பயிற்றப்பட்ட ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பல்வேறு பணி நிலைகளினூடாகத் தன்னை வளர்த்துக்கொண்ட திரு.செல்லர் சிவநடராஜா அவர்களின் அனுபவப்பகிர்வுகள் கல்விச் சமூகத்திற்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

ஒரு உன்னதமான நல்ல பண்பான அதிபராகச் செயற்படும் திரு.செல்லர் சிவநடராஜா அவர்களின் மணிவிழா சிறப்புடன் நடைபெறவும், அவரது குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் நீண்ட காலம் மனமகிழ்வுடன் வாழும் மனோபலத்தை ஆண்டவன் வழங்கவேண்டும் என்றும் ஆசிர்வதிக்கின்றேன்.

வீ. இராசையா,
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக்கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்,
திருகோணமலை.

**வீ.இராசையா,**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.

வரோதயநகர்,
திருகோணமலை.



# தூரநோக்குச் சிந்தனையாளன்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் வாசகத்திற்கு அமைவாக திரு. செ. சிவநடராசா அவர்கள் தனது சேவைக்காலத்தில் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் செய்த சேவை அளப்பரியது. இவர் ஒரு தூரநோக்குச் சிந்தனையாளன். இயல்பாகவே மாணவரின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் செயற்படும் வாண்மை மிக்கவர். பாடவிதானச் செயற்பாட்டிற்கு மேலதிகமாக மாணவர் ஆற்றலை வளர்க்க வழிவகுத்த பெருந்தகையாளர். பெற்றோரின் சீரிய மதிப்பைப் பெற்றவர். தாராள சிந்தையுடையவர். மனித விழுமியங்களைக் கடைப்பிடித்து ஏனையோர்க்கு வழிகாட்டிய வள்ளல்.

ஏன் என்ற கேள்விக்கு இடமின்றிச் செயற்படும் பேராண்மையாளர். எல்லோர் மனதிலும் இடம் பிடித்தவர். எவ்வித இடர்ப்பாடுகள் வந்துற்றபோதும் அனைவரையும் அரவணைத்து, இலக்கு நோக்கி அசைத்துச் செல்லும் வல்லமை உடையவர். மனங்கோணாது நடக்கும் பண்புடையாளர். இவரது சேவையால் பெயர் பெற்று உயர்ந்து நிற்கும் மாணவர் உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெற்றவர். மணிவிழாக் காணும் இத்தகைய சீராளனை ஓய்வுக் காலத்தில் எல்லா வல்லமையும் பெற்று வளமுடன் வாழ, நடராஜப் பெருமான் பாதங்களை வணங்கி வாழ்த்துகிறேன்.



**ப. விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

P VIGNESWARAN
Zonal Director of Education
Zonal Education Office
VALIKAMAM



# உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் நல்லதிபர் செல்லர் சிவநடராசா அவர்கள், 60ஆவது அகவையை நிறைவுசெய்து மணிவிழாக் காண்பதோடு சேவையிலிருந்து ஓய்வுபெறுவதனால், அவர் சேவைதனைக் கௌரவித்துப் பாராட்டும் வகையில், பாடசாலைச் சமூகம் வெளியிடும் "நடராஜ சன்மார்க்கம்" எனும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 12 ஆண்டுகளாகப் பாடசாலையை வழிநடாத்தி வளர்த்தெடுத்த அர்ப்பணிப்பாளரான இவ்வதிபர், மிகமகிழ்வுடன் சேவைதனைச் செய்து மாணவர்களின் கல்வி மேம்பாடடைய உழைத்தவர் என்று கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, கடமையின்போது பயனையோ, நற்புகழையோ, பெருமையையோ சிறிதளவும் கருதாது, செய்ந்நன்றி மறவாமையுடன் தமது அதிபர் தொழிலைச் செம்மையாக வழிநடத்தியவர் எனப் பெருமையுறக் கூறுமளவிற்கு இவரது சேவை அமைந்தது என்பதற்குப் பாடசாலை வளர்ச்சியே சான்றாகும்.

"நடப்பதெல்லாம் நன்மைக்கே" என்று எண்ணும் அதிபர், காலத்தின் தேவை கருதியும் இளந்தலை முறையினரின் எதிர்காலம் சுபீட்சம் அடைவதற்காகவும் கருமமாற்றும் செயல்வீரன். தன்னை நம்பிவந்த மாணவச் செல்வங்கள் முறையான கல்விபெறும் வகையில் கலைத்திட்டங்களை நிறைவேற்றியதோடு நிறைவுள்ள தேர்ச்சியினைப் பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறவைத்தமையும் இவரது சிறந்த நிருவாகச் செயற்பாட்டின் விளைவுகளே.

நகரப்புறப் பாடசாலைகளைப் போல் பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகளை ஒன்றிணைத்து ஏழாலை மேற்கில் நல்லதொரு வளமுள்ள கல்விநிலை வளரும் வண்ணம் மகிழ்ச்சிகரமான பாடசாலையை உருவாக்கிய பெருமையும் இவருக்குரியதே. "அன்புநிலை வழியாகவே அறிவு புகட்டப்படுதல் வேண்டும்" என்ற குறிக்கோளுக்கு அமைய, சன்மார்க்க நெறியில் பாடசாலையினை முன்னெடுத்துச்சென்று வெற்றிபல கண்டவர். மாணவச் செல்வங்களில் சைவசமய விழுமியங்களும் சைவப் பண்பாடுகளும் பிரதிபலிக்கும் வண்ணம் பாடசாலைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியவர். அத்துடன் Bench mark என்றழைக்கும் அளவிற்குத் தொடர்நிலையாக ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் வருடந்தோறும் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சித்தியடையும் வண்ணம் முயற்சியெடுத்து யாழ்மாவட்டத்தில் சிறந்த நல்லதொரு பாடசாலை என்ற பெருமையினை இப்பள்ளி பெற வழிசமைத்தவர்.

இவர் 2005ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் சிறந்த அதிபர் விருதான "வித்திய விஜய ஸ்ரீசம்மண" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இது வலிகாமம், உடுவில் கல்விச் சமூகத்திற்குக் கிடைத்த வெற்றியெனலாம். கடந்த பன்னிரண்டு வருடங்களாக இவர் சேவைதனை அறிந்தவன் யான். முன்பு இணுவில் இந்துக் கல்லூரியில் பகுதித் தலைவராக, உபஅதிபராகச் சேவையாற்றிச் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். அக்காலத்தில் மானிப்பாய் கல்விவட்டாரத்தில் ஆசிரியர் தினவிழாவில் நல்லாசிரியர் விருது வழங்கி நற்சான்றிதழ் பெற்றவர் என்பதையும் இத்தருணத்தில் கூறுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பள்ளி தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புக்களைக்கொண்ட ஓர் ஆரம்பப் பாடசாலையாக இருந்தாலுங்கூட, கவின்நிலையுடன் பாடசாலைச் சூழலை உருவாக்கிப் பலரினதும் பாராட்டைப் பெற்றவர். நேரமுகாமைத்துவத்தை அனுசரித்துச் செயற்றிட்டங்களை முன்திட்டமிட்டு உரிய காலப்பகுதியில் நிறை வேற்றி, ஆசிரியர்களை வினைத்திறனுடையவர்களாக மாற்றி, பொறுப்புணர்வுடன் செயலாற்றும் வண்ணம் ஊக்குவித்து, மாணவர்களுக்குத் தேர்ச்சி மையக் கல்வியினையூட்ட வழிகாட்டியவர். தனது செயற்றிட்டங்க ளில் வெற்றி பெறுமளவிற்குப் பாடசாலைச் சமூகத்தினரை உதவும் கரங்களாக்கி, அவர்களின் ஆதரவுடனும் சுறுசுறுப்புடனும் சிக்கனமாகவும் புத்திசாலித்தனமாகவும் கடமையுணர்வுடன் வழிகாட்டியாய் இருந்து எடுத்த கருமத்தை உரிய காலத்தில் நிறைவேற்றி வைக்கும் கருமவீரன். மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள் எனப் பலருடனும் சிறந்த உறவைப் பேணுவதில் அக்கறை கொண்டவர்.

அரச அலுவலர் ஓய்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நிறையச் சேவை செய்தவர்களுக்கு ஓய்வு அவசியம். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் அவர்தம் மனைவி பிள்ளைகளுடன் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவும், சகல சௌபாக்கியங்கள் கிடைக்கவும் இறைவன் துணைபுரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளைக் கூறுவதில் பேருவகையடைகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**உயர்திரு செ.குபேரநாதன்,**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில்.



# தனக்குவமை இல்லாதான்

2008.11.28ல் அகவை அறுபது நிறைவு செய்யும் அதிபர் செல்லர் சிவநடராசா அவர்களை நான் நெடுநாட்களாக அறிவேன்.

அவர் ஒரு கலைமாணிப் பட்டதாரி. 1994ல் அரசியல், மெய்யியல், இந்துநாகரிகம், அளவையியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காகப் பட்டம் பெற்றவர்.

1971ல் ஆசிரிய நியமனம்பெற்று மலையகத்தில் அப்புத்தளை மகாவித்தியாலயத்தில் கடமையாற்றியவர். முதல் நியமனத்தின்போதே இந்நாட்டின் முதுகெலும்புகளான மலையக மக்களின் கல்விக்கான அத்திவாரத்துடன் பணியை ஆரம்பித்து இன்றுவரை அழியாது தனது பணியைத் தொடர்ந்தவர்.

ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர், அதிபர் எனப் படிப்படியான வளர்ச்சி கண்டவர். சிறந்த ஆசிரியர் விருதை 1994இலும் சிறந்த அதிபர் ஜனாதிபதி விருதான வித்திய விஜய ஸ்ரீ சம்மனயவை 2005ல் பெற்றுக்கொண்டவர்.

யாழ்ப்பாணத்தில் ஏழாலை மேற்கு எனும் எமதூரின் 5ந் தரம் மட்டுமேயுள்ள சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் 1996.09.15ல் அதிபராகப் பதவி உயர்வு பெற்று வந்து எம்மூர்ப் பாடசாலையைப் பிரபலப்படுத்தியதில் செல்லர் சிவநடராசாவின் பணி போற்றுதற்குரியது.

பள்ளித்தலத்தைக் கோவிலாக்கி வைத்த பெருமகன் இவர். புலமைப்பரிசில் பரீட்சையாகட்டும், விளையாட்டுத்துறையாகட்டும், ஏழாலை மாணவர்கள் 'யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை' என்பதை நிரூபித்து வைத்தவர், எண்ணிறைந்த நல்மாணக்கர்களை உருவாக்கியவர். தன் வீடு மறந்து கல்விக்கூடத்தில் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கடமையாற்றியவர். இவரது சேவையால் பயன் பெற்ற பலரை யானறிவேன்.

இவரது சேவையால் புளகாங்கிதமுறும் அடியேன், இவரது நீண்ட ஆயுளுக்காக இவரை மேன்மேலும் வாழ்த்துகிறேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இவர் இன்னும் நெடு நாள் வையத்துள் சீரும் சிறப்புமாக வாழ்வாராக!


**சி. கிருஷ்ணானந்தன்**
திணைக்களத் தலைவர்,
முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம்,
கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை.



## மணிவிழா நாயகன்
## உயர்திரு செ. சிவநடராசா
## அதிபர்,
## யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

உயர்திரு செ. சிவநடராசா அவர்களின் மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சிறந்த கல்விமானாகத் திகழும் இவர், தனது திறமையினால் அதிபராக உயர்வடைந்து கல்லூரிக்கும், சமூகத்திற்கும் சிறந்த சேவையாற்றி வந்துள்ளார். இவரது திறமையினால் யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதற்கு மூல காரணமாக இருந்தவர் அதிபர் அவர்களே. இவரது முழு முயற்சியும் ஊக்கமுமே இவ்வித்தியாசாலை முன்னேற அடிகோலியமையை நாம் மறுக்கவும் மறக்கவும் முடியாது.

இவ்வித்தியாசாலையுடன் மட்டுமல்லாது சகல கல்விசார் துறைகளுடனும் இவர் தொடர்புகளை வளர்த்துத் தன்னால் இயன்ற அளப்பரிய சேவைகளைச் செய்து வந்துள்ளார்.

அறிவு, ஆற்றல், ஆளுமை நிறைந்தவராகக் காணப்படும் இவர், மக்கள் வங்கியுடன் மிக நீண்டகாலமாகச் சிறந்த நல்லுறவைப் பேணி வருவதுடன் வங்கிச் சேவையின் முக்கியத்துவத்தை விளக்கிக்கூறி, மக்கள் வங்கியுடன் பாடசாலை அனுமதிபெற்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் 1ம் ஆண்டு தொடக்கம் மாணவர் மலர்ச்சிக் கணக்குகளை ஆரம்பித்து ஊக்கமளித்துள்ளார். இதன் மூலம் அவர்கள் சேமிப்பை மேற்கொள்வதுடன் வங்கியிடமிருந்து பல பரிசில்களையும் பெற உதவியுள்ளார்.

இவ்வாறு கல்விச் சமூகத்தினருக்கும், ஏனையோருக்கும் சேவையாற்றிவரும் மணிவிழா நாயகன், மேன்மேலும் சிறப்பாக வாழ, எமது மக்கள் வங்கிச் சமூகத்தின் சார்பாக வாழ்த்தி, அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து எமது சமூகத்திற்கு மேலும் சிறப்பான சேவைகள் ஆற்றவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. த. க. ஆனந்தராசா**
உதவிப்பொது முகாமையாளர்,
வடவலயம்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.



# வாழ்த்து மடல்

**"குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு"**

இலட்சியக் கல்விச்சாலையின் எழுச்சிக்காகப் பல குறிக்கோள்களை உருவாக்கித் தனதும், பாடசாலைச் சமூகத்தினதும் உள்ளுணர்வை சிலிர்த்தெழச்செய்து அவற்றைச் செயலூக்கம் ஆக்குவதற்கான தூண்டல்களை வழங்கிய பாங்கு. தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாது, தனது செயற்றிட்டங்களை விரிவாக எடுத்தியம்பி, நேர்மையான பாதை வழியே அங்கீகாரம் பெறும் அழகு. ஆசிரியர் குழாத்தினரை ஒன்றிணைத்து அவரவர் அறிவு, திறன், மனப்பாங்கினை உள்ளத்திருத்திப் பொறுப்புக்களை வழங்குகின்ற நுட்பம். மாணவக் குழந்தைகளின் கல்வியினை நவீனயுகத்திற்கு ஏற்றாற்போல் வழிசமைத்துக் கல்வியூட்டும் தாளாண்மை. சலியாத மூளை உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் தளர்வற்ற நெஞ்சுறுதியோடு, முன்னெடுத்த கருமத்தினைச் செயல்வடிவமாக்கும் பக்குவம். நேர முகாமைத்துவம், மாற்று முகாமைத்துவம் போன்றவற்றோடு சிறந்த தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்தும் மாண்பு. இவை யாவற்றுக்கும் இருப்பிடமாய்த் திகழும் அதிபர் உயர்திரு. செல்லர் சிவநடராசா அவர்களைப் பாராட்டுவதற்கு வார்த்தைகள் கிடைத்தில!

மாணவ சமுதாயத்துக்கு நல்லவற்றைச் சாதிக்கத் துடிக்கின்ற மனிதனுக்குக் களைப்பாற நேரமேது? 1996ஆம் ஆண்டில் யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் அதிபராகக் கால்பதித்த நாள்முதல், அதன் வியத்தகு மேன்மையைச் சவாலாகக் கொண்டு, நாளும்பொழுதும் அயராது உழைத்த இவரது மிகப்பெரும் சாதனை, "விடா முயற்சியே".

கல்விப் பணியிலிருந்து 2008.11.28ஆம் திகதியில் ஓய்வுபெறுகின்ற இப்பெரும் முதல்வரின் வருங்காலத்தில் இனி, தனது ஞானத்தின் ஒளியை வேண்டுமிடங்களில் ஒளிரச்செய்து புகழ் பெறவும், இதுவரை நுகரத் தவறிய இல்லத்தின் இன்னிசையை இரசித்து மனமலர்ச்சி பெறவும், சமூகத்தின் நல்வழிகாட்டியாய் மிளிரவும், இறைவனின் ஆசி என்றென்றும் கிடைக்கவேண்டி மனமார வாழ்த்துகின்றேன்.

*"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
*பொன்றாது நிற்பதொன்று இல்"*

**செல்வி உதயகலா சிவபாதசுந்தரம்,**
(முன்னைநாள் உபஅதிபர்,
ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை)
உதவி வளநிலைய முகாமையாளர்,
வடமாகாண உளசமூக வளநிலையம்,
வலயக் கல்வித் திணைக்களம்,
வலிகாமம்.



# வாழ்த்துரை

"நல்லோர் வரவால் நகைமுகம் கொண்டு இன்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவர் - வல்லோர்..."

எனும் நன்னெறியின் கூற்றுக்கமைய, இன்று வைரவிழாக் கண்டு தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்லும் எமது அதிபர் அவர்கள், 1996ஆம் ஆண்டு எமது பாடசாலைக்கு நியமனம்பெற்று வந்தபோது நாமும் எமது பாடசாலைச் சமூகமும் இவரது வரவால் பெரிதும் அகமகிழ்ந்தோம். எமது அதிபர் பாடசாலையில் தனது பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நாள்முதல் தன்னைப் பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி, ஆசிரியர்களின் நலன் என்பவற்றுக்குமே அர்ப்பணித்தார். பாடசாலை நிருவாகத்தைச் சிறந்தமுறையில் நடாத்தும் அதிபர் ஒருவர், முதலில் செய்ய வேண்டியது சிறந்த நிருவாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதே. அந்தவகையில் எமது அதிபர் கடமையேற்றவுடன் ஆசிரியர் நலன்புரிக் கழகம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்ற கழகங்களை உருவாக்கி அவற்றினூடாகத் தனது நிருவாகத்தைச் சிறந்தமுறையில் நடாத்திச்சென்றார். இன்று இப்பாடசாலை தலைநிமிர்ந்து தற்றுணிவுடன் நிற்பதற்கும் ஆசிரியர்களாகிய நாம் எமது பணியைச் சிறப்பாக ஆற்றுவதற்கும் எமக்கு வழிகாட்டியவர் எமது அதிபர் அவர்களே.

"ஒரு கருத்தை எடுத்துக்கொள்க!
அந்த ஒரு கருத்தையே
உனது வாழ்க்கை மயமாக்குக!
அதையே கனவு காண்க!
அந்த ஒரு கருத்தை
ஒட்டியே வாழ்ந்து வருக!
வெற்றிக்கு வழி இதுதான்"

*- சுவாமி விவேகானந்தர்.*

எனும் கூற்றுக்கு இணங்க, எமது பாடசாலையின் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தனது பணிதனைச் செவ்வனே செய்த எம் அதிபர் அவர்களே, ஆசிரியர் பணிதனை ஏற்றுக்கொண்ட நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டி. ஓர் ஆசிரியர், தன்னை எவ்வாறு தான் மேற்கொண்ட பணிக்கு அர்ப்பணித்துக் கடமையாற்றவேண்டும் என்பதனை நாம் எமது அதிபர்மூலம் கற்றுக்கொண்டோம்.

தனது சேவைக் காலத்தில் ஆசிரியர்களாகிய எமது நலன்களில் அக்கறைகொண்டு எமக்கு வழிகாட்டி, அறிவுரைகள் கூறி, எம்மை வழிநடத்திய எமது அதிபர் தனது ஓய்வுக் காலத்தில் மனநிம்மதியும் தேக ஆரோக்கியமும் பெற்று தன் குடும்பத்தாருடன் சிறப்புற வாழ இறைவன் அருள்புரியவேண்டும் என ஆசிரியர் நலன்புரிக்கழகம் சார்பில் வாழ்த்துகின்றேன்.

"நன்றி"

செயலாளர்,
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ஏழாலை மேற்கு சைவ
சன்மார்க்க வித்தியாசாலை.



# பள்ளி அபிவிருத்தியில் பாங்குடனே பணியாற்றிய மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகச் சன்மார்க்க வித்தியாசாலையின் அதிபராய் இருந்து, பள்ளி வளர்ச்சிக்காய்ப் பலவழிகளிலும் உழைத்த ஒப்புரவாளன் இன்று தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்வது எம்மை ஒருகணம் கலங்க வைக்கின்றது. ஆயினும், இவரது செயற்பாடுகள் எமக்கு வழிகாட்டியாய் அமைவதால் அவர் காட்டிய வழியில் உறுதியோடு நிற்கின்றோம்.

இவரது சிறந்த முகாமைத்துவமும் ஆளுமைப் பண்பும் போற்றுதற்குரியவை. தன்மேனி நலம் பாராது கடமைதனைக் கண்ணியமாய்ச் செய்த கருமவீரன். கல்வியை மட்டுமல்ல ஒழுக்க நெறிமுறைகளைப் போதித்து, எதிர்காலத்தில் சிறந்த சிற்பிகளாய் மாணவச் செல்வங்கள் மிளிர அடித்தளம் இட்டவர். காலவோட்டத்திற்கேற்ப மகிழ்ச்சிகரக் கற்பித்தலுக்கு வழிசமைத்ததன் மூலம் மாணவர்களிடையே மட்டு மல்லாது பெற்றோரிடையேயும் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். இதனால்தான் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் இன்று இப்பாடசாலை முன்னணி வகிப்பதோடு, பல ஊர்களிலிருந்தும் இதனை நாடி வருவோரின் தொகையும் அதிகரித்துச் செல்கின்றது. சைவமும் தமிழும் கண்ணெனக் கொண்டு பயனுற வாழ்ந்த பெருமைக்குரியவர். சேமிப்பின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணரும் பொருட்டு "சிசு உதான" சேமிப்புக் கணக்கை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தியவர்.

சரியான திட்டமிடலுடன் கூடிய இவரது நடவடிக்கைகள் இவரை ஒரு சிறந்த நிருவாகியாக அடையாளப்படுத்தின. பழகும்போது பண்பாளர். சேர்ந்து குலவும்போது சௌமியர். கடமைகளை நிறைவேற்றும்போது கண்டிப்பானவர். பலருடனும் மனம் விட்டுப்பேசி, தீர்க்கமானதும் திடமானதுமான முடிவுகளைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்தும் தற்றுணிவாளன். கிடைக்கும் மூலவளங்களின் வினைத்திறனைத் தனக்கேயுரிய மூளை வளத்தால் இரட்டிப்பாக்கும் வல்லமையாளன். இதனால்தான் சொற்பகாலத்தில் இப்பள்ளியின் வளர்ச்சி பன்மடங்கானது என்பது கண்கூடு.

இப்பள்ளியின் பாரம்பரியங்களுக்குக் கட்டுப்பட்டு அதனை வளர்ச்சிநோக்கிய பாதையிலே நெட்டித் தள்ளியவர். இவரது சேவைகளை இப்பள்ளிச் சமூகம் என்றென்றும் மனங்கொள்ளும். இவரது வளர்ச்சிப் படிகளை, பள்ளி அபிவிருத்தியில் காணும் பாக்கியம் பெற்றவன் யான். உந்துசக்தியாய் உடனிருந்து உதவுகரம் கொடுத்த நாம், இவர் காட்டிய வழிதனில் தடம்பதித்துச் செல்வதன்மூலம் இப்பள்ளியை நலிவுறாது பாதுகாப்போம்.

"சூரியன் வரவால் சூரியகாந்தி மலரும்
சிவநடராசாவின் வரவால் சன்மார்க்கம் நிமிர்ந்தது
சன்மார்க்கத்தின் நிமிர்வு ஏழாலை மண்ணின் பெருமை
ஆனைமுகத்தானின் அருட்பார்வை அன்னைக்குத் துணை"

கற்போர்க்குக் கதிரொளி வீசிய காரிய வீரனின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் இனிவரும் காலங்களிலும் பள்ளிச் சமூகம் நாடிநிற்கின்றது. இவர் ஓய்வுக்காலத்திலும் உடலுள ஆரோக்கியத்துடன் வாழக் கருணாகரப்பிள்ளையாரின் திருப்பாதம் பணிகின்றேன்.

ஆ. சுந்தரமூர்த்தி
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

உ
சிவமயம்

சைவசன்மார்க்க வித்தியாசாலை அதிபர்

## சிவநடராசா செம்மலார்

# சிறப்புடன் வாழ்க!

சிவமும் சக்தியும் சேர்ந்தளித்த செல்வக்
கற்பகக் களிற்றுக் கருணை கடவப்
பழமையைப் பேணிப் புதியன புகுத்தியும்
பைந்தமிழ்ச் சிறார்நெஞ்சில் கல்விவளம் கேட்டுப்
பவமிலா யாழ்ஏழா லைமேற்கில் பாரினர்
பழுமரம் தேரும் பறவைபோல் வருவிக்கும்
சைவசன்மார்க் கவித்தியா சாலை அதிபர்
சிவநடராசா செம்மலார் சிறப்புடன் வாழ்க.

தவத்தர் போல்தங் கடமையே கண்ணாய்
தாரணியில் தலைசிறந்தநல் ஆசானுமாய்
அவப்பொழுதில் காலத்தை ஆக்க அறியாதவனாய்
ஆசிரிய னாய்ஆற்றல் மிக்க அதிபனுமாய்
எவரோடும் இன்முகத் தோடின் மொழியனுமாய்
கடமை கண்ணியம் கட்டுப் பாடனாய்
சைவசன்மார்க் கவித்தியா சாலை அதிபர்
சிவநடராசா செம்மலார் சிறப்புடன் வாழ்க.

சைவம் வாழ்க சன்மார்க்கம் வாழ்க
தெய்வம் வாழ்க தெளிந்தோர் வாழ்க
மெய்யும் வாழ்க மெய்ந்நெறி வாழ்க
பொய்யிலா ஆசிரியர் சேவை வாழ்க
மேன்மைகொள் சைவநீதி வாழ்க
போற்றும் மாணவர் ஒழுக்கம் வாழ்க
சைவசன்மார்க் கவித்தியா சாலை அதிபர்
சிவநடராசா செம்மலார் சிறப்புடன் வாழ்க.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
28.11.2008.

இவ்வண்ணம்
ஏழாலை முத்தமிழ் மன்றம்

# ஏழாலை மக்கள் மன்றம் - கனடா

## நன்றி நவிலலும் பாராட்டுதலும்

நம்மால் முடியுமா? என்று மனத்தளர்ச்சி அடையாமல் 'முடியும்' என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும் என்பதற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு உயர்திரு. அதிபர் செ. சிவநடராசா.

எங்களின் பாராட்டுக்கும் மதிப்புக்கும் உரிய அதிபரின் இளைப்பாறும் செய்தி கேட்டு மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சியடைந்தோம். தங்களின் கீழ் புடம் போட்டு வளர்த்தெடுக்கப்பட்ட சக ஆசிரியர்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இப் பாடசாலையின் வளர்ச்சியை மேன்மேலும் உயர்த்துவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இருந்தாலும், தங்களின் பணி தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப் பாடசாலையைத் தாங்கள் பொறுப்பெடுத்த காலத்தில் கற்றல், கற்பித்தல், விளையாட்டு போன்ற நடவடிக்கைக்கான பௌதீகச் சூழல் அழிவடைந்திருந்தது. பாடசாலையின் வளர்ச்சிக்காக நீங்கள் அயராது உழைத்ததால் உடைந்த கட்டிடங்கள் உயர்ந்து நிமிர்ந்தன புதிய கட்டிடங்கள் பட்டொளி வீசுகின்றன. புதர்மண்டிய முற்றம் அழகிய விளையாட்டு மைதானமாகியது. இதனால் அழகிய பௌதீகச் சூழல் கொண்ட பாடசாலையாக மாற்றிய பெருமை என்றும் உங்களுக்கே உரித்தாகும்.

ஒருவனின் வாழ்க்கையில் ஆரம்பக் கல்வியே அஸ்திவாரமாகும், என்பதை மனதில் கொண்டு தாங்கள் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கூடிய சிரத்தை எடுத்ததால் இன்று எம் பாடசாலை மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் முன் நிற்கின்றது என்பதற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு இன்று எமது பாடசாலையிலிருந்து ஐந்தாம் தரத்தில் புலமைப் பரிசிலில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையாகும்.

எங்கள் பாடசாலையின் வளர்ச்சிப் படிகள் அனைத்திலும் நீங்கள் முத்திரை பதித்துள்ளீர்கள். புலம் பெயர்ந்து கனேடிய மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்து ஏழாலை மக்களின் மனங்களில் அழியா இடத்தைப் பிடித்துள்ளீர்கள்.

தங்களின் இளைப்பாற்றுக் காலத்தில் நோய் நொடியின்றி சீரோடும் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும் ஏழாலை மக்கள் மன்றம் –கனடா.

"தாங்கள் கல்வியுலகம் கண்ட கலங்கரைவிளக்கு"

## நடராஜ சன்மார்க்கம்

# மலர்க்குழு

தலைவர்

வைத்திய கலாநிதி பே. பத்மநாதன்

செயலாளர்

திரு. சி. யோகேஸ்வரன்

பொருளாளர்

திரு. ஆ. திருநாவுக்கரசு

இதழாசிரியர்கள்

பண்டிதர் வ. பேரின்பநாயகம்
திரு. சி. ரமேஷ்
செல்வி. ந. கவிதா

உறுப்பினர்கள்

செல்வி. ந. பிரதா
திரு. ஆ. சுந்தரமூர்த்தி
திரு. நா. இலட்சுமிகாந்தன்



அதிபர், துணைவி.



மைந்தர்களுடன்



அதிபர் குடும்பம்



கலாமாணிப்பட்டம் பெற்றபோது




நல்லதிபருக்கான ஜனாதிபதி விருது வழங்கிக்
கௌரவித்த போது




சிசு உதான சாதனையாளர் விருது வழங்கிக்
கௌரவித்த போது



# மணிவிழாக் காணும் நாயகனின் வாழ்க்கைச் சரிதத்தின் ஓர் அத்தியாயம்

செல்வி கவிதா நடராசா,
ஆசிரியர்,
யா/ஏழாலை மேற்கு -
சைவ சன்மார்க்க வித்தியாசாலை,
சுன்னாகம்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

**அறிமுகம் :-**

தாயின் கருவறையிலிருந்து அவதரித்த நாள்முதல் ஆறு தசாப்தங்கள் கடந்த நிலையிலே பக்குவமும் முதிர்ச்சியும் மிக்க நல்லதிபராய், இன்று நாம் காணும் ஒருவர் பற்றிய நினைவுகளை மீட்டுப் பார்ப்பது, அவற்றையெல்லாம் சிறியதொரு கட்டுரை வடிவிலே வடித்துவிடுவது என்பன எளிதான செயல்கள் அல்லவே.

இன்று அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு. செல்லர் சிவநடராசா அவர்களோடு எனக்குள்ள கடந்தகாலத் தொடர்பின் அடிப்படையில் அவரது வாழ்வையும் சாதனைகளையும் எதிர்பார்க்கைகளையும் கட்டுரையாக்க முற்படுகையில் அதிலுள்ள சிரமம் என்னைத் தயங்க வைக்கின்றது. இத்தயக்கத்திற்கு எதனை எழுதுவது? எதனைத் தவிர்ப்பது? என்பது காரணமல்ல. ஏனெனில் இவரது வாழ்க்கையிலே ஒளிவுமறைவிற்கு இடமில்லை. முகிழ்நிலைக் காலந்தொட்டு இன்றுவரை 'உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியராகவே' அவர் விளங்கி வருகின்றார் என்பதை என்னால் உணர முடிகின்றது.

இவர் நல்லனவற்றை நினைப்பார். நினைத்தவற்றைச் சொல்லுவார். சொன்னவற்றைச் செயற்படுத்துவார். செயற்படுத்தும்போது பல சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொள்வார். ஆயினும், தனது தற்றுணிவாலும் தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிவார். எனவே, பரந்த உள்ளங்கொண்ட இப்பெருமகனின் வரலாற்றுக் குடத்துநீரைச் சிறுகுப்பியினுள் அடைத்துக் காட்டுவதாய் அமையும் என்ற தயக்கமே என்னிடமுள்ளது. ஆயினும் கருணாகரப் பிள்ளையாரின் திருவருளை நாடி 'முயற்சி திருவினையாக்கும்...' என்ற வள்ளுவத்தில் நம்பிக்கை கொண்டு இவரது வாழ்வியலைச் சுருக்கமாய் எழுத முற்படுகின்றேன்.

**தரணியில் ஜனனம் :-**

ஈழமணித்திருநாட்டின் இணையிலா வளநிலமான யாழில், உலவிற்குளப் பிள்ளையார், செல்வச்சந்நிதி முருகன், ஆவரங்கால் சிவன் ஆலயங்கள் சூழப்பெற்றதும் வெங்காயச் செய்கைக்குப் பெயர் போனதுமான பரந்த பிரதேசத்தைக் கொண்டதே அச்சுவேலி எனும் ஊராகும்.

பல்துறைகளிலும் மேம்பட்டு விளங்கும் அக்கிராமத்தில், அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைமுகாமையாளராகவும், கிராமசபை முன்னாள் உறுப்பினராகவும் விளங்கிய 'சங்கிலிச் செல்லம்' என்றழைக்கப்படும் கணபதியார் செல்லர் அவர்களுக்கும், வெற்றிவேலு தங்கம் அவர்களுக்கும் பிறந்த எண்மருள் 1948 நவம்பர் 28ஆம் நாள் அவதரித்த இறுதி ஆண் மகவே, இன்று மணிவிழாக் காணும் செல்லர் சிவநடராசா அவர்கள். இவர் பிறந்தவூரிலும் தான் நடாத்திய தனியார் கல்விநிறுவனத்திலும் SNR என்றே அறிமுகமானார்.

**வளர்ச்சிப் பின்புலம் :-**

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே – அவர்
நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே"

ஒழுக்கம், பண்பு நிறைந்த குடும்பத்தில் பிறந்த இவர், பள்ளிப் பருவத்தை அடைந்ததும் பாலர் கல்விதனை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையிலும், பின், பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையிலும், அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் தொடர்ந்தார். தரம் 09 தெரிவுப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவுசெய்யப்பட்டு, ஆங்கில மொழியில் எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தியடைந்து, உயர்தரத்தில் கணிதத்துறைக்காக யாழ் இந்துக்கல்லூரிக்குச் சென்றுள்ளார். பெற்றோரின் சிறந்த வழிநடத்தலுடனும் அறிவுதனைப்

போதித்த கல்விச்சாலைகள் காட்டிய நல்வழியிலும் சென்று தன் அறிவுப் பசிக்கு இரை தேடினார். இத் தேடல் இவரைக் கல்வியில் சிறந்தவராய் மட்டு மல்ல சுயசிந்தனையாளராகவும், கருமவீரராகவும், தற்றுணிவாளராகவும் உருப்படுத்தியது.

**தொழிற் கல்வி :-**

"வையகம் காப்பவரேனும் – சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே – பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்"

என்பதை உணர்ந்து 1967ஆம் ஆண்டு யாழ் தொழில்நுட்ப நிறுவனத்தால் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு நில அளவை முகாமைத்துவப் பயிற்சியைப் பெற்றார்.

1969இல் கொழும்பு 'Jefergy Brothers' எனும் வெளிநாட்டு நிறுவனத்தில் மேற்பார்வையாளரா கக் கடமையாற்றினார். எனினும், அரசசேவை யாற்ற வேண்டுமென்று விரும்பிய தன் தந்தையின் விருப்பிற்கிணங்கவும், சமூக அசைவியக்கத்தின் ஜீவநாடியாக ஆசிரியத்துவம் பெருமை பெறுகின் றது என்பதை உணர்ந்தும் 1971இல் உதவிக் கணித ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது கடமையினைப் பொறுப்பேற்றார். 1972 – 1973 காலப்பகுதியில் பலாலி விசேட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று, அகில இலங்கை ரீதியில் முதன் முறையாக நடாத்தப்பட்ட பரீட்சையில் வகுப்பு I இல் (Merit) சித்தியடைந்து, ஒருபடி சம்பள உயர்வைப் பெற்று, 1974இல் நுவரெலியா மாவட்ட பரிசுத்த திருத்துவக் கல்லூரியில் தன் சேவைதனைத் தொடர்ந்தார். 1976இல் உதவி ஆலோசகராகவும் 1978இல் உபஅதிபராகவும் விளங்கிய இவர், தன் வாண்மை விருத்திக்காய் 1979இல் பேராதனைப் பல்கலைக் கழகம் நடாத்திய G.S.Q பரீட்சையில் தோற்றினார்.

**இல்வாழ்க்கை :-**

கல்வித்துறையில் கடமைவீரராய்ப் பிரகா சித்த வேளை, சுன்னாகம் கல்வித் திணைக்கள ஓய்வு பெற்ற இலிகிதர் சுப்பையா – அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரி சூடாமணியை 1978.01.22இல் கரம் பற்றினார்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

எனுமாற்போல் இவரது வாழ்வில் ஏற்படும் உயர்ச்சிகளின் பின்புலத்தில் இயங்கும் விசை தரும் துணைவியைப் பெற்றார். இவ்விருவர் வாழ் வும் இன்பமாய் அமைந்திடவே, 1978.12.30இல் நிசந்தன், நிசந்தினி எனும் இரட்டைக் குழந்தை களின் தந்தையானார். இதன் காரணமாக 1980இல் பதிலதிபராகும் நிலையில் இருந்துங்கூட தனது புகுந்த ஊருக்கே திரும்ப வேண்டியேற் பட்டதால் 1980.02.14இல் இன்று யா/இணுவில் இந்துக்கல்லூரி என்றழைக்கப்படும் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றார். கடமைதனைக் கண்ணிய மாகக்கொண்டு தனது ஆசிரியப் பணியைச் செவ் வனே ஆற்றிக் கொண்டிருந்தவேளை, இல்வாழ் வின் விழுதுகளாய் 1987.10.04இல் நிருபனும் 1989.04.16இல் சுரோஜனும் இவர்கள் மடிதவழ்ந் தனர். மணவயதை அடைந்த தன் மகளுக்கு ஏற்ற வரனாய் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் திரு.S.ரமேஸ் அவர்களை மணம்முடித்து லவன் என்னும் பேரனைக் கண்டு அகமகிழ்ந்தார்.

**பிரதியதிபரும் வாண்மைக் கல்வியும் :-**

யா/இணுவில் இந்துக்கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியர், பகுதித்தலைவராக இருந்தவேளையில் 1989இல் நடைபெற்ற அதிபர் போட்டிப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு பிரதிஅதிபரானார். இக்காலப் பகுதியில்தான் G.S.Q பரீட்சைக்குப் பதிலாக யாழ் பல்கலைக்கழக G.A.Q பரீட்சையில் தோற்றிச் சித்தி பெற்றார். நாட்டின் அசாதாரண சூழ்நிலை கள் காரணமாகப் பல்கலைக்கழகப் பரீட்சைகள் பல தடவைகள் பிற்போடப்பட்டதனால் 1996 இலே தான் B.A பட்டத்தைப் பெற்றார். ஆசிரியர் கலாசாலை யில் பயிற்சி பெற்றமையால் தொழிற்றகைமைக் கல்வியாகிய பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறிக்குத் தோற்றாமல் M.Phil புதுமுகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்டுக் கல்வியைத் தொடர்ந்த வேளையில், இடையில் சில தடைகள் ஏற்பட்டதனால் இவரால் இறுதி நிலையை அடையமுடியவில்லை. 1994இல் வட்டார ரீதியான அதிசிறந்த ஆசிரியர் தெரி வில் மானிப்பாய் வட்டாரத்தில் இவர் தெரிவுசெய் யப்பட்டார். யா/இணுவில் இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டதும், அங்கு கலை, வர்த்தகத்

துறைக்கான உயர்தர வகுப்புகள் உருவாக்கப்பட்டதும், மாணவர் தொகை 1000 இனை அண்மித்ததும் இவரது அளப்பரிய சேவையின் வெளிப்பாடே. இக்காலக் கல்விப்பணிப்பாளர்களின் முரண்பாடு காரணமாக அதிபர் தரத்திலுள்ள இருவர் இப்பாடசாலையில் இருக்கமுடியாது என்ற காரணத்தைக் காட்டி 1996.09.15இல் இவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்நன்னாளே யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பொற்காலம் முகிழ்த்த தினம் எனலாம்.

**சன்மார்க்க அன்னையின் அன்றைய நிலை :-**

சைவத்தையும் கல்வியையும் உயர்வாக மதிக்கும் ஈழத்துச் சைவமரபிலே தோன்றிய ஏழாலைப்பதிவாழ் மக்களால், தமது சொந்தச் செலவிலே இவ்வூர்ப்பகுதி மாணவருக்கு அறிவொளி ஊட்டவென 1919இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அன்னை, தன்னால் இயன்றவரை இவ்வூர்ச் சிறார்களுக்கு ஒளியூட்டிக் கொண்டிருந்தாள். நாட்டில் ஏற்பட்ட யுத்தசூழல், அதனால் உருவான இடப்பெயர்வுகள் ஊரவரைப் பல மைல்களுக்கு அப்பால் செல்ல வைத்தது. இந்நிலையில் சமூகத்தோடு இயைந்து அன்னையை வழிநடாத்திச் செல்ல சிறந்த வழிகாட்டிகளும் இருக்கவில்லை. சுமைமிக்க வாழ்க்கையிலிருந்து அன்னைக்குப் புத்துயிர் அளிக்க மக்களிடம் பொருளாதார வளங்கள் பெரிதும் இருக்கவில்லை. எனவேதான், ஏனைய பள்ளிகளைப் போல் இவ்வன்னையும் தன்னால் இயன்றவரை சளைக்காது கல்வியினை ஊட்டிவந்தாள். ஆயினும்போதிய ஆளணியின்மை, கட்டட வசதியின்மை, தளபாடப் பற்றாக்குறை என இன்னோரன்ன நெருக்கடிகளுக்கு அன்னை முகங்கொடுத்தாள். இக்காலகட்டத்தில்தான் 'வரண்ட பூமிக்கு மழைபோல' அதிபர் செல்லர் சிவநடராசா அவர்கள் இங்கு அடியெடுத்து வைத்தார்.

**சன்மார்க்க அன்னை நோக்கிய மணிவிழா நாயகனின் வருகை :-**

1996 செப்டெம்பர் 15ஆம் நாள் வதனத்தில் சாந்தமும் உள்ளத்தில் உறுதியும் கொண்ட ஒருவர் தன்னிடம் வருவதைக்கண்டு அன்னை அகமகிழ்ந்தாள். அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறிக் கிடந்த வளங்களை ஒருங்கு சேர்க்க வரும் உத்தமரே இவரென உணர்ந்தாள்.

இவர் சிறுசலனத்துடன் வந்தாலுங்கூட, அன்னையின் சிந்தனைக்கு ஏற்றாப்போல் செயற்படத் தொடங்கினார். தனது அனுபவப் பாடத்தின்படி, அன்றிருந்த பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் ஒன்றுசேர்த்துப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்ற ஒன்றை உருவாக்கி பாடசாலை எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும் அத்தியாவசியத் தேவைகள் பற்றியும் கலந்துரையாடினார். முதலில் பழையமாணவர், நலன்விரும்பிகளின் துணையையநாடி பற்றைகளாலும் புதர்களாலும் மண்டியிட்டுக் கிடந்த பாடசாலையின் சுற்றுப்புறச்சூழலைத் தூய்மைப்படுத்தினார். அத்துடன் அவர்களின் சரீர உதவியுடன் மைதானத் திருத்தத்தையும் மேற்கொண்டார். அபிவிருத்திச்சங்கத்தின் பெயரில் அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்ல பாடசாலைக்கென நிதி இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து, புலம்பெயர்ந்து வாழும் பழையமாணவர்களை அபிவிருத்திக்கு உதவுமாறு கோரினார். நாட்டில் நிலவும் போர்ச்சூழலைக் காரணங்காட்டி பாடசாலை அபிவிருத்திக்கு உதவ அவர்கள் பின்னிற்கவே, ஊரிலுள்ள பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் ஊடாகப் பாடசாலைக்கென நிதி சேகரிப்பில் ஈடுபட்டார். இவரது தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே இன்று பாடசாலைக்கான ஒரு முதலீடாக அந்நிதி விளங்கக் காரணமாயிற்று.

உபவேந்தர்கள், பேராசிரியர்கள், கலாநிதிகள்... எனப் பலரை உருவாக்கிய இப்பள்ளியை நிருவகித்த முன்னைய அதிபர்களின் முன்னெடுப்புக்களை அடியொற்றி, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பக்க ஆதரவோடு தனது செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

இவ்வகையில் பொருத்தப்பாடற்றிருந்த மேற்கு நுழைவாயிலை ஆனைமுகத்தானின் பார்வையின் கீழ் தெற்கிற்கு இடமாற்றினார். இது பள்ளி வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது எனலாம். பள்ளி வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்ட இவர் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றுடன் விடாது தொடர்புகொண்டு பாடசாலையின் பௌதிக வளங்களைப் பெருக்குவதில் ஈடுபட்டார். மாணவர்களின்

அடிப்படைத் தேவையான மலசலகூடம், நீர்த் தாங்கியும் குழாய்நீர் வசதியும், GTZ நிறுவன உதவியுடன் நவீன மலசலகூடத் தொகுதி, மாகாண மட்டக் கல்வித் திணைக்கள உதவியைநாடி இரு மாடிக்கட்டடம், கேட்போர்கூடம் என்பவற்றை அமைத்துப் பாடசாலை அபிவிருத்தித் திட்டங் களை முன்னெடுத்துச் சென்றார்.

**சன்மார்க்க அன்னையின் வளங்களைப் பெருக்கியவர் :-**

பரந்துகிடக்கும் வளங்களை ஒன்றுசேர்த் தால் நிச்சயம் பாடசாலையை வளப்படுத்த முடியும் ஆதலால், வெறுமனே கல்வியோடு மட்டுமல்லாது பார்ப்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள் ளும் வண்ணம் கவினுறு கலைகளை வளர்த்தல், இயன்றவரை பௌதிக வளங்களைப் பெருக்கு தல், இவற்றின் மூலம் பிறருள்ளங்களில் நம்பிக் கையை வளர்க்கமுடியும். அப்போது உதவிகள் எம்மை நாடிவரும் என அடிக்கடி கூறுவார். அவ ரின் சிந்தனைகள் செயலுருப் பெறத்தொடங்கின. நலன்விரும்பிகள் பலர் தாமாகவே முன்வந்து நினைவுச் சின்னங்களாகவும் ஞாபகார்த்தங்க ளாகவும் பொருள் அன்பளிப்புக்களையும், சரீர உதவிகளையும் வழங்கினர். அவ்வகையில்,

- சூழலின் மகிமைக்கேற்ப மகுடவாசகம் கொண்ட இலச்சினை.
- ஆசிரியர்குழாம் - கேட்போர்கூடப்பேச்சுமேடை.
- பாடசாலை அபிவிருத்திச்சங்கம் - விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கான வெற்றிமேடை.
- பாடசாலை நுழைவாயிலுக்கான பெயர் பொறிக்கப்பட்ட இரும்பு வளைவும் முகப்பு மதிலும்.
- கேட்போர்கூடத் திரைச்சீலை.
- மின்னிணைப்பு.
- ஒலிபெருக்கித் தொகுதி.
- மாணவர் - ஆசிரியர் இருக்கைகளும் வட்டமேசைகளும்.
- நவீன கல்வியியலுக்கு அமைவாக விளை யாட்டு முற்றமும் சுற்றுமதிலும்.
- முன்னாள் அதிபர்கள், புகழ்பெற்ற பழைய மாணவர்கள் ஆகியோரின் உருவப்படத் திரைநீக்கம்.
- பிறந்தநாள் அன்பளிப்பாக நூலகத்திற்கான புத்தகங்கள்.
- புலமை மாணவர் அன்பளிப்பாகக் கைக் கதிரைகளும் மேசைகளும்.

இதன்மூலம் சமூகரீதியாக ஒரு சிந்தனை உருமாற்றத்தை ஏற்படுத்தினார். நாட்டில் அன்று ஏற்பட்ட ஓரளவு அமைதிச் சூழலைப் பயன்படுத்திப் புலம்பெயர்ந்த பலர் தங்கள் தாய்நாட்டைப் பார்க்க வந்தனர். அங்ஙனம் வந்தவர்களுள் இவ்வூரைச் சேர்ந்த பலரும் அடங்குவர். அவர்கள் பாலர் கல்விதனைத் தமக்களித்த இப்பள்ளித் தாயைத் தரிசிக்கவும் தவறவில்லை. 'அன்றும் - இன்றும்' எனும் நோக்கில் பாடசாலையைப் பார்த்தனர். அவர்கள் பார்வையில் பல அர்த்தங்கள் புரிந்தன. அதிபரின் தனித்துவத்தையும், அவரது ஆளுமை யில் வெளிப்பாட்டு ஆற்றல் இருப்பதையும் உணர்ந் தனர். அவரின் நிருவாக முறைமையில் கண்ணிய மும் நம்பகத்தன்மையும் நிறைந்திருப்பதை நேரில் கண்டனர். இதனாலோ என்னவோ அந்நிய தேசம் சென்றதும் தங்கள் ஆரம்பப்பள்ளி பற்றி அதிகம் பேசினர். இதனால் இவ்வன்னை மேலும் பல சொத்துடைமைகளுக்கு உரியவளானாள்.

* **கனடாவாழ் ஏழாலை மக்கள் மன்றம் :-**

- வருடந்தோறும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக் கான பெறுமதிமிகு பரிசில்களுக்கான நிதி.
- கேட்போர்கூட மின்விசிறிகள்.
- 60' x 20' தகரப் பந்தல்.
- போட்டோப்பிரதி இயந்திரக் கொள்வனவு (அரைப்பகுதி நிதி).

* **ஜேர்மன்வாழ் பழைய மாணவர்கள் :-**

- புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பட்டமளிப்புச் சீருடை.

* **இலண்டன்வாழ் பழைய மாணவர்கள் :-**

- கணனிகள்.
- நூலக அபிவிருத்திக்கான புத்தகங்கள்.
- மேல்நாட்டு வாத்தியக் கருவிகள்.
- இரும்பு, பிளாஸ்ரிக் கதிரைகள்.

* விளையாட்டு மைதானத்திற்கான காணி அன்பளிப்பு.

* நிலையான வைப்பில் முதலீடுகள்.

பாடசாலைக்கு நிதிவழங்கும் மூலங்களைக் கண்டறிந்து வித்தியாசாலையின் வளர்ச்சிக்காய் அங்கும் கோரிக்கைகளை முன்வைத்து வெற்றி கண்டவர். அவ்வகையில்,

* **பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதி :-**
- பிரார்த்தனை மண்டபப் புனரமைப்பு.
- போட்டோப்பிரதி இயந்திரக் கொள்வனவு (அரைப்பகுதி நிதி).
- 5 S முறையில் ஆவணங்களைக் கோவைப் படுத்துவதற்கு அலுவலகத்திற்கான நிலை யான கண்ணாடி அலுமாரி.

* **சிறுவர் பராமரிப்பு நிதியம் :-**
- லெமினேற்றிங் இயந்திரம்

கிடைக்கும் வளங்களை உச்ச வினைத்திறன் கொண்டதாய் ஆக்குவதன் மூலம் பாடசாலை மேலும் வளங்களைப் பெருக்கிக்கொள்ளும் எனும் தூரநோக்குச் சிந்தனை கொண்ட இவர், மதிநுட்பத்தாலும், தனக்கேயுரிய ஆளுமையாற்ற லாலும் அவற்றை நெறிப்படுத்தினார். அதில் திருப்தியும் கண்டார். அவ் வகையில்,

- சரஸ்வதித் தடாகம்.
- நுழைவாயில் மதிற் சித்திரம்.
- பிரார்த்தனை மண்டபம், தரம் 01 வகுப்பறை வெளிப்புறச் சித்திரம்.
- தரம் 01 செயற்பாட்டறை.
- நீர்த்தாங்கி.
- வகுப்பறைகளுக்கான ஒலிபெருக்கி இணைப்பு.
- மேன்தலை எறியி (Over Head Projector).
- விளையாட்டு மைதான வெளிப்புற மதில்.
- தளபாடத் திருத்தங்களும் சில தளபாடக் கொள்வனவுகளும்.
- தொலைபேசி இணைப்பு.
- பசுமை நிறைந்த கவினுறு சூழல்.

**சன்மார்க்க அன்னையின் பெயரைக் கல்விப் புலத்தில் பொறித்தவர் :-**

நினைத்த காரியங்களை விடாது செய்துமுடிக் கும் செயற்றிறன் கொண்ட இவர், பாடசாலை வரலாற்றை அறிய ஆவணமில்லாக் குறையை உணர்ந்து 2001இல் "சுகிர்தமலர்" வெளிவரக் காரணமானார். இதன்மூலம் கேட்போர்கூடத்திற் காக 120 கதிரைகள் உருவாக்கப்பட்டன. பழையன கழிதலும் புதியன புகுதலுமாக நவீன சீர்திருத்தக் கல்விக்கமைவாகப் பாடசாலைக் கற்றலை மேம்படுத்தினார். ஆசிரியர் திறம்படக் கற்பிக்கவும், மாணவர் செம்மையுறக் கற்றிடவும் ஆசிரியர் மாணவரிடையே நல்லிணக்க சூழல் உருவாக வேண்டுமென்பதை உணர்ந்து, கல்வி அபிவிருத் திக்காய் கிடைக்கும் முழுவளங்களையும் உச்சப் பயன்பாடுள்ள முறையில் செலவிட்டார். இதனால் பாடசாலை பல்வேறு மட்டங்களில் சாதனைகளை நிலை நிறுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக, நகர்ப்புறப் பாடசாலைகளோடு ஒப்பிடுகையில் கிராமப்புறப் பாடசாலை ஒன்று தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் முன்னணி வகிக்கின்றது என்றால் இவ்வதிபரின் சிறந்த வழிகாட்டலும் நெறிப்படுத்தலுமே எனலாம்.

அத்துடன் மாணவர்களிடையே சமயப்பற்று, தலைமை தாங்கும் தன்மை, ஒற்றுமை, விட்டுக் கொடுப்பு, கூட்டுறவு, சுயசிந்தனை, தன்னம்பிக்கை போன்ற இன்னோரன்ன பண்புகள் வளர இதர செயற் பாடுகளான பல்வேறு விழாக்களையும் மன்றங் களையும் நடைமுறைப்படுத்தினார். அதுமட்டு மல்லாது நேரடி அனுபவத்தினூடாக மாணவர் கல்வித் தரத்தை விருத்திசெய்யும் நோக்கில் 2004, 2005 ஆகிய இருவருடங்களிலும் வெளி மாவட்டக் கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு மாணவர் உள்ளங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி யவர். மாணவரிடையே சிறுவயதுமுதல் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக, தரம் 01இல் சேரும்போதே சுன்னாகம் மக்கள் வங்கியில் "சிசு உதான" சேமிப்புக் கணக்கை அறிமுகப்படுத்தி னார். இதன்மூலம் இவ்வங்கியில் மாணவர் சார் பில் பெருமளவு பணத்தைச் சேமித்த பெருமைக் குரிய பாடசாலையும் இதுவே.

சிந்தனை - சொல் - செயல் அத்தனையும் ஒருங்கே பெற்ற இவர், இரவு பகல் பாராது, வயது பாராது வித்தியாசாலையின் வளர்ச்சிக்காய் அயராது சேவையாற்றுவார். தன்னலமின்றிய இவரது சேவையுள்ளத்தாலும் நிருவாக முறை யில் காணப்பட்ட நேர்மைத்திறனாலும் 2004இல் உடுவில் கோட்டத்தில் நல்லதிபராகத் தெரிவுசெய் யப்பட்டு, 2005இல் மாகாணமட்டத்தில் நல்லதிப ருக்கான "VIDYA VIJAYA SRI SAMMANA" ஜனாதி பதி விருதைத் தமதாக்கிக் கொண்டார்.

அர்ப்பண சேவையாற்றும் ஆசிரியர்களை யும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரையும், நலன் விரும்பிகளையும் உயர்வாக மதிக்கும்

உள்ளங்கொண்டவர். இவரது வேகமான சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் ஈடுகொடுத்து உத்வேகத்துடன் உழைப்பவர்களது ஆதரவால் இன்று இப்பள்ளி நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

*"மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை..."*

இவ்வன்னையை நாடிவருவோர் எண்ணிக்கை எல்லை கடந்து செல்வதால், "அடுத்த ஆண்டுக் கான தரம் 01 மாணவர் அனுமதிகள் யாவும் இன்று டன் நிறைவுற்றன" என முதல் வருடமே தெரிவிக் கும் கிராமத்துப் பாடசாலையும் இதுதான். இதுவே சமூகத்தில் இப்பள்ளிக்கு இருக்கும் நன்மதிப்பை எடுத்துக் காட்டப் போதுமானது. இந்நிலைக்கு இப் பள்ளியை இட்டுச்சென்ற பெருமைக்குரியவரும் இன்றைய மணிவிழா நாயகனே.

இவர் காலத்தில் மாணவர் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பும், 5ம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பும் இக்கட்டுரையின் இறுதியில் அட்டவணையாகத் தரப்பட்டுள்ளது.

**மணிவிழா நாயகனின் எதிர்பார்க்கை :-**

பாடசாலையின் இன்றைய உன்னத வளர்ச் சிக்குக் காரணமான இவ்வதிபரின் உள்ளத்தில் எதிர்பார்ப்புக் குறியொன்று இருப்பதை என்னால் உணரமுடிந்தது. "பாடசாலையை விட்டுச் செல்வது கவலையளிக்கிறதா?" என வினவியதற்கு "அது எனது தனிப்பட்ட சொத்து அல்ல விட்டுச்செல்லும் போது கவலைப்பட அது ஒரு சமூகத்தின் சொத்து. எனது கடமைக் காலத்தில் இங்கே செய்யவேண்டி யதைச் செய்யாது செல்பவனாக இருந்தால் அல் லதுபள்ளிவளங்களைச்சுரண்டியிருந்தால்அல்லது யாருக்காவது மனமறிந்து தீங்கு செய்திருந்தால் நிச்சயம் வேதனைப்படுவேன். மனச்சாட்சி உறுத் திக்கொண்டேயிருக்கும். ஆனால், 12 வருடகாலத் தில் எனது சக்திக்கும் மேலாகச் சொத்துச் சேர்த்து விட்டுச் செல்கின்றேன் என்று திருப்தி கொள்வே னேயன்றி வேதனைப்பட மாட்டேன்" என்றார் தெளிவுடன்.

எதிர்காலச் சந்ததி பயன்படுத்தும் வண்ணம், இப்பள்ளிச் சொத்துக்களை நிருவகித்து, வளங் களை மென்மேலும் பெருக்கி, இவ்வதிபர் விட்டுச் செல்லும் குறைகளை நிறைவுசெய்து, இப்பள்ளி யைத் தரமுயர்த்துவதன் மூலம் கதிரவன் போன்று ஒளிகான்றிட நல்லதிபர் வருதல் வேண்டும். இதுவே இன்றைய நிலை. இவரது வேணவாவும் இதுவே. அவரது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி பள்ளி நாமத்தை மங்காது காத்திட எதிர்காலச் சமூகம் முன்வரவேண்டும்.

**நிறைவு :-**

பல கஸ்ரங்கள், நெருக்குதல்கள், நெருக்கு வாரங்களுக்கு மத்தியிலும் இவ்வித்தியாசாலை யின் உயர்வைக்கண்டு ஏழாலை மண் பெருமிதம் கொள்கின்றது. தனக்கேயுரிய தனித்துவங்க ளோடு மிளிரும் இப்பள்ளி எதிர்காலத்திலும் தன் னிலை கெடாமல், உன்னத நிலையை அடைய இதயபூர்வமான அர்ப்பண உணர்வுடன் கூடிய கடின உழைப்பாளர்களையே இச்சமூகம் நாடி நிற்கின்றது.

"உலகில் பிறக்கும் ஒரு மனிதன் தனது சமூகத்திற்கு வழங்கும் சேவையைப் பொறுத்தே வரலாற்றில் பதிக்கப்படுகின்றான்" அவ்வகையில் தன்னலமின்றிச் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் நம் அதிபர் பெயரும் சன்மார்க்க வரலாற்றில் இடம் பெறும் என்பது திண்ணம். இவர் ஒரு சிறந்த நிர் வாகி மட்டுமல்ல, வளமான சிந்தனையாளராகவும் விளங்குகின்றார். அதிபர் ஓய்வுபெறலாம். ஆனால் அது சன்மார்க்க சமூகத்தில் ஓய்வாகக் கருதப்பட மாட்டாது. இன்று அவர் பெறுவது அரசசேவை ஓய்வு மட்டுமே. ஏழாலை மண்ணும் நிமிர்ந்து நிற்கும் சன்மார்க்கமும் அன்னவர் பெருமைதனைப் பறை சாற்றும். நேற்றைய சுவடுகள் நாளைய நம்பிக்கை களாய் மலரும். இந்நிலையில் அவரது ஓய்வும் இங்கு ஓய்வின்றித் தடம்பதிக்கும்.

12 வருடகால இவரது சன்மார்க்க வாழ்விய லில் 09 வருடத்திற்கும் சற்று மேலாக இவரின் கீழ் ஆசிரியப் பணியாற்றியதோடு, நிருவாக வேலை களில் பலவாறு உதவிசெய்த யான், நேரில் பெற்ற பல்வேறு அனுபவங்களின் அடிப்படையில் இவரது சன்மார்க்க வாழ்வியலை எழுதும் பேறு பெற்றேன். இவர் மேலும் பல ஆண்டுகள் உடல் உள ஆரோக்கியத்துடனும் தனது குடும்பத்தாருட னும் இன்புற வாழ, கருணாகரப் பிள்ளையாரின் பெருங் கருணையை நாடி நிறைவுசெய்கின்றேன்.

# மனித வள விருத்தி

மாணவர் தொகை

| வருடம் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தரம் 01 - 05 வரையான மாணவர் தொகை | 148 | 222 | 250 | 291 | 336 | 358 | 388 | 431 | 422 | 431 | 421 | 427 | 427 |

| தரம் 05 புலமைப் பரீட்சையும் பெறுபேறும் | | | | |
|---|---|---|---|---|
| | விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | தோற்றியோர் எண்ணிக்கை | 100 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் எண்ணிக்கை |
| 1996 | 39 | 36 | 01 | 01 |
| 1997 | 39 | 37 | 08 | 10 |
| 1998 | 43 | 43 | 18 | 09 |
| 1999 | 40 | 40 | 12 | 03 |
| 2000 | 40 | 38 | 30 | 07 |
| 2001 | 63 | 62 | 24 | 15 |
| 2002 | 55 | 54 | 17 | 06 |
| 2003 | 70 | 68 | 23 | 10 |
| 2004 | 62 | 61 | 35 | 13 |
| 2005 | 81 | 80 | 30 | 10 |
| 2006 | 79 | 77 | 44 | 13 |
| 2007 | 90 | 85 | 58 | 23 |
| 2008 | 82 | 80 | 31 | 24 |

* * *

## தொழிற்துறையில் சிறுவர்களை வேலைக்கமர்த்தக்கூடிய வயதெல்லை

| | | | |
|---|---|---|---|
| 1. | கைத்தொழிற்துறை | - | 14 வயது. |
| 2. | வீதி வியாபாரத்தில் ஈடுபடுதல் | - | 14 வயது. |
| 3. | கடை மற்றும் காரியாலயம் | - | 14 வயது. |
| 4. | பெருந்தோட்டத்துதுறை வேலை | - | 14 வயது. |
| 5. | களியாட்டத்தில் பங்குபற்றல் | - | 14 வயது. |
| 6. | ஆபத்தான தன்மையுடைய பயிற்சி | - | 14 வயது. |
| 7. | கடற்தொழில், கப்பல்தொழில் | - | 15 வயது. |
| 8. | வாழ்க்கைக்கு ஆபத்தான தொழில் | - | 16 வயது. |
| 9. | இரவு வேலை | - | 18 வயது |

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள்

- குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை - 1995ம் ஆண்டு 22ம் இலக்க திருத்தச் சட்டம், 1998ம் ஆண்டு 29ம் இலக்கச் சட்டம்.
- கடை அலுவலக வேலை விதிப்புச்சட்டம்.
- தொழிலாளர் நட்ட ஈட்டுக் கட்டளைச் சட்டம்.
- தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்.
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச் சட்டம்.
- சிறுவர் இளம்பராயத்தவர் கட்டளைச் சட்டம்.
- பராமரிப்புச் சட்டம்.
- சிறுவர் இளம்பராயத்தவர் தீங்குமிக்க வெளியீடுகள் சட்டம்.
- சான்றுக் கட்டளைச் சட்டம்.

அதிபருக்கு கிடைத்த நற்சான்றிதழ்களில் சில...



வலிகாமம் கல்வி வலயம்
ஆசிரியர் தினம் - 2004
நல்லதிபர் சான்றிதழ்

கல்வித் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணம்.
CIAL DEPARTMENT OF EDUCATION, NORTH EAST PROVINCE.
026-2222556

உலக ஆசிரியர் தின

2005.10.06ம் திகதி "உலக
இலங்கையிலும் மாகாண
அதிபர்கள் இத்தினத்தில் கௌரவிச்

வலயாதியாக மேற்கொ
அறியத்தருகின்றேன்.

10.06ம் திகதி திருகோணமலை
கு அறிவிக்கப்படும்.

கல்விப்பணிப்பாளர்,

**MINISTRY OF EDUCATION**

**National Teacher Felicitation Ceremony - 2005**

*It Was You Who Sacrificed*
*Your Time And Energy*
*For The Sake Of Our Children*
*It Was You Who Assisted Us*
*In Creating A Righteous Society*
*In Which There Are People With Noble Qualities*
*You Rendered A Yeoman Service*
*In Moulding The Character*
*Of Thousands And Thousands Of Children*

*This*

VIDYA VIJAYA SRI SAMMANA

*Certificate Is Awarded To*
*Rev/Mr/Mrs/Miss*

S. SIVANADARAJAH

*Principal/ ~~Service Adviser / Teacher~~*
*Of*

J / EASALAI WEST SAIVASANMARKA

*College / ~~Zonal Education Office~~*
*According To A Concept Of Her Excellency The President*
*To Honour Your Invaluable Service*

CHANDRIKA BANDARANAIKE KUMARATHUNGA
PRESIDENT
THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRILANKA

M.G.T.NAWARATNA
ADDITIONAL SECRETARY
(EDUCATION DEVELOPMENT)

DR.TARA DE MEL
SECRETARY
MINISTRY OF EDUCATION

# சமயம்

- ❖ ஏழாலையில் சைவ ஆலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்
- ❖ நன்னயக் குணம்பல மன்னிய செல்வன் பொன்னையாபிள்ளையெனும் அருளானந்தசிவம்
- ❖ இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா அவர்கள்
- ❖ சித்தாந்த வித்தகர் வாழ்வும் வளமும்
- ❖ ஆத்மஜோதி முத்தையா
- ❖ பெரிய புராணத்தில் பக்தி
- ❖ நாவலர் பெருமானின் சிந்தனைகள்
- ❖ இந்து நாகரிகத்தில் அறம் – ஓர் அறிமுகம்
- ❖ தவமுனிவனின் தமிழ் மந்திரம்
- ❖ பெரியபுராணத்தில் திருநின்ற செம்மை



# ஏழாலையில் சைவாலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

**சிவ சண்முகவடிவேல்**
'பன்னிரு திருமுறைப் பாராயணச் செம்மல்',
'கலாபூசணம்'

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் வூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.

இது திருமுறைத் திருத்தாண்டகம். ஆறாம் திருமுறையில் அமையப்பெற்றது. தனித் திருத் தாண்டகம் என்னும் திருப்பதிகத் தலைப்பில் தங்கியுள்ளது.

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேனினும், பாலினும், அமுதினும், கன்னலினும் இனிய, அருள் உபதேசமாகும். திருக்கோவில் இல்லாத ஊர் அருட்செல்வம், பொருட் செல்வம், கல்விச் செல்வம், கலைச் செல்வம் முதலாக விதந்தோதப்படும் அனைத்துச் செல்வமும் இல்லாத ஊராகும்.

அவ்வாறே திருவெண்ணீறு அணியாத மாந்தர் வாழும் ஊரும் வாழா ஊராகும். பண் சுமந்த பாடல்களைப் பக்தியோடு பாடாமல் இருக்கும் ஊரும், பெருமை பொருந்திய கற்றளிக் கோவில்கள் காணப்படாத ஊரும், விருப்பத்தினோடு வலம்புரிச் சங்கு வாத்தியம் இசைக்காத ஊரும், விதானத்தினாலும் வெண்கொடிகளாலும் வானம் விளங்காத ஊரும், வைகறையில் துயில் நீங்கி வாயும் கட்டிச் சிவநாமத்தைச் சொல்லிச் சொல்லி, வண்டுதேன் உண்ணுவதற்கு முன்பாக, மலர்கள் பறித்துக் கொள்ளும் பழக்கவழக்கம் இல்லாத ஊரும் ஊரல்ல. அது கொடிய விலங்கு குடியிருக்கும் காடு அல்லது சுடுகாடாகவும் கொள்ளலாம் என்பது திருநாவுக்கரசு நாயனாருடைய தேவாரக் கருவின் உருவான அருள் பொருள்.

கோவிலை அமைத்த பின்பு நகர் காண்பதும் உண்டு. மதுரை ஆலவாய் ஆலயம் அவ்வாறு அமைக்கப்பெற்றது. முறைமையும் அதுவே. முன்னதாக, முன்னவனார் திருக்கோயில் உருவாக்கிய பின்னரே ஊரில் குடியமர்த்தல் பொருந்தும்.

மானுடர் நலம்பெற – வாழ்வை வளம்படுத்திக்கொள்வதற்கு, ஆலயத்தின் இன்றியமையாமை எடுத்து இயம்பும், தலையாய பேருணர்வை வெளிப்படுத்தும் ஞான ஆரமுத தேவாரம் அது.

'கோயில் இல்லாத வூரில் குடியிருக்க வேண்டாம்'
'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'
'எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வழி வாழி நிலனே'
"ஆற்றறா நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றாரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

வைகையாற்றுப் புதுவெள்ளம் மதுரை மாநகரை மாய்ப்பதுபோல், வரக்கண்ட பாண்டிய மன்னவனுடைய சிந்தனை, திருவருளோடு சேர்ந்து செயற்படுகின்றது.

"ஆதியாங் கடவு ளெந்தை
யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை
பண்டையிற் குறைந்த துண்டோ
நீதியாந் தவத்தின் மிக்கார்
நெஞ்சகம் புழுங்க மண்மேற்
நீதியாஞ் செய்த துண்டோ
செப்புமி னமைச்ச ரென்றான்"

இவ்வாறு நாட்டில் வழமைக்கு எதிரான தீயவை நிகழும்போது, சிவாலயப் பூசை தவறுதல் காரணமாகும் என்னும் கொள்கையைக் கருத்திற் கொண்டவர்களாகக் கோல் ஓச்சும் மன்னவனாயினும் சரி, குடிமக்களாயினும் சரி பண்டைக் காலந்தொட்டு வாழ்ந்து வந்தனர்.

கி.மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது சிந்துவெளி நாகரிகம். தெற்குப் பஞ்சாபில் திகழ்ந்த ஹரப்பா, மொகெஞ்சதாரோ நகரங்

களில் நிலவிய நாகரீகம் சிவவழிபாட்டை அடிப் படையாகக் கொண்டிருந்தது என்பது வரலாற்று ஆராய்வாளர் வெளிப்படுத்தும் வடித்தெடுத்த உண்மை. இந்நாளில் அப்பிரதேசம் பாகிஸ் தான் தேசத்தில் அமைந்துள்ளது.

சங்ககால இலக்கிய வழக்கில் காண்பதற்கு அரிதாகக் காணப்படும் 'சிவன்' என்னும் நாமத் தைத் திருநாவுக்கரசு நாயனார், நாலாம் திருமுறையில்,

"சிவனெனும் நாமம் தனக்கே
யுடையசெம் மேனிஎம்மான்"

என்று தித்திக்கும் தீந்தமிழால் போற்றிப் புகழ்ந்து துதிசெய்து வணங்குவது மனத்திற்கு மகிழ்வைத் தருவதொன்றாகும். திருநாவுக் கரசு நாயனாருடைய செம்மேனி எம்மான் சிவன் என்னும் தமிழ் வழக்கை அரண் செய்வது போல அமைகின்றது. ஆளுடைய அடிகளார் அருளிய

'தென்னாடு உடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி'
என்னும் திருவாசக அருள்வாக்கு.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிகளாகிய தமிழர், அறிவினால் தெளிந்து வழிபடும் கடவுள் சிவன். சிவனை வழிபடும் சமயம் சைவம். அந்தச் சைவம், இந்து சமயத்தின் கிளைச் சமயங்களில் ஒன்றாக ஒதுக்கப்பட்டது வியப்பிற்குரியது.

இந்து என்று ஒரு சமயம் இல்லை என்று திட்டவட்டமாகக்கூறும் கொள்கையாளரும் இருக் கத்தான் செய்கிறார்கள். அவர்கள் 'இந்து' என் னும் வார்த்தைக்குத் தரும் தெளிவான விளக்கம் இது. ஆரியர்க்கு 'இந்துக்கள்' எனும் பெயர் எவ்வாறு உண்டாயிற்று என்பதை ஒருவர் அறிய விரும்பலாம். இந்து எனும் பெயர் வந்த வகை ஒருவாறு வேடிக்கையானதே. பஞ்சாப் பிலே பழைய ஆரியர் குடியேறியிருந்த இடத்திற் குச் சிந்து நதியே மேற்கெல்லையாயிற்று. நதியின் எதிர்க்கரையில் வாழ்ந்தவர் பண்டைக் கால ஈரானியர் (பாரசீகர்) இந்நதியின் பெயரைக் கொண்டே ஈரானியர் ஆரியரை அழைக்கலாயி னர். ஆனால், அவர்க்குச் சிந்து என்ற பெயரைச் சரியாக உச்சரிக்க முடியவில்லை. அதை ஹிந்து என்றனர். ஆதலின் ஆரியர்க்கு ஈரா னியர் இட்ட பெயர் 'ஹிந்து' என்பதாயிற்று நாள டைவில் ஆரியர், தாமே இப்பெயரை ஈரானிய ரிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

*(இந்து மத ஸாரம் பக் : 2 பந்தி -3 மொழி பெயர்த்தவர் சுவாமி பரமாத்மானந்தர்).*

சிவனை வழிபாடு செய்பவர்கள் சைவர் என்று அழைக்கப்படுவார்.

சைவர்கள் சிவன், அம்மன், விநாயகன், முருகன், ஆலமர் கடவுள், வயிரவர், சண்டேசுரர் நவக்கிரகம், நடேசர், திருமால் முதலாய அனைத்துத் தெய்வங்களையும் வழிபடுவார்.

சிவன் திருக்கோவிலில் இன்னும் என்ன என்ன கடவுளர்கள் திருவுருவம் உண்டோ! அந்தத் தெய்வங்களையும் வழிபடுவதனால், 'தான் ஒரு சைவன் சிவபெருமானை வழி பட்டேன்' என்று மனநினைவு பெறுகிறான்.

சிவ சமய வழிபாட்டில் சிவபெருமானைத் தவிர சிறு தெய்வ வழிபாடும் இருந்த வண்ணம் இருந்துவருகிறது. சிறு தெய்வழிபாட்டில் ஈடு பட்டாலும், "தாமும் சைவர்தாம்" என்று தெளிவில் லாத ஓர் உள்ளுணர்வைக் கடந்த உணர்வில் அவர்கள் உலாவி வருவதும் தவிர்க்கமுடியாத உண்மை.

பண்டைக் காலத்திலிருந்தே சிறு தெய்வ வழிபாடு சைவத்தில் நிலவி வந்த உண்மையை அப்பருடைய அருள் அமுதத்தால் அறியலாம்.

"சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" என்பது திருநாவுக்கரசு நாயனாரு டைய திருவாக்கு. சிறு தெய்வ வழிபாடு சைவத்தில் நிலவி வந்த உண்மையை அப்பரு டைய அருள் அமுதத்தால் அறியலாம்.

சிறு தெய்வத்தினுள்ளும் சிவபெருமானு டைய திருவருள் வைப்பு உண்டு என்னும் தத்துவத்தைச் செப்பும் திருவாசகம் :

"ஒன்றுநீ அல்லை அன்றிமற் (று) இல்லை: ஒரு பொருளும் நீ அல்லையானால்" நின்னை யன்றி வேறு ஒரு பொருளும் இல்லையானாய் என்பது பொருள்.

தெய்வம் எதுவாக இருந்தாலும், வழிபாட்டுப் பயனைச் சிவபெருமானே அருளுவர்; என்ற உண்மையை வெளிப்படுத்தும் சிவஞானசித்தி

யார், சிறு தெய்வங்களுடைய குறைபாடுகளை உள்ளவாறு உணர்த்தும் செய்யுள் இது.

யாதொரு தெய்வங் கொண்டீ
ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம்
வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும்
பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலா னிவையி லாதா
னறிந்தருள் செய்வ னன்றே

*சிவஞானசித்தியார் - 115*

குறைபாடுகளுக்கு எதிர்முகமாகக் குறைவிலா நிறைவாகவும், கோதிலா அமுதாகவும், ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றாகவும், மறையுமாயும் மறையின் பொருளுமாகவும், மனத்திடை மன்னிய மன்னனாகவும், சிறைபெருநீர்போல் சிந்தைவாய்ப் பாய்பவன் திருப்பெருந்துறை உறை சிவன் அவன் இறைவன். அவன் உடலை வாழும் இடமாகக் கொள்பவன் என்று திருவாதவூரடிகளார் திருவாசகம் என்னும் தேனில் சிவபெருமானைச் சிந்தைக்கு விருந்தாகத் தந்தருள்வார்.

அந்தச் சிவபெருமானுடைய கோடானுகோடி கலைகளில் ஒரு கலையின் அணுப் பிரமாண அளவு கொண்டதான சந்நிதிக்கு, ஆதரிப்பவர்களுடைய பாவ புண்ணியம், சூழல், உடல்நிலை, மனோபக்குவம், பிணியால் நலிவுறல், பிராரத்த கன்மம் ஆகியவற்றிற்குப் பொருந்த ஒரு பெயரிட்டு, ஒரு செயற்பாட்டைக் குறித்து வழிபாட்டை மேற்கொள்வதும் அதனுடைய பிரதிபலிப்பாக உடலிற் புகுந்து உயிரில் கலந்து ஆராலும் அறியமுடியாத் தன்மையாக நல்வாக்குச் சொல்லுதல், நோய் நீக்கம், நல்வாழ்வு - முதலாய பலவேறுவிதமாக, வியத்தகு செயற்பாடுகளை நிகழ்த்துவது உண்டு. சாதாரணமாகக் கலையாடும் கோயில் என அழைப்பர்.

சந்ததி சந்ததியாக ஆவிகள், தேவதைகள், கன்னிமாப் பெண்கள் போன்ற வழிபாட்டால் அவை சிறு தெய்வங்களாகி பூசாரி, படிமாத்தான், படிமத்தாள் போன்றவர்களில் ஆவேசித்துச் சித்திகளை அருள்பாலிப்பதும் உண்டு. இவற்றினுடைய ஆற்றலைத் தாங்க முடியாமையினாலும், எந்நேரத்திலும் வந்து வருத்துவதாலும், ஆசாரசீல ஒழுக்கத்தோடு அவற்றை ஆதரிக்க முடியாமையாலும், கல்லிலோ மரத்திலோ சூலத்திலோ அச்சக்தியைத் தரிக்க வைத்துப்பூசை, பொங்கல், குளிர்த்தி, விளக்கு வைத்தல் போன்ற வழிபாடுகளைப் பலரும் கூடி இயற்றி வழிபட்டு வருவதும், அவற்றுள் சில காலகதியில் கற்றளிக் கோயிலாவதும் உண்டு. கற்றளிக் கோயிலானதும் சிவாகமம், பெருவிழாக்கள், வழிபாட்டிற்கு இடங்கொடாமையால் அத்தேவதைத் தெய்வங்களுக்கு திருக்கோவிலில் தனியிடத்து எழுந்தருளிவித்துப் பின்னர் கருவறையில் ஆகம விதிக்கு இசைவான திருவுருவங்களைப் பிரதிட்டை செய்து விழாக்கள் நிகழ்வதும் நடைமுறையில் காணக்கூடியது.

கண்ணகை அம்மன் வழிபாடு பரக்கக் காணப்பெற்ற ஆலயங்கள் பலப்பல. இராசராசேஸ்வரி அம்மன், புவனேசுவரி அம்மன், மீனாட்சி அம்மன் போன்ற திருநாமத் திருக்கோவில்களாகி, நித்திய நைமித்திய, மகோற்சவ விழாக் கொண்டாடப்படுவது கண்கூடு.

மாற்றமாம் வையத்தில் வெவ்வேறாக இறைவன் வந்து தோற்றும் ஆலய வழிபாட்டிற்கு ஏழாலையம்பதி விதிவிலக்கு அல்ல. கல்வி, ஞானம், கலைப்பொருள் பற்றிக் கனவிலும் கேட்டு அறியாதவர்களாக இருப்பார்கள். ஆனால் கற்றவர்கள், செல்வந்தர்களுக்கு நடந்ததை, நடப்பதை, நடக்க இருப்பதைச் சொல்லவல்ல தெய்வ அருள்வாக்குச் சொல்லும் திறன் மிக்கவர்கள். அதனால், இன்னார் இனியார் என்று இல்லாமல் எல்லாரும் தங்கள் குறைகளை மாற்றிக் கொள்ளக்கூட்டங் கூட்டமாகக் குழுமி வருவார்கள். மகிமை மிக்க மந்திர நீற்றைக் கொடுப்பார்களானால், தீராத நோய் தீரும். பேய் பிசாசு, பில்லி சூனியம், தீய தேவதைகள் அகன்று ஓடும்.

உருக்கொண்டு கலை எடுத்துத் தன்னை மறந்து, தெய்வ வழி நின்று செயலாற்றுவார்கள். கலை எடுத்து ஆடுவதனால் அக்கோவில் களைக் கலைக்கோவில் என அழைப்பார்கள். இன்னும் சில தெய்வங்கள், மானுட வடிவத்தில் வெளிப்பட்டு அத்தெய்வங்களோடு ஒன்றுபட்டவர்கள் கண்களுக்குப் புலனாவதும் உண்டு. ஏதோ ஒரு வகையில் தெய்வத்தோடு ஒன்றுபட்டவர்களோடு உரையாடுவதும் உண்டு. அவ்வுண்மையை உணரும் தகைமை இல்லாதவர்கள் 'அவர் பேயினால் பீடிக்கப்பட்டார்' என்று 'பேய்க் கதை' பேசுவதைக் காதாரக் கேட்டுள்ளோம்.

இவ்வாறான சம்பவங்கள் சிவபெருமான் – நாயன்மாரிடத்தில் மேலிடங்களில் நிகழ்ந்த வற்றைப் பெரிய புராணத்தில் பரக்கக் காணலாம். மேலிடங்களில் நிகழ்வனவற்றினுடைய நிழலின் சாயையே 'கீழிடங்களில் உருப்பெற்று உலாவு வன' என்று உறுதியாக நம்பலாம். உதாரணத் திற்காக ஒன்றிரண்டு இங்கு எடுத்தாளு கின்றோம்.

திருப்பைஞ்ஞீலியில் சிவபெருமான் திரு நாவுக்கரசு நாயனாருக்குப் பொதிசோறு கொடுத்தருளியது. சுந்தரமூர்த்தி நாயனா ருக்குச் சிவபெருமான் திருக்குருகாவூரில் கட்டுச்சோறு வழங்கி அருளியது. அச்சந்தர்ப் பங்களில் சிவபெருமான் உடனாக இருந்தும், உரையாடியும் உணரமுடியவில்லையே.

இவ்வுண்மைகளை ஊகித்து அறியும் உணர்விலாதார் இகழ்வதும், சிரிப்பதும் உண்டு என்ற உண்மையைத் திருவாதவூரடிகள் வாக்கினால் அறியலாகும். 'நின்ற சிவம் வந்து நம்மை உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு உலகமெல்லாம் சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ....'

"நாடவர் நம்தம்மை யார்ப்ப வார்ப்ப நாமும் அவர் தம்மை யார்ப்ப வார்ப்ப" என்பதி னாலும் அறியலாம்.

இது இவ்வாறாக, ஏழாலைக் கோயில் பற்றி நோக்குவோம். ஏழாலையில் உருவான சைவ ஆலயங்களை மூன்று பெரும் பிரிவாகக் கொள்ளலாம்.

ஆதீனமடம் முதலாவது; சிவாகம, வேத, புராண, இதிகாசங்களுக்கு இசைவான திருக் கோவில்கள் இரண்டாவது; கலைக்கோவில்கள் மூன்றாவது.

### 1. ஏழாலை, சமயாசரிய சுவாமிகள் ஆதீன மடம் :

மேற்படி ஆதீன மடாலயம் நூற்றைம்பது ஆண்டுக்காலப் பின்னணியோடு பொருந்திய தாகும். மூலமூர்த்தியாகக் கருணாகரப்பிள்ளை யார் கருணை மூர்த்தி கர்ப்பக் கிருகத்தில் காட்சிதரும் கண்கொள்ளாக் காட்சியை இம் மடாலயத்தில் கண்டு களிக்கலாம். உற்சவ மூர்த் திப் பிள்ளையார் தெற்கு வாயில் கோவிலுள் தரிசனம் தந்த வண்ணம் இருக்கிறார். (இப்போது வேறும் ஒரு சின்னப் பிள்ளையார் உடனாக உறைந்தருளுகின்றார்).

புதுக்கோவிலில் சிவகாமசுந்தரி அம்பாள் சமேத நடராசமூர்த்தி, ஆனந்தத் தாண்டவத் தோடு அருள்பாலித்த வண்ணம் திகழ்கின்றார். அம்பலவாணப் பெருமானை அறுகணமும் ஆராதித்தவண்ணமாக வடபக்கம் நோக்கி நால்வர் கோவில் நன்கு மிளிர்கின்றது.

மடாலயத்தில் நித்தலும் காலை, மாலை இரு வேளைப் பூசை தப்பாது. மாலைக்காலப் பூசையின்போது நால்வர் கோவிலில் ஐந்து புராணம் ஓதும் வழக்கு உளது. மடாலய மட வளா கத்தில் திருவெம்பாவை, நால்வர் குருபூசை, சிவராத்திரி, ஆனி உத்தரம், விநாயக சதுர்த்தி, ஆடி அத்தம், சித்திரைச் சுவாதி, சண்டேசுரநாயனார், சடை வரதர், அருளா னந்தசிவம் ஆகியோர் குருபூசைகள் சிறப்பா கக் கொண்டாடப்படுவன.

பன்னிரு திருமுறைப் பாராயணம், பெரிய புராண படனம், அடிமுடி தேடு படலம், திருவாத வூரடிகள் புராணபடனம், சேக்கிழார் புராணபட னம், பெருங்கதைப்படிப்பு என்பன ஆண்டுதோ றும் தப்பாது நிகழ்ந்துவரும் திருவருட் பிரசா தங்களாகும்.

நால்வர் கோவிலில் சேக்கிழார் நாயனார், மெய்கண்ட தேவநாயனார், சண்டேசுரநாய னார் திகழக் காணலாம். சைவப்பெரியார் திரு.மு.ஞானப்பிரகாசம் அவர்களுக்குப் பின்பு, அவர் வழி மரபுளோர்களால் மடாலயம் பரிபா லிக்கப்பட்டு வருவது கண்கூடு.

ஏழாலையில், சிவபெருமானுடைய மைந்த ராகிய முருகப்பெருமானுக்கு திருமுகங்கள் ஆறாக அமைந்ததுபோல ஆறு ஆலயங்கள் மகா உற்சவம் கொண்டாடும் சிறப்புப் பெற்றுத் திகழ்வன :

### சிவாகமக்கோவில்

### 1. ஏழாலை, புங்கடி அருள்மிகு அம்பலவாணேசுவரர் ஆலயம் :

இவ்வாலயம் இற்றைக்கு இருநூறு ஆண்டு களுக்கு முன்பு உற்பத்தியானது என்று ஊகிக்க லாம். அந்நாளில் சைவப் பெரியார் சின்னத்தம்பி

யிடத்தில் ஞானதேசிகர் ஒருவர் சிவலிங்கம் ஒன்றைக் கையளித்தார். சின்னத்தம்பி சிவ லிங்கத் திருவுருவைத் தமது இல்லத்திற்கு அரு காக விளங்கிய வில்வமரத்தின் கீழாகப் பிர திட்டை செய்தார். நாளடைவில் சின்னத்தம்பி என்பவருக்குச் சந்தான விருத்தியும் மனை மாட்சியும் மலிந்தது.

நாளடைவில் இப்போது ஆலயம் இருக் கும் இடத்தில் வில்வமரத்தடிச் சிவலிங்கப் பெரு மானுக்குத் திருக்கோவில் எடுத்துப் பிரதிட்டை செய்தார்கள். விசேட பூசை, கூட்டுப் பிரார்த்தனை புராணபடனம் முதலியன நடாத்திவர ஆலயத் தில் திருவருள் மலர்ச்சி, படிப்படியாக வெளிப்பட லாயிற்று. பல்லோரும் சென்று பக்தி செலுத்தச் சிவம் பெருக்கும் சைவநெறி வியாபிக்கத் தொடங்கியது.

சிவம் பெருக்கும் தவநெறி தழைக்க ஒரு வேளைப் பூசை, இருகாலப் பூசையாக மாறியது. கட்டிடத் திருப்பணி வளரத் தொடங்கியது. 1971ஆம் ஆண்டில் ஒன்பது பேரைக் கொண்ட 'தர்மகர்த்தா சபை' ஒன்று உருவாக்கப் பெற்றது.

1968ம் ஆண்டில் தேர்த் திருப்பணிச் சபையை ஏழாலைச் சைவர்கள் அனைவரும் ஒன்றுகூடி அமைத்தார்கள். சிவபெருமானைத் தேரில் திருவுலா எழுந்தருளுவிக்கும் பொருட்டு சித்திர அலங்காரத் தேர் செதுக்கப்பெற்றது. தேர்த்திருவிழா பொது உபயமாக இந்நாளிலும் சிறப்பாகத் திகழ்வது கண்டு களிக்கத்தக்கது. ஆனிமாத உத்தர நட்சத்திரத்தைத் தீர்த்தத் திரு விழாவாகக் கொண்டு பத்துத் தினங்கள் மஹோற் சவ விழா நடைபெற்றுவருவது கண்கூடு.

1972ம் ஆண்டு ஆனிமாத உத்தர நாளிற்கு முதல்நாள் முதன்முதலாக அம்பலவாண நாதர் தேர்ப்பவனி விழா ஆரம்பமாகியது. உத்திரத்திற்கு முதல்நாள் மகம். ஆனி மகம் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் தினம். திருவாதவூரடிகளார் குருபூசை நன்னாளில் சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணப் பெரு மானுடைய தேர்ப்பவனி நிகழும் ஒற்றுமையை நினைந்து இன்புறப்பாலது.

சிவபெருமான் திருக்கோவிலுக்கான மடப் பள்ளி, கொடித்தம்பம், சுற்றுப் பிரகாரத்தில் முரு கன் கோவில், சனீஸ்வரன் கோவில், நவக்கிர கக்கோவில், அம்மன் வாசல், நடேசர்கோவில் ஆகியவற்றைத் தனித்தனியான குடும்பத்த வர்கள் நிறைவாக்கிக் கொடுத்தார்கள்.

தேர்த்திருவிழாப் போலச் சப்பறத் திருவிழா வும் சிறப்புற நிகழ்வதொன்று. அன்னதானச் சபையாரும் ஆண்டு தோறும் விழாக் காலங் களில் ஊக்கத்துடன் அன்னதானம் நிகழ்த்தி வருவது ஊரறிந்த உண்மையாகும்.

தனித்தனியான நிர்வாகத்தோடு நான்கு மஹோற்சவம் நிகழும் திருக்கோவில்கள் ஓரிடத் தில் அமைந்திருப்பது திருவருள் சிறப்பு என லாம். நான்கு கோவில்களுக்கும் வெளிவீதி ஒன்றே தான். வீதியிலும் அயலிலுமாகக் கிணறு, கேணி, குளம், மருதஞ்சோலை, பெரிய தம்பிரான் ஆலயம் வயலும் வயல்சார்ந்த புன்செய் நில மும், பயிர் உற்பத்தியும் மனத்திற்கு அமைதி யையும், நிறைவையும் உருவாக்கும் சுற்றுப்புறச் சூழல்களாகும்.

அம்பலவாணப் பெருமான் ஆலயத்தில், மஹோற்சவம், திருவெம்பாவை, சிவராத்திரி, பிரதோஷம், சனிவாரம், குருவாரம், தைப்பூசம், பங்குனி உத்தரம், ஆண்டில் ஆறு நடேசரபிடே கம், கௌரி விரதம் முதலானவை சிறப்பாகக் கொண்டாடப்படும் தினங்களில் சிலவாகும்.

சுவாமி : அம்பலவாணேசுவரர்
தேவி : சொர்ணாம்பிகை

## 2. ஏழாலை புங்கடி, புவனேசுவரி அம்பாள் ஆலயம் :

ஏழாலை நான்கு கோவில் வளாகத்தில் சிவாலயத்திற்கு அடுத்து அருகாக அமைந்தி ருப்பது புவனேசுவரி அம்பாள் ஆலயம்.

இத்திருக்கோவிலும் மிகப் பழமை வாய்ந் தது என்பர். ஆரம்பத்தில் கண்ணகை அம்ம னாகவே விளங்கினார் என்றும், வயலில் உழ வுத் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதில் வெளிப் பட்டார் என்றும், மஹோற்சவ விழாவை முன் னிட்டுப் புவனேசுவரி அம்மனாக மாற்றப்பட் டார் என்றும் கர்ண பரம்பரைக் கதையாகக் கேட்கப்படும்.

'முத்தர்' என்னும் பெயருடைய முதியவர் ஆரம்பத்தில் அம்பாளை ஆதரித்து வந்தார்.

அவர் சைவ ஆசார சீல ஒழுக்கத்தில் அதிகப் பற்றுடையவர். அக்காலத்தில் கோயில் கொட்டிலாக விளங்கியது. 1912ம் ஆண்டிற்குப் பின்னர் சிவப்பிரகாசம் என்பவரால் சுண்ணாம்புச் சுவர்களால் கோவில் புனருத்தாரணம் செய்யப் பெற்றது. வேண்டிய பண உதவியைச் சிவசம்பு என்பவர் உபகரித்து வந்தார். அம்பாளுக்குப் பூசகராக அமைந்த செல்லையர், கோயில் வளர்ச்சியில் மிக்க அக்கறை காட்டி வந்தார்.

திரு. சிவப்பிரகாசத்திற்குப் பின்னர், தம்பியார் சிவசம்பு கோவிலை மேற்பார்வை செய்யும் பொறுப்பேற்றார். அவர் மேற்பார்வையில் கோயில் மேன்மேலும் வளர்ச்சி பெற்றது. 1944ம் ஆண்டில் குடமுழுக்கு விழா நிகழ்த்தப் பெற்றது. திரு. சிவசம்பு என்பாருக்குப் பின்னர் கோவில் மேற்பார்வைப் பொறுப்பு இரத்தினம் என்பவருடைய கைக்கு மாறியது. அவர் காலத்தில் ஆலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்ந்தது, தேர் செய்யப்பெற்றது. கொடிமரம் நிறுத்தப்பட்டது. ஆடிப்பூரநாளைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு, பத்துத் தினங்கள் திருவிழாக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சுற்றுப் பிரகாரத்தில் பிள்ளையார் சந்நிதி, பூமிதேவி, இலக்குமிதேவி சமேத நாராயண மூர்த்தி கோவில், வயிரவர் சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன.

திருவெம்பாவை, நவராத்திரி, மானம்பூ, பங்குனிக் கடைசித் திங்கள், பொங்கல் குளிர்த்தி, வைகாசி விசாகப் பொங்கல் குளிர்த்தி, உறியடித் திருவிழா ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாத் தினங்களில் சிலவாகும்.

இரத்தினம் அவர்களுடைய சந்ததியினர் பழமையைப் பேணி, ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றார்கள்.

### 3. ஏழாலை அத்தியடி விநாயகர் கோவில்

ஏழாலையில் அமைந்த ஆலயங்களுக்குள் மிகப் பழமை வாய்ந்தது. ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயம் என்பர். அதன் பழமையும், பெருமையும், புதுமையும் கருத்திற்கொண்டு சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் விநாயகர் மீது பதிகமும், திருவூஞ்சலும் செய்துள்ளார் என்பர்.

ஏழாலையில் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் கொடியேற்ற வைபவமும், தேர்த்திருவிழாவும் முதலில் நிகழ்ந்த கோவிலும் அதுவே என்ற பெருமைக்குரியது. கடைசியாக 1902ம் ஆண்டில் திருவிழா நிகழப்பெற்றது. பின்னர், சில காலம் பிள்ளையாருக்குப் பூசை இன்றி ஆலயம் அடைக்கப்பட்டிருந்ததும் உண்டு. பின்னர், புளியங்கண்டையர் என்பார் சம்பளம் இல்லாமல் கோவில் வருமானத்தையும், ஊர்ப் புரோகிதத்தையும் துணையாகக் கொண்டு பூசை புரிந்து வந்தார். அதன் பின்னர் பூசகராக நியமிக்கப்பட்ட ஊரெழுவைச் சேர்ந்த சுவாமிநாத ஐயர் என்னும் அந்தணர், மாதம் பத்து ரூபா சம்பளத்தில் பூசையை ஆரம்பித்து நாற்பத்தைந்து ஆண்டுகள் பூசைப் பணியாற்றினார்.

1920ம் ஆண்டில் நிகழ்ந்த கும்பாபிடேகத்தின் பின்னர் 1975ம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றது. பின்னர் 2004ம் ஆண்டில் புனராவர்த்தன கும்பாபிடேகம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது.

200 ஆண்டுகளுக்கு முன்னர் சாணிப் பிள்ளையாராக இருந்த ஆலயத்தில் கர்ப்பக் கிருகப் பிள்ளையார், கொடிமரப்பிள்ளையார் 1975ம் ஆண்டில் பிரதிட்டை செய்யப்பெற்றது. ஆலயத்தைப் பரிபாலித்துவந்த முருகேசு வாத்தியார் என்பார், தாமே முன்னின்று கும்பாபிடேகத்தை நடாத்திய பெருமைக்குரியவர்.

இடும்பன் ஆதியிலுள்ளது. பின்னர் வயிரவர் ஆலயம், சண்டேசுவரர் ஆலயம் அமைக்கப் பெற்றது. ஐம்பொன்னாலான அங்குசம், சிவன், அம்பாள், தெய்வயானை வள்ளியம்மை சமேத முத்துக்குமாரசுவாமி மகாமண்டபத்தின் சபையில் அமர்ந்துள்ளார்கள்.

1982ஆம் ஆண்டிலிருந்து மகோற்சவ விழா, வருடாவருடம் சிறப்பாக வைகாசிப் பூரணையைத் தீர்த்த விழாவாகக் கொண்டு பத்துத் தினங்கள் கொண்டாடப்பட்டு வருவது திருவருள் பாலிப்பாகும். சைவத்தையும் கல்வியையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பதினைந்து பரப்பு நிலம் சைவமகாஜன வித்தியாசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சதுர்த்தி, சங்கட சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை நோன்பு, திருவெம்பாவை, தை உத்தர சங்காபிடேகம், புத்தாண்டு ஆகியன நிக மும் விழாக்களில் குறிப்பிடத் தக்கவையாகும். புவனேசுவரி அம்பாள் ஆலயத்திற்கு அருகாக ஆனைமுகப் பெருமான் ஆலயம் அமையப்பெற் றது திருவருள் சிறப்பெனச் சிந்தையில் சிந்திக் கத் திருவருள் வெளிப்பாடு பெருமகிழ்வு தரும். முரு கேசு வாத்தியாருக்குப் பின்னர் அவருடைய மைந்தரான பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆல யப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நிர்வகித்து வருவது போற்றுவதற்குரிய ஒன்றாகும்.

## 4. ஏழாலை அத்தியடி, முருகமூர்த்தி ஆலயம்

ஏழாலை அத்தியடி ஆறுமுகப் பெருமான் ஆலயம் அண்ணா ஆனைமுகப் பெருமானு டைய ஆலயத்திற்கு அடுத்து, அருகாக அமைந் திருப்பதை அறிய ஆனந்தம் மிகுந்து வரும்.

இற்றைக்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னாகச் "சூராவத்தையைச் சேர்ந்த கந்தர் உடையார் சந்ததியினர், அத்தி பாரம் இட்டு, ஆலயம் உருவாக்கும் திருப் பணியை மேற்கொண்டனர் என்பது விசயம் அறிந்த முதியோர் சொல்லக் கேட்டனம்" என்பர் ஆலயத்தை நிர்வகிப்போர்.

ஆரம்பத்தில் வேலாயுதம் ஆதிமூலத்தில் வழிபட்டுவந்தது. பின்னர் தெய்வயானை அம்மை, வள்ளியம்மை சமேத முத்துக்குமார சுவாமி விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பெற்றது. கோவில் கொட்டகையாக இருந்த நாட்களில் வரு டாந்த அலங்கார உற்சவ விழா ஆண்டுதோறும் மிகக் கோலாகலமாகப் பத்துத் தினங்கள் கொண்டாடப்பட்டு வரலாயிற்று. பின்னர், இக் கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்து பழைய இடத்தில் ஆகம விதிக்கு அமைவாக, சித்திரத் தூபிகையோடு புதுக்கோயில் எடுக்கப் பட்டது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னாக மகா குடமுழுக்கு விழாக் கொண்டாடப்பட்டது.

பிள்ளையார், வயிரவர் பரிவார மூர்த்தி களாகக் கோயில் செய்யப்பட்டது. யாகசாலை, பாகசாலை, வாகனசாலை காணப்பட்டுக், கொடித் தம்பம் நிறுத்தப்பட்டது. இற்றைக்கு ஏறத்தாழப் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னாக நிகழ்ந்த பிரதிட்டையைத் தொடர்ந்து, அலங்கார உற்சவ விழா, மகா உற்சவ விழாவாக மாற்றம் அடைந்தது. இந்நாள் வரையில் முருகப்பெருமானுடைய தேர்ப் பவனி, ஆண்டிற்கு ஒருநாள் கண்களிக்க நிகழ்ந்து வருவது கருத்திற் கொள்ளத்தக்கது ஒன்று.

உற்சவ மூர்த்திகளாக ஆறுமுகசுவாமி, தெய்வயானை, வள்ளியம்மை சமேத சுப்பிர மணியர், விநாயகர் விளங்குகிறார்கள். மகோற் சவத் திருவிழாத் தவிர, பன்னிரு மாதக் கார்த் திகை உற்சவம், கந்தசட்டி விரதம், சூரன்போர், திருக்கார்த்திகை உற்சவம், திருவெம்பாவை போன்றவை ஆண்டுதோறும் கொண்டாடப் படும் சிறந்த விழாக்களில் சிலவாகும்.

நெடுங்காலமாகக் கந்தபுராண படலம் சிறப் பாக நிகழ்ந்து வருகிறது. இந்நாளில் கந்தசட்டி நோன்புக்குரிய சூரசங்கார வதைப்படலம் சிறந்த முறையில் நிகழ்ந்துவருவது வழக்கத் தில் இருந்து வருகிறது. சந்ததி வழித் தொடர் பாக உள்ளவர்கள் அத்தியடி முருகன் ஆல யத்தைப் பரிபாலித்து வருகின்றனர்.

## 5. சூறாவத்தை, ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

இந்த முத்துமாரி அம்மன்கோவில் ஏழாலை தெற்கில் அமைந்துள்ளது. ஏறத்தாழ இற்றைக்கு நூற்றியைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆல யம் உருவானது எனலாம். ஆரம்ப காலத்தில் ஆலயம் பனங்கூடலின் மத்தியில் ஓலைக் கொட் டிலில் வழிபடப்பட்டு வந்தது. அக்காலத்தில் விசா கப் பொங்கல் வழிபாடு முக்கியமானது. பூசை கள் யாவும் சைவப் பூசகரால் நிகழ்த்தப் பெற்றது.

சுப்பிரமணியம், அவர் பின் அவர் மகன் வேலுப்பிள்ளை என்பார், தேவியின் இயந்திரம் ஒன்றை வைத்துப் பூசை செய்து வந்தார்கள். காலம் செல்லச் செல்லத் தேவியின் திருவுரு வத்தை உருவாக்கிக் குடமுழுக்கு நிகழ்த்தப்பெற் றது. பனைவடலிகளுக்கு மத்தியில் கோயில் கொட்டிலாக இருந்ததால் 1927ம் ஆண்டில் கோவிலைப் பெரிதாக அமைப்பதற்கு ஊர்ப் பொதுமக்கள் ஒன்று கூடினார்கள். கோவிலைப் பரிபாலிப்பதற்கென்று பரிபாலனசபை ஒன்றை ஏற்படுத்தினார்கள். பரிபாலன சபையினர் கோயில் திருப்பணியை நிறைவு செய்து பிர திட்டையும் செய்தார்கள்.

சூராவத்தை, விழிசிட்டி, ஊரியாட்டி, மயிலங்காடு, மலப்பை போன்ற குறிச்சியிலுள்ளவர்கள் முத்துமாரி அம்பாளிடத்தில் பக்தி செலுத்தி வழிபாடு, திருவிழாக்கள் மேற்கொள்வர். ஆலயம் உருவான பின்பு அந்தணர் அர்ச்சனைக்கு நியமிக்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து அபிடேகம் அலங்கார உற்சவங்கள் ஆரம்பமானது. பின்னர் 1945ம் ஆண்டிலும், 1975ம் ஆண்டிலும், 1998ம் ஆண்டிலுமாகக் குடமுழுக்கு விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அம்பாளுடைய திருவருட் பெருக்கால், ஆலய உள்வீதி, புறவீதி, தேரோடும் வீதி, சித்திரத்தேர், கொடிமரம், தேர்முட்டி, அன்னதான மண்டபம் யாவும், படிமுறையாக வளர்ச்சியுற்றன. ஆடிமாதப் பூரணை நாளைத் தீர்த்தமாகத் தீர்மானித்து பதினொரு தினங்கள் மஹோற்சவ விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பரிவார தெய்வங்களாக விநாயகர், பழநியாண்டவர், தெய்வயானை அம்மை வள்ளியம்மை சமேத முத்துக்குமாரசுவாமி, நாகதம்பிரான், வயிரவர், சண்டேசுவரி ஆலயங்கள் அமைந்துள்ளன. இங்கு மாதந்தோறும் கொண்டாடப்படும் திருவிழாக்களில் சில :-

சித்திரை : வருடப்பிறப்பு, சித்திரா பூரணை.
வைகாசி : விசாகப் பொங்கல், புனர்பூச நட்சத்திரத்தில் மணவாளக்கோல சங்காபிடேகம்.
ஆடி : பெருவிழா – பூரத் திருவிழா.
ஆவணி : விநாயகர் சதுர்த்தி
புரட்டாதி : நவராத்திரி, கேதார கௌரி நோன்பு.
ஐப்பசி : கேதார கௌரி நோன்பு நிறைவு, கந்தசஷ்டி நோன்பு.
கார்த்திகை : திருக்கார்த்திகை, சர்வாலய தீப விழா.
மார்கழி : திருவெம்பாவை, அபிடேகம், உற்சவம், திருவாதவூரடிகள், புராணப்படிப்பு, திருவாசகம் முற்றுமோதல்.
தை : தைப்பொங்கல் உற்சவம், தைப்பூசம், அபிராமிப்பட்டர் விழா.
மாசி : மகாசிவராத்திரி.
பங்குனி : திங்கள் தோறும் அபிடேகம், கடைசித் திங்கள், பொங்கல் உற்சவம், உத்திரத் திருவிழா.

## 6. ஏழாலை மேற்கு, சாளம்பை முருகமூர்த்தி ஆலயம்

திரு அழகர் சுவாமி அவர்களால் 1931ம் ஆண்டில், ஏழாலை மேற்கு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்திற்கு அடிகோலப்பட்டது. கதிர்காமத் தரிசனத்திற்குச் சென்ற அழகர் சுவாமியிடத்தில் கதிர்காமக் கந்தன் கருணையினால் கைவேல் ஒன்று கிடைத்தது.

அந்த வேலைச் சுவாமி ஒரு ஓலைக்கொட்டிலில் வைத்துப் பூசை புரிந்து வந்தார். ஊரவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். அழகர் சுவாமியின் மகன் அரியம், கோயிலைப் பரிபாலிப்பதற்கு ஒத்தாசையாக உதவினார். ஓலைக் கொட்டிலில் குடியிருந்த வெற்றிவேலருக்குக் கற்றளிக் கோயில் காண ஊரவர்கள் ஒருப்பட்டார்கள். நாலு பரப்பு நிலத்தை நால்வர் சேர்ந்து வாங்கினார்கள். அப்போது சைவப்பெரியார் ஐ. பேரம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்டு சைவ அபிவிருத்திச் சங்கம் அமைக்கப் பெற்றது. சில வருடங்கள் கழியச் சட்டத்தரணி இ.நம.சிவப்பிரகாசம் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றார். அவர் பின்னர் பொறுப்பை திரு.கு.மூத்ததம்பியிடம் ஒப்படைத்தார்.

கற்றளிக்கோவில் வெள்ளை வைரக் கற்களால், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் மகாமண்டபம், கொடிமர மண்டபம், தரிசன மண்டபம், மணிக்கூட்டு மண்டபம் ஆகியன உருப்பெற்றது. மகா கும்பாபிடேகம் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. உற்சவ மூர்த்திகளாக விநாயகர், வேல்முருகன், ஆறுமுக சுவாமி ஆதியன பிரதிட்டை செய்யப்பட்டது.

பரிவார மூர்த்திகளாக விநாயகர், இலக்குமி தேவி, பார்பதிபரமேசுவரர், வயிரவர், நாகதம்பிரான், நவக்கிரகக் கோவில்கள் அமைத்துக் குடமுழுக்குக் கொண்டாடப்பட்டது. அழகர் சுவாமியைத் தொடர்ந்து அர்ச்சகர் பூசகராக நியமிக்கப்பட்டார். அர்ச்சகருக்குப் பின்பு அந்தணர் அர்ச்சகரானார். அலங்கார உற்சவம், மஹோற்சவமாக மாறியது. ஆனிமாதத்தில் வரும் உத்தர நாளில் கொடியேற்றம் ஆரம்பமாகி ஆனிமாதத் திருவோண நட்சத்திர நாளில் தீர்த்த உற்சவம் நிகழும். அடுத்த நாளில் பூங்காவனம் நிகழும்.

ஆண்டுதோறும் நிகழும் திருவிழாக்களில் சில இவை : புத்தாண்டு, தீபாவளி, தைப்பொங்கல், பங்குனித் திங்கள், ஆவணி ஞாயிறு, கந்தசஷ்டி, சூரன்போர், மகாசிவராத்திரி, தைப்

பூசம், ஆடிப்பூரம், திருக்கார்த்திகை என்பன. முருகமூர்த்தி ஆலயம் ஆரம்பமான நாளில் முன்னாக வயிரவர் ஆலயம் அடியவரால் ஆதரிக்கப்பெற்று வந்தது. இன்று அழகுமிக்க சித்திர வேலைப்பாடுகளுடன் ஒரு குடும்பத்தி னரால் அமைக்கப்பெற்று முருகன் ஆலய நிர்வாகத்தோடு இணைக்கப்பெற்று பூசை வழிபாடு நிகழ்த்தப்படுவதும் திருவருள் பாலிப்பேயாகும்.

கோபுரக் கோவில்கள் இரண்டு

### 7. ஏழாலை களபாவோடை, வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம்

ஏழாலையில் கோபுரம் கொண்டு விளங்கும் கோவில்கள் இரண்டு. ஒன்று வசந்த நாகபூஷணி அம்மன் கோவில், மற்றையதை அடுத்துக் காணலாம். ஏழாலை களபாவோடை வசந்த நாக பூஷணி அம்மன், சிறுமியாக இருந்த காலத்தில் அம்மன் தாயாரில் செல்வச்சந்நிதி முருகப் பெரு மான் ஆவேசித்துப் பின்னர், பராசத்தியினு டைய கலையினால் ஆட்கொள்ளப்பட்டவர்.

இற்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டு களுக்கு முன்பின்னாக ஏழாலை கள பாவோடை என்னும் குறிச்சியில், கோயில் ஊரவர்களால் உருப்பெற்றது. அம்மன் தாயாருடைய அருள் வாக்கினையும், அற் புதங்களையும் கேள்வியுற்று பல ஊர் களிலிருந்தும் பக்தர் குழாம் படையெடுப்பது போலத் திரண்டது.

புதிதாக அமைத்த கோவிலிற்கு ஏழாலை கண்ணகை அம்மன் கோவிலிருந்து அம்பா ளுடைய திருவுருவச் சிலை எழுந்தருளுவிக்கப் பட்டு, ஆதிமூலத்தில் பிரதிட்டை செய்யப்பெற்றது. 1990ஆம் ஆண்டு வெகுகோலாகலமாகக் குட முழுக்கு விழாக் கொண்டாடப்பெற்றது. அம்மன் தாயார், சைவப் பூசகர்கள் அர்ச்சனை பூசை வழிபாட்டில் ஈடுபடுவர்.

படிப்படியாக ஆலயம் வளர்ச்சிபெற்றது. பரிவார மூர்த்திகள், வசந்த மண்டபம் உருப் பெற்றது. பரிவார மூர்த்திகளாக, விநாயகர், சுப் பிரமணியர், வயிரவர், சரசுவதிதேவி உளர். வசந்தமண்டபத்தில் பெரிய நாகபூஷணி அம்ம னைத் தரிசிக்கலாம். அம்மையாருக்குப் பங்குனி உத்திரநாள் சிறப்பான திருவிழா நாளாகும்.

தைப்பூச நன்னாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் அலங்காரத் திரு விழா அமைக்கப் பெற்றது. பின்னர் சித்திரத் தேர், தீர்த்தக்கேணி, இராசகோபுரம் உருப் பெற்றதனால் அலங்கார உற்சவம், மகா உற்சவ மாக மாறி நடைபெற்று வருகின்றது. கமுக மரம் - கொடிமரமாக நாட்டப்படும். நாளுக்கு ஒரு நேர விழாக் கொண்டாடப்படும். திரு. வ. குமார சுவாமி ஐயர், அம்மன் தாயாருக்கு உதவியாகக் கிரியைகளை மேற்கொண்டு நிகழ்த்துவார்.

அம்மனுக்குரிய விழாக்கள் பல கொண்டா டப்படும். அவற்றுள் சில இவை : மகா சிவராத் திரி, நவராத்திரி, சுமங்கலிப் பூசை, திருவிளக்குப் பூசை, வைகாசிப் பொங்கல், திருவெம்பாவை, பங்குனித் திங்கள், தை அமாவாசை, கௌரி நோன்பு முதலாயின. சிறுவர் பராமரிப்புச் சிறப்பாக நடைபெறும்.

அன்னதானம் முதலாகத் தானம் வழங்கும் நிதானம் தப்பாது அனாதரவானவர்களை ஆத ரித்தல் போன்ற அருஞ்செயல்களில் குறை விலாது நிகழும்.

### 8. ஏழாலை இலந்தைகட்டி, ஸ்ரீ பாதாள ஞானவைரவர் கோவில்.

ஏழாலையில் கோபுரத்தோடு கூடிய இரண் டாவது கோவில், ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீ பாதாளஞான வைரவர் கோவிலாகும். கோவில் இராஜகோபுர கும்பாபிடேகம் பெருவிழாவாகக் கொண்டாடப்பெற்றது. அன்றைய நன்னாளில் வள்ளியம்மை, தெய்வயானை அம்மை சமேத சுப்பிரமணிய சுவாமி (உற்சவமூர்த்தி) பிர திட்டை செய்யத் திருவருள் பாலித்தது.

இலந்தைகட்டி ஸ்ரீ பாதாளஞான வைரவர் திருக்கோவில் ஏழாலை கிழக்கில் அமைந்துள் ளது. இற்றைக்கு ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் அது. ஒரு சமயம் இலந்தைகட்டி என்னும் இடத்தில் கிணறு ஒன்று அகழும்போது, சூலம் ஒன்று காணப்பட் டது. அச்சூலத்தை அருகில் நின்ற இலந்தை மரத்தடியில் வைத்து வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விளக்கு வைத்து வழிபாடு ஆற்றி வந்தார்கள். கிணற்றுப் பாதாளத்தில் கிடைத்த தால் பாதாள வைரவர் என்று பாராட்டிப் புகழ்ந் தார்கள்.

காலகதியில் வைரவர்க்கு ஒரு கொட்டிலைக் கட்டினார்கள். தைப்பொங்கல், வருடப்பிறப்புப் பொங்கல், ஆடி அமாவாசையை அடுத்துவரும் பொங்கல் இட்டு வயிரவர்க்குப் பராய்க் கடன் ஆற்றிவந்தார்கள். நாட்கள் செல்ல வயிரவருக் குக் கற்கோயில் கட்டினார்கள். சூலத்திற்குப் பதிலாக வயிரவருடைய திருவுருவச் சிலை ஆதிமூலத்தில் பிரதிட்டை செய்யப்பெற்றது.

ஆலய பரிபாலன சபை உருவானது, படிப் படியாகத் திருவருள் வளர வளரத் திருக்கோவில் வளர்ச்சி அடைந்தது. உள்வீதி, புறவீதி உருவா னது. விநாயகர், முருகன், நாகதம்பிரான் ஆதிச் சூலம், பரிவார மூர்த்தங்களாக இடம்பெற்றன. உற்சவ மூர்த்திகளாக வயிரவர், விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமி மூர்த்திகள் உள. அலங்கார உற்சவ விழா ஆனிமாத உத்தரட்டாதிநாள் பூர்த்தியாக முதல் பத்து தினங்கள் நிகழும்.

கொண்டாடப்படும் திருவிழாக்கள் சில வருமாறு : சித்திரைமாத அச்சுவினி நாள், இலட்சார்ச்சனைப் பூர்த்திநாள். திருவெம் பாவை, நவராத்திரி, சித்திரை - சித்திரபுத்திர னார் கதைபடித்தல், கஞ்சி வழங்கல், அன்னம் பாலிப்பு, ஆத்மஜோதி நாளில் திருமுறை ஓது தல், அன்னம் பாலிப்பு இடம்பெறும். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆத்மஜோதி முத் தையா அவர்கள் நல்லூர்க் கந்தன் தேர்த்திரு விழாவிற்குக் கூட்டுப் பிரார்த்தனை அடியார் களை அழைத்துச் சென்ற பெருமையும் பெற்றது.

**அலங்காரப் பெருவிழா உற்சவ ஆலயங்கள்**

**9. ஆலங்காட்டு விக்னேஸ்வரர் ஆலயம்**

இவ்வாலயம் ஏழாலை வடபாகத்தில் அமைந்துள்ளது. ஆலமரங்கள் காடுபோலச் செறிந்துள்ள காரணத்தால் ஆலங்காடு என் னும் பெயராயிற்று என்பர்.

இற்றைக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டு களுக்கு முன்பின்னாக ஆலயம் உருவாகி இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. ஆரம்ப நாளில் இவ்வாலயம் மண்ணினால் உருவாக்கப் பெற்றது. வெள்ளப் பெருக்கினால் மண்சுவர் கள் இடிந்து விழுவதுண்டு. அது கண்டு மனம் நொந்த இராமு என்ற அன்பர், மீண்டும் மீண்டும் மண்ணினால் ஆலயத்தைச் செப்பனிடுவார்.

அன்பர் இராமுவின் பக்தியையும், விடா முயற்சியையும் கண்ணுற்ற சைவ அன்பர்கள் ஊரை ஒன்றுகூட்டினார்கள். கற்கோயில் திருப் பணி செய்ய முன்வந்தார்கள். நிதி சேகரித்தும், பிடியரிசித் திட்டத்தின் மூலமாகவும் பெருமுயற்சி யோடும் கற்கோயில் கண்டார்கள். 1950ம் ஆண் டில், கோயில் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடந்தேறியது. குடமுழுக்கினைத் தொடர்ந்து அயல்வாழ் சைவப் பெருமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி தலைதூக்கியது. அதன் பயனா கக் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன அமைக்கப்பட்டன. ஆலய வளர்ச்சி கண்டு சைவ அன்பர்கள் ஒன்று திரண்டு 1957ம் ஆண்டில் ஆலயத் திருப் பணிச்சபை அமைத்தார்கள்.

திருப்பணிச் சபையின் பெருமுயற்சியி னால் கோயிலைச் சுற்றி நாற்புறமும் மதில் கோலப்பட்டது. மணிக்கூட்டுக் கோபுரம் சனீஸ் வரனுக்குத் தனிக்கோவில், வயிரவர், சந்தான கோபாலர் கோயில்கள் எடுக்கப்பட்டன. வசந்த மண்டபம், மடைப்பள்ளி கண்டபின் 1974ம் ஆண்டு குடமுழுக்கு விழாக் கோலமாகக் கொண் டாடப்பட்டது.

கோவிலின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர்களில் சிலர் - திரு. நாகநாதர், திரு. குருநாதர், திரு. சிவகுரு, திரு. கணபதிப் பிள்ளை, திரு. சதாசிவம், திரு. கந்தையா, திரு. தம்பிராசா என்பார்கள்.

இனி ஆலயத்தில் நிகழும் விழாக்கள் பற்றி அவதானிப்போம்.

பன்னிரு மாதப்பிறப்புக்கான மாத சங்கி ராந்தி, சித்திரா பூரணை, கஞ்சி வார்ப்பு - மாகே சுரபூசை, பெருஞ்சாந்தித் திருநாள், சங்காபிடே கம் - மாகேசுரபூசை, நால்வர் குருபூசை, பன்னிரு மாத சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயக விரதம், திருவெம்பாவை, மகாசிவராத்திரி, வரு டாந்த அலங்கார உற்சவம், சித்திரை பூர்வபட்ச சதுர்த்தியை அடுத்துவரும் சட்டி திதியும், புனர் பூசமும் சேர்ந்த நாளில் தொடங்கிப் பத்துத் தினங்கள் கொண்டாடப்படும். இவை விழாக் களில் சில. இவை போல்வன பல நிகழும்.

**10. ஏழாலை, கண்ணகை அம்மன் கோவில்**

இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டு களுக்கு முன்னாக ஏழாலையில் கண்ணகை

அம்மன் கோவில் அமையப்பெற்றது. இந்நாளில் துவரைக் கலட்டியில் வாழ்ந்தவர் தாமோதரம் பிள்ளை இராசா என்பவர். இராசா தேவி உபா சகர். அவர் வற்றாப்பளைக் கண்ணகை அம் மன் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து மீண்டு வரும்போதில் தமது பக்தித் திறத்தால் அம்மனை அழைத்து வந்தார்.

திரு. இராசா தம்முடனாக வந்த தேவியின் கலைக்கு ஓர் இடங்கொடுக்கச் சிறுகொட்டில் ஒன்றை உருவாக்கினார். அதில் இலிங்க வடி வில் கல் ஒன்றை நாட்டினார். அதனிடமாகத் தேவியை எழுந்தருளுவித்தார். இன்று கர்ப்பக்கிரு கத்தில் கண்ணகை அம்மன் திருவுருவைக் காணலாம். கண்ணகை வழிபாடு ஊர் மக்களு டைய கருத்தைக் கவர்ந்தது.

நோயினால், பேயினால், பில்லி சூனியங் களால் பீடிக்கப்பட்டு நலிந்தோர், நாளும் வந்து வழிபாடு ஆற்றி, மெலிவு விலகப்பெற்றார்கள். வெள்ளி, திங்கள் ஆகிய இரு தினங்களிலும் பல ஊர்களிலிருந்தும் பெருந்திரளாக மக்கள் வந்து வழிபாடாற்றிக் குறைவு தீர்ந்து நிறைவு பெற்றார்கள். பூசாரியார் இராசா அவர்களு டைய மகாசமாதியின் பின்பு, அவருடைய தம்பி திரு. கார்த்திகேசு, அம்பாளுடைய திருவருளுக் குப் பாத்திரரானார். பூசைகள் விசேடமாக நடை பெற்றுவரத் தொடங்கின. பொதுமக்களு டைய கைங்கரியங்களினால் பரிவார மூர்த்தி களாகிய விநாயகர், திருமால், வள்ளி, தெய்வ யானை அம்மை சமேத முருகப்பிரான், சுற்றா லயங்கள் உருவாக்கப்பெற்றன.

வீரபத்திரர், வயிரவர், சனீஸ்வரர், நவக்கிரக மண்டபங்களும் அமைக்கப்பெற்றன. சித்தி ரைப் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு முன் பத்துத் தினங்கள் அலங்காரத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். மேலும் பாங்குனி மாதத் திங்கட்கிழமைகள், வைகாசி விசாகப் பெருவிழா, மற்றும் நவராத்திரி, திரு வெம்பாவை ஆகிய புண்ணிய தினங்களும் பொலிவோடு கொண்டாடப்படும்.

தீ மிதித்தல், குளிர்த்தி, அன்னதான வைப வங்கள், சங்காபிடேகம், குடமுழுக்கு விழாவிற் குக் குறையேதும் இல்லை. திரு. இராசா அவர் களுடைய சந்ததியினர் பழமையைப் பேணி ஆலயத்தைப் பரிபாலித்து வருவது குறிப்பிடத் தக்க தொன்றாகும்.

11. ஏழாலை தம்புவத்தை, ஞான வைரவசுவாமி கோவில்.
12. ஏழாலை கிழக்கு, ஞானவயிரவர் கோவில்.
13. ஏழாலை கிழக்கு, புளியடி ஞானவயிரவர் கோவில்.
14. ஏழாலை தெற்கு, இராமத்தன் சீமா ஞான வயிரவர் கோவில்.
15. மதியாம் பத்தனை, வயிரவர் கோவில்.
16. ஏழாலை கிழக்கு, வெத்திலங்கூடல் அம்மன் கோவில்.
17. ஏழாலை கிழக்கு, வெத்திலங்கூடல் வயிரவர் கோவில்.
18. இலுப்பையடி, வயிரவர் கோவில்.
19. ஏழாலை கிழக்,கு பேய்ச்சி அம்மன்
20. நாகபூசணி அம்மன்
21. ஏழாலை கிழக்கு, அண்ணமார் கோவில்.
22. நரசிங்க வயிரவர் கோவில்.
23. ஸ்ரீ முருகன்புலம் - பேய்ச்சி அம்மன்
24. ஒவியப்புலம், வயிரவர் கோவில்
25. ஸ்ரீமுருகன் குடியேற்றத்திட்டம், பிள்ளையார் கோவில்.
26. உயிலுங்கை கிணற்றடி, அம்மன்.
27. ஏழாலை தெற்கு, அனுமன் வயிரவர்
28. ஏழாலை தெற்கு, குருந்தடி வயிரவர்
29. ஏழாலை தெற்கு, தோப்பு வயிரவர்
30. ஆடியவளவு, வயிரவர்.
31. ஏழாலை தெற்கு, குரக்கரந்தை வயிரவர் கோவில்.
32. அத்தியடி, வயிரவர்.
33. ஆதிகாளி.
34. காளிகோவில்.
35. பத்திரகாளி அம்மன்கோவில்.
36. மாடத்துவாயில், வயிரவர்.
37. ஏழாலை மத்தி, வயிரவர் கோவில்.
38. மாங்கொட்டை, வயிரவர் கோவில்.
39. ஏழாலை மத்தி, காளிகோவில்
40. ஏழாலை மத்தி, வயிரவர் (வாசிகசாலை அருகாக)
41. பத்திரகாளி அம்மன் (வாசிகசாலை அருகாக)
42. ஏழாலை தெற்கு, பூவரசுவடி வயிரவர்.
43. கேணியடி, அம்மன்கோவில்.
44. கந்தியர்வளவு, வயிரவர் கோவில்.
45. ஏழாலை மேற்கு, நாய்க்கியம்புலம் பிள்ளை யார் கோவில்.
46. மாகியப்புல ஒழுங்கை, வயிரவர் கோவில்.
47. ஏழாலை தெற்கு, கிணற்றடிப் பிள்ளையார்
48. சூராவத்தை, ஞானவயிரவர் கோவில்.

49. கட்டுவிளானை, ஞானவயிரவர் கோவில்.
50. குறும்பன், பேய்ச்சி அம்மன்
51. ஏழாலை மேற்கு, பழவளவு கிணற்றடி ஞான வயிரவர்.
52. ஏழாலை கிழக்கு, சிங்கர் வளவு வயிரவர்.
53. அண்ணமார் கோவில்
54. மயிலங்காடு, ஞானவயிரவர்கோவில் (உருத் திராபளை)
55. ஏழாலை தெற்கு, சீனிக்குட்டி வயிரவர் கோவில்.
56. ஏழாலை மேற்கு, முடிமன்னர் ஆலயம்.
57. ஏழாலை மேற்கு, வல்லியப்பன் கோவில்
58. ஏழாலை மேற்கு, பேய்ச்சி அம்மன்
59. சூராவத்தை, வெளிவயிரவர்
60. சூராவத்தைச் சந்தி, வீரபத்திரர்
61. ஏழாலை மேற்கு, கோட்டைக்காடு கிணற்றடிப் பிள்ளையார் கோவில்.
62. ஏழாலை மேற்கு, பூதவராயர் கோவில்.
63. ஏழாலை மேற்கு, தேவி கோவில்.
64. ஏழாலை தெற்கு, அன்னமகேசுவரர் கோவில்.
65. ஏழாலை மேற்கு, நாவலடி அம்மன்
66. ஏழாலை அத்தியடி, ஞானவயிரவர்.

பதினோராம் இலக்கத்திலிருந்து எடுத்துக் காட்டப்பெற்ற கோவில்கள் ஒரு காலத்தன அல்ல, ஓரிடத்தனவல்ல. ஒருவராலோ ஒரு கூட்டத்தவராலோ உருவாக்கப்பட்டன அல்ல. ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்படாதனவாகவும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிற்படாதனவாகவும் கொள்ளலாம்.

அவ்வாலயங்கள் சில சிவாகம விதியை அனுசரித்து அமைக்கப்பெற்றன. சில மரத்தடியினாகவும், மனித மனங்களில் உருப்பெற்றனவாகவும், காலப்போக்கில் திருவருள் வெளிப்பாடு காரணமாக கற்கோயிலாக உருப்பெற்றன. சில கலைக்கோயில்களாகத் திகழுகின்றன. இன்னும் ஒரு சில பூசை வழிபாட்டு நியமம் இன்றிப் பெயரளவில் இருப்பனவாகவும் உள. சில ஆண்டுப் பொங்கல், குளிர்த்தி, தீக்குளித்தலோடு நின்று விடுவன. இன்னும் சில வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமைகளில் விளக்கு வைப்பனவாகவும் உள. இன்னும் சில வேண்டும்போது நேர்த்திகளை நிறைவாக்குவனவாகவும் உள்ளன.

இன்னும் சில ஆலயங்கள் ஆரம்பகாலப் பெயர்கள் மாற்றமடைந்து புதுப்பெயரோடு பொலிவனவும் அறிதற்குரிய செய்தியாகும்.

இன்னும் சில பத்துத் தினங்கள் சிறப்பாக விழாக் கொண்டாடுதல், திருவெம்பாவை, நவராத்திரி தினம், பொங்கல் குளிர்த்தி, வைகாசி விசாகம் போன்ற முக்கிய தினங்கள், தைப்பொங்கல், வருடப்பிறப்பு ஆதிய புண்ணிய நாட்களைப் போற்றுதல், சங்காபிடேகம் செய்தல் போன்ற புண்ணிய தினங்களைப் புனிதமாகப் போற்றுதல், மாகேசுர பூசை நடத்தல், நாயன்மார்களுடைய குருபூசை தினங்களைத் தப்பாமல் கொண்டாடுதல் போன்றவற்றை நெறிமுறை வழுவாமல் நிகழ்த்துவன.

சில ஆலயங்கள் அந்தணப் பெருமக்களால் அர்ச்சிக்கப்படுவன. காலை, மாலை இரு காலங்கள் நேரம் தப்பாமல் பூசை நிகழ்வன. சில ஆலயங்களில் விசேட தினங்களில் அந்தணரை அழைப்பதும் ஏனைய நாட்களில் உரியவர்கள் பூசையை மேற்கொள்வதும் வழக்கிலுள்ளது. சில கோவில்களில் சைவசீலர் பூசிப்பர்கள். கலைக் கோவில்களில் கலையாடுபவரே பூசை புரிந்து கட்டும் சொல்வார்கள்.

இன்னும், கிணற்றடிக் கோவில், மரத்தடிக் கோவில், உள்ளத்துறைந்து உருவாக்கப்பட்ட கோவில் ஆகியவற்றில் அவற்றிற்கு உரிமையானவரோ அல்லது சூழலிலுள்ள ஒழுக்க சீலர்களில் ஒருவரையோ பூசகராக நியமிப்பார்கள். அவரும் தமக்குரிய விதிக்கப்பட்ட கடமைகளினின்றும் வழுவாமல் ஒழுகிவருவதைப் பெருமையாகவும் திருவருள் வகுத்த வழி என்று அவ்வழி நிற்பர். இவ்வாறாக ஏழாலையில் அமைந்துள்ள சைவ ஆலயங்களினுடைய தோற்றமும் வளர்ச்சியுமாகச் சொன்னவை சில, சொல்லாதன பல. காலமும் இடமும் சொல்லாமைக்குக் கற்பிக்கும் காரணங்களாகும்.

சொன்ன ஆலயங்களை விடச் சொல்லப் படாத ஆலயங்களும் உள என்ற உண்மை அச்சுக்குப் பின்னர் தெரியவரும். அப்படிப் பின்னரே அறியவரும் குற்றங் குறைகளுக்கு முன்னரே மன்னிப்புக் கோரிக்கொள்ளுதல் மன நிறைவு தருவதாகும்.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே".**

*திருமந்திரம்.*

♣ ♣ ♣

## மலர்க்குழு



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. சி. யோகேஸ்வரன்(செயலாளர்), திரு.வ. பேரின்பநாயகம்(இதழாசிரியர்), Dr. பே. பத்மநாதன்(தலைவர்)
திரு. நா. இலட்சுமிகாந்தன், திரு. ஆ. திருநாவுக்கரசு(பொருளாளர்).

நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. ஆ. சுந்தரமூர்த்தி, செல்வி. ந. கவிதா (இதழாசிரியர்), செல்வி. ந. பிரதா, திரு. சி. ரமேஷ் (இதழாசிரியர்).

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்



முதலாம் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம்

திரு. சி. ஜெகதீஸ்வரன், திரு. து. மகேஸ்வரன், திரு. தி. தயாகுணன், திரு. ஆ. சுந்தரமூர்த்தி (செயலாளர்), திரு. செ. சிவநடராசா (தலைவர்),
திரு. நா. உமாகாந்தன், திரு. சி. சண்முகராசா, திரு. சி. யோகேஸ்வரன்.

இரண்டாம் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்துவலம்

செல்வி. பு.பிரபாலினி (பொருளாளர்) ,திருமதி. ர. சண்முகநாதன், திருமதி. ர. நகுலேஸ்வரன், திருமதி. டெ. விக்கினேஸ்வரன், திருமதி.ஜெ.வதனா,
திருமதி. இ. லலிதாதேவி, செல்வி. ந. பிரதா. திருமதி. இ. மோகனா, திருமதி. அ. மேரி அன்ரனிற்றா.

மூன்றாம் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்துவலம

திரு. ஆ. ஞானசம்பந்தர், திரு. வை. சற்குணம், திரு. த. சுதாகரன், திரு. அ. சிறீதரன், திரு. சி. மகேந்திரன், திரு.வே. செல்வகாந்தன். திரு. க. சிவகுமார்.
திரு. ச. கிருபானந்தன,



# நன்னயக் குணம் பல மன்னிய செல்வன் பொன்னையாபிள்ளையென்னும் அருளானந்தசிவம்

சி. ரமேஷ்
ஆசிரியர்,
யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.

ஈழத்து தமிழிலக்கியச் செல்நெறியில் பத்தொன்பதாம் நூற்றாண்டு தனித்துவமான தோர் காலப்பகுதியாகும். ஆங்கிலேயரின் ஆட்சி நடைமுறைகளும், ஆங்கிலக் கல்வியின் பரம்பலும், அச்சியந்திரத்தின் பயன்பாடும் ஈழத்து இலக்கியத்தை காத்திரமான முறையில் வளர்த்தெடுத்ததைப் போன்று இலக்கிய நோக்கும் சமய நோக்கும் நிறைந்த மரபுவழித் தமிழ்ப்புலமையாளரும் சைவத்தையும் தமிழையும் ஒருங்குற நிலைபேறுடையதாய் வளர்த்தெடுத்துச் சென்றனர். இவ்வகையில் மரபுவழிக்கல்விப் பாரம்பரியத்தின் பிரதிநிதியாகத் தோன்றி, தமிழ்ப்பணி செய்த சமயப் பெரியார் அருளானந்தசிவம் என்னும் ஐயம்பிள்ளை பொன்னையா ஆவார்.

*"ஏழாலை யென்று பெயரெய்திய வூரிடை*
*வைத்திய சிகாமணி யாகி மருவிய*
*ஐயம் பிள்ளைமுன் செய்த தவத்தான்*
*முன்வந் துதித்த நன்மா ணிக்கம்*
*இலக்கண விலக்கிய மினிதுணர் புலவன்*
*சுத்தாத் துவித சைவசித் தாந்தி*
*சிற்றம் பலவன் நித்தம் புரிநடம்*
*என்று முளந்தனி லொன்றவைத் துணர்பவன்"*
(சொக்கநாதர் தன் வந்திரியம்)

என வித்துவசிரோமணிபிரம்மஸ்ரீ சி.கணேசையரால் புகழ்ந்துரைக்கப்பட்ட யாழ்ப்பாணத்து சித்தவைத்திய மூதறிஞர்களுள் ஒருவராகிய ஐயம்பிள்ளை பொன்னையா 1867 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள ஏழாலை கிழக்கு என்னும் கிராமத்தில் வைத்தியசிகாமணி ஐயம்பிள்ளை அவர்கட்கும் தெய்வானை அம்மாளுக்கும் சிரேஷ்ட புத்திரராகப் பிறந்தார். நாகலிங்கம், சுப்பிரமணியம், பேரம்பலம் முதலான சகோதரர்களும்சின்னாச்சிப்பிள்ளை, விசாலாட்சிபோன்றசகோதரிகளும் இனிதுற வாய்க்கப்பெற்ற பொன்னையா சிறுவயதிலேயே ஆசாரசீலமுடையவராகவும், அம்பாள் உபாசகராகவும், இறைபூசனை செய்தலன்றி ஆகாரம் அருந்தாத நியமம் பூண்டவராகவும் காணப்பட்டார். இத்தளர்வில்லா ஆசாரநியமம் நிறைந்த இறைநம்பிக்கைக்குக் காரணம் அவர் குடும்பப் பிற்புலமேயாகும்.

தந்தையாரால் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்ற பொன்னையா அவரிடமிருந்தே சுதேசிய தமிழ் வைத்தியக்கலையின் அடிப்படைச் சிகிச்சை நுட்பங்களையும் மருந்தாக்கல் செயல்முறைகளையும் கற்றுணர்ந்தார். அக்காலப்பகுதியில் சித்த வைத்தியத்துறையில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாதவராக விளங்கினார் என்பதை "பிணிநிலை தெரிந்து தணிவுறப் பெரிது மருந்தருள் வன்மை பொருந்திய பண்பினன்" என அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணிக்கு பிரம்மஸ்ரீ சி.கணேசையர் பாடிய சிறப்புப்பாயிரம் கொண்டும்" அகப்புற மருவிய அகலா நோயெலாம் போக்கும் வைத்தியனாக்குத் திருவினன்" என செகராச சேகர வைத்திய நூலுக்கு யாழ்ப்பாணம் பரமேசுவராக் கலாசாலைத் தலைமைத்தமிழாசான் பிரஹ்மஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியாரால் இயற்றப்பட்ட சாற்றுக்கவி வரி கொண்டும் "மக்களுடற் கூறறிந்து மருந்துதவிப் பிணியகற்றும் வன்மையாளன்" எனக் கரணவாய் பண்டிதர் செவ்வந்தி நாத தேசிகர் போற்றிப் பாடிய செகராச சேகர சாற்றுக்கவி வரி கொண்டும் அறியலாம்.

தந்தையாருக்கூடாகவே தமிழிலக்கியங்களைப் பரிட்சயப்படுத்திக் கொண்ட பொன்னையா அவர்கள் தாமோதரம்பிள்ளை ஏழாலை மேற்கில் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் சில ஆண்டுகள் கல்வி பயின்றார். ஆயினும் இவரின் தமிழ்ப்புலமைத்துவத்துக்கு காரணம் சுன்னாகம் முருகேச பண்டிதர், குமாரசுவாமிப் புலவர், தம்பையா உபாத்தியாயர் முதலியோரிடம் கற்ற தமிழிலக்கண இலக்கியக் கல்வியாகும்.

இதனை ஐயம்பிள்ளை பொன்னையாவின் "சுவேதாசுவதரம் உபநிடத உரை" பதிப்பாசிரியர் சி.முருகவேளின் செவி வழிச்செய்தி உணர்த்தி நிற்கிறது.

*"சாரங்கனிந்த சைவசித் தாந்தத்(து)*
*ஈரங் கனிந்த வின்றமிழ்ச் சிந்தையன்*
*திருத்தகு தொண்டர் கருத்தொடு நாவினும்*
*பொருந்தி விளையாடும் புண்ணிய வாழ்க்கையன்"*

என நவநீத கிருஷ்ண பாரதியால் சிறப்பிக்கப்படும் பொன்னையாவின் திருவுருவம் தெய்வீகத்தன்மை கொண்டது. நெடிந்து பருத்த தேகம், நீறுதுலங்கிய கருத்த மேனி, நுணுகி ஆராய்ந்து பிணி கண்டு நோய் நீக்கும் தீட்சண்ய மான கண்கள், கண்டக்கழுத்தில் மஞ்சள் இழை யில் கோர்த்துக்கட்டப்பட்ட உருத்திராக்கத்தின் ஒற்றைமணி சகிதம் நாலுமுள வேட்டியுடன் சித்தவைத்திய மேதை பொன்னையா அவர்கள் வீற்றிருக்கும் காட்சி சித்திரத்தில் தீட்ட ஒண்ணா செந்தாமரையென ஏழாலை கருணாகரப் பிள்ளை யார் ஆலயத்தின் சாதுசங்க மடத்தில் (நால்வர் மடம்) தீட்டப்பட்டு படச்சட்டமாய் மாட்டப்பட்டுள்ளது.

குன்றாத உழைப்பும் குறையாத ஊக்கமும் கொண்ட பொன்னையா அவர்கள் திருமண வயதினை எய்திட அவருக்கு ஏழாலை மேற்கில் வசித்த பரிகாரி கந்தரின் பேரனான இராம லிங்கத்தின் மகள் செல்லமுத்துவைத் திருமணம் முடித்து வைத்தனர். மனைத்தக்க மாண்புடையாள் செல்லமுத்து அம்பாளின் திருத்தக்க பண்பினால் அவர்தம் இல்லறம் நல்லறமாய் அமைந்தது. காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து வாழ்தல் மாதர் அறம் என்பதற்கமைய அன்னாரின் வைத்தியப்பணி யும் தமிழ்ப்பணியும் இனிதுற ஓங்கிட அரும் பணியாற்றினார். மனையாளுடன் மாட்சிமை யுடன் வாழ்ந்தாலும் பொன்னையா அவர்கள் ஞானப்போக்குடையவராகவே விளங்கினார். இக்காலப்பகுதியில் குழந்தைப்பேறின்மையால் "மலடியார்" என அழைக்கப்பட்ட சின்னாச்சி அம்மையாரின் வேதாந்த ஞானம் பலரை அவர் பாலிழுத்தது. திருவாரூரில் தகுந்த குருவை நாடி வேதாந்த அறிவு பெற்று ஈழத்துக்குத் திரும்பிய இவரகத்துக்கு வேதாந்த விசாரம் செய்யப் பலர் வந்து கூடுவர். இவ்வகையில் இவ்வகத்தில் வேதாந்த விசாரணையில் ஈடுபட்ட முக்கிய அறிஞர் களாக சடைவரத சுவாமிகள், கொல்லங்கலட்டி சுப்பிரமணியம், அருளானந்தசிவம், கந்தையர், சுன்னாகம் விச்சுவர், கந்தரோடை தமிழ்க்கந்தையா போன்றோரைக் கூறலாம். மலடியாரின் சகோ தரன் பொன்னையாவை (பால் கட்டும் வைத்தியர்) அருளானந்தசிவத்தின் தமக்கையார் சின்னாச் சிப்பிள்ளை திருமணம் முடித்தமையால் மலடியார் அருளானந்தசிவத்தின் உறவுக்காரராகவும் விளங்கினார். இதனால் ஐயம்பிள்ளை பொன் னையா அவர்கள் உரிமையோடும் ஆன்மீக வேட்கையோடும் வேதாந்த அறிவை சின்னாச்சி அம்மையாரிடமிருந்து பெற்றார். அத்துடன் கைவல்ய நவநீதம், ஞானசாவிஷ்டம் முதலிய நூல்களில் ஈடுபடும் பயிற்சியையும் இவ்வம்மை யாரினூடாகவே பெற்றுக் கொண்டார். இது மாத் திரமன்றி சின்னாச்சி அம்மை என்னும் "ஞானம் மைக்கு" ஊடாகவே சிவயோக ஞானப்பாரம்பரி யத்தில் வந்த வண்ணாரச்சாமியார் என அறியப் படும் சடைவரதரைச் சந்தித்தார். முருகேசுச் சுவாமி யரால் ஞானானாமம் வழங்கப்பெற்ற சடைவரத சுவாமிகளை பொன்னையா அவர்கள் சந்தித்து அவர்களின் பூர்வஜன்ம நல்வினைப் பலனே ஆகும். சைவசித்தாந்த அறிவையும் ஆத்மஞான அனுபூதி நிலையையும் சுவாமிகளுக்கூடாகவே கைவரப்பெற்ற பொன்னையா பரிகாரியவர்கள் அவரிடமிருந்தே அருளானந்தசிவம் என்னும் தீட்சாநாமத்தையும் பெற்றார்கள். உசன் மடத்தி லிருந்து சடைவரத சுவாமிகளை நிரந்தரமாக ஏழாலைக்கு அழைத்து வந்த பெருமையும் பொன் னையா பரிகாரியவர்களையே சாரும். பொன் னையா அவர்களுக்குத் தீட்சாநாமம் வழங்கப்பட்ட தைப் போன்று சுவாமிகளால் திருமதி பொன் னையா, பேரம்பலம், சர்மா, முருகேசு உபாத்தி யாயர், கந்தையா போன்றவர்களுக்கும் முறையே அகிலாண்டம், மகாலிங்கம், கருணாகரன், சற்குணன், பரமசிவம் போன்ற தீட்சாநாமங்கள் வழங்கப்பட்டன.

"ஆன்மீகம் அனைத்திற்கும் உண்மையான அத்திவாரமான ஞானதானம் அளிப்பவன் மனித குலத்துக்குப் பேருதவி செய்தவனாவான்" என்னும் விவேகானந்தரின் அருள்வாக்கிற்கு இணங்க ஆன்

மீகத் தொண்டு செய்த தம் சற்குரு சடைவரத சுவாமி களையும் அவர்தம் குரு பொன்னம்மாவையும்.

*"அன்புருவா யெனையாண்ட சடைவரத*
*குருவினடி யிணைகள் வாழி*
*அன்புருவாய் நிறைந்த திருப்பொன்னம்மா*
*ளடிவாழி அடியார் வாழி"*

என வாழ்த்திப்பாடும் அருளானந்தசிவம் "குருவணக்கம்" பிறிதொரு செய்யுளடியில் குருபதத்தை பிரியாத தன்னையும் அக்குருபதம் மூலம் கிடைத்த அருளின்பத்தையும்

"அன்புருவாங் குருபதத்தைப் பிரியாம
லெந்நாளும் அடியேன் வாழி
அன்புருவா இவ்வேளை பெற்றதிரு
அருளின்பம் வாழி வாழி"

எனப் போற்றிப்பாடுவார். சைவசித்தாந்த நூல்களைக் கற்றும் அதனூடாக சுவாமிகளின் திருவருளைப் பெற்று சைவசித்தாந்த அறிவா ராட்சித்துறையின் சுடர்விளக்காய் விளங்கிய அருளானந்தசிவம் அவர்கள் சிறந்த பேச்சாள ராகவும் விளங்கினார். சைவசித்தாந்தக் கோட்பா டுகளை பிரசங்கப் பொருளாய் எடுத்து விளக்கிய தோடு நில்லாது சைவசித்தாந்தத்தினது உயர்வும் அதன்வழி ஒழுகுவோர் எய்தும் சிறப்புப் பற்றியும் பிரசங்கம் செய்வார். காண்பவரையும் கேட்பவரை யும் ஈர்க்கும் வண்ணம் இவராற்றும் பிரசங்கங்கள் சிறந்த கருத்துச் செறிவு மிக்கவையாகவும் ஆழ்ந்த தத்துவப் பொருளுடையதாகவும் விளங் கின. யாழ் இந்துக் கல்லூரி இளநிலைப் பள்ளி யில் இவராற்றிய பிரசங்கம் இன்றளவும் யாழ்ப் பாணத்தவரால் நினைவு கூரப்படுகிறது. அத்துடன் கீரிமலை, வண்ணார்பண்ணை, காரைநகர் ஆகிய இடங்களுக்குச் சென்றும் சைவசித்தாந்தக் கருத்துகளுக்கு விளக்கம் கூறுபவராகவும் காணப் பட்டார். சைவசித்தாந்தப் பாடபோதனையில் கரி சனை கொண்டு இவர் தெல்லிப்பழையில் சில காலம் சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்திய மையும் இவ்விடத்தில் மனம் கொள்ளத்தக்கது.

"சைவத்தின் வழி சைவசித்தாந்த அனுபூதி யைப் பெற வேண்டுமானால் அருட்பாக்கள் நியமம் தவறாமல் ஓதப்பட வேண்டும்" என்னும் நாவலர் கருத்துடன் உடன்பாடுடையவராகவே இறுதிவரையும் காணப்பட்டார். நாவலர் த.கைலா சப்பிள்ளை, அ.குமாரசுவாமிப்பிள்ளை, சி.காசி வாசி செந்திநாதையர், வை.திருஞானசம்மந் தப்பிள்ளை, ச.சபாரத்தின முதலியார் போன்று பிறமதக் கண்டனக்காரராகவும் விளங்கினார். சித்தாந்தக் கொள்கைகளுக்கு விபரீத விளக்கம் சொல்ல முற்பட்டால் தைக்கும் சொற்களால் பேசி விடுவதால் இவரை ஆணவப் பொன்னையா என வும் சிலர் அழைத்தனர். சிவானுபூதி கோட்பாடு களில் உறுதியான நம்பிக்கை கொண்டு பிரசங்கம், புராணபடனஞ் செய்தல், அநுபூதி நெறியினை உணர்த்தல், திருமுறைகளுக்கு முதன்மையளித் தல், புதிய சித்தாந்த பரம்பரையை உருவாக்கல் என நாவலரைப் போன்று இவராற்றிய பணிகள் ஈழத்து சைவசித்தாந்த மெய்யியல் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றின.

சைவசித்தாந்தத்துக்கப்பால் இவராற்றிய சமயப்பணிகளும் தமிழ்ப்பணிகளும் இன்றளவும் யாழ்ப்பாண மண்ணில் நிலைத்து நிற்கப் பெற்று நிற்கின்றன. தன் ஆன்மீகப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு தன் மாமனார் இராமலிங்கம் அவர்களால் தர்ம சாதனம் செய்து கொடுக்கப்பட்ட காணியில் 1910ஆம் ஆண்டு சாதுசங்க மடமொன்றை பொன்னையா ஸ்தாபித்தார். ஆன்மீக ஞானி களும் அறிவொளி சிந்தும் யோகசித்தர்களும் ஒன்றாகக் கூடி மெய்யியல் நோக்கை அடிப்படை யாகக் கொண்ட சித்தாந்த ஞானத்தை அறியுமிட மாகவும் ஆண் பெண் இருபாலரும் தியான யோக நிஸ்டைகளில் ஈடுபடுமிடமாகவும் இம்மடம் விளங் கியது. இம்மடம் மு.ஞானப்பிரகாசர் என்பவரால் குருபூசை மடம் என்றும், சைவத்திருநெறி நிலை யம் என்றும், சமயாசாரிய சுவாமிகள் ஆதினமடம் என்றும் காலத்துக்குக் காலம் பெயர் மாற்றம் செய் யப்பட்டதை மு.இந்திராணியின் "ஞானகாவியம்" என்னும் நூற்கொண்டு அறியலாம். பெரிய புராண உரையாசிரியர் C.K.சுப்பிரமணிய முதலியார், காஞ்சனமாலை அம்மையார், ஈசான சிவாசாரியார் முதலானோரும் மடத்திற்கு வந்து சொற்பொழி வாற்றிச் சென்றதாகவும் அறியமுடிகிறது.

வடமொழி வைத்தியநூல்களின் உதவி பெறுவதற்காக வைத்திய அகராதி ஒன்றை

பொன்னையா அவர்கள் தயாரித்து வந்தார். அகராதியில் பெரும்பகுதி நிறைவேறி ஒரு பகுதி அச்சடிக்கப்பட்டதாக ஆத்மஜோதி நா.முத்தையா கூறுவார் (ஏழாலை). இந்நூலின் பொருட்டு வயது முதிர்ந்த வேளையிலேயே வடமொழியை பொன்னையா அவர்கள் முயன்று கற்றார். தான் முயன்று பெற்ற வடமொழி அறிவினைப் பயன்படுத்தி 1943 ஆம் ஆண்டு தொடக்கம் 1945 ஆம் ஆண்டு வரைக்கும் சுவேதாசுவரம் கைவல் யம், பஸ்மஜாலம் ஆகிய உபநிடதங்களை மொழி பெயர்த்து அவற்றுக்கு உரை விளக்கக் குறிப்புக் களும் எழுதி வாரா வாரம் இந்து சாதனத்தில் வெளியிட்டார். மிகப்பழமை வாய்ந்தனவாகிய முக்கிய உபநிடதங்களில் ஒன்றான சுவேதாசுவ தரம் உபநிடதத்துக்கு பொன்னையா அவர்கள் எழுதிய உரை முழுமையாகக் கிடைக்கப் பெற வில்லை. சி.முருகவேளால் தொகுக்கப்பட்டு கிடைக் கப்பெற்ற சுவேதாசுவதரம் உபநிடத உரையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவ்வுரை பதவுரை, குறிப்புக்கள், பொழிப்புரை என வகுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. திரு முறைகள், உபநிடதங்கள், புராணங்கள், சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் போன்றவற்றை ஆதார மாகக் கொண்டு இவரால் எழுதப்பட்ட இவ்வுரை இவரின் பல்நூற் புலமையினையும், தருக்க ஆற்றலையும் வெளிப்படுத்தி நிற்பதுடன் ஆழ்ந்த பொருட் செறிவுடையதாகவும் விளங்குகின்றது.

மடங்களை ஸ்தாபித்தும், சைவசித்தாந்த போதனைகளைச் செய்தும், பழைய சமய நூல் களுக்கு உரை செய்தும் சைவசமயத்தின் மேன் மையைச் சமயப் பிரசங்கங்களுக்கூடாக எடுத்து ரைத்தும் சமயப்பணி செய்த ஐயம்பிள்ளை பொன் னையா அவர்கள் அதற்கு ஒப்பாகத் தமிழ்ப்பணி செய்து தரணி போற்ற வாழ்ந்தவராவார்.

ஆன்மீக ஒளிபரப்ப சாதுசங்க மடத்தை ஸ்தாபித்ததைப் போன்று பொன்னையா அவர்கள் அறிவு ஒளிபரப்ப அதனருகிலே சைவசன்மார்க்க வித்தியாசாலை என்னும் பாடசாலையை நிறுவி கௌரவ ஆசிரியராகவும் கடமையாற்றினார். இப் பாடசாலையை இயக்குவதற்குச் சைவ சன்மார்க்க சபை ஒன்றும் இவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட தாக ந.தெய்வேந்திரன் அவர்கள் கூறுவார். சுன்னாகம் குமாரசாமிப்புலவரால் திறந்து வைக்கப்பட்ட இப்பாடசாலையில் ஆரம்ப தினத் தன்று 35 மாணவர்கள் சேர்ந்து கல்வி கற்றதாக வும் அறியமுடிகிறது.

ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் பொன்னையா பரிகாரியார் விளங்கினார். ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானை நோக்கியும், ஏழாலை அத்தியடி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் புவனேஸ்வரி அம்பாளை நோக்கியும் இவர் பாடிய திருவூஞ்சல்கள் பக்திரசம் சொட்டச் சொட்டப் பாடப்பட்டவையாகும்.

1930 களில் பொன்னையாவினால் ஸ்தாபிக் கப்பட்ட திருஞானசம்பந்தர் அச்சகத்தில் அச்சிடப் பட்டு வெளியிடப்பட்ட ஏழாலை அத்தியடி முருக மூர்த்தி திருவூஞ்சல் 1982 ஆம் ஆண்டு இரண் டாம்பதிப்பும், 2004ஆம்ஆண்டு மூன்றாம் பதிப்பும் கண்டது. ஊஞ்சல் இலக்கணத்துக்கமைய பாடப் பட்ட இந்நூல் காப்பு, வாழ்த்து, எச்சரிக்கை, பராக்கு, ஏலப்பாட்டு, மங்களம் என்னும் பகுதிகளைக் கொண்டது. வள்ளி தெய்வயானை காந்தன் சண்முகநாயகன் மீதில் ஊஞ்சல் பாட நீரோங்கு சடையானும் உமையும் பெற்ற திருமவனான விநாயகனை வேண்டிப்பாடும் காப்புச் செய்யுள் நீங்கலாக எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலான பத்துப்பாடல்களான இவ்வூஞ்சல், ஆடீரூஞ்சல் என்னும் ஈற்றடி செய்யுள் தோறும் விரவி வரும் வண்ணம் பாடப்பட்டுள்ளது.

முருகேச பண்டிதரின் கந்தரோடை வத் தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல் போன்று ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி திருவூஞ்சல் தோற்றப் பொலிவும் கற்றோர் இயைந்து பொருள் கொள்ளும் வண்ணம் இருபாடல்களில் கூறப்படு கின்றன. "மாணிக்கப் பெருந்தூண் நட்டு அதில் வயிர வளையை இணைத்து அதில் தரளமணிக் கயிறு கட்டி அதில் பவளமணிப் பலகையை மாட்டி" முருகப் பெருமான் ஊஞ்சல் ஆடுவதாகப்பாடும் பொன்னையா பரிகாரியார் அடுத்த பாடலில் "நால் வேதங்கள் கால்களாக வேதசிரம் விட்டமாக பிரணவம் பீடமாக மாறங்கம் வடமாக சிவாகமங்

கள் அணைகளாக நல்லடியார்வடந்தொட்டாட்" ஆறு முகவேலவர் ஊஞ்சல் ஆடுவதாகப் பாடுகிறார்.

அருணகிரிநாதரும் நக்கீரரும் பாடி உய்தி பெற்ற முருகனை "பெருநலஞ் சேர் அன்புடை யார் உள்ள மேவிப் பேரின்பம் பொழியும் அருட் பெருக்கே என்றும், மோன அருமணியே, அன்பு ருவே, கோதில்லாத அருள்நலமே, அருட்கொ முந்தே, வித்தகரா அன்பருளக் குகைக்குள் மேவும் விழுப்பொருளே" என்றும் சிறப்பித்துப்பாடுகிறார். அத்துடன் இவ்வூஞ்சலில் குருவடிவாய் திருமுரு கன் வந்து திருமறையை தந்தைக்கு உபதேசம் செய்த கதையும் தேவர்களுக்கிரங்கி சூரன் குலம் அடக்கி சேவலைக் கொடியாகவும் மயிலை வாகன மாகவும் அடைந்த கதையும் கூறப்படுகின்றன.

வாழ்த்து எனும் பகுதியில் அந்தணர், தேவர், பசுநிரைகள், முகில்கள் அரசினர் செங்கோல், நன்மகளீர் பதி விரதம், சங்கரனார் பூசைபுரி அடியார், ஆறுமுகவேலவர் போன்றோருக்கு வாழி கூறப்படுகிறது. இதனைப் போன்று எச்சரீக்கை என்னும் பகுதியில் முருகப் பெருமான் பல்வேறு நாமங்களால் எச்சரீக்கை செய்யப்படுகிறார்.

*"நீலிமயி லேறிவரு முருகா பராக்கு*
*நினைவுசெய லுறவரிய நிமலா பராக்கு*
*சீலமுறு மடியர்துயர் தீர்ப்பாய் பராக்கு*
*சிவனருளு முருகசர வணனே பராக்கு"*

எனத் தொடங்கும் பராக்கு என்னும் பகுதி நான்முகனை சிறையில் வைத்த சேதிமுதல் கொண்டு முருகனின் பல்வேறு பராக்கிரமச் செயல்களைக் கூறுகிறது.

19ம் நூற்றாண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் தோன்றிய ஊஞ்சலிலக்கணத்துக்கமைய அரு ளானந்த சிவம் அவர்களால் "ஏலப்பாட்டு" "மங்களம்" போன்ற பகுதிகளும் பாடப்பட்டுள்ளன. மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு முக்தி என்னும் துறைநாடி ஜீவான்மா செல்லவிருக்கும் கப்பல் இப்பாடலில் "சித்திதரு ஓங்கார வடிவான கப்பல்" என்றும் "ஆறெழுத் துடனியலு மறிவான கப்பல்" என்றும் "பரவெளிக் கப்பல்" என்றும் சிறப்பித்து போற்றப்படுகிறது. நித்ய சுபமங்களம் பாடும் "மங்களம்" என்ற பகுதி முருகப் பெருமானைப் பல்வேறு நாமங்களால் விதந்துரைத்து எச்சரீக்கை, பராக்கு பகுதிகளைப் போன்று சிறப்பித்துப் பாடுகிறது.

ஏழாலைப் புங்கடி புவனேஸ்வரி அம்பாள் மீது சைவசித்தாந்த வித்தகர் அருளானந்த சிவம் என்பவரால் பாடப்பட்ட திருவூஞ்சல் பாடலின் கையெழுத்துப்பிரதி கைதவறியபடியினால், அம்மன் கோயிலின் நிர்வாகிகளின் வேண்டுகோ ளுக்கமைய தமது ஞாபகத்திலிருந்ததைக் கொண்டு இலக்கிய கலாநிதி, பண்டிதர் மு.கந்தையா அவர்களால் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்ட இவ்வூஞ் சல் காப்பு, ஊஞ்சல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, மங்களம் என்னும் பகுதிகளைக் கொண்டது.

மங்கயற் கண்ணம்மை என்னும் புவனேஸ்வரியைப் போற்றிப்பாட கணபதியை வேண்டிப் பாடும் காப்புச் செய்யுள் முதற்கொண்டு ஊஞ்சல் ஈறாக எண்சீர் ஆசிரிய விருத்தத்தால் பாடப்பட்ட இவ் ஊஞ்சல் ஈற்றடி தோறும் "அங்கயற்கண் ணம்பிகையே ஆடீரூஞ்சல்" எனும் தொடர் விரவி வரும் வண்ணம் பதினொரு பாடல்களைக் கொண்டமைந்தது.

முத்துமணிக்கால்கள் நாட்டி பவளமணிச் சட்டம்பூட்டி, நவமணிசேர் கயிறுமாட்டி இசைத்திடு பொற்பலகையில் இனிதேறி அம்பிகையே ஏறி ஆடுவதாகப் பாடப்படும் இவ்வூஞ்சலில் சைவ சித்தாந்த கருத்துக்கள் நிறைந்து காணப்படு கின்றன. மாயையெனும் மயக்கும் வினைக்குள் ஆட்பட்டுள்ள ஆன்மாவுக்கு பெறற்கரிய பேரின் பத்தை நல்குமிடமாக புவனேஸ்வரி அம்மன் சந்நிதானம் விளங்குமென்பதை

*"மாயாசம் பந்தமெனும் வலையிற் பட்டு*
*மயக்குமுயி ரத்தனையு மின்ப வீட்டிற்*
*போவாரும் பெறற்கரிய சுகமே மேவப்*
*பூரணமா யருணோக்கம் பரிந்து வைகும்*
*ஆயாகி அத்தியடி"*

என்னும் அடிகள் மிகத் துல்லியமாக எடுத்து ரைக்கின்றன. இது மட்டுமன்றி சிவஞான போதத் தின் பெருமை, இருவினை நீக்கம் (மலபரி பாகம்) குருவடிவாய் வந்து இறைவன் மெய்ஞ்ஞான

மாகிய சிவஞானத்தைக் கொடுத்து ஆட்கொள் ளல், திருவருட்சக்தியை கண்டடையும் வண்ணம் திரோதனசக்தியை பெத்த நிலையுள்ள ஆன்மா வுக்கு வழங்கி அருள்பாலிக்கும் இறையின் உன்னத நிலையும் ஊஞ்சலெங்கும் ஆங்காங்கு எடுத்து விளக்கப்படுகிறது.

மறையோர், மழைமுகில், பசு, நன்மகளிர், தருமம், தொண்டர்கூட்டம் அத்தியடி அன்னை போன்றோருக்கு வாழி கூறி இறையோடு அத்து விதமாய் கலந்து அருட்கருணை பொழியும் தேவியை பல்வேறு நாமங்கள் பராக்கிரமங்கள் முதலியவற்றை முறையே எச்சரிக்கை, பராக்கு போன்ற பகுதிகளுக்கூடாக எடுத்துரைத்து நித்ய சுபமங்களம் கொண்டு முடியும் இவ்வூஞ்சல் 1986 ஆம் ஆண்டு முதற்பதிப்புக் கண்டது.

பொன்னையா அவர்கள் தம் எழுத்தாக்கங் களை அச்சிடவும், பதிப்பு முயற்சிகளை மேற்கொள் ளவும், மாதந்தோறும் சஞ்சிகைகளை வெளியிட வும் ஏதுவாக சாதுசங்க மடாலய வளாகத்தில் திருஞானசம்பந்தர் அச்சியந்திர சாலையை நிறுவினார். பின்னர் இந்த அச்சியந்திரசாலை மல்லாகத்தில் நிறுவப்பட்டது. இவ் அச்சியந்திர சாலையில் இருந்து அன்னாரின் சொந்த முயற்சியால் வைத்தியக் களஞ்சியம், கலாவல்லி என்னும் மாதசஞ்சிகைகள் வெளிவந்தன.

### பதிப்பு முயற்சிகள்

ஈழத்துச் சித்த மருத்துவ வரலாற்றையும் அதன் வளர்ச்சிப்போக்கையும் கருத்தில் கொண்ட பொன்னையா அவர்கள் அதற்கு ஆதாரமான வைத்திய ஏடுகளைத் தேடுவாராயினார். யாழ்ப் பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி வன்னிப்பிர தேசங்களிலும் சென்று தேடி அங்கெல்லாம் கண்டெடுக்கப்பட்ட வைத்திய ஏடுகளை அடிப்படை யாகக் கொண்டு யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு என்னும் தொடர் தலைப்பில் பதின் மூன்று நூல்களை வெளியிட்டார்.

### 1. பரராசசேகரம்

சிதைந்த ஏடுகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் அடிப்படையாகக் கொண்டு வைத்தியப் பெருந்தகை ஐ.பொன்னையா அவர்களால் 1930 முதல் 1936 காலப்பகுதியில் பரராசசேகரம் ஏழு பாகங்களாக வெளியிடப்பட்டது.

**முதல்பாகம்** – சிரரோக நிதானம் என்னும் முதல்பகுதி 1930 இல் பொன்னையாவால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் உச்சிரோகம், அமுதரோகம், செவிரோகம், நாசிரோகம், நயனரோகம், வாய் கழுத்து ரோகங்கள் பற்றியும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

**இரண்டாம் பாகம்** – கெர்பரோகம், பாலரோ கங்கள் பற்றியும் அவற்றுக்கான சிகிச்சைகள் பற்றியும் கூறும் இந்நூலின் கெர்ப்பரோக நிதானம், பாலசேகர நிதானம் போன்ற பகுதிகள் வ.சிவப்பிரகாசம் என்பவரின் பொழிப்புரையுடன் முறையே 1998, 1999 ஆண்டு காலப்பகுதியில் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது.

**மூன்றாம் பாகம்** – சுரரோக நிதானம் ஐ.பொன் னையா அவர்களால் ஆங்கீரச வருஷம் ஆவணி மாதம் (1932) பதிப்பிக்கப்பட்டது. சுரம், சன்னி, வலி, விக்கல், சக்தி ரோகங்களின் நிதானங்களை 136 பக்கங்களில் வெளியிட்டார். அவற்றுள் சுரரோக நிதானம் 212 செய்யுட்களைக் கொண்டது.

**நான்காம் பாகம்**– விரதரோக நிதானம், பித்தரோக நிதானம், சிலேற்பனரோக நிதானம் என மூன்று பகுதிகளைக் கொண்ட இந்நூல் ஐ.பொன்னையா அவர்களால் 1934ம் ஆண்டு ஆடிமாதம் பதிப்பிக்கப்பட்டது. வைத்திய கலாநிதி க.வே.துரைராசா (அகத்திய வைத்தியசாலை, மருந்தகம்) என்பவருடன் இணைந்த மீள்பதிவுக்குழு இந்நூல் தொகுதிகளை 2002 இல் பதிப்பித்து வெளியிட்டது.

**ஐந்தாம் பாகம்** – மேகம், பிளவை, பவுந்திரம், கைக்குழித்தாமரை, ரோக நிதானங்கள், வன்ம விதி, சத்திரவிதி, சிரைவிதி, இரட்சைவிதி அனுபந் தத்துடன் விளங்கும் இந்நூலானது மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலையில் பொன்னையா அவர்களால் தைமாதம் பவஸ்ரீ வருடம் (1935) பதிப்பிக்கப்பட்டது. சத்திரகர்மவிதி, நயனசத்திரவிதி, சல்லிய விதி என்பன எழுதப்பட்ட பாகம் அத்துறைசார் வைத்தியரால் கவரப்பட்ட சேதியும் இந்நூலில் பொன்னையா அவர்களால் எடுத்துரைக்கப்படுகிறது.

**ஆறாம்பாகம்** – உதரரோக நிதானம் என அழைக்கப்படும் இப்பகுதி கன்மம், பாண்டு, காமாலை, சோகை, வாய்வு, சூலை ரோகங்களை யும் அவற்றுக்கான செய்திகளையும் கூறுகிறது.

**ஏழாம் பாகம்** – மூலம், அதிசாரம், சிரகணி, கரப்பன், கிரந்தி, குட்டரோக நிதானங்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளைக் கூறும் இப்பாகமும் பொன்னையா அவர்களால் மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையில் 1936 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

## 2. சொக்கநாதர் தன்வந்திரியம்

மாவிட்டபுரம் சொக்கநாதக்குருக்கள் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல் உக்கிரகாண்டம், சௌமிய காண்டம் என இரு பிரிவுகளையுடையது. இதில் உக்கிரகாண்டமானது "குரூரகாண்டம்" எனவும் சில பிரதிகளில் அழைக்கப்பட்டதாகவும் பதிப்பாசிரியரால் கூறப்படுகிறது. இவ்விரு காண்டங்களுக்கும் முன்பாக வைத்தியனிலக்கணம், பதார்த்த குணவிளக்கம் என்பனவும் கூறப்பட்டுள்ளது. உக்கிரகாண்டத்தில் மானிட சிகிச்சை, தேவ வைத்தியம், அரக்கர் வைத்தியம் ஆகிய மூன்றுவகைச் சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளது. சௌமிய காண்டத்தில் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர், உடல் இளைத்தவர்கள் போன்றவர்களுக்கான எளிய சிகிச்சைமுறைகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் காப்புச்செய்யுள் உள்ளிட்டு ஐந்து செய்யுட்கள் கிடைக்கப்பெறவில்லை. சொக்கநாதர் தன் வந்திரியம் எனும் இந்நூல் ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திர சாலையில் ஸ்ரீமுகசித்திரை (1933) ஆண்டு ஐ.பொன்னையா என்பவரால் பதிப்பிக்கப்பட்டது.

## 3. செகராசசேகர வைத்தியம்

ஐ.பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் 2000ஆம் ஆண்டு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் மீள்பிரசுரம் செய்யப்பட்டது. வியாதிவரும் வகை, உணவு வகை, நாடிவிதி, வாத பித்தசுரம், பித்த சிலேட்டுமம், வாதசிலேட்டுமம், சனிவாதசுரம், விஷசுரம், முழத்தசுரம், தாகசுரம், மந்தபித்தசுரம், அத்திசுரம், சூமச்சுரம், அத்தி சிலேட்டுமசுரம், பித்த வதிச்சுரம் முறைவெதுப்பு போன்ற நோயின் குணமும் மருந்தும் இந்நூலில் கூறப்படுகிறது. இதனைவிட சன்னி, மூலவியாதி, விக்கல், சுவாதம், வாதம், கசரோகம், குட்டரோகம், கரப்பன், வலி, உதரரோகம், உட்குத்து, நீரிழிவு, முதுகுப்பிளவை, பித்தம் போன்ற நோய்களுக்கான மருந்துகளும் இந்நூலில் கூறப்படுகின்றன.

## 4. வைத்தியவிளக்கம் என்னும் அமிர்தசாகரம்

இருபாலைச் செட்டியாரால் இயற்றப்பட்ட இந்நூல் நாடிகளின் தோற்றம், தொழில் ஆகிய வற்றையும் சுரவகை, அவற்றின் குணம், சிகிச்சை முதலியவற்றையும் சூரணம் மாத்திரை வகைகளையும் மூலப்பவுந்திரம் கட்டு, புண், பற்பேத்தை, கசங் கரப்பன், கபாலம், க்ஷயரோகம், நீரிழிவு, சன்னி, வெட்டை, சூலை முதலாம் பல கொடு நோய்களின் தன்மைகளையும் அவற்றுக்குரிய மருந்து நெய், எண்ணெய், தைல வகைகளையும் சிறப்பாகக் கூறுகிறது. இந்நூல் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திர சாலையில் பிரபவமாதம் (ஆனி மாதம் 1927 ஆம் ஆண்டு) சுதேச வைத்தியர் ஐ.பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

## 5. பதார்த்த சூடாமணி

1927 ஆம் ஆண்டு சைவப்பிரகாச யந்திர சாலையில் ஐ.பொன்னையாப்பிள்ளையால் பதிப்பிக்கப்பட்ட இந்நூலும் இருபாலைச் செட்டியாரால் இயற்றப்பட்டது. உடம்போடு இயைந்து பயன்தரும் பொருட்களின் குணங்களை நன்கு விளக்கும் இந்நூலில் நிலம், நீர், தீ, வளி, வான் இவற்றின் குணங்களும் உணவுக்குரிய சோற்று வகை, சிற்றுண்டிவகை, புன்செய்தானிய வகை, கீரை வகை, வேர், பூ, காய் இலை வகைகளும், பால், தயிர், நெய், மோர், இறைச்சி, மீன், கடைச்சரக்கு இவை களின் குணங்களும் உலோகவகை முதலாய பல பொருட்களின் குணங்களும் கூறப்படுகின்றன.

## 6. வைத்திய சிந்தாமணி

1932 ஆம் ஆண்டு ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையில் ஐ.பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் எண்

வகைத் தேர்வு (அட்டவித பரீட்சை) இலக்கணவிதி, கஷாயவிதி, சரக்குச் சுத்திமுறைகள் பற்ப செந் தூரவிதி, மாத்திரைவிதி, சூரணவிதி, கிருதவிதி, இரசாயனவிதி, கற்பவிதி போன்றவற்றையும் அவற்றுக்குரிய விளக்கங்கள் மருந்துகள் என்பனவற்றையும் எடுத்துரைக்கின்றன.

### 7. வைத்தியபூரணம் - 2005

மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திர சாலையில் ஐ.பொன்னையா அவர்களால் 1938 இல் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் அகத்திய முனிவ ரால் அருளப்பட்டது. இந்நூலில் கூறப்பட்டுள்ள பற்பல செந்தூரங்கள், தைலங்கள், நீறுகள் என்பவற்றை யாழ்ப்பாண சுதேச வைத்தியர்கள் கையாண்டு வருகின்றனர் என சித்த மருத்துவ கலாநிதி சே.சிவசண்முகராஜா கூறுவார்.

### 8. அங்காதிபாதம்

சித்த அங்காதிபாதம் பற்றி தமிழில் வெளி வந்த இந்நூல் ஐ.பொன்னையா அவர்களால் 1936 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. 96 தத்து வங்கள், கருவுற்பத்தி, உடலமைப்பு, உடலியக்கம் அதில் முத்தாதுகளின் செயற்பாடு, பிரகிருதி, பேதங்கள், வாதாதி தேகிகளுக்குரிய உணவு வகை கள் நோய்களின் எண்ணிக்கை, நோய் வரும் வழி, நடத்தைப் பிழையால் வரும் நோய்கள் சுக வாழ்விற்கு இன்றியமையாதன, மருந்துகளின் செய்முறை, மருந்துகளின் பாவனைக் காலம் கருவி களின் விபரம் போன்றனவும் அடங்கியுள்ளன.

### 9. வைத்தியத்தெளிவு அனுபந்தத்துடன்

பிரமோதூத வருடம் (ஐப்பசி 1930) திருமகள் அச்சியந்திரசாலையில் ஐ.பொன்னையா அவர் களால் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் நாடிகள், முத் தோடங்கள் பற்றியும் சில பொதுவான நோய்கள் பற்றியும் அவற்றுக்கான மருந்துகள் பற்றியும் கூறுகிறது. ஐந்நூறு செய்யுட்களைக் கொண்ட இந்நூலில் 202 செய்யுட்களே பொன்னையா அவர்களால் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து வெளியிடப்பட்டது.

பொன்னையாப்பிள்ளை அவர்களால் பதின்மூன்று வைத்திய நூல்கள் பதிப்பிக்கப்பட்ட தாக அறியப்பட்ட போதிலும் அவரால் பதிப்பிக்கப் பட்ட ஏனைய நூல்களைக் கண்டறிய முடியவில்லை. இதனைப்போன்று இவரால் "பழமொழி நானூறு" என்னும் கீழ்க்கணக்கு நூலுக்கும் உரையெழுதப் பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் அதுவும் தற்பொழுது கிடைக்கப் பெறவில்லை.

சித்தவைத்திய மேதையாகவும், சித்தாந்த வித்தகராகவும், சமூகத்தொண்டராகவும், இதழா சிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசி ரியராகவும் பன்முகத்தளத்தில் இயங்கிய ஐ.பொன்னையா அவர்கள் 1948ஆம் ஆண்டு தை உத்தர தினத்தில் சிவபதப் பிராப்தியெய்தி னார். சடைவரதரைப் போன்று அருளானந்த சிவ மும் உத்தர நாளிலேயே தேகவியோகமுற்றத னைக் கருத்தில் கொண்டு ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் சடைவரதர் குருபூசைத் தினமாகிய ஆடி உத்தரநாளினை திருமுறை விழாவாகவும் அருளானந்தசிவம் அவர்களின் குருபூசைத் தினமாகிய தை உத்தரநாளினை சண்டேசுவரர் குருபூசை என்ற பெயரிலும் அபிடேக ஆராதனை மாகேஸ்வரப் பூசையுடன் இற்றைவரை வெகு விமர்சையுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.

♦ ♦ ♦

*இந்த ஆய்வுக்குத் தேவையான ஆய்வு மூலங்களைத் தந்துதவிய சுன்னாகம் பிரதம நூலகர் திரு. க.சௌந்தரராஜன் அவர்கட்கு நன்றி.*

# இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
# ஏழாலை மு. கந்தையா அவர்கள்

"புலவர் பாடும் புகழுடையோர் நிரலில் தன்னிக ரில்லாத் தலைமகனாகத் திகழ்பவர் நல்லை நகர் நாவலர் பெருமான். அருமந்தனைய அவர்தம் குண நல மாண்புகள் காலச் சூழலிற் கரந்து விடாமல் மக்கள் நினைவில் நீடு நின்று நிலைக்க வேண்டியவை. அவரவர் நினைவரங்குதோறும் படியெடுக்கப்பட்டுப் பலகாற் பயிலப்பெறுதலின் மூலம் உணர்வோடுணர் வாய்ச் செறிந்து கொள்ள வேண்டியவை. இத்தகைய எண்ணங்கள் அவர் பேரிற் செய்யுள் செய்யும் பணியை இன்றியமையாததாய் ஆக்கிவிட்டன." என்பது இலக் கிய கலாநிதி பண்டிதமணி அமரர் மு.கந்தையா அவர்கள் தாம் செய்த நாவலர் பிள்ளைத்தமிழ் என்னும் நூலின் முகவுரையிற் குறிப்பிட்டுள்ள சிந்தனை. இந்த வார்த்தைகள், இப்பகுதி குறிப்பிடும் பொருள் என்பன பண்டிதரையா அவர்களுக்கும் பொருத்தமானவைதானே! அவர்களும் புலவர் பாடும் புகழுடையவர்கள்தானே. அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் சிந்தனையில் இக்கருத்து நியாயிக்கப் படுவதாகுக.

தமிழறிஞர்களான சி.வை.தாமோதரம்பிள்ளை, இலங்கையர்கோன், நட்டுவச்சுப்பையனார் முதலியோ ரும் சைவசித்தாந்த சுடர் அருளானந்தசிவம், சைவப் பெரியார் மு.ஞானப்பிரகாசம், ஆத்மஜோதி முத்தையா என்போரும் கணிதப் பேராசிரியர் கனகசபாபதி, உப வேந்தர் குணரத்தினம், சித்த மருத்துவத்துறைப் பேராறிஞர் ஐ.பொன்னையா, (பின்னர் அருளானந்த சிவம்) பேரம்பலம் என்போரும் தோன்றி வாழ்ந்த ஏழாலைப் பதியை இடமாகக் கொண்டவர்தான் எங்கள் பண்டிதரையா அவர்கள்

ஏழு ஆலயங்களின் அருளாட்சியுடன் வளங் கொழித்த ஏழாலையின் மேற்குப் பகுதியில் சைவத் தமிழ் ஈடுபாடும் ஆசார சீலமும் நிரம்பிய முத்தர் அன் னப்பிள்ளை தம்பதியினரின் அருந்தவப் புதல்வராக 1917 – 06 – 19 ஆந் தேதி பிறந்தவர் எங்கள் ஐயா அவர்கள். உயர் தமிழ் ஆற்றலும் சைவஞானத் தெளிவு முடைய பெற்றோருக்குப் புத்திரராகத் தோன்றிய அமரர் பண்டிதரையா அவர்கள் கல்வியை அங்கிருந்த சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நிறைவு செய்து கொண்டார்கள். உயர்தரக் கல்வியை அயற் கிராமங்களுக்குச் சென்று கற்க வேண்டிய நிலை அன்றிருந்தது. போக்குவரத்து வசதிக் குறைவினால் சில வாரங்களுக்குள் அக் கல்விக்குத் தடை நேர்ந் தது. பின்னர் சுயமாகவே கற்றார்கள். சிரேட்ட பாட சாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சியும் பெற்றார்கள். தொடர்ந்து மஹா வித்துவான் சிவஸ்ரீ சி.கணேசையரிடம் பயின்று தமிழ் இலக்கண இலக் கிய ஆற்றலை வளர்த்துக் கொண்டார்கள். சைவ சித்தாந்தப் பேரொளி அருளானந்தசிவத்துடனாகிச் சைவசித்தாந்த அறிவை விருத்தி செய்து கொண் டார்கள். சுயமாகவே சமஸ்கிருத மொழி ஆற்றலை யும் ஆங்கில மொழி ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார்கள்.

ஆசிரியத் தேர்வு பெற்ற அமரர் அவர்கள் 1938இல் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை யில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார்கள். அந்த வேளை தமிழ் டிப்புளோமாவிற்குத் தேர்வு பெற்று இரண்டு வருடப் பல்கலைக்கழக வாழ்வனு பவத்துடன் சான்றிதழும் பெற்றார்கள். 1952இல் நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரியில் பணிபுரியத் தொடங்கியதிலிருந்து மீண்டும் பல்கலைக்கழகச் சூழலை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றார். அந்தத் தொடர்பைப் பயன் கொண்டு பட்டப் படிப்பிற்கான இடைநிலைத் தேர்வை நிறைவு செய்து கொண்டார் கள். 1958இல் இடம் பெற்ற அரசியற் குழப்பநிலை கார ணமாக இடமாற்றம் பெற்று 1959இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியிற் சேவையைத் தொடர்ந்தார். ஓய்வு பெறும் வரை அங்கேயே பணியாற்றினார் என்பது குறிப் பிடத்தக்கது. இந்தக் காலத்திலேதான் B.A (சிறப்பு – சமஸ்கிருதம்) இலண்டன் பரீட்சைக்குத் தோற்றி வெற்றியுங் கண்டார். 1943 இல் மதுரைத் தமிழ்ச்சங் கப் பண்டித பரீட்சைக்குத் தோற்றித் தேர்ச்சி பெற்ற வர் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

1945 இல் ஞானலட்சுமி என்னும் மாதரசியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்ட ஐயா அவர்கள் இரண்டு பெண் குழந்தைகளுடனாகி ஏழாலை மேற்கில் 'சத்திமுற்றம்' என்னும் பெயரு டைய இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்திற் பணி புரியத் தொடங்கிய காலத்திலிருந்து இறுதி வரை ஐயா அவர்கள் எந்த வித உதவியும் பெறாது பிறத்தியேக அமைப்புக்கள் நடத்திய வகுப்புக்களில் கல்விப் பயிற்சி அளித்துள் ளார்கள். மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங் கம், நல்லை ஆதீனம், மல்லாகம் பண்டித மாணவர் கழகம், நாவலர் மணி மண்டபம், சிவதொண்டன் நிலையம், அளவெட்டி சுப்பிரமணிய சிவாச்சிரமம்,

கிளிநொச்சி ஆதாரக் கல்விக் குருகுலம், கீரிமலை சிவநெறிக் கழகம், நாவலர் ஆச்சிரமம், ஆ.தி.பா. சங்கம் என்பன அவற்றுட் சில. இந்த வகுப்புகளில் சைவசித்தாந்த போதனையே மிகுதியும் இடம் பெற்றுள்ளது. தமிழிலக்கணம், இலக்கியம், சமஸ்கிரு தம் என்பனவும் போதனைக்குரிய பாடங்களாக இருந்திருக்கின்றன.

இவ்வாறான கற்பித்தற் போக்குப் புத்தம் புதுக் கோலங்களுடனான நூல்கள் தோன்றுவதற்குக் காரணமாகியது. சைவ சமயத்துடனான நூல்களே அதிகமாயின. இரண்டொரு தமிழ் மொழியுடனான நூல்களையும் பெறமுடிந்தது. ஒவ்வொன்றும் மிகத் தெளிந்த அறிவைப் புகட்டுவனவாக உள்ளன.

## ஐயாவின் ஆக்கங்கள்

### பிரபந்தங்கள் - சிற்றிலக்கியங்கள்

இந்தத் தலைப்பின் கீழ் ஆறு நூல்கள் இடம் பெறுகின்றன. "மாவைப் பிள்ளைத்தமிழ், நாவலர் பிள்ளைத்தமிழ், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை பிள்ளைத்தமிழ், வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ், நீர்வேலிக் கந்தசுவாமி பிள்ளைத்தமிழ், மாவைப் பள்ளு" என்பவை அவை. நீர்வேலிக் கந்தசுவாமி பிள்ளைத்தமிழ் இன்னமும் நூலுருவம் பெறவில்லை என்று தெரிகிறது.

"திருக்கேதீஸ்வர மான்மியம்" இது கேதீஸ்வர நாதரை நாயகராகக் கொண்டது. புராண வடிவில மைந்தது. திருக்கேதீஸ்வரப் பதியுடனான பல வரலா றுகளைத் தன்னகத்துக் கொண்டது. ஆறு காண்டங் களாகப் பகுக்கப் பெற்ற மான்மியத்தின் முதலாவது காண்டமான 'புராதன காண்டம்' இரண்டாவதான 'பொற்பொளிர் காண்டம்' என்பன ஐயா அவர்கள் முன்னிலையிலேயே வெளிவந்துள்ளன. மூன்றாவது – 'கரந்துறை காண்டம்', நான்காவது – 'நவோதய காண்டம்' என்பன தமிழ் நாட்டில் காந்தளகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரிகிறது. ஐந்தாவது – 'நித்திய நைமித்திய காண்டம்' கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது.

திருத்தொண்டர் புராணத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்ட ஐயா அவர்கள் அங்கு அரியனவாயும் பெரியனவாயும் கண்டவற்றைக் கட்டுரைகளாக்கி "அரியவும் பெரியவும்" என்னுந் தலைப்பில் மூன்று தொகுதிகளாக்கித் தந்துள்ளார்கள். முதலிரு தொகுதி களும் இரு நூல்களாகத் தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாள் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுதி கையெழுத்துப் படிவமாகவே உள்ளது.

"சிந்தாந்தச் செழும்புதையல்" என்றொரு நூல் சதசத்து, ஆணவ விசாரணை, மாயா வியவகாரம், திரோதானமான்மியம், ஊழ்ப்பிரச்சினை என்னும் ஐந்து தலைப்புகளுடனான சிந்தனை இம்மைக்கும் அம்மைக்கும் ஆமாறு பேசப்படுகின்றது.

கோயில்களில் நடைபெற வேண்டிய நித்திய நைமித்தியக் கிரியைகள், வீட்டில் நடைபெற வேண் டிய பூர்வ அபரக் கிரியைகள் பற்றிய விபரங்களைச் "சிந்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்" என்னும் நூல் தருகின்றது.

அபரக்கிரியைகள் பற்றிய விளக்கங்களைத் தருவது "அபரக்கிரியை விளக்கம் - வினா விடை" என்னும் சிறிய நூல் இது கேள்வியும் பதிலுமாக அமைந்தது.

பிதிர்க் கரும வேளைகளிற் கருத்துணர்ந்து பயனுணர்ந்து ஆன்ம உய்வுணர்ந்து தெரிந்து கொள்ள வழிசெய்வது "மரணத்தின் பின் அல்லது போகுமாறெங்ஙனே வருமாறேதோ" என்னும் நூல் இதுவுங் கேள்வி பதிலாக அமைந்தது.

ஆலயமென்றால் என்ன? ஏன் ஆலயத்தில் வழிபட வேண்டும், எப்படி வழிபட வேண்டும்? என்பனவாய் வினாக்களுக்கு விடை தருவதாக அமைந்தமை "சிவாலய சேவை ஏன், எப்படி? ஆலயந் தொழுவது ஏன்? எப்படி?" என்பன.

"குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும்" என்றொரு வரலாற்று நூல் சீவன் முத்தர்கள் பற்றிய கட்டுரைகளுடன் சுவாமிகளின் உண்மை வாழ்வை, வாழ்வு நிலையைப் புலப்படுத்த முயல்வது

இறைவனைத் துயிலெழுப்புவது போன்றமைந்த தொரு இலக்கிய வடிவம் திருப்பள்ளியெழுச்சி, "ஏழாலை கருணாகரப் பிள்ளையார் திருப்பள்ளியெ ழுச்சி" அவ்வகையில் அமைந்தது.

"பெரியபுராண சூசனம்" ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரால் காரைக்காலம்மையார் புராணம் வரை செய்யப் பட்டு வெளிவந்தது. மிகுதியாக இருந்த பகுதியை எங்கள் பண்டிதரையா நிறைவு செய்தார்கள். மலேசி யாவிலுள்ள கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலையம் இதனை முழுமையாக வெளியிட்டுள்ளது.

"சைவ சித்தாந்த நோக்கிற் கைலாசபதி ஸ்மிருதி" உபஅதிபர் பொ.கைலாசபதியின் சிந்தனைத் துளிகளா கத் திரட்டப்பட்டவற்றுக்கு விளக்கமளிக்கப்பட்ட பெருநூல் யாழ் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்டது.

சைவ சித்தாந்தத்தை முழுமையாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதான சிவஞானசித்தியார் குறிப் பிடும் பொருளாழத்தைச் சுருக்கியும், தெளிவாக விளங் கக் கூடியதாக்கியும், பிழிந்தெடுத்த சாராம்சமாக்கியும் தருவது "சிவஞானசித்தித் திறவுகோல்" என்பது

பரிமேலழகர் உரையைத் தெளிவு படுத்தித் துல்லியமாக விளக்கம் செய்து வெளிவந்திருப்பது "திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரை விளக்கம்". வயிரவ மூர்த்தம் பற்றிய செய்திகளை, தோற்றம் பற்றிய கருத்துக்களை விளக்குவதாயமைந்தது "வயிரவ வழிபாடு" என்னும் நூல்.

அகவற் பாவானமைந்த திருவருக்கமாலை என்னும் வடிவைப் பெற்ற, நாளும் பாராயணஞ் செய்வதற்குரிய "இளவாலை ஒல்லுடைப்பதி அருண் மிகு ஞான வயிரவர் போற்றித் திருவகவல்" பிரபந்த வகையைச் சார்ந்த சிறிய நூல்.

இவற்றுக்கு மேலாகப் பல ஆலயங்களுக்கான திருவூஞ்சற் பாக்களும் வெளிவந்துள்ளன. பெரிய புராணம் - திருக்குறிப்புத் தொண்டர் புராண உரை விளக்கம் நூலுருவம் பெற்று வெளிவந்தது. சைவக் காவலன், நாவலர் குரல் எனும் தொடர் சஞ்சிகை களுடன் சைவத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பிரசுரங் களும் ஐயா அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

## கௌரவப் பட்டங்கள்

**சைவசித்தாந்தப் பேரறிஞர்**

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயப் பவள விழாவில் (1995) சைவப் பெரியார் ஞானப்பிர காசம் அவர்களால் வழங்கப் பெற்றது.

**பண்டிதமணி**

ஆரிய திராவிட பாஷாபி விருத்திச்சங்கத் தமிழ் விழாவில் (1998.03.07) வழங்கப்பெற்றது.

**இலக்கிய கலாநிதி**

யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் (1998.10.04) வழங்கப் பெற்றது

**மகாமகோ உபாத்தியாயர்**

ஏழாலை மக்களால் நடத்தப்பட்ட பாராட்டுப் பெரு விழாவில் (1999) வழங்கப்பெற்றது.

## கௌரவ விருதுகள்

- *"சித்தாந்தச் செமும்புதையல்", "சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள்"* எனும் இரு நூல்களும் இந்து சமய கலாச்சார அமைச்சின் பரிசு பெற்றுள்ளன.
- *"நாவலர் பிள்ளைத்தமிழ்", "சிவஞான சித்தித் திறவு கோல்"* எனும் இரு நூல்களும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ளன.
- "திருக்கேதீஸ்வர மான்மியம் - புராதன காண்டம்"- வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாகித்தியப் பரிசு பெற்றுள்ளது
- "திருக்கேதீஸ்வர மான்மியம் - பொற்பொளிர் காண்டம்" - இலக்கிய கலாநிதி பண்டிதமணி நினைவுப்பரிசும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் நிதியப் பரிசும் பெற்றுள்ளது.

## நூல் ஆக்கங்கள்

1. **குழந்தைவேல் சுவாமிகளும் குருபரம் பரையும்**
   கீரிமலை குழந்தைவேல் சுவாமிகள் சமாதிப் பரிபாலனசபை வெளியீடு — 1965.
2. **மாவைப் பிள்ளைத் தமிழ்**
   மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்ற வெளியீடு — 1967.
3. **சேக்கிழார் நாயனார் புராண ஆறுமுகத் தம்பிரான் உரை விளக்கம்**
   யாழ் தமிழ் நூற் பதிப்புக் கழக வெளியீடு — 1967.
4. **தேர் மகத்துவம்**
   இணுவில் கிழக்கு பொ.கனகலிங்கம் நினைவு வெளியீடு — 1976.
5. **நாவலர் பிள்ளைத் தமிழ்**
   காரைநகர்த் தமிழ்ச் சங்க வெளியீடு — 1978
6. **சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்**
   மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க வெளியீடு — 1978.
7. **சித்தாந்தச் செமும் புதையல்கள்**
   ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீட வெளியீடு — 1978.
8. **சிவாலய பூசையில் தமிழ் வேதம்**
   ஏழாலை சைவப் பேரவை வெளியீடு — 1978
9. **சிவாலய சேவை ஏன்? எப்படி?**
   ஏழாலைச் சைவப் பேரவை வெளியீடு — 1978
10. **அரியவும் பெரியவும் - முதலாம் பாகம்**
    துர்க்காதேவி தேஸ்தான வெளியீடு — 1984
11. **அபரக்கிரியை விளக்கம் - வினாவிடை**
    இணுவில் கிழக்கு தங்கச்சியம்மா நினைவு வெளியீடு — 1985.

12. அரியவும் பெரியவும் - இரண்டாம் பாகம்
துர்க்காதேவி தேவஸ்தான வெளியீடு – 1986

13. சைவ சித்தாந்தத்தில் மாயை
இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கு - மலேசியா வெளியீடு – 1986

14. மரணத்தின் பின் அல்லது போகுமாறெங் ஙனே வருமாறேதோ?
இணுவில் கிழக்கு தங்கச்சியம்மா நினைவு வெளியீடு – 1986

15. வயிரவ வழிபாடு
மயிலங்கூடல் ச.ஆறுமுகம் நினைவு வெளியீடு – 1987

16. சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரியம்மை பிள்ளைத் தமிழ்
மேற்படி ஆலய பரிபாலன சபை வெளியீடு – 1987

17. ஏழாலை கருணாகரப் பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி
மகாத்மா அச்சக வெளியீடு – 1988

18. வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ்
சிங்கை நகர் ஆழ்கடலான் - 1989

19. திருக்கேதீஸ்வர மான்மியம் - புராதன காண்டம்
திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு - 1989

20. சிவஞான சித்தித்திறவுகோல்
சென்னை – குமரன் பதிப்பகம் - 1991.

21. திருக்கேதீஸ்வர மான்மியம் - பொற்பொளிர் காண்டம்.
திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு – 1992

22. திருத்தொண்டர் புராண சூசனம்
மலேசியா – கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலைய வெளியீடு – 1993

23. திருக்கேதீஸ்வர மான்மியம் - கரந்துறை காண்டம்
தமிழ்நாடு காந்தளக வெளியீடு

24. திருக்கேதீஸ்வர மான்மியம் - நவோதய காண்டம்
தமிழ்நாடு காந்தளக வெளியீடு

25. சைவ சித்தாந்த அறிவு விருத்தியில் யாழ் மேதைகளின் சுவடுகள்
லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை வெளியீடு – 1994

26. ஆலயந் தொழுவது ஏன்? எப்படி?
வயாவிளான் செ.உலகநாதன் நினைவு வெளியீடு – 1995

27. சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி
யாழ் பல்கலைக்கழக வெளியீடு – 1998

28. திருக்குறிப்புத் தொண்டர் புராணம்
ஆறுமுகத் தம்பிரான் உரை விளக்கக் குறிப்பு
யாழ் கூட்டுறவுப் பதிப்பக வெளியீடு

29. திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரை விளக்கக் குறிப்பு
பண்டிதர் மு.கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம் - 2001

30. ஒல்லுடை ஞானவயிரவர் போற்றித் திருவகவல்
மேற்படி ஆலய பரிபாலன சபை – 1987

31. The Temple of Durgadevi at Tellipalai
டெல்கி சற்குரு பதிப்பகம்

32. திருக்கேதீஸ்வர மான்மியம் - நித்திய நைமித்திக காண்டம் (அச்சேறவில்லை)

33. மாவைப்பள்ளு (அச்சேறவில்லை)

34. நல்லை நாவலன் கோவை (அச்சேறவில்லை)

35. 2ஆம் 4ஆம் சைவத் திருமுறை உரைகளைத் தருமையாதீன வேண்டுகோளின்படி செப்பம் செய்து கொடுத்துள்ளார்.

**இவ் ஆக்கம் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி ஏழாலை மு.கந்தையா B.A நூல் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்டு 07.08.2002 இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் வழங்கப்பட்டது.**

✵ ✵ ✵

# சித்தாந்த வித்தகர் வாழ்வும் வளமும்

திரு. சி. சக்திகிரீவன்
(செயலாளர் - இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்)

பாரதநாடு பத்தர், பத்தினி, தத்துவஞானி களை எப்படிப் பாருக்கு நல்கியதோ அதேபோல ஈழநாடும் அவ்வாற்றால் உயர்ந்து நிற்கிறது. ஈழவளநாடு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. இதனை "இடைபிங்கலை யிமவானோ டிலங்கை" என்னும் அடிபுலப்படுத்துகிறது. நம்மண்ணில் ஆத்மீகப்பெருஞானிகள் அவதரித்து மக்களை ஆற்றுப்படுத்தியதற்கான ஆதாரங்கள் ஆங் காங்கே காணத்தக்கன. ஈழநாட்டிற்கும் பாரத நாட்டிற்குமிடையே உள்ள ஆத்மீகத் தொடர்பு அளவிடற்கரியது. அங்கிருந்து இங்கும், இங்கி ருந்து அங்குமாக ஆத்மீக ஞானிகள் சென்று வந்தமை இதற்குச் சான்றாகிறது. ஞானிகளைத் தேடிச் சீடர்கள் அலைவது ஒன்று. ஞானிகள் தங்கள் ஆத்மீக அனுபவங்களை உணர்த்தச் சீடர்களைத் தேடி அலைவது இன்னொன்று. ஈழநாட்டின் ஆத்மீகப் பெருமையும், சிவப்பொலிவும் கடையிற் சுவாமிகளின் ஈழத்து வருகைக்கு வழி சமைத்தது. சுவாமிகளின் வருகை ஈழநாட்டில் மாபெரிய ஆத்மீகப் பேரெழுச்சியை ஏற்படுத்திய தோடு ஒருதனி ஆத்மீகப் பாரம்பரியத்தையும் நின்று நிலவச் செய்துள்ளது. அப்பாரம்பரியத் தில் உதித்தவரே திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபைத் தலைவரும், பரமேஸ்வரா நம்பிக்கை நிதியத்தின் தலைவரும், பரமேஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபருமான சித்தாந்த வித்தகர் சைவப் பெரியார் திரு.மு. ஞானப்பிரகாசமாவர். இவர் சைவத்தமிழ்க் கல்வியுலகில் சில காத்திர மான பணிகளை நிலைநிறுத்தியுள்ளார்.

## சிவம் பெருக்கும் அவதாரம்

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவப் பெரியார் 1911ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ந் திகதி சிவப்பெருக்கும் பிரகாசமாக அவ தரித்தார். இவர் தந்தையார் கதிரிப்பிள்ளை முருகேசு. தாயார் மூத்ததம்பி சிவக்கொழுந்து. இவர்களிருவரும் சைவாசாரசீலம் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்த சிவநெறிச் செல்வர்கள்.

## கல்வியும் ஞானகுரு தரிசனமும்

பெரியார் தனது ஆரம்பக் கல்வியை ஏழாலை திண்ணைப் பள்ளிக்கூடத்திலும், இடைநிலைக் கல்வியை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை யிலும், கற்று வந்தார். இக்காலத்தில் கடையிற் சுவாமிகளின் குரு பரம்பரையில் வந்துதித்த சடைவரத சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்ட சைவசித்தாந்தப் பேரறிஞரும், வைத்திய மூதறி ஞருமான அருளானந்தசிவம் என்பவரால் ஏழாலை மேற்கில் அமைக்கப்பட்ட சாது சங்க மடத்துடன் ஈடுபாடுடையவரானார். இச்சாது சங்க மடத்தில் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்கள் பற்றிச் சாதுக்கள் கூடி ஆராய்வதும், சத்சங்கம் முதலிய இடம்பெறுவதும் வழமை. அவரவர் நிலைக்கேற்ப விதியனுபவம், உயிரனுபவம், அருளனுபவம், ஆத்மானுபவம், ஞானானுபவம், இறைக் காட்சி யனுபவம், இறைவனோடு ஐக்கியமாகும் அனுபவம். ஆகியவற்றைப் பெற்றுவந்தனர். இங்கு கூடும் சாதுக்கள் சன்னியாசிகள் இங்கு எழுந்தருளி யிருக்கும் விநாயகப் பெருமானுக்கு நடாத்தும் பூஜா காரியங்களிலும், சிவானுபவங்களிலும், தம் நெஞ்சைப் பறிகொடுத்த ஞானப்பிரகாசம் அரு ளானந்தசிவம் அவர்களைத் தன் ஞானகுரு வாகக் கொண்டார். அங்குள்ள விநாயகப் பெருமானுக்குப் பூஜைகளை நிறைவேற்றுவதிலும், அதிகாலை எழுந்து ஐங்கரன் பாதம் பணிந்து அளியாழும் மலர்தூவும் அன்பு நெறி வழுவாதவரானார். இயல்பாகவே நுண்மாண் நுழைபுலம் நிறைந்த விவேகம் பெற்ற இவருக்குக் கல்வி கேள்வி விளக்க ஞானங்கள் உயர்வடையத் தொடங்கிற்று. இடை நிலைக் கல்வியில் சிறப்புப் பெற்ற இவர் உயர்தரக் கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல் லூரியில் கற்றார். பின்னர் கொழும்பு பல்கலைக் கழகக் கல்லூரியில் பயின்று விஞ்ஞானப் பட்டதாரி யானார். இவருக்கிருந்த தமிழாங்கில சமஸ் கிருதப் புலமையால் இவர் வெளிவாரிப் பரீட்சை மூலம் கலைப்பட்டதாரியுமானார்.

## புகழ் பூத்த அதிபர்

பட்டப்படிப்பு நிறைவேறிய பின் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சிலகாலம் ஆசிரி யராகப் பணிபுரிந்தார். பின்னர் பரமேஸ்வராக் கல் லூரியில் சேவைக்காலம் முழுவதும் ஆசிரியராக வும் புகழ்பூத்த அதிபராகவும் விளங்கினார்.

சைவப் பெரியார் பரமேஸ்வராக் கல்லூரியில் கற்ற, கற்பித்த காலத்தில் சைவத் தமிழ்ப் பெரு வள்ளல் சேர்.பொன். இராமநாதன், தமிழ்க்கடல் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை ஆகியோருடன் ஏற்பட்ட தொடர்பு இவரது தேசிய ஆத்மீக உயர்வுக்கு உத வியது.

## சேர். பொன் எண்ணத்தை நிறைவேற்றியவர்

சேர். பொன். இராமநாதன் நம் நாட்டின் தேசியத்திற்காக உழைத்த அதேவேளை நமது மொழி, மத பாரம்பரியங்களைப் பேண ஆற்றிய ஆக்கபூர்வமான பணிகள் அநேகம், அப்பெரு வள்ளலின் எண்ணத்தில் உதித்தெழுந்தவற்றில் ஒன்றே யாழ். பல்கலைக்கழகமாகும். அவர் இறை வனடி சேர்ந்தும் பல்லாண்டு காலமாக நிறை வேறாதிருந்த இவ்வெண்ணத்தை நிறைவேற்ற அல்லும் பகலும் உழைத்தவர் சைவப்பெரியார் திரு.மு. ஞானப்பிரகாசம் என்றால் மிகையாகாது. இவர் சைவத் தமிழ் மக்களின் உயர்வுக்கு, கல்வியே மூலாதாரம் என்பதை உளமார உணர்ந்து செயற்பட்டார்.

சைவத் தமிழ்க் கலாசாரச் சின்னமாகத் திகழ்ந்த சைவப் பெரியார் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக அதிபராக இருந்த காலத்திலும் தனது சைவக் கோலத்தில் இருந்து இம்மியும் பிறழவில்லை. திருமேனி நிறையத் திருநீறு தரித்து சிவசின்னங்கள் பொலிவுற மேலங்கி யின்றி, வேட்டி சால்வையுடன் மாணவர்களை நெறிப்படுத்தியமையை அவரது மாணவ சமூகம் இன்னும் பெருமைபடக் கூறுவதைக் கேட்டு மகிழ முடிகிறது. கணிதம், பௌதீகம், இரசாயனம் ஆகிய பாடங்களில் வல்லவர். கலை, விஞ்ஞானப் பட்ட தாரி. இவரை விரும்பிய பாடம் எது என்று கேட்டால் சைவமும் தமிழும் என்று தமிழ் மூச்சுப் பாய்ந் தெழும்பக் கூறுவார். இவர் சைவத்தின் தோற்றம், தமிழின் வடிவம்.

## வானோர்களும் அறியாத வளம் பெற்றனன்

சைவப் பெரியாருக்கு ஸ்ரீ பார்வதி பரமேஸ் வரன் வானோர்களும் அறியாத வளங்கள் பல ஈய்ந் தனன். இவர் பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபர், பரமேஸ்வரா நம்பிக்கை நிதியத்தின் தலைவர். சேர். பொன். இராமநாதனின் அன்பு வாரிசு, கடையிற் சுவாமிகளின் ஞான பரம்பரையில் உதித்தவர், இப்படிப்பல. இவற்றோடு இல்லற வாழ்வில் ஈடுபட்டபோதும் அங்கமலநீர் போல இல்லற ஞானியாகவே திகழ்ந்தார்.

## அற்புதத்தில் அற்புதம்

அனுபூதியும் அறிவாற்றலும் ஒருங்கே அமை யப்பெற்ற இவர் தன் உள்ளுணர்வால் கண்ட வற்றைத் தன்னோடு அளாவளாவிப் பேசுவோ ருக்கு அகமகிழ எடுத்துரைப்பார். பெரியபுராணத் தில் கொண்டுள்ள பெருவிருப்பும் பக்தியும் இவர் இதற்குப் பயன்கூறும்போது பளிச்சிடும். இவர் தன் ஞானானுபவத்தைப் பெற்றுக்கொண்ட ஏழாலைச் சாதுசங்க மடாலயத்தில் வருடா வருடம் பெரிய புராண படனத்தைச் சிறப்புற நடாத்திவந்தமை குறிப்பிடத்தக்கது. இப்புராணபடனப் பூர்த்தி விழா மூன்று தினங்கள் நடைபெறுகின்றன. இது சைவத் தின் உள்ளார்ந்த உண்மையை உணர்த்தி நிற்கும் பக்திப் பெருவிழா. முதல் நாள் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாருக்கு பூஜை நடத்தும் பாங்கில் பிள்ளையாரை எழுந்தருளச் செய்வதும், இரண்டாம் நாள் திருமுறை ஏடுகளைக் கண்டறி யும் நோக்கில் நால்வரை எழுந்தருளச் செய்வதும், மூன்றாம் நாள் ஆடிச்சோதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமான் நாயனாருடன் திருக்கைலாயம் செல்லும் காட்சியும் விழாக்களாக அமைக்கப்பட்டமை அற்புதத்தில் அற்புதம்.

## தமிழகம் போற்றும் சைவசித்தாந்தப் பேரறிஞர்

சைவசித்தாந்தத்தை இவரது ஞானகுருவான அருளானந்தசிவம் மூலம் தெளிவுற அறிந்து கொண்ட இவர் சைவசித்தாந்தப் பெருங்கடலாகத் திகழ்ந்தார். சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அன்பிற்குப் பாத்திரமானவர். ஈழநாட்டிலும், தமிழ கத்திலும் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாடுகளி லும் சைவ விழாக்களிலும், சைவப் பிரசார மேடை களிலும் சைவப் பெரியார் ஞானப்பிரகாசம் அவர் களின் தலைமையுரையும் பேருரையும் சைவத் தமிழ் உணர்ச்சி ததும்புவதாக அமையும். இவரது இத்துறை அறிவை இந்தியத் தமிழ்ப் பேரறிஞர் களான சைவசித்தாந்தசாகரம் வச்சிரவேல் முதலி யார், C.K. சுப்பிரமணிய முதலியார், வெள்ளை வாரணார் போன்றோர் வியந்து பாராட்டியுள்ளனர். ஒருமுறை மெய்கண்டார் ஆதீனம் ஞானப்பிரகாச

பரமாசார்ய சுவாமிகள் நம் நாட்டிற்கு வருகைதந்த போது சைவப் பெரியாரின் சைவசித்தாந்த அறிவைப் பாராட்டிக் கௌரவித்துள்ளார். யாழ்ப் பாணத்திலிருந்து சைவசித்தாந்தம் கற்பதற்காக வச்சிரவேல் முதலியாரிடம் சென்ற தமிழறிஞர் கூறி யது வருமாறு – "யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச ரிடம் கற்கமுடியாத சைவ சித்தாந்த சாஸ்திர அறிவை இங்கு பெற வந்தீர்களா?" என்று கூறு மளவில் பெரியார் சைவசித்தாந்தத் துறையில் உயர்ந்து நின்றார். இத்தகைத் தமிழ்ப் பேரறிஞர் பலரின் பாராட்டுப் பெற்ற சைவப் பெரியாருக்கு யாழ். பல்கலைக்கழகத்தால் முதலாவது பட்ட மளிப்பு விழாவில் "சித்தாந்த வித்தகர்" என்னும் சிறப்பு விருது வழங்கப்பட்டது.

செந்தமிழும் ஆங்கிலமும் கைவரப்பெற்ற இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சில நூல்களை யாத்துள்ளார்.

## இந்திய திருத்தல யாத்திரை

பாதயாத்திரையில் பெரு விருப்புக்கொண்ட பெரியார் சிவனடியார் திருக்கூட்டத்துடன் இந்தியத் திருத்தல யாத்திரையை 1951ஆம் ஆண்டு மேற் கொண்டு மாபெரிய ஆத்மீக அனுபவங்களைப் பெற்றுக்கொண்டார்.

## திருக்கேதீஸ்வரத் திருத்தலப் பாதயாத்திரை

1958ஆம் ஆண்டு இந்நாட்டில் இனவாதத் தால் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகத் கதிர் காமத் தீர்த்தத்திற்குச் செல்லமுடியாதிருந்தது. கதிர்காமத்தில் ஆடும் தீர்த்தத்தை தமிழ் மக்கள் வினைதேய மன்னார் திருக்கேதீஸ்வரப் பாலாவி யில் ஆடிப் பயன்பட வேண்டும் என்ற நோக்குடன் 1958ம் ஆண்டு தொடக்கம் கதிர்காமத் தீர்த்தத் திரு நாளன்று தீர்த்தமாடும் வகையில் திருக்கேதீஸ் வரத் திருத்தலப் பாதயாத்திரையை மேற்கொண் டார். வருடாவருடம் நடைபெற்றுவந்த இந்த யாத் திரையில் பெருமளவில் மக்கள் பங்கு கொள்வர். கேதீஸ்வரம் செல்லும்வரை காடு கரம்பைக ளெங்கும் நீக்கமற அமைந்திருக்கும் கோயில்கள் எல்லாவற்றிலும் தரிசனமும், திருமுறை ஓதலும் திருஞானசம்பந்தர் திரு அவதார புராணபடனமும் இடம்பெறும். தெருவெல்லாம் திருமுறையொலியும், அரகர ஒலியும் வானைப்பிளக்கும். அடியார்க்கு அமுதிடவும், அடியார் கூட்டம் ஆங்காங்கு ஆர்ந் தெழுந்து நிற்பர். இத்தகைய யாத்திரைக்குத் தலைமையேற்கும் பெரியார் சிவப்பழமாகப் பங்கேற்பார்.

கேதீஸ்வரப் பெருமான்மீது அளவற்ற அன்பு பூண்ட இவர் அவ்வாலயத் திருப்பணிகளிலும் விழாக்களிலும் தான் முழுமையான ஈடுபாடுடை யவரானார். சிவராத்திரி, சோமவாரம், வருடாந்த மகோற்சவம் ஆகியவற்றில் மக்களைப் பெருமள விற் பங்குகொள்ளச் செய்யும் அன்புப் பாங்கே பாங்கு. இவ்வாலயத் திருப்பணிகளில் இவருக் குள்ள ஈடுபாட்டால் திருப்பணிச் சபையின் உப தலைவராகவும், அமரராகும் வரை தலைவராகவும் இருந்து வந்துள்ளார். இவர் காலத்தில் பஞ்சரத பவனி, அறுபத்து மூவர் பிரதிட்டை, பக்தோற்சவம் ஆகியவை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கேதீஸ்வரப் பெருமானை வழிபட்டு அவ்வாலய வளாகத்திலிருந்து இன்புறும் நோக்கில் சிவபூஜா மடத்தை அங்கு ஸ்தாபித்துள்ளார்.

சேர். பொன். இராமநாதன் அவர்களின் தூய சிந்தையைப் பேணுவதிலும் அவற்றை நிறைவு செய்வதிலும் சைவப்பெரியார் மன நிறைவைப் பெற்றுவந்தார். அத்தொடர்பில் பரமேஸ்வரா நம்பிக்கை நிதியத்தின் தலைவரானார். ஸ்ரீபர மேஸ்வரன் ஆலய கும்பாபிஷேகம் நிறைவுறத் தம்மாலானவற்றையும் செய்தார். அந்தணர்கள் வேதநெறி வழுவாது வாழவேண்டும் என்ற நோக் கில் வேதசிவாகம பாடசாலையைத் தொடக்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

சைவ உலகில் காத்திரமான பணிபல புரிந்து மக்கள் நெஞ்சங்களில் தம்மை ஆளப்பதித்த சைவப் பெரியார் 1996ம் ஆண்டு சித்திரை மாதம் 8ஆம் நாள் சிவனடி சேர்ந்தார். அன்னார் அரிய பணிகளைத் தொடர்வதே அன்னாருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

*நன்றி : இந்து தர்மம் (1997 வைகாசி)*

# ஆத்மஜோதி முத்தையா

திரு. சி. சக்திகிரீவன்

19ம் நூற்றாண்டில் எமது எமது நாட்டுக்கு வந்த ஐரோப்பிய அந்நிய ஆட்சியின் ஆதிக்க வெறியே காரிருளாகி எமது மொழி, மத மற்றும் கலாசாரங்கள் மீது இருட்படலமாகப் படர்ந்து எம் மதத்தை ஒளி குன்றச் செய்தது. அந்த இருள் சூழ்ந்தவேளை யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஆறுமுக நாவலர் விடிவெள்ளியாகத் தோன்றி எம் மதத்தின் மீது கவிந்திருந்த காரிருளை விரட்டிச் சைவமும் தமிழும் செழித்தோங்கச் செய்வதற் காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்துப் பணி செய்தார். அவர் ஆற்றிய அரும்பெரும் பணி களால் சைவம் உயிர்பெற்று மறுமலர்ச்சி கண்டது.

நாவலர் ஏற்படுத்திய மறுமலர்ச்சியை எழுச்சி பெறச் செய்வதற்காக யாழ்ப்பாணத்தின் ஏழாலையிலே மீண்டும் ஒரு விடிவெள்ளியாக உதித்தார் ஆத்மஜோதி முத்தையா.

1918ம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம் நாள் ஞானஜோதியாக அவதரித்த ஆத்மஜோதி முத்தையாவின் தந்தையார் நாகமணி, தாயார் பொன்னுப்பிள்ளை. இவர்கள் சைவத் தமிழ்த் தருமவான்களாவார்.

முத்தையா தமது ஆரம்பக் கல்வியை கத் தோலிக்கப் பாடசாலையிலும் சுன்னாகம் மயி லணி சைவ வித்தியாசாலையிலும் பயின்றார். ஆசி ரியர் தராதரப் பத்திரப் படிப்பை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் மேற்கொண்டு சித்தியெய்தியபின், 1937ம் ஆண்டு திருநெல் வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அக்காலப் பகுதியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நன் மாணாக்கனாகத் திகழ்ந்து அவரது அரவணைப்பைப் பெற்றுக் கொண்டார்.

1939ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள புனித மேரீஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியா சாலைக்கு மாற்றம் பெற்று, ஓய்வு பெறும்வரை அங்கேயே பணியாற்றினார்.

1960ம் ஆண்டு கதிரேசன் வித்தியாசா லையின் அதிபராகப் பதவி உயர்வு பெற்று, அன்பாலும், பண்பாலும், அரவணைப்பாலும் ஆசிரிய மாணவ நல்லுறவைப் பேணி அவர் களது உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டார். அக்காலப் பகுதியில் அகில இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவராகவும், செயலாளராகவும் இருந்து ஆசிரிய உலகுக்குத் தொண்டு பல புரிந்தார்.

ஐயா அவர்களது ஆசிரியப் பணிக்கு மலையகம் களமாக அமைந்ததால், அந்த இடம் இவரது சமய, சமூகப்பணிகளைப் பெற்று முன்னேற்றம் அடைந்தது.

நாவலப்பிட்டியிலுள்ள ஆத்மஜோதி அச்ச கத்திலிருந்து வெளியான ஆத்மஜோதி என்னும் மாதாந்த ஆத்மீக சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து தாமும் சிறந்த சமய தத்துவக் கட்டுரை ஆக்கங்கள் எழுதி, மற்றவர்களையும் எழுதுவித்து எழுத்துப்பணி மூலம் தம்புகழைப் பதித்தார்.

ஆத்மஜோதி ஆசிரியராக இருந்தது மட்டு மன்றி இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் பலவாகும். ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியு கத்தில் கண்கண்ட தெய்வம், திருமுறைச் செல்வம், திருமுறைக்காட்சி, பன்னிருமாத நினைவுகள், இலங்கையில் ஓர் இல்லறஞானி, மாணவருக் கேற்ற மாண்புறு கதைகள், இளைஞருக்கேற்ற இந்தோனேஷியக் கதைகள், பாலயோகேஸ்வரர் சரிதம் முதலாக இவர் எழுதிய நூல்கள் எமது சம யத்தின் பெருமையையும் மாண்பினையும் விளக்குவனவாகவும், மக்களுக்குச் சிறந்த வழிகாட்டி நூல்களாகவும் அமைந்துள்ளன. இவரது நூல்களின் சிறப்பினைக் கண்டு இலங்கை அரசு சில நூல்களுக்கு சாகித்திய உயர் விருதினை வழங்கியுள்ளது.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் எழுத்துப் பணி மூலமாக மட்டுமன்றி பல வழிகளிலும் சமயத் தொண்டாற்றி உள்ளார். இறைபக்தி, அடியார் பக்தி, தருமசிந்தனை நிறைந்த குடும்

பத்தில் அவதரித்த இவர், இளமையில் தம் வீட்டுக்கு அருகேயுள்ள இலந்தைகட்டி ஞானவைரவர் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து அப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார்.

புராணபடனம், சமயச் சொற்பொழிவு ஆகியவற்றில் கூடிய ஈடுபாடு இருந்தபோதும் முத்தையா அவர்கள் அடியார் புடைசூழக் கூட்டுப் பிரார்த்தனை செய்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தார். பாதம் பின்னப்பின்ன அடியார் கூட்டம் முன்னும் பின்னும் செல்ல, திருத்தலங்களுக்குப் பாத யாத்திரை மேற்கொள்வார்.

1960ம் ஆண்டிலிருந்து, நல்லூர் கந்த சுவாமி கோயில் தேர்த்திருவிழா அன்று அதிகாலை 4 மணிக்கு இலந்தைகட்டி வைரவர் கோயிலிலிருந்து அடியார்கள் சூழ பாதயாத்திரை நடாத்திவந்தார். நாவலப்பிட்டியில் ஆசிரியப் பணிபுரிந்து கொண்டிருந்த காலத்தில் தேர்த்திருவிழாவிற்கு முதல்நாள் இரவு பத்தரை மணிக்கு யாழ்ப்பாணம் வரும் யாழ் தேவியில் பல பஜனைக் குழுவினருடன் இங்கு வந்து சேர்வார் முத்தையா. அவர்கள் வந்து சேர்ந்ததும் ஏழாலையின் கிழக்குப் பகுதி களைகட்டிவிடும். பஜனைக் குழுக்களுக்குத் தலைமை தாங்கிச் சாதுக்களும், சந்நியாசிகளும் வருவார்கள். இரவிரவாக எல்லோரும் நீராடி ஆயத்தமாகி, காலை 4 மணிக்கு இலந்தைகட்டி வைரவர் கோயிலிலிருந்து வாத்தியம், பஜனைக்கீதம் ஆகியவற்றின் இன்னிசையோடு புறப்படுவார்கள். ஊரவர்களும் பெரும்பாலும் பாதயாத்திரையில் இணைந்து கொள்வார்கள். வழியிலே பல பக்தர்கள் காத்திருந்து இவர்களுடன் சேர்ந்து பாத யாத்திரை செய்ய, நல்லூர்க் கந்தன் தேரில் ஆரோகணிப்பதற்கு முன், காலை 7 மணிக்குள் பாதயாத்திரையினர் நல்லூர் கந்தசுவாமி கோயிலை அடைந்து விடுவார்கள். முத்தையா அவர்கள் ஆரம்பித்து வைத்த இப்பாத யாத்திரை பக்தி யாத்திரையாக இன்றும் மிளிர்கிறது.

ஓர் ஆன்மீக ஞானியாக வாழ்ந்த ஆத்மஜோதி ஐயா பல ஆத்மீகத் தலைவர்களுடன் பழகிப் பல ஆன்மீக அனுபவங்களைப் பெற்றிருக்கிறார். நம் நாட்டில் அவதரித்த விபுலானந்த அடிகள், யோகர் சுவாமிகள், சித்தானைக் குட்டிச் சுவாமிகள் ஆகியோருடன் நன்கு பழகிப் பெற்ற அனுபவங்கள் பல.

இந்திய நாட்டின் ஆத்மீகத் தலைவர்களாகத் திகழ்ந்த ரமண மகரிஷியினதும், காஞ்சி காமகோடி பீடாதிபதியினதும் ஞான தரிசனமும், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர் ஆகியோரின் அருட்பார்வையும், சுத்தானந்த பாரதியார், பித்துக்குளி முருகதாஸ், ஹரிதாஸ் சுவாமிகள், அமெரிக்க சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் போன்றோரின் நட்புறவும் இவரது சமய சமூகப் பணிகளுக்கு ஒளியூட்டின.

காலத்திற்குக் காலம் இவர் மேற்கொண்ட இந்தியத் திருத்தல யாத்திரைகளின்போது கேதார நாத், பத்திரிநாத், துங்கநாத் போன்ற திருத்தலங்களைத் தரிசிக்கும் பேறும் கிடைக்கப் பெற்றுள்ளார்.

பிரமச்சாரியாக வாழ்ந்து, தம் வாழ்வை சமயப் பணிக்கும், பொதுப்பணிக்கும் அர்ப்பணித்த ஆத்மஜோதி முத்தையா அவர்கள் ஆற்றிய சேவைகளையும் அவரது திறமைகளையும் அவ்வப்போது பொதுமக்களும் இந்து நிறுவனங்களும் பாராட்டத் தவறவில்லை. பொன்னாடைகள், பாராட்டுப் பத்திரங்கள் விருதுகள், புகழ்மாலைகள் என்று பலவெல்லாம் அவர் விரும்பாதபோதும் வந்து குவிந்தன.

முத்தையா அவர்கள் ஆத்மஜோதி என்னும் ஆன்மீகச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து அதன் மூலம் சமய நெறிவளர்த்ததின் காரணமாகப் பொதுமக்கள் அவருக்கு ஆத்மஜோதி என்னும் பட்டத்தை வழங்கினர். அதன் காரணமாக ஆத்மஜோதி என்றால் அப்பெயர் முத்தையா அவர்களையே குறிப்பதாக ஆகிவிட்டது. சுவாமி சுத்தானந்தர் அன்பு மணி என்று அழைத்தார். சுவாமி முருகதாஸ் முத்தையா ஓர் விலைமதிப்பற்ற முத்து என்று பாராட்டினார்.

ஆத்மஜோதி ஐயா பேச்சாலும், எழுத்தாலும் செயல்களாலும் ஆன்மீகநெறியை மக்களுக்கு வாரிவழங்கியதைக் கண்டு நல்லை ஆதீனம் அவருக்கு ஆன்மீக வள்ளல் என்று பட்டமளித்தது.

தம் பேச்சால் அந்நிய நாட்டவர் எம் மதத்தை வியந்து போற்றும்படி செய்த விவேகானந்தரைப்போல முத்தையா அவர்களும் கனடா முதலான மேலைத் தேசங்களுக்குச் சென்று சமயச் சொற்பொழிவாற்றியுள்ளார்.

இவரது சொற்பொழிவுகளிலும் சமயப் பணிகளிலும் மகிழ்வு கண்ட கனடா இந்துச் சங்கம் "சிவனருட் தொண்டன்" என்றும், கனடா இந்து சமயப் பேரவை "ஞான சுரபி" என்றும் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன.

முத்தையா அவர்கள் பல ஆன்மீக மாநாடுகளில் கலந்துகொண்டு அருளுரையும், பேருரையும் ஆற்றியுள்ளார். ஸ்ரீசங்க ராச்சாரிய சுவாமிகள் நடத்திய இந்து சமய மாநாட்டிலும், கோலாலம்பூர், சென்னை, மதுரை, இலங்கை, கனடா முதலான நாடுகளில் நடந்த அகில உலக இந்து மாநாடுகளிலும் இவருடைய ஆன்மீகப் பேருரைகள் இடம் பெற்றுள்ளன. மேலும், இந்தோனேஷியா, சுவிற்சிலாந்து ஆகிய நாடுகளுக்கும் இவர் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

ஆத்மஜோதி ஐயா 1918ம் ஆண்டிலே தோன்றிப் பலவிதமான சமயப்பணிகள் ஆற்றி வந்தபோதிலும் அவருடைய அவதார நோக்கம் நிறைவேறியது எழுபத்து நாலாவது வயதிலே தான் என்றால் மிகையாகாது.

இந்து மதத்திற்குப் பல சிறப்புகள் அமைந்திருந்தபோதும், நிறுவனமயப் படுத்தப்பட்டு இயங்குவதற்கு ஏனைய மதங்கள் போன்று தலைமை அமைப்பு இல்லை என்ற குறை பலராலும் பேசப்பட்டதொன்றாகும். அக்குறை தீரும் வகையில் இந்துக்களை ஒன்றுபடுத்தி, "இந்து சமயப் பேரவை" எனும் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பு 1992ம் ஆண்டு நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுடன் அமைக்கப்பட்டது. ஆயினும், இந்த நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கப் பல சைவப்பெரியார்கள் தயக்கம் காட்டினர். இந்நிலையில் ஆத்மீக வீரத்துடன் அப்பொறுப்பை ஏற்க முன்வந்த முத்தையா அவர்கள் அமரராகும் வரை அப்பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துத் துணிச்சலாக நின்று செயலாற்றினார்.

"1992ஆம் ஆண்டு ஆத்மஜோதி ஐயா இந்து சமயப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றது எமது நாட்டின் சரித்திர வரலாற்றில் செறிவான செயலாகும்" என்று பேராசிரியர் நந்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்மஜோதி ஐயா இந்து சமயப் பேரவையின் தலைவரான பின் அதன் பணிகளை வெளிநாட்டில் வாழும் மக்களுக்கு விளக்கிக்கூறும் நோக்கில் பல மேலைத்தேய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். சென்றவிடமெல்லாம் ஐயாவின் பணிகளுக்கு அமோக ஆதரவும் வரவேற்பும் கிடைத்தன. கனடா பயணத்தின் போது அங்கு "கனடா இந்து சமயப் பேரவை" யை அங்குரார்ப்பணம் செய்தார். இப்பேரவையினர் ஐயாவின் பணிகளுக்கு உதவி வருகின்றனர்.

காவியுடை தரியாத சந்நியாச வாழ்வைத் தன் தூய வாழ்வாக மேற்கொண்டு எண்ணற்ற சமய, சமூகப் பணிகளை நிறைவேற்றிய ஐயா, சென்ற நூற்றாண்டின் இந்துமத எழுச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் என்றால் அது மிகையாகாது.

"எமக்கு முன் இன்று பல பணிகள் இருக்கின்றன. யுத்தம் காரணமாகப் பல ஆல யங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. அவற்றைப் புனரமைக்க வேண்டியுள்ளது. எமது மதத்தின் பெருமை பேசும் பல நூல்களை வெளியிட வேண்டியுள்ளது. சிறுவர்களின் மனங்களில் ஆத்மீக உணர்வை வளர்க்கும் நோக்கில் ஆத்மீக சாதனா நிலையங்களை அமைக்க வேண்டியுள்ளது. ஏழ்மை நிலையைப் பயன்படுத்தி நடைபெறும் மதமாற்றத்தை நிறுத்துவதற்கு ஏற்றவற்றைச் செய்யவேண்டியுள்ளது. இப்படிப் பல பணிகள் நிறைந்துள்ள நேரத்தில், எமது பணிகளை செயற்படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தபோது 1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். அத்தகைய முத்தான தொண்டரின் பணிகளைத் தொடர்வதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

அன்னாரின் நினைவாக, அவர் பிறந்து வளர்ந்து தொண்டுகள் செய்த இலந்தைக்காடு பாதாள ஞானவைரவர் ஆலயத்துக்கருகே அழகான தொரு தியான மண்டபமும், அவருடைய உருவச் சிலையும் அமைந்துள்ளன. ஆத்மஜோதி ஐயா அவர்களின் ஆத்மீக ஒளி ஞானப் பெருங்கூத்தனின் பாதங்களின்கீழ் எமது பணிகளுக்கு அணையா ஜோதியாக இருந்து எமக்கு என்றும் வழிகாட்ட அவனருளைப் பிரார்த்திக்கின்றேன்.

♦ ♦ ♦



# பெரிய புராணத்தில் பக்தி

வாழ்நாள் பேராசிரியர்
கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

சைவ சமய வரலாற்றில் சேக்கிழாரது பெரிய புராணம் தனித்துவமிக்கது. இக்காரணத்தினாலேயே இன்றளவும் சேக்கிழாருக்கு விழா எடுத்தும் பெரிய புராணத்தைப் போற்றியும் சைவர்களாகிய நாம் எமது நன்றியையும் பக்தியையும் வெளிப் படுத்தி வருகின்றோம். சைவ சமயத்தைப் பொறுத்த வரை பெரியபுராணம் பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் பெறும் ஒரு சிறந்த சமய நூலாகும். பக்தி நெறிக்கு ஒரு கருவூலமாகவும் திகழ்வது. பெரிய புராணத்தில் பக்தி பற்றி நாம் சிந்திக்கும் முன் அந்நூலின் ஆசிரியர் சேக்கிழார் பற்றி முதற்கண் சிந்திப்பது இன்றியமையாதது.

சைவத் திருமுறைகள் வரிசையில் பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்திருப்பது சேக்கிழாரின் பெரியபுராணமாகும். "மேன்மைகொள் சைவ நீதி"யை தமது பெரிய புராணத்தின் மூலம் உலகெலாம் பரவச் செய்த பெருமை சேக்கிழாரையே சாரும். அவரது காப்பியத்திற்கு 'உலகெலாம்' என தில்லை அம்பலவன் அடியெடுத்துக் கொடுத்தமை இங்கு பொருத்தமாக அமைகின்றது. உலகெங்கணும் சைவபக்தி பரவ பெருந்தொண்டாற்றிய திருத்தொண்டர் பெருமை பேசும் வகையால் சேக்கிழார் பெருமை பெற்றார்.

சேக்கிழார் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் வேளாண் குலத்தில் "சேக்கிழார்" என்ற குடியில் வந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பதாகும். திருநீற்றுச் சோழன் என்ற பட்டப் பெயர் கொண்ட இராசேந்திர குலோத்துங்க சோழன் அவையில் முதலமைச்சராகத் திகழ்ந்த பெருமைக்குரியவர். சோழன் இவருக்கு 'உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டமளித்துச் சிறப்பித்தான். அக்காலத்தில் சமண காப்பியங்களின் மூலம் அச்சமயத்தில் நாட்டங் கொண்டிருந்த மன்னனைச் சைவ சமயத்தின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்யும் வகையில் சிவனடியார் வரலாறுகளை சேக்கிழார் அவ்வப்போது எடுத்துரைத்து காலத் திற்கேற்ற பணி செய்தார். அவற்றினால் ஈர்க்கப் பட்ட சோழன் சைவசமய வரலாற்றைத் தொகுத்து காப்பியமாக இயற்றித் தருமாறு கேட்டதன்பயனாக இப்புராணம் எமக்குக் கிடைத்த சைவப் பொக்கிஷமாகத் திகழ்கின்றது. அம்மன்னனின் வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் தில்லை நடராசப் பெருமானை வணங்கி இறைவன் அடியெடுத்துக் கொடுத்த முதற்பாடலே சைவபக்திக்கு சிறந்த சான்றாக அமைகின்றது.

*உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அறியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்*
*மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.*

(பெ.புரா.01)

என்ற வாழ்த்துப் பாவைக் கொண்டு திருத் தொண்டர் புராணத்தை இயற்றியவர் சேக்கிழார். சோழன் முன்னிலையில் அனைத்துப் பெருமைகளும் கூடிய நிலையில் இப்புராணம் அரங்கேறியது. சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் யானை மீதேற்றி தானும் பின் இருந்து கவரி வீசி வீதிகள் தோறும் ஊர்வலமாக அழைத்துச் சென்ற வகையில் இப்புராணத்தின் பெருமை உணரற்பாலது. இதன் பயனாய் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டத்திற்குச் சேக்கிழார் உரியவரானார். சேக்கிழாரது காலத்தை அறிஞர் கி.பி.12 ஆம் நூற்றாண்டு என்பர்.

சேக்கிழார் வரலாறும் பெரிய புராணத்தோற்றமும் பற்றிய செய்யுள் நூல் சேக்கிழார் புராணம் என்று பெயர் பெற்றது. இதனைத் 'திருத்தொண்டர் புராண வரலாறு' என்றும் கூறுவர். இதன் ஆசிரியர் தில்லை உமாபதி சிவாச்சாரியர் என்பர். 103 பாடல்களுடன் கூடிய இந்நூலில் சேக்கிழார் வாழ்த்து குறிப்பிடற்பாலது.

*தில்லை வாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த*
*தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடி யார்*
*- பதம் போற்றி*
*ஒல்லை அவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த*
*செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடி போற்றி*

(சே.புரா - 07)

என்று சேக்கிழாரது புகழ்பரவியுள்ளது. சேக்கிழாரது பெருமையையும் பெரிய புராணச் சிறப்புக்களையும் விரித்துரைக்கும் நூல்களுள் ஒன்றாகிய 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' என்ற நூலில் அதன் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழாரை,

*பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட*
*பாடிய கவி வலவ*

எனப் போற்றியுள்ளமை குறிப்பிடற்பாலது.

சேக்கிழார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு அமைத்த பெரிய புராணத்தில் நாலாயிரத்து இருநூற்று எண்பத்தேழு விருத்தப்பாக்களில் அறுபத்து மூன்று தனியடியார் வரலாறுகள் ஊடாகவும் ஒன்பது தொகையடியார்களது சிறப்புக்களூடாகவும் சைவசமயத்தின் சீர்மையையும் பக்திச் சிறப்பையும் கூறிச் செல்வது ஒரு தனிச் சிறப்பம்சமாகும். புராண மரபின் ஊடாகப் பக்தியின் மேன்மையைக் கூறுவதில் சேக்கிழார் சிறப்படைகின்றார். சிவனடியார் வரலாறுகளைத் தொகுத்துத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காப்பியத் தலைவராகக் கொண்டு சுவாமிகளின் வரலாறுகளை முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்தும் விரித்துரைத்து, இடைக்கிடை அவரால் போற்றப்பட்ட அடியார் வரலாறுகளையும் எடுத்துக்கூறி, இக்காப்பியத்தைச் சேக்கிழார் படைத்துள்ளதோடு கதையைக் கைலாயத்தில் தொடங்கி கைலாயத்திலேயே நிறைவு செய்துள்ள வகையில் சைவ சமய பக்திக்குச் சிறப்புச் செய்துள்ளார்.

இலக்கியம் என்பது நல்ல சிந்தனைகளின் பதிவேடு என அறிஞர் விளக்குவர். அந்தவகையில் மனதின் செம்மைக்குப் பக்தி சார் சிந்தனைகள் பெரிதும் உதவவல்லன. பெரியபுராணத்தில் சேக்கிழார் அத்தகைய சிந்தனைகளுக்குச் சிறப்பிடம் அளித்துள்ளார். திருத்தொண்டர் புராணத்தின் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து, மக்களது சிந்தனையில் சார்ந்து நின்ற பொங்கிய இருளை ஏனைய புற இருள் போக்குகின்ற செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்ற விளக்கம் பொருத்தமாக உள்ளது.

*இங்கிதன் நாமம் கூறின்*
*இவ்வுலகத்து முன்னாள்*
*தங்கிருள் இரண்டில் மாக்கள்*
*சிந்தையுள் சார்ந்து நின்ற*
*பொங்கிய இருளை ஏனைப்*
*புறஇருள் போக்குகின்ற*
*செங்கதிரவன் போல் நீக்கும்*
*திருத்தொண்டர் புராணம் என்பாம்*
(பெ.புரா.10)

சிவனடியார் பெருமை பற்றிப் பேசும் வகையால் பக்தி நிலைப்பட்டவர்களது பண்பினைச் சேக்கிழார் நன்கு எடுத்துக் காட்டுகின்றார்.

சுந்தரரது தடுத்தாட்கொண்ட புராணம் பக்திச் சிறப்புக்கு உள்ளமான பகுதிகளில் ஒன்றெனக் கருதி சுந்தரரது திருமணத்தில் சிவபெருமான் முதிய வேதியராய்த் தோன்றி ஓலை காட்டித் திருமணத்தைத் தடுத்துச் சுந்தரரை ஆட்கொண்டமை, திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயமாகிய திருவருட்டுறையில் சிவபெருமான் மறைந்து தம்மைப் பாடுமாறு பணித்தமை, சுந்தரர் திகைத்து நின்றவிடத்து 'பித்தா' என அடி எடுத்துக் கொடுத்துப் பாடச் செய்தமை சைவபக்தியின் சிறப்புக்கு அணிகலனாக அமைவன. திருவாரூர் திருக்கோயிலில் கூடியிருந்த சிவனடியார்களைக் கண்ட சுந்தரர் தாம் அன்னாருக்கு அடிமை பூண வேண்டும் என்று விரும்பியவிடத்து திருவாரூர் இறைவன் சிவனடியாரது பெருமைகளை அசரீரியாக எடுத்துரைத்த வகையில் பக்தர்களது பண்பு போற்றப்படுகின்றது.

*பெருமையால் தம்மை ஒப்பார்*
*பேணலால் எம்மைப் பெற்றார்*
*ஒருமையால் உலகை வெல்வார்*
*ஊனம் மேல் ஒன்றும் இல்லார்*
*அருமையாம் நிலையில் நின்றார்*
*அன்பினால் இன்பம் ஆர்வார்*
*இருமையும் கலந்து நின்றார்*
*இவரை நீ அடைவாய்.*
(பெரியபுராணம் 342)

என்ற பாடல் பக்திமேலிட்ட அடியார் பெருமை இறைவன் வாயால் கூற சுந்தரர் கேட்டு மகிழ்ந்ததோடு மாத்திரமன்றி இறைவன் அடியார் பெருமைகளை விரித்து நீபாடுக என ஆணையிட்டு, 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடி எடுத்துக்கொடுத்து அருளிய வகை

யால் பக்தி நிலையின் மேன்மை போற்றப்படு கின்றமை குறிப்பிடற்பாலது. அடியார் பெருமை கூறும் வரலாற்றுப் புகழ்மிக்க திருத்தொண்டர் தொகையில் உள்ள பதிகத்தில் குறிப்பிடப்பட்ட அறு பது தனியடியார்கள், ஒன்பது தொகையடியார்கள் வரலாற்றை இனி நான் விரித்துரைப்பேன் என்று கூறி சேக்கிழார் நாயன்மார்களது வரலாறுகளை இரண்டாவது சருக்கம் முதல் விரித்துரைக்கும் வகையில் பக்திச் சுவை நனிசொட்டப் பாடியுள் ளார்.

பக்திக்கு வித்திட்ட சைவ அடியார்கள் பெருமை பற்றித் திருக்கூட்டச் சிறப்பில் விரித்துரைக்கப்படு கின்றது. சைவ அடியார்கள் அகத்தூய்மையும் புறத்தூய்மையும் உடையவர்கள் என்பதை "பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்றும் இன்ப துன் பங்களில் சமநிலை கொண்டவர்கள் என்பதை,

*கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்*
(பெரிய புராணம் 143)

என்ற பாடலால் போற்றுகின்றார். மேலும் அடியார்களது உள்ளத்தின் தூய்மை உடற் தூய்மை பற்றிக் கூறுமிடத்து,

*ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே*
*பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர்*
*ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்*
*வீரம் என்னால் விளம்பும் தகையதோ*
(பெரி. புரா.144)

எனச் சேக்கிழார் அடியாரது பக்திச் சிறப்புக் குப்பெருமை சேர்க்கின்றார்.

சேக்கிழாரது பக்தி எத்தகைய வேறுபாடு களுக்கும் அப்பாற்பட்டது. நாயன்மார் குலமரபு களுக்கு அப்பால் பக்தி நெறி விஞ்சி நிற்கின்றது. திருஞானசம்பந்தரது அருள் வரலாறே இந்நூலுள் அதிக பாடல்களில் விரித்துக் கூறப்படுகின்றது. மொத்தம் 4287 பாடல்களில் திருஞானசம்பந்தர் புராணம் மட்டும் 1256 பாடல்களால் பாடி இறை வன் புகழையும் அடியார் பெருமையையும் எடுத்துக் கூறி பக்தி நெறிக்குச் சிறப்புச் செய்துள்ளார். திரு நாவுக்கரசர் புராணம் 429 பாடல்களில் விரித்து ரைக்கப்படுகின்றது. ஏனைய அடியார் வரலாறு கள் கிடைக்கப்பெற்ற செய்திகளுக்கு ஏற்ப விரித் தும் சுருக்கியும் பாடப்பெற்றுள்ளன. நாயன்மார் கள் அக்காலத்தில் நிலவிய பல்வேறு குலங்களை யும் சாதிகளையும் சார்ந்தவர்கள். சைவம் மற்றும் அச்சமயத்தின் மூலமாக அமையும் பக்தி ஆகிய பெரும் பரப்பினுள் சாதி வேறுபாடுகள் முக்கியத்து வம் பெறாது மனித குலத்தை பக்தியின் மூலம் ஒருங்கிணைக்கும் அரிய முயற்சியை சேக்கிழார் பெரிய புராணத்தில் மேற்கொண்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். இம்முயற்சி சைவ பக்தி நெறிக் குக் கிடைத்த வெற்றி எனலாம். ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற உணர்வு மேலிடுவதைக் காணலாம். அடியவர்களுள் வேளா ளர் – 13; அந்தணர் – 12; முடியரசர் – 6; மரபு இன் னது என்று தெரியாதவர் – 6; குறுநிலமன்னர் – 5; வணிகர் – 5; ஆதிசைவர் – 4; இடையர் –2; ஏனைய குலத்தோர் – 10; இவர்கள் சோழநாடு, நடு நாடு, தொண்டை நாடு, பாண்டி நாடு, மலைநாடு, கோனாடு, மழநாடு என்ற பல இடங்களைச் சேர்ந்த வர்கள்.

இன்ன நாட்டினர் என்ற குறிப்பு ஒன்பது அடியவர்கள் வரலாறுகளில் இல்லை.

சுத்தபக்தி என்பது இந்தியாவின் சமயக் கோட்பாட்டிற்குத் தென்னாட்டின் கொடையாகும் என்ற கருத்தை பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் தமது "பெரிய புராணம் ஓர் ஆய்வு" என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இத்தகைய பக்திப் புரட்சியை முன்னின்று நடத்துவதில் திருஞானசம்பந்தரின் பணி குறிப்பிடற்பாலது. வேதங்கள் போற்றிய மூலப்பொருள் சிவபெருமான் என்றும் அந்தப் பொருளின் வடிவமாகவும் மந்திரமாகவும் இருப்பது ஐந்தெழுத்தே என்று சம்பந்தர் ஐயம் நீக்கியதைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

*மந்திரம் நான்மறை யாகி வானவர்*
*சிந்தையுள் நின்று அவர் தம்மை ஆள்வன*
*செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு*
*அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே.*
(திருமுறை 3.22.2)

என்ற சம்பந்தர் பாடல் கூறும் நுணுக்கத்தை சேக்கிழார் நன்கு விளங்கியவராக பெரிய புரா ணத்தில் பக்தி நெறியை வளர்த்துச் செல்கின்றார். சம்பந்தர் கண்ட சைவநெறி அன்புடையவராகி

ஐந்தெழுத்து ஓதுவதே உண்மைச் சைவசமயம் என்பதை வலியுறுத்தியமை குறிப்பிடற்பாலது. திருஞானசம்பந்தர் புராணத்தில் 266ஆம் பாடலில் சேக்கிழார் இக்கருத்தை விளக்குகின்றார்.

"மந்திரங்களான எல்லாம் அருளிச் செய்து மற்றவற்றின் வைதிக நூற் சடங்கின் வந்த சிந்தை மயக்குறும் ஐயந்தெளிய எல்லாம் செழுமறை யோர்க்கருளி அவர் தெருளும் ஆற்றால் முந்தை முதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும் முதலா கும் முதல்வனார் எழுந்தஞ் சென்பார், "அந்தியி னுள் மந்திரம் அஞ்செழுத்தாமே" என்றஞ்செழுத் தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்.

(பெ.புரா.2169)

எனக் குறிப்பிடுவது பொருத்தமாக அமை கின்றது.

ஆழ்ந்த பக்தியின் பெறுபேறு சிவஞானமே என்பதைச் சேக்கிழார் திருஞானசம்பந்தரது புராணத்தின் 70ஆம் பாடலில் கூறுகின்றார். திருஞானசம்பந்தர் மூன்றாவது வயதில் அம்மை யிடம் ஞானப்பால் உண்டபின் எவ்வெவற்றைப் பெற்றார் என்று கூறுமிடத்து,

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய*
*மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்*

(பெ.புராண.1973)

*எப்பொருள் ஆக்குவன் ஈசனே எனும் உணர்வும்*
*அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்*

(பெ.புராண.1974)

எனும் அறிவும் பெற்றார் என்று குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. எனவே தலையாயது சிவஞா னம்; இரண்டாவது மெய்ஞ்ஞானம்; மூன்றாவது ஓங்கிய ஞானம்; நான்காவது கலைஞானம்; இந் நான்கு வகையான ஞானங்களையும் சம்பந்தர் ஒரே நேரத்தில் உணர்ந்தார் என்கிறார் சேக்கிழார்.

பெரிய புராணத்தில் வரும் அடியார்கள் பக்தி உணர்வு மேலிட்டவர்களாய் சமய அனுபவத்தில் திளைத்தவர்கள் சேக்கிழாரது பெரிய புராணத்தில் காரைக்காலம்மையார் மற்றும் திருநாவுக்கரசு நாயனார் ஆகியோரது புராண வரலாறுகள் சான்றாக அமைகின்றன. இத்தகையோரது சமய அனுபவத்திற்குக் காரணமாக அமையும் நம்பிக் கைகள், செயல்முறை, தொண்டு, நடைமுறைகள் அனைத்தும்பக்தி என்னும் வட்டத்திற்குள் அமைவதினாலாகும். பக்தி ஒன்றே இந்த அடியார் வாழ்க்கை முழுவதும் இழையோடி வன்மை படைத்ததாக இருக்கின்றது. திருநாவுக்கரசரு டைய வாழ்க்கையே இதற்கு எடுத்துக்காட்டாகும்.

"பக்தி நிலைப்பட்ட அடியார்களது தன்மை பற்றி மனவியல் ஆய்வாளர் பின்வருமாறு விளக்கு வர். அவர்களது பக்தி எத்தகையது என்பதைக் கூறுமிடத்து,

"பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டி லும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே யாம். எனவே அது உண்மைச் சமயத்தின் உயிர் நாடியாகும், சமய வாழ்வு என்பதன் உள்ளீடும் வடிவும் அதுவாகும்"

என்றும்

"இறைப் பொருளைப் பற்றிக் கொள்ளவேண் டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தியாகும். அப்பரம்பொருளைப் பற்றி நின்று அத னுடன் இரண்டறக் கலந்து அனுபவிக்க நினைப் பதே பக்தி. இவற்றுள் முதலாவது பக்தியின் தத்துவம்; இரண்டாவது சமய அனுபவத்தின் ஒரு கூறாகும். இந்நிலையில் கடவுள் ஒரு தத்துவப் பொருளாக இராமல் அனுபவப் பொருளாக மாறிவிடுகிறது".

என்றும் விளக்குவர்.

இத்தகைய விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்து திருத்தொண்டர் புரா ணத்தில் வரும் அடியார்களது வாழ்வில் பக்தியே அடிநாதமாக அமைவதை சேக்கிழார் தெளிவுறக் காட்டுகின்றார். தொண்டு என்பதையே குறிக்கோ ளாகக் கொண்ட அடியார்களாகிய இவர்கள் அன்பே வடிவான சிவபெருமானை ஏற்றுக் கொண்டமை யின் இவர்கள் செயல்கள் அனைத்தும் அறச் செயல்களாகவே அமைந்தன. நாவுக்கரசர் சமணத்திலிருந்து நீங்கி சைவம் மீண்டவுடன் அவர் பாடிய முதல் பதிகத்தின் 6ஆவது பாடல் பக்தியின் மகத்துவத்தைக் காட்டி நிற்கின்றது.

*சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்*
*தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்*
*நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்*
*உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்*

(திருமுறை 4-1-6)

என்று பாடுவதன் அடிப்படை பக்தியே ஆகும். தொண்டு நெறியே சைவநெறி என்பது சேக்கிழார் காணும் உண்மையாகும். அன்பு, தொண்டு என்பனவற்றிக்குச் சேக்கிழார் கண்ட பொருள் குறிப்பிடற்பாலது. அடியார்களது வாழ்க்கையின் அடித்தளத்தில் நிற்பது இத்தொண்டுள்ளமே என்பதனைச் சேக்கிழார் காண்கிறார். தொண்டு என்னும் சொல்லை மிகவும் விரிந்த பொருளிலேயே சேக்கிழார் பயன்படுத்துகின்றார். அன்பு என்று கூறியவுடன் இறைவன் மாட்டு அன்பு; உயிர்கள் மாட்டு அன்பு என்று பிரித்தறிய வேண்டிய தேவை இல்லை. மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில்,

*"தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்*
*ஆடியபெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும்".*

(பெரி. புரா.470)

என்று கூறுவதும் அமர்நீதியார் புராணத்தில்

*"சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன்றில்லார்*
*அந்தி வண்ணர் தம் அடியவர்க்கமுது செய்வித்து*
*கந்தை கீளுடை கோவணம்... உதவி"*

(பெரி.புராண.504)

என்று கூறுவதும் அடியார் மேல் அன்பு செலுத்தும் தன்மையைக் காட்டி நிற்பன.

சேக்கிழார் பெரிய புராணத்தில் பக்திக்கு வேண்டிய பல உண்மைகளை விரிவாக விளக்குகின்றார். பக்திக்கு நிலைக்களனாக அமையும் சிவலிங்கத் திருமேனியின் உண்மை குறித்து சேக்கிழார் குறிப்பிடுமிடத்து,

*காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்*
*நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்*

(பெரி.புரா - 3648)

என விளக்குகின்றார். பக்தியை வெளிப்படுத்தும் பஞ்சாங்க நமஸ்காரம், அட்டாங்க நமஸ்காரம் ஆகியவை பற்றியும் விளக்குகின்றார். சிவபெருமானது அடையாளங்களையும் அருட் செயல்களையும் சேக்கிழார் விரிவாகக் கூறியுள்ளார்.

*"எவ்வுயிர்க்கும் தாயானான்" (2385)*
*"அருவாகி உருவாகி அனைத்துமாய்*
*நின்ற பிரான்"* (4163)
*"புண்ணியப் பொருளாய் நின்றான்"* (385)

எனவரும் பெரிய புராணத் தொடர்கள் குறிப்பிடத்தக்கன. தில்லைவாழந்தணர் புராணத்தில் தில்லை நடராசப் பெருமானைப் பக்தியுடன் போற்றுகின்றார்.

*கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி*
*அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்*
*சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று*
*பொற்புடன்நடஞ் செய்கின்ற பூங்கழல்போற்றி போற்றி*

(பெரி. புரா. 351)

என இறைபக்தியை வெளிப்படுத்துகின்றார்.

இவ்வகையில் சேக்கிழாரின் பெரிய புராணம் சைவசமய பக்தி இலக்கியமாக மிளிர்ந்து சிவபெருமானின் புகழ், சிவனடியார் பெருமை, சிவசின்னங்களின் பெருமை, பக்தியின் பயன், அன்புநெறியின் சிறப்பு ஆகியவை பற்றி விரித்துள்ள வகையில் சிறப்புப் பெறுகின்றது.

*என்றுமின்பம் பெருகுமியல்பினால்*
*ஒன்று காதலித்துள்ளமு மோங்கிட*
*மன்றுளா ரடியாரவர் வான்புகழ்*
*நின்ற தெங்கும் நிலவிஉல கெலாம்*

(பெரி. புரா. 4286)


என்று தமது பெரிய புராணத்தின் வழி பக்தியின் உயர் நிலையைச் சேக்கிழார் சுட்டுகின்றார்.

*"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவா! நீ ஆடும்போதுன் அடியின் கீழிருக்க"* என்றார்.

(பெரி. புரா. 1781)

இவ்வாறு அடியார்களது வரலாறுகள் ஊடாகவும், சமய நம்பிக்கை, அனுபவம், செயல்முறை தொண்டுகள் மூலமும் சேக்கிழார் பெரிய புராணத்தின் பக்தியின் சிறப்பைப் போற்றுவது எமது சமயத்திற்குப் பெருமை சேர்க்கின்றது எனில் மிகையில்லை.

❖ ❖ ❖



# நாவலர் பெருமானின் சிந்தனைகள்

பேராசிரியர்.இரா.வை.கனகரத்தினம்
(இந்துப் பண்பாடு)
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**"ஆறுமுக நாவலர் என்பவர் தமிழுலகத்தில் தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெரியவர்களுள் ஒருவர், அவரளவு சிறந்தவர் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில், இத்தமிழ் நாட்டில் ஒருவரும் இருந்திலரென்று ஒரு தலையாகச் சொல்லலாம். அவ்வளவு சிறந்தவர்."**

உலகச் சிந்தனையாளருள்ளும் இந்தியச் சிந்தனையாளருள்ளும் நாவலரவர்களும் ஒருவராவார். 19ம் நூற்றாண்டில் இந்தியாவிலும் ஈழத்திலும் தோன்றிய சமூக, சமய, ஆன்மிக சிந்தனையருள் நாவலரவர்கள் குறிப்பிடத் தகுந்த உயர்ந்தோர் இடத்தைப் பெறுகின்றார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவரது மூளை முதல்தரமானது என்று ஆங்கிலேய மதவாதிகள் இவரைப் பாராட்டியமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

மனித வாழ்க்கையின் அபிலாசைகளை, மனித சமுதாயத்தின் சமூக, சமய, ஆன்மீக ஈடுபாட்டில் கொண்டிருந்த ஆர்வத்தின் விளைவாகத் துறந்தவர் நாவலரவர்கள். தான் வாழ்ந்த காலகட்டத்தில் ஏற்பட்டிருந்த அரசியல், சமூக, சமய தாக்கங்களுக்கேற்ப, தனது சமுதாயத்தின் சமய, ஆன்மீக வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்து அவற்றின் போக்குக் கேற்ப உயர்ந்த சிந்தனைகளைக் கருத்திற் கொண்டார். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார். அவரின் சிந்தனைகள் ஒரு தனிப்பட்ட சமுதாயத்துக்கு மாத்திரம் சொந்தமல்ல. உலகில் வாழ்கின்ற வாழப்போகின்ற மனித வர்க்கம் எல்லோருக்கும் பொருத்தமுடையன.

நாவலரவர்களின் சிந்தனைகளை மூன்று வகையாக அடக்கி நோக்கலாம்.

அ. சமூகம் சார்ந்தன
ஆ. சமயம் சார்ந்தன
இ. ஆன்மீக நாட்டம் கொண்டன

நாவலரவர்கள் அழுக்காறு, கல்வி, களவு, கற்பு, கள்ளுண்ணல், காமம், கோபம், கொலை, சூது, செல்வம், மொழி, தர்மம், தானம், நல்லொழுக்கம், பசுக்காத்தல், புலாலுண்ணல், பெரியோரைப் பேணல், பொய், வியபிசாரம், வீட்டுவேலை, வருணம் போன்ற பல்வேறு விடயங்களில் சமுதாயத்தின் முதன்மை கருதி, தமது சிந்தனைகளைச் செலுத்தித் தமது அருமையுடைய கருத்துகளை வெளிப்படுத்தினார்.

மனித அறிவியல் பண்புகளில் தலையாயது கொலை செய்யாமையாகும். கொலை செய்யாமை என்பது கொல்லாமை ஆகும். கொலையாவது உயிர்களை அவைகளுக்குரிய இடமாகிய உடம்பினின்றும் பிரியச் செய்தலாகும். உயிருக்கு இதஞ்செய்தல் புண்ணியமும், தீமை செய்தல் பாவமுமாம். கொலையைப் பார்க்கிலும் தீமை வேறு இல்லாமையால் கொலையே பாவங்களெல்லாவற்றுக்கும் தலையாயுள்ளது. கொல்லாமையைப் பார்க்கினும் இதம் வேறில்லாமையால் கொல்லாமையே புண்ணியங்கள் எல்லாவற்றிலும் தலையாயது என்பார். இக்கருத்து மரபுவழிப்பட்டதாயினும் விரித்துச் சொல்லி வலியுறுத்தும் பான்மை மனித சமுதாயத்தைப் பெரிதும் சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்துவிடுகின்றது எனலாம்.

கள்ளுண்ணுதல் என்ற பண்பினைப் பற்றி நாவலரவர்கள் பேசும் பொழுது அறிவை மயக்கும் வஸ்த்துக்கள் அனைத்தையும் இதனுள் அடக்கிப் பேசுவார். கள்ளுண்பவர்களுக்குக் களிப்பும் மயக்கமும் இயற்கையாதலால் அவரிடத்துச் சண்டை, கொலை, களவு, பொய், வியபிசாரம் போன்ற பாவச் செயல்கள் இயல்பாகவே அமைய வாய்ப்பேற்படும் எனக் குறிப்பிடுவார்.

வியபிசாரம் என்பது காம மயக்கத்தினாலே தன் மனையாளல்லாத மற்றப் பெண்களை விரும்புதல் ஆகும். ஏனைய பாவங்கள் அனைத்திலும் முதன்மையான பாவம் வியபிசாரமேயாகும் என்பார் நாவலரவர்கள்.

'இளமையிற் கல்' என்பார் ஔவைப்பிராட்டி, நாவலரவர்கள் சற்றே விரித்து, எந்த நாட்டையும் எந்த ஊரையும், உன் நாடும் ஊரும் ஆக்குவது கல்வி, ஆதலால் அதனை இளமை தொடுத்து மரண பரியந்தம் விடாமற் கல். அதற்குச் சிறந்த கருவி ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே ஆகும் என்பார்.

"மைவிழியார் மனையகல்"
"பிறன்மனை புகாமை யறமெனத் தகும்"

என்பன ஔவையார் வாக்கு. முன்னோர் வழி நின்று தண்மையுள்ள ஆண்மகன் ஒருவனின்

சிறப்பை "பிறன்மனை விரும்பாத பேராண்மையே பேராண்மை" எனச் சிறப்பித்துக் குறிப்பிடுவார்.

"கோதாட்டொழி"

"சூதும் வாதும் வேதனை செய்யும்", "சூது விரும்பேல்" ஆகிய வாக்கியங்களால் ஔவையார் சூதின் கேட்டினை விளக்குவார். நாவலரவர்களும் சற்றே விரித்து, "சூதாடலானது ஒன்றினை முன் பெற்று இன்னும் பெறுவேன் என்னும் கருத்தால், நூற்றினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம், ஆதலால் அதனை ஒரு பொழுதும் நினைத்தலும் செய்யாது ஒழி. சூதாடலை விரும்புவாயாயின் காலமும் கருத்தும் உன்னை வந்தடையா" என வலியுறுத்துவார்.

"சோம்பித் திரியேல்" என்று ஔவையார் முயற்சியை வற்புறுத்துவது போன்று, வழிவழி வந்த சிந்தனையாளர்களும் வலியுறுத்தி வந்துள்ளனர். நாவலரவர்களும், "செல்வம் எல்லார்க்கும் எந்நாளும் அவசியம் வேண்டுவதாயின் இருக்கையால், அதனை விரைந்து சம்பாதிக்க வேண்டும். அதற்கு முயற்சியே சிறந்த கருவி" என்பார். இச் செல்வத்தைப் பொய் முதலான பாவம் கலவாமையால் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்வார்.

அம்மையே அப்பா என இறைவனை நோக்கிப் பாடினார் மாணிக்கவாசக சுவாமிகள். பெற்றோரின் முதன்மையை உலகிற்கு வெளிப்படுத்தினார் ஔவையார், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என அவர்களை இறைவனாகவே காட்டினார். இவற்றின் வழிவந்த நாவலரவர்கள் சமுதாயப் போக்கினை அறிந்து, 'அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதா மாதாக்களை, நீ என்ன வருத்தப்படினும், கைவிடாமல் அன்போடு காப்பாற்று, இவற்றின் பயனே உன் பிள்ளைகளால் உனக்கும் கிடைக்கும்" என்று அழுத்தமாகக் குறிப்பிட்டு "தந்தை தாய் பேண்" அமுதவாக்கின் அவசியத்தினை வற்புறுத்துவார்.

கடன்படுதல் பற்றி உலகில் சிந்தித்த முதல் மனிதர்களில் நாவலரவர்கள் முதன்மை பெறுவர் எனலாம். கடன் பெறாத மனிதர் உலகில் யாருமில்லை என்றே கூறிவிடலாம். நாவலரவர்கள் "எல்லாப் பாவங்களையும் வலிந்து கைப்பிடித்தழைக்குந் தூது" என இதனைக் குறிப்பிடுவார். மனிதன் கடன்படுதலால் ஏற்படும் விளைவுகள் அனைத்தையும் இச்சிறு வாக்கியத்தால் விளக்கி அடக்கி விடுகின்றார். அது ஒரு தொடர் நோய், பல வழிகளிலும் மனிதனைத் துன்புறுத்தக் கூடியதாகும்.

தர்மம் பற்றி பல அறிஞர்கள் பேசியுள்ளனர். நாவலரவர்கள்,

"நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் செய்யா தொழிவையாகில் பின் ஒரு காலத்திலும் சமயம் வாய்ப்பது அரிது, தர்மத்தைச் செய்யுமிடத்து சற்பாத்திரமாயுள்ளவர்களுக்கு அன்போடு கொடுத்து விடு" என்பார்.

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின் பாவஞ் செய்பவர்களும் இலர் ஆதலால், பாவம் செய்பவர்களிலும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும்பாவிகள் எனக் கூறி அத்தனை சிந்தனைக்கும் மகுடமாக, இமயம் போல் இச்சிந்தனையை வெளிப்படுத்தினார். ஏனைய சிந்தனைகள் எல்லாம் இதனுள் அடக்கம். இது ஏனையவற்றுள் அடங்கா.

நாவலரவர்கள் வருணம் பற்றிப் பேசியுள்ளார் ஆச்சிரமம் பற்றிச் சிந்தித்துள்ளார் ஆனால் வர்ணம் பற்றியோ, அன்றி சாதி பற்றியோ இன்று இவ்விடயத்தினுள் அடக்கி, கங்கணம் கட்டி, கண்டிக்குமளவிற்கு நாவலரவர்கள் சாதி பற்றிச் சிந்திக்கவில்லை. நாவலரவர்கள் சமூகவியல் அடிப்படையினின்று சாதிபற்றிச் சிந்திக்கவும் இல்லை. சமூகவியலில் சாதி ஒரு பகுப்பு. அங்கே இது பற்றிய ஆய்வு அவர்களுக்கத் தேவைப்படுகின்றது. எனவே தமது சிந்தனைக்கு வலிந்து வலுவூட்ட நாவலரவர்களின் வருணம் பற்றிய சிந்தனை தேவையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுவருவது வருத்தத்திற்குரியது.

நாவலரவர்கள் சமயநெறி நின்று, சமுதாயத்தை நோக்கினார். சமூகவியல் பற்றி அவர் சிந்தித்ததே இல்லை. அது அவருக்கு அனாவசியம். சமய ஒழுகலாற்றில் நின்று சிந்தித்தமையால், "சாதியினுஞ் சமயமே அதிகம் சமயத்தினும் சாதி மேலானதெனக் கொள்வது சுருதி, யுத்தி அநுபவம் என்ற மூன்றினுக்கும் விரோதம்" என்றார். இங்கு நாவலரவர்கள் சாதி என்ற சொல்லை சமூக ஏற்றத்தாழ்வு என்ற அடிப்படையில் கருதவில்லை என்பதை யாவரும் மனங்கொள்ளுதல் வேண்டும். சமயம் சாதி பற்றிப் பேசுவது இந்த அடிப்படையில் அல்ல. பிறிதோர் இடத்தில் மேன்மக்கள் யாவர் என்பதை நாவலரவர்கள் மனிதனின் உடம்போடு அழிதலால் பயன்படாது சாதியுணர்ச்சி, உயிரோடு செல்லுதலாற் பயன்படும் கல்வியுணர்ச்சி உடையவரே மேன்மக்கள் என்று அவர் குறிப்பிட்டுச் செல்வதையும் நாம் இங்கு மனங்கொள்ளல் வேண்டும். நாவலரவர்கள் பெரும் சாதிமானாக தம்மைக் கருத்திற் கொண்டால் பரிதாபி வருடத்தில் (1852) பெரிய புராண வசனத்தை எழுதியிருக்க முடியுமா? அதில் வரும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஒரே வருணத்தைச் சார்ந்தவர்கள் அல்லாதபோதும் அவர்களின் குருபூசையைத் தவறாது அனுட்டிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய அவசியம் வேண்டியதா? கரையூர் சென்று கஞ்சித் தொட்டித் தருமம் (1877) செய்யவேண்டிய தேவையுண்டா? கத்தோலிக்கரான பெஞ்சமீன் சந்தியாகுப் பிள்ளை அவர்கள் பற்றி

"மகாதயாளு" என்று மிகுதியாகப் பாராட்ட வேண்டிய கடப்பாடு அவருக்கு வேண்டுமா? என்பன போன்ற வினாக்கள் நம் சிந்தனையில் எழுந்து நிற்கும்.

நாவலரவர்கள் கோயில் வழிபாடு, கடவுள் வழிபாடு, சங்கம வழிபாடு, வருணம், ஆச்சிரமம், சிராத்தம், சைவம், வைணவம், தேவாரம், திருவாசகம், திருமுறைகள், அருட்பா, நிலையாமை, புண்ணியம், பாவம், துன்பம் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி மிகவும் ஆழமாகச் சிந்தித்துள்ளார். நாவலரவர்களின் சமய சிந்தனைகள் அனைத்தும் "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற அவர்தம் சிந்தனையின் அடிப்படையில் அமைந்தன எனலாம்.

சிந்தனையில் சைவத்தையும் அதன் கோட்பாடுகள் பற்றியுமே அதிகமாகச் சிந்தித்தார். சைவமே வைதீகம் எனப்படும். வைதிகம் அதனுள் அடங்கும். வைதிகம் சைவத்தினிற்றாழ்ந்தது. சைவமே பரகதியைத் தரவல்லது என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவர் நாவலரவர்கள்.

ஆன்மீகச் சிந்தனையாளர் எவரும் நிலைமைக் கருத்துகளை மக்கள் மத்தியில் பரப்புவதில் பின்னின்றதில்லை. நாவலரவர்களும் "நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன்படுவனவற்றைச் செய்யாது, வீணாட்கழிப்பது எவ்வளவு அறியாமை" என வலியுறுத்துவார்.

உலகில் வாழ்ந்த ஆன்மீக சிந்தனையாளர் யாவரும் பெரிதும் தாம் தழுவிய கோட்பாடுகளை மையமாக வைத்தே தமது ஆன்மீகச் சிந்தனைகளை வெளிப்படுத்தினர். அவ்வாறே நாவலரவர்களும் தாம் பூரணமாக நம்பிய சுத்தாத்வைத சித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்று இறை, உலகு, ஆன்மா, கன்மம், மறுபிறப்புப் பற்றிச் சிந்தித்தார். நாவலரவர்களின் தத்துவ சிந்தனைகள் மரபு தழுவியனவாகப் பெரிதும் அமைந்திருந்தன. ஆனாலும் அவை பாமர மக்களுக்கு இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் அக்கோட்பாடுகளை அமைத்து வெளிப்படுத்தினார். இறையியல் பற்றிச் சொல்ல வந்த நாவலரவர்கள்

கடவுள் ஒருவர் இருக்கின்றார்
அவர் எங்கும் உள்ளவர்
அவர் எங்கும் நிறைந்தவர்
அவர் எல்லாம் அறிபவர்
அவர் இரக்கம் உடையவர்
அவர் நம்மைக் காப்பாற்றுகின்றார்
அவரை ஒருநாளும் மறவாதே
அவரை எந்நாளும் வணங்கு

என இலகுபடுத்திக் குறிப்பிட்டு இறைவனின் பிரமாணம், இலக்கணம், வியாபகம், அருள்திறன் அனைத்தையும் வெளிப்படுத்துவார். இவ்வாறே ஆன்மா உலகு பற்றியும் குறிப்பிட்டு நிற்பார்.

நாவலரவர்களின் ஆத்மீக உலகியல் சிந்தனைகள் பெரிதும் சித்தாந்தக் கோட்பாடுகளைத் தழுவிய பொழுதும் ஓரளவு வடஇந்திய அனுபூதிமானாகிய இராமகிருஷ்ணபரமகம்சர் சிந்தனைகளை உருவகக் கதைகள் மூலம் வெளிப்படுத்தியது போன்று நாவலரவர்களும் தமது சிந்தனைகளைச் சிறுசிறு உருவகக் கதைகள் மூலம் வெளிப்படுத்தி வந்தார். அத்தகைய உருவகக் கதைகள் அறிவியல், அன்புநாட்டம் கொண்டனவாகவே அமைந்திருந்தன. உதாரணமாக ஒன்றை நோக்கின்.

எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிக்கரை மேலே போனார். போகும் போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப் பார்த்து "ஐயா! நீ எப்போது கரை ஏறுவாய்" என்றார். "ஐயா என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன்" என்றான்.

இக்கதையினை நாவலரவர்கள் குறிப்பிடுவதன் மூலம் கொல்லாமை, அன்புடைமை, மறுபிறப்பு, வீடு பெறல் போன்ற பல்வேறு ஆன்மீக விடயங்களை அடக்கிக் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது

இராமகிருஸ்ண பரஹம்சர் ஒரு அனுபூதிமான், இறையியல் ஞானி. நாவலரவர்கள் இறையியல் சார்ந்த அனுபூதிமான். பரமஹம்சர் ஆன்மீகப் பயன்பாட்டின் முதிர்ச்சியில் நின்றவர். நாவலரவர்கள் சாதனையின் பயனை உலகிற்கு வழங்க முனைந்தார். இதனால் பரமஹம்சர் போன்று இறையியல் ஞானியாக உலகில் துலங்க வழிதேட முற்படவில்லை. இராமகிருஸ்ணபரமஹம்சர் வாழ்ந்த பகைப்புலம் வேறு. நாவலரவர்கள் வாழ்ந்த பகைப்புலம் வேறு. இதனால் நாவலரவர்கள் தன்னை முழுமையாக இறையியல் சார்ந்த பணிக்கு அர்ப்பணிக்க முடியவில்லை. ஆனால் நாவலரவர்களின் சிந்தனை வெளிப்பாட்டின் சாதனையின் பயன் அவரை இறையியல் ஞானியாக வெளிப்படுத்தி நிற்கும் எனலாம்.

முடிவாக நாவலரவர்களின் உயரிய சிந்தனைகள் மனித சமுதாயத்தின் வாழ்வுக்குப் பெரிதும் வழிகாட்டுவன. அவை பெரிதும் ஆன்மீக ஈடுபாட்டை அளிப்பன. அதன் வழி பரமுத்தியைத் தரவல்லன. நாமும் நாவலர் பெருமான் காட்டிய சிந்தனைகளை மனங்கொள்ளுதல் அவசியமானதாகும். அவை மிகுந்த பயன் தரவல்லன.

✸ ✸ ✸

# ஆசிரியர் குழாம்



அமர்ந்திருப்பவர்கள் : இடமிருந்து வலம்

திருமதி. ஜெ.சதீஸ், திருமதி ப.அ.ஜோ.விக்னராஜா, திருமதி. ஞா. லூக்காஸ், திருமதி.கு. மனோரதன், செல்வி.சி.உதயகலா, திரு.செ. சிவநடராசா (அதிபர்), செல்வி.ந.பிரதா (உபஅதிபர்), திருமதி. ர. சண்முகநாதன், திருமதி. ய. ரஜீனந்தன், திருமதி. டெ. விக்கினேஸ்வரன்.

முதலாம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்

செல்வி. சி. கோசலா, செல்வி. பு. பிரபாலினி, செல்வி. ந. கவிதா, செல்வி. நே. தட்சாஜினி, செல்வி.இ. ரஞ்சிதமலர், செல்வி.மு. விஜிதா, திருமதி.ப.உமாவாகீசர், செல்வி.கு.கலைவாணி, திருமதி.வ.ஜெயக்குமார், திருமதி.ர. உதயநாதன், செல்வி.ப. சுகிர்தா, செல்வி.சி.சிவாணி.

இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்

திரு. க. சிவனேசன், திரு.க. ஜலஜன், திரு.ந.றமேஸ்வரன், திரு. அ. சிறீதரன்.



# இந்து நாகரிகத்தில் அறம் ஓர் அறிமுகம்

**பேராசிரியர் கலாநிதி**
**கலைவாணி இராமநாதன்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

இந்து அறிவியலானது அடிப்படையில் தத்துவத்துறையையும் நடைமுறையில் சமயம் சார்ந்த ஒழுக்கவியல் கோட்பாடுகளிலும் தங்கியிருக்கின்றது. இந்து அற ஒழுக்கவியலானது வடமொழியில் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்கள், கீதை மற்றும் தர்மசாத்திர நூல்களிலும் பெரிதும் போதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே தமிழில் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் மட்டுமன்றித் திருமந்திரம், திருக்குறள், பரிபாடல் முதலிய பத்துப்பாட்டு நூல்களிலும் சிலப்பதிகாரம், மணி மேகலை முதலிய காவிய நூல்களிலும், நாலடியார், ஆத்திசூடி என்பனவற்றிலும் பன்னிரு திருமுறை கள், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் முதலிய வைசித்தாந்த நூல்களிலும் பரந்துபட்டனவாகக் காணப் படுகின்றன. எல்லா நூல்களும் இந்து சமய அற ஒழுக்கங்களைத் தொகுத்துக் கூறுவனவாகவே உள்ளன. இந்து சமயத்திற்குச் 'சனாதன தர்மம்' என்ற ஒரு பெயரும் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. உபநிடதம், பகவத்கீதை போன்ற நூல்களில் தான் 'சனாதன' என்ற சொல்லாட்சியை முதலில் காணக்கூடியதாகவுள்ளது. வேதநூல்களில் விதிக்கப்பட்ட அறிவியலானது 'வைதிகதர்மம்' எனவும் ஆங்கு கூறப்பட்ட அறஒழுக்கமானது உபநிடதம், பகவத்கீதை வாயிலாக விளக்கம் பெற்று தர்மசாத்திர நூல்களில் இந்து அறிவியல் சிந்தனைகளின் பரிமாணமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

**நோக்கம் :**

இந்துக்களின் உலகியல் வாழ்வு இல்லறம், துறவறம் என்னும் பகுப்பு முறையில் அமைந்திருத்த லானது மனிதனது வாழ்வு முழுவதும் அறத்திலேதான் தங்கியிருக்கின்றது என்பதனை வற்புறுத்து வதாகக் கொள்ளலாம். மேல்நாடுகளில் அற ஆராய்ச்சி முறையையானது ஒரு விஞ்ஞானவியலாக வளர்ந்து வந்துள்ளதுடன் ஆங்கு சுதந்திர நிலையிலும் மதச் சார்பற்ற நிலையிலும் அது வளர்ந்து வந்துள்ளதை அரிஸ்டோட்டில், பிளேட்டோ போன்றவர்களது அறவியற் சிந்தனைகளில் கண்டுகொள்ளமுடிகின்றது. உதாரணமாக சரி – பிழை, நன்மை – தீமை, எனவரும் சொற்களை ஆராய்ந்தால் அவை பெரும் குழப்பத் தில் முடியும். காரணம் ஒருவருக்கு உணவாக இருப்பது மற்றொருவருக்கு நஞ்சாகின்றது. ஒருவருக்குச் சரியாக அமைவது – நன்மை தருவது பிறிதொருவருக்குக் கேடாகவும், துன்பமாகவும் அமைகின்றது. சமயம், அறம், நீதி, இவற்றிலேதான் இத்தகைய முரண்பாடுகட்கு ஏற்ற விளக்கங்கள் அளிக்கப் பட்டுள்ளன. ஆகையினால் மனிதன் சுகமாக வாழ்வதற்கும் – துன்பங்களைத் தாங்குவதற்கும் மதம் – நீதி – அறம் என்பன இன்றியமையாதனவாக ஆயின.

எந்த ஒரு நல்ல செயலுக்கும், தீய செயலுக்கும் திடமான நம்பிக்கையும், தீவிரமான விஸ்வாச மும்தான் ஆதாரமாகவுள்ளன. அந்த நம்பிக்கை (faith) யினை இறைவன் மீதும் நீதியின் மீதும் – அறத்தின் மீதும் வைத்துக்கொண்டு காரியமாற்றினால் வாழ்வின் சிக்கல்கள் இலகுவில் அகலும் அல்லது சிக்கல்கள் பிரச்சினைகளால் பாதிக்கப்படாத திடசித்தம், வைராக்கியம், மனவுறுதி என்பன வளர்ச்சியடை யும். நம்பிக்கை, விஸ்வாசம் என்பன எப்போதுமே மடத்தனமானவையாக அமையாது. மருத்துவர் கொடுக்கும் மருந்தில் நம்பிக்கை வைத்தே அதனை உண்கிறோம். இவ்வாறாக (நன்) நம்பிக்கை அடிப்படையில் செய்யும் காரியங்கள் பல வெற்றிகளையே தந்துள்ளன. நல்லவை – தீயவை, தர்மம் – அதர்மம், நீதி – அநீதி, அறம் – மறம் என்ற பெயரிலே அவை தூய நம்பிக்கையடிப்படையிலேயே இயங்கி வருகின்றன.

*"இந்திய அறவியல் என்பதன் கருத்து வேதகாலம் முதல் இன்றுவரை போதிக்கப்பட்டுள்ளது போல சரி-பிழை, நன்மை - தீமை ஆகியவை பற்றிய கோட்பாடு என்பதேயாகும்"*

என ஐ.சி.சர்மா குறிப்பிட்டுள்ளதிலிருந்து அறவியலின் தன்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

"இந்தியாவில் சமயமும் தத்துவமும் ஒன்றுபட்டவை" என்ற கருத்தே வளர்ச்சியடைந் திருக்கின்றது. இந்து சமயம் என்பது வெறும் சடங்கு ஒழுகலாற்றில் மட்டும் நம்பிக்கை வையாது உயர் குறிக்கோளை நாடுவதும் - அதன் சிறப்புக்குறி நேர்மையான வாழ்க்கையை அமைப்பதுமாகும். ஞானத்தால் மோட்சம் அல்லது விடுதலை அடைய முயன்றது மட்டுமன்றிச் சொந்த அனுபவத்தில் அதனை விளக்கவும் அவர்கள் முயன்றுள்ளனர். இந்துக்களின் கருத்துப்படி அறிவினால் பெறும் உறுதி மட்டுமன்றி விடுதலை அல்லது மோட்சம் என்பது "உண்மையினைத் தேடும் நாட்டமாயுமிருந்தது". மாக்ஸ்முலர் கூறுவதுபோல

"இந்தியாவில் தத்துவம் அறிவைப் பெறுவதற்காகவன்றி, வாழ்வின் மிக உயர்வான இலட்சியம் நிறைவேறுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டது"

மேனாட்டில் தத்துவம் வியப்பு (Wonder) அல்லது விருப்பினால் (Curiosity) தோன்றியிருக்கிறதென்றால், இதற்குமாறாக இந்தியாவில் தனித்தன்மை வாய்ந்த அதன் இலக்கே அதன் தோற்றத்திற்குக் காரணமென்று கூறலாம். இன்னோர் வகையில் கூறினால் அது அறநிலை, பௌதீகநிலைத் தீமைகள் (Moral and Physical Evils) வாழ்வில் ஏற்படுத்தும். நெருக்கடியைத் தீர்க்கும் செயல்முறையை நாடித் தோன்றியிருக்கலாம். இந்து தத்துவத்தின் உயிர்நாடி அதன் அறநிலை அடிப்படையாகத்தான் அமைந்திருப்பதுபோலத் தோன்றுகின்றது. காரணம் கடவுளைவிட இந்துசமயம் அற நியதிகட்கே அதிகளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளதுடன் அற ஒழுக்கங்கட்கு ஆதாரமாகவே இறைமையை அது சார்ந்திருப்பதாகவும் கூறலாம் போலப்படுகின்றது.

**வேதங்களில் அறம் :**

சனாதனமான இந்து தர்மத்தினை முதன் முதலில் விளக்கும் நூல்களாக வேதங்கள் விளங்குகின்றன. ஆங்கு,

"உலகினைத் தாங்குவதும் அதனை நிலைநிறுத்துவதும் எதுவோ அது தர்மம். இகத்திலும் பரத்திலும் நலமும் வீடும் தருவது. வினையாற்றுவதற்குத் தூண்டுவது. எல்லா உலகினையும் ஆக்கியளித்து நிலைநிறுத்துவது. புருடார்த்தங்கட்குக் காரணமாயிருப்பது எதுவோ அதுவே தர்மம்".

என்பது அறம் பற்றிய முகவுரையாகவுள்ளது.

அனாதிகாலம் தொட்டு இத் தர்மம் சத்திய தர்மம், வைதிக தர்மம், ஆதர்ஷ தர்மம், மாணவ தர்மம், பாரத தர்மம் என வெவ்வேறு பெயர்களால் அறியப்பட்டு வந்துள்ளதால் அது சனாதன தர்மம் என்னும் பெயருடையதாய் வேத நூல்களிலும் தனது அறக் கொள்கைகளை விதைத்து வந்திருப்பதனைக் காணலாம். வேதங்களில் இடம்பெற்றுள்ள இயற்கை வழிபாட்டினை ஆராய்ந்தால் அறமே இயற்கையின் ஊற்றாக இருப்பதனை உணரலாம். இயற்கை ஐம்பூதங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்ஐந்தின் பௌதிக அமைப்பே உலகத் தோற்றமாகும். இயற்கை நியதியை எடுத்துக்கொண்டால் பிருதுவி எனப்படும் நிலமே சகல ஜீவராசிகளினதும் வாழ்வுக்கும் ஆதாரமாக அமைந்துள்ளது. உணவு முதல் சகல உற்பத்திகட்கும் தரையே மூலப்பொருளாக இருப்பதனால் இயற்கை அன்னை, பூமாதேவி தரைத் தெய்வ வழிபாடு என விரிந்து தாய் கடவுள் வணக்கமாக உருப்பெற்றதனை ஆரம்ப வரலாறு உணர்த்துகின்றது.

'நீர்' இன்றி எந்த ஜீவராசிகளும் ஜீவித்திருக்கமுடியாது. அவ்வாறே அக்கினி உணவைப் பதப்படுத்தலுடன் உலகிற்கு ஒளி வழங்கும் சூரிய, சந்திரர்களாகவும் முதல் மின் குமிழாகவும் விளங்குவது, வாயு என்னும் வளி மண்டலம் இன்றி பிராணன் சுகப்படமுடியாது. மருத்துவத்திலும் 'நாடி சுத்தம்' எனப்படுவதும் யோகத்தில் 'பிராணாயாமம்' என்ற பெயரில் பயிற்சிக்குரியதாகவும் விளங்கும் காற்று மனிதனுக்குச் செய்யும் சேவைகள் ஏராளம். ஆகாசம் எனப்படும் பரவெளி (Space) இறைவனைத் தாங்கும் பரமண்டலத்தின் வாயிலாக உவமிக்கப்படுவது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு பரமண்டல வெளியுண்டு. அம்பலம் எனப்படும் அது – நிர்மலமானது – சிதம்பர ஆசியமானது எனப் போற்றப்படும் – இவ் இதயவெளி மனிதனது அனைத்து செயலூக்கங்கட்கும் மூலமாயமைவது. நடராஜ தத்துவமாக சைவ சித்தாந்தத்தில் ஏற்றம் பெற்றிருப்பது.

மேற்கூறப்பட்ட நிலையினையடைவதற்காகவே இயற்கை மனிதனுடன் ஒத்துழைத்து சகலவிதமான வசதிகளையும், தேவைகளையும் நிறைவேற்றித் தருகின்றது. இவ்வாறாக அறக்கொடையே இயற்கையின் நியதியாகவும் தருமமாகவும் விளங்குவதனால் 'இயற்கையைப் போற்றுதும்' என வேத நூல்கள் வழிபாட்டு முறைகளைக் கற்பித்துக் கொடுத்தன. சமயம், சமூகம், பொருளாதாரம், ஆன்மதத்துவம், ஒழுக்கம், அன்பு, இரக்கம், குடும்பநலம், பெண்கள் மகத்துவம், கல்வியின் அடிப்படை ரகசியம் என்பன போன்ற சகல விடயங்களும் அற நியமங்களின் அடிப்படையிலேயே வேதங்கள் கற்றுக்கொடுத்தன. இவ்வாறு இயற்கை அனைத்தையும் பிறருக்கு வழங்குகிறதே தவிர தான் வாழ்வதற்காக எதனையும் பதுக்கி வைப்பதில்லை. இயற்கையிடமிருந்து அறிவியலைக் கற்றுக்கொண்ட மனிதன் அதன் அறவியலைக் கற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். உதவிகள் பல பெற்றுக்கொண்டான். பதிலுக்கு இயற்கையை உதாசீனம் செய்வதுடன் நில்லாது இயற்கைச் சூழலை மாசடையச் செய்யும் கைங்கரியங்களையும் செய்து வருகின்றான். வேள்விகள், யாகங்களினால் சூழல் மாசடைதல் என்பன வேதகாலம் தவிர்க்கப்பட்டது.

இயற்கை ஒழுங்கு பேணப்படவேண்டியதன் அவசியத்தால் இயற்கை அக்காலம் தெய்வீகமயப்படுத்தப்பட்டது. இருக்குவேத காலத்தில் வருணன் என ஒரு தேவன் அறக்கடவுளாக உருவகிக்கப்பட்டான். வருணன் நன்மை தீமைகளைக் கண்காணிப்பவனாக 'ரிதம்' என்றும் இயற்கை ஒழுங்கினைப் பேணுபவனாக இயற்கை ஒழுங்கின் தலைமைப்பொறுப்பு வருணனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்காலத்தில் பேசப்படும் அறநிலைய அமைச்சராக வேதகாலம் வருணன் விளங்கியிருக்க வேண்டும். ரிக் வேதம் வருணனை 'ரிதஸ்யகோப' என்றே அழைக்கின்றது. 'நல்லவனாக வாழ – தீயகுணங்களில் இருந்து விடுபட – நற்பிரஜையாகும்படி வழிகாட்ட நாட்டிலே சகல நன்மைகளும் சுபீட்சங்களும் உண்டாகவும் அருள்வாய் என்பது இருக்குவேத வருணனது பிரார்த்தனைகளின் பொது இயல்பாகவுள்ளது.

பிரபஞ்ச ஒழுங்கினை நிலைநிறுத்துவோராக இம் மேலான பொறுப்பு வருணனைப் பற்றிய வர்ணசூக்தப் பாடல்களில் மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. வருணனது ஆட்சி பௌதிகத் துறையையும் கடந்து அறத்துறையிலும் பரவி நிற்பதை வேதப் பாடல்கள் சுட்டியுள்ளன. ரிதம், தர்மம் என்ற சொற்கள் பிற்காலத்தில் ஒரே பொருளில் வந்துள்ளன. இந்திரன் வேதத்தில் முதன்மை பெற்றாலும் நேர்மையுடன் தொடர்புபட்ட கடவுள் என்பதனைவிட போர்களுடன் தொடர்புள்ளவனாகவே அவன் காட்டப்பட்டுள்ளான். வருணன் வானத்தை உணர்த்தும் விண் ஒளித் தெய்வமாகப் போற்றப்படுவதால் அறம் – ஒளி, இன்பம், ஆனந்தம், அமைதி இவற்றினைத் தரவல்லது என்பதும் இவற்றிலிருந்து பெறப்படுகின்ற அறவியற் சிந்தனை வடிவங்கள் எனலாம்.

## உபநிடதங்களில் அறம்

உபநிடத நூல்களை எடுத்துக்கொண்டால் இந்து அறவியலின் தொடர்ச்சியான அறிவுரை களை அதிகம் தாங்கிவந்த நூல்களாகக் காணப்படுகின்றன. இந்து தத்துவ இயல் அறவியலின் மறுபாதி என்பதனையே உபநிடத மகாவாக்கியங்களின் பெறுமதியிலிருந்து உணர முடியும்.

*அகம் பிரம்மாஸ்மி – நான் அதுவாக ஆகிறேன்*
*தத்துவமஸி- நீ அதுவாக ஆகிறாய்*
*அயமாத்மா பிரமம் – எனது ஆத்மாவே பிரமமானது*
*ஸோ (அ)கம் அஸ்மி – எனதுள்ளம் அவனாகின்றது.*
*பிரக்ஞானம் பிரமம் – அறிவு எதுவோ அதுவே பிரமம்*

போன்ற இம் மகாவாக்கியங்கள் யாவும் போதிப்பன யாவை? இவை ஐந்தும் உபநிடத வாய்ப்பாடுகளாகப் (formula) பிரசித்தி பெற்றவை. இவற்றின் பொது இலக்கு எந்த மனிதனும் 'இறைநிலை' அடையலாம் என்பதேயாகும்.

'நானும் அது – நீயும் அது – எல்லாம் ஒன்று' என்னும் இவ்வத்வைத நோக்கானது அனைவரையும் சமநோக்குடன் சமநிலையில் வைத்து நோக்கும் உயர்நிலையறமாகும். அதாவது 'அனைவரிடமும் தெய்வீகம் உண்டு – அனைவரையும் நேசி, அனைவரிடமும் அன்பாயிரு, என்னும் உயர் மனித நேயமே இவ்வுபநிடதங்களின் தாரக மந்திரமாகும். மிகவுயர்ந்த ஒழுக்கவிழுமியங்களையே உபநிடதங்கள் சிறந்த அறப் பண்புகளாகச் சித்தரித்துள்ளன எனவும் கூறலாம். சாந்தோக்கியமானது மனித நடத்தைகளில் தீங்கான நடத்தைகள், அறவிரோதமானவை என வேறுபடுத்தியுள்ளன.

'திருடுவோன், சாராயம் அருந்துவோன், குருபத்தினியுடன் தகாத உறவு கொள்வோன், அந்தணனைக் கொலை செய்வோன் இந்நால்வரும் பாவிகளாவார்'. (சாந்.உப)

எனக் கூறுவதிலிருந்து மனித நடத்தைகள் சமூதாயத்தில் எங்ஙனம் ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதும் புலனாகும்.

ஞானம் அல்லது இறையுணர்வு என்பதானது 'பிரக்ஞானம்' என ஐதரேய உபநிடதத்தில் வர்ணிக்கப்படுகின்றது. எல்லாவற்றிலும் எது மிக உயர்வானதோ அசாதாரணமானதோ – ஆனந்தமானதோ – அமைதியான அழகானதாயிருக்குமோ அத்தகைய அதியுன்னத குணவியல்புகள் ஒருங்கே வாய்க்கப் பெறுதல் 'ஞானம்' என்பதன் சிறப்பியல்பாகக் காட்டப்படுகின்றது. அதனை உருவகப்படுத்த 'பிரமம்' என்ற அதியுன்னத அறிவுக்கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டதாகவும் கருதலாம். 'அறிவே சொரூபமானது எதுவோ – அது பிரமம்' என்பது அனைத்து உபநிடதங்களும் ஏற்றுக்கொண்ட ஒரு பொதுக்கோட்பாடாகும்.

'ஞானம்' என்பதன் சிறப்பம்சங்களாக :

*'ஞானம், மாயை, புலமை, தரிசனம், துணிவு, அறிவு,*
*புத்தி, வித்தை, நினைவு, யாகம், சங்கல்பம், ஆத்மன்,*
*பிரார்த்தனை', வசப்படுத்தல் இவையனைத்தும் பிரமத்தின்*
*மறுபெயர்களாகும்'.* (ஐதரேயம்)

என்பது உபநிடதங்களில் பேசும் இறைமையின் பொது இயல்பாகவுள்ளது. அதனால் சர்வம் ஜகத் பிரமம் எனவும் அது வர்ணிக்கப்படுவதனால் ஒருவன் இத்தனை நற்பண்புகளிற்கும்

உறைவிடமாகும்போது அவன் தெய்வீகமானவனாக தெய்வமாகவே போற்றப்படுவதை - வணங்கப்படுவதனை நாம் யதார்த்த பூர்வமாகவே காண்கிறோம். ஆதலால் 'தெய்வம்' என்னும் கோட்பாடானது அடையமுடியாததோ – அனுபவிக்கமுடியாததோ அல்ல என்பதனை இங்ஙனமாக அறிவிப்பதே உபநிடதங்களின் உயர் அறவிழுமியமாகத் துலங்குகின்றது. ஆனால் இத்தகைய அறஒழுக்கப் பண்புகள் சாதனை வாயிலாக நடைமுறைக்கு அனுபவத்திற்கு வரும்போதே உயர் அறவியல்பானது உலகிலே நிறைபெறுவதாகின்றது.

உபநிடத அறவியல் நியமங்களை சுருக்கமாக ஐதரேய உபநிடதம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

| | |
|---|---|
| *ஸத்யம் வத* | *– உண்மை பேசு* |
| *தா்மம்சர* | *– தர்மவழியில் நட* |
| *சத்யாந்நப்பிரம திதவ்யம்* | *– சத்தியத்தினின்றும் நழுவுதல் கூடாது* |
| *தா்மாத் – நப்பிரமதிநவ்யம்* | *– தா்மத்தினின்று நழுவுதல் கூடாது* |
| *பூத்பை – நப்பிரமதிதவ்யம்* | *– பெருமையுள்ளவற்றைப் போற்றவும் தவறக்கூடாது.* |
| *மாத்ரு தேவோ பவ* | *– தாயைத் தெய்வமாகப் போற்றுக.* |
| *பித்ரு தேவோ பவ* | *– தந்தையைத் தெய்வமாகப் போற்றுக.* |
| *ஆக்சார்ய தேவோ பவ* | *– குருவினைத் தெய்வமாகப் போற்றுக.* |
| *அதிதி தேவோ பவ* | *– விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக.* |

இவையனைத்தும் சமூக வாழ்வில் மனித நடத்தையை ஒழுங்குபடுத்தும் நடைமுறை விதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றினை அறக்கட்டளைகள் அல்லது ஆணைகள் எனவும் இந்துமதம் வற்புறுத்தும். கட்டளைகள் பேணப்படாதவிடத்து அவை கர்மவினைகளில் சென்று சேருகின்றன எனப்படும். 'ஒரு தொழிலைச் செய்வது கருமம் வேத சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல் தருமம்' எனவும் அறிஞர் கருதுவர். கருமம் என்பது விருப்புடன் செய்வது, அது செய்தவனைச் சாரும். தருமம் என்பது கடமைகளைச் செய்தல். ஆதலால் பற்றுக்களை விடுவிக்கும் எனவும் பொருள் கொள்வதானால் அது எவ்வாறு என பகவத் கீதா தர்மம் சிறந்த விளக்கமளித்துள்ளது. கருமம் எது? அதருமம் எது? என்பதற்கெல்லாம் அனுபவத்திலே விளக்கமளிக்கும் போது பல முரண்பாடுகள் எழாமலில்லை. 'அதைச் செய்யாதே – இதைச் செய்' என்று சொல்லும் போதெல்லாம் அது கட்டளையா அல்லது அறிவுரையா? என்ற ஐயப்பாடுகள் எழுகின்றன. எனவே அறஇயல் தேர்வு நிலைக்கு உட்படுத்தலாகும்' என்பதும் நவீன அறவியல் கருத்தாக விமர்சிக்கப்படுகின்றது. அறவியல் என்பது இயல்பாகவே தீயவைகளைத் தவிர்த்தல் எனவும் கூறலாம். எது நன்று? தீது? எனத் தேர்வதுதான் சூழ்நிலையைப் பொறுத்து அமைகின்றது. அறஇயலைத் தெளிவாக உணரும்போது அறஇயலைத் தவிர்க்க முடியாதென்பதும் தனிமனித அனுபவத்திலே புலப்படும். தேர்வுநிலை என்னும் பரீட்சைக்குரியதாகும்போது அறஇயல் யாவற்றையும் விரவி நிற்கும் விஞ்ஞானம் என்ற ஆய்வுக்கும் உட்பட்டதாகின்றது.

**தர்மசாஸ்திரங்களில் அறம்**

தர்மசாஸ்திரங்கள் இந்துக்களில் சட்டநூல்கள் எனப்படுகின்றன. இவற்றினை ஆய்வுக்குட்படுத்துதலை வைதிக தர்மம் விரும்புவதில்லை. ஏனெனில் வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்ட ஒழுக்கமே மேலான ஒழுக்கம் எனவும் இவ்விதமான நல்லொழுக்கத்தினின்றே அறம் வடிவெடுக்கின்றது. இவ்வாறு நல் ஒழுக்கமே அறத்தின் ஊற்று. அறத்திற்கு சிறந்த ஒழுக்கமே ஆதாரம் என்பதனை ஸ்மிருதி நூல்கள்

*"ஆசார பரமோதர்ம : ச்ருத்யுக்த : ஸ்மார்த்த*
*ஏவ ச :"* எனவும்

*"வேத ஸ்மிருதி ஸதாசார ஸ்வஸ்ய பிரியமாத்மன :*
*ஏதச் சதுர்விதம் பிரஹ சாட்சாத் தர்மஸ்ய லட்சணம்"*

எனவும் விளக்கிக்காட்டின. ஆதலால் 'வேதம்' என்னும் சுருதிகட்கு அடுத்தபடியாக 'ஸ்மிருதிகள்' எனப்படும் தர்ம சாஸ்திர நூல்கள் இந்து அறவியலை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. 'ஸ்மிருதிகள்' எனக் குறிப்பிட்டுப் பேசப்படும் நூல்கள் தவிர இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசன இலக்கியங்கள், தோத்திரப் பாடல்கள், அனைத்தும்ஸ்மிருதிகள் எனவும் கூறலாம். காரணம் இவை அனைத்தும் 'தமிழில் எழுந்த திருமந்திரம் முதல் திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் அனைத்தும்கூட வேதங்களிலிருந்தே எழுச்சி பெற்றன என்ற உணர்வினைக் காட்டுவதனாலாகும்.

'ஸ்மிருதி' என்று நேராக வழங்கப்படும் நூல்கள் 'விதிநூல்கள்' எனப்படும் தர்ம சாத்திரங்களேயாகும். தனிமனிதர்கட்கும், சமூகத்தினருக்கும் தினசரி வாழ்விலே நன்னெறிகளில் வாழ்வதற்கு உதவியான விதிமுறைகளையும் வேதம் கூறும் சாஸ்வதமான உண்மைகளையும் காலத்திற்கேற்பவும், சூழ்நிலையால் ஏற்படும் மாற்றங்கட்கேற்பவும் எடுத்துச் சொல்வதும் இந்நூல்களின் பணியாகும்.

காலத்திற்குக்காலம் ஒவ்வொரு சான்றோர் தோன்றி இருக்கின்ற விதிகளை ஒழுங்குபடுத்தி பயனற்றுப் போனவற்றை நீக்கிவேத நெறிகட்கேற்ப புதிய மாற்றங்களை விளக்கி இந்துக்களின் இயல்புகட்கேற்ப அவர்கள் வாழ்விலே அறநெறிகளை ஒழுங்குபடுத்தித் தருகிறார்கள் என்பது இந்துக்களின் தொன்றுதொட்டுவரும் நம்பிக்கையாகும். அவ்வாறே இந்து அறவியற் சட்ட நூல்களை ஆக்கித் தந்தவர்களுள் முக்கியமானவர்கள் மனு, யக்ஞவல்கியர் – பராசுரர் என்ற மூவரும் என்பதனால் இந்து அறநூற் சரித்திரத்தில் அவர்கள் அழியா இடம்பெற்றுள்ளனர்.

எனினும் பழங்கால இந்துக்களின் அறநூல்களில் முக்கியமாக விளங்குவது மனுதர்ம சாஸ்திரம் என்றே கருதப்படும். அதன் மூலப் பகுதி கி.மு.2ம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும் கி.பி.2ம் நூற்றாண்டளவில் பல பகுதிகள் அதனுடன் இணைக்கப்பட்டன எனவும் அறிஞர் கருதுவர். மனுநூல் இந்துக்களின் சிறந்த அறநூலாகக் கொள்ளப்படும் அதேவேளை வருணம் பற்றிய மனுவின் சிந்தனைகள் தற்காலம் கடும் விமர்சனத்திற்காளாகியிருப்பதும் அவதானிக்க வேண்டிய விடயமாகும்.

ஏனெனில் வேத சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த மனுவினால் சொல்லப்பட்ட அறங்கள் வேதநூல்களில் விதிக்கப்பட்டவையே. வேதசாரமுணர்ந்தோனே பிரம்மஞானி, அதனைத் தனது ஞானத்தினால் உணர்ந்து அவ் அறவழியில் ஒழுகுபவனே உண்மையான கல்விமான் என மனுநூல் தனது 2ம் அத்தியாயத்தில் விபரித்துள்ளது. மேலும்

*"வேதமும் அறநூலும் மேலோர் கடைப்பிடித்த*
*மரபும், ஆத்ம சந்துஷ்டியுமே தர்மசாஸ்திர விளக்கங்களாக*
*இருப்பனவென்று அறிந்தோர் தெளிவுபடக் கூறுவர்"* (மனுநூல் 2-10)

எனவும்

*"தர்மங்கட்கு ஆதாரமாக இருப்பவை வேதமும்*
*ஸ்மிருதிகளும், தொன்றுதொட்டு வந்த ஒழுக்க*
*மரபும் கவலையற்ற மனநிறைவுமாகும். மனுவினால்*
*விதிக்கப்பட்ட நீதிகள் வேதங்களில் விதிக்கப்பட்டவையே"* (மனுநூல் 2-6, 7)

எனவரும் கூற்றுக்களை நோக்கின் வேதங்களில் கூறப்பட்ட அறவியற் சிந்தனைகளே மனுநூலும் தெளிவுபடுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை

*'வேதோ அகிலோ தர்மமூலம்'*

என மனுநூல் கூறுவதுபோல,

*'வேதத்தை விட்ட அறமில்லை*
*வேதத்தில் ஓதத்தகும் அறமெலாமுள'* எனத் திருமந்திரமும்,

*'நான்மறை அறங்கள் ஓங்க'* எனவும்

கந்தபுராண நூல்களாலும் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அறவழியைக் கைவிட்டோருக்கு அறமே கூற்றாகும் என்பதும்,

"தர்ம ஏவ ஹதோஹந்தி" – தர்மோ என ஸ்மிருதிகளில் மேலும் தெளிவாக்கப் பெற்றுள்ளதை நோக்கினால், 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாகும்' என்ற சிலப்பதிகாரக் கொள்கையும் அதனுடன் ஒத்துப்போவதனை அனுமானிக்கமுடிகிறது. ஆதலால் 'தர்மம் தன்னை ரட்சிப்பவர் யாரோ அவரை தர்மம் ரட்சிக்கும்' என்பது ஸ்மிருதிகளின் துணிபாக இருக்கின்றது.

மனுநூல் கூறும் சில ஒழுக்க விதிகள் காலத்திற்கு ஒவ்வாதனவாகவும் இருக்கலாம். அத்தகைய பழைய விதிகளை இன்னும் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கவேண்டுமென்பதுமில்லை. எங்கெல்லாம் முரண்பாடுகள் எழுகின்றனவோ அங்கெல்லாம் முன்னோர் கூறியவற்றையே சரியென்று ஏற்கவேண்டும். ஸ்மிருதிகளின் தர்மங்களும் காலத்திற்குக் காலம் யுகத்திற்கு யுகம் மாற்றமடையும் என்பதனை அவைகளே கூறியிருக்கின்றன. அது வருமாறு :

*"கிருத யுகத்திற்குப் பொருத்தமானவை மனுவின் நீதிகள்,*
*திரேதாயுகத்திற்கேற்றவை யக்ஞவல்கியரின் சட்டங்கள்,*
*துவாபரத்திற்கேற்றவை சங்கர், லிகிதர் என்போரது விதிகள்,*
*கலியுகத் திற்கேற்றவை பராசரர் கோட்பாடுகள்".*

என அவை தெளிவாக வேறுபடுத்திச் சொல்லப்பட்டுள்ளன. காலத்திற்கேற்ப பழைய விதிகளைத் திருத்தி அமைக்கும் அதிகாரம் ஒரு பெரிய சீர்திருத்தவாதிக்கோ அல்லது அறிஞர் சபைக்கோ அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதனை சமூக நடைமுறையில் உணரலாம். காலதேச வேறுபாட்டிற்கேற்ப ரிஷிகள் பல விதிகளை வகுத்திருக்கின்றார்கள். உதாரணமாகக்,

"கிருதயுகத்திலே உண்மையும் அறமுமே நான்கு கால்களுடன் இருந்தன. இக்கால எல்லையில் அதர்மத்தால் விளையும் துன்பங்கள் மனிதரை நெருங்குவதில்லை. ஏனைய யுகங்களில் அறமும் மெய்மையும் ஒவ்வொன்றாகக் குறையும். கிருத யுகத்திற்குக் கடும் தவமும், திரேதா யுகத்திற்கு ஆத்ம ஞானமும், துவாபரயுகத்திற்கு வேள்விகளும், கலியுகத்தில் பிறருக்குத் தாராள மனதுடன் தானம் செய்வதுமே யுகதர்மங்களாக விதிக்கப்பட்டவை".

என்ற யுகதர்ம வேறுபாடுகள் மனுநூலிலும் விளக்கம் பெற்றிருப்பது காலத்திற்கேற்ப விதிகள் மாறலாம். மாறும் என்பதனையே உணர்த்தி நிற்கின்றன. இப்படியாக மனுநூல் வருணதர்மம், ஆச்சிரம தர்மம், புருடார்த்த தர்மம் என மூவகையாக பகுப்பிலே அறங்களைத் தொகுத்துக் கூறியுள்ளன.

**இதிகாச புராணங்களும் கீதையும்**

இதிகாசங்கள் வீரகாவியங்கள் எனப் புகழப்படுபவை. புராணங்கள் இதிகாச வகையைச் சாரினும் சமய பக்தியைச் சாதாரண மக்களிடத்தும் வேரூன்றச் செய்யும் பணியில் முதன்மை பெற்றுள்ளவை. ஒழுக்கம், அறம், ஆன்மீகம் பற்றி இந்நூல்களில் காணப்படும் சிக்கல்களை அந்தந்த நிலைகளிலேயே தீர்க்க முயன்றால் அவை தவிர்க்கமுடியாத பல தொல்லைகளிலேயே முடிகின்றன. சட்டங்களும் விதிகளும் சரியாகத் தோன்றினாலும் அவற்றினை எப்போது, எந்த வடிவத்தில் எவ்வாறு பின்பற்றியொழுகுவது என ஒருவன் நிர்ணயிக்க முயலும்போது பெரும் சிரமத்தையே சமூகத்தில் எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. இவ்வாறே இதிகாச புராணங்களிலும் பல தர்ம சங்கடங்களை உலகம் எதிர்நோக்கியுள்ளது. இராமாயணமும், மகாபாரதமும் இலட்சிய மகாபுருஷர்களின் தர்ம இலட்சியங்களைச் சொல்கின்ற வேளையில் அறத்தினை மறந்தவர் படும் துயரங்களையும் இயம்புகின்றன. எனவே காவியங்கள் இரண்டுமே அறத்திற்கும் மறத்திற்குமிடையிலான வாழ்க்கைப் போராட்டங்களைச் சித்தரிக்கும் அதேவேளை கொலை நூல்கள் எனவும் விமர்சிக்கப்படுவன. இரு காவியங்களும் போரை முதன்மைப்படுத்தினாலும் அதர்மத்தை அழிப்பதற்குச் சாம, பேத, தானங்கள் உதவாத இடத்து தண்டத்தை ஆயுதத்தைப் பயன்படுத்தவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதனை மறுக்கமுடியாது. இக்காவியங்களில் அறத்தின் வெற்றியும், அதர்மத்தின் அழிவும் எவ்வகையில் சொல்லப் படுகின்றன என்பதும் பரிசீலனைக்குரியதாகின்றது.

சத்தியமே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் அதேசமயம் ஊழ்வினையும் சில இடங்களில் சில வீரர்களின் தோல்விக்குக் காரணம் என இதிகாசங்கள் புகட்டுகின்றன. உதாரணமாக வாலி, பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்றவர்களின் மறைவு தருமத்திற்குக் கிடைத்த தோல்வியா? வெற்றியா? என்ற சர்ச்சைகளும் உண்டு. இத்தகைய இடங்களில் ஊழ்வினையும் கருமக் கொள்கையும் அற ஒழுக்கத்தைத் தீர்மானிக்கும் கருவிகளாகக் காட்டப்படுகின்றன. இவ்விடத்தில் தனிமனித நடத்தைகளும் ஒருவனது வாழ்வின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதாக அறியப்படுகின்றது. தீமை பயப்பனவற்றிலிருந்தும் பிழையானவற்றிலிருந்தும் ஆற்றல் வாய்ந்த மனிதன் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து நாட்டிற்கும் சமூகத்திற்கும் முறையானவற்றைச் செய்யவேண்டுமென்பதே இங்கு அறவியலினதும் கருமக் கொள்கை யினதும் குறிக்கோளாகவிருக்கின்றது. விதுரர் ஒருவரே தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையே நடுநிலை நின்று போரில் ஈடுபடாது துறவுபெற்று ஆச்சிரமம் சென்றார். எனவே அவரால் சொல்லப்பட்ட அறவிதிகள் 'விதுரநீதி' எனச் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்றோர் 'மறம்' எனத் தெரிந்தும் செஞ்சோற்றுக் கடனுக்காக பதவி துறக்காது ஊழ்வினை வசப்பட்டு மடிந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆக அத்தனை பெரிய மகாமனிதர்களுக்கே இப்படியொரு சங்கடம் எனில் சாதாரண மாந்தர்கள் எம்மாத்திரம்? என்பதே மகாபாரதம் காட்டும் வாழ்வியல் உண்மை எனலாம்.

மகாபாரதமும், இராமாயணமும் கடவுளரோ அவதார புருடர்களோ ஆனாலும் அறத்தின் தண்டனைக்குத் தப்புவதில்லை என்பதனையே உணர்த்தி நிற்கின்றன.

*"யத்ஸத்யம் ஸதர்மோயோ தர்ம,*
*ஸ்வப்பிரகாசசோ ய, ப்ரகாசிஸ் தத் ஷகபிதி11* (மகாபாரதம்)

'எது உண்மையோ அது தர்மம். எது தர்மமோ அது உண்மை, அதுவே ஒளி, அதுவே இன்பம். எது பொய்யோ அது அதர்மம். அதர்மம் இருள், துன்பம் எனப்படுகின்றது என பாரதம் அற இயல்பை தெளி வாக்கியுள்ளது. மகாபாரதத்தின் கிருதயஸ்தானம் எனப்படும் பகவத்கீதை இப்பொருளையே ஞான சாஸ்திரமாகப் போதித்துள்ளது. அதன் பிரதான சுலோகங்களின் வாய்ப்பாடானது பின்வருமாறு :

*"பார்த்தனே எப்போது தர்மம் அழிந்துபோய்*
*அதர்மம் எழுச்சிபெறுமோ அப்போதுதான்*
*என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன். நல்லோரைக்*
*காக்கவும் தீமைபுரிவோரை அழிக்கவும், அறத்தை*
*நிலைநிறுத்தவும் யுகம் தோறும் நான் பிறக்கிறேன்".* (கீதை, 4:7,8)

என்பதே அறவியல் பரிமாணத்தின் சத்திய வாக்காகக் காணப்படுகின்றது. ஓர் தனிமனிதனது கடமை தருமத்தின் பக்கம் நின்று அதர்மத்தை அழிப்பதற்குப் பாடுபடுவதாகும். பீஷ்மரும் தனது குரு பரசுராமருடன் போர் தொடுத்தார். அர்ச்சுனனும் தனது குருவுடன் போர்தொடுத்தான். அறத்தின் முன் உறவுமுறை கூட முன்நிற்பதில்லை. செயலைத் துறக்காது – செயலில் துறவினை எங்ஙனம் மேற் கொள்ள வேண்டும் என்பதனை கீதையின் 'கருமயோகம்' என்னும் பகுதி துல்லியமாகக் கற்பித்துள்ளது. பலனில் பற்று வைக்காத கருமமே. உயர்ந்த அறச் செயலாகின்றது என்பதால் கீதையின் முதற்சுலோகமே 'தர்மஷேத்திரே குருஷேத்திரே' என்று 'தர்மம்' என்ற சொல்லை முதலாகக் கொண்டே ஆரம்பிப்பதிலிருந்து உணரமுடியும். பதினெண் புராணங்களும் அறம் மறந்தாற்றிய முனிவர்களது கஷ்டங்களையும், கடவுளரின் சாபங்களையும் எடுத்துக்காட்டத்தவறவில்லை. ரிஷிகளும், முனிவர்களும் கூட அறத்தின் தீர்ப்புக்கு விலக்கில்லை என்பதே இதிகாச புராணங்களது அறவியலாகவுள்ளது.

தமிழ் நூல்களில் :

இப்பகுதிகூடத் தனியான ஆய்வுக்குரிய பகுதியாகும். தமிழ் இலக்கியங்களிலும் காலத்தால் முற்பட்ட நூல்கள் பலவும் அறவியற் சிந்தனைகளை அடித்தளமாகக் கொண்டிருப்பதனைக் காண்கிறோம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எழுந்த காலத்தை 'அறநூற்காலம்' எனவும் தமிழ் ஆய்வாளர் சிலர் குறிப்பிடுவர். நீதி முறைகள், ஒழுக்க நெறிகள் என்பவற்றை நேரே எடுத்துக்கூறும் நூல்கள் அறநூல் களாகத் தமிழிலே பேசப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, ஆசாரக்கோவை, பழமொழி நானூறு என்பன அறஇயல் கூறும் நூல்களாகக் காணப்படுவன. இவற்றுள் திரிகடுகம், ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை என்பன சைவ, வைணவம் சார்ந்தவை. ஏனையவை சமணசமயம் சார்ந்தவை எனக் கொள்ளப்படும். ஔவையார் பாடிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற அறநூல்கள் மக்களால் ஒருகாலம் விரும்பிக் கற்கப்பட்டன. சிவப்பிரகாசத்து நன்னெறி, குமரகுருபரர் செய்த நீதிநெறிவிளக்கம், அதிவீரராமபாண்டியனால் ஆக்கப்பட்ட வெற்றிவேற்கை என்பனவும் தமிழில் எழுந்த அறநூல்களிற் சிறப்பானவையாகும்.

ஔவையார் நூல்களில் அறஇயல் சார்ந்த வாழ்க்கைமுறை பெரிதும் போற்றப்பட்டுள்ளது. 'அறம் செய்ய விரும்பு' இதுவே ஔவையின் முதற் போதனையாகும். தவிர புறச்சமய நூல்களும் தமிழில் எழுந்த அறநூல்களில் முதன்மையானவை எனக் கொள்ளப்படும். காப்பிய இலக்கியங்களான சிலம்பும், மணிமேகலையும் அறவாழ்வின் மேன்மையை அறிவுறுத்த எழுந்தனவாகும். அரசியல் பிழைத்தார்க்கு அறம் எவ்வாறு கூற்றுவனாகிறது என்பதனையே சிலப்பதிகாரம் கற்றுத் தந்துள்ளது.

*"நல்லறம் செய்தோர் நல்லுலகடைதலும்*
*அல்லறம் செய்தோர் அருநரகடைதலும்"*

(மணிமேகலை 16.8.89)

என்பது மணிமேகலை காட்டும் அறஇயல் உபதேசத்தினை அடையாளம் காட்டும் ஒரு பகுதியாகும்.

### திருக்குறள்

அறப்பண்பை ஊட்டி வளர்ப்பதற்கென்றே திருக்குறள் 'அறத்துப்பால்' என ஒரு பிரிவினை அமைத்ததுடன் – அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் அச் சிந்தனையினை மேலும் பரிணாமம் அடையச் செய்துள்ளது.

*'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் இந்நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்'*
*'அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்*
*புறத்த புகழு மில'*

எனவரும் குறளதிகாரத்தில் அறமே ஒருவனைப் பழிபாவங்களில் இருந்து விலக்கவல்லதென்பதனை வலியுறுத்தியுள்ளது. இல்லறம், துறவறம், ஊழ் என்பன அறத்துப்பாலின் பிரதான பகுதிகள் என்பதனை அவதானிக்கும்போது இந்துக்களின் வாழ்வே அறநெறிப்பட்டதாக அமையவேண்டும் என்பது அனைத்து நூல்களதும் குறிக்கோளாகவே நிலைபெற்றிருக்கின்றது.

### திருமந்திரம்

திருமந்திரம் சைவசித்தாந்தம் சார்பான கோட்பாடுகளை அறிமுகம் செய்தபோதும் அதன் ஒன்பது தந்திரங்களும் அறவினைப் போதனைகளையே மிகுதியும் கொண்டுள்ளன. அதிலும் முதலாம் தந்திரத்திலுள்ள இருபத்திநான்கு பிரிவுகளும் அறஇயலுக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்ட பகுதிபோலக் காணப்படுகின்றது. அந்தணரொழுக்கம், அரசாட்சிமுறை, அறம்செய்வான் திறம், கொல்லாமை, கள்ளுண்ணாமை, நடுவுநிலைமை, பிறன்மனைநயவாமை, புலான்மறுத்தல் என்றின்னோரன்ன ஒழுக்க நியமங்களைப் பற்றிய விதிகள் திருக்குறளைப்போல ஒருமித்த போக்குடையனவாகவும் காணக்கிடக்கின்றன.

*'அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும்*
*திறம் அறியார் சிவலோக நகர்க்குப்*
*புறம் அறியார் பலர் பொய்மொழிகேட்டு*
*மறம் அறியார் பகைமன்னி நின்றாரே'* (திருமந்திரம் 262)

என்பது அறம் – மறம் பற்றிய திருமந்திரப் பாடல்களில் ஒன்றாகும்.

### திருமுறைகள்

தேவார திருவாசகங்களை எடுத்துக்கொண்டால் சைவ ஒழுக்கமானது நால்வகை மார்க்கங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய பக்தி நெறியொழுக்கத்திற்குத் திருமந்திரம் முன்னோடியான திறவுகோலாக இருக்கின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகை சமய ஒழுக்க நெறிகளில் வாழ்ந்து காட்டிய நாயன்மார்களை பக்தி இலக்கியங்களில் அடையாளம் காண்கிறோம். ஆலயவழிபாடு, தலயாத்திரை, சடங்குக்கொள்கை, விரதம், தவம், தானம் யாவும் மிகச்சிறந்த ஒழுக்கவிழுமியங்களாகப் போதிக்கப்பட்டுள்ளன. இவ் ஒழுக்க நெறிகள் வளர்ச்சியடைவதற்குப் புராண நூல்களும் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

*'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது"*

என்றார் சம்பந்தர்.

*"புன்னெறியதனிற் செல்லும் போக்கினைவிடுத்து – மேலாம்*
*நன்னெறி ஒழுகச் செய்து"*

என்கிறார் கச்சியப்பர்.

**மெய்கண்ட நூல்கள்**

சைவசித்தாந்த சாத்திரங்களில் இந்நெறிகள் ஞானமயமாக அரண் செய்யப்பட்டுள்ளன.

*"சிறப்புடைப் புராணங்கள் உணர்த்தும் வேத*
*சிரப்பொருளை மிகத்தெளிந்து சென்றார்*
*சைவத்திறத்தடைவர், அதில் சரியை, கிரியை,*
*யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"*

(சித்தியார் 8.2 263)

எனக்கூறுமிடத்து நால்வகை மார்க்கங்களில் நின்று ஒழுகுவோர் ஞான நெறியிற் சேர்வர் என உணர்த்தப்பட்டுள்ளது. ஞானம் அல்லது அறிவு நெறி என்பது சைவசித்தாந்த மார்க்கத்திலே ஒரு வாழ்வியல் நெறியாகவே கருதப்படுகின்றது.

*"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவுசீலம்*
*வழுக்கிலாத்தவம், தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை*
*அழுக்கிலாத்துறவு அறிவொரு அர்ச்சித்தல் ஆதி*
*இழுக்கிலா அறங்கள்...."* (சித்தியார் 2.2.115)

என்றிவ்வாறு சித்தாந்த நூல் உயிர்களின் வினையாற்றல்களாக இவை அமையுமானால் இவையே 'இறைவனடி அடைவிக்கும் எழில்ஞானமுசை' எனக் குறிப்பிட்டுள்ளது. அத்தகைய நெறிநின்றார் ஞானத்தில் விடுதலையடைவதில் தடையேதும் கிடையாது. ஏனெனில்,

*"ஞானத்தின் மிக்க அறநெறிநாட்டில்லை*
*ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று"*

எனத் திருமந்திரம் சுட்டுவதில் இருந்து சமயாதீதம் கடந்த அறநெறிப்பட்ட வாழ்வே மனிதனால் பின்பற்றவேண்டிய உயர்சமயநெறி என அறிவித்திருக்கின்றது.

ஆதலால் மேலான அறிவின் இலட்சியமானது பின்வருமாறு புகட்டப்பட்டது.

*"அறிவின் இயல்பே வாய்மை, மகிழ்ச்சி, அகிம்சை,*
*பொறுமை, சேவை, தூய்மை, வாய்மை, உறுதி,*
*தன்னடக்கம் என்பதேயாகும்".* (கீதை 137)

இப்படியாக அறத்துறை ஆட்சி தனிமனித ஒழுங்கிலிருந்து பிரபஞ்ச ஒழுங்கையும் உள்ளடக்கியதாகப் பரந்துபட்ட பொருளில் கையாளப்பட்டு கருமக் கொள்கையையும் உள்ளடக்கியதாகப் பரிணமித்திருப்பதனை தமிழ் நூல்களில் பரக்கக் கண்டுகொள்ளலாம்.

**அறம் என்பதன் பொதுவிளக்கம்**

அறமாவது பாவம் அனைத்தையும் பற்றறுப்பது என்பது இந்து அறவியலின் அடிப்படையாகப் பேசப்பட்டுள்ளது. கழகக் கையகராதியில்,

*"அறம் என்பதன் பொருளாவது கடமை, தானம்,*
*கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியச்செயல்*
*அறக்கடவுள், அறக்காடு எனப்பல பொருளில் வழங்கும்"*

எனத் தமிழ் அகராதி ஒன்று கூறுகின்றது.

நற்குணங்கள் எனப்படுவதான தனக்கும் பிறருக்கும் நன்மை தரும் ஆனந்தம் தரும் செயல்களில் தன்னை நிலைபெறச் செய்தல் ஒழுக்கம் எனவும் ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் மேலானதாகக் கருதப்படும் நிலையும் அவற்றின் மூலம் சேவையுணர்வை வளர்த்துவருமிடத்து அவை அறச்செயல்கள் ஆகவும், இவையிரண்டின் முதிர்ச்சியும் நிறைவும் 'தருமம்' என்னும் மாபெரும் செயற்றிறன் கொண்ட முடிபாகவும் – தெய்வீக சக்தியாகவும் அனுபவத்தில் இவை காணப்படுகின்றன. அவை சாதாரணமாக ஒருவர் வழங்கும் ஈகை, கொடை, தானம் என்ற பண்புகளையும் கடந்து உலகெலாமாளுவதாகி, உடனாகி, வேறாகி, நீதியாகி – அறமாகி – இறைமையாகி நிற்குமொன்றாக வழிபடற்குரியதாக அமைகின்றது. அந்நிலையில் அறமே – ஆண்டவன் அவனே அறம் வளர்க்கும் நாயகனாக உருவகிக்கப்படுகின்றானோ என்ற சிந்தனையும் விரிகின்றது.

*"ஆன்றமெய் அறம் வளர்க்கும்*
*மூன்றுகண் முனித்தலைவனை"*

எனத் திருக்கலம்பகமும்,

*"பண்டுநால்வர்க்கு அறம் உரைத்தவன்"*

எனத் தேவாரமும், சிவனைச் சிறப்பித்த திறமும் உணரற்பாலது. 'அறவா நீ ஆடும்போது உன்னடிக்கீழ் இருக்க' என்றார் காரைக்கால் அம்மையார்.

*"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்*
*அருளெனும் குழவியும் அமையும் ......*
*தெருளுறும் உயிரும் சிவனைச் சேரும்"*

*"ஆதலின் மைந்தர்காள் அறத்தையாற்றுதீர்*
*தீதினை விலக்குதிர் சிவனையுன்னியே......"*

எனவரும் அடிகளில் அறமே இறைமையை – இறவாமையை அடைவிக்கும் என்னும் பாணியில் – தவம், விரதம், சடங்குகள் என்னும் வழிபாட்டு ஒழுக்கத்தைப் போன்று அறம் செய்தலும் பிறர்க்கும் சமூக சேவை செய்யமுடியாவிட்டாலும் – தீமை செய்யாமலிருத்தலும்கூட அறத்தின் பாற்படுத்தும் நியமங்களாக்க் காண்பிக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

அறநெறி சார்ந்த வாழ்விற்கும் ஒழுக்கமுடைமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்துக்களின் ஆன்மீக வாழ்வைப் பொறுத்தவரை ஒழுக்கம் சமய வாழ்வினைத் தூய்மைப்படுத்துவதற்குப் பக்கபலமாக அமைகின்றது. மனிதமனம் தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட செயல்களையே சிந்தனை என்கிறோம். சிந்தனைகள் ஒழுக்கங்களைத் தனதாக்கிக்கொள்ளும்போது அது ஞானமாக நிறைவு பெறுகிறது. கீதை இதனை ஞானயோகம் என்றும், சிவாகமங்கள் இதனை ஞானபாதம் எனவும் சிறப்பிக்கும். இது இந்து அறவியலின் அடிப்படை இலட்சியமாகக் காணப்படுகின்றது. இறையுண்மையை வற்புறுத்தும் இந்து மரபுகள் பெரும்பாலும் தெய்வீக ஆணைகளுடன் அறஇயலைத் தொடர்புபடுத்திக் கூறுவனவாகவே விளங்குகின்றன. அறஇயல் விஞ்ஞானமாகும் நிலையில் அறவியலின் குறிக்கோள்கள் அறஇயலிலும் வலுப்பெற்று விளங்கவேண்டுமெனில் அறச் செயல்களின் இயல்பினைத் தகுதிவாய்ந்த கருதுகோளால் ஆராய்வதே சாலச் சிறந்தது.

எனினும் 'அறிவிற்கு' முதன்மை கொடுக்கும் அறிவியலில் – உணர்வு சாந்த மனிதப் பண்புகட்கு எத்தகைய இடமளிக்கப்படும் என்பது கேள்விக்குறியே. அன்பு, இன்பம், துன்பம், ஆனந்தம் போன்ற பண்புகள் உணர்வு சார்ந்தவையாகவே இருக்கின்றன. அவற்றினை அளந்தறியும் அளவுகோல் இதுவரை காணப்பட்டதாகச் செய்தியில்லை. 'உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்' என்றுதான் சேக்கிழார் பாடுகின்றார். 'உலகெலாம் அறிந்து ஓதுதற்குரியவன்' எனக் கூறவில்லை. 'மனிதன்' என்னும் ஆளுமை அன்புணர்வில் பரிமாணம் பெறுவதே அறவியலின் அத்திவாரமெனலாம். அப்போதுதான் 'மனிதன்' என்ற சொல்லின் பொருள் நிறைவு பெறுகின்றது.

*"மனிதனைப் போலொரு மேன்மையுமில்லை*
*மனிதனைப் போலொரு மெய்மையுமில்லை*
*மனிதன் இயற்கையின் எதிரொலிச் சின்னம்*
*மனம் இல்லையேல் அவன் விலங்காண்டிகாண்"* (உலகாயதச் சித்தர்)

எனச் சித்தர் ஒருவர் மனித தத்துவத்தின் மேன்மையை உணர்த்தினார். அதனில் ஒருபடி உள்ளே சென்று மனித தத்துவத்தின் இலக்கு யாது என பின்வரும் பாடல் சந்தேகம் எழுப்புகின்றதா?

*"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு – மரமுண்டு*
*மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு அனேக குலமனிதருண்டு*
*மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராகி வருவதுண்டு*
*மனிதரிலும் பிறப்பறுக்க வந்ததே அருமைஎன வகுத்தார் – முன்னோர்*

பிறப்பறுத்தல் என்பது துன்பநீக்கம் என்றும் கருதலாம். இந்து அறவியலானது தூய நம்பிக்கை என்னும் சாதனத்தின் ஊடாக அறநியமங்களை கடைப்பிடித்தொழுகுவதன் மூலம் அத்தகைய அழியா ஆனந்தநிலையை அடையமுடியும் என்றே காட்டுகின்றது.

இங்ஙனமாக 'அறம்' என்பது தருமமாகவும் 'தருமம்' என்பது உலகையும் உயிர்களையும் தாங்கி நிலைபெறச் செய்து ரட்சிப்பதாகவும், அத்தகைய அற ஒழுக்கங்கள் தனிமனித ஒழுக்கவிழுமியங்களால் பேணப்பட்டு அனுபவத்திற்கு வருவதாயும் (அனுபூதிமான்கள்) அவை பெரும்பாலோரால் கடைப்பிடிக்கப்பட்டு சமூக ஒழுக்கமாக பரிணமிக்கும்போது, நாட்டிலே சட்டமும் – ஒழுங்கும் – நீதியும் நிலைபெறும் வண்ணம் ஆளுமை பெறுவதனால் உலகிலே அறஇயலின் ஆட்சி மேலோங்கும். அப்போது உலக சமுதாயம் அன்பிலும், அமைதியிலும், ஆனந்தத்திலும் திளைக்கும் வண்ணம் சுபீட்சமான வாழ்வு உருவாகும் என்பது இந்து அறவியலின் தீர்ப்பெனக்கொள்ள முடியும்.

* * *

சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள பொன்கூரையில் 21600 பொன் ஓடுகள் உள்ளன. இவை மனிதன் 1 நாளைக்கு உள்வாங்கி வெளிவிடும் மூச்சுக்காற்றின் எண்ணிக்கைக்குச் சமம். பொன் ஓடுகளைப் பொருத்தி உபயோகப்படுத்தப்பட்ட ஆணிகள் 72000 ஆகும். இவை மனித உடலில் துடிக்கும்நாடியின் கணக்குக்குச் சமம்.

மூலவரே வீதி வலம் வருவது சிதம்பரம் நடராஜர் கோயிலில் மட்டுமே.



# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
இளைப்பாறிய விரிவுரையாளர்,
- பலாலி ஆசிரிய கலாசாலை.
இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(i) சித்த புருஷர்களின் தன்மை

இந்து சமயத்தில் காலத்துக்குக் காலம் பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் எனப் பலர் தோன்றி எமது சமயத்தை வளப்படுத்தினார்கள். நாயன்மார்கள், ஆழ்வார்கள், வடநாட்டு பக்தி நெறியாளர்கள் போன்றோர் பக்தர்களாகவும் சங்கரர், இராமானுஜர், மத்துவர், மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் போன்றோர் தத்துவ ஞானிகளாகவும் பதினென் சித்தர்கள், நவநாதச் சித்தர்கள், ஈழத்துச் சித்தர்கள் போன்றோர் சித்த புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள். இந்த சித்த புருஷர்கள் அனைவருக்கும் மூல புருஷராகத் தவயோகி திருமூலநாயனார் திகழ்ந்தார் என்பதை "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனத் தாயுமானசுவாமிகள் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். சித்த புருஷர்கள் அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்" என்றும், "கடவுளைக் கண்டு தெரிந்தவர்கள் சித்தர்கள்" என்றும் சித்தர்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. "எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி, ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்" எனச் சட்டை முனிச் சித்தர் ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குகிறார். வாசனை என்பது கர்மவினையாகும். பிரபஞ்ச வாழ்க்கையின் இரகசியத்தைச் சித்தர்கள் அறிந்திருந்தார்கள். சித்தர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயுதராக வாழமாட்டார்கள். இவர்கள் உலகத்தோடு ஒட்டியும், ஒட்டாமலும் வாழ்ந்து வருவார்கள்.

(ii) தவயோகி திருமூலர்

திருமூலர், மூவாயிரம் ஆண்டுகள் ஞானநிஷ்டையில் இருந்து வருடத்திற்கொரு பாசுரமாக மூவாயிரம் பாசுரங்கள் அடங்கிய திருமந்திரத்தை அருளிச் செய்தார் என்று கூறப்படுகிறது. சாதாரண மக்கள், பொருள் உணர்ந்தோ உணராமலோ பல்லாயிரக் கணக்கில் சொற்களைப் பேசுவார்கள். ஆனால், ஞானவான்களோ பலகாலம் ஞானநிஷ்டையில் இருந்து எதைச் சொல்ல வேண்டுமோ, எவ்வாறு சொல்ல வேண்டுமோ அதை மட்டுமே கூறுவார்கள். வெளிமுகமாகச் சொல்லும் போது ஆன்மாவை உள்முகப்படுத்தி அங்கே இன்ப ஊற்றைச் காணச்செய்வதே திருமூலர் போன்ற மகான்களின் சிந்தனையாகும்.

(iii) தமிழ் ஆகமம்

தமிழ் ஆகமம் என்று போற்றப்படுகின்ற திருமந்திரம், ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிவாகமங்கள் 28ல் காரணாகமம் முதல் மகுடாகமம் வரையுள்ள 9 ஆகமங்களின் சாரத்தைத் திருமந்திரத்தில் காணலாம். இந்நூல் தமிழில் உள்ள ஒப்பற்ற சாத்திர நூலாக இருப்பதோடு, முத்திக்கு வழிகாட்டும் ஞானக்களஞ்சியமாகவும் திகழ்கிறது. திருமூலநாயனாரைப் போற்றித் திருமந்திரத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்குப் பிறவி நோய் இல்லை என்பதை "திருமூலதேவனையே சிந்தை செய்வோர்க்கு கருமூலம் இல்லையே காண்" என்ற பாடல் வரிகள் விளக்கி நிற்கின்றன.

"தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்துக்கு திருமந்திரம்" என்பது ஆன்றோர் வாக்கு ஆகும். திருமந்திரம் வேதப்பொருளும் ஆகமப்பொருளும் ஒருங்கே சேர்ந்து உருவாக்கப்பட்ட அருமைத்திரு நூலாகும். 'திரு' என்றால் தெய்வத்தன்மை உடையது என்பது பொருள். நூலின் ஆசிரியர் பெயர் திருமூலர், நூலின் பெயர் திருமந்திரம் இந்நூலின் சிறப்புக்கு இவையே காரணமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிகவும் அன்புரிமையோடு தவயோகி திருமூல நாயனாரை "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்." எனத் திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடுகிறார்.

(IV) திருமந்திரம் மறை மொழி

ஆன்மா இறைவனோடு இணைவதற்கும், சிவகதி பெறுவதற்கும், திருமந்திரம் திசைகாட்டியாக உள்ளது. இறைவனை அகத்திலே காண்பதற்கும் இறை அருளை நுகர்வதற்கும் திருமந்திரம் துணையாக இருக்கும் என்பதனைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

*"திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்*
*திருமந்திரமே சிவமாம் - அருமந்த*
*புந்திக்குள்ளே நினைந்து போற்றுமடியார் தமக்குச்*
*சந்திக்கும் தற்பரமே தான்"*

திருமூலர், அட்டமாசித்திகள் கைவரப்பெற்ற ஒரு தவயோகி. இவர் பாடிய பாடல்கள் எளிமையானவை, இனிமையானவை, படிக்கச்சுவையானவை, பயன்தருபவை, இம்மைக்கும் மறுமைக்கும் உதவுபவை. தவயோகியின் உள்ளம் தூய்மையானதாக இருந்ததால் அவருடைய சிந்தனையில் தெளிந்த ஞானம் இருந்தது. பரந்த நோக்கம் காணப்பட்டது. அவருடைய நாவால் நவிலப்பெற்ற பாடல்கள் யாவும், மந்திர சக்தி உடையன. தெய்வத்தன்மை உடைய திருமந்திரத்தைப் படிப்பவர்கள் யாவரும், அருள் மனிதர்களாக மாறிவிடுவார்கள்.

அருள் நூல்களை வழங்கிய ஞானிகளை நிறை மொழி மாந்தர்கள் என்றே தொல்காப்பியரும் வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்கள்.

*"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த*
*மறை மொழி தானே மந்திரம் என்ப" —*
*தொல்காப்பியம், செய்யுள் 178.*
*"நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்"* - திருக்குறள், 28

**(V) திருமந்திரத்தின் உள்ளடக்கம்.**

கடவுள் வாழ்த்து திருமந்திரத்தின் பாயிரச் செய்யுள்களில் வேதாகமச் சிறப்பு, திருமூலர் வரலாறு என்பன கூறப்பட்டுள்ளன. முதலாம் தந்திரத்தில் உப தேசம், யாக்கை நிலையாமை, செல்வநிலையாமை, கொல்லாமை, கல்வி கல்லாமை முதலியன கூறப் பட்டுள்ளன. இரண்டாம் தந்திரத்தில் அட்டவீரட்டம், இலிங்க புராணம், பஞ்சகிருத்தியம், கர்ப்பக்கிரியை, சிவநிந்தை முதலியன கூறப்பட்டுள்ளன. மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்க யோகம், அட்டமாசிததி முதலியன கூறப்பட்டுள்ளன. நான்காம் தந்திரத்தில் திருவம்பலச்சக்கரம், நவகுண்டம், வயிரவி மந்திரம் முதலியனவும், ஐந்தாம் தந்திரத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவும் சத்திநிபாதம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. ஆறாம் தந்திரத் தில் குருதரிசனம், திருநீறு துறவு, தவவேடம், ஞான வேடம் முதலியனவும் விரிவாக விளக்கப்பட்டுள் ளன. ஏழாம் தந்திரத்தில் ஆறாதாரம், சிவபூசை, குரு பூசை, சமாதிக்கிரியை, பசு இலக்கணம் முதலியன வும், எட்டாம் தந்திரத்தில் அவத்தைகள், வாய்மை, அவா அறுத்தல், பக்தி முதலியனவும் ஒன்பதாம் தந்திரத்தில் பஞ்சாட்சரம், சிவதரிசனம், சூனிய சம் பாஷனை, தோத்திரம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

**(VI) பிறவிநோய் நீங்குவதற்கான வழி**

உலகத்தில் வாழும் மானிடர்கள் அனைவரை யும் மூன்றுவகையான நோய்கள் பீடிக்கின்றன. உடல்நோய், உள நோய், உயிர்நோய் என்பன அவை யாகும். உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்குவதற்கு இறைவனின் திருவருளே மருந்தாக உள்ளது. ஆன்மாக்களுக்குத் திருவருள் ஆகிய மருந்தினை வைத்தியநாதனாகிய சிவனே வழங்குகின்றார். வினைப் போகம் முடியும் வரை ஆன்மாவின் பிறவிச்சக்கரம் சுழன்று கொண்டே இருக்கும். எடுத்த பிறப்பில் தவவாழ்வு வாழாத காரணமே பிறவிக்கு வித்தாக அமைந்து விடுகிறது. மனிதப்பிறவி இறை வனை வாழ்த்தி வணங்குவதற்குரிய அரிய பிறவி யாகும். இறைவனை பாடிப்பரவி வணங்குவதற் காகவே அரிய இப்பிறவியை இறைவன் நமக்குத் தந்தான் என்பதனைப் பின்வரும் திருமந்திரச் செய்யுள் தெளிவாக விளக்குகிறது.

*"பின்னை நின்று என்னே பிறவி பெறுவது*
*முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்*
*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

**(VII) சிவன் - சைவர்களின் முழுமுதற் தெய்வம்.**

சைவர்கள் அனைவரும் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுகிறார்கள். சைவத் தமிழர்களின் இரு கண்களாக விளங்குகின்ற பன்னிரு திருமுறை களும், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் காட்டுகின்றன. "தென்நாடுடைய சிவனே போற்றி என் நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றே மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம், சிவபெரு மான் திருவடியே சேரப்பெற்றோம்" என்றே அப்பர் பெருமானும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருமந்திரமும், சிவனையே முழுமுதற் தெய்வ மாகக் காட்டுகின்றது. சிவனுக்கு ஒப்பான தெய்வம் வேறு ஒன்றும் இல்லை என்பதே தவயோகியின் கருத்தாகும். சகல புவனங்களையும் அண்டங்களை யும் கடந்து ஒளிமயமாகச் சதா பிரகாசித்துக்கொண்டி ருப்பது சிவவடிவமேயாகும். புனிதமானவர்களுடைய இதயத் தாமரையிலே வீற்றிருந்து அருள் புரியும் வடிவம் இதுவேயாகும் என்பதனைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

*"சிவனோடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை*
*அவனொடொப்பர் இங்கு யாவரும் இல்லை*
*புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்*
*தவளச்சடை முடித் தாமரையானே"*

**(VIII) சிவாலய வழிபாட்டின் முக்கியத்துவம்**

ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனை அடையச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணைசெய்யும் என்பதை "மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" எனச் சிவஞான போதத்தின் பன்னிரண்டாம் சூத்திரம் குறிப்பிடுகிறது. மானிடப் பிறப்பின் உயர் இலட்சியம் பரம புருஷார்த்தமாகிய வீடு பேறு அடைதலே என்றே புருடார்த்தக் கோட்பாடும் கூறுகின்றது. ஆலயங்கள் இறைவனின் திருவருள் சுரக்கும் இடங்களாகும். பசுவின் குருதி எங்கும் பரந் தோடுகின்ற பால் ஆனது, அதன் மடியில் பக்குவ மாய்ச் சுரப்பது போல இறைவன் திருக்கோயில்களில் தெய்வ சாந்நித்தியத்துடன் நீக்கமற நினைந்திருந்து திருவருளைப் புரிகின்றான். திருக்கோயில்களைத் தேடித்திரிந்து வணங்குபவர்களின் உள்ளத்தை இறைவன் கோயிலாகக் கொள்வான் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகின்றது.

*"நாடும் நகரமும் நல் திருக்கோயிலும்*
*தேடித்திரிந்து சிவபெருமான் என்று*
*பாடுமின் பாடிப் பணியின் பணிந்தபின்*
*கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"*

இல்லறத்தானுக்குரிய பஞ்சமகா யக்ஞங்களில் தேவயக்ஞமும் ஒன்று என்றே இந்து தர்ம சாஸ்திரங் கள் கூறுகின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் இடம்பெறும் அன்றாடப்பூசைகளும் வருடாந்த விழாக்களும் ஒழுங்காக நடைபெறாவிட்டால் வானம் வரண்டுவிடும், பூமியில் மழை பெய்யாது, தானிய விளைச்சல் எதுவும் ஏற்படாது. இதனைச்

*"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"*

எனத் தமிழ்மறையாகிய திருக்குறளும் கூறு கின்றது. சிவாலயங்களில் நித்திய நைமித்திகக் கிரியைகளுக்கு முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டிற்கும் மக்களுக்கும் பல தீமைகள் ஏற்படும். அரசனுக்குத் தீங்குகள் ஏற்படுவதோடு மழை வளமும் குறையத் திருட்டுக்களும் நாட்டில் அதிகரிக்கும் எனத் தனது குருநாதராகிய திருநந்தி தேவர் தனக்கு எடுத்து ரைத்தார் எனத் திருமூலர் தனது திருமந்திரப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

*"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்*
*கன்னம் களவு மிகுத்திடும் காசினி*
*என்னரும் நந்தி எடுத்துரைத்தானே"*

(IX) சிவசின்னங்களின் சிறப்பு

புறச்சிவ சின்னங்களாகத் திருநீறும், உருத்தி ராக்கமும் போற்றப்படுகின்றன. "நீறில்லா நெற்றி பாழ்" என்பது ஔவைப்பாட்டியின் வாக்குமாகும். வீபூதி யின் பெருமையைப் பதின்மூன்று உபநிடதங்கள் சிறப் பித்துக் கூறுகின்றன. "விபூதியைக் கைநழுவ விடாதே" என்பதே உபநிடத மகாவாக்கியமும் ஆகும். இறைவனே பூசிக்கொள்ளும் உடலுக்குக் கவசமாகிய திரு நீற்றைச் சிறிதும் தடையில்லாமல் நாமும் உடலில் பூசி மகிழ்ந்தால் தீவினைகள் நீங்கும் மோட்ச இன்பம் கிடைக்கும். இறைவனது அழகிய திருவடி களை அடையலாம் என்பதைப் பின்வரும் திருமந் திரப் பாடல் விளக்குகின்றது.

*"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளும் சாரும் சிவகதி*
*சிங்காரமான திருவடி சேர்வாரே"*

நடராசர் வடிவமே பஞ்சாட்சர வடிவமாகும். பஞ் சாட்சரத்தில் தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகா காரண பஞ்சாட்சரம், மகா மனு பஞ்சாட்சரம் என ஐந்து பிரிவுகள் உண்டு. நமசிவாய, சிவாயநம, சிவாய, சிவ, சி என்பன முறையே இந்த ஐந்து மந்திரங்களும் ஆகும். நமசிவாய என்னும் நகராதி பஞ்சாட்சரத்தை ஓதினால் நல்வினைப் பயன்கள் உண்டாகும். இப்பஞ்சாட்சரத்தைச் செபித்து வந்தால் வலிய தீவினைகள் எல்லாம் அடங்கிவிடும். சிவாயநம என்னும் பஞ்சாட்சரத்தை உணர்ந்து ஓதினால் இறைவன் நேரடியாகக் கருணை புரிந்து அருள் செய்வான். பஞ்சாட்சர மந்திரங்களின் மகிமையைப் பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்தியம்புகின்றது.

*"நம்முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்*
*அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை*
*சிம்முதல் உள்ளே தெளிய வல்லார்கட்குத்*
*தம்முதல் ஆகும் சதாசிவம் தானே"*

பல சமயங்கள் பலவிதமாகக் கூறிய போதிலும் அவையனைத்தும் குறிப்பிடும் தெய்வம் ஒன்றே என்பதைத் திருமூலர் திருமந்திரத்தில் பல இடங்களில் வற்புறுத்துகிறார். நமசிவாய என்ற மூல மந்திரத் திற்கு உரிய மூர்த்தியாக சிவபெருமானை நமசி வாயப்பழம் எனக் குறிப்பிடுகிறார். அந்தப் பழத்தைச் சுவைத்து உண்பவர்களுக்கு அது அளப்பரிய திருப்தியைத் தரும். திருமூலர் தாம் அனுபவித்த அனுபவத்தை அனைவரும் பெற வேண்டும் என்று விரும்புவதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் எடுத்து இயம்புகிறது.

*"ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்*
*ஒன்று கண்டீர் உலகுக்குயிர் ஆவதும்*
*நன்று கண்டீர் நல் நமச்சிவாயப் பழம்*
*தின்று கண்டேற்கிது தித்தித்தவாறே"*

(X) சிவசக்தி வடிவம்

சிவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காகத் திருவருள் சக்தியோடு பிரிவின்றிக் கலந்து நிற்கிறார் என்றே சைவசமயத் திருநூல்கள் கூறுகின்றன. இதனை "யாதொரு தெய்வங் கொண்டீர். அத் தெய்வ மாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்றே சிவஞான சித்தியாரும் கூறுகிறது. அருட்சக்தி யாகிய பராசக்தியைப் பல வடிவங்களிலே சைவர் கள் வழிபட்டு வருகிறார்கள். சிவனோடு பிரிவின்றிக் கலந்து நின்று திருவருளை வழங்கும் பராசக்தியைப் பல வழிபாட்டு நிலைகளிலே கண்டு ஊனும் உள்ளமும் உருகத் திருமூலர் பாடுகிறார்.

பராசக்தியின் அருளாற்றலை அறியாத தேவர் கள் இல்லை. சக்தியின் துணையின்றி எந்தத் தவமும் ஆகாது என்பது திருமூலரின் வாக்கு ஆகும். பரா சக்தியின் ஆற்றலைக் கொண்டே ஐந்தொழில் களும் நடைபெறுகின்றன. ஆன்மாக்களின் உயர் இலட்சியமான முத்தியை அடைவதற்குச் சக்தியின் துணை அவசியமாகும். சக்தியின் அருட் சிறப்பினைப் பின்வரும் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது.

*"அவளை அறியா அமரரும் இல்லை*
*அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை*
*அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை*
*அவளன்றி ஊர்புகும் ஆறு அறியேனே"*

பராசக்தியின் பல்வேறு கோலங்களிலே ஒரு கோலமாக இருக்கின்ற கலைமகளின் திருக்கோலத் தைத் தவமுனிவர் தனது தமிழ் மந்திரத்திலே அழ காகச் சித்தரித்து உள்ளார். தூய்மையான வெள்ளை ஆடையும் வெண்ணிறத்து அலை அலங்காரங்களும்

சூடப்பெற்று வெண்தாமரை மலரிலே வீற்றிருக்கும் சரஸ்வதி, தன்னுடைய திருவாயால் வேத மந்திரங்களாக இருக்கும் திருமுறைகளைப் பாடிக்கொண்டு இருக்கிறாள். அந்தத் தேவியின் பாதங்களை என்னுடைய தலை சூட்டிக்கொள்ளும், என் வாய் பாடும் பணியே பணியாகக் கொண்டு தோத்திரங்களைப் பாடும். கருணையின் வடிவமாகத் திகழும் கல்வித் தாயாம் கலைமகளின் வடிவத்தைக் குறிக்கும் திருமந்திரப் பாடல் இதுவாகும்.

*"ஓடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி*
*வேடம் படிகம் விரும்பு வெண்தாமரை*
*பாடும் திருமுறை பார்ப்பனி பாதங்கள்*
*சூடும் என் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே"*

### (XI) அடிப்படை அறங்கள்

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் செய்யக்கூடிய அடிப்படை அறங்கள் பல உண்டு. சைவசமயிகள் ஒவ்வொருவரும் தனது ஆத்ம ஈடேற்றத்துக்காக நாள்தோறும் வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாடு செய்வது நிலையான புண்ணியம். இதைச் செய்யும் எண்ணம் தோன்றுவதே பெரும் பாக்கியம். இத்தகைய புண்ணியத்தைச் செய்பவர்களுக்குப் பூவும், நீரும் எப்போதும் எந்த இடத்திலும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியவை. தினந்தோறும் இறைவனை வணங்குவதற்குரிய எளிய சாதனங்கள் இருந்தும் மக்கள் இந்தப் பூஜை மார்க்கத்தை உணராமல் தெய்வ அருளிலிருந்து நழுவிப் போகிறார்கள். இந்த எளிய மார்க்கத்தைக் கடைப்பிடிக்காது விடுவதால் பாவத்தில் மீண்டும் சிக்குகிறார்கள்.

*"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு*
*அண்ணல் அது கண்டு அருள் புரியா நிற்கும்*
*எண்ணில் பாவிகள் எம் இறை ஈசனை*
*நண்ணறியாமல் நழுவுகின்றாரே"*

தினந்தோறும் பூசையிலே ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது எளிய காரியமே ஆகும். எல்லாத் தெய்வங்களும் வீற்றிருக்கும் தெய்வப்பிராணி பசு ஆகும். பசுவுக்கு ஒரு பிடி உணவைக் கொடுப்பது சிறந்த தர்மம் ஆகும். பசு ஒரு பூரண யக்ஞப்பிராணி. அதிலிருந்து வெளிவரும் அனைத்துப் பொருள்களும் புனிதமானவையாகப் போற்றப்படுகின்றன. உண்ணும் உணவில் ஒரு பிடியைத் தர்மத்துக்கு வழங்கு என்பதே அறக்கட்டளை ஆகும். பிடி அரிசித் திட்டத்தினால் பல அறப்பணிகள் நமது நாட்டிற் செயற்பட்டு வந்தன. மனித விழுமியங்களில் மிக உயர்வானது மற்றவர்களுடன் இனிய வார்த்தைகளைப் பேசுவதே ஆகும். ஆண்டவனை வழிபடுவதும் பிற உயிர்களிடத்திற் கருணை செலுத்துவதும் இனிய பேச்சும் மனிதர்கள் பேண வேண்டிய உயர் விழுமியங்களாகும். இந்த அடிப்படையில் அறங்களை ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியதன் அவசியத்தை

*"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை*
*யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை*
*யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி*
*யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே".*

எனத் திருமந்திரம் சொல்லுகிறது.

### (XII) உடல் இறைவன் வீற்றிருக்கும் கோயில்

திருமந்திரம், திருமூலருடைய அனுபவ ஞானம் நிரம்பிய யோக நூல். திருமூலர் தான் யோக நெறியில் நின்று அடைந்த பயன்களை இனிய எளிய தமிழிலே ஆனந்தத்தோடு பாடுகிறார். இந்தப் பயன்கள் யோக சித்திகள் என்று அழைக்கப்படும். உடம்பில் உயிர் இருக்கும் போது அந்த உடம்பைக் கொண்டு செய்ய வேண்டியதைச் செய்து, மெய்யறிவு பெறாத உயிருக்கு உடம்பு அழிந்த பிறகு, மறுபடி அதே வாய்ப்புக் கிடைக்காதே! என்று தவமுனிவர் வருந்துகிறார். எனவே 'உயிரைப் பாதுகாக்கும் வழியைத் தெரிந்து உடம்பைப் பாதுகாத்தேன்' என்று திருமூலர் தமது அநுபவத்தைக் கூறுகிறார்.

*"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே".*

உடம்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை திருமந்திரம் பல பாடல்களில் எடுத்து விளக்குகிறது. அழிந்து போகின்ற இந்த உடலை உயிர் இருக்கும் வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் பாதுகாக்க வேண்டிய காயசித்தி உபாயத்தை திருமந்திரப்பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. உத்தமனாகிய இறைவன் வீற்றிருக்கின்ற உடம்பை அலட்சியம் செய்யக் கூடாது. கோயிலைப் பரிசுத்தமாகப் பாதுகாப்பது போல, உடம்பையும் ஆரோக்கியத்தோடு பேண வேண்டும். இறைவன் வீற்றிருக்கும் கோயிலில் போதை வஸ்துக்களையும் புலாலையும் இட்டுச் சுடுகாடு ஆக்கக் கூடாது. இந்த உடம்பினுள் இறைவன் வீற்றிருக்கிறான் என்பதை உணர்ந்த பின்பு இதைத் தெய்வம் வீற்றிருக்கும் ஆலயமாகப் போற்றுகின்றேன் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

*"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்*
*உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று*
*உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே".*

### (XIII) குரு லிங்க சங்கம வழிபாடு

சைவசித்தாந்தம் இறைவன் வெளிப்படும் இடங்களாகக் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது. மூவகை ஆன்மாக்களில் சகலருக்கு இறைவன் குரு வடிவமாக வந்து ஆட்கொள்வான் என்றும் அவ்வாறு அருளுவதை சாதார தீட்சை

என்றும் சாத்திர நூல்கள் கூறுகின்றன. ஞானமே உருவாக உடையவன் இறைவன். அவனை நேரில் நாம் காண்பது இயலாத காரியம். ஞானப் பிழம்பாய் இருக்கின்ற இறைவனது திருவருளை நமக்கு பெற்றுத் தருபவர்கள் குரு மகான்கள். அறிவுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை விளக்குவதற்கு அறிவுக் குப் புலனாகி உள்ள உண்மைகளைத் திருமூலர் காட்டுவார். ஆன்மாக்களின் நிலைக்கு ஏற்ப இறை வனே குருவாக வந்து ஞானத்தை வழங்குகின்றான் என்பது சித்தாந்திகள் கொள்கையாகும். குருவைச் சூரியனுக்கும், குருவருளைச் சூரியக் கதிருக்கும், ஆன்மாவை சூரியகாந்தக் கல்லுக்கும், மும்மல அழுக்கைப் பஞ்சுக்கும் உவமையாகக் காட்டுகின்றார் திருமூலர். சூரியக்காந்தக் கல்லும் பஞ்சும் ஒன்றாகப் பொதிந்து வைத்தது போல இந்த உடம்புக்குள் ஆன்மாவைச் சுற்றி மும்மல அழுக்குகள் சூழ்ந்து நிற்கின்றன. சூரியகாந்தக் கல்லை ஞானகுருவாகிய இறைவனை நோக்கி நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தினால் பஞ்சு எரிவது போல ஆன்மாவைப் பீடித்து இருக்கும் மலங்கள் நீங்கி விடும்.

*"சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே*
*சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா*
*சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்*
*சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"*

சிவனுடைய அருவுருவத் திருமேனி சிவலிங்க வடிவமாகும். ஐந்தொழில்களில் அருளலைக் குறிக்கும் சதாசிவ மூர்த்தமாகிய சிவலிங்க வடிவம் சக்திசிவத் தினுள் அடங்கிச் செயல்புரிவதை எடுத்து விளக்கு கிறது.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

எனப் பெரியபுராணம் சிவலிங்க தத்துவத்தை எடுத்துவிளக்குகின்றது.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடலிலே ஞானி கள் கண்டார்கள். இறைவன் வீற்றிருக்கும் இவ்உ டம்பே சிவலிங்க வடிவமாகவும், சிதம்பர இரகசிய மாகவும், சதாசிவ மூர்த்தமாகவும், பஞ்சகிருத்தியங் களைச் செய்யும் நடராஜ வடிவமாகவும் காணப்படு கிறது.

*"மானுடராக்கை வடிவு சிவலிங்கம்*
*மானுடராக்கை வடிவு சிதம்பரம்*
*மானுடராக்கை வடிவு சதாசிவம்*
*மானுடராக்கை வடிவு திருக்கூத்தே"*

ஆன்மையைப் பீடித்திருக்கின்ற மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனை அடைவதற்குச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதைச் சிவஞான போதத்தின் பன்னிரண்டாம் சூத்திரம் பின்வருமாறு எடுத்துக்கூறுகிறது.

செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
அம்மலம் கழிஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

சிவனடியார்களோடு இணைந்திருந்தால் சிவனை மறவாச்சிந்தை ஏற்படும் என்பதால் "அடியார் நடு வுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என மணிவாச கரும் தனது தெய்வவாசகமாகிய திருவாசகத்தில் வேண்டுகிறார். சிவனடியார்களை வழிபடுவது சிவனை வழிபடுவதற்குச் சமனாகும்.

இறைவனுடைய அருளிலும் பார்க்க இறைய ருளைத் தம்முள்ளே இழுத்து வைத்திருக்கும் ஞானி களது அருள் உயர்வானது ஆகும். சிற்ப சித்திரங் கள் அமைந்த கோயிலிலே உள்ள மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச்சேராது. ஆனால், சிவனடி யார்களுக்கு ஏதேனும் சமர்ப்பித்தால் அவர்களுக்குப் பயன்படுவதோடு அது அப்படியே இறைவனுக்கும் போய்ச் சேருகின்றது. நற்பாத்திரம் பார்த்துச் செய் யும் ஈகையும் வழிபாடே எனத் திருமூலர் கூறுகிறார்.

*"படமாடக் கோயில் பகவர்க்கொன்றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா*
*நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயில்*
*படமாடக் கோயில் பகவற்கது ஆமே".*

## (XIV) வழிபாட்டு நெறிகள்

ஆன்மா இறைவனை அடைவதற்குரிய வழி களாக சைவசித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவநாற்பாத நெறியினைக் கூறுகிறது. ஒன்றின் முதிர்வில் மற்றையது ஏற்படும் என்பதை "விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி போலன்றோ பராபரமே" எனத் தாயுமானசுவாமிகள் குறிப்பிடுகின் றார். ஆலய வழிபாடு, சிவாலயத் தொண்டு ஆகியன செய்யும் சரியை வழியில் நிற்போர் பக்தர்கள் ஆவார்கள். சிவசாதனங்களை அணிந்து சிவவேடம் தாங்கிச் சிவபூசை செய்து வழிபடுவோர் கிரியை நெறியில் நிற்பார்கள். இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புக்களை உணர்ந்து அவ்வழி யில் நிற்போர் யோகியர் ஆவார். சீவன் முத்தர்கள் ஆகிய சித்தர்கள் சிவத்தைத் தம்மில் கண்டு அதனு டன் ஒன்றி நிற்பார்கள்

*"பத்தர் சரிதை பாடுவோர் கிரியையார்*
*அத்தகு தொண்டர் அருள் வேடத்து ஆடுவோர்*
*சுத்த இயமாதி சாதகர் தூயோகர்*
*சித்தர் சிவஞானம் சென்றெய்துவோர்களே"*

சரியை நெறி தாச மார்க்கம் என்றும் அடிமை நெறி என்றும் அழைக்கப்படுகிறது. அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல் திருக்கோயில்களில் விளக்கிடு தல், திருநந்தவனத்தில் மலர் கொய்தல், மெழு குதல், திருஅலகிடுதல், இறைவன் புகழை வாயி னால் பாடி வாழ்த்துதல், திருக்கோயில்களில் உள்ள அசையாமணி போன்றவற்றை அடித்தல், இறைவ

னுக்கு வேண்டிய அபிஷேக திரவியங்களைக் கொணர் தல் ஆகிய திருத்தொண்டுகள் யாவும் சரியை நெறிநிற்போர் செய்யவேண்டியவை என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகின்றது.

*"எளியனல் தீபம் இடல் மலர் கொய்தல்*
*அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்*
*பளிமணி பற்றல் பன்மஞ்சன மாதி*
*தளி தொழில் செய்வது தான் தாசமார்க்கமே".*

ஆத்மார்த்தப் பூசையாகிய சிவலிங்க பூசை செய்தல், இறைவனது புகழைச் சொல்லி வணங்குதல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், குற்ற மற்ற தவ ஒழுக்கங்களை மேற்கொள்ளல், உண்மை பேசுதல், காமம் முதலிய அறுபகைகளையும் நீக்கு தல், அன்போடு அன்ன பாவனை செய்தல் ஆகிய அனைத்தும் கிரியை நெறியாகிய சற்புத்திர மார்க் கத்திற்கு உரியனவாகும்.

*"பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்*
*ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை*
*நேசித்திட்டு அன்னமும் நீ சுத்தி செய்தல் மற்று*
*ஆசற்ற சற்புத்திர மார்க்கம் ஆகுமே".*

மலரின்கண் மணம் பொருந்தி அமைவது போல யோக நெறி நிற்போரின் சீவன் முழுவதும் சிவமணம் கலந்திருக்கும் என்பதனை

'பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போல்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது'

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. யோக நெறி நின்று சமாதி கூடும் யோகியின் உள்ளத்திலே முழு உலகமும் அடங்கிவிடும். சமாதியிலே சிவனது அரு வத்திருமேனியைத் தியானிக்க அச்சிவம் சுடர்விடும் பேரொளிமயமாய் விளங்கும். யோக சமாதி கூடு வோருக்கு அட்டமா சித்திகளும் கைவரும். இவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சித்த புருஷர்களாகத் திகழ்வார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

*"யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்*
*யோகச் சமாதியின் உள்ளே உளர்ஒளி*
*யோகச் சமாதியின் உள்ளே உளசக்தி*
*யோகச் சமாதி உகந்தவர் சித்தரே".*

ஞான சாதனை செய்யும் போது பொய்யறிவாகிய அஞ்ஞானம் ஆதவனைக் கண்ட பனிபோல அகன்று விடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலையே சிவத்தோடு சேர்ந்திருக்கும் நிலையாகும். சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தை அன்றிப் பிறிதொன்றையும் காணாது அது தன்னையும் சித்தாகிய சிவமாகவே காணும். ஆன்மா சிவத்தோடு கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பமாகும். இந்தக் கலப்பு நிலையே அத்துவித முத்தி என்று அழைக்கப்படும். இதனையே சாயுச்சிய முத்தி என்றும் பரமுத்தி என்றும் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. ஞானத்தைவிட மேலான மார்க்கம் இல்லை. வேறு எதுவும் முத்திக்குக் கொண்டு செல் லாது. உண்மையான அறிவாகிய ஞானத்தில் திளைத்த வர்களே சிறந்தவர்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்து விளக்குகின்றது.

*"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை*
*ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று*
*ஞானத்தின் மிக்கவை நல்முக்தி நல்காவாம்*
*ஞானத்தின் மிக்கவர் நரரின் மிக்காரே".*

**(XV) வினைகள் நீங்குவதற்கான வழி**

பிறப்பிலே கலந்து உயிரை ஊட்டி வருகிற கர்மபலனைச் சைவசித்தாந்தம் சஞ்சிதம், பிராரத்து வம், ஆகாமியம் என மூன்றாக வகுத்துக்கூறும். முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல் சஞ்சிதம் என்றும், இக் குவியலில் இருந்து இப்பிறப்பில் அனுபவிப்பதற் கென முனைந்து நிற்கும் பகுதி பிராரத்தம் என்றும், புதிதாகத் தேடும் வினை ஆகாமியம் என்றும் அழைக் கப்படும். இறைவனுடைய திருவருளை நாடிப்பெற்று ஆன்ம ஞானத்தைத் தேடிக்கண்டால் சஞ்சிதவினை, ஆகாமியவினையாகிய இரண்டும் நீங்கிவிடும். இறைவன் அருளை நாடினால் ஆன்ம ஞானம் கிடைத்துவிடும். மேற்கூறிய உண்மைகளைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

*"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்*
*முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்*
*பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்*
*சென்னியில் வைத்த சிவனருளாலே"*

**(XVI) சிவகதி அடைவதற்கான மார்க்கம்**

வினைப்போகம் நம்மை அழுத்தும் வரை இறைசிந்தனை நமக்கு ஏற்படாது. இறைவனுடைய திருவருள் இல்லாமல் அவனை நாம் வணங்கவும் முடியாது என்பதை 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என மணிவார்த்தையாகிய திருவாசகம் குறிப்பிடுகிறது. நம்மைப் பீடித்திருக்கும் வினையின் தாக்கம் குறையவேண்டுமானால் சிவனுடைய நாமத்தை நாம் நாள்தோறும் உச்சரிக்க வேண்டும். சிவநாமத்தைத் தொடர்ந்து கூறினால் நமது தீவினை கள் முற்றாக நீங்கி விடுவதுடன் சிவகதியும் நமக்குக் கிடைத்துவிடும். சிவவணக்கம் தரித்திரம், துக்கம் ஆகியவற்றை நீக்குவதோடு சகல செல்வயோகமிக்க பெருவாழ்வையும் நமக்குத் தரும். சிவஞான முக்தி யும், பரகதியும் கிடைப்பதற்கு வழிசெய்யும். மூவாயிரம் பாடல்களுக்கும் முடியாக இருப்பது போல அமைந்தி ருக்கும் இந்த திருமந்திரப்பாடல் மானிடர்களாகிய நாம் அனைவரும் சிவகதி அடைவதற்கு வழிகாட்டும் திருமந்திரப் பாடலாகவே காணப்படுகிறது.

*"சிவசிவ என்கிலர் தீவினையாளர்*
*சிவசிவ என்றிடத் தீவினைமாளும்*
*சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்*
*சிவசிவ என்னச் சிவகதி தானே".*



# பெரிய புராணத்தில் 'திரு' நின்ற செம்மை


**திரு. ஏரம்பு அனுசாந்தன்**
ஆசிரியர்,
யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி


"திரு" எனுஞ்சொல் அழகு, செல்வம், இலக்குமி, தெய்வீகம் முதலாய பொருள்களையுடையது என்கின்றன அகராதிகள்.

"கண்டோரால் விரும்பப்படும் தன்மைநோக்கம் - அழகு" என்பது பேராசிரியர் தரும் விளக்கம்.

'திரு' என்பது தெய்வீகத் தன்மையுடைய தென்பது மட்டுமன்றிச் சிவத்தையும், சிவனருளையும், அவ்வருளால் அடையப்படுவதாய வீட்டின்பத்தையும் குறித்து வழங்குவதனைத் தேவார திருவாசகங்களிற் காண்கிறோம். "திருவே என் செல்வமே" என்கையில் சிவனையும் "சிவமே பெறுந் திரு எய்திற்றிலேன்" என்கையிலே சிவனதருளையும், "சென்றடையாத திருவுடையானை" என்கையில் பேரின்பமாகிய வீட்டின்பத்தையும் 'திரு' குறிக்கின்றது. பெரிய புராணத்துள் வழங்கியுள்ள 'திரு' எனும் சொல்லையும் பொருளையும் நோக்கலே கட்டுரையின் நோக்கம்.

பெரியபுராணத்திலே பல்வேறிடங்களில் பல்வேறு பொருள்களில் 'திரு' நிற்கின்றது. அவற்றை ஈண்டுக் காண்போம்.

பெரியபுராணப் பாடல் 1079 இல்

"திருவுடைய தில்லைவாழந்தணர்கள் கைதொழுதார்"

என்றொரு தொடருண்டு. இங்கு 'திரு' என்பது நடராஜப் பெருமானையும், அவரருளையும், அருட்பேறாகிய பேரின்பத்தையும் குறிக்கின்றது.

பெரியபுராணப் பாடல் 3046 இல்

"ஓங்கு திருத்தில்லை வாழந்தணர்"

எனுந் தொடருண்டு இங்கு 'திரு' என்பது வேதவொலி, கீதவொலி, நாதவொலி, வேள்விப்புகை, செல்வம், அருட்பொலிவு ஆகியவற்றைக் குறிக்குமெனல் மறுக் கொணாததே! ஏனெனில் தில்லையில் இவையாவும் ஓங்கி வளர்ந்து நின்றிலங்குவதனாலாம்.

பெரியபுராணப் பாடல் 394 இல்

"திருவுடை அந்தணாளர்"

எனுந் தொடர் காணப்படுகிறது. அந்தணரென்பவர் எவ்வுயிர் மாட்டுஞ் செந்தண்மை பூண்டு ஒழுகும் நியதியராதல் பொதுவிலக்கணம். செந்தழலோம்புஞ் செம்மையினராதல் சிறப்பிலக்கணம் இவர்க்குச் செல்வமாவது வேதமும், வேள்வியுமே, வேதப்பயனாம் உருத்திரத்தை ஓதியுணர்ந்து உருச் செய்தலும், சிவாக்கினியில் வேட்டலும் இவர்க்குக் கடன்கள். ஆதலால் இங்கு 'திரு' என்பது வேதம், வேள்வி இரண்டையும் குறிக்கிறதெனலாம்.

வேதத்தில் யசுர் வேதத்தையும், அதிலும் ஸ்ரீருத்திரத்தையும், அதிலும் அதன் மத்திய பாகத்தமைந்த பஞ்சாக்ஷர மந்திரத்தையுமே நுண்பொருளாய்க் கொண்டுள்ளதெனிற் தவறில்லை.

பெரியபுராணப் பாடல் 3045 இல்

"திருவளர் புகலியூர்ப் பூசுரர்" எனுந் தொடருண்டு. திருஞானசம்பந்த சுவாமிகளவதார மகிமையாலேயே புகலியூரார் ஒருவாறு ஞான மெய்தியதாக வரலாறு. அன்றேல் அவர்கள் ஸ்மிருதி ஸம்ஸ்காரங்களில் மட்டும் மனநிறைவுற்றுச் சும்மாவிருந்திருப்பர்.

"செந்தழலோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே"

என்று சம்பந்தசுவாமிகள் உணர்த்தாதொழியின் அன்னவர்க்கு ஞானமேயில்லை — கர்மமளவே எல்லாமும். இங்கு 'திரு' என்பது ஞானம் / வாய்மை என்ற பொருளினதாம்.

பெரியபுராணப் பாடல் 2749 இலும்

"திருவுடைப் பிள்ளையார் தம்
திருக்கையாலிட்ட ஏடு"

என்ற தொடருமுண்டு. சம்பந்த சுவாமிகள் உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும் கைவரப் பெற்றவர். ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்

சொல்லாம் என்பதையுணர்த்தியவர். இங்கும் 'திரு' என்ற சொல் ஞானம் எனப் பொருள்தரும்

பெரியபுராணப் பாடல் 428 இல்

"திருவுடை மனைவி" என்ற தொடருண்டு.

சேக்கிழார் பெண்மையைப் பேசுமிடங்கள் தொறும் கற்பினை அழுத்திப் பேசுபவர்.

திருநீலகண்டரின் மனைவியாரைக் (அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்த போதும்) காட்டவிழையும் போது "கற்புறு மனைவி யாரும் கணவனார்க்கு ஆனவெல்லாம் பொற்புற மெய்யுறாமற் பொருந்துவ நிரம்பச் செய்தார்" என்கிறார்.

இசைஞானியாரைச் சுட்டுமிடத்து;

"ஏதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானியார்"

என்கிறார்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்கிறது வெற்றிவேற்கை.

கொண்டவன் குறிப்பறிந்து, அவன் சொல்லை யிகழாது, அவன் காரியம் யாவிலும் கைகொடுத் துதவில் கற்பு. இயற்பகை நாயனாரின் மனைவி யைச் சொற்றிறம்பாக் கற்பியலுக்கு வடிவமாக்கி யவர் சேக்கிழார். தம்மை வந்தடைந்த சிவனடியார் வேண்டியபடியே தம்மனைவியை அடியவருடனேகு மாறு பணித்தபோதும், இயற்பகையின் மனைவி கணவன் சொற்படி அடியவருடனேகினார். எனவே தான் "திருவுடை மனைவி" என்றார் சேக்கிழார். இங்கு 'திரு' என்பது கற்பு எனும் பொருளினதாம்.

பெரியபுராணப் பாடல் 2673 இல்

"திரு முகம் கருணை காட்ட"

என்றொரு தொடருண்டு. உள்ளத் தெளிவிற் பிறக்கும் அன்பே உயரிய அறம். இறைவனுக்கும், இறையடியவர்க்கும் அன்பு செலுத்தல் அது. "எவ்வுயிருக்கும் ஈசன் திருமுன்னிலை" என்ற உணர்வறாமையே உயரறம் என்பார் யோகர் சுவாமிகள்.

*"எவ்வுயிரும் தன்னுயிர்போ லேங்கி யிரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"* என்பார் தாயுமான சுவாமிகள்.

'அகத்தினழகு முகத்திற் தெரியும்' என்பது பழமொழி. அடுத்தது காட்டும் பளிங்கு போல முகமும் மனத்திலுள்ளதையே பிரதிபலித்துக் காட்டும். எனவே 'திருமுகம்' என்பதிலுள்ள 'திரு' எனும் சொல் அன்பு / இரக்கம் எனும் பொருளின தாம்.

பெரியபுராணப் பாடல் 3113 இல்;

"திருவடி மலர்" என்றொரு தொடருண்டு. "மலர் சிலம்படி வாழ்த்தி வணங்கு வோம்" என்று கடவுள் வணக்கம் செய்து கொண்டு காப்பியம் பாடத் தொடங்கியவர் சேக்கிழார். உலகிற் காணும் தாமரைகளெல்லாம் சூரியனை நோக்கி மேனோக்கி விளங்குவன. நடராஜப் பெருமானின் தூக்கிய பாததாமரையோவென்னில் கீணோக்கி நிற்பது ஏனெனில் உலகுயிர்களெல்லாவற்றிற்கும் பேரின்பத்தேனை யருந்துங் கருணையாலாம். அதுவே தில்லையிற் தூக்கிய திருவடியாம்.

தக்கன் வேள்வியிலே சந்திரனைத் தரை யிடைத் தேய்த்ததும், சிவபூசையிற்றோய்வுற்றி ருந்த மார்க்கண்டேயர் மேற்பாச மெறிந்த ஜமனை யுதைத்ததும், நாடி நாரணன் காணமுடியாமல் நீண்டதும், நம்மையாட் கொண்டதும் அத்திரு வடியே!

*"சாடவெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை*
*வீடவெடுத்தது காலனை நாரணனும் நான்முகனும்*
*தேடவெடுத்தது தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்*
*ஆடவெடுத்திட்ட பாதமன்றோ நம்மையாட் கொண்டதே"*

என்பார். அப்பரடிகள்

மிதித்த பாதத்தை 'அடி' என்றும், தூக்கிய பாதத்தையே 'திருவடி' என்றும் சிறப்பிப்பர். எனவே 'திருவடி' என்பதிலுள்ள 'திரு' என்பது பேரின்பம், பெருங்கருணை எனப் பொருள்பயப்ப தாகிறது.

பெரியபுராணப் பாடல் 1592 இல்;

*"திருவாயிலினைப் பணிந்தெழுந்து*
*செல்வத்திருமுன்றிலையணைந்து"* எனும் பாடலடிகள் காணப்படுகின்றன.

திருவாயில், திருமுன்றில் என்று கோயிலின் வாயிலும், முன்றிலும் குறிப்பிடப்படுகின்றன. திருமகள் கேள்வனாய திருமால் தாம் முன்பு பன்றியாய்ச் சென்றிடந்துங்காணொணா மலர்ச் சேவடியைக் காணக்கருதி சிவாலயத்தின் படி யாய்க்கிடந்து தவம் முயல்கிறார். ஆதலால் அவ்வாயில் திருவாயிலாயிற்று.

இறைவன் முன்றிலையடைந்தவர்க்கு இருமைப் பேறும் தாமேயமையும். ஆதலால் அம் முன்றில் திருமுன்றிலாயிற்று. இங்கு முன்னதில்

'திரு' என்பது திருமாலையும், பின்னதில் இருமைப் பேறுகளையும் குறித்துவந்துள்ளது.

பெரியபுராணப் பாடல் 3761 இல்;

"திருமஞ்சன முங் கொணர்ந்து திருவலகு மிட்டுத் திருமெழுக்கு வரு மன்புடனின் புறச் சாந்தி" என்ற தொடருண்டு. இங்கு திருமஞ்சனம், திரு வலகு, திருமெழுக்கு எனும் தொடர்கள் நோக்கத் தக்கவை.

மஞ்சனம் கிரியையுறுப்பும், அலகிடல், மெழுக்கிடல் என்பன சரியையுறுப்புகளும் ஆம். இவை சாதாரண இல்லக்கடன்களைக் கடந்து கோயிற்கடமைகளாகின்றமை கருதியே 'திரு' எனுமடை சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால் இவை களிலுள்ள 'திரு' என்பது தெய்வீகச் சார்புண்மை யைக் குறிக்கின்றது.

பெரியபுராணப் பாடல் 3072 இல்

"திருமணஞ்செய் கலியாணத் திருநாளும்" என்ற தொடர் காணப்படுகிறது.

சிவன்; போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிகின்றார். உமாமகேஸ்வரர், சோமஸ்கந்தர், கல்யாண சுந்தரர், அர்த்த நாரீஸ்வரர் முதலிய சிவவடிவங்கள் விளக்கும் உண்மையிதுவே யென்பது வெளிப்படை. மணவினை தனியே சிற்றின்பத்திற்கான தென்பதனைச் சைவம் ஏற்றுக்கொள்வ தில்லை.

தருமங்களெல்லாவற்றினதும் அச்சாணிய துவே என்பதே உண்மையாகும்.

துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந் தார்க்கும், உரிய கடன்களை நிறைவேற்றுவதும், ஐவகை வேள்விகளையும் முடித்தலும் இல்லறத் தார் கடனாம் என்கிறார் திருவள்ளுவர்.

மன்னனுக்கு மந்திரிபோல் கணவனுக்கு மனைவி சரியான வழிகாட்ட வேண்டும். திரு நீலகண்டர் பரத்தைமையை நாடிப் போய் மீண்டு வந்தபோது அவர் மனைவியோ "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று ஆணை சொல்லித் திருத்தினாள்.

"எம்மையென்றதனால் மற்றைமாதரார் தம்மையும் தீண்டேன்" என்று திருந்தியதாகச் சேக்கிழாரே கூறியுள்ளார். இந்நோக்குடனேயே கலியாணம் என்பதனை "திருமணஞ் செய் கலி யாணம்" என்று அடைபுணர்த்திக் கூறியுள்ளார். இங்கு 'திரு' என்பது மங்கலம் என்று பொருள் தருகின்றது.

பெரியபுராணப் பாடல் 2629 இல்

"திருமடம்" என்ற தொடர் காணப்படுகிறது. "சைவமுதல்வனார் மடம்" என்று இதற்கு முந்திய பாடலீற்றிலொரு தொடருமுண்டு.

மடங்களிலே கோல சீலங்களான் மிக்க குரு வுஞ் சீடர்களுமிருந்து ஞானவிசாரம் பண்ணுவர்.

*"ஞானத்தாற் றொழுவார்கள் தொழக்கண்டு*
*ஞானத்தாயுனை நானுந் தொழுவனே"*

எனும் முனைப்பே மடவளாகத்துள்ளார் யாவரிடமுங் காணப்படவேண்டும். மடாதிபதிகளா யுள்ளார் பால் ஞானமும், வைராக்கியமும் மிகு திப்பட்டிருத்தலே அவர்க்கழகளிக்கும். வைராக்கிய சித்தாந்தத்திற்கறிகுறியான முண்டிதமோ அன்றிச் சிவபாவனைக்கு வலுவூட்டவல்ல சடாபாரமோ அவர்களிடம் விளங்கும்.

பரந்தார் திரிபுண்டரப் பொலிவும் பயனார் கௌரிசங்கமும் இதுவே சைவ நிலையென்றறை யாநிற்கும். கல்லாடை புனைந்து நல்லாகமப் பொருளல்லவற்றைச் சிந்தை செய்யாவிரதம் முற்றிருப்பர். இத்தகு சீரியர் வாழும் மடம் 'திருமடம்' எனப்படுதலில் வியப்பில்லை.

இங்கு 'திரு' என்பது தவம் எனும் பொரு ளினதாம்.

பெரியபுராணப் பாடல் 4060 இல்;

"திருக்கிளர் சீர்மாடங்கள்

திருந்து பெருங்குடி நெருங்கி" என்ற பாடல டியுண்டு. நெருக்கமாக மாடங்கள் திகழ்வதனால் ஊரின் செல்வச் செழிப்புப் புலனாகின்றது. இங்கு 'திரு' என்பது செல்வம் எனப் பொருள்தருதல் வெளிப்படையே.

இவ்வாறாகப் பெரியபுராணத்துப் பயின்றுள்ள 'திரு' என் கிளவி குறித்த பொருண்மைகளுள. சிவம், சிவனருள், சிவனருட்பேறாய பேரின்பம், வேத, கீதநாதவொலிகள், வேள்விப்புகை, அருட்பொலிவு, வேதம், ஸ்ரீருத்திரம், பஞ்சாக்ஷரம், ஞானம், வாய்மை, கற்பு, அன்பு / இரக்கம், திருமால், தெய்வீகச் சார்பு, மங்கலம், தவம் ஆகிய பொருள்களை இத்'திரு' குறித்து வந்திருக்கின்றது.

♦ ♦ ♦

# தமிழ் மொழியும் இலக்கியமும்

- ஏழ்தலப் புகழூர் மைந்தன் சி. வை. தா
- கனகி புராணம் தந்த பைந்தமிழ்ப் புலவர் நட்டுவச் சுப்பையனார்
- பூதத்தம்பி
- ஏழாலையின் எழுத்தாளர்கள்
- தமிழ் இலக்கண ஆசிரியர்களின் சொற்பாகுபாடு
- பண்டிதமணியும் அவர் தமிழ்நடையும்
- பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள்
- பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்
- இலங்கையர்கோன் சி. வைத்திலிங்கம் ஆகியோர் சிறுதைகள் மறு மதிப்பீடு
- வள்ளுவத்தில் இலக்கிய உத்திகள்
- இலக்கிய வளர்ச்சியில் ஈழத்துச் சஞ்சிகைகள்
- புலவரையிறந்த புகழ்சால் தோன்றல் நற்றமிழ் வித்தகர் நமசிவாயதேசிகர் – தல இலக்கியப் பனுவல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் நோக்கு
- இராமவதாரம் காட்டும் உண்மை
- ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம் குமாரசாமிப் புலவரின் தமிழ்ப்புலவர் சரித்திரம் – ஓர் ஒப்பாய்வு
- தாய்மொழி பேணாத தமிழர்கள்
- இப்படிப் போனால் எப்படிப் போகும்
- கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் வழங்கும் வாய்மொழி இலக்கியம் – சில குறிப்புகள்



# ஏழ்தலப் புகழூர் மைந்தன் சி.வை.தா

திருமதி. தமிழ்செல்வி சண்முகானந்தம்
ஆசிரியர்,
யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க
பாடசாலை.

ஏழாலையம்பதி ஏழு தலங்களால் புகழ்பெற்ற ஊராகும். இவ்வூரின் முதல் மைந்தன் என அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் சிறப்புக்குரியவர் சி.வை.தா எனச் சுருக்கமாக அழைக்கப்படும் ராவ் பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை ஆவார். இவர் சான்றோனாக விளங்கிய காரணத்தாலும் தான் செய்த தமிழ்ப்பணியினாலும் பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்தமையினால் அச் சிறப்புக்கு உரியவராக விளங்குகின்றார்.

12.09.1832இல் ஏழாலையில் பிறந்து தமது இருபதாவது வயது வரை மாணவப் பருவத்தை ஏழாலையிலே கழித்தவர். சி.வை.தா தந்தையரான வைரவநாதருடனும் தாயாரான பெருந்தேவியுடனும் தம்பியர் அறுவருடனும் 'சட்டம்பியார் வளவு' என இன்றும் சுட்டிப் பேசப்படும் வளவிலேயே வாழ்ந்தவர்.

ஏழாலையின் தென் பகுதியில் - இன்றைய மயிலங்காட்டுப் பகுதியில் பண்டிதர் நீலயினார் எனும் சட்டம்பியார் நடத்திய திண்ணைப் பள்ளியிலே சேர்க்கப்பட்டு எண்ணும் எழுத்தும் கற்று வந்தார். சைவக் குடும்பத்தைச் சேர்ந்த வர்களும் சைவ ஞானமும் உடையாரே அந் நாளில் திண்ணைப்பள்ளி ஆசிரியர்களாக விளங்கினர். இதனால் சி.வை.தாவும் ஆரம்ப காலங்களில் சைவப்பற்றும் சைவஞானமும் மிக்கவராகத் திகழ்ந்தார். எழுத்து அறிவித்த இறைவனான தமது தந்தையார் வைரவ நாதரினதும் தாயார் பெருந்தேவியாரதும் வழி நடத்துதற்படி சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரின் பள்ளியிலே சேர்ந்து இலக்கிய இலக்கணங் கற்றார். வரதராச பண்டிதரிடம் நைடதம், பாரதம் முதலாம் இலக்கிய நூல் களையும் கற்று அறிவுமிக்கவராயினார்.

இவ்வாறு மரபுவழிக் கல்வியினூடாகச் சைவ அறிவையும், தமிழறிவையும் பெற்று வந்த தாமோதரம்பிள்ளை அக்காலத்தில் இயங்கிய நிறுவன ரீதியான கல்விக்கூடமான வட்டுக்கோட்டை ஆங்கிலக் கல்லூரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு, புகழ்பூத்த நல்லாசிரியர்களான சங்குவேலி வல்லியம் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, வைமன் கதிரவேற்பிள்ளை, கரோல் சிசுநாதபிள்ளை போன்றோரிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார். இவ்வாறாய பெறுதற்கரிய பேறான சர்வ கலாவல்லோரிடம் கற்ற கல்வி பின்னாளிலே அவரது வாழ்வுக்கும் தமிழ் மக்கள் உயர்வுக்கும் உதவியது. இவரு டைய தமிழ்த் திறமையை நெவின்ஸ் அவர்கள் பல தடவைகள் பல மேடைகளில் புகழ்ந் துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது தமிழ்த் திறமையினால் கோப் பாய் போதனா பாடசாலையின் ஆசிரியராக விளங்கும் வாய்ப்புக்கிடைத்தது. 1852 முதல் 1854 வரை அங்கு கடமையாற்றிய காலத்தி லேயே நீதி நெறி விளக்க உரை எழுதித் தமது கன்னிப் பதிப்பை ஆரம்பித்தார்.

அக் காலத்திலே தான் இவரது அறிவுத் திறமையும் எழுத்துத் திறமையும் தென் னிந்தியா வரையில் எட்டியது. நாவலரின் ஆங்கில ஆசானும் அவரின் தமிழ் மாணவ னுமாகிய பேர்சிவல் பாதிரியார் சென்னையில் தாம் பிரசுரித்து வெளியிட்ட 'தினவர்த்தமானி' எனும் பத்திரிகைக்குத் தக்க ஆசிரியனைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தாமோதரம்பிள்ளையின் அறிவுத் தரத்தினை உணர்ந்து அவரையே தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியராக நியமித்தார். இவரது எழுத்துத் திறமையையும் அறிவுத் திறமையையும் உணர்ந்த அரசினர்

சென்னை இராஜதானிக் கல்லூரிக்கு தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமித்தனர். அக்காலத்திலே சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் நடத்திய முதல் பி.ஏ தேர்வில் முதன் மாணாக்கராய்த் தேறிய பெருமையும் இவரைச் சாரும். பி.எல் பரீட்சையிலும் தேறி வழக்கறிஞர் ஆனார். புதுக்கோட்டையிலே நீதிபதியாகவும் பல ஆண்டு கள் கடமையாற்றினார்.

நாவலர் பெருமான் டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஆகிய இருவரும் தமிழ் நூல்களைப் பதிப்பித்து தமிழ்த் தொண்டு புரிந்தது போன்று இவரும் தொல்காப்பியம், கலித்தொகை, வீரசோழியம் போன்ற நூல்களைப் பதிப்பித்து தமிழுலகில் தமக்கென ஓர் அழியாத இடத்தைப் பெற்றுள்ளார்.

இவரது தேசப் பணியையும், தமிழ்ப் பணியையும் கண்டு ஆச்சரியப்பட்ட சென்னை அரசாங்கம் இவருக்கு இராவ் பகதூர் (Rao Bahadur) என்ற பட்டத்தை அளித்துக் கௌரவப்படுத்தியது. "தமிழ் ஆராய்ச்சித் துறையின் தந்தை" என யாவராலும் பாராட்டப்பெற்றார்.

இத்தகைய பெருமைமிக்க இப்பெரியார் நாவலரைப் போன்று கிறிஸ்தவ மிஷனரிகளினதும் உள்ளூர்ப் போலி விசுவாசிகளினதும் பிடியிலிருந்து ஊர் மக்களையும் பிறரையும் விடுவிக்க ஆவல் கொண்டார். நாவலர் சிதம்பரத்தில் ஆலயச் சூழலில் என்ன நினைவோடு சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கினாரோ அதே நோக்கத்தோடு தனது ஜன்ம பூமியாகிய ஏழாலையிலும் திருத்தலங்கள் நன்கு சூழ்ந்த இடமாகவும் மருதநிலப் பாங்கான இடமாகவும் விளங்கும் ஏழு கோயிலடியில் சைவப்பிரகாச வித்தியாசாலையை 1876ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் நாள் ஆரம்பித்தார். இதனால்தான் "சி. வை. தாமோதரம்பிள்ளை நாவலரின் சமயப் பணியை மேற்கொண்ட பரம்பரையின் முதல்வராக விளங்குகின்றார்" எனத் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் கூறுகின்றார்.

சி.வை. தா வினால் நிறுவப்பட்ட ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதல் தலைமை ஆசிரியராக சுன்னாகம் முருகேச பண்டிதரும் துணை ஆசிரியராக சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரும் விளங்கினர். ஓராண்டில் முருகேசு பண்டிதர் விலகிக்கொள்ள குமாரசுவாமிப் புலவர் அவர்களே தலைமை ஆசிரியரானார். இப் பாடசாலையின் முதல் வருடப் பரீட்சை ஆறுமுகநாவலராலும் இரண்டாம் ஆண்டுப் பரீட்சை முருகேச பண்டிதராலும் அடுத்த ஆண்டுப் பரீட்சை பன்மொழிப் புலவர் சித்தாந்த சரபம் கொக்குவில் குகதாசர் சபாரத்தின முதலியார் அவர்களினாலும் அடுத்தடுத்த ஆண்டுகளில் நாவலர் மருகர் நல்லூர் ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்களாலும் நடத்தப்பட்டுள்ளன. பரீட்சைகள் நடத்தப்பட்ட மாதம் திகதிகளும் தேர்ச்சி விவரங்களும் பிள்ளை அவர்களது பரோபகாரமும் புலவர் அவர்களால் விதந்து எழுதப்பட்ட அறிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

சி.வை.தா. அவர்கள் கல்வித் திறமை உடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பல புத்தகங்களை பரிசில் வழங்குவதில் ஆனந்தம் கொள்பவராக விளங்கினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பரீட்சகராக இருந்த காலத்தில் தமிழில் சிறப்புச் சித்தி பெறுவோர்களது அறிவுக் கூர்மையையும் ஆங்கில அறிவையும் பரீட்சிப்பதற்காகத் தனிப்பட்ட முறையில் புறம்பான தேர்ச்சிப் பரீட்சை ஒன்றைத் தான் நடத்தி உத்தமமானோர்க்குப் பரிசில் வழங்கியதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

சி.வை.தாவினால் நிறுவப்பட்ட இப்பாடசாலையில் கற்றுத் தேறிப் பின்னாளில் பெருமதிப்புப் பெற்ற பெரியோர்களாக தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்களான வித்துவான்

சிவஸ்ரீ சிவானந்த ஐயர், இ. பாலசுப்பிரமணிய ஐயர், வ. சுப்பிரமணியபிள்ளை, ம. மயில்வா கனம்பிள்ளை, இளவாலை சங்கரப்பிள்ளை, மாவிட்டபுரம் ச.விசுவநாத முதலியார், பன்னாலை கதிரிப்பிள்ளை உபாத்தியாயர், தையிட்டி பொன்னையா, சுன்னாகம் பண்டிதர் மாணிக்கத் தியாகராசா, ஏழாலை வி. தம்பையா உபாத்தியாயர், கொக்குவில் இளைய தம்பிப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இவர்களுள் ஏழாலை வி. தம்பையா உபாத்தியாயர் அவர்கள் குமாரசுவாமிப் புலவரின் முதன் மாணாக்கராய்த் திகழ்ந்துள்ளார். இவர் புராணபடன விரிவுரையில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். ஏழாலையிலுள்ள கோயில்கள் மடங்களில் மட்டுமன்றி வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களுக்கும் சென்று பல கோயில்களில் புராண படன விரிவுரைகளை நடாத்தி தமிழிலக்கியத்தை வளர்ந்தோர் கல்வி மட்டத்திற்கு கொண்டுவந்த பெருமைக்குரியவராகவும் விளங்கினார்.

நுண்மாண் நுழைபுலம் படைத்தவரான சிவானந்தையர் தருக்க சங்கிரக மொழி பெயர்ப்புச் செய்ததோடு புலியூர்ப் புராணம், புலியூரந்தாதி, சனி துதி முதலான நூல்களை இயற்றியவர். பண்டிதர் மாணிக்கத் தியாக ராசா கதாப் பிரசங்கியாகத் திகழ்ந்ததோடு தமிழ் நாட்டு ஆதீனங்களாலும் நன்கு மதிக் கப்பட்டவராக விளங்கினார்.

பிள்ளை அவர்கள் தனது முதுமைக் காலத்தில் இப்பாடசாலையை ஒரு சபையாரிடம் கையளித்து தான் வகுத்த திட்டப்படி நல்லமுறையில் இயங்க வைக்கப் பேரார் வத்துடன் முயன்று வந்தார். அப்படியான அவர் எண்ணத்திற்கு கைகொடுத்து உதவ எவரும் முன்வராதபடியினாலும் இவரின் பணமுடையினாலும் நோய் காரணமாகவும் 1898இல் இப்பாடசாலை மூடப்பட்டது. 22 ஆண்டுகளில் சிறப்பாகத் தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிய முதற் சைவப் பாடசாலை அஸ்தமித்தமை நாம் செய்த தவக்குறையேயாகும். பல நல்லறிஞர்களது தோற்றத்திற்கு காரணமாக இருந்த இப்பாடசாலை வந்த வரத்திற்குத் தொடர்ந்திருக்குமேயானால் பின்னாளில் ஏழாலையில் இது ஓர் உயர்தர பெருநிலைப் பள்ளியாக உயர்ந்திருக்கும் என்பது திண்ணம்.

பிள்ளை அவர்களால் தனது ஜன்மபூமியாகிய ஏழாலையிலே நிறுவப்பட்ட இச்சைவப் பிரகாச வித்தியாசாலை அவரது தமிழ்ப்பணியைப் பறைசாற்றி நிற்கின்றது. நாவலரைப் பின்பற்றித் தமிழ்ப்பணி, சமயப்பணி என்பவற்றைச் செய்த தாமோதரம்பிள்ளை அவர்களும் சி.வை.தாமோதரம்பிள்ளையென பெயர் வழங்கி வந்தமையால் அவர் சிறுப்பிட்டிக்கு உரியவர் என்ற கருத்தும் இன்றும் நிலவுகின்றது. ஆனால் அது சொல்லளவில் இல்லாமல் பொருளளவில் இல்லை. அவருடைய தகப்பன் சிறுப்பிட்டி வைரமுத்து என்பது உண்மை. ஆனால் அவர்களின் குடும்ப வாழ்க்கை முழுவதும் அவர் மனைவி பெருந்தேவியின் இடமாகிய ஏழாலை வடக்கு பருத்திக்கலட்டி என்ற இடத்திலேயே நடைபெற்றிருக்கின்றது. மேலும் சி.வை. தா அவர்கள் ஏழாலைக்கு அருகேயுள்ள ஊர்களான தெல்லிப்பளை ஆங்கிலக் கல்லூரியிலும் சுன்னாகம் முத்துக்கவிராயரிடத்துமே கல்வி பயின்றிருக்கின்றார். அவருடைய தம்பிமாரும் கந்தரோடையிலேயே கல்வி கற்றிருக்கின்றார்கள். அவருக்கு ஆரம்பக் கல்வி புகுத்திய நீலயினார் ஏழாலையிற் பிரசித்தி பெற்ற ஒரு திண்ணைப்பள்ளி ஆசிரியர். அத்துடன் கல்வித் தர்மம் நிகழ்த்த வேணுமென்று இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தாமோதரம்பிள்ளை ஏழாலையையே அதற்கு உரிய இடமாகத் தெரிந்திருக்கின்றார். இத்தியாதி காரணங்களால் சி.வை. தாமோதரம்பிள்ளையின் உறவும் செறிவும் ஏழாலைக்கே மிகுதியாக உள்ளமை தெளிவு.

♣ ♣ ♣

# கனகிபுராணம் தந்த பைந்தமிழ்ப்புலவர் நட்டுவச் சுப்பையனார்

மகிஷாயினி

ஈழத்து இலக்கியச் செல்நெறியில் பகுத்தறிவு, வரலாற்றுணர்வு, ஆங்கில அறிவு, சமூகநோக்கு, அறிவியல், இலக்கணம் எனப் பல்வேறு பண்புகளுக் கூடாக குறிப்பிடத்தக்கதாகவும், சிறந்ததாகவும் தனித்துவமானதாகவும் தன்னைக் கட்டமைத்துக் கொண்ட காலகட்டம் 19ம் நூற்றாண்டு ஆகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதியில் அருகிக் காணப்பட்ட பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் முதலிய பிரபந்த வகைகளும், புராணங்களும் இக் காலப்பிரிவிலே பெருமளவில் தோன்றின. இவ்வகையில் மரபுவழி வடிவங்களுக்கூடாகச் சமுதாய உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில் எழுந்த புராணங்களுள் ஒன்றே கனகிபுராணம் ஆகும்.

"பிரபுக்களின் சீரழிந்த ஒழுக்கநெறியினையும் பொதுவான தார்மீக வீழ்ச்சியையும் நுண்ணிய அனுபவ உணர்வுடன் சித்திரிக்கும் கனகிபுராணம்" யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேளகாரப்பகுதியைச் சேர்ந்தவரும், மல்லாகம் கோயில்பற்றைச் சேர்ந்த ஏழாலைக் குறிச்சியிலே விவாகஞ்செய்து, அவ்வூரைத் தம் உறைபதி ஆக்கிக் கொண்டவருமான 'நட்டுவச்சுப்பையரால்' பாடப்பட்டது. சுப்பையா பாடிய 'கனகிபுராணம்' பாவலர் சரித்திரதீபகத்தில் 'கனகிசுயவரம்' எனவும் அழைக்கப்படுகின்றன.

சதாசிவம்பிள்ளை அவர்கள் சுப்பையனின் சிறுபிராயம் பற்றிக்கூறும் போது "இவர் தெல்லிப்பளையிலே இருந்த அமெரிக்கமிஷனரிமாரைச் சேர்ந்து கிறிஸ்த்து மதனுசாரியாய் இருந்து பின் விலகியவர்" எனக் குறிப்பிடுவார். இதனைவிட நட்டுவச்சுப்பையனார் பற்றி வித்துவான் F.X.C.நடராசா அவர்கள் சுட்டும் கூற்றும் "சுப்பையாவை" பிறிதொரு தளத்தில் வைத்து நோக்கி ஆராயவும் உதவுகிறது.

"வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் நித்தியப்படி மேளத்துக்கு ஒத்து ஊதும் சுப்பையனார் நாவலரின் அன்புக்குரிய நன் மாணாக்கராகவும் அதேவேளை நாவலரின் சிவபூசா பாத்திரங்களை அவரின் நேத்திரானந்த பூரிப்புக்கிணங்க விளக்கிச் சுத்தம் செய்யும் சேவகனாகவும் இருந்த காலப் பகுதியில் நாவலர் இருந்த சந்நிதிக்குக் கிழக்கே பிறிதொரு சந்தியில் கனகி வாழ்ந்து வந்தாள். நாவலரிடம் கல்வி பயில வரும் பலரை விலைமாதரின் திருவுருவமான கனகி கவர்ந்து விடுவதால் நாவலர் இச்செயலை விரும்பவில்லை. எனவே நாவலர் இதற்கு முடிவுகட்ட எண்ணிக் கனகியின் கொட்டத்தை அடக்கும் பொருட்டு நட்டுவச் சுப்பையனாரைக் கட்டியங்காரனாக்கினார். இவ் வகையில் நாவலரின் விருப்புக்கிணங்க சுப்பையனாரால் பாடப்பட்டதே 'கனகிபுராணம்' ஆகும்.

கனகிபுராணத்தின் தோற்றுவாய்க்கு ஏதுவாய் அமையும் F.X.C யின் இக்கூற்றுக்கு ஆதாரமாய் அமையும் இலக்கியச் சான்றுகளை எம்மால் இன்றளவும் கூட அறிய முடியாமல் உள்ளது.

கனகிபுராணத்தில் இடம்பெறும் பாடல்களின் எண்ணிக்கை பற்றிக் கூறவந்த அ.சதாசிவம்பிள்ளை "அப்பாடலில் முன்பின் நானூறு விருத்தங்கள் உண்டென்று கேள்விப்பட்டோம்" என்பர். ஆயினும் நூலமைப்புப் பற்றி இவர் யாதும் கூறாவில்லை.

யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாப்பிள்ளை என்பவர் நீர்வேலியைச் சேர்ந்த சி.சிற்சபேசன் என்பவர் தமது ஞாபகத்திலிருந்து கூறிய சில செய்யுட்களைத் தொகுத்து "கனகிபுராணம் (தெரிகவிகள்)" என்னும் பெயரில் நூலொன்றினை அச்சிட்டு வெளியிட்டார். இந்நூல் 1937ஆம் ஆண்டு ஒற்றுமை ஆடிஸ் வெளியீடாக சென்னை சத்திய நேசன் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. கந்தையாப்பிள்ளை காப்புச் செய்யுளையடுத்து நாட்டுப்படலம் (16 செய்யுட்கள்) சுயம்வரப்படலம் (11 செய்யுட்கள்) வெட்டை காண்படலம் (ஒரு செய்யுள்) என உட்பிரிவுகளை அமைத்துத் தருகின்றார். பின்னர் கந்தையாப்பிள்ளையின் பதிப்புத் தவறானது. இவரின் பதிப்பில் நாட்டுப்படலத்திலுள்ள பதினாறு செய்யுட்களும் சுப்பையர் பாடியவையல்ல, அவற்றின் ஆசிரியர் நீர்வேலி சிற்சபேசனே பாடியவர் எனக் கூறி வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் சில செய்யுட்

களை 1961 இல் பதிப்பித்தார். இப்பதிப்பில் காப்பு, நாட்டுப்படலம், சுயம்வரப்படலம், வெட்டைகாண் படலம் என மூன்று பிரிவுகளுள் மொத்தம் 24 செய்யுட்கள் காணப்படுகின்றன.

வண்ணார்பண்ணை வைத்தீசுவரன் கோயிலில் கோயிற் பெண்டாகப் பணிபுரியும் கனகி எனும் தேவரடியாள் தனது பொருளியல் தேவை கருதி விலைமகளாக மாறிய போது அவளை அனுபவிக்கப் பலர் முனைந்தனர். அவ்வாறு அவளை அனுப வித்து வந்தவரிற் பலர் வெட்டைநோய் என்னும் நோயால் பீடிக்கப்பட்டுத் துன்புற்றனர் என்பதே இந்நூலின் மையக்கருவாகும்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறந்ததொரு அங்கத இலக்கியமாக விளங்கும் இந்நூல் யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த நிலப்பிரபுக்கள் பற்றிய பல சுவையான செய்திகளைக் கூறுகிறது. கனகியிடத்தில் வந்து போகும் நிலப்பிரபுக்கள் பலர் சுயம்வரகாண் டத்தில் கிண்டல் செய்யப்படுகிறார்கள். நியூற்றன் போதகர் குதிரையில் சவாரி செய்யும் பொழுது ஓர் நாள் வீதியால் வந்து கொண்டிருந்த சுப்பையனாரைச் சவுக்கினால் தீண்டிவிட்டுச் சென்றுவிடுகிறார். இதற்கு வஞ்சம் தீர்க்கும் பொருட்டு கனகியின் நேசம் விட்டகலா கன்னங்கரேலென்றிருக்கும் நியூட்டன் போதகரை இரண்டு பாடல்களில் விளித்துப்பாடுகின் றார். மாதிரிக்கு ஒரு பாடலை இங்கு நோக்குவோம்.

"தாலக்கனி யொன்றினுக்காகத்
தரைமேல் மாந்தர் பலர் திரண்டு
வேல்கத்திகள் கொண்டெறிந்து மிக
விசயம் பொருதும் வளநாடன்
மால் பற்றிய நெஞ்சினனாகி
வந்தான் கனகே மன்றலுக்கு
நீலக் கருங் கார்மேக நிற
நியூற்றனிவன் காண் நேரிழையே"

பனை மரத்திற்குக் கீழே பலர் கூடி வேலும் கத்திகளும் கொண்டு பனம்பழத்தைப் பார்த்து வீசி மிகவும் வீரத்துடன் போர் செய்கின்ற வளநாடுடைய இவன் என்று கூறித் தோழியானவள் நியூட்டன் போதகரை அறிமுகப்படுத்துவனூடாகப் புலவரால் நியூட்டன் துரை நையாண்டி செய்யப்படுகின்றார்.

மானிப்பாயர், மல்லாகத்துவீரர், நவாலியார், புத்தூர் மணியம், வட்டுக்கோட்டைச்சுப்பு, கோப்பாய் முத்துக் குமாரு, ஆனைக்கோட்டை வேளாளன் ஆறுமுகன், உடுவில் சொத்தி, ஊர்காவற்துறை மணியம், கோப் பாய் மணியம் எனப் பல ஊர்களைச் சேர்ந்த கனவான்களும் கனகியின் கடைக்கண் பார்வைக் காகக் காத்துக்கிடந்தவர்கள் எனச்சுட்டி கவிஞரால் அங்கதமாகப் பாடப்படும் இவ்விலக்கியம் அக்காலப் பிரபுக்களின் ஒழுக்கம் தவறிய வாழ்வியற் சிதைவை யதார்த்த அனுபவ உணர்வுக்கூடாகப் பதிவு செய்கி றது. இந்நூலில் "தெருவிற் சனிபோலிருந்து நினைத் தேடித்தேடித்தியங்கும் சிவப்பிரகாசப் பேர் படைத்த வன்" என்னும் வரிகளுக்கூடாகப் புலவரால் காட்சிப் படுத்தப்படுபவர் நாவலரின் சொந்த மருமகனே ஆவார் எனக்கூறுவார் இன்றுமுளர்.

பழைய வடிவத்தின் புதிய பொருளுக்கூடாகத் தன்னைக் கட்டமைக்கும் இவ்விலக்கியம் 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் நிலவிய கோயிற் பெண்டுகள் முறைமையைக் கனகி வாழ்வியலுக் கூடாக எடுத்துரைப்பதுடன் பிரபுத்துவ கலாச்சாரத்தின் சிதைவையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

## சான்றாதாரம்


1. கணபதிப்பிள்ளை,க (2001) "ஈழத்து வாழ்வும் வளமும்", கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
2. கைலாசபதி,க (1986) "ஈழத்து இலக்கிய முன் னோடிகள்", சென்னை, மக்கள் வெளியீடு
3. சிவலிங்கராஜா,எஸ்(2001) "ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி", யாழ்ப்பாணம், தனலக் குமி புத்தகசாலை.
4. நடராசா, F.X.C (2001) "ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு", கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
5. நடராசா, F.X.C (1960) "கனகிபுராணம்", கலைச்செல்வி ஆவணி இதழ் சுன்னாகம் பக் 17–19.
6. பூலோகசிங்கம்,பொ (2002) "தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்", கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
7. மகேஸ்வரன்.வ (2004/2005) "கனகிபுராணம், ஒரு பண்பாட்டுச்சிதைவின் குறிகாட்டி", இளங்கதிர் 36வது ஆண்டு மலர், பக் 19 - 32.


✸ ✸ ✸



# பூதத்தம்பி

கலாநிதி. செங்கை ஆழியான்
க. குணராசா

நாடறிந்த ஒரு நாட்டுக் கூத்து பூதத்தம்பி விலாசமாகும். கற்பனைச் செறிவும் கவியழகும் நிறைந்ததொரு கூத்தாக வடமாநிலம் முழுவதும் ஆடப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் ஆட்சி அதிகாரம் நிலவிய ஒரு காலகட்டத்தில் இராசவாசல் முதலியார்களில் ஒருவனாக விளங்கிய பூதத்தம்பி என்பானின் சோகநாடகமாக இது ஆடப்பட்டு வருகின்றது. நாட்டார் வழக்காற்றில் கதைக்குரிய கதாநாயகனாகப் பூதத்தம்பி அமைந்ததால், பூதத்தம்பி என்ற பாத்திரம் கற்பனையாக உருவாக்கப்பட்டதென ஒரு சாரார் கருதி வருகின்றனர். பூதத்தம்பி விலாசம் தெரிவிக்கின்ற கதை வேறுபட்டிருந்தாலும் பூதத்தம்பியின் உண்மை வரலாறு வித்தியாசமானது.

பூதத்தம்பி யாழ்ப்பாணத்தில் சதையும் குருதியுமாக வாழ்ந்த ஒரு தலைவன். வரலாற்றில் உயிரோடு நடமாடியவன். யாழ்ப்பாணத்தினை ஒல்லாந்தர் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் ஓர் அதிகாரியாக வாழ்ந்த பூதத்தம்பி என்பானின் கதை இதுவாகும். இதனைக் கற்பனை கலந்தும் கலவாதும் பலர் தமது வரலாற்றுப் பனுவல்களில் சித்திரித்துள்ளனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினை விபரிக்கும் முதல் நூலான மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், செ. இராசநாயகத்தின் யாழ்ப்பாணச் சரித்திரம், க. வேலுப்பிள்ளையின் யாழ்ப்பாண வைபவ கௌமுதி, ஒல்லாந்துப் படையுடன் கூடவே வந்த பாதிரியார் பால்தேயஸ் எழுதியுள்ள 'A True and Exact Description of the Great Island of Ceylon', என்ற நூலிலும் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பூதத்தம்பி வரலாறு இதுவரை காலமும் விபரிக்கப்பட்டு வருகின்றது. இவற்றினைப் பின்பற்றி ஜோன் ஏச். மார்ட்டின் தனது 'Notes on Jaffna'என்ற நூலிலும், அதன் பின்னர் வேறு பலரும் தமது நூல்களில் பூதத்தம்பி வரலாற்றினைத் தம் கருத்துப்படி விபரித்துள்ளனர். அனைத்திற்கும் மூலம் மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவ மாலை ஆகும்.

**வைபவமாலை கூறும் பூதத்தம்பி கதை**

கைலாயவன்னியனின் சகோதரியை விவாகஞ் செய்திருந்த பூதத்தம்பி, மனுவலநதிராசி என்பவர்கள் உலாந்தேச அரசாட்சியாளருக்கு அரசிறை, நிருப முதலிமாரானார்கள். (ஒல்லாந்து) தேசாதிபதி அந்திராசிக்கு அதிக நண்பனாயும் தேசாதிபதியின் தம்பி பூதத்தம்பி அந்திராசியைத் தன் வீட்டுக்கு அழைத்து விருந்திட, அவன் பூதத்தம்பியின் மனைவியின் பேரழகினால் மயங்கி, மிகுந்த விகாரத்தோடு வீட்டிற்குச் சென்று, ஒரு தூதனுப்பி, "நீர் என்னுடன் இணங்கிச் சினேகமாய் இருக்கச் சம்மதித்தால் உமக்கு வேண்டிய திரவியங்களும் மற்றும் எவ்வித பொருள்களும் தருவேன்" என்று கேட்பிக்க, அவள் அந்திராசியை வைது, தூதுவனைத் துடைப்பத்தால் அடித்துத் துரத்திவிட்டாள்.

இது காரியத்தினால் இருவருக்கும் பகை நேரிடுங் காலத்தில், ஒரு நாள் அந்திராசி அரசாட்சியினிரின் வேலைக்கு மரங்கள் அழைப்பிக்கக் கச்சாய்த்துறைக்குக் கட்டளை அனுப்ப வேண்டுமென்று வெள்ளைக் கடதாசியிற் பூதத்தம்பியைக் கொண்டு கையொப்பமிடுவித்து, அதிலே, 'கோட்டையைப் பிடிக்க இன்ன இன்ன உதவி செய்வேனென்று பறங்கிகளுக்கு (போர்த்துக்கேயருக்கு) பூதத்தம்பி எழுதிக் கொடுத்தனுப்பக் கொண்டு போனவனிடத்திற் கண்டு பறித்தேன்' என்று அந்திராசி தேசாதிபதி கையிற் கொடுக்கத் தேசாதிபதி அதைப் பொய்க்குற்றச் சாட்டென்று அறிந்தும், அந்திராசியின் வேண்டுதலுக்காகப் பூதத்தம்பியைக் கொலை செய்வித்தார்.

அவ்வேளையில் தேசாதிபதியின் தம்பி ஊர்காவற்றுறையில் கடற்கோட்டை கட்டுவித்துக் கொண்டு அங்கிருந்தமையால் தன் சினேகிதனுக்கு உதவி செய்ய முடியாதவனாக இருந்தான். இது குறித்துப் பூதத்தம்பியின் மைத்துனனாகிய கைலாயவன்னியன் கொழும்பேறி வழக்குப் பேசினபோது, தேசாதிபதியையும் அந்திராசியையும் அங்கு வரும்படி கட்டளை வர, இருவரும் புறப்பட்டுப்போகும்போது, தேசாதிபதி கடலில் வீழ்ந்தும், அந்திராசி ஆனை இடறியுமிறந்தார்கள். இது வைபவமாலை கூறும் பூதத்தம்பி கதையாகும்.

இக் கதையை மூலமாகக் கொண்டு ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை வழக்காற்றில் இருந்த வாய்மொழிக் கதையையும் கூத்தாக ஆடப்பட்ட விலாசத்தையும் அடிப்படையாகக் கொண்டு பூதத்தம்பி கதையை விபரித்துள்ளார்.

**பூதத்தம்பி கதையின் மெய்மை**

பூதத்தம்பி பற்றிய கதை அல்லது தகவல்களைத் தருகின்ற நூல்களில் பெரும்பாலானவற்றின் ஆசிரியர்கள் யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியர் மயில்வாகனப்புலவரின் கூற்றினையே தழுவித் தம் கருத்துக்களைத் தந்துள்ளனர். யாழ்ப்பாணச் சரித்திர நூலின் ஆசிரியர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, பூதத்தம்பி கதையைக் கற்பனாரீதியான புனை கதையாக விபரித்துள்ளார் என ஜோன் ஏச். மார்டின் கருதுகிறார். 1736 அளவில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை, 1658 ஜூன் 22 ஆந்திகதி கொலையுண்டிறந்த பூதத்தம்பியின் வரலாற்றினை விபரிக்கின்றது. சரியாக 78 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவத்தினைச் சரிவரச் சித்திரிக்கவியலாது திணறியுள்ளது. 1882ஆம் ஆண்டு எஸ். ஜோன் என்பவர் எழுதிய 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலிலும், 1905ஆம் ஆண்டு எஸ். கார்த்திகேசு என்பவர் எழுதிய 'A Hand Book to the Jaffna Peninsula' என்ற நூலிலும், 1912 ஆம் ஆண்டு ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலிலும், 1933 இல் செ. இராசநாயகம் எழுதிய 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலிலும் விபரிக்கப்படுகின்ற பூதத்தம்பி வரலாறு, மயில்வாகனப் புலவரின் கருத்துக்களின் மறு வடிவங்களாகவுள்ளன. ஆனால், பூதத்தம்பி கொலையுண்ட காலவேளையில் 14 ஆண்டுகளின் பின்னர் 1672 ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஒல்லாந்தப் பாதிரியார் பால்தேயஸ் என்பாரின் குறிப்புக்களும், 1849 இல் வெளிவந்த 'The Ceylon Almanac and Commendium of Useful Information for the Year' குறிப்புகளும், 'Philip Canjamanadan' எழுதிய 'The Vinea Taprapaneca' என்ற நூலிலும் பூதத்தம்பி பற்றிய நம்பகமான குறிப்புக்கள் உள்ளன.

அவற்றினை ஆராயுமுன்னர் பூதத்தம்பி குறித்து முன்னர் கூறாதுவிட்ட சில தகவல்களை நோக்குவோம்.

1830 ஆம் ஆண்டு சுண்டுக்குளியில் வாழ்ந்த தமிழ்ப் புலவரான பரிமளம் என்பவர் பூதத்தம்பி கதையை ஒரு நாடகமாக எழுதியதாக அறியப்படுகின்றது. பரிமளத்தின் பரம்பரையினர் பூநகரியில் வாழ்வதாக ஜோன் ஏச் மார்ட்டின் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் மன்னாரைச் சேர்ந்த சுவான் கொஸ்தான் தாவீது என்பவர் 'பூதத்தம்பி விலாசம்' என்ற இசைப்பாடல்களும் உரையும் சேர்ந்ததான கூத்தினை எழுதியுள்ளார். இக்கூத்தினையே காலங்காலமாக முழுமையாகவும் கூட்டியும் குறைத்தும் புதுக்கியும் கிராமங்கள் தோறும் இசைநாடகமாக மேடையேற்றி வருகின்றனர். இந் நாடகத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் வருமாறு :-

1. இந்நாடகம் சைவ சமயக் கடவுளர் துதிகளையும் சைவசமயப் போற்றுதல்களையும் கொண்டுள்ளது.
2. கிறிஸ்தவ மதத்தினைப் போற்றாமலும், இரண்டு சாதிகளுக்கிடையிலான (வெள்ளாளன், குருகுலத்தவன்) உணவு, உடை, நடத்தைகளைப் பாடும்போது ஒன்றை உயர்த்தியும் மற்றையதை இழிவுபடுத்தியும் பேசுகின்றது. (அதனால் இந்த நாடகத்தினை எழுதிய தாவீது கிறிஸ்தவன் அல்லன் என்பாருளர்.) அப்பகுதிகள் இன்று மேடையேற்றப்படும் பூதத்தம்பி கூத்தில் இடம்

பெறாது நீக்கப்பட்டுவிட்டன.

3. அந்திராடோ (Andrado) என்ற வரலாற்றுப் பாத்திரம் நாடகத்தில் அந்திராசி என அழைக் கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் ஒல்லாந் தக் கொமுசாறியான (தேசாதிபதி) றைக் ளோப் வன் ஹூன்ஸ் (வன்கோயன்) என் பானை பெரிய ஒல்லாந்தேசு எனவும், பூதத்தம்பியின் நண்பனாகச் சித்திரிக்கப் படும் யாழ்ப்பாணக் கமாண்டர் றுத்தாஸ் என்பானைச் சின்ன ஒல்லாந்தேசு எனவும் இந்நாடகம் குறிப்பிடுகின்றது.
4. விருந்து நடந்தபோது திரைக்கு அப்பால் நடமாடிய அழகவல்லியின் பாதங்களை மட்டுமே அந்திராசி கண்டதாகவும் அவற்றி லிருந்து அழகவல்லியின் சௌந்தரியத் தினை பாதாதி கேசமாக அவன் அளவிட்ட தாகவும் நாடகம் விபரிக்கின்றது.
5. 'வெட்டறா மூலிகை' ஒன்றினைப் பூதத்தம்பி தன் கொண்டையில் முடிந்து வைத்திருந்த தாகவும், அதனை அறிந்திருந்த அந்திராசி, அதனை எடுத்துவிட்டுப் பூதத்தம்பியின் சிர சைக் கொய்யுமாறு பணித்ததாகவும் நாடகம் புலம்புகின்றது.

மயில்வாகனப்புலவர் தனது யாழ்ப்பாண வைபவமாலையில் விபரிக்கும் பூதத்தம்பி வரலாறு நம்பகத்தன்மையானதல்ல என்பது ஜோன் ஏச் மார்ட்டின் என்பவரது கருத்தாகும். சம்பவம் நடந்து 78 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதிய மயில் வாகனப் புலவர் தான் செவிவழி கேள்விப்பட்ட வற்றினையும் இணைத்துப் பூதத்தம்பியின் கதையை விபரித்துள்ளார். ஆனால் பூதத்தம்பி யின் மரணத்தின் சாட்சியாக விளங்கிய பால் தேயஸ் பாதிரியாரின் குறிப்புக்கள் நம்பகத் தன்மையானவையாகும். அக்குறிப்பின்படி ஒல்லாந்தருக்கெதிராக யாழ்ப்பாணக் கோட்டை யில் சதி ஒன்று நடந்தது. டொன் லூயிஸ் பூதத் தம்பியும் மன்னாரைச் சேர்ந்த ஒருவனும், ஐந்து போர்த்துக்கேயரும் ஒருங்கிணைந்து இச்சதியினைச் செய்தனர். பிடிபட்டுக் கொடூர தண்டனைக்குள்ளாகினர் என்று அறிய முடி கின்றது.

இலங்கை அரசினால் 1849இல் வெளியி டப்பட்ட நிர்வாக அறிக்கையில் விபரிக்கப்பட்டி ருக்கும் கால ஒழுங்குச் சம்பவங்களில், 1658 - செப்ரம்பர் மாதம், ஒல்லாந்தருக்கெதிராக யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் அரசியல் சதி நடந்தது. அதில் 'டொன் லூயிஸ் பூதத்தம்பியும் சில போர்த்துக்கேயரும் சம்பந்தப்பட்டிருந் தார்கள். அவர்களை டொன் மனுவல் அந்தி ராடோ (அந்திராசி) முதலியார் கண்டுபிடித்தார். சதிகாரர்கள் கொல்லப்பட்டார்கள்' எனக் குறிக் கப்பட்டுள்ளது. பிலிப் கன்ஜமனாடன் என் பாரின் The Vinea Taprobanea என்ற நூலில், எழுதப்பட்டுள்ளதாக பிறிற்றோஙீன் குறிப்பிலி ருந்து, டொன் லூயிஸ் எழுதப்பட்டுள்ளதாக பிறிற்றோவின் குறிப்பிலிருந்து, டொன் லூயிஸ் பூதத்தம்பிக்கும் போர்த்துக்கேயருக்கும் இடை யிலான இரகசியத்தொடர்புகளை அறிந்திருந் தும் அவற்றினைத் தெரிவிக்காது மறைத்து வைத்திருந்தமைக்காக, 1658இல் கல்தேறா பாதிரியாரின் தலை துண்டிக்கப்பட்டது என அறிய முடிகின்றது.

வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து பின்வரும் முடிவுகளைப் பெற முடிகின்றது :-

1. பூதத்தம்பி முதலியார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த, வரலாற்றில் இடம்பெற்ற ஒரு முக்கிய அதிகாரி.
2. ஒல்லாந்தரால் துரோகியாகக் குறிப்பிடப் படும் பூதத்தம்பி அந்நியரை இந்த மண்ணி லிருந்து துரத்திவிடுவதற்கான முயற்சி களில் ஈடுபட்டு அவமாகப் பிடிபட்டு வீரமர ணமடைந்தவன்.
3. இந்த மண்ணிலிருந்து போர்த்துக்கேய அந்நிய ஆதிக்கத்தினை அகற்றுவதற் காகப் போராடிய முதல் புரட்சியாளன் சங்கிலி செகராசசேகரனாவான். அதனை அடுத்து ஒல்லாந்த அந்நிய ஆதிக்கத்தினை யாழ்ப் பாண மண்ணிலிருந்து அகற்றுவதற் கான புரட்சியாளனாகச் செயற்பட்டவன் பூதத்தம்பி முதலியாராவான்.
4. யாழ்ப்பாண மக்கள் பூதத்தம்பியைப் போற் றினர் என்பது அவனைப் போற்றிய பல் வேறு வாய் மொழிக் கதைகளிலிருந்தும்

அவனது கதையைக் கூத்தாக ஆடியதிலிருந்தும் அறிய முடிகின்றது.

**பூதத்தம்பி விலாசம்**

பூதத்தம்பி நாடகத்தினைத் தனது கருத்திற்கு ஆதாரமாகக் கொள்ளும் யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'பூதத்தம்பி நாடகம் செய்த மாதோட்டத்துச் சுவான் கொஸ்தான் மகன் தாவீது என்பவன் இச்சம்பவத்திற்குச் சமீபகாலத்தவனாதலால் அவன் உண்மையை ஆராய்ந்தே பாடியிருக்க வேண்டுமென்பதும், பாடியவன் தானும் கிறிஸ்தவனாதலால் கிறிஸ்தவனாகிய அந்திராசி மேல் அபவாதஞ்சுமத்த மனம் பொருந்தானென்பதும், உண்மை ஒரு பக்கமும் பழியொரு பக்கமுமாக அரிய சம்பவம் எக்காலத்தும் எவ்விடத்திலும் நிகழ்வது இயல்பேயென்பதும் துணியப்படும்' என்கிறார்.

அக்காலத்தில் பூதத்தம்பி நாடகம் குறித்துப் பலவாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துள்ளன. முத்துத்தம்பிப்பிள்ளையின் கூற்றினை சத்திய வேத பாதுகாவலன் கடுமையாகச் சாடியுள்ளது. சாடலின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. தாவீது கிறிஸ்தவன் என்பது நிச்சயமல்ல. ஏனெனில், ஒரு சைவனைப் போல கடவுள் வணக்கம் செய்கிறார்.
2. அந்திராடோவை (அந்திராசி) ஒரு தமிழ்க் குருகுலத்தவன் என்பதுந் தவறு. அவன் ஒரு சிங்களவனெனப் பல்டேயஸ் பாதிரியார் காட்டியிருக்கிறார்.
3. அந்திராடோ மட்டுமல்ல, பூதத்தம்பியும் கிறிஸ்தவன் தான். (கிறிஸ்தவ மதத்தினைத் தழுவிய படியால்த்தான் ஒல்லாந்த அரசுப் பணியில் கடமையாற்ற முடிந்தது. டொன் லூயிஸ் பூதத்தம்பி அவனது பெயர். பெயரளவில் கிறிஸ்தவனாகவும் உள்ளத்தளவில் சைவனாகவும் வாழ்ந்துள்ளான். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் எடுப்பித்தவர் டொன் ஜுவான மாப்பாண முதலியார் ஆவார். காரியத்திற்காக மத வேஷமிட்டவர்கள்.)
4. அந்திராடோவைக் 'கரையான்' என்று இகழ்ந்து பூதத்தம்பி நாடகக்காரர் தாவீது பாடியது வீண். அதற்காக யாழ்ப்பாணத்துக் குருகுலமக்கள் கொந்தளித்ததும் வீண். ஏனெனில், அந்திராடோ யாழ்ப்பாணத்தவரல்லர். ஒரு சிங்களவர்.

**பூதத்தம்பி**
**நம்பகத்தன்மையான வரலாறு**

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் நல்லூரில் வாழ்ந்த பெருமகன் புவிநாயகமுதலியார் ஆவார். அவர் நல்லூர்ப் பிரதேசத்திற்கு மட்டுமன்றி யாழ்ப்பாணம் முழுவதற்கும் முதலியாராக விளங்கியமையால் 'இராசவாசல் முதலியார்' எனப்பட்டார். யாழ்ப்பாணக் கோட்டை போர்த்துக்கேயரின் நிர்வாக மையமாக விளங்கியது. அதனால் யாழ்ப்பாணக் கோட்டை இராசவாசல் எனப்பட்டது. அவருடைய மகன் பூதத்தம்பி ஆவான். அவன் கச்சாய் வன்னிமை கயிலாய பிள்ளையின் சகோதரியை மணந்திருந்தான்.

புவிநாயகமுதலியாரின் மரணத்திற்குப் பின்னர் போர்த்துக்கேயர் காலத்திலேயே யாழ்ப்பாணத்தின் இராசவாசல் முதலியாராகப் பூதத்தம்பி விளங்கியிருக்க வேண்டும். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அரசுப் பொறுப்பினை ஏற்றபோது பூதத்தம்பி அரசிறைக்குப் பொறுப்பான முதலியாராகப் பணியாற்றியுள்ளார்.

போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழிருந்த யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும் அவாவுடன் 1658 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆந் திகதி ஒல்லாந்தத் தளபதி றைக்கிளோப் பான்ஸ் கூன்ஸ் தனது படையுடன் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டான். அம்முற்றுகை ஜூன் மாதம் 21 ஆந் திகதி வரை 107 நாட்கள் நீடித்தது. கோட்டைக்குள்ளிருந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் தீர்ந்ததும் போர்த்துக்கேயர் கோட்டையை ஒல்லாந்தரிடம் கையளித்துச் சரணடைந்தனர். சரணடைந்த போர்த்துக்கேயர்களைக் கப்பல்களில் ஏற்றிக் கோவாவிற்கும் பத்தேயாவிற்கும் அனுப்பி வைத்தனர்.

போர்த்துக்கேயக் கன்னிகளையும் விதவைகளையும் தடுத்துத் தம் மனைவியராக்கிக் கொண்டனர். போர்த்துக்கேயப் படையில் வேலை செய்த பலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருக்க ஒத்துக்கொண்டனர். மலபார் வீரர்களில் பலரும் போர்த்துக்கேயப் பறங்கிகளில் சிலரும் அவ்வாறு சேவையில் தொடர்ந்திருக்க ஒப்புக் கொண்டனர். போர்த்துக்கேயர் அரசின் யாழ்ப்பாண சுதேச முதலியார்களும் மாற்றமின்றி ஒல்லாந்தர் அரசிலும் தொடர்ந்து சேவையாற்றினர். அதற்காகக் கிறிஸ்தவ நாமத்தையும் இணைத்துக் கொண்டனர். பூதத்தம்பி முதலியாரும் தன் பெயருடன் அரசுப் பணிக்காக டொன் லூயிஸ் என்ற நாமத்தினை இணைத்துக் கொண்டான்.

ஒல்லாந்தப்படை வீரர்களுடன் கூடவே வந்திருந்த பால்தேயஸ் பாதிரியார், யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்ததும் ஆற்றிய முதற் காரியம், போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயத்தினைப் புரட்டஸ்தாந்து தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்பு செய்து முதலாவது நன்றிப் பிரார்த்தனையை நடாத்தியதாகும். கத்தோலிக்கர்களும் கத்தோலிக்க பாதிரிமாரும் தமது சமயத்தினைக் கைக்கொள்ளப் பெருந்தடை வந்திருப்பதை உணர்ந்தனர். படிப்படியாகக் கத்தோலிக்க தேவாலயங்கள் புரட்டஸ்தாந்துச் சமயத் தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்பின் பின் மாற்றப்படவிருப்பதைப் புரிந்து கொண்டனர். ஆரம்பத்திலேயே ஒல்லாந்தரின் இறுக்கமான கத்தோலிக்கத்தடை கல்தேறா போன்ற கத்தோலிக்கக் குருமாரை ஒல்லாந்தருக்கு எதிராக வெறுப்படைய வைத்திருந்தது. ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து சமயத்தை இங்கு பரப்புவதற்காகக் கத்தோலிக்க தேவாலயங்களைத் தம் பொறுப்பில் பறி முதல் செய்தும், கத்தோலிக்கர்களை நெருக்குவாரப்படுத்தியும் வந்ததால், கத்தோலிக்கரான கல்தேறா மனவேதனை அடைந்திருந்தார். அதனால் டொன் லூயிஸ் பூதத்தம்பியுடன் அவர் ஒல்லாந்தரை யாழ்ப்பாணத்திலிருந்து கலைப்பதற்கான சதியில் ஒன்று சேர்ந்தார். மன்னாரைச் சேர்ந்த ஒரு கோயிற்பற்றுத் தலைவனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டான். ஒல்லாந்தரின் சேவையிலிருந்த போர்த்துக்கேயர் ஐவரும் இச்சதியில் இணைந்து கொள்ள முன் வந்தனர்.

ஒல்லாந்தப் பால்தேயஸ் பாதிரியார் தனது 'A True and Exact Description of the Great Island of Ceylon' என்ற நூலில் பின்வருமாறு விபரிக்கிறார்:

'சோழமண்டலக்கரையிலுள்ள நாகபட்டிணத்தினை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய கையோடு எமது இராணுவம் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு அனுப்பப்பட்டது. அதனால் யாழ்ப்பாணத்தில் எண்ணிக்கையில் குறைவான வீரர்களே இருந்தனர். மேலும் அவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணக்கோட்டை கைப்பற்றப்பட்டபோது ஒல்லாந்தக் கம்பனியின் சேவையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விருப்புத் தெரிவித்து எம்முடன் இணைந்து கொண்ட போர்த்துக்கேய வீரர்களாவர். அத்துடன் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறையில் யுத்தக் கைதிகளாக ஏராளமான போர்த்துக்கேயர் இருந்தனர்.

இவர்களில் பலர் சுதேசிகள் சிலருடன் ஒன்றிணைந்து எமக்கு எதிராகப் பெரும் சதி முயற்சியொன்றில் ஈடுபட்டனர். நான் கோட்டைக்கு வெளியே நகரத்தில் சமயப்பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும்போது, கோட்டையுள் சமயப் பிரார்த்தனையில் கலந்து கொண்டிருக்கும் அனைத்து ஒல்லாந்த உயர் அதிகாரிகளையும் கொலை செய்வதாகும். அதன் பின்னர் கோட்டைக் காவலர்களையும் அழித்து யாழ்ப்பாணக் கோட்டையைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகவும் இருந்தனர். சர்வ வல்லமை படைத்த இறைவன், அவர்களின் சதித்திட்டத்தை முறியடிக்க விருப்புக் கொண்டிருக்காவிடில் அச்சதித்திட்டம் இலகுவில் நிறைவேறி இருக்கும்.

அவ்வாறு நடைபெற வாய்ப்பில்லாது போய் விட்டது. ஒல்லாந்தரின் சேவையில் முதலியாராக

இருப்பவனும், ஒரு படை அணிக்குக் கப்ரினாக விளங்குபவனும், சிங்கள வீரனான டொன் மனுவல் அந்திராடோ என்பவனே பதினேழு அல்லது பதினெட்டு வீரர்களுடன் அவ்வேளையில் யாழ்ப்பாணக் கோட்டையில் வந்து தங்கியிருந்தான். அவன் முன் அறிவிப்பின்றி வந்திருந்தமையால், அன்றைய பிரார்த்தனையின்போது கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தினுள் பிரவேசிக்கவிரும்பாது, தன் ஆட்களுடன் தேவாலயத்திற்கு வெளியே நின்று உள்ளே நிகழ்ந்த சமயப்பிரசங்கத்தினைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவ்வேளை அவனைச் சுற்றியும் தேவாலயத்தினுள்ளும் போர்த்துக்கேய வீரர்கள் நிற்பதைக் கண்டான். அவர்கள் இடித்துப்பாக்கிகளை இயக்கும் நிலையில் வைத்திருந்தனர் என்கிறார் பால்தேயஸ்பாதிரியார்.

ஒல்லாந்தப் படையில் பெரும் பகுதி நாகபட்டிணத்திற்குச் சென்றது. அதற்கு கொமுசாறி றைக்கிறோப் பான்ஸ்கூன்ஸ் தலைமை வகித்துச் சென்றான். கோட்டையின் பதில் கமாண்டர் ஜாக்கோப வன் றீவ் ஒரு சிறிய படையுடன் பருத்தித்துறைக்குச் சென்றிருந்த வேளையை டொன் லூயிஸ் பூதத்தம்பியும் ஏனையோரும் தமது புரட்சிக்கு ஏற்ற தருணமாக எடுத்துக் கொண்டனர். ஞாயிறு தேவாலயத்தினுள் ஒருங்கே உயர் அதிகாரிகள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களைத் தாக்கி ஒருங்கே அழிப்பதாகவும், அதேவேளை கோட்டைக் காவலரண்களில் நிற்கும் வீரர்களை அவர்களோடு கலந்து நிற்கும் போர்த்துக்கேய வீரர்கள் தாக்கி அழிப்பதாகவும் முடிவாகியது.

தேவாலயத்தினுள் பிரார்த்தனை ஆரம்பமாகியது. தேவாலயத்தினை நோக்கி அவர்கள் நகர்ந்தனர். பிரார்த்தனைக்குச் செல்பவர்களைப் போல நடந்து கொண்டனர். தேவாலயத்தை நெருங்கியபோது அவர்கள் நடையில் சிறிது தயக்கம் குடி கொண்டது. சிங்கள முதலியார் மனுவல் அந்திராடோ தனது வீரர்களுடன் தேவாலயத்தின் முன் முழந்தாளிட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பான் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

புரட்சிக்காரர்களின் தயக்கம் ஒரு கணத்தில் நீங்கியது. அவர்கள் வேகமாக ஆயுதங்களைக் கரங்களில் எடுத்துக் கொண்டு பாய்ந்தனர். தேவாலயத்தின் வெளியே பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த சிங்கள வீரர்கள் திடுக்குற்று எழுந்தனர். வாள்களுடனும் துப்பாக்கிகளுடனும் பாய்ந்து வரும் வீரர்களைக் கண்டதும் அவர்கள் தங்களைத் தாக்கத்தான் வருகிறார்கள் எனத்தப்பாகப் புரிந்து கொண்டு வேகமாகத் தம் அரைகளிலிருந்து வாள்களை உருவிக் கொண்டனர்.

பூதத்தம்பியும் புரட்சிக்காரர்களும் அப்படியான எதிர்ப்பொன்றினை எதிர்பார்க்கவில்லை. தேவாலயத்தின் முன் தொடங்கிய யுத்தத்தின் எதிரொலி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தவர்களை விழிப்படையச் செய்தது. அதனால் தேவாலயத்தினுள் நுழைந்தவர்களை உடனடியாக அவர்களும் எதிர்த்து நிறுத்தத் தம்மைத் தயார் செய்து கொள்ள முடிந்தது. எனினும் தேவாலயத்தினுள் ஒல்லாந்தர் பலர் படுகொலையுற நேர்ந்தது.

சிங்கள முதலியாரின் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள். அவர்களாலும் ஒல்லாந்த வீரர்களாலும் புரட்சிக்காரர்களைச் சிலபொழுதுகள் தாக்குப் பிடிக்க முடிந்தது. பூதத்தம்பி, கோட்டையின் ஏனைய பகுதிகளில் எதிர்பார்த்தபடி தாக்குதல் நிகழாதிருப்பதைக் கண்டான். மனதில் கலக்கமும் வியப்பும் ஏற்பட்டது. கோட்டை மதில்களில் இருந்த வீரர்கள் தயக்கத்துடன் கோட்டைக்கு வெளியில் பார்ப்பதைக் கண்டான். அவர்கள் தயக்கத்திற்குக் காரணம் விரைவில் புரிந்தது.

காலையில் கோட்டையிலிருந்து வெளியேறிய பதில் கமாண்டர் ஜாக்கோப வன் றீவ், பருத்தித்துறைக்குச் செல்லவில்லை. இடைநடுவில் தன்பயணத்தை முறித்துக் கொண்டு வேகமாகக் கோட்டைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். கோட்டைக்குள் அவன் படையுடன் வேகமாகப் புகுந்தான். தேவாலயத்தின் உள்ளும் வெளியிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் பயங்கரச் சண்டையைக் கண்டான்.

சில நிமிடங்களில் சண்டை ஓய்ந்தது. பூதத் தம்பியின் பக்கத்தில் பலர் படுகொலையுண் டனர். ஒல்லாந்தர் பக்கத்திலும் சிங்கள முதலி யார் அன்ரோமிடோ பக்கத்திலும் பலர் இறந்தி ருந்தனர். பூதத்தம்பி உட்பட புரட்சிக்காரர்கள் பதினொரு பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் பதினொருவரும் கடுமையாகத் தாக் கப்பட்டனர். மயங்கி விழும் வரை அடித்து உதைக்கப்பட்டனர். இறந்தவர்களும் கைதான வர்களும் தாம் இந்தச் சதிக்கும் கலவரத்திற்கும் காரணமானவர்கள் என கமாண்டர் கருதியமை யால் உடந்தையாக மாறவிருந்த ஏனையோர் தப்பிக்க முடிந்தது.

பால்தேயஸ் பாதிரியார் புரட்சியாளருக்குக் கிடைத்த தண்டனையைத் தன் நூலிற் பின் வருமாறு விபரிக்கிறார்.

'இச்சதித்திட்டத்தின் பின்னணி மிகக் கவன மாக ஆராயப்பட்டது. அவர்களின் வாய்களினா லேயே உண்மைகள் வெளிவந்தன. அவர்களில் சிலரைத் தூக்கிலிடுமாறும், சிலரின் சிரசுக ளைத் துண்டிக்குமாறும், சிலரைச் சிலுவை களில் அறையுமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இச்சதிக்குக் காரணமான டொன் லூயிஸ் பூதத்தம்பியும், மன்னாரைச் சேர்ந்த சுதேசி ஒருவனும், ஐந்து போர்த்துக்கேயர்களும் இவ் வாறான தண்டனைகளைப் பெற்றனர். அவர் கள் முதலில் சிலுவை ஒன்றில் இறுகப் பிணைக் கப்பட்டனர். அவர்களின் கழுத்துக்கள் துண்டிக் கப்பட்டன. பின்னர் அவர்களின் மார்புகள் பிளக் கப்பட்டு இருதயங்கள் பிடுங்கி எடுக்கப்பட்டன. அவை அத்துரோகிகளின் முகங்களில் வைக்கப் பட்டன. மலாக்காவில் பிறந்த கலாதேறா என்ற பாதிரியின் தலை துண்டிக்கப்பட்டது. இப்பாதிரி தனது சுகயீனத்தைக் காட்டி குருமனையி லிருந்து வெளிவர மறுத்தார். ஆனாலும் அவர் தனக்குரிய தண்டனையை அடைந்தார். இந்த வெட்கங்கெட்ட சதி வேலையில் இவருக்கும் சிறு பங்குண்டு. தண்டனை பெற்ற துரோகி களால் இவருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக் கின்றது. தமது ஆத்மாவின் தந்தை என விழித் துத் தம் நோக்கங்களை விளக்கி அவருக்குக் கடி தம் எழுதப்பட்டுள்ளது. அவர் மனது குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. தனது நாட்டுச் சதிகாரர் களைக் காட்டிக்கொடுக்க அவர் மனம் இடந்தர வில்லை. ஆனால் அவருடைய மௌனமே அவர் மரணத்தைக் கொண்டு வந்தது. சதிகாரர் களின் சடலங்கள் பருந்துகளின் இரைக்காக மரங்களில் தொங்கவிடப்பட்டன. சதிகாரத் தலை வர்களின் தலைகள் கழிகளில் குத்தப்பட்டு சந்தை கூடும் இடங்களில் பார்வைக்கு நாட் டப்பட்டன.'

ஒல்லாந்தரின் கொடூரமான தண்டனை களுக்குப் பூதத்தம்பி பலியானான்.

**பூதத்தம்பி பற்றிய வாய்மொழிக் கதை**

பூதத்தம்பியின் மனைவி அழகவல்லி, அவன் அரசறைக்குப் பொறுப்பான முதலியார் பதவி. நிருபத்துறைக்கு முதலியாராக மனுவல் அந்திராசி, பூதத்தம்பியின் இஷ்ட நண்பன் சின்ன ஒல்லாந்தேசு. விருந்திற்கு அழைக்கப்பட்ட அந்திராசி அழகவல்லியைக் காணல், தூதனுப் பல், அவமானப்படல், பழிவாங்கும் நோக்குடன் வெற்றுக்காகிதத்தில் பூதத்தம்பியின் ஒப்பம் பெறல், அதனைப் பயன்படுத்தி அவனுக்கும் போர்த்துக்கேயருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறிப் பெரிய ஒல்லாந்தேசு மூலம் பூதத்தம்பி யைக் கொல்வித்தல் ஆகியவை வழக்கிலுள்ள கதையாகும். இத்தகவல்களை அல்லது கதையை முதன்முதல் எழுத்திலிட்டு மக்கள் அறிய வைத்தவர் யாழ்ப்பாண வைபவமாலை யின் ஆசிரியர் மயில்வாகனப் புலவராவார். பூதத்தம்பியின் கதை நிகழ்ந்ததன் பின்னர் (1658) முக்கால் நூற்றாண்டின் பின்னர் (1736) இவர் எழுதிய வரலாற்றில் கற்பனை நிறைந்து விட்டதென ஜோன் ஏச். மார்ட்டின் வாதிடுகிறார். சமகாலத்தில் பூதத்தம்பியுடன் வாழநேர்ந்த பால்தேயஸ் பாதிரியார் எழுதிய குறிப்புகள் நம்பக மானவை என அவர் குறிப்பிடுகின்றார். மயில் வாகனப்புலவருக்கும் பால்தேயஸ்சை முதன் மைப்படுத்தும் மார்ட்டினுக்கும் முரண்பாடு வருகின்ற இடம் மனுவல் அந்திராடோவும் மனுவல் அந்திராசியும் ஆவர்.

மார்ட்டினைப் பொறுத்தளவில் மனுவல் அந்திராடோ ஒரு சிங்களப் பிரதானி. ஒரு படை அணிக்குக் கப்ரின். முதலியார் அந்தஸ்து உள்ள வன். அவனுக்கும் பூதத்தம்பிக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் இருக்க வாய்ப்பில்லை. பூதத்தம்பியின் விருந்திற்குச் செல்லவும் வாய்ப் பில்லை. தமிழ் மக்களின் பின்கட்டில் வாழ்கின்ற பெண்களில் ஒருத்தியான அழகவல்லியைச் சந் திக்கவும் வாய்ப்பில்லை. யாழ்ப்பாணக் கோட்டை யில் தன் பயணப்பாதையில் சில நாட்கள் தங்க நேர்ந்த அந்திராடோ பற்றிப் பூதத்தம்பி கதை யோடு இணைத்து மயில்வாகனப் புலவர் தரும் தகவல்கள் பொய்யானவை என்கின்றனர்.

பால்தேயஸ் குறிப்பிடும் அந்திராடோவும் மயில்வாகனப் புலவர் குறிப்பிடுகின்ற அந்திரா சியும் வெவ்வேறானவர்கள். ஒல்லாந்தரால் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட கோயில் பற்று களை அந்தந்தப் பகுதிகளில் செல்வாக்காலும் நாட்டாண்மையாலும் முதன்மை பெற்ற பிரதா னிகள் நிர்வகித்தனர். இந்த முதலியார்களைத் தவிர,இராசவாசலில் (கோட்டையில்) குடிசார் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருவர் இருந் துள்ளனர். 'நல்லூரைச் சேர்ந்த பூதத்தம்பி என்ற வெள்ளாளன் அரசிறைப்பகுதியின் முதலி யாராகப் பதவி வகித்தான். கரையூரைச் சேர்ந்த அந்திராசி என்ற குருகுலத்தவன் கடிதங்கள் எழுதும் (நிருபம்) பகுதிக்கு முதலியாராக நிய மிக்கப்பட்டான்' இவ்வாறான முடிவிற்கு வந் தால் பூதத்தம்பி கதையில் சிக்கலில்லை.

எவ்வாறாயினும் பூதத்தம்பியின் வரலாறு சோகமானதாகும்.

### அழகவல்லியின் பேரெழில்

பூதத்தம்பி விலாசத்தில் (நாடகத்தில்) பூதத் தம்பியின் மனைவியும் இரணவீரசிங்கனின் மகளுமான அழகவல்லியின் எழில் அற்புதமா கச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மனுவேல் அந்தி ராசி தகாத மோகம் கொண்டமையை நியாயப் படுத்துவதுபோல அவள் அழகு இருந்துள்ளது. பிராமணப்பெண்ணின் நிறமும் சூத்திரப் பெண் ணின் கவர்ச்சியும் அழகவல்லியிடம் குடிகொண் டிருந்தன. சிவந்த அவள் நிறமும் ஒடுங்கிய அவள் இடையும் அவள் எழிலை அதிகப்படுத்தின. விம்மிப்பூரித்த அவள் மார்பகங்கள் கலசங் களாகக் காண்போர் சிந்தையைக் கவ்வின. இடைக்குக் கீழ் தாழத்தொங்கும் கூந்தலின் கருமையும் அடர்த்தியும் நெளிவும் கார்மேகத் தின் திரட்சியை நினைவுபடுத்தின. நாடகத்தில் பூதத்தம்பி தன் மனைவியின் அழகை வர்ணிப் பான்: 'இருண்டமேகமே வந்து மருண்டு கிடக் கின்றதோ எழில் மிகும் இவள் கொண்டை. இள நீர் போலத் திரண்ட கொங்கைப் பார்த்தால் மருங்கும் ஒடியுமென்று தெரிந்து புலம்பும் தண்டை. ஆலைக்கரும்போடு பாலைப்பழிக் கச் சொல்லும் அதரம் பவளத் துண்டோ? இவ ளிரண்டு காலைக் கும்பிட்டேனும் லீலைக் கிழுக்கச் செய்யும் காமனின் கை.'

விருந்தாக பூதத்தம்பி இல்லத்திற்கு வந்த அந்திராசி வினையாகினான். 'உங்கள் மனைவி யையும் அழைத்து வந்திருக்கலாமே?' என்று பூதத்தம்பி வரவேற்றபோது, 'அவள் வரமாட் டாள் நண்பனே. நீங்கள் சாதி ஆசாரம் பார்ப் பது போல அவள் தகுதி ஆசாரம் பார்ப்பவள்' என்கிறான் அந்திராசி. ஏனைய விருந்தினர் களுடன் அந்திராசியை அமர்த்தி விருந்துப சாரம் செய்யவில்லை. தனி அறையில் இருத்தி அவனுக்கு உபசாரம் நடந்தது.

'இவள்தான் என் மனைவி' என பூதத் தம்பி அழகவல்லியை அறிமுகப்படுத்துகிறான். அவளைப் பார்த்த அந்திராசி அப்படியே இமைக்க மறந்து நின்றுவிட்டான். அப்படியொரு அழகியை அவன் எங்கும் கண்டதில்லை. அந்த அலங்கார மண்டபத்தின் சிலைகளில் ஒன்றாக அவள் நின்றிருந்தாள். தேவலோகத்தின் அழகு இவளோ என வியந்து நின்றான். ஆண்டவனுக் குக் கண்ணே இல்லை. இப்படி ஒரு மகத்தான அழகியைப் பூதத்தம்பியுடன் இணைத்திருக்கும் கடவுளுக்கு இரசனையே கிடையாது. அன்ற லர்ந்த ரோஜா மலரென இருக்கும் அழகவல்லி எங்கே? சேற்றில் உழக்கிய உடல் நிறங்கொண்ட பூதத்தம்பி எங்கே?

அவளைக் கண்களால் விருந்துண்ட அந்தி ராசி அடங்கா மோகத்துடன் தன் இல்லம் வருகிறான். பரிசுப் பொருட்களுடன் தூது அனுப்பி மீள் பரிசாக விளக்குமாற்றையும் செருப்பையும் பெறுவதால், அடங்காக் கோபம் கொண்டு சதிவலையில் பூதத்தம்பியைச் சிக்க வைத்து கொல்விக்கின்றான்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் பல நாட்கள் கழியுமுன்பே, அவர்களை இங்கிருந்து வேரறுத்துத் துரத்தும் எண்ணம் யாழ்ப்பாணத்தாரிடம் இருந்ததென யாழ்ப்பாணச் சரித்திரத்தின் ஆசிரியர் செ. இராசநாயகம் குறிப்பிடுகிறார். அந்த அந்தரங்கச் சூழ்ச்சியை மனுவல் அந்திராடோ முதலி எனும் சிங்கள முதலி கண்டு வெளிப்படுத்தினான். இச்சூழ்ச்சிக்கு டொன் லூயிஸ் பூதத்தம்பி முதலி தலைமை வகித்துள்ளான். அவனோடு அரச விரோதிகளல்லோம் எனச் சத்தியம் செய்து கொடுத்த பறங்கிகள் ஐவரும், மன்னார்த் தலைவன் ஒருவனும், கல்தேறா எனும் கத்தோலிக்கக் குருவும் அடங்கினர். அவர்கள் பெற்ற தண்டனைகள் பார்த்தோர் நடுநடுங்கும் படியானதாகும்.

இச்சதியாலோசனையில் பூதத்தம்பியின் பெயரைக் கபடமாக மனுசல் அந்திராசி, நுழைத்து அநியாயமாகப் பூதத்தம்பியைக் கொலை செய்வித்தான் என இராசநாயகம் கருதுகிறார். பறங்கிகள் செய்த சதி ஆலோசனை வெளிவந்தபோது, பூதத்தம்பி அதில் பிரவேசியாதிருந்தாலும் தருணம் பார்த்திருந்த அந்திராசி பூதத்தம்பியை இதனுள் சிக்கவைத்தான் என இராசநாயகம் கருதுகிறார். ஒல்லாந்தரை வேரறத் தொலைக்க வேண்டுமென்ற ஓர் அந்தரங்கச் சூழ்ச்சி யாழ்ப்பாணத்தாரிடம் இருப்பதாகச் சிங்கள முதலி அந்திராடோ வெளிப்படுத்தினான். அந்த யாழ்ப்பாணத்தார் யார்?

பால்தேயஸின் குறிப்புகள் (1658), பிலிப் கன்ஜுமானாடனின் குறிப்புக்கள் (1855), இலங்கை நிர்வாக அறிக்கை 1849 என்பனவற்றிலுள்ள வரலாற்று ஆதாரங்களிலிருந்து பூதத்தம்பியே அவ்வாறான சூழ்ச்சிக்கு அல்லது புரட்சிக்குத் தலைமை வகித்தான் என்பதை அறிய முடிகின்றது.

இந்த மூன்று வரலாற்றுக் குறிப்புகளும் ஐரோப்பிய ஆசிரியர்களுடையவை. அவர்கள் எந்தவோரிடத்திலும் டொன் லூயிஸ் பூதத்தம்பியை முதலியார் என்று குறிப்பிடவில்லை. அதனால் உண்மையில் பூதத்தம்பி ஒரு முதலியாரா? என்ற ஐயத்தினை மார்ட்டின் எழுப்பியுள்ளார். தமக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டியதாலும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாலும், அவனைத் துரோகி என்றே ஐரோப்பிய ஆசிரியர்கள் குறித்துள்ளனர். அதனால் அவன் வகித்த பதவிப் பெயரை இயல்பாகவே நீக்கிவிட்டனர் எனத் துணியலாம்.

எவ்வாறாயினும் பூதத்தம்பி அந்நியருக்கு எதிராகக் கிளர்ந்து எழ முயன்றவன். அவன் புரட்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்டது. ஆனாலும் அவன் என்றும் நினைவு கூரப்படுவான்.

**ஆய்வுக்குரிய நூல்கள்**


01. Belamy, C.V., The Fort of Jaffna.
02. Fernao de Queyroz, S.J., Temporal and Spirtual Conquest of Ceylon - 1930
03. Phliphus Baldeus, A True and Exact Description of the Great Island of Ceylon.
04. Martyn, John H., Notes on Jaffna - 1923
05. இராசநாயகம்.செ, யாழ்ப்பாணச் சரித்திரம் 1933
06. மயில்வாகனப் புலவர், யாழ்ப்பாண வைபவ மாலை.
07. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி
08. குணராசா, கலாநிதி க., யாழ்ப்பாண கோட்டை வரலாறு - 1995
09. குணராசா, கலாநிதி க., ஈழத்தவர் வரலாறு
10. செங்கை ஆழியான், கடல் கோட்டை-1985.


❖ ❖ ❖

# ஏழாலையின் எழுத்தாளர்கள்

திருமதி மு. இந்திராணி

பற்பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கும்போது தான் ஓர் ஊருக்குப் பெருமை உண்டாகிறது. ஆன்மீகத்துறை, கல்வித்துறை, கலைத்துறை, வைத்தியத்துறையென்று பலதுறைகளிலும் முன்னேற்றம் பெற்றுப் பெருமையடைந்த எமது ஏழாலைக் கிராமம் எழுத்துத் துறையிலும் பல சாதனைகள் படைத்து முன்னணியில் இருக்கிறது.

இந்த ஊரில் பிறந்த பலர் தமது எழுத்துத் திறனால் பட்டங்களும், விருதுகளும், சன்மானங் களும், பாராட்டுக்களும், பொன்னாடைகளும் பெற்றுப் புகழடைந்திருக்கிறார்கள். இலங்கை முழுவதி லும் மட்டுமன்றி, அகில உலகிலும் அவர்களது எழுத்து ஆக்கங்கள் புகழ்ந்து போற்றப்படுகின்றன.

கடந்த நூற்றாண்டுப் பகுதியில் ஏழாலையின் எழுத்துத்துறையில் ஒரு புதிய சகாப்தம் படைக்கப்பட்டது வரலாற்று உண்மை. எழுத்தாளர் பலர் தோன்றிப் பலவிதமான எழுத்து ஆக்கங்கள் படைத்து இவ்வூருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

அவர்களுள் முதலில் நினைவு கூர வேண்டியவர் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள். அவர் ஆற்றிய அரும்பெரும் பணிகளுக்காக "இராவ் பகதூர்" என்ற பட்டம் பெற்றார். தம் பலவகையான பணிகளுக்கிடையே எழுத்துத் துறையிலும் ஈடுபட்டிருந்தார். ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருந்து எழுத்துப் பணியும் செய்திருக்கிறார். தாமோதரம்பிள்ளையின் தாயார் பெருந்தேவி ஏழாலையைச் சேர்ந்தவர். தாயாரின் இடமான ஏழாலையிலே சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பள்ளிக்கூடத்தை நிறுவியிருந்தார். தாமோதரம்பிள்ளையின் காலத்துடனேயே அப்பாடசாலை மறைந்தபோதும், அப்பாடசாலையில் கல்விகற்ற சிலர் பேரறிஞர்களாகி எழுத்தாளர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள்.

சைவப் பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்ற ஐ. பொன்னையா (அருளானந்தசிவம்) அவர்கள் சிறந்ததோர் எழுத்தாளர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய கட்டுரைகள் இப்போது நூல்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஐ. பொன்னையா அவர்கள் ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே ஐயம்பிள்ளை – தெய்வானை தம்பதியருக்கு சிரேஷ்ட புத்திரனாகத் தோன்றினார். இளமையிலிருந்தே வைத்தியத்துறையிலும் ஈடுபாடு கொண்டு பேரார்வத்தோடு இரு துறைகளிலும் ஆக்கபூர்வமான பணிகள் செய்தார். ஏழாலையின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த இராமலிங்கம் செல்லமுத்துவைத் திருமணம் செய்ததால் அவர் மேற்கைத் தம் வாழ்க்கைக்குக் களமாக்கிக் கொண்டார். கிழக்கில் தோன்றிய பொன்னையா என்னும் சூரியன், மேற்குப் பகுதிக்குத் திரும்பியதும் அந்த இடம் ஒளி மயமானது. சாதுசங்க மடம் அமைத்து ஆன்மீக ஒளி ஏற்றி, சைவ சன்மார்க்க வித்தியாசாலையை ஸ்தாபித்து கல்வி ஒளி பரவச் செய்த பொன்னையா புலவராகவும், உரையாசிரியராகவும், சிறந்த கட்டுரை ஆக்கங்கள் எழுதுபவராகவும் விளங்கி அற்புதமான எழுத்துப் படைப்புக்களை உருவாக்கியிருக்கிறார். மடாலய வளவுக்குள் "திருஞானசம்பந்தர் அச்சகம்" என்ற பெயரில் அச்சகம் ஒன்றினை அமைத்து 'கலாவல்லி' என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். 1930 களில் எழுத்துப் பணியில் மும்முரமாக ஈடுபட்டார். சமஸ்கிருத மொழியில் தேர்ச்சி பெற்று உபநிடதங்களைக் கற்றறிந்து உபநிடதங்களுக்கு தமிழில் உரை எழுதினார். "சுவேதாசுவதர" உபநிடதத்திற்கு ஐ. பொன்னையா அவர்கள் எழுதிய உரை அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த "இந்து சாதனம்" என்ற பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. சிறந்த உரைநடையென்று அவருடைய கட்டுரைகள் பலராலும் பாராட்டப்பட்டன. எழுபது வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட அந்தக் கட்டுரைத் தொடர்களை பொன்னையாவின் பேரன் முறையுள்ள சி. முருகவேள்

அவர்கள் "சுவேதா சுவதரம் மூலமும் உரையும்" என்ற பெயரில் அழகிய நூலாகப் பதிப்பித்து, 2008.01.30 அன்று அவரது குருபூசைத்தினமான தை உத்தர நாளில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் விமரிசையாக வெளியீடு செய்தார். அந்த நூலினைப் படித்த பல்கலைக்கழக இன்றைய மாணவர்கள் பொன்னையா சிறந்த தத்துவ ஞானியாக சித்தாந்தப் பேரறிஞராக விளங்கியிருக்கிறார் என்று விமர்சித்துள்ளார்கள்.

சிறந்த கவிஞராகவும் அவர் காணப்படுகிறார். அவரால் இயற்றப்பட்ட 'அத்தியடி முருகமூர்த்தி திருவூஞ்சல்', 'புங்கடி புவனேஸ்வரி திருவூஞ்சல்' முதலியன கவித்துவமும் கருத்தாழமும் கொண்டவையாக அமைந்துள்ளன. அத்தியடி முருகமூர்த்தி திருவூஞ்சல் என்ற நூல் பல வருடங்களுக்கு முன் முதற்பதிப்பு வெளியிடப்பட்டு கடந்த வருடம் இரண்டாம் பதிப்பும் வெளியீடு செய்யப்பட்டது.

கிழக்கில் உதித்து, ஏழாலையின் மேற்கிலே வந்து ஆலயத்தையும் பாடசாலையையும் ஸ்தாபித்து ஓர் எழுச்சியை ஏற்படுத்திய பொன்னையா (அருளானந்தசிவம்) அவர்களது ஆன்மீகச் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுக்க அவருக்கு ஓர் அருமையான சீடர் வாய்த்தார். அவர்தான் மு. ஞானப்பிரகாசம் அவர்கள்.

இவர்கள் இருவரினதும் சேர்க்கையினால், சேர்ந்து நிகழ்த்திய சம்பாஷனைகளால், கருத்துப் பரிமாற்றங்களால் பாற்கடலைக் கடைந்தெடுத்த அமிர்தம் போல் சிறந்த சித்தாந்த நூல்கள் உருவாயின.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியினரின் கடைசிப் புத்திரனாகத் தோன்றிய ஞானப்பிரகாசம் விஞ்ஞான, கலைப்பட்டதாரியாகி தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்று மும்மொழிகளிலும் நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழில் "கர்மயோகம்" என்ற நூலையும் எழுதினார். அது பகவத்கீதையின் சாராம்சமாக அமைந்திருந்தது.

**ஆங்கில மொழியில் இவர் எழுதிய நூல்கள்**

The spritual teacher (1982)
Tat purusha (The Ageless spirit 1988)
Tamilakam and Saiva thought (1991)
The Sankhya thought (1994)

"சிவசகஸ்ரநாமாவளி" என்பது சிவனுடைய ஆயிரத்தெட்டு நாமங்களை கிரந்தத்திலிருந்து தேவநாகரியிலும் ஆங்கிலத்திலும் மாற்றம் செய்து விளக்கங்களுடன் அமைந்த நூல். இந்நூலைப் பதிப்பித்து வெளியிடுவதற்குள் ஞானப்பிரகாசம் அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். மூன்று வருடங்களுக்கு முன் இந்நூல் சி. முருகவேள் அவர்களது "திருமுறைகளிலிருந்து தேர்ந்தெடுத்த கருத்தும் குறிப்பும்" சேர்ந்ததாக அழகிய நூலாக வெளியீடு செய்யப்பட்டது.

இவைதவிர, 1940களில் "மெய்கண்டார் திருவுள்ளம் அல்லது பிரபஞ்ச மர்மம்" என்ற கட்டுரைத் தொடரை இந்து சாதனம் என்ற பத்திரிகையில் எழுதினார். இவரது "மெய்கண்டார் விஜயம்" என்ற கட்டுரைத் தொடர் இந்திய சஞ்சிகையொன்றில் தொடராக வெளிவந்தது. இத்தகைய ஆக்கங்களை எழுதியதற்காக மு. ஞானப்பிரகாசம் அவர்களுக்குச் "சித்தாந்த வித்தகர்" என்னும் பட்டத்தை யாழ். பல்கலைக்கழகம் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவில் வழங்கிக் கௌரவித்தது.

இவரது காலத்திலே, ஏழாலையின் எழுத்துத் துறையில் மாபெரும் எழுச்சி ஏற்பட்டது. ஏழாலையின் மேற்குப் பகுதியிலே வாழ்ந்த பண்டிதர் மு. கந்தையா அவர்கள் எழுத்தாளராகிப் பெரும் சாதனை படைத்தார்.

குருவென்று யாரையும் கொள்ளாமல் தமக்கு இயல்பாக அமைந்த விவேகத்தினால் நூல்களைக் கற்று, பண்டிதர், வித்துவான், கலைமாணி முதலான பட்டங்களைப் பெற்று, 'சிவஞானசித்தி திறவுகோல்', 'சித்தாந்தச் செழும் புதையல்கள்', 'திருக்கேதீச்சரமான்மியம்' முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். இலங்கை, இந்தியா, மலேஷியா போன்ற இடங்களில் ஆலயங்களும், சமய நிறுவனங்களும் இவரது நூல்களைப் பதிப்பித்து வெளியீடு செய்தன. இருபத்தேழு நூல்கள் வெளியிடப்பட்டு ஏழாலையில் எண்ணிக்கையில் கூடிய நூல்களை எழுதியவர் என்ற பெருமையைப் பெற்றுள்ள பண்டிதர் மு. கந்தையா அவர்கள் தாம் எழுதிய நூல்களுக்காகப் பல அரிய விருதுகளைப் பெற்றுள்ளார். 'சாகித்திய உயர் விருது' 'இந்து கலாசார அமைச்சின் விருது', மற்றும் 'இலக்கிய கலா நிதிப்பட்டம்' ஆகியன அரும்பெரும் பரிசுகளாக அவரது எழுத்துத் திறமைக்காகக் கிடைத்துள்ளன. இவற்றை விட ஒரு பெரும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. திருத்தொண்டர் புராணத்துக்கு சூசனம் எழுதிய ஆறுமுக நாவலர் அதை நிறைவு செய்யாமல் இறைவனடி சேர்ந்துவிட்டார். அதன் மிகுதிப் பகுதிக்கு நாவலரின் சூசனத்திற்கு இணையாக சூசனம் எழுதி உலகத் தமிழர் யாவரினதும் பாராட்டினைப் பெற்றார். கந்தையா அவர்கள் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பெருமைக்குரிய மாணவனாகவும், அங்கே கல்வி கற்பித்த ஆசிரியராகவும் இருந்ததுடன், பாடசாலைக் கீதத்தை இயற்றிய பெரும் கவிஞ ராகவும் திகழ்கிறார். "நின்று நிலாவுக நன்றே" என்று அவர் எழுதிய பாடல் வரிகள் போலவே எழுத்தினால் அவருக்குக் கிடைத்த புகழ் உலகம் உள்ளளவும் நின்று நிலாவும். மு. கந்தையா அவர்களுக்குக் கிடைத்ததுபோல, இந்த ஊரைச் சேர்ந்த இன்னுமொருவருக்குச் சாகித்தியவிருது கிடைத்திருக்கிறது.

ஏழாலையின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த திரு. நா. முத்தையா அவர்களின் நூலொன்றுக்கு அவ்விருது கிடைத்தது. இவர் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று ஆசிரியராகி மலையகத்தில் பணிபுரிந்தபோது 'ஆத்மஜோதி' என்னும் சஞ்சிகையைத் தமது ஆக்கங் களுடன் மாதந்தோறும் வெளியிட்டார். தமது ஊரான ஏழாலையைப் பற்றிய எல்லா விடயங்களையும் ஆய்வுசெய்து "ஏழாலை" என்ற பெயரில் விரிவான நூலொன்றினையும் எழுதி வெளியிட்டார். அந்நூலின் இரண்டாம் பதிப்பும் கடந்த வருடத்தில் வெளியானது. நா. முத்தையா அவர்கள் சித்தர்களின் வாழ்க்கை பற்றி எழுதிய 'ஈழத்துச் சித்தர்கள்' என்ற நூல் சாகித்திய விருது பெற்றது. 'திருமுறைக்காட்சி', 'பன்னிருமாத நினைவுகள்' (சைவ சமய புண்ணிய காலங்கள்) முதலான நூல்களையும் எழுதியுள்ளார். இந்தியத் திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து அந்த அநுபவங்களை வைத்து சில பயணக்கட்டுரைகள் கொண்ட நூல்களை எழுதி ஆத்மஜோதி அச்சகத்தின் மூலம் வெளியிட்டார்.

சமகாலத்திலே ஏழாலையின் சிறந்த எழுத்தாளராகப் பிரபல்யம் பெற்றிருப்பவர் சிவ. சண்முக வடிவேல் அவர்கள் பாடுவதையும், எழுதுவதையுமே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட இவர், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் போலவே கட்டுரை, கவிதை, நாடகம் என்ற முத்துறையிலும் எழுதித் தமிழ் வளர்க்கிறார். இவரது நூற்றுக்கணக்கான கட்டுரைகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. சில கட்டுரைகளின் தொகுப்பாக, 'திருவடிப் பெருமை சிந்திப்பரியன' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. "புவனேஸ்வரி அம்மன் பிள்ளைத் தமிழ்" என்ற கவிதை நூல் வெளிவர விருக்கிறது. நாடகங்கள் பல பத்திரிகைகளிலும் வானொலியிலும் இடம்பெற்றிருக்கின்றன.

சலசலவென்று ஓடும் ஆற்றின் இனிய வேகம் போல இவருடைய எழுத்து நடை இரசித்து மகிழக்கூடியதாக இருக்கிறது. நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் ஆற்றிய சேவைக்காக சிவ. சண்முகவடிவேல் அவர்களுக்கு இவ்வருடம் "கலா விபூஷணம்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது ஏழாலைக்குக் கிடைத்த பெருமை ஆகும்.

சி. சக்திகிரீவன் அவர்களும் சிறந்ததோர் எழுத்தாளராகத் திகழ்கிறார். இந்துசமயப் பேரவையின் செயலாளராக இருந்து, "இந்து தர்மம்" என்ற சஞ்சிகையை தமது சிறந்த கட்டுரை ஆக்கங்களுடன் வெளியிட்டிருக்கிறார். மூன்று கவிதை நூல்களை வெளியிட்டு தாம் சிறந்த கவிஞர் என்பதையும் நிரூபித்துள்ளார். சிவபெருமானுடைய புகழ்பாடும் "சிவனருளமுதம்" அம்பிகையைப் போற்றும் "சிவசக்தி அனுபூதி" முருகப்பெருமானின் கருணையைக் காட்டும் "முருகன் அருள்" ஆகிய இவரது மூன்று நூல்களும் இவரது எழுத்தாற்றலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்களும் எழுத்துத்துறையில் சிறப்புற்றிருப்பவர். திருமுறை ஓதுதல், புராண படனம் செய்தல், பிரசங்கம் நிகழ்த்துதல் ஆகியவற்றில் முதன்மை வகிப்பது போலவே எழுதுவதிலும் திறமையுள்ளவர். பல நூல்களில் இவரது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய இலகு நடையில் நல்ல கருத்துக்களைச் சுவைபட எழுதுவார்.

சி. கந்தசாமி அவர்களும் பேசும் திறன், பாடும் வல்லமையோடு, எழுதும் ஆற்றலும் கொண்டவர். விவேகானந்த சபையில் பணிபுரிந்தபோது பத்திரிகை ஆசிரியராக இருந்து ஆக்கங்கள் படைத்தவர். பல நூல்களில் இவரது கருத்தாழம் மிக்க கட்டுரைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

இதுவரை குறிப்பிடப்பட்ட எழுத்தாளர்கள் பெரும்பாலும் சமய சம்பந்தமான ஆக்கங்களை எழுதி சமய இலக்கியம் படைத்தவர்களாவர். சமூக இலக்கியம் படைத்த எழுத்தாளர்களும் இங்கு பெரும் புகழும் பாராட்டுக்களும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.

ஈழத்தின் சிறுகதை வரலாற்றை நோக்கினால் ஏழாலையர் இருவருக்கு மகுடம் சூட்டப்பட்டி ருப்பதைக் காண முடியும். ஈழத்தின் சிறுகதை வரலாற்றை ஆரம்பித்து வைத்தவர்களாதலால் 'சிறுகதை முன்னோடிகள்' 'சிறுகதையின் மூலவர்கள்' என்று வரலாறு போற்றும் இருவர் ஏழாலையில் பிறந்தவர்களே. அவர்கள் இலங்கையர்கோன் என்ற புனைபெயரில் எழுதிய ந. சிவஞானசுந்தரம் அவர்களும், இரவீந்திரன் என்ற புனைபெயரில் எழுதிய சி. வைத்திலிங்கம் அவர்களும் ஆவர்.

இன்று, நவீன இலக்கியம் என்று போற்றப்படும் சிறுகதை இலக்கியத்தின் முதலாவது ஈழத்துச் சிறுகதையான "மரியா மதலேனா" என்ற சிறுகதையைத் தனது பதினெட்டாவது வயதில் இலங்கையர்கோன் எழுதினார். அச்சிறுகதை தமிழக சஞ்சிகையான கலைமகளில் பிரசுரமாகி அவருக்குப் புகழ் தேடித்தந்தது. 1938ம் ஆண்டு பிரசுரமான அச்சிறுகதையைத் தொடர்ந்து, இலங்கையர்கோனின் சிறுகதைகள் 'சூறாவளி', 'கிராம ஊழியன்', 'கலாமோகினி', 'பாரத தேவி' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இவரது சிறுகதைகள் வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவும் கற்பனையில் உதித்த சமூகக்கதைகளாகவும் அமைந்திருந்தன.

'கடற்கோட்டை', 'அனுலா', 'சிகிரியா', 'யாழ்பாடி', 'மேனகை' முதலியன வரலாற்றுக் கதைகள். 'ஓரிரவு', 'மச்சாள்', 'தந்தி வந்தது', 'முதற்சம்பளம்', 'தாழைமர நிழலில்' முதலான சிறுகதைகள் சமூகக் கதைகளாகும்.

இலங்கையர்கோனின் சிறுகதைகள் எல்லாமாக முப்பதுக்குள் தான் இருக்கும். அத்தனையும் அற்புத சிருஷ்டிகளாக அமைந்து வாசகர்களின் உள்ளங்களில் இடம்பிடித்துக் கொண்டன.

டி. ஆர். ஓவாகப் பதவி வகித்தஇலங்கையர்கோன் சிறுகதை மட்டுமன்றி நிறைய வானொலி, மேடை நாடகங்களையும் எழுதியுள்ளார். "மாதவி மடந்தை" "விதானையார் வீட்டில்" முதலாகப் பல நாடகங்கள் மேடையிலும் வானொலியிலும் இடம்பெற்று அவருக்குப் புகழ் தேடித்தந்துள்ளன.

இவர் நீண்ட காலம் வாழாவிட்டாலும், சொற்ப வயதிற்குள் சிறந்த எழுத்தாளன், சிறுகதை முன்னோடி என்றெல்லாம் பெயரெடுத்துப் பிறந்த ஊருக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். இவரது மறைவுக்குப் பின், இவருடைய துணைவியார் பதினைந்து சிறுகதைகளின் தொகுப்பாக "இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம்" என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

சிறுகதை முன்னோடிகளில் இன்னொருவர் ஏழாலை சி. வைத்தியலிங்கம். 'இரவீந்திரன்' என்ற புனைபெயர் கொண்ட இவரது முதலாவது சிறுகதை 1939ம் ஆண்டு 'ஈழகேசரி' என்னும் பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ந்து ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற தமிழகப் பத்திரிகைகளில் இவரது கதைகள் பிரசுரமாகின.

மணிக்கொடிக் குழுவைச் சேர்ந்த சிறந்த தமிழகப் படைப்பாளிகளுக்கு நிகராகச் சி. வைத்தியலிங்கமும் எழுதிப் புகழ் பெற்றார். இவர் தமிழ்நாட்டின் எழுத்தாளர் கு.ப. ராஜகோபாலனைத் தன் ஆதர்ஸ எழுத்தாளர் என்று கூறிக் கொண்டதால் இவரை "ஈழத்துக் கு.ப.ரா" என்று அழைத்தனர்.

இவர் "பூதத்தம்பிக் கோட்டை" முதலான வரலாற்றுக் கதைகளும், 'பாற்கஞ்சி', 'மூன்றாம்பிறை' முதலான சமூகச் சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

அரசாங்க சேவையில் எழுதுவினைஞராகப் பதவி வகித்துக் கொண்டு எழுத்தாளராகவும் விளங்கிய திரு. சி. வைத்தியலிங்கம் மறைந்த பின்னர், சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் "கங்கா கீதம்" என்ற பெயரோடு வைத்தியலிங்கத்தின் பதினேழு சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியீடு செய்துள்ளார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு அண்மைக்காலத்தில் வெளிநாட்டில் வெளியீடு செய்யப்பட்டது. "கங்கா கீதத்தில் இடம்பெற்ற பாற்கஞ்சியும்", இலங்கையர்கோனின் "வெள்ளிப் பாதசரமும்" உயர்தர வகுப்பு மாணவர்களின் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ்விருவரும் சிறுகதைத்துறையில் ஏற்படுத்திய எழுச்சியைத் தொடர்ந்து, எழுத்துத் துறையில் கால் பதித்த ஏழாலைக் கிராமத்தவர் பலராவர். பத்திரிகைகளும், வானொலியும் அவர்களது ஆக்கங்களை ஏற்று ஊக்கம் தந்தன.

புகையிரத நிலைய அதிகாரியாகக் கடமையாற்றிய சி.சிவஞானசுந்தரம் அவர்கள் கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் என்று பல வடிவங்களில் எழுத்தாக்கங்களை உருவாக்கியுள்ளார். சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பல கட்டுரைகள், தினகரன் வாரமஞ்சரியில் சிறுகதைகளையும் எழுதியுள்ளார். "மாலா நீ என்னை மறந்து விடு" என்ற சிறுகதைத்தொகுதியும் இவரது ஆக்கமாக வெளிவந்தது. தினகரன் நாளிதழ்களில் மூன்று தொடர்நாவல்கள் பிரசுரமாகியுள்ளன. "நெஞ்சில் நிறைந்தவள்" என்ற நாவல் வெளியீடு செய்யப்பட்டது. பல வானொலி நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். இலங்கை கலைக்கழகம் 1968ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்திய நீண்ட நேர நாடகப் போட்டியில் சி. சிவஞானசுந்தரம் அவர்களின் "ஆசையும் பாசமும்" என்ற நாடகம் மூன்றாமிடம் பெற்று பாராட்டப்பட்டது. இவற்றை விட, வீரகேசரி, ஈழகேசரி ஆகியவற்றிலும் பல ஆக்கங்கள் எழுதி சிறந்ததோர் எழுத்தாளராக விளங்குகிறார்.

திரு. தா. சண்முகநாதன் எழுத்துத்துறையில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர். வானொலி நிகழ்ச்சிகளிலும், பத்திரிகைகளிலும் இவரது பல ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பல நாடகங்களை எழுதி மேடை ஏற்றி, நடித்து "சோக்கல்லோ சண்முகம்" என்று புகழ் பெற்றார்.

"கலாவதி" என்ற சஞ்சிகை இவரால் வெளியிடப்பட்டு வந்தது. விமர்சகராக, வர்ணனையாளராக, வில்லிசைக் கலைஞராக விளங்கும் சண்முகநாதன் அவர்கள் சிறுகதைகளும், நாவலும் எழுதியுள்ளார். "கோமதியின் கணவன்" என்ற இவரது நாவல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் "மல்லிகை" சஞ்சிகையில் செங்கையாழியன் ஈழத்தில் வெளியான நாவல்களின் தொகுப்பினை வெளியிட்டார். அதில் சிவஞானசுந்தரம் அவர்களின் "நெஞ்சில் நிறைந்தவள்", சண்முகநாதன் அவர்களின் "கோமதியின் கணவன்", இலங்கையர்கோன், வைத்தியலிங்கம் ஆகியோரின் மொழிபெயர்ப்பு நாவல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

திரு. அ. உமாசங்கரும் சிறுகதை, கட்டுரை முதலான பல ஆக்கங்கள் படைத்துள்ளார். வானொலியிலும், பத்திரிகை, சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. சட்டத்தரணியான உமாசங்கரின் கதைகளில் நல்ல தத்துவக் கருத்துக்களைக் காணலாம். "பொய்ம்மான்", "ஒரு நாய் குரைக்கிறது" முதலான ஆக்கங்கள் பலராலும் பாராட்டப்பட்டவை.

திரு. இ. இராஜேஸ்வரன் கதைகள், வானொலி ஆக்கங்கள், நாடகப் பிரதிகள் பல எழுதி, சிறந்த எழுத்தாளராகவும், நடிப்புத்திறன் மிக்கவராகவும் விளங்குகிறார்.

ஏழாலையிலே பல பெண் எழுத்தாளர்களும் புகழ் பெற்று விளங்கியிருக்கிறார்கள். இலங்கையர்கோன், வைத்தியலிங்கம் ஆகியோரின் எழுத்து வேகத்தைத் தொடர்ந்து அவர்களது உறவினர்களான பெண்கள் பலர் எழுத்துத்துறையில் ஓர் உத்வேகத்துடன் ஈடுபட்டார்கள். அவர்களில், மூத்த பெண் எழுத்தாளராக விளங்குபவர் வைத்தியலிங்கத்தின் சகோதரியான தங்கரத்தினம் கந்தப்பசேகரம் அவர்கள். இவர் தம் சொந்தப் பெயரிலும், "மதுராந்தகி" என்ற புனைபெயரிலுமாகப் பல ஆக்கங்கள் எழுதியவர். "மௌனத்தவம்" முதலான பல கருத்தாழம் மிக்க கதைப்படைப்புகள் வானொலியில் ஒலிபரப்பாகி, வானொலி நேயர்கள் பலரின் பாராட்டுக்களையும், நட்பையும் இவருக்குப் பெற்றுக் கொடுத்தன.

திருமதி நாகபூஷணி பாலசுப்ரமணியம் தினகரனிலும், யாழ்ப்பாணத்தில் வெளியான பல சஞ்சிகைகளிலும் சிறுகதைகள் எழுதியுள்ளார். சொந்தப் பெயரிலும் எஸ்.பி. துளசி என்ற புனைபெயரிலும் வானொலியில் இவரது ஆக்கங்கள் பல இடம்பெற்றுள்ளன. உணர்ச்சி ததும்பும் அற்புதமான கதைகள் இவருடையவை.

திருமதி மாதினி ஆனந்தநடராஜா 1960களிலிருந்து இன்று வரை எழுதிக் கொண்டிருப்பவர். உணர்ச்சித் துடிப்பும், உயரிய கருத்துக்களும் கொண்ட இவரது கதைப்படைப்புகள் ஈழநாடு, மித்திரன், வீரகேசரி, தினமுரசு முதலான பத்திரிகைகளிலும், 'மல்லிகை', 'நான்' போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. முதலில் "தமிழ் குடி கொண்டான்" என்ற புனைபெயரிலும், தற்போது "ஆனந்தி" என்ற பெயரிலும் எழுதி வருகிறார்.

திருமதி ஞானாம்பிகை திருச்செல்வம் கே. ஆர். ஜானா என்ற புனைபெயரில் கவிதை, சிறுகதை ஆக்கங்கள் படைத்துள்ளார். வீரகேசரி, வானொலி மஞ்சரி போன்றவற்றில் எழுதியிருக்கும் இவர், கூட்டுறவுச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் "ஓர் உரிமைப் பிரகடனம்" என்ற கதைக்காகப் பரிசு பெற்றார். தற்போது இவர் கனடாவில் வாழ்கிறார்.

திருமதி புஸ்பராணி, "தமிழ்ப்பிரியா" என்ற புனைபெயரில் பத்திரிகைகள், இந்தியச் சஞ்சிகைகளில் ஏராளமான சிறுகதைகள் எழுதியுள்ளார். வானொலி நிகழ்ச்சிகளில் இவரது அற்புதமான கவிதைகளும்,

கதைகளும் ஒலிபரப்பாகியுள்ளன. "கருவிகள்" முதலான இவரது கதைகள் பல, பெரும் வரவேற்பும், பாராட்டுகளும் பெற்றன. இவரது சிறுகதைகளின் தொகுப்பு நூலொன்று வெளிவரவிருக்கிறது.

திருமதி சீதாலட்சுமி பரமேஸ்வரன் எழுத்துத்துறையில் பல பரிசுகள் பெற்றுச் சாதனை படைத்தவர். "ஜனகன் மகள்" என்ற புனை பெயரில் பல நூற்றுக்கணக்கான வானொலி நாடகங்கள் எழுதிச் சன்மானம் பெற்றவர். இவர் எழுதிய "விழுதுகள்" என்ற குறுநாவல், வீரசேகரி நடாத்திய கனகசெந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றது. முரசொலி பத்திரிகையின் சிறுகதைப் போட்டியில் ஜனகன் மகளின் "விடைகளே விடுகதையானால்" என்ற ஆக்கம் இரண்டாமிடம் பெற்றது.

திருமதி யோ. பவானி "பூங்கொடி" என்ற புனைபெயரில் வானொலி நிகழ்ச்சிகளில் கதையும், கவிதையுமாகப் பல ஆக்கங்கள் எழுதியிருக்கிறார். திருமதி கௌ. கலாதேவி யாழ். எவ்.எம் நடத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்றதோடு, சிறுகதைகளும் எழுதியுள்ளார். திருமதி ம. சியாமளா மரபுக் கவிதைகளாகவும் புதுக்கவிதைகளாகவும் பெரும் எண்ணிக்கையான அற்புதமான கவியாக்கங்களை வானொலி நிகழ்ச்சிகளுக்காக எழுதியுள்ளார்.

புதிய தலைமுறை எழுத்தாளர்களை நோக்குமிடத்து அவர்கள் கதை எழுதுவதில் ஈடுபடாமல் கவிதை மற்றும் நாடகம் எழுதுவதிலேயே நாட்டம் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. திரு. கு. றஜீபன் 'மௌனத்துயில்', 'வலிகளைத் தாங்கி', 'ஒரு நதியின் தேடல்' ஆகிய கவிதைத் தொகுதிகளை எழுதி வெளியீடு செய்துள்ளார். திரு. சி. செந்தூரன் நாடக ஆக்கங்கள பல எழுதிப் பரிசுகளும் பெற்றுள்ளார். திரு. கு. கிரீசனும் சில பிரசுரங்களில் நல்ல எழுத்தாற்றலைக் காட்டியுள்ளார்.

செல்வி. க. ஜெயவாணி, 'ஏழாலை வாணி' என்ற பெயரில் வானொலி நிகழ்ச்சிகளில் பல கவிதைகளை எழுதியிருக்கிறார். ஏழாலை தெற்கைச் சேர்ந்த தர்சினி குண்டுமணி "பெண்ணியம்" பற்றி எழுதிய பல கவிதைகள் வானொலியில் ஒலித்திருக்கின்றன.

இவர்களைப்போல், வளர்ந்து வரும் இன்றைய எழுத்தாளர்கள் நவீன இலக்கியமான வசன கவிதை வடிவிலேயே தமது ஆக்கங்களைப் படைக்கின்றார்கள்.

ஆனால், ஏழாலையின் பழம்பெரும் எழுத்தாளர்களோ பலபல வடிவங்களில் எழுத்து ஆக்கங்கள் படைத்துப் புகழ்பெற்றுள்ளார்கள். அவர்களுக்குப் புகழ்சேர்த்த படைப்புகள் ஒவ்வொன்று இங்கே தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| ஐ. பொன்னையா | - | சுவேதா சுவதரம் |
| மு. ஞானப்பிரகாசம் | - | Tamilakam and Saiva thought |
| மு. கந்தையா | - | திருக்கேதீச்சர மான்மியம் |
| நா. முத்தையா | - | ஈழத்துச் சித்தர்கள் |
| சிவ. சண்முகவடிவேல் | - | திருவடிப் பெருமை சிந்திப்பரியன |
| சி. சக்திகிரீவன் | - | சிவனருளமுதம் |
| இலங்கையர்கோன் | - | வெள்ளிப்பாதசரம் |
| சி. வைத்தியலிங்கம் | - | கங்கா கீதம் |
| தா. சண்முகநாதன் | - | கோமதியின் கணவன் |
| முத்துச்சாமி ஆசிரியர் | - | ஏழாலையூர் |
| சி. சிவஞானசுந்தரம் | - | நெஞ்சில் நிறைந்தவள் |

| | | |
|---|---|---|
| ப. சீதாலட்சுமி | - | விழுதுகள் (வீரகேசரி) |
| எம். இந்திராணி | - | வண்டரித்த குருத்து (வீரகேசரி) |
| தி. ஞானாம்பிகை | - | ஒரு திரஸ்காரம் (வீரகேசரி) |
| மு. புஸ்பராணி | - | கருவிகள் |
| பா. நாகபூஷணி | - | இதய வீணை |
| ஆ. மாதினி | - | தாயுமானாள் (நான்) |

ஏழாலையின் எழுத்துத் துறையின் வரலாறு ஆரம்பமான காலத்திலிருந்து இன்றுவரை எழுத்தாளர்கள் இணைந்து பல சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளார்கள்.

ஐ. பொன்னையா அவர்கள் 1940களில் 'கலாவல்லி' என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். அதனைத் தொடர்ந்து திரு.தா.சண்முகநாதன் 'கலாவதி' என்ற சஞ்சிகையை வெளியிட்டார். அவலக் காலத்தின் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அச் சஞ்சிகைகளில் வெளிவந்தன.

1960களில் திரு.இ.சந்திரசேகரம் 'வள்ளுவன்' என்ற சஞ்சிகையைக் கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டார். வள்ளுவன் சஞ்சிகையில் அப்போதைய எழுத்தாளர்களாக விளங்கிய ஆனந்தி, நாகபூசணி முதலானோர் ஆக்கங்கள் எழுதியுள்ளனர். அச்சஞ்சிகையில் இ.கணேசராசா அவர்கள் சிறந்த சரித்திரத்தொடர் நவீனம் மற்றும் துப்பறியும் தொடர் கதையையும் எழுதியுள்ளார்.

1990களில் "நந்தா விளக்கு" என்ற கையெழுத்துப் பிரதியை சகுந்தலா தயாலிங்கம், கலாதேவி கௌரிகாந்தன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வந்தனர்.

கடந்தவருடம் "சைவசிந்தாந்தம்" என்ற சஞ்சிகையை கு.றஜீபன் அவர்கள் காலாண்டுச் சஞ்சிகையாக வெளியிட்டார்.

பத்திரிகை, வானொலி முதலான ஊடகங்கள் மூலம் பிரபலமான ஏழாலையின் எழுத்தாளர்கள் இச்சஞ்சிகைகளிலும் எழுதிப் புகழ்பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சாதனை படைத்த எழுத்தாளர்கள் வரிசையிலே இருபத்தேழு நூல்களை உருவாக்கிய மு. கந்தையா அவர்கள் முதலாக ஏழாலையின் பல எழுத்தாளர்கள் கல்வி கற்ற பாடசாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை என்பது பெருமைக்குரியது.

✵ ✵ ✵

உண்மையான செல்வத்தைப் பெற முதல் வழி உள் மனத்திற்குள்ளேயே அந்தச் செல்வத்தைக் கொண்டு வரவேண்டும். போட்டி, பொறாமை, பகைமை, தன்னலம், அடக்கமின்மை முதலிய அழிவுப் பண்புகளை முதலில் உள் மனத்திலிருந்து அகற்றுங்கள். நம்பிக்கையுடன் உழையுங்கள். ஏற்றமிகு செல்வம் உங்களைத் தேடி வரும்.

– *ஜேம்ஸ் ஆலன்*



புலமை மாணவர்கள் - 2008




மேல்நாட்டு வாத்திய அணியினர்



"5S" திட்டத்தில் அலுவலகம்



விரைந்துவரும் நவீன தகவற் தொழில்நுட்பம்



# தமிழ் இலக்கண ஆசிரியர்களின் சொற்பாகுபாடு

**பண்டிதர் க. நாகலிங்கம்**

தமிழ்மொழியிற் செய்யுள்கள் அமைப் பதற்குப் பயன்படுஞ் சொற்களாக நான்கு வகைச் சொற்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அவையாவன, இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்பனவேயெனச் சொல்லதி காரத்தின் இறுதியியலாகிய எச்சவியலின் முதலாஞ் சூத்திரத்திற் கூறியுள்ளார். அச் சூத்திரம்,

"இயற்சொல் திரிசொல், திசைச்சொல் வடசொல்லேன் றனைத்தே செய்யுளீட்டச் சொல்லே" (தொல்.எச்-1)

என்பது. திசைச்சொல் என்பது தமிழ் நாட்டினை அண்டியுள்ள திசைகளிலுள்ள மொழிகளிலிருந்து தமிழ் மக்கள் பெற்றுக் கொண்ட சொற்கள் என்பது ஐயத்துக்கிடமில் லாததும் இலக்கண ஆசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமாகும். தொல்காப்பியர் திசைச் சொற்களாகச் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுகளைப் பெயர் குறிப்பிடாது தொகை கூறியுள்ளார். இந்தப் பன்னிரண்டு நாடுகளை விடவேறு பதினேழு நாட்டு மொழி களைத் திசைச் சொற்களென நன்னூலாசிரியர் சேர்த்துள்ளார். அவை நன்னூலார் காலத்தில் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்த சிங்களம், சோனகம், சாவகம், சீனம் முதலியன, என நன்னூல் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுவர். இன்று புதிய இலக்கணம் படைப்போர் தமிழில் வந்து வழங்கும் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கில தேச மொழிகளையும் திசைச் சொல்லில் அடக்காமல் விடமுடியாது. அதற்கப்பாலுஞ் சென்றுதிசை மொழிகளை நாடவேண்டிய தேவை யும் உளது. மேற்குமொரு திசைதானே யென்று வாதிடுவதை மறுக்கமுடியாது. தமிழ் மக்கள் பூமிப்பந்தின் எல்லாத்திசை நாடுகளிலும் குடி யேறியுள்ளதால் அம்மொழியிலிருந்து தமிழ் எழுத்துக்களால் எழுதக்கூடிய வடிவம் பெற்று வருஞ் சொற்களை விலக்க முடியாது.

வடசொல் என்பது ஆரிய மொழியில் இருந்து தமிழில் வந்து வழங்கும் மொழிகள் என்பது எல் லார்க்குந் தெரிந்ததே. வடக்கும் ஒரு திசையாலால் அதையுந் திசைமொழிகளில் ஒன்றாகக் கூறலா மாயினும் தமிழ் மொழியில் சமஸ்கிருத மொழிக் கிருந்த பெருஞ் செல்வாக்கினால் அதற்குத் தனி யிடங் கொடுக்கப்பட்ட தென்பது உண்மையே. வட மொழிப் பாண்டித்தியம் இல்லாதாரைக் கற்றவர் எனத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒருகாலம் இருந்ததை நாங்கள் மறுக்கமுடியாது. தமிழ் மக் கள் இயற்றிய நூல்கள் பல சமஸ்கிருத மொழியில் அமைந்ததைப் பலரும் அறிவர். எனவே வடமொழிச் சொற்களைத் தமிழ் மக்கள் விரும்பியேற்ற ஒரு காலந் தமிழ் நாட்டிலிருந்தது பேருண்மை. தமிழ்ச் சொற்களோடு வடசொற்களையும் கலந்து எழுதும் மணிப்பிரவாள நடை தமிழில் இடம்பெற்றதும் அந்நடையில் நூல்கள் எழுந்ததும் வரலாறு. அந் நடை நைந்த நடையாக நொந்து கைவிடப்பட்டது தமிழ் மாது செய்த தவப்பயனே எனலாம். தொல்காப் பியர் கூறிய நான்கு மொழிகளிலும் திசை மொழி யும் வடமொழியும் ஒருவாறு விளக்கப்பட்டன.

தொல்காப்பியர் வடசொல் தமிழில் வழங்கு மாற்றிற்குச் சொன்ன இலக்கணச் சூத்திரம்,

*"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல் லாகுமமே"*

என்பது.

வடசொற்கள் வடவெழுத்தை நீக்கித் தமிழ் எழுத்தோடு கூடிய மொழிகளாய் அமைய வேண்டு மென்பது தொல்காப்பியர் ஆணை. எழுத்து என் பது ஒலிவடிவையும் வரிவடிவையுங் குறிப்பதால் எழுதப்படும் வடிவமல்லாமல் ஒலி வடிவமும் வடமொழிக்குரியதாயமையக் கூடாதென்பதுந் தொல்காப்பியர் ஆணை. ஆதலால், தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொதுவான எழுத்துக்களே தமிழில் வந்து வழங்குவனவென்பது தெளிவு. இன்னொரு சூத்திரம் -

"சிதைந்தன வரினும் இயைந்தனவரை யாய்" என்பது.

இச்சூத்திரப்படி வடவெழுத்துக்கள் சிதைந்து தமிழுக்குரிய ஓசையும் வடிவும் பெற்றுவரின் அவற்றையுஞ் சேர்க்கத் தொல்காப்பியரது ஆணை கிடைக்கிறது. முதற் சூத்திரம் பிற்காலத்தார் வேண்டும் தற்சம மொழிகளே தமிழில் வந்து வழங்குவதைக் கூற இரண்டாவது சூத்திரம் தற்பவத்திற்கும் ஒருவாறு இடஞ் செய்கிறது.

திசைச்சொல் வடசொல் போக எஞ்சியிருப்பவை இயற் சொல்லுந் திரிசொல்லுமே யாம். இயற்சொல் என்பது –

*"இயற்சொற் றாமே,*
*"செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்*
*தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே"*

என்பது தொல்காப்பியச் சூத்திரம். செந்தமிழ் நிலத்து வழக்கோடு பொருந்திய தாய்த் தமிழ் மரபு பிறழாமல் வழங்குஞ் சொல்லே இயற்சொல்லென்பது இச்சூத்திரத்தால் துணியப்படும். இயற்சொல் நான்கு பகுப்புக்களையுடையது. அவை பெயர், வினை, இடை உரி என்பனவாம்.

திரிசொல் யாது என்பது இனிக் கவனிக்கத்தக்கது. தமிழ்ச்சொல் திசைச்சொல், வடசொல் என்பவற்றைத் தவிர வேறு சொற்களின்மையால் இம்மூன்றனுள்ளும் திரிசொல் எதன் பாற்பட்டதென்பது ஆராய்தற்பாலது. அது திசைச்சொல்லிலும் வடசொல்லிலும் அடங்காமையால் செந்தமிழாயிருந்து திரிவுபட்டவை என்பது தெளிவாகும். செந்தமிழ் வழக்கில் இயற்கையாயிருந்து காலத்தால் திரிந்து இயற்சொல்லென்ற நிலையிலிருந்து வழுவியவையே திரிசொல் என்பது உணரத்தகும். திரிசொற்கள் பெரும்பாலும் வழக்கிழந்தவை என்பது பெறப்படும். பழந்தமிழ் நூல்களாய சங்ககால இலக்கியங்களின் பலசொற்கள் இன்று திரிசொற்களாகிவிட்டன. பதிற்றுப்பத்து என்னும் நூலில் இத்தகைய திரிசொற்களைப் பரக்கக் காணலாம். இத்தகைய மொழிகளை இலக்கணங்கூறி வகைப்படுத்துவது சிரமமாயினும் தொல்காப்பியர் நுட்பமாகத் திரிசொல்லை விளக்கியுள்ளார். அச்சூத்திரம்,

*"ஒருபொருள் குறித்த வேறு சொல் லாகியும்*
*வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்*
*இருபாற் றென்ப திரிசொற் கிளவி"* –

என்பது ஒருபொருள் குறித்த பலசொல்லிருப்பதால் அவற்றிற் சில திரிசொற்களாகிவிட வாய்ப்புண்டு. அதேபோலப் பலபொருள்களைக் குறித்து ஒரு சொல் வரும்போதும் சில பொருள்களுக்கு அச்சொல் வழங்குவது வழக்கொழியும் நிலை ஏற்படும். இந்நிலையே தமிழில் திரிசொற்கள் உண்டாகக் காரணங்களாகும். திரிசொற்களும் திசைச் சொற்களும் வடசொற்களும் பெயர்ச் சொற்களே தமிழில் வந்து வழங்குவதால் அவற்றை வினை, இடை உரி எனப் பிரிக்கமுடியாது. எனவே சொற்களைச் சேனாவரையர் திரிசொல்லை ஒன்றாகவும் இயற்சொல்லை பெயர், வினை, இடை, உரி நான்காகவும் இவற்றோடு திசைச்சொல், வடசொல் என்பவற்றையுஞ் சேர்த்து தமிழில் வழங்கு மொழிகள் ஏழென வகுத்த முறை பாராட்டத்தக்கது. நன்னூலுரையாசிரியர்கள் திரிசொல்லிலும் வினை, இடை, உரிப் பாகுபாடு காட்டியது பொருத்தமற்றதே. நன்னூலாசிரியர் பவணந்தி முனிவர் செய்த சூத்திரத்தின் கருத்தும் உரையாசிரியர்களால் மாறுபடுத்தப்பட்டுள்ளது. நன்னூற் சூத்திரத்தை இப்போது காண்போம். அதுவே

"இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
என விரண்டாகும் இடையுரி யடுத்து
நான்குமாந் திசைவடசொ லணுகா வழி"

(நன்.பெய.13)

என்பது அச்சூத்திரம். முதலில் தமிழ்ச் சொற்களை இயற்சொல் எனவும் திரிசொல் எனவும் இரு வேறு வகைப்படுத்தினார். அவற்றில் இயற்சொல் நான்கு வகைப்படுமெனக் காட்டினார். திசை, வட சொற்களைச் சேராதவிடத்துத் தமிழ்ச் சொல் இவ்வைந்துமேயாம். அவற்றைச் சேர்க்கும் வழி தமிழில் வழங்கும் மொழிகளென்பது நன்னூலார் கருத்து என்பது தெளிவாகத் தெரிகிறது. இது தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர் சேனாவரையர் கருத்தைத் தழுவியதுமாம் நன்னூல் உரையாசிரியர் காட்டிய இச்சூத்திரப் பொருள் பொருத்தமற்றதென விடுக.

◆ ◆ ◆



# பண்டிதமணியும் அவர் தமிழ் நடையும்

வாழ்நாள் பேராசிரியர்
**அ. சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய முயற்சியின் பெரும்பகுதி ஈழத்துக் குரியது எனக் கூறுவர். ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, நட்டுவச் சுப்பை யனார், சித்திலெப்பை மரைக்காயர் போன்ற வர்கள் ஈழத்துத் தமிழியற் பங்களிப்பினைச் செலுத்தியதுடன் ஓர் ஈழத்துத் தமிழ்ப் பாரம் பரியத்தினையும் உருவாக்கினர். இம் மரபு வழித் தமிழ்ப் பாரம்பரியத்தின் வளர்ச்சியின் நிறைவாக அமைந்தவர் மட்டுவில் தந்த பண்டி தமணி சி. கணபதிப்பிள்ளை. இலங்கைப் பல்கலைக்கழகம் முதன்முதலாகச் சிறப்புச் செய்த மரபுவழித் தமிழ்ப் புலமையாளரும் இவரேயாவர். தமிழ் நாட்டிலும் ஒரு பண்டித மணி இருந்தவர். இதை நன்கு அறிந்த கலை மகள் ஆசிரியர் கி.வா.ஜகநாதன் "பண்டித மாமணி" என்று இவரைப் பாராட்டினார்.

பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிப் பல்கலைக்கழகம் சிறப்புச் செய்தபோது இம் மரபுவழித் தமிழ்ப் புலமை யாளனைச் சிங்கள அறிஞர்களும் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. 1977இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கூட்டம் ஒன்றில் பண்டிதமணியின் பெயரை இலக்கிய கலாநிதிப் பட்டத்துக்குப் பரிந்துரைக்க முயன்றபொழுது மட்டக்களப்புப் புலவர் மணியின் பெயரும் அங்கு குறிப்பிடப் பட்டது. ஏதோ வகையில் மட்டக்களப்புடன் தொடர்புடைய என்னைப் பேராசிரியர் கைலாச பதி (பீடத் தலைவர்) நோக்கினார். இருவரும் மரபுவழித் தமிழ்ப் புலமையாளர் என்பதிலே எவ்வித ஐயமுமில்லை. ஈழத்து இலக்கிய வழியை இனங்கண்டு எமக்குக் கூறிய பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் முதலிலே வழங்கலாம் எனக் கருத்துக் கூறி னேன். பிற்காலத்தில் "நானும் பண்டிதமணி யும் ஒரு மரத்தில் பழுத்த இரு கனிகள். பண்டிதமணிக்கு முதலில் சிறப்புக்கிடைப்பது பொருத்தமே" எனப் புலவர்மணி கூறியதைப் பார்த்து மகிழ்வடைந்தேன். பண்டிதமணிக்கு ஏன் இந்தப் பட்டம் வழங்கப்படுகின்றது என்று வேந்தருக்கு அறிமுகப்படுத்தி அவரை முன்னி லைப்படுத்தும்போது பேராசிரியர் சு. வித்தியா னந்தன் பண்டிதமணியின் பல்வேறு சிறப்புக் களை எடுத்துக்கூறினார். அவற்றுள் ஒன்று அவர் உருவாக்கிய ஒரு பெரிய மாணவர் குழாம் பற்றியது.

அவர் உருவாக்கிய மாணவர் குழாத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பண்டிதமணியின் வாழ்வுக் கோலங்களை நன்கு உள்வாங்கிய வர்களாகவே அவர்கள் திகழ்ந்து வந்துள்ள னர். பண்டிதமணியின் கற்பித்தலை நன்கு இரசித்த அவர்களும் அவரைப்போலக் கற் பிக்கவும் அவருடைய கற்பித்தல் உத்திகளை அறியாதவர்களுக்குச் சுவையாகக் கூறியும் வந்தனர். இந்துபோர்ட் இராசரத்தினம் முகா மைத்துவம் செய்த பள்ளிக்கூடங்களிலேயே இவர்கள் கற்பித்தும் வந்தனர். மன்னவன் கந்தப்புவிடமிருந்து நாம் பல சுவையான தகவல்களை அறிந்துள்ளோம். பண்டித மணியின் கற்பித்தலை இரசித்துப் பயன் பெற்றவர் அவர். பண்டிதமணி வகுப்பிலே குறிப்பிட்டதாக ஒரு சுவையான கதையினை மன்னவன் கந்தப்பு எங்களுக்குச் சொன்னார். பாஞ்சாலியினுடைய துகிலை உரித்தபோது கண்ணனின் அருளால் பெருந்தொகையான சேலைகள் வைகுண்டத்திலிருந்து வந்தன.

இந் நிகழ்வு முடிந்து பல நாட்களுக்குப் பின்னர் பாஞ்சாலிக்கு அனுப்பிய சேலைகளைப் பற்றி திருமாலுக்கு மகாலட்சுமி நினைப்பூட்டி னாளாம். உடனே எல்லாச் சேலைகளையும் திரும்பிவரும்படி கையசைத்தாராம். எல்லாம் வந்து சேர்ந்துவிட்டன. அவற்றுள் பலவற்றை கௌரவர்களுடைய மாளிகைப் பெண்கள் அணிந்திருந்தனராம். திடீரெனச் சேலைகள் போனபடியால் அவர்களிற் பலர் வெளியே வரமுடியாமலிருந்ததாம். கேட்டு வயிறு குலுங் கச் சிரித்தோம். பண்டிதமணி இக்கதையைச் சொன்னபோது அன்றைய வகுப்பு எப்படி இருந்திருக்குமென்பதை நாம் ஊகிக்கக்கூடிய தாயுள்ளது.

மாணவர் குழாத்தை உருவாக்கியதுடன் பல நல்ல நூல்களையும் எழுதியுள்ளார். அவருடைய தமிழ்நடை எவ்வாறமைந்துள்ளது என்பதனை அவருடைய எழுத்துக்களூடாக விளக்கமுடியும். பண்டிதமணியின் தமிழ் நடை பல்வேறு புற வடிவங்களை உடையது. எனினும் அவற்றுக்கு அடிப்படையாக ஓர் உள்ளீடு உள்ளது அது என்ன?

## ஆசிரிய நடை

தமிழ்ப் பாவிலே முதலிலே தோன்றியது ஆசிரியப்பாவே. இயற்கையான அமைப்பை யுடைய அப்பாடல் உலகத்திலுள்ள பூர்வீகப்பாட லோடொத்ததாகும். சி.எம்.பௌரா என்னும் மானிடவியலாளர் பூர்வீகப் பாடல்கள் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

"காட்சிகள், நிகழ்ச்சிகள், எதிர்பாராத சந்தர்ப்பம் ஆகியவற்றால் ஏற்பட்ட உணர்ச்சி களையொட்டிப் பூர்வீக மனிதனின் மனதில் ஏற்படும் பிரதிபலிப்புக்களின் தொகுப்பே பூர்வீகப் பாடல்களாகும். அந்தமான் பாட லொன்று இதன் பண்பினைக் காட்டுகின்றது. சிறிய மரக்கலம் ஒன்றினைச் செய்பவன் தன் தொழிலிலே ஈடுபட்ட மகிழ்ச்சியில் மற்றவர் களும் மகிழ வேண்டுமென்று பாடுகிறான்".

மற்றவர்களுடைய கவனத்தை ஈர்த்துப் பாடுவது பூர்வீகப் பாடல்களின் பண்பாகும். இப் பண்பு அப்பாடல்களின் வளர்ச்சி நிலை யான ஆசிரியப்பாவிலும் உண்டு என்பதற்குத் தொல்காப்பியம் சான்று பகரும். பாவகைக ளுக்கு ஓசை கூறும் தொல்காப்பியர் ஆசிரி யத்துக்கு ஓசை அகவல் என்றார். இவ்வோசை பற்றிப் பேராசிரியர் தம் உரையிற் கூறுவதை நாம் மனங் கொள்ள வேண்டும்.

"அகவிக் கூறுதலான் அகவல் எனக் கூறப்பட்டது. அஃதாவது, கூற்றும் மாற்றமு மாகி ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறாது தாங்கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோராறும் உண்டு. அதனை வழக்கி லுள்ளார் அழைத்தலென்றுஞ் செல்லுப. அங்ஙனஞ் சொல்லுவார் சொல்லின்கண் எல் லாந் தொடர்ந்து கிடத்த ஓசை அகவலெனப் படும்; அவை தச்சுவினை மாக்கள் கண்ணும் கட்டும் கழங்குமிட்டு முரைப்பார். கண்ணும் தம்மில் உறழ்ந்துரைப்பார் கண்ணும் கேட்கப் படும். கழங்கிட்டுரைப்பார் அங்ஙனமே வழக்கி னுள்ளதாய்க் கூறும் ஓசை ஆசிரியப்பாவெனப் படுமென்றவாறு"

மற்றவர்களை அகவிக் கூறுதல், தாங் கருதியவாறு வரையாது கூறும் பண்புகளை யுடைய ஆசிரியர்களைப் போல இப்பாவின் பண்புகளும் அமைவதால் அது ஆசிரியப்பா வென வழங்கப்பட்டது. இதனை ஏன் இங்கு விரிவாகக் கூறினோமென்றால், அது பண்டித மணியின் உரைநடையின் அடிப்படையுடன் ஒத்திருப்பதேயாகும்.

பண்டிதமணி மிகச் சிறந்த ஆசிரியராக விளங்கியுள்ளார். விரிவுரைகளை மாணவ ஆசிரியர்கள் விளங்கிக்கொள்ளத்தக்கதாக வழங்கும் தகைமையுடையவராயிருந்தார். அவருடைய பேச்சுப் போல எழுத்தும் அமைந்து

விடுகின்றது. தொடக்ககாலப் பாட்டு மற்றவர்கள் கேட்டு விளங்கிக்கொள்ள அமைந்தது. அதனை ஆசிரியப்பாவென்றனர். மற்றவர்கள் படித்து எளிதாக விளங்கிக்கொள்ள அமைக்கப்படும் தமிழ் நடையினை ஆசிரிய நடை எனக் கூறு வது பொருத்தமாயிருக்குமென எண்ணு கிறேன். பண்டிதமணியின் தமிழ்நடையின் அடிப் படையான நடை ஆசிரிய நடையே எனலாம். ஓர் எடுத்துக்காட்டினை இங்கு தருகிறேன். **ஆறுமுகநாவலர்** என்னும் நூலில் நாவலரு டைய அடிப்படைக் கோட்பாடுகளைக் கூறுமிடம்:

"நாவலர் பெருமானைப்பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லும்படி கேட்டால் முதல் வார்த்தை : நாவலர் நீதியை விசாரித்தவர்.

இரண்டாவது : நாவலர் வேற்றுமையில் ஒற்றுமை கண்டவர் - என்ற இரு வார்த்தை களையும் சொல்லலாம்.

இவ்வாறு நாவலர் பற்றிய இரண்டு வார்த்தைகளை அறிமுகப்படுத்திவிட்டு ஒவ் வொன்றினையும் விரிவாக எடுத்துக்கூறு கிறார்.

"நீதி என்ற தமிழ் வார்த்தையில் அடங் காத தருமம் இல்லை. சத்தியம், அகிம்சை, இரக்கம், பொறை, அடக்கம் முதலிய தருமங் கள் எல்லாம் இதில் அடங்கும்" என்று கூறி "நீதியை நாம் நடத்தினால், ஒரு நாளைக்கு நீதி எழுந்து நம்மை நடத்தும்" என்னும் தத்துவத் தைக் குறிப்பிட்டு விரிவுரை செய்கிறார்.

"இனி, நாவலர் பெருமான் கண்ட வேற்று மையில் ஒற்றுமையைச் சிறிது நோக்குவோம்" என்று இரண்டாவது வார்த்தை விளக்கம் வழங்கப்படுகின்றது.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன். இந்த ஒருகுலம் ஆகும். ஒற்றுமையே உண்மையாய நிலையான ஒற்றுமை. இந்த ஒற்றுமை, வேற்று மையைப் பேணும் முறையிற் பேணுவதால் உண்டாவது. அறியாமை நோய் அப்படியே யிருக்க, அதைப்போக்கும் முறையைச் சிந்தியாது சொல்லளவில் ஒற்றுமை பேசிப் பூசி மெழுகுவது, வேற்றுமையை மேலும் அதிகரிப்ப தாயிருக்கும். சிரங்கு வருத்தத்திற்கு நல்ல வைத்தியர்கள் வெளிப்பூச்சு மருந்து கொடுப்ப தில்லை.

*"வேற்றுமை தெரிந்த நாற்பால்' என்கிறது புறநானூறு. நாற்பால் நால் வருணம். பெரிய புராணம் நாற்பாலுக்கு மேலே ஐம்பால்களை எடுத்துக்கொண்டு, வேற்றுமையின் விளைவு ஒற்றுமையாதலைக் காட்டுகிறது"*

என்று இரண்டாவது வார்த்தை யினை விரித்துரைக்கிறார். இத்தகைய ஒரு நடைதான் பண்டிதமணியின் எல்லா எழுத்துக் களிலும் ஊடுருவிச் செல்கிறது. இந்நடை யினை 'ஆசிரிய நடை' என நான் கூற விழை கிறேன். இது மொழியமைப்பினை அடிப்படை யாகக் கொண்ட இனங்காணல் அல்ல. பொருளையும் வாக்கிய அமைப்புக்களையும் ஒருங்குசேரப் பார்த்து இட்ட பெயராகும்.

## ஆசிரிய நடையின் பல வகைகள்

1. **பகுப்பாய்வு நடை :** எடுத்துக்கொண்ட பொருளை பகுப்பாய்வு செய்து விளக்க மொழி அவருக்கு நன்கு துணை நிற்கின் றது. இலகுவான நடை எனினும் பொருத்த மான கலைச்சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. நாவலர் பற்றிய இரண்டு வார்த்தைகள் பற்றி மேலே தரப்பட்ட வற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.
2. **இலக்கிய இரசனை நடை :** பண்டித மணியின் **கம்பராமாயணக் காட்சிகள்** நூல்களில் இடம்பெறும் நடையை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

**கம்பராமாயணக் காட்சிகள்** நூலில் "முறுவல் உண்ட உயிர்" என்னும் கட்டுரையில்

இராமனுடைய தலைக்கோலம், முகம், கைகள், தோள் என்பன சீதைமேல் படையெடுத்துச் செல்கின்றன என்றும் அதற்குச் சீதை "நீங்கள் காலம் தாழ்த்தி வந்துள்ளீர்கள். ஏற்கனவே இராமனுடைய முறுவல் என்னுயிரை உண்டு விட்டு" என்று கூறினாள் எனப் பண்டிதமணி விரித்துரைக்கும் பகுதியினை இங்கு எடுத்துக் காட்டாகத் தருகிறேன். (பக்.25, 28)

*"இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும் '*
*சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்*
*சுந்தர மணிவரைத் தோளு மேயல*
*'முந்தி' என் உயிரை அம்முறுவல் உண்டதே"*

1. 'இந்திர நீலமொத் திருண்ட குஞ்சி'
2. 'சந்திர வதனம்'
3. 'தாழ்ந்த கைகள்'
4. 'சுந்தர மணிவரைத் தோள்'

என்றிங்ஙனம் சதுரங்க சேனைகள் வரிசை வரிசையாய்ச் செல்லவேண்டுமா?

'நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதியாகிவிடும்' என்பது தேவர் வாக்கு. எதற்கும் அளவு வேண்டும்! ஒரு பெண் பேதைமேல் இவ்வாறெல்லாம் படையெ டுப்பது நுனிக்கொம்பர் ஏறுவதேயாகும். படையெடுப்பின் கதி அவ்வாறு தான் முடிகின் றது. அவையெல்லாம் வெறுங்கையோடு வெள் கித் தத்தம் இருப்பிடத்துக்கு மீளுகின்றன. தேவி கைகொட்டிச் சிரிக்கிறாள். உங்கள் பகை நீங்கள் வரமுந்தியே குடிபோய்விட்டது. ஐயையோ பிந்திவிட்டீர்களே! பஞ்சபாண்ட வர்கள் மேற்சென்ற காளமாமுனியாயினீர் களே! என் நினைந்து என் செய்தீர்கள்! என் கின்றாள் பிராட்டி "முந்தி"யென். உயிரை அம் முறுவல் உண்டதே" என்பது அவள் கூற்று.

கவிதை இரசனையை ஏற்படுத்தும் வண்ணம் வினா வாக்கியங்களும் விளக்க வாக்கியங்களும் அமைகின்றன. இவை யாவற்றுக்குமூடாக ஒரு மென்மையான நகைச்சுவை இழையோடுகின்றது.

3. **இலக்கண நுணுக்க நடை :** பண்டித மணியின் அன்பினைந்திணை நூலின் அனுபந்தத்தில் 'ஒருமையின் சிறுமையும் பெருமையும் இருமையின் ஒருமையும்' என்னும் கட்டுரையிலே,

*"ஒருமையின் சிறுமை கைக்கிளை;*
*இருமையின் ஒருமை அன்பினைந்திணை;*
*ஒருமையின் பெருமை பெருந்திணை.*
*இவை முறையே துவைதம், அத்வைதம் ,ஏகம் எனப்படும்"*

என்னும் பகுதி இடம்பெறுகின்றது. சிறிய சிறிய வாக்கியங்கள் தர்க்க ரீதியாகக் கருத் தைப் புலப்படுத்தும்படியாக அமைக்கப்பட் டுள்ளன. தொல்காப்பியச் சூத்திரங்களைப் போல வாக்கியங்கள் இந் நூலிலே இலக்கண நுணுக்கங்களைப் புலப்படுத்தக் கையாளப் பட்டுள்ளன.

4. **நக்கீர (நக்கல்') நடை :** பண்டிதமணி பல இடங்களிலே நக்கீரப் பார்வையுடன் கண்டித்தும், ஏளனஞ் செய்தும், 'நக்கல்' ஆகவும் எழுதியுள்ளார். நாவலர் பெயரைப் பயன்படுத்தி உ.வே.சாமிநாதையர் எழுதிய கடிதம் பற்றி பண்டிதமணி எழுதியுள்ளதை இங்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம். ஆறுமுக நாவலர் என்னும் நூலிலே இப்பகுதி இடம்பெறுகின்றது :

"நாவலர் பதிப்புப் பாயிரத்தால் பிள்ளை ஆதீன வித்துவானாய்ப் பிரகாசித்தார் என்பதனைப் பொறாது, பாயிரஞ் செய்வதற்கு முன்னமே பிள்ளையை ஆதீன வித்துவானாக்கி நாவலர், ஆதீன வித்துவானான பிள்ளையிடம் பாயிரம்

பெறுவதற்கு, ஒருவர் மூலம் பெரிதும் இரந்து பின்னின்ற ஈரென்று,

அருவருக்கத்தக்க இரப்புரைக் கடிதமொன்றை நாவலர் பெயரால் புனைந்துவிட்டார்கள். பாயிரஞ் செய்யும்போது மகாவித்துவான் பிள்ளைஆதீன வித்துவான் ஆகவில்லை என்ற உண்மையைக் கண்டுபிடித்துவிட்டார் எவ்.எக்ஸ்.சி.

ஆதீன வித்துவான் ஆனபின், பிள்ளையின் பெயரை ஆளும்போது மகத்துவ சின்னத்தோடு நாவலர் முதலியோர் ஆளுவதை எடுத்துக்காட்டித் தம் கொள்கையை உறுதிப்படுத்தி நிறுவியிருக்கின்றார் எவ்.எக்ஸ்.சி.

ஐயர் அவர்களின் புனைந்துரைக் கற்பனையின் கிளையையே 1934இல் தறித்து வினைக்கெட்டோம். கற்பனைத் தருவின் மூலவேரையே தறித்துவிட்டார் எவ்.எக்ஸ்.சி."

"அருவருக்கத்தக்க இரப்புரைக் கடிதம்" என்று கூறுமிடத்துப் பண்டிதமணிக்கு ஏற்பட்டுள்ள சினம் புலப்படுத்தப்படுகிறது. "மூலவேரையே தறித்து விட்டார்" என்னும் தொடர் ஏளனத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

5. **நகை நடை :** நகைச்சுவை பண்டிதமணியின் நடையின் அடிநாதமாக அமைகின்றது. பலருடைய நடைகளுடன் பண்டிதமணியின் நடையையும் சேர்த்துத் தந்தால், பண்டிதமணியின் நடையை இலகுவிலே இனங்கண்டுகொள்ளலாம். அவருடைய **இலக்கியவழி, கம்பராமாயணக் காட்சிகள்** ஆகிய நூல்களிலே இத்தகைய நடையைப் புலப்படுத்தும் பகுதிகள் உள.

மேற்காட்டிய நடைவேறுபாடுகளைப் பொருள் அடிப்படையிலேயே இனங்காணுகின்றோம். இவற்றினுடைய மொழியமைப்பினை ஆராயின், விரிவாக எழுதலாம். அந்த ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டியதொன்று.

◆ ◆ ◆

✷ எப்படிப்பட்ட பலவீனத்தையும் வெல்ல ஒரு வழி உண்டு, அது என்ன? பலவீனத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்காமல், வலிமையைப் பற்றியே நம்பிக்கையுடன் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தாலே போதும்.

✷ சுதந்திரமானவராக இருங்கள். எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

✷ தெய்வ நம்பிக்கை என்பது ஒருபுறம் இருந்தாலும்கூட உங்களிடத்தே உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்கு எதிலும் வெற்றி கிடைப்பது அரிது.

✷ மனத்தின் சக்தியை அளவிட முடியாது. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படியே ஆகிவிடுகிறீர்கள்.

– ***விவேகானந்தர்***



# பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் "காதலியாற்றுப்படை" காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள்

பேராசிரியர் சிவலிங்கராஜா
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

தமிழிலே தோன்றிய இலக்கியங்களிலே ஆற்றுப் படை எனும் இலக்கிய வடிவம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. பழந்தமிழ் மக்க ளின் பண்பாட்டுக் கோலங்களைப் படம் பிடித்துக் காட்டும்மிகச்சிறந்த இலக்கியங்களாக ஆற்றுப்படைகளைக் கொள்ளலாம். ஆற்றுப்படை என்பது ஆறு + படை எனப்பிரிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்தல் என்பது பொருள்.

தொல்காப்பியப் பாடாண்திணைக்கு இலக்கணங் கூறு மிடத்துப் பின்வருமாறு கூறுவர்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்"
(தொல், பொருள்,புறத் 36)

ஆற்றுப்படை எனும் இலக்கிய வடிவத்தின் தோற்றத்தினைக் கூறும் இந்நூற்பா அதன் அமைப்பையும் சுட்டி நிற்கின்றது.

பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) எனும் ஐந்து ஆற்றுப்படைகள் இடம் பெற்றுள்ளமை இவ்விலக்கிய வடிவம் பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துகின்றது எனக் கருதலாம். பழந்தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அரசியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்களுக்கு "மூலபண்டாரமாக" விளங்கியனவற்றுள் முற்குறிப்பிட்ட ஆற்றுப் படைகளுக்கும் கணிசமான பங்குண்டு.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கட்டுரை, நாடகம், நாவல், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி முதலியவற்றிலே அழியாத புதிய தடங்களைப் பதித்தவர். கவிதைத் துறையினும் தமது ஆற்றலைப் புலப்படுத்தியவர். "யாப்பறிபுலவனாகத்" திகழ்ந்த இவரின் கவிதைகள் தனித்துவமும் சிறப்பும்வாய்ந்தவை. நெடுங்கவிதைகள்பாடுவதிலே மிகவும் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதற்கு இவரது "துவுதும் மலரே" என்னும் நூலும், காதலியாற்றுப்படையும் மிகச் சிறந்த சான்றுகள் எனலாம்.

இவர் காதலியாற்றுப்படையைப் பாடியமைக்குச் சில காரணங்களைச் சுட்டலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் இவருக்கிருந்த பற்றும், ஆர்வமும், ஆற்றலும் முக்கிய காரணமாக லாம். இவர் பழமையில் ஊறிப் புதுமையை அவாவும் பண்பு கொண்டவர். காதலியாற்றுப் படைத்தலைவனைப் பற்றிக் கூறுமிடத்துப் பின்வருமாறு குறிப்பிடுவர்.

"பழையன போற்றிப் புதியன வமைக்கும்
பகுத்தறிவாளன் பாருடைத் தலைவன்"

பேராசிரியர் கணபதிப்பிள்ளை தன்னையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டார் என்பதை மறுப்பது கடினம். பாட்டுடைத் தலைவனின் இருப்பிடம் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமது இல்லம் அமைந்திருக்கும் இடத்தினைக் குறிப்பிடுவதோடு அச்சூழலையும் விதந்து பாடுகின்றார்.

வடமராட்சியைச் சேர்ந்த பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் கணபதிப்பிள்ளை மட்டக்களப்பிலே திருமணம் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமது மனைவியை மனங்கொண்டுதான் இவ்வாற்றுப் படையைப் பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. 1950 ஆம் ஆண்டு இவ்வாற்றுப்படை நூலுருப் பெற்றுள்ளது.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஈழத்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கோலங்களை அழிந்து போக விடாது பதிவுசெய்து பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துடையவராகத் திகழ்ந்தார் என்பதை இவரது படைப்புகள் புலப்படுத்தி நிற்கின்றன. இவர் நாட்டுப்புறவியலில் அதிக நாட்டம் காட்டியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நவீன இலக்கியங்களில் மாத்திரமன்றிப் பழைய இலக்கிய மரபில் புதிய விடயங்களைச்

சொல்ல வேண்டும் என்ற ஆவலும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடம் குடிகொண்டிருந்ததென லாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொதுவாக வும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாகவும் அமைந்த பண்பாட்டுக் கோலங்களையே பேராசிரி யர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டி நிற்கின்றது. காதலியாற்றுப்படை காட்டும் பண்பாட்டுக் கோலங்கள் பல இன்று மறைந்து போய்விட்டன. கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப சில மாற்றமடைந்துள்ளன.

காதலி ஆற்றுப்படை காட்டும் பண்பாட்டுக் கோலங்களைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- உணவுப்பழக்கம்.
- ஆடைஅணிகள்.
- விளையாட்டுகள்.
- வழிபாடும் சடங்குகளும்.
- நம்பிக்கைகள்.
- பொதுவானவை.

## உணவுப்பழக்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின், சிறப்பாக வட மராட்சிப் பிரதேசத்தின் உணவுப் பழக்க வழக் கங்களிலே குறிப்பிடத்தக்க சில தனித்தன்மைகள் இருந்தன. காலப்போக்கில் உணவுப் பழக்கங்களிற் பல மாற்றமடைந்து விட்டன எனினும் மாறாத சில தன்மைகள் இன்றும் காணப்படுகின்றன. இப்பிர தேசத்தின் உணவுப் பழக்கவழக்கங்களை மிகவும் விஸ்தாரமாகவே பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

*"விட்டுக் கள்ளினை விளைபதுமெய்து நெல்*
*மாவினிற் சுட்ட வண்புளிச்சப்பமும்"*

"வெள்ளை அப்பம்" எனக் கூறப்படும் அப்பம் பெரும்பாலும் இன்றும் இப்பகுதியிலேயே புழக்கத்தில் உள்ளது. இவ்வப்பத்தினைத் தயா ரிப்பதற்குப் பனங்கள்ளிலே சிறிது கலந்து மாவி னைக் குழைத்து ஊறவைப்பது வழக்கம். மாப்பு ளிப்பதற்குரிய அமிலம் 'எசன்ஸ்' கள்ளிலே உண்டு. அப்ப வகையிலே வெள்ளை அப்பம், பால் அப்பம், புளிச்சப்பம், இடியப்பம் எனப் பலவகை யுண்டு. இவற்றிலே வெள்ளை அப்பத்திற்குப் பேர் போனது இப்பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் வெள்ளை அப்பத்தினையே புளிச் சப்பம் எனக் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பக தருவாக விளங்கும் பனையிலிருந்து பெறும் உணவு வகைகளையும் காதலியாற்றுப்படை விரிவாகவே பேசுகின்றது.

*"பனங்காய்க் களியுடன் சாமை மாக்குழைத்து*
*வனைபந்தினைப் போல் நெய்யிற் போட்டுத்*
*தட்டுத் தட்டாய் சுட்டுமே லெடுத்துச்*
*சுளகிற் பரப்பி விலையது கூறும்*
*கமழ்தரு செம்பனங் காய்ப்பணி யாரமும்"*

பனங்காய்க்களியுடன் சாமை மாவினைக் குழைத்து பனங்காய்ப்பணியாரம் சுடுவதுதான் வழக்கம். இன்று சாமைமாவுக்குப் பதிலாகக் கோதுமை மாவையே பயன்படுத்துகின்றனர். சாமை மாவிற் சுடும் பனங்காய்ப்பணியாரத்திற் குத் தனித்துவமானதோர் மணமுங் குணமும் உண்டு என்பதை அதைத் தின்று சுவைத்தோர் உணர்வர். இன்றும் யாழ்ப்பாணத்தின் தனித்துவ மான அடையாள உணவுப் பண்டங்களில் ஒன்றாகப் பனங்காய்ப்பணிகாரம் பேசப்படுகின்ற மையும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்திற் பயன்படுத்தப்படும் உணவு வகைகளைப்பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்
மாந்தர் வாய்க்கு வெங்கறிப்பாக
வளமுற உதவும் வடையின்கடகமும்
முறுக்கு, நல்வாய்ப்பன், மோதகம், இட்டலி
பிட்டுத் தோசை, புகழிடியப்பம்
எள்ளுக் கட்டியும் இடித்து நன்கெடுத்த
நெய்பிழி பாகின் நிகரில் திரணையும்
பாணிப் பனாட்டும் பகர்பனங்கட்டியும்"

இவ்வுணவுப்பண்டங்கள் குடாநாட்டிற்குப் பொதுவானவையாக அமைந்த போதிலும் சிற் சில வடமராட்சிப் பகுதிக்கே சிறப்புடையவையாகக் கருதப்படுகின்றன. இன்று 'பருத்தித்துறை வடை' என்று உலகமெல்லாம் பேசப்படும் வடைக்கு உண்மையிலே வழங்கிய பெயர் 'கள்ளுவடை' என் பதேயாகும். கள்ளு, சாராயம் குடிக்கும் பொழுது (Taste) ஆகப் பயன்படுத்தப்பட்டமையாலேயே இதற்கு இப்பெயர் உண்டானது. இதனையே மாந்தர்வாய்க்கு 'வெங்கறிப்பாக' என்று பேராசி ரியர் குறிப்பிட்டார். இவ்வாறே தோசை, எள்ளு ருண்டை, எள்ளுப்பாகு முதலியனவும் வடமராட் சிப்பகுதிக்குரிய சிறப்பான உணவு வகைகளாகக் கருதப்படுகின்றன. இட்டலி, இடியப்பம், பிட்டு, முறுக்கு, வாய்ப்பன், மோதகம், பாணிப்பனாட்டு முதலானவை யாழ்ப்பாணப்பிரதேசம் முழுவதற் கும் பொதுவான உணவுப்பண்டங்களாக விளங்கு கின்றன.

ஒரு காலத்திலே யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பிரதான உணவாக விளங்கியது பனம்பழம் என்றே கூறப்படுகின்றது. பனை பற்றியும் பனம் பழம், பற்றியும் பல இலக்கியங்களும் தனிப்பாடல் களும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் இருந்துள்ளன. ஐரோப்பியர் வருகையை யொட்டி ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களினால் பனம்பழத்தின் பயன்பாடு மிக மிகக் குறைந்து விட்டது. குழந்தைகள் பனம்பழம் புசிக்கும் காட் சியைப் பேராசிரியர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

*"காடியிற் றோய்த்த காழ்பனங் கொட்டையைத்*
*தாயர்தங் கையிற் றாவினர் வாங்கி*
*வண்டியுஞ் சொக்கும் பனங்களி புரள*
*வண்டினந் தேனை யுண்டல் போலக்*
*களியினை மாந்தி ….."*

எமது பண்பாட்டிலே மிகவும் முக்கியமாக விருந்த இக்காட்சியை இன்று காண்பது கடினம். யாழ்ப்பாணத்தவர்களின் பிரதான குடிவகையாக விளங்கிய கள்ளுப்பற்றிப் பேராசிரியர் பின்வரு மாறு விரித்துச் சொல்கின்றார்.

*"நரை தோ லியனம் அரையிற் கட்டி*
*அதன்கீழ் முட்டி யாசைதர விட்டு*
*மார்போ டணையத் தோலது தூக்கி*
*உரனுறு தளைநார் காலிணை மாட்டிக்*
*கால்மடித் துன்னிக் கரு நெடும் பனைமிசைப்*
*பாளை தட்டிப் பார்த்துச் சீவி*
*ஏர்தரு மூசலோ டியனத் தசையும்*
*இன்கள் முட்டியோ டிறங்கும் போதின்*
*அடிமரத் திருந்து நுனிவரை நோக்கி*
*நாநீ ரூறி யுதடு வருடிப்*
*பெருமகிழ் வோடு பிளாவை யேந்தி*
*அருவிலை கொடுத்து நறவினை மாந்திக்*
*களிப்புறு மாக்கள் விளிப்புறு கும்பலும்"*

பனைகளில் இருந்து கள்ளினைப் பெறுங் காட்சியைப் படம்பிடித்துக் காட்டிய பேராசிரியர் கள்ளை விரும்பியுண்ணும் மக்களின் மனநிலை யையும் தெளிவுபடுத்துகின்றார். யாழ்ப்பாணத்து வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கள்ளினைப் பற்றிப் பல்வேறிடங்களிலும் பேராசிரியர் சுட்டிச் செல்லுகின்றார்.

அதிகாலையிலே குழந்தைகளுக்கு எண் ணெய் பூசி ஒரு சங்கிலே கள்ளினை விட்டுப் (மேசைக்கரண்டிப் பிரமாணம்) பருக்கி இளவெய் யிலிலே தடுக்கினிலே (ஓலையாற் செய்த சிறுபாய்) கிடத்துவது மிக அண்மைக்காலம் வரை வழக்கில் இருந்தது. இன்று இப்பழக்கம் முற்றாக மறைந்து விட்டது. பேராசிரியர் தமது காதலி ஆற்றுப்படை யிலே இக்காட்சியை மிக அழகாகச் சித்திரிக்கின்றார்.

*"பனையின் நறவைப் பச்சிளங் குழவிகள்*
*வனைதரு சங்கின் வார்த்துத் தாயார்*
*பருக்கித் தடுக்கிற் பாங்கொடு வளர்த்தலும்*
*களிமிக வெய்திக் கால்கை யடித்துக்*
*தஞ்சிறு கையாற் றடுக்கை ஈர்த்துக்*
*காற்பெரு விரலைக் கையிற் பற்றி*
*வாயினுள் வைத்து வளர்பல் குதலை*
*இன்புறப் பேசி யிசையொலி பெருக்கி…"*

ஒரு பனையிலிருந்து சேர்த்தெடுத்த தெளிந்த புதிய கள்ளு நோயாளிகளுக்கும் குழந்தைகளுக் கும் நல்லது என்ற நம்பிக்கை கிராமிய மட்டத்திலே இன்றும் நிலவுகின்றது. உடற்கூட்டுக்கு உடன் கள்ளுப்போல' என்ற மரபுத்தொடரும் யாழ்ப்பா ணப் பிரதேசத்திலே வழக்கில் உண்டு என்பதும் மனங் கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் அன்றாட உணவு வகைகளையும் அவற்றிற்குப் பயன்படுத் தப்படும் பண்டங்களையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டு கின்றார்.

*"கொள்ளுங் கடலையு மெள்ளும் பயறும்*
*பல்வகைத் தானியம் பாங்கொடு கொணர்ந்து"*
*"கரும்பூ ணுலக்கை கைதனிற் பற்றி*
*நெல்லுந் தினையு நீள்முறி யொடியலும்*
*அவலுந் தாளு மசைந்தசைந் திடித்து*
*கொள்ளை கொள்ளும் வள்ளைப் பாட்டை*
*இன்னிசை தன்னோ டியம்பிடு மோதையும்"*

என்று குறிப்பிடுகின்றார். இன்று உரலிலே இடிக்கும் பழக்கமே மிக அருகிவிட்டது. "நீள்முறி ஒடியல்" என்பதை இன்றைய தலைமுறையினிற் பலர் அறிய மாட்டார்கள். கிராம மக்களிடையே வழக் கில் இருந்த உணவுப்பழக்க வழக்கங்களையே பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமது காதலியாற் றுப்படையிலே பதிவு செய்து வைத்துள்ளார்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் சிறப்பாக வடமராட்சிப் பிரதேச மக்களின் உணவு வகைகளைக் குறிப்பிடும் பேராசிரியர் சோறுகறி பற்றி விரிவாகக் கூறவில்லையென்பதும் குறிப்பி டத்தக்கது.

## ஆடை அணிகள்

பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமது காதலி ஆற்றுப்படையிலே யாழ்ப்பாணப் பிரதேச மக்க

ளின் உடை பற்றி விரிவாகக் குறிப்பிடவில்லை என்பதும் மனங்கொள்ளத்தக்கது. ஆங்காங்கே சிறுபான்மையாகவே உடைகள் பற்றிக் குறிப்பிடு கின்றார். எனினும் பெண்கள் அணியும் ஆபர ணங்கள் பற்றி மிக விரிவாகப் பேசுகின்றார். நீதி மன்றுக்குச் செல்லும் ஆண்களின் உடை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"மெய்யதி வழகுற மேலுடை அணிந்து*
*கையதி லதற்கிணைக் கருங்குடை பிடித்துத்*
*தலையது தன்னிற் தலைப்பாத் தாங்கி"*

*ஆண்கள் உடைபற்றி இவ்வாறு கூறிய பேராசிரியர்*
*"நிறம்பல நீட்டிய பசும்பொற் சேலை*
*விரும்பி யணிந்த மடவார் குழாத்தின்"*

என்றும்
*"கந்தை உடையினர்*
*குறுக்குக் கட்டினர்*
*சிந்திடு வேர்வையர்*
*அசைந்த நடையினர்"*

என்றும் பெண்களின் உடை பற்றிக் குறிப்பிடுகின்றார். இரு வேறு வர்க்கத்தினரின் உடையை ஒரே இலக்கியத்தினுள் அழகாகச் சித்திரிக்க ஆற்றுப்படை கைகொடுத்திருக்கின்றது எனலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெண்கள் ஒரு காலகட்டத்திலே குறுக்குக் கட்டு கட்டியமையைப் பேராசிரியர் நன்கு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேசப் பெண்கள் அணிந்த ஆபரணங்களைப்பற்றி மிக விஸ்தாரமாகவே இவர் குறிப்பிட்டுள்ளார். திருமணப் பெண்கள் அணிந்து செல்லும் ஆபரணங்கள் பற்றி

*"தலைமேற் சூரிய சந்திர பட்டமும்*
*சடைமேல் நாகமும் நலமுற வணிந்து*
*நெற்றியிலிட்ட பொட்டு மின்ன*
*செம்பஞ்சணிந்த சேவடி மீமிசை*
*செம்பொற் சிலம்பும் சீறடிச் சரமும்*
*நுண்ணிடை பூட்டியநொய்ம் மேகலையும்*
*கதிர்முலை மேவிய கதிர்முத் தாரமும்*
*அருமணி மாலையும் அசையுறீஇக் கறங்க*
*கன்மோதிரமும்"*

இவ்வாறு கூறிச் செல்லுகின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இன்றும் திருமணப் பெண்கள் இத்தகைய கோலத்துடன் திகழ்வதைக் காண லாம். பெருமளவுக்கு இன்றுவரை இப்பண்பாடு மாற்றமடையாமலே இருப்பது கவனிப்புக்குரியது.

*"நன்னாட் பார்த்துப் பொன்னை உருக்கி*
*மணவினைக் கென்றே வரைந்திடு தாலியும்*
*அட்டியல், பதக்கம் பிலாக்கு மூக்குத்தி*
*பூரானட்டியல் கீச்சுக்கல் அட்டியல்*
*கடுகுமணிக் கொலிசு கவுத்தோர் காதுப்பூ*
*வாளி சிமிக்கி வளையல் தோடு*
*பட்டணங்காப்பு பீலிக்காப்பு*
*பாதசரமொடு சங்கிலி சிலம்பு*
*தூங்கு கடுக்கன் நட்டுவக்காலி*
*அரும்பு மணிமுரு கொள்ளைப் பூவும்*
*ஓட்டியாண மொலிபெறு நுதலணி*
*அரைஞாண் கயிறோடு அரைமுடி சலங்கை"*

மேலே குறிப்பிடும் அணிகலன்களிற் பல இன்று பயன்பாட்டில் இல்லையென்றே குறிப்பிட லாம். யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்விய லிலே ஒருகாலகட்டத்திலே இந்த அணிகலன்கள் பயன்பாட்டில் இருந்தன என்பதை இன்றைய தலைமுறையினர் அறியக் காதலியாற்றுப்படை பெரிதும் உதவுகின்றது.

## விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் இருந்த விளையாட்டுகள் பலவற்றைப் பேராசிரியர் தமது காதலியாற்றுப்படையிலே சித்திரமாகத் தீட்டியுள் ளார். இவர் காதலியாற்றுப்படையிலே காட்டும் விளையாட்டுகளை இரண்டு வகையாகப் பகுத்து நோக்கலாம்.

ஒன்று : குழந்தைகள் விளையாடும் விளை யாட்டுகள்

இரண்டு : பெரியவர்கள் விளையாடும் விளையாட்டுகள்

குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகள்

*"கிந்தியடித்தும் வளைய முருட்டியும்*
*தட்டுப் பாய்ந்தும் கிட்டி அடித்தும்*
*மாவின் கொட்டை மகிழ்வொடு போட்டு"*

*எனத் தொடங்கும் பேராசிரியர் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகளைச் சற்று விரிவா கவே சொல்லிச் செல்கின்றார்.*

*"சிற்றி லிழைத்துச் சிறுசோறாக்கி*
*களிமட் பாவை அழகுறச் செய்து*
*பூவினைச் சூட்டித் துகிலினை உடுத்திச்*
*சீராட்டி யோராட்டும் சிறுமிகள் குழுவும்"*

குழந்தைகள் சிற்றிலமைத்துச் சிறுசோறு அட்டு விளையாடும் வழக்கம் நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கிராமங்களிலே இன்றும் இவ்வாறு விளையாடும் சிறுமிகளைச் சிறுபான்மையாகக் காணமுடியும். இதனைப்

"பிள்ளைப் பெத்து விளையாடுதல்" என்று கிராமங்களிலே அழைப்பர். பெரியவர்களின் நடத்தைகளைப் பார்த்தது "போலச்" செய்யும் பாங்குடைய குழந்தைகள் இவ்வாறு விளையாடுவது இயல்பானதேயெனலாம்.

சிற்றிலமைத்துச் சிறுசோறட்டு விளையாடுவது போலவே சிறுதேருருட்டும் விளையாட்டும் சிறுவர்கள் மத்தியிலே வழக்கில் இருந்தது. சிறுவர்கள் ஒன்று கூடிக் குதூகலமாக விளையாடும் இவ் விளையாட்டைப் பற்றிய குழந்தைப் பாடல்களும் ஈழத்துக் குழந்தைப் பாடல்களிலே உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென்னங்குரும்பையிலே தேர்கட்டி விளையாடும் குழந்தைகளின் விளையாட்டினைப் பேராசிரியர் கவிநயத்துடன் சொல்லிச் செல்கின்றார்.

"தென்னங் குரும்பை தெரிந்துநா னெடுத்தே
அன்னதன் மேலே அளவுடை யீர்க்கை
அமைவுறக் குத்தி அழகுறு சிறுதேர்
பூப்பல சூட்டிப் புனைந்தினி தியற்றி
நாப்பட் கடவுளை நலமுட னேற்றிக்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
ஈதோ சாமி எழுந்து தேர்வாறார்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
அம்மா வழிவிடு ஆத்தைநீ விலகு
காகா டுண்டுண் காகா டுண்டுண்
என்றே இயம்பி ஏருறு தேரினைக்
கட்டிய இழையாற் பற்றி இழுத்தும்"

சிறுவர்கள் சிறுதேரிழுக்கும் காட்சியைக் கைதேர்ந்த புகைப்படக் கலைஞன் ஒருவன் தன் "கமரா" வுக்கூடாகக் காட்டியது போலப் பேராசிரியர் காட்டிச் செல்கின்றார்.

சிற்றில் அமைத்து, சிறுதேர் உருட்டி விளையாடும் வழக்காற்றில் இருந்தே பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களிலே சிற்றிப் பருவம், சிறுதேர்ப் பருவம் என்பன தோன்றியிருக்க வேண்டும். இன்று இவ்விளையாட்டு மிகவும் அருகி விட்டது. சிறுதேர் உருட்டுவது போலவே வண்டி இழுத்து விளையாடும் வழக்கமும் சிறுவர்களிடையே வழக்கில் இருந்தது. அதனைப் பேராசிரியர் பின்வருமாறு படம் பிடிக்கின்றார்.

"பனையி னோலையைப் பாங்கா யெடுத்துச்
சித்திர வடிவச் சில்லிரண் டிழைத்து
முருக்கஞ் செத்தலை யுவற்றிடைக் கோத்துக்
குறுக்கே துலாவெனத் தடியொன் றமைத்துப்
பண்ணிய வண்டி பற்றி இழுத்தும்"

இன்றைய சிறுவர்களிடையே இவ்விளையாட்டினைக் கண்டு கொள்ள முடியாது. வண்டி இழுத்து விளையாடுதல் போன்று யாழ்ப்பாணப் பிரதேசத்திலே குதிரைச் சவாரி செய்து விளையாடும் விளையாட்டும் கிராமங்களிலே வழக்கில் இருந்தது.

"சிறுதடி யொன்று சேரிரு பக்கமும்
வாழைநா ரெடுத்து வளமுறக் கட்டிக்
கடிவா ளமதாய்க் கருதி யொருவன்
வாயிற் கவ்வ வாரிரு நாரைப்
பின்நின் றொருவன் பேணிப் பிடித்துச்
சவுக்கினை யுயர்த்தித் தாங்கிய கையுடன்
குதிரைச் சவாரி கொள்வபோ லேகிப்"

இன்று முற்றாக மறைந்து போன இவ்விளையாட்டினைக் காதலியாற்றுப்படையினூடே காண முடிகின்றது. இந்த வகையிலே காதலியாற்றுப்படைக்குள்ள பண்பாட்டு முக்கியத்துவம் தெற்றெனப் புலனாகின்றது.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்குமான விளையாட்டாகப் பட்டம் விடுதலைச் சொல்லலாம். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல பாகங்களிலும் பட்டம் விடுதல் இன்றும் வழக்கில் உள்ளது. பட்டங்களிலே பலவகையுண்டு. பட்டங்களின் வகைகளைப் பேராசிரியர் தமது காதலி ஆற்றுப்படையிலே வரிசைப் படுத்திக் கூறியுள்ளார்.

*"மூங்கி லெடுத்து முறையொடு கட்டிக்
கடதாசி யொட்டிக் குஞ்சம் புனைந்த
கொக்குக் கொடியுங் கோதறு பருந்தும்
வளம்பெறு வாலா வகையில் சந்திரன்
எட்டு மூலையுங் கட்டுக் கொடியும்
உறற்கொடி மீன்கொடி உயராட் கொடியும்
பூட்டிய விண்கள் பொலிவொடு கூவக்
காற்றொடு சேண்புகு மாண்புடை யோதையும்"*

பட்டத்தினைக் 'கொடி' எனக் கூறும் வழக்காறும் உண்டு. இன்று இன்னும் வளர்ச்சியடைந்த நிலையிலே பட்டங்கள் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

### பெரியவர்கள் விளையாடும் விளையாட்டு

பொழுது போக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பெரியவர்கள் விளையாடும் விளையாட்டுகளும் இப்பிரதேசத்திலே வழக்கில் இருந்துள்ளன. பெரியவர்கள் விளையாடும் விளையாட்டுகளைச் சற்றுச் சுருக்கமாகவே பேராசிரியர் தொட்டுச் செல்கின்றார்.

*"தரைமேற் கோடு தயவுடன் கீறித்
தாயக் கட்டை தாவி எறிந்தும்
சோகி யெடுத்துச் சோணாலு பாணா
லென்றே யுறுக்கி யெறிந்துதா னுருட்டியும்
பந்தயம் பேசிப் பலபேரிருந்து
நாயும் புலியும் நலிவிலா தாடியும்
சீட்டைக் கையில் நீட்டி விரித்துப்
பலவகையாட்டம் ஒல்வகை ஆடியும்"*

தாயம் விளையாடுதல் நாயும் புலியும் விளை யாடுதல் இன்றும் கிராமங்களிலே உள்ளது. "சீட் டாட்டம்" (கடதாசி விளையாட்டு) இன்று கிராமங் களிலும் நகரங்களிலும் வழங்கி வருவதைக் காண முடிகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலே சிறப் பான பொழுதுபோக்குப் போட்டியான வண்டிற் சவாரி பற்றியும் பேராசிரியர் தமது காதலி யாற்றுப்படையிலே பதிவு செய்துள்ளார். யாழ்ப் பாணப் பிரதேசத்திலே வழக்கில் இருந்த எல்லா விளையாட்டுகளையும் இவர் பதிவு செய்யவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது.

**வழிபாடும் சடங்குகளும்**

யாழ்ப்பாணச் சமூகத்திலே பெரும்பான்மை யாக வழக்கில் இருக்கும் இந்து வழிபாட்டு மரபு களையே இவர் காதலி ஆற்றுப்படையிலே சுட்டிச் செல்லுகின்றார்.

*"நெற்றியிற் சாந்தப் பொட்டினை அணிந்து
வில்வ மேற்றி விளங்கு காதினர்
நெற்றியின் நாமம் நேராயிழுத்துச்
செவிமேற் றுளசி சிறப்புற வைத்து"*

யாழ்ப்பாணத்திலே சைவ வைஷ்ணவ வேறு பாடின்மையை உணர்ந்த பேராசிரியர் சிவன், விஷ்ணு, முருகன் முதலான தெய்வங்களை மக்கள் வணங்குவதைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார். நல்லூர், செல்வச்சந்நிதி, கந்தவ னநாதர், கணபதிகோயில், பசுபதீஸ்வரர் கோயில், வல்லிபுரக் கோயில் முதலானவற்றையும் சுட்டிச் செல்லுகின்றார்.

சைவர்கள் நேர்த்திக்கடனுக்காகக் காவடி யெடுத்தல், பாற்செம்பு எடுத்தல் முதலானவற்றையுஞ் சுட்டிக்காட்டியுள்ளார். காவடிகளிலும் ஆட்டக்காவடி பற்றி மிக விரிவாகப் பேசுகின்றார்.

*"வளைவுறச் செய்து கலிங்கம் வேய்ந்து
நாற்பாலிறுகு நலமுறக் கட்டிக்
கைபுனைந் தியற்றிடுங் காவடியெடுத்துத்
தோள்மே லேற்றித் தோமற வைத்து"*

ஆடும் காவடியாட்டத்தினைத் தமது காத லியாற் றுப்படையிலே பதிவு செய்த பேராசிரியர்

"முள்ளு மிதியடி கொள்ளு மடியிணை
உறுத்த வணிந்தே யொண் பூக்காவடி"

எனக் காவடியின் வகைகளை விளக்கிச் செல்கின்றார். "பானிறை பொற்குடந் தலைமேற் தாங்கி" எனப் பெண்கள் பாற்குடம் எடுத்து வழிபாடு செய்வதையும் சுட்டிச் செல்கின்றார்.

சைவ சமயத்தைச் சேர்ந்த துறவிகள் பலர் இப்பிரதேசத்தில் ஒரு காலத்திலே நிறையக் காணப் பட்டனர். இக்காலத்திலே மிகமிக அருந்தலாகவே இத்துறவிகளைக் காணலாம். இத் துறவிகளைச் "சன்னியாசிகள்", "சாமிமார்" என அழைக்கும் வழக்காறும் உண்டு. இவர்களிற் சிலர் "கஞ்சா" அடிக்கும் வழக்கமும் உடையவர்களாகக் காணப் பட்டுள்ளனர். இவர்கள் கஞ்சா அடிக்கும் முறை மையைப் பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

*"சிறப்புறு மூலியைச் சேர்த்திடக் கசக்கி
நிகரில் சிமிழியில் நிறையவடைத்தே
அக்கினிப் பொறியை அமைவர மூட்டிப்
பக்கென விழுத்துப் பகர்தும் அடித்தே
இடுக்கிய கண்ணராய் இறைவனை வாழ்த்தி
மிக்கமெய்ஞ் ஞானம் மேதகப் பேசி.........."*

சாமிமாரிடம் இப்பழக்கம் காணப்பட்டமைக் குப் பல சான்றுகள் உள. சுப்பிரமணியபாரதி யாரும் இப்பழக்கத்திற்கு உட்பட்டவர் எனக் கூறுவர். இவ்விடத்திலே யாழ்ப்பாணத்துச் சாமி யாரிடத்துப் பாரதியாருக்கு இருந்த உறவும் நினைவு கூரத் தக்கது.

காதலியாற்றுப்படையிலே அச்சுவேலிப் பதியை அறிமுகம் செய்யும் பொழுது

*"நச்சிடு காவி தோய்ச்சிடு முடையினர்
பொலிவெண்ணீறு பூசிடு முடலினர்
அக்கினை அணிந்த அழகுறு கழுத்தினர்"* என

அங்கு வாழும் துறவிகளை அறிமுகம் செய்து அவர்கள் சாத்திரம் சொல்லும் திறனையும் விதந்து பாடுகின்றார். யாழ்ப்பாணப் பிரதேச மக்களிடம் (சாத்திரம் பார்க்கும்) சோதிடம் பார்க்கும் வழக்காறு இன்றும் பலமாகவே உள்ளது.

**நம்பிக்கைகள்**

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கும் எல்லா நம்பிக்கைகளையும் பேராசிரியர் தமது காதலி ஆற்றுப்படையிலே பதிவு செய்தார் என்று கூற முடியாது. எல்லா நம்பிக்கைகளையும் பதிவு செய்வதும் கடினமானது. தேவை நோக்கித் தாம் அத்தியாவசியம் எனக்கருதிய சில நம்பிக்கை

களையே அதுவும் குறிப்பாகக் கிராமிய நம்பிக்கை களையே குறிப்பிட்டுச் செல்லுகின்றார். பேய், பிசாசு, முனி முதலானவை பற்றிய நம்பிக்கைகளையும் காகம் கரைதல், நாய்க்கு வாய் கட்டுதல் முதலா னவை பற்றியும் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

அச்சம் தரும் சுடுகாட்டிலே பேய்கள் வாழும் என்ற நம்பிக்கை கிராம மக்களிடையே நெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. சுடு காட்டிலே வதியும் பேய்களைப் பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

*"பிரம்ம ராட்சதனும் பேரெறி மாடனும்*
*கொள்ளி வாலும் கொத்தி யாத்தையும்*
*இரத்தக் காடேறி இருதலைப் பிடாரி*
*இடர்செய் கூளியும் எச்சிப் பிசாசும்"*

பேய்களைப் பற்றிக் குறிப்பிட்டமை போலவே முனிகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். யாழ்ப் பாணப் பிரதேசத்திலே கோட்டைமுனி, வல்லை முனி, புறாப்பொறுக்கி, ஆல்முனி எனப் பல்வேறி டங்களிலும் முனிகள் இருந்ததாகச் செவிவழிக் கதைகள் நிலவுகின்றன. யாழ்ப்பாணப்பிரதேச மக்களிடையே அச்சம் விளைவிக்கும் முனிகள் பற்றிய நம்பிக்கை நிறைய இருக்கின்றது. சிறப்பாக ஒவ்வொரு ஊரிலும் முனிகள் ஒன்றோ பலவோ இருந்ததாக நம்பும்நம்பிக்கை மிக அண்மைக்காலம் வரை நிலவியுள்ளது. யாழ்ப்பா ணத்து மக்களிடையே முனிகள் பற்றி இருந்த நம்பிக்கையைப் பொதுப்படுத்திப் புறாப்பொறுக்கி ஆலமரத்து முனி பற்றிப் பேராசிரியர் நயம்படப் பதிவு செய்துள்ளார். மக்கள் நடமாட்டமற்ற இடத்திலே அடர்ந்து வளர்ந்த மரங்களிலேதான் முனிகள் வாழும் என்ற நம்பிக்கையே இப் பிரதேச மக்களிடையே வழங்கி வந்தது.

*"மலைபோ லுயர்ந்து விண்ணை அளாவித்*
*தனிவழிச் செல்வோர் மனது கலக்கும்*
*புறாப் பொறுக்கி யாலென் பெருமரம்*
*தன்னைத் தன்வாழ் பதியெனக் கொண்ட*
*வல்லை முனியும் வாரிரு சங்கிலி*
*சலசல வென்னப் பலபல வொலியொடு*
*தன்பரி வாரஞ் சார்ந்து சூழப்*
*பாதியாம வேளை தன்னிற்*
*கூ கூ வென்று குமுறிக் குமுறிப்*
*பற்பல உருவோ டெழுந்து திரிந்தும்"*

முனிகள் பற்றிய விபரங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் கூறிய பேராசிரியர் வல்லை வெளியிலே உலாவும் கொள்ளிவாற் பேய்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். வல்லை வெளியிலே கொள்ளி வாற் பேய்கள் உலாவுகின்றன என்ற நம்பிக்கை யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் பலரி டமும் இருந்தது. இலங்கையர்கோனின் வெள் ளிப்பாதசரம் என்னும் சிறுகதையிலும் இக்கொள்ளி வாற் பேய்கள் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*"நள்ளிரா வேளை நீள்வெளி தோறும்*
*கொள்ளி வாற் பேய்கள் குழுமிநெருப்புப்*
*பற்றிய வாலொடு பாய்ந்து விரவி*
*ஆர்ப்பொடு கவித்தே அலமரும்..."*

எனக் கொள்ளிவாற்பேய்கள் பற்றிய நம்பிக் கையைச் சுட்டி செல்லுகின்றார்.

இப்பேய்கள் மக்களைப் பிடித்து வருத்தும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேச மக்களிடையே வழங்கி வந்துள்ளது. பேய்பிடித்தவர்களுக்குப் பேய்குப்பார்த்தல், கழிப்புக் கழித்தல், காய்வெட்டு தல், மடைபரப்புதல் முதலான செயற்பாடுகளும் நிலவி வந்துள்ளன. இன்று மரபுவழிச் சீர்மியச் செயற்பாடாகக் கருதப்படும் இந்த நடைமுறை மிக மிகச் சிறுபான்மையாகக் கிராமிய மக்களிடையே இன்றும் காணப்படுகின்றது.

*"பேய்க்கோட் பட்டுப் பெருந்துய ரெய்திடு*
*மாந்தர் தமக்கு மாற்றது வாக*
*மடைபல பரப்பி உடுக்கினை அடித்து*
*மேலான வாசான் வாலய மிட்ட*
*வன்தேவதையை வளமுற வழைத்துக்*
*காய்பல வெட்டிக் கழிப்புக் கழித்துப்*
*பேயதைப் போக்கும் பேயுரு மோதையும்"*

பேயோட்டும் நிகழ்வை மேற்காட்டியவாறு பேராசிரியர் தமது காதலியாற்றுப்படையிலே படம்பிடித்துக் காட்டியுள்ளார் எனலாம்.

காக்கை கரையும்போது நிமித்தம் பார்க்கும் நம்பிக்கையும் இம் மக்களிடையே நிலவிவந்துள் ளது. காக்கை கரைந்து சில செய்திகளைச் சொல் லும் என்ற நம்பிக்கை மிகச் சிறுபான்மையாக இன்றும் கிராம மக்களிடையே நிலவி வருகின்றது.

"...வருவது போவது முன்னித் தெரித்தும்
கருநிறக் காக்கை"

எனப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். காக்கை அழுதால் 'நிழல் அடி அளந்து' நிமித்தம் பார்க்கும் வழக்காறு சோதிட ரீதியிலும் சொல்லப்பட்டுள்ளது என்பர்.

"கருமகள் அழுதபோது கடுகவே அடி அளந்து
ஒரு பதினாலும் கூட்டி......
வருவது சுகம், இலாபம், மழை, படை, அயனம், வெற்றி
சரிவர ஏழும் வந்தால் சாவென்று சாற்றலாமே"

என்ற ஒரு சோதிடப்பாடலும் இப்பிரதேசத்திலே வழங்குவதை இவ்விடத்திலே சுட்டிக் காட்டலாம்.

நாய்கள் கடிக்க வந்தால் வைரவரை நினைத்து வைரவர் மந்திரத்தை உச்சரித்தால் நாய் வாய் திறக்காது அடங்கி ஒடுங்கிச் சென்று விடும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேச மக்களிடையே வழக்கில் இருந்தது.

*"வீட்டு வாயிலின் நீட்டிய காலுடன்*
*வளர்துயி லயின்று வழிமேற் செல்லும்*
*மாந்தர் காலடி போந்த மணத்தான்*
*நரகு காக்கு முருகெழு நாய்போல்*
*விரைவுட னெழுந்து துரிதமாய்ப் பாய்ந்து*
*குதிரைபோனின்று குரைத்திடு நாய்கள்*
*உன்றனை நோக்கி உறுமி எதிர்த்திடின்*
*சிந்தனை கலங்கிச் சோர்பயம் எய்திடேல்*
*வயிரவன் தன்னை மனதினில் நினைத்தவன்*
*செயிர்தீர் மந்திரம் தெரிவுறக்கிளப்பின்*
*காலுக் கிடையில் வாலைக் குழைத்துக்*
*களிமிக வடைந்துன் காலடி முகந்து*
*முறையாய் அடங்கி முகத்தினை நோக்கும்"*

இந்த நம்பிக்கையை மிகவும் சுவையாகப் பேராசிரியர் சுட்டிச் செல்வதைக் காணமுடிகின்றது. நாய் கடிக்க வரும்பொழுது வைரவர் மந்திரம் கூறவேண்டும் என்ற வழக்காறு மிக அண்மைக் காலம் வரை கிராம மக்களிடையே நிலவிவந்துள்ளது. நாய் கடிக்க வரும்போது வைரவர் மந்திரத்தைக் கூறி மூன்று முறை நாயின் முகத்திலே காறியுமிழ்ந்து தெருப்புழுதியை (மணலை) அதன் முகத்திற் போட்டால் நாய் அடங்கிவிடும் என்று இன்னும் முதியவர்கள் கூறுகின்றனர். முதியவர்கள் கூறும் வைரவர் மந்திரம் பின்வருமாறு

"அலறிய வாயும் முறுகிய பல்லும்
ஆதி வயிரவனே
அலகு திறவாதே"

இம் மந்திரத்தை மூன்று முறை கூற வேண்டுமென்று கூறுவர். இத்தகைய நம்பிக்கைகள் பல இப்பிரதேசத்திலே வழக்கில் இருந்தன என்பதைக் காதலியாற்றுப்படையினூடே காணமுடிகின்றது.

**பொதுவானவை**

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொதுவாகவும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாகவும் உள்ள பண்பாட்டமிசங்கள் பலவற்றைப் பேராசிரியர் தமது காதலியாற்றுப்படையினூடு பதிவு செய்துள்ளார். பனையோலையைப் பயன்படுத்திப் பெட்டி, கடகம், பாய், குட்டான் முதலியன செய்வதை மிகவும் விரிவாகக் கூறியுள்ளார். யாழ்ப்பாணப்பிரதேசத்தில் உள்ள கல்வீடுகள், ஓலை வீடுகள், தெருமூடிமடங்கள், ஆவுரோஞ்சுதறிகள் முதலானவற்றையும் திருவிழாக்கள், கூத்துகள், களியாட்டங்கள் முதலானவற்றையும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

பேராசிரியர் காதலியாற்றுப்படையைப் படிக்கும் போது சங்ககால ஆற்றுப்படைகளைப் படிக்கும் உணர்வு தோன்றுகின்றது. சிறப்பாகப் பெரும்பாணாற்றுப்படையைப் படிக்கும் நினைவுகளே மேற்கிளம்புகின்றன. பேராசிரியர் சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையையும் இடையிடையே நினைவுபடுத்துகின்றார். யாழ்ப்பாணப்பிரதேசத்துப் பேச்சுவழக்கைத் தமது நாடகங்களிலே அற்புதமாகப் பதிவு செய்தமை போலவே காதலியாற்றுப் படையில் பேச்சு வழக்கோடு ஒட்டிய யாழ்ப்பாணத்துப் பண்பாட்டை மிகச் சிறப்பாகப் பேராசிரியர் சித்திரித்துள்ளார். யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொதுவாகவும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாகவும் அமைந்த பண்பாட்டுக் கோலங்களைப் படம்பிடித்துக் காட்டிய ஒப்பற்ற இலக்கியமாகக் காதலியாற்றுப்படையைக் கொள்ளலாம்.

இன்றைய சமூகத்தினர் கடந்த காலத்துப் பண்பாட்டுக் கோலங்களை, பழக்க வழக்கங்களை அறிந்து மகிழப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை மீள்பதிப்புச் செய்யப்பட வேண்டுமென்று அவாவுகின்றோம்.

* * *

ஒரு சதவீதம் அறிவு + 99 சதவீதம் உழைப்பு = வெற்றி

***- தோமஸ் அல்வா எடிசன்***



# பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்

கலாநிதி மனோன்மணி
சண்முகதாஸ்

உலகம் அமைதியுடன் இருக்கவேண்டும். இதுவே எல்லோரும் விரும்புவது. மக்களின் மகிழ்வான வாழ்க்கைக்கு ஓர் இனிய நிலையான உலகு வேண்டும். இக்கருத்து இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. இன்றைய உலக நடப்புகள் மக்களை அச்சம்கொள்ள வைத்துள்ளன. இயற்கை நிலையாலும் செயற்கை நிலையாலும் உலகம் அழிந்துவிடுமோ என்ற எண்ணம் எல்லோருடைய மனத்திலும் தோன்றியுள்ளது. இந்த எண்ணம் மனத்தை வருத்துவதால் மக்கள் வாழ்வில் அவநம்பிக்கை ஏற்பட ஆரம்பித்துள்ளது. மனச்சுமையோடு வாழ்க்கையில் வெறுப்புணர்வோடு நடமாடும் மனிதருக்கு நம்பிக்கையை ஊட்டவேண்டிய காலமிது.

எனவே உலகம் இன்னும் அழியாமல் இருப்பதையும் எடுத்துரைக்கவேண்டியுள்ளது. உலகின் போக்கினை மாற்றும் வழிகளை ஆராயும்போது கடந்தகால நிலைகளையும் விளக்கவேண்டியுள்ளது. உலகத்தைப் பற்றிய பயம் கடந்த காலத்தில் எப்படியிருந்ததென்பதைக் காணும் நோக்குடன் புறநானூற்றைப் புரட்டியபோது ஒரு பாடல் கண்ணிற்பட்டது. 'கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி' என்னும் அரசன் பாடிய பாடல் உலகம் எப்படி நிலைத்திருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கிக்கூறுகிறது. உலகம் அழியாமல் இருப்பதற்குரிய காரணங்களையும் பாடல் வரிசைப்படுத்திக் காட்டுகிறது.

உலகத்திலே வாழும் மக்களின் வாழ்வியலால் உலகம் அழியாது என்றும் நிலைத்து நிற்கும். இக்கருத்தை விளக்க 'இளம் பெருவழுதி' பல எடுத்துக் காட்டுக்களைப் பாடலில் பதிவு செய்துள்ளார். மக்களிடையே அருங்குண இயல்புடையோரும் உளர். அவர்களைப் பாடல் இனங்காட்டியுள்ளது. அமிழ்தம் தனக்குக் கிடைப்பினும் அதனைத் தனித்து உண்ணாமல் எல்லோருக்கும் கொடுத்து உண்ணவிரும்பும் கொடையாளிகள் உலகை வாழ வைப்பார்கள். ஒருவரோடு வெறுப்பைக் காட்டாமல் வாழ்பவராலும் உலகம் வாழ்கிறது. பிறர் ஒரு துன்பத்தைக் கண்டு பயப்படும்போது தாமும் அதற்காகப் பயந்து அது தீரும் வரையும் சோம்பலின்றி உழைப்பவர்களும் உலகை வாழவைக்கின்றார்கள். புகழுக்காக உயிரையும் கொடுப்பவரும் உலகம் முழுவதையும் கொடுத்தாலும் பழியை ஏற்றுக்கொள்ளாதவரும் உலகத்தை நிலைபெறச் செய்பவர். மனக்கவலை இல்லாதவர்களால் உலகம் சிறப்பாக இயங்கும். தமக்கென எதற்கும் முயற்சி செய்யாமல் பிறர் பொருட்டாகப் பெருமுயற்சி செய்பவரால் உலகம் இன்றுவரை இருக்கின்றது. 9 அடிகளில் அமைந்த இப்பாடலின் பாடுபொருள் மிகவும் பயனுடையது. தன்னால் உலகத்திற்கு என்ன செய்யமுடியும் என அவலப்படுவோரை இப்பாடல் நன்கு ஆற்றுப்படுத்துகின்றது.

*"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரன்*
*அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்*
*தமியர் உண்டலும் இலரே முனிவிலர்*
*துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சி*
*புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்*
*அன்னமாட்சி அனையர் ஆகி*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மையானே."*

(புறநானூறு : 182)

இன்றைய உலகில் வாழ்வோர் உலகம் பற்றி என்ன நினைக்கிறார்கள்? எனப் பலரும்

தம்முள் வினா எழுப்பி விடையைத் தேடுகின்ற னர். கல்வியறிவுடையவர்களும் கூட இவ்வினா வுக்கு விடையை அறிய முடியாதவராயுள்ளனர். வள்ளுவருடைய திருக்குறள் இதனை எடுத்துக் கூறியுள்ளது. மனித விழுமியங்களில் ஒன்றான ஒழுக்கமுடைமை பற்றிக் கூறுமிடத்து வள்ளுவர் வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்"* (குறள் :40)

உலகம் என்பது உயர்ந்தவர்கள் உறை யும் இடம் என வள்ளுவர் கருதி உள்ளார். அறநூல்களில் சொல்லப்பட்டவற்றுள் காலத்து ஏற்றவற்றை ஏற்று நடக்கும் தன்மை அறி வுடையோருக்கே உரியது. அவர்களே உலகத் தோடு ஒட்ட ஒழுகும் பண்புடையவர். ஆனால் பல நூல்களைக் கற்றவரானாலும் இத்தகைய உலகோடு பொருந்திவாழ முடியாதவரைக் கல்லாதவர் என்றே நாம் கொள்ளவேண்டு மென வள்ளுவர் கூறிச் சென்றுள்ளார்.

வள்ளுவருக்கு முன்னே எழுந்த புற நானூற்றுப்பாடல் உலகத்தில் வாழ்ந்த மக்க ளைப் பற்றி உயர்வாகக் குறிப்பிட்டுள்ளது. மனி தனின் குண இயல்புகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் உலகத்திற்கு அவன் நிறைவாக ஆற்று கின்ற பணியைச் சிறப்பித்துள்ளது. அமிழ்தம் என்னும் அரிய உணவு தேவர்களுக்கே உரிய தெனக் கூறுவர். மண்ணுலகத்தில் உள்ளவர் கள் அதனைப் பெறுவது அரிது. ஆனால் மண் ணுலகில் வாழ்கின்ற தெய்வீக அருள் பெற்ற வர்களுக்கு அவர்களுடைய நெறிப்பட்ட வாழ்க் கையால் அத்தகைய அமிழ்தம் கிடைக்கக் கூடும். அவர்கள் அப்படி அமிழ்தம் கிடைப்பின் மிக இனிமையானது என்று எண்ணி ஒருபோ தும் தாம் மட்டும் தனியே இருந்து, அதனை மகிழ்வுடன் உண்ணமாட்டார்கள். எல்லோருக் கும் அதனைக் கொடுத்து உண்ணவேண்டும் என எண்ணிச் செயற்படுவர். அவர்களுடைய இன்னொரு குண இயல்பு பிறருடன் வெறுப்புப் பாராட்டாமல் இருப்பதாகும். வாழ்க்கையில் ஏற்படும் துன்பம் கண்டு அஞ்சி வாழ்பவர் உலகத்தில் பலருளர். துன்பம் வந்தபோது அதைத் தீர்க்கும் வழிவகைகளைத் தேடாமல் சோம்பியிருப்பவர் பலர். அவர்களுக்கு வாழ்க்கையே துன்பமானது என்ற எண்ணந் தான் இருக்கும். பழிச்செயல் செய்து வாழ்பவர், பிறரைப்பற்றிக் கலைப்படாதவர்கள். தம் முடைய சுயவிருப்பத்தால் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பிறரை வருத்துமேயென்றும் அவர்கள் நினைப்பதில்லை. தங்களுடைய மகிழ்ச்சியொன்றையே கருத்திற்கொண்டு செயற்படும் இயல்புடையவர். இவர்களுக்கு எதிரான குண இயல்பு கொண்டவர்களைப் புறநானூற்றுப் பாடல் வியந்து பேசுகிறது.

நல்ல முயற்சியுடைய சிலர் தமக்கென எந்தவொரு செயற்பாட்டிலும் முயற்சி செய்யா மல் பிறருக்காக முயற்சி செய்யும் குணவியல்பு டையவர்கள் உலகத்தைப் பற்றிய எண்ணமுடை யவர்கள். அவர்களுடைய வலிய முயற்சி பல ருடைய வாழ்வைச் சிறப்பிக்கப் பயன்படுகிறது. இத்தகையவர்களோடு நட்புக் கொண்டு இருப்பதால் உலகை நிலைபெறச் செய்யும் பணிகளில் ஈடுபாடு தோன்றும். தமது நலனை மறந்து பிறருக்காக உழைப்பதே பண்பட்ட செயல் என உணரவைக்கும். நாம் வாழும் உலகம் பல்வேறு குணமுடையோரைத் தன்ன கத்தே கொண்டுள்ளது என்பதையும் இப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

பல்வேறு பண்பாட்டு நிலைகளை நாம் எதிர்கொள்ளும்போது அவற்றிடையே ஒரு ஒருங்கிணைவை ஏற்படுத்தவேண்டியுள்ளது. அதற்கு இது ஒரு வழியாகும். பிறரை மதிக்கும் உயர்ந்த குணத்தை எல்லோரும் கொண்டி ருப்பின் முரண்பாடு தோன்ற இடமில்லை. தன்னைத் தாழ்த்திப் பிறரை உயர்த்தும் நல்ல மனமுடையோர் இருப்பின் உலகம்சமநிலை பெற வழியுண்டாகும். ஒருவரை ஒருவர் கொல்லு தலும் ஒருவருக்கு ஒருவர் தோற்றலும் இவ்வுலகத்தில் முன்னே தொட்டு இயல்பாகவே

காணப்படுகிறது. எனினும் இந்நிலையை மாற்றிவிடமுடியும் என்ற நம்பிக்கையைப் புலவர் ஊட்டியுள்ளார். முரண்பாடு தோன்றா திருக்க மனம் பண்படுத்தப்பட வேண்டும்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது. இங்கு உயர்ந்தோர் எனக் குறிப்பிடப்படுபவர் யார் என்ற கேள்வியும் உண்டு. 'உலகம்' என்ற சொல் வாழும் மக்களையே குறித்து நிற்பது. அதனால் மக்களின் வாழ்வியலைப் பற்றிய பாடல்கள் பல எழுந்துள்ளன. புற ஒழுக்கம் பற்றிய கருத்து களைச் சொல்லும் புறநானூற்றுப் பாடலில் உலகத்தை எல்லோரும் தரிசிக்க முடிகின்றது. உலகத்தில் வாழும் பலதரப்பட்ட மக்களைப் பற்றி நாம் அறிந்திருக்கவேண்டும். எமது செயற்பாடுகளை எமக்காக மட்டும் செய்வது நன்றன்று. பிறருக்காக முயற்சி செய்யும் நல்ல வர்களால் உலகியல் நடைபெற்று வருகிறது. இத்தகைய பண்புடையவர்கள் இல்லாவிட்டால் மண்ணில் அழிவுதான் ஏற்படும். நீதியையும் அறத்தையும் விரும்பிப் பிறர்க்கும் தமக்கும் நன்கு பயன்படும் வண்ணம் வாழ்பவரை உலக மக்கள் கொண்டாடுவர்.

வாழ்க்கையில் துன்பப்படுபவரைக் கண்டு இரங்கும் நல்லமனம் படைத்தவர் உல கம்நிலைபெற உதவுகின்றனர். பிறர்மீது இரக்கம் கொண்ட மக்களின் மனம் பண்பட்டிருக்கும் கூர்மையான அறிவு படைத்தவராக இருப்பினும் மக்களுக்காகப் பணிசெய்யாதவர் மரத்தைப் போன்றவராவர். அவர்கள் ஓரறிவு படைத்தவ ராகவே விளங்குவர். ஆனால் மனிதக் குணமு டையோர் ஆறறிவு படைத்தவராவர். பகுத்தறி வின் மூலம் நன்மையையும் தீமையையும் பகுத்து எல்லோருக்கும் உணர்த்த வல்லவரே உலகு பற்றிய சிந்தனையுடையவராவர்.

காலத்தை நோக்கிக் கருமம் செய்பவர் முயற்சியுடையவராவர். எடுத்த கருமத்தை இனிதே நிறைவேற்றும் இயல்புடையோரால் எல்லோரும் நன்மையடைவர். இத்தகையவர் களைக் காணும்போது மற்றவர்களுக்கு நன்மை யுண்டாகும். மனிதன் எப்போதும் முயற்சி உடை யவனாக இருக்கவேண்டும். ஒரு செயற்பாட்டைச் செய்யும்போது அது கடினமானது எனக்கருதி அதனைச் செய்து முடிக்காமல் இருப்பது தவறு. முயற்சி செல்வத்தைப் பெருகவைக்கும். முயற்சி செய்யாவிட்டால் வாழ்க்கையில் வறுமையை எதிர்கொள்ள நேரிடும். அதனால் அயர்ச்சி உண்டாகும். ஒருவனுக்கு தெய்வத்தின் அருள் கிடையாதபோதும் அவன் தன்னுடைய உடம்பை வருத்தி முயற்சி செய்வானாயின் அதற்கேற்ற கூலியைப்பெறமுடியும். எனவே முயற்சியுடையவராக எல்லோரையும் ஆக்கு வது சிறந்தது. அதிலும் பிறருக்காகத் தனது முயற்சியைச் செய்பவன் உலகத்தையும் வாழவைத்தவனாகிறான்.

தனிமனித வாழ்க்கையில் ஏற்படும் இடர்களால் சிலருக்கு வாழ்க்கை துன்பமா கலாம். ஆனால் ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு பரந்த சமூகத்தின் அங்கத்தவர் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். மனித வாழ்வு வீடு என்னும் சிறிய வட்டத்துள் அடக்கப்பட்ட தன்று. சமூகம், ஊர், நாடு, உலகம் என்ற பரந்துபட்ட நிலையில் அடங்கியது. அதனால் மனித மனம் குறுகிய எண்ணங்களைக் கொண்டிராமல் விரிந்ததாக இருக்கவேண்டும். தன்னைப் பிறருடன் இணைத்துக்கொண்டு பணி செய்யும் அன்பு நெறியிலே மனிதன் செல்லவேண்டும்.

மனிதனுடைய சிறப்பைப் புறநானூற்றுப் பாடல் காட்டும் பாங்கு நயமானது. நல்ல பண்புகளை எடுத்துக்காட்டி அவனுடைய தனித்துவத்தை அவன் நன்குணரப்பாடல் வழி கூறியுள்ளது. உலகத்திலே மனிதனை நிலை யாக வாழவைப்பது அவனுடைய புகழாகும். மக்களாகப் பிறப்பவர் புகழுக்குக் காரணமான குணங்களோடு பிறக்கவேண்டும். அத்தகைய குணங்கள் இல்லாதவர் உலகில் பிறவாதிருப்

பதே நல்லது. உலகத்திலே அழியாது நிலைத்து நிற்பது புகழ்தான். புகழ் இல்லாமல் வாழ்ப வர்கள் இறந்தவர்களுக்குச் சமமானவர்கள்.

உலகத்தைப் பற்றிய ஒரு தெளிவை இளம்பெருவழுதியின் புறப்பாட்டுத் தருகின்றது. பாடலில் நிரைப்படுத்திக் கூறப்படும் விடயங் கள் பாடியவருக்கு உலகமக்கள் மீதிருந்த அக் கறையைக் காட்டுகின்றன. அவர் பல்வேறு மனிதப் பண்பு நிலைகளை எடுத்துக்காட்டு கிறார். அந்நிலைகளை நாம் எல்லோரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே அவ ருடைய நோக்கமாகும். அவர் எடுத்துக்காட்டும் மனித நிலைகள் அவருடைய கவித்துவத்தால் மொழியாற்றலால் சிறப்புப் பெற்றுள்ளன. மக்களுக்குத் தேவையான செய்திகளைக் கூறுவதற்கு ஒரு சிறந்த தொடர்பாடல் மொழி தேவை. அத்தேவையைப் பழந்தமிழ் மொழி நிறைவு செய்துள்ளது. ஏற்ற சொற்களால் தெளிவாகக் கூறப்படும் கருத்துக்களே மக்கள் மனதைக் கவரும். இக்கவர்ச்சியாற்றல் பழந்தமிழ்ப் பாடல்களில் பெரிதும் விரவிக் கிடக்கிறது.

எனவே மக்களின் மன அழுத்தங்களைப் போக்கப் புலவர்கள் மொழிநடையை ஒரு மருத்துவப் பயன்பாடாக்கியுள்ளனர். சோர்ந்து கிடக்கும் மக்களின் மனதை மீண்டும் மிடுக்கு டனும் புத்துணர்வுடனும் இயங்க வைப்பதற்கு ஏற்ற மொழிநடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். வாழ்க்கையென்பது வெறுமனே உண்டதும் உறங்குவதும் மட்டுமன்று. பிறரையும் மகிழ்வாக இருக்கப் பணிசெய்யும் ஒரு செல்நெறி என்பது எல்லோராலும் நன்கு உணரப்படவேண்டும். இலக்கியக் கல்வியால் சமூகத்தின் நெறிகெட்ட போக்கினை நேர்ப்படுத்தமுடியும். வடுப்பட்ட உள்ளங்களையும் தேற்றமுடியும். இப்புதிய மருத்துவப் பயன்பாட்டை உலகமும் இன்று உணரவேண்டும். தமிழ்மொழியில் காலத்துக் குக் காலம் எழுந்த இலக்கியங்கள் இந்நற் பணியை ஆற்றவே தோன்றின என்பதில் எதுவித ஐயமும் இல்லையென்றே கூறலாம். இலக்கியக் கல்வியால் எல்லோருடைய உள் ளத்திலும் ஒரு தேடல் உணர்வை ஏற்படுத்தமுடி யும். அதுமட்டுமல்ல பலருடைய உணர்வுநிலை களையும் கண்டு செயற்படும் ஒரு உளப்பக்கு வத்தையும் இலக்கியப் பயிற்சியால் பெறமுடி யும். குறிப்பாக எமது இளந்தலைமுறையினர் பிறருடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ள இலக்கியப் பதிவுகள் வழிகாட்டும் பின்வரும் புறநானூற்றுப் பாடல் அத்தகைய பணி ஒன்றைச் செய்திருக்கின்றது.

*"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்*
*நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்*
*பாணன் சூடான் பாடினி அணியாள்*
*ஆண்மை தோன்ற ஆடவர்க்கடந்த*
*வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே".*

இப்பாடல் குடவாயில் நல்லாதனார் என்னும் புலவரால் பாடப்பட்டது. ஒல்லையூர் கிழான் மகன் சாத்தன் மாய்ந்தபோது பாடிய பாடல் புலவர் உள்ளத்திலே அவனுடைய மறைவு ஏற்படுத்திய தாக்கத்தை அவர் வெளிப்படுத்தும் விதம் தனித்துவமானது. ஒருவருடைய இறப்பு எவ்வாறு மற்றவர்களைத் துன்பத்திற்கு ஆளாக்குகின்றது என்பதை அவரவர் மன நிலையில் நின்று புலப்படுத்தும் பாங்கு அவருடைய புலமைத்திறனை நன்கு விளக்குகின்றது. அதனைச் சொற்களால் கூறுவது மிகத் துலக்கமாக உணர்வுகளைச் சுட்டிக்காட்டுகிறது.

வழக்கமாகப் பூக்கும் முல்லைச்செடி பூத்து நிற்கிறது. புலவர் அதைப் பார்க்கிறார். உடனே அவருக்குச் சாத்தன் வாழும் காலத்தில் இருந்த இயல்பான வாழ்வியல் நினைவுக்கு வருகிறது. வழக்கமாக முல்லைப்பூவை இளம் பருவத்தினர் நாள்தோறும் சூடித் தம்மை அழகு படுத்துவர். வளையலணிந்த இளம் பெண்கள் மகிழ்வோடு முல்லை மலரைக் கொய்து

கொண்டுசெல்வர். நல்ல யாழுடைய பாணன் அதன் கோட்டினில் மெல்ல வளைத்துச் சூடியி ருப்பான். பாடினி முல்லை மலர் மாலையை அணிந்திருப்பாள். ஆனால் சாத்தன் இறந்த செய்தி கேட்டதால் இத்தகைய அழகான நடை முறைகள் இன்று செயற்படுத்தப்படமாட்டா. இறந்திருப்பவன் வலிய வேலையுடைய வீரனான சாத்தன், ஆடவர்களில் மிகச் சிறந்த வன். இதனை நீ உணரமாட்டாயா? ஒல்லையூர் நாடே களை இழந்திருக்கும் போது நீ பூத்திருப் பது எதற்காகவோ?

இயற்கை நிலையில் எல்லாம் ஒரு ஒழுங்கில் நடைபெறும் என்பதை முல்லைப்பூ எமக்கு உணர்த்துவதற்காகவே பூத்திருக் கின்றது. நாட்டிற்கு மிக வேண்டியவன் மாண்ட பின்னர் நாடு களையிழந்து போய்விடக்கூடாது. சாத்தன் பணிகள் தொடரவேண்டும் என்பதை முல்லை பூத்திருப்பதன் மூலம் எமக்கு உணர்த்தியுள்ளது. அது தன்னுடைய காலக் கடமையைத் தவறாமல் செய்கிறது. புலவர் நினைத்தவாறு முல்லைப்பூவை இன்று யாரும் பயன்படுத்த மாட்டார்களே என்ற எண் ணம் முல்லைக்கு ஏற்படவில்லை. இயற்கை நிலையில் வகுக்கப்பட்ட கடமைகளைச் செய்வதே வாழும் முறை என்பதை அது உணர்த்துகிறது.

இப்பாடலில் இளமையும் அழகும் இசை யின்பமும் இயற்கையோடு இணைந்தவை. இடையே ஏற்படும் இன்னல்களைக் கண்டு மனம் துவண்டு விடுவது தவறு. மனித வாழ்வில் நாம் எதிர்கொள்பவற்றை இயற்கை நிலை நின்று ஏற்றுக்கொள்வதே நன்று. புலவரு டைய பாடல் கையறுநிலையைப் புலப்படுத்துவ தாக அமைந்துள்ளது எனப் பலரும் கருதுவர். ஆனால் சங்கப் புலவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வியலைப் பதிவு செய்யும் பண்பு டையவர். ஒரு மன்னன் இறப்பு மக்களுடைய மனத்திலே சோகத்தை ஏற்படுத்தும். நடை முறை வாழ்வியலின் செயற்பாடுகள் இடை நின்று போகும் நிலையும் ஏற்படும். எனினும் வாழ்வியலை நன்கு உணர்ந்து இயற்கை நிலையில் அதனை ஏற்று வாழவேண்டும் என்பதையே புலவர்கள் உணர்த்த முயன்றுள்ள னர் என்பது அவர்களுடைய மொழிநடை மூலம் நன்கு உணரக் கிடக்கின்றது.

'கையறு நிலை' என்பதற்குப் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் பின்வருமாறு விளக்கந்தந்துள்ளது.

*"செய்கழன் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர் கையறவுரைத்துக் கைசோர்ந்தன்று"*

கையறு நிலையாவது அரசன் தவற, அவனைச் சேர்ந்தோர் அவ்விறந்து பாட்டைச் சொல்லி ஒழுக்கந் தளர்ந்தல் என உரையாசி ரியர் இக்கருத்தை விளக்கியுள்ளனர். நாளாந்தம் செய்கின்ற செயற்பாட்டில் ஒரு தளர்ச்சி நிலை ஏற்படும் என்பதே இதன் விளக்கமாகும். நாட்டுக் கருமங்களில் மன்னனின் வழிநடத்த லால் ஒரு செம்மையான ஒழுங்கு ஏற்பட்டிருக் கும். அவ்வொழுங்கு தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். இல்லாவிட்டால் நாடு சீர் குலையும். தொடர்ச்சியான நடைமுறைகளின் வெளிப் பாட்டை இயற்கையே எமக்குக் காட்டி நிற்கின் றது. அதனோடு இயைபுபட்டு எமது கடமை களைச் செய்யவேண்டும். இத்தகைய ஒரு தெளிவான சிந்தைக்கு சீர்மியப்படுத்தல் இன்றியமையாதது.

மனித சமூகத்தின் கட்டமைப்புச் சிதறா மல் மனித விழுமியங்களைப் பேணவேண் டும். இலக்கியப் புலமையாளர் இப்பணியைச் செய்யவேண்டும் என்பதே புலவர் நல்லாத னார் கூறவந்த செய்தியாகும். இத்தகைய சமூக மேம்பாட்டிற்கான செய்திகளை மீள் பதிவு செய்து பலரும் அறியவைப்பது பயனுள்ள பணியாகும்.

❖ ❖ ❖



# இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம் ஆகியோர் சிறுகதைகள் : மறுமதிப்பீடு


கலாநிதி செ. யோகராசா
கிழக்குப் பல்கலைக் கழகம்,
வந்தாறுமூலை.


ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் பலருள் முதன்மையிடம் பெறுகின்ற, ஏழாலையைச் சேர்ந்த இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம் ஆகிய இருவரதும் சிறுகதைகள் பற்றிய அபிப் பிராயங்கள் மறுமதிப்பீட்டிற்குள்ளாகவேண்டிய நிலையிலுள்ளன. இவ்விதத்தில் இவ்விருவரதும் சிறுகதைகள் பற்றிப் பொதுவாகக் கூறப்பட்டு வந்துள்ள அபிப்பிராயங்கள் யாவை என்பது பற்றி முதலில் கவனிப்பதவசியமாகிறது.

மேற்கூறிய இருவரும்,

(i) வரலாற்று, புராண, இதிகாச விடயங் களை உள்ளடக்கமாகக் கொண்ட சிறுகதை களையே எழுதினர்[1]

(ii) மனோரதியப்பாங்குடன் எழுதினர்.[2] என்று பொதுவாகக் கூறப்பட்டு வருகின்றது. இக்கூற்றுக்களின் பொருத்தப்பாடு பற்றி முதலிற் கவனிப்போம்.

இவர்கள் வரலாறு, புராணம், இதிகாசம் தொடர்பான சிறுகதைகளை எழுதியதுண்மை யாயினும் ஏனைய விடயங்கள் பற்றியும் எழுதி யுள்ளனர். அவை பற்றிப் பின்னர் நோக்குவோம். அவ்வாறு எழுத நேர்ந்தமைக்கான காரணங்கள் பற்றி இவ்வேளை சிந்திப்போம்.

இவர்கள் சிறுகதையுலகிற் பிரவேசித்த முப்பதுகள் (1930) கால இலக்கியச் சூழல் / எழுத்தாளரது அபிலாஷைகள் எத்தகையன வாயிருந்தன? ஈழத்து விமர்சன முன்னோடிகள் சிலர் சொல்வதுபோன்று, டொனமூர் குழுவினரின் சிபார்சுகள் சமூக, அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற் படுத்தியிருக்கக்கூடுமாயினும் இவ்வெழுத்தாளரது உலகம் வேறுவிதமாகவிருந்தது. சி. வைத்திய லிங்கம் பின்வருமாறு கூறியிருப்பது இதற்குத் தகுந்த சான்றாகிறது.[3]

"உன்னதமான லட்சியங்களும் கனவு களும் எங்கள் வாழ்க்கையில் நிரம்பியிருந்த நாட்கள் அவை. இலக்கியத்தைப் படிப்பதிலும் நாடகங்களைப் பார்ப்பதிலும் சங்கீத ரசனை யிலும் எங்கள் இருவருக்கும் எப்பொழுதுமே பெரிய கர்வம். **எழுதவேண்டும், ஏதாவது சிருஷ்டிக்கவேண்டும் என்ற உணர்ச்சி என்றும் சிறகடித்துக் கொண்டிருக்கும்...**"

இவர்களது மேற்குறிப்பிட்டவாறான மனோநிலையில் இவர்களது பிரசுரகளமாக ஈழத்துப் பத்திரிகைகள் மட்டுமன்றித் தமிழகத்துச் சஞ்சிகைகளும் திகழ்ந்தன. குறிப்பாகக் 'கலை மகள்' ஈழத்து எழுத்தாளர்களுக்கு முக்கிய இடம ளித்தது. இக்கலை மகளிற்குச் சுவையான – புதிய விடயங்கள் கொண்ட சிறுகதைகளே பெருமளவு தேவைப்பட்டன. இந்நிலையில், எழுத்தார்வம் மிக்க எமது முன்னோடிகளுக்கு, ஈழத்து வரலாற் றுச் சம்பவங்களும் புராண / இதிகாச நிகழ்வுகளும் வரப்பிரசாதமாக அமைந்துவிட்டன.

இவர்கள் மனோரதியப்பாங்குடன் எழுதி னர் என்று கூறுவது பற்றி இனிக் கவனிப்போ மாயின் இக்கூற்றில் உண்மையுண்டென்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும், இவ் அபிப் பிராயம் பூதாகரமாக்கப்பட்டுள்ள தென்பதனை மனங்கொள்வதவசியம். ஏனெனில் இவர்களது அனைத்துச் சிறுகதைகளும் அத்தகையன வன்று. முழுச் சிறுகதைகளையும் வாசிக்கும் வாய்ப்புக் கிடையாமை அல்லது ஐம்பதுகளுக்குப் பிற்பட்ட சிறுகதை வளர்ச்சிப் போக்கினை முதன் மைப்படுத்தவேண்டிய உள்ளார்ந்த நோக்கம் என்பன இத்தகைய அபிப்பிராயம் வெளிப்படக் காரணமாதல் கூடும்!

இனி இலங்கையர்கோனின் சிறுகதை கள் பற்றிய அபிப்பிராயங்களை அவதானிப் போம்.

வரலாறு, இதிகாசம் சார்ந்த சிறுகதை கள் தவிர இலங்கையர்கோன் ஆண் பெண் உறவு பற்றிப் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார் என்பது யாமறிந்ததே. இது பற்றி விமர்சக ரொருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.[4]

"கு.ப.ரா, பிச்சமூர்த்தி ஆகிய இருவரை யும் போலவே இலங்கையர்கோனும் ஆண் பெண் உறவு சம்பந்தமான பொருளில் அதிகம் ஈடு பாடுள்ளவராயிருந்தார். சுந்தரர் – பரவையாரைப் பற்றி எழுதினாலென்ன, மேரி மகத லேனா, மேனகை, மாதவி, அனுலா முதலிய பெண் பாத்திரங்களைப் பற்றி எழுதினாலென்ன தசை யின் துடிப்பு அதிலிருக்கும். பூரணசுகம் தசையுடன் தசை சேரும்பொழுது தான் ஏற்படுகிறது. மிதுனங்களின் சேர்க்கையே எல்லாவற்றிற்கும் ஆதார சுருதியாக இருக்கிறது என்பது இலங்கை யர்கோன் தத்துவம்".

மேற்கூறிய விடயங்கள் ஆழ்ந்த பரி சீலனைக்குரியனவாகின்றன. இவ்வழி இலங் கையர்கோன் தத்துவம் எதுவாயினும் அது அவரது சிறுகதைகளில் அவ்வாறு வெளிப்பட வில்லை என்பதும், அவ் விமர்சகர் கூறுவதுபோல், தசையின் துடிப்பு அவர் சிறுகதைகளில் அவ்வாறு வெளிப்படவில்லை என்பதும் ஆண் – பெண் உறவு என்பது பற்றிக் குறுகிய பார்வையே அவ்விமர் சகரிடமுண்டென்பதும், அதனத்தையும்விட, அவ்விதத்திலான இலங்கையர்கோன் சிறுகதை கள் பற்றி அவ்விமர்சகர் கூறுகின்ற விடயம், சிறுகதை வாசிக்காத வாசகர்களுக்கு இலங்கை யர்கோன் சிறுகதைகள் பற்றி அவ் விமர்சகர் கூறு கின்ற விடயம் சிறுகதை வாசிக்காத வாசகர்களுக்கு இலங்கையர்கோன் சிறுகதைகள் ஆபாசமா னவை என்ற எண்ணத்தைத் தரக்கூடியவை என்ப தும், மனங்கொள்ளற்பாலன. (கு.ப.ரா, பிச்சமூர்த்தி சிறுகதைகள் பற்றிய அபிப்பிராயம் உயர்வானதா தாழ்வானதா என்பது வேறு விடயம்).

ஆண் – பெண் உறவு சார்ந்த இவரது சிறு கதைகள் முற்கூறிய விளக்கத்திற்கு முற்றிலும் மாறாக உள்ளன என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு வெள்ளிப்பாதசரமாகும். இச்சிறுகதையில் தம்பதிகளிடையே எழும் பிணக்கும் இறுதியில் ஆண்மை நெகிழ்ந்து பெண்மைக்குப் புகலிடம் கொடுப்பதும் நளினமாக மென்மையான நடை யில் உயிர்த் துடிப்புடன் விளங்குவது குறிப்பிடத் தக்கது.

மனோரதியப்பாங்கிற்கு எதிராக விளங் குவது யதார்த்தப்பாங்கு என்பது அனைவரு மறிந்ததே. இவ்வாறான யதார்த்தப்பாங்குடைய சிறுகதைகளும் இலங்கையர்கோனால் எழுதப் பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட வெள்ளிப்பாதசரம் உட்பட முதற்சம்பளம், தந்தைமனம், மச்சாள், அனாதை, தாழை நிழலிலே முதலியன இத் தகைய சிறுகதைகளுக்கு எடுத்துக்காட்டுகளா கின்றன. இத்தகைய சிறுகதைகளுள் சில பிர தேசப்பண்புகொண்டனவாகவும்காணப்படுகின்றன. சிறந்த எடுத்துக்காட்டு வெள்ளிப் பாதசரம்.

இனி வைத்தியலிங்கத்தின் சிறுகதைகள் பற்றிக் கவனிப்போம்.

முற்கூறியது போன்று சி.வைத்திய லிங்கம், வரலாற்றுச் சிறுகதைகள், மனோர தியப்பாங்குடைய சிறுகதைகள் என்பன தவிர, கிராமிய வாழ்க்கை சார்ந்த பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

"நகர வாழ்க்கையுடன் நான் என்றுமே ஒன்றியதில்லை. கிராமத்தின் அழைப்புக் குரல் எப்பொழுதும் என்காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது... கிராமச் சூழ்நிலையில் வளர்ந்த வன் நான். கள்ளங்கபடமில்லாத கிராமவாசிகளு டன் ஒன்றி வாழ்ந்திருந்தவன். தோட்டந்துரவு களிலும் வயல்வெளிகளிலும் வெய்யிலிலும் மழையினிலும் இரவிலும் பகலிலும் அவர்களு டன் சேர்ந்து உழைத்திருக்கின்றேன். அங்கு அசையும் காற்றும், வீசும் நிலவும், ஊறும் நீரும் என்னை இன்பலாகிரியில் ஆழ்த்திவிடுகிறது."[5] என்று கூறும் வைத்தியலிங்கத்தின் சிறுகதை களில் கிராம வாழ்வு உயிர்த்துடிப்புடன் வெளிப் படுகின்றது. கிராமிய மக்கள் ரத்தமும் சதையுமாக உலாவுகின்றார்கள். 'பாற்கஞ்சி' (வறுமை), 'ஏன் சிரித்தார்?' (கூலி வேலை செய்யும் சின்னம்மாவின்

மனச்சபலம்), 'உள்ளப் பெருக்கு' (குடிகாரத் தந்தை காரணமாக ஆண்களை வெறுக்கும் தெய்வி), 'கழனி கங்கைக் கரையில்' (வீண் சந்தேகம் காரண மாகக் காதலியைப் பறிகொடுக்கும் கந்தையன்) 'நெடுவழி' (உடற்பசிக்கு அடிமையாகும் முத்து மெனிக்கா) முதலியன இத்தகைய சிறுகதை களுக்கு எடுத்துக் காட்டுகளாகின்றன!

இலங்கையர்கோன் போன்று ஆண் - பெண் உறவு சார்ந்த சிறுகதைகளும் சி.வைத் தியலிங்கத்தினால் எழுதப்பட்டுள்ளன. முற் குறிப்பிட்ட 'ஏன் சிரித்தார்?', 'களனிகங்கைக் கரையில்', 'உள்ளப்பெருக்கு' என்பவற்றோடு 'பைத்தியக்காரி', 'அழியாப்பொருள்' முதலியன இவ்வாறான சிறுகதைகளுக்கு உதாரணங்களா கின்றன. உளவியல் ரீதியில் ஆண் – பெண் மன உணர்ச்சிகள் மனஓட்டங்களை வெளிப்படுத்து வனவாக இவை வெளிப்படுகின்றன.

மேற்கூறியவற்றைவிட, சி. வைத்தியலிங் கத்தின் சிறுகதைகளில் எவரும் காணத்தவறிய பிறிதொரு சிறப்பும் அமைந்துள்ளது. அதாவது இன்றைய பெண்நிலைவாத நோக்கில் அணுகும் போது சி.வைத்தியலிங்கத்தின் சிறுகதைகள் இன்னொரு பரிமாணத்தை எய்துகின்றன. இது பற்றிச் சற்று விரிவாகக் கவனிப்பது அவசியமா கின்றது. 'விதவையின் இதயம்', 'மின்னல்', 'உள்ளப்பெருக்கு', 'நெடுவழி', 'கங்காகீதம்' என்பன இவ்விதத்தில் கவனிப்பிற்குரியன வாகின்றன.

மேற்கூறியவற்றுள் 'விதவையின் இத யம்' விதவைப் பெண் ஒருத்தியின் உடல்சார் மன உணர்வுகளை வெகு இயல்பாக வெளிப்படுத்து கின்றது. விதவையான விசாலாட்சி! 'அவள் மனசை ஏதோ ஒரு புழு அரித்துக்கொண்டு வந்தது. அவள் வயதை ஒத்த பெண்கள் வாழ்க்கையின் இன்பங் களைச் சுவைத்து வருவதை அவள் எங்ஙனம் சகிப்பாள்? காட்டு நிலாப்போல் பொங்கி வழிந்து கொண்டிருந்த அவள் யௌவனம் எவரும் அனுப விக்க முடியாமல் நெஞ்சில் உறைந்துபோய்க் கிடந்தது. அவள் உள்ளத்தில் எரிச்சலையும் பொறாமையையும் வளர்த்து வந்தது. தன் ஆத்திரம் முழுவதையும் தீர்ப்பதற்கு அவளுக்கு வேறு வடிகால் கிடைக்கவில்லை. நித்தியலக்ஷ்மி தான் கண்ணுக்கு முன்னால் ஒயிலாய் நடந்து வரு வாள்.[6] தனது சக்களத்தியின் மகளான நித்திய லக்ஷ்மியைக் காரணமில்லாமல் கோபிக்கின்ற விசாலாட்சி, அவளது விவாகத்திற்கு குறுக்கே நிற் பது தொடக்கம் தடைகள் ஏற்படுத்தி, நித்தியலக்ஷ்மி திருமண தினத்தன்று தாலிகட்டும் சுபநேரத்தில் கிணற்றுள் விழுந்து உயிருடன் தப்பிப் பிழைக் கின்றாள். அவளது கழிவிரக்கமும் குற்ற உணர்ச்சியுமே சிறுகதையாக நகர் கின்றன.

'மின்னல்', குழந்தையற்ற தம்பதியர் அநாதையாகக் கிடைத்த குழந்தையை வளர்த்துப் பின் அதனை இழந்து வருத்தப்படுவதைச் சித்திரிப்பதற்கப்பால் அக்குழந்தையை வளர்த்த ஆயாவின் - (அவளே அக்குழந்தையின் தாய்) மன உணர்வுகளையும் நுணுக்கமாக விவரிக் கின்றமை காரணமாக கவனத்திற்குரியதா கின்றது.

கணவனைப் பிரிந்து வாழ்கின்ற இரு பெண்களின் உடல்சார் உணர்வுகளை நுணுக் கமாகச் சித்திரிக்கின்றனவாக, முறையே 'ஏன் சிரித்தாள்?', 'நெடுவழி' ஆகியவை அமை கின்றன. முதற் சிறுகதையில் மனச் சபலத்திற்கு அடிமையானாலும் தன்னை மீட்டெடுத்து விடு கின்றாள் சின்னம்மா.

மறுசிறுகதையில் முத்துமெனிக்கா தன்னை இழந்து அதன் விளைவாகக் குழந்தை சுமந்து பின்னர் கணவன் திரும்பிவர நேர்கையில் தன் சந்தர்ப்ப சூழலை விவரிக் கின்றாள்:[7]

"... நான் சொல்வதை மாத்திரம் கொஞ்சம் கேளுங்கள். நீங்கள் திரும்பி வரவே இல்லை. ஒரு நாளா இரண்டு நாளா? மூன்று வருஷங்கள். நான் ஒவ்வொரு நாளும் உங்கள் வரவுக்காக ஏங்கிக் கொண்டிருந்தேன். மருந்துக்கேனும் ஒரு கடிதம், அதுவும் இல்லை. என்னைப் பற்றிய நினைவே உங்களிடம் இல்லை. இங்கே தன்னந்தனியே ஒரு பெண், ஒரு இளம்பெண்... தனிமை இருந்தது. அதை நினைத்தால் என் உடல் நடுங்குகிறது.

பிரிவினால் ஏற்பட்ட மன ஆத்திரம், வேதனை எல்லாம் இருந்தது. அத்துடன் இருந்தது, பயங்கரமான இந்த இளமை... அவைகளுக்கு அடிமையானேன். என் வல்லமையில் இல்லாத ஒரு தளர்ச்சியான சமயத்தில் என்னையே இழந்து போனேன்".

முடிவில் வீட்டைவிட்டுத் தனது குழந்தையுடன் வெளியேறி நெடுவழி நடக்கின்றாள்.

'கங்காதகீம்', புத்தபிக்கு ஒருவர் மீது ஒருத்தி கொள்ளும் ஒருதலைக் காமத்தையும் அதனாலேற்படும் சிக்கல்களையும் படம் பிடிக்கின்றது.

தன் தந்தையின் குடிவெறியால் தாய் படும் கொடுமையைக் கண்ணுற்று ஆண்களையே வெறுத்த ஒரு பெண்ணின் மன இறுக்கத்தையும் நெகிழ்வையும் நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது 'உள்ளப்பெருக்கு'.

மேற்கூறியவாறான உள்ளடக்கச் சிறப்புகள் ஒருபுறமாக சி.வைத்தியலிங்கத்தின் கலாபூர்வமான எடுத்துரைப்பு முறையும் கவனிப்பிற்குரியது. 'நெடுவழி' சிறுகதையின் ஒரு பகுதியை இவ்விடத்தில் எடுத்தாள்வது பொருத்தமானது.[8]

புலரிக் காலத்தின் மங்கிய ஒளியிலே முத்துமெனிக்கா அவனை இப்பொழுது பார்த்தாள். தோள்கள் உயர்ந்து திரண்டிருந்தன. பார்வையில் காந்தம் போன்ற ஒரு ஒளி வீசியது. கைகள் இரும்பு போன்றிருந்தன.

பெட்டை நாய் கடிக்க, ஆண் நாய் தொடர்ந்து போய் வெற்றிகொண்டு விடுகிறது. ஆண்மயில் ஆடும் கம்பீரத்தைக் கண்ட பெண் மயிலோ மயங்கி அடிமையாகிறது. சேவலின் வீரப் பார்வையையும் நடையையும் கண்ட பேடை தன் கர்வம் அடங்கித் தலைகுனிகிறது... ஆண்மை என்பது இதுதானோ? இப்பொழுது முத்துமெனிக்காவின் மேனி முழுவதும் பெண்மை குலுங்கியது - மென்மை, வாஞ்சை, இனிமை, தான்கடித்த இடத்தை மென்மையாய்த் தடவி வருடத் தொடங்கினாள். டேவிட் சிங்கோ வெற்றி வெறியுடன் அவளைத் தூக்கி அணைத்துக்கொண்டு புடலம் பந்தரின் கீழ் கொண்டு போனான்....

அத்தருணம் திடீரென கடல் கொந்தளித்துப் பொங்கி எழுந்தது. மேகம் மின்னி முழுங்கி இடிஇடித்தது. காற்று சினத்துடன் சூறாவளியின் வேகத்துடன் வீசத் தொடங்கியது. பிரகிருதியே சீற்றங்கொண்டு பொங்கி ஆர்ப்பரிப்பதுபோலத் தோன்றியது. கிழக்கு நன்றாய் வெளுத்துவிட்டது. டேவிட் சிங்கோ எழுந்து தன் பாகற்கொடிகளைப் பார்த்தான். கொடிகளில் பிஞ்சு பிடித்திருந்தது. முத்துமெனிக்கா மன நிறைவின் பூரிப்பிலே கூடையின் சுமையையும் உணராமல் ஒய்யாரமாய் மிதந்து சென்று கொண்டிருந்தாள். அவளுடைய கையாட்டத்திலே உலகமே சுழல்வதுபோல் இருந்தது"

சி.வைத்தியலிங்கத்தின் பெண்கள் பற்றிய மேற்குறித்த பார்வைகள் காரணமாக அன்னார் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முதன்மை இடம் முன்னோடிக்குரிய இடம்பெறுவது விதந்துரைக்கப்படவேண்டியது. எனினும் இத்தகைய சிறப்புப் பற்றிச் சரியாக உணரப்படாத நிலையே காணப்படுகின்றது. அன்று தொடக்கம் இன்றுவரை ஈழத்து விமர்சகர்கள் இது பற்றிக் குறிப்பிடாதது ஒருபுறமிருக்க, முக்கியத்துவம் பற்றி அபிப்பிராயங்களும் முன்வைக்கப்படுகின்றன. விமர்சகரொருவரின் பின்வரும் கூற்று இதற்குச் சான்றாகின்றது.[9]

"சி.வைத்திலிங்கமோ தேசிக விநாயகம்பிள்ளையைப்போல் மென்மை, பெண்மை, கனிவு, அழகு, இனிமை முதலிய பண்புகளை விரும்புபவர், இலக்கியம் அவற்றைப் பிரதிபலிக்கவேண்டும் என்று நம்புபவர். கவிதை யின் கனிவும், வடமொழி இலக்கியத்தின் பெரு மிதமும் துலங்கவேண்டும் என்று வற்புறுத்துபவர். அந்தளவில் சிதம்பர சுப்பிரமணியத்துடன் கருத்தொற்றுமையுடையவர்"

தமது ஏனைய சிறுகதைகளிலிருந்து உள்ளடக்க ரீதியில் விலகி நிற்கின்ற இரு சிறுகதைகளை சி. வைத்திலிங்கம் எழுதியுள்ளார். எண்ணிக்கை இரண்டாயினும் அவை முக்கியத்துவமுடையவை. இவற்றுளொன்று 'ஏமாளிகள்'. பிச்சைக்காரர்கள் எவ்வாறு ஏமாற்றிப் பிச்சை எடுக்கின்

றார்கள் என்பது பற்றிய - என்றும் பொருந்தக் கூடியதான சிறுகதை இதுவாகும். மற்றொன்று 'மரணத்தின் நிழல்'. இது மரணப்படுக்கை யிலிலுள்ள ஒருவரின் இறுதிக் கணங்கள் பற்றிய கலாபூர்வமான சிருஷ்டி. இத்தகைய உள்ளடக்கம் கொண்ட ஆக்கம் தமிழில் வெகு அரிதாக வெளி வருவது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் கு.ப.ராவின் 'விடியுமா'?' என்ற சிறுகதை இச்சிறுகதை உருவாக்கத்திற்கு வழிவகுத்திருப் பதனை இச்சிறுகதையின் முடிவு உணர்த்து கின்றமை குறிப்பிடத் தக்கது.

மேற்கூறிய 'மரணத்தின் நிழல்' சிறு கதைக்கு மட்டுமன்றி, பொதுவாக இவரது கணிசமான சிறுகதைகளுக்கு கு.ப.ராவின் சிறுகதைகள் உந்துசக்தியாகவிருப்பது மனங் கொள்ளத்தக்கது. எனவே 'ஈழத்தின் கு.ப.ரா' என்று இவரை விமர்சகர்கள் சிலர் குறிப்பிடு வதில் தவறில்லை. அதேவேளையில், இலங்கையர் கோன் பற்றி அவ்வாறு சிலர் குறிப்பிடுவதில் பொருத்தப்பாடிருப்பதாக கூறுவதற்கில்லை.

சுருங்கக்கூறின், ஈழத்தின் ஆரம்பகால முன்னோடிகள் என்ற விதத்தில் சமகால எழுத் தாளர்களுள் முற்கூறியவிதங்களில் கவனத்திற் குரியவர்களாக இலங்கையர் கோனும் சி.வைத்திய லிங்கமும் திகழ்கின்றனர். அதேவேளையில், யதார்த்தமானதும் பிரசேதப் பண்பு கொண்டது மான சிறுகதைகள் எழுதியவரென்ற விதத்தில் இலங்கையர் கோனுக்குரிய இடமும், கிராமிய வாழ்க்கையை நன்கு படம் பிடிப்பதும் பெண்மன உணர்வுகளை நுணுக்கமாகச் சித்திரிப்பதுமான சிறுகதைகள் எழுதியவரென்ற விதத்தில் சி.வைத் தியலிங்கத்திற்குரிய இடமும் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் நிரந்தரமானவை என்பதில் தவ றில்லை. ஆயினும் இவ்விருவரதும் அனைத்துப் படைப்புகளும் நூலுருப் பெறும்போது மேலும்பல சிறப்புக்கள் வெளிப்படக்கூடுமென்பதனையும் மறுப்பதற்கில்லை.

**அடிக்குறிப்புக்கள்**

1. பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி), சோ. சிவபாத சுந்தரம், (1989) தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், க்ரியா, சென்னை, பக்.189.
2. சி.மௌகுரு, மௌ.சித்திரலேகா, நுஃமான், இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், வாசகர் வட்டம், கல்முனை, பக்.59-63.
3. பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), சோ. சிவபாத சுந்தரம், (1989), மேற்கோள், மேரு. நா.173.
4. கைலாசபதி, க(1962), 'சிறுகதை', புதுமை இலக்கியம் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டு மலர், கொழும்பு, ப.5
5. செம்பியன் செல்வன் (1973) மேற்கோள் ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள், ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், ப.13.
6. சி.வைத்தியலிங்கம் (1990) 'கங்காகீதம்', அன்னம், சிவகாசி பக்.78-79.
7. சி. வைத்தியலிங்கம் (1990), மேரு.தூ, பக் 123-124
8. சி.வைத்தியலிங்கம் (1990), மு.கு.நூ, ப.119
9. கைலாசபதி, க.(1962), மு.கு.நூ,ப.5)

✷ ✷ ✷

> சரியான சூழ்நிலை இன்னும் அமையவில்லை என்று வருந்திக் காலங் கடத்துவதில் பயனொன்றும் இல்லை! சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்பவர்களே வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்.
>
> *- பெர்னாட்ஷா*



# வள்ளுவத்தில் இலக்கிய உத்திகள்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழிலே எழுந்த அற இலக்கியங்களுள் தலையானது திருக்குறள். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்நூல் சங்கமருவிய காலத்தில் எழுந்ததாக இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவார்கள். சங்ககால அகத்திணை, புறத்திணை ஒழுக்க மரபுகள், பின்னர் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மையால் நெறி பிறழ்ந்த வேளையில் அறத்தாறு இதுவென உணர்த்த இந் நூல் எழுந்ததாகக் கருதப்படுகிறது. கால, தேச, சமய, சாதி பேதங்களைக் கடந்து, அன்பு, அறம் என்ற தளத்தில் நின்று மனிதன் கடைப்பிடிக்க வேண்டியதும், விலக்கவேண்டியதுமான செயல்களையும் கோட்பாடுகளையும் வள்ளுவம் விலாவாரியாக விபரிக்கின்றது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான உயர்ந்த ஒழுக்கநெறி முறைகளைக் கூறவந்த வள்ளுவர் இவ் அறநெறிகள் மக்கள் மனதிலே செம்மையாகப் பதியவேண்டும் என்பதற்காகப் பல நுணுக்கமான இலக்கிய உத்திகளைக் கையாண்டுள்ளார். எளிமையும், தெளிவும் நிறைந்த இவ் உத்திகள் ஏராளமாக வள்ளுவத்தில் பயின்று வருவதைக் காணலாம். இவ் இலக்கிய உத்திகளை இரண்டாகப் பாகுபடுத்தி நோக்குவது பயனுடையதாகும்.

1. வள்ளுவர் குறளின் அமைப்பில் (structure) பயன்படுத்திய உத்திகள்.
2. வள்ளுவர் குறளின் பொருளமைப்பில் (content) புகுத்திய உத்திகள்.

என்பவையே அவையாகும்.

குறளின் அமைப்பு என்ற வகையில் திருக்குறள் பாடப்பட்ட செய்யுள் வடிவம், அதன் உறுப்புக்களின் ஒழுங்கமைப்பு, சொல்லமைப்பு, ஓசையமைப்பு என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. முதலில் குறளின் செய்யுள் வடிவம் பற்றி நோக்கும்போது வள்ளுவர் "குறள் வெண்பா" என்னும் பா வடிவத்தையே தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் ஊடகமாகக் கொண்டுள்ளமை புலனாகும். 'குறள் வெண்பா', வெண்பா எனும் பாவகையுள் மிகக் குறுகிய வடிவமாகும்.

"வேற்று வண்ணம் விரவாது தூய்மை பெற்ற வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளும் சிறப்புடைத்து. அவ்வாறு வேற்றுத் தளையும், அடியும் விரவாது தூய்மை பெற்று எல்லாப் பாவினுள்ளும் சிறப்புடைத்தாகலின் வெள்ளை என்பது காரணக் குறி."

என யாப்பருங்கல விருத்தியுரை கூறுவதிலிருந்து வெண்பா யாப்பின் தூய்மையை உணர்ந்து கொள்ளலாம். மாசற்ற நீதிகளை எடுத்துரைக்க வள்ளுவர் பொருத்தமாகவே வெண்பாவைத் தேர்ந்தெடுத்துள்ளார். அன்றியும் வெண்பா செப்பலோசையுடையது. 'செப்பலிசையின வெண்பா' என்பது யாப்பருங்கலச் சூத்திரம். 'செப்பலிசை யாவது அழைத்துக் கூறாமல் ஒருவனுக்கு மற்றொருவன் இயல்பு வகையான் ஒரு பொருளைக் கட்டுரைத்தற் கண் எழுகின்ற ஓசை' என்கிறார் நச்சினார்க்கினியர். அறக்கருத்துக்களைப் போதிக்க வந்த வள்ளுவர் செப்பலோசை வழுவாதவாறு குறள்களைக் கட்டமைத்துச் சென்றதைக் காணலாம். கேட்போர் மனதில் எளிமையாக அறக்கருத்துக்கள் பதியவேண்டும் என்பதே இதற்குக் காரணம்.

வெண்பா யாப்பிலும் குறள் வெண்பாவிலேயே வள்ளுவர் அறங்களைக் கூறிச் சென்றார் என்பதை முன்னர் பார்த்தோம். குறள் வெண்பா இரண்டடியாலானது. அதன் முதலடி நான்கு சீர்களாலானது. இரண்டாம் அடி மூன்று சீர்களைக் கொண்டது. குறளின் இச் சுருங்கிய வடிவமே அது இற்றைவரை நிலைத்து நிற்பதற்கும் விரும்பிப் படிக்கப்படுவதற்கும் ஆதாரமாக இருக்கிறது. மற்றைய கருத்துக்களைப் போலல்லாது அறக்கருத்துக்கள் சுருக்கமாகவும் நேரடியாகவும் கூறப்படவேண்டியவை. சொற்சுருக்கமும் பொருட்சுருக்கமும் அற இலக்கியங்களில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவை மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கின்றன. திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்கள் இற்றைவரை போற்றிப் படிக்கப்படுவதற்கு அவற்றின் அடிச்சுருக்கமும் ஒரு காரணமாகும். அறக் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதற்கும், அவற்றினை மனதிலே பதித்துக் கொள்வதற்கும், வேண்டிய பொழுது அதனை மீட்டிக் கொள்வதற்கும், பிறருக்குச் சுலபமாக எடுத்துரைப்பதற்கும் குறள் வெண்பா மிகவும் பொருத்தமான வடிவமாகவே உள்ளது. வடமொழி நீதி நூல்களிலும் கூடச்

சொற்சுருக்கம் மிக்க சுலோக அமைப்பு பயின்று வந்திருப்பைதக் காணலாம். இதனால் வள்ளுவர் குறள் வெண்பாவைத் தனக்கேற்ற பாவடிவமாக்கிக் கொண்டதில் வியப்பேதுமில்லை. குறளின் இத்த கைய காத்திரமான உருவ அமைப்பைப் பிற்கா லத் திருவள்ளுவ மாலை ஆசிரியர்கள் பலவாறு புகழ்ந்திருக்கிறார்கள்.

*"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி*
*குறுகத் தறித்த குறள்"*

என இடைக்காடரும்

*"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி*
*குறுகத் தறித்த குறள்"*

என ஔவையாரும் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

குறளின் ஓசையமைப்பிலும் வள்ளுவர் கவ னத்தைச் செலுத்தியுள்ளார். அளபெடை, எதுகை, மோனை, முரண் போன்ற செய்யுளுக்குப் பொலிவு தரும் தொடையலங்காரங்களைப் பலவிடங்க ளிலும் பொருத்தமுற அவர் அமைத்துள்ளதைக் காணலாம். கற்போர் தம் உள்ளங்களைக் கவர் வதற்காகவே இத்தகைய உத்திகள் குறளில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

குறளின் பதினெட்டு இடங்களில் அளபெடை கள் பயின்று வருவதைக் காணமுடியும். இன்னி சையை உண்டாக்கவும் செப்பலோசை குன்றும் இடங்களில் அவற்றைச் சீர்படுத்துவதற்காகவும், சொல்லிசையை நிறைவு செய்வதற்காகவும் என இவ்வளபெடைகள் உபயோகமாகி வந்துள்ளன.

*"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை"* (15)

என்பதில் ஓசையைச் சீர்செய்யவும்

*"உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்*
*வரன்நசைஇ இன்னும் உளேன்"* (1263)

என இன்னிசையை உருவாக்குவதற்கும்

*"வீழ்ப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்*
*வீழப் படாஅர் எனின்"* (1194)

எனச் சொல்லிசையை நிறைப்பதற்காகவும் குறள்களில் அளபெடைகள் பயின்று வருவதனை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

செய்யுளின் ஓசைக்கு உயிரோட்டம் தருகின்ற மோனை, எதுகை முதலானவை குறளில் பெரு வாரியாகப் பயின்று வந்துள்ளன.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்"* (50)

எனச்சீர்கள் தோறும் விரவி வரும் வண்ணமும்,

*"நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை*
*நாணால் உயிர்மருட்டி யற்று"* (1020)

என அடிகள் தோறும் விரவி வரும் வண்ண மும், மோனைகளமைந்த குறட்பாக்களைத் திருக் குறளில் பரவலாகக் காணலாம். அதே போலவே எதுகைகள் போலி எதுகையாகவும், உயிரெதுகை யாகவும், நெடில் எதுகையாகவும், ஒற்றெதுகையா கவும், ஆசெதுகையாகவும் குறளில் நிறைய வந் துள்ளன. அடிகளின் முதற்சீர்களில் அமைந்தோ அல் லது ஓரடியின் சீர்களில் அமைந்தோ இவ் வெதுகை கள் வருவதைக் குறளில் அவதானிக்கலாம். முரண் றொடையுள் அமைந்து வந்துள்ள பல குறள்வெண் பாக்களும் திருக்குறளில் உள்ளன. முரணாவது முன்னர் கூறிய சொல்லுக்கோ அல்லது பொரு ளுக்கோ முரணான சொல்லை அல்லது பொரு ளைப் பின்னர் வைத்துக் கூறுவதாகும்.

*"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல"* (4)

எனும் குறளின் சீர்களில் முரண் அமைந்து வந்துள்ளமையைக் காணலாம்.

குறளின் சொல்லமைப்பைப் பொறுத்தும் வள்ளுவர் பல விசேஷ உத்திகளைக் கையாண் டுள்ளார். ஏறத்தாழ திருக்குறள் எழுந்த காலப் பகுதிக்குரியதான பிற அறநூல்களோடு ஒப்பிடுகை யில் வள்ளுவர் ஓரளவுக்கு வழக்கில் பயின்று வந்த சொற்களையே தன் நூலில் பயன்படுத்தியுள் ளமை புலனாகும். நயத்தக்க நாகரீகம் நிறைந்த தூய சொற்களாய் அவையுள்ளன. எடுத்துக்காட்டா கக் காமம் பற்றி வள்ளுவர் குறிப்பிடும் இடமொன் றைச் சுட்டிக் காட்டலாம். காமம் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகையில் 'மலரினும் மெல்லிது காமம்' (1289) என்கிறார். காமம் மலரின் மென்மையிலும் மேலானது எனக் குறிப்பிடும் அவரது இலக்கிய நாகரிகத்தை எண்ணி வியக்காதிருக்க முடியாது. சில இடங்களில் வெஞ்சொற்களையுங் கூட வள்ளு வர் உபயோகித்துள்ளார். பயனில் பாராட்டுவானை 'மக்கட் பதடி' (196) என அவர் குறிப்பிடும்போது அச்சொல்லின் கடுமையைப் புரிந்து கொள்ளமுடி யும். தான் சொல்லும் அறம் கற்போர் மனதை நன்கு தொடவேண்டும் என்ற விருப்புணர்வே அவரை இத்தகைய சொற்களைக் கையாளத் தூண்டியி ருக்க வேண்டும். வழுவிய ஓசையைப் பெறச் சொல் லடுக்குகளையும் வள்ளுவர் பிரயோகித்துள்ளார்.

*"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு*
*துப்பாய தூஉம் மழை"* (12)

என்னும் குறளில் சொல்லணியும் சிறப்புற்று நிற்பதைக் கண்டு சுவைக்கலாம்.

இவ்வாறு வள்ளுவர் குறளின் அமைப்பில் நுட்பமான உத்திகளைப் புகுத்தியுள்ளமை

போலவே குறளின் பொருளமைப்பிலும் பல சிறந்த உத்திகளைக் கையாண்டுள்ளார். தான் கூற வந்த அறப்பொருளை கற்போர்க்குச் சுவையாகவும், விளங்கக்கூடிய வகையிலும் ஒழுங்கமைத்துக் கொண்ட தன்மையிலும், அவற்றைக் கூறும் முறைமையிலும் அவரது தனித்துவமான ஆற்றலைக் கண்டு கொள்ள முடியும்.

வள்ளுவர் கடைப்பிடிப்பதற்கு அரிதான அறங்கள் எதனையுங் கூறவில்லை. மனிதன் ஒவ்வொருவனும் தன் அன்றாட வாழ்வில் ஆற்ற வேண்டியவற்றை அறிந்து கொள்ள வேண்டியவற்றையே கூறுகிறார். வள்ளுவத்தோடு சமகாலத்தில் எழுந்த அற நூல்களில் பெரும்பாலானவை நிலையாமை என்ற தளத்தில் நின்று எழுதப்பட்டவை. கடுந்துறவு, உலகப்பற்று நீக்கம் என மனிதனின் சாதாரண சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட விடயத்தையே அவை முதன்மைப்படுத்தின. அன்பு, அறம் என்னும் தளத்தில் நின்று சாதி, மத பேதங்களைக் கடந்து சிந்தித்த வள்ளுவர் தனிமனித வாழ்வையே அதிகம் கவனித்தார். அறம், பொருள் இன்பமென மனித வாழ்க்கைக்கு வேண்டிய அம்சங்களைத் தெளிவாக அவர் நூலில் எடுத்துக் காட்டினார். 'வீடு' முதலான சாதாரண சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களைக் கூறி மக்கள் மனதில் குழப்பத்தையுண்டு பண்ண அவர் விரும்பவில்லை. சான்றாண்மை என்றால் என்ன? சால்பு என்றால் என்ன? மக்கட் பண்பு என்றால் என்ன? நயத்தக்க நாகரிகம் என்றால் என்ன? என்பவற்றை மையப்படுத்தி ஆராய்வதே வள்ளுவரது நோக்கமாக இருந்தது.

மேற்காட்டியவை வள்ளுவரின் ஆளுமையை வெளிக்காட்டும் இடங்களாகக் கொண்டாலும் அவ் ஆளுமையினூடே புலப்படும் இலக்கிய உத்திகளையும் சுட்டிக் காட்டியேயாக வேண்டும். காப்பிய, புராணப் பொருள்களைப் போல் அறப் பொருளைக் கூறமுடியாது. எனினும் அறநூல் ஆசிரியன் இயன்றளவுக்காயினும் அவற்றை எளிமைப்படுத்திச் சுவைபடக்கூறல் அவசியம். அதாவது மக்கள் இலகுவில் உளங் கொள்வதற்கும் விரும்பிப் படிப்பதற்கும் ஏற்ற வகையில் அறப்பொருளைக் கூறிச் செல்ல வேண்டும். வள்ளுவர் இவ்வுண்மையைத் தெளிவாக அறிந்து கொண்டவர். ஆதலால் அதற்கேற்பப் பல உத்திகளைக் கையாண்டு அறப்பொருளைக் கூறிச் செல்கிறார்.

தான் கூறவந்த அறப்பொருளை நேரடியாக 'இதுதான்' என வரைவிலக்கணம் போல் கூறிவிடும் உத்தியை வள்ளுவரிடத்தில் காண்கிறோம். அறம் என்றால் என்ன? வாய்மை என்றால் யாது? அமைச்சன் என்றால் யார்? அரசு என்றால் எப்படியிருக்கவேண்டும்? என்பன பற்றி எடுத்த எடுப்பிலேயே – ஒரே குறளில் வரைவிலக்கணம் தந்துவிடுகிறார் வள்ளுவர்.

*"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்"* (291)

என வாய்மை பற்றியும்

*"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு"* (731)

என நாடு பற்றியும் வள்ளுவர் தரும் வரையறைகளில் மேற்கூறிய பண்பைக் கண்டு சுவைக்கலாம். சுருக்கமாகவும் அதேவேளை ஆழமாகவும் அறப்பொருளைக் கற்போர் மனதில் பதியவைக்கும் உத்திகளுள் ஒன்றாய் இது அமைகிறது. அதேபோலவே ஒரே பொருளை எடுத்துரைக்கும் ஈற்றுச் சீர்கள் பல அதிகாரங்களில் ஒத்து வந்துள்ளன. 'அரண்', 'நாடு', 'அறிவுடமை' பற்றிப் பேசும் அதிகாரங்களை இதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டலாம்.

குறள் வடிவம் மிகவும் குறுகியது. எனவே ஒரு குறளிலேயே சொல்ல விரும்பும் அறப்பொருளைக் கூறி விடுவது என்பது சாத்தியமில்லை. ஆதலால் உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கூறுதல், அமைப்பில் சிறுசிறு வேறுபாட்டுடன் குறள்களை அமைத்தல், கூறிய பொருளையே மேலுஞ் சில குறள்களில் வலியுறுத்தல், உவமையுடன் சேர்த்து மீளவும் விளக்கமாகக் கூறல் போன்ற உத்திகளை வள்ளுவர் கையாண்டுள்ளார்.

உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் அறப்பொருளை அமைத்துச் சென்ற இடங்கள் அதிகமாகும். முயற்சி, செங்கோன்மை, கல்வி, பெரியாரைத் துணைக்கோடல் போன்ற இடங்களை வகைமாதிரியாகச் சுட்டலாம். கல்வி பற்றி வள்ளுவர் கூறும்போது 'கேள்வி', 'அறிவுடமை' பற்றிய குறள்களால் உடன்பாடாகக் கல்வி பற்றி மேலதிக விளக்கங்களைத் தருகிறார். அதேபோல கல்லாமை பற்றிய குறள்களால் அதே கருத்தையே எதிர்மறையாகக் கூறுகிறார்.

*"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்"* (140)

எனும் குறட்பொருளை அமைப்பில் சிறு வேறுபாட்டுடன்,

*"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு"* (426)

என மற்றோர் குறளில் வள்ளுவர் சுட்டுகிறார்.

*"எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை*

*வீயாது பின்சென்று அடும்"* (207)

எனும் குறள் கருத்து

*"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாது அடியுறைந் தற்று"* (208)

எனுங் குறளில் உவமையுடன் சேர்ந்து மேலும் விளக்கமுறுவதைக் காணலாம்.

*"எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னன்*
*தண்பதத்தான் தானே கெடும்"* (548)

எனும் குறளில் சொன்னதையே

*"நாடொறும் நாடிமுறை செய்யா மன்னவன்*
*நாடொறும் நாடு கெடும்"* (553)

எனும் குறளில் மேலும் வலியுறுத்துகிறார்.

அறத்தைப் பொலிவும், விளக்கமும் உடைய தாக்க உவமை, பிறிதுமொழிதல், உருவகம் முதலான அணிகள் குறளில் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில் உவமையணி குறளில் அதிகளவு பிரயோகமாகி வந்துள்ளது. சுமார் நூற்று எண்பதுக்கு மேற்பட்ட உவமைகள் வள்ளுவத்தில் பயின்று வருவதைக் காணலாம். சங்ககால உவமை மரபுடன் ஓரளவுக்குப் பொருந்தி இவை வந்தபோதும், பல வழிகளில் அவை தனித்துவம் பெற்று விளங்குகின்றன. காமத்துப் பாலில் வரும் குறள்களே பெரும்பாலும் சங்க மரபுடன் ஒத்த உவமைகளைப் பெற்று வந்துள்ளன. ஏனையவை இயற்கைத் தோற்றப்பாடுகளையும், நிகழ்வுகளையும், புராணக் கதைகளையும், விலங்குகள் பறவைகள் போன்றவற்றையும் அவற்றின் செயற்பாடுகளையும் மையப்படுத்தி எழுந்த புதிய உவமைகளாக விளங்குவதைக் காணலாம். புரிந்து கொள்வதற்கு எளிமையான இவ்வுவமைகள் குறளில் தனித்தோ அல்லது சோடியாகவோ வருவதுண்டு.

*"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*
*குத்தொக்க சீர்த்த இடத்து"* (490)

எனும் குறளில் உவமைகள் இரண்டு சோடியாக வந்துள்ளன.

*"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல்வேந்தர் சேர்ந்தொழுகு வார்"* (691)

எனும் குறளில் உவமை தனித்து வந்திருப்பதைக் காணலாம். சில இடங்களில் காரசாரமான உவமைகளையும் வள்ளுவர் கையாளுகிறார். கொடுங்கோல் மன்னனை,

*"வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்*
*கோலொடு நின்றான் இரவு"* (552)

எனக் கடுமையான உவமையால் சாடுகிறார். ஆளும் வர்க்க ஆணிவேரையே பிடித்து உலுப்பும் பேராற்றல் மிக்கது இவ் உவமை.

பிறிது மொழிதல் அல்லது ஒட்டணி என அழைக்கப்படும் அலங்காரமும் குறள்களில் பயின்று வந்துள்ளது. பிறிதுமொழிதலாவது தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தத் தக்க பிறிதொன்றினைச் சொல்லுதலாகும்.

*"பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்"* (475)

எனும் குறளில் இவ்வணி பிரயோகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நாட்டார் பழமொழிகளையும் பழமரபுக் கதைகளையும் (legends) வள்ளுவர் இடையிடையே உபயோகித்து அறக்கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். "கற்றில னாயினும் கேட்க" (414) எனும் குறளில் "கற்றலில் கேட்டல் நன்று" எனும் பழமொழி பிரயோகமாகியுள்ளது. அதேபோல "மதிப் புறத்துப் பட்ட மாசு" எனும் பழமொழி,

*"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்*
*மதிக்கண் மறுப்போல் உயர்ந்து"* (957)

எனப் பிரயோகமாகி வந்துள்ளது. "எச்சில் கையால் காக்கையை ஓட்டாதவன்" எனும் பழமொழி. "ஈர்ங்கை விதிரார் கயவர்..." (1077) என்னும் குறளில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

*"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உள்ளார்கோமான்*
*இந்திரனே சாலும் கரி"* (25)

*"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்*
*தாஅய தெல்லாம் ஒருங்கு"* (610)

எனும் குறள்களில் எளிமையூட்டும் நோக்கோடு ஒரு சில பழமரபுக் கதைக் குறிப்புகளை வள்ளுவர் தந்து செல்கிறார்.

இவ்வாறு குறளின் அமைப்பிலும் பொருளிலும் வள்ளுவர் புகுத்திய உத்திகள் இற்றைவரையும் அந்நூல் எல்லோராலும் போற்றிப் படிக்கக் கூடிய தன்மையைப் பெற்றுக் கொடுத்துள்ளன. எளிமையும் சுவையும் ஓசைச் சிறப்பும் பொருட் தெளிவும் கொண்ட இவ்வுத்திகள் கற்போர் மனங்களைக் கவர்ந்து அறக் கருத்துக்களைத் திணிக்கும் ஆற்றல் பெற்றவை.

**உசாத்துணை நூல்கள்**


1. மோகனராசு.க, "திருக்குறளில் மரபுகள்"
2. ராமகிருஷ்ணன்.S, "திருக்குறள் யாப்பமைதியும் பாட வேறுபாடும்.
3. சண்முகம்பிள்ளை.மு."திருக்குறள் யாப்பமைதியும் - பாடவேறுபாடும்"
4. அரவிந்தன் மு.வை, "திருக்குறளில் அறிவுத் துறைகள் - இலக்கியம்"
5. சுப்பிரமணியன்.நா, கௌசல்யா சுப்பிரமணியன், "இந்தியச் சிந்தனை மரபு"



# இலக்கிய வளர்ச்சியில் ஈழத்துச் சஞ்சிகைகள்

து. சிவசுப்பிரமணியம்

தமிழ்நாட்டில் தீவிரமான இலக்கிய முயற்சிகள் ஊக்கத்தோடும் உற்சாகத்துடனும் செயற்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், இலங்கையிலும் அவற்றின் தாக்கம் ஏற்பட்டதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் உள்ள இலக்கியவாதிகள் புது விழிப்புடனும் புதிய உத்வேகத்துடனும் செயற்பட ஆரம்பித்தனர். தமிழ்நாட்டில் 'மணிக்கொடி' வெளிவந்துகொண்டிருந்த காலத்தில் இலங்கையில் 'ஈழகேசரி' தோன்றி இலக்கிய மறுமலர்ச்சிக்காக உழைத்து வந்தது. அதைத் தொடர்ந்து 'மறுமலர்ச்சி' தோன்றி தனது இலக்கியப் பங்களிப்பை ஆற்றிவந்தது.

ஈழத்து நவீன இலக்கியம் பற்றிய எண்ணக்கரு தோன்றிய நாற்பதுகளில் முதல் முதலில் சஞ்சிகைகளே தோற்றம்பெற்றன. இன்னுமொரு நிலையில் கூறுவதாயின் அக் காலங்களில் வெளிவந்த சஞ்சிகைகளின் உருவாக்கம் தான் நவீன இலக்கிய முயற்சிகளுக்கு வழித்தோன்றலாக அமைந்துள்ளமையை அவதானிக்கலாம். அத்துடன் நவீன இலக்கிய வளர்ச்சியுடன் இரண்டறக் கலந்துள்ளமை நோக்க முடிகிறது. உண்மையைக் கூறுவதாயின், நவீன இலக்கியத்தின் பிறப்பு நிலையில் சஞ்சிகைகள் தாயின் ஸ்தானத்தில் இருந்துள்ளன என்பதையும், வளர்ச்சி நிலையில் வளர்ப்புத் தாயாகவும் சஞ்சிகைகள் இருந்துள்ளன. எனவே, ஈழத்து இலக்கிய வரலாற்றில் சஞ்சிகைகளின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

கொழும்பிலிருந்து கே. கணேஸ் என்னும் மார்க்சியவாதியால் 1946இல் 'பாரதி' என்ற சஞ்சிகை வெளிக்கொண்டுவரப்பட்டது. இச் சஞ்சிகையில் புதுமை இலக்கிய முற்போக்கு முன்னோடி மார்க்ஸிம் கார்க்கியின் கதை, முற்போக்கை முழுமையாகத் தழுவிக்கொண்ட அ.ந. கந்தசாமியின் கதை, நவயுக எழுத்தாளன் 'ரால்ப் பாக்சை' பற்றி கே. ராமநாதன் எழுதிய கட்டுரை ஆகியன வெளிவந்து தனது இருப்பை உறுதிப்படுத்தியது. அதே ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான 'மறுமலர்ச்சி'யும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிப் பல எழுத்தாளர்களை உருவாக்கியது. அவர்கள் 'மறுமலர்ச்சி' எழுத்தாளர்களென அழைக்கப்பட்டனர். வரதர் ஆசிரியராக இருந்து வெளிவந்த 'மறுமலர்ச்சி' புதிய பரிமாணத்தைக் கொண்டிருந்தது.

'பாரதி' ஈழத்தின் முதல் முற்போக்குச் சஞ்சிகை என்ற முத்திரையைப் பதித்துக் கொண்டது. இப் பின்னணியில் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியிலே 'பாரதி' என்ற இதழ் முக்கிய இடம்பெறுகிறது. மார்க்சியம் சார்ந்த சமூக நோக்கு என்ற அடிநாதத்துடன் 'பாரதி' இதழ் திசை பரப்பி நின்றது. "ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட ஏடு பாரதி" என்று மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் குறிப்பிட்டுள்ளார். 'பாரதி' சஞ்சிகையில் நவீன முற்போக்கான கவிதைகள் வெளிவந்ததுடன் மொழிபெயர்ப்புக் கவிதைகளும் இடம் பெற்றன.

'மறுமலர்ச்சி' சஞ்சிகையின் வரவுடன் ஈழத்து நவீன கவிதைகளின் தோற்றமும் அவ்வாறே ஈழத்துச் சிறுகதைகளும் மண்வாசனையுடன் வெளிவரும் போக்கும் உருவாகின.

வரதர், நாவற்குழியூர் நடராசன், அ.செ. முருகானந்தம், அ.ந.கந்தசாமி, சு.இராசநாயகன், மஹாகவி, சொக்கன் ஆகியோர் 'மறுமலர்ச்சிப் பண்ணையில் வளர்ந்தவர்களே. 1948களில் திருகோணமலையிலிருந்து 'எரிமலை' என்னும் சஞ்சிகையும், மட்டக்களப்பிலிருந்து 'உதயன்', 'பாரதி' ஆகிய சஞ்சிகைகளும் வெளிவந்துள்ளன. 1954இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிறுவப்பட்டது. அது நடத்திய இலக்கிய இயக்கத்தினூடாக ஈழத்து எழுத்தாளர் மத்தியிலும் ஈழத்துப் படைப்பிலக்கியம் சம்பந்தமான விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டன. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது முதலாவது மாநாட்டில் முன்வைத்த ஜனநாயக யதார்த்தவாதக்கோட்பாட்டை அடியொட்டி 1960இல் தேசிய இலக்கியத்தைப் பிரகடனம் செய்தது. இதனைத் தொடர்ந்து தேசிய இலக்கியம் பற்றிய விளக்கத்தை அளிக்கவேண்டியிருந்தது. 1961இல் வெளியான இளங்கீரனின் கலை இலக்கியச் சஞ்சிகையான 'மரகதம்' இப்பணியை ஏற்றது. அதன் முதல் இதழில் பேராசிரியர் க.கைலாசபதி தேசிய இலக்கியம் பற்றிய தனது முதலாவது கட்டுரையை எழுதினார். அவரைத் தொடர்ந்து ஏ.ஜே. கனகரத்தினா, அ.ந.கந்தசாமியின் படைப்புகளும் இடம்பெற்றன. பாரதி, மறுமலர்ச்சி, மரகதம் ஆகிய மூன்று சஞ்சிகைகளிலும் அ.ந.கந்தசாமியின் எழுத்தாக்கங்கள் வெளிவந்துள்ளன.

மரகதம், புதுமை இலக்கியம், கலைமதி, வசந்தம் ஆகிய கலை இலக்கியச் சஞ்சிகைள் முற்போக்கு இலக்கியக் கருத்துக்களை முன்னிறுத்தி வெளிவந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து சிற்பி சரவணபவனை ஆசிரியராகக் கொண்டு 'கலைச்செல்வி' என்னும் மாசிகை வெளிவந்தது. ஈழத்து எழுத்தாளர்களை உருவாக்கியதில் 'கலைச் செல்வி'க்குப் பெரும்பங்குண்டு. 1958ம் ஆண்டு ஆடிமாதம் தொடக்கம் கலைச்செல்வி வெளிவரத் தொடங்கியது.

செ.யோகநாதன், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், பெனடிற்பாலன், யாழ் நங்கை, மு.பொன்னம்பலம், மு.கனகராஜன், தெணியான், ச.வே.பஞ்சாட்சரம், செ.கதிர்காமநாதன், சாந்தன் ஆகியோர் கலைச்செல்வியின் பண்ணையில் வளர்ந்தவர்களே. ஆகவே கலைச்செல்வியின் பங்களிப்பைக் குறைத்து எடைபோடமுடியாது. வரதருடைய 'வெள்ளி', 'புதினம்' சஞ்சிகைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தன. 'புரட்சிகர சிந்தனையாளர்களின் எழுகளம்' என்னும் அமைப்பினர் 'பொன்மடல்' என்னும் ஏட்டை வெளியிட்டனர். 'அக்னி' என்னும் சிற்றேடு மனிதாபிமானப் படைப்பாளிகளின் முற்போக்குச் சிந்தனைக் களமாகச் செயற்பட்டது.

1963ம் ஆண்டு சி. சிவஞானசுந்தரம் தமிழ்ச் சஞ்சிகை உலகிற்குப் புதுமை சேர்க்கும் வகையில் 'சிரித்திரன்' என்னும் சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தார். பலரைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சிரித்திரன் சஞ்சிகை இலக்கிய உலகில் மட்டுமன்றி கார்ட்டூன் துறையிலும் பெரும் சாதனைகளைப் படைத்துள்ளன.

டொமினிக் ஜீவாவை ஆசிரியராகக் கொண்டு 1966 ஆகஸ்ட் 15ஆம் திகதி 'மல்லிகை'முதலாவது இதழ் வெளிவந்தது. பல சோதனைகள் வேதனைகளுக்கு மத்தியிலும் சோர்ந்துவிடாமல் இன்றுவரை ஒரு இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டுவருவது இமாலயச் சாதனையாகும்.

1969களில் 'அமுதம்' என்னும் சஞ்சிகையும் வெளிவந்துள்ளது. முற்போக்கு எழுத்தாளரான செ.கணேசலிங்கன் 'குமரன்' என்னும் சஞ்சிகையை வெளியிட்டார். கலை இலக்கியச் சஞ்சிகையான குமரன் இலக்கியத்துறையில் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளது. கதம்பம், கலைக்கதிர், தமிழின்பம், அறிவுக் களஞ்சியம்,

கலைச்சுடர், தமிழருவி ஆகிய சஞ்சிகைகளும் அவ்வப்போது வெளிவந்து தொடரமுடியாமல் நின்றுவிட்டன. 1968களில் மருதூர்வாணன் ஆசிரியராக இருந்து 'தேன்மதி' என்னும் ஏட்டை நடத்தினார். இளம் எழுத்தாளர்களுக்கு உற்சாகமளிக்கும் அரங்கமாகக் கலைக்கூடல் என்ற அமைப்பையும் உருவாக்கி எழுத்தாளர் களைச் சந்திக்க வைத்தது.

1970களில் சஞ்சிகைகளின் வரவில் புதிய உத்வேகத்தைக் காணக்கூடியதாக இருந் தது. ஈழத்தின் இலக்கியம் தனித்துவமான உச்சநிலையில் வீறுநடை போட்ட காலப்பகுதி யில் பல சஞ்சிகைகள் தத்தமது இலக்கியப் பங்களிப்பை வழங்கலாயின. செல்வராசாவை ஆசிரியராகக் கொண்ட 'அஞ்சலி', த. சிவசுப்பிர மணியத்தை சிறப்பு ஆசிரியராகக் கொண்ட 'கற்பகம்' மணிசேக ரனின் 'தமிழமுது' ஆகிய சஞ்சிகைகள் கொழும்பிலிருந்தும் வெளிவந் தன. அன்பு மணியை ஆசிரியராகக் கொண்டு மட்டக்களப் பிலிருந்து 'மலர்' என்னும் சஞ்சிகை யும் வெளிவந்தது.

1970இல் 'கற்பகம்' தோன்றியது. வண்மையுடையதொரு சொல்லினால் - உங்கள் வாழ்வு பெற விரும்பி நிற்கிறோம் என்ற பாரதி வாக்கை இலட்சிய வரிகளாகத் தாங்கி கலை, இலக்கியம், அறிவியல், பொருளாதாரம் போன்ற பல துறைகளிலும் கவனம் செலுத்திய கற்பகம், ஈழத்து மண்வாச னையையும் சாதாரண விவசாய, தொழிலாள மக்களுடைய வாழ்க்கை முறையையும் கருத்திற்கொண்டு ஆற்றல் இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியது என்று பிரபல எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் 'இலங்கை இதழ்கள்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'நூறு சிந்தனை மலரட்டும் நாறும் கீழ்மைகள் தகரட்டும்' என்ற கொள்கை முழக்கத்துடன் 'களனி' என்னும் சஞ்சிகை ஒரு விவசாயப் பிரதேசமான கிளிநொச்சியை நிலைக்களமாகக் கொண்டு 1973இல் வெளிவந்தது. 1974களில் இருந்து 'தாயகம்' என்னும் சஞ்சிகை கலை இலக்கியத் தாகத் துடன் வெளிவந்துகொண்டிருக்கிறது. தேசிய கலை, இலக்கியப் பேரவையின் வெளியீடான இச் சஞ்சிகை இற்றைவரை எழுபது இதழ்களை வெளிக்கொணர்ந்துள்ளது. டானியல் அன் ரனியை ஆசிரியராகக் கொண்ட 'சமர்' என்னும் முற்போக்கு இலக்கிய ஏடு 1979இல் வெளி வந்தது. கீற்று இலக்கியவட்டம் என்ற அமைப்பு கல்முனையிலிருந்து 'கீற்று' என்னும் காலாண்டுச் சஞ்சிகையை நடத்தியது. 'வயல்', 'அலை', 'புதுசு', 'சமூகதீபம்', 'களம்', 'ஒளி', 'நதி', 'பூரணி', 'வியூகம்', 'தேனருவி', 'இன்சான்', 'இளம்பிறை', 'தாரகை', 'முனைப்பு', 'படி', 'உன்னைப்போல் ஒருவன்', மூன்றாவது மனிதன்', 'பூவரசு ஆகிய சஞ்சிகைகள்' அவ்வப் போது தோன்றி இலக்கியப்பணி ஆற்றியுள்ளன. "இந்த இலக்கிய வேள்வியில் கலந்துகொள்ளு மாறு படைப்பாளிகளையும் ஆர்வலர்களை யும் இருகரங்கூப்பி வரவேற்கிறோம்". இவ்விதம் அறிவித்துக்கொண்டு ஆசிரியர் சி.சங்கரம் பிள்ளை 'தாரகை' என்னும் சஞ்சிகையை 1981இல் மட்டக்களப்பிலிருந்து வெளியிட்டார். சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் 'சுடர்' என்னும் கலை இலக்கியத் திங்கள் இதழை நடத்தியது. யாழ்ப்பாணத்திலிருந்து க.வீரகத் தியை ஆசிரியராகக் கொண்டு 1981இல் 'கிருதயுகம்' என்னும் ஏடு வெளிவந்தது.

மலையகத்திலிருந்து 'மாலைமுரசு', 'மலைப்பொறி', 'சாரல்', 'குன்றின்குரல்', 'அகசல னம்', 'வடம்', 'பிரவாகம்' ஆகிய சஞ்சிகைகளு டன் மலையகத்தின் இளைய தலைமுறையைச் சார்ந்த புத்திஜீவி வட்டத்தினரால் 'தீர்த்தக்கரை' எல்.சாந்திகுமாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. மலையக மக்களின் வாழ்க்கை யையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும்

ஆக்கங்கள், மலையகம் பற்றிய ஆய்வுபூர்வமான கட்டுரைகள் என்பன 'தீர்த்தக்கரை 'யில் இடம்பெற்றன. காலாண்டு ஏடாக வெளிவந்த இவ் இதழ் ஐந்து இதழ்களுடன் நின்றுவிட்டது. அதன்தொடர்ச்சியாக 'நந்தலாலா' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. மலையகத்தின் தலைநகராம் கண்டியிலிருந்து அந்தனி ஜீவாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'கொழுந்து' மணம் பரப்பிக்கொண்டிருக்கின்றது.

பெண்ணிலைவாத நோக்கில் எழுந்த 'பெண்ணின் குரல்', 'நிவேதினி', 'பெண்', 'நங்கை' ஆகியனவும் பெண்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளன. ஈழத்திலே நவீன நாடகம் பற்றிய சிந்தனையைத் தூண்டும் வகையில் 'கலைமுகம்', 'அரங்கம்', 'ஆற்றுகை' ஆகிய நாடகம் பற்றிய சஞ்சிகைகளும் வெளிவந்தன.

'கவிஞன்', 'யாத்திரா', 'கலைக்கண்', 'அரும்பு', 'உதயன்', 'அருச்சுனா', 'தமிழ்த்தென்றல்' ஆகிய சஞ்சிகைகள் மணம்பரப்பின. உதயன் பத்திரிகை நிறுவனத்தினரால் 'அருச்சுனா'வும், திருகோணமலை வடக்கு – கிழக்கு மாகாணப் பதிப்பகத் திணைக்களத்தால் 'தமிழ்த் தென்றலும்' வெளியிடப்பட்டன. 1994இல் இருந்து 'ஆற்றுகை' என்னும் நாடக அரங்கியலுக்கான இதழ் திருமறைக் கலா மன்றத்தினரால் வெளியிடப்படுகின்றது. மேலும் திருகோணமலையிலிருந்து எஸ்.பி ராமச்சந்திராவை ஆசிரியராகக் கொண்டு 'அறிவு' என்னும் சஞ்சிகையும், எஸ்.ஆர்.தன பாலசிங்கத்தை ஆசிரியராகக் கொண்ட 'நீங்களும் எழுதலாம்' என்னும் கவிதை இதழும், யாழ்ப்பாணம் அல்வாயிலிருந்து சின்னராசா விமலன், கலாமணி பரணீதரன் ஆகிய இருவரையும் பிரதம ஆசிரியராகக் கொண்டு 'ஜீவநதி' என்னும் தரமான கலை இலக்கியச் சஞ்சிகையும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளாக தி. ஞானசேகரனை ஆசிரியராகக் கொண்டு 'ஞானம்' என்னும் சஞ்சிகை மாதம் தவறாமல் வெளிவந்துகொண்டிருக்கின்றது. கொழும்புத் தமிழ்ச் சங்கம் 'ஓலை' என்னும் சஞ்சிகையையும் தெ. மதுசூதனனை ஆசிரியராகக் கொண்டு 'அகவிழி', 'கூடம்' சஞ்சிகைகளும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. வத்தளையிலிருந்து ம.இ.லோஷனை ஆசிரியராகக் கொண்டு காலாண்டிதழான 'நதி'யும், கவிஞர் கலா விஸ்வநாதனின் சமூக மாற்றத்துக்கான 'குன்றம்' சஞ்சிகையும் வெளிவருகின்றன.

மட்டக்களப்பிலிருந்து கவிஞர் சாருமதியின் 'பயிர்' என்னும் இதழும் கொழும்பிலிருந்து இளைஞர்களால் 'பயிர்நிலம்' ஏடும் வெளிவந்ததாக அறிய முடிகின்றது. கிழக்கு மாகாணம் – சாய்மருது என்னும் இடத்திலிருந்து ஏ.ஜே.எம்.பிறவ்ஸ் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 'மின்னல்' இலவச வெளியீடாக வந்துகொண்டிருக்கின்றது. இந்தியச் சஞ்சிகைகளின் சாயலில் இலங்கையிலிருந்து 'இருக்கிறம்', 'அமுதம்', 'வேடிக்கை' ஆகியவை வெளிவந்துகொண்டிருக்கின்றன. மட்டக்களப்பிலிருந்து செங்கதிரோன் 'செங்கதிர்' என்னும் சஞ்சிகையை வெளியிடுகின்றார்.

இறுதியாக ஈழத்து நவீன இலக்கியத்தின் தோற்றத்திற்கும் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கும் ஈழத்தில் வெளிவந்த கலை இலக்கியச் சஞ்சிகைகள் காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ளன. அதேவேளை இலங்கைச் சஞ்சிகையாளர் பலரும் தமது ஆத்ம திருப்திக்காகவே சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தார்கள் என்ற உண்மையையும் ஜீரணித்தேயாக வேண்டும். தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகைகள் ஆக்கபூர்வமான இலக்கியப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

❖ ❖ ❖



# புலவரையிறந்த புகழ்சால் தோன்றல் நற்றமிழ் வித்தகர் நமசிவாயதேசிகர்

## தல இலக்கியப் பனுவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு


**சி.ரமேஷ்**
ஆசிரியர், யா / மல்லாகம் மகாவித்தியாலயம்


தேசிகர் என்றும் (சி.கணேசையர்), செந்தமிழ்த் திலகம் என்றும் (நல்லை ஆதீனம்), இலக்கண வித்தகர் என்றும் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மகாவித்துவான் என்றும் (ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்), மூதறிஞர் என்றும் (அகில இலங்கை கம்பன் கழகம்) அழைக்கப்பட்ட ஈழத்திருநாட்டின் தலைமைச் சால் பேராசான் நமசிவாய தேசிகர் "தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே – உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் கடலுள் மாய்த்த இளம் பெருவழுதியின் கூற்றுக்கமைய எவ்வித பெருமையையும் புகழையும் எதிர்பாராது தம்மாலியன்ற தமிழ்ப்பணி செய்து வாழ்ந்த பைந் தமிழ்ப் பண்டிதராவார்.

நமசிவாய தேசிகர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மயிலிட்டி தெற்கில்1915 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை பின்னிரவு சிங்க லக்கினத்தில், தனுராசியில், சந்திரன் பூராட நட்சத்திரத்தில் கோசரிக்கும் வேளையில் ஆதிசைவக்குரு பரம்பரையில் அவதரித்த தாமோதரம்பிள்ளை இராமசாமி பர்வதம் தம்பதியர்க்கு கனிஷ்ட புத்திரராகப் பிறந்தார். நமசிவாய தேசிகருடன் உடன்பிறந்தார் முத்தம்மா, செல்லம்மா, தங்கம்மா, தாமோதரம்பிள்ளை என்னும் மூவராவார்.

சொக்கநாதக்குருக்களால் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்ற நமசிவாயதேசிகர் ஆரம்பக்கல்வியைக் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையிலும் (பொன் பரமானந்த வித்தியாசாலை) இடைநிலைக்கல்வியைத் தெல்லிப்பளை துவிபாஷா பாடசாலையினும் (யூனியன் கல்லூரி) பிறிலிம் கல்வியை அளவெட்டி சீனன் கலட்டிப்பாடசாலையிலும் பயின்றார். ஆரம்பக் கல்வியை இவர் கற்கும் காலத்தில் பொன்பரமானந்தர் இவருக்குக் குருவாக வாய்க்கப்பெற்றார் எனக் கூறுவாருமுளர். சுன்னாகம் பிராசீனப் பாடசாலையில் சமஸ்கிருதக்கல்வியைக் கற்றுத் தெளிந்தேறிய வித்தகர் பண்டித பிரவேசத்துக்கான கல்வியை வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ கணேசையரிடம் கற்று 1934 ஆம் ஆண்டு ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்பட்ட பாலபண்டித பரீட்சையிற் சித்தியெய்தினார். இக் காலப்பகுதியில் குறிப்பாக 1933 தொடக்கம் 1934 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை முடித்து வெளியேறிய மஹாவித்துவான் 1935 தொடக்கம் 1971 வரை வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இவர் இங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அதாவது 1938 இல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பண்டிதப் பரீட்சையிற் சித்தி பெற்று மதுரைப் பண்டிதர் ஆனார். இவ்வாண்டு காலப்பகுதியில் சங்கானை அரசடி வைரவர் கோயில் அர்ச்சகர் அப்பாத்துரை ஐயர் நாகம்மா தம்பதியினரின் ஏகபுதல்வி கமலாம்பிகையைத் திருமணம் முடித்த இலக்கண வித்தகர். அவரோடு இனிது நடாத்திய இல்லறத்தின் பயனாக தர்மாம்பிகை, ஞானாம்பிகை, தவமணிதேவி, புனிதவதி, பாலச்சந்திரன், கிருபாகரன், இராமச்சந்திரன், கௌரிதேவி, ஞானாகரன், ஸ்ரீகாந்தன், உமாக்காந்தன் முதலான குழந்தைகளுக்குத் தந்தையுமானார்.

1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஞானப்பிரகாசர் என்பவரால் "எம்பெருமக்கள் இயல் தமிழ்க்கல்விக் கழகம்" என்னும் கல்விக் கூடமொன்று ஏழாலை மேற்கில் நிறுவப்பட்டதாகவும் இக் கழகத்தில் மு. கந்தையா அவர்கள் பெரியபுராண வகுப்பையும், V.T.V.சுப்பிரமணிய உபாத்தியாயர் பண்ணிசை வகுப்பையும் நமசிவாய தேசிகர் திருக்குறள், நன்னூல் வகுப்பையும் நடாத்தினர் என்பதனையும் செவி வழிச்செய்தி வாயிலாக அறிய முடிகிறது.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பாலர் ஞானோதயச் சங்கத்தால் நிறுவப்பட்ட சன சமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மத்தி

யஸ்தர்சபை, இந்துசமய விருத்திச் சங்கம், அந்திய கால சகாயநிதிச் சங்கம், கணேசையர் நினைவுச்சின்னம் நிறுவிய குழு, கீரிமலைச் சிவநெறிக்கழகம் போன்றவற்றில் அங்கம் வகித்து இவை அனைத்தையும் தலைமை தாங்கி நடாத்திய இலக்கண வித்தகர் இதனூடாகத் தம்மால் இயன்ற கல்வி, சமயம், சமூகப் பணிகளை ஆற்றி வந்தார். மக்கள் தம் உயிரினும் சிறந்த நெறியினை மேற்கொண்டு வாழ்வதற்கும் நிலைபேறுடைய வழியின் பாற்பட்டொழுகிப் பேரின்ப வாழ்வைப் பெறுவதற்கும் சமய வழிபாடே சிறப்பெனக் கருதி சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியும் பக்தி இலக்கியப் பனுவல்களை ஆக்கியும் வித்தகப் பெருந்தகை நமசிவாய தேசிகர் ஆற்றிய பணி காலத்தால் அழிவில்லாதது.

## சந்நிதிக் கந்தர் சதகம்

"சதகம்" என்ற வடமொழிச் சொல் சதம் என்ற அடிச்சொல்லிலிருந்து தோன்றியது. சதம் என்பது நூறு, நிலைத்திருப்பது, இறுதியானது எனப் பல பொருள் கொள்ளத்தக்க ஒரு மொழிக் கிளவியாகும். சதகம் என்ற சொல்லை "சத் + அகம் எனப் பிரித்து உண்மைப் பொருளைக் கூறும் இலக்கியம் எனப் பொருள் கொள்வாருமுளர்" "பயிலும் ஓர் பாட்டால் நூறு உரைப்பது சதகம்" என சுவாமி நாதம் கூறும் ஆயினும் திருத்தொண்டர் சதகம், தொண்டை மண்டலச் சதகம், காசி விசுவநாத சதகம் போன்ற ஒரு சில சதகங்கள் நூறுக்கும் மேற்பட்ட பாடல்களால் ஆனது. "நூறான வெண்பாக் கலித்துறையின் ஆதலே சதகம்" எனப் பிரபந்த மரபியல் உரைத்தபோதிலும் பெரும்பான்மையான சதகங்களில் "ஆசிரிய விருத்தமும் கட்டளைக் கலித்துறை" போன்ற யாப்பு வகைகளே பயின்று வருகின்றன. சதகச் செய்யுளைப் பாடுபொருளாகக் கொண்டு "மண்டலச் சதகங்கள், நீதிச் சதகங்கள், துதிச் சதகங்கள், காப்பியச் சதகங்கள், பதிகச் சதகங்கள்" எனப் பாகுபடுத்தி ஆராய்வோருமுளர்.

இவ்வகையில் நமசிவாய தேசிகரால் எழுதப்பட்ட 'சந்நிதிக் கந்தர் சதகம்' விநாயகர் வணக்கம் நீங்கலாக நூறு பாடல்களாலானது. தன்னரும் ஓர் கோட்டினால் கயமுகனைக் கொன்று உலகைக் காத்த எழில் முதல்வனைப் போற்றிப் பாடும் விநாயக வணக்கம் நேரிசை வெண்பாவாலாகி மலர் என்னும் வாய்ப்பாடு கொண்டு முடிந்தது.

மாமுன் நிரையாலான இயற்சீர் விரவி வருமாறு அடிதோறும் ஒற்று நீக்கிப் பன்னீரெழுத்துத் தோன்ற பாடப்பட்ட கந்தர் சதகம் கலிவிருத்தத்தால் ஆனது. சந்நிதி முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ள இச்சதகம் இறைவனின் திருக்குணங்கள், புராணக் கதைகள் அருள் சிறப்புகள் போன்றவற்றை எடுத்துரைக்கின்றன.

"அமரர்க்கமர்வோன் மகளைத் துரையார் தருமத்தகை நன்றுணர்வான்" என்னும் பாடலடியினூடாக முருகப் பெருமான் தெய்வயானையை ஆட்கொண்டு நன்றுணர்ந்த கதையும் வரைவாய் குறவர் மகளைக் களவில் வரைவாய்" என்னும் பாடலடிக்கூடாக குமரன் திருவள்ளியை மணமுடித்த கதையும் எடுத்துரைக்கப்படுகிறது. இதனைப் போன்று சூரனை வதம் செய்து அருள் புரிந்தகதை "விறல் சேர் சூரன் மிகுமாயையினான் அறமார் தேவர்க்கருநோய் புரிவான்" என்னும் பாடலடிக்கூடாகவும் அருணகிரிநாதருக்கு அருள் புரிந்த காதை "ஏற்றே அருணகிரியார் இசைப்பா மாற்றாய் அருளை மகிழ்வாய்" என்னும் பாடலடிக்கூடாகவும் எடுத்தாளப்படுகிறது. சங்க இலக்கிய வேட்டுவ நெறியாடல் முறையும் சந்நிதிக் கந்தர் சதகத்தில் சிறப்பித்துப் போற்றப்படுகிறது. மலைவேடுவர்கள் மதுவூன்மிசைவார் என்னும் பாடலடி இதனை மெய்ப்பித்து நிற்கிறது. இவை தவிர குமரகுருபரனை முருகப் பெருமான் தடுத்தாண்டு இருளைப் பொடி செய்த சேதியும் குருளைக்கு அருள் செய்த சேதியும் கூட இச்சதகத்தில் எடுத்துரைக்கப்படுகிறது.

நூலின் பல்வேறு இடங்களில் முருகக் கடவுளின் வேலும் மயிலும் போற்றித் துதிக்கப்படுகின்றன. முருகப் பெருமானின் திருவேல் "அடல்வேல், நெடுவேல், ஒளிர்வேல், இலைவேல், வடிவேல்" எனச் சிறப்பிக்கப்படுவதுபோல இறைவனின் மாமயில் "வேலா மயிலா என்றும், சயமாமயிலென்றும், களிமஞ்ஞையென்றும் விதந்துரைக்கப்படுகிறது. சதகம் தோறும் சந்நிதி ஆலயத்தின் சிறப்பே ஊடு பொருளாகப் பாடப்படுகிறது. சந்நிதி முருகனைப் பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர் கொண்டு பாடும் தேசிகர் "சந்நிதியை அலைசேர் தரு சந்நிதி, அருளென்று உலகத்தவர் வந்தடி பரவும் சந்நிதி, நலமார் அவையார் பயில் சந்நிதி, பசிவந்தியையா நிறை வாழ் வளி சந்நிதி, நான்முகனைப் பெருமாலகலச் சிறை செய் பெருமான் குருகார் தரு சந்நிதி, இன்னல்

களைதற்கிடமாய் அணுகும் நன்னர் தரு சந்நிதி, அமரர்க்கரியான் திடமாயுறை சந்நிதி அருள்பரை பாலனுறை சந்நிதி" எனப் பல்வேறு வகையிலும் புகழ்ந்தேத்திப் பரவுகிறார். முருகப் பெருமானினைப் பல்வேறு நாமங்களால் போற்றித் துதிக்கும் இச்சதகம் வேலனின் திருநாமம்

"பாலன் குமரன் பதறுங் கிழவன்
மாலன் மருகன் மயிலன் மலையன்
வேலன் விமலன் விபுதன் விறலன்
பாலன் பினர்துன் பமிலின் பினரே"

என்னும் பாடலில் மீண்டும் மீண்டும் வரும் வண்ணம் பாடப்படுகிறது. இவ்வாறு இறைவனின் திருநாமத்தை அன்பு கொண்டு திரும்பத்திரும்பப் பாராயணம் செய்வோர் என்றும் துன்பமில்லாது இன்புற்று வாழ்வர் என்பதே இதன் பொருள் ஆகும்.

சந்நிதிப் பெருமானைப் பாடித்துதிப்போர் அவனருள் பெற்று இருவினை நீங்கி இன்புற்று என்றும் பெருவாழ்வு வாழ வழிகோலும் வண்ணம் இச்சதகம் அமைந்துள்ளமை மூதறிஞரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்குச் சான்றாக அமைகிறது.

**நகுலேசர் திருவந்தாதி**

அந்தம் முதலாய்த் தொடுப்பது அந்தாதி ஆகும். அஃதாவது எழுத்தும் அசையும், சீரும் அடியும் இறுவாய் எழுவாயாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும். இதனை

*"அடியும் சீரும் அசையும் எழுத்தும்*
*முடிவு முதலாச் செய்யுள் மொழியின்*
*அந்தாதித் தொடையென் றறையல் வேண்டும்".*

என்னும் பாடல் கொண்டு அறியலாம். இறுதியடியின் இறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வருவனவற்றை 'மண்டல அந்தாதி' என்றும் அவ்வாறு வராதனவற்றைச் 'செந்நடை அந்தாதி' என்றும் பலவிரவிவருவனவற்றை 'மயக்கு அந்தாதி' என்றும் எழுத்து அசை, சீர்களால் இடையிட்டு வந்த அடியந்தாதியை 'இடையிட்ட அடியந்தாதி' என்றும் வழங்குவர்.

நகுலேசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்படும் நகுலேசர் திருவந்தாதி காப்புச் செய்யுள் நீங்கலாக நூறுபாடல்களாலானது இவ்வாறு நூறு பாடல்களைக் கொண்ட அந்தாதி நூற்றந்தாதி அல்லது பதிற்றுப்பத்தந்தாதி என அழைக்கப்படும். கலித்துறை யாப்பில் அமைந்த இப்பாடல்கள் மண்டல அசையந்தாதியாகவும் செந் நடை சீரந்தாதியாகவும், மண்டலமயக்க அந்தாதியாக வும் கொண்டு அமையும் வகையில் பாடப்பட்டுள்ளன. இலக்கண வித்தகர் மாணவர் வெளியீடாக வந்த இந் நூலுக்கான ஆசியுரையைப் பிரம்ம ஸ்ரீ கு.நகுலேஸ் வரக் குருக்கள் வழங்கியுள்ளார். இவ்வாசியுரை இலக்கண வித்தகரையும் அவரின் மீது பக்தி மிக்க மாணவர்களையும் விதந்துரைக்கிறது.

நகுலாசல முதல்வன் மேல் அந்தாதியைப் பாடிப் போற்ற ஐங்கரத்தான் அருளை வேண்டிப் பாடப்படும் காப்புச் செய்யுள் வருதலைவிளான் மருதடி மரத்தின் கண் எழுந்தருளியிருக்கும் விநாயக் கடவுளையே சுட்டி நிற்கிறது.

நகுலேசர் திருவந்தாதி மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியனவற்றின் சிறப்புரைக்கும் அந்தாதியாகும். நூலெங்கிலும் சிவபெருமானைப் பற்றிய செய்திகள் விரவிக் காணப்படுகின்றன. சிவனது வீரதீர பராக் கிரமங்களை எடுத்துரைக்கும் இந்நூல் இறைவனது சிறப்பியல்புகளையும் அவனது அருட்திறன்களை யும் அவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பேரின்ப வாழ் வைப் பெற்ற இறை அடியார்களின் பெருமைகளை யும் எடுத்துரைக்கிறது.

நகுலகிரியில் கோயில் கொண்டு எழுந்தருளியி ருக்கும் நகுலேஸ்வரப் பெருமான் "இறந்தருந் தீ நரகெய்தாமை நல்கு இமையவட்கோர் புறந்தருஞ் சீர் நகுலாசலம் மேவிய புண்ணியனே" என்றும் "வேண் டும் இப் பாரினரை அணியாதரத்தின் அருளுவான் நகுலாசலனே" என்றும் "மலமிலராக்கும் நகுலமலை உறை வானவனே" என்றும், மெய்ஞ்ஞானந்தவா நகுலேசன்"என்றும் எம் உளம் நண்ணப்புகும் நகு லாசலம் மேவிய நாயகன்" என்றும் "அல்லல் அறுக் கும் நகுலாசலத்தில் அமர்ந்தவனே" என்றும் பர னாய் நிலைப்பவன் மா நகுலாசலப் பண்ணவனே என்றும் சிறப்பிக்கப்படுகிறான். இதனைப் போன்று நகுலகிரித் தீர்த்தமும் புகழ்ந்துரைக்கப்படுகிறது. பாடலில் புனிதமான நகுலகிரி தீர்த்தக்கரை "புண்ணிய முன்னென்ன செய்தன மோவிப் புவி புரக்க நண்ணிய தூய நற்தீர்த்தம்" எனப் போற்றப் படுகிறது.

ஆன்மாக்களின் மலத்தைச் சர்வநாசம் செய்து மெய்ஞ்ஞானத்தை அருளும் நகுலாசலப் பெருமானின் சொரூப இலக்கண நிலை

*"குறியுங் கடந்து குணமுங் கடந்தவன் கூறுதற்கா*
*நெறியுங் கடந்தவன் ஊர்பேர் கடந்தவன் நேர் கடந்தான்*
*பொறியுங் கடந்தவன் மாநகு லாசலம் புக்கிருந்தான்*
*அறியுங் கடந்தருளிது வென்ன வடிவவரே"*

என்னும் பாடலடிக்கூடாக எடுத்துரைக்கப்படுகிறது. நகுலேசப் பெருமானை நாடி வரும் அடியவருக்கு அன்பாய் அமுதளித்து அருள் நெறி வளர்க்கும் மடங்களின் சிறப்பு "நகுலாசலத்தன் அடிபடியிற் படியப்புகுந்து தூதானான் பரிந்து பசியறுக்கும் படியற்பொடு சோறளித்தான் எமக்குப் படுதுயரும் முடியக் கெடுப்பன்" என்னும் வரிக்கூடாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

புராண இதிகாசக் கதைகளுக்கூடாக இறைவனின் வீர தீரச் செயல்களும் அந்தாதியில் நுட்பமாக எடுத்தாளப்படுகிறது. "முப்புரம் எரித்தமை, இறைவன் நஞ்சுண்டமை, சந்திரனுக்கு அபயமளித்தமை, அடிமுடி தேடியமை, இயமனைக் காலால் உதைத்தமை, தமிழை அகத்தியருக்கு நல்கியமை, தந்தைக்கு உபதேசம் செய்தமை, கௌரியை மணந்தமை போன்ற புராண இதிகாசச் செய்திகள் அந்தாதிப் பாடலுக்கூடாக எடுத்துரைக்கப்படுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இறைபராக்கிரமம் போன்றவற்றை மட்டும் பாடாது மகோற்சவக்கிரியைகளான தேர்த்திருவிழா, தீர்த்த உற்சவத்திருவிழா போன்றவற்றையும் இவ்வந்தாதி பாடுகிறது. நகுலேஸ்வரத் திருத்தலத்தின் பூர்வீகப் பெருமைகளை எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணமாக விளங்கும் இந்நூல் ஆழ்ந்த பொருட்செறிவுடைய ஓசை நயமிக்க பாடல்களைக் கொண்ட பக்தி இலக்கியப்பனுவலாகவும் காணப்படுகிறது.

## நகுலேஸ்வரர் திருப்பதிகம்

ஆசிரியத்துறையும், ஆசிரிய விருத்தமும், கலிவிருத்தமும் ஆகிய அவற்றின் மிசை நான்கடி முதல் எட்டடிகாலும் உயர்ந்த வெண்பாவை வைத்துப் பத்தினால் ஆனது இருபதினால் ஆனது என்று சொல்லும்படி பாட்டுக்கள் அமையப்பாடப்படுவது பதிகம் எனப்படும். இதனைப் "பன்னிருபாட்டியல்"

"ஆசிரி யத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் தீரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும்"

என்னும் பாடலடி கொண்டு அறியலாம். ஆயினும் "முத்து வீரியம், பிரபந்ததீபிகை, சுவாமிநாதம்" ஆகியன எப்பொருளாயினும் ஒரு பொருள் மீது பத்துப் பாடல்களைப் பாடுதல் "பதிகம்" என உரைக்கின்றன. பதிகப்பாடல்கள் பெரும்பாலும் அந்தாதித் தொடர்பு பெற்றோ ஈற்றடி ஒப்புமை கொண்டோ சில அடிப் பகுதிகள் மீண்டும் வரப்பெற்றோ தம்முள் தொடர்புறுகின்றன. ஈற்றுச் செய்யுள் மகுடமாக அமைதல் பல பதிகங்களின் பொதுப்பண்பாகும்.

இலக்கண வித்தகரால் பாடப்பட்ட நகுலேஸ்வரர் திருப்பதிகம் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பத்துப் பாடல்களாலானது. மூர்த்தி 'தலம்' தீர்த்தம் என்பனவற்றைப் பாடும் இப்பதிகம் யாழ்ப்பாண தேசத்தில் இறைவன் அடியவன் வினைதீர்த்து அருள் பாலிக்கும் வண்ணம் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் வீற்றிருக்கும் காட்சியை

*"…………….. யாழ்ப் பாணதேயத்*
*துத்தரத் தோமென்ன ஒலிசெய்யுங் கடல்மருங்*
*குற்றநகு லாசலத்தில் ………….*
*திங்களணி செஞ்சடில மங்கையுமை பங்கிலுறை*
*தேவநகு லேசுவரனே"*

என்னும் வரிகள் மிகத்தத்துருபமாக எடுத்துரைக்கின்றன.

இப்பதிகத்திலிடம்பெறும் மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் நீங்கப் பெற்ற காதையும் நகுலமுனிவரின் கீரிமுகம் நீங்கப்பெற்ற காதையும் தலத்தின் கீர்த்தி பற்றி உரைப்பதோடு தீர்த்தத்தின் மகத்துவத்தையும் எடுத்து உரைக்கிறது.

புராண இதிகாசச் செய்திகளுக்கூடாக இறைவனின் வீரதீரச் செயல்கள் பதிகத்தில் எடுத்தாளப்படுகின்றன. "இறைவன் நஞ்சுகண்ட கதை, இட்ட சாபத்தினால் உடல் தேய்வுற்று நலிந்த மதிக்கு அபயமளித்த கதை, பூலோகத்தை அழிக்கப் பெருக்கெடுத்து ஓடி வந்த கங்கையை அடக்கிச் சடையில் சூடிக்கொண்ட கதை, திண்ணணாரின் அன்பினில் திளைத்து அவரையாட்கொண்ட கதை, சாக்கிய நாயனார் தான் கருதுமன்பால் கல்லெறிந்து இறைவனை வழிபட்ட கதை,

காமனன்பின்றி மலர் சொரிந்து அக்கினிக்கு இரையான கதை எனப் பல புராண இதிகாசக் கதைகள் நூலெங்கிலும் விரவிக் காணப்படுகின்றன.

பதிக இலக்கணத்துக்கமையச் செய்யுட்களின் ஈற்றடிதோறும் "திங்களணி செஞ்சடில மங்கையுமை பங்கிலுறை தேவநகு லேசுவரனே" என்னுமடி மகுட வாசகமாக எடுத்தாளப்படுகிறது.

## மாவைக்கந்தன் பதிகம்

செய்யுளின் ஈற்றடி தோறும் "மாகமுகு வாழை பல வானளவி யேநிறையு மாவை நகர் வாழ் முருகனே" என்னும் பாடலடி மகுடவாசகமாக அமையும் வண்ணம் பாடப்பெற்ற மாவைக்கந்தன் பதிகம் கழி நெடில் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. காப்புச்செய்யுள் நீங்கலாகப் பத்துப்பாடல்களாலான இப்பதிகம் மாவையாதீன முத்தமிழ்க் கலை மன்றத்தால் 1983 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

கந்தப்பெருமானை உன்னிப் பதிகம் பாட பையர வஞ்சூடு சடைப்பண்ணவன் சிவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட இதன் காப்புச் செய்யுள் வெண்பாவாலானது.

மன்னுயிர்கள் உணவைப் பெறுவதற்கு வான மழை ஈயவும், அரிய திரவியங்களைப் பெற்று மக்கள் உய்திபெறவும் ஞானமறையோர் துதியோதவும் உயிர்கள் யாவும் எழிலாடி இசை பாடி மகிழவும் பேரொளி பொங்க முருகப் பெருமான் தெய்வானை வள்ளி சமேதராய் மஞ்சைமீது எழுந்தருளி அடியவருக்கு அருள் செய்யும் காட்சி கண்டோர் மெய்யுறும் வண்ணம் பாடலூடாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. இவையன்றிச் சிங்கமுகன், தாரகன் வதம், சூரபத்மன் சங்காரம் போன்ற கந்தபுராணச் சேதிகளும் இப்பதிகத்தில் ஆங்காங்கே எடுத்தாளப்படுகின்றன.

ஓசைநயமிக்க இறுக்கமான வித்துவச் செறிவு கொண்ட பாடல்கள் நூலுக்கு அணி செய்கின்றன. சொல் பின்வருநிலையணி

"ஆறுதலை வேயுமிறை சூரனெனு மாவவுண
னாதியரி னாறுதலிழந்
தாறுதலை நாடிவரு மான்முதல வானவர்க
ளாறுதலை மேவுதலுற
ஆறுதலை மேவிமுக மாறினடு வாநயன
மாறினுறு மாறுபொறிதந்
தாறுகுண மாறுமுக மாகவிழி தோள் செவியி
ராறு கொள வேயருள் செய
ஆறனைய ராதரவி னோடுபய மீயவுமை
வாயுமிக வாதரமுற
ஆறுவன மாயமறை யோதுநரை யாளுமிறை"

என்னும் பாடலில் மிகத் தத்துரூபமாகக் கையாளப்படுகிறது. இங்கு "ஆறு" என்னும் சொல் செய்யுளின் பல்வேறு இடத்திலும் வந்து வெவ்வேறு பொருளைத் தந்து நிற்கிறது.

தேர்ந்த சொற்பதங்களைக் கையாண்டு இன்னோசை பயக்கும் வண்ணம் பாராயணம் செய்வோரை மீண்டும் படித்து இன்புறும் வகையில் பாடப்பட்ட மாவைக் கந்தன் பதிகம் வித்தகரின் கவித்துவத்துக்குச் சான்றாக அமைகிறது.

தெளிந்த நற்புலமையும், ஆழமான இலக்கண அறிவும், ஆராய்ச்சித்திறனும் மிக்க இலக்கண வித்தகர் சமயக் கட்டுரைகளுக்கூடாகவும் சமயச் சொற்பொழிவுகளுக் கூடாகவும் இறைபக்தி மிக்க பாடல்களைப் புகழ்ந்து பாடுவதனூடாகவும் தம்மாலியன்ற சமய இலக்கியப் பணிகளைச் செய்துள்ளார். இவரின் பக்திச் சுவைமிக்க தல இலக்கியப்பனுவல்கள் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வித்துவான் சுப்பையாப்பிள்ளை அவர்களாலும் விதந்துரைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. பொருட்பேதமில்லாத ஆழமான சொற்பொருள், ஓசையொழுங்கு, செம்மையான யாப்பமைதி என விரியும் பேராசான் நமசிவாய தேசிகரின் பாடல்கள் இலைமறைகாயாய் சைவசித்தாந்தக் கருத்துகளை வெளிப்படுத்தி நிற்பதுடன் அழியா முத்திரை பதித்த செம்மைசார் தல இலக்கியங்களுக்கு வளம் சேர்ப்பனவாகவுமுள்ளன.

❖ ❖ ❖

திருவள்ளுவர் திருக்குறளுடன், ஞானவெட்டி, நவரத்தின சிந்தாமணி, பஞ்சரத்தினமாலை, திருப்புகழ் நட்பு சாஸ்திரம் ஆகிய நூல்களையும் எழுதினார்.



# இராமவதாரம் காட்டும் உண்மை

வ. கோவிந்தபிள்ளை

**இராமன் ஓர் அவதார புருஷன். இவன் இராவண வதத்திற்கு என்றே அவதாரம் எடுத்தவன் என்று இன்னோரன்ன உண்மைக்குப் புறம்பான கருத்துப் பரிமாறல்களே பலராலும்மேற்கொள்ளப்பட்டு வருவது கண்கூடு.**

**ஆனால் இராமனின் பிறப்புக்குரியகாரணம் அதுவல்ல என்பதையும் அது எமக்குப் புகட்டும் போதனையையும், அகச் சான்றுகளோடு சில புறச்சான்றுகளையும் ஆதாரமாகக் காட்டி நிறுவுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.**

இராமகாதையோ தசரதகுமாரனைப் பற்றியதேயன்றிச் சிவகதையன்று என்பதை அனைவரும் அறிவர். எனவே அவ்வாறல்லாத ஒரு கதையைக் கவிஞன் பாட எடுக்கும்போது உண்மையை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டுத் தனது கற்பனைத் திறனுக்கும், கவிதை மேம்பாட்டுக்குமே முக்கியத்துவம் கொடுப்பான். இதனாலேயே கம்பராமாயணத்தைப் படித்துச் சுவைத்த ஒருவர் " விருத்தமென்னும் ஒண்பாவில் உயர்கம்பன்" என்றும் "கம்பநாடன் கவிதையைபபோற் கற்றோர்க்கிதயம்களியாதே" என்றும் அவனுடைய நிகரற்ற கவிதா விலாசத்தைப் புகழ்ந்தமையும் அறிஞர்கள் அறிந்ததே.

"கம்பருடைய பாட்டுக்கள் ஒவ்வொன்றும் எதுகையும் மோனையும்
சந்தமுங் கலந்து, பளிச்சுப் பளிச்சு என்று ஆபரணங்களைப்
பூண்ட மங்கையின் ஆடலைப்போல் மின்னித் துள்ளி நடனமாடுகின்றது."[1]

மேலும் கம்பர் தாம் இராமாயணம் பாடியதன் நோக்கம் "ஆசை பற்றி அறையலுற்றேன்" எனக் கூறுகின்றார். எனவே இவர் இராமாயணத்தைப் பாடுகின்ற பொழுது அவரது ஆசை எவ்வெவ்வாறு திசை திரும்பியதோ அவ்வவ் விருப்பத்திற்கமைய விடயங்களை மாற்றியும், சேர்த்தும், கூட்டியும், குறைத்தும் பாடியிருப்பதும் அறிஞர்கள் அறிந்ததே. கம்பராமாயணத்தைச் சுவைப்பவர்கள் "Poetry is the spontaneous overflow of Powerful feeling" என்பதை உணரக் கூடியவகையில் பாடியுள்ளமையை அறிவர்.

"இராமனை மானிடப்பிறவியில் அடக்கக் கம்பருடைய பக்தி இடம் தரவில்லை. ஆன படியால் கம்பராமா யணத்தில் அடிக்கடி மிக இரசமான இடங்களுள் இராமன், மகாவிஷ்ணுவே, கடவுளே, அனைத்திலும் பரவி நிற்கும் பரம்பொருளே என்று வைத்து மனத்தை உருக்கும் முறையில் அற்புத அழகோடு பாடியிருக்கின்றார்"[2]

தாம் சொல்லுகின்ற அனைத்தையும் அப்படியே வேதவாக்காக எடுத்துக் கொள்பவர்களும் எதிர் காலத்திலே தோன்றக்கூடும் என்று கம்பர் கருதியிருப்பாரேயானால், கவிதைக்கு முக்கியத்துவம் கொடுக்காது உண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பார்.

உண்மைக்குப் புறம்பாக முதல் நூலுக்கு முரணாகக் கூறப்பட்டிருப்பினும் வைணவர்களால் இது ஒரு தெய்வநூலாக,-தெய்வத்தன்மை பொருந்திய நூலாகப் பேணப்பட்டு வருகின்றது. ஏனையவர்களால் இலக்கிய நூலாகவே இது கருதப்படுகின்றது.

சிவகதை பற்றிக் கூறவந்த கச்சியப்பர்,
"பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையுமோர் மறுவில : யாவும் மேன்மையே
மறைபல சான்றுள, வாய்மையே யவை
அறிஞர்கள் நாடியே அவற்றைக் காண்கவே"[3]

என்று கூறுகின்றார். இப்பாடலிலுள்ள,
"இறையுமோர் மறுவில: யாவும் மேன்மையே :
மறைபல சான்றுள: வாய்மையே அவை:"
என்னும் சொற்றொடர்களிலிருந்து சிவனைப் பற்றியல்லாத கதைகளோ, குற்றங்கள் மலிந்தவை, மேன்மையற்றவை, சான்றாதாரங்கள் அற்றவை என்பன போதரும். இதனை,

"ஈசனை
அல்லவர் காதைகள், அனையர் செய்கையுள்

நல்லவை விரித்திடும் நவைகள் மாற்றிடும்
இல்லது முகமனா லெடுத்துக் கூறுமே"[4]
என்று கூறுவது கம்பர் பாடியுள்ள இராமாயணத்திற்கும் நன்கு பொருந்துவதாகும்.

வடமொழி, தென்மொழி இரண்டிலும் இராஜாஜி அவர்கள் கம்பரைப் போற் பாண்டித்தியம் பெற்றிராவிடினும் சேக்கிழார் போன்று நேர்மை கடைப்பிடித்துள்ளார் என்பது அவருடைய பின்வரும் கூற்றிலிருந்து நன்கு புலனாகும்.

"வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமனுடைய நடவடிக்கைகளை
ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை. சில அதிகாரங்
களிலும் இங்குமங்கும் சுலோகங்களிலும் தெய்வ அவதார
விஷயத்தைச் சொல்லி வந்தாலும், மொத்தத்தில் வால்மீகி
இராமாயணத்திற் காணப்படும் இராமன் ஒரு சிறந்த ராஜ
குமாரன், வீர புருஷன், அபூர்வமான தெய்வீக நற்குணங்கள்
பெற்றவன், அம்மட்டே. கடவுளாக வேலை செய்யவில்லை"[5].

இந்த விடயம் இராமாயணத்தைப் படிக்கின்ற ஒரு சிலரைத் தவிர, தமிழறிந்த ஒவ்வொருவரும் கற்றும் கேட்டும் அறிந்ததொன்றே.

இராமன் பிறப்பிற்குரிய காரணத்தை அவனைப் பற்றிப் பாடிய ரிஷிபுங்கவர் அறியாதிருக்க முடியாது. அதனாலேயே இராமனையோ, அவனது செயல்களையோ ஈஸ்வர அம்சமாகப் புனைந்து உண்மைக்குப் புறம்பாக எழுத வால்மீகியின் மனம் இடம் கொடுக்கவில்லை. இருப்பினும் இராமனது பிறப்பின் காரணம், தத்தம் சுய இச்சைகளைப் பிழையான முறையில் நிறைவேற்ற-எடுத்துக்காட்ட முனையும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

"எனைப் பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்"[6]

என்ற வள்ளுவரின் வாய்மை மொழிக்கமைய திருமால் மட்டுமன்றி திருமால் போன்று தத்தம் சுயவிச்சைகளைப் பிழையான முறையில் நிறைவேற்ற முனையும் ஒவ்வொருவரும் இராமனது பிறப்பும் அவனுக்கு நிகழ்ந்த துர்ப்பாக்கிய நிகழ்வுகளுமான கட்டிய மனைவி கடத்திச் செல்லப்பட்டமை – சிறியோர் சேர்க்கை - செய்யக்கூடாத செயல்களைச் செய்தமை என்பன கம்பராமாயணத்தைக் கற்பவர்கள் மனதில் இருத்த வேண்டிய முக்கிய விடயங்களுட் சிலவாகும்.

மேலும் "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்பதற்கு மகாபாரதமும், "உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்" என்பதற்குச் சிலப்பதிகாரமும் இலக்கியமாய் அமைந்தது போல "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதற்குக் கம்பராமாயணம் இலக்கியமாயமைந்தது எனில் மிகையாகாது.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"[7]
என்பதையே கம்பராமாயணக் காட்சிகள் தெளிவுறக் காட்டுகின்றன.

இவை இவ்வாறிருக்க மேற்கூறிய நிகழ்வுகளைப் பிறர் மேல் ஏற்றிக் கூறுபவர்கள் புறச் சான்றுகளை மறைத்தும் நீக்கியும் கம்பராமாயணத்திலுள்ள அகச்சான்றுகளை மட்டுமே ஆதாரமாக மேற்கோள் காட்டுவர். அவ்வாறு காட்டுதல் ஏற்புடைத்தன்று என்பதைப் பின்வரும் சில புறச் சான்றுகள் தெளிவுபடுத்துவனவாகும்

சாலாந்தரம் என்னும் நகரத்தில் சலந்தரன் என்னும் அசுரன் ஒருவன் அரசாண்டு வந்தான். பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் இவனது கொடுங்கோலுக்கு அஞ்சினர். அதனால் இத்தேவர்கள் அவன் விரும்பிய வரங்களைக் கொடுத்துத் தப்பிக் கொண்டனர். இவன், காலநேமி என்னும் அசுரனது புத்திரியாகிய விருந்தை என்பவளைத் திருமணம் செய்து அரசாட்சி செய்து வந்தான். விருந்தை அழகில் மாத்திரமன்றிக் கற்பொழுக்கத்திலும் அருந்ததியை நிகர்த்து விளங்கினாள்.

ஒருகால் திருமால், இக்கொடியவனோடு எதிர்த்து யுத்தம் செய்த சமயத்தில் இவனுக்கு அஞ்சி, தேவேந்திரன் முதலிய தேவர்களோடு சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாசமலையைச் சரணடைந்தான். இதனை ஒற்றுவர் மூலம் அறிந்த சலந்தரன் புத்தியில் மேம்பட்ட அவனது மனைவி விருந்தை கூறிய அறிவுரைகளையும் புறக்கணித்து யுத்தம் செய்யப்பெருஞ்சேனையுடன் புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்ட அவன் ஈற்றில் சிவபெருமானாற் கொல்லப்பட்டான்.

உயிரிழந்த அவுணர்களுக்கரசனான சலந்தரனது மனைவி விருந்தையில் இச்சை கொண்ட திருமால், தவவேடம் பூண்டு சலந்தரனது அரண்மனைக்குப் பக்கத்தில் அமைந்த "காவினுள் இருந்தனன் கைதவத்தினான்".

கற்பொழுக்கத்தையே காவலாகவுடைய விருந்தை போருக்குச் சென்ற தன் கணவன் வீடு திரும்பாததையிட்டுப் பதைபதைத்தாள், சோர்ந்தாள் ஒருத்தியாய்த் தனித்திருக்க முடியாதவளாயினாள் ஒருவரோடும் உரையாடாதவளாய், செய்வதின்னதென்று அறியாதவளாய், இருதலைக் கொள்ளியுள் எறும்பு போல் இங்குமங்குமாக அலைந்தாள். இறுதியில் ஊழின் உந்துதலால் பாதுகாப்பாக அமைந்த தனது அரண்மனைக் காவினுள் செல்லலானாள். விருந்தை வருதலும் வைகுண்டத்தில் துவாரபாலகர்களாகவிருந்த இருவர் சிங்கங்களாகிக் கர்ச்சித்துக்கொண்டு அவள் முன் வருதலும், இடியேறுண்ட சர்ப்பம் போல் ஏங்கி ஓடலாயினாள். சிங்கங்கள் வர நடுக்குற்று ஒடிய விருந்தையைத் தவக்கோலத்துடன் இருந்த திருமாலான தபோதனர் ' அஞ்சாதே' என அபயங் கூறியதும் அவளைப்பின் தொடர்ந்த இரு சிங்கங்களும் மறைந்ததைக் கண்ட விருந்தை இவரது இயல்பு நன்றாகும் எனக் கருதியவளாகித் தனக்கு நிகழ்ந்த குறைபாட்டினை எடுத்துக் கூறியதைக் கேட்ட சிங்கவுருக் கொண்ட துவாரபாலகர்கள் திடிரெனக் குரங்குருக் கொண்டு சக்கரப்படையினாற் பிளவுண்ட சலந்தரனது உடலினை அவள் முன்பாகக் கொணர்ந்து இட்டனர். பிளவுண்ட உடலைக் கண்ட விருந்தை அஞ்சி அரற்றி உயிர் நீங்கியவளைப் போன்று உணர்வழிந்தாள். அப்போது தவக்கோலத்திலிருந்த திருமால் காதல் வயப்பட்டவராகித் தமது கரத்தினை அவள் மீது வைத்துப் பெண்ணே வருந்தாதே என ஆறுதல் கூறியதும், சிறிது தெளிவடைந்து எழுந்த விருந்தை அத்தபோதனரைப் பார்த்து உங்களைப் போன்ற தவசிரேஷ்டர் இவ்வுலகில் எவரும் இல்லை. ஆதலால் பிளவுண்ட எனது கணவரின் உடலைப் பொருத்துவதோடு அமையாது அவரது உயிரையும் மீட்டுத்தந்தருள வேண்டும் என்று இரந்து வேண்டினாள். அச்சந்தர்ப்பத்தில் பிளவுண்ட சலந்தரனது உடலை ஒன்றுமாறு செய்ததோடமையாது தபோதனர் உருவில் இருந்த திருமால் தமது உருவை மறைத்து அவனது உடலிற் புகுந்து கரந்திருப்பா ராயினார். இழிந்த குரங்குருவமாக வந்த வஞ்சகர்களான சேனைத் தலைவர்களும் மறையலாயினார். சலந்தரன் உயிர்பெற்றெழுவதைக் கண்ட விருந்தை தனது கணவன் உயிர்பெற்றெழுந்தான் என்ற மகிழ்ச்சியில் தான் கொண்ட துயரம் அனைத்தும் நீங்கியவளாகி அவனைக் கட்டித் தழுவுவாளாயினாள். இவ்வாறு தன்னை அணைத்தவளாகிய விருந்தையோடு இணைந்து திருமால் இன்பம் நுகர்வாராயினார்.

இவ்வாறு இரவு பகலாக இன்பமனுபவித்து வந்த திருமால் சிவபெருமானது கட்டளைப் பிரகாரம் தான் கொண்ட மாய உருவத்தை மறந்து ஒரு நாள் துயிலலானார். அவ்வாறு துயின்ற காலை விருந்தையானவள் கண்டு வஞ்சகத்தன்மை பொருந்திய திருமாலே இவன் என்றறிந்து மனம் வெதும்பியவளாகி அவனை விட்டு விலகி அகல்வாளாயினாள்.

அருந்ததியின் கற்பை நிகர்த்த தனது கற்பு அழிந்ததே என்று வருந்தி நெட்டுயிர்த்து தனது ஆன்மபோத இயல்பினால் திருமாலின் சூழ்ச்சி முழுவதையும் உணர்ந்து திருமாலைப் பின்வருமாறு சபிப்பாளாயினாள்.

"மாவலி யுடையதோர் மடங்க லாயினோர்
காவல ரிருவரக் காவ லாளருன்
மேவல ராயுற வேந்த னாகிநீ
ஓவலை குரங்கொடு திரிதி ஒண்புவி"[8]

வலிமை மிக்க ஒப்பற்ற சிங்கங்களாக இங்கே வந்தவர்கள் உனது அரண்மனைத் துவாரபாலகர்கள் இருவராவர். அவர்கள் உனக்குப் பகைவர்களாய் வர நீ மன்னனாகிக் குரங்குக் கூட்டத்தோடு இடைவிடாது அலையக் கடவாய் என்றும்,

" பொற்புறு கணவனைப் போலவந் தெனைப்
பற்பகல் புணர்ந்தனை பகைவர் மாயையாற்
கற்புடை மனைவியைக் கவர்ந்து போகநீ
சொற்படு பழியினைச் சுமத்தியா லென்றாள்"[9]

அழகில் மேம்பட்ட எனது கணவனைப் போல வந்து, என்னைப் பல நாட்கள் சேர்ந்தனை, அதனால் உன்பகைவர், கற்பொழுக்கமுள்ள உன் மனைவியைச் சூழ்ச்சியாற் கவர்ந்து செல்ல நீ உலகத்தாராற் சொல்லப்படுகின்ற பழிச் சொல்லைச் சுமக்கக் கடவாய் என்று கொடிய சாபவார்த்தைகளைக் கூறி, அக்கினி மூட்டி அதிற்பிரவேசஞ் செய்து உயிர்விடுவாளாயினாள், விருந்தையின் இக் கொடிய சாப நிவர்த்தியின் பொருட்டே, இராமன் பிறப்பு — சீதா கல்யாணம் - பின்பு இராவணன் சீதையைப் பழிவாங்கும் பொருட்டுக் கவர்ந்து சென்றமை- இதன் பொருட்டு இராம லட்சுமணர் வானரங்களுடன் சிநேகம் பூண்டமை- சிற்றினம் சேர்ந்ததால் நிகழ்த்திய வாலிவதை — பின்பு சீதையை மீட்கும் பொருட்டுக் கானகத்தில் அலைந்து திரிந்தமை போன்ற அனைத்துச் சம்பவங்களும் நிகழ்ந்தனவாகும்.

சீதையைத் தேடி அசோகவனத்தையடைந்த அனுமான் அங்கே அவளைக் கண்ணுற்றபோது அவள் காணாத வண்ணம் இருந்து அவள் கேட்கும் வண்ணமாக இராமனைப் பற்றியும் இராவணனைப் பற்றியும்

. . . அரண்யவாசம் செய்யும் போது அநேக கொடிய
ராட்சதர்களை எதிர்த்து ரிஷிகளைக் காப்பாற்றினான்,
கரதூஷணன் என்ற ராட்சதத் தலைவர்களையும்
அவர்களுடைய பெரும் சேனையையும் வதம்
செய்து அழித்தான்.
"இதையறிந்தே, இராவணன், பழிவாங்குவதற்காக
மாயமான வடிவத்தில் ஓர் இராட்சதனை ஏவி

இராமனை ஏமாற்ற, இராஜகுமாரர்கள் பக்கத்தில்
இல்லாத சமயம் பார்த்து சீதையைப் பலாத்காரமாகத்
தூக்கிக் கொண்டு போய்விட்டான். . ."[10]
என்று கூறியதாக வால்மிகி கூறுகின்றார்.

இதிலிருந்து இராவணன் பழிவாங்கும் நோக்கில் சீதையைத் தூக்கிக் கொண்டு சென்றானேயன்றி காமவசப்பட்டோ, காதல் வசப்பட்டோ தூக்கிச் செல்லவில்லை என்பது நன்கு புலனாகும். மூக்கரியுண்ட தங்கை புலம்பிக் கொண்டிருக்க இராவணன் காமமயக்கத்தில் மூழ்கியவனாகிச் சென்று சீதையைப் பஞ்சவடியோடு தூக்கி வந்தான் என்று உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறவேண்டிய நிலை காவிய நிறைவுக்கு இன்றியமையாதல் கூடும்.

மேலும் சம்பந்தப் பெருமான் தமது திருப்பதிகம் ஒவ்வொன்றிலும் இராவணனது குண இயல்புகள் பற்றியும் அவனுக்கு இரங்கிய சிவபெருமானின் பெருங்கருணைத்திறம் பற்றியுமே பாடிச் சென்றுள்ளார்.

தமது திருப்பதிகங்களில் இராவணன் பற்றிக் குறிப்பிடும் பொழுது
"பொருவாரெனக் கெதிராரெனப் பொருப்பை எடுத்தவன்"
"இப்பெருவரையின் மேலோர் பெருமானுமுளனோவென வெகுண்டவன்"
"இத்தேர் ஏக இம்மலை பேர்ப்பன் என்றேத்தும் பத்தோர்வாயான்"
மேலெனக்கெதிரிலை என்ற அரக்கன்" "உன்மத்தன்"
என்று கூறியதோடமையாது, அவனது நல்லியல்புகள் பற்றியும்,

" நேசமிகுதோள் வலவன்" " சாமவேதமோர் கீதம் ஓதிய அத்தசமுகன்" அந்தரத்தில் தேரூரும் அரக்கன்" " இராவணன் மேலது நீறு" என்றும் கூறுகின்றார். மேலும் " இன்னருளா லாட்கொண்ட எம்பெருமான்" என்றும் " பத்துத் தலையோனைப் பாதத்தொருவிரலால் வைத்து மலையடர்த்து வாளோடு நாளீந்தான்" என்று இவன் பாற் கொண்ட இறைவனது பெருங் கருணைத் திறத்தையுங் குறிப்பிடுகின்றார்.

எந்தவொரு பதிகத்திலும் " பெண்பித்தன், மலையெடுத்த பிழைக்கிரங்க" என்பது போன்ற சொற்றொடர்ப் பிரயோகம் காணப்படுவதாகவில்லை. அப்படியிருக்க சொந்த இச்சைக்காகத் தேசத்தைப் பலியிட்டவன் மூக்கறுபட்ட தங்கை பிறன் மனைவி பற்றிக் கூறியதும் தங்கைக்கு நிகழ்ந்த அவமானத்தையும் அரக்கர் குலத்துக்கு ஏற்பட்ட பழிப்புரைகளையும் மறந்து காமவெறி பிடித்தவனாகிப் பிறர் மனைவியைக் கவர்ந்து வந்தவன் என்றும் இவனது இக்கொடுஞ் செயலே இராமாவதாரத்திற்குக் காரணமாயமைந்த தென்று முன்னுக்குப் பின் முரணாதல் சிந்திக்க வேண்டிய தொன்றாயமைகின்றது.

இராமன் மறைந்து நின்று வாலியை அம்பெய்து வீழ்த்திய பின், மரணாவஸ்தையிற் கிடக்கும் வாலி இராமனைக் கண்டிக்கின்றான். "இச் செயல் பற்றி இராஜாஜி அவர்கள் கூறுவது மனங்கொளற்பாலது.

"வாலியின் இந்தக் குற்றச் சாட்டுக்கு இராமன் என்ன பதில் சொல்ல
முடியும்? ஏதோ சொன்னதாகவும் அதைக்கேட்டு வாலி சமாதானப்பட்ட
தாகவும் *நாம் இப்போது படிக்கும் இராமாயணத்திற் சொல்லப்படுகின்றது.*
*அதிற் சாரமில்லை என்று விட்டுவிட்டேன். பெரியோர்கள் மன்னிப்பார்களாக"*[11]

மேலும் "இவ்வாறும் இன்னும் பல விதத்திலும், அசூசையிற் பிறந்த விமர்சனங்களில் இறங்கிச் சிலர் களிப்படைவதைக் காண்கின்றோம். அறிவுக்கும் விமர்சன சாமர்த்தியத்திற்கும் நாட்டிற் குறைவில்லை. அன்பும் ஆர்வமும் கலந்த அறிவு காணவில்லை". என்ற இராஜாஜி அவர்களின் இக்கூற்று இராவணனைப் பற்றி இழிவாக அசூசையில் விமர்சிப்பவர்களுக்கும் சாலப் பொருந்துவதாகும்.

எனவே, சாரமில்லாத — உண்மைக்குப் புறம்பான — ஒன்றைப் பற்றி சண்டையிடுவதும்- விதண்டாவாதம் செய்வதும் பொருந்தாததாகும் சான்றோருக்கு அமையாததாகும்.

மேலும், பாரதியார். பாஞ்சாலி சபதப் பராசக்தி வணக்கம் கூறும் பொழுது,

" ஆங்கொரு கல்லை வாயிலிற் படியென்று
அமைத்தனன் சிற்பி மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினான், உலகினோர் தாய்நீ
யாங்கனே, எவரை, எங்ஙனம் சமைத்தற்
கெண்ணமோ அங்ஙனம் அமைப்பாய்"[12]

என்று கூறும் கடவுள் வணக்கம் கம்பரால் புனையப்பட்ட அவரது இராமாயணத்திற்கும் சாலப் பொருத்த மானதாகும். புதல் மறைந்து புட்சிமிழ்த்த வேட்டுவனை விஞ்சிய தசரதகுமாரனான இராமன், சாமவேத கீதம் ஓதும் வாயினனான இராவணன் "தூமொழிமடமான்" என விதந்தோதப்பட்ட கைகேயி ஆகிய பாத்திரங்களை யாங்கனே, எவரை, எங்ஙனம் சமைத்தற்கு இராமாயணச் சிருஷ்டிகர்த்தாவான கம்பருக்கெண்ணமோ அங்ஙனமே தமது காவியத்தில் காவிய வளர்ச்சி கருதிச் சமைத்துள்ளார் என்பது ஒரு தலையாகும்.

எனவே, இராமன் முதலியோர் கடவுளர் தாமா? அவதார புருஷர்களா? இராவண வதத்திற்கென்றே பிறவியெடுத்தவர்களா? அல்லது முற்பிறப்பிற் தாம் தாம் செய்த- தகாத தீவினைச் செயல்களின் பொருட்டு- விருந்தையின் சாப நிவர்த்திக்காக மானுடர்களாகப் பிறந்து அலைந்தவர்களா? என்பனவற்றை எம்மனோர் அறிதலோ முடிவெடுத்தலோ இயலாததாகும்.

எனவே தத்தம் இச்சைகளை நிறைவேற்றும் பொருட்டு ஈழவேந்தனை – ஈடிணையற்ற இசைவல்லோனை — சிறந்த சிவபக்தனை — சிவனிடம் வாழும் நாளும் பெற்றவனை வலிந்து உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறி இழித்துரைத்தல் ஒரு சமுதாயத்தினை இழித்துரைத்தலுக்குச் சமனாகும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"[13] ஆகும்.

## அடிக்குறிப்புகள்

1. இராஜாஜி, "இராமாயணம்", வானதி பதிப்பகம், பக் 12.
2. மேற்படி நூல், பக் 12.
3. கந்தபுராணம், அவையடக்கம், செய் 10.
4. மேற்படி நூல், செய் 9.
5. இராஜாஜி, "இராமாயணம் – வால்மீகியும் கம்பரும்" – பக் 11.
6. திருக்குறள் - குறள் 207.
7. மேற்படி நூல் – குறள் 380.
8. கந்தபுராணம் – ததீசீ உத்தரப்படலம் – செய் 290.
9. மேற்படி நூல் – செய் 291.
10. இராஜாஜி – "இராமாயணம் - ஜானகி ஆறுதலடைந்தாள்".
11. திருமுறை 1 – 3.
12. இராஜாஜி – "இராமாயணம் வாலிவதம்" - பக் 290.
13. திருக்குறள்.

◆ ◆ ◆



# ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திரதீபகம் – குமாரசுவாமிப் புலவரின் தமிழ்ப்புலவர் சரித்திரம்; ஓர் ஒப்பாய்வு

திரு. பா. மகாலிங்கசிவம்
ஆசிரியர்,
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

ஆங்கிலத்திலே 'லிற்றறறி ஹிஸ்றி' (Litearary History) என அழைக்கப்படும் புலமைத் தொழிற்பாடானது தமிழிலே 'இலக்கிய வரலாறு' எனும் தொடரால் அழைக்கப்படுகின்றது. இலக்கிய வரலாறு என்னும் தொடருக்கு 'இலக்கியத்தினது வரலாறு', 'இலக்கியத்தின் வழி வரலாறு' என இருவகையிற் பொருள் கொண்டு இருவகையான இலக்கிய வரலாற்று நூல்கள் தமிழிலே எழுதப்பட்டுள்ளன.

இவற்றுள் இலக்கியத்தினது வரலாறு என்பதற்கு

"ஒருமொழியின் இலக்கிய வரலாறானது அம்மொழியிலுள்ள செவ்விய நூல்களின் தோற்றத்தையும் தன்மையையும் கால முறைக்கேற்ப வகுத்துக்காட்டி அம்மொழி பேசும் மக்களது கருத்துக்கள், இலக்கியங்களுள் எம்முறையிலமைந்துள்ளன என்று தெரிந்து, இலக்கியமென்பது மக்களது வாழ்க்கைப் படம் என்று தெளிவுற அறிவுறுத்தும் கருவி நூலாகும்" என்பர் கா. சுப்பிரமணிய பிள்ளை.

(இலக்கிய வரலாறு முதற்பாகம் பக்.11)

ஆனால் இன்னொரு சாராரோ இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின்வழி வரலாறு அதாவது இலக்கியத்தின் வழியாக அக்காலச் சமூக வரலாற்றை அறிந்துகொள்வது எனக் கூறுகின்றனர்.

"உண்மையான இலக்கிய வரலாறு என்பது ஒரு சமுதாயத்தின் வரலாற்றை அதன் இலக்கியங்களைக் கொண்டு, அதன் அடிநாதங்கள், வெளிப்பாடுகள், தாக்கங்கள் ஆகியன கொண்டு எடுத்துக்கூறுவதாகும்" என்பர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். (தமிழில் இலக்கிய வரலாறு; முன்னுரை)

இத்தகைய இலக்கிய வரலாற்று நூல்களை எழுதுவதற்கான முற்பகுதி முயற்சிகளாகத் தமிழ்ப் புலவர்களது வரலாற்றை எடுத்துக் கூறும் நூல்கள் கருதப்படுகின்றன. தமிழ்ப் புலவர்களது சரித்திரங்களைத் தொகுப்பதிலும், இலக்கிய வரலாற்று நூல்களை எழுதுவதிலும் தமிழகத்தாரைவிட ஈழத்தவர்களே முன்னிலையில் விளங்கியமையை வரலாறு காட்டுகின்றது.

இவ்வகையில் தமிழிலே முதல் தடவையாகப் பல்வேறு தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்கூறுவதாகத் 'தமிழ் நாவலர் சரிதை' என்னும் நூல் தோற்றம் பெறுகிறது. ஈழத்தவரால் எழுதப்பட்ட இந்நூல் 18ஆம் நூற்றாண்டுக்குரியதென அதனை 1921இலே பதிப்பித்த தி.த.கனகசுந்தரம்பிள்ளை கூறுகிறார். இந்நூலைத் தொகுத்தவர் தம்காலம் வரையில் இருந்த புலவர்கள் பற்றித் தாம் அறிந்த பாடல்களையும், வரலாறுகளையும் எழுதி வைத்துள்ளார். கால உணர்வு பற்றிய பிரக்ஞை இல்லாத அக்காலத்திலே எழுதப்பட்ட இந்நூலிலே புலவர் வரலாறு காலமுறைப்படி அமையாததோடு ஒருவர் பாடலை மற்றொருவர் பாடலாகவும் கொள்ளும் முரண்களும் உள்ளன. எனினும் இந்நூலே பிற்கால இலக்கிய வரலாறுகளின் தோற்றத்துக்கான ஆரம்ப முயற்சியாக அமைந்தது.

இதனை அடுத்து இரண்டாவது நூலாகச் சைமன் காசிச்செட்டி எழுதி 'தமிழ் புளூராக்' (Tamil Plutarch) 1859ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவரது நூலில் 196 புலவர்களின் வரலாறு கூறப்படுகிறது. இவர்களிற் 12புலவர்களே ஈழத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்புலவர்களின் வரலாறுகளை மேனாட்டு வகைமாதிரிகளைக் கொண்டு விளக்குவது இந்நூலின் தனித்துவத்தையும், இலக்கிய வரலாற்றில் ஒப்பியல் நோக்கின் ஆரம்ப நிலையையுங் காட்டுவதாகப் பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுகிறார். அகர வரிசைப்படி

தமிழ்ப்புலவர் வரலாறு ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பது இன்னொரு சிறப்பம்சமாகும்.

இந்நூலின் பின்னர் ஈழத்தவர்களான ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் 'பாவலர் சரித்திர தீபகம்' 1886இலும் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' 1916இலும் வெளியிடப்படுகின்றன. நவீன சிந்தனைகளைக் கொண்ட ஆங்கிலக் கல்வி வழியாக முகிழ்த்தெழுந்த சதாசிவம்பிள்ளையின் நூலுக்கும், பாரம்பரிய சிந்தனைகளைக் கொண்ட மரபுவழித் தமிழ்க் கல்வியினூடாக முகிழ்த்தெழுந்த குமாரசுவாமிப் புலவரின் நூலுக்குமிடையே எத்தகைய ஒப்புவமைகளும் மாற்றங்களும் காணப்படுகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இந்த ஆய்வுக்கு அகத்தியர் தொடக்கம் ஔவையார் வரையான புலவர்களின் வரலாறுகளே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப்பகுதிக்குள் சதாசிவம்பிள்ளை 87 புலவர்களினதும் குமாரசுவாமிப் புலவர் 46 புலவர்களினதும் வரலாறுகளைக் கூறுகின்றனர்.

**ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் வரலாறு**

இவர் நவாலியிலே சைவவேளாண் குடும்பத்தைச் சேர்ந்த அருணாசலம் ஆனந்தப்பிள்ளை தம்பதிகளின் மகனாக 11.10.1820இலே பிறந்தார். 1831இல் ஆரம்பக் கல்வியை மானிப்பாய் மிஷன் ஆங்கிலப் பாடசாலையிற் பெற்றதுடன் அடுத்த ஆண்டு வட்டுக்கோட்டை மிஷனரியிற் சேர்ந்தார். 1835இலே கிறிஸ்தவராகி 'அருணாசலம் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை' என்ற பெயரையும் பெற்றுக் கொண்டார். 1841ஆம் ஆண்டு ஆசிரியராக மானிப்பாய் மிஷன் ஆங்கிலப் பாடசாலையிற் கற்பித்ததுடன், உடுவில் மகளிர் தலைமைப் பாடசாலையின் ஆசிரியராகவும் விளங்கினார். பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிப் பேராசிரியராகவும் பணியாற்றினார். 1857இலிருந்து 1895ஆம் ஆண்டு தாம் இறக்கும்வரை 'உதயதாரகை' தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

இவர் பாவலர் சரித்திரதீபகம் என்னும் நூலுடன் மெய்வேதசாரம், திருச்சதகம், நன்னெறிமாலை, நன்னெறிக்கொத்து, நன்னெறிக் கதாசங்கிரகம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவரது 'நன்னெறிக் கதாசங்கிரகம்' சிறுகதைத்தொகுப்பாக இனங்காணப்பட்டு இவரைத் தமிழ்ச் சிறுகதை முன்னோடியாகப் போற்றும் மரபும் உள்ளது.

**சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர்**

இவர் சுன்னாகத்திலே சைவவேளாண் குடும்பத்திலே அம்பலவாணபிள்ளை, சிதம்பர அம்மையார் தம்பதிகளின் மகனாக 18.01.1885இலே பிறந்தார். ஆரம்ப வயதிற் சிறிது காலம் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையிற் கற்றாலும் பின்னர் முருகேசபண்டிதர், நாகநாதபண்டிதர் ஆகியோரிடம் மரபுவழிக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். 1878இலே சி.வை.தாமோதரம்பிள்ளையாலே தொடங்கப்பட்ட ஏழாலை சைவவித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். உதயபானு, விஞ்ஞான வர்த்தனி, இலங்கை நேசன் முதலிய பத்திரிகைகளில் இலக்கண, இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

பதுளைக் கதிரேசர் பதிகம், பதுளை மாணிக்க விநாயகர் பதிகம் உள்ளிட்ட பதிகங்களையும் மிலேச்சமத விகற்பக்கும்மி, அத்தியடி விநாயகரூஞ்சல், மேகதூதக் காரிகை முதலிய செய்யுள் நூல்களையும் பாடியுள்ளார். யாப்பருங்கலப் பொழிப்புரை, திருக்கரைசைப் புராணப் பொழிப்புரை, இலக்கணச் சந்திரிகை, ஆத்திசூடி, வெண்பாக்கதைகள், கண்ணகி கதை, தமிழ்ப்புலவர் சரித்திரம் என்பன இவரது ஏனைய நூல்களாகும். 1922ஆம் ஆண்டு இவர் மரணமடைந்தார்.

**3. பாவலர் சரித்திர தீபகமும் தமிழ்ப் புலவர் சரித்திரமும்**

சைமன் காசிச்செட்டியின் 'தமிழ் புளூ ராக்' அகரவரிசைப்படி புலவர் வரலாறு கூறிய மரபை இருவருமே பின்பற்றியுள்ளனர். சைமன் கூறிய 196 புலவர்களின் வரலாற்றுடன் மேலும் 216 புலவர்களையும் சேர்த்து 412 புலவர்களின் வரலாற்றைச் சதாசிவம்பிள்ளை கூறுகிறார். குமாரசுவாமிப் புலவர் 182 புலவர்களின் வரலாற்றை மட்டுமே கூறுகின்றார். அத்துடன் நூலின் இறுதியில் 126 சங்கப்புலவர்களினதும், 36 ஏனைய புலவர்களினதும் பெயர்களையும் தந்துள்ளார். இதேவேளை சதாசிவம்பிள்ளை நூலின் அட்டையில் "The Galaxy of Tamil Poets"

என்றும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### 4. நூன்முகம்

இருவரும் தமது நூல்களுக்கு நூன் முகங்களை வெவ்வேறு தலைப்புக்களில் எழுதியுள்ளனர். சதாசிவம்பிள்ளை பாயிரம் என்ற பெயரிலே தமிழிலும் 'Preface' என ஆங்கிலத்திலும் எழுதியுள்ள அதேநேரம் புலவர் 'உபக்கிரமணிகை' என்னும் தலைப்பில் நீண்ட முன்னுரையை எழுதியுள்ளார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நூல்கள் வெளியிட்டமைக்கான காரணங்களை அறிந்துகொள்ள முடிகிறது.

சதாசிவம்பிள்ளை, தமிழே முதன்மொழி என்றும் இல்லை வடமொழி முதன்மொழியென்றும் கூறுபவர்கள் தமது கருத்தை நிலைநாட்ட இந்துசமயக் கடவுளருடன் தொடர்பு படுத்திக் கூறப்படும் கருத்துக்களை எடுத்துக் காட்டிவிட்டுத் தனது முடிவைக் கூறுகின்றார்.

"இவ்வாறாய்ப் பலபாலாரும் பலவாறு சாதித்து முழங்கவே எம்மூரில் வழங்கிவரும் தென்மொழியும் தேன்மொழியுமாகிய தமிழ்ப் பாஷை மற்றைய பாஷைகளில் நின்று மேன்மையும் விசிட்டமும் உற்றதென்று சாதிக்க எம் மனசோடு நாத்துணியாதபோதும் அவ் இலட் சணம் அமையப்பெற்றவற்றுள் ஒன்றெனத் துணியப் பின்னிடா" எனக் கூறுகையில் அவரது விஞ்ஞான பூர்வமான பார்வையைக் காணமுடிகிறது. மேலும்

1. ஆங்கிலத்தின் வரவினாலே தமிழ் அடைந்த நன்மை.
2. தமிழ்ப்புலவர் சரித்திரம் தொடர்பாகச் சைமன் காசிச்செட்டி நூல் வெளியிட்டாலும் அது ஆங்கிலத்தில் இருப்பதால் தான் தமிழில் வெளியிடவேண்டிய தேவை.
3. சந்தான குரவர், சமயகுரவர் முதலியோர் சிலரின் சரிதங்களைச் சேர்க்காமைக்கான காரணம்.
4. கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியோரின் சரிதங்கள் விநோதரச மஞ்சரியிலிருந்து பெறப்பட்டமை.
5. வாசிப்போர் எளிதிற் புரிந்துகொள்வதற்காகப் பதங்கள் பிரித்து எழுதப்பட்டமை.

என்னும் செய்திகளை முன்னுரையிலிருந்து அறியமுடிகிறது.

இதேவேளை தமிழ்ப்புலவர் சரித்திரம் என்றால் என்னவெனும் தெளிவான வரையறையுடன் உபக்கிரமணியைத் தொடங்கும் குமாரசுவாமிப் புலவர், பல்வேறு புலவர்களுடைய நாடு, நகர், குலம், பாடல்கள் என்பன எவ்வாறு மாறுபட்டு வழங்குகின்றன என்பதற்கான உதாரணங்களைத் தந்து, தான் தகவல்களைப் பெற ஆதாரங்களாய் இருந்த பழைய நூல்களுக்கான உரைகள், பாயிரங்கள், தனிப்பாடல்கள், உ.வே.சா., சி.வை.தா முதலியோரின் முகவுரைகள், செந்தமிழ்ச் சஞ்சிகைகளில் வெளிவந்த வரலாறுகள் முதலியவற்றை கூறுகிறார். இவற்றுட் பாவலர் சரித்திர தீபகமும் அடக்கம். இந்நூலுக்குக் குமாரசுவாமிப் புலவர் பாயிரம் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் சதாசிவம்பிள்ளை கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகிய இருவருடைய வரலாறுகளை மட்டும் எங்கிருந்து பெற்றேன் எனக்கூறுவது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

### 5. புலவர் வரலாறுகள்

கட்டுரையாசிரியர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பகுதிக்குள் (அகத்தியர் முதல் ஔவையார் வரை) சதாசிவம்பிள்ளை 87 புலவர்களையும், குமாரசுவாமிப்புலவர் 46 புலவர்களையும் கூறுவது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியைப் பின்வரும் மூன்று உபபிரிவுகளாக நோக்கலாம்.

அ. இருவரும் பொதுவாகக் கூறும் புலவர்கள்.
ஆ. குமாரசுவாமிப் புலவர் நீக்கிய புலவர்கள்.
இ. குமாரசுவாமிப் புலவர் புதிதாகச் சேர்த்த புலவர்கள்.

#### அ. இருவரும் பொதுவாகச் சேர்த்தோர்

இருபத்தெட்டுப் புலவர்களை இருவரும் கூறுகின்றனர். தமிழிலக்கிய வரலாற்றில் விட்டுச்செல்லமுடியாத அகத்தியர், அபிராமிப் பட்டர், அரசகேசரி, அருணகிரிநாதர், ஆறுமுக நாவலர், இராமலிங்கம்பிள்ளை, ஒட்டக்கூத்தர், ஔவையார் என முக்கியமான புலவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

#### ஆ. குமாரசுவாமிப் புலவர் நீக்கிய புலவர்கள்

இரு காரணங்களுக்காக இவர்கள் நீக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்கமுடிகிறது.

1. பிறசமயத்தைச் சேர்ந்தவராக இருந்தமை.

அந்தோனிக்குட்டி அண்ணாவியார் கத்தோலிக்கராகவும் உமறுப்புலவர், அலியார் புலவர் முதலியோர் இஸ்லாமியர்களாகவும் இருந்தமையால் நீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிறிஸ்தவராக இருந்தும் சதாசிவம்பிள்ளை சைவ, வைஷ்ணவ, இஸ்லாமிய சமயக் கவிஞர்களுக்குத் தமது நூலில் உரிய முக்கியத்துவம் அளித்துள்ளார். எனினும் சில இடங்களில் இவர்களது சமயப் பற்றைக் கேலி செய்யும் தன்மை காணப்படுவதையும் மறுக்கமுடியாது. அபிராமிப்பட்டர் பற்றிக் கூறும்போது –

"இவ்வந்தாதியில் ஒவ்வொரு பாவைப் பாடி ஒவ்வொரு வடத்தையறுத்து நூறாம் வடத்தையறுக்குந் தருணம் அபிராமியருளினாற் பௌர்ணமி தோன்றிற்றென்று இப்பாடற் காரணங் கூறும் கன்னபரம்பரையும் நங்கன்னத்தில் விழுந்ததுண்டு" என்றும்

இராமலிங்கம்பிள்ளை பற்றிக் கூறும் போது,

"இல்லார்க்குப் புத்திரசந்தானமீவோம் செத்தவர்களை எழுப்புவோம் ஊனர்க்கு அங்கபங்கங்களைப் போக்குவோம் என்று ஆகாயத்தை அடித்துச் சிலம்பம் பண்ணினவராய்ச், சிலவருடம் பெருங்கூக்குரல் பண்ணினவர்"

என்றும் கேலி செய்வதைக் காணலாம்.

2. இலக்கிய வரலாற்றிற் பெரும் முக்கியத்துவம் பெறாதவர்களாகவும் ஓரிரு பாடல்களை மட்டுமே பாடியோராகவும் உள்ளவர்கள்.

உதாரணமாகச் சதாசிவம்பிள்ளை கூறும் அஞ்சனாட்சி என்பவர் கம்பன் இராமாயாணத்தை அரங்கேற்றத் துதிக்கவி ஒன்று வழங்கிய தாசி. இவரது ஒரு பாடல் மட்டுமே உள்ளதால் இவர் நீக்கப்பட்டுள்ளார் போலத் தெரிகிறது.

மேலும் நீக்கப்பட்ட புலவர்களின் பெயர்களிற் சிலவற்றை மட்டும் நூலின் இறுதியி லுள்ள பெயர்ப்பட்டியலிற் குமாரசுவாமிப் புலவர் சேர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இ. குமாரசுவாமிப்புலவர் புதிதாகச் சேர்த்தோர்

இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களையும் இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. முக்கியத்துவம் பெற்ற பண்டைத் தமிழ்ப் புலவர்கள்.

ஆண்டாள், இளங்கோ அடிகள் முதலியோரைக் குறிப்பிடலாம். சிலப்பதிகாரம் சிறப்பாகக் கற்கப்பட்ட ஈழத்தைச் சேர்ந்தவரான சதாசிவம் பிள்ளை இளங்கோ அடிகளைச் சேர்க்காமல் விட்டதற்கான காரணத்தை அறியமுடியவில்லை.

2. சதாசிவம்பிள்ளை வாழ்ந்த காலத்திற்கு அண்மையில் வாழ்ந்த தமிழகப் புலவர்கள்

உதாரணம் அருமருந்து தேசிகர் (1763)

அழகிய சிற்றம்பலக் கவிராஜர் (1716) சதாசிவம்பிள்ளைக்குக் கிடைக்காத இத்தகவல்கள் 'செந்தமிழ்' சஞ்சிகை மூலம் புலவருக்குக் கிடைத்திருக்கலாம்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தைக்கூறும்போது இருவரிடமுமே சமயச்சார்பு இருந்தமையை வெவ்வேறு வகைகளில் அவதானிக்க முடிவது பொதுவான அம்சமாகும்.

அத்துடன் ஒவ்வொரு புலவரது பெயரையும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளதுடன் புலவரின் ஆக்கம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தால் மொழி பெயர்த்த ஆங்கிலேய அறிஞரின் பெயரையும் தருவது சதாசிவம் பிள்ளையின் சிறப்பம்சமாகும். உதாரணமாக அருணகிரிநாதரின் உடற்கூற்று வண்ணத்தை ரொப்பேட் தேசிகர் (Rev. Mr. Robert) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை பற்றிய செய்தியைக் குறிப்பிடலாம்.

ஆனால் மரபுவழி அறிஞரான குமாரசுவாமிப் புலவர், ஊர், குலம், சமயம் என்பவற்றைக் கூறி வரலாற்றைத் தொடங்குவது அவரது சிறப்பம்சமாகும். அவர் புலவர்களின் ஆண்டை உரோம இலக்கத்திற் குறிப்பிடச் சதாசிவம்பிள்ளை தமிழ் இலக்கத்திற் கூறுவதும் கவனித்தற்குரியதாகும்.

தொகுத்து நோக்கின் இருவருமே புலவர்கள் வரலாற்றைத்தான் எழுதியபோதும் வேறுபட்ட சமயப் பின்னணி எந்தெந்தப் புலவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற கருத்துநிலை என்பவற்றின் காரணமாகச் சில வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன எனலாம்.

* * *



# தாய்மொழி பேணாத தமிழர்கள்

கவிஞர் சோ. பத்மநாதன்

தமிழைப் பிழையறப் பேசுவதிலும் எழுதுவதிலும் கவனஞ்செலுத்தாத போக்கு, தமிழர்களிடையே காணப்படுகிறது. கற்றவர்கள்கூட இது குறித்துக் கவலைப்படக் காணோம். ஊடகங்கள் தமிழ்க் கொலையில் முக்கியபங்கு வகிக்கின்றன. அவை இளம்பிள்ளைகளிடையே செல்வாக்குப் பெற்றிருப்பதால், அவை பயன்படுத்தும் மொழி சரியானதென்ற மாயையைத் தோற்றுவித்துள்ளன. தமிழுணர்ச்சி மிகுந்துள்ள அளவுக்குத் தமிழை வழுவின்றி எழுதுவதில் ஆர்வம் இல்லாதிருப்பது வருத்தந்தருகிறது.

ஊடகங்கள் பயன்படுத்தும் மொழியை அவ்வப்போது படித்தும் கேட்டும் வருகிறவன் என்ற முறையில் என் அவதானிப்புக்குள் வந்த வழுக்களை வகைப்படுத்தி ஆராய முனைகிறேன். இது பூரணமான ஆய்வன்று. தமிழ் கற்போர், கற்பிப்போர் எனும் இருதிறத்தாரும் இத்துறையில் இறங்க இது தூண்டுகோலாக அமைந்தால் என் நோக்கம் நிறைவேறி யதாகக் கருதுவேன்.

**சொல் :**

'கர்ப்பூரம்', கருப்பூரம், ஆகிய இரு வடிவங்களும் வழங்கி வந்துள்ளன.* இரண்டையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், 'கற்பூரம்' என்பது செய்யுள் விகாரம். உரைநடையில் கற்பூரம் என எழுதுவது பிழை.

சில மாணவர்கள் 'பரீட்சயம்' என எழுதுகிறார்கள். இது பரீட்சை என்ற சொல்லால் ஏற்பட்ட குழப்பம். பரீட்சை வேறு, 'பரிச்சயம்' வேறு. ("வெண்குடையைப் பாற எறிந்த பரிசயத்தால்" – முத்தொள்ளாயிரம்)

சில காலமாகப் 'பூப்புனித நீராட்டுவிழா' அழைப்புக்கள் அச்சேறுகின்றன. ஒரு சிறுமி பூப்பெய்துகிறாள். அவளுக்குச் செய்யப்படும் சடங்கு பூப்பு நீராட்டுவிழா ஆகும். புனிதம் தவறாகச் செருகப்பட்டு விடுகிறது.

"இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிக்கலாம்...." (26.05.08 தினக்குரல்). 'முயல் என்ற ஏவல் வினையினடியாகப் பிறந்ததே முயற்சி என்ற தொழிற்பெயர். அதை முயற்சித்தல் என நீட்டுவது தவறு. முயலுதல் என்பதே சரி.

சிலர் "அவன் சுதாகரித்துக் கொண்டான்" என எழுதுகிறார்கள். இது தவறு. "சுதாகர்" என்ற ஆண்பாற் பெயர்ச்சொல்லை 'சுதாரித் துக்கொள்ளல்' என்பதோடு குழப்பியதால் ஏற்பட்டது இந்தத் தவறு.

'முன்றல்' என்பதும் தவறானதொரு பிரயோகமே. முன்றில் என்பதே சரி. இது எப்படி வந்தது தெரியுமா? இல் + முன் என்பது வேற்றுமைத் தொகை (விரி : இல் + இன் + அது + முன்) இதுவே பின் முன்னாகத் தொக்கது என்பர் இலக்கண நூலார். (அணிலாடு முன்றிலார் என்பது சங்ககாலப் புலவர் ஒருவர் பெயர்)

கத்தோலிக்க அன்பர்கள், சிலகாலமாக, "இறை ஆசீர் வேண்டுகிறோம்" என்று எழுதி வருகிறார்கள். 'ஆசீர்' என்று ஒரு சொல் இல்லை. 'ஆசி' அல்லது 'ஆசீர்வாதம்' என்பவற்றில் ஒன்றையே தெரிவு செய்யவேண்டும்.

'நாள்' என்ற சொல்லின் பன்மை வடிவம் எது? பலர் 'நாட்கள்' என்று எழுதுகிறார்கள். 'நாட்கள்' என்பது "அன்றைக்கு இறக்கிய கள்" என்ற பொருளையல்லவா தரும்?

**"ஒன்பதொ டொன்றோ டேழு**
**பதினெட்டொ டாறும்**
**உடனாய நாள்க ளவைதாம்"**

(சம்பந்தர் : கோளறு பதிகம்)

என்ற வழக்கை நோக்குக.

பன்மை பற்றிய உசாவல் ஆங்கில வழக்கின் செல்வாக்கால் இன்று பெருவழக்காகி விட்ட 'வாழ்த்துக்கள்' 'அநுதாபங்கள்' என்ற பிரயோகங்

களை மறுபரிசீலனை செய்வதன் அவசியத்தை நினைவூட்டுகிறது. தமிழ் மரபில் வாழ்த்துத்தான், அநுதாபந்தான். congratulations, condolences என்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி யதன் விளைவே இந்தக் 'கள்' கள்.

Bus என்ற ஆங்கிலச் சொல்லைப் 'பேருந்து' என்று தமிழக அரசு தமிழாக்கம் செய்தது. (motor) உந்து, motorbike - உந்துருளி, motor bus - பேருந்து நல்லது. இதைச் சிலர் "பேரூந்து" எனத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டில் 'பசும்பால்' என எழுதுகிறார்கள். ஈழத்தவர் 'பசுப்பால்' எனச் சரியாகவே பேசுகின்றனர், எழுதுகின்றனர். பசுமை + புல் = பசும்புல் என பண்புத்தொகையாக வரும். ஆனால் பசும்பா லுக்கு நிலைமொழி என்ன என்று சிந்தித்தால் குழப்பமிராது.

சந்திப் பிழைகள்

இவ்வகை வழுக்களுக்கு அதிக பங்களிப்புச் செய்பவை பத்திரிகைகளே. "தமிழ்நாடு முத லமைச்சர்" என்ற தொடரை அடிக்கடி கேட்கி றோம், பார்க்கிறோம். இது தமிழை நாடும் முதலமைச்சர் என்று பொருள்படுகிறது. (தற்போதைய முதலமைச் சர் தமிழை நாடுபவராக விளங்குகிறார் என்பது வேறு). வெளிநாட்டமைச்சர், பாண்டி நாட்டு முதன் மந்திரி, நாட்டு வளம், நாட்டுச் சிறப்பு என்றுதானே வழங்குகிறோம்! கருணாநிதியைத் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்றல்லவா குறிப்பிட வேண்டும்!

தொண்டைமானாறு, மணலாறு என்ற பெயர்களோடு 'இல்' உருபு புணரும்போது தொண்டைமானாற்றில், மணலாற்றில் என்று வருவதே சரி.

'இ' என்ற சுட்டெழுத்தைப் பயன்படுத்தும் நுட்பமறியாதார் இழைக்கும் தவறுகள் வேடிக்கை யானவை.

| | |
|---|---|
| இ + ஊர் | = இவ்வூர் |
| இ + நகரம் | = இந்நகரம் |
| இ + மன்றம் | = இம்மன்றம் |
| இ + துறவி | = இத்துறவி |
| இ + படைப்பு | = இப்படைப்பு |

வருமொழியின் இனமான மெய்யெழுத்தே புணர்த்தப் பயன்படுவது காணலாம். ஆனால் பலர், 'இவ் ஆலயம்', 'இவ் நிகழ்ச்சி', 'இவ்நீர் நிலை' என்றெல்லாம் மோசமாக எழுதுகிறார்கள்.

தமிழ் ஒட்டுநிலை (agglutinative) மொழி : சொற்கள் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று விதமாகப் புணரும். இந்நுட்பங்களை அறியாதார் பிழைபட எழுதுவதால், பிழையான வழக்கே பெருவழக்காகிவிடுகிறது.

*(உ + ம்) போர் + தேங்காய் = போர்த்தேங்காய்*
*அம்மி + குழவி = அம்மிக்குழவி*

ஆனால் ஓர் உள்ளூர்ப் பத்திரிகை தலைப் பிடுகிறது.

**"புத்தூர் பகுதியில் மோதல்"**
**"பூநகரி கடலில் மோதல்"**
**"சிவத்தமிழ் செல்வியின் பெயரைச் சூட்டவும்"**

28.05.2008 காலையில் சன் TV தந்த செய்தித் தலைப்பு இது. "லண்டனை கலக்கும் தமிழ் தாதாக்கள்." படு பிழையான இதுபோன்ற வழக்குகளை, கட்புல / செவிப்புல ஊடகமொன்று மக்களிடையே கொண்டு செல்கிறது.

இந்நாளில் தோன்றலைக் கவனிக்காத போக்குக் காணப்படுகிறது. 'அலைகடல்', 'அலைக் கடல்' இரண்டும் வேறு. முதலாவது வினைத்தொகை. அலைகின்ற கடல் என்று பொருள்படுவது. இரண் டாவது அலையை உடைய கடல். இதுபோலவே 'வளைகரம்' வேறு, வளைக்கரம் வேறு.

"உடும்பு பிடி!" "உடும்புப்பிடி"

முதலாவது, உடும்பைக் கண்ட ஒருவன் மற்றொருவனைப் பிடிக்குமாறு ஏவியதாகக் கொள்ளலாம். "உடும்புப்பிடி" என்பது ஒரு மரபுத் தொடர். விடுவிக்கமுடியாதது பொருள் எனப் பொருள்படும். பனிப்புகாரை நாம் 'பனிபுகார்' என்றெழுதினால் பனிக்குள் புகாதவர்கள் என்றல்லவா பொருள்படும்?

திணைவழு

"உங்களிடமிருந்து விடைபெறுவது கீதா" என்று ஜெயா TV அறிவிப்பாளர் "வாரந்தோறும்

தமிழகம்" நிகழ்ச்சியை முடித்துக்கொள்ளக் கேட்டேன். "விடைபெறுவது" அஃறிணைக்குரிய வினைமுற்று அல்லவா? "விடைபெறுபவர்" என்றுதானே சொல்லியிருக்கவேண்டும்!

"மாணவன் தாக்கப்பட்டார்" என மகுடமிடப்பட்ட செய்தி 1.10.2008 தினக்குரலில் வெளிவந்தது. எழுவாய் - பயனிலை இயைபு நோக்கி இது "மாணவர் தாக்கப்பட்டார்" என்றோ "மாணவன் தாக்கப்பட்டான்" என்றோ வந்திருக்க வேண்டும்.

எண் வழு

ஊடகங்கள் பயன்படுத்தும் தமிழில் மிக மலிந்துள்ளவை எண்வழுக்களே என்பதற்குக் கீழ்க்காணும் உதாரணங்கள் சான்று பகரும்.

"ஆங்காங்கே மண்சரிவுகளும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது - கேசரி 04.05.08 (கதிர்)

"பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீனா செய்து வரும் புனரமைப்புப் பணிகள் என்னை ஈர்த் துள்ளது - ஐ.நா.செயலர்" (சன் நியூஸ் 25.05.08 காலை)

"ஸ்ரீநிவாஸ கல்யாணத்தில் மஞ்சள், குங்குமம், கேசரி, லட்டு முதலிய பொருள்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது"
- சன்நியூஸ், 07.04.08

"திருநெல்வேலி அல்வாக்கள் இனிப்பு வகைகளில் பிரதான இடத்தை வகிக்கிறது" (சன் நியூஸ் 26.05.08)

"(இதனால்) பெருந்தொகையான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது" - இலங்கை வானொலி 26.05.08 காலைச் செய்தி

"பாகிஸ்தான்அணி விபரங்கள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது" (சூரியன் FM, 04.06.08 மாலைச்செய்தி (விபரம் என்பது சிறப்பு)

"எந்த அளவுக்கு வாய்ப்புக்களும் வசதிகளும் இருக்கின்றதோ...." - Vijay TV 29.06.08 (நிகழ்ச்சியின் பெயர் (தமிழா, நீ பேசுவது தமிழா?)

"தெருவுக்குத்தெரு செல்போன் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகிறது" (கலைஞர் TV 30.06.08)

"கனடாவில் சீல்கள் அளவுக்கு அதிகமா கப் பெருகியுள்ளது" ஜெயா TV. 02.04.08
நிகழ்ச்சி : "இந்த வார உலகம்"

ஆக, எல்லா வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும் தமிழைக் கொலை செய்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டுள்ளன.

வாக்கிய அமைப்பில் வழு

ஆரம்பப் பேச்சாளர்கள் பலர் ".... எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்" என்கிறார்கள். இதென்ன முதற்கண் வணக்கம்? அவர்கள் சொல்ல வருகிறது "... எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள் கிறேன்".

வாக்கியங்கள் மயக்கம் ஏற்படாதவாறு பொருளைப் புலப்படுத்தவேண்டும். "கூட்டுற வாளர் நடத்தும் விமானத்தாக்குதலுக்கு எதிரான மாபெரும் கண்டன ஊர்வலம்" - இது நாளிதழ் ஒன்றில் வந்த செய்தித் தலைப்பு. கூட்டுறவாளர் நடத்தும் விமானத் தாக்குதல் என்ற விபரீத பொரு ளையல்லவா இது தருகிறது! "விமானத் தாக்கு தலுக்கு எதிராக, கூட்டுறவாளர் நடத்தும் கண்டன ஊர்வலம்" எனத் தலைப்பிட்டிருக்க வேண்டும்.

"கொழும்பில் எஞ்சினியருக்குப் படித்த பெண் தேவை" என்பது திருமண சேவையினர் செய்த விளம்பரம். இது பல ஐய வினாக்களுக்கு இடமளிக்கிறது.

1. எஞ்சினியருக்குப் படித்த - அதாவது engineering படித்த பெண் வேண்டும்.
2. கொழும்பில் கடமைபுரியும் எஞ்சினியருக் குப் படித்த பெண் வேண்டும்.
3. வெறெங்குமன்றி, கொழும்பில் engineering படித்த பெண்ணை (யாரோ ஒருவர்) எதிர்பார்க்கிறார்.
4. எஞ்சினியர் ஒருவர் படித்த, கொழும்பில் வாழும் பெண்ணை விரும்புகிறார்.

"ஆண்கள் மருந்து கட்டும் இடம்" என்பது வெளிநோயாளர் பிரிவில் காணப்படும் அறிவித்தல். குறிப்பிட்ட இடத்தில் ஆண்கள் மருந்து கட்டுகிறார்களா? அல்லது ஆண்களுக்கு மருந்து கட்டப்படும் இடம் இதுவா?

பேரறிஞர் (அமரர்) சச்சிதானந்தன் பார்வையிற் பட்ட விளம்பரம் இது :

"பாவித்த பெண்களின் சைக்கிள் தேவை" எவ்வளவு விபரீதமான பொருள் தருகிறது இது!

தவிரவும், பாவித்த என்பது used அல்ல. தியானித்தல் அல்லது ஒன்றை மற்றொன்றாகப் பாவனை செய்தல், பாவித்தல் எனப்படும். மேலே, 'பாவித்த' என்பது பயன்படுத்திய என்ற பொருளில் வந்துள்ளது.

**உச்சரிப்புப் பிழை**

தமிழர்கள் தங்கள் தாய்மொழியைச் சரியாக உச்சரிக்கின்றார்களா? சிறப்பு ழகரம் ஈழநாட்டில் உச்சரிக்கப்படுவதேயில்லை. தமிழ்நாட்டில் சில பிரிவினர் மட்டும் இதைச் சரியாக உச்சரிக்கிறார்கள். பல்லின மக்கள் வாழும் நாடுகளில், மொழி எல்லைகளைக் கடந்த ஊடாட்டம் நிகழுகையில், ஒரு மொழியின் உச்சரிப்பு மற்றைய மொழியின் உச்சரிப்பைப் பாதிக்கும். மலையகத்தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் சரளமாகப் பேசுவதால், அவர்களுடைய தமிழ்ப்பேச்சு சிங்களச் சாயல் பெறும். என் முஸ்லிம் நண்பரொருவர் அயலிலுள்ள பௌத்த விகாரையைச் சேர்ந்த இரு பிக்குகளை "பெரியசாமி", "சின்னசாமி" என்று குறிப்பிடுவார். முதலாவது சரி. இயல்பான தமிழ் உச்சரிப்பு சின்னச்சாமிதான். நண்பருடைய உச்சரிப்பு சிங்கள மரபு.

அண்ணாமலையில் பட்டம்பெற்ற இசைவாணர் ஒருவருக்குக் குற்றியலுகரம் வராது. "மந்திரமாவது நீறு" என்பதை 'நீறு' என்பதை n ± : r ± எனப் பாடாமல் n ± : ru என முற்றியலுகரமாகப் பாடுவார்.

தமிழ்நாட்டு அறிவிப்பாளர்கள் சிலர் லகர, ளகர மயக்கத்துக்குள்ளாகிறார்கள். அண்மையில் கேட்ட இரண்டு செய்தித் துணுக்குகள் :

"I.P.S. சந்தித்த தொடர் தோள்வி ரசிகர்களுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணியுள்ளது" – சன் நியூஸ் 14.05.08

கொழும்பு நகரில் முக்கிய பிரமுகர்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் பாதுகாப்பு வளயப் பகுதியிலேயே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது" – கலைஞர் ரீ.வி. 16.05.08

**முடிவுரை**

மொழி மாற்றமடைந்துவரும் என்பது மொழியியலாளர் கோட்பாடு. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' எனத் தமிழிலக்கணம் அனுமதி தருகிறது. ஆனால் நாம் அறியாமையாற் செய்யும் தவறுகளையெல்லாம் புதிய வழக்குகள் எனச் சாதிப்பது தமிழுக்கு நன்மை செய்யாது. மேலே சுட்டிக்காட்டப்பட்டவை ஊடகங்களில் வெளிவந்த பிழைகள். சமகாலத்தில்வரும் ஆங்கில ஊடகங்கள் ஒருசிலவேனும் என்பார்வைக்கு / கேள்விக்கு வருகின்றன. இத்தகைய மோசமான வழுக்கள் அவற்றில் வரக்காணோமே! நாவலர் மனம் நொந்து கூறியதுபோல் –

"தமிழ்க்கல்வியொன்றா பகிடிக்கிடனாயிற்று" என நாமும் சலித்துக் கொள்வதைத் தவிர ஒன்றுமே செய்யமுடியாதா?

**அடிக்குறிப்புக்கள் :**

- "கர்ப்பூரம் போலக் கடலுப்பிருந்தாலும் கர்ப்பூரமாமோ கடலுப்பு" (நீதிவெண்பா)
- "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ?" – ஆண்டாள்)

◆ ◆ ◆



# இப்படிப் போனால் எப்படிப் போகும்

மு.திருநாவுக்கரசு
(விகடகவி)
ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி.

பற்பல அறிஞர்கள் பல்வேறு கோணங்களில், பலவாறு ஆராய்ந்து பாங்குடன் படைத்த கட்டுரைகள் பலவும் கொண்டு அழகுறப் பொலிவது இச்சஞ்சிகை - இம் மாமலர் கொண்டுள்ள மலர் கள் மலர்ந்து மணம் கமழ்ந்து பொலிகின்றன.

எனது இக்கட்டுரை ஆய்வுமல்ல, அற்புதப் படைப்புமல்ல. அப்போ இது என்ன வகை? என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகின்றது. - இதுவும் ஒரு புது 'ரைப்' என்று வைத்துக்கொண்டு மேலும் படியுங்கள். இறுதியில் ஒரு முடிவுக்கு வருவோம்.

இன்று எழில்சேர் ஈழமணித் திருநாட்டில் எழுத்தாளர்கட்கும், பேச்சாளர்கட்கும் குறைவே யில்லை. நான் பாடசாலை மாணவனாக இருந்த ஐம்பதுகளில் இப்படிப் பேச்சாளர்களையும், நூல் வெளியீடுகளையும், கவியரங்குகளையும் நான் அதிகம் கண்டு கேட்டதில்லை. அடியோடு இவை இருக்கவில்லை என்பது இதன் அர்த்தமல்ல, அத்தி பூத்ததுபோல் இந்த மலர்கள் மலர்ந்தன, வெளி யீட்டு விழாக்களும் இடையிடையே நடந்தேறின.

இன்றோ வாரம் ஒரு நூல் வெளிவருகின்றது. அந்த நூல் மெலிந்ததோ, கொழுத்ததோ, மாமணி மண்டபத்தில் மலர் வெளியீட்டுக்குக் குறைவே யில்லை. ஆய்வுரை, பாராட்டுரை, இப்படி எத் தனை சம்பிரதாயங்கள், நீண்ட கியூ வரிசையில் முதல் பிரதி, பின் அடுத்துவரும் பிரதிகளை ஏட்டில் பணம் வைத்து வாங்கும் வட்டிக் கடைக்காரர், குட் டிக்கடைக்காரர், கொழுத்த பணக்காரர் ஏராளம் ஏரா ளம் - எனவே எவரும் எதையும் எழுதலாம் - படிக் காவிட்டாலும், பாங்குடனே வாங்கும் திருக்கூட் டத்திற்குக் குறைவேயில்லை. வாழ்க! நூல் வெளி யீடு. இதனால்தான் என் 'விகடகவி' தொகுப்பை வெளியிடத் தயங்குகின்றேன். எப்படியும் அண்மை யில் அரங்கேற்ற உள்ளேன்.

இவை இருக்கட்டும் உமது கட்டுரையைத் தொடரும் என்று தானே அதட்டுகிறீர்கள். மனச் சுமையைக் குறைக்க பற்பல பக்கம் எழுதியும் தீராது. அத்தனை மனச்சுமை என் மனச்சுமை. கஞ்சிக்குப் பயறாகச் சிலவற்றை மட்டும் சிந்தனைக்குத் தரு கின்றேன். மிகுதியை 'விகடகவி'யின் தொகுப் பிலே காணுங்கள்.

எனது பாடசாலைப் பருவம், பொன்னானது. அக்காலத்தில் எத்தனை பேர் அறிஞர்கள், இத் திருநாட்டில் தம் திருமுகத்தைக் காட்டிச் சென்றனர். ஐயகோ! அதில் அனைவருமே இன்று அமர உலகத்திற்குச் சென்று விட்டனரே! எப்போது இனி இவரைக் காண்பேன் இது தான் என் ஆதங்கம்.

பேராசிரியர் இரா.பி.சேதுப்பிள்ளை. இவர் தான் சொல்லின் செல்வர், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பே.விஸ்வநாதன், கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜெகநாதன், தமிழ் அறிஞர் அ.ச.ஞானசம் பந்தனார், திருமுருக கிருபானந்தவாரி சுவாமிகள், ம.போ.சிவஞானகிராமணியார் இத்தகைய பேர றிஞர்களைக் கண்டேன், கேட்டேன் என்ற மன நிம்மதி - இதைச் சொல்லிவிட்டு நம் தமிழ் யாழ்ப் பாணத்தில் எத்தனை புகழ்பூத்த அறிஞர்கள் இருந்தார்கள். எல்லோரையும் வரிசைப்படுத்த முடியவில்லை. பண்டிதமணி முதல் தற்போது மறைந்த தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் வரை எத்தனை எத்தனை தமிழ் அறிஞர்கள் இவர்கள் பற்றி காலம் இருந்தால் கட்டுரை ஆக்கலாம் என்று ஒரு ஆசை.

அமரர் சொல்லின் செல்வர், சுந்தரத்தமிழ் மகன், செந்தமிழ் ஆசான், சிந்தைக்கினியவர், சிறப் புறு பேராசான் நம் தமிழ் ஈழம்பற்றி நறுந்தமிழ் யாழ்ப்பாணம் பற்றி சுந்தரத்தமிழில் சொன்ன வற்றை சொல்லிவிட்டு கட்டுரைக்குள் புகுந்து விடலாம் என எண்ணுகின்றேன். - 53 கள் என்று ஞாபகம். பிழை என்றால் ஆண்டைத் திருத்துங்

கள். இந்தப் பெருமகன் ஈழம் வந்தார், இனிக்க இனிக்கப் பேசினார். பின் எழுதினார், பேசினார் – புகழ்ந்தார் – 'தமிழர் தம் பண்பாட்டை, கலையை, கலாச்சாரத்தை, வாழ்க்கை முறைமையை, நடை யுடை பாவனையை, அழிந்து ஒழிந்து சிதைந்து போகாமல் பேணிக்காக்கும் பெட்டகம் நம் யாழ்ப்பாண நன் நகரம்", இதனைப் படிக்க எத்தனை இன்பம் என்னே! இவரது தமிழின் இனிமை :– படுக்கையாகிவிட்ட பாட்டி ஒருத்தி தன் குமரிப் பருவத்தை மீள நினைவு கொண்டு பொக்கு வாயால் புன்னகை பூப்பது போன்று நானும் அன் றைய எம் வாழ்வும், வளமும், எழிலும், ஏற்றமும் கண்டு மன்னிக்கவும் எண்ணி எண்ணிப் புன் னகை பூப்பது உண்டு. போனது போனதுதான், புதுயுகம் அல்லவா பிறந்துவிட்டது, கறந்துவிட்ட பால் மீண்டும் முலைக்கேறுமா? இப் புதுயுகத்தின் போக்கையே என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை, இப்போ சட்டத்தரணி, மாவட்ட நீதிபதி, என்ற பட்டமும் பதவியும் காற்றோடு முகிலாகிக் கலைந்து போய்விட எஞ்சி நிற்பது 'விகடகவி' என்ற பட்டம் ஒன்றுதான். இப்பட்டத்தை விழா எடுத்து விமரிசையாகப் பொன்னாடை போர்த்தி புகழ்மாலை சூடிப்புனையப்படவில்லை. தெருவிலே என்னைக் கண்ட பழைய நண்பர் ஒருவர் நாலு பேர் மத்தியில் 'விகடகவியாரே' வாரும் என்றார். இது தம் விகடன் விநாயகனது விந்தை என்று அன்றிலிருந்து நானும் – "தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!" என்றபடி ஏற்றுக்கொண்டேன், விநாய கனின் மறுபெயர் தான் விகடன். எனவே இது உமக்கு உகந்ததென்று பின் ஒருநாள் ஆசியும் வழங்கினார் என்னூரவரான அருட்கவி ஐயா விநாசித்தம்பியார். இப்படித்தான் அடியேன் விகடகவியானேன். எனது திருநாமத்தைத் தாங்கிய வேறு கற்றுணர்ந்த கலைவாணர்களும் திருநாவுக் கரசு எனப் பெயர் சூட்டிக் கட்டுரைகள் வரைய அது வும் நானே என்று கருதி தொலைபேசியில் கட்டு ரைக்கு விளக்கமும் கேட்க முற்படுகையில் 'விகட கவி' ஆகி என்ர சுய பெயரில் நான் நடக்க முடிந் ததும் ஒரு வகையில் நல்லது தானே! அன்று வாழ்ந்த ஆசுகவி கல்லடி வேலனைப் பலருமே மறந்து விட்டகாலம் இது. அவர் விகடமாகப் பாடி யவை பலவும் பஞ்சாகப் பறந்துவிட்டன. அற்புதமான அந்த மனிதரை அவர் ஆக்கங்களை யார் தான் சேமித்து வைத்தார்கள். சிந்தைக்கினிய அவரது சிலேடைகள் மட்டும் இன்று சில்லறையாகப் பேசப்படுகின்றது. இனி இன்றைய நாட்டு நடப்பை அங்கொன்றிங்கொன்றாக ஆராய முற்படுகி றேன் ஐம்பது, அறுபதுகளில் நம் யாழ்ப்பாண மண்ணில் மாதம் எத்தனை விவாக இரத்துக்கள் பதிவாகின என்று பார்த்தால், மாதத்தில் நீதிமன்று ஒன்றில் ஓரிரண்டு விவாகங்களே இரத்தாகிப் போயிருக்கும். ஆனால் இன்றோ மாதத்திற்கு பதினைந்து என்ற கணக்கில் ஒரு ஆண்டில் மட்டும் நூற்று எண்பதிற்கும் மேலாக விவாகங்கள் இரத்தாகிய வண்ணம் உள்ளது. இது ஒரு நீதி மன்றில் என்றால் ஐந்து நீதிமன்றங்களையும் எண்ணிப்பாருங்கள். இதனைவிடக் கணவனால் கைவிடப்பட்ட காரிகைகள் கையில் குழந்தைகளை ஏந்திக் கண்ணீர் வடிக்கும் காட்சியோ நீதிமன்றங் களில் நிறையக் கிடக்கின்றன. இத்தனையும் நம் யாழ்ப்பாணத்தவர் நாகரீக உலகில் தாமும் தம் தடம் பதித்ததற்குச் சான்று பகருவதாகப் பட்டிமன்றத்தில் பேசவும் முற்பட்டு விட்டார்கள் நம் இளைஞர்கள் இப்படிப் பேசும் இளைஞர்களின் வாதப் பிரதி வாதங்களைக் கேட்டுத் தக்கபடி தீர்ப்பும் வழங்குவது என் தலைவிதியாகிவிட்டது.

இப்போ ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். ஆனால் இன்றைய குடும்பச் சீரழிவு பற்றி ஒரு நூறு உதாரணங்கள் சொல்லலாம். எங்கே இடம் கிடைக்கப்போகிறது–எப்போ? எங்கே? யாருடைய திருமணம் இப்படி எல்லாம் கேட்டு விடாதீர்கள். விகடகவி, விகடமாகவே மேற்கோள் காட்டுகின்றார்.

அன்று ஒரு திருமணம். இது அலங்காரத் திரு மணம். கல்யாணவீடு என்று சொல்லக்கூடாது. காரணம் – கல்யாணம் வீட்டில் இப்போ நடப்ப தில்லையே! இனிச் செத்தவீடும், வீட்டில் நடக்கப் போவதில்லை. எந்தக் கோயில் இனி "மறு உலகப் பிரவேச விழா" என்று கேட்கும் காலம் அண்மித்து விட்டது. யாராவது செத்த வீட்டு மண்டபம் கட்ட விரும்பினால் கட்டுங்கள் புது ஐடியா— திறப்பு விழாவிற்கு நிச்சயம் நான் பேருரை நிகழ்த்த வருவேன். விட்ட இடத்திற்கே வருகிறேன்.

கொழும்புப் பெண், சற்றே கொழுத்தவள் தான், கையில் பூமாலையோடு கடிதினில் ஓடி வருகின்றாள். பந்தயக் குதிரை ஓட்ட இடத்திற்கு வரும் பாங்கு அது – இவள் தலைகுனிய மறுக்க, தக்க தோழிகள் தலைகுனிய வைக்கின்றார்கள். நாட்பார்த்து நேரம் பார்த்து தாலிதான் முதலில் ஏறும். அது அந்தக் காலம். ஆனால் கண்ணா! உனை நான் அறிவேன், நான் காத்திராது உனக்கு ஒரு மாலை போட்டு மகிழ்கிறேன். தாலியைப் பின்கட்டிவிடு உன்னை முதலில் நான் தான் தீண்ட வேண்டும். பின் நீ தீண்டு – இப்படித்தானே நாம் பழகிவிட்டோம் என்பது போல் ஓடோடி வந்து மாலையைப் போடக் குருக்களும் குஷியாய் சிரிக்கிறார். ஆனாலும் அவர் முகம் கோணிப்போய்த் தான் தப்பித்துக் கொள்ள, கன்னி என்று பேசாமல் கன்னியாம், கன்னியாம் என்றே கர்ச்சிக்கின்றார்– பாவமந்த அந்தணர் பட்ட பாடு.

கூறை மாற்றி வந்த குலமகள் மணவறையில் குமட்டுகிறார். வாந்தி வந்து விடும் போலிருக்கு, என்ன இது என்று அங்கலாய்கிறார்கள் மாப்பிள்ளை வீட்டார். பெரியதாய்க்கு விளங்கி விடுகின்றது. கொழும்பு செவிண் பெண்ணல்லவா? காஸ் அடுப்பில் சமைத்தவருக்கு ஓமப்புகை அலேஜிக் என்று ஒரு போடு போட்டு நிலமையைச் சமாளிக்கின்றார். அந்தணர் கண்கள் பெண்ணின் அடிவயிற்றை அளவிட்டு நிற்கின்றது — திருமணம் முடிந்தது. குலமகள் ஏழாம் மாதத்தில் ஏழே இறாத்தலில் ஆண் மகவையல்லவா பெற்றுவிட்டாள். கொட்டான் பொல்லோடு கோட்டடிப் புறோக்கர் வீடு புகுந்து மிரட்டுகிறார்கள் – பாவி! மாபாவி!! என்னடா கல்யாணம் செய்து வைத்தாய், ஏழு மாதத்தில் ஏழு இறாத்தல் ஆண்பிள்ளை என்று அதட்டப் புறோக்கர் புன்சிரிப்பை அள்ளி வீசுகின்றார். — ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் – நீங்கள் பெண் பார்க்க வந்தபோது என்ன சொன்னேன். நினைவு உண்டா — "பெண்ணுக்கு முப்பது வயதும் மூன்று மாதமும்" என்று மீண்டும் மீண்டும் சொல்ல — நல்லது நல்லது என்று கூறித்தானே செய்தீர்கள் – மாப்பிள்ளை கோவிக்காது இருக்க உங்களுக்கேன் இந்தக் கோபம்? பொக்கற் ரேட்டைப் போட்டுக் காட்ட, கொட்டன் பொல்லையும் விட்டு, கொட்டடியையும் விட்டு மாப்பிளை வீட்டார் மறு கணமே சென்றனர் – இது தான் நவயுகத்துக் கல்யாணம், பட்டி மன்றத்தில் இதை முன்பு நான் பேசக் கேட்டிருப்பின் மன்னித்து விடுங்கள்.

அடுத்து வருவது அற்புதக் கசிப்பு மான்மியம். இது பற்றிக் காப்பியமே பாடி உள்ளேன். நான் சட்டத்தரணியாகச் சித்தியெய்திய காலத்தில், யாழ்ப்பாண நீதிமன்றுகளில் கள்ளு வழக்கு, "சீல்" சாராய வழக்கென்று, கிழடுகள் தலை காட்டும் – அக்காலத்தில் தெண்டமும் ஐந்நூறைத் தாண்டுவதில்லை. ஆனால் இன்று இந்தக் கசிப்பு வியாபாரம் ஒரு குடிசைக் கைத்தொழிலாகிவிட்டது. தெருவுக்கு தெரு ஒழுங்கைக்கு ஒழுங்கை கசிப்புத் தாராளமாகக் கிடைக்கின்றது. — கணவர் காய்ச்சி நல்க, மனைவியார் இதனை விற்று வாழ்க்கை நடத்தும் பாங்கு இன்று அதிகரித்தே வருகின்றது. நீதிமன்றுகளில் போய்ப்பார்த்தால் இந்த விபரீதக் காட்சியைக் காணலாம். நீதிமன்ற முதலியாரும் உரத்த தொனியில் பெயர்ப் பட்டியலை வாசிப்பார். திலகவதி, மங்கையற்கரசி, இராஜேஸ்வரி, புனிதவதி என்ற திருநாமங்களைக் கூப்பிட வரிசையாக வந்து இந்த மாதரசிகள் ஐம்பதினாயிரம், ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் எனக் கசிப்புக்குத் தெண்டம் கட்டும் காட்சி உள் மனத்தையே உறுத்தி நிற்கும். இதுதான் இன்றைய மாதர் மான்மியம் என்று காணும்போது அன்றைய மங்கயற்கரசியாரும், திலகவதியாரும், காரைக்கால் அம்மையாரும் வாழ்ந்த வாழ்வு மனதில் நிழலாடி மறைகின்றது.

நுளம்பை இனி எப்படி ஒழிக்க முடியாதோ அப்படியே கசிப்பு எனும் காச்சானும் நிலைத்து விட்டது. கண்டவற்றையெல்லாம் கலந்து காச்சும் இந்த நஞ்சை நயம்படத் தரமாக வடித்துத் தந்தால் ஒரு சமயம் பல உயிரைக்காவு கொள்ளும் கொடுமையை ஆவது குறைத்து —நம் நாட்டுக்குப் புதியதொரு குடிசைக் கைத்தொழிலைக் காட்டக் கூடாதா? என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. இப்படியாக நமது நாடும், நவயுக நங்கையும், நாளும் பொழுதும் கசிப்பினைக் காச்சி, நஞ்சினைப் பரப்பி, தாமும் பருகித் தாராளமாக விற்று, கணவன் மனைவி மாறி மாறிச் சிறை செல்ல வளர்ந்து வரும் குமரும், மது விற்றுக் குடிக்க வந்த குமர

னையே கைப்பிடித்து மகவு பெற்று, மணாளன் கைவிட்டுச் செல்ல விபச்சாரத்தில் ஈடுபடும் நிலை கண்டு அன்று எழுதிய பாடல் ஒன்றை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

கோடேறி அறியா நங்கை
 கொழுநனைத் தொழுது வாழ்ந்தாள்
வீடதே கோயிலாகக் கொண்டு
 வித்தகி வாழ்ந்தாள் அன்று
காடேகி கசிப்புக் காய்ச்சி
 கள்ளமாய் அதனை விற்று
சூடோடு சுண்டல் கடலை
 சுந்தரி வழங்கி விட்டு
கோடேறி தெண்டம் கட்டும்
 கொடுமையைக் கண்ட போது
நாடோ இது காடுதானோ
 நம்பிடவே முடியவில்லை

ஒரு புறம் ஒழுக்கம் கெட்டு மண வாழ்வே நரகமாகி விட மறுபுறம் கள்ளச் சாரயம் கசிப்பு இவை மனம் போல மாந்தும் மாதரசிகளும், கணவன்மாரும் நாட்டையே காடாக்கும் பாங்கும், கொலையும் கொள்ளையும், சமூக சீர்கேடும் தலை விரித்தாடும் இக்காலத்தில் எமது பண்டைய வாழ்வை எண்ணிப் பார்க்க யார் முற்படுகின்றார்.

அன்று வாழ்ந்த எமது நவாலியூர் சோம சுந்தரப் புலவரே இதனைத் தன் மனக்கண்ணில் கண்டு மனம் மிக நொந்து ஒரு பாடலைப் பாடி னார். அதில் சில வரிகளை இடம் போதாமையால் சுட்டிக் காட்டி விடை பெற விரும்புகிறேன்.

வேற்று மொழிதனைக் கற்போரும்
எங்கள் விலையான முது சொத்தை
விலை பேசி விற்றோம்
ஆற்றிலே புளி கரைத்திட்டோம்
எங்கள் அருமந்த தமிழினை நாம்
அறியாது கெட்டோம்
மெய் நெறிச் சுக வாழ்வு போச்சே
வீண் ஆரவார மினுக்குகள் ஆச்சே
முற் சங்கத்து அரியணை ஏறி
மன்னர் முடி கொண்ட மூவரும்
அடி தொட்டுப் போற்ற
விச்சையால் அரசாண்ட மாத
படும் இன்னலைத் தீர்க்க அறிவு வராதா?

இப்படிப் பாடினார் அன்றைய சோமசுந்தரப் புலவர். கலை இழந்தோம், பண்பிழந்தோம், பண்பாடுதான் இழந்தோம், நிலை இழந்தோம், தமிழர் தம் தனித்துவமான "முத்திரையை" இழந்துவிட்டோம். முத்திரை சிதைந்து போனால் எழுதிய கடிதம் கட்டிலே சேருமா? குப்பைத் தொட் டிக்கே போய்ச் சேரும். விலாசமும் முத்திரையும் அற்ற வெற்றுக் கடிதமாகி வருகின்றது. நம் ஈழத்து தமிழர் வாழ்வு. இதனைப் படிக்கும் அன்பர்கள் – சற்றே சிந்திப்பார்களாக. சினங்கொள்ளாது விடுவார்களாக. இனிச் சொல்லுங்கள் இது கட்டு ரையா? தமிழ்த்தாய்க்குக் கண்ணீர் அஞ்சலியா?

❖ ❖ ❖

- அழகான முகத்தின் மூலம் சிலரை மயக்கத்தான் முடியும். அழகான நடத்தையின் மூலமே எல்லோரையும் மதிக்கச் செய்ய முடியும்.

 – *கீப்ரெட் அலன்*

- யாருக்கு ஆலோசனை வழங்கினாலும் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக மட்டும் சொல்ல வேண்டாம். மாறாக அவர்களுக்கு நன்மையை உண்டாக்கும் வழிகளை மட்டுமே சொல்லுங்கள்.

 – *ஸோலான்*

# கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் வழங்கும் வாய்மொழி இலக்கியம் சில குறிப்புகள்

றமீஸ் அப்துல்லாஹ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

வாய்மொழி இலக்கியத்தின் பிரதான பண்பு வாயினால் பரப்பப்படுவதே எனப் பிரான்ஸிஸ் லீடீடி என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். வாய்மொழி இலக்கியத்தினைப் பாரம்பரிய விஞ்ஞானம் என்றும் குறிப்பிட்டுள்ளனர் (01).

"கி.மு 3 200 இற்கு முற்பட்ட எல்லா இலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களே. மொழி உருவானபோதே - மனிதஇனம் சிந்திக்கத் தொடங்கியபோதே வாய்மொழி இலக்கியமும் கருக்கொண்டது. முதலில் மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியமும் அதைத் தொடர்ந்து எழுத்து இலக்கியங்களும் தோன்றின. ஆயினும் செம்மை இலக்கியத்தின் தாய் வாய்மொழி இலக்கியமே. ஆகவே, ஒவ்வொரு மொழியினதும் ஆதிஇலக்கியம் வாய்மொழி இலக்கியமே. இதனால்த்தான் க.கைலாசபதி அவர்கள் சங்க இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்களே என்று வரையறை செய்கின்றார்" என சண்முகசுந்தரம் குறிப்பிடுகின்றார் (02).

மஜான் ஹெரால்ட் என்ற அறிஞர் வாய்மொழி இலக்கியத்துக்கு 05 முக்கிய பண்புகளைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

01) நாட்டுப்புற இலக்கியங்கள் எனப்படுவது, வாய்மொழியாகப் பரவுவது (Orality).
02) மரபு வழிப்பட்டது (Traditional).
03) பல்வேறு வகையாகத் திரிந்து வழங்குவது (Different vertions).
04) ஆசிரியர் இல்லாமை (Anonymous).
05) ஒருவித வாய்பாட்டுக்குள் அடங்குவது (Some kind of Formulated Structure).

இன்று வழங்குகின்ற வாய்மொழி இலக்கியத்தினைக் கொண்டு பின்வரும் சிறப்பியல்புகளை அல்லது பண்புகளைக் கண்டுகொள்ள முடிகின்றது.

01) இப்பாடல்கள் பலவகைப்பட்டதாய் அமைந்திருக்கும்.
உதாரணமாகக் காப்புப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள்.
02) பல்லினக் கலாசாரப் பண்பு கொண்டமைந்திருப்பது.
03) பல்வேறு வகையாகத் திரிந்து வழங்குவது.
04) செவிவழியாகப் பரவி வருவதோடு தற்காலத்தில் ஆசிரியரை இனங்காணக் கூடியதாக அமைந்திருப்பது.
05) பலவித வாய்ப்பாட்டுத் தன்மைக்குள் அமைந்து வருவது.
06) கலைகளோடுகூடி எழுந்த பாடல்களாகவும் வழங்குகின்றமை.

வாய்மொழி மரபில் ஆசிரியரை இனங்காணக் கூடியதாக இருத்தல் முக்கிய மாற்றமாகும். ஆனால், இந்த ஆசிரியரும் படிப்பறிவில்லாத பாமரரே. அதேவேளை எழுதப்பட்டுக் கையளிக்கப்படுகின்ற பாடல்களை SEMI ORAL அரைநிலை அல்லது ஓரளவு நிலைப்பட்ட வாய்மொழிப் பாடல் எனக் கா.சிவத்தம்பி விளக்குகின்றார். (03).

கிழக்குப் பிரதேசத்தில் வழங்கும் வாய்மொழிப் பாடல்களைப் பின்வருமாறு நோக்கலாம். கிழக்கு முஸ்லிம்களிடம் பெருவழக்குப் பெற்ற 'கவி' என்ற வடிவம். இது ஈரடிப் பாடலாக அமைவது. எதுகை மோனையும் ஓசை நயமுமுடையது.

"ஆலம் படைத்தவனே புகழ் எங்கும் ஆளும் றஹ்மானே
காலமும் உள்ளவனே கிருபையினால் காத்தருள் ஆண்டவனே"
"மையதீன் ஆண்டவரே பஃதாதில் உள்ளவரே
செய்யது ஒலி நாயகரே ஒரு சீர்பிழையும் வந்திடாமல்"

இவை "காப்புப் பாடல்" எனும் ஒரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும்போது இறைவனிடம் அல்லது இறைநேசரிடம் பாதுகாப்பு அல்லது அருள் வேண்டுவனவாகும்.

வாய்மொழிப் பாடல்கள் என்றால் காதற் பாடல்கள்தான் என்ற பிரக்ஞை கண்டு, நமது வாய் மொழி இலக்கியம் பற்றி எழுதிய பெரும்பாலானோர் இத்தகைய கருத்து நிலையினையே ஊட்டியுள்ளனர். A.P.V.தோமஸ் எழுதிய "அங்கமெல்லாம் நெறஞ்சமச்சான்", ஆ.மு.ஷரிபுதீனின் "கனிந்த காதல்", M.C.M. ஸுபைரின் "கண்ணான மச்சி"இ ஜுமுத்துமீரானின் "கிராமியக் கவியமுதம்" முதலானவையும் வீ.சி.கந்தையா, சு.வித்தியானந்தன் முதலானோரின் ஆரம்பகால எழுத்துகளும் கிராமிய இலக்கியத்தைக் "காதல் இலக்கியமாக" காட்டுவனவாகவே இருந்தன. அவ்வாறு வழங்கிய சில காதற் கவிகள் பின்வருமாறு.

"பூ வலைத் தோண்டி
புதுக்குடத்தை கிட்ட வைச்சி
ஆரம் உழுந்த கிளி
அள்ளுதுமா நல்ல தண்ணீ
அன்ன நடையே
அலங்காரப் பெண்மயிலே
உன்னாலே என்னுடம்பு
உருக்குலைந்து போகுதடி".

இக்காதற் கவிகள் பற்றி எம்.ஏ.நூர்ஹான் வேறுபட்ட பல கருத்துகளைக் கூறியுள்ளார். வழக்கிலிருந்து வரும் காதற் கவிகளுக்குக் கற்பிதம் கூறும்முறையில் இருந்து வேறுபட்டு அதன் சமூக சந்தர்ப்பம் பற்றி அவர் விபரிக்கின்றார். இக்கருத்துகள் ரமீஸ் அப்துல்லாஹ்வின் கிழக்கிலங்கைக் கிராமியம் எனும் நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (04).

இவை தவிர அதிகாரக் கொடுமை, ஊர்ச்சிறப்புப் பற்றிக்கூறும் பலபாடல்களும் வழக்கிலுள.

"வெள்ளி எரிஞ்சி
விளக்கடியில் விழுவதுபோல் – ஒன்ட
தலம தெறிச்சி
தல வாசலில் விழும்டா
அப்பம் சுடும் காத்தான் குடியார்
அவல் இடிக்கும் காரைதீவார்
முட்டி இடுக்கும் சம்மாந்துறையார்
முகப்பழக்கம் நிந்தவூரார்"

அரசியல் கட்சிகள் ஆட்சியமைப்புப் பற்றி வழங்கும் பல பாடல்களும் இப்பிரதேசத்தில் வழக்கில் இருந்துள்ளன.

"பாராளுமன்றத்தில் பட்டம் கட்டி வாழ்ந்துவந்த
பண்டார நாயக்காவை பாருங்க – அவன்ர
பொண்டாட்டி போற போக்க பாருங்க
சீ.ஏ.ய.சீச்சீ என்றான் பீ.ஏ.ய.விரும்பிக்கிட்டாள்
அகமதையும் சேர்த்துக்கிட்டாளே
அவள் ஆட்சிபீடம் அமைச்சிக்கிட்டாளே"

இவை தவிர புயல், மழை, அபிவிருத்தித் திட்டங்கள் (கல்லோயா காவியம்), பிள்ளை வேண்டுதல் (பிள்ளைக் காவியம்) முதலானவற்றை அடிப்படையாகக் கொண்ட காவியங்களும் எழுந்துள்ளன.

கும்மி, தாலாட்டு, கழிகம்பு, ஒப்பாரிப் பாடல்கள் பலவும் இப்பிரதேசத்தில் வழக்கிலுள. எடுத்துக் காட்டாக,

| | | |
|---|---|---|
| கும்மி : | கும்மியடி பெண்ணே கும்மியடி<br>குபிரோங்கி ஓடவே கும்மியடி<br>நம்மை ஆளு மிறையவனை நிதம்<br>நாடிக் கும்மி அடியுங்கடி | |

(எஸ்.முகம்மதுத்தம்பி ஹாஜி)

| | | |
|---|---|---|
| *தாலாட்டு :* | *ஆதி அருள் தூதர் ஆல நபியின் மகளார்*<br>ஜென்னத்து பீவி எங்கள் ஜெம்மல் அலி தேவியரின்<br>பேரெடுத்த எம்மகள் கருமம் முழுதும் ஒண்ட<br>கைவசம்டா என் ஆண்டவனேய். | |

(எஸ்.முகம்மதுத்தம்பி ஹாஜி)

| | | |
|---|---|---|
| கழிகம்பு : | பங்கய மொத்த முகத்துடயார் நாச்சி<br>பண்புக் கிணாங்கியதாய் யாரும்<br>சங்கயுடனதைச் செண்பகப் பூவெனச்<br>சாற்றிடுவார் தோழி என் தோழி<br>சாற்றிடுவார் தோழி | (எஸ்.முகம்மதுத்தம்பி ஹாஜி) |

| | | |
|---|---|---|
| ஒப்பாரி : | பிஸ்மில்லாஹி என்று நம்மட வேதத்தை முன்னிறுத்தி<br>முஸ்லிமுக்கு பாடுபட்டார் நமக்கு<br>முன்னுரிமை வேணும் என்று<br>அறிவு மரம் நாட்டி<br>அதன் இணலில் நாங்க குந்தி<br>பழமருந்தும் வேளயில - அல்லாஹ் நீ<br>பறிச்செடுத்துப் போட்டாயடா | |

(அகால மரணமடைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அக்ஷ்ரஃப் பற்றிய ஒப்பாரிப் பாடல்)

இவை தவிர கிழக்கு முஸ்லிம்களிடம் வாய்மொழிக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் எனப் பல வடிவங்களும் வழங்குகின்றன.

கிழக்கு முஸ்லிம்களிடம் வழங்கும் வாய்மொழி இலக்கிய மரபு மிக நீண்டதும் விரிவாக ஆராயப்பட வேண்டியதுமாகும்.

## பயன்பட்ட நூல்கள்


(01). இராஜரட்ணம்.எம்
ஆனந்தன்.வீ (1993) "மட்டக்களப்பில் வாய்மொழி இலக்கியம்"
மட்டக்களப்பு சாகித்திய விழாக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

(02). அதே கட்டுரை

(03). யோகராஜா.செ (2002) "ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு"
திருகோணமலை, பண்பாட்டுத் திணைக்களம்,
க.ப.வி.இ.விவகார அமைச்சு,
வடகிழக்கு மாகாணம்.

(04). றமீஸ் அப்துல்லாஹ் (2001) கிழக்கிலங்கைக் கிராமியம், கொழும்பு, மல்லிகைப் பந்தல்.


◆ ◆ ◆

## சமூக விஞ்ஞானம்

- அறிவின் வழியான சமூக மேம்பாடு - சாதனைகளும் சவால்களும்
- வறுமையும் அது எதிர்நோக்கும் சவால்களும் அவற்றைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளும், அபிவிருத்திச் செயற்பாடுகளும் - உடுவில் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்
- இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
- நிதிச் சந்தையின் அறிமுகமும் அதன் நடைமுறைகளும்
- சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவு முறைகள்
- வெளிநாட்டு வர்த்தகத்தில் வங்கிகளின் பங்கு
- வங்கிகளும் வாடிக்கையாளர்களும்
- ஆயுட் காப்புறுதி : அறிமுகம்
- அரச அலுவலகங்களின் இருப்பு முகாமைத்துவம்
- நாடுகளின் அபிவிருத்தியில் அரசுகளின் பங்கு
- பதிவாளர் நாயகத்திணைக்களமும் பிறப்புப் பதிவும்
- யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆதனச் சட்டங்களும் வழியுரிமைகளும்
- ஏழாலை வரைபடம்
- அபிவிருத்திப் பாதையில் சுன்னாகம்
- இலங்கையின் வடகீழ் மாகாணத்தில் மாற்றுச் சக்தி வளங்கள் - ஓர் புவியியல் நோக்கு
- இலங்கையில் சக்தி வளம் - சிறப்புப் பார்வை மின்சக்தி வளம்
- ஓசோன் படையின் அழிவு
- வால் நட்சத்திரங்கள்
- இலங்கைத் தமிழர் வரலாறு மீள் கண்டுபிடிப்பில் தொல்லியற் சின்னங்கள் பெறும் முக்கியத்துவம்
- யமுனா ஏரி - யாழ்ப்பாண அரசுகால நினைவுச் சின்னம்
- ஒலிம்பிக் வரலாறு பற்றிய ஓர் கண்ணோட்டம்
- தென்னாட்டின் மூல இசை மரபு - ஓர் ஆய்வு
- பண்டைத் தமிழர் இசைக்கருவிகள்
- பரதநாட்டியம் - ஒரு வரலாற்று நோக்கு
- பரத நாட்டியமும் இந்து சமயமும்
- நெக்டெப் திட்டமும் அதன் செயற்பாடுகளும்



# அறிவின் வழியான சமூக மேம்பாடு: சாதனைகளும் சவால்களும்

பேராசிரியர்
என். சண்முகலிங்கன்
*துணைவேந்தர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

'இன்றைய உலகம் அறிவு சார்ந்தது, இன்றைய வாழ்வியல் அறிவுசார் பொருளாதார வல்லமையின் வழியது எனப்படுகின்றது. வளர்ந்த நாடுகளிலிருந்து வளர்ந்துவரும் நாடுகள் வரை அறிவின் கையாளுகை என்ற செயல்வழி யாகவே மனித-சமூக மேம்பாடு என்பது விதியா கியுள்ளது. ஒருகாலத்து உடல் உழைப்பின் வழி தான் வாழ்வு என்ற வாழ்வியல் தத்துவத்தை இந்த அறிவுப்பொருளாதார ஒழுங்கு மாற்றியுள்ளது.

அறிவின் வழியான மாற்றம் என்பது தவிர்க்க முடியாத இயங்கியலாக பயன் கனிகளை உலகுக்காக்கியமை இன்றைய மனித நாகரிக வரலாறாகப் பதிவு பெறுகின்றது. புகழ்பூத்த சமூகவியலாளரான மாட்டின் ரோவ் (Martin Trow) அண்மைய தன் எழுத்தாக்கத்தில் குறிப்பிடுவது போல "அறிவு என்பது வெறுமனே நல்ல வரு மானத்தைத் தருகின்ற தொழில் தரும் சாதனமாக மட்டும் அமைந்திடவில்லை. பொருள் நலன்க ளுக்கு அப்பால் மனவளம், சமூகவளம் என்பவற் றினை வாரி வழங்குங்குவதாகவும் அமைகின்றது".

அறிவின் இந்தச் சமூகப் பயனாக மேம்பாடான அம்சங்களின் யதார்த்தம் எவ்வாறுள்ளது? அழகான மேம்பாடான உலகைப் படைப்பதில் அறிவுக்குள்ள இடத்தினை ஆராதிக்கும் அதே வேளையில் அறிவே இடராய் அறிவே புதிய புதிய பிரச்சினைகளின் ஊற்றுக் கண்ணாகவும் ஆகியுள்ளதா? அறிவுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உள்ள உறவின் பயணத்தில் சாதனைகள் பல கண்ட மனித சமுதாயம் சவால்களையும் கூடவே எதிர்கொள்கின்றன.

உலக அரங்கில் இன்று பெரிதும் விவாதிக் கப்படுகின்ற இவ்விடயம் எங்கள் கவனத்திற்கும் உரியது. நாளைக்கான திசையை நிர்ணயிப்பதி லும், செயல் திட்டங்களை வகுப்பதிலும் இந்த விடயம் தொடர்பான சிந்தனை இன்றியமை யாதது.

எங்கள் சிந்தனைக்கான பொருளில் இரண்டு முக்கியமான பதங்கள் உள்ளன. ஒன்று அறிவு, மற்றையது சமூக மேம்பாடு. இந்த இரண்டு பதங்கள் பற்றிய தெளிதலுடன் இவை ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவு தன்மையையும் நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

அறிவு பற்றிய பல்வேறு பரிமாணங்கள், விளக்கங்களை நாம் மனித சிந்தனை வரலாறு முழுமையும் காணமுடியும். அறிவொளிக்காலம் என இன்று நாம் இனங்காட்டும் enlight era விலிருந்தே விஞ்ஞான பூர்வமான அறிவின் எல்லைகள் பலவும் மனுக்குலத்தால் எட்டப்படும். மனிதனுக்கு அப்பாற்பட்டவை எனக் கருதப்பட்ட பல விடயங்கள் மனித வல்லமைக்கு உட்பட்ட மையாய் உணரப்படும்.

மனித மனமேம்பாடு, சூழல் பற்றிய தர்க்க சிந்தனை, அறிவியல் ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பன மனிதவல்லமை மீதான நம்பிக்கைக்கும் செயலுக்கும் கருவிகளாயின.

அறிவுக்கும் சமூகத்தின் மேம்பாட்டுக்கு மிடையிலான உறவின் விசாரணையினடியா கத்தான் நான் சார்ந்த சமூகவியல் துறையின் பிறப்பும் அமைந்தமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. சமூகம் பற்றிய விஞ்ஞான விசா ரணையாகச் சமூகவியல் என்ற அறிவுத்துறை யின் வரவு. சமூக ஒழுங்கு, வகுப்புகளுக்கிடை யிலான அசமத்துவம், முடியாட்சியின் மேலாதிக் கம், மாற்ற முடியாத உண்மைகள் எனும் நம்பிக்கைகள் புதிய சிந்தனைச் சூழலில் வலு விழந்தன. மனித உரிமைகள் சமூக உரிமை களினடியான சனநாயக ஒழுங்கு எனும் சமூக

வியல் சிந்தனை பகுத்தறிவின் அடியான சட்ட வாக்கம், அதன் வழியான புதிய சமூக ஒழுங்கு, மக்களின் சமூக, அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு வாழ்வில் புதிய உருமாற்றங்கள் எனும் பின்புலம்தான் கல்விக்கும் சமூக மாற்றத்திற்கு மான உறவுபற்றிய கவனிப்பும் முக்கியத்துவம் பெற்றது.

கல்வி மேம்பாட்டுக்கான தேசங்களின் முதலீடு, கல்வி வளர்ச்சி சார்ந்த கலைத்திட்டச் சீர்திருத்தங்கள், கல்வி விரிவாக்கம், கல்வி நிலையங்களுக்கும் அது சார்ந்த சமுதாயங் களுக்குமிடையிலான உறவுப் பிணைப்பின் அவசி யம் எனப் பல்வேறு குவிமையங்களில் கல்விக்கும் சமூக மேம்பாட்டுக்குமிடையிலான உறவுபற்றிய ஆய்வுகளும், மதிப்பீடுகளும் உலக அறிவுப்புல மெல்லாம் இன்று முக்கியத்துவம் பெறுகின்றன. பல வாதவிவாதங்கள் இந்த விடயத்தில் நீளவே நிகழ்கின்றன.

சமூக வாழ்வில் கல்விக்கான இடம் முதன்மை யானது. ஆனால் கல்வி சமூக மாற்றத்தின் சமூக மேம்பாட்டின் முகவராக உள்ளதா? தனியன்களி னதும், மேட்டுக் குடியினரதும் உயர்வுக்குக் கல்வி கைகொடுத்தது என்பது உண்மைதான். ஆனால் ஒட்டுமொத்தச் சமுதாயங்களினதும் மேம்பாட் டுக்கு வழிசமைத்ததா?

இந்த வினாக்கள் சமூக மேம்பாடு தொடர் பான தெளிந்த சமூகவியல் தரிசனத்திற்கு எங் களை இட்டுச் செல்வன.

'மேம்பாடு' (Development) என்ற பதம் இன்று பலராலும் பலவித அர்த்தங்களில் உச்சரிக்கப்படு கின்றது. அரசியல் வாதிகளிலிருந்து ஆய்வாளர் கள் வரை, வலதுசாரிகளிலிருந்து இடதுசாரிகள் வரை அவரவர் அவர்வழி என்றவாறு விளக்கங்கள் தரப்படுகின்றன.

நிலவும் மேம்பாடு தொடர்பான அத்தனை கருத்தியல்களையும் இரண்டு முக்கிய சிந்தனைக் குழுமங்களுக்குள் அடக்கிவிடமுடியும்.

1) மாக்சியர் அல்லாதோர் (non-marxist) அல்லது மாக்சிய எதிர்ப்பாளர் (Anti-marxist)

2) மாக்சிய வாதிகள் (Marxist);

சில அறிஞர்கள் முதல்வகையினரை முதலா ளித்துவ அல்லது சமூக நலநோக்கினராகவும், இரண்டாம் வகையினரைச் சமூக சமத்துவ நோக்கி னராகவும் குறிப்பிடவிரும்புவர்.

அறிவின் சமூக பயன்பாடுபற்றிய எந்த வொரு ஆராய்ச்சி, மதிப்பீடும் மேற்கண்ட கருத்து நிலை பற்றிய தெளிந்த ஞானத்தின் வழிதான் சாத்தி யமாகும். எங்களது இன்றைய விசாரணைக்கும் அதுவே வழிகாட்டியாகும்.

சமூக மேம்பாடு என்பதனை வாழ்க்கைத்தர மேம்பாடாக, சமூகத்தில் மக்கள் வாழ்வுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதாக முதல் வகையி னரின் நோக்கும், போக்கும் அமைந்துள்ளன. புகழ்பூத்த சமூகவியலாளர் மக்ஸ் வெபரிலிருந்து இன்றைய ஐ.நா சபை வரைவிலக்கணங்கள் வரை "கல்வி என்பது சமூக நலம் சார்ந்த வாய்ப்புக் களினை மேம்படுத்தல்" என்ற பொருளிலேயே விளக்கப்படும்.

சமூக ஒழுங்கு பேணப்படுதல் என்பதே மேம்பாட்டின் உயரிய குலமையமாக இவர்கள் கருத்தியலில் வெளிப்படும்.

மாக்சிய வாதிகளின் கருத்தியலோ, சமத்துவ விழுமியங்களினடியானது. இந்த வகையில் மேம்பாடு தொடர்பான கிம் (kim) என்ற அறிஞரின் வரைவிலக்கணம் எம் கவனத்திற்குரியது.

*"வாழ்வின் அனைத்துத் தளங்களிலும், குறிப்பாகச்சமூகப் பொருளாதார நீதி, பொருளாதாரச் செழிப்பு, அரசியல், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினைப் பெறமுடியாதபடி மறுக்கப் பட்ட மக்கள் எந்தளவுக்கு அவற்றினைக் கேட்கவும் பெறவும் முடிகின்றது என்பதனைப் பொறுத்தே சமூக மேம்பாடு".*

என்பது கிம் முன்வைக்கும் கருத்தியலாகும்.

இந்தக் கருத்தியல் குழுமங்களின் முரண்பாடு களை ஆக்கபூர்வமாகச் சிந்தித்துப் பொருத்தமான முறையில் புதிய சிந்தனைத் தடத்தில் அறிவின் பயனை சமூகத்திற்காக்குதலே இன்றைய கால அறிஞர் கடனாகிறது.

அறிவால் சமூக மேம்பாடு சாத்தியமான அனுபவங்களை, அறிவால் மனித நாகரிகம் கண்ட சாதனைகளை, நலன்களைப் பேணுகின்ற அதே வேளையில் இன்றுவரை சவாலாக உள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்துக்கான எங்கள் செயல்களை வடிவமைப்பது காலத்தின் கட்டாயமாகின்றது.

அறிவும் அதன் கையாளுகையும் இன்று யாருடைய தனியுடைமையாகவும் இல்லை என்பதிலுள்ள மகிழ்ச்சி எல்லையற்றது. சமூக அசைவுக்கான மிகப்பெரிய காரணியாகக் குறிப்பாக எங்கள் யாழ்ப்பாணச் சமூகத்தை எடுத்து நோக்கினால் எங்களுக்கான ஒரே ஒரு தொழிற்றுறையாகவே கல்வி அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஒருகாலத்தில் நிலமுள்ளவனுக்குத்தான் பொருள்வளம் என்பது போல பின்னாளில் கல்வி வழிதான் வாழ்வென்றானதும், அதன்வழி வாழ்வியலில் பல மாற்றங்களை நாங்கள் கண்டதும் அறிவுதந்த சாதனைகள் தான். இன்றைய சமூக விழுமியங்களை நிர்ணயிக்கும் பெரும் விசையான மத்தியதர வகுப்பின் உருவாக்கத்தின் பின்னாலும்கூட கல்வியின் பங்கும் பணியும் பெருமளவில் இருந்திருக்கின்றது. ஆனாலும் இந்த அறிவின் கனிகளை அனைவருக்கும் ஆக்கும் கனவுமட்டும் இன்னமும் நிறைவேறாத கானல் நீராய்த் தொடர்கின்ற உண்மையே இங்கு எம் கவனத்திற்குரியதாகின்றது.

சமூக வகுப்புக்கும் கல்வி அடைவுக்குமான இணைவை எங்கள் புலத்துச் சமூகவியல் ஆய்வுகள் உறுதி செய்வனவாகவே உள்ளன. எங்கள் கல்விக் கொள்கைகள், பாடசாலையமைப்பு, அது சார்ந்த வகைப்பாடுகள், நடைமுறைகள் யாவும் மனிதர்களுக்கிடையிலான, சமூகங்களுக்கிடையிலான இடைவெளிகளை மென்மேலும் அதிகரிப்பதாகவே உள்ளன. கல்வித்தத்துவம்வேறு, நடைமுறை வேறு என்பதாகவே செயன்முறைகள் தொடர்கின்றன. எத்தனை சீர்திருத்தங்கள் வந்த போதும் அடிப்படை மாற்றங்களை எட்ட முடியாமைக்கு என்ன காரணம்?

சுயமாய், எங்கள் சூழமைவுக்கு ஏற்ற கல்வித் திட்டங்களை நாம் வகுத்திருக்கவில்லை. காலனித்துவத்தின் நீட்சியாகவே எல்லாம் தொடர்ந்து. இன்னமும் நவ காலனித்துவமாய் எல்லாம் தொடர்கிறது. அதிகரிக்கும் பாடசாலை இடைவிலகல், இளையதலைமுறையினரின் அமைதியின்மை என நீளும் சமூகப் பிரச்சினைகளுக்குப் பின்னால் பொருத்தப்பாடில்லாத கல்வி நடைமுறைகளினதும் அநீதியான மேலாண்மைகளினதும் கரங்களைக் காணமுடிகிறது. இவற்றுக்கு மேலாகத் தனியார் மயமாக்கம், உலக மயமாக்கம் என்ற புதிய தத்துவ விளக்கங்களிடை அறிவை வியாபாரப் பண்டமாக்கி அதற்குள் இளையதலைமுறையினரின் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம். தேசங்களின் வாழ்வும் வளமும் இதன் வழி வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மீளவும் விஷவட்டமாய்ப் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை நிறுவுதலாகவே பல கல்வி விரிவாக்கங்கள் முடிந்து போகின்றமை பற்றிய அச்சம் இன்று பெரிதும் உணரப்படும்.

மேம்பட்ட மனிதனை, அறிவார்ந்த நவீன மனிதனைத் தேடும் ஆராய்ச்சி என்பது வெறும் சந்தை ஆராய்ச்சியாக, சந்தையை மையமாகக் கொண்ட நுகர்வோரைத்தேடும் முயற்சியாகப் போகின்றமை பற்றிய விழிப்புணர்வு இன்றைய எம் முதல்தேவையாகின்றது.

கூடவே இன்றைய அறிவின் முகாமைத்துவம் அதன் முகாமைத்துவத்துடன் இணைந்த அறிவின் அரசியல் பற்றிய விடயங்களும் எங்களின் குறிப்பான கவனத்திற்குரியனவாகின்றன.

அறிவின் பெயரால் எங்கள் அறிவுக்கூடங்களில் கற்பிக்கப்படும் கலைத்திட்டங்கள் எந்தளவுக்குச் சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்கு வழிசமைப்பனவாக உள்ளன? எங்களது வகுப்பறைச் செயற்பாடுகள் பிள்ளைகளின் ஆக்கத்திறனான, சமூகப்பயனான செயல்வீரத்துக்கும் வழிசமைப்பனவாக உள்ளனவா?

இவற்றுக்கான விடைகளைத் தேடும்போது எங்களுக்கு ஏற்படுகின்ற விரக்தி நிலைகளின் புரிதலில் நாங்கள் கண்ட வெற்றிகளினதும், தோல்விகளினதும் பாடங்களிலிருந்து தான் எமது

எதிர்காலத்துக்கான பயணத்தின் செந்நெறி அமையவேண்டும்.

வேகமான அறிவியல்புரட்சி, தொழில்நுட்ப மறுமலர்ச்சிகளிடையே உலகம் சுருங்கியதான தத்துவங்களுக்குள் மகிழ்ச்சி கொள்கின்றோம். அதேவேளை சமுதாயங்களைத் தொலைத்த குறுகிய தனிமனித வாதங்களுக்குள் மனிதம் யந்திரமாகிய நிலைமைகளை விளங்கிக்கொள்ள விருப்பம் இல்லாமல் இருக்கின்றோம். விரும்பி னாலும் விளங்க நேரமில்லாமல் அலைந்து திரிகின்றோம். அறிவாராய்ச்சியின் உன்னதக் கண்டுபிடிப்புகளில் ஒன்றான அணுகுண்டின் பிறப்புக்குக் காரணரான ஜன்ஸ்ரீன் அதன் இன்றைய பாவனை தொடர்பாக நொந்து வருந் தியதான நிகழ்வுகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தகவல் தொழில் நுட்பப் புரட்சியின் வரவான தொலைக்காட்சி மற்றும் தகவல் வலைப்பின்னல்களிடையே யதார்த் தங்களை மறுத்துக் கனவுலக யதார்த்தமென ஆராதிக்கின்றோம். அறிதல் இல்லாத செயல் இன்றைய தகவல் யுகத்தின் உள்கட்டமைப்பாகி யுள்ளது. இதன் விளைவாகவே இன்று எழுத்தறி வுக்கான எங்கள் ஏக்கம் ஊடக அறிவுக்கான ஏக்க மாகவும் விரிவாக்கம் பெற நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

இன்றைய உலகமயமாக்க அலைகளிடை சுதேசப் பண்பாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கொஞ்சமல்ல. அறிவியலின் பெயரால், அறி வியல் தொழிநுட்ப வல்லமையின் பெயரால் 'உலகளாவச் சிந்தி உள்ளூர்த்தனமாய்ச் செயல்படு' (think globally, act locally) எனும் பொன்மொழிகளுடன் சுதேச அறிவுப் பண்பாட்டி னைத் தனித்துவமாய் அவை வளர்த்தெடுத்த சமு தாய விழுமியங்களைத் தாழநோக்கும் முயற்சி களைச் சந்திப்பதற்கான ஊடக அறிவு பற்றிய விழிப்புணர்வு இன்றியமையாததாகின்றது.

இந்தப் பொழுதில் அறிவின் வழியான சமூக மேம்பாடு தொடர்பாக நாங்கள் சிந்தித்த ஒவ்வொரு அம்சங்களைப் பற்றியும் நாம் நீள உரையாட வேண்டும். எங்கள் கவனத்திற்குட்பட்ட விடயங் கள், வினாக்களில் சில கல்வியாளர்களாகிய எங்களின் எல்லைகளுக்குள் உள்ளன. பல எங்களைக் கடந்த சமூக அரசியல் பண்பாட்டு புலங்களுக்குள் உள்ளன. இந்நிலையில் தனித் தும் கூட்டாகவும் இந்தவிடயம் தொடர்பான கருத் துப்பரிமாற்றங்களைச் செய்து காத்திரமான முடிவு களை நாம் ஊட்டுவது இன்றியமையாதது.

கல்வியாளர்களுக்கு அப்பாலான விடயங் களில் எங்கள் அறிவு வல்லமையென்ற தகுதிப் பாட்டுடன் நேரான திசைநோக்கிய அறிவின் சமூ கப்பயன்பாட்டினை உறுதிசெய்வதற்கான எடுத் துரைப்புகளை நாங்கள் செய்ய வேண்டியதும் அவசியமானது.

என்றும் எனக்குள் ஒளியாய் இருந்து என் சிந்தனையை வழிப்படுத்துகின்ற மகாகவி ரவிந்திரநாத் தாகூரின் பின்வரும் 'கீதாஞ்சலி' கவிதையடிகளுடன் இந்தக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

எங்கே மனம் அச்சமற்று திகழ்கிறதோ
எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ
எங்கே அறிவு சுதந்திரமாக இருக்கிறதோ

குறுகிய சாதி சமயப் பிளவுகளாய்
எங்கே உலகம் உடையாமல் இருக்கிறதோ
எங்கே உண்மையின் அடியாழத்திலிருந்து
சொற்கள் உதிக்கின்றனவோ

எங்கே தளராத முயற்சி
பூரணத்தை நோக்கிக் கை நீட்டுகிறதோ
தெளிந்த பகுத்தறிவு நீரோடை
மூடப்பழக்க வழக்கம் பாலை மணலில்
பாய்ந்து வற்றாமல் எங்கே இருக்கிறதோ

என்றென்றும் விரிந்து செல்லும்
எண்ணத்தை செயலை நோக்கி
என் உள்ளத்தை

எங்கே உன்னருள் அழைத்துச் செல்கிறதோ
அந்தச் சுதந்தரச் சுவர்க்கத்தில்
என் தந்தையே
எனது நாடு விழித் தெழுவதாக.

* * *



# வறுமையும், அது எதிர்நோக்கும் சவால்களும், அவற்றைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளும், அபிவிருத்திச் செயற்பாடுகளும்


**திருமதி மஞ்சுளாதேவி சதீசன்,**
பிரதேச செயலாளர்,
வலிதெற்கு உடுவில்.


## உடுவில் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கி ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்.

வறுமை என்பது உலகளாவிய ரீதியிலே முக்கியப்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு கருப்பொருளாகும். அதாவது வறுமை என்பது ஆகக் குறைந்தளவு வருமான மட்டத்தைக் குறிப்பிடுகின்றது. அதாவது ஒருவர் ஒழுங்கானதும், செம்மையானதும், நெறிமுறைக்குட்பட்டதுமான வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் இருப்பதையே வறுமை என்பது குறிப்பிடுகின்றது.

உலக ரீதியிலே வறுமைக் கோட்டின் எல்லையாக ஒருவர் ($2) 2 டொலரிலும் குறைந்த வருமானத்தை நாளொன்றிற்குப் பெறுவதைக் குறிப்பிடுகின்றது. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு குடும்பத்தின் மாதாந்த வருமானம் 1500 ரூபாவிற்குக் குறைவாக இருப்பின் அவ் எல்லையை வறுமைக் கோட்டு எல்லையாகக் குறிப்பிடப்பட்டு அக்குடும்பம் வறுமை நிலையிலுள்ளது எனக் கொள்ளப்படுகின்றது.

ஆனால், வறுமை என்பது தனித்து வருமானத்தில் மட்டும் தங்கியிருப்பதில்லை. வறுமை என்பது குறைந்த கல்வி நிலை, சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கியத்தின் அளவு என்பவற்றிலும் தங்கியுள்ளது.

உலகப் பொருளாதாரங்களில் அவதானிக்கப்பட்டதின்படி வறுமையை இரண்டு வகையாகப் பிரிக்கமுடியும்.

01) சார்புநிலை வறுமை / ஒப்பீட்டு வறுமை
02) முழுநிலை வறுமை

சார்புநிலை வறுமை என்பது ஒரு தனிமனிதனானவன், சமூகத்தில் இன்னொருவர் வாழ்வது போன்று தனது அந்தஸ்தினையும், சகல நலன்களையும் அனுபவித்துச் செல்வதற்கான வருவாய் இல்லாத நிலையினைக் குறிக்கின்றது. அதாவது வெவ்வேறுபட்ட வருமானப் பிரிவினரிடையில் ஒப்பிட்டுக் கூறப்படும் வறுமையேயாகும். முழுநிலை வறுமை என்பது தொடர்ந்து உயிர் வாழ்வதை உறுதிப்படுத்தக்கூடிய அடிப்படைப் பௌதிகத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்பவற்றை நிறைவு செய்வதற்கான குறைந்தபட்ச வருமானத்திலும் கீழான வருமானத்தைக் கொண்டிருத்தலாகும். உதாரணமாக, ஒரு நபர் ஒரு நாளொன்றிற்கு 2500 கலோரி அல்லது 40 கிராம் புரதம் உட்கொள்ளக் கூடியளவுக்குப் போதுமான வருமானத்தைக் கொண்டிராத நிலையினைக் குறிப்பிடலாம்.

வறுமைக்கான காரணங்களை நோக்குவோமாயின்,

01) அதிகளவு சனத்தொகை.
02) அதிகளவு குடும்ப உறுப்பினர்கள்.
03) அதிகளவு தங்கியிருப்போர்.
04) பற்றாக்குறைக் கல்விநிலை.
05) வேலையின்மை.
06) சீரற்ற வளப்பகிர்வு.
07) கூடியளவு வாழ்க்கைச் செலவு.
08) பொருளாதாரப் பிரச்சினைகள்.
09) வருமானப் பற்றாக்குறை.

போன்ற பல்வேறு காரணிகளை நாம் குறிப்பிடலாம்.

யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறுமை நிலைக்குட்பட்டோர் எண்ணிக்கை தற்காலப் பகுதியிலே அதிகமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது இடப்பெயர்வுகள், A9 பாதை பூட்டப்பட்டமை, பொருள் தட்டுப்பாடுகள், வேலையின்மை போன்ற பல்வேறு பொருளாதார மற்றும் வாழ்க்கைத்தர நெருக்கடிகளால் மக்கள் மேலும் மேலும் வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

குறிப்பாக இங்கு உடுவில் பிரதேசம் அதாவது, வலிகாமம் தெற்குப் பகுதியை எடுத்துநோக்கு வோமாயின், கூடுதலான அளவு மக்கள் முழுவறுமை நிலையில் இருப்பதனை நாம் அவதானிக்கலாம். வேலையின்மை, கீழுழைப்பு, போதிய உணவின்மை என்னும் நிலையை இங்கு காணக்கூடியதாக வுள்ளது.

உடுவில் பிரதேசமானது 30 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட ஒரு பெரிய பிரதேசமாகும். உடுவில், சுன்னாகம், கந்தரோடை, தாவடி, இணுவில், ஏழாலை, ஈவினை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் போன்ற பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேசத்தின் தற்போதைய சனத்தொகை 50 345 ஆகவும், மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 17 067 ஆகவும் காணப்படுகின்றது. மேலும், இவ் எண்ணிக்கையுள் தெல்லிப்பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் 3292 குடும்பங்களை உள்ளடக்கிய 11301 அங்கத்தவர்களும் அடங்குவர்.

அதாவது தெல்லிப்பளைப் பிரதேசத்திலிருந்து யுத்தப் பாதிப்பினால் வீடுகள், உடைமைகள் என்பவற்றை இழந்து உடுவில் பிரிவில் 15 நலன்புரி நிலையங்களில் 518 குடும்பங்களைக் கொண்ட 1980 பேர் வசிப்பதுடன் நண்பர்கள், உறவினர்களுடன் 2115 குடும்பங்களைக் கொண்ட 6988 பேர் வசிக்கின்றனர். நலன்புரி நிலையங்களின் விபரம் வருமாறு.

**11.08.2006 இற்கு முன் இடம்பெயர்ந்தோர் (நலன்புரி நிலையங்கள்)**

| எண் | பெயர் | விலாசம் | கி.சே.பிரிவு | குடும்ப எ/கை | அங்கத். எ/கை |
|---|---|---|---|---|---|
| 01 | மட்டக்கச்சி | உடுவில் | J/184 | 12 | 42 |
| 02 | ஆலடி | உடுவில் | J/185 | 17 | 65 |
| 03 | இலந்தையடி | உடுவில் | J/185 | 31 | 116 |
| 04 | பழைய நீதவான் இல்லம் | உடுவில் | J/185 | 22 | 85 |
| 05 | சிந்து | சங்குவேலி | J/187 | 09 | 29 |
| 06 | தளிர் | சங்குவேலி | J/187 | 21 | 93 |
| 07 | புகையிரத நிலையம் இணுவில் | இணுவில் | J/190 | 32 | 112 |
| 08 | இணுவில் மில் | இணுவில் | J/190 | 13 | 57 |
| 09 | சபாபதிப்பிள்ளை | சுன்னாகம் | J/196 | 141 | 492 |
| 10 | பெரிய மதவடி | சுன்னாகம் | J/196 | 32 | 129 |
| 11 | கண்ணகி | சுன்னாகம் | J/196 | 86 | 374 |
| 12 | புகையிரத நிலையம் சுன்னாகம் | சுன்னாகம் | J/197 | 33 | 117 |
| 13 | பிள்ளையார் | சுன்னாகம் | J/199 | 43 | 178 |
| 14 | இக்கிரானை I | கந்தரோடை | J/200 | 17 | 61 |
| 15 | இக்கிரானை II | கந்தரோடை | J/200 | 09 | 30 |
| | **மொத்தம்** | | | **518** | **1980** |

| 2008 செப்ரெம்பர் மாத சனத்தொகையும், நிவாரண விபரங்களும் | | |
|---|---|---|
| வகை | குடும்ப எ/கை | அங்கத்தவர் எ/கை |
| **புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிவாரணம்**<br>11.08.2006 இற்குமுன் இடம்பெயர்ந்தோர் | 2 612 | 8 815 |
| உலக உணவுத்திட்ட நிவாரணம்<br>11.08.2006 இற்குப்பின் இடம்பெயர்ந்தோர்<br>பொருளாதாரப் பாதிப்புள்ளோர் நிவாரணம்<br>மொத்த உலக உணவுத்திட்ட நிவாரணம் பெறுவோர் எண்ணிக்கை | <br>128<br>3 657<br>3 785 | <br>386<br>10 073<br>10 459 |
| சமுர்த்தி நிவாரணம் பெறுவோர்<br>சமுர்த்தி நிவாரணம் | <br>5 935 | <br>15 672 |
| பொருளாதாரப் பாதிப்பு நிவாரணம்<br>பெறத் தகுதியானோர் (நிவாரணம் கிடைக்காதோர்) | <br>977 | <br>3 164 |
| உயர்வருமான மட்டத்தை உடையோர்<br>அரச உத்தியோகத்தர்கள்<br>அரச உத்தியோகமல்லாத ஏனைய ஊழியர்கள்<br>மொத்த உயர்வருமானம் பெறுவோர் | <br>1967<br>1791<br>3 758 | <br>6 451<br>5 724<br>12 175 |
| **மொத்தச் சனத்தொகை** | 17 067 | 50 345 |

எனவே எமது பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு உலர் உணவு நிவாரணங்களாக,

| | குடும்பங்கள் | அங்கத்தவர்கள் |
|---|---|---|
| இடம்பெயர்ந்தோர் நிவாரணம் | 2 612 | 8 815 |
| உலக உணவுத்திட்ட நிவாரணம் | 3 785 | 10 459 |
| சமுர்த்தி நிவாரணம் | 5 935 | 15 672 |
| | **1 2 3 32** | **3 4 9 46** |

எனும் நிவாரணங்களை மொத்தம் 12 332 குடும்பங்களைச் சேர்ந்த 34 946 பேர் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் நிவாரண அளவுகளிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக அதாவது சமுர்த்தி முத்திரைகளின் பெறுமதி 250/=, 350/=, 615/=, 1015/= எனும் அளவுகளிலிருக்க உலக உணவுத் திட்ட நிவாரணம் ஓரளவு பெறுமதி கூடியிருப்பது இவர்களிடையே சார்பளவு வறுமையைக் கூட்டுவதாக அமையினும், இவற்றினூடாக வறுமைத் தணிப்பு ஓரளவு ஏற்படுத்தப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

அடுத்து நாம் மாதாந்த உதவிப் பணத்தை எடுத்துக் கொள்வோமாயின் பெண்களைத் தலைமைத் துவமாகக் கொண்ட குடும்பங்கள், தனிநபர்கள், முதியோர்கள், புற்றுநோய் மற்றும் காசநோய்ப் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. விபரம் வருமாறு.

| வகை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01. பொதுசன மாதாந்த உதவிப்பணம் (வறுமை) | 2132 |
| 02. காசநோய்க் கொடுப்பனவு | 13 |
| 03. புற்றுநோய்க் கொடுப்பனவு | 64 |
| 04. தலசீமியா (லெப்பெரிசி) கொடுப்பனவு | 02 |
| 05. ஏனையவை | - |
| **மொத்தம்** | **2 211** |

இவை மாத்திரமன்றி, அங்கவீனர்களுக்கான மாதாந்த உதவித் தொகைகள்:-

- முதியோருக்கான ஓய்வூதிய நடவடிக்கைகள் (விவசாயிகள் ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம்)
- விதவைகளுக்கான கொடுப்பனவுகள்.
- மூக்குக்கண்ணாடி, முச்சக்கர வண்டி, காதுகேட்கும் கருவி பெற்றுக் கொடுத்தல்
- பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள். (உடை, இலவசக் கல்வி, உணவு வழங்கல், புத்தகம்)

என்பன வழங்கப்படுவதுடன் சமுர்த்தித் திட்டத்தில் பயன்பெறும் வறியவர்களுக்குச் சமுர்த்தித் திட்டத்தினூடாகப் பின்வரும் நன்மைகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- குறுகிய காலக் கடன் (சுயதொழில் முயற்சி, கல்வி போன்றவற்றிற்காக).
- திருமணத்திற்கான கொடுப்பனவு.
- க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான புலமைப் பரிசில்கள்.
- மரணச் சடங்கிற்கான கொடுப்பனவு.
- இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவு.
- விவசாய உள்ளீடுகள் வழங்குதல்.
- வீட்டுத் திருத்தங்கள், திட்டங்கள் வழங்குதல்.
- கிணறு, மலசல கூடங்கள் அமைத்தல்.
- குழுவான சுயமுயற்சிச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- சேமிப்பை ஊக்குவித்தல்.

போன்ற பல்வேறு திட்டங்களை உள்ளடக்கி, சமுர்த்தித் திட்டமானது இணுவில் மற்றும், சுன்னாகம் சமுர்த்தி வங்கிகளையும் உள்ளடக்கிப் பாரியளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய சமுர்த்திச் செயற்பாடுகளினூடாகச் சமுர்த்தி வங்கிகளினூடாகக் கிடைக்கப்படுகின்ற இலாபமானது ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைக் கிராமங்களூடாக முன்னெடுக்கப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

அடுத்து நாம் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கொள்வோமாயின் வடக்குக் கிழக்கு வீடமைப்புத் திட்டத்தினூடாகப் (NEHRP) பாரியளவில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். உடுவில் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் 2005ஆம் ஆண்டிலிருந்து 2008ஆம் ஆண்டுவரை பின்வரும் கிராமங்களை உள்ளடக்கிய வகையில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. விபரம் வருமாறு,

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் கிழக்கு, ஏழாலை மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை வடக்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை மத்தி, இணுவில் வடகிழக்கு, சங்குவேலி, சுன்னாகம் மத்தி,

சுன்னாகம் வடக்கு, தாவடி வடக்கு, குப்பிளான் வடக்கு, குப்பிளான் தெற்கு என்னும் கிராமங்களில் போரினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டு வீழ்ழுந்த வறியவர்களை முன்னுரிமைப்படுத்தி கட்டம் - I, கட்டம் - II, கட்டம் - III, எனும் வகையில் மொத்தமாக 638 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான கொடுப்பனவாகக் கட்டம் - I, கட்டம் - IIஇல் தெரிவு செய்யப்பட்டோருக்குத் தலா 250 000 ரூபாவும் கட்டம் – III இல் தெரிவுசெய்யப்பட்டோரிற்குத் தலா 325 000 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இவற்றுடன் வீடுகள் திருத்தம் செய்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டோருக்குத் தலா 100 000 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. கட்டம் - IVஇல் ஏழாலை மத்தி, உடுவில் வடக்கு என்னும் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மேலும் "கமநகும" எனும் திட்டத்தினூடாகவும் வீட்டுத் திட்டங்கள், மலசலகூடங்கள், கிணறுகள், வீதிகள், பொது மண்டபங்கள் என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மீள்எழுச்சித் திட்டத்தினூடாக மாதிரிக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு மக்களினுடைய வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவை மாத்திரமன்றி காலத்திற்குக் காலம் சமூகசேவை அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்ற சுயதொழிலுக்கான உதவித்தொகைகள், வீட்டுத்திட்டக் கொடுப்பனவுகள், மருத்துவ உதவிக்கான கொடுப்பனவுகள், அங்கவீனர்களுக்கான கொடுப்பனவுகள் என்பவற்றுடன் மகிந்த சிந்தனைத் திட்டத்தினூடாகவும் இவ்வாறான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை அரச சார்பற்ற நிறுவனங்களான போரூட் (Forut), லீட்ஸ், ஜீ.ரீ.சற் (G.T.Z), சாந்திகம், ஜெசாக், யுனிசெப் (UNICEF), யு.என்.எச்.சி.ஆர் (UNHCR), TRRO, சிறுவர் பாதுகாப்பு நிதியம், வைற்குறோ, கரித்தாஸ் கியூடெக் போன்ற பல்வேறு நிறுவனங்கள் உணவு மற்றும் உணவல்லா உதவிகள் என உடை, உறையுள், நீர்வசதி, மலசலகூட வசதி, பாடசாலை உபகரணங்கள், சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள், உளவியல் ரீதியான கருத்தரங்குகள் என்பனவற்றை வழங்கி வருகின்றன.

எனவே நாம் இத்தகைய செயற்பாடுகளினூடாக எமது பிரதேச வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்களிடையேயுள்ள வருமானச் சமமின்மையை நீக்கி உயர்வருமான மட்டத்தை அடையச் செய்வதற்கு நீண்டகாலம் எடுக்குமென்றே கூறலாம்.

எனினும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இத்தகைய உதவிகளைப் பிரதேச செயலகங்களினூடாக மக்கள் பெற்று, அதனூடாக அவர்கள் தமது வறுமை நிலையிலிருந்து எதிர்காலத்தில் உயர் வருமானமுள்ளவர்களாக வருவது ஒவ்வொருவரதும் முயற்சியின் அளவுகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது எனக்கூறலாம்.

❖ ❖ ❖

நாம் சிரிக்கும்போது நம் முகத்தில் 17 தசைகள் இயங்குகின்றன. கோபம் வந்தால் 43 தசைகள் இயங்குகின்றன. எனவேதான் கோப உணர்ச்சி நம்மை மிகவும் பாதிக்கின்றது.



# செஞ்சிலுவைச் சங்கம்
# Red Cross Society

**பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்** J. P.
**B.Sc.Hons.(Ceylon),M.Sc.(Hawaii),**
**Ph.D. (London), Hon.D.Sc.(Sri Lanka),**
தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை.

## 01. முகவுரை (INTRODUCTION):

உலகளாவிய ரீதியில், பயங்கர விளைவுகளை ஏற்படுத்தி வருகின்ற யுத்தம், பூமியதிர்ச்சி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் பாதிப்புற்றுத் துன்பக்கடலில் தத்தளிக்கின்ற மக்களுக்கு அங்கெல்லாம் ஓடிச்சென்று மனிதாபிமான முறையில் உயிர்க்காப்பை முதற் தொண்டாகக் கைக்கொண்டு பல நன்மைகளை மக்களுக்குச் செய்துவரும் ஒரு தொண்டு நிறுவனம் தான் செஞ்சிலுவைச் சங்கம். இன்று மனித வாழ்வையும், கௌரவத்தையும் பாதுகாக்கும் ஒரு முக்கிய நிறுவனமாக (protecting human life and dignity) பரந்துபட்ட நிலையில் 191 நாடுகளில் தனது பணிகளை, சுவிஸ்சிலாந்து நாட்டு தலைநகராம் ஜெனீவாவில் தலைமையகத்தைக் கொண்டு ஆங்காங்கே செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமானச் சேவைகளை நலிந்த மக்களுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நல்கி வருகின்றது. யாழ் கிளை மிகக் கஷ்டமான காலகட்டத்தில் மனிதாபிமானச் சேவைகளை நடாத்தி வந்ததன் காரணமாக, நலிந்து போன மக்கள் நன்மையடைந்துள்ளார்கள். குறிப்பாக யாழ் குடாநாட்டில் 1958 தொடக்கம் இன்றுவரை தொடர்ந்து வரும் அனர்த்தங்களில் மக்களுக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்து வந்துள்ளது கண்கூடு.

## 02. இச்சங்கத்துக்கு வித்திட்டவர் (THE ORIGINATOR):



- ஹென்றி டுனன்ட் -


செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வித்திட்டவர் **ஜீன் ஹென்றி டுனன்ட்** ஆவார். இவரை இச்சங்கத்தின் “தந்தை” எனவும் அழைப்பர். இவர் 1828ம் ஆண்டு மே மாதம் 08ம் திகதி சுவிஸ்லாந்து நாட்டின் தலைநகர் ஜெனீவாவில் பிறந்தார். 1859ம் ஆண்டு தனது வர்த்தக நோக்கமாக லம்பேர்டி ஊடாக இத்தாலிக்குப் பயணமானார்.



1859ம் ஆண்டு சித்திரை மாதம் 24ம் திகதி இத்தாலி நாட்டு மன்னரின் உதவியுடன் பிரான்ஸ் மன்னன் 3வது நெப்போலியன் ஒஸ்ரேலியர் மீது போர் தொடுத்தான். இதனால் இத்தாலியின் வடக்கு எல்லையான சல்பெரினோவிலும் சண்டை மூண்டது. அப் போரில் 15 மணித்தியாலங்களில் 40,000க்கும் அதிகமான படைவீரர்கள் கொசுக்கள் போல் காயமடைந்தும் இறந்தும் காணாமல் போயுமுள்ளனர். போதிய முதலுதவிச் சிகிச்சை அளிக்காதபடியினால் இவ்வளவு பெரும் தொகையினர் இறக்க நேரிட்டதைப் பார்த்து அவர் அதிர்ச்சியடைந்தார்.

தனது நாட்டுக்குத் திரும்பிய ஹென்றி டுனன்ட் போர்க்களத்தில் கண்ட அனுபவங்கள் பற்றியும், போரில் ஏற்கனவே காயத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றி ஒரு சர்வதேச உடன்படிக்கை வேண்டுமெனவும் இனசன அரசியல் வேறுபாடின்றி ஒவ்வொரு நாட்டிலும் போர்க்காலங்களில் சிகிச்சையளிக்கத் தொண்டர்படை ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கூறினார். ஹென்றி டுனன்ட் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் அமைப்பை உருவாக்குவதற்குத் திட்டமிட்டார். 16

நாடுகளைச் சேர்ந்த அரசியல் நிபுணர்கள் 1883ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஜெனிவாவில் கூடினர். ஹென்றிடுனானின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஜெனீவாவைச் சேர்ந்த ஹென்றி டுனான் முக்கியத்தவராக அங்குள்ள வேறு சில சேவையாளர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து இன்று 191 நாடுகளிலும் சிறப்பாக இயங்கி வருவது செஞ்சிலுவைச் சங்க இயக்கமாகும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கஸ்ரங்களைப் போக்குவதற்கு உள்நாட்டுச் சங்கங்கள் செயற்படுகின்றன. 1910ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ம் திகதி ஜீன் ஹென்றி டுனான் அவர்கள் சமாதானத்தை நேசித்த மக்கள், நண்பர்கள் மத்தியில் கேயிடன் நகரத்தில் காலமானார்.



IFRC

## 03. செஞ்சிலுவை இயக்கம் (RED CROSS MOVEMENT)

இவ் இயக்கம் மூன்று பிரிவாகச் செயற்படுகின்றது.




SLRCS




ICRC

1. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ICRC)
2. சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனம் (IFRC)
3. தேசிய சங்கங்கள் (NS)

### செஞ்சிலுவைச் சர்வதேசச் சங்கச் செயற்பாடுகள் (ICRC)

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் உள்நாட்டுப் போர்கள் முரண்பாடுகள் நடைபெறும் இடங்களில் முக்கியமாகச் செயற்படுகின்றது. IFRC செயற்பாடுகளை ஜெனீவா ஒப்பந்தத்தின்படி ஏற்றுக்கொண்டன.

### தேசிய சங்கங்கள் (NS)

தேசிய சங்கங்கள் 1864ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று 191 நாடுகளில் செயற்பட்டு வருகின்றன.


### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (SLRCS)

**1936:-** மலேரியா, கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தவென இலங்கை அரசாங்கத்துக்கு உதவும் முகமாகப் பிரித்தானிய செஞ்சிலுவை நிறுவப்பட்டது. 1948 - 1949ல் சுதந்திரமடைந்த பின்னர் **சிலோன் செஞ்சிலுவை** எனப் பெயரிடப்பட்டது. 1952ல் சர்வதேசச் சம்மேளனத்தில் இணைந்து சர்வதேச **அங்கீகாரம்** பெற்றது. 1972ல் **இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்** எனப் பெயரிடப்பட்டது. இயற்கை மற்றும் மனித செயற்கை அழிவுகளினால் பாதிப்புறுவோரின் நலன்களை மனிதாபிமான அடிப்படையில் சாதி, சமயம், பால், வர்க்க, இன, மொழி, வேறுபாடு இன்றிப் பணிபுரிவதே இதன் நோக்கம் ஆகும்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்களின் மனிதாபிமானச் சேவைகள் :**

அடிப்படைச் சுகாதாரம், இயற்கை/செயற்கை அனர்த்தங்களின் போது உதவி, இரத்ததானம், அம்புலன்ஸ் சேவை, சிரமதானம், நிவாரணப்பணி, அவசரசேவை, மோதலற்ற, மோதல் பிரதேசங்களில் சேவை புரிதல்.




## 04. நடுநிலைமையின் சின்னம் செஞ்சிலுவை

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த **கென்றி டுனன்ட** தனது நாட்டின் சின்னமாகிய சிவப்புப் பின்னணியில் அமைந்த வெள்ளைச் சிலுவையை வெள்ளைப் பின்னணியில் சிவப்புச் சிலுவையாக இடம்மாற்றி உருவாக்கியது தான் இச் செஞ்சிலுவைச் சின்னம். மோதல், யுத்த காலங்களில் செஞ்சிலுவைச் சின்னமானது நடுநிலைமையின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஜெனீவாக் கோட்பாட்டுக்கு

இணங்க இச்செஞ்சிலுவைச் சின்னம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேசியச் சங்கம் அல்லது நாட்டில் செயற்படும் செஞ்சிலுவைச் சங்க செம்பிறைச் சம்மேளனம் மட்டுமே பயன்படுத்தமுடியும். இலங்கையின் செஞ்சிலுவைச் சின்னம் பல வழிகளிலும் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. செஞ்சிலுவைச் சின்னம் நடுநிலைமைச் சின்னமாக உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்செஞ்சிலுவைச் சின்னத்தைப் பாவிப்பதன் முக்கிய நோக்கம் காயப்பட்டு துன்புறுவோருக்கும், உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பவர்க்கும், உதவுபவர்களுக்கும், பாதுகாப்பு அழிப்பதற்கும், உயிரையும் உபகரணங்களையும் காப்பாற்றுவார்களான வைத்தியர்கள், பணியாளர்கள், வைத்திய உபகரணங்கள், நிவாரணப்பொருட்கள் என்பன வழங்குதலுக்கும் பயன் கொடுத்தலாகும். எனவே இலங்கை சட்டவாக்கத்தின் ஜெனீவா சாசன 2006ம் ஆண்டின் 6வது சாரத்தின்படி இச் செஞ்சிலுவைச் சின்னத்தை ஏனைய நிறுவனங்கள் பாவித்தல், துஸ்பிரயோகம் செய்தல் என்பன தண்டனைக் குரிய குற்றமாகும். மருத்துவசேவைக்காகச் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சின்னங் கள். மருந்தகங்களின் சின்னமாக வெள்ளைப் பின்னணியில் பச்சைச் சிலுவை அல்லது பச்சைப் பின்னணியில் வெள்ளைச் சிலுவையா கும். வைத்தியசாலையின் சின்னமாக நீலநிறப் பின்னணியில் வெண்ணிற எழுத்துப் பயன்படுத் தப்படலாம். செஞ்சிலுவைச் சின்னத்தை மருந்தகங்கள், வைத்திய நிலையங்களில் பாவிப்பது சட்டத்துக்கு முரணானதாகும். செஞ்சிலுவைச் சின்னம் ஆயுதமோதலில் பாதிக்கப்பட்டோர்க்கு இலவச வைத்தியசேவையினை செய்பவர்களின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் சின்னமாகும். எனவே வைத்தியசாலைகள் செஞ்சிலுவைச் சின்னத்தைப் பயன்படுத்துவது சட்டத்துக்கு முரணாகும். செஞ்சிலுவைச் சின்னம் யுத்த அனர்த்தகாலங்களில் நடுநிலைமையுடன் சேவையாற்றும் படியான சின்னமாகத் திகழ்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமானது 2006ம் ஆண்டு 4ம் இலக்க ஜெனிவாச் சட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.




## 05. செஞ்சிலுவைக் கொள்கைகள்:

**மனிதநேயம் :** தேசிய சர்வதேச அளவில் மனிதத் துயரங்கள் எங்கு காணப்படினும் அவற்றை நீக்கவும், தடுக்கவுமே செஞ்சிலுவை முயற்சிக்கிறது. உயிர், உடல் நலன்களைப் பாதுகாத்து மனிதநேயத்துக்கு மதிப்பளிப்பதுமே அதன் நோக்கமாகும்.

**பாரபட்சமின்மை :** செஞ்சிலுவையானது தேசிய, இன, மத, வர்க்க, அரசியல் முதலான வேறுபாடுகளைக் கொண்டதல்ல.

**நடுநிலைமை :** சச்சரவு வேளைகளில் தர்க்கத்துக்குரிய அரசியலிலும் இன, மத வேறு கொள்கை கோட்பாடுகளிலும் செஞ்சிலுவை ஈடுபடுவதில்லை.

**சுயாதீனம் :** செஞ்சிலுவை சுதந்திரமானது. தேசிய சங்கங்கள் தமது தனித் தன்மையை நிலை நிறுத்தல் வேண்டும். அப்போதுதான் செஞ்சிலுவைக் கொள்கைகளுக்கமைய எப்பொழுதும் நடந்து கொள்ள முடியும்.

**தொண்டர் சேவை :** செஞ்சிலுவை துயர் துடைக்கும் ஓர் தொண்டர் இயக்கம் எதுவிதத்திலும் இலாபம் ஈட்டும் நோக்கமற்றது.

**ஒருமைப்பாடு :** எந்தவொரு நாட்டிலும் ஒரேயொரு செஞ்சிலுவைச் சங்கமே இருக்கமுடியும். அது சகலருக்கும் திறந்திருப்பதுடன் எல்லைக் கோட்டிற்குட்பட்ட பகுதிகள் முழுவதிலும் மனிதாபிமானச் சேவைகள் புரிதல் வேண்டும்.

**சர்வதே சமயம் :** செஞ்சிலுவை உலகளாவிய நிறுவனம் அதில் அடங்கும் சகல சங்கங்களும் சம உரிமை கொண்டு பொறுப்புக்கள் கடமைகளை பகிர்ந்து தமக்குள் உதவிக் கொள்ளுதல் வேண்டும்.

## 06. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகமும் செஞ்சிலுவைச் சம்மேளனமும் (SRI LANKARED CROSS SOCEITY - NHQ & INTERNATINAL FEDERATION OF RED CROSS) :

எமக்கான உதவியை இ.செ.ச தலைமையகமும் (SLRCS – NHQ) செஞ்சிலுவைக் குழுவும் (ICRC), செஞ்சிலுவைச் சம்மேளனமும் (IFRC) சேர்ந்து செய்து வருகின்றன. சுருங்கக்கூறின் இ.செ.ச யாழ் கிளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்த நன்மைகள் சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டியவை. போர்க்காலத்தில் சேவை செய்வதே இச்சங்கத்தின் முக்கிய கடமையாகும். அதனை இச்சங்கம் சீராகச் செய்து வருகின்றது. முதலுதவி, உயிர் காக்கும் சேவை ஆகியன முதலிடம் பெற்றன. இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் யாவற்றிலும் இ.செ.ச பிரிவு காரியாலயங்களை ஸ்தாபித்து அங்கு தொண்டர்களைச் சேர்த்து, அலகு, பிரிவு, கிளை நிர்வாக சபைகளை ஏற்படுத்தி சிறப்பாகக் கிராமப்புற மக்களுக்குச் சேவை செய்து வருவது இன்று நடைமுறையில் இருந்து வருகிறது.

## 07. இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கம் (RED CROSS SOCIETY IN SRI LANKA):

இன்று இலங்கையில் 26 மாவட்டத்திலும் ஒவ்வோர் இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கக் கிளை இயங்கி வருகின்றது. தலைமையக நிர்வாக உறுப்பினர்கள் சேர்ந்து தலைமையகத்தில் மாதாந்தம் கூட்டம் கூடித் தமது சேவைகளைக் கிளைக்கும், பிரிவுகளுக்கும், அலகுகளுக்கும் கொண்டு சென்று நிர்வாக ரீதியாக அடிமட்ட மக்களுக்குச் சேவை செய்வதற்கு ஆவன செய்து வருகின்றது. ஒரு வலுவான யாப்பின்படி இச்சங்கங்கள் நடைபெறுகின்றன.

## 08. இலங்கை செஞ்சிலுவை யாப்பு (Sri Lanka Red Cross Constitution):

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் எப்போதும் ஒரு யாப்பினை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வந்துள்ளது. அண்மையில் இதற்கான புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அப் புதிய யாப்பின்படியே இப்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடாத்தப்பட்டு வருகிறது. உறுப்புரிமை பற்றிப் பலவாறான நிபந்தனைகள், தேர்தலுக்கான ஆயத்தங்கள், தேர்தல் முறைகள், தலைமையக தேர்தல் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. அலகில் உறுப்புரிமை பெறல், அதனைப் பிரிவு, கிளை, தலைமையகம் ஆகியவற்றுக்குப் பாரப்படுத்தல் போன்றவை முக்கியமாகும். ஒவ்வொரு வருடமும் ஆண்டுப்பொதுக்கூட்டம் அலகு, பிரிவு, கிளை, தலைமையகம் ஆகியவற்றில் நடாத்தல், மூன்று வருடத்திற்கு ஒரு முறை தேர்தல் வைத்தல், ஒவ்வொரு ஆண்டுப்பொதுக்கூட்டத்தின் கோரம்: அலகு: ½, பிரிவு: 2/3, கிளை: 2/3 தலைமையகத்தில் 2/3. இது போன்ற முறையில் தேர்தல் /ஆண்டுப்பொதுக்கூட்டம் நடைபெற்று வருகின்றது. தேர்தல் /ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றும் பிரதிநிதிகள் தொகை: பிரிவிற்கு 100 பிரதிநிதிகள், கிளைக்கு 100 பிரதிநிதிகள், தலைமையகத்துக்கு 250 பிரதிநிதிகள் ஆகும். இத் தேர்தலில் பங்குபற்றி வெற்றி பெற்றோரே அலகையோ, பிரிவையோ, கிளையையோ பரிபாலிக்க முடியும். இரு முறைக்கு மேல் ஒரே பதவிக்கு ஒருவர் போட்டியிட முடியாது. புதிதாகச் சேர்ந்தவர்கள் இருவருடத்திற்குப் பின்பு தான் தேர்தலில் போட்டி இட முடியும். இப்படியான விடயங்கள் யாப்பில் தரப்பட்டுள்ளது. எவ்விதம் தேர்தல்கள் வைக்கப்பட வேண்டும் என்பதை யாப்பில் விவரமாகத் தரப்பட்டுள்ளது. யாப்புக்கு விரோதமாகச் செயற்படின் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டும். இலங்கை செஞ்சிலுவை யாப்பு இச்சங்கத்துக்கு ஒரு முக்கிய துணையாகும்.

## 09. யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்கம் (RED CROSS SOCEITY IN JAFFNA):

1958ல் – இளைஞர் வட்டம் 1964ம், 1982ம், 1983ம், 1986ம் ஆண்டுகளில் செயற்பட்டது. 1988ல் பூரணமாக செயற்பட்டு அல்லலுறும் மக்களுக்குத் தொடர்ந்து பல்வேறு சேவைகள் செய்து கொண்டு வருகின்றது. குறிப்பாக 1990களில் செஞ்சிலுவைச் சங்கம் பல சேவைகளைச் செய்து வந்தது. போர்க் காலத்தில் இடம்பெயர்ந்தோர்களுக்காக தற்காலிக வசிப்பிடங்கள் செய்து தரப்பட்டன. அவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் குறிப்பாக அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவைகள் தரப்பட்டன. அத்துடன் சமையல் உபகரணங்களும் அளிக்கப்பட்டன. கஸ்டமான போர்க்காலத்தில் செஞ்சிலுவைச் சங்கம்

செய்த சேவைகள் அதிகமானவை, அளவிடமுடியாதவை, மறக்க முடியாதவை. மக்களின் நலனுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மக்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து தர முடிந்தது. அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் அமைக்கப்பட்டது. கஸ்டப்பட்ட, இடம் பெயர்ந்தோர் அனைவருக்கும் நிவாரணப் பொருட்கள் சமமாகப் பங்கிடப்பட்டு யாவருக்கும் போய்ச் சேர வேண்டும் என்ற நல்லெண்ணத்தைக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்டது. இவ் ஒன்றியத்தில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவும் சேர்ந்துச் செயற்பட்டன, செயற்பட்டுக்கொண்டு இன்றும் வருகின்றன.

### 10. செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்குழு (BRANCH COMMITTEE):

யாழ் மாவட்டக் கிளை யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது. பிரிவுத் தலைவர்கள், கிளை நிர்வாக சபை உறுப்பினர்கள் யாப்பின் படி சனநாயக முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து மாதமொரு முறை தமது விடயங்களுக்குக் கிளைக்குழு மூலம் தீர்வு காணப்படுகின்றது. இது ஒரு "மினி பாராளுமன்றம்" ஆகச் செயற்படுகின்றது. இக் காலத்தில் யாழ் கிளை மூலம் இரு மாதத்துக்கு ஒரு முறை "செய்தி" இதழ்கள் வெளியிடப்பட்டன. அவ்விதழில் புதினங்கள், கணக்குகள், நடைபெற்ற, நடைபெறவுள்ள செயற்றிட்டங்கள் யாவும் பிரசுரிக்கப்பட்டன. கிளைப்புதினங்கள், பிரிவுப் புதினங்கள் வெளியிடப்பட்டு வந்தன. உறுப்பினர்கள் அதை வெகு உற்சாகமாக வரவேற்றனர். தற்போது மாதம் ஒரு முறை "Transparency" என்னும் ஒரு ஏட்டினை வெளியிட்டு வருகிறது.

### 11. போர்க்காலச் சேவை (WAR TIME SERVICE):

போர்க்காலச் சூழ்நிலையில் மக்கள் படும் கஸ்டங்களைக் கண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகள், நிவாரணங்கள் ஆகியவற்றை அவர்கள் பெறுவதற்கு வழி செய்யப்பட்டது. தேடிவந்தவர்களுக்கு தேவையானவற்றைத் தயங்காது இக்கிளை செய்து வந்தது. போர்க்காலச் சூழ்நிலையில் 1990களில் யாழ் குடாநாடு பூராகவும் குண்டுகள், பொம்பர்கள், துவக்குச் சூடுகள் யாவும் சரமாரியாக வந்து விழுந்தன. இதனால் அப்பாவிகள் பலர் இறந்தார்கள். மேலும் வடமராட்சி கிழக்கில் அம்பன், குடத்தனை, ஆழியவளை, கட்டைக்காடு, மருதங்கேணி ஆகிய இடங்களில் பல அனர்த்தங்கள் நடந்தன. மருதங்கேணியில் இருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவு அவ்விடத்தில் தனது தலையாய கடமையைச் செய்தது. கிளை உறுப்பினர்கள் சென்று நிவாரணமும், மருந்துகளும் கொண்டு போய்க் கொடுத்தது மனிதாபிமானச் செயலாகும்.


### 12. யாழ் கிளையில் சேர்ந்து செயற்படும் சர்வதேச சங்கங்கள் (PARTNER RED CROSS SOCEITIES WORKING WITH THE JAFFNA BRANCH) :

யாழ் கிளையில் சேர்ந்து செயற்படும் சர்வதேச சங்கங்களாவன : செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு - ICRC, (சமூகசேவை, நிவாரணம்) சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனம் – IFRC, (நிவாரணம், வீடுகள் நிர்மாணம்) டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கம் - DRC, (உளவளத்துறை), அவுஸ்ரேலியன் செஞ்சிலுவைச் சங்கம் –ARC. (நடமாடும் மருத்துவ சேவை, நிவாரணம், வீடுகள் நிர்மாணம்). அவர்கள் செய்த, செய்து கொண்டுள்ள சேவைகள் அளப்பெரியன, அளவிட முடியாதன.

### 13. நடமாடும் மருத்துவ சேவை (MEDICAL SERVICE):


அப்போது 198 நலன்புரி முகாம்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தன. மருந்து வகைகளும் அங்கிருந்த நோயாளர்களுக்கு நடமாடும் சுகாதார சேவையாக அளிக்கப்பட்டது. அம்புலன்ஸ் வாகனங்கள் இரண்டு இருந்தன. வைத்திய சேவைக்கு இவை பயன்படுத்தப்பட்டன. மேலும் பொம்பர், குண்டு, நிலக்கண்ணி, துவக்குச் சூடு போன்றவைகளால் தாக்கப்பட்டவர்களை உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு போவதற்காக இந்த அம்புலன்ஸ்கள் பாவிக்கப்பட்டன. மேலும் இ.செ. சங்க யாழ் தலைமையகம் இரவு பகலாக எவரும் வந்து உதவிகளைப் பெறுவதற்காக அகலத்திறந்து வைக்கப்பட்டது. போதனா வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு உதவுவதற்காகத் தொண்டர் படை அமைக்கப்பட்டது. இரத்தம் வேண்டியவர்களுக்கு இரத்ததானம் செய்வதற்குத் தொண்டர்கள் உதவி

செய்தனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய ஒவ்வொரு அனர்த்தத்திற்கும் யாழ் கிளையின் சார்பில் ஓடோடிச்சென்று காயப்பட்டவர்களை அம்புலன்ஸ் மூலமாக வைத்தியசாலைக்குக் கொண்டு சேர்த்துத் தேவையான போது தேவையானவற்றைச் செய்து வந்தது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் சேவை செய்யாது பல தொண்டர்களைச் சேர்த்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களையும் முடிந்தளவில் அனர்த்தங்களில் இருந்து காப்பாற்றியதும், கஸ்டப்படும் மக்களின் நலன்கள் கவனிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.




### 14. தகவல் தெரிவிப்பும் தகவல் பரிமாற்றமும் (TRACING PROJECT):

தேடுதல் செயற்றிட்டமானது அனர்த்தத்தின் போது வெளிமாவட்டங்களிலிருந்து யாழ் குடாநாட்டுக்கான தொலைபேசி, கடிதத் தொடர்பு துண்டிக்கப்பட்டமையால் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்காக ICRCயால் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டமாகும். இது "I am alive" - Notification என்னும் தலைப்பில் "நான் உயிருடன் இருக்கின்றேன்" என்ற செய்தியை மட்டும் பிறமாவட்டங்களுக்குக் குறிப்பாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பிரதேசங்களுக்கு ICRC மூலமாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக இலங்கை செஞ்சிலுவைச்சங்க தேடுதல் இணைப்பாளர் அவர்களும் பல தொண்டர்களும் இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். பின்னர் தொலைபேசிச் சேவை ஓரளவு சீரடைந்ததால் 27.09.2006 உடன் இச்சேவையை இடைநிறுத்திக் கொண்டு, அதன் பின் "Red Cross Message" செய்தித் தொடர்பு ஆரம்பிக்கப்பட்டது. அதனையும் ICRC உடன் இணைத்து நடாத்தி வரப்பட்டது.




### 15. இரவு ஊரடங்கு நேர அம்புலன்ஸ் சேவை (NIGHT / CURFEW AMBULANCE SERVICE):

இரவு ஊரடங்கு நேரத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை மக்கள் நலன் கருதி 24 மணித்தியாலமும் தேவைக்கேற்றவாறு மக்கள் அழைப்பை ஏற்று உடனடியாக உயிர்க்காப்பு சேவைக்காக அம்புலன்ஸ் வண்டிகளை தொலைபேசி அழைப்புகள் கிடைத்தவுடன் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைத்து அங்கிருந்து அவர்களை வைத்தியசாலைக்கு வைத்தியத்திற்காக அழைத்துச் செல்வது வழக்கம். இக்கைங்கரியத்தை இக்கட் டான காலகட்டத்திலும் இன்றும் நடை முறைப்படுத்துப்பட்டு வருகிறது. இது மக்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையால் செய்யப்படும் மனிதாபிமான முக்கிய செயற்பாடாகும். மேலும் உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பவர்களும் இரத்தம் பெருகி, இரத்தம் வெளியேறி உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருப்பவர்களும், குழந்தைப் பேற்றுக்காக தவித்துக்கொண்டுள்ள தாய்மார்களுக்கும் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் இச்சேவை மக்கள் நலனுக்காகவே இரவு பகலாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. தொலைபேசி மூலம் அம்புலன்ஸ் சேவையைப்பெற்றுக் கொள்ளலாம். (Telephone: 2222561/CDMA 5555). ஒவ்வொரு

இரவும் அண்ணளவாக 05 நோயாளர்களுக்கு இவ்விதம் சேவை செய்யப்படுகின்றது. குறிப்பாகக் குழந்தைப்பேறு நடைபெறும் தாய்மாருக்கு இது ஓர் பேருதவியாக இருக்கின்றது. இதே போல் நோயால் அவஸ்தைப்படுகின்ற அனைவருக்கும் இச்சேவை வழங்கப்படுகின்றது. இரவு நேரங்களில் ஊரடங்கு நேரம் மக்களுக்கு உடல்ரீதியாக விபரீதம் நடந்து கிளைக்கு அறிவிக்கப்படும் போது உடனடியாகச் சென்று நோயாளியை அவர் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று வைத்திய சேவைக்காக ஒப்படைக்கும் மனிதாபிமானச் சேவையை இச்சங்கம் செய்து வருகிறது. தொடக்கத்தில் ICRC உதவி செய்தார்களெனினும் இப்போது தனித்து இயங்குகின்றது.

### 16. நடமாடும் வைத்திய சேவை (MOBILE MEDICAL SERVICE):

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்கள் யாவற்றிலும் செஞ்சிலுவைச்சங்கம் தனது நடமாடும் வைத்திய சேவையை நடாத்திக் கொண்டு வந்தது. பின்பு குறிப்பாக சாவகச்சேரியிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள (யாழ்ப்பாணம் 04, சாவகச்சேரி 15) முகாம்களில் தனது சேவையை நல்கி வந்தது. தற்போது தீவுப்பகுதியில் தனது சேவையை நல்கிவருகிறது.

## 17. ஒகஸ்ட் போரின் போது Anchor பால்மா விநியோகம்: (ANCHOR FOOD MILK DISTRIBUTION DURING THE WAR TIME) :

Sri Ramadas Foundation என்ற நிறுவனத்தினால் இலவசமாக அளிக்கப்பட்ட (5000 packets 1+) (5000 packets 3+) பால்மாவினை(400g packets)யும் யாழ்.மாவட்ட, யாழ்ப்பாணத்திலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் பரிந்துரையின்படி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரமுடியாதநிலையில் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பால்மா +1, +3 வகைகள் நலன்புரி நிலையங்களில் இருக்கும் 01 தொடக்கம் 05 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. இப்பால்மா Sri Ramadas Foun dation என்ற நிறுவனத்தினால் அளிக்கப்பட்டது. யாழ்.மாவட்ட 07 உதவி சுகாதார சேவைப்பணிப்பாளர் மூலமாக யாழ்ப்பாணத்திலுள்ள குழந்தைகளுக்கும் இப் பால்மா வழங்கப்பட்டது. இதன் பெறுமதி 1.7 மில்லியன் ஆகும்.

## 18. முதலுதவித் தொண்டு (FIRST-AID SERVICE):

மக்கள் ஒன்றுகூடி திருவிழாக்களிலோ, விளையாட்டுப் போட்டிகளிலோ அல்லது பரிசளிப்பு விழாவிலோ செஞ்சிலுவைச் சங்க முதலுதவி சேவையினை அளிக்கும். எங்கெல்லாம் செஞ்சிலுவைச் சங்கம் அழைக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் சென்று தனது முதலுதவிச் சேவையினை நல்கி வந்துள்ளது. அதற்கான மருத்துவர், மருந்துகள், மருந்தாளர்கள், தொண்டர்கள், அம்புலன்ஸ் ஆகிய வற்றுடன் சென்று மக்களுக்கு ஏதும் விபரீதம் ஏற்படும் பொழுது அவர்களுக்குத் தகுந்த சிகிச்சையளித்து அதற்கு மேல் சிகிச்சை அளிக்கவேண்டுமெனில் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் நோயாளர் களை அனுப்பி வைப்பது வழக்கம். பல கோவில்கள், தேவாலயங்கள், விளையாட்டுப் போட்டிகள், திருவிழாக்களுக்கு இச் சேவைகள் அளிக்கப்பட்டது. திருவிழாக்காலங்களில் நல்லூர் கந்தசுவாமி கோவில், சந்நிதி முருகன் கோவில், வல்லிபுர ஆழ்வார் கோவில், மருதடி விநாயகர் கோவில், காரைநகர் சிவன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை சிவராத்திரி விரத நிகழ்வு போன்றவற்றிலும் மற்றும் யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், பாரதி மன்ற சனசமூக நிலையம், சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டிகளிலும் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியிலும் இச்சேவைகளைச் செய்துள்ளோம். நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவகால அம்புலன்ஸ் சேவை எமது சங்கப் பிரிவுகளின் முதலுதவித்,தொண்டர்கள் அங்கே வரும் பக்தர்களுக்கு ஏற்படும் காய்ச்சல், மயக்கம், மற்றும் விபத்துகள் முதலியவற்றால் பாதிக்கப்படும் போது முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டது. காலையிலும் மாலையிலும் பூசை நேரங்களில் எமது முதலுதவிச் சேவை முழு செயற்பாட்டுடன் இயங்கியது.

## 19. அடிப்படை முதலுதவிப் பயிற்சி (BASIC FIRST-AID COURSE):

அடிப்படை முதலுதவிப் பயிற்சி நெறி ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் 25 தொண்டர்களுக்கு வழங்கப்படுகிறது. அவுஸ்ரேலியன் செஞ்சிலுவைச் சங்க அனுசரனையுடன் 13 பயிற்சிகள் 2006ல், 04 பயிற்சிகள் 2007ல் நடைபெற்றன. அடிப்படை முதலுதவிப் பயிற்சிநெறி பயின்றவர்களுக்குத் தலைமையகத்தால் அகில இலங்கைக்கான பரீட்சையும் நடந்தேறியது. மேலும் FORUT, ACTION FIAM,CEB, SCF, IDP CAMPS, SOND, WORLD VISION ஆகிய நிறுவனங்களிலும் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளுக்கும் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தினால் முதலுதவிப் பெட்டி வழங்கப்பட்டது. வெவ்வேறு நிறுவனங்கள் அழைக்கும் போதும், கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் அடிப்படை முதலுதவிப் பயிற்சி நெறி நடாத்தப்பட்டன.

## 20. உலக செஞ்சிலுவை தினம் 8 மே (WORLD RED CROSS DAY 8TH MAY):

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை, Henry Dunant பிறந்த தினத்தை முன்னிட்டு வருடாவருடம் நடந்த உலக செஞ்சிலுவை தின நிகழ்ச்சிகள் கிளைத் தலைமையகத்திலும், வலி மேற்குப் பிரிவிலும், நல்லூர்ப் பிரிவிலும், யாழ் போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதியிலும், யாழ் போதனா வைத்தியசாலை இரத்ததான வங்கியிலும் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. எமது சங்கத்தின் சகல உறுப்பினர்களும், ஊழியர்களும், தொண்டர்களும், நலன்விரும்பிகளும் இதில் கலந்து சிறப்பித்தார்கள். உலக செஞ்சிலுவை தினம் 8 மே முன்னிட்டு கலை கலாச்சார நிகழ்ச்சிகள் தலைமையகத்திலும், இரத்ததானம் யாழ் போதனா வைத்தியசாலையிலும் நடந்தேறுவது நடைமுறையில் இருந்து வருகிறது.

## 21. சிக்குன்குனியா மருத்துவ சேவை (CHIKUNGUNYAMOBILE MEDICAL CLINICS):

சிக்குன்குனியா நோய் யாழ்ப்பாணத்தில் தொடங்கிய நாள் முதல் மாகாண சுகாதாரப்பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவிவரும் சிக்குன்குனியா நோயினைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு இடங்களில் எமது நடமாடும் மருத்துவ சேவை சென்று சேவை செய்து வந்தது. நலன்புரி நிலையங்களில் சேவை செய்யும் நடமாடும் மருத்துவக் குழு, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனைச் சிறப்புற நடாத்தி வந்தது. இணுவில், உடுவில், ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருந்ததால் இம்மருத்துவ சேவை நடாத்தப்பட்டு வந்தது. இதற்காக ICRC, SLRCS-NHQ ஆகியன தேவையான Panadol, Paracitomol மருந்துவகைகளை அனுப்பியிருந்தார்கள்.

## 22. தொண்டர் சேவை (VOLUNTEER SERVICE):

யாழ் கிளையில் தொண்டர்கள் பல்வேறு விதமான தொண்டு சேவையில் ஈடுபட்டுள்ளனர். தேவையான போது தேவையான தொண்டர்களை இச்சேவையில் ஈடுபடுத்துகின்றனர். குறிப்பாக நலன்புரி நிலையங்களில் முதலுதவி தொண்டர்களாகவும், போதனா வைத்தியசாலையில் ஊழியத் தொண்டர்களாகவும், பால்மா விநியோகத்தில் ஆய்வாளர்களாகவும், யாழ் கிளையில் பகுதி ஊழியர்களாகவும், ICRC Relief தொண்டர்களாகவும் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கான கொடுப்பனவு மிகக்குறைந்த அளவில் இருந்தாலும் அவர்களின் சேவை அளப்பரியதாகும். பணத்துக்காகவோ, பொருட்களுக்காகவோ, அரசியல் பொருளாதார சமூக முறையில் முன்வரவேண்டுமென்ற காரணத்துக்காகவோ இத்தொண்டை அவர்கள் செய்வதில்லை. கட்டுப்பாடு, கடமை, கண்ணியம் ஆகிய நற்குணங்களுடன் இச் சேவை செய்வார்கள். முதலுதவித் தொண்டுச் சேவை எப்போதும், எந் நேரமும் அவசியமாகும். அச்சேவையின் தாற்பரியம், நன்மை, செய்யும் தன்மை ஆகியவற்றைத் தெரிந்திருப்பது அவசியம். அதனை எழுதி வைத்தோ, படித்தோ அல்லது மனதில் வைத்தோ தமக்கு இடப்பட்ட சேவையை சிறப்பாகச் செய்வார்கள். அவர்களுக்குப் போதிய கல்வியறிவு, கணக்கு, எழுத்து, விபரம், பொதுஅறிவு ஆகியன தேவை. நற்குணம், நல்ல பழக்கவழக்கம், மனிதாபிமானம் என்பன போன்ற பண்புகள் அவர்களுக்கு அவசியம். அர்ப்பணிப்புடன் தனது கடமையினை மேற்கொள்ளுவார்கள். அவர்கள் தமது தகைமைக்கு ஏற்ப, தனது விருப்பத்திற்கு ஏற்ப,

தான் முதலுதவிச் சேவையை செய்து முடிக்கக் கூடியவராக இருப்பர். சிறந்த சேவை, பூரண சேவை, கறைபடியாத சேவை ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றவர்கள். பெரியார்க்குக் கீழ்ப்படிதல், மற்றையவரை மரியாதைப்படுத்தல், யாவருடனும் அன்பாகப் பழகுதல் என்பன அவர்களுக்குக் கை வந்த கலையாகும்.

## 23. வீட்டுத் தோட்டம் (HOME GARDEN):

எமது உணவுப் பற்றாக்குறையினைச் சீராக்குவது இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் தலையாய கடமையாகும். உணவுப்பொருட்களையும், உப உணவுப்பொருட்களையும் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் தற்போது யாழ் மாவட்டத்தில் உருவாகியுள்ளது. எனவே இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் யாழ் கிளையினால் யாழ் மாவட்டப் பகுதிகளுக்கு வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் திட்டம் ஒன்றை உருவாக்கி, மாவட்ட விவசாய திணைக்களத்துடன் இணைந்து சகல செஞ்சிலுவைப் பிரிவுகளுக்கும் விதைகள், வசதிகள், அறிவுரைகள் வழங்கப்பட்டன.

## 24. இலவச கணனி, ஆங்கில வகுப்புக்கள்: (FREE COMPUTER ENGLISH COURSES)

யப்பான் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரனையுடன் கிளையில் சிறப்பாக இலவச ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. கணனி வகுப்புக்கள் 2007ல் இலவசமாக நடைபெற்றாலும் 2008ல் சிறு தொகை பணம் செலுத்தியே கற்க வேண்டும். ஆங்கில வகுப்பு இலவசமாக நடைபெறுகிறது.

## 25. யாழ் கிளைச் செய்தி இதழ் (TRANSPARENCY):

மாதம் தோறும் கிளைச் செயற்பாடுகளைத் தாங்கி வரும் இச்செய்தித்தாளினைப் பலரும் விரும்பிப்படிப்பார்கள். இதனை உறுப்பினர்கள் தவறாது வாசிப்பது அவசியம். இது தான் எமது முக்கிய ஏடாகும். இதுவரை 32 இதழ்கள் வெளிவந்துள்ளன.

## 26. செஞ்சிலுவைச் சங்கப் பரப்புரை (RED CROSS DISSEMINATION):

பல்வேறு இடங்களிலும் பரப்புரை செய்வதற்கு இக்குழு நடவடிக்கை எடுத்ததன் பயனாக இச்சேவைப் பிரிவுகள் அனைத்துக்கும் விரிவடைந்துவருகின்றது. 20 இடங்களில் இவை நடாத்தப்பட்டன. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்ட கிளையின் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டங்கள் பாடசாலைகள், கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், அரச திணைக்களகங்கள் மத்தியில் பரப்புரை செய்யப்பட்டு வருகின்றது. இப்பரப்புரைக் கூட்டம் கடந்த வருடம் இருபது இடங்களிலும் 2008 ல் தைமாதம் தொடக்கம் வேகமாகப் பரப்புரைகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ் வருடம் இப்பரப்புரை மூலம் செஞ்சிலுவைச் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் மக்கள் மனதில் பதிவதற்கு வழி வகுத்துள்ளன. இதன் மூலம் இவ் வருடம் எமது செஞ்சிலுவைச் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேருவோரின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இதே போல் பாடசாலைகளில் கனிஸ்ட செஞ்சிலுவைச் சங்கங்களின் தொகை அதிகரித்துள்ளது. இதன் மூலம் அங்கத்தவர்கள், தொண்டர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. செஞ்சிலுவை இலட்சினை நடுநிலைமையின் சின்னம். அதன் துஸ்பிரயோகம் தண்டனைக்குரிய குற்றமாகும் என்ற பிரச்சாரமும் பரப்புரை மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தி வருகின்றோம். இதன் மூலம் செஞ்சிலுவைச் சின்னம் தவறாகப் பாவிப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

## 27. சுனாமி அனர்த்தம் (TSUNAMI DISASTER):

26.12.2004 அன்று சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவை தொடர்கின்றது. பல உயிர்களையும் காயப்பட்டோர்களையும் உடனடியாக எமது பருத்தித்துறை பிரிவுத்தொண்டர்கள் தமது உயிரைப் பணயம் வைத்துத் தமது சேவையினை நல்கியது யாவராலும் போற்றப்பட்டது. மருதங்கேணிப் பிரிவிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்டுத் தென்மராட்சிப்

பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்தவேளை தென்மராட்சிப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினர் மிகச் சிறந்த முறையில் சேவையாற்றினார்கள். சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை சங்கத்தின் உதவியுடன் தலைமையகத்திலிருந்து உதவி பெற்றுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண வசதிகள் செய்யப்பட்டன. கனடா செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட சுகாதாரப் பொதிகள் வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## 28. சுனாமி வீட்டுத்திட்டம் (TSUNAMI HOUSING PROJECT):

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்காக 491 (Donor driven) வீடுகள் கட்டிக்கொடுப்பதாக அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம், செயற்பட்ட போதிலும் தற்கால அசாதாரண சூழ்நிலை காரணமாக இது தொடரமுடியாது போனது. ஆனால் இதற்கான நிதிவளம் இப்போது உண்டு. அவை எப்போதும் நடைபெறலாம். இத்துடன் வல்வெட்டித்துறையிலுள்ள மருத்துவமனையையும் புனரமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு மருத்துவ உபகரண உதவிகள் செஞ்சிலுவைச் சங்க மூலமாக Australian Red Cross சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

| Area | War – effected Households | Tsunami – effected house holds |
|---|---|---|
| Mamunai | | 168 |
| Thalayadi 1 | | 75 |
| Chempiyanpat South | 156 | |
| Maruthankerny | 92 | |

| Village | G.S. Division | House lots |
|---|---|---|
| Polikandy | J/393 | 15 |
| Athikovilady | J/388 | 57 |
| Revady | J/389 | 77 |
| Aanaivilunthan | J/416 | 200* |
| | **Grand Total** | **349** |

பருத்தித்துறை வடக்குப் பிரிவில் வீடுகளை இழந்தவர்களுக்காக 149 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனம் (IFRC) செயற்படுகின்றது. இத்திட்டம் வடமராட்சி கிழக்கில் அமுலாக்கப்படுகின்றது.

ஆனைவிழுந்தானில் 200 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்திருப்பினும் எதிர்பார்த்த நிலம் தரப்படாத காரணத்தினால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும் குடத்தனையில் 120 வீடுகள், அல்வாய் மேற்கில் 149 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் IFRC யின் உதவியுடன் UN Habitat நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## 29. வல்வெட்டித்துறை வைத்தியசாலையை வசதியாக்கச் செய்தல் (REFIRBISHMENT OF VALVETTITHRAI HOSPITAL)

இதற்கான ஆக்கபூர்வமான வேலைப்பாடுகள் நடைபெறுகின்றன. இதற்கான அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கப் பணத்தை வடமாகாண சுகாதார அதிகாரியிடம் அளிப்பதாகவும் வல்வெட்டித்துறை வைத்திய அதிகாரி மூலமாகவும், வைத்திய அபிவிருத்திச் சபை மூலமாகவும் அதனைச் செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 30. இளைஞர்கள் செயற்றிட்டம் (YOUTH PROGRAMME)

இதன் நிமித்தம் பல கல்லூரிகளிலும் பொது இடங்களிலும் இளைஞர்கள் வட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலமாக இளைஞர்களுக்குக் கல்வி, சேவைத்தன்மை, நாட்டுப்பற்று ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஆங்காங்கே கருத்தரங்குகள் நடாத்தி அவர்களைச் சிறந்த பிரஜைகளாக்குவதற்கு வழிவகை செய்யப்படுகின்றது. மேலும் கல்லூரிக் கல்வியை முடித்து வேலையற்று இருப்பவர்களுக்காகக் கணனி, ஆங்கிலக் கல்வி நடாத்தப்படுகிறது. அதன் 06 மாதப்பயிற்சி முடிவடைந்து பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு 2007ல் சான்றிதழையும் வழங்கியுள்ளோம். இது 2008லும் தொடர்கின்றது. இச் செயற்றிட்டம் Japanese Red Cross ஆல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## 31. இரத்ததானம் (BLOOD DONATION):

இது எமது சங்கத்தின் முக்கிய பணியாகும். இரத்தம் ஒன்று தான் செயற்கையாகப் பெறமுடியாத ஒன்று. தொண்டர்களிடமிருந்து இரத்தத்தைப் பெற்று தேவையானவர்களுக்கு யாழ் போதனா வைத்தியசாலை மூலமாக அளித்துவருகிறோம். இரத்தம் கொடுப்பதற்கான தொண்டர்களுக்கும் நாம் உதவி செய்து அவர்களுக்கு இரத்தம் கொடுப்பதற்கான தூண்டல்களையும் வழங்கிவருகின்றோம். குறிப்பாக உலக குருதிக்கொடை நாட்களில் எமது தொண்டர்களிலிருந்து தேவையான குருதியை யாழ். போதனா வைத்தியசாலை மூலம் பெற்று, இரத்தமின்றி இறக்கும் தறுவாயிலுள்ளோருக்குக் கொடுத்து உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

## 32. எயிட்ஸ் நோய் ஒதுக்கி வைத்தலையும் அவமானத்திற்குட்படுத்தலையும் கட்டுப்படுத்தல் (Helping the AIDS patient to lead a smooth life along with other organizatuions)

எயிட்ஸ் ஒரு ஆபத்தான நோய்தான். அதைத் தடுப்பது கட்டாயம். இந்நோய்ப் பரம்பலைத் தடுப்பது அவசியம். இதையே நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்கிறோம். இது பருத்தித்துறைப் பிரிவில் இயங்கிய நலன்புரிநிலையங்களில் விரிவாக நடைபெற்றது. இதனை யாவருக்கும் எடுத்துச்சொல்வதால் இக்கொடிய நோயைத் தடுத்துக் கொள்ளலாம்.

## 33. அனர்த்தத்துக்கு முகம் கொடுத்தல் (DISASTER PREPAREDNESS):

இயற்கையினாலும் மனிதச் செயற்பாடுகளினாலும் திடீரென ஏற்படுகின்ற பாதிப்பினால் உயிர் உடமை, உறவு, பொருள், சொத்து, வீடு, கட்டிடங்கள் என்பவற்றை இழக்கும் போது அனர்த்தம் ஏற்படுகிறது. இதற்கெல்லாம் செஞ்சிலுவைச் சங்கம் தயார் நிலையில் இருக்கின்றது. அனர்த்தங்கள் இரு வகைப்படும்.

1. **இயற்கையினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள்:** மழை, வெள்ளம், குளிர், நிலச்சரிவு,வெப்பம், வரட்சி, சூறாவளி, புயல், எரிமலை, புவி நடுக்கம், கடல் வெள்ளம், சுனாமி, காட்டுத்தீ, போன்றவை ஆகும்.

2. **மனித செயற்பாட்டினால் ஏற்படும் அனர்த்தங்கள்:** சமூகப்பிணக்கு, இனக் குரோதம், யுத்தம், கண்ணிவெடி, செல் தாக்குதல், மிதிவெடி, விமானத்தாக்குதல், ரொக்கட் தாக்குதல், அணுகுண்டு, கொடியவாயுக் கசிவு என்பனவாகும். இது விடயமாகச் செஞ்சிலுவைச் சங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து அனர்த்தங்கள் ஏற்படும் போது மக்களை வழிப்படுத்தும் முகமாக அவர்களை வேறு சிறந்த இடத்தில் அமர்த்தி அரசாங்க உதவியுடன் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை அளித்து இடம்பெயர்ந்தவர்களைத் தக்க மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் செயற்படுத்துவது முக்கியம். தாக்கம் ஏற்படும் போது உயிரழிப்பு, காயப்படுதல், மனத்தாங்கல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இத்தகைய இழப்புக்களைத் தவிர்ப்பதற்கும் குறைப்பதற்கும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கையே அனர்த்த முகாமைத்துவத் திட்டம் (Disaster Management Plan) ஆகும். இதற்கு எமது சங்கம் தயாராக உள்ளது.

## 34. பாடசாலை மட்டத்திலான மாணவர்களுக்கான சுகாதார, சமூக உளவியல் சேவைகள் (HEALTH AND PSYCHOSOCIAL NEEDS FOR SCHOOL LEVEL CHILDREN):

ஐரோப்பிய யூனியனினதும், டென்மார்க் சங்கத்தினதும் நிதியுதவியுடன் 2004 - 2006 காலப் பகுதியில் யாழ் மாவட்டத்தில் சுகாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட ஆண்டு 06 தொடக்கம் 08 ஆண்டு வரையிலான பாடசாலை மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்குச் சுகாதார சமூக உளவியல் பயிற்சிகள் மூலமாக அவர்களது பாதிப்பைக் குறைப்பதே இத் திட்டமாகும். சிறுவர்களுக்கு நெருக்கீடுகள் கடுமையாக இருந்தால் சிறுவர்களில் உளப்பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. துரதிஸ்டவசமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியில் கடந்த

இரண்டு தசாப்தங்களாக நீடித்திருக்கின்ற பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பாலான சிறுவர்கள் இந்த யுத்த காலத்திலேயே பிறந்து அழிவுகளையும் இறப்புக்களையும் குழப்பங்களையும் அனுபவித்து, அதனூடாக வளர்ந்து வந்திருக்கின்றார்கள். சிறுவர்களில் இதனைத் தாங்கும் சக்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்குச் சாதாரண வாழ்க்கை அனுபவங்களைக் கொடுத்து ஆரோக்கிய அபிவிருத்தி இயக்கப்பாடுகளைத் தூண்டுதலுக்கான முறையில் சிறுவர் விளையாட்டுக்கள், ஆக்கச்செயற்பாடுகள், பாடுதல், ஆடுதல், வரைதல், கதை சொல்லுதல், பாரம்பரியம் சார்ந்த பயிற்சிகள் என்று பலதரப்பட்ட கலை செயற்பாடுகள் மூலம் எல்லாப்பிள்ளைகளின் உளநலத்தையும் விருத்தியையும் மேம்படுத்துவதுடன் அண்மைக்காலமாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களைத் திரும்பவும் இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் செயற்பட்டு இச்சங்கம் வெற்றியும் கண்டுள்ளது.

### 35. நிறைவுரை (CONCLUSION):

செஞ்சிலுவைச் சங்கம் மக்களுக்காகச் செய்யும் சேவையில் சிலவற்றை மேலே பார்த்தோம். மக்களுக்காகவே செஞ்சிலுவைச் சங்கம் சேவை செய்து வருவதனால் மக்களிடையே இச்சங்கம் மிக ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. வருடாவருடம் உறுப்பினர், தொண்டர்களாகவும், பணியாளர்களாகவும் சேவை செய்வதற்காக அதிகமானோர் சங்கமித்துச் சேவை செய்யும் நிறுவனமாக செஞ்சிலுவைச் சங்கம் இருந்து வருகின்றது. பொதுவாக அனர்த்தங்கள் ஏற்படும் பொழுது செஞ்சிலுவைச் சங்கம் மக்களுக்குத் தேவையான சேவைகளை நல்குமென எதிர்பார்க்கலாம். இதுவே இச்சங்கத்தின் சேவைகளாகும்.

✱ ✱ ✱

- தொழிலுக்கு வழிகாட்டல் – சர்வதேச தொழில் நிறுவனத்தின் வரையறை.

  ஒருவர் தனக்குப் பொருத்தமான தொழிலைத் தன் ஆர்வம், ஆற்றல், உளச் சார்பு ஆகிய பண்புகளினதும் தொழிலைப் பெறக்கூடிய வாய்ப்பின் அடிப்படையிலும் தெரிவு செய்து, அதனைப் பெற்று தொழில் வாழ்க்கையில் முன்னேற வழங்கப்படும் உதவியே தொழிலுக்கு ஆற்றுப்படுத்தலாகும்.

- கின்ஸ் பேகின் தொழிலைத் செய்வது தொடர்பான பருவங்கள்.

  கின்ஸ் பேகின் சுயமதிப்பீட்டின் மூலம் தொழிலைத் தெரிவு செய்வதை மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கின்றார்.

  1. 11 வயது வரையுள்ள காலம் – கற்பனைத் தெரிவுப் பருவம்.
  2. 11 – 17 வரையுள்ள காலம் – அனுபவத்தின் மூலம் தெரிவு செய்யும் பருவம்.
  3. 17 வயதுக்குப் பின்னர் – யதார்த்தமாகத் தொழிலைத் தெரிவு செய்யும் பருவம்.



# நிதிச் சந்தையின் அறிமுகமும், அதன் நடைமுறைகளும்

திரு. சி. ஜெயவர்மன்
உயர் நிறைவேற்று அதிகாரி,
நஷனல் அசட் மனேஜ்மன்ட்,
லிமிட்டெட்.

## அறிமுகம்

இலங்கையில் மக்கள் தமது பணத்தைச் சேமிப்பதற்குப் பல வழிமுறைகளைக் கடந்த நூற்றாண்டில் கையாண்டு வந்துள்ளனர். முக்கியமாக வங்கிகள் ஆரம்பிக்கப்பட்ட பிற்பாடு சேமிப்புக் கணக்குகளிலும் மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளிலும் தமது பணத்தைச் சேமித்து வைத்துள்ளனர். இப்படியான சேமிப்புக் கணக்குகளில் தமது பணத்தைச் சேமிக்கும்போது அவர்களது முக்கிய நோக்கம்; தமது பணத்திற்கான பாதுகாப்பு மற்றும் அதில் இருந்து கிடைக்கும் வட்டி வருமானம், மற்றும் தமக்குப் பணம் தேவைப்படும் பட்சத்தில் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை மீள் எடுக்கக்கூடிய வசதி என்பனவாகும். இதில் முக்கியமாக வங்கிகளின் உத்தரவாதம் ஓர் முக்கிய மான காரணியாக இருந்து வந்திருக்கின்றது. கடந்த கால வரலாற்றை நாம் நோக்கும்போது; இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்ற வங்கிகள் அரசாங்க வங்கிகளாக இருப்பதாலும் அவைகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவு இருப்பதாலும் மக்கள் கூடிய நம்பிக்கையை இந்த வங்கிகளில் வைத்துத் தமது பணத்தைக் கால கால மாகச் சேமித்து வந்துள்ளனர்.

1977ம் ஆண்டிற்குப் பிற்பாடு இலங்கை அரசாங்கம் ஓர் மூடிய பொருளாதாரக் கொள்கை அடிப்படையை மாற்றியமைத்து, ஓர் திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவந்தது. இதன் பிற்பாடு பல வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் இலங்கையில் ஆரம்பிக் கப்பட்டன. இவ் வங்கிகள் அரசாங்க வங்கிகளை விடச் சிறந்த முகாமைத்துவத்தையும் வாடிக் கையாளர்களுக்கான நல்ல சேவைகளையும் வழங்கி வந்தன.

1977ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் பல வெளிநாட்டு வங்கிக் கிளைகளும் மற்றும் தனி யார் வங்கிகளும் இயங்கி வந்தாலும் அவர்கள் வெளிநாட்டு வியாபார ஸ்தாபனங்களுக்கே கூடுதலாகச் சேவையை வழங்கி வந்தார்கள். தனியார் வங்கிகள் இலங்கையில் உள்ள வியாபார நிலையங்களுக்குத் தமது சேவைகளை முக்கியமாக வழங்கி வந்துள்ளன.

அண்மைக்காலங்களில் வெளிநாட்டு வங்கி களும் தனியார் வங்கிகளும் பல கிளைகளை நாட் டின்பல இடங்களிலும் ஆரம்பித்து ஓர் பரந்த அளவில் தமது சேவைகளை வழங்கி வருகின்றார்கள்.

## பணத்தைச் சேமிப்பதற்கான நோக்கங்கள் என்ன?

பொதுவாக நாம் பணத்தைச் சேமிக்கும் பொழுது எமது குறுகிய காலத் தேவைகளையும் மற்றும் நீண்டகாலத் தேவைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். நீண்டகாலத் தேவைகள் பொது வாக எமது பிள்ளைகளின் எதிர்கால உயர்படிப் பிற்கான செலவுகள் மற்றும் எமது முதுமைக்கால வைத்தியச் செலவுகள், வேலையிலிருந்து ஓய்வு பெறும் பொழுது எமக்குத் தேவையான பணம் என்பன அடங்கும். எமது குறுகிய காலத்தேவைகள் அன்றாடப் பணத்தேவைகள், வாகனம் கொள்வனவு செய்தல், வீடு கட்டுதல் என்பவை அடங்கும்.

எனவே, நாம் சேமிக்கும் போது இந்த இரண்டு வகைத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் எமது சேமிப்பைக் கையாளவேண்டும். மேலும் இலங்கையில் பல கட்டங்களில் பொரு ளாதார நெருக்கடியை அரசாங்கம் சந்திக்கவேண் டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன. இதனால் நாளுக்கு நாள் பொருள்களின் விலைகள் கூடிய வண்ணம் இருப்பதை நாம் அவதானிக்கக்கூடி யதாக இருக்கின்றது. இதை நாம் பணவீக்கம் எனக் கூறுகின்றோம். இந்த அதிகரித்த பணவீக்கத்தால் எமது நாணயத்தின் பெறுமதி குறைவதையும் நாம் கருத்திற்கொள்ளவேண்டும். இதனால் ஓர் நீண்டகால நோக்கில் நாம் பார்க்கும்பொழுது எமது பணத் தேவைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இதனால் எமது நீண்டகாலப் பணத்தேவைகள் மேலும் மேலும் அதிகரிக்கின்றன. இந்த நீண்டகாலத் தேவைகளை

நாம் பூர்த்தி செய்ய எமக்குள்ள வழிவகைகளைச் சிறிது ஆராய்ந்து பார்க்கலாம்.

### முதலீட்டுச் சந்தை

நாம் வங்கிகளில் எமது பணத்தைச் சேமிக்கும் பொழுது அவர்கள் தரும் வட்டி விகிதங்கள் காலகட்டங்களில் கூடிக் குறைகின்றது. அண்மைக் காலங்களில் சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி விகிதம் 5-12 வீதமாகவும், நிலையான வைப்புக்களுக்கான வட்டி விகிதம் 10-16 வீதமாகவும் காணப்படுகின்றது. அதேவேளையில் பணவீக்கம் 17-18 வீதமாகக் காணப்படுகின்றது.

எனவே நாம் எமது பணத்தின் வளர்ச்சியைப் பணவீக்க விகிதத்திற்கு மேலாகப் பேணவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. முதலீட்டுச் சந்தையில் நாம் பொதுவாக நல்ல கம்பனிகளின் பங்குகளிலும் மற்றும் தொகுதிக்கடன் பத்திரம் மற்றும் அரசாங்க உண்டியல் போன்ற பத்திரங்களிலும் முதலீடு செய்யமுடியும். இவைகள் பொதுவாக இரண்டு தொடக்கம் பத்து ஆண்டுகளுக்கான காலத்திற்கான முதலீடுகளாக நாம் கருதமுடியும். முக்கியமாக நீண்ட காலத்திற்கு பணத்தை இந்தப் பத்திரங்களில் நாம் வைத்திருக்கவேண்டிய தேவைகள் உள்ளன.

### பங்குச் சந்தை

இந்த முதலீட்டுச் சந்தையில் பங்குச் சந்தை ஓர் முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது. கொழும்பு பங்குச் சந்தையில் 238 கம்பனிகள் தமது பங்குகளைப் பட்டியல் இட்டுள்ளன. பங்குத் தரகர்கள் மூலம் நாம் இந்தப் பங்குகளை வாங்கவோ விற்கவோ முடியும். இலங்கை மத்திய வைப்பு முறை (CDS) எனும் பங்குச் சந்தையின் துணைக் கம்பனியில் நாம் இலத்திரன் முறை மூலம் வைப்புச் செய்து ஒன்று அல்லது பல கணக்குகளை அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தரகர்கள் மூலம் ஆரம்பிக்க முடியும்.

பங்குகளை நாம் வாங்குவதன் மூலம் பங்கு லாபத்தையும் மற்றும் மூலதன லாபத்தையும் நாம் எதிர்பார்க்க முடியும். உதாரணமாக நாம் பங்குச் சந்தையில் 100 பங்குகளைக் கம்பனி Aஇல் ரூபா 10 வீதம் ரூபா 1000/= இற்கு வாங்கி வைத்திருக்கும்போது அந்தக் கம்பனி ரூபா ஒன்று பங்கு இலாபமாகவும், அதேவேளையில் ஒரு வருடத்திற்குப் பின்பாக அதன் விலை ரூபா 12/=ஆக அதிகரித்தால் நாம் 30% மொத்தலாபமாக இந்தப் பங்கிலிருந்து பெறமுடியும். பங்குகளின் விலை ஏறியிறங்குவதால் நாம் நட்டமடையக் கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. எனவே சரியாகக் கம்பனிகளின் நிதிக் கூறுகளை ஆராய்ந்து சிறந்த வளர்ச்சி பெறக்கூடிய பங்குகளில் நாம் அவதானமாக முதலீடு செய்தால் நல்ல பலனை அடைய முடியும். இப்பொழுது அகில உலகத்திலும் முதல் பணக்காரனாக உள்ள Warren Buffet தனது பணத்தைப் பங்குகளில் நீண்டகால நோக்கில் முதலீடு செய்து இந்த நிலையை எட்டியுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் பொழுது எமது நோக்கங்கள் சரியாகவும் அதே வேளையில் நீண்டகால முதலீடாகவும் கருதவேண்டும். சரியாகத் தேர்வு செய்து 10-15 பங்குகளை நாம் ஓர் முதலீட்டுத் தேக்கமாக வைத்திருத்தல் எமது நட்ட அச்சத்தை மிகவும் குறைவாகவும் அதே வேளையில் எமக்குக் கிடைக்கும் மொத்த வருமானம் உயர்வாகவும் இருக்கும். எமது தேவைகளிற்கு ஏற்ப எமது சேமிப்பில் ஒரு பகுதியை நாம் பங்குகளில் முதலீடு செய்வதால் இந்த நன்மைகளை அடையமுடியும்.

### கடன் பத்திரங்கள்

கம்பனிகளால் வழங்கப்படும் தொகுதிக் கடன்கள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் எமக்குக் கூடுதலான வட்டி விகிதத்தைத் தரக்கூடியவை. அதிகமாக இரண்டு தொடக்கம் ஐந்து வருடங்களுக்கான முதிர்வுகளை இவை கொண்டிருக்கும். வங்கிகள் மூலமாகவும் தரகர்கள் மூலமாகவும் இவற்றில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்யமுடியும்.

இறுதியாக நாம் அவதானிக்க வேண்டியது, எமது சேமிப்பில் ஓர் பகுதியை வங்கிக் கணக்குகளிலும் இன்னொரு பகுதியைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களிலும் மேலும் ஒரு பகுதியை காணி நிலம், பவுண் போன்றவற்றிலும் சரியான முறையில் நெறிப்படுத்தினால் நமது சேமிப்பிற்கு நல்ல வருமானத்தையும் அதே வேளையில் எமது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ள வழிவகுக்கும்.

❖ ❖ ❖



# சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவு முறைகள்
# METHODS OF PAYMENT IN INTERNATIONAL TRADE

**அ. குமாரவேல்**
விரிவுரையாளர்

சர்வதேச வர்த்தகத்தில் வேறுபட்ட நாடுகளுக்கிடையே கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன. இதில் ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர்களிடம் இருந்து கொடுப்பனவைப் பாதுகாப்பாகப் பெறவேண்டியுள்ளது. வங்கிகள் இக்கொடுப்பனவுகள் தொடர்பான தீர்ப்பனவைச் செய்கின்றன. உண்மையில் ஏற்றுமதியாளர் பொருளின் மீதான தனது கட்டுப்பாட்டை இழக்கும் முன்பு இறக்குமதியாளரிடம் இருந்து கொடுப்பனவைப் பெறுவதற்கான உத்தரவாதத்தைப் பெறவேண்டியுள்ளது. இறக்குமதியாளர் நம்பிக்கையுடையவராகவும் செலுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டவராகவும், இருக்கும் வகையில் ஏற்றுமதியாளர் கொடுப்பனவு தொடர்பாகக் குறைந்தளவு ஆபத்தையே எதிர்கொள்வர்.

கொடுப்பனவு முறையும் அது தொடர்பான விதிகளும் ஏற்றுமதியாளருக்கும் இறக்குமதியாளருக்குமிடையே ஏற்படுகின்ற விற்பனை ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டுக் குறிப்பிடப் படுகிறது. ஏற்றுமதியாளரால் தேவைப்படுத்தப் படுகின்ற கொடுப்பனவு முறை, ஏற்றுமதியாளரின் கடந்தகால அனுபவத்திலும், வெளிநாட்டு வாடிக்கையாளர் தொடர்பாக அவர் கொண்டுள்ள அறிவும் குறிப்பிட்ட சந்தை தொடர்பான அவரது அறிவிலும், ஏனைய ஏற்றுமதியாளருடன் ஏற்படும் போட்டித் தன்மையிலும், அவர் ஏற்றுமதி செய்யும் பொருளின் தன்மையைப் பொறுத்தும், சர்வதேச சூழலைப் பொறுத்தும் தங்குகின்றது. பிரதான சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவு முறையாக அமைபவை, ஆபத்தின் அளவைப் பொறுத்து, குறைந்து செல்லுகின்ற ஒழுங்கில் பின்வருமாறு அமைகின்றது.

1. திறந்த கணக்கு Open Account.
2. ஆவணத்திரட்டல் Documentary Collection.
3. நாணயக் கடன் Documentary Credit.
4. முன்னோக்கிய கொடுப்பனவு Payment in Advance.

## திறந்த கணக்கு

திறந்த கணக்கு விதிகள் கருதுவது ஏற்றுமதியாளர் இறக்குமதியாளருக்கு நேரடியாகவே பொருட்களை அனுப்புகின்றார். அதற்குரிய விற்பனைச்சிட்டை, கப்பல்பத்திரம்போன்றவை இறக்குமதியாளருக்கு நேரடியாகவே அனுப்பப்படுகின்றன. பொருட்கள், பொருத்தமான பத்திரங்கள் ஆகியவற்றை இறக்குமதியாளருக்கு அனுப்பிய அந்தக் கணத்தில் இருந்தே ஏற்றுமதியாளர்பொருட்கள் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிடுகின்றார். இறக்குமதியாளர் கொடுப்பனவைச் செலுத்துவார் என்ற நம்பிக்கையே அவரிடம் எஞ்சியிருக்கும். மிகுந்த நம்பிக்கை கொள்ளக் கூடியவராக இறக்குமதியாளர் இருக்கும் ஒரு நிலையிலேயே ஏற்றமதியாளர் இக்கொடுப்பனவு முறையைக் கையாளமுடியும். இது ஏறக்குறைய ஒரு நாட்டினுள்ளே வியாபாரிகளுக்கிடையே நடைபெறுகின்ற கடன் விற்பனை முறை போன்றதெனக் கொள்ளலாம். சர்வதேச வர்த்தகத்தில் இம்முறையைக் கையாளுகின்றபோது பல பத்திரங்கள் தொடர்புபடுவதே இங்குள்ள பிரதான வேறுபாடாகும். இவ்வாறான கொடுப்பனவு முறையொன்றை ஏற்றுமதியாளர் கையாளவிரும்பின் இறக்குமதியாளர் தொடர்பான ஒரு தகைமை அறிக்கை (Status Report) யை வங்கியின் ஊடாகப் பெற்றுக்கொள்வது அனுகூலமாக இருக்கும்.

## ஆவணத் திரட்டல் Documentary Collection

ஏற்றுமதியாளர் பொருட்களை அனுப்பிய பின்பு, பொருள் தொடர்பான பத்திரங்களை

நேரடியாக இறக்குமதியாளருக்கு அனுப்புவதற் குப் பதிலாக, வங்கிமுறையொன்றினை உப யோகப்படுத்துகின்றார். அதாவது பொருட் களைக் கப்பல் ஏற்றிய பின்பு ஏற்றுமதியாளர், மாற்றுண்டியல், ஏனைய பத்திரங்கள் ஆகிய வற்றை ஒரு வங்கியினூடாக அனுப்புகின்றார். ஏற்றுமதியாளர் கப்பல் பத்திரம் உட்பட்ட பத்தி ரங்களை அனுப்புகின்றபோது திரட்டல், அறிவு றுத்தல் அல்லது கட்டளைகளையும் இணைத்து வங்கிக்கு அனுப்புகின்றார். வங்கிகள் திரட்டல் கட்டளையின்படியே செயலாற்றும். இறக்குமதி யாளருக்குப் பத்திரங்கள் எவ்வாறு விடுவிக்கப்பட வேண்டும் என்ற விதிகளைத் திரட்டல் கட்டளை கொண்டிருக்கும். மாற்றுண்டியல் எழுதப்பட்டு உடன் கொடுப்பனவா? அல்லது தவணைக் கொடுப்பனவா? என்ற அம்சத்தைத் திரட்டல் கட்டளை குறிப்பிட்டுக் காட்டும்.

ஏற்றுமதியாளன் நாட்டு வங்கி, இறக்குமதி யாளன் நாட்டு வங்கிக்குப் பத்திரங்களை திரட் டல் கட்டளையோடு இணைத்து அனுப்பும். இது இருவகையில் அமையும்.

1. கொடுப்பனவுக்கெதிராகப் பத்திரங்கள் D/P முறை.
2. ஏற்றுக்கொள்ளலுக்கெதிராகப் பத்திரங் கள் D/A முறை.

திரட்டல் கட்டளையில் எது குறிப்பிடப்பட் டுள்ளதோ அதன்படி வங்கி செயற்படும். D/P முறையாயின் கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் பின் பத்திரங்களை வங்கி விடுவிக்கும். D/A முறையாயின் ஏற்றுக்கொள்ளலின் பின் பத் திரங்களை வங்கிவிடுவிக்கும். இங்கு ஏற்று மதியாளர், கொடுப்பனவு செலுத்தப்படும் வரை அல்லது சட்டரீதியாகக் கொடுப்பனவைச் செலுத்தும் பொறுப்பை ஏற்கும்வரை பொரு ளின் மீதான கட்டுப்பாட்டைக் கொண்டிருக் கிறார்.

### நாணயக்கடன் Documentary Credit

இறக்குமதியாளன் நாட்டு வங்கியால் கொடுப்பனவு செலுத்தப்படும் என்ற உத்தரவா தத்தைக் கொண்டதே ஆவணக்கடன் ஆகும். நாணயக் கடனின் விதிமுறைகளை அனு சரித்து ஏற்றுமதியாளர் பொருத்தமான பத்தி ரங்களைச் சமர்ப்பிப்பாராயின் கொடுப்பன வைச் செலுத்துவதாக வங்கி உத்தரவாதம் அளிக்கின்றது. இறக்குமதியாளனுக்கும் ஏற்று மதியாளனுக்குமிடையே விற்பனை ஒப்பந்தம் ஏற்படுகின்றது. அவ்விற்பனை ஒப்பந்தத்தில் கொடுப்பனவு முறை ஆவணக்கடன் என ஒப் புக்கொள்ளப்பட்டிருந்தால் இறக்குமதியாள னின் கோரிக்கையின் மீது இறக்குமதியாளன் நாட்டு வங்கி நாணயக் கடனைத் திறக்கின்றது. நாணயக்கடனை வங்கி திறந்தால் கொடுப்பன வைச் செலுத்தும் உத்தரவாதத்தை வங்கி வழங்கியுள்ளது என்பது பொருளாகும். எவ்வாறெனில், கடனின் நிபந்தனைகளும் விதிகளும் நிறைவேற்றப்பட்டால் கொடுப்பனவு செலுத்தப்படும் என்பதாகவே வங்கி உத்தரவா தம் அமைகிறது என்பது இங்கு கவனிக்கத் தக்கது. இறக்குமதியாளன் நாட்டு வங்கி ஏற்று மதியாளன் நாட்டில் உள்ள ஓர் வங்கியூடாக இதனை அறிவிக்கின்றது.

கடனில் குறித்துரைக்கப்பட்டவாறு பொருத்த மான பத்திரங்களைச் சமர்ப்பிக்கப்படவேண்டி யது ஏற்றுமதியாளனின் பொறுப்பாகும். இங்கு கவனிக்கத்தக்க இன்னோர் அம்சம் எதுவெனில் நாணயக்கடன் பத்திரங்களோடு தொடர்புபட்ட ஒன்றாகும். பொருள் ஏற்றுமதி நடைபெறுகின் றது. எனினும், நாணயக்கடன் பொருளோடு நேரடியாகத் தொடர்புபட்டதல்ல. அது பத் திரங்களுடனேயே தொடர்புபட்டது. இறக்குமதி யாளன் தனது பாதுகாப்புக்குத் தேவையான பத்திரங்களைப் பொதுவாகக் கடனின் நிபந்தனை யாகக் குறிப்பிட்டிருப்பான். மேலும், இறக்குமதி யாளனுக்கும் ஏற்றுமதியாளனுக்கும் இடையே ஏற்பட்ட விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை யிலேயே நாணயக்கடன் எழுகின்றது. எனினும் விற்பனை ஒப்பந்த விதி எதுவும் நாணயக் கட னைப் பாதிக்காது. விற்பனை ஒப்பந்தமும் நாண யக் கடனும் இருவேறுபட்ட அம்சங்கள் ஆகும். எனினும் விற்பனை ஒப்பந்தமே நாணயக் கடன் தோன்றுவதற்கு அடிப்படையாகவுள்ளது.

ஒரு நாணயக்கடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தால், ஏற்றுமதியாளர், தான் இறக்குமதியாளனின் நம்பிக்கைத் தன்மையிலும், அவனது செலுத்தும் ஆற்றலிலும் தங்கவில்லை என்பதை அறிந்து கொள்வார். இறக்குமதியாளன் நாட்டு வங்கியின் மதிப்பிலும், அதன் செலுத்தும் ஆற்றலிலும் (Credit Northinness) தங்குகிறார் என்பதைப் புரிந்துகொள்வார். வங்கியின் உத்தரவாதம் பேணப்படவேண்டுமாயின் ஏற்றுமதியாளர் கடனின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். இதன் நடைமுறை பின்வருமாறு அமைகின்றது.

1. ஏற்றுமதியாளனும், இறக்குமதியாளனும் தமது விற்பனை ஒப்பந்தத்தில் நாணயக் கடன் கொடுப்பனவு முறையை ஏற்றுக் கொள்கின்றனர்.

2. இறக்குமதியாளன், தனது நாட்டு வங்கிக்குக் கடனைத் திறக்குமாறு அதிகாரமளிக்கின்றார்.

3. ஏற்றுமதியாளன் நாட்டிலுள்ள வங்கிக்கு இறக்குமதியாளன் நாட்டு வங்கி கடனின் விபரங்களை அனுப்புகின்றது. அவ்வங்கி ஏற்றுமதியாளனுக்குக் கடன் விபரங்களை அறிவிக்கின்றது.

4. ஏற்றுமதியாளன் பொருட்களைக் கப்பல் ஏற்றுகின்றார்.

5. பொருத்தமான தேவைப்படுத்தப்பட்ட பத்திரங்களை ஏற்றுமதியாளன் பெற்று அவற்றை வங்கிக்குச் சமர்ப்பிக்கின்றார்.

6. பத்திரங்கள் கடனின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் வங்கிக் கொடுப்பனவைச் செலுத்துகின்றது.

## முன்னோக்கிய கொடுப்பனவு

பொருட்கள் கப்பல் ஏற்றப்படுவதற்கு முன்பு இறக்குமதியாளன் ஏற்றுமதியாளனுக்கு ஒப்புக் கொண்டபடி கொடுப்பனவைச் செலுத்துகின்றான். பொருளும் பணமும் ஏற்றுமதியாளனிடமே இருக்கின்றது. முழு இழப்பும் அல்லது ஆபத்தும் இறக்குமதியாளனையே சேருகின்றது. ஏற்றுமதியாளன் பூரண பாதுகாப்பைக் கொண்டுள்ளான். ஏற்றுமதியாளனது நம்பிக்கைத் தன்மை, நேர்மைத் தன்மையிலேயே இறக்குமதியாளன் தங்கவேண்டியுள்ளது. இம்முறை பெரும்பாலும் இறக்குமதியாளனால் விரும்பப்படுவதில்லை. சில நாடுகள் இக்கொடுப்பனவு முறையைத்தடைசெய்தும் உள்ளன. எவ்வாறாயினும் வியாபாரத்தின் தன்மையைப் பொறுத்து இது கையாளப்படுகின்றது.

* * *

> நம்மிடமுள்ள அழுக்கான உடைகள், விலை குறைவான பொருட்கள் முதலியவற்றைப் பிறர் பார்த்துவிட்டால் அதை மிகப்பெரிய அவமானமாகக் கருதுகிறோம். இவற்றைவிட நம்மிடமுள்ள தீய எண்ணங்கள், தரக்குறைவான செயல்கள் பற்றித்தான் நாம் அதிகம் அவமானப்பட வேண்டும். அவற்றை உடனே அகற்றவும் வேண்டும்.
>
> – ஐன்ஸ்டீன்



# வெளிநாட்டு வர்த்தகத்தில் வங்கிகளின் பாங்கு

**Mr. R. Nadarajah,**
Managing Director,
General Manager,
Pan Asia Bank.

## வெளிநாட்டு வர்த்தகம்

ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும், அதுவும் குறிப்பாக இலங்கை போன்ற பொருட்கள் சேவைகளில் தன்னிறைவு பெறாத நாடுகளுக்கு வெளிநாட்டு வர்த்தகம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். எமது பொருளாதாரம் பெருமளவில், கணிசமான அளவிற்கு அன்னியச் செலாவணியில் தங்கியிருக்கின்றது. இலங்கைக்குள் வரும் அன்னியச்செலாவணி குறிப்பாக ஏற்றுமதி, வெளிநாடுகளில் வேலை, ஊழியம் செய்வோரின் பண அனுப்புதல்கள், அரச அனுமதியுடன் வெளிநாடுகளில் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோரின் வருவாய், அரசு பெற்றுக்கொள்ளும் கடன்கள் மூலமாகப் பெறப்படுகின்றது. அதேநேரம் இவ்வாறு உள்ளே கொணரப்பட்ட அன்னியச் செலாவணியிலிருந்து நாட்டுக்குத் தேவையான ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் சேவைகளுக்கான கொடுப்பனவுகள், மீள அடைக்கப்படவேண்டிய கடனின் பங்கு, வட்டி ஆகியனவற்றிற்கான அன்னியச் செலாவணி எடுக்கப்படுகின்றது. ஆக, அன்னியச் செலாவணியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளாக ஏற்றுமதி, இறக்குமதி, பிறநாட்டுத் தொழில் வாய்ப்பு ஆகியவற்றையும் அதற்கு வங்கிகளின் பங்களிப்பையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## ஏற்றுமதியும் வங்கிகளும்

வங்கிகள் ஒரு நாட்டின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு அனுசரணையாகப் பல நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றன. ஏற்றுமதி செய்யப்படவேண்டிய பொருட்களின் தன்மைக்கேற்ப கடன் வசதிகளின் தேவைப்பாடுகள் அமைந்திருக்கும். சில பொருட்கள் எந்தவித பெறுமதியும் (Value addition) சேர்க்கப்படாது உற்பத்தியாளரிடம் பெற்றுக்கொண்டபடியே பொதி மாத்திரம் செய்து ஏற்றுமதி செய்யப்படும். உதாரணமாக கஜு, பூக்கள், மீன் வகைகள், தெங்குப் பொருட்கள், பக்கெற்றில் அடைக்கப் படாத தொகையான தேயிலை ஆகியன பழுதடையாதவாறு பெட்டியில் அடைக்கப்பட்டோ வேறு விதமாகவோ பொதி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும். இச் சந்தர்ப்பங்களில் அதிக வேலையாட்களோ, கூடுதல் நேரம், இயந்திர சாதனமோ தேவைப்படாது. மாறாகத் தேயிலைப் பைகள், உடுபுடவைகள் (garments), பதனிடப்பட்ட பொருட்கள், இனிப்பு வகை, பழரசம், பிஸ்கற் வகைகள் ஆகியன பெறுமதி சேர்க்கப்பட்டதான ஏற்றுமதிக்குள் அடங்கும். இங்கு மேலதிக வேலையாட்களும், இயந்திர சாதனங்களும், செயன்முறைக்குத் தேவையான காலமும் அவசியமாகின்றன. இதனால், இந்த ஏற்றுமதித் தேவைகளுக்கு வேறுபட்ட அளவில் கடன் வசதிகள் வெவ்வேறு கால அவகாசத்திற்கு வங்கிகளால் வழங்கப்படும்.

கடன் வழங்கும்போது வங்கியானது முதலில் ஏற்றுமதிக் கட்டளை (export order) ஐ ஏற்றுமதியாளருடன் செய்துகொள்ளப்பட்ட முன்னொழுங்கின்படியான கடிதம், மின்னஞ்சல், டெலெக்ஸ், பக்ஸ் இவற்றில் எதுவெனக் கண்டு அதன் பிரதியைப் பெற்றுக்கொள்ளுவதோடு அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகள், தேவைகளைக் கருத்தில் எடுத்து ஏற்றுமதியாளரிடம் அவை திருப்திகரமான முறையில் நிறைவு செய்யும் ஆற்றல் உள்ளதா? என்பதைக் கவனத்தில் கொள்ளும். கட்டளைக்கு அமைய ஏற்றுமதி நிகழும்போது மாத்திரமே குறித்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் சட்டரீதியான உரிமையை ஏற்றுமதியாளர் பெறுவர்.

வங்கி நாணயக்கடிதம் மூலமாகப் பெறப்பட்ட கட்டளைக்கு அமைவாக நிறைவு செய்யப்பட்ட ஏற்றுமதிக்கான கொடுப்பனவுகளுக்கு வங்கி உத்தரவாதம் உள்ளது. அதனால், ஏற்றுமதி யாளருக்குத் தேவையான கடன் வசதிகளை அமைத்துக் கொடுப்பதில் தடங்கல்கள் மிகக் குறைவாகவே இருக்கும். வங்கி சம்பந்தப்படாத கட்டளைகளுக்கமைய செய்யப்படும் ஏற்றுமதி களுக்கான கொடுப்பனவுகள் மறுபக்கத்து இறக்குமதியாளரின் நாணயத்திலும், நம்பகத் தன்மையிலும் தங்கியிருக்கும். இச்சந்தர்ப்பங் களில் வங்கிகள் கொள்வனவு செய்வோரின் (Buyers) தகுதி, நேர்மை, நிதி நிலைமை பற்றிய வங்கி அபிப்பிராயங்களைப் பெற்றுப் பகிர்ந்திருப்பர். ஏற்றுமதிக்கொடுப்பனவுகள் முக்கியமாக இருவகைப்படும். அவை, கொடுப் பனவு கிடைக்கப்பெற்றதன் மேல் ஆவணங்கள்- (Delivery after payment (D/P), அன்றிக் கொடுப்பனவுக்கு வரையப்பட்ட உண்டியலை ஏற்றுக்கொண்டு அத்தாட்சிக் கையெழுத் திட்டவுடன் ஆவணங்கள் (Delivery after Acception (D/A) ஆகியவையாகும். முன்னை யதில் பணம் கையளிக்கப்படும் வரை ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்கள் மீதான முழு உரிமை யும் ஏற்றுமதியாளரிடமே இருக்கும். பின்னை யதில் கொடுப்பனவு குறித்த கால அவகாசத்தின் பின், ஆதலால் பண்டங்கள் ஏற்கெனவே கைமாறியிருக்கும். மேலும் கொடுப்பனவு செய் யும் காலப்பகுதியில் அவரது நிதி நிலைமை சீரானதாகவும் இருக்கவேண்டும். இங்கு சிறு தடங்கல் ஏற்படக்கூடிய வாய்ப்புண்டு.

ஏற்றுமதிப்பெறுமதி, பொதிசெய்யத் தேவையான காலம், அடங்கியுள்ள இலாபம், கப்பற்கட்டணம், வேறு செலவுகள் போன்ற விப ரங்களை வங்கி ஆராய்ந்து அதற்கமைய ஏற்று மதியாளருக்கு "பொதி செய்கடன்" (Packing Credit) வழங்கும் ஏற்பாட்டைச் செய்வர். இக்கடன் வசதி ஏற்றுமதிக்குத் தேவையான அளவாக இருக்கும். அன்றேல் ஏற்றுமதி நிறைவு செய்யப்படாது போகும்.

ஏற்றுமதியாளருக்கு வங்கியளிக்கும் கடன் வசதிகள் இரு முக்கிய பிரிவுக்குள் அடங்கும். 1. கப்பலேற்றுவதற்கு முன்னான கடன் (Preshipment Finance) வசதி. 2. கப்பலேற்றியதன் பின்னான கடன் (Postshipment Finance) வசதி.

வங்கிக் கடனுக்கு, கப்பலேற்றும் வரை தொடர்புடைய பண்டங்கள், பொதிகள் பொறுப் பாக அமையும். கப்பலேற்றியதன் பின்னரோ ஆவணங்களும் மறுகரையில் இறக்குமதி யாளரின் வங்கியினதோ அன்றி இறக்குமதியா ளரினதோ நாணயம் மட்டுமே பொறுப்பாக அமையும். ஏற்றுமதி பூர்த்தியாகியதும் பண் டங்கள் கப்பலேற்றியது சார்பான பொருட்களின் உரிமையைக் கொடுக்கும் கப்பற் காப்புறுதி உட்பட கட்டளையில் குறிப்பிடப்பட்ட சகல ஆவணங்களையும் வங்கியிடம் சமர்ப்பிப்பர். அவற்றைச் சரிபார்த்து ஏற்றுமதியாளரின் வேண்டுதலுடன் (நட்ட இழப்பு உத்தரவாதத் துடன் - Indemnity) உண்டியலுடன் கூடிய ஆவணங்களைக் கொள்வனவு செய்து உண்டி யல் பெறுமானத்தை அவரது கணக்கில் வரவு வைப்பர். இதிலிருந்து வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையையும் வட்டியையும் எடுத்துக் கொள்வர். இவ்வாறு ஆவணங் களைக் கொள்வனவு செய்து கொடுக்கப்பட்ட பணம் அது இறக்குமதியாளரால் செலுத்தப் படும்வரை கப்பலேற்றிய பின்னான கடனாக அழைக்கப்படும். யாதும் காரணத்தால் கொடுப் பனவு கிடைக்கப்படாதவிடத்து அக்கடனை ஈடுசெய்யும் பொறுப்பு ஏற்றுமதியாளரையே சார்ந்ததாகும்.

புதிய அல்லது ஸ்திரமற்ற ஏற்றுமதியாள ருக்குக் கடன் வசதிகளை அளிப்பதில் வங்கி கவனமாக இருப்பதோடு ஈட்டுப்படையில் சில பொறுப்புக்களைக் கேட்பது வழக்கம். ஏற்றுமதி கள் தடையின்றி நடைபெறுவதற்காக 'இலங்கை ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்' (SLECIC) அரசால் நிறுவப்பட்டது. இந்த நிறு வனத்தால் பல்வேறு காப்புறுதிகள் சிறிய

மாதாந்தக் கட்டணத்துடன் ஒழுங்கமைக்கப்படு கின்றன. முக்கியமானவை :

1. கப்பலேற்றுவதற்கு முன்னான பிணை (Preshipment Guarantee)
2. கப்பலேற்றியதன் பின்னான பிணை (Postshipment Guarantee)
3. ஏற்றுமதிக் கொடுப்பனவுக் காப்புறுதி (Export Payments Policy)

### கப்பலேற்றுவதற்கு முன்னான பிணை

இதன் மூலம், ஏற்றுமதியைத் தயார் செய் வதற்குத் தேவையான உள்ளீடுகள் பெறுவதற் கும், பொதி செய்யும் பொருட்கள், மற்றும் செயற் பாடுகள் சார்ந்த செலவுகள் ஆகியவற்றிற்குத் தேவையான நிதிகளுக்கான வங்கிக் கடனுக்கு உத்தரவாதம் கிடைக்கிறது. வங்கிக்கடன் மீளப் பெறமுடியாத நிலையில் இழப்பின் $66^{2}/_{3}\%$ கூட்டுத்தாபனத்தால் வங்கிக்கு ஈடு செய் யப்படும். ஆயின், வங்கி அக்கடனை வாடிக் கையாளரிடம் மீளப்பெறும் முயற்சிகளைத் தொடர வேண்டும். மீளக்கிடைக்கும் தொகை யில் அதே விகித அடிப்படையில் கூட்டுத்தாப னத்துக்கு ($66^{2}/_{3}\%$ ஐ திருப்பிக்கொடுக்க வேண்டும்.

### கப்பலேற்றியதன் பின்னான பிணை

இப்பிணை மூலம், உண்டியல்களைக் கொள்வனவு செய்வதில் ஏற்படக்கூடிய வங்கி யின் இழப்பின் 75% வரை கூட்டுத்தாபனம் ஈடு செய்யும். சாதாரணமாக, இப்பிணைக்கான நிபந்தனைகளில் ஒன்று ஏற்றுமதியாளர் ஏற்று மதிக் கொடுப்பனவுக் காப்புறுதி பெற்றிருத்தலா கும். அநேக வங்கிகள் நாணயக்கடிதம் சாராத கொடுப்பனவுகளுக்கு இந்தப் பிணையைக் கட்டாயப்படுத்துகின்றன.

### ஏற்றுமதிக் கொடுப்பனவுக் காப்புறுதி

இதன் மூலம் ஏற்றுமதியாளரின் வாடிக்கை யாளரான பொருள் வாங்கியவர் உரிய பணத் தைச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் இழப் பில் 75-80% தொகையை இழப்பீடாகப் பெறமுடியும். இழப்பு நிகழ்ந்த சந்தர்ப்பங்கள் ஏற்புடைத்தாயின், இது அவரது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். மேலிரு காப்புறுதிகளையும் கணக்கில் கொள்ளும் போது வங்கியானது ஏற்படக்கூடிய இழப்பின் 80% வரை ஈடுசெய்கிறது.

### இறக்குமதிக்கான வங்கி வசதிகள்

வங்கிகள் பல வழிகளில் இறக்குமதியாளர் களுக்குத் தமது சேவைகளை வழங்குகின்றன. சில இறக்குமதிகளுக்குப் பொருட்களை வழங்கும் அன்னிய ஏற்றுமதியாளர்களது வங்கி மீது அவர்களது பெயரில் வங்கி நாணயக்கடிதம் வரையப்படவேண்டிய தேவை அமைந்திருக்கும். அப்பொழுது இறக்குமதி செய்வோர், தமது வங்கியை அணுகித் தனது தேவையை முன் வைப்பர். வங்கியும் அவர்களது தொழில் அனு பவம், வங்கியுடன் அதுவரையிலான கொடுக்கல் வாங்கல்கள் முறைமை, தொடர்புகள், அவரது நாணயம், நிதி நிலைமை ஆகியவற்றை எடுத்து நோக்கித் திருப்திகரமானதாக இருப் பின் தேவைப்படுகின்ற நாணயக் கடிதத்தைக் கேட்டுக்கொண்ட வங்கி மீது வரைவர். சில சந்தர்ப்பங்களில் மறு கரையில் உள்ள ஏற்று மதியாளர், இறக்குமதியாளரினதும் வங்கியின தும் நம்பகத்தன்மையையும், பொருட்களின் பெறுமதியையும் பொறுத்து ஒரு தரமானதும், ஏற்புடையதுமான வங்கியொன்றின் உத்தரவா தம் (உறுதி) இணைக்கப்பட்ட நாணயக் கடிதத் தையே (Confirmed letter of Credit) ஏற்றுக் கொள்வர். அப்போது இங்குள்ள வங்கி தனது தொடர்பாடல் கொண்ட அன்னிய வங்கி மூலம் இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்கும். இச் சேவைக்கு மற்ற வங்கிஅறவிடும் தரகுக் கூலி யைத் தனது செலவுகளுடன் சேர்த்து இறக்குமதி யாளரிடம் வசூலிப்பர். இவ்வாறு நாணயக் கடி தங்களை ஏற்படுத்தும்போது வங்கியானது, அன்னியச் செலாவணிக்கட்டுப்பாடு, ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அமைவானதாக உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்வர்.

இந்நாட்களில் நாணயக்கடிதப் புழக்கம் குறைவாகவும், கொடுப்பனவின்மேல் ஆவ

ணங்கள் (Documnets on Payment - DP terms) அல்லது கொடுப்பனவு உண்டியல் ஏற்றுக்கொள் ளப்பட்டதும் ஆவணங்கள் (Documents on acceptance - DA terms) என்ற இரு முக்கிய வழிகளில் இறக்குமதி வர்த்தகம் நடைபெறு கிறது. எமது நாட்டில் இறக்குமதி, ஏற்றுமதி சம்பந்தப்பட்ட சகல அன்னியச் செலாவணிக் கொடுப்பனவுகளும் வங்கிகள் மூலமாகவே செய்யப்படவேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் அமெரிக்க டொலர் 10,000/- இற்கு மேற்படாத தொகையை முற் பணமாகவும் இறக்குமதி சார்ந்து அனுப்பமுடி யும். உரிய இறக்குமதி நேர்வதையும் வங்கி உறுதிப்படுத்த வேண்டும்.

## பொது விடயங்கள்

வங்கிகள் தனது வாடிக்கையாளரது ஏற்று மதி அல்லது இறக்குமதி சார்ந்த நடவடிக்கை களை மேற்பார்வை செய்வதோடு அவர்களது காசுப் பாய்ச்சல், பொதிகள், உள்ளீடுகளின் கிட்டங்கி வசதிகள், உற்பத்தி, பொதி செய்தல், விநியோகித்தல், காட்சிப்படுத்துதல் ஆகிய நடைமுறைகளையும் ஆளணி, இயந்திர சாத னங்களின் இயல்பு நிலையையும் காலத்துக் குக் காலம் பரிசோதிப்பதோடு அவரது வளர்ச்சி நலன் கருதி உரிய ஆலோசனைகளையும் வழங்குவர். ஏற்றுமதியாளருக்கு அனுமதிக் கப்பட்டுள்ள அன்னியச் செலாவணிக் கணக்கை ஆரம்பித்து நடத்தும் வசதியையும் அளிப்பர்.

வங்கிகள் ஒரு நாட்டின் பொருளாதாரத் தின் வளர்ச்சியில் முக்கிய பங்களிப்புச் செய்வ தோடு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஓர் இன்றிய மையாத சேவையையும் அளிக்கிறார்கள்.

◆ ◆ ◆

பிராணிகளின் செயற்பாடுகளின் பண்புகள்

| | | |
|---|---|---|
| அன்னம் | - | சமாதானம் |
| மயில் | - | அழகு |
| ஒழுக்கம் | - | எறும்பு |
| விடாமுயற்சி | - | சிலந்தி |
| பகிர்ந்து உண்ணல் | - | காகம் |
| கூட்டுறவு | - | தேனீ |
| சுத்தம் | - | மான் |
| கட்டளை | - | நாய் |
| வேகம் | - | குதிரை |
| விவேகம் | - | யானை |
| துணிச்சல் | - | புலி |
| கோபம் | - | சிங்கம் |
| இனிமை | - | குயில் |
| தந்திரம் | - | நரி |
| கடின உழைப்பு | - | எருது |



# வங்கிகளும் வாடிக்கையாளர்களும்

திரு. மு. சிவநேசன்
முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பருத்தித்துறை.

தனது தேவைகள் அனைத்தையும் தனது முயற்சியால் மனிதன் நிறைவுசெய்து கொண்ட காலத்தில் பணப் புழக்கம் ஏதும் நடைமுறையில் இருக்கவில்லை. அவனது தேவைகள் விரிவுபட்ட போது தேவைகள் அனைத்தையும் அவனால் தனித்து நின்று உருவாக்கிக்கொள்ள இயல வில்லை.

சமுதாய அமைப்பில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட துறையில் முயற்சிகளை மேற்கொண்டு தேவைகளைப் பண்டமாற்று முறையில் பரி மாறிக் கொண்டனர். இந்த முறையில் பரிமா றப் பயன்படுத்தப்பட்ட பண்டமோ அனைவருக் கும் வசதியாக அமையவில்லை.

இக் காலப்பகுதியில் தானியப் பொதிகளே ஒரு பொதுவான பெறுமதிப் பொருளாகப் பரி மாறப்பட்டு வந்தன. பின்னர் தங்கமும் தொடர்ந்து வெள்ளியும் அளவில் சிறியதான, அதே வேளை பெறுமதியில் உயர்ந்த இலகுவில் பரி மாறத்தக்க ஊடகமாகப் பயன்பாட்டுக்கு வந்தன. எல்லோராலும் விரும்பி இவை ஏற்கப்பட்டமை யால் இவ் உலோகங்கள் நாணயப் புழக்கத்துக்கு வழிகோலின. அளவாக வெட்டப்பட்டுச் செப்ப னிடப்பட்டு அழகுற அவை நாணயங்களாகப் பவனிவரத் தொடங்கின. இக்காலப்பகுதி கி.பி.1500 ஐ அண்மித்தது எனலாம்.

தங்கம், வெள்ளி என்பவற்றின் உலோகப் பெறுமதி அவற்றின் நாணயப் பெறுமதியை விட அதிகமாகவே இருந்து வந்துள்ளது. எனவே நிறையில் குறைந்த பெறுமதி முத்திரையிடப் பட்ட நாணயங்கள் புழக்கத்துக்கு வந்தன.

பெறுமதியான உலோகங்களை வீட்டில் வைத்துக்கொண்டு தமது அலுவல்களுக்குச் செல்ல அஞ்சிய மக்கள் இரும்புக் காப்பறைகளை வைத்திருக்கும் பொற்கொல்லர்களிடம் பாது காப்புக் கருதி அவற்றை ஒப்படைத்தனர். இதற் கெனப் பொற்கொல்லர்களினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஒப்படைக்கப்பட்ட உலோகப் பெறுமதியைத் தாங்கி மக்களிடையே பரிமா றப்படவும் தொடங்கிவிட்டன.

தமது பற்றுச்சீட்டுக்களுக்குப் பெறுமதி இருப்பதை உணர்ந்த பொற்கொல்லர்கள் பணப்பெறுமதிக்காக அவற்றைக் கடனுக்கு எழுதிக்கொடுத்து வட்டியும் வாங்கத் தொடங்கி னார்கள். இவ்வாறாக ஆரம்பமாகிய பொற் கொல்லர் வங்கிகள் மக்களின் நம்பிக்கை யைப் பெற்றிருந்தன.

17ம் 18ம் நூற்றாண்டுகளில் இவ்வாறான பணப்புழக்கம் பிரபல்யமடைந்தது எனலாம். 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனில் சுமார் 400 வங்கிகள் தமது சொந்தப் பணத் தாள்களைப் புழக்கத்திற்கு விட்டிருந்தன. 1844ன் வங்கிச் சட்டம் இந்த வெவ்வேறு வங்கி களின் பணத்தாள் விநியோகத்தை இங்கிலாந்து வங்கியை நோக்கி ஒருமுகப்படுத்தியது என லாம். அடுத்து வங்கித்தொழிலில் ஏற்பட்ட முன் னேற்றம் காசோலைப் புழக்கத்திற்கு வழிகோ லியது. பல சந்தர்ப்பங்களில் பணத்தை விடக் காசோலைகள் சௌகரியமாக இருந்தமை யால் அவை பிரபல்யமடைந்தன. பல்வேறு வங்கிகள் காசோலைகளை வழங்கி வந்ததால் அவற்றைத் தீர்வையாக்கும் நடைமுறைகளும் வகுக்கப்பட்டன.

ஆரம்பத்தில் வசதியானவர்களே வங்கி களை நாடி வந்தாலும் பணத்தாள்களினதும் காசோலைகளினதும் புழக்கம் அனைவரை யும் வங்கிகளை நாடிவரத் தூண்டியது எனலாம். இதனால் பிரிட்டிஷ், ஐரோப்பிய மற்றும் அமெ ரிக்க மக்கள் பெருமளவில் வங்கித் தொடர்பு களைக் கொண்டிருக்கப் பழகிவிட்டனர்.

நாளடைவில் வாடிக்கையாளர்களின் தொகையும் தேவைகளும் விரிவடைய, விரி வடைய வங்கிகளும் தமது வளங்களையும் வசதிகளையும் பெருக்கிக்கொண்டே வந்தன. அதேவேளை மோசடிகள், நிர்வாகத் திறமை யின்மை, முதலீட்டு இழப்புக்கள், அரச ஆதர வின்மை போன்றவற்றால் பல வங்கிகள் முறிந்து போயின. தமது நடவடிக்கைகளுக்கா கத் தரமான வங்கிகளை வாடிக்கையாளர்கள் நம்பிக்கையுடன் நாடிவரவேண்டிய நிலைமை எழுந்தது.

வங்கிகளின் ஸ்திரத் தன்மை அவை வழங் கும் சேவைகளின் தரம் என்பன பற்றியெல் லாம் வாடிக்கையாளர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் தேவைகளுக்கேற்ப வங்கிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் சேவை களும் விரிவடையலாயின.

விஞ்ஞானத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் வங்கிகளின் வேலைப் பழுவை இயந்திரசாதனங்களிடம் கையளிக்க வாய்ப்ப ளித்தது. வங்கிகள் கணனிமயமடையத் தொடங் கியதும் அவற்றின் சேவைகளும் விரிவுடலாயின.

நாளுக்குநாள் அதிகரித்துவரும் வாடிக்கை யாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வாடிக்கை யாளரினதும் விரிவடைந்துவரும் பல்வேறுபட்ட வங்கித் தேவைகள், கூட்டுறவு மற்றும் கூட்டுத் தாபனங்கள், அரச திணைக்களங்கள் போன்ற பெறுமதியான பெரிய வாடிக்கையாளர்களின் கணக்குகளைச் செவ்வனே பேணுதல் போன்ற கருமங்களை இலகுபடுத்த இக்கணனிகள் வரப்பிரசாதமாக அமைகின்றன.

வங்கி நடைமுறைகள், வங்கிச் சட்டங்கள், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஆழமான அறிவுடைய தேர்ச்சிபெற்ற வாடிக்கையாளர் களுக்குத் தரமான சேவைகளை வழங்கு வதற்கு வங்கிகள் தம்மை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும். உலகில் வேகமாக ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பத் தம்மையும் நடைமுறைகளையும் பணியாட்களையும் துரிதமாகத் தயார்செய்துவிடல் வேண்டும். பல்வேறுபட்ட துறைகளில் இருந்தும் மேலதிகப் பற்றையோ கடனையோ கோரிவரும் வாடிக்கை யாளர்களின் தேவைகளைப் பரிசீலிப்பதிலும் வங்கியின் மதிநுட்பம் மேலாண்மை வகிக்க வேண்டும்.

ஒரு வங்கியின் காசோலையொன்றைப் பிறிதோர் வங்கிக்கிளையில் வைப்பில் இட்டால் பணம் கைக்குவருவதை விரைவாக வங்கி செய்து தருவதையே எந்தவொரு வாடிக்கை யாளரும் விரும்புவர். ஆரம்பகாலங்களில் இதற்கு மாதங்களோ வாரங்களோ கூடப் பிடித் திருக்கும். இன்று விம்பத் தீர்வை முறை ஒரே நாளில் காசோலைகளைத் தீர்வை செய்கிறது.

வங்கிகள் தமது பிரதேசத்தில் வாடிக்கை யாளரின் வாழ்க்கை முறை - வசதிகள் - தேவை கள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே அவர் களுக்கான சேவைகளை வழங்கமுடியும். அவர்களுக்கு உதவக்கூடிய கடன் கொள்கை கள் கூட பாரம்பரியம், கலாசாரம் என்பவற்றின் அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுவதாக அமை தல் வேண்டும்.

வங்கிக் கரும பீடங்களில் காசாளர்களுக் குப் பதிலாகத் தன்னியக்கக் கருமபீட இயந்தி ரங்கள் (Automated Teller Machines) அறிமுக மாயின. இவை 24 மணிநேரமும் வங்கிச் சேவைகளை வழங்கிவருகின்றன.

வாடிக்கையாளர் ஒருவர் தனது கணக்கி லுள்ள பணத்தை எந்தவோர் கிளையிலும் அல்லது இடத்திலும் உள்ள தன்னியக்க இயந் திரத்தில் காசாக்கும் வசதிகள் இன்னமும் சரிவர அமையவில்லை. துரிதமாக அறிமுகப் படுத்தப்பட்டு பிரபல்யம் அடைந்துவரும் இவ் இயந்திரங்கள் அனைத்துமே ஒரே கணனி யால் இணைக்கப்பட்டுவிடல் வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக அமைகிறது.

கட்டுக்கட்டாகப் பணத்தைப் பெட்டியில் எடுத் துச்செல்லும் அவசியம் எழாது. ஏன் சட்டைப்

டையில் கூட அதிகம் பணத்தை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. ஒரு அடையாளஅட்டை அளவான பிளாஸ்டிக் அட்டையே பணப்பெட்டி ஆகிவிடும். இது தொலைந்தாலும் களவுபோனா லும்கூட எடுத்தவருக்குப் பயனற்ற பொருளா கவே அமையும்.

பணம் புதிய வடிவங்களை எடுப்பதும் அவை மக்களுக்குச் சௌகரியமாக அமைவ தும் வங்கி நடைமுறையில் மாற்றங்களைப் புகுத்தத்தான் செய்யும். முன்பெல்லாம் நாண யங்களாகவும் பின்பு பணத்தாள்களாகவும் இருந்த நிலை மாறிக் காசோலைகள் பெருமள வில் புழக்கத்திற்கு வந்தன. ஒரு காசோலையை ஒரு கொடுப்பனவுக்காக ஒரு முறை தான் பயன் படுத்த முடியும். இதை இன்றைய வாடிக்கையா ளர்கள் பலரும் பெரிதாக ஏற்க விரும்புவதில்லை.

காசோலைப் புத்தகங்களைக் கொண்டுதிரி வது ஒரு சிரமம். குறிப்பிட்ட ஒரு தொகைக்கு அதை வரைந்து பெற்றுக்கொண்டபின் மீண்டும் வங்கிக்கு ஓடவேண்டும். இவற்றுக்குப் பதிலாகப் பிளாஸ்டிக் அட்டைகள் பிரபல்யமாகிவிட்டன. இவற்றை மீண்டும் மீண்டும் கொடுப்பனவுக ளுக்காகப் பாவிக்க முடியும்.

இந்த எலக்ரோனிக் அட்டைகளை வங்கிகள் பல்வேறு விதமாக அறிமுகப்படுத்தி வருகின்றன. இத்தகைய எலக்ரோனிக் பணப்புழக்கம் எதிர் வரும் ஆண்டுகளில் மிக வேகமாக அதிகரிக்கவே செய்யும். காசோலைகளைப் போலவே எலக் ரோனிக் பணமும் பணத்தாள்களின் பெருமெடுப் பிலான விநியோகத்தைக் குறைக்கவே முய லும். இன்று நாட்டில் உள்ள பணப்புழக்கம் முழு வதையும் பணத்தாள்கள் மூலமே செய்வதென் பது கற்பனையிலும் நினைத்துப் பார்க்க இயலாத காரியம்.

பல வங்கிகளும் பல கிளைகளும் அமைந்த வலையமைப்பு வாடிக்கையாளர்களுக்கு வாய்ப் புக்களை அதிகரிக்கும். அதேவேளை சிக்கல் களையும் தரத் தவறுவதில்லை. வங்கிகளின் போட்டி, நிர்வாகச் செலவுகள் போன்றவற்றின் அதிகரிப்பால் திணறுவது வாடிக்கையாளர் களே. எனவே வங்கிகள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டிய கட்டம் எழுகிறது. பல வங்கிகளோ - அவற்றின் கிளைகளோகூட அவ சியமற்றதாகிவிடும். வாடிக்கையாளர்கள் எலக் ரோனிக் மொழி பேசிச் சுலபமாகக் கருமம் ஆற்றி விடுவார்கள். நினைத்த இடத்திலெல்லாம் இயந்திரங்கள் கண்ணில்பட்டால் போதும் என்ற நிலைமை.

பல்வேறு வங்கிகள் வெவ்வேறு திட்டங் களைப் போட்டு விளம்பரம் செய்வதைவிட அனைத்துச் சேவைகள் வசதிகளையும் ஓரிடத் தில் பெற்றுப் போய்விடவே வாடிக்கையாளர்கள் விரும்புவர். வங்கிகளுக்கிடையிலான விளம்பரப் போட்டி வாடிக்கையாளர்களைக் குழப்பமடைய வைக்கிறது. வட்டி வீதங்களைக் கருத்திற் கொண்டு அடிக்கடி தனது வங்கியை மாற்றும் வாடிக்கையாளர் மொத்தத்தில் நட்டமடைகி றனர். மத்திய வங்கியின் கட்டுப்பாடுகளைச் சரி வரப் பேணும் வங்கியே நீண்டகாலச் செயற்பாடு களுக்குப் பாதுகாப்பானது என்பதை வாடிக்கை யாளர்கள் மறந்துவிடலாகாது.

வங்கிகள் ஒருங்கிணைந்து செயற்படும் போது உருவாகும் செலவுச் சிக்கனம் வாடிக்கை யாளர்களுக்கே பயனைத் தருகின்றது. எலக் ரோனிக் அறிமுகத்தினாலும் - வங்கிகளின் ஒருமித்த செயற்பாட்டினாலும் அலைச்சலும் செலவும் மீதமாகும் என்றே வாடிக்கையாளர் கருதுகின்றனர்.

வியாபாரத்துறையில் காலத்துக்குக் காலம் வேண்டிய ஆலோசனைகளையும் கடன் வசதி களையும் வங்கிகளிடம் வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்தே இருக்கிறார்கள். தமது வங்கி பாது காப்பானதாக இருக்க வேண்டும் - பலமாக இருக்கவேண்டும் - நவீன மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கவேண்டும் - குறைந்த செலவில் சேவை களை அள்ளி வழங்கவேண்டும் - வேண்டிய இடத்திலெல்லாம் அதன் சேவை எட்டவேண் டும் என்றெல்லாம் வாடிக்கையாளர் எதிர்பார்க் கின்றனர்.

வாடிக்கையாளர்கள் நேரடியாக வங்கிக்கு வந்துதான் தமது கருமங்களை ஆற்றவேண்டும் என்ற நிலைமை மாறிவருகிறது. தொலைபேசி மூலமும் தமது தனிப்பட்ட கணனிகள், அலுவலகக் கணனிகள், இன்ரநெற், ஈமெயில் மற்றும் பல எலக்ரோனிக் சாதனங்கள் மூலமும் இருந்த இடத்திலிருந்தே வங்கித் தொடர்புகளை வாடிக்கையாளர்கள் கவனித்துவிடுகின்றனர். வங்கிக் கருமபீடங்களில் மனித முகங்களைச் சந்திப்பது முன்னேறி வரும் நாடுகளில் அருகிவருகிறது எனலாம்.

பணத்தை எடுப்பதற்கு மட்டுமன்றி வைப்பிலிடவும், காசோலைகளை வைப்பிலிடவும் தீர்வையாக்கவும் எலக்ரோனிக் தொழில்நுட்பத்தை வாடிக்கையாளர் நாடி நிற்கின்றனர். இருக்குமிடத்தில் இருந்தே தனது கணனிகளில் வங்கி அறிக்கைகளைப் பெற்றுவிடவும் முயலுகின்றனர். இவற்றினூடாக வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை வீட்டிலோ அலுவலகங்களிலிருந்தோ கவனித்துவிடவும் முடியும்.

வங்கிகள் தமது சேவைகளை வாடிக்கையாளர்களின் இடம் தேடி வந்து ஆற்றுவது ஒன்றும் புதினமானதல்ல. அரச திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள், பாரிய நிறுவனங்களிலெல்லாம் வங்கிக்கிளைகள் இயங்கிவருகின்றன. எனவே இச்சேவை எலக்ரோனிக் யுகத்தில் வீட்டுக்குவீடோ, அலுவலகங்களிற்கோ, நிறுவனங்களிற்கோ இயந்திரங்கள் மூலமாக விஸ்தரிக்கப்படல் வேண்டுமென வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்பதில் வியப்பேதும் இல்லையே.

நவீன கணனிகள் கையில் எடுத்துச் செலத் தக்கவை. இவற்றினுள் ஓர் அலுவலகம் முழுவதையுமே அடக்கிவிடும் அளவுக்குத் தகவல்களைச் சேமிக்க இயலும். இத்தகைய கணனியொன்றைத் தன்னிடம் கொண்டிருக்கும் வாடிக்கையாளர் ஒருவர் தான் செல்லுமிடமெல்லாம் தனது வங்கிச் சேவையையும் பெறத்தக்க நிலையில் இருப்பார். இத்தகைய வசதிகள் செலுலர் தொலைபேசியில் கூட புகுத்தப்பட்டுவிடலாம்.

இலங்கையிலும் வங்கிச் சேவைகள் சர்வதேச தரத்தை எட்டி நிற்கின்றன. அரசினதும் மத்திய வங்கியினதும் கண்காணிப்பு வாடிக்கையாளர்களின் நலன்களில் அக்கறை செலுத்தி வருகின்றது. வாடிக்கையாளர்களும் தமது வங்கியைத் தெரிவு செய்வதில் அவதானமாகவும் மதிநுட்பத்துடனும் செயற்படுகிறார்கள்.


கிராமங்களிலும் சேமிப்புப் பழக்கம் அதிகரித்து வருகிறது. குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் வீண் செலவுகளைத் தவிர்த்து சிக்கனத்தையும் சேமிப்பையும் கவனத்தில் கொள்கிறார்கள். சிறு வியாபாரிகள்கூட இன்று நடைமுறைக் கணக்குகளைப் பேணுவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அரச கொடுப்பனவுகள் பெரும்பாலும் வங்கிக் கணக்குகளின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாள அட்டை இருப்பதுபோல வங்கிக் கணக்கொன்று இருப்பதும் அவசியமாகிறது. இக்கணக்கைக் குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பித்து வாழ்க்கைக் காலம் முழுவதும் பேணி வருதலே சிறப்பானது. தவறவிட்டவர்கள் இன்றே வங்கிக்கு விரைந்து கணக்கினை ஆரம்பிக்கலாம்.

◆ ◆ ◆

ஒருவன் தன்னுடைய உயர் அதிகாரிகளிடம் நெருப்புடன் பழகுவதுபோல் எச்சரிக்கை யாகப் பழகிவர வேண்டும். சுட்டுவிடும் அளவுக்கு நெருக்கமும் கூடாது; குளிர் நீங்கும் அளவுக்கு நெருப்புக்குச் சற்று எட்டி நின்றே பழகவேண்டும். இப்படி அறிவிற் சிறந்த பெருமக்களுடன் மிகுந்த மதிப்புடன் பழகி வருவதன் மூலம் வாழ்க்கையில் வெற்றியை அடிக்கடி சந்திக்க முடியும்.

*– டயோஜினீஸ்*



# ஆயுள் காப்புறுதி : அறிமுகம்
# (Introduction to Life Insurance)

**பா.சுதாகரன்**
உதவி முகாமையாளர்,
ஜனசக்தி காப்புறுதி கம்பனி லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

## 1. ஆயுள் காப்புறுதியின் வரைவிலக்கணம் (Definition of Life Insurance)

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் என்பது "மானுட ஆயுட் காலத்தின் போது ஒரு குறிப்பிட்ட நிகழ்வு, எதிர்பாராத சம்பவம் என்பன நிகழ்ந்தால் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குவதற்கு ஒரு தரப்பு இணக்கம் தெரிவிப்பதாகும்."

"ஆயுள் காப்புறுதியானது, காப்புறுதிப்பத்திரம் அமுலில் இருக்கையில் ஆயுள் காப்புறுதி செய்யப்பட்ட (Life Insured) நபர் மரணிக்கும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட பணத்தொகையை வழங்குகிறது"

ஆயுள் காப்புறுதி பற்றி ஓரளவு அறிவுள்ள எவரும் "உண்மைதான் ஆனால்....." என்று கூற முனைவார்கள். வேறுவார்த்தையில் சொல்வதாயின் மிகச் சிக்கலான சேமிப்பு வகைகளையும், முதலீட்டு உற்பத்திகளையும் மாத்திரமன்றி மரணத்திற்காக நட்டஈட்டையும் வழங்குகின்ற நிதிசார் சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனத்திற்கான விளக்கத்தைப் பொறுத்தமட்டில் நிச்சயமாக இது மிகச் சுருக்கமான விளக்கமாகும்.

மேற்படி வரைவிலக்கணம், ஆயுள் காப்புறுதியின் அடிப்படை மூல நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக—ஒருமரணத்தின் போது விசேடமாக வேளைக்கு முந்திய மரணத்தின்போது ஒருவரின் குடும்பத்திற்கும் சில வேளைகளில் ஏனையவர்களுக்கும் இது உதவி வழங்குகின்றது. அடிப்படையில் காப்புறுதிப் பத்திரங்கள், கடல் வழிப் பிரயாணங்கள் போன்ற தற்காலிக அபாயவாய்ப்பு (risk) நிலைமைகளைக் காப்பீடு செய்வதற்கென குறுகிய காலவரைக்கே வழங்கப்பட்டன. எனினும் ஆயுள் காப்புறுதியானது பரவலாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக மாறியதனால் அது பின்வருபவை உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் பயன்படக் கூடியது என்பது தெளிவாக உணரப்பட்டது.

### அ. பாதுகாப்பு (Protection) :

ஆயுள் காப்புறுதியின் அடிப்படை நோக்கமானது வேளைக்கு முந்திய மரணத்தின்போதும், பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய அது போன்ற கடமைகளின்போதும் காப்பீடு வழங்குகின்ற முக்கியமான ஓர் ஆதாரமாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

### ஆ. சேமிப்புகள் (Savings) :

ஒரு நீண்ட காலவரைச் செயற்பாடு என்ற வகையில் ஒருவரின் குடும்பத்திற்கும் குறிப்பிட்ட ஒருவருக்கும் உதவி வழங்குகிறது.

### இ. முதலீடு (Investment) :

வாழ்க்கைத்தரம் உயர்கையில் செல்வம் சேர்ப்பதும் அதனைப் பணவீக்கத்தின் அழிவில் இருந்தும் பாதுகாத்துக் கொள்வதும் யதார்த்த இலட்சியங்களாகிவிடுகின்றன.

### ஈ. இளைப்பாறுதல் (Retirement):

விசேடமாக மாற்றமடைந்து வருகின்ற கலாசார, சமூக சூழலில் அதிகளவில் இன்றியமையாததாகி விடுகின்றது. .

இந்தக் கற்கையை ஆரம்பிக்கையில் எமது நோக்கமானது குறிப்பிட்ட சில காரணிகளை அதிகளவு ஞாபகமூட்டுவதல்ல, மாறாக நீண்டகால வரை (ஆயுள்) காப்புறுதியின் அடிப்படைகளில் சில விடயங்களை விளங்கிக் கொள்வதும் நவீன சமுதாயத்தில் அது ஆற்றுகின்ற பங்களிப்பை விளங்கிக் கொள்வதுமேயாகும்.

## ஆயுள் காப்புறுதியின் தேவைகள் (Needs for Life Insurance)

ஆயுள் காப்புறுதியின் பல்வேறு பயன்பாடுகளினதும் வளர்ச்சியடைந்து வருகின்ற முக்கியத்துவம் பற்றிய சாராம்சத்தை மேற்கூறப்பட்டவை விளக்குகின்றன. சந்தையிலுள்ள ஆயுள் காப்புறுதி உற்பத்திகள் பின்வரும் வகையிலான பல்வேறு தேவைகளையும் எவ்வாறு நிறைவு செய்

கின்றன. என்ற கண்ணோட்டத்தில் நோக்க நவீன சிந்தனைப் போக்கு முனைகிறது.

**அ. தனிப்பட்ட தேவைகள் (Personal Needs)**

i. தங்கியிருப்போரின் வாழ்க்கைச் செலவுகள்
ii. இறுதிக் கிரியைக்கான செலவுகள்
iii. கல்விக்கான நிதிகள்
iv. ஓய்வுக்கால வருமானம்
v. அடமான மீட்புக்கான நிதிகள்
vi. குடும்ப நிகழ்வுகளுக்கான நிதிகள்
vii. இயலாமைக்கால வருமானம்

**ஆ. வியாபாரத் தேவைகள் *(Business Needs)***

i. பிரதம நபர்கள்
ii. தொழில் பங்காளிகள்
iii. ஊழியர் நலன்கள்

**2. ஆயுள் காப்புறுதிக் கோட்பாடுகள் (Principles of Life Insurance)**

அவையாவன

**அ. காப்புறுதி செய்யத்தகு உரிமை (Insurable Interest)**
காப்புறுதிசெய்து கொள்வதற்கான சட்டரீதி யான உரிமை.

**ஆ. மிகஉயர் நன்னம்பிக்கை (Utmost Good Faith) :**
முக்கியமான தகவல்களை வெளியிடுவதன் அவசியம்.

**இ. அண்மிய காரணம் (Proximate Cause) :**
ஓர் இழப்புக்கான சரியான காரணத்தைத் தீர்மானித்தல்.

**ஈ. இழப்பீடு (Indemnity) :**
சரியான நிதிசார் நட்டஈடு வழங்குதல்.

**உ. பங்களிப்பு (Contribution):**
இழப்பீட்டுக் கொடுப்பனவைக் காப்பீட்டாளர் களிடையே பகிர்ந்து கொள்ளல்.

**ஊ. கடன் பற்றுரிமை மாற்றீடு (Subrogation) :**
மூன்றாம் தரப்பினருக்கு எதிரான உரிமை களைக் காப்பீட்டாளர் பொறுப்பேற்றல்.

## 2.1 காப்புறுதி செய்யத்தகு உரிமை (Insurabnle Interest)

இலகுவான சொற்களில் விளக்குவதாயின் காப்பீட்டுரிமை என்பது காப்புறுதி விடயதானத்திற் கும் (ஆயுள் காப்புறுதி எனின் ஒரு நபர்) சட்டத்தி னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, காப்பீடு செய்து கொள்வதற்கு ஒரு சட்டரீதியான உரிமையைப் பெற் றுக் கொண்ட காப்புறுதி செய்யப்பட்ட வருக்கும் / காப்புறுதிப் பத்திரச் சொந்தக்காரருக்கும் (Policy Owner) இடையிலான தொடர்பு எனலாம். இது ஒரு குறிப்பிட்ட நபருடன் உங்களுக்குத் தொடர்புகள் ஏதும் இல்லாவிட்டால், அவருக்காகக் காப்புறுதியைப் பெற்றுக் கொண்டு அவரது மரணத்தின்போது இலாபம் பெற்றுக் கொள்ள உங்களுக்கு உரிமை இல்லை என்பதைச் சுட்டிக் காட்டும் முகமாகப், பல நூற்றாண்டுகளாகப் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ள ஒரு பொதுச்சட்ட எண்ணக்கருவாகும். இந்த எண் ணக்கருவுடன் கவனிக்கப்பட வேண்டிய குறிப் பிட்ட சில அம்சங்கள் வருமாறு

**அ. தன்னளவிலான காப்புறுதி செய்யத்தகு உரிமை (Insurable Interest in Oneself)**

நாம் அனைவரும் எமது சொந்த ஆயுள் தொடர்பில் காப்பீட்டுரிமையைக் கொண்டுள் ளோம். பொதுச்சட்ட எண்ணக்கருவின் நியதிக ளுக்கு அமையக் கணவனும் மனைவியும் ஒரே நபராகக் கொள்ளப்படுவதுடன், ஒருவர் அவரது வாழ்க்கைத் துணையின் ஆயுள் மீதான காப்பீட்டு ரிமையைக் கொண்டிருக்கலாம். இந்தக் காப்பீட்டு உரிமையானது எப்போதும் வரையறை செய்யப் படாத காப்புறுதித் தொகையைக் கொண்டுள்ளது. இதன் கருத்தாவது நீங்கள், உங்களையோ அல் லது உங்கள் வாழ்க்கைத் துணையையோ விரும் பிய தொகைக்குக் காப்புறுதி செய்து கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறீர்கள் என்பதாகும்.

**ஆ. பிறர் மீதான காப்புறுதி செய்யத்தகு உரிமை (Insurable Interest in Others)**

பிறிதொரு நபர் மீதான காப்பீட்டுரிமையைப் பெற்றுக் கொள்வதற்குக் குறிப்பிட்ட அந்நபரை மரணமடையச் செய்யக்கூடிய அபாயவாய்ப்பின் போது இருந்தாக வேண்டிய ஒரு நிதிசார் தொடர் பினைப் பொதுச்சட்டம் வேண்டி நிற்கிறது.

*உதாரணமாக*

1. **கடனாளிகள் (Debtors) :** ஒரு நபர் உங்களுக்குப் பணம் தரவேண்டியவராக இருப்பின் குறிப்பிட்ட அத்தொகைக்கும் அதற்குண்டான நியாயமான வட்டிக்குமாக அவரை நீங்கள் காப்புறுதி செய்யலாம்.

2. **வியாபாரப் பங்காளிகள் (Business Partners :** ஒரு பங்குடைமை வியாபாரத்தில் ஒரு பங்காளி, மற்றப் பங்காளியை, பங்குடமையில்

அவருக்கு இருக்கின்ற உரிமையின் பெறுமதி வரை காப்புறுதி செய்யலாம்.

3. மூல நபர் காப்புறுதி (Key Man Insurance): இது ஒரு கம்பனி, அதன் வியாபாரத்தை இலாபகர மான முறையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல் வதில் முக்கிய பங்களிப்பை வழங்குகின்ற அதன் ஊழியர் ஒருவருக்காகப் பெற்றுக் கொள்கின்ற காப்புறுதிக்கு வழங்கப்பட்டுள்ள பெயராகும்.

### இ. உரிமை தேவைப்படுவது எப்போது? (When is the Interest needed?)

உரிமையானது ஒப்பந்தம் ஆரம்பமாகின்ற சந்தர்ப் பத்திலும் அதன் பிற்பாடு ஒப்பந்தம் பொருந்தாது போகின்ற சந்தர்ப்பத்திலும் மாத்திரமே தேவைப்படுகின்றது.

*உதாரணமாக*

i. விவாகரத்து : ஒரு நபர் (ஆணோ, பெண்ணோ) தனது வாழ்க்கைத் துணையைக் காப்புறுதி செய்து அதன் பின்னர் விவாகரத்துப் பெற்றுக் கொண்டாலும் காப்புறுதிப் பத்திரத்தை செயற்படு தன்மையில் வைத்துக் கொள்வதற்கும் உரிய வேளையில் அனுகூலத்தைப் (Benefit) பெற்றுக் கொள்வதற்கும் முழுமையான உரித்து டையவராகக் கருதப்படுவார்.

ii. உங்களது கடனாளியைக் காப்புறுதி செய்த பின்னர் கடன் அடைக்கப்பட்டாலும் கூட, தொடர்ந்து காப்புறுதியை நடைமுறையில் வைத்திருந்து உரிய வேளை வரும்போது அதன் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ளச் சட்டம் இடமளிக்கின்றது.

### ஈ. பெயர் குறிக்கப்பட்ட நன்மை பெறுபவர் (Designated Beneficiary)

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் காப்புறுதிப் பத்திரச் சொந்தக்காரரால் உறுதிப்பத்திரத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பெயரிடப்பட்டுள்ள பிரதிகாரர் மீது காப்பீட்டுரிமை இருந்தாக வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

## 2.2 முக்கிய தகவல் வெளிப்படுத்தும் கடப்பாடு (Duty of Disclosure)

இது காப்புறுதியின் இன்னுமோர் கோட்பாடான மிக உயர் நன்னம்பிக்கை ( Uberrimae Fidei) யுடன் தொடர்புடையதாகும். இது அனைத்து முக்கிய மான தகவல்களையும் அவற்றைக் காப்பீட்டாளர் கோரினாலும் அல்லது கோராவிட்டாலும் வெளிப் படுத்தவேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. ஒரு முக்கியமான தகவல் (Material Fact) என்பது ஒரு குறிப்பிட்ட அபாயவாய்ப்பைக் காப்பீடு செய் வதா இல்லையா என்பதை முடிவு செய்வதில் ஒரு விவேகமுள்ள காப்புறுதிப் பொறுப்பேற்பாளரின் தீர்மானத்தில் அல்லது அதனைக் காப்புறுதி செய்வதன் நியதிகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற தகவல்களைக் குறிக்கின்றது. இது சம்பந்தமாக அவதானிக்க வேண்டிய சில அம்சங்கள் வருமாறு

### அ. வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் (Facts that Need to be Disclosed) :

காப்பீட்டாளர் முக்கியமான தகவல்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள விரும்புகிறா ராயினும், நியாயபூர்வமாக நீங்கள் அறிந்து வைத்திருக்க முடியாத உண்மைகளை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்க முடி யாது. உதாரணமாக : தகுதி வாய்ந்த வைத்தியர் களினால் இலகுவாகக் கண்டறியத்தக்க மருத்துவ நிலைமைகளை ஒரு சராசரி மனிதன் சுயமாகவே பரிசோதனை செய்து கண்டறிந்து அத்தகைய வற்றை வெளியிட முடியும் என எதிர்பார்க்க முடியாது.

### ஆ. மருத்துவம் அல்லாத விண்ணப்பம் (Non – Medical Application) :

விண்ணப்பதாரியின் உடல்நலப் பரிசோதனை இன்றிக் காப்புறுதி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பின் பிரேரணைப் பத்திரத்தில் காணப்படாத கேள்வி களினால் தழுவப்பட்டிராத ஏதேனும் ஒரு விடயம் முக்கியமானதா என்பதை நிரூபிப்பதில் காப்பீட் டாளர் பொதுவாகப் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கம்

### இ. கடமையை மீறுதல் (Breach of Duty) :

காப்பீட்டாளர்களினால் பொதுவாக, ஒப்பந் தத்தைச் செல்லுபடியற்றதாக்கக்கூடிய பூரண நம் பிக்கையை மீறுவதற்கு இது சமமாகும். மோசடி சம்பந்தப்பட்டிருப்பின், காப்பீட்டாளர் ஒப்பந்தத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

## 2.3 ஏனைய காப்புறுதிக் கோட்பாடுகள் (Other Insurance Principles)

### அ. இழப்பீடு (Indemnity)

இதன் கருத்து ஏற்பட்டுள்ள இழப்புக்காகத் திட்டவட்டமான நிதிசார் நட்டஈடு வழங்குதல் என்ப

தாகும். இது பொதுக் காப்புறுதி ஒப்பந்தங்களி லேயே மிக முக்கியமானதாக இருக்கின்றது. எனி னும் ஆயுள் காப்புறுதியைப் பொறுத்தவரையில்

i. உறுதிப்பத்திர வருமானங்கள் திட்டவட்ட மான ஒரு நிதிசார் நட்டஈட்டைக் கொண்டிருப் பதில்லை என்பது தெளிவு. எனவேதான் ஆயுள் காப்புறுதிகள் இழப்பீட்டு உறுதிப் பத்திரங்களாக அன்றி, அனுகூல உறுதிப்பத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

ii. ஏனைய வகுப்புக் காப்புறுதிகளில் காப் புறுதித் தொகையானது பொதுவாகக் காப்பீட்டாள ரின் அதிகூடிய பொறுப்பைக் கொண்டமைந்துள் ளது. ஆயுள் காப்புறுதியில் அது பொதுவாகக் குறைந்தபட்சமானதாகவே இருக்கும். (கீழுள்ள குறிப்பைப் பார்க்க)

**குறிப்பு** – காப்புறுதி செய்யப்பட்டுள்ள முழுத்தொகையும் வழங்கப்படுகிறது என்பதால் ஒவ்வொரு ஆயுள் காப்புறுதி உரிமைக்கோரிக்கை யும்"பூரணஇழப்பாகவே" கருதப்படுகிறது. உறு திப்பத்திரமானது இலாபப்பங்குகளுக்கு (அல்லது போனசுக்கு) உரித்துடையதாயிருத்தல் அல்லது மரணம் விபத்து மூலம் ஏற்பட்டிருந்தால் மற்றும் உறுதிப்பத்திரத்தில் விபத்து மரண அனுகூலம் சேர்க்கப்பட்டிருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில்உண் மையில் செலுத்தப்படுகின்ற தொகையானது காப்புறுதித் தொகையையும் விட அதிகமானதாகக் காணப்படும்.

### ஆ. அண்மிய காரணம் (Proximate Cause)

இது காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் இழப்பை ஏற்படுத்துவதில் பிரதான செயற்படுத்தும் காரணி யாக விளங்குகின்றது. மேற்படி கோட்பாடானது ஒவ்வொரு வகுப்புக் காப்புறுதி வியாபாரத்திற்கும் ஏற்புடையதாகிறதாயினும் ஆயுள் காப்புறுதி யைப் பொறுத்தமட்டில் குறைந்தளவு முக்கியத்து வத்தைக் கொண்டதாக இருக்கிறது.

குறிப்பு : ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களுக்கு விதிவிலக்குகள் அரிது என்ற பொதுவான கூற் றுக்குத் தற்கொலையானது ஒரு விதிவிலக்காக இருப்பதன் காரணமாக, மரணம் ஏற்பட்டது தற் கொலையினாலா அல்லது வேறு காரணங்களி னாலா என்பதைத் தீர்மானிப்பதில் அண்மிய காரணம் முக்கிய இடத்தை வகிக்கும். எவ்வாறா யிருப்பினும் ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களைப் பொறுத்தவரையில் தற்கொலையானது குறிப் பிட்ட ஒரு காலப்பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத் தப்பட்ட விதிவிலக்கு என்பதால் இங்கு கூட அக்கோட்பாடு அதன் முழுமையான தாக்கத்தைக் கொண்டிருக்காது.

## 3. ஆயுள் காப்புறுதிக் கட்டுப்பணத்தைக் கணித்தல்

## (Calculation of Life Insurance Premium)

ஒரு குறிப்பிட்ட ஆயுளைக் காப்புறுதி செய்வ தற்கான தனிப்பட்ட கட்டுப்பணத்தைக் கணிப்பிடு கையில் அதே வயதையும் பாலையும் ஒத்த ஒரு வருக்கான சராசரி அபாயவாய்ப்பையும் விடச் சிறந்ததாகவோ அல்லது கெட்டதாகவோ ஆக்கக் கூடிய பிரத்தியேக இலட்சணங்களைக் கருத்திற் கொள்ள வேண்டியேற்படலாம். எவ்வாறிருப்பி னும் அது காப்புறுதிப் பொறுப்பேற்பு விடயத்தில் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

வயது, பால் வேறுபாடு என்பவற்றுக்கமையச் சாதாரணமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக்கூடிய ஆயுள் காப்புறுதி விகிதங்களா னது கீழே ஆராயப்பட்டுள்ள குறிப்பிட்ட பொது வான அம்சங்களுக்கு அமைவாக இருக்கும்

### 3.1 கட்டுப்பணம் (Premium)

ஆயுள் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் (Premium) தொடர்பில் வழமையாகப் பிரயோகிக்கப்படும் பிரமாணங்கள் வருமாறு –

i. **போதுமானது** : ஒப்பந்தத்தின் கீழ் அனு கூலங்களை வழங்குவதற்கும் ஏனைய கட்டுப்பாடு களை நிறைவேற்றுவதற்கும் காப்பீட்டாளருக்கு முடியுமாவதை உறுதிப்படுத்துவதற்கு.

ii. **சமநீதியானது** (நியாயமானது) : அபாய வாய்ப்புக்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்த அனுகூலங் களுக்கும் ஒத்திசைவான ஒருதொகையை ஒவ் வொரு உறுதிப்பத்திரச் சொந்தக்காரரும் செலுத்து வதை உறுதிப்படுத்துவதற்கு.

இந்த மூலப்பிரமாணங்களை எய்துவதற்குப் பல காரணிகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டி யுள்ளது.

### 3.1 அ. இறப்பு வீதம், வட்டி, செலவுகள் (Mortality, Interest & Expenses)

i. **இறப்பு வீதம் (Mortality)** : அநேகமாக மிகப் பொருத்தமானதாகப் பாவிக்கப்பட்டுள்ள இறப்பு விகிதம் என்ற சொற்றொடர், ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவர்கள் மரணிக்கக்கூடிய விகிதத்தை உணர்த்துகின்றது. ஆயுள் காப்புறு

திக் கட்டுப்பணக் கணிப்பீட்டைப் பொறுத்தவரை இது ஒரு முன் நிபந்தனையாகும். ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவர் எப்பொழுது இறப்பார் என்பதைச் சரியாகத் தெரிந்துகொள்வது அறவிடப்பட வேண்டிய சரியான கட்டுப்பணத்தை நிர்ணயிப்பதில் மிக முக்கியமான ஒரு அம்சமாகும். எவ்வாறிருப்பினும் தனிப்பட்ட ஆட்கள் சராசரி மக்களைவிட மிக நீண்டகாலமோ அல்லது குறைந்த காலமோ வாழக்கூடும். ஆனால் 'சராசரிச்சட்டவிதி' ('அதிக எண்ணிக்கை விதி' எனச் சில சமயம் அழைக்கப் படுகிறது)யைப் பின்பற்றி நியாயமான எதிர்வுகூறல்களையும் கணிப்பீடுகளையும் மேற்கொள்ள முடிகிறது. குறிப்பிட்ட எந்தவொரு வயதிலும் எதிர்பார்க்கப்பட்ட இறப்பு விகிதத்தைக் காட்டுகின்ற பிரசுரிக்கப்பட்டுள்ள இறப்புவீத அட்டவணைகளின் பயன்பாட்டின் மூலம் இவை பெரிதும் இலகுவாக்கப்பட்டிருக்கின்றன.

மேலே குறிப்பிட்ட தனிப்பட்டோரின் அபாய வாய்ப்புக்கள் விசேட நிபந்தனைகளையும் கருதுகோள்களையும் அவசியப்படுத்தலாம். ஆனாலும் அது ஒரு காப்புறுதிப் பொறுப்பேற்பு (underwriting) விவகாரமாகும். ஓர் எண்ணக்கரு என்ற வகையில் கட்டுப்பணக் கணிப்பானது இயல்பான அபாய வாய்ப்புக்கள் மற்றும் இயல்பான எதிர்பார்ப்புகள் என்பவற்றை ஆராய்கிறது.

**ii. வட்டி (Interest) :** இலகு வார்த்தையில் சொல்வதாயின் ஆயுள் காப்புறுதியானது ஏதேனும் ஒரு கட்டத்தில் அல்லது எதிர்கால நிகழ்வொன்றைத் தொடர்ந்து ஒரு அனுகூலத்தை வழங்குவதற்காக இப்போதும் குறிப்பிட்ட இடைவெளிகளின் போதும் பணத்தை அறவிடப்படுவதுடன் தொடர்புடையது.

நாம் ஏற்கனவே பணம் பெற்றுக்கொண்டுள்ளோம் என்ற உண்மையின் கருத்து முதலீடு செய்வதற்கு எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்பதாகும். முதலீடு செய்யப்பட்ட கட்டுப்பணங்கள் ஈட்டிக் கொண்ட வட்டி முன்னர் ஈட்டிக் கொண்ட வட்டி என்பன கட்டுப்பண விகிதத்தைத் தீர்மானிப்பதில் தீர்க்கமான காரணிகளாக விளங்குகின்றன.

**குறிப்பு -**

மேலே குறிப்பிட்ட இரண்டு காரணிகளும் கூட்டிணைந்து நிகர கட்டுப்பணம் என்றழைக்கப்படுகின்ற (சிலசமயம் தூய கட்டுப்பணம் என்று அழைக்கப்படுகிறது) அதாவது சாதாரண புள்ளிவிபர எதிர்பார்ப்புக்களின் கீழ் எழுகின்ற மரண உரிமைக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணத்தை வழங்குகின்றது. ஆனாலும் மேலும் பரிசீலனை செய்யப்பட வேண்டிய விவகாரங்களும் உள்ளன.

**iii. செலவுகள் :** எதிர்பார்க்கப்படுவதும் ஏற்படக்கூடியதுமான சகல செலவினங்களையும் கருத்திற் கொள்வதற்காக, நிகரக் கட்டுப்பணம் சேர்ப்புக் கட்டணம் ஒன்றுக்கு (மேலதிகமான அல்லது கூடுதலான ஒரு தொகை) உட்படுதல் வேண்டும். இதில் உள்ளக செயற்பாட்டு ஆகு செலவு, கமிஷன்கள், வரி, எந்தவொரு வணிக நிறுவனத்திற்கும் ஏற்படும் பொதுவான செலவுகள் என்பனவும் அடங்கும். ஆயுள் காப்புறுதியைப் பொறுத்தவரையில் சில புதுவகையான நோய்கள் அல்லது வேறு பேரிடர் (எனினும் அபூர்வம்) காரணமாக அசாதாரண மரண விகிதங்கள் காணப்படக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதுடன் அமுலில் உள்ள கட்டுப்பணங்கள் மாற்றமடையும் சூழல்களுக்கேற்ப பின்னர் அதிகரிக்கப்பட முடியாது. நிகரக்கட்டுப்பண அதிகரிப்பு அத்தகைய எதிர்பாராத நிகழ்வுகளைச் சமாளிக்கக்கூடிய ஒருதொகையை உள்ளடக்கியிருக்கும்.

**குறிப்பு -**

நிகரக் கட்டுப்பணத்துடன் சேர்க்கப்படும் அந்த மேலதிக தொகை மேற்குறிப்பிடப்பட்ட மூன்று அடிப்படை அம்சங்களையும் கருத்திற் கொள்கின்ற "மொத்தக் கட்டுப்பணத்தை" உருவாக்குகிறது.

### 3.1 ஆ. சமஅளவான கட்டுப்பண முறைமை (The Level Premium System)

இதுவே தற்போதைய நியம முறைமையாக இருப்பதுடன் அதன் தனிச்சிறப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**i. அடிப்படை எண்ணக்கரு (Basic Concept) :** இறப்புவிகித அட்டவணையின் மதிநுட்பமான பிரயோகத்தின் மூலம் ஆயுட் கணிப்பீட்டு அடிப்படையிலும் காப்புறுதி செய்யப்படவிருக்கும் ஆயுளின் வயது, பால் மற்றும் தனித்தனிக் காப்புறுதிப் பொறுப்பேற்றல் அம்சங்களின் அடிப்படையில் அமைந்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலத்திற்கான ஒரு சம அளவிலான (மாற்றமடையாத) கட்டுப்பணத்தை நிர்ணயிக்க முடியும் என்பது உணரப்பட்டுள்ளது. உண்மையிலேயே இறப்பு அனுகூலமும் மாற்றமடையாதிருக்கும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

ii. சமஅளவு கட்டுப்பண முறையின் கீழுள்ள ஒரு ஆயுள் காப்புறுதிப் பத்திரமானது விரைவிலேயே உறுதிப்பத்திரச் சொந்தக்காரருக்கு ஒரு பணப் பெறுமதியைக் (கையளிப்ப பெறு மதியை) கட்டியெழுப்ப ஆரம்பிக்கும்

**iii. நீண்டகாலவரை விளைவுகள் :**

சமஅளவு கட்டுப்பண முறையுடன் காணப் பட்ட முன்னைய ஆண்டுகளில் இருந்து அபி விருத்தியடைந்த "மேலதிக" கட்டுப்பணங்களின் சில அம்சங்கள் வருமாறு

i. பணப்பெறுமதி (கையளித்தற் பெறுமதி என்றும் அழைக்கப்படும்) : காப்புறுதியாளரால் ஓர் ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய முடியாது எனினும் உறுதிப்பத்திரச் சொந்தக் காரருக்கு அதனை இரத்துச் செய்ய முடியும். அவர் அவ்வாறு செய்து நிறுவிய செலவுகளை ஈடு செய்வதற்குப் போதுமானதாக அக்காப்புறுதி போதியளவு நீண்ட காலத்திற்கு அமுலில் இருந் திருப்பின் செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தின் ஒரு பகுதி போன்றவற்றை "அதுவரை ஈட்டப்படாத தாக" காப்புறுதியாளர் கருதலாம். எனவே அந்த வேளையில் காப்பறுதியாளரால் "ஈட்டப்படாதது" எனக் கருதப்படும் கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்துதல் போன்றவற்றை வெளிப்படுத்து கின்ற உறுதிப்பத்திரச் சொந்தக்காரருக்குச் செலுத் தப்பட வேண்டிய ஒரு பணப்பெறுமதி அல்லது கையளித்தற் பெறுமதி இருத்தல் வேண்டும்.

குறிப்பு : காப்பீட்டின் குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவின் போது மரண அபாயவாய்ப்புக்கு மாத்திரம் கட்டுப்பணம் வரையறுக்கப்பட்டுள்ள காலவரைக் காப்புறுதிக்கு இது பொருந்தாது. அத்தகைய காப்புறுதிகளுக்குப் பணப்பெறுமதி கிடையாது.

ii.காப்புறுதி மீதான கடன் : பணப்பெறுமதி யானது ஒரு கடனுக்கான மிகச் சிறந்த கூட்டு உத்தர வாதப் பிணையாகக் காணப்படுகிறது. பணப்பெறு மதியைப் பிணையாக வைத்துக் காப்புறுதியாள ரிடமிருந்து பணத்தைக் கடனாகப் பெறுவது நவீன காப்புறுதி விதிகளின் கீழான ஓர் உரிமையாக இப்போது காணப்படுகிறது.

iii.காப்புறுதிப் பத்திரம் கையளித்தல் பெறுமதியை எய்திவிட்டால் அது ஒரு ஆறுமாத காலத்திற்கு நடைமுறையில் வைக்கப்பட்டிருக்கும்

**iv. செலுத்தி முடிக்கப்பட்ட காப்புறுதி (Paid – up Insurance) :**

உறுதிப்பத்திர சொந்தக்காரர் மேற்கொண்டும் கட்டுப்பணம் செலுத்த முடியாது என்று தீர்மா னித்தால் அல்லது அதனைச் செலுத்த விரும்ப வில்லை என்றால் கையளித்தற் காப்புறுதிக்கு மாற்றாக முழுமையாகச் செலுத்தப்பட்டுவிட்ட காப்புறுதி என்று விபரிக்கப்படும் முறையை விபரிக்கலாம். அது நாள்வரை செலுத்தப்பட்ட கட் டுப்பணங்களுக்கு இயைய, காப்புறுதித் தொகை (முகமதிப்பு) குறைவாக இருக்கும் என்பதைத் தவிர முன்னர் இருந்ததைப் போன்றே உறுதிப்பத்திரம் அமுலில் இருப்பதுடன் அவர் மேற்கொண்டும் கட்டுப்பணம் செலுத்தத் தேவையில்லை என்பதுவே இதன் கருத்தாகும். உறுதிப்பத்திரத்தின் ஆரம்ப காலங்களின் காப்பீட்டாளரால் கட்டுப்பணங்கள் முழுதாக ஈட்டப்படவில்லை என்பதன் காரணமாக இது அதிகளவில் சாத்தியமாக இருக்கிறது.

❖ ❖ ❖

பணம் போதவில்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்! உண்மையாகவே இப்படிப் பலமுறை சொன்னால் உங்களுடைய அச்சத்தினாலேயே உங்களிடமுள்ள செல்வம் எல்லாம் போய்விடும். எதையும் தன்னம்பிக்கையுடன், நேர்முனைக் கோணத்திலேயே பேசுங்கள். எதிர் மறையாக நடக்காது, சேராது என்றெல்லாம் பேசாதீர்கள். வார்த்தைகளுக்குச் சக்தி அதிகம்.

*– சார்லஸ் ஃபில்மோர்*

# அரச அலுவலகங்களின் இருப்பு முகாமைத்துவம்

**Mr. K. Kamalarupan, SLACS,**
Zonal Education Office,
Jaffna.

அரச அலுவலகங்களின் இருப்புப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியினைக் கண்டறிவதுடன் பெற்றுக்கொண்ட பொருட்களைப் பயன்படுத்துவதும் பராமரிப்பதும் அரச நிதி முகாமையாளர்களின் கடமையாகும். தற்போதுள்ள அரச அலுவலகங்களில் பல்வேறு காரணங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களைச் சரியாகப் பயன்படுத்தாமையும் பராமரிக்காமையும் ஒரு பாரிய குறைபாடாகவே உள்ளது.

### 1. களஞ்சியம்

அரச திணைக்களங்கள் தமது சேவைகளை இடையறாது வழங்குவதற்குத் தேவையான பொருட்களை வைத்துப் பராமரித்து தேவைக்கு ஏற்றவாறு வழங்கும் இடம் களஞ்சியம் எனப்படும். களஞ்சியம் தொடர்பான கடமைகள் ஒரு கணக்காளருக்கோ அல்லது ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கோ கையளிக்கப்பட்டிருக்கும். களஞ்சியக் காப்பாளர் இவருக்கு இக்கடமைகளை நிறைவேற்ற உதவியாக இருப்பார். களஞ்சியங்களில் பராமரிக்கப்படும் பொருட்கள் இரு வகைப்படும்.

✱ **நுகர்வுப் பொருட்கள்**
உ+ம் காகிதாதிகள், எழுதுசாதனங்கள்.

✱ **இருப்புப் பொருட்கள்**
உ+ம் பொறித்தொகுதி, இயந்திரங்கள் தளபாட உபகரணங்கள், வாகனங்கள்.

### 1.2 களஞ்சியக் காப்பாளர் ஒருவரின் கடமைகள்

- ✱ பொருட்கள் பெறுதல், பாதுகாத்தல், வெளியனுப்புதல்.
- ✱ பொருட்களைச் சரிபார்த்தலும் கணக்கு வைத்தலும்.
- ✱ திரட்சியடைதல், சிதைவுறல், களவு என்பவற்றைத் தடுத்தல்.
- ✱ சரிபார்த்தலுக்கு ஏதுவாக முறையாக ஒழுங்குபடுத்தி வைத்தல்.
- ✱ பொருட்கள் பதிவேடுகள், பொருள் இருப்புப் புத்தகம் என்பவற்றைப் பேணல்.
- ✱ பொருட்பெறுகைக் குறிப்பு, பொருள் அனுப்புதல் குறிப்புப் பராமரித்தல்.
- ✱ எந்நேரத்திலும் புத்தக மீதிப்பொருட்களைப் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தல்.
- ✱ அரச இருப்புப் பொருள் அனைத்திலும் இலங்கை அரச அடையாளமிடல்.

### 1.3 களஞ்சியங்களில் பராமரிக்கப்படும் புத்தகங்கள் பதிவேடுகள் பின்வருமாறு-

- ✱ பொருட்பதிவேடு (inventory Register) பொது 44.
- ✱ நுகர்வுப் பொருட்பதிவேடு (Consumable Register) பொது 198.
- ✱ மின் இணைப்புகளினதும் பொருத்திகளினதும் பதிவேடு பொது 44.
- ✱ புத்தகங்கள் சம்பந்தமான பதிவேடு.
- ✱ அடியிதழ் சேர் புத்தகங்களின் பதிவேடு (Counterfoils Register).

**பொருட் பதிவேடு**

- ◆ இயன்றவரை அகரவரிசைக்கு ஏற்பப் பதிவு செய்தல்.
- ◆ எளிதாக அடையாளம் காணக்கூடியதாக இருத்தல்.
- ◆ இருப்புப் பொருள் அட்டையுடன் இலகுவாக சரிபார்க்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

### 1.4 வழங்கீட்டுக் கட்டளை ஏடு

பொருட்களை வழங்கீடு செய்யும்போது வழங்கீட்டுக் கட்டளை ஒன்று பொது 141 இல் பிரதியுடன் தயாரிக்க வேண்டும். பொருட்களைப் பெறுபவர் மூலப்பிரதியையும், வழங்கியவர் இரண்டாவது பிரதியையும் வைத்திருக்க வேண்டும்.

### 1.5 பற்றுச்சீட்டுக் கட்டளைப் புத்தகம்

பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது பற்றுச்சீட்டுக் கட்டளை ஒன்று படிவம் பொது 219இல் பிரதியுடன் தயாரிக்க வேண்டும். பொருட்களை வழங்கீடு செய்தவரால் மூலப்பிரதியும், பெற் றுக்கொள்ளப்பட்டவரால் இரண்டாம் பிரதியும் வைத்திருக்கப்படவேண்டும்.

### 1.6 இருப்புப் பொருட்களைக் கையேற்றலும் கைவிடுதலும்

களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவர் பதவி துறத்தல், இடமாற்றம் அல்லது நீண்டகால விடுமுறை காரணமாகப் பொருட்களைக் கையேற்றல், கைவிடுதல் நிகழலாம்.

#### கையேற்றல்

பொருட்பதிவேடு, இருப்புப் பொருட்பதிவேட்டு மீதிகளைப் பௌதீக ரீதியாக உள்ள மீதிகளுடன் சரிபார்த்து அவற்றை ஏற்றுக்கொண்டு ஏதாவது குறைவு அல்லது மிகை இருப்பின் அதனைக் கணக்கிட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிட வேண்டும்.

#### கைவிடுதல்

முறையாகத் தயாரிக்கப்பட்ட இரு பட்டியல்களைக் கையேற்கும் அலுவலரிடம் சமர்ப்பித்து, அவரிடமிருந்து ஒப்பத்தினைப் பெற்றுக் கொண்டு அதனைக் கணக்கிட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

### 1.7 ஒப்புக்கொடற் பத்திரம்

இருப்புப் பொருட்களுக்குப் பொறுப்பாக இருந்த ஒரு அலுவலர் இருப்புப் பொருட்களை வேறு ஒரு அலுவலருக்குக் கையளிக்கும்போது பொருட்களை கையளித்தவர் கையேற்றவரிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருட்களுக்கான ஒப்பந்தத்தினைப் பெற்றுக் கணக்கிட்டு அலுவலகத்திற்கு அறிக்கையிடல் அவசியம் ஆகும். இருப்புப் பொருட்களிற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்களின் பெயர், பொறுப்பாக இருந்த காலப்பகுதி என்பவற்றை உள்ளடக்கி பொருட்பதிவேட்டுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது இழப்பு கண்டுபிடிக்கப்பட்டால் இழப்புக்களுக்குப் பொறுப்பானவரை அடையாளம் காண இது உதவியாக அமையும்.

ஏதாவது ஒரு காரணத்தினால் பொருட்களுக்குப் பொறுப்பாக இருந்தவரிடமிருந்து பௌதிக ரீதியாகச் செலவைப் பார்த்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளவியலாதவிடத்து அலுவலகத்தில் உள்ள இருப்புப் பதிவேட்டுடன் உண்மையான மீதியினைச் சரிபார்த்துப் பொறுப்பேற்றுக் கொண்டு குறைவு, மிகை இருப்பின் கணக்கிட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிட வேண்டும். இவற்றைச் சரிபார்க்கும்போது குறைந்தது மூன்று உறுப்பினர்கள் சமூகம் கொடுத்தல் வேண்டும்.

#### கையிருப்புச் சமதள நிலைகள்

கணக்கீட்டு உத்தியோகத்தரைத் திருப்தி செய்யும் வகையில் கையிருப்புப் பொருட்களை மிகையாகவோ அல்லது குறையாகவோ வைத்திருக்காது போதியளவு கையிருப்புக்களை வைத்திருக்கக் களஞ்சிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 1.9 இருப்புப் பொருள் விதிகள்

பெருந்தொகையான இருப்புப் பொருட்களைக் கொண்டுள்ள, பொருட்களை ஆக்குகின்ற அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளும் திணைக்களங்கள் தமது இருப்புக்களை முறையாகப் பராமரிப்பதற்காகப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருடனும் கணக்காய்வாளர் திணைக்களத்துடனும் ஆலோசித்துச் சில விதிகளை ஆக்கி அவற்றைத் திறைசேரியில் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும்.

### 2 அளவீட்டுச் சபை

அளவீட்டுச் சபை என்பது அரச திணைக்களங்களினது இருப்புப் பொருட்களையும் காசு, முத்திரைப் பிணைப் பத்திரங்கள் என்பவற்றையும் வருட முடிவின் போது அல்லது தேவையேற்படும் போது புத்தக மீதியுடன் சரிபார்ப்பதற்காக நியமிக்கப்படும் சபை ஆகும்.

## 2.1 அளவீட்டுச் சபை நியமனம்

அளவீட்டுச் சபையானது ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 15ம் திகதியளவில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரால் நியமிக்கப்படும். இச்சபை வருடமுடிவில் கூடிய விரைவில் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துத் திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் இவற்றைக் கணக்காய்வாளர் நாயகத்துக்கு அனுப்பிவைப்பார்.

இச் சபையானது செலவினத் தலைப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு இருப்பில் இருக்கும் பொருட்கள், களஞ்சிய முற்பணக் கணக்கு நடவடிக்கையின்கீழ் இருப்பில் இருக்கும் பொருட்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தராலும், முத்திரை, காசு, பிணைப் பத்திரங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் நியமிக்கப்படும். இச்சபையானது தாபனத்தின் அளவிற்கு ஏற்றவாறு இருவருக்குக் குறையாத உத்தியோகத்தர்களைக் கொண்டிருக்கும். இதில் ஒருவர் தலைவராகவும் ஏனையவர்கள் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள். தொழில்நுட்பம் சார்ந்த பொருட்களாயின் அப் பொருட்களுடன் பரிட்சயமுடைய ஒருவர் நியமிக்கப்படுவர்.

## 2.2 அளவீட்டுச் சபையொன்று நியமிக்கப்படும் சந்தர்ப்பங்கள்

- வருட முடிவில்.
- களஞ்சியப்பொறுப்பு உத்தியோகத்தரின் இடமாற்றம்.
- பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டால்.
- மோசடி, களவு ஏற்பட்டால்.
- இயற்கைக் காரணங்களால் களஞ்சியம் பாதிக்கப்பட்டால்.

## 2.3 களஞ்சிய மதிப்பீட்டின்போது பயன்படுத்தப்படும் படிவங்கள்

- திறைசேரியும் கணக்காய்வும் படிவம் 66 – களஞ்சிய மதிப்பீடு.
- பொது 47 – பாவனைக்குதவாத பொருள் மதிப்பீடு.

## 2.4 அளவீட்டுச் சபை தொடர்பாகக் களஞ்சியக் காப்பாளரின் பொறுப்புக்கள்

- வருட முடிவில் இருப்புப் புத்தகங்களைக் கூட்டிக் காட்டி மீதி கொண்டு செல்லல்.
- பாவனையிலுள்ள பொருட்பதிவேடு, இருப்பு பொருட்பதிவேட்டுப் புத்தகங்களின் பட்டியல் ஒன்று சமர்ப்பித்தல்.
- தி.க.66இல் பொருட்களின் பெயர், பொருட்பதிவேட்டுப் பக்க இலக்கம், புத்தகப்படி மீதி என்பவற்றைக் குறிப்பிட்டு 3 பிரதிகளைச் சமர்ப்பித்தல்.
- கடந்த மதிப்பீட்டு மீதியும், உரிய வருட மீதியும் சரியானவை எனச் சான்றுபடுத்தல்.
- பாவனைக்குதவாத பொருட்களைப் பொது 47இல் 4 பிரதிகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.

## 2.5 அளவீட்டுச் சபையின் பொறுப்புகள் / அதிகாரங்கள்

- பொருட்பதிவேடுகளையும், தி.க. 66ஐயும் வைத்து ஆய்வு செய்தல்.
- பொருட்பதிவேட்டில் உள்ள ஒழுங்கில் பொருட்களைப் பௌதீக ரீதியில் செவ்வை பார்த்தல்.
- தி.க.66ல் உண்மையான பொருட்களின் மீதிகளைப் பதிவு செய்தல்.
- மிகை, குறை என்பவற்றைக் குறித்துக் கொள்ளல்.
- வித்தியாசத்திற்கு விளக்கம் கோரிப் பெறல்.
- பொருட்களின் தற்போதைய நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- ஒரே பொருட்கள் பதிலீடு செய்யப்படுவதைத் தடுத்தல்.
- தி.க.66ல் மிகை குறைவான பொருட்களுக்குத் தனிப்பட்டியல் தயாரித்து களஞ்சியக் காப்பாளரிடம் உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- பாவனைக்குதவாத பொருட்களை விற்க / அழித்து ஒழிக்க விதப்புரை செய்தல்.
- மீதியினைச் சரிபார்த்து ஒப்பமிடல்.
- புத்தகமீதிக்கான சான்றிதழைக் களஞ்சியப் பொறுப்பாளரிடம் இருந்து பெறல்.

- அவதானிக்கப்பட்ட விடயங்களைத் திணைக் களத் தலைவருக்கு அறிக்கையிடல்.

## 2.6 பாவனைக்குதவாத பொருட்கள் மீதி மதிப்பீடு

கணிசமான காலம் பாவனையில் இருந்தமையால் அல்லது ஏதேனும் பாதிப்புக் காரணமாகப் பொருட்கள் பாவிக்க முடியாமல் போகலாம். இத்தகைய பொருட்கள் திணைக்களத் தலைவரின் அனுமதியின்பெயரில் புத்தகங்களிலிருந்து நீக்கிவிடலாம். இப் பொருட்கள் பொது 47இல் தயாரிக்கப்பட்டு 4 பிரதிகளில், மதிப்பீட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்க, மதிப்பீட்டுச் சபை பின்வருமாறு தனது சிபாரிசினைத் திணைக் களத் தலைவருக்கு வழங்கும்.

- (R) திருத்த வேண்டிய பொருட்கள் (Repairs).
- (S) விற்கவேண்டியவை (Sale).
- (D) அழிக்கவேண்டியவை (Destroy).
- (T) மாற்றவேண்டியவை (Transfer).

திணைக்களத் தலைவர் மேற்படி சிபார் சினை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் போது மதிப்பீட்டுச் சபை அங்கத்தவர் ஒருவர் சமுகமளிக்க வேண்டும்.

## 2.7 மதிப்பீட்டுச் சபை அறிக்கைமீதான நடவடிக்கைகள்

- Δ மதிப்பீட்டுச்சபை அறிக்கையில் குறைவாகவோ அல்லது மிகையாகவோ காணப்படும் பொருட்கள் தொடர்பாகக் களஞ்சியக்காப்பாளர் விளக்கமளிக்குமாறு திணைக்களத் தலைவரால் கோரலாம். சில சமயம் விளக்கம் ஏற்றுக்கொள்ளமுடியாதவிடத்துக் குறைவான பொருட்களைப் பதிலீடு செய்ய ஏற்படும் செலவை அறவிடல். மேலதிகமாயின் புத்தக மீதியுடன் சேர்க்கக் கோரல்.
- Δ மதிப்பீட்டுச் சபையின் விதப்புரைகளினதும் சரிபார்த்தற் படிவங்களினதும் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்துக்கு அனுப்புதல்.
- Δ அறவிடப்படவேண்டிய தொகை அறவிடப் பட்டவுடன் மீதியைப் பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கல்.

**அறவீட்டு அல்லது பதிவழிப்புப் பெறுமதி கணித்தல்**

- Δ வியாபார முற்பணக் கணக்குகளாயின் கொள்வனவு அல்லது சந்தை விலை எது குறைவோ அத்தொகை.
- Δ களஞ்சிய முற்பணக் கணக்காயின் - கொள்விலை.

**உபயோகிக்கத் தகாத பொருட்களை விற்பனை செய்தல், அழித்தல் ஆகியவற்றின்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்.**

- Δ நியாயமான விளம்பரம் கொடுக்கப்படல்.
- Δ அளவீட்டுச் சபை உறுப்பினர் சமுகமளித் திருத்தல்.
- Δ தள்ளுபடி செய்யப்பட்ட பொருட்களுடன் நல்ல நிலையில் உள்ள அவற்றின் பகுதிகள் பொருத்தப்படவில்லை என உறுதிப் படுத்தல்.
- Δ விற்கப்பட்டு எடுத்துச் செல்லப்படாத, விற்காத பொருட்களை உரியவாறு அழித்தல்.
- Δ விற்கப்பட்ட பொருட்கள், அவற்றின் விலை அழிக்கப்பட்ட பொருட்கள் என்பன சபையின் குறிப்பில் இணைக்கப்படல்.
- Δ இலங்கை அரசாங்கச் சின்னம் அழிக்கப் பட்டதை உறுதிப்படுத்தல்.
- Δ விற்பனை வரும்படி, அரசிறைக்கு வரவு வைத்தல். முற்பணக்கணக்கு நடவடிக் கையாயின் முற்பணக்கணக்குக்கு வரவு வைக்கவேண்டும்.

***உசாத்துணை நூல்கள்***


1. "இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்" 1992 அரச அச்சகத் திணைக்களம் - கொழும்பு.
2. அரச கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான கைநூல் 1999 திருத்தி அமைக்கப்பட்டது. 1999 நிதி அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கி கொழும்பு.
3. அ. இரவீந்திரன், கு. அருளானந்தம் 1998 அரச நிதி நடைமுறைகள் : திருமதி. இ. சுசீலாதேவி, மட்டக்களப்பு.
4. பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 1973 கச்சேரி கைநூல் அரச அச்சகத் திணைக்களம்.


* * *



# நாடுகளின் அபிவிருத்தியில் அரசுகளின் பங்கு


**சி. கிருஸ்ணானந்தன்**

திணைக்களத் தலைவர்,
முகாமைத்துவ அபிவிருத்தி
பயிற்சித் திணைக்களம்,
கிழக்கு மாகாணசபை,
திருகோணமலை.


பொருளாதார நிபுணர்கள் பொதுவாக உலகில் உள்ள நாடுகளை அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளென இரு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளாக மாறுவதற்குக் கனவு காண்கின்றன. அதற்காகப் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொள்கின்றன.

## 01. அபிவிருத்தி :-

தனி மனிதனைப் பொறுத்தமட்டில் தனது வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றான். அந்த முயற்சியில் பல தடைகளை எதிர்கொள்கின்றான். அந்தத் தடைகளை மீறி முன்னேறுவதற்குப் பல்வேறு வழிகளைக் கையாளுகின்றான். ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாடு கிட்டும் ஒரு மனிதனுக்கு இரண்டு வேளை சாப்பாடு கிட்டும்போது அது அவனுக்கு அபிவிருத்தியாகிறது. சாப்பாடு போதியளவு கிட்டும் ஒருவனுக்கு அவனுடைய பிள்ளைகளின் படிப்புத் தேவைகள் பூர்த்தியாவது அபிவிருத்தியாகின்றது. இந்த வகையில் மனிதர்களின் தேவைகள் பூர்த்தியாவதை அல்லது அத் தேவைகள் மேலும் மேலும் பூர்த்தி அடைவதற்கு முயற்சிப்பதை அபிவிருத்தி என்கின்றனர். இவ்வாறு அபிவிருத்தி என்பது முன்னேற்றம் என்ற கருத்துடன் இணைந்து நோக்கப்படுகின்றது. அதாவது மனிதனின் தேவைகள் பூர்த்தியாவதற்கான வாய்ப்புகள் கிட்டுவதை அபிவிருத்தி எனக் கருதுகின்றோம். இது பெருகிவரும் மனிதனின் தேவைகளை திருப்திப்படுத்தக்கூடிய வருமான அதிகரிப்பைக் குறிக்கின்றது. இது தனி மனிதனுக்கும் பொருந்தும் நாடுகளுக்கும் பொருந்தும்.

ஆயினும் அபிவிருத்தி பற்றி யாவருக்கும் பொருந்தக்கூடிய வரைவிலக்கணத்தை வரையறை செய்து கொள்வது அது பற்றிய கருத்துக்களை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அமையும்.

வழமையாக அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடனேயே இணைக்கப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி மட்டும் அபிவிருத்தியாக மாட்டாது. அபிவிருத்தியை முழுமையாகப் பார்க்குமிடத்து அது பொருளாதார வளர்ச்சியுடன் கல்வி மேம்பாடு, சுகாதார வசதி, வறுமை ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு, பால் சமத்துவம், அரசியல், சிவில் உரிமைகள், மனித உரிமைகள் என்பனவற்றையும் உள்ளடக்கியதாக அமைந்திருத்தல் வேண்டும். இவற்றுள் பொருளாதார வளர்ச்சியானது மிக மிக முக்கியமானதென்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளுக்கும் இடமில்லை. ஆயினும் ஏனைய மூலகங்களும் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றினைத் தொடை வடிவில் இவ்வாறு குறிப்பிடலாம்.




அபிவிருத்தி என்ற தொடையில் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, பால் சமத்துவம், சூழல் பாதுகாப்பு, சிவில் அரசியல் உரிமைகள் என்பன மூலகங்களாகின்றன.

## 02. அபிவிருத்தியில் அரசின் பங்கு : -

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அந்த நாட்டின் அரசு முக்கிய பங்கு வகிக்கின்றது. அபிவிருத்தியில் அரசுகளின் பங்களிப்புக் காலத்திற்குக் காலம் வெவ்வேறு விதமாக இருந்துவந்துள்ளது. நமது நாடான இலங்கையிலும் அரசின் செயற்பாடுகள் சரித்திர காலம் தொடங்கி இன்று வரை மாறி மாறி வந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

**02.1. மன்னர் ஆட்சிக்காலம்:-** இக் காலத்திலும் அரச சேவை என்ற ஒன்று இருந்து வந்துள்ளது. வரி வசூலித்து அவற்றில் இருந்து மன்னர்களின் தேவைகள், போர் வீரர்களின் செலவுகள், அரசாங்க உத்தியோகத்தர்களின் செலவுகள் போக மிகுதி விவசாய வளர்ச்சிக்காகவும், குளங்கள் வெட்டுவதற்கும், வீதிகள் அமைப்பதற்கும், பௌத்த விகாரைகள் கட்டுவதற்கும் பயன்படுத் தப்பட்டன.

**02.2. காலனித்துவ காலம் :-** மேற்கத்திய நாடுகள் இலங்கையை ஆண்ட காலத்தில் அந்த நாடுகளினால் எமது நாட்டின் வளங்கள் சுரண் டப்பட்டன. எனினும் அவர்களின் சில செயற்பாடு கள் மூலம் எமது நாட்டில் முன்னேற்றங்களும் ஏற் பட்டன. மக்களிடமிருந்து வரிகளாகப் பெற்ற வருமா னத்திலிருந்து சட்டம் ஒழுங்கு பேணப்பட்டன. அத்து டன் பல அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டன. ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப் பட்டது. அத்துடன் தேயிலை, இறப்பர் போன்ற வணிக ரீதியான விவசாய உற்பத்திகள் மூலம் இலங்கை பெருந்தொகையான அன்னியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இவற்றுக்கெல்லாம் அக் காலத்தில் இருந்த அரச சேவை உந்து சக்தியாக விளங்கியது.

**02.3. சுதந்திரத்திற்குப் பின் 1948 - 1956:-** இக் காலகட்டத்தில் காலனித்துவ காலத்தில் இருந்த நடைமுறைகளே சிறு சிறு மாற்றங்களு டன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. மக்களின் நலன்களுக்காக இலவச கல்வித்திட்டம் போன் றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

**02.4. 1956 — 1977ஆம் ஆண்டு காலப்பகுதி :-** இக்காலப் பகுதியில் அரசினு டைய முயற்சியினால் மட்டுமே மக்களினுடைய தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற எண்ணக்கரு உருவானது. மக்களுக்கு வேலை கொடுப்பதாக இருந்தாலும் சரி, பொருட்களின் விலைகளைக் குறைப்பதாக இருந்தாலும் சரி, நீர்ப்பாசன அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி என்றாலும் சரி யாவற்றிலும் அரசு மாத்திரமே செயல்பட வேண்டுமென்ற கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெளி நாட்டு இறக்குமதிகள் தடைசெய்யப்பட்டு உள் நாட்டு உற்பத்திகள் ஊக்கப்படுத்தப்பட்டன. இதனால் இக்காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த பொருளாதாரம் மூடிய பொருளாதாரமென அழைக்கப்பட்டது. இச்சூழலில் அரச நிர்வாகம் பாரிய பொறுப்புடன் செயற்பட வேண்டி ஏற்பட்டது. அரச நிர்வாகத்திற்கே முதலிடம் வழங்கப்பட்டது. ஆயினும் இது பல பிரச்சினைகளை உருவாக்கி யது. அரச இயந்திரத்தால் வினைத்திறனுடன் செயல்பட இயலவில்லை. ஊழல்களும் வீண் விரயங்களும் தலைவிரித்தாடின. மக்களின் வாழ்க்கைத்தரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

**02.5. 1977 — 1990ஆம் ஆண்டு காலப் பகுதி:-** இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மூடிய பொருளாதாரம் தோல்வி அடைந்த தெனக் கருதப்பட்டு இக் காலகட்டத்தில் திறந்த பொருளாதாரமுறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் போட்டி போடவேண்டியிருந்தது. தனியார் துறையே அபிவிருத்திப் பணிகள் யாவற் றிலும் ஈடுபட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இதனால் அரசின் பங்களிப்பு குறைவாகக் காணப்பட்டது. இந்த நடைமுறைகள் குறிப்பிட்ட சிலர் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் பெரும்பாலான மக்கள் வறுமை யில் சிக்கி வாழ்க்கையுடன் போராடுவதற்கும் வழிவகுத்தன.


**02.6. 1990 - இன்று வரை உள்ள காலப்பகுதி:-** இது உலக மயமாக்கல் காலம். உலகில் உள்ள சகல நாடுகளும் உலகமயமாக்கல் என்ற அமைப்புக்குள் உள்ளடக்கப்படுகின்றன. நாடுகளின் எல்லைகள் உடைந்து முழு உலகமும் சுருங்கி ஒரு கிராமமாக மாறியது. ஒவ்வொரு நாடுகளின் பொருளாதாரங்களும் உலகப் பொருளாதாரத்தின் பிரிக்க முடியாத பங்காக மாற்றம் எடுத்தன. உலக பொருளாதாரத்துள் தனித்தனி நாடுகளின் பொருளாதாரங்களை இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் முன்வைக்கப்பட்டன.

சிறியதோ பெரியதோ உலகத்தில் உள்ள நாடுகளெல்லாம் உலகமயமாக்கல் என்னும் அமைப்புக்குள் உள்ளடக்கப்படுகின்றன. இந்தப் பண்பு நாடுகளின் எல்லைகளை உடைத்து உலக

பொருளாதாரத்துக்குள் அவைகளை இணைத்துக் கொள்கிறது. இதனால் ஒவ்வொரு நாடும் தமது பொருளாதாரத்தை முன்னிட்டு ஒன்றுடன் ஒன்று கடுமையாகப் போட்டியிடுகின்றன. ஒவ்வொரு நாடும் தனக்கிருக்கும் மூலவளத்தின் அடிப்படையில் தனது பொருளாதார முயற்சியை இனம் காணுதலே முக்கியமானது. எல்லாப் பொருளாதார முயற்சிகளிலும் காலைவிட்டு தத்தளிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்பது தத்தமது நாடுகளுக்கு வாய்ப்பான பொருளாதார முயற்சிகளில் மட்டுமே ஈடுபட வேண்டுமென்பதும் இந்த உலகமயமாக்கலில் முக்கியமான கருதுகோளாக விளங்குகின்றது. நாடுகள் தத்தமது தேவைகள் அனைத்திலும் தன்னிறைவு காண வேண்டியது அவசியமில்லை என்றும் பொருளாதாரரீதியில் தனக்கு மிகவும் வாய்ப்பான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு அப் பொருட்களையும், சேவைகளையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் பெறும் அந்நியச்செலாவணியில் இருந்து தான் உற்பத்தி செய்யாத ஆனால் தனக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெறுவதன் மூலம் கூடிய அபிவிருத்தியை அடைய முடியும் என்றும் உணரப்பட்டது. இதனால் உலகில் உள்ள நாடுகள் அனைத்தும் ஒன்றில் ஒன்று தங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்துடன் தகவல் தொழில்நுட்பத்தில் இந்தக் கால கட்டத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களால் உலகமே சுருங்கி ஒரு கிராமமாக மாறியது.

**03.** இக்காலப்பகுதியில் அரசு, தனியார்துறை, சிவில் சமூகம் ஆகிய மூன்று கூறுகளும் ஒருமித்து செயற்படும்பொழுதுதான் அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது என்ற கோட்பாடு சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**வென் வரிப்படமூலம் இதனை இவ்வாறு காட்டலாம்.**




**A-** அரச துறை மாத்திரம்
**B-** தனியார் துறை மாத்திரம்
**C-** சிவில் சமூகம் மாத்திரம்

**A,B-** அரச துறையும் தனியார் துறையும்
**A,C-** அரச துறையும் சிவில் சமூகமும்
**B,C-** தனியார் துறையும் சிவில் சமூகமும்
**A,B,C-** அரச துறையும் தனியார் துறையும் சிவில் சமூகமும்

உலகமயமாக்கல் அறிமுகம் செய்யும் பொருளாதார மாதிரியாக புதிய அபிவிருத்தி கட்டளைப்படிமம் விளங்குகிறது. அந்தப்படிமத்தில் அரசு, தனியார்துறை, சிவில் சமூகம் என்ற மூன்று கூறுகளும் இயங்குகின்றன. இவைகள் ஒருமித்துச் செயல்படும் பொழுது நாடுகள் அபிவிருத்தி அடைவதுடன் நல்லாட்சியும் விளைவாகும் என்று அதன் வடிவமைப்பாளர்களான புதிய பொருளாதார நிபுணர்கள் வாதிக்கின்றனர்.

**03.1 தனியார் துறை :-** சந்தைப் பொருளாதாரத்தில் தனியார்துறை பொருளாதார வளர்ச்சியின் இயந்திரம் எனப்படுகிறது. இலாப நோக்கமே தனியார் துறையின் உந்து சக்தியாக விளங்குகின்றது. தனியார்துறை கல்வி, சுகாதாரம்போன்ற அனைத்துத் துறைகளிலும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றது. தனியார் துறை பொருட்களையும், சேவைகளையும் உருவாக்குதவன் ஊடாக வருமான வளர்ச்சியையும் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்துகிறது. கல்வி, சுகாதார துறைகளில் பொருட்களையும், சேவைகளையும் தோற்றுவிப்பதால் சமூக நல் வாழ்வு சாத்தியமாகிறது. பொதுவாக இந்த முயற்சிகளில் இலாபம் பெறமுடியாதுவிடின் தனியார் துறையானது அம்முயற்சிகளில் இருந்து ஒதுங்கி விடும்.

**03.2 சிவில் சமூகம் :-** இது அரசமுறையிலோ, தனியார் துறையிலோ உட்படாத ஒரு பிரிவாகவும் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களையும் (CBO), அரச சார்பற்ற நிறுவனங்களையும் (NGO) சிவில் சமூகம் உள்ளடக்கும். இவை, இலாப நோக்கம் அற்றவை. ஆனால் சேவை மனப்பான்மை கொண்டன. சிவில் சமூகத்தினரும் பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்வதிலும் விநியோகிப்பதிலும் ஈடுபடுவர். அரச துறையினராலும், தனியார்

துறையினராலும் புறக்கணிக்கப்படும் சமூகங்களையும் விளிம்பு நிலை மக்களின் நலன்களையும் இவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்வர். அவற்றின் மேம்பாட்டுக்காக உழைப்பர்.

**03.3 அரசதுறை :-** உலகமயமாக்கலின் கீழ் ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் அரச துறையின் செயற்பாட்டிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. சந்தைப் பொருளாதாரத்தின் தோற்றத்தால் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மிக முக்கிய பங்காளி என்ற நிலையில் இருந்து அரசதுறை விலகத் தனியார் துறையே மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கெடுக்கிறது.

உலகமயமாக்கலின் கீழ் அரச துறையினுடைய செயற்பாடுகள்

01. வழிகாட்டுதல் (**Guide**).
02. வசதிப்படுத்துதல் (**Facilitator**).
03. ஒழுங்கமைத்தல் (**Regulator**).

தற்போது அரசாங்கத்தினுடைய புதிய செயற்பாடுகளை ஆராய்வோம்.

## வழிகாட்டுதல்

பொருளாதார, சமூக, அரசியல் நோக்கல்கள் மக்கள் கொள்கையினுடைய செயற்திறன் கொண்ட முகாமைத்துவத்தைக் குறிக்கிறது. இவற்றை நோக்கியதாக வழிநடத்தல் செயற்படுத்தப்படுகிறது.

இறைக்கொள்கை, நாணயக்கொள்கை, கூலிக் கொள்கை, வியாபாரக் கொள்கை மற்றும் துறைசார் கொள்கை என்பவற்றை இணைப்பது தொடர்பான செயற்பாட்டுடன் இது உட்படுத்தப்படுகிறது. (தொடர்புபடுத்தப்படுகிறது) இச்செய்முறை திறம்படச் செயற்படுவதற்கு இது தேவையாக இருக்கிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கிடையில் நெருங்கியதும் திறமையானதுமான ஒரு இணைப்பை ஏற்படுத்துவதற்கு இது தேவையாக இருக்கிறது.

### வசதிப்படுத்துதல்

வசதிப்படுத்துதல் செயற்பாடானது, வழிநடத்தல் செயற்பாட்டில் இருந்தும் அத்துடன் வழிநடத்தல் செயற்பாட்டினை பலப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. வசதிப்படுத்துதல் செயற்பாட்டின் சில உதாரணங்கள்

(01) புதிதாக உருவாகும் கைத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மனித வளங்களுக்குரிய கல்வியையும் பயிற்சியினையும் வழங்குதல்.
(02) பொருளாதாரத்தில் முதலீடுகளின் அபிவிருத்திக்காக உட்கட்டமைப்புகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியையும் நவீன தொழில் நுட்பங்களை வழங்கலும். அத்துடன் புதிய முதலீடுகளுக்கு அனுசரணையாக சட்டங்களையும் நிறுவனங்களையும் மறுசீரமைத்தலும்.
(03) மனித உரிமையையும், ஜனநாயக வாழ்க்கை முறையையும் பேணுதல்.

### ஒழுங்குபடுத்தல்

சந்தைப்பொருளாதாரத்தில் போட்டித்தன்மையை ஊக்குவித்தல், நுகர்வோர் தேவைகளைப் பாதுகாத்தல், சூழலைப் பாதுகாத்தல், தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்தல் மேலும் நாட்டில் நிலையான நிதி முறைமையைப் பேணுதல் என்பன முக்கியமானவை.

04. இதில் ஒப்பீட்டடிப்படையில் சாதகமான பணிகளில் அரசு ஈடுபடுதல் வேண்டும். அவைகள் கொள்கை முகாமைத்துவம் (Policy Management) ஒழுங்குபடுத்தல், சமவாய்ப்புக்களை சகலருக்கும் வழங்கல், பாரபட்சத்தை நீக்கல், சுரண்டலை ஒழித்தல், சமூக ஒத்துழைப்பை மிகுவித்தல் போன்றவையாகும். அதாவது இங்கே அரசு ஒரு ஊக்கியாக நீதி, நிர்வாக, அரசியல் கட்டமைப்புக்கூடாக செயல்படுதல் வேண்டும். அரசு படகின் சுக்கானைப் பிடித்தால் மாத்திரம் போதுமானது. அது தண்டை வலிக்கத்தேவையில்லை. அரசின் பணிகள் அபிவிருத்தி என்னும் படகுக்கு சுக்கான் பிடிப்பது மாத்திரம்தானா என்ற கேள்வி எழுகிறது.

### 04.1 உட்கட்டமைப்பு

அது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களுமுண்டு. அவை அடிப்படை கட்டுமானம் சார்ந்த பெரும் பணிகளாகும். அவை பெரு மூலதனத்தை வேண்டுவதாகவும், ஆனால் அதன் மீளல் நிச்சயமற்றதாக அல்லது அதற்கு நீண்ட காலம் தேவைப்படும் பணிகளாகும். அதே

நேரம் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு மிகவும் அவசியமானவைகளாகவும் அவை, உள்ளன. இவ்வாறான பணிகளில் தனியார் துறையினர் பங்குபற்றுவதற்கு முன்வரமாட்டார்கள். ஆகவே இத்துறைகளில் அரசு இறங்கி வேலை செய்தல் அவசியமாகும்.

### 04.2. ஏனைய துறைகள்

தனியார் துறையினர் இலாபமீட்டும் துறைகளில் மாத்திரமே தமது பங்கினைச் செலுத்துவர். இதனால் விளிம்பு நிலை மக்கள், நலிவுற்ற மக்கள், அனாதைகள் ஆகியோர் பாதிப்படைவர். இந் நிலையில் இவர்களுக்கு ஆதரவளித்துப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு சிவில் சமூகத்தையும் அரசினையும் சார்ந்ததாகவுள்ளது. சிவில் சமூகத்தினால் இப்பணியினைத் தனியே செய்து முடித்தல் இயலாத காரியம். ஆகவே அரச துறையினரின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

### 05. நல்லாட்சி

அரச துறை, தனியார் துறை, சிவில் சமூகம் ஆகியனவற்றில் நல்லாட்சி நிலவ வேண்டும். நல்லாட்சியில் வெளிப்படைத்தன்மை, திறனுடைமை, கணக்குக் காட்டல், பங்கு கொள்ளல், ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடித்தல் என்பன முக்கிய மூலங்களாகும். இவ்வாறு மூன்று துறைகளிலும் நல்லாட்சி நிலவுமாயின் அபிவிருத்தி இலகுவில் நடைபெறக்கூடியதாக இருக்கும்.

### 06. முடிவுரை

இறுதியாக அரசானது வழிகாட்டி, வசதிப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் ஆகிய துறைகளில் முழுமையாக ஈடுபட்டு மேலதிகமாகத் தனியார் துறையினராலும் சிவில் சமூகத்தினாலும் புறக்கணிக்கப்படும் அல்லது தவிர்க்கப்படும் பொருளாதாரச் செயற்பாடுகளில் மாத்திரம் கவனம் செலுத்துவார்களாயின் நாடுகள் அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு அரச துறை வழிவகுக்கும். ஆகவே அரச துறையானது தனியார் துறையுடனும் சிவில் சமூகத்துடனும் பங்காளிகளாக இணைந்து நல்லாட்சி நிலவ செயற்படுவதன் மூலம் தமது நாட்டின் வளர்ச்சி உறுதிசெய்யப்படும்.

❖ ❖ ❖

**பதினாறு பேறுகள்**

| | |
|---|---|
| அழகு | நீண்ட ஆயுள் |
| இளமை | நல்லூழ் |
| கல்வி | நோயின்மை |
| வெற்றி | வலிமை |
| அறிவு | நெல் |
| பெருமை | நன்மக்கள் |
| புகழ் | நுகர்ச்சி |
| துணிவு | பொன் |

**பெண்களின் ஏழு பருவங்கள்**

பேதை
பெதும்பை
மங்கை
மடந்தை
அரிவை
தெரிவை
பேரிளம்பெண்





# பதிவாளர் நாயகத் திணைக்களமும் பிறப்புப் பதிவும்


பரஞ்சோதி பிரபாகர், B.A, M.A.
(பிராந்தியத் திட்டமிடல்)
காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும்
யாழ்ப்பாணம்.


## பதிவாளர் நாயகத் திணைக்கள வரலாறு

இலங்கையில் தற்போதுள்ள அரச திணைக்களங்களுக்குள் நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட வரலாற்றுப் பெருமைமிக்க திணைக்களம் பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகும். இத் திணைக்களமானது 1863 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கக் காணிப் பதிவுச் சட்டத்தினால் 1864 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அசையும், அசையாச் சொத்துக்களின் ஆவணங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையிலும் 1867 ஆம் ஆண்டு தொடக்கம் குடியியல் பதிவு எனப்படும் சமூக வாழ்க்கையின் ஆதார நிகழ்வுகளான விவாகம், பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதுடன், நாட்டிற்குப் பொருத்தமான முறையில் அச்சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டு மக்களுக்கான சேவையை மேலும் விரிவு படுத்திக்கொண்டது.

1958ம் ஆண்டு வரைக்கும் இத்திணைக்களத்தின் அலுவல்கள் மாவட்ட மட்டத்தில் ஒன்றிற்கொன்று தொடர்பில்லாத கரும பீடங்கள் இரண்டின் மூலமே நடைபெற்று வந்தன. அதற்கமையக் காணி பதிவு செய்தல் நேரடியாகப் பதிவாளர் நாயகத்தின் கீழ் காணிப் பதிவாளர்களினாலும், விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் நிர்வாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் மேற்பார்வையின் கீழ் வேறு உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1958 ஆம் வருடத்தில் ஏற்பட்ட திணைக்கள மறுசீரமைப்பின் பின்பு இந்நிலை மாற்றப்பட்டுக் காணிப் பதிவு செய்யும் அலுவலகமும், விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் கிளையும் ஒன்றிணைக்கப்பட்டுச் சகல மாவட்டங்களிலும் காணிப்பதிவகமும், மாவட்டப்பதிவகமும் எனும் பெயரில் பதிவாளர் நாயகத் திணைக் களத்தின் கிளை அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாறே, பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவாளர் சேவை எனும் தனித்துவமான சேவை ஒன்று ஏற்படுத்தப்பட்டுக் காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும் என்ற பதவிப் பெயர் கொண்ட பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு இம்மாவட்ட அலுவலகங்களின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

இதற்கமைய இத்திணைக்களத்தின் முன்னேற்றத்தில் புது மாற்றம் ஒன்று உதயமாகியது. பதிவாளர் சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு உதவி, பிரதி பதிவாளர் நாயகம் பதவி வழங்கப்பட்டதுடன் 1978 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை உறுப்பினர் ஒருவர் பதிவாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்ட நிலை மாற்றப்பட்டுப் பதிவாளர் சேவை உறுப்பினர் ஒருவர் பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு இத்திணைக்களத்தின் கடமைகள் அதி சிறப்புடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இதற்கு மேலதிகமாக கணக்காளர் சேவையின் கணக்காளர் ஒருவரும், குடிசன புள்ளி விபர மதிப்புத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர் ஒருவரும் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டதனால் ஆரம்பத்தில் இருந்தே இத்துறைக்குத் தேவையாகவிருந்த நிபுணர்களின் அறிவும் பெறப்பட்டன.

1979 ஆம் ஆண்டிலிருந்து விவாக, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கையெழுத்துப் பிரதிகளாக வழங்கும் பழைய முறைக்குப் பதிலாக புதிய தொழில்நுட்ப முறையை உட்புகுத்தி நிழற்பட பிரதி திணைக்களத்தினால் தயாரித்து வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1980 ஆம் ஆண்டில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வேறான அமைச்சாக்கப்பட்டு அதற்குப் பதிவாளர் நாயகத் திணைக்களம் இணைக்கப்பட்ட பின்பு திணைக்களம் மேலும் புதிய மாற்றத்திற்கு உள்ளாகியது. அதிகளவு இடவசதி கொண்ட மத்திய பதிவேட்டகம் ஒன்றை உருவாக்கி நாட்டின் சகல விவாக,

பிறப்பு, இறப்பு பதிவுகளின் இணைப்பிரதிகளைப் பாதுகாத்தல், இணைப்பிரதிகளை நுண்பட மயப்படுத்தல், கூசிகை கணனி மயப்படுத்தல் ஆகிய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1992 ஆம் ஆண்டில் நிர்வாகத்தினை மக்களிடத்திற்கு எடுத்துச் செல்லும் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் விவாக, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கக் கூடியதாக அப்பதிவேடுகள் அவ்வப் பிரதேச செயலகங்களுக்குக் கையளிக்கப்பட்டன. இவ்வாண்டிலேயே இத்திணைக் களத்தின் நிர்வாகம் பன்முகப்படுத்தலின் முதற் கட்டமாக நாடு பூராக ஏழு வலயங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் கருமமாற்றுவதற்குப் பொறுப்பாக உதவிப்பதிவாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப் பட்டதுடன் பதிவாளர் நாயகத்தின் சில கடமைகள் அவரிடம் கையளிக்கப்பட்டன.

## திணைக்களத்தின் தூர நோக்கு, குறிக்கோள், நோக்கம்

### தூர நோக்கு (VISION)

பதிவின் மூலம் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மக்களுக்கு உதவுதல்.

### குறிக்கோள் (MISSION)

இலங்கையின் அசையும் மற்றும் அசையாத் சொத்துக்கள் தொடர்பிலான சட்டபூர்வ ஆவணங்களை யும் மற்றும் உரித்துக்களையும் பதிவு செய்வதன் மூலமும் சமூக வாழ்க்கையின் ஆதார நிகழ்வுகளான விவா கம், பிறப்பு, இறப்புப் பதிவு செய்வதன் மூலமும் அவ்வேடுகளைப் பாதுகாத்து மற்றும் அவ்வாவணங்களில் இருந்து பிரதி வழங்கல் மூலமும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மக்களுக்கு உதவுதல்.

### நோக்கம் (OBJECTIVE )

1. இலங்கையில் நிகழும் எல்லா விவாக, பிறப்பு, இறப்பு மற்றும் இலங்கைக்கு வெளியே நிகழும் இலங்கையர்களின் விவாக, பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்தல்.
2. இலங்கையின் அசையும், அசையாத சொத்துக்கள் தொடர்பான சட்டமுறையான ஆவணங்களைப் பதிவு செய்தல்.
3. இலங்கையின் காணி உரித்தைப் பதிவு செய்தல்.
4. மேற்குறிப்பிட்ட பதிவு தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்தல்.
5. அவ்வாவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல்.

## திணைக்களத்தின் பிரதான கடமைகள்

இத்திணைக்களத்தினால் ஆற்றப்படும் பிரதான கடமைகளை இரண்டு வகையாகப் பிரித்து நோக்கலாம்.

- அசையும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான சட்ட முறையான ஆவணங்களைப் பதிவு செய்தல் (DOCUMENTS REGISTRATION)
- வாழ்க்கையின் பிரதான நிகழ்வுகளான விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகளைப் பதிவு செய்தல். (CIVIL REGISTRATION)

இவற்றிற்கு மேலாக ஆவணப்பதிவு தொடர்பில் இணைப்பிரதிகளையும், குடியியல் பதிவு தொடர்பில் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் பாதுகாத்து வைத்துக் கொண்டு பொதுமக்களின் விண்ணப்பங் களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவதும் முக்கிய பணியாகும்.

மேலும் ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டமிடலுக்கு முக்கிய பங்கு வகிப்பவை குறிகாட்டிகள் (சுட்டிகள்) ஆகும். இக்குறிகாட்டிகளில் முக்கியமான பிறப்பு வீதம், இறப்பு வீதம், சிசு மரண வீதம், தாய்சேய் மரண வீதம், ஆயுட்காலம் என்பவற்றிற்குத் தேவையான தரவுகள் யாவும் இத்திணைக்களத்தினால் வழங்கப்படுவதும் முக்கிய பணியாகும்.

இத்திணைக்களத்தின் நிர்வாக நடைமுறைகளும், நீதி சார்ந்த நடவடிக்கைகளும் ஒன்றிணைக்கப்பட்ட வகையில் திணைக்கள நடவடிக்கை அமுல்ப்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பான பின்வரும் சட்டங்கள் பதிவாளர் நாயகத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### 01). குடியியல் பதிவு தொடர்பான சட்டங்கள்

i). பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டம்.
ii). விவாக (பொது) பதிவுச் சட்டம்.
iii). கண்டி விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்.
iv). முஸ்லீம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்.
v). குழந்தைகள் சுவீகரிப்புச் சட்டம்.

### 02). ஆவணப்பதிவு தொடர்பான சட்டங்கள்

i). ஆவணங்கள் பதிவுச்சட்டம்.
ii). நொத்தாரிசு சட்டம்.
iii). தத்துவ அதிகாரச் சட்டம்.

இவற்றிற்கு மேலாகக் கீழ் குறிப்பிடப்படும் சட்டங்களின் அதிகமான தேவைகளைச் செயற்படுத்தும் பொறுப்பும் பதிவாளர் நாயகத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

i). முத்திரைத் தீர்வுச் சட்டம்.
ii). காணி அபிவிருத்திச் சட்டம்.
iii). இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டம்.
iv). பொது விடுமுறைச் சட்டம்.

### திணைக்களத்தின் நிர்வாக மட்டங்கள்

இத்திணைக்களத்தின் கடமைகள் யாவும் ஆரம்ப காலத்தில் தேசிய, மாவட்ட, கிராமிய ஆகிய மூன்று மட்டங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும், 1992 ஆம் ஆண்டு தொடக்கம் இத்திணைக்களத்தின் சேவைகள் குறிப்பாகக் குடியியல் பதிவு தொடர்பான சேவைகள் மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கும் நோக்கில் இம்மட்டங்கள் ஐந்தாக்கப்பட்டன.

| நிர்வாக மட்டம் | பொறுப்பானவர் | அலுவலகம் |
|---|---|---|
| 01). தேசிய மட்டம் | பதிவாளர் நாயகம் | தலைமைக் காரியாலயம் |
| 02). உபதேசிய மட்டம் | உதவிப்பதிவாளர் நாயகம் | வலய அலுவலகம் |
| 03). மாவட்ட மட்டம் | காணிப்பதிவாளர் | காணி மாவட்ட பதிவகம் |
| 04). பிரதேச மட்டம் | மேலதிக மாவட்டப் பதிவாளர் | பிரதேச செயலகம் |
| 05). கிராமிய மட்டம் | கிராமியப் பதிவாளர் | பதிவாளர் அலுவலகம் |

### 01. தேசிய மட்டம் (NATIONAL LEVEL)

தேசிய மட்டத்தில் இத்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம் கொழும்பில் உள்ளது. அதற்குப் பொறுப்பாகப் பதிவாளர் நாயகமும் அவரிற்கு உதவியாக மேலதிகப் பதிவாளர் நாயகம் ஒருவரும் கடமை புரிந்து வருகின்றனர். அத்துடன் கொழும்பில் ஒரு மத்திய பதிவேட்டறை ஸ்தாபிக்கப்பட்டு குடியியல் பதிவுகளின் இணைப்பிரதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தலைமைக் காரியாலயத்தில் திருமணச் சான்றிதழ்களில் திருத்தம் தொடர்பான அனுமதிகள், வெளிநாட்டில் பிறந்த இலங்கைப் பிரஜைகளின் பிறப்பு, இறப்பு பதிவு தொடர்பான நடவடிக்கைகள், குழந்தை சுவீகரிப்பு சான்றிதழ்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 02. உப தேசிய மட்டம் (SUB NATIONAL LEVEL)

இலங்கை 7 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக ஒவ்வொரு உதவிப்பதிவாளர் நாயகம் நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிவாளர் நாயகத்தின் சில அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலங்கடந்த பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதற்கு அனுமதியளித்தல், பிறப்புச் சான்றிதழின் 2ம் கூடு தவிர்ந்த ஏனைய கூடுகளில் திருத்தம் மேற்கொள்வதற்கு

அனுமதியளித்தல், சுவீகரிக்கப்பட்ட குழந்தைகளின் பிறப்பினைப் பதிவு செய்ய அனுமதித்தல். போன்ற கடமைகள் கையளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 03. மாவட்டமட்டம் (DISTRICT LEVEL)

ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு காணி மாவட்டப்பதிவகம் உருவாக்கப்பட்டுக் காணிப் பதிவு தொடர்பான நடவடிக்கைகளும் அம்மாவட்டத்தில் இடம்பெறும் குடியியல் பதிவுகள் தொடர்பான புள்ளி விபரங்களைப் பிரதேச செயலகங்களிலிருந்து சேகரித்து தலைமைக் காரியாலத்திற்கு அனுப்பி வைத்தல் போன்ற நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

ஒரு மாவட்டத்தின் வேலையின் அளவுக்கேற்ப ஒன்றிற்கு மேற்பட்ட காணி மாவட்ட பதிவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் 25 மாவட்டங்களிலும் மொத்தமாக 42 அலுவலகங்கள் இயங்குகின்றன. உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் இரு அலுவலகங்கள் இயங்குகின்றன.

### 04. பிரதேச மட்டம் (DIVISIONAL LEVEL)

1992 ஆம் ஆண்டு சேவைகளை மக்களின் காலடிக்குக் கொண்டு செல்லும் திட்டத்தின் கீழ் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு மாவட்ட செயலகப் பணிகள் பிரதேச செயலகங்களுக்குக் கையளிக்கும் திட்டத்தின் கீழ் குடியியல் பதிவு தொடர்பான பணிகளும் பன்முகப்படுத்தப்பட்டன. தற்போது ஒரு பிரதேச செயலகப் பிரிவில் இடம் பெறும் குடியியல் பதிவு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பிரதேச செயலகங்களிலேயே இடம்பெற்று வருகின்றன.

எனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அசாதாரண சூழ் நிலைகளின் காரணமாகப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் குடியியல் பதிவு தொடர்பான பணிகள் 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்தே பன்முகப்படுத்தப்பட்டு வருகின்றது.

### 05. கிராமமட்டம் (RURAL LEVEL)

ஒவ்வொரு பிரதேசச் செயலகப் பிரிவுகளிலும் பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதற்காகப் பல பிறப்பு, இறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றுக்கு ஒவ்வொரு பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பிரிவில் இடம்பெறும் பிறப்பு, இறப்புக்களை 3 பிரதிகளில் பதிவு செய்து 3 ஆம் பிரதியை இலவசமாக உரியவர்களுக்கு வழங்குகின்றனர். பிறப்பு, இறப்புப் பிரிவுகள்,

1. பிரதேச சனத்தொகை.
2. புவியியல் அமைப்பு.
3. போக்குவரத்து வசதி.

என்பவற்றைக் கருத்திற்கொண்டு பல கிராமஅலுவலர் பிரிவுகளைக் கொண்டு சம அளவாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பிறப்புப் பதிவு செய்தல்

குழந்தையொன்று பிறந்து 3 மாதங்களுக்குள் அந்தப் பிறப்புப் பதிவு செய்வதற்குத் தகைமையுடைய தகவலாளரால் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குழந்தையுடைய பிறப்பை அறிவிப்பதற்கு முக்கியமாகத் தகைமையுடையவர் குழந்தையின் தகப்பன் அல்லது தாயாகும். பெற்றாருடைய மரணத்தினால் அல்லது வேறேதேனும் காரணத்தினால் பெற்றோரில் எவருக்கேனும் பிறப்பு பதிவு செய்து கொள்வதற்கு முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் பிறப்பு நிகழ்ந்த வேளையில் அதே கட்டிடத்தில் வசித்த நபர் அந்தத் தகைமை உள்ளவராக இருப்பார். இல்லத்தில் அல்லது தனிப்பட்ட கட்டிடத்தில் நிகழ்ந்த பிறப்பு பதிவு செய்யும் பொதுவான நடைமுறையானது அந்தப் பிறப்பு நிகழ்ந்த பகுதிக்குப் பொறுப்பான கிராம அலுவலகருக்கு 7 நாட்களுக்குள் அறிவித்து அவரது அறிக்கையைப் பிரிவின் பதிவாளருக்கு அனுப்பச் செய்து தகவலாளரினால் பதிவாளரிடம் சென்று பிறப்பைப் பதிவு செய்து கொள்வதாகும். இதைத் தவிர, தனியார் பிரசவவிடுதி மற்றும்

அரசாங்க வைத்தியசாலையில் நிகழும் பிறப்பு வைத்தியசாலையின் பாவனைக்குப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பிறப்புப் பிரகடனத்தில் பதியப்பட்டு பின்பு அவை பதிவு செய்யும் பொருட்டு அதற்குரிய பிரிவுப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

3 மாதத்திற்குள் பதிவு செய்யப்படாத பிறப்பு அது நிகழ்ந்து 12 மாதத்திற்குள் பதிவு செய்வதற்குப் பிரதிக்கினை மூலம் வெளிப்படுத்தப்பட்ட வேண்டுகோளுக்குப் பிறப்பு நிகழ்ந்த பிரதேச செயலகப்பிரிவின் மாவட்டப் பதிவாளர் அனுமதியளிக்க முடியும். 12 மாதங்கள் கடந்தவிடத்து அந்தப் பிறப்புப் பதிவு செய்வதற்கு, அதனை நிரூபிக்கக் கூடியதாக எழுத்துச் சாட்சியங்களுடன் பிரதிக்கினை ஒன்று பிரதேச செயலக பதிவாளர் அலுவலகத்திற்குச்சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்தப்பிரதிக்கினை தொடர்பான விசாரணைகளின்பின்பு அது வலய அலுவலகத்திற்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அந்தப் பிரதிக்கினைக்கு அனுமதியளிப்பதா? இல்லையா? அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமா? என்பது பற்றி உதவிப் பதிவாளர் நாயகம் தீர்மானிப்பார். 12 மாதம் கடந்த பிறப்பு பதிவு செய்வதற்குப் பதிவாளர் நாயகம், மேலதிக பதிவாளர் நாயகம், உதவிப் பதிவாளர் நாயகம் ஆகியோரினால் மட்டுமே அனுமதியளிக்க முடியும்.

**காலங்கடந்த பிறப்புக்களைப் பதிவு செய்தல்**

பிறப்பு ஒன்று நிகழ்ந்து 3 மாத காலத்திற்குள் பதியப்படாதவிடத்து பிறப்பு பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் காலங்கடந்த பிறப்புப் பதிவாக கருதி பதிவு செய்யப்பட வேண்டும்.

காலங்கடந்த பிறப்புக்களைப் பதிவு செய்வதற்குச் சாட்சிகளாகக் கேட்கப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் வாய்மொழிமூல விசாரணையின்போது அதிகளவான சாட்சியாளர்களை அழைப்பதாலும், பொதுமக்கள் காலங்கடந்த பிறப்புக்களை முறையாகப் பதிவுசெய்து கொள்வதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. அதற்குப் பதிலாகச் சட்டரீதியற்ற முறையில் போலிப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளப் பொதுமக்கள் முற்படுகின்றனர். ஆகையினால், காலங்கடந்த பிறப்புக்களை முறையாகப் பதிவு செய்து கொள்வதன் பொருட்டு, பொதுமக்கள் தூண்டப்படுதவற்கும், போலிப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளவும், காலங்கடந்த பிறப்புக்கள் பதிவு செய்யப்படும் முறை தற்போது மேலும் எளியதாகவும் இலகுவாகவும் மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, காலங்கடந்த பிறப்புக்களைப் பதிவு செய்தலும் உத்தேச வயது அத்தாட்சிப் பத்திரம் வழங்குதலும் தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களும், நடவடிக்கைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

**1. பிரதிக்கினைப் பத்திரம் ஒன்றினைக் கையளித்தல்**

காலங்கடந்த பிறப்பொன்றைப் பதிவு செய்வதற்காக உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு அது சமாதான நீதவானினால் உறுதிப்படுத்திய பிரதிக்கினைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தல்.

**2. நபரின் பிறந்த திகதியும் இடமும் உட்படுத்தப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று.**

(அ). வைத்தியசாலைப் பிறப்பு அறிக்கை அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி.
(ஆ). கிராம அலுவலரின் அறிக்கை அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி.
(இ). மருத்துவிச்சியின் பிறப்புப் பதிவேட்டின் பிரதி.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்று இல்லாதவிடத்து, அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று.
(அ). பிறப்பு நிகழ்ந்த தினத்திற்குக் கிட்டியதாக எழுதப்பட்ட சாதகம், அல்லது சாதகக் குறிப்பு.
(ஆ). சுகாதார வளர்ச்சிக் குறிப்பு.

(இ). ஞானஸ்நானப் பத்திரம்.

(ஈ). பிறப்புக்குரியவர் முதல் முறையாகப் பாடசாலைக்குச் சேர்க்கப்பட்ட இடாப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

(உ). பிறப்புக்குரியவரின் பாடசாலை விடுகைப் பத்திரம்.

**3. பிறப்புப் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான சான்றிதழ் - பிறப்பு நிகழ்ந்து 2 வருடத்திற்குள் பதிவு செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தல்.**

**4. பிறப்புக்குரியவரின் சகோதரர் / சகோதரர்களின் பட்டியல்**

**5. பெற்றோர் திருமணமானவர்களாயின், அவர்களின் திருமணச் சான்றிதழ் அத்துடன் பிறப்புச் சான்றிதழ்கள்.**

**பிறப்புச் சான்றிதழ் பெறுதல்**

பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு பிறப்பு நிகழ்ந்த இடத்தின் பிரதேச செயலக அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்து எவரும் பெற்றுக் கொள்ள முடியும்.

பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளுக்காகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் பதிவிலக்கம், பதிவுத்திகதி தரப்பட்டவை A விண்ணப்பங்கள் எனவும் பதிவிலக்கம், பதிவுத்திகதி தரப்படாதவை B விண்ணப்பங்கள் எனவும் குறிப்பிடப்படும். A விண்ணப்பங்களுக்கு வேறாகவும், B விண்ணப்பங்களுக்கு வேறாகவும் தினஏடு பயன்படுத்தப்படும். A விண்ணப்பம் ஒன்று தொடர்பில் பிரதி ஒன்று 25 ரூபா வீதம் ஆகக்கூடியது 3 பிரதிகள் வரை பெறலாம். B விண்ணப்பம் ஒன்று தேடுதலுடன் பிரதி ஒன்றுக்கு 50 ரூபாவும் இரு பிரதிகளுக்கு 75 ரூபாவும், மூன்று பிரதிகளுக்கு 100 ரூபாவும் ஆகும். இதற்கு மேலாக தேடுதல் செய்ய வேண்டின் 100 ரூபா முத்திரையுடன் ஒரு விண்ணப்பத்தில் ஆகக்கூடியது இருவருட தேடுதலுக்கு விண்ணப்பிக்கலாம். கட்டணங்கள் முத்திரைகளாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தின ஏட்டு இலக்கங்கள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1 ஆந் திகதி 01 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டு டிசம்பர் 31 வரை தொடர் இலக்க ஒழுங்கில் பேணப்படும். விண்ணப்பத்திற்குரிய பதிவு தேடி எடுக்கப்பட்டு பிரதி செய்யப்பட்டவுடன் அது தொடர்பான விபரங்கள் விண்ணப்பப் படிவத்தில் மறுபுறத்தில் குறிப்பிடப்படும். தேடுதல் செய்தவர் பிரதி செய்தவர், ஒப்பமிட்டவர் ஆகியோர் தமது சுருக்க ஒப்பங்களை இடுவார்கள்.

பிரதி செய்யப்பட்ட சான்றிதழ்களில் உரிய இடத்தில் விண்ணப்ப இலக்கம், பிரதி செய்தவர் ஒப்பம், ஒப்பமிட்டவர் ஒப்பம், திகதி, அலுவலக முத்திரை என்பன இடப்பட்டுத் தின ஏட்டில் உரிய குறிப்புக்கள் இடப்பட்டு ஏட்டுடன் மேலதிக மாவட்டப் பதிவாளருக்குச் சமர்ப்பித்து அவரின் ஒப்பத்தைச் சான்றிதழிலும், சுருக்கொப்பத்தை விண்ணப்பத்திலும், தின ஏட்டிலும் பெற்றுக் கொண்ட பின் சான்றிதழை நேரடியாகவோ, தபால் மூலமோ உரியவருக்கு கிடைக்கச் செய்யப்படும். அதன் பின் முடிவடைந்த A, B விண்ணப்பங்களை இலக்க ஒழுங்கில் கணக்காய்வுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

தரப்பட்ட விபரங்களின் படி பிறப்பு ஒன்று பதியப்பட்டிருக்காதபோது தேடுதல் விளைவுப் படிவத்தில் பதில் வழங்கப்படும். கோரப்பட்ட பதிவு ஒன்று சேதமடைந்திருப்பின் அது தொடர்பான விபரங்களை மத்திய பதிவேட்டறைக்கு அனுப்பி அங்கிருந்து 12(1) பிரதி ஒன்று பெற்று அப்பிரதியை உரிய ஏட்டில் சேர்த்துக் கட்டிய பின் அதிலிருந்து பிரதி வழங்கப்படும். சான்று வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினரால் கணக்காய்வு செய்யப்பட்ட பின் பதிவாளர் நாயகத்தின் அனுமதி பெற்று அழிக்கப்படும்.



# யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆதனச் சட்டங்களும் வழியுரிமைகளும்

**திருமதி ரதி நகுலேஸ்வரன்**
(L.L.B., Attorney - at - Law)
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம், தெல்லிப்பளை)

யாழ்ப்பாணக் குடாநாட்டு வாசிகளின் முக்கிய ஆதனச் சட்டமாக தேச வழமை காணப்படுகின்றது. இது தீர்க்கப்பட்ட வழக்குகளாலும், உரிய ஏற்பாடுகள் காணப்படாத சந்தர்ப்பங்களில் றோமன் டச்சுச் சட்டத்தாலும், சில விடயங்கள் குறித்துத் தெளிவின்மை காணப்பட்ட சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தார் திருமண வழியுரிமைகள் கட்டளைச்சட்டத்தாலும் சில திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு இன்று நடைமுறையில் இருந்து வருகிறது. தேச வழமை என்பது இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில், மாகாணத்தில் வலிதுடையதாக இருக்கும் பிரத்தியேகமான வழக்காறாகும். அதுவும் அக்குடாநாட்டில் வசிப்பவர்களான தமிழர்களுக்கு மட்டுமே முக்கியமானதாகவும், பிரதானமானதாகவும் வலிதுடைய வழக்காறாகும். இங்குள்ள எல்லாக் காணிகளுக்கும் அதன் சொந்தக்காரர் யார்? என்ற கேள்வியின்றித் தேச வழமை ஏற்புடையதாகும். தேச வழமைக்கு உட்படும் ஆள் ஒருவரின் ஆதனம் இலங்கைக்குள் எங்கு இருப்பினும் அது தொடர்பில் தேச வழமை ஏற்புடையதாகும். எனினும், அசைவற்ற ஆதனம் ஒன்று இலங்கைக்கு வெளியே இருப்பின் அது அந்நாட்டுச் சட்டத்தால் ஆளப்படும்.

தேசவழமையின் மிக முக்கிய அம்சங்களுள் ஒன்றான ஆதனச் சட்டம் தொடர்பில் நோக்கின் அது ஆதனத்தை வழி வழி வரும் ஆதனம், தேடிய தேட்டம், சீதனம் என வகைப்படுத்துகின்றது. இந்த வகையில் ஆதனப்பாகுபாடு ஒருவர் எமுத்தாவணம் இல்லாத நிலையில் இறக்கும்போது அவரது சொத்துக்கான பின்னுரிமையாளரைத் தீர்மானிப்பதில் அவசியம் தேவைப்படும் ஒன்றாகும். எனினும், திருமண வழி உரிமைகள் தொடர்பில் தேசவழமையில் திருப்திகரமற்ற நிலை காணப்பட்டதன் காரணமாக யாழ்ப்பாணத்தார் திருமண வழி உரிமைகள் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இக்கட்டளைச் சட்டத்திற்கு அமைவாகச் சொத்துரிமை தீர்மானிக்கப்படும். வழி வழி வரும் ஆதனம் முதுசொம், உரிமை என வகுக்கப்படுகிறது.

## முதுசொம்

வம்சாவழியினரான ஒருவருக்கு அவரது பெற்றோர் இறக்கும் இடத்து அல்லது, வேறு எவரேனும் மூதாதையார் இறக்குமிடத்து வந்தடையும் ஆதனமாகும். இது தந்தை வழி வரும் ஆதனம் என்பதனைக் குறிக்கின்றது.

## உரிமை

வம்சாவழியினரான ஒருவருக்கு அவரது பெற்றோர் அல்லது மூதாதையர் இறக்குமிடத்து வந்தடையும் ஆதனம் ஆகும்.

## சீதனம்

திருமணத்தின்போது மனைவியால் குடும்பத்திற்குக் கொண்டுவரப்படும் ஆதனம் இதுவாகும்.

மேற்குறிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் ஒருவர் சொத்துறுதியற்று இறப்பின் அச்சொத்துக்களுக்கு இறந்தவரின் பிள்ளைகள் வாரிசாளராவர். பிள்ளைகள் இல்லாவிட்டால் இறந்தவரின் பெற்றோருக்கு அச்சொத்துக்கள் சேரும். தாய் வழி ஆதனம் தாய்க்கும், தந்தை வழி ஆதனம் தந்தைக்கும் போகும். பெற்றோர் இல்லாவிட்டால் இறந்தவரின் சகோதர, சகோதரிகளைச் சென்றடையும். அவர்களும் இறந்துவிட்டால் பேரன், பேத்திகளைச் சென்றடையும்.

## தேடிய தேட்டம்

திருமணம் நிலைத்திருக்கும்போது பிரதிபலன் கொடுத்துப் பெறப்படும் ஆதனங்கள்,

தம்பதியினரது தனி ஆதனங்களிலிருந்து பெறும் இலாபங்கள், தேடிய தேட்டமாகக் கருதப் படும். ஆனால் அப்பிரதிபலன் எந்தத் தம்பதி யினரும் தனிச் சொத்திலிருந்து பெறப்பட்டதாக இருக்கக்கூடாது. தம்பதியினருக்கு கிடைக்கும் கொடை தேடிய தேட்டமாகக் கருதப்படமாட்டாது.

தேடிய தேட்டத்தில் தம்பதியினர் இருவருக் கும் அரைவாசி உரிமையுண்டு. தேடிய தேட்டம் அவர்களது தனிப்பெயரில் வாங்கப்பட்டிருந்தா லும் பொதுச் சொத்தாகக் கருதப்பட்டு அரைப்பங்கு கிடைக்கும். திருமண காலத்தில் ஏற்பட்ட கடன் கள் இருவருக்கும் பொதுவானதாக இருப்பின் அக்கடன்கள் தேடிய தேட்டத்திலிருந்து கழிக் கப்படும். மிகுதி இருவருக்கும் சமனாகப் பங் கிடப்படும். ஒரு தம்பதி இறந்தால் அவருக்குரிய அரைப்பங்கில் அரைவாசி உயிருடன் இறக்கும் மற்ற தம்பதிக்கும், மிகுதி அரைவாசி பிள்ளை களுக்கும் சென்றடையும். உதாரணமாகக் கண வன் இறந்தால் அரைப்பங்கு மனைவிக்குரிய தாக இருப்பதுடன் கணவனின் அரைப்பங்கில் அரைவாசி (1/2) மனைவிக்கும், மிகுதி அரைவாசி (1/2) பிள்ளைகளுக்கும் சென்றடையும். இங்கு முக்கால்வாசி (3/4) மனைவிக்கும், கால்வாசி (1/4) பிள்ளைகளுக்கும் உரித்துடையதாகிறது. இதி லிருந்து மனைவி, கணவனின் வாரிசாளராக வும், கணவன், மனைவியின் வாரிசாளராகவும் வருகின்றனர்.

ஆதன கைமாற்றங்கள் தொடர்பில் பெண் ணின் நிலைப்பாட்டை நோக்குகையில் தேடிய தேட்டத்தைத் தவிர, திருமணத்திற்கு முன்பும், திருமணம் நடைமுறையில் இருக்கும்போதும் மனைவியால் பெறப்படும் எல்லா ஆதனங்க ளும் அவளது சொந்த ஆதனங்களாகவே கரு தப்படும். இத்தகைய மனைவியின் தனியான ஆதனங்களில் அசையும் ஆதனங்களை மட்டும் கணவனின் அனுமதியின்றி மனைவி கைமாற்ற லாம். அசையாப் பொருட்களாயின் கணவனின் உடன்பாட்டுடன் அவனின் எழுத்து மூலமான அனுமதியுடன் கையளித்தால் மட்டுமே அது சட்ட அடிப்படையில் வலிதானதாகும். தேடிய தேட்டத்தில் தனது பங்கைக் கையளிப்பதற்குக் கணவனின் உடன்பாடும் எழுத்து மூலமான சம்மதமும் தேவையாகிறது. கணவன் அனுமதி கொடுக்க இயலாத சந்தர்ப்பத்தில் (கணவன் இரண்டு வருடத்திற்கு மேல் சிறையிலிருத்தல், புத்தி சுவாதீனமற்று இருத்தல்) மாவட்ட நீதிமன் றத்திடமிருந்து அனுமதியை மனைவி பெற வேண்டும். நியாயமற்ற முறையில் கணவன் அனு மதி கொடுக்க மறுத்தாலும் மாவட்ட நீதிமன்றத்தை நாடி அனுமதியைப் பெறமுடியும். இருவரும் நீதி மன்ற ஆணை மூலம் பிரிந்திருப்பின் கணவனின் அனுமதி தேவையில்லை.

கணவனும், மனைவியும் ஒருவருக்கொரு வர் கொடையளிக்க முடியும். கணவன் மனை விக்கு நகைகள், உடைகள் கொடையாக வழங்கி யிருப்பின் பொதுக் கடனை அளிக்க வசதி இல் லாத சந்தர்ப்பத்தில் மனைவியிடம் உள்ள நகை களை, உடைகளை கடனாளி பின்தொடர முடியாது. ஆனால் நிலம் கொடையளிக்கப்பட்டி ருப்பின் அதனைக் கடனாளி பின்தொடர முடியும். கணவனும் மனைவியும் காப்புறுதி செய்திருந் தால் அது அவர்களின் சொந்த ஆதனமாகக் கருதப்படும். மனைவியின் நிலை திருமணம் செய்யாத பெண் ஒருத்தி காப்புறுதி செய்தி ருந்தால் வரும் விளைவுகளைப் போன்று இருக் கும். ஆயுள் காப்புறுதி செய்திருப்பின் அதன் தன்மை ஒருவர் இறப்பின் பின் மற்றைய துணைவரையும் பிள்ளைகளையும் சேரும்.

தேசவழமையின் கீழ்ச் சேவகங்கள் தொடர் பில், தேசவழமைக் கோவை பகுதி III பிரிவு 3படி "யாராவது தனது நிலத்தின் எல்லையில் மரம் ஒன்று நட்டு அம்மரத்தை தனது சொந்த நிலத்தினுள் கஷ்டப்பட்டு வளர்த்திருப்பா ராயின் அம்மரம் கனிகொடுக்கும் மரமாக இருப்பின் அது சரிவாக வளர்ந்து அடுத்தவ னுடைய நிலத்தின்மீது கிளை பரப்பியிருப்பின் அக்கிளையிலுள்ள பழம் அம்மரத்தின் சொந் தக் காரனையே சாரும்". அடுத்த நிலக்காரர் அப்பழங்கள் மீது உரிமை கொள்ளமுடியாது. ஆனால் புளியமரம், இலுப்பை, வேம்பு போன் றன ஒருவரது முயற்சியின்றித் தானாக வளர் வதனால் அம்மரங்களின் கிளைகள் அடுத்த

நிலக்காரரின் நிலத்தின் மேல் வளர்ந்திருந்தால் அதிலுள்ள பழங்கள் அண்மைய நிலக்காரரையே சாரும். அத்தகைய கிளையானது அந்நிலக்காரருக்குத் தடையாக இருக்குமாயின் அக்கிளையை விற்பதுடன் அதனால் வரும் பயனையும் பெற்றுக் கொள்ளலாம். அந்த நேரத்தில் மரத்தின் சொந்தக்காரரால் கிளை வெட்டப்படுவதையும் அண்மைய நிலக்காரரால் தடுக்கமுடியும். இதிலிருந்து பயிரிடப்பட்ட மரம் ஆயின் கிளை இன்னோருவருடைய நிலத்தின் மீது படர்ந்திருந்தாலும் மரச் சொந்தக்காரர் அக்கிளைக்கும் அதிலுள்ள பழங்களுக்கும் உரிமை பெறுவார். மேலும் அண்மைய நிலக்காரர் கிளையை வெட்டும்படி சொந்தக்காரரை பணிக்கவும் முடியாது. பயிரிடப்படாத மரம் ஆயின் கிளை பரந்திருக்கும் அண்மைய நிலச்சொந்தக்காரர் அதன் பயனைப் பெறுவதுடன் விரும்பினால் கிளையையும் வெட்டலாம்.

இன்னும் வேலி அடைத்தலுக்காக வேலியின் மறுபக்கமாக அமைந்துள்ள அடுத்த காணிக்கும் வேலிச் சொந்தக்காரன் வேலியடைக்கச் செல்ல முடியும். இதனை அடுத்த காணிக்காரன் தடுக்கமுடியாது. தடுக்கும் இடத்து அவர்க்கு எதிராக வழக்கிடும் உரிமை வேலிச் சொந்தக்காரனுக்கு உண்டு.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள நிலம் ஒன்றினை ஒரு குறிப்பிட்ட பணத்திற்கோ அல்லது ஏதாவது சட்டப் பிரதிபலனுக்கோ வட்டியாக ஆதனத்தின் பயன் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையில் மேலும் முறையான அறிவித்தல் கொடுத்துத் தெளிவான, நிச்சயமான காலத்திற்கு பின்பு மீட்கப்படல்வேண்டும் என்ற அடிப்படையில் ஈடுவைத்தல் ஒற்றியீடு எனப்படும். யாழ்ப்பாணத்திலுள்ள எல்லா நிலங்களுக்கும், அந்நிலம் யாரால் சொந்தமாக்கப்பட்டிருப்பினும் ஒற்றியீடு பொருந்தும். தேச வழமையின்கீழ் திருமணமான பெண் ஒருத்தி கணவனின் அனுமதியின்றி தமது ஆதனத்தில் ஒற்றியீடு செய்தல் முடியாது.

கடற்பகுதிகள் நாட்டின் பொதுச் சொத்தாக இருந்தபோதும் மூன்று புறமும் நிலத்தால் சூழப்பட்ட சிறிய கடற்பகுதிகள் குறிப்பிட்ட குடும்பத்தினராலும் அவர்களது பரம்பரையினராலும் மட்டும் மீன்பிடிக்கப்பட்டு வந்திருந்தால் அம்மீன் பிடிக்கப்படும் உரிமையை இன்னொருவருக்கு ஒற்றியீடாகக் கொடுக்கலாம். இத்தகைய மீன்பிடி நிலம் யாழ் குடாநாட்டில் பெருமளவு காணப்படுகிறது. நிலத்தைத் தவிரத் தென்னை, மா, பலா, பாக்கு போன்ற கனிகொடுக்கும் மரங்களும் ஒற்றியீட்டுக்கு உட்பட்டனவாக இருந்தன. ஆட்சியுரிமை நடைமுறைக்கு வந்ததன் பின்னர், ஆதனத்தை ஈட்டிற்குப் பெற்றவர் பத்து வருடம் தொடர்ச்சியாக ஆதனத்தின் உடமையைக் கொள்ளாவிடின் ஆதனத்தின் மீதுள்ள உரிமையை இழக்கின்றார். மேலும் ஆதனத்தை ஈடாகப் பெற்றவர் அவ் ஆதனத்தில் ஏற்படும் விளைச்சலை வட்டிக்குப் பதிலாக எடுத்துக் கொள்கிறார். அவ்விளைச்சலானது வட்டியின் அளவுக்குப் போதுமானதாக இல்லாவிடினும் கூட உடனடியாக அவ் ஆதனத்தை மீட்கும்படி ஈடுகொடுத்தவரைக் கேட்கமுடியாது. ஒரு வருட காலத்திற்குப் பின்பே மீட்கும்படி கோரலாம். மறுபுறமாக விளைச்சலானது வட்டியிலிருந்து அதிகமாக இருந்தபோதும் அதற்குக் கணக்குக் காட்டாமல் முழு விளைச்சலானது வட்டியிலிருந்து அதிகமாக இருந்தபோதும் அதற்குக் கணக்குக் காட்டாமல் முழு விளைச்சலையும் அனுபவிக்கலாம். ஈட்டுக்கு ஆதனத்தை வாங்கியவர், ஈட்டுப் பொருளிலிருந்து போதிய விளைச்சல் இல்லாதபோது அதனால், அப்பொருளை விற்றுத் தனது பணத்தை எடுத்துக்கொள்ள விரும்பின் பொருளின் உடமையை சொந்தக்காரனுக்குக் கைமாற்றிவிட்டு ஒரு வருடம் காத்திருக்க வேண்டும். அதற்குப் பின்பு ஈட்டு நிலத்தைச் சொந்தக்காரனால் மீட்கமுடியாது விடின் அவரின் நெருங்கிய உறவினருக்கு விற்கலாம். உறவினர் வாங்க மறுப்பின் தானே வாங்கிக் கொள்ளலாம். நிலம் ஈட்டிலிருந்து மீட்கப்படும் போது கொடுக்கப்பட்ட அதேநிலையிலே திருப்பிக்கொடுக்க வேண்டும். ஈடுவைத்தவர் முறையான அறிவித்தல் கொடுத்த பின் பயிர்கள் அறுவடை செய்யப்படும்வரை காத்திருந்து பின்பே நிலம் மீட்கப்படவேண்டும்.

ஒரு ஆதனம் விற்கப்படுகையில் அவ்வாத னத்தைக் கொள்வனவு செய்வதற்கென ஒருவ ருக்கு முதலில் வழங்கப்படும் உரிமையே முன் னுரிமையாகும். அம் முன்னுரிமையை இருவர் மட்டுமே கோரலாம். இதனை முன்னுரிமைக் கட்டளைச் சட்டம் (1947ஆம் ஆண்டின் 59ம் இலக்க கட்டளைச் சட்டம் II) பின்வருமாறு கூறு கின்றது.

"தேசவழமையின்கீழ் ஏதாவது அசையா ஆதனம் விற்கப்படுமாயின் அதனை வாங்கும் முன்னுரிமை கீழ்வரும் நபருக்குக் கொடுக்கப் படும்".

அ) விற்பனையாளரின் கூட்டுச் சொந்தக்காரர்

ஆ) விற்பனையாளர் சொத்துறுதியற்று இறப் பின் அவர் வாரிசாளராக வருபவர்.

மேலும் இக்கட்டளைச் சட்டம் அசையா ஆத னத்தின் பிரிக்கப்படாத பங்கு (சொரியலாக) இருந் தால் மட்டுமே இம் முன்னுரிமை இருக்குமென வும், விற்பவர் முழுச் சொந்தக்காரனாக இருப்பின் இம்முன்னுரிமை செல்லுபடியாகாதெனக் குறிப் பிடப்படுகிறது. இம்முன்னுரிமை ஆதனத்தில் விற்பனை ஏற்படும்போது மட்டுமே ஒழிய பிரதி பலன் இன்றிக் கைமாற்றம் செய்யப்படும்போது அல்லது சட்டத்தின் ஆக்கத்தினால் கைமாற் றம் செய்யப்படும்போது எழமாட்டாது. மேலும் முன்னுரிமை பெற்றவருக்கு முறையான அறி வித்தல் கொடுத்தால் போதுமானது. அவ்வாறு செய்து விற்பனை நடந்ததன் பின்பு, முன் உரிமையாளர் தன்னுரிமையை முன்கோர முடியாது. இத்துடன் விற்பனை நடைபெறுகை யில் உள்ள சந்தைப் பெறுமதியை முன்னுரி மைக்காரர் கொடுக்க வேண்டும்.

இம்முன்னுரிமை பற்றிய விடயத்தில் தேசவழமைக் கோவை விற்பனைக்கான அறி வித்தல் தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடு கின்றது. "முன்னுரிமை பெற்றவர் அதே கிரா மத்தில் இருப்பின் ஒருமாத அறிவித்தலும், ஒரே கிராமத்தில் அன்றி ஒரே மாகாணத்தில் இருப் பின் மூன்று மாத அறிவித்தலும், வெளிநாட்டில் வசிப்பின் ஒரு வருட அறிவித்தலும் கொடுக்க வேண்டும்.

முன்னுரிமை வழக்கில் வழக்காளி (முன் னுரிமை கோருபவர்) பின்வரும் அம்சங்களை நிரூபிக்க வேண்டும்.

1. தான் முன்னுரிமை பெறத் தகுதியுடையவர்.
2. ஆதனம் அந்நியர் ஒருவருக்கு விற்கப்பட்டது.
3. விற்பனை பற்றி அறிவித்தல் தனக்குக் கொடுக்கப்படவில்லை.

இம்மூன்று நிபந்தனையையும் நிரூபித்த பின் நீதிமன்றத்தால் தீர்க்கப்பட்ட தொகையை முன்னுரிமையாளர் நீதிமன்றத்தில் கட்டியதும் வாங்கியவர் பொருளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கு மிடத்து யாழ் வாசி ஒருவர் சொத்துறுதியற்று இறக்குமிடத்து அவரது ஆதன வழியுரிமைகள் தொடர்பாகத் தேச வழமையும் அதில் ஏற்பாடு கள் தெளிவற்று காணப்பட்டதன் காரணமாகக் குறித்த விடயங்களில் யாழ்ப்பாணத்தார் திரு மண வழியுரிமைக் கட்டளைச் சட்டமும் பயன் படுத்தப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

◆ ◆ ◆

ஆபத்திலிருந்து காப்பாற்றும்படி பிரார்த்திக்க மாட்டேன். ஆபத்துக்களைச் சந்திக்க எனக்கு அஞ்சாமையைக் கொடு. வாழ்க்கை என்னும் போரில் எனக்குத் துணை கேட்க மாட்டேன். வெற்றியடையச் சுய பலத்தைக் கொடு. எதிர்பார்ப்புகள் என்ன ஆகுமோ என்ற பயத்திலிருந்து காப்பாற்றும்படி வேண்ட மாட்டேன். நம்பிக்கையுடன் இருந்து வெற்றியடையப் பொறுமையைக் கொடு.

*– தாகூர்*



# ஏழாலை வரைபடம்

இ. தர்மசீலன் B.A.(Dip.in.Edu.)
ஆசிரியர்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.


ஏழாலைக் கிராமசபையானது ஈவினை வடக்கு, ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கிழக்கு, சொக்களவு, ஆலங்கட்டை, சூறாவத்தை, கோட்டைக்காடு, மயிலங்காடு என்பவற்றைத் தன்னகத்தே உள்ளடக்கி 19 வட்டாரங்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தின் மூன்றாவது பெரிய கிராமமாக விளங்கியது. எனினும் கால ஓட்டத்தில் நிர்வாக மாற்றங்களினாலும், மக்கள் தமது தேவைகளை இலகுவில் நிறைவு செய்து கொள்ளும் இடங்களையும் அது சார்ந்த நிர்வாகங்களை நாடியமையினாலும், ஏழாலைக் கிராமத்தின் குறிக்கோளாக இருந்தவை தாம் தனித்த ஊர்களாக மாறின. குறிப்பாக குப்பிளான் தனித்த ஊராக மாறியதால் ஏழாலையின் கிழக்குப் பகுதி விழுங்கப்பட்டுள்ளது. இத்தகைய காரணங்களால் ஏழாலையின் எல்லை கள் குறுகியதுடன் மூன்றாவது பெரிய ஊர் என்ற நிலையிலிருந்தும் பின்வாங்கியுள்ளது. இதில் 1977ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஏழாலை எனும் நூலில் குறிப்பிடப் பட்ட கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் இன்று 2008ஆம் ஆண்டு வாக்கிய பஞ்சாங் கத்தில் மல்லாகம் கிழக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இங்கு எடுத்துக் காட்டப்பட வேண்டியது.

R1- சுன்னாகம் புத்தூர் பிரதான வீதி.
R2- யாழ்ப்பாணம் பலாலி பிரதான வீதி.
R3- வடக்குப் புன்னாலைக்கட்டுவன் - மல்லாகம் வீதி (காரைநகர் நிலாவரை பிரதான வீதி).
R4- புன்னாலைக்கட்டுவன் மல்லாம் இணைப்பு வீதி (புளியங்கிணத்தடி கேணியடி வீதி).
R5- குப்பிளான் ஊடான குரும்பசிட்டி வீதி.
R6- R4-R1 இணைப்பு வீதி (கொத்தியாலடி வீதி).
R7-R1-R8 இணைப்பு வீதி (ஏழாலையில் உள்ள மிக நீண்ட வீதி) (சுன்னாகம் - சூறாவத்தை - ஏழாலைச்சந்தி ஊடாக கட்டுவன் இணைப்பு வீதி).
R8- ஏழாலை கட்டுவன் இணைப்பு வீதி (டச் வீதி).
R9- மல்லாகம் கட்டுவன் வீதி.
R10- விழுசிட்டி வீதி.
R11- கோட்டைக்காட்டு வீதி.

1. இலந்தைகட்டி வைரவர் வீதி.
2. அண்ணமார் வீதி.
3. ஆத்மஜோதி வீதி.
4. காடாகடம்பை வீதி.
5. கிறிஸ்தவ மயான வீதி (புண்ணியன் கொத்தியால் வீதி).
6. அளவாவோடை வீதி (கேசாவத்தை வீதி).
7. சிலிம்பலாட்டி வீதி.
8. சிவன் வீதி.
9. கொல்லகடவை வீதி (பூதராயர் வீதி).
10. தம்புவத்தை சவரோடை வீதி.
11. உசத்தியோடை ஆலங்கட்டு வீதி.
12. கண்ணகை அம்மன் கோயில் வீதி.
13. காளிகோயில் வீதி.
14. ஒல்லைவெளி குப்பிளான் வீதி.
15. பூசாரி கிணற்றடி வீதி.
16. புன்னாலைக்கட்டுவன் ஏழாலை கிழக்கு எல்லை வீதி.
17. ஞாயிற்றிகாடு வீதி.
18. மயிலங்காடு, கொத்தியாலடி எல்லை வீதி.
19. மயிலங்காடு சூறாவத்தை எல்லைவீதி.
20. சூறாவத்தை முத்துமாரி அம்மன் வீதி
21. மில் ஒழுங்கை.
22. இலங்கையர் கோன் வீதி.
23. இலங்கையர் கோன் குறுக்கு வீதி.
24. கலாநிதி வீதி (உந்துரவை வீதி).
25. சிவகுரு வீதி.
26. பள்ளஞ்சீமா வீதி.
27. தேவாலய வீதி.
28. புளியடி வைரவர் வீதி.
29. மாசியப்புல வீதி.

♦ ♦ ♦

# ஏழாலை வரைபடம்




படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீட்டு விளக்கங்கள்

- பிரதான வீதி
- சிறுவீதி
- சாதாரணபாதை
- புகையிரதப்பாதையும் நிலையமும், தரிப்பும்
- குளமும், கால்வாயும் {(வெள்ள வாய்க்கால் {வழுக்கையாற்றின் பகுதி)}

S. பாடசாலை
T. இந்துக்கோயில்
C. கிறிஸ்தவதேவாலயம்
M. சுடுகாடு
K. இடுகாடு
P. அஞ்சலகம்
D. ஆரம்பவைத்தியசாலை
L. நூலகம்
B. உப அலுவலகம் (வலி தெற்கு பிரதேசசபை,ஏழாலை)

* X எனக்காட்டப்பட்ட வெள்ள வாய்க்கால்கள் இன்று சிறுவீதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

* ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை S என அடையாளம் இடப்பட்டுள்ளது.

* மு.கு : வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட படம், மற்றும் 1977ஆம் ஆண்டு ஏழாலை எனும் நூலில் வெளியிடப்பட்ட படம், மற்றும் அண்மைய ஏழாலையின் அமைப்புத் தன்மையின் பார்வை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டது.



# அபிவிருத்திப் பாதையில் சுன்னாகம்

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**(Ph.D.,Durham)**
முன்னாள் துணைவேந்தர்

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவற்றிற்குத் தீர்வுகள் சமூக - பொருளாதார வளர்ச்சியைச் சரியான திசையில் துரிதமாக முன்னெடுக்கவேண்டும். நல்ல பயன்தரு திட்டமிட்ட அபிவிருத்தி மூலம் இலக்குகளை அடைய முடியும். இதனால் மக்களும், அவர்கள் வாழும் பிரதேசமும் நன்மைபெறும். பிரதேச வளர்ச்சிக்கும் அங்கு வாழும் மக்களின் வளர்ச்சிக்குமிடையே இணைப்பு இருக்கவேண்டும். யாழ்ப்பாண மக்களின் வளர்ச்சிக்கு ஈடாக யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதாரம், வேலை வாய்ப்புத் துறைகள் வளரவில்லை. உதாரணமாக ஒரு குடும்பத்தில் இரண்டு வேறு C.I.M.A தகுதிபெற்ற கணக்காளர்கள் இருக்கும் யாழ்ப்பாணத்தில், வடமாகாணம் முழுவதையும் எடுத்தாலுங்கூட ஒரு C.I.M.A கணக்காளருக்கு வேலை பெறமுடியாது. இதனால்த்தான் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாண மாவட்ட மக்கள் தேசிய, சர்வதேச மட்டத்தில் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இப்பிரதேசத்து வளங்கள் விருத்தி செய்யப்படவில்லை. இன்று தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச, கிராம / நகர, குடியிருப்பு அயல்மட்டங்களில் அபிவிருத்தியைத் திட்டமிட்ட முறையில் கீழிருந்து மேல்நோக்கிய வளர்ச்சியை முன்னெடுக்கவேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றுள்ளதுடன், குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் இடம்பெற்றும் வருகின்றன.

### மக்களுடன் இணைந்த திட்டங்கள்

மக்களுக்காகத் திட்டமிடல் என்ற நிலையிலிருந்து பின்னர் மக்களுடன் இணைந்து திட்டமிடலை மேற்கொள்ளும் நிலைக்கு மேம்பட்டு இன்று மக்கள், தங்களுக்குத் தாங்களே திட்டமிடல் நிலைக்கு வந்துள்ளனர். தத்தம் கிராமங்கள் நகரங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என அறிந்து அதற்கான பரப்புரைகளையும், செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து அரசு, அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரின் கவன ஈர்ப்பையும் பெறமுனைந்துள்ளனர். சங்கங்கள், சபைகள், அமைப்புக்கள் போன்ற சிவில் சமூக செயற்பாடுகளால் சமூகங்கள் தங் களை அணிதிரட்டி இயங்கும் பொழுது அபிவிருத்தியை முன்னெடுப்பது இலகுவாக அமையலாம். பல சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த சாவல்கட்டு கிராமம் இன்று பல வழிகளில் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு அங்கு செயற்படும் பல கிராமிய அமைப்புகளும் அவற்றின் சிறந்த பணிகளுமே காரணமாகும்.

### முன்னுரிமை அடிப்படையில் செயற்றிட்டங்கள்

அபிவிருத்தியில் பல விடயங்கள் அடங்கும். இவற்றுள் முன்னுரிமைகள் காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப வேறுபடும். அபிவிருத்தித் திட்டங்கள் எத்துறைகளுக்கு இன்று முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்பதும் மிக முக்கியமானது. பல நாடுகளில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியுற்றதற்குக் காரணம் அவர்கள் தங்கள் முன்னுரிமையைச் சரியாக இனங்காணத் தவறியமையாகும். சிறுநகர் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு நோக்கும்பொழுது எமது இலக்கு புதிய அபிவிருத்தியா (நெல்லியடி), மீள் அபிவிருத்தியா (சுன்னாகம்), தூங்கும் நகரைத் துடிப்பாக்குவதா (பண்டத் தரிப்பு) உயிர்ப்புக் கொடுத்தலா (ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை) எனத் தீர்மானிக்க வேண்டும்.

சிறுநகர் அபிவிருத்தியில் முக்கிய பல விடயங்கள் அடங்கும். நகர்வாழ் மக்களின்

அடிப்படைத் தேவைகளைப் (Basic needs) பூர்த்தி செய்தல், வாழ்வாதார விருத்தி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம், மனிதவள விருத்தி, பெண்கள் வலுவூட்டல், உட்கட்டுமான உருவாக்கம், சமூக நல்லிணக்கம், சட்டம், ஒழுங்கு, பொதுநலன் கரிசனை கொண்ட பிரஜைகள் உருவாக்கம், நல்லாட்சி, கலாசார விழுமியங்கள் முன்னெடுப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாத்தல் போன்றன அடங்கும்.

## சுன்னாகம் நகரின் இன்றைய நிலை

சுன்னாகம் நகரம் இன்று பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதால் அதனது சமூக – பொருளாதார மேம்பாட்டுச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. முன்னர் வலுவான நிலையிலிருந்த நகரம் இன்று வலுவிழந்த நிலையிலிருப்பதால் இதை எவ்வாறு மீளவும் இப்பிரதேச அபிவிருத்தியில் பெரும் பங்கு வகிக்கக்கூடிய நகரமாக மாற்றமுடியும் என்பதே இன்றைய கேள்வியாகும். சந்தைச் செயற்பாடுகள், நகர வர்த்தகம், சேவைகள், சிறுகைத்தொழில் துறைகளைச் சமூக – கலாசார துறைகளை மீளவும் எப்படி விருத்தி செய்யலாம். இவைகளுக்கு ஏற்ற தந்திரோபாயங்கள் என்ன? என்பதுவே இங்கு முக்கிய விடயமாகும்.

மேலும் வலுவிழந்துள்ள உள்ளூராட்சி நிர்வாகத்தை மக்கள் பங்குகொள்ளும் நல்லாட்சியை எப்படி வளர்த்தெடுத்தல் என்பது இன்று முக்கிய பிரச்சினையாகும். மேலும் இந்நகர் வளர்ச்சி பற்றிய தூரநோக்கு, இந்நகர் விருத்திக்கான பணிகள், இலக்குகள் யாவையெனவும், என்ன வழிகள் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தீர்மானிப்பின், பின்பு ஒவ்வொரு முன்னோக்கிய நகர்வுகளிலும் பிழைகள், தாமதங்கள், இடைஞ்சல்கள் ஏற்படாமல் இருக்கும்.

## புனர்வாழ்வு

சுன்னாகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளாக முக்கிய விவசாயச் சந்தையாக இருந்துவருகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் முடிவுறாத யுத்தத்தால் தனது பழைய முக்கியத்துவத்தை இழந்து மீண்டும் இந்நகர், பொருட்கள் சேவைகள் வழங்கலிலும் சிறுகைத்தொழில் முயற்சிகளிலும் சிறிதளவு முன்னேற்றம் கண்டுவருகின்றது. 2002 – 2006 இற்கு இடைப்பட்ட சமாதான காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டது. இந் நிலையில் நகரின் அபிவிருத்திக்குச் சாதகமான நடவடிக்கையை மேற்கொள்ளுமிடத்து இதனது வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம். நகரின் வளர்ச்சி நகரில் ஏற்படும் வளர்ச்சியில் மாத்திரமல்லாது இதனது பின்னணிப் பகுதியின் வளர்ச்சியிலும் தங்கியுள்ளது.

## நிலவளமும் பயன்பாடும்

சுன்னாகம் வலிகாம நிலத்திணிவின் மத்தியில் மிகவும் சாதகமான வளப் பின்னணியில் அமைந்துள்ளது. நகரின் கிழக்கு, வடக்கு, தெற்குப் பகுதிகள் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற செம்மண்ணும் நன்னீர் கொண்ட பகுதியாகவும் இருக்க, மேற்குப் பகுதி நெற்செய்கை மற்றும் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்ற களர் மண் பகுதியாக இருக்கின்றது. செம்மண் பகுதியில் மிகவும் சிக்கலான, செறிவான நிலப் பயன்பாடு காணப்படுவதுடன் பல வகை காய்கறிச் செய்கை, வெங்காயம், புகையிலை போன்ற பயிர்கள் காணப்படுகின்றன. மேலும் வீட்டுத் தோட்டங்களிலிருந்து வான் பயிர்கள் மூலம் பழவகைகள் மற்றும் விவசாய உற்பத்திகள் கிடைக்கின்றன. மேற்குப் பகுதி குறிப்பாக கந்தரோடை, உடுவில், சங்குவேலிப் பகுதிகளில் நெற்செய்கை நடைபெறுகின்றதுடன் தோட்டம், வீட்டுத் தோட்டங்களிலிருந்து விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வலிகாமத்தில் இன்றிலும் பார்க்கச் சில தசாப்தங்களுக்கு முன்னர் கூடியளவு விகிதத்தினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியிலிருந்து விவசாயப் பொருட்களுடன் கைவினை, பனைசார் பொருட்கள், குடிசைக் கைத்தொழிற் பொருட்கள் பெரும் எடுப்பில் இச்சந்தைக்கு வந்தன.

## சுன்னாகம் சந்தை

யாழ்ப்பாணத்தில், சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம், சங்கானை, பண்டத்தரிப்பு, அச்சு

வேலி ஆகியன முக்கிய சந்தைகளாகும். அண்மைக் காலத்தில் மருதனார்மடம், திருநெல்வேலி முக்கிய சந்தைகளாக வளர்ந்துள்ளன. ஒரு காலம் முக்கிய சந்தையாக இருந்த எழுதுமட்டுவாள் இன்று செயலிழந்துவிட்டது. மருதனார்மடம் சந்தை விவசாய உற்பத்தியாளர்கள் கூடுதலாகப் பங்குகொள்ளும் சந்தையாகவும், திருநெல்வேலி நுகர்வோர் - வர்த்தகர்கள் பங்குகொள்ளும் சந்தையாகவும் இருக்கின்றது. 1980களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துப் பெரிய சந்தைகள், சந்தை நாள் அடிப்படையில் செயற்பட்டன. சுன்னாகம், கொடிகாமம், திங்கள், புதன், வெள்ளியிலும் சாவகச்சேரி, சங்கானை, மருதனார்மடம் செவ்வாய், வியாழன், சனியிலும் நடைபெற்றன. இத்தகைய நாள் ஒழுங்குமுறை சந்தைச் செயற்பாடுகளுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது.

சுன்னாகம் நகரின் ஆதாரமாக இருந்த சந்தை வியாபாரம் பல காரணங்களால் பாதிப்புக்குள்ளாகியது. தென்னிலங்கைக்கான தரைவழிப் போக்குவரத்துத் தடைப்பட்டதும், வியாபாரிகள் வராதுவிட்டதும், மேலும் மாவட்டத்துக்குள்ளான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டதாகவும், செலவு மிக்கதானதுமாக மாறியதால் வியாபாரிகள், நுகர்வோர் முன்னர்போல் சுன்னாகம் செல்வதில்லை.

## வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வு

வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வால் முன்னர் செழிப்பாக இருந்த விவசாயப் பகுதி கைவிடப்பட்ட புதர் மண்டிய பகுதியாக மாறிவிட்டது. பாதுகாப்பு வலய உருவாக்கத்தால் தெல்லிப்பளை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கீரிமலை, பளை, வீமன்காமம், கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான், மயிலிட்டி, தையிட்டி, பலாலி ஆகிய கிராமங்கள் மக்களற்ற பகுதிகளாக மாறின. இதனால் இக்கிராமங்களில் விவசாய உற்பத்தி இல்லாது போனது. இது சுன்னாகம் சந்தைச் செயற்பாட்டைப் பெரிதும் பாதித்தது. மேலும் கடல்மீன் உற்பத்தி இல்லாது போனமையால். இப்பகுதி மீன் உற்பத்திகளைச் சுன்னாகம் இழந்தது. மேலும் பாதிக்கப்பட்ட வலி வடக்கு மக்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்றதால் இம்மக்களின் நுகர்வுச் சக்தியையும் சுன்னாகம் இழந்தது.

## உடுவில் கிராம சபையின் உருவாக்கம்

1964இல் உடுவில் கிராமசபை, சுன்னாகம் பட்டண சபையென இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்னர் உடுவில் கிராமசபை சிறிதாக இருந்த மருதனார்மடம் சந்தையை விருத்தி செய்வதில் கூடிய கரிசனை காட்டியது.

மருதனார்மடம் சந்தை வளர்ச்சி சுன்னாகம் சார்ந்த சந்தைச் செயற்பாட்டைப் பாதித்தது. உடுவில், இணுவில், உரும்பிராய், கோண்டாவில் உற்பத்திப் பொருட்கள் மருதனார்மடத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இது முக்கிய விவசாயச் சந்தையாக மாறி, இன்றும் ஏனைய பொருட்கள் விற்பனைச் சந்தையாகவும் மாறியுள்ளது. திருநெல்வேலிச் சந்தை வளர்ச்சியாலும் சுன்னாகம் சந்தையின் வடக்கு, தெற்கு பின்னணி நிலப்பரப்பில் ஏற்பட்ட மாற்றங்களாலும் மற்றும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளாலும் இந்நகர்ச் சந்தையின் வீச்சு (Range) சுருக்கமடைந்து இன்று உள்ளூர்ச் சந்தையாக மாறிவிட்டது.

## வர்த்தகத்துறை வளர்ச்சி

நகரச் செயற்பாட்டில் சந்தையின் பங்கு குறைவடைந்தபொழுதும், நகரின் வர்த்தகம், சில்லறை வியாபாரம், உடுபுடைவைகள், பான்சிப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், விவசாய உள்ளீடுகள் போன்ற நடவடிக்கைகளில் 225க்கு மேற்பட்ட வியாபார நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இதேபோல் சேவைகள் நடவடிக்கைள் குறிப்பாக உணவு நிலையங்கள், குளிர்பானக் கடைகள், சிகையலங்கார நிலையங்கள், சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் திருத்தும் நிலையங்கள், படம் பிடிக்கும் நிலையங்கள், பெற்றோல், மண்ணெண்ணெய் நிரப்பும் இடங்கள், தனியார் மருத்துவ நிலையங்கள், தொடர்பாடல் சேவை, சினிமாப் படப் பிரதிகள் வாடகைக்கு வழங்கல் போன்ற பல்வேறு சேவைகளில் 200க்கு மேற்பட்ட நிறுவனங்கள் உண்டு.

இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் விரிவாக்கம் செய்ய நிறைய வாய்ப்புகள் உண்டு.

## வங்கிச் சேவை

நகரத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, கொமேர்ஷல் வங்கி ஆகிய ஐந்து வங்கிகள் பணப்பட்டுவாடா மற்றும் பல்துறை நிதிச் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. முன்னர் உள்ளூர் விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சுன்னாகத்தின் பின்னணிப் பிரதேசம் இன்று வெளிநாடுகளிலிருந்து இங்கு அனுப்பப்படும் பணமும் பணச் சேமிப்பிலிருந்து கிடைக்கும் வட்டியும் இப்பிரதேச பொருளாதார வாழ்வாதாரச் செயற்பாட்டில் முக்கியம் பெற்றுள்ளன. சுன்னாகம் இலங்கை வங்கி (20.01.2008) தனது வங்கிச் செயற்பாடுகளைக் கணனி மயப்படுத்தியது.

ஹற்றன் நஷனல் வங்கி, கொமேர்ஷல் வங்கி ஏற்கனவே கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட வங்கிகளுடன் பல நோக்கு கூட்டுறவு கிராமிய வங்கியும், சமுர்த்தி வங்கியும் தென்னை பனம்பொருள் கூட்டுறவு வங்கியும் செயற்படுகின்றன. இன்று பல வங்கிகள் நகை அடைவுத் தொழிலில் ஈடுபடுவதாலும், பல்வேறு கணக்குமுறைகளும் கடன்திட்டங்களும் வங்கிகளால் செயற்படுத்தப்படுவதாலும், பல்வேறு அரச உதவித் திட்டங்கள் வங்கிகளுக்கு ஊடாகக் கொடுப்பனவுகள் செய்வதாலும் மக்களில் பெரும்பான்மையினர் ஏதோ ஒரு வங்கிக் கணக்கு அல்லது கணக்குகள் வைத்திருக்கலாயினர். இதனால் மக்கள் வங்கிகளுக்கு அடிக்கடி வந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. சுன்னாகம் நகரச் செயற்பாட்டில் வங்கிச்சேவை முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

## சிறு கைத்தொழில்

வர்த்தகம் சேவைத் தொழில்களுக்கு அடுத்து நகரின் இயக்கத்திற்குச் சிறுகைத் தொழில் முயற்சிகள் முக்கியம் பெற்றுகின்றன. கடைச்சலத் தொழில், நெல் குற்றும் ஆலை, அரைக்கும் ஆலை, வெதுப்பகம், நகைத்தொழிலகம், தையல் நிலையம், மரஆலை, விறகு ஆலை, அச்சகம், மின் ஒட்டு, கம்மாலை, தச்சுத் தொழிற்சாலை, தகர வேலை, படம் பிறேம்போடும் இடம், சொகுசு ஆசனத் தையலகம், ஐஸ்கிறீம் தயாரிப்புப் போன்ற தொழில்களில் 100 தொழில் நிறுவனங்கள் இயங்குகின்றன.

சுன்னாகம் வலிகாமம் மக்களின் விவசாயம், விவசாயம் சாராத தொழில் முயற்சிகளுக்குமான உள்ளீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏனைய சிறு நகர்களிலும் பார்க்க முன்னிலை வகிக்கின்றது. மேலும் நகரில் அமைந்துள்ள மின்சார உற்பத்தி நிலையம், மின்சார சபைக் காரியாலயம் இந்நகரின் செயற்பாட்டை வலுப்படுத்தியுள்ளது. மேற்குறிப்பிட்ட சிறுகைத்தொழில் முயற்சிகள் விரிவாக்கம்பெற நிறைய வாய்ப்புண்டு. போதிய நிதி உதவிகள், தொழில் நுட்ப ஆலோசனைகள், புதிய இயந்திரங்கள் பெறப்படின் இத்தொழில்களை நவீனப்படுத்துவதுடன் தொழிலாளர்களின் வினைத்திறனை அதிகரிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது. சிறுகைத்தொழில் வளர்ச்சிக்குச் சரியான அபிவிருத்தித் திறனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## கல்வி

சுன்னாகம் நகருக்கு மத்தியில் பெரிய பாடசாலைகள் இல்லாதிருப்பது நகரச் செயற்பாட்டிற்கு உகந்தது. நகரின் மேற்கே ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், தெற்கில் இராமநாதன் கல்லூரியும், தென்மேற்கில் உடுவில் மகளிர் கல்லூரியும் அமைந்துள்ளன. நகரின் கிழக்கு மற்றும் வடக்கிலும் பெரிய கல்லூரிகள் அமையவில்லை. ஏழாலை மிகப்பெரிய கிராமமாக இருந்தும் வளர்ச்சி பெற்ற வசதிகள் நிறைந்த பெரிய கல்வி நிறுவகம் இல்லாதது பெரிய குறைபாடாகும். இராமநாதன் கல்லூரி பல நிலைகளிலும் புதுப்பொலிவுபெறவேண்டும். மிகப் பரந்த நிலப் பரப்பில் நல்ல கட்டடத் தொகுதியில் அமைந்த கல்லூரி இன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்றது. இதனது

கட்டடங்கள் பழையனவாகிப் பெரியளவு மீள்கட்டு மானத்தை எதிர்பார்த்து நிற்கின்றன. திருத்த வேலைகள் தாமதமாகிக் கட்டடங்களைக் கைவிடவேண்டிய நிலையும் ஏற்படலாம்.

**மருத்துவம்**

சுன்னாகம் நகரில் பெரிய கல்வி நிலை யங்கள் இல்லாததுபோல் வைத்தியசாலையும் இல்லை. ஒரு மத்திய மருந்தகம் மாத்திரமே இருக்கின்றது. உடுவில், இணுவில், ஏழாலை ஆகிய இடங்களிலும் மத்திய மருந்தகமே உள்ளன. 55,000 மக்களுக்குமேல் வாழும் வலிகாமம் தெற்குப் பிரிவில் அரசினர் மாவட்ட, கிராமிய அல்லது சுற்றயல் வைத்தியசாலை யாதொன்றும் இங்கு இல்லாதிருப்பது பெரிய குறைபாடாகும். இப்பகுதி மக்கள் யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலைக்குத்தான் செல்கின்றனர். இணுவிலில் இயங்கும் மக்லி யோட் வைத்தியசாலை இன்று நலிவுற்ற நிலை யிலுள்ளது.

சுன்னாகம் 1964இல் பட்டணசபையாக உயர்த்தப்பட்டது. 1971இல் எடுத்த குடிசனக் கணிப்புப்படி 14,192 பேர் நகரப் பகுதிக்குள் இருந்தனர். இதேதொகை 1981இல் 16,118ஆக அதிகரித்தது. 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுக்குப் பின்னர் 1996இலி ருந்து மீள்குடியேற்றம் மூலம் இன்று நகரின் குடிசனத்தொகை 12,000க்கு மேல் அதிகரித் துள்ளது. எனினும் பழைய நிலைக்கு வரவில்லை. சுன்னாகம் நகரானது ஐந்து கிராமசேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் நகர் வடக்கு (J/195), தெற்கு (J/196), கிழக்கு (J/197), மத்தி (J/198), மேற்கு (J/199). நகரில் பல குடி யிருப்புகள் காணப்படுகின்றன. இவை ஒவ் வொன்றும் தனிப் பண்புகளையும் பாரம்பரியங் களையும் கொண்டன. மயிலணி, சூராவத்தை, மலப்பை, சூலானை, கொத்தியாவத்தை, கணக்கர்வளவு, செட்டியார்வளவு போன்ற வற்றைக் குறிப்பிடலாம். நகரில் 20க்கும் மேற் பட்ட குடியிருப்புகள் இனங்காணப்பட்டுள்ளன. இக்குடியிருப்புக்கள் ஒவ்வொன்றினதும் சமூக - பொருளாதாரப் பிரச்சினைகள் தனித் தன்மை வாய்ந்ததால் அபிவிருத்தித் திற முறைமைகளில் முன்னுரிமைகள் பேணப் படலாம்.

1992 பிரதேசசபைச் சட்டத்தினால் அன்றி ருந்த கிராமசபை, பட்டணசபை முறைகள் நீக்கப்பட்டு அவைகளின் இடத்திற்குப் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டதனால் முன்னர் இருந்த சபைகள் உபகாரியாலயங்களாகச் செயற்படுகின்றன. இன்று வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குள் முன்னைய சுன்னாகம் கிராமசபை, உடுவில் கிராமசபை, ஏழாலை கிராமசபை ஆகிய உபகாரியாலயங்களாகச் செயற்படுகின்றன. இச்செயற்பாடு நல்லாட் சிக்கும், அபிவிருத்திக்கும், நிர்வாகத்திற்கும் பொருத்தமானதாக இல்லை. சுன்னாகம் பட்டணசபைப் பரப்பு விஸ்தரிக்கப்பட்டுப் புதிய பகுதிகள் உள்வாங்கப்பட்டு இதனை நகரசபை யாகத் தரம் உயர்த்த வேண்டும். இத்தர உயர்ச்சி நகர அபிவிருத்தி நிர்வாகத்திற்கு உதவியாக அமையும். சுன்னாகம், கந்தரோடை, உடுவில் மற்றும் ஏழாலை மேற்குப் பகுதிகள் புதிதாகப் பிரேரிக்கப்படும் நகரசபைப் பகுதிக் குள் வரவேண்டும். எனினும், இந்நகரின் பின்னணிப் பிரதேசம் வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளை உள்ளடக்கிய தாக இருக்கும். மல்லாகம், அளவெட்டி, தெல் லிப்பளைப் பகுதிகள் வலிகாமம் வடக்குப் பிரி வில் அமைந்தபொழுதும், செயல் ரீதியில் சுன் னாகத்துடன் இணைந்துள்ளது.

**சுன்னாகம் வளர...**

சுன்னாகத்தின் வளர்ச்சி யாழ்ப்பாண நகரைச் செறிவடையச் செய்யாது, பரவலாக்க வும், யாழ்ப்பாண நகரில் காணப்படும் பிரச்சினை களைக் குறைக்கவும், வலிகாமம் பகுதியில் காணப்படும் அபிவிருத்தி வேறுபாடுகளைக் குறைக்கவும், வலிகாமத்தின் பொருளாதாரத் தைத் தூண்டி எழுப்பவும், இப்பகுதி மக்களின் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், நிர்வாக ஆற்றலை மேம்படுத்தவும் வழிவகுக்கலாம்.

இன்று வலிகாமம் பிரதேசத்தில் பல சிறிய நடுத்தர அபிவிருத்தித் திட்டங்கள் பல்துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய கட்டுமானங்கள், ஆற்றல் மேம்பாட்டு முயற்சிகள், பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களினால் முன்னெடுக்கப்படும் நுண் அபிவிருத்தித் திட்டங்கள், கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மையக் கிராம அபிவிருத்தித் திட்டங்கள் போன்றன நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்திற்கு புதியமாதிரிக் கட்டடம் அமைக்கப்பட்டுவருவது இங்கு குறிப்பிடத் தக்கது.

இத்திட்டங்களுக்கான பொருட்கள், சேவைகளை வழங்கவும், பொருட்கள் தயாரிப்பில் பங்கு கொள்ளவும் சுன்னாகத்திற்கு நல்ல சாதகமான நிலையுண்டு. வலிகாமம் பகுதியின் இயற்கை மூலதனம், பௌதீக மூலதனம், மனித மூலதனம், நிதிமூலதனம், சமூக மூலதனம் ஆகியவற்றைத் திரட்டி அபிவிருத்தியை முன்னெடுக்க சுன்னாகம் நல்ல இடவமைவு பெற்றுள்ளது.

சுன்னாகம் நகரின் பௌதீகக் கட்டமைப்பு மேம்படுத்தப்படவேண்டும். திட்டமிட்ட நிலப் பயன்பாடு ஒன்று இனங்காணப்பட்டு வர்த்தக வாழிட விவசாய போக்குவரத்து மற்றும் பொழுது போக்கு, நீர்நிலைகள் விருத்தி செய்யப்பட வேண்டும். நகரில் உள்ள இடிந்த கட்டடங்கள், மற்றும் பழைய கட்டடங்கள் புதுப்பொலிவு பெற வேண்டும். மேலும் நகரின் வீதி வலைப் பின்னலின் அடர்த்திபோதாது இருக்கின்றது. மேலும் நகரின் கிழக்குப் பகுதியில் வீதி அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். சுன்னாகம் - கந்தரோடை வீதி நேர்வீதியாக இருந்த பொழுதும், ஒடுக்கமாக இருப்பதால் போக்குவரத்து இடைஞ்சல் காணப்படுகின்றது. இவ்வீதியின் அகலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நகரின் மையப் பகுதியில் குடிநீர் வசதியிருந்தாலும், நகரத்துக்கென்ற குழாய்த்திட்டம், வடிகால்த்திட்டம், கழிவகற்றல் திட்டம் போன்றன மேற்கொள்ளப்படவேண்டும்.

பூங்கா, விளையாட்டு மைதானம், கலை நிகழ்வுகள் இடம்பெறப் பெரிய அரங்கு, மக்கள் ஒன்றுகூடச் சதுக்கம் ஆகியன அமைக்கப்பட வேண்டும். இதுபோல ஏற்கனவேயுள்ள மயானங்களைப் புனித இடங்களாகத் துப்புரவாக வைத்திருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒருநகரின் வளர்ச்சிக்கு நல்ல போக்குவரத்து வசதி அத்தியாவசியமானது. சுன்னாகம் பஸ்நிலையம் வசதியான விஸ்தீரணமான இடத்திற்கு மாற்றப்படவேண்டும். இங்கிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒவ்வொரு முடிவு கிராமங்களுக்கும் போக்குவரத்துச் சேவை விஸ்தரிக்கப்படவேண்டும். சுன்னாகம் - பருத்தித்துறை, சுன்னாகம் - குறிகட்டுவான், சுன்னாகம் - காரைநகர், சுன்னாகம் - மாதகல், சுன்னாகம் - அராலி போன்ற முடிவுக் குடியிருப்புக்களுக்குப் பஸ்சேவை ஏற்படுத்தப்பட்டால் சுன்னாகம் நகரின் முக்கியத்துவம் அதிகரிக்கும். வர்த்தகம், கைத்தொழில், சேவைகள் விரிவடையும் - தொழில் வாய்ப்புகள் பெருகும்.

கடந்த காலங்களில் சுன்னாகம் நகரை விருத்தி செய்யவேண்டுமென்று பலர் பலவிதமாகக் கடினமாக உழைத்துள்ளார்கள். இவர்களுள் முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவரும் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் தர்மலிங்கத்தினதும் முன்னாள் செனெட்டரும் சுன்னாகம் பட்டணசபைத் தலைவருமான அமரர் நாகலிங்கத்தினதும் பணிகள் நினைவு கூரத்தக்கன. சுன்னாகம் நகரை மீளக் கட்டியெழுப்ப இப்பகுதி மக்கள், சிவில் சமூக அமைப்புகள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், தொழில் வர்த்தக அதிபர், அரச திணைக்களங்கள் முன்வரவேண்டும். இந்நகரின் வளர்ச்சி வலிகாமம் பகுதிக்கு வளம் சேர்க்கும்.

♦ ♦ ♦



# இலங்கையின் வடகீழ் மாகாணத்தில் மாற்றுச் சக்தி வளங்கள் : ஓர் புவியியல் நோக்கு


பேராசிரியர்
இரா. சிவச்சந்திரன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## 1.0 அறிமுகம்

1.1 இலங்கையின் வடகீழ்மாகாணம் தமிழரின் பாரம்பரியப் பிரதேசமெனக் கொள்ளப்படுகின்றது. தமிழர் பாரம்பரியப் பிரதேசம் பரந்த பிரதேசமெனவும் இது மேற்கே மகாஓயா (வாய்க்கால் ஆறு) தொடக்கம் தென்கிழக்கே கும்புக்கன் ஆறு வரை பரந்துள்ள கரையோர நிலப்பகுதியென்றும் பல்வேறு தகவல்களிலிருந்து தெரியவருகின்றது. எனினும் இவ் ஆய்வுரை வடகீழ்மாகாணமே தமிழர் பாரம் பரியப் பிரதேசமெனக் கொள்கிறது.

தமிழர் இலங்கையில் ஒரு தனித்தேசிய இனம். அவ்வினத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அவர்களுக்கொரு பாரம்பரியத் தாயகம் உண்டு. இவை தமிழர் தம் நீண்டகாலக் கோரிக்கை ஆகும். எனவே, எமது பிரதேசத்தை நாமே அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பும் கடமைப்பாடும் நம்மவர்களுக்கு, குறிப்பாக அறிவுப் புலத்தினுள்ளோர்க்கு உண்டு. வடகீழ் மாகாணத்தைத் தன்னிறைவாக நிலைத்து நிற்கத்தக்க அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும்பல்வேறு கூறுகளில் மாற்றுச் சக்தி வளம் பற்றி இவ் ஆய்வுரை பேசுகின்றது. இவ் ஆய்வுரையின் நோக்கம் நிறைவான மாற்றுச் சக்திவளம் எமது பிரதேசத்தில் உண்டு என்பதை நிரூபிப்பதும், அது பற்றிய சிந்தனையைப் பல்வேறு துறைசார் புலமையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படுத்துவதுமாகும்.

வடகீழ் மாகாணம் 18,323 சதுர கிலோ மீற்றர் (7157 சதுரமைல்) பரப்பளவு கொண்ட பிரதேசமாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் இது 28.4 வீதமாக உள்ளது. இப்பிரதேசம் நிர்வாக வசதிக்காக இரு மாகாணங்களாகவும் எட்டு மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் மொத்தக் குடித்தொகை 1981இல் 21 இலட்சம் பேராகக் காணப்பட்டது. (20,87,943). இலங்கையின் மொத்தக்குடித்தொகையில் இது 14.1 வீதமாகும். வடகீழ்மாகாணத்தின் மொத்தக் குடித்தொகையில் வடமாகாணம் 53.2 வீதத்தையும் கிழக்கு மாகாணம் 46.8 வீதத்தையும் கொண்டுள்ளது. வடமாகாணத்தின் மொத்தக் குடித்தொகையின் 74.8 வீதத்தினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றனர். வடகீழ் மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 6.1 வீதத்தைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாடு வடகீழ் மாகாணக் குடித்தொகையின் 36 வீதத்தினரைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். பொதுவாகத் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் குடியடர்த்திப் பண்பானது கடற்கரையோரம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. கிழக்குப் பிரதேசத்தில் இப்பண்பினைத் துல்லியமாக அவதானிக்க முடிகின்றது.

## 1.0 சக்தி வளங்கள் (Energy Resources)

1.1 சக்தியை வழங்கும் மரபுரீதியான வளங்கள் அதி விரைவாக அழிவடைந்து செல்லும் தன்மை கொண்டவை. ஆதிகாலம் முதல் இன்று வரை உலகத்திலே பரவலாகத் தாவரங்களே பெருமளவுக்கு எரிபொருட்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இடைக்காலக் கண்டுபிடிப்பான நிலக்கரி, பெற்றோலியம் என்பன கைத்தொழிற் புரட்சியை ஏற்படுத்தியது மட்டுமன்றி நவீன உலகின் எரிபொருட் தேவையின் பெரும்பங்கை வழங்கின. அதிக பயன்பாட்டின் காரணமாக இவை படிப்படியாக அழிவடைந்து சென்று இன்னும் 50 - 75 வருடங்களில் முற்றாக அற்றுப்போய் விடும் நிலை காணப்படுவதாக ஆய்வாளர் கருதுகின்றனர்.

1.2 எதிர்கால உலகின் சக்திவளத் தேவைகள் அழிவடையாத அல்லது குறைவுபடாத சக்தி வளங்களான சூரிய சக்தி, காற்றுச் சக்தி, உயிர்ச் சுவட்டு எரிபொருள் சக்தி, கடல் சக்தி, புவி வெப்ப சக்தி என்பன மூலமாகவே பெறப்படமுடியுமென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மேற்படி மாற்றுச் சக்தி வளங்கள் பலவற்றினை வடகீழ் மாகாணத்தில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் நிறைய உள்ளன.

வடகீழ் மாகாணத்தில் வருடத்துக்குச் சரா சரியாக 55-60 நாட்களே மழை நாட்கள். எனவே சூரிய சக்தியைப் பயன்படுத்தும் வாய்ப்பு இங்கு அதிகம். சோளக்காற்றும் வாடைக்காற்றும் வருடத்தின் நீண்டகாலத்திற்கு காற்றுவீச்சுச் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை அளிக்கவல்லன. இங்கு பெருமளவு கால்நடை வளம் காணப்படுவதால் அவற்றின் கழிவுகளிலிருந்து உயிர்வாயுச் சக்தி பெறப்படலாம். வற்றுப்பெருக்குத் தன்மை கொண்டதும் நுழைகழிப் பகுதிகளைப் பெருமளவு கொண்டதுமான இப்பிரதேசத்தின் நீண்ட கடற்கரையோரப் பகுதிகளிலே சில அணைத் தடுப்புகளை அமைப்பதன் மூலம் கடல் வற்றுப்பெருக்கு நிகழ்வை சக்தி பெறுவதற்குப் பயன்படுத்தமுடியும். கடல் நீரோட்டமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து நீரோட்ட விசையிலிருந்தும், கடலினுள் காணப்படும் வெப்பமாறுபாட்டிலிருந்தும் சக்தி பெற்றுப் பயன்படுத்தக்கூடிய சாத்தியம் உண்டு. மேலும் அண்மைய ஆய்வொன்று கடற்சேற்றுப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படும் 'மீத்தேன்' வாயுப் படிவுகள், சில கடலடித்தளங்களில் பெருமளவு படிந்துள்ளதென்றும் அமுக்க, வெப்பநிலைகளில் மாறுபாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் பெருமளவு சக்தி பெறப்படலாமென்றும் கூறுகின்றது. இவை தவிர கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் பரந்து காணப்படும் இல்மனைற், மொனோ சைட் படிவுகளைப் பயன்படுத்தி அணுசக்தியை உருவாக்க முடியுமென விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர். திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா, றன்கிரியா மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள கப்பூரல்ல, மகாஓயா, கல்லோயா, கிவுலகம போன்ற இடங்களில் காணப்படும் வெப்ப நீரூற்றுக்களிலிருந்து புவிவெப்ப சக்தியைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் ஆராயப்படலாம்.

மேற்படி மாற்றுச் சக்தி வளங்களிலே,

1. சூரிய சக்தி.
2. காற்றுச்சக்தி.
3. உயிர்ச்சுவட்டு எரிபொருள் சக்தி.
4. கடற்சக்தி.
5. புவிவெப்ப சக்தி.

போன்வற்றை எமக்குப் பொருத்தமான வழிமுறையில் எவ்வகையில் பயன்படுத்தலாமெனப் பார்ப்போம்.

**2.0 சூரிய சக்திவளம்** (Solar Energy Resource)

சூரியனே சக்தியின் ஆதாரம், சூரிய ஒளியில் இருந்து சக்தியைப் பெறுவதற்கு இன்று புத்தம் புதிய தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 21 ஆம் நூற்றாண்டில் சூரிய சக்தியை உலகம் பெருமளவு பயன்படுத்துமென விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மரபுரீதியான சக்திவளப் பயன்பாட்டால் ஏற்படும் சூழல் மாசுபடும் பிரச்சினை இவ் வளப்பயன்பாட்டால் இல்லாதொழிந்துவிடும். சூரிய சக்தியை இருவகைகளில் பயன்படுத்தலாம்.

1. சூரிய வெப்பத்தை நேரடியாகப் பயன்படுத்துவது.
2. சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றிப் பயன்படுத்துவது.

2.1 சூரிய வெப்பத்தை நேரடியாகப் பயன்படுத்தும் முறை எமக்குப் பழக்கமான பாரம்பரிய முறையே. உணவுப் பொருட்களை உலரவைத்துப் பயன்படுத்தும் முறையை நீண்டகாலமாகவே நாம் அறிவோம். ஆனால் சிறிது தொழில்நுட்ப அறிவைப் புகுத்துவதன் மூலம் சூரிய வெப்பத்தைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்தமுடியும். 'கருமையாக்கப்பட்ட பொருளின் மீது சூரிய வெப்பம் பெருமளவு ஈர்க்கப்படும்' என்ற விஞ்ஞான மெய்மையைப் பயன்படுத்தி பெருமளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளலாமெனினும் குறைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி எமக்குப் பொருத்தமான சூரிய அடுப்புகளையாவது நாம் தயாரித்துக் கொள்ள முடியும். இந்தியாவிலே இவ்வகை அடுப்புகள்கூடை போன்ற வடிவத்திலும் இன்னும்சில பெட்டி போன்ற வடிவத்திலும் தயாரிக்கப்படுகின்றன. கண்ணாடிகளையும், கண்ணாடி வில்லைகளையும் பயன்படுத்தி சூரிய வெப்பத்தைக் குறிப்பிட்ட இடத்தில் குவியச் செய்யும் வகையில் இவ்வகை அடுப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஆவடி முருகப்பா தொழில் நுட்பக் கல்லூரியிலும், சிந்தாமணிக் கூட்டுறவு அங்காடியிலும் சூரிய அடுப்புகள் தயாரிக்கப் பட்டு மலிவான விலையில் விற்கப்படுகின்றன. இவ்வகை அடுப்புகள் மூலம் அரை மணி நேரத்தில் $135^{0}C$ வரை வெப்பத்தை ஈர்க்க முடிகின்றது. இவ்வகை மாதிரிகளைப் பெற்று எமக்குப் பொருத்தமான சூரிய அடுப்புகளை நாம் தயாரித்துக்கொள்ள

முடியும். எமக்குப் பெரும் பிரச்சினையாகவுள்ள எரிபொருட் பற்றாக்குறையை ஓரளவுக்கு இதன் மூலம் நிவர்த்திக்க முடியும்.

2.2 சில பொருட்களின் மீது சூரிய ஒளிபடும் போது ஒரு வகை மின்னோட்டம் உண்டாகின்ற தென பிரான்சிய விஞ்ஞானி எட்மண்ட் பெக்கல் என்பவர், 1839இல் கண்டு பிடித்தார். இக்கண்டு பிடிப்பைத் தொடர்ந்து "செலினியம்" என்ற கனி மத்திலிருந்து திருத்தமற்ற சூரிய மின்கலங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாய்வுப்பணி மேலும் தொடர்ந்தது. 1954இல் நியூஜேர்சியிலுள்ள பெல் ஆய்வு கூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'சிலிக் கன்' எனும் கனிமத்தைப் பயன்படுத்தி சூரிய மின் கலம் தயாரிக்க முயன்று வெற்றி பெற்றனர். 1960களில் சோவியத் ஒன்றியத்திற்கும் அமெ ரிக்காவிற்குமிடையே ஏற்பட்ட விண்வெளிப் பயணம் தொடர்பான போட்டி நிலை சூரிய மின் கலத் தயாரிப்பை ஊக்கப் படுத்தியது. ஏனெனில் செயற்கைக் கோள்கள் இயங்குவதற்கு சூரிய மின் கலங்களே தேவைப்பட்டன.

'சிலிக்கன்' என்பது உலகில் மிகவும் மலி வாகவும் அதிகமாகவும் கிடைக்கும் கனிமமாகும். இது புவியில் மண்ணுடன் கலந்துள்ளது. இக் கனிமம் 1400$^{o}$C அளவுக்கு வெப்பமேற்றுவதன் மூலம் உருவாக்கப் பட்டு படிகவார்ப்புகள் பெறப்படு கின்றன. இவற்றிலிருந்து தனிச் தனிச் சில்லு களாக சிலிக்கன் சீவி எடுக்கப்பட்டு சூரிய மின்கலங் கள் தயாரிக்கப்படுகின்றன. சூரிய மின்கலங் களின் உற்பத்திச் செலவு இன்றும் அதிகமாகவே உள்ளது. ஆனால் எதிர்காலத்தில் குறைந்த விலையில் இவற்றை உற்பத்தி செய்யமுடியுமென விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். 1973இல் ஏற்பட்ட பெற்றோலிய நெருக்கடிக்குப் பின்னர் சூரிய மின்கலங்களின் உற்பத்தியில் உலக நாடுகள் பெரிதும் அக்கறை கொண்டுள்ளன. 1990ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் சூரிய மின்கலங் களை உற்பத்தி செய்வதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றன. பல தனியார் கம்பனிகள் இவ் உற் பத்தியைச் சர்வதேச வர்த்தகமாக மாற்றியுள்ளன. இதனால் எதிர்காலத்தில் சூரிய மின்கலங்களின் விலை கணிசமாகக் குறையக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

2.3 மரபுரீதியாக சக்தியைப் பயன்படுத்தி மின்சாரமயமாக்கப்பட்ட கைத்தொழில் நாடுகளை யும், நகரங்களையும் சார்ந்த மக்களைவிட மூன் றாம் உலகக் கிராமிய மக்களே சூரிய மின்கலங் களால் அதிக பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். மூன்றாம் உலகக் கிராம மக்கள் சூரிய மின்கலங் கள் மூலம் பின்வரும் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- வீட்டுப் பாவனைக்கு மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரத்தைப் பெறல்.
- சிறிய அளவிலான விவசாய நிலங்களுக்கு நீரிறைத்தல்.
- கிராமிய வைத்தியசாலைகளில் குளிரூட்டி களை இயங்கச் செய்தல்.
- கலங்கரை விளக்குகள், வீதி விளக்குகள் பொருத்துவதற்கு பயன்படல்.
- கிராமத்திற்குத் தேவையான நீரை வெப்ப மேற்றிச் சுத்திகரித்தல்.
- தொலைத்தொடர்புச் சாதனங்களை இயங் கச் செய்தல்.
- வாகனங்கள், படகிற்குரிய மின்கலங்க ளுக்கு மின் ஏற்றம் செய்தல்.

தற்பொழுது நாம் எதிர்நோக்குகின்ற எரிபொருள் விலையேற்றத்தின் பாதிப்பிலிருந்து ஓரளவு விடுபடுவதற்கு சூரிய மின்கலங்களைப் பாவிக்க முடியும். வீட்டுப் பாவனைக்கேற்ற சூரிய மின்கலங்கள் பல்வேறு அளவுகளில் யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களில் கிடைக்கின்றன. (இவை 10W முதல் 120W வரையான மின்சக்தியை வழங்கக் கூடியன) ஒரு சூரிய மின்கலத்தினை 15 வருடங்களுக்குப் பாவிக்கமுடியும். இவற்றில் ஒன்றைப் பெற்று சூரிய ஒளிபடும் கூரையின் மீது வைத்துக் கார் பற்றறி (12A) ஒன்றுடன் அதனை இணைத்து விடுவோமாயின் பகலில் மின் ஏறும்.

பற்றறியில் இருந்து பெறப்படும் மின் சாரத்தை எமது தேவைக்கேற்ப பகலிலும் இரவி லும் பயன்படுத்த முடியும். சிறிய அளவிலான மின்குமிழைப் பொருத்துவதன் மூலம் வீட்டிற்குத் தேவையான மின் ஒளியை நாம் பெற்றுக்கொள்ள

முடியும். வானொலி, தொலைக்காட்சி, சிறிய மின் விசிறி, ஓடியோ, வீடியோ, சாதனங்கள் என்பவற்றையும் இயக்க முடியும். மீள் மின்னேற்றம் பெறத்தக்க டோர்ச்பற்றறி பென்டோர்ச் பற்றறிகளுக்கும் மின் ஏற்ற முடியும். சிறியளவிலான குளிர்சாதனப் பெட்டிகளையும் இயக்க வைக்க முடியும். சூரியமின்கலங்களின் பாவனை பற்றிய விழிப்புணர்வை எமது மக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் வீட்டை ஒளிபெறச் செய்யமுடியும். எமது மாநகரசபை, கிராம சபைகளும் ஏனைய மக்கள் நிறுவனங்களும் வீதிகளில் சூரிய மின்கல விளக்குகளைப் பொருத்தும் வாய்ப்புகள் பற்றிச் சிந்திக்கலாம். எமது பிரதேசத்தில் பரந்துள்ள வெண் மணல் குறிப்பாக மணற்காட்டு மண் சூரியமின் கலங்கள் தயாரிக்கக்கூடிய 'சிலிக்கா' கனிமத்தைப் பெருமளவு கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் மக்கள் தொகையில் 48 வீதத்தினர் முக்கியமாகக் கிராமப்புற மக்கள் இது வரை மின் இணைப்பைப் பெறவில்லை. எனவே சூரிய மின்கலங்களைக் குறைந்த விலையில் அல்லது தவணை முறையில் பணம் செலுத்தும் வசதியை ஏற்படுத்தி அறிமுகப்படுத்துவதில் 'செல்கம்பனி,' உதவி வழங்கி வருகின்றது. இதற்கு திருவாளர்கள் விவின் பெரேரா, லலித் குணவர்த்தனா, பிரதீப் ஜெயவர்த்தனா (ஜே.ஆர்இன் பேரன்) போன்றோர் 1986 முதல் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றார்கள்.

**3.0 காற்றுச் சக்திவளம் (Wind Energy Resource)**

3.1 பல ஆண்டுகளுக்கு முன்னரேயே குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் காற்றாடியின் இயக்க சக்தியினால் ஆறு, குளம், கிணறுகளிலிருந்து வயல் நிலங்களுக்கு நீரிறைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அண்மைக் காலங்களில் புகுத்தப்பட்ட புதிய தொழில் நுட்பங்களில் காற்றாடியினை இலகுவாகச் சுழலச் செய்தல் சாத்தியமாகி உள்ளது. இதனால் மெல்லிய காற்று விசையிலும் காற்றாடியை இலகுவாகச் சுழலச் செய்யமுடிவதோடு மின்சாரத்தைப் பெறுவதற்குரிய ஜெனரேட்டர்களையும் இயங்கச் செய்ய முடியும். வீடுகள், கட்டடங்களைவிட உயரமாக காற்றாலைகளை அமைப்பதற்கு உலோகச் சட்டங்கள் பயன்படுத்த வேண்டுமாகையால் ஆரம்பச் செலவு அதிகமாக உள்ளது. ஆனால் நீண்ட காலத்திற்கு எந்தச் செலவுமின்றிப் பயனை நுகரக்கூடியதாக உள்ளது. கடலால் சூழப்பட்டு சமவெளிகளைக் கொண்ட நாடுகளில் காற்று சக்தியினைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் அதிகமாகும். டென்மார்க், நெதர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் சோமாலியா, இந்தியா, சீனா போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் காற்றுச் சக்திவளம் கணிசமான அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனைப் பரவலாகவும், மலிவாகவும் பயன்படுத்த வழிகாணும் ஆய்வுகளும் தொடர்கின்றன. உலகில் 2000ம் ஆண்டில் காற்றாலை மூலம் 17,800 மெகாவாட்ஸ் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இது 2001ஆம் ஆண்டில் 23,300 மெ.வா.ஆக அதிகரிக்கவுள்ளது. இன்று காற்றாலைச் சக்தி வளப்பாவனையில் ஜேர்மனி முதலிடம் வகிக்கின்றது. 2003ஆம் ஆண்டில் 12500 மெ.வா. உற்பத்தியைப் பெறுவதற்கான திட்டம் தீவிரமாக இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் எழுபது நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன, டென்மார்க்கில் தேசிய மொத்த சக்தி நுகர்வில் 18 வீதம் காற்றாலை மூலம் பெறப்படுகின்றது. ஸ்பெயின் நாட்டில் தேசிய மொத்த சக்தி நுகர்வில் 2010ம் ஆண்டில் 12 வீதம் காற்றாலை சக்தி மூலம் பெறப்படவுள்ளதாகக் கணிப்பிட்டுள்ளார்கள். காற்றாலைகளை நிறுவக்கூடிய உள்ளார்ந்த வளங்களை உலகிலேயே அதிகளவு கொண்ட நாடாக ஐக்கிய அமெரிக்காவே விளங்குகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் மூன்று மாநிலங்களான வட டகோட்டா, கன்சாஸ், ரெக்ஸாஸ் என்பனவற்றில் காற்றாலை அமைத்துப் பெறக்கூடிய சக்தி வளம் ஐக்கிய அமெரிக்கா முழுமைக்கும் மின்சார சக்தியை வழங்கப் போதுமானதெனக் கணிப்பிட்டுள்ளார்கள். இந்தியாவும் காற்றாலைகளை நிறுவி சக்தி வளம் பெறத்தக்க பல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு, கேரளா, கன்னடம், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் காற்றாலைகளை உருவாக்கப் பொருத்தமான பகுதிகளைக் கொண்டுள்ளதோடு இம் முயற்சியில் பெரிதும் ஈடுபாடும் காட்டிவருகின்றன. நாடொன்றின் காற்றுச் சக்தி வளப் பயன்பாட்டுத் திட்டத்திற்கு உள்ளூரில் கிடைக்கும் காற்றின் தன்மை, வேகம், காற்று வீசும் திசை, உயரம் போன்றன துல்லியமாக அளவிடப்படுதல் வேண்

டும். இவை காற்றுப் பற்றிய தரவுகளாக அமையும். இத்தரவுகளைக் கொண்டு காற்றுக் காலநிலைத் தேசப்படம் உருவாக்கப்படுதல் இன்றியமையாத தாகும். எமது பிரதேசத்தில் அமைந்துள்ள வளி மண்டலவியல் நிலையங்கள் இத்தரவுகளையும் முறையாகத் திரட்டி வருதல் வேண்டும்.

3.2 எமது பிரதேசத்தில் பெரும்பரப்பு சமதரையாக விளங்குகின்றது. கடற்கரையோரப் பகுதிகளிலேயே பெருமளவு குடித்தொகை செறிந் துள்ளதோடு குறிப்பிடக்கூடிய நகரங்கள் பலவும் கடற்கரையோரமாகவே பரந்துள்ளதை அவதா னிக்கலாம். இவ்வம்சங்கள் காற்றாலைகளை அமைப்பதற்குச் சாதகமானவையாக உள. மேலும் வடகீழ் மாகாணங்களில் மே முதல் செப்டெம்பர் வரை தென்மேற்கு மொன்சூன் காற்று வேகம் கொண்ட வரண்ட காற்றாக வீசுகின்றது. இது வடக்கே சோளகக்காற்று என்றும் கிழக்கே கச்சான் காற்று என்றும் வழங்கப்படுகிறது. டிசெம்பர் முதல் பெப்ரவரி வரை இப்பிரதே சங்களில் வடகீழ் மொன்சூன் காற்று வீசுகின்றது. இவற்றுக்கு இடைப்பட்ட மாதங்களாகிய ஒக்டோபர், நவம்பர், மார்ச், ஏப்ரல் மாதங்களில் காற்று வீச்சு குறைவே. எனினும் இம்மாதங்களில் சூறாவளிக் காற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் 'கொண்டல்' காற்றும் இடையிடையே வீசுகின்றன.

மேற்படி காற்று வீச்சைப் பயன்படுத்தி எமது பிரசேதத்தில் ஆங்காங்கே காற்றாலைகளை அமைக்க முடியும். இதனைத் தேச சக்திவள நிர்மாணத் திட்டத்துடன் இணைந்து உருவாக்கு தல் நல்ல பயன் தருமெனத் துணிந்து கூறலாம். குளங்கள், கிணறுகளிலிருந்து விவசாய நிலங் களுக்கு நீரிறைப்பதற்கும், நகர கிராம மின்சார உற்பத்திக்கும் காற்றாலை அமைப்புகள் உதவிட முடியும். முயற்சியுள்ளோர் தனிப்பட்ட வீடுகளில் கூட சிறிய காற்றாலைகளை அமைத்து நீரிறைப்ப தோடு மட்டுப்படுத்தப்பட்டளவில் வீட்டு மின்சார தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும்.

### 4.0 உயிர்ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி வளம் (Biomass, Biogas, Energy Resouces)

4.1 நறேசா (NARESA) நிறுவன ஆய் வொன்றின்படி இலங்கையில் அடிப்படை எரிசக்தி நுகர்வில் 70 வீதம் உயிர்ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி (விறகு) மூலமே பெறப்படுவதாகத் தெரியவருகின் றது. கிராமிய, தோட்டத் துறையில் 90 வீதம் உயிர்ச் சுவட்டுத் திணிவே எரிசக்தித் தேவையை நிறைவு செய்கின்றது. பொதுவாக சூழலியலாளர் குற்றம் சுமத்துவது போல் மேற்படி எரிபொருள் பாவனைக் காக காடுகள் அழிக்கப்படுவது அரிதே. அவ்வப் பிரதேசங்களில் பயிராகும் பயன்தரு தாவரங் களின் உப உற்பத்திகளே விறகுக்காகப் பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாகப் பெருந்தோட்டப் பகுதிகளில் தேயிலைச் செடியின் காய்ந்த தடிகள், இறப்பர் மரத்தின் எச்சங்கள் என்பனவும் யாழ்ப்பாணப் பிர தேசத்தில் பனைமரத்தின் உப உற்பத்திகளான ஓலை, மட்டை, ஊமல் போன்றனவும் எரிபொருளாக அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. தென்னை மரத் தின் உப உற்பத்திகள், கறுவா, கருப்பந்தடி என்பன வும் அவை பெருமளவு காணப்படும் பிரதேசங் களில் விறகுக்காகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

காட்டுத் தாவரங்களை விறகுக்காக உற்பத்தி செய்து எரிபொருளாகப் பயன்படுத்தும் வழி முறைகளும் பலநாடுகளில் பின்பற்றப்படுகின்றன. இதற்காக ஆமணக்கு, சூரிய காந்திச்செடி போன் றன பெருமளவு உதவுகின்றன. தாவரங்களிலி ருந்து உயிரியல் டீசல் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளன. உயிரியல் தொழில் நுட்ப அறிஞர்கள் பிரதேச ரீதியாக இவை உற்பத்தி செய்யப்படும் சாத்தியம் பற்றிச் சிந்திக் கலாம்.

4.2 ஒப்பீட்டளவில் எம்மால் குறைந்த செலவில் பெறக்கூடிய சக்திவளமாக உயிர்வாயுச் சக்தி விளங்குகின்றது. பொதுவாக தாவர, மிருக, மனிதக் கழிவுகளிலிருந்து உயிர்வாயு பெறப்பட லாம். காற்றில்லாத சூழ்நிலையில் சிலநுண் உயிர்களின் (மீதேனிக் பக்ரீறியா) தாக்கத்தினால் பிரிகையடைந்து நொதிக்கும்போது உண்டாகும் வாயுவே உயிர்வாயு ஆகும். பொதுவாக மீத்தேன் வாயு என வழங்கப்படும் இவ்வாயு ஒரு வாயுக் கலவையாகும். இதிலே மீத்தேன் (Methane ($CH_4$) 55-65 வீதமும், காபனீரொட்சைட் ($CO_2$) 35-45 வீதமும், நைதரசன் ($N_2$) 3 வீதமும், ஐதரசன் ($H_2$),

ஒட்சிசன் ($O_2$), ஐதரசன் சல்பைட் ($H_2S$) என்பன ஒவ்வொரு வீதத்திலும் அடங்கியுள்ளன.

உயிர்வாயுவை மிருகக்கழிவுகளிலி ருந்து, குறிப்பாக சாணத்திலிருந்து பெற்றுக்கொள்வது எமக்குப் பொருத்தமானதாகவும் இலகுவானதாகவும் அமையும். இதனால் இவ்வாயுவை கிராமிய விவசாய மக்கள் சாண எரிவாயு என வழங்குகின்றனர். இந்தியாவிலும், சீனாவிலும் இதன் பயன்பாடு பழைய காலம் முதலாக இருந்து வருகின்றது. பிலிப்பைன்ஸ், கொரியா ஆகிய நாடுகளிலும் இவை குறிப்பிடத்தக்க வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் சமையலுக்காகச் சாணவிறாட்டியைப் பயன்படுத்தும் வழக்கம் நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாகும். விறகுத் தட்டுப்பாடே அங்கு இதனை ஊக்குவித்துள்ளது. இந்தியக் கிராமங்களில் குறிப்பாக தமிழ்நாட்டுக் கிராமங்களில் சாண எரிவாயுச் சக்திப் பயன்பாடானது அரசினால் திட்டமிடப்பட்ட முறையில் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. பெருந்தொகையான கிராமிய மக்கள் இதன் பாவனையால் பெருமளவு பயன்பெற்று வருகின்றார்கள். எமது கிராமிய விவசாய மக்களும் தமது அன்றாட வீட்டுத் தேவைக்கான சக்தியைச் சாண எரிவாயுவிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய வழிபற்றிய தொழில்நுட்ப அறிவை அவர்களுக்கு நாம் வழங்கவேண்டும்.

பொதுவாக எமது வீடுகளிலே ஒளிபெறுவதற்கும் சமையல் செய்வதற்குமே கூடுதலான எரிபொருள் தேவைப்படுகின்றது. எரிபொருட்களின் விலையேற்றம் விறகுப் பற்றாக்குறை என்பன தீராத பிரச்சினைகளாகத் தொடரவுள்ளன. இப்பிரச்சினைக்குரிய பொருத்தமான மாற்று வழிகளிலொன்று கிராமம் தோறும் சாண எரிவாயுவை வீட்டிற்கு ஒளியேற்றவும் சமையல் செய்வதற்கும் பெருமளவு பயன்படுத்தும் வழியைக் காண்பதேயாகும். சிலிண்டர்களில் நிரப்பப்பட்டு விற்பனையாகும் எல்.பி. வாயுவையே நகரப்புற மக்கள் சமையலுக்காகப் பெருமளவு பயன்படுத்தி வருகின்றார்கள். சாண எரிவாயு எல்.பி. வாயுவுக்கு நிகரான எரிசக்தியை வழங்கவல்லதாகும். அத்துடன் 'பெற்றோமக்ஸ்' விளக்கை இவ்வாயுவைப் பயன்படுத்தி எரியச் செய்யமுடியும். இவைதவிர இவ்வாயுவின் துணையுடன் இயந்திர மோட்டார்களை இயங்கச் செய்யமுடியுமாகையால் ஒளியேற்றவும், நீர் இறைக்கவும், மின்சாரம் பெறவும் இதனைப் பயன்படுத்த முடியும்.

சாண எரிவாயு எரியும்போது கரிபடியாத சுவாலை வெளிவருவதால் சமையல் பாத்திரங்களில் கரிபடிவதில்லை. புகை குறைவாகையால் வளி மாசடைவதில்லை. மேலும் எரிவாயு பெற்ற பின் எஞ்சும் சாணம் கூடுதலான பயிர்ப் போசணையைக் கொண்டது. இது கிருமிகள், களைகள் அற்றதாகவும் காணப்படுகின்றது. இச்சாணத்தை உரமாகப் பயன்படுத்தும்போது விவசாய உற்பத்தி அதிகரிப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

நாம் பின்பற்றத்தக்க சாண எரிவாயு உற்பத்திச் சாதனங்கள் இருவகைப்படும்.

1. மிதக்கும் வாயுக்கொள்கலனுடன் கூடிய இந்தியமுறைச் சாதனம்.
2. அமுக்க கொள்கலனுடன் கூடிய சீன முறைச் சாதனம்.

இந்திய முறை 'ஹோபர்காஸ்' முறையெனவும் வழங்கப்படும். இந்தியாவில் ஏழுபேர் கொண்ட ஒரு குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய சாண எரிவாயுச் சாதனத்தை 20,000 ரூபா (2000 ஆண்டுக் கணிப்பீடு) செலவில் அமைத்துக் கொள்ள முடியுமென்கின்றனர்.

சீன முறையிலான எரிவாயுச் சாதனம் இந்திய முறையைவிட சிக்கனமானதும் சுலபமாக அமைக்கக்கூடியதுமாகும். இந்தியச் சாண எரிவாயுச் சாதனத்தைவிட அரைப்பங்கு செலவில் இதனை அமைத்துக் கொள்ளலாம். ஆண்டுக்கு ஒரு முறை துப்புரவுப் பராமரிப்புப் பணியை மேற்கொண்டால் போதுமானது.

இரண்டு அல்லது மூன்று மாடுகளிலிருந்து நாளொன்றிற்கு 15 கிலோ சாணம் பெறப்படுகின்றதெனக் கொள்வோம். இதிலிருந்து பெறப்படும் எரிவாயுவானது ஒரு கன மீற்றராக (2.4 கன அடியாக) இருக்கும். ஒரு கன மீற்றர் எரிவாயுவின் பெறுமதி பின்வருமாறு –
2.0 கிலோகிறாம்விறகு.

0.6 லீற்றர் மண்ணெண்ணெய்.
0.5 லீற்றர் பெற்றோல்.
0.4 லீற்றர் டீசல்.
3 பேருக்கு 3 வேளை சமைப்பதற்கான எரிசக்தி.

ஒரு மணித்தியாலயத்திற்கு 6 'பெற்றோமக்ஸ்' விளக்குகளை எரிவூட்டுவதற்கும் போதுமான வலு.

ஒரு மணித்தியாலத்திற்கு 40W ஒளிசக்தி கொண்ட 25 மின்குமிழ்களை ஒளிவூட்டுவதற்குப் போதுமான வலு.

ஆகிய அனைத்திற்கும் தேவைப்படும் மொத்த சக்திக்குச் சமமானதெனக் கணிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தின் விவசாய உற்பத்தியானது பயிர்ச்செய்கையுடனும் விலங்கு வளர்ப்புடனும் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படும் பண்புகொண்டதாகப் பாரம்பரியமாகவே இருந்து வருகின்றது. எமது பாரம்பரியத்தில் மாடுகளை செல்வ வளமாகக் கொள்ளும் வழக்கம் உள்ளது. இதனால் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கிராமிய விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் மாட்டு வளர்ப்பில் அக்கறை கொண்டுள்ளன. பலர் பட்டி மாடுகளைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். எனவே சாண எரிவாயுச் சக்தியை கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் பெறச் செய்வது இலகு வாக நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டமேயாகும்.

**5.0 கடல் சக்தி வளம் (Oceanic Energy)**

புவிக்கோளத்தில் 70 வீதம் கடற்பரப்பாகக் காணப்படுகின்றபோதிலும் மனிதன் கடல் வளத்தை இன்றுவரை முறையாகவும் திறமையாகவும் பயன்படுத்தவில்லை என்பது நிதர்சனம். உணவின்றி மனித உயிர்கள் மடியும் வறுமை நிலை பரவலாக உலகெங்கும் காணப்படும் நிலையிற் கூட, கடல் வளத்தை உணவுத் தேவைக்காகப் பயன்படுத்தும் அபிவிருத்தி நுட்பம் அரிதாகவே வளர்ந்துள்ளது. புவியிற் பரந்துள்ள கடற்பரப்பிலிருந்து உணவாகப் பெறத்தக்க உள்ளார்ந்த வளம் 100 எனக் கொண்டால் மனிதன் இன்றுவரை அதில் 1 வீதத்தையே பயன்படுத்துகின்றான் என்பது வியப்பளிக்கும் தகவலாகும். இதுபோன்றே கடலினைச் சக்தி தரும் வளமாகப் பயன்படுத்துவதும் மிக அரிதாகவே உள்ளது. ஆனால் இதற்கான வாய்ப்புகளோ அதிகம்.

கடலில் இருந்து நான்கு வழிகளில் சக்தி பெறப்படலாம் என ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

5.1 கடல்வற்றுப் பெருக்கு நிகழ்வைப் பயன்படுத்தி சக்தி பெறும் வழி.
5.2 கடல் அலைகளில் இருந்து சக்தி பெறும் வழி.
5.3 ஆழ்கடலில் காணப்படும் நீரோட்டத்தைப் பயன்படுத்திச் சக்தி பெறும்வழி.
5.4 கடல் 'மீத்தேன்' வாயுப் படிவுகளிலிருந்து சக்தி பெறப்படும் வழி.

5.1 கடல் வளத்திலிருந்து மேற்படி நான்கு வழிகளிலும் சக்தி பெறும் வாய்ப்புகள் எமது பிரதேசத்தில் சாதகமாக உள்ளன. உதாரணமாக யாழ்ப்பாணக் குடாக்கடலை நோக்கும்போது இங்கு சுண்டிக்குளம் முதல் ஆனையிறவு, பூநகரி, கச்சாய், குருநகர், பண்ணை, அராலி, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கும் குடாக்கடற்பரப்பு வாய்ப்பான கடல் நீரோட்டத்தைக் கொண்ட பகுதியாகக் காணப்படுகின்றது. இப்பகுதிகளில் பருவ காலத்திற்குரிய வற்றுப்பெருக்கு, நாளாந்த வற்றுப் பெருக்கு என்பனவற்றை அடையாளம் காணலாம். இங்கு வற்றுப் பெருக்கு காலம், உயரம் என்பன நன்கு அவதானிக்கப்பட்டுச் சக்தி பெறும் வழிகள் கண்டறியப்படவேண்டும். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தையும் தீவுப் பகுதியையும் இணைக்கும் யாழ்ப்பாணக் குடாக்கடலை மேவி அமைக்கப்பட்ட பண்ணைப் பாலத்தை அவதானிக்கும்போது பெருக்கின்போது பாலத்திற்கு மேற்கே கடல்நீர் ஓடி மேற்குப்பகுதி பெருகிக் காணப்படுவதையும் வற்றும்போது கிழக்குப் பகுதி நோக்கி கடல்நீர் வடிந்து வருவதையும் ஒருநாள் பொழுதில் அவதானிக்க முடியும். இவ்வாறு கடல் பெருகும் போது கடல்நீரை மறித்துத் தேக்கமாக உருவாக்கி பின்னர் வற்றும்போது சிறிய துளைகள் மூலம் நீரை வடியவிடும் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். துளைப்பகுதிகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சுழலிகளைப் பொருத்தி விடுவோமாயின் அப்பகுதிகளில் இருந்து மின்சக்தியைப் பெறமுடியும்.

இவ்வாறு பொருத்தமான கடலை அண்மித்த பல பிரதேசங்கள் உள. இவற்றை நன்கு ஆராய்ந்து கண்டறிந்து கடற்பெருக்கு நீர்த்தேக்கங்களை உருவாக்க முடியும். எமது பிரதேசத்தை நேசிக்கும் பொறியியலாளர்கள் இவ் வழிமுறை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

5.2 கடல் அலைச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நுட்பம் சிங்கப்பூரில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கடற்பரப்புகள், துறைமுகப் பிரதேசங்களில் மிதக்கவிடப்பட்டுள்ள சிறிய மின் உற்பத்திச் சாதனங்கள் அப்பிரதேசத்தின் கடற்பரப்பை ஒளியூட்டிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அலையின் வீச்சில் கடலில் மிதக்கும் மின் உற்பத்தி சாதனத்தின் சுழலி சுழற்றப்பட்டு மின் உற்பத்தி கிடைக்கின்றது.

யாழ்ப்பாணக் குடாக்கடலில் அலைகள் குறைவு. ஆனால் வடமராட்சிப் பகுதி திருகோணமலை உள்ளிட்ட கிழக்குப் பகுதிகளில் பாரிய அலைகள் தோன்றுகின்றன. இப்பகுதிகளில் மேல்விவரித்த வகையான சாதனங்களைப் பொருத்துவது பற்றி ஆராயலாம்.

5.3 ஆழ்கடல் நீரோட்டம் என்பது கடல் நீரில் ஏற்படும் அடர்த்தி மாறுபாட்டால் நிகழ்வது. குளிர்ந்த கடின உப்பு நீர் கீழேயும், வெப்பமான உவர் நீர் மேலேயும் காணப்படும். கடல் நீர்ப்பரப்புகளில் ஆழ்கடல் நீரோட்டங்கள் காணப்படுகின்றன. கடல் மேல் நீரைக் காற்று அடித்துச் செல்லுமாயின் கீழ் இருக்கும் குளிர் நீர் வேகமாக மேற்பரப்புக்கு வருகின்றது. இந்நிகழ்வு சில கடல் பரப்புகளில் அதிகமாக இடம்பெறுகிறது. பேரு நாட்டின் கடல் பரப்பில் 'எல்நினோ' தோன்றுவதற்கு இவ்வாறான கடல் நீரோட்டமே காரணமாக அமைகின்றதெனத் தெரிகிறது. எமது பிரதேசத்தில் குறிப்பாக திருகோணமலைக் கடற்பரப்பில் ஆழ்கடல் நீரோட்டம் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவை இன்னமும் நன்கு ஆராயப்படவில்லை. இவை ஆராயப்பட்டு நன்கு திட்டமிடப்பட்டு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுமாயின் எமது பிரதேசத்திற்கு சக்தி வழங்கக்கூடிய இலகுவான வழியைக் கண்டறிந்தவர்களாவோம்.

5.4 அண்மைக்கால ஆய்வு ஒன்று கடற்கரைகளில் ஆழமற்ற சேற்றுப் பகுதிகளில் 'மீத்தேன்' வாயுப் படிவுகள் பெருமளவுக்குப் படிந்துள்ளதாக தெரிவிக்கின்றன. கடலோரங்களில் 'மீத்தேன்' வாயுவெளியேறி சில சமயங்களில் தீப்பிழம்புகளை உருவாக்குவதை நாம் அறிவோம். அதுபோன்று கடற்கரையோரங்களில் மாத்திரமன்றி ஆழமற்ற கடல் அடித்தளங்களிலும் இப்படிவுகள் பெருமளவுக்குப் படிந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட அமுக்க, வெப்ப நிலைகளில் இவை இயங்காமல் உள. இவ் அமுக்க வெப்பங்களில் சில மாறுபாடுகளை உருவாக்குவதன் மூலம் இவற்றிலிருந்து பெருமளவு 'மீத்தேன்' வாயு பெறப்படலாமென அண்மைய ஆய்வு வெளிப்படுத்துகின்றது. மேற்படி வாயு பெறப்படும் வழிமுறை – நுட்பம் எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்குப் பகுதிகளில் இதனைப் பெருமளவு பெற்றுக் கொள்ள முடியுமென நம்பலாம்.

**6.0 புவி வெப்ப சக்தி** (Geo Thermal Energy)

தரைக்கீழ் நீரானது புவியின் உட்பாகத்தில் கொதிக்கும் நிலையிலுள்ள 'மக்மா' (magma) படையின் வெப்பத்தால் வெப்ப மூட்டப்படுவதால் ஏற்படும் சக்தி வெளிப்பாட்டையே புவி வெப்பசக்தி என வழங்குகின்றோம். பெரும்பாலும் இவ்வகைச் சக்தி வெளிப்பாடுகள் எரிமலை வலயங்களிலேயே காணப்படுகின்றன. சக்தியை வெளிவிடும் வழிமுறையைக் கொண்டு இவற்றை இரு பிரிவாக வகைப்படுத்துவர்.

1. நீராவியை வெளியேற்றும் மையங்கள்.
2. வெப்ப நீரூற்றுகள்.

6.1 புவியிலுள்ள சில துவாரங்கள் ஊடாக வெப்பநீரும் நீராவியும் அடிக்கடி வெளிவரும் மையத்தையே geyser என வழங்குவர். இதனை நீராவியை வெளியேற்றும் மையங்கள் எனத் தமிழில் கூறலாம். புவியின் கீழ் உள்ள பாறை குகைகளில் சிக்கியுள்ள தரைக்கீழ் நீர் மக்மாப் படை வெப்பத்தால் வெப்பமேற்றப்பட, அங்கு வெப்பமும் அமுக்கமும் அதிகரிக்கிறது. இதனால் இணைக்கும் துவாரத்தின் ஊடாக மிகவும் வேகமாக கொதிக்கும் நீராவி வெளியேறுகிறது. நீராவி வெளியேற தரைக்கீழ் நீர் குகைக்குள் வருகிறது. இது மீண்டும்

வெப்பமேற்றப்படுகிறது. இதனால் மீண்டும் நீராவி வெளியேற்றப்படுகிறது. இந்நிகழ்வு ஒரு சுழற்சி முறையிலே இவ் வகையான அமைப்புக் காணப் படும் பிரதேசங்களில் செயற்படுகின்றது. இச் செயற் பாட்டினைப் புவி வெப்ப சக்திப் பயன்பாடாக மாற்றி மனிதன் பயன்படுத்த முடியும். 1965இல் ஐக்கிய அமெரிக்க கலிபோர்ணிய மாநிலத்தில் மேற்படி சக்தியைப் பயன்படுத்தத்தக்க வகையில் வலுவழங் கும் சாதனம் உருவாக்கப்பட்டது. இதிலிருந்து மின் சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஐஸ்லாந்து குளிர் கால நிலை நிலவும் நாடாகையால் அங்கு வீடுகள், கட்டடங்களுக்கு வெப்பமேற்றுவதற்கு புவி வெப்ப சக்தியைப் பெருமளவு பயன்படுத்துகி றார்கள். இவ்வாறு பெறப்படும் வெப்பமேற்று கையைப் பயன்படுத்தி காய்கறி, பழவகை என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில் பனிமூடியுள்ள புவிப் பகுதிகள் புவி வெப்பசக்திப் பாவ னையால் குடியிருப்புப் பகுதிகளாக மாற்றப்பட லாம் என அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

6.2 வெப்ப நீரூற்றுகள் புவியின் எரி மலை வலயப் பகுதிகளில் மாத்திரமன்றி புவி மேற்பரப் பில் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன. இவையும் புவிவெப்ப சக்தி வளங்களே.

இலங்கையின் 225இற்கு மேற்பட்ட வெப்ப நீரூற்று மையங்கள் அடையாளம் காணப்பட் டுள்ளன. இதிலே 120இற்கு மேற்பட்டவை மலை நாட்டுப் பகுதிகளில் பரந்துள்ளன. வடகீழ் மாகா ணத்திலும் வெப்ப நீரூற்று மையங்கள் பரந்துள் ளன. திருமலை கன்னியா நீரூற்று பிரசித்தி பெற்றதாகும். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங் களில் கப்பூரல்ல, மகாஓயா, கல்லோயா, கிவுலகம போன்ற இடங்களில் வெப்ப நீரூற்றுகள் காணப் படுகின்றன. இவை பற்றிப் புவிச் சரிதவிய லாளர்கள் ஆராய்ந்தது குறைவே. இவை நன்கு ஆராயப்பட்டு புவி வெப்பசக்தியைப் பயன்தரும் வளமாக மாற்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

**7.0 ஏனைய சக்தி வளங்கள் :**

7.1 அணுசக்தி மூலம் மின்சாரம் பெறும் நோக்கில் தமிழ்நாட்டில் கால்பாக்கம், கூடங் குளம் போன்ற பகுதிகளில் அணு உலைகள் உருவாக் கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய நிலை யில் அணு உலைகளால் இந்தியாவில் 2700 மெ.வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின் றது. அணு உலைகளின் உருவாக்கம் ஆபத்து நிறைந்ததெனவும் மிக அதிக செலவிலேயே இதனை அமைக்க முடியுமெனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றபோதிலும் உலகில் பல நாடுகள் அணுசக்தியைத் தனது சக்தித் தேவைக் காக எதிர்காலத்திலே பெருமளவு பயன்படுத்த வுள்ளன என அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின் றார்கள்.

7.2 எமது பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் குறிப்பாகக் கொக்கிளாய், புல்மோட்டைப் பகுதி களில் 6 கிலோ மீற்றர் நீளத்திற்குப் பரந்துள்ள இல்மனைற் (Ilmenite), மொனோசைட் (monozite) படிவுகளில் அணு உற்பத்தி செய்யத்தக்க கனிமங் கள் காணப்படுவதாகத் தெரிகின்றது. இவை ரேடி யோக் கதிர்வீச்சைக் கொண்ட கனிமங்களாகும். கடந்தபல வருடங்களாக ஜப்பான் மேற்படி கனி மத்தை மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து பெற்று வருகின்றது. இதனை முழுமையாகப் பயன் படுத்தி எமது புவிச்சரிதவியலாளர்கள் முறையாக ஆராயவில்லை. ஆனால் அணுசக்தியை இக் கனிமத்திலிருந்து பெருமளவு பெறலாம் எனக் கூறு கின்றனர். எமது இவ்வளத்தை நாமே பயன் படுத்தத்தக்க வழிமுறைகள் விரைவில் எய்தப்பட வேண்டும்.

7.3 வடமாகாணத்தில் மன்னார், பரந் தன், முல்லைத்தீவு இணைக்கும் கோட்டிற்கு வடக்கே யுள்ள பகுதிகள் மயோசீன் சுண்ணாம்புப் பாறை களை அடித்தளப் பாறையாகக் கொண்டவை யாகும். இவ்வாறான அமைப்புள்ள புவிப்பரப்பு களில் பெற்றோலியவளம் காணப்படுவது கண்ட றியப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிகளிலும் பெற்றோலியவளம் காணக்கூடிய வாய்ப்புகள் நிறைய உள. 25-30 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதிகளில் வெளிநாட்டு புவிச்சரிதவியலாளர்கள் புவியதிர்வு ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்டமையும் பின்னர் அவ் ஆய்வுகள் கைவிடப்பட்டமையும் நாம்அறிந்த செய்தியே. இவற்றையெல்லாம் மனங்கொண்டு நாம் மீண்டும் புவி அதிர்வு ஆய்வுகள் மூலம் பெற் றோலிய வளத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில்

இறங்கவேண்டும். சில சமயங்களில் இவ்வாய்வின் பெறுபேறாக எமது சக்திவளத் தேவையை நிறைவு செய்வது மாத்திரமல்ல, சக்திவள ஏற்றுமதிப் பிரதேசமாக எமது பிரதேசம் மாறக்கூடிய நிலைமை தோன்றக்கூடும் என்ற நம்பிக்கையை நிராகரிக்க முடியாது.

### 8.0 முடிவுரை

வடகீழ் மாகாணம் மாற்றுச் சக்திப் பயன்பாட்டிற்கு ஏற்ற பல வளங்களைத் தன்னகத்தே கொண்ட பகுதியே, இவ்வளங்கள் பற்றிய விபரங்கள் விஞ்ஞான முறையில் திரட்டப்படுதல் வேண்டும்.

அவற்றின் வகை, பிரதேசப் பரம்பல், உள்ளார்ந்த தன்மை, பயன்படுத்துவதற்கான மதிப்பீடு போன்றவை தரவுகளாகப் பெறப்பட்டு மாற்றுச் சக்தி வளத் தேசப்படம் தயாரிக்கப்படுதல் அடிப்படை முதற்தேவையாகும். இவற்றின் அடிப்படையில் துறைசார் அறிஞர்களால் நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பின்னர் அவை முறையாகத் திட்டமிடப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு உட்படும்போது, எமது பிரதேசம் மாற்றுச் சக்தி வளத்திலும் தன்னிறைவு கொண்ட பூமி என்ற மெய்மை உறுதிப்படும்.

***உசாத்துணை :***


1. Cleard, Seamus (1989) Renewing the Earth : London : CAFOD.
2. Eric W. Danielson and Edward J.Deneeke, JR, Earth Science, London : Macmillan.
3. FAO (1990) Sustainable Development and Natural Resource Management, Rome : Food and Agriculture organization of United Nation.
4. Government of Sri Lanka, (1991) Natural Resource of Sri Lanka :" Conciliation and trends; A report prepared for the natural Resource, and science Authority of Sri Lankan, Colombo : Government press.
   (1998) The National Atlas of Sri Lanka; Colombo ; survey Depart ment.
   Department of census and statis tics – ministry of plan Implementation, (1988) census of population and Housing, Colombo : Government press.
   (1985) Statistical abstract of the democratic socialist republic of Sri Lanka, Colombo : Government press.
5. ILO (1987) Linking energy with survival, Geneva : ILO.
6. John E pemick and John R Stilen (Ed), (1990) Sustainable development a new world agenda, procedding of a conference, Canada : Unesco.
7. Kathleen Courrierr, (1992) Renew able energy in Cities, New york : van Nostrand Reinhold company.
8. Robert L. Lottness (1992), Energy Handbook, New York : van Nostrand Reinhold Company.
9. சிவச்சந்திரன், இரா., (1976) இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரசேத்தின் குடித் தொகைப் பண்புகளும், பொருளாதார வளங்களும், யாழ்ப்பாணம் : அகிலம் சமூக அறிவியலாய்வு வெளியீடு,


❖ ❖ ❖

அதிகமாக உழையுங்கள்; குறைவாக எதிர்பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள். கிடைப்பதைக் கொண்டு மகிழ்ச்சியடைவதுடன் அடுத்த கட்டத்தையும் எப்போதும்போல நம்பிக்கையுடன் தொடர்ந்து செய்யுங்கள். சீராக உங்களுக்கு வெற்றி கிடைக்கும்; மகிழ்ச்சியும் கிடைக்கும். இறுதியில் செல்வமும் சேரும். இதுவே வெற்றி பெறுவதற்கான உண்மையான இரகசியப் பாதை.

– கதே



# இலங்கையின் சக்திவளம் சிறப்புப் பார்வை மின்சக்திவளம்

ஆ. ஸ்ரீகாந்தன்
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்.

**அறிமுகம்:**

உலகில் இன்றைய நிலையில் ஒரு சில நாடுகள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சனைகளில் சக்திவளம் நெருக்கடி, உணவு நெருக்கடி என்பன முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இவ்விரு நெருக்கடிகள் காரணமாக இந்நாடுகள் பொருளாதாரப் பிரச்சனைகள் பலவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டிய அதே நேரத்தில் சமூக நிலையினை எடுத்துக்காட்டும் குறிகாட்டிகள் பலவற்றில் பின்னடைவுப் போக்கு ஒன்றினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. சக்திவளங்களில் எண்ணெய் வளத்துடன் தொடர்புபட்ட நெருக்கடிகள் வளர்முக நாடுகளை மட்டுமன்றி வளர்ச்சி அடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளிலும் அவ்வப்பொழுது பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. எண்ணெய் வளங்களில் குறிப்பாகப் பெற்றோல் மற்றும் மசகு எண்ணெய் என்பனவற்றிற்கு உலக ரீதியாக ஏற்பட்டுள்ள கேள்வி அதிகரிப்பு, அதேவேளையில் அவற்றின் உற்பத்தி அளவினை மட்டுப்படுத்தப்பட்ட நிலை ஒன்றில் வைத்திருப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி முனைப்புக்கள், எண்ணெய் வளத்திற்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனைய வளங்களின் பயன்பாட்டிலும் உற்பத்தியிலும் காணப்படுகின்ற மந்தமான போக்குப் போன்றன. பலதரப்பட்ட காரணங்களின் விளைவாகக் கடந்த சில தசாப்தங்களாக எண்ணெய் வளங்கள் முன்னொரு பொழுதிலும் இல்லாத வகையில் உலகச் சந்தையில் பன்மடங்கு விலை அதிகரிப்புக்களை அடைந்து குறிப்பாகப் பல வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வகையில் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் மாற்றமடைந்து வருகின்ற புதிய பொருளாதார ஒழுங்குகளுக்கு ஏற்ப 1970களை அடுத்த தசாப்த காலப்பகுதியிலிருந்து எமது நாடு பலவிதமான சக்தி வள நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. பொருளாதாரக் கட்டமைப்புக்களில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் காரணமாக வேறுபட்ட சக்தி வளங்களுக்கு ஏற்பட்டுள்ள கேள்வி அதிகரிப்பு, இவ்வளங்களை நுகர்வதற்குச் செலுத்தவேண்டிய விலைகளில் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான அதிகரிப்பு, உள்நாட்டில் இவ்வளங்களின் உற்பத்தி மட்டம் மிகக் குறைந்த நிலையில் காணப்படுவதன் காரணமாக இவ்வளங்களின் கிடைப்பனவுக்காகக் கணிசமான அளவு இறக்குமதியில் தங்கியிருக்கும் நிலை போன்ற பல்விதமான சவால்களுக்கு பதவிக்கு வரும் அரசாங்கங்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றினை ஈடுசெய்யும் முகமாகப் பலவிதமான மாற்று நடவடிக்கைகளை அரசாங்கங்கள் அவ்வப்பொழுது அறிமுகப்படுத்தி வருகின்ற பொழுதிலும் இவை சர்வதேசத்துடன் தொடர்புபட்ட சவால்களாக இருப்பதனால் நாட்டின் பொருளாதாரப் பாங்குகளில் அவை ஏறபடுத்தி வரும் தாக்கங்கள் தவிர்க்கப்பட முடியாதவையாக உள்ளன.

**இலங்கையில் சக்தி வளங்கள்:**

இன்றைய காலகட்டத்தில் உலகின் பிரதான சக்தி வளங்கள் எனக் கருதப்படுகின்ற சக்தி வளங்களுக்குரிய மூலங்கள் இவ்வகையில் மிகக் குறிப்பாக உயிர்ச்சுவட்டு எரிபொருட்கள் இன்று வரையிலும் உலகரீதியான சக்திவள உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி

வரும் நிலையில் எமது நாட்டில் அந்த எரிபொருள் படிவுகள் இருப்பதற்குரிய சான்றுகள் இல்லை என்று கூறும் ஒரு நிலையிலேயே காணப்படுகின்றன. எண்ணெய் வளம் இருப்பதற்குரிய ஒரு சில அடையாளங்கள் நாட்டின் சில பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளபொழுதிலும் அவற்றினை உறுதிப் படுத்தும் முயற்சிகள் இது வரையில் வெற்றியளிக்கவில்லை என்றே கூறலாம். இந்நிலையில் எமது நாட்டின் பிரதான சுதேச எரிபொருள் மூலங்களாக இருப்பவை உயிர்த்திணிவு (Bio-Mass) எரிபொருளும், நீர் மின்சாரமும் ஆகும். இவற்றுள் உயிர்த்திணிவு எரிபொருளில் கிடைக்கும் தன்மை வீட்டுத்தோட்டங்கள் காடுகள், முட்புதர்கள், தேயிலை, இறப்பர் என்பனவற்றிலிருந்து பெறப்படுகின்ற விறகு மற்றும் நெல், உமி, தேங்காய்ச் சிரட்டைகள், தென்னந்தும்பு போன்ற விவசாயக் கழிவுகள் சிறியளவிலான மரக்கறி என்பனவற்றில் தங்கியுள்ளது.

1995ம் ஆண்டில் சக்திவளமாக உயிர்த்திணிவு எரிபொருளின் பங்களிப்பு அதற்கு முன்னைய காலங்களை விடச் சற்றுக் குறைவடைந்து காணப்பட்டபொழுதிலும் அவ்வாண்டிலும் அதுவே சக்திவளப்பயன்பாட்டில் முதன்மை இடத்தைப் பெற்றிருந்தது. ஏறக்குறைய 55 சதவீதமான பங்களிப்பினை வழங்கிய இந்த எரிபொருள் வளத்தின் பங்களிப்பு சமையல் வாயு மற்றும் மின்சாரம் என்பனவற்றின் நுகர்வு அதிகரித்து வருவதன் காரணமாக 2000ம் ஆண்டிலிருந்து சற்றுக் குறைவடைந்து வருகின்றது. இந்த எரிபொருளினைப் பொறுத்தமட்டில் நகரம், கிராமம் என்ற அடிப்படையில் நுகர்வுப் பங்களிப்பு மிகவும் வேறுபடுவது மட்டுமன்றி மாவட்ட அடிப்படையிலான இடம் சார்ந்த வேறுபாடுகளும் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. 1995களில் உயிர்த்திணிவு எரிபொருளினை அடுத்துப் பெற்றோலியம், நீர், அனல்மின்சாரம், என்பன முறையே 26, 18 சதவீத பங்களிப்பினைச் சக்திவளம் நுகர்வில் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றின் பங்களிப்பு வீதாசாரம் நடப்பு தசாப்தத்தில் சற்று அதிகரித்த போக்கினைக் காட்டி நிற்கின்றன. நடப்பு தசாப்தத்தில் சக்திவள நுகர்வில் ஏற்பட்டிருக்கும் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றம் திரவ பெற்றோலிய வாயுவின் நுகர்வுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. குறிப்பாகச் சமையல் எரிபொருளாகத் திரவ வாயுவினைப் பயன்படுத்தும் நிலை 1990களின் நடுக்கூற்றிலிருந்து அதிகரித்து வருவதன் காரணமாக அக்காலப்பகுதியில் 1 சதவீதமாக இருந்த இந்த சக்தி வளத்தின் பங்களிப்பு அண்மையில் ஏறக்குறைய 3 சதவீதமாக மாறியுள்ளது.

எமது நாட்டில் இன்று வரையிலும் சக்தி வளங்களின் கணிசமான உபயோகம் வீட்டுத் தேவை களின் பொருட்டே இடம்பெறுகின்றது. வீட்டில் இடம்பெறும் உணவுத்தயாரிப்பு, வீட்டிற்கு ஒளியூட் டல் ஏனைய மின் உபகரணங்களின் பாவனை போன்ற பல்வேறு தேவைகளுக்காக 1995ம் ஆண் டில் நாட்டின் கிடைக்கப் பெற்ற மொத்தச் சக்தி வளங்களில் 65 சதவீதமானவை பயன்படுத்தப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் 2000ம் ஆண்டில் ஆரம்பித்த தசாப்தத்தின் நடுக் கூறில் இந்த அளவு ஏறக்குறைய 60 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கைத்தொழில், போக்கு வரத்து, விவசாயம், வீதிகளை ஒளியூட்டல் போன்றவற்றின் பொருட்டு நுகரப்படுகின்ற சக்தி வளங்களின் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு வீட்டுத்தேவையின் பொருட்டு பயன்படுத்தப்படும் சக்திவளப் பயன்பாட்டின் அளவினைக் குறைத்துள்ளதே ஒழிய அதற்கான சக்திவளப் பாவனை யின் அளவில் வீழ்ச்சி ஏற்படவில்லை. மாறாக உண்மையில் இக்காலப்பகுதியில் வீட்டுத்தேவைக் கான சக்திவளப்பயன்பாடு அதிகரித்தே காணப்பட்டது. 1995ம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட சக்திவளமானது முறையே 22, 13 சத வீதங்களாகக் காணப்பட்டன. நடப்புத் தசாப்தத்தில் இவற்றின் அளவுகள் சற்று அதிகரித்துக் காணப் படுகின்றன. குறிப்பாகப் போக்குவரத்து மற்றும் கைத்தொழில் துறையின் விரிவாக்கம் காரணமாகக் கடந்த 10 வருடங்களில் பெற்றோலியப் பொருட்களின் வருடாந்த சராசரி நுகர்வு 7 சதவீதத்தில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வர்த்தக ரீதியான சக்தி வள நுகர்வானது தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்துக் குறைந்ததொரு மட்டத்திலேயே காணப்படுகின்றது எனலாம். குறைவருமான நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்திலும் கூட இந்த குறை நிலையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பின்வரும் அட்டவணை இல. 1 தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளினதும் வருமான அடிப்படையில் குழுப்படுத்தப்பட்ட நாடுகளினதும் தலைக்குரிய சக்தி நுகர்வினை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

***அட்டவணை இல: 1***

**தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளினதும் வருமான அடிப்படையில் குழுப்படுத்தப்பட்ட சில நாடுகளினதும் தலைக்குரிய சக்தி நுகர்வு**

| *நாடுகள் அல்லது நாடுகளின் குழுமம்* | *வர்த்தக ரீதியான எண்ணெய் நுகர்வு (தலைக்கு ஒரு கி.கி.எண்ணெய்க்கு சமமான)* | |
|---|---|---|
| | 1980 | 1995 |
| பங்களாதேஷ் | 32 | 67 |
| இந்தியா | 137 | 260 |
| நேபாளம் | 12 | 33 |
| பாகிஸ்தான் | 139 | 243 |
| இலங்கை | 96 | 136 |
| தாய்லாந்து | 259 | 878 |
| குறைவருமான நாடுகள் | 133 | 198 |
| மத்திம வருமான நாடுகள் | 953 - 1536 | 1030 - 1579 |
| உயர்வருமான நாடுகள் | 4808 | 5118 |

மூலம்: World Development Report, World Bank 1998

இந்த அட்டவணையின் அடிப்படையில் பிராந்தியத்தில் உள்ள பெரும்பான்மையான நாடுகளில் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 15 வருட காலப்பகுதியில் தலைக்குரிய சக்தி நுகர்வு பெரும்பாலும் இரு மடங்கு அல்லது அதனைவிடக் கூடியதொரு அளவில் அதிகரித்துக் காணப்பட எமது நாட்டில் அந்த அளவு 1 1/2 மடங்கிற்குள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நாடு ஒன்றின் சக்தி வள நுகர்விற்கும் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்திக்கும் இடையில் நெருக்கமானதொரு பிணைப்புக் காணப்படுகின்றது. எனவே உள்நாட்டுப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் எமது நாட்டில் சீரான பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சி கடந்த மூன்று தசாப்தங்களாக மட்டுப்படுத்தப்பட்டதொரு நிலையிலேயே காணப்படுகின்றது எனலாம். இதனைவிட உள்நாட்டில் ஒரு சில சுதேச வளங்களே கிடைக்கப் பெறுகின்றமையும் பெற்றோலியம் போன்ற சக்திப் பொருட்களின் விலைகள் விரைவாக அதிகரித்துச் செல்வதும் தலைக்குரிய சக்தி நுகர்வினை ஓரளவு மட்டுப்படுத்துகின்றன.

இலங்கையில் இன்று ஞாயிற்றுக் கதிர்களினையடுத்துப் பெறப்படும் சக்தி (Solar Energy) காற்றுச்சக்தி என்பன ஓரளவிற்குச் சில தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகப் பயன்பாட்டிற்கு வந்துள்ள பொழுதிலும் பிரதான சக்தி மூலங்களுடன் ஒப்பிடும்பொழுது அவை குறிப்பிடத்தக்கனவாக இல்லை. அவற்றின் உள்ளார்த்தங்கள் மேலும் தேடிப்பெறப்பட வேண்டியனவாக உள்ளன. இதே போலச் சக்தியினைப் பெறுவதில் நிலக்கரியின் உபயோகமும் குறிப்பிடத்தக்கதாக இல்லை.

**உயிர்த் திணிவு எரிபொருள்**

வீட்டுத் தேவைகளுக்காகவும், வர்த்தக மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காகவும் பயன்

படுத்தப்படுகின்ற உயிர்த்திணிவு எரிபொருளானது எமது நாட்டில் ஏறக்குறைய 90 சதவீதமான அளவு காடுகளல்லாத ஏனைய மூலங்களிலிருந்தே பெறப்படுகின்றது. எமது நாட்டில் கிடைக்கப் பெறுகின்ற உயிர்த்திணிவு எரிபொருள் மக்களின் கேள்வியினை நிறைவு செய்தவதற்குப் போதுமான தாக உள்ளது. விறகு, தேங்காய்ச் சிரட்டை, தென்னந்தும்பு, நெல் உமி, மரத்தூள் என்பன பெருமள வில் வீட்டுச்சமையல் தேவையின் பொருட்டுப் பயன்படுத்தப்படுகின்ற உயிர்த்திணிவு எரிபொரு ளாக உள்ளன. வெதுப்பகங்கள் தரை ஓடு, செங்கல் போன்ற சிறிய பரும்படியாக்கக் கைத்தொழில் களில் கணிசமான அளவில் விறகே சக்தியினை வழங்கும் பிரதான மூலமாக உள்ளது. நெல்லி லிருந்து பெறப்படுகின்ற உமி அரிசி ஆலைகள் புகையிலையினை உலர்த்தும் இடங்கள் என்பன வற்றில் பிரதான உயிர்த்திணிவு சக்தி மூலமாக உள்ளது. பல புதிய சக்தி வளங்கள் தற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றபொழுதிலும் எமது நாட்டில் கிராமியக் குடித்தொகை உயர்வாக இருத்தல் தாழ்வருமான வகுப்பினர் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் புதிய சக்தி வளங்களைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்குப் பொருளாதார இயலுமை அற்றவர்களாக இருத்தல் உயிர்த்திணிவு எரிபொருள்கள் மலிவாகவும் போதுமான அளவிலும் கிடைக்கக்கூடியதாக இருத்தல் உணவுத் தயாரிப்பில் சுவையினை ஏற்படுத்துவதில் ஏனைய சக்தி வளங்களை விட அது தரமாக உள்ளது என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுதல் பயன்படுத்தும்பொழுது ஆபத்துக் குறைவாக இருத் தல் போன்ற பல காரணிகளின் அடிப்படையில் இன்று வரையிலும் உயிர்த்திணிவு எரிபொருள் நாட்டின் சக்திவளப் பயன்பாட்டில் அரைவாசிக்கும் கூடிய பங்களிப்பினைச் செலுத்தி வருகின்றது.

### திரவப் பெற்றோலிய வாயு (சமையலறை எரிபொருள் வாயு)
### (Liquid Petroleium Gas)

எமது நாட்டில் இன்றைய காலகட்டத்தில் அடிக்கடி விலை உயர்வுகளைச் சந்தித்துக் கொண்டிருக் கும் மற்றொரு எரிபொருள் சக்திவளமாக இருப்பது திரவப் பெற்றோலிய சமையலறை எரிபொருள் வாயு ஆகும். குறிப்பாக நகரப்புற குடும்பத்தலைவிகளின் குடும்ப வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டதொரு சக்தி வளமாக இது மாறியுள்ளது.

இலங்கையில் திரவ வாயுவின் பயன்பாடு நீண்டகால வரலாற்றைக் கொண்டதாக இருப் பினும் அதன் உபயோகம் கடந்த மூன்று தசாப்தங்களாகவே அதிகரித்ததொரு போக்கினைக் காட்டி நிற்கின்றது. உலகரீதியாகவே மின்சாரத்தின் அறிமுகத்தின் முன்னர் வெப்பமாக்கல் ஒளியூட்டல் செய்முறைகளுக்கான நவீன சக்திவளமாகக் காணப்பட்டது திரவ வாயு ஆகும். 1872ம் ஆண்டில் கொழும்பு நகர வீதிகள் வாயு விளக்குகளின் (Gas Lamps) உதவியுடனேயே முதன்முதலில் ஒளியூட்டப்பட்டன. கொழும்பு நகரில் புறக்கோட்டைப் பகுதியில் இக்காலத்தையடுத்து உருவாக் கப்பட்ட (The Colombo Gas and Water Co. Ltd.) என்ற பிரிட்டிஸ் நிறுவனமானது ஆரம்பத்தில் 254 கி.மீற்றர் நீளமான தரைக்கீழ் குழாய்வழி வலையமைப்பு ஒன்றினூடாகத் தனது சேவையினை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொழும்பு நகரத்திற்குள் வழங்கி வந்தது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மின்சாரத்தின் பாவனை பரவலாக இடம்பெறத் தொடங்கியதனால் எரிவாயுவின் உற்பத்தியும் விநியோகமும் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. 1975ம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனமானது அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டு, முதன்முதலாக அதே ஆண்டிலேயே "சிலிண்டர்கள்" மூலம் எரிபொருள் வாயு வின் விநியோகம் கொழும்பு நகருக்குள் ஆரம்பிக்கப்பட்டது. இதனையடுத்து மாபிம, காலி, கண்டி ஆகிய இடங்களில் எரிபொருள் வாயு நிரப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. அடுத்து வந்த ஒரு சில வருடங்களுள் உறுகொடவத்தையில் 600 மெட்ரிக் தொன் களஞ்சிய வசதிகொண்ட எரிபொருள் வாயு நிரப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1990களின் ஆரம்பத்திலிருந்து சமையல் எரிபொருள் வாயுவிற்கான கேள்வி விரைவாக அதிகரிக்கத் தொடங்கியதன் விளைவாகத் தனித்து அரச துறையினால் அக்கேள்வியினை நிறைவு செய்ய முடியாத நிலை தோன்றியது. இதனது பிரதிபலிப்பாகவே இலங்கையில் 1995ம் ஆண்டில் சமையல் எரிபொருள் வாயு விநியோகம் முதற்தடவையாக ஷெல் காஸ் லங்கா லிமிட்டெட் (Shell Gas Lanka Ltd.) நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. இந்நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் எரி பொருள் வாயுவினையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்த எரிபொருள் வாயுவினையும் நாடளாவிய ரீதியில் விநியோகம் செய்யும் உரிமையினைப் பெற்றுள்ளது. எனினும் ஷெல் நிறுவனத்தின் ஏகபோக உரிமையினைக் குறைக்கும் நோக்குடன் அரசாங்கம் லாவ் (Laugh) எரிபொருள் வாயு நிறுவனத்திற்கும் விநியோக உரிமையை வழங்கியிருப்ப துடன் அண்மைக்காலத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள் வாயு விநி யோகத்தை ஆரம்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. வாயு விநியோகத்திற்கான சிலிண்டர்கள் இந்நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் ஷெல் எரிபொருள் வாயு நிறு வனத்தின் விலையை விட 12.5 கி.கிராம் நிறையுடைய சிலிண்டர்களை 130 ரூபா குறைவான விலையில் விற்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

1995ம் ஆண்டில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் வாயு ஏறக்குறைய 76775 மெட்ரிக் தொன்களாகக் காணப்பட்டன. எனினும் 2005ம் ஆண்டில் இதனை விட ஏறக்குறைய இருமடங்கு பாவனை ஏற்பட்டுள்ளது. 1990களின் ஆரம்பத்தில் 13.5 கி.கிராம் நிறையுடைய எரி வாயு சிலிண்டர் ஒன்று சராசரியாக ரூபா 160ற்கும் 180ற்கும் இடையில் விற்பனை செய்யப்பட இன்று 12.5 கி.கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டர் ஏறக்குறைய 10 மடங்கு அதிகரித்து 1799 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறாக விலை பன்மடங்கு அதிகரித்து வருகின்ற பொழுதிலும் அதனது கேள்வி அதிகரித்து வருவதற்கான காரணங்களாகப் பின்வரு வனவற்றைக் குறிப்பிடலாம்.

1. கொழும்பு உட்பட நாட்டின் பல நகரங்களின் குடித்தொகை இடப்பெயர்வு காரணமாக அதி கரித்துச் செல்லுதல் பெரும்பாலான நகரங்களின் சமையல் எரிபொருளாகக் காணப்படுவது திரவ வாயுவே ஆகும்.
2. மின்சாரத்தினை சமையலுக்கான எரிபொருள் சக்தியாகப் பயன்படுத்துவதனைவிட திரவ வாயு இலாபகரமானது.
3. குறிப்பாக நகரங்களிலும் ஓரளவிற்கு கிராமங்களிலும் தொழில் புரிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதன் விளைவாக விரைவான உணவுத்தயாரிப்பு, இலகுவான கையாள்கை, கழுவிச் சுத்தப்படுத்துவதில் காணப்படும் இலகுவான தன்மை போன்ற காரணங்களின் நிமித்தம் எரிபொருள் வாயுவின் பயன்பாடு உயர்ந்து செல்கின்றது.
4. எரிபொருள் வாயு விநியோகம் வலைப்பின்னல் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி நாடு முழுவதி லும் வியாபித்து இருப்பதனால் அதனைப் பெறுவதில் உள்ள இடர்கள் குறைக்கப்பட்டுள்ளன.
5. காடுகளை அழிப்பது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டதொரு சூழ்நிலையில் அனுமதிபெற்ற வர்கள் மூலம் கூட நகரங்களுக்கான விறகு விநியோகம் பெரும்பாலும் தடைப்பட்டதொரு நிலையில் காணப்படல்.
6. பிரதான நகரங்களிலும், உபநகரங்களிலும் உள்ள ஹோட்டல்கள் உணவு விடுதிகள், தனிப்பட்ட உணவுத் தயாரிப்பாளர்கள் என்பவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகளவில் அதிகரித்து இருப்பதுடன் இவற்றின் பிரதான எரிபொருள் மூலமாக திரவவாயு காணப்படல்

நாட்டில் இன்று சமையல் எரிவாயு குறித்துக் காணப்படும் முக்கிய பிரச்சினை அதன் விலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு ஆகும். உலக ரீதியாக இவ்வாயுவிற்கான கேள்வி

அதிகரித்ததொரு நிலையில் அதன் நிரம்பல் அளவு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் இயல்பாகவே விலை அதிகரிப்பு ஒன்றிற்கு வழி வகுக்கின்றது. இதனுடன் இணைந்த வகையில் கப்பல்கள் / மூலமான இவற்றினது ஏற்றி இறக்கும் செலவுகளும் அதிகரித்து வருவதனால் இலங்கையில் பெரும்பாலும் இவ்வர்த்தகத்தில் தனியுரிமை நிலை ஒன்றினைக் கொண்டிருக்கும் ஷெல் நிறுவனம் அடிக்கடி விலை அதிகரிப்பு ஒன்றிற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றது. நுகர்வாளர் மீது சுமத்தப்படுகின்ற இந்தச் சுமையினைக் குறைக்கும் பொருட்டு அரசாங்கம் முயற்சிகளையும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் குறைந்த விலையில் எரிபொருள் வாயு விநியோகம் செய்தவற்கான நடவடிக்கைகளையும் கருத்திற் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பெற்றோலியம்

பெற்றோலியத்தினையும் அதனுடன் இணைந்த ஏனைய உற்பத்திப் பொருட்களையும் சக்தி வளத்தில் ஒன்றாகப் பயன்படுத்தும் முயற்சிகள் 20 ம் நூற்றாண்டுகளின் ஆரம்பத்தில் இடம்பெறத் தொடங்கிய பொழுதிலும் போக்குவரத்துச் சாதனங்களின் உற்பத்தியும் அவற்றின் பாவனையும் அந் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை மட்டுப்படுத்தப்பட்டதொரு அளவிலேயே காணப்பட்டதனால் எண்ணெய் வளத்திற்கான நெருக்கடி உலக ரீதியாக எந்த ஒரு நாட்டிலும் உணரப்படவில்லை. எனினும் 1970 களின் ஆரம்பத்தில் "ஒபேக்" நாடுகள் எண்ணெய் வள உற்பத்தியினை மட்டுப்படுத்தி அதன் நியம விலை ஒன்றினைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டபொழுது வளர்ச்சியடைந்த நாடுகள் உட்பட உலக நாடுகள் யாவும் எண்ணெய் நெருக்கடியினை உணர்ந்து கொள்ள முற்பட்டன. இதனையடுத்த காலப்பகுதியில் போக்குவரத்து மற்றும் கைத்தொழில் துறைகளில் எண்ணெய் வளத்தினைச் சக்தி வளமாகப் பயன்படுத்தும் முயற்சிகளும் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாகப் பெற்றோலியப் பொருட்களுக்கான தேவைகள் மிக விரைவாக அதிகரிக்கத் தொடங்கின.

எமது நாடு சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை முப்பதாயிரமாகவே (30,000) காணப்பட்டது. இக்காலப்பகுதியினை அடுத்துப் பெற் றோலியப் பொருட்களின் இறக்குமதி அவற்றின் விநியோகம் என்பன (Shell, Caltex, Mobil) ஷெல், கால்ரெக்ஸ், மொபில் ஆகிய மூன்று பல்தேசியக் கொம்பனிகளால் மேற்கொள்ளப்பட்டன. 1960களின் ஆரம்பத்தில் நாட்டில் காணப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 100,000 மாக அதிகரித்தது. இந்நிலையில் பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி மேலும் பன்மடங்கு அதிகரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக அவ்வேளையில் பதவியிலிருந்த அரசாங்கம் வெளிநாட்டுக் கொம் பனிகளின் தனியுரிமையினை முறியடிக்கும் முகமாக இத்துறையில் நுழைய ஆரம்பித்தது.

இதற்கான முதல்நடவடிக்கையாக 1961ல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. மிகவும் அண்மைக்காலத்தில் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (Indian Oil Company) நுழைவு இத்துறையில் ஏற்படும் வரையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே எண்ணெய் இறக்குமதி, அதன் சுத்திகரிப்பு, அதன் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள் போன்ற சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகச் செயற்பட்டது.

இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து எண்ணெய் உற்பத்திகளுக்கான கேள்வி பன்மடங்கு அதிகரிக்கத் தொடங்கியது. உதாரணமாக 1990களின் ஆரம்ப காலப்பகுதியினை விட 1995களின் நடுப்பகுதியில் பெற்றோலியப் பொருட் களுக்கான கேள்வி 10 சதவீதத்தால் அதிகரித்தது. 2000ம் ஆண்டில் ஆரம்பித்த தசாப்தத்தில் இக் கேள்வியின் வருடாந்த சராசரி அதிகரிப்பு வீதம் 12ற்கும் 15ற்கும் இடையில் ஏற்ற இறக்கங்களைக்

கொண்டு காணப்படுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களில் பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பிற்குப் பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அவையாவன:

1. திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் வாகனங்களின் இறக்குமதி அதிகரித்துக் காணப்படல் மக்களின் வருமான மட்டத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான சக்தியினை அவர்களுக்கு வழங்குகின்றது. பொதுமக்களை விட அரசநிர்வாக இயந்திரத்தை திறம்பட இயங்கச் செய்வதற்கு அரசாங்கத்தினால் அதிகளவில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பனவும் தமது அலுவலகப் பணிகளைப் பூர்த்தி செய்தவற்காக வாகனங்களைக் கணிசமான அளவு கொள்வனவு செய்து கொள்கின்றன. வாடகை வாகனங்கள் என்ற முறையில் முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை கடந்த மூன்று தசாப்தங்களில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.

2. நீரினைப் பயன்படுத்திப் பெறப்படும் மின்சாரம் நாட்டின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்குப் பற்றாக்குறையாக இருப்பதனால் 1990களிலிருந்து அனல் மின்சார உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்று வருதல்.

3. புகையிரத இயந்திரங்களின் இயக்கம் கடந்த சில வருடங்களாக முழுமையாக டீசல் எண்ணெயில் தங்கியிருத்தல். சுதந்திரத்தை அடுத்த ஒரு சில தசாப்தங்களில் புகையிரத இயக்கம் முழுமையாக நிலக்கரியிலேயே தங்கியிருந்தது.

4. பல புதிய கைத்தொழிற் சாலைகளில் இயந்திரங்களின் இயக்கம் எண்ணெய் விளக்கில் தங்கியிருத்தல்.

5. சூரிய சக்தி காற்றிலிருந்து பெறப்படும் சக்தி என்பன இன்றுவரையில் சக்திப் பயன்பாட்டில் மிகக் குறைந்த பங்களிப்பினைக் கொண்டிருத்தல்.

இலங்கையில் இன்றைய நிலையில் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையினைத் தீர்மானிக்கும் ஒரு காரணமாகவே எண்ணெய் வளமும் அதுதொடர்பாக உருவாகியுள்ள நெருக்கடியும் அமைந் திருக்கின்றது என்று கூறலாம். ஏனெனில் பெற்றோலியப் பொருட்கள் தொடர்பாக அடிக்கடி ஏற்படும் விலை அதிகரிப்புக்கள் வலைப்பின்னலாக பல பொருளாதாரத் துறைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்துவதனால் இதனைப் பதவியிலிருக்கும் அரசாங்கத்திற்குக் களங்கத்தினை ஏற்படுத்தும் ஒரு கருவியாக அரச எதிர்ப்பாளர்கள் பயன்படுத்துகின்றனர். அதுமட்டுமன்றி முயற்சியாண்மை யாளர்கள் பொருளாதாரத்தில் எண்ணெய் விலையேற்றத்தினால் ஏற்படும் குழப்பகரமான நிலை கண்டு முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தயக்கம் காட்டி வருகின்றனர்.

அரச மட்டத்தில் எண்ணெய் வள இருப்புக்களைக் கண்டறிவதற்கான முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்ற பொழுதிலும் இதுவரையிலும் அவை திருப்திகரமான சான்றுகளை வழங்கவில்லை. மன்னார், சிலாபம் பகுதிகளில் இம்முயற்சிகள் அந்நிய நாடுகளின் உதவியுடன் மிகவும் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்பொருட்டுச் சாதகமான சில சான்றுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றதால் எமது நாடு பெற்றோலியப் பொருட்கள் தொடர்பாக எதிர்காலத்தில் மேலும் வலுப்பெற இருக்கும் அபாயம் ஒன்றிலிருந்து ஓரளவு நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மின்சாரம்

இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வரும் சக்தி வளங்களில் ஏறக்குறைய 20 சதவீதமான பங்களிப்பினை மின்சாரம் வழங்கி வருகின்றது. இலங்கையில் மின்சாரம் 1895ம் ஆண்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. பௌஸ்ரெட் பிரதர்ஸ் லிமிடெட் என்ற தனிப்பட்ட நிறுவனம் ஒன்றே (Boustead Brother's Ltd.)அப்பொழுது மின்சாரத்தினைக் கொழும்பு நகரத்திற்கு வழங்கியது. ஆரம்பகாலங்களில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களின் சில பகுதிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டது. 1912ம் ஆண்டில் சிறிய நீர் மின் திட்டம் ஒன்றினை அரசாங்கம் உருவாக்கி நுவரெலியா நகரத்திற்கான மின் சாதனத்தினை வழங்கியது. ஏறக்குறைய சமகாலப்பகுதியில் பாலியகொட, ஜாஎல, கம்பஹா, வியாங்கொடை, மினுவாங்கொட, அவிசாவளை ஆகிய இடங்களில் டீசல் மூலமான மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி மின்சாரத் திட்டங்கள் அவற்றின் உள்ளூர் அதிகார சபைகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இலங்கையில் 1924ம் ஆண்டு டி.ஜே. விமலசுரேந்திராவினால் ஆரம்பிக்கப்பட்டு 1950ம் ஆண்டு நிறைவடைந்த அபர்டீன் / லக்ஸபான மின்திட்டமே முதன்முதலாக ஆரம்பிக்கப் பட்ட மிகப் பிரதான நீர் மின்சாரத்திட்டமாகும்.

1956ம் ஆண்டில் பதவிக்கு வந்த இடது சாரிப் போக்குடைய அரசாங்கம் நாட்டின் பல அபி விருத்தித் துறைகளைத் தேசிய மயமாக்கும் முயற்சியில் மிகவும் முனைப்பாகச் செயற்பட்டது. அந்தவகையில் இதுவரையில் பெரும்பாலும் தனியுடமைச் சொத்தாகக் காணப்பட்ட மின் சாரத்துறையின் உற்பத்தி உருவாக்கம், விநியோகம், பரம்பல் என்பனவற்றை மிகவும் ஆழமாக நோக்கி அவையாவும் தனித்துத் தன்னிச்சையாகச் செயற்படும் ஒரு அமைப்பின் கீழ் இயங்க வேண்டும் என்றதொரு தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டது. 1950களின் இறுதியில் மேற் கொள்ளப்பட்டதொரு தீர்மானத்தின் இறுதிவடிவமே 1969ல் இலங்கை மின்சார சபையின் உரு வாக்கம் ஆகும். அக்காலம் முதற்கொண்டு இன்று வரையில் நாட்டின் மின்சாரம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் தனித்துவமானதொரு அதிகாரசபையாக இது தொழிற்பட்டு வருகின்றது எனலாம்.

1995ல் இலங்கை மின்சார சபையின் அதிகாரத்தின் கீழ் 15 நீர்மின் நிலையங்கள் 5 அனல் மின் நிலையங்கள் என்பன தொழிற்பட்டன. நீர்மின்நிலையங்கள் மூலம் 1097 மெகா வாட் மின் சக்தியும் அனல் மின் நிலையங்கள் மூலம் 272 மெகா வாட் மின்சக்தியும் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் 2005ம் ஆண்டில் நீர் மின் நிலையங்கள் மூலம் 1207 மெகாவாட் மின்சக்தியும் அனல் மின்நிலையங்கள் மூலம் 548 மெகாவாட் மின்சக்தியும் உற்பத்தி செய்யப் பட்டன. இதிலிருந்து கடந்த 10 வருடங்களில் நீர் மின்சார உற்பத்தியினை விட அனல் மின்சார உற்பத்தி முயற்சிகளுக்கு அரசு ஊக்கம் அளித்து வருவதனைக் கண்டறியக் கூடியதாக உள்ளது. நீரினை அடிப்படையாகக் கொண்டு மின்சக்தியினைப் பெறும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பொழுதிலும் அண்மைக் காலங்களில் துரிதமாக அதிகரித்துவரும் தேவையினை ஈடு செய்வதற்கு அனல் மின்நிலையங்களே துரித பரிகாரத்தை வழங்கக் கூடியன வாக இருப்பதனால் அரச முயற்சிகள் அனல் மின்சார உற்பத்தியினை நாடிச் செல்வனவாக இருக்கின்றன. காற்றின் சக்தியினைப் பயன்படுத்தி 1999ம் ஆண்டு முதல் 3 மெகாவாட் மின் உற்பத்தி நடைபெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பின்வரும் இல : 2 இலங்கையில் 1997லிருந்து 2005ம் ஆண்டு வரை மின்சாரத்திற்கு நிலவிய தேவையினைக் காட்டி நிற்கின்றது.

அட்டவணை இல: 2

நாடளாவிய மின்சாரத் தேவை 1991 - 2005

| ஆண்டு | மின்சாரத்தேவை மெகா வாட்ஸ் |
|---|---|
| 1997 | 1037 |
| 1998 | 1137 |
| 1999 | 1291 |
| 2000 | 1405 |
| 2001 | 1445 |
| 2002 | 1422 |
| 2003 | 1516 |
| 2004 | 1563 |
| 2005 | 1748 |

*மூலம்: இலங்கை மின்சார சபை*

1995ல் காணப்பட்ட மின்சாரத்தேவையின் அளவு 980 மெகாவாட்ஸ்கள் ஆகும். எனவே 1995ற்கும் 2005ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மின்சாரத் தேவையின் அளவு 2 மடங்கிற்கும் சற்றுக் குறைவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் 2003ம் ஆண்டினைத் தவிர ஏனைய சகல ஆண்டுகளிலும் ஓரளவிற்கு ஒரு சீரான அதிகரிப்புப் போக்கினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மிகக் கிட்டிய காலப்பகுதிகளில் மின்சாரத்திற்கு ஏற்பட்டு வருகின்ற தேவை அதிகரிப்பிற்கான காரணிகள் பின்வருமாறு பட்டியலிடப்படமுடியும்.

1. தேசிய ரீதியாக வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மின்வழங்கல் செய்முறை விரிவடைந்து வருகின்றமை.
2. கிராமிய மின்மயமாக்கத் திட்டங்களுக்குக் கூடிய அழுத்தம் வழங்கப்படுகின்றமை.
3. வீடுகள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், ஹோட்டல் கள் எனபனவற்றில் பயன்படுத்தப்படும் மின்சாரப் பொருட்களினதும், மின்னியல் பொருட் களினதும் எண்ணிக்கையும், அளவும் அதிகரித்துச் செல்லுதல்.
4. வீதிகளை ஒளியேற்றும் செய்முறையால் ஏற்பட்டு வரும் துரிதமுன்னேற்றம்.
5. கைத்தொழிற்துறையில் மாற்றுச் சக்தி வளங்களின் விலை அதிகரிப்பு மின்சார உபயோகத் தினை அதிகரிக்கச் செய்தல்.
6. அண்மைக்காலங்களில் பிறப்பிக்கப்பட்டுள்ள சூழல் மாசுபடல் சட்டங்களின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு மின்சார உபயோகம் சாதகமாக அமைந்திருத்தல்.
7. ஏனைய சக்தி வளங்களின் உபயோகத்தினை விட இது இலகுவான முறையில் கையாளப்படக் கூடியதாக இருத்தல்.
8. மற்றைய சக்தி வளங்களை விட மின்சாரம் விரைவான தொழிற்பாடுடையதாகக் காணப்படல்.

இவ்விதமாகப் பல காரணிகளின் கூட்டுவிளைவாக மின்சாரப் பாவனையும் அதன் தேவையும் வருடா வருடம் அதிகரித்துச் செல்வதனைக் காணலாம். இத்தேவை அதிகரிப்பினை அலகு என்ற பரிமாணத்தில் பார்க்கும் பொழுது 1972ம் ஆண்டில் 823 மில்லியன் அலகுகளிலிருந்து 1996ம்

ஆண்டில் 3588ல் மின் அலகுகளாகவும் 2005ம் ஆண்டில் 8659 மின் அலகுகளாகவும் அதிகரித்துச் சென்றிருப்பதனைக் காணலாம்.

நாட்டில் மின்சாரம் வீட்டுத்தேவை, கைத்தொழில்களுக்கான பயன்பாடு, வர்த்தக நிலையங்களின் பாவனை, வீதிகளை ஒளியூட்டல் எனப் பல தேவைகளின் பொருட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. பின்வரும் அட்டவணை இலக்கம் : 3 நாட்டில் பலவிதமான தேவைகளுக்காக இலங்கை மின்சார சபையினால் விற்பனை செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவினை 1997, 2005 ஆகிய ஆண்டுகளுக்கு காட்டி நிற்கின்றது.

அட்டவணை இல: 3

இலங்கை மின்சார சபை விற்பனை செய்த மின்சாரத்தின் அளவு (G.W.H)

| மின்சாரம் விற்பனை | 1997 | | 2005 | |
|---|---|---|---|---|
| செய்யப்பட்ட துறைகள் | அளவு | வீதாசாரம் | அளவு | வீதாசாரம் |
| வீடுகள் | 1213 | 30.0 | 2403 | 33.0 |
| கைத்தொழில் | 1430 | 35.0 | 2446 | 34.0 |
| சிறிய | 101 | - | 166 | - |
| நடுத்தர | 805 | - | 1323 | - |
| பெரிய | 524 | - | 957 | - |
| வர்த்தகம் | 689 | 17.0 | 1254 | 17.0 |
| பலதரப்பட்ட விநியோகம் | 657 | 16.0 | 1027 | 14.0 |
| வீதிகளை ஒளியீட்டல் | 50 | 2.0 | 83 | 2.0 |
| | 4039 | 100.0 | 8213 | 100.0 |

*மூலம்: இலங்கை மின்சார சபை*

அட்டவணை இலக்கம் 3இன் அடிப்படையில் இரு அம்சங்கள் கருத்திற் கொள்ளப்பட முடியும்.

1. வீதாசார அடிப்படையில் ஒவ்வொரு துறைக்கும் விற்பனை செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவில் 1997ம் ஆண்டிற்கும் 2005ம் ஆண்டிற்குமிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படாமை.
2. ஒவ்வொரு துறைக்குமான விற்பனை அளவில் 1997க்கும் 2005க்கும் இடையில் ஏறக்குறைய 2 மடங்கு அதிகரிப்பு காணப்படல். எனினும் வீதிகளை ஒளியூட்டல் மற்றும் பலதரப்பட்ட விநியோகம் என்பனவற்றில் எவ்வித வேறுபாடும் காணப்படவில்லை.

பொதுவாக மின்சாரம் கைத்தொழில் வீடுகள் என்பனவற்றிற்கே கூடிய அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஏறக்குறைய 65 - 70 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவிலான மின்சாரம் இவ் விருதுறைகளினாலும் நுகரப்படுகின்றன. இவற்றினை அடுத்து வர்த்தகத்துறை கூடுதலான மின்சாரத்தினை நுகரும் துறையாகக் காணப்படுகின்றது. வீதிகளை ஒளியூட்டுவதற்காக 2 சதவீதமான மின்சாரம் விற்பனை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் மின்சார உற்பத்தி தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய மற்றொரு காரணி இன்றுவரையில் நாட்டின் மின் உற்பத்தி மூலங்களில் நீர் தொடர்ந்து ஒரு முக்கிய இடத்தினை வகித்து வருவதும் மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பு ஓர் இழிவு நிலையில் காணப்படுவதும் ஆகும்.

பின்வரும் அட்டவணை இல: 4 அத்தோற்றப்பாட்டிற்குரிய விபரங்களை 1997, 2002, 2005 ஆகிய ஆண்டுகளுக்கு தருகின்றது.

**அட்டவணை இல: 4**

**மின்சார உற்பத்தி மூலமும், மின்சாரசபை தனியார் துறை பங்களிப்பும் (Gwh)**

| மின்சார உற்பத்தி | 1997 | | 2002 | | 2005 | |
|---|---|---|---|---|---|---|
| மூலம் தனியார் துறை | உற்பத்தி | வீதாசாரம் | உற்பத்தி | வீதாசாரம் | உற்பத்தி | வீதாசாரம் |
| இலங்கை மின்சாரசபை பங்களிப்பு | | | | | | |
| இலங்கை மின்சாரசபை நீர்மின்சாரம் | 3443 | 70.0 | 2589 | 38.0 | 3173 | 36.6 |
| அனல் மின்சாரம் | 1052 | 21.0 | 1953 | 29.0 | 2162 | 25.0 |
| சுற்றுமூலமான மின்சாரம் | - | - | 4 | 0.0 | 2 | -- |
| தனியார்துறை | | | | | | |
| சிறிய நீர்மின்சாரம் | 4 | 0.08 | 103 | 1.5 | 280 | 3.2 |
| அனல் மின்சாரம் | 13 | 0.26 | 1248 | 18.3 | 3041 | 35.2 |
| வாடகைக்கு பெறப்பட்ட அனல் மின்சாரம் | 398 | 8.66 | 913 | 13.2 | - | - |
| மொத்தம் | 4910 | 100.0 | 6810 | 100.0 | 8658 | 100.0 |

*மூலம்: இலங்கை மின்சார சபை*

இங்கு அட்டவணையில் இலக்க அளவில் தரப்படாவிடினும், கணிப்பு அடிப்படையில் பார்க்கும்பொழுது மின் உற்பத்தியில் மின்சார சபையின் பங்களிப்புக் கடந்த 15 வருடங்களில் கணிசமான அளவு குறைந்திருப்பதனைக் காணலாம். 1997ம் ஆண்டில் இலங்கை மின்சார சபை 91 சதவீதமான மின் உற்பத்திக்கு பங்களிப்பு செய்ய மிகுதி உற்பத்தியினை தனியார் துறை மேற்கொண்டிருந்தது. எனினும் 2002ம் ஆண்டில் இந்த அளவுகள் முறையே 67%, 33% என மாற்றமடைந்தன. 2005ம் ஆண்டில் இலங்கை மின்சார சபையின் பங்களிப்பில் சிறிது அதிகரிப்பினைக் காணலாம். இந்த ஆண்டில் மேற்குறிப்பிட்ட துறைகளின் பங்களிப்பு முறையே 62%, 38% என மாற்றமடைந்தன. உண்மையில் கடந்த இருதசாப்தங்களாக மின்சாரத்திற்குத் தேசிய அளவில் ஏற்பட்டிருக்கும் தேவையினைத் தனியே மின்சார சபையினால் நிறைவு செய்யமுடியாததொரு நிலையில் தனியார் நிறுவனங்கள் மின் உற்பத்தியின் பொருட்டு அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை 4ல் அவதானிக்கக் கூடிய மற்றொரு அம்சம் மின்சார உற்பத்தியில் நீர்மின் உற்பத்தியின் பங்களிப்பு வீழ்ச்சியடைந்து செல்ல அதனை ஈடு செய்வதற்கு அனல்மின்சாரத்தின் பங்களிப்பு அதிகரித்துச் செல்வதாகும். இலங்கையில் நீர் மின் உற்பத்திகளை உள்ளார்த்தம் இன்னும் காணப்படுகின்ற பொழுதிலும் அதற்கான முதலீட்டுச் செலவீனத்தை எதிர்கொள்ளக் கூடிய இயலுமை அரச மட்டத்தில் படிப்படியாகக் குறைந்து செல்கின்றது. அத்துடன் உலகளாவிய ரீதியில் அனல் மின்சார உற்பத்தியினை மேற்கொள்ளும் நிலை இலங்கையிலும் சிறிதளவு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. காற்றினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்யும்

இயலுமை எமது நாட்டில் இன்று வரையில் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

தேசிய மட்டத்தில் மின்மயமாக்க அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கடந்த ஓரிரு தசாப்தங்கள் எடுத்துக் காட்டி நிற்கின்றன. 1980களில் 30 - 40 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் காணப்பட்ட மின்மயமாக்க அளவானது 1990களின் இறுதிப்பகுதியில் ஏறக்குறைய 50 சதவீதத்தை அடைந்து இன்று 55 சதவீதமாக மாற்றமடைந்துள்ளது.

இவ்விதம் மின்மயமாக்க அளவு குறைந்ததொரு நிலையில் காணப்படும் நிலையில் அதனை மேலும் மோசமாக்குவதாக இருப்பது பிரதேசரீதியான மின்மயமாக்கத்தில் காணப்படும் வேறுபாடாகும். நகரம், கிராமம் என்ற அடிப்படையில் நாட்டின் முழுமையான சகல நகரங்களும் மின்சாரத்தினைப் பெற்றிருக்கும் ஓர் நிலையில் கிராமங்களில் இந்நிலை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. குறிப்பாகப் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் கணிசமானவை இன்றும் மின்மயமாக்கத்திற்கு உட்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டில் இன்றைய நிலையில் (2005) மேல் மாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டங்கள் நாட்டின் மொத்த மின் பாவனையில் 36.7 சதவீத மானவற்றை நுகர வடமாகாணம் 2.8 சதவீதமான மின்நுகர்வினையே கொண்டிருக்கின்றது. கொழும்பு நகரம் மட்டும் நாட்டின் மொத்த மின் நுகர்வில் 3.5 சதவீதமான பங்களிப்பினைக் கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவட்ட அடிப்படையில் கொழும்பு மாவட்டம் முழுமையாக மின் மயமாக்கப்பட்ட மாவட்டமாகக் காணப்பட மொனராகலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் மின் மயமாக்க அளவு 20 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமே 50 சதவீதத்திற்கும் சற்று அதிகமான மின்மயமாக்கத்தினைக் கொண்டிருக்கின்றது. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்த அளவு 10 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஈரவலய மாவட்டங்களில் பெரும்பாலானவை 40 - 50 சதவீத மின்மயமாக்கத்தைக் கொண்டு காணப்படுகின்றன.

இலங்கையில் மின்சக்தியின் தேவை வருடா வருடம் அதிகரித்துச் செல்கின்றது. இத்தகையதொரு பின்னணியில் இலங்கையில் மின்சக்தி தொடர்பான பிரச்சனைகளைப் பின்வருமாறு இனம் காணலாம்.

1. நீருக்குப் பதிலாக டீசல் அல்லது நிலக்கரி மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தபடுவதனால் ஓர் அலகு உற்பத்திக்கான உற்பத்திச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. இதனால் மின்சார நுகர்வாளர்கள் வருடாவருடம் கூடிய விலையினைச் செலுத்தி மின்சாரத்தினைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

2. மின்சாரத்தைப் பெறுவதற்காக ஆற்றுநீரைப் பயன்படுத்தும் பொழுது இயற்கைச் சூழல் அழகுபாதிக்கப்படுகின்றது. மகாவலியாற்றின் நீர் மின்நிலையங்கள் அமையப்பெற்றுள்ள பகுதிகளில் ஆற்றுப் பள்ளத்தாக்குச் செயற்கை அழகினைப் பெற்றிருக்கின்ற அதே வேளையில் இயற்கை வளம் முழுமையாக அழிக்கப்பட்டிருக்கின்றது. மறுபுறத்தில் அனல்மின்சார உருவாக்கத்திற்காக நிலக்கரியினை அல்லது டீசலைப் பயன்படுத்தும் பொழுதும் வளிமண்டலம் மாசுபடுவதற்கு அது வழிசமைக்கின்றது.

3. இலங்கை மின்சார சபையின் பங்களிப்புக் குறைவடைந்து தனியார் பங்களிப்பு மின் உற்பத்தியில் அதிகரித்து வரும் ஒரு நிலையில் அது அரசியல் ரீதியான கொந்தளிப்புகளுக்கு அவ்வப்பொழுது வழிவகுக்கின்றது.

எமது நாட்டில் அரசாங்கம் அதிகரித்து வருகின்ற தேவையைச் சமாளிக்கும் முகமாகப் புதிய பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

அ) மேல் கொத்மலைத்திட்டம், உமா ஓயா நீர்மின்சாரத்திட்டம் போன்றவற்றினூடாக மேலதிக மின் உற்பத்தியினை மேற்கொள்ளல்.

ஆ) நுரைச் சோலையில் ஏற்கனவே அனல்மின்சாரத்திட்டம் ஒன்றிற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரிலும் அவ்விதமானதொரு அனல் மின்நிலைய அமைப்புக்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இ) இந்தியாவிலிருந்து மின்சாரத்தினைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் கடலுக்கடியில் இடப்படும் கேபிள்கள் மூலம் மின்சாரப் பரிவர்த்தனை செய்யப்படுவதற்கு ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றன.

**முடிவுரை**

இலங்கை போன்றதொரு வளர்முக நாட்டில் சக்தி வளங்களின் நெருக்கடி என்பது புதியதொரு தோற்றப்பாடு எனலாம். குடித்தொகை வளர்ச்சியின் வேகம் சக்தி வளங்களுக்கான தேவையினை உணர்த்தி வருகின்றதொரு நிலையில் அவை போதுமான அளவில் நியாய விலையில் கிடைப்பதற்குரிய மார்க்கங்கள் படிப்படியாக அருகிச் செல்கின்றன. இந்நிலையில் சூரிய சக்தி, காற்று, கடலலை என்பனவற்றிலிருந்து பெறப்படும் மாற்று சக்திகள் மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்கக்கூடும். அவற்றை நவீன தொழில்நுட்பங்களைப்பயன்படுத்தி மலிவான முறையில் பெறவேண்டியதொரு தேவை ஏற்பட்டிருப்பதுடன், ஏற்கனவே நடைமுறையில் உள்ள சக்தி வளங்களைப் பொருளாதாரச் சிக்கனமான முறையில் பெற்றுப் பயன்படுத்த வேண்டியதொரு கட்டாயமும் ஏற்பட்டுள்ளது எனலாம்.

♦ ♦ ♦

சாதனை படைத்துச் சென்ற மாமனிதர்களெல்லாம் தங்கள் வாழ்நாள் முழுவதும் துன்பங்களைச் சந்தித்தவர்கள் தாம். ஆனால் அவர்கள் அவற்றைக் கண்டு அஞ்சவில்லை. தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும், சலிப்பில்லாமலும் ஒவ்வொரு முறையும் மிகுந்த ஆர்வத்துடனும் உறுதியுடனும் தங்கள் இலட்சியத்தை நோக்கி நடந்தார்கள்; வெற்றி பெற்றார்கள்.

***– சார்லஸ் ஃபில்மோர்***






# ஓசோன் படையின் அழிவு
# (Ozone Layer Depletion)

**கலாநிதி இ.ஶ்ரீகரன்**
துறைத் தலைவர், சிரேஸ்ட விரிவுரையாளர்
இரசாயனவியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

புவியின் வளிமண்டலமானது 5 படைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன,


| | | |
|---|---|---|
| முதலாவது படை | :- | மாறன் மண்டலம் (Troposphere) |
| இரண்டாவது படை | :- | படை மண்டலம் (Stratosphere) |
| மூன்றாவது படை | :- | இடை மண்டலம் (Mesosphere) |
| நான்காவது படை | :- | வெப்ப மண்டலம் (Thermosphere) |
| ஐந்தாவது படை | :- | புற மண்டலம் (Exosphere) |




**புவியின் வளிமண்டலத்திலுள்ள படைகள்**

ஓசோன் படலமானது Stratosphere இன் ஆழமான படையாகக் காணப்படுகின்றது. ஓசோன்வாயுவானது ($O_3$) மூன்று ஒட்சிசன் அணுக்கள் (O) இணைவதனால் உருவாகின்றது. இது ஒரு நிறமற்ற வாயு.

Stratosphere இல், 240 nm ஐ விடக் குறைந்த அலை நீளமுள்ள UV கதிர்கள் ஒட்சிசன் மூலக்கூறுகளுடன் ($O_2$) மோதும்போது $O_2$ ஆனது இரண்டு O அணுக்களாகப் பிரிகையடையும். இத் தோற்றப்பாடு ஒளிப்பிரிகை (Photodissociation) என அழைக்கப்படும். இந்த O அணுக்கள் $O_2$ மூலக்கூறுடன் இணையும்போது $O_3$ மூலக்கூறு உருவாகும்.








*வளிமண்டல ஒட்சிசனிலிருந்து ஓசோனின் உருவாக்கம்*

$O_3$ மூலக்கூறானது 250-310 nm அலை நீளமுள்ள UV கதிர்களை உறிஞ்சும்போது பிரிவடைந்து $O_2$ மூலக்கூறையும் O அணுவையும் உருவாக்கும். இவ்வாறு உருவாகும் O அணு மீளவும் $O_2$ மூலக்கூறுடன் இணைந்து $O_3$ மூலக்கூறை உருவாக்கும். இச் செயன் முறையானது ஒரு O அணுவானது $O_3$ மூலக்கூறுடன் திரும்பவும் இணைந்து இரண்டு $O_2$ மூலக்கூறுகள் உருவாகும் வரை நடைபெறும்.





*வளிமண்டலத்தில் ஓசோனின் இயக்கவியற் சமநிலை*

எனவே வளிமண்டலத்தில் ஓசோனின் உருவாக்கமும் பிரிகையும் இயக்கவியற் சமநிலையில் உள்ளது. ஓசோன் படலமானது சூரியனில் இருந்து வரும் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய UV கதிர்களை அகத்துறிஞ்சி அவை புவி மேற்பரப்பை அடையவிடாமல் தடுக்கின்றது. இதனால் புவியில் வாழும் தாவர விலங்கினங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

ஓசோன் படலமானது தற்போது பல காரணிகளினால் அழிவடைந்து கொண்டு வருகின்றது. மனித நடவடிக்கைகளினால் ஓசோன் படலத்தை அழிவடையச் செய்யும் இரசாயனப் பதார்த்தங்கள் பெருமளவில் வளிமண்டலத்திற்கு வெளிவிடப் படுகின்றன. அவற்றுள் பிரதானமானவை குளோரோபுளோரோ காபன்கள் (Chloro Fluoro Carbons – CFC) ஆகும். குளோரோபுளோரோ காபன்களானவை பிரதானமாகக்காபன் (C), குளோரின் (Cl), புளோரின் (F) ஆகிய மூலகங்களைக் கொண்ட சேர்வைகளாகும். உதாரணமாக $CFCl_3$ (CFC-11), $CF_2Cl_2$ (CFC-12), $C_2F_3Cl_3$ (CFC-113), $C_2F_4Cl_2$ (CFC-114), $C_2F_5Cl$ (CFC-115) முதலிய சேர்வைகளைக் குறிப்பிடலாம். வெப்பக் காவலித் தன்மை, சடத்துவ இயல்பு, எளிதில் தீப்பற்றாமை முதலிய பல சிறப்பம்சங்கள் காரணமாக குளோரோபுளோரோ காபன்கள் குளிரூட்டிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

UV கதிர் வீச்சினால் குளோரோபுளோரோ காபன்களில் ஏற்படும் ஒளிப்பிரிகையினால் (Photodissociation) தாக்க வேகம் கூடிய குளோரின் சுயாதீன மூலிகமானது (chlorine free radical) வளிமண்டலத்தில் விடுவிக்கப்படுகின்றது.




*குளோரோபுளோரோ காபன்களின் ஒளிப்பிரிக்கை*

குளோரின் சுயாதீன மூலிகமானது ஓசோன் மூலக்கூறுடன் தாக்கமுற்று ClO மூலக்கூறையும் $O_2$ மூலக்கூறையும் உருவாக்குவதனால் ஓசோன் படலமானது அழிவடைகின்றது.




*குளோரின் சுயாதீன மூலிகத்தினால் ஓசோனின் பிரிகை*

இவ்வாறு உருவாக்கப்படும் ClO மூலக்கூறானது வளிமண்டலத்திலுள்ள O அணுவுடன் தாக்கமடைந்து மீண்டும் குளோரின் சுயாதீன மூலிகமானது உருவாக்கப்படுகின்றது.




*குளோரின் சுயாதீன மூலிகத்தின் மீள் உருவாக்கம்*

எனவே குளோரின் சுயாதீன மூலிகமானது வளிமண்டலத்திலே சுழற்சி முறையில் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுவதனால் ஒவ்வொரு தனி Cl சுயாதீன மூலிகமும் பல்லாயிரக்கணக்கான $O_3$ மூலக்கூறுகளை அழிவடையச் செய்யும். ஓசோன் படலத்தின் இழப்பானது மனிதனுக்கு மாத்திரமன்றி தாவரங்களிற்கும் நுண்ணங்கிகளிற்கும் கூட பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் சூழற் தொகுதியும் பாதிப்படையும்.

1974 ஆம் ஆண்டளவில், றோலண்ட் (Rowland), மேரியோ மொலினா (Mario Molina) ஆகிய விஞ்ஞானிகள் குளோரோபுளோரோ காபன்களினால் ஓசோன் படலம் அழிவது தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். ஆரம்ப காலப்பகுதியில் அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளுக்குப் பல எதிர்ப்புகள் இருந்த போதிலும்

1996 ஆம் ஆண்டு மேரியோ மொலினாவிற்கு குளோரோபுளோரோ காபன்களின் ஆராய்ச்சிக் காக நோபிள் பரிசு (Nobel Prize) வழங்கப்பட்டது.



மேரியோ மொலினா

ஓசோன் படலத்தின் இழப்பானது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும். 1988 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 45 நாடுகள் குளோரோ புளோரோ காபன்களின் பாவனையைக் குறைப்பதற்கான ஒப்பந்தத்தில் (Montreal Protocol) கைச்சாத்திட்டன. இதனைத் தொடர்ந்து வேறும் பல ஒப்பந்தத்தங்கள் குளோரோபுளோரோ காபன்களின் பாவனையைக் குறைப்பதற்குக் கைச்சாத்திடப்பட்டபோதிலும் ஓசோனின் இழப்பைக் குறைக்க முடியாதுள்ளது. ஏனெனில் வளிமண்டலத்தில் ஏற்கனவே வெளிவிடப்பட்ட குளோரோபுளோரோ காபன்கள் தொடர்ந்தும் ஓசோன் படலத்தில் இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே மேலும் குளோரோபுளோரோ காபன்கள் வளிமண்டலத்தை அடையாதிருக்க குளோரோபுளோரோ காபன்களின் பாவனையை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் ஓசோனின் இழப்பை ஏற்படுத்தும் ஏனைய பதார்த்தங்களும் வளிமண்டலத்தை அடைவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஓசோன் படலத்தின் இழப்பு தொடர்ந்தும் தவிர்க்கப்படாதவிடத்து, UV கதிர்கள் புவி மேற்பரப்பை அடைவதால் தாவர விலங்கினங்களின் இறப்பு ஏற்படும். அத்துடன் அன்ராரிக்கா (Antarctica) பகுதியிலுள்ள பனிப்பாறைகள் உருகும். இதனால் புவியில் பாரியளவிலான மாற்றங்கள் ஏற்படலாம்.

* * *



# மன்றங்கள்



குருளைச்சாரணர்



மாணவர் மன்றம்
(முதன்மை நிலை 1)



மாணவர் மன்றம்
(முதன்மை நிலை 2)



மாணவர் மன்றம்
(முதன்மை நிலை 3)



இந்துமா மன்றம்



கிறிஸ்தவ மன்றம்



தமிழ் மன்றம்



ஆங்கில மன்றம்



# வால் நட்சத்திரங்கள்
# The Comets

கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.


வால் நட்சத்திரங்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். வால் நட்சத்திரங்கள் எனப்படுவது உண்மையான நட்சத்திரங்கள் அல்ல. (படம் : 1). வழமையான நட்சத்திரங்கள் போன்று இவற்றை நாளாந்தம் வானில் காணமுடியாது. ஆனால் வால் நட்சத்திரங்கள் அவ்வப்போது தோன்றியுள்ளதாக சில அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைப் பண்டைய தமிழ் வானியல் நிபுணர்கள் தூமகேது என்று அழைத்தனர். இவை பூமியில் மோதினால் பூமி துண்டுகளாக உடைந்துவிடும் என்றுகூட சில வானியல் நிபுணர்கள் கணித்துக் கூறினார்கள். ஆயினும் அதிஷ்டவசமாக அவ்வாறு எதுவும் இன்றுவரை நடந்துவிடவில்லை. பல்வேறு ஆராய்ச்சிகள் மூலம் வால் வெள்ளிகள் ஒரு அழுக்குப் படிந்த பனிக்கட்டிகளின் சேர்மானம் என்றும், அவற்றில் சூரிய ஒளி பட்டுச் சிதறுவதாலேயே அவை நட்சத்திரங்கள் போன்று ஒளிர்வதாகவும் கண்டுபிடித்துள்ளார்கள்.



படம் : 1 ஹேலி – பொப் (Hale Bopp) எனப்படும் வால் நட்சத்திரத்தின் தோற்றம்

வால் நட்சத்திரங்களின் தலைப்பகுதியில் நீர் மூலக் கூறுகளுடன், காபன் மொனொக்சைட்டு (CO), காபனீர் ஒக்சைட்டு ($CO_2$), மீதேன் ($CH_4$), அமோனியா ($NH_3$), போமல்டிகைட்டு ($CH_2O$) போன்ற வாயுக்களும் உறைந்த நிலையில் காணப்படுவதாக ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வந்துள்ளது. உறைபனி நிலையிலுள்ள வாயுக்கள் உள்ள பகுதியைத் தான் 'தலை' என்றும், சூரிய ஒளியைச் சிதறடிக்கின்ற ஏனைய துகள்கள் தான் 'வால்' என்றும் அழைக்கப்படுகின்றன. சூரிய வெப்பத்தினால் நீர் ஆவியாவதை அறிந்திருப்பீர்கள். அது போன்றே வால் நட்சத்திரங்கள் சூரியனுக்கு அருகில் செல்லும்போது, சூரிய வெப்பத்தினால் அதிலுள்ள வாயு மூலக்கூறுகள் ஆவியாகித் தள்ளப்படும். இவ்வாறு தள்ளப்பட்ட வாயு மூலக் கூறுகளே வால் நட்சத்திரங்களின் வால்கள் போன்று தோற்றமளிக்கின்றன. இவ் வால்கள் 1000 முதல் 10,000 கி. மீ தூரம் வரை நீண்டிருக்கும்.

வால் நட்சத்திரங்களின் வால் எப்பொழுதும் சூரியனுக்கு எதிர்த்திசையில் இருக்கும். அதாவது வால் நட்சத்திரம் சூரியனை நோக்கிச் செல்லும் போதும், விலகிச் செல்லும்போதும், படம்: 2 இல் காட்டப்பட்டவாறு தலை சூரியனை நோக்கியும், வால் சூரியனுக்கு எதிர்த்திசையிலுமே எப்பொழுதும் இருக்கும். சூரிய ஒளியினாலேயே வால்கள் உருவாகுவதால், சூரியனுக்கு வெகுதொலைவில் இருக்கும் போது வால் நட்சத்திரத்திற்கு வால் இருக்காது.





படம் : 2 வால் நட்சத்திரத்தின் பாதை, வால் நட்சத்திரத்தின் வால் எப்பொழுதும் சூரியனுக்கு எதிர்ப்புறமாக இருப்பதை அவதானிக்கலாம்.

வால் நட்சத்திரங்கள் எவ்வாறு தோன்றின? எமது பிரபஞ்சம் எத்தனையோ கோடிக் கணக்

கான ஆண்டுகளின் முன் நடந்த பெரு வெடிப்பு (Big bang) மூலம் உருவானதாக அறிந்திருப்பீர்கள். அந்த வெடிப்பிலிருந்து புகை மண்டலமாகக் கிளம்பிய பொருட்கள் கிட்டத்தட்ட 4.6 பில்லியன் ($4.6 \times 10^{12}$) ஆண்டுகளுக்கு முன்னர் மெல்ல இறுகி இப்பிரபஞ்சத்தை உருவாக்கியது. அப்பொழுது சூரியனாகவும் ஏனைய கோள்களாகவும் மாறிய புகை மண்டலத்தின் எஞ்சிய கழிவுகள் ஒன்று சேர்ந்து வால் நட்சத்திரங்களாக உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வால் நட்சத்திரங்களில் எமது பிரபஞ்சத்தின் எஞ்சிய துகள்கள் இருப்பதால், வால் நட்சத்திரங்களை ஆராய்வதன் மூலம் எமது பிரபஞ்சத்தின் தோற்றத்தை அறியமுடியுமென வானியல் நிபுணர்கள் கருதுகிறார்கள். இதுவே வால் நட்சத்திரங்களில் விஞ்ஞானிகளுக்கு ஆர்வம் வரக் காரணமாகும்.

இதுவரை கிட்டத்தட்ட 900 வால் நட்சத்திரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஆயினும் எமது பிரபஞ்சத்தில் 10000 இற்கு மேற்பட்ட வால் நட்சத்திரங்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. சில வால் நட்சத்திரங்கள் 50 முதல் 200 வரையான ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனை வலம் வருகின்றன. இவற்றைக் குறைகால வால்நட்சத்திரங்கள் என அழைப்பர். பல வால்நட்சத்திரங்கள் நெப்டியூனுக்கு அப்பால் சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரத்தின் 30 முதல் 1000 மடங்கு தூரத்திலுள்ள எட்ச்வோத் - குல்பர் (Edgeworth - Kulper) என்ற குளிரான பட்டியிலிருந்து வருகின்றன. இப்பட்டியின் உட்புறமுள்ள வால்நட்சத்திரங்களின்மேல் சில பெரிய கோள்களால் ஏற்படுத்தப்படும் குழப்பங்களால் சில வால் நட்சத்திரங்கள் அப்பட்டியிலிருந்து வெளியேறி சூரிய குடும்பத்தினுள் வருகின்றன. இவையே குறைகால வால் நட்சத்திரங்கள் எனப்படுகின்றன.

சில வால் நட்சத்திரங்கள் 200 முதல் 10,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனை வலம் வருகின்றன. இவற்றை நீண்டகால வால் நட்சத்திரங்கள் என அழைப்பர். பெரிய கோள்கள் உருவாகும்போது சூரிய மண்டலத்திலுள்ள பெரும்பாலான சிறிய, குளிரான கழிவுகள், வளரும் பெரிய கோளின் ஈர்ப்புப் புலங்களால் சூரியனின் ஈர்ப்பு விளிம்புக்கு அப்பால் வெளியேற்றப்படுகின்றன. இவ்வாறான சிறிய துகள்கள் ஊர்த் முகில்கள் (Oort Cloud) எனப்படும் மிக நீண்ட மண்டிலங்களை உருவாக்குகின்றன. கோளமான ஒடு வடிவிலுள்ள இம்முகில்களுக்குள் பில்லியன் கணக்கான (கிட்டத்தட்ட $1 \times 10^{13}$) வால் நட்சத்திரங்கள் உள்ளன. இவை சூரிய குடும்பத்தின் ஈர்ப்பு விசையின் எல்லைக்கு அப்பால் உருவாகும். அதாவது அவை சூரியனிலிருந்து சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரத்தின் 40 அல்லது 50 ஆயிரம் மடங்கு தூரத்தில் (கிட்டத்தட்ட ஒரு ஒளியாண்டு) உருவாகும். இவ் ஊர்த் முகில்களில் இருந்தே நீண்டகால வால் நட்சத்திரங்கள் வருகின்றன.




படம் 3 : நீண்டகால வால் நட்சத்திரத்தின் உற்பத்தி ஊர்த் முகில்களிலிருந்து என்பது காட்டப்பட்டுள்ளது.


பெரும்பாலான வால்நட்சத்திரங்கள் சூரியனிலிருந்து பாதுகாப்பான தூரத்தில் சுற்றி வருகின்றன. சில வால்நட்சத்திரங்கள் சூரியனை நெருங்கிச் சென்றுள்ளன. உதாரணமாக ஹேலியின் வால் நட்சத்திரம் எனப்படும் வால் நட்சத்திரம் சூரியனிலிருந்து கிட்டத்தட்ட 89 மில்லியன் ($8.9 \times 10^{6}$) கி.மீ. தூரம் வரை நெருங்கிச் சென்றுள்ளது. சில வால் நட்சத்திரங்கள் சூரியனுக்கு மிக மிக அண்மையில் சென்று, துகள்களாகி ஆவியாகிவிடும். குறைகால வால்நட்சத்திரங்களை அவதானிக்கவும், அவற்றின் ஒழுக்குகளை அளக்கவும் முடியும். இதனால் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளை முன்

கூட்டியே அறியமுடியும். நீண்டகால வால் நட்சத்திரங்கள், விஞ்ஞானம் வளர்ந்த காலத்துக்குள் பூமிக்கு அருகில் வந்ததாகத் தகவல்கள் இல்லை. ஆதலால் அவை பற்றிய கணிப்பீடுகளைச் செய்ய முடிவதில்லை. அவற்றின் ஒழுங்குகளையும் அளக்கமுடியாது. அவை எந்தத் திசையிலிருந்தும் வரலாம். இதனால் இவை பாதிப்புக்களைத் தரக்கூடியவை என எண்ணப்படுகிறது.

எட்மண்ட் ஹேலி (Edmond Halley) என்ற விஞ்ஞானி, வால் நட்சத்திரங்கள் சூரியக் குடும்பத்தின் ஒரு அங்கமே எனக் கண்டுபிடித்தார். அத்துடன் 1652ஆம் ஆண்டில் வானில் தெரிந்த வால் நட்சத்திரம் மீண்டும் 1759ஆம் ஆண்டு வானில் தெரியும் என்று கணித்துக் கூறினார். இவரது கணிப்பீடுகள் சரியாக இருந்ததால் அந்த வால் நட்சத்திரத்தை ஹேலியின் வால் நட்சத்திரம் என அழைக்கிறார்கள். விண்கலங்கள் மூலம் ஹேலியின் வால் நட்சத்திரத்திற்கு அருகாமையில் சென்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலிருந்து அதன் தலைப்பகுதி சுமார் 15 கி. மீ. நீளமும், 8 கி. மீ. அகலமும் உடையதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோன்று 2001ஆம் ஆண்டு டீப் ஸ்பேஸ் (Deep Space) என்ற விண்கலம் பொரளே (Borrelly) என்ற வால் நட்சத்திரத்தை நோக்கி அனுப்பப்பட்டது. 2004 இல் நாஸாவின் ஸ்ரார் டஸ்ட் (Star Dust) என்ற விண்கலம் வைல்ட் 2 (Wild 2) என்ற வால் நட்சத்திரத்திற்கு 150 கி.மீ. அண்மைவரை சென்று ஆராய்ந்து, அதன் வாலின் துகள்களைக் கொண்டு வந்தது. 2005இல் நாஸாவின் டீப் இம்பக்ட் (Deep Impact) என்ற விண்கலம் டெம்பெல் 1 (Tempel 1) என்ற வால் நட்சத்திரத்தில் பள்ளமொன்றை உருவாக்கி, அதிலிருந்து பெறப்பட்ட துகள்களிலிருந்து சூரியக் குடும்பத்தின் உருவாக்கம் பற்றிய தகவல்கள் உள்ளதா என ஆராய்ந்தது. இவ்வாறு இன்றும் பல ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

எமது பூமி சூரியனை நீள்வளையப் பாதையில் வலம் வருவதை அறிவீர்கள். ஆயினும் இப்பாதை கிட்டத்தட்ட வட்டம் போன்றே தோன்றும். ஆனால் வால் நட்சத்திரங்களின் பாதை மிக மிக நீள்வளையமாக உள்ளது (படம் : 2). எனவே வால் நட்சத்திரங்கள் சூரிய மண்டலத்திற்கு அருகிலுள்ள வேறோர் மண்டலத்திலிருந்தே எமது எல்லைக்குள் வருவதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அத்துடன் வால் நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றும் தளமும், ஏனைய கோள்களின் சுற்றுத்தளத்தைவிடச் சாய்வான கோணத்திலுள்ளது. இதுவும் மேற்கூறிய கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகவே உள்ளது.

'ஷுமேக்கர் - லெவி' (shoemaker - levy) என்ற வால் நட்சத்திரம் வியாழன் மீது மோதியதாக அறிந்திருப்பீர்கள். ஆயினும் வியாழன் கோள் துண்டுகளாக உடையவில்லை. எனினும் வியாழனின் வளி மண்டலம் பாதிக்கப்பட்டு எரிமலை போன்று தோன்றியதாக அறிக்கைகள் கூறுகின்றன. படம் : 4 (a) (b) இல் இக்காட்சிகளைக் காணலாம். ஷுமேக்கர் – லெவி என்ற வால் நட்சத்திரம் முதலில் 20 துண்டுகளாக உடைந்து வியாழனின் மேல் பல நாட்களாக மோதியது. இதுவே முதல் தடவையாக அவதானிக்கக் கூடியதாக இருந்த மோதலாகும். இந்த மோதல் 1994ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிகழ்ந்தது.



படம் 4(a)      படம் 4(b):

படம் 4(a) : 1994 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஷுமேக்கர் – லெவி என்ற வால் நட்சத்திரம் வியாழனின் மீது மோத முன் 20 துண்டுகளாக உடைந்த காட்சி.

படம் 4(b): 1994 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஷுமேக்கர் – லெவி என்ற வால் நட்சத்திரம் வியாழனின் மீது மோதியதால் ஏற்பட்ட 8 பள்ளங்களை இப் படத்தில் காணலாம்.

பூமியின் பரிணாம வளர்ச்சியில் வால் நட்சத்திரங்களின் தாக்கமும் சில விளைவுகளை

உண்டாக்கியதாக நம்பப்படுகிறது. வால் நட்சத்திரங்களே நீரையும், வேறு சில கனிப்பொருட்களையும் பூமிக்குக் கொண்டுவந்திருக்கவேண்டும் என்றும் சில விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். மேலும் பூமியின் மீது பல இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வால் நட்சத்திரம் மோதியதாகவும், அதனாலேயே டைனோசோர் போன்ற உயிரினங்கள் அழிந்ததாகவும் கூட விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

வால் நட்சத்திரங்களை ஆராய்வதன் மூலம் சூரியக் குடும்பத்தின் தோற்றத்தை அறியமுடியுமென விஞ்ஞானிகள் நம்புவதால் வால் வெள்ளிகள் பற்றிய பலவித ஆய்வுகள் இன்றும் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது சில விண்கலங்களை வால் நட்சத்திரங்களில் மோதி, அவற்றிலிருந்து கிளம்பும் தூசுகளையும் ஆராய்ந்து வருகிறார்கள். ஒரு காலத்தில் வால் நட்சத்திரங்களைக் கண்டு மக்கள் பயந்தனர். ஆனால் இப்போதெல்லாம் விஞ்ஞானிகள் வால் நட்சத்திரங்களுடன் நேரடியாக மோதத் தொடங்கிவிட்டார்கள். அந்த அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.

வால் நட்சத்திரங்கள் தோன்றியபோது சில போர்கள் நடைபெற்றுள்ளன. அப்போது வால் நட்சத்திரத்தின் வால்பகுதி நோக்கியுள்ள தேசத்திற்கு அழிவு ஏற்பட்டதாகவும், தலைப்பகுதி நோக்கியிருந்த தேசத்திற்கு வெற்றி ஏற்பட்டதாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. இதன் மூலம் வால் நட்சத்திரங்கள் கெடுதலைக் கொண்டு வருமெனச் சிலரும், நன்மையைக் கொண்டு வருமென வேறு சிலரும் நம்புகிறார்கள். எமது புராணங்களில் கூட வால் நட்சத்திரங்கள் பற்றிய சுவாரஸ்யமான கதைகள் உள்ளன. எப்படியாயினும் வால் நட்சத்திரங்கள் ஆதிகாலம் முதல் இன்று வரை மனிதனைக் கவர்ந்த வண்ணமே உள்ளன. எமது வாழ்நாளிற்குள் ஒரு வால் நட்சத்திரத்தைப் பார்க்கக் கிடைத்தாலே அதிஷ்டம் என்றே எண்ண வேண்டும்.

* * *

பிறரைக் குறை கூறாதீர்கள். அதன் மூலம் அவர்களைத் திருத்தவும் முடியாது. உங்களையே வேண்டுமானால் குறை கூறிக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்களை மட்டுமாவது திருத்திக்கொள்ள முடியும்.

**- ஜேம்ஸ் ஆலன்**

---

துன்பம் ஏற்படும்போது வருந்தாமல் இதைவிட மோசமான நிலையை இறைவன் எனக்குத் தரவில்லையே என்பதை எண்ணித் தெளிந்து மிகுந்த உற்சாகத்துடன் இருக்க நமது மனதைப் பழக்கப்படுத்த வேண்டும். நம்மை வந்து சந்தித்தால் மற்றவருக்கும் உற்சாகம் பிறக்கும் என்ற அளவிற்கு நமது மனதை நாம் உற்சாகமாய் வைத்திருக்க வேண்டும்.

**- தோமஸ் ஹார்டி**



# இலங்கைத் தமிழர் வரலாற்று மீள் கண்டுபிடிப்பில் தொல்லியற் சின்னங்கள் பெறும் முக்கியத்துவம்

**பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்**
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

**அறிமுகம் :-**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் குறையாத ஈழத்தமிழர் வரலாற்றில் கடந்த மூன்று சகாப்த காலம் ஓர் புதிய காலகட்டத்தின் தொடக்கம் எனக் கூறலாம். இது தமிழரின் பாரம்பரிய வரலாறு பற்றிய பார்வைக்கும் பொருந்தும். ஓர் இனத்தின் வரலாறு என்பதும் வரலாற்று உண்மை என்பதும் அவ்வினம் தொடர்பாகக் கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுவது அவசிய மாகும். இதில் பண்டு தொட்டு நிலவிவந்த வரலாற்றுக் கதைகள் (இலக்கியம்) வாய்மொழிச் செய்திகள், ஐதீகங்கள் என்பவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் அதே வேளை நம்பகத்தன்மை வாய்ந்த விஞ்ஞானபூர்வமான சான்றுகளுக்கு ஆய்வில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதும் அவசியமாகும். அதன் அடிப்படையில் அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வரலாற்று முடிவுகளை நோக்கும் போது அதில் ஈழத் தமிழரின் வரலாறு மட்டுமன்றி , சிங்கள மக்களின் பூர்வீகம் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளும் மீளாய்வுசெய்யப்பட வேண்டியிருப்பதைக் காணமுடிகின்றது.

**ஈழத்துப் பாளி நூல்களும் தமிழர்களும் :-**

கி.பி 4ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் பௌத்தமதத்தையும், அம்மதத்திற்குத் தொண்டாற்றிய மன்னர்களையும், மக்களையும் முதன்மைப்படுத்துவதைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட தீபவம்சம், மகாவம்சம் போன்ற இலக்கியங்களே ஈழத்தின் பூர்வீக மக்களது வரலாறு கூறும் முதல் பாளி இலக்கியங்களாக உள்ளன. இந் நூல்களில் சில வரலாற்று உண்மைகளோடு நம்பமுடியாத கட்டுக்கதைகள், ஐதீகங்கள், பக்கச்சார்பான இன, மத உணர்வுகள் என்பனவும் கலந்து காணப்படுகின்றன. இருப்பினும் தென்ஆசியாவில் வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத வகையில் இப்பாளி நூல்களில் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத் தொடர்ச்சியான வரலாற்றுக் கதைகள், சம்பவங்கள் இடம்பெற்று இருப்பதால், தென்ஆசியாவில் தொடர்ச்சியான வரலாற்று மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. பிற்காலத்தில் இப் பாளி நூல்களை ஈழத்து வரலாற்று ஆய்வுகளுக்கு அடிப்படை மூலாதாரமாகப் பயன்படுத்திய சுதேச, அன்னிய வரலாற்று ஆசிரியர்கள் தாம் வாழும் சமகால இலங்கையில் சிங்கள மக்களில் பெரும்பான்மையோர் பௌத்தர்களாக இருப்பதனால் இந்நூல்கள் கூறும் பண்டைய கால மக்கள் பற்றிய வரலாறு தற்காலச் சிங்கள மக்களின் மூதாதையரின் வரலாறு என்ற முடிவுக்கு வந்தனர். மேலும் இம் மக்களின் மூதாதையினர் வட இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்த ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்பதை எடுத்துக்காட்ட கி.மு 6ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்த 700 தோழர்களும், அவர்களின் வழிவந்தவர்களும் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறியதுடன் அவர்கள் காலப்போக்கில் பௌத்தர்களாக மாறியதாக இப்பாளி நூல்கள் கூறும் கதையையும் இன்னொரு முக்கிய சான்றாக எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழர்களைப் பொறுத்தவரை தவறான மதத்தைப் பின்பற்றிய அவர்கள் வர்த்தகர், படையெடுப்பாளர், அன்னியர், ஆக்கிரமிப்பாளர், அக்கரையில் இருந்து இலங்கைக்கு வந்து போனவர்கள் என இப்பாளி நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு சிங்கள மக்களைப்போல் தமிழர்களுக்கு

இந் நாட்டு மண்ணோடொட்டிய தொன்மையான வரலாறு இல்லை என்ற கருத்தை முன்வைத் தனர். ஆனால் சிங்கள மக்களை இந் நாட்டுக்கு ரியவர்களாகக் காட்ட விஜயன் தலைமையில் 700 பேர் இலங்கையில் வந்து குடியேறியதை ஒரு முக்கிய ஆதாரமாகக் காட்டும் இவ்வரலாற்று ஆசிரியர்கள் அதே பாளி நூல்களில் வடஇந்தியா வில் இருந்து வந்து குடியேறிவர்களுக்காகத் தமிழகத்தில் (பாண்டி நாட்டில் இருந்து) 700 மணப் பெண்களும், 18 தொழில் தெரிந்த 1000 குடும்பங் களும் (இந்த எண்ணிக்கை விஜயன் தலைமை யில் வடஇந்தியாவில் இருந்து வந்து குடியேறிய வர்களை விட அதிகம்) இலங்கையில் வந்து குடி யேறியதாகக் கூறுவதைத் தமிழர்களும் இந் நாட்டுக்குரிய மக்கள் என்பதற்கு ஓர் ஆதாரமாகக் காட்ட முன்வரவில்லை. இது இனரீதியான வர லாற்றுப் படைப்பு பிற்காலத்திலும் தொடர்ந்ததைக் காட்டுகின்றது. இருப்பினும் இந்த வரலாற்றுப் பார்வை கடந்த மூன்று சகாப்த காலங்களில் இருந்து படிப்படியாக மாற்றமடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. அதற்கு அண்மைக் காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களே முக்கிய காரணமாகும்.

### தொல் பொருட் சின்னங்களின் முக்கியத்துவம் :-

பண்டைய காலத்தில் வாழ்ந்து மறைந்த மக்கள் பயன்படுத்திய தொல்பொருட் சின்னங்க ளூடாக அக்கால மக்களது வாழ்க்கை முறை பற்றியும், நாகரிகம் பற்றியும் எடுத்தியம்பும் இயல் தொல்லியல் ஆகும் (Archaeology). இதில் அக்கால மக்கள் அன்றாடம் பயன்படுத்திய கல்லாயுதங்கள், மட்பாண்டங்கள், மணிப்படைகள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், கட்டிட, சிற்பக் கலைகள் மற்றும் நாளாந்தம் உபயோகித்த வீட்டுப்பாவனைப் பொருட்கள் என்பன முக்கிய வரலாற்று ஆதாரமாகத் திகழ்கின்றன. இவற்றின் மூலம் பண்டைய கால மக்களிடையே காலத்திற் குக் காலம் அறிவு , அனுபவம், ஆற்றல், தொழில் நுட்பம், கலை, மொழி, எழுத்து, மதம், அரசியல், பொருளாதார நிலை என்பவற்றில் ஏற்பட்ட மாறுதல்களையும், வளர்ச்சியையும் கால அடிப் படையில் கண்டுகொள்ளமுடிகிறது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்றைய மக்களது பாவனைப் பொருட்கள் பண்டைய மக்கள் பயன்படுத்திய பொருட்களைவிடத் தரமான தாகக் கருதப்பட்டாலும் அவை கடந்தகால மக் களது அனுபவத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி யின் வெளிப்பாடு என்பது கவனத்திற்குரியது.

தொல்பொருட் சின்னங்கள் இலக்கியங் களைப் போல் ஓர் இனத்தின் அல்லது ஒரு நாட்டின் வரலாற்றைத் தொடர்ச்சியாகவும், விரிவாகவும் கூறக்கூடியவை அல்ல. ஆனால் இலக்கியங் களைக் காட்டிலும் இவற்றால் அறியப்படும் செய்திகள் பெருமளவிற்கு நம்பகத்தன்மை உடையன. பெரும்பாலான வரலாற்று இலக்கியங் கள் ஆதிகால மக்களிடையே நிலவிய ஐதீகங்கள், வாய்மொழிச் செய்திகள், மரபுக்கதைகள் என்ப வற்றை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் எழுதப்பட்டவையாகும். அவ்வாறே ஈழத்துப் பாளிநூல்களும் எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்படும் இலக்கியங்களில் அவற்றை எழுதிய ஆசிரியர் வாழ்ந்த காலச் சூழ்நிலைகள், அவரது விருப்பு வெறுப்பு, இனமத உணர்வுகள் என்பவற் றின் செல்வாக்கு இடம்பெற வாய்ப்புண்டு. இத னால் உண்மையான வரலாற்று இலக்கியத்தில் பல திரிபுகள், பக்கச் சார்புகள், கற்பனையான செய் திகள் என்பன இடம்பெற அதிக வாய்ப்புண்டு. ஆனால் தொல்பொருட் சின்னங்கள் பெரும்பாலும் சம்பவம் நடந்த காலத்துடன் தொடர்புடையவை. அதனால் இலக்கியங்களைப் போல் தொல் பொருட் சின்னங்களில் காலத்தின் தேவை கருதித் திரிபுகளோ, மிகைப்படுத்தும் செய்திகளோ இடம் பெற வாய்ப்பில்லை. இது கற்பனை வளத்தை ஏற்றிச் செல்லும் இலக்கிய நடைமுறைக்கு முற்றிலும் மாறான தன்மை கொண்டது. இதனால் தான் ஒரு காலத்தில் இலக்கியங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட உலக நாடுகள் பலவற்றின் பண்டைய கால வரலாறு பிற் காலத் தொல்பொருட் கண்டுபிடிப்புக்கள் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. இது ஈழத்துப் பாளிநூல்கள் கூறும் வரலாற்றிற்கும் பொருந்தும்.

வரலாற்றாய்வில் தொல்பொருட் சின்னங்கள் :-

ஏனைய ஆசிய நாடுகளைப் போல் ஈழத்திலும் இலக்கிய மூலாதாரங்களுடன் தொல்பொருட் சின்னங்களைப் பயன்படுத்தி பண்டைய கால வரலாற்றை ஆராயும் மரபு பிரித்தானியர் ஆட்சியோடு தோற்றம் பெறுவதினைக் காணலாம். ஆயினும் இவர்கள் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட பெரும்பாலான தொல்லியல் ஆய்வுகள் பாளி இலக்கியங்களில் கூறப்பட்ட அரச தலைநகரங் கள், வர்த்தக மையங்கள், பௌத்த மத வழிபாட்டி டங்கள் என்பனவற்றை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டன. இதனால் அவற்றின் முடிவுகள் பெரும்பாலும் ஒரு பக்கச் சார்புடைய தாகவே இருந்தன. மேலும் வடமொழிகளையும், வடமொழிக் கல்வெட்டுக்களையும் வாசித்துத் தெரிந்து கொள்வதில் பயிற்சி உடைய பிரித்தானிய ஆய்வாளர்கள் தமிழ் மற்றும் திராவிட மொழி எழுத்துக்களை வாசித்து அறியும் பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை. அத்துடன் பண்டைய நாகரிகங்கள் ஒரு மையத்தில் தோன்றிப் படிப்படியாகப் பிற இடங்களுக்குப் பரவின என்ற கருதுகோளின் அடிப்படையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டனர். அத்துடன் இலங்கை, இந்தியப் பண்பாடு வடக்கிலிருந்தே படிப்படியாகத் தெற்கு நோக்கிப் பரவின என்ற கருதுகோளையும் ஆழமாகக் கொண்டிருந்தனர். இத்தகைய கருதுகோள்களுக்குச் சாதகமாகவே ஈழத்துப் பாளிநூல்களில் வரும் வரலாற்றுக் கதைகள் அமைந்திருந்ததனால் இவர்களது தொல்பொருட் கண்டுபிடிப்புகளின் முடிவுகள் பெரும்பாலும் சிங்கள மக்களுக்குச் சார்பாகவே அமைந்தன. சமகாலத்தில் வட இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட லூயிஸ் (Luwis 1885) பாக்கர் (Parkar 1981) போன்ற ஆய்வாளர்கள் தாம் கண்டுபிடித்த புராதன கல்வெட்டுக்கள், நாணயங்கள், மற்றும் தூய தமிழ் இடப்பெயர்களை ஆதாரமாகக் காட்டி தமிழர்களும் சிங்கள மக்களைப்போல் பண்டு தொட்டு ஈழத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்ற கருத்தை முன்வைத்தனர். ஆயினும் இவர்களின் கருத்தைப் பிற்கால வரலாற்றாய்வாளர்கள் பலரும் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

பிரித்தானியரைத் தொடர்ந்து சுதேச மக்களிடையே தொல்லியல் பற்றிய விழிப்புணர்வு படிப்படியாக ஏற்படத்தொடங்கியது. இந்திய மக்கள் தமது நாட்டின் விடுதலை கோரி ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டபோது அவர்கள் பரந்த இந்தியாவை ஆளும் தகுதியும், அனுபவமும் இந்திய மக்களிடம் இல்லை எனக்கூறி அவர்களின் சுதந்திரப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தினர். இந்நிலையில் இன, மொழி, பண்பாடு என்பவற்றால் வேறுபட்ட இந்திய மக்களிடையே ஒற்றுமையை உருவாக்க விரும்பிய சுதேச தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் தம் நாட்டின் பண்டைய அரசியல், பண்பாட்டுத் தொன்மையையும், பெருமையையும் வெளிப்படுத்தும் நோக்கில் பல ஆய்வுகளை மேற்கொண்டனர். இதன் காரணமாகப் பரந்த இந்தியா, அகன்ற இந்தியா, விசால இந்தியா, இந்துக் குடியேற்ற நாடுகள் என்ற தலைப்புக்களில் பல ஆய்வு நூல்கள் வெளிவந்தன. இதன் தாக்கம் சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்டிருந்தாலும் இங்கு தமிழ், சிங்கள மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக வேற்றுமையே வளர்க்கப்பட்டது. இந் நாட்டைப் பௌத்த சிங்கள மக்களுக்குரிய நாடாகக் காட்ட விரும்பிய பேராசிரியர் பரணவிதான, மென்டீஸ் போன்ற சிங்கள அறிஞர்கள் இலங்கையில் வாழும் தமிழர்கள் வரலாறு இல்லாத தமிழர்கள் , பாரம்பரியம் இல்லாத தமிழர்கள் எனக் காட்டும் வகையில் தமது தொல்லியல், வரலாற்று ஆய்வுகளை நெறிப்படுத்திச் சென்றனர். அதே காலகட்டத்தில் முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப் பிரகாசர் போன்ற தமிழ் வரலாற்றாய்வாளர்கள் சிங்கள மக்களைப்போல் தமிழர்களும் இந்நாட்டின் பூர்வீகக்குடிகளாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை நிறுவும் வகையில் இலக்கிய ஆதாரங்களுடன் கந்தரோடை, வல்லிபுரம், வரணி, அரசபுரம் போன்ற இடங்களில் காணப்பட்ட புராதன தொல்பொருட் சின்னங்களையும் எடுத்துக் காட்டினார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து தொல்லியல் ஆய்வுகள் மேலும் புதியதொரு பரிமாணத்தை அடைந்ததெனக் கூறலாம். ஆயினும் இக் காலத்தில் இருந்து

அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசியல் சக்திகள் யாவும் தாம் விரும்பும் பௌத்த, சிங்கள தேசிய வாதத்தைக் கட்டியெழுப்பும் வகையில் தொல்லி யல் ஆய்வுகளை நெறிப்படுத்திச் சென்றனர். இவர்கள் பாளி இலக்கியத்தின் தாக்கத்தாற் போலும் சிங்கள மக்களின் வரலாறு கி.மு 6ஆம் நூற்றாண்டில் இருந்து தொடங்குவதாகக் கொண்டு அக்காலத்தின் பின்னர் ஏற்பட்ட மொழி, எழுத்து, பண்பாடு என்பன பற்றி ஆராய்வதிலேயே கூடிய அக்கறை காட்டினர். இதன் விளைவால் இக் காலத்திற்கு முந்திய மக்கள் பண்பாடு பற்றி அதிகம் அறியமுடியவில்லை. அத்துடன் சிங்கள மக்களோடு தொடர்புடையவை எனக் கருதப்பட்ட புராதன குடி யிருப்பு மையங்கள், நகரங்கள், வழிபாட்டிடங்கள் போன்றவற்றை ஆராய்வதில் அக்கறை காட்டிய ஆட்சியாளர்கள் தமிழர் வாழ்விடங்களுடன் தொடர்புடைய வரலாற்று மையங்களை ஆராய் வதிலோ அல்லது அவர்களுக்குரிய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதிலோ அக்கறை காட்ட முன்வரவில்லை. அந்நிலை தொடர்ந்தும் காணப்படுகிறது.

## தொல்பொருட் சின்னங்களும் ஈழத் தமிழர்களும்

ஈழத்தமிழரை மையமாகக் கொண்டு மிகப் பெரிய அளவில் தொல்பொருள் அகழ்வாய்வுகளோ (Archaeological Excavations), அல்லது தொல்லியல் மேலாய்வுகளோ (Archaeological Exploration) இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயினும் அவ்வப்போது மேற் கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போதும், பிற தேவைகளுக்காக நிலத்தை அகழ்ந்தபோதும் எதிர்பாராத வகையில் தமிழரோடு தொடர்புடைய தொல்பொருட் சின்னங்கள் அறியப்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் இத்தொல் பொருட் சின்னங்கள் பற்றிய தொல்லியல், வரலாற்றாய்வாளர்களின் பார்வையும், அணுகு முறையும் பெரும்பாலும் இந்நாட்டு மண்ணோடு தமிழருக்குள்ள உறவையும், தொடர்பையும் பலவீனமடையச் செய்வதாகவே இற்றைவரை இருந்து வருகின்றன.

ஈழத்தமிழரைப் போல் தமிழ் நாட்டுத் தமிழ ருக்கும் கி.பி 14ஆம் நூற்றாண்டு வரை ஓர் வர லாற்று இலக்கிய மரபு இருக்கவில்லை. தமிழக அரசியல், பண்பாட்டு, வரலாற்றில் பல்லவர் காலம் ஒரு திருப்புமுனையாகக் கருதப்பட்டாலும் அக் கால வரலாற்றை அறிய ஓர் இலக்கியம் தோன்ற வில்லை. இந்திய வரலாற்றில் மிகப்பெரிய பேரரசைத் தோற்றுவித்த பெருமை சோழருக்கு இருந்தாலும் அக்காலத்தில் தோன்றிய மூவருலா போன்ற இலக்கியங்களை வைத்துச் சோழ வரலாற்றைச் சரிவர எழுதமுடியாது. இதனால் இந்தியா சுதந்திரம் அடையும் வரை வெளிவந்த மிகப்பெரிய இந்திய வரலாற்று நூல்களில் பெரும்பாலும் தென்இந்தியா பற்றிய ஒருசில அத்தியாயங்களிலும், அதில் தமிழ்நாடு பற்றி ஓரிரு பக்கங்களிலுமே குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன குடியிருப்பு மையங் கள், கல்வெட்டுக்கள், பட்டையங்கள், செப்பேடுகள், நாணயங்கள், கட்டிட, சிற்பக் கலைகள் போன்ற தொல்லியற்சின்னங்கள் தமிழகமக்களின் தொன்மையையும், வரலாற்றுப் பெருமையையும் பலநூல்களாக எழுதவழிவகுத்தன.

இன்று தென்கிழக்காசியா என்ற வட்டத்திற் குள் அடங்கும் தாய்லாந்து, கம்போடியா, மலே சியா, யாவா, போர்ணியோ, பாலித்தீவு போன்ற நாடுகளின் வரலாற்றை முதலில் ஆராய்ந்த ஐரோப்பிய, இந்திய வரலாற்று ஆய்வாளர்கள் அந் நாடுகளுக்கென்று தனித்துவமான பண்பாட்டு வரலாறு எவையும் இருக்கவில்லை. எல்லாம் இந்தியாவில் இருந்து சென்றவை எனக்கூறி அங்கு வாழ்ந்த பூர்வீக மக்களையும், பண்பாட்டை யும் இந்திய வட்டத்திற்குள் உள்ளடக்கிக் கொண்ட னர். இதற்குச் சான்றாக அங்குள்ள புராதன நக ரங்கள், வர்த்தக மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்களை இந்தியாவில் கிடைத்த தொல்லியற் சின்னங்களோடு தொடர்பு படுத்திக் காட்டினர். ஆனால் 1960 களின் பின்னர் ஸ்பிறிற்க் கேவ் (Sprit cave), நொன் – நொட் – தா (Non – not – tha), ஒகியோ (Okio) போன்ற தென்கிழக் காசியாவின் புராதன தொல்லியல் மையங்களில்

மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் இருந்து இந்தியாவிற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தாய்லாந்து போன்ற நாடுகளில் மனிதப் பரிணாமம் நிகழ்ந்தமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. அத்துடன் தென்கிழக்காசியாவின் முக்கிய நகரங்கள், வர்த்தக மையங்களில் இந்தியச் செல்வாக்கு ஏற்பட்டிருந்தாலும் அது முழுக்க முழுக்க இந்தியப் பண்பாடாக வளராது அவற்றுடன் சுதேசப் பண்பாடும் கலந்து அது தென்கிழக்காசியாவுக்கே உரிய தனிப்பண்பாடாக வளர்ந்துள்ளமை அறியப்பட்டுள்ளது. அதே வேளை நாட்டின் உட்பகுதிகளில் எந்தவித இந்தி யப் பண்பாட்டுக் கலப்புமின்றித் தனித்துவமான பண்பாடு தோன்றி வளர்ந்ததையும் அறிய முடி கின்றது. மேலும் இந்தியப்பண்பாடு தென்கிழக் காசியாவிற்குப் பரவியது போல் தென்கிழக்காசி யப் பண்பாடு மாலைதீவு, மடகஸ்க்கார், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்குப் பரவியதையும் தொல்லியற் சான்றுகள் மூலம் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இன்று இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பண்டையகால வரலாறு பற்றிய ஆய்வில் இக் கண்டுபிடிப்புக்கள் முக்கியத்துவம் பெற்றுவருவதைக் காணமுடிகின்றது.

இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரை சிங்கள மக்களின் மூதாதையினரும், பண்பாடும் முன்பொரு காலத்தில் இந்தியாவில் இருந்து புத் தாக்கம் பெற்று வந்திருந்தாலும் அது காலப் போக்கில் இலங்கைக்கே உரிய தனித்துவமான பண்பாடாக வளர்ந்து வந்தது என்பதற்குச் சிங்கள அறிஞர்கள் தொல்லியற் சின்னங்களையே முக்கிய சான்றாக எடுத்துக்காட்டி வருகின்றனர். ஆனால் தமிழரோடு தொடர்புடைய தொல்லியற் சான்றுகள் கிடைக்கும் போது அவற்றைச் சிங்கள ஆய்வாளர்கள் மட்டுமன்றி தமிழ் ஆய்வாளர் களும் அவற்றை ஈழத்தமிழருக்குரிய சான்றாகப் பார்க்காது, தமிழ் நாட்டில் இருந்து அவ்வப்போது வந்துபோன தமிழருக்குரிய சான்றாகவே நோக்கு கின்றனர். இதன் அடிப்படையிலேயே ஈழத்தின் பண்டைய காலத் தமிழரது அரசியல், மதம், கலை, பண்பாடு பற்றிய வரலாறு சங்ககாலம், பல்லவர் காலம், சோழர்காலம், பாண்டியர் காலம் என்ற தமிழக வரலாற்றுப் பின்னணியில் பார்க்கப்படு கின்றன. இத்தகைய வரலாற்றுப்பார்வை தமிழ கத்தின் பெருமையைப் பேச உதவிய அளவிற்கு இந்நாட்டில் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் தமிழரின் தொன்மையையும், தனித்துவத்தையும் அடையாளம் காணச் சிறிதளவும் உதவவில்லை. இப்பார்வை பெருமளவிற்குப் பொருத்தமற்றவை என்பதையே அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுத்துச் செல்கின்றன.

இனம், மதம், மொழி, பண்பாடு என்பவற்றால் தமிழகத்துடன் ஒன்றுபட்ட ஈழத்தமிழர் வரலாறு காலத்திற்குக் காலம் தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்தது என்பதை இலக்கியங்கள் மட்டுமன்றி தொல்பொருட் சின்னங்களும் எடுத் துக்காட்டுகின்றன. இதற்காக ஈழத்தில் கிடைத்த, கிடைத்துவருகின்ற தமிழரோடு தொடர்புடைய தொல்பொருட் சின்னங்கள் அனைத்தையும் தமிழ் நாட்டில் இருந்து அவ்வப்போது வந்து போன தமிழருக்குரிய பிரதியாகப் பார்ப்பது தமிழகப் பண்பாட்டின் பிரதேசத் தனித்துவத்தைத் தெரிந்த ஒருவருக்கு உடன்பாடாக இருக்காது. ஏனெனில் பரந்த தமிழகப் பண்பாட்டில் உள்ளோட்டமான ஒற்றுமைத் தன்மை காணப்பட்டாலும் அங்கு பண்டுதொட்டு ஊர், வட்டாரம், பிரதேசம் என்ற அடிப்படையில் சில தனித்துவமான பண்பாட்டு அம்சங்கள் தோன்றி வளர்ந்ததைக் காணமுடி கின்றது. சங்க கால ஐவகை நிலப்பிரிவு என்பது வெறும் புவியியல் வேறுபாட்டை மட்டும் காட்ட வில்லை. மாறாக மொழி, எழுத்து, கலை, இலக்கி யம், மதம், வணங்கிய தெய்வம், தொழில், சமூகம் என்பவற்றில் உள்ள தனித்துவமான வேறுபாட் டையும் சுட்டிச் செல்கின்றன. பல்லவர், பாண்டியர், சோழர் என்பது வேறுபட்ட வம்சப்பெயரை மட்டும் குறிக்கவில்லை. மாறாக அவர்கள் ஆட்சியில் ஏற் பட்ட பண்பாட்டு வளர்ச்சியையும் , வேறுபாட்டை யும், ஊர், வட்டாரம், பிரதேசம், காலம், வம்சம் என்ற அடிப்படையில் காணப்படும் பண்பாட்டுத் தனித்து வத்தையும் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த வேறுபாட்டை அவர்களின் ஆட்சிக் காலத்தில் படைக்கப்பட்ட ஆலயங்கள் , சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள்,

செப்புப்பட்டையங்கள் போன்ற தொல்பொருட் சின்னங்களில் தெளிவாகப் பார்க்கமுடிகின்றது. ஆகவே ஒன்றுபட்ட தமிழகத்திற்குள்ளேயே அவர்களின் பண்பாடு வேறுபட்டு வளர்ந்திருக்கும் போது, தமிழகத்தில் இருந்து விலகித் தனிநாடாக உள்ள ஈழத்தில் தோன்றி வளர்ந்த பண்பாட்டு விழுமியங்களைத் தமிழ்நாட்டவருக்குரிய பிரதியாக மட்டும் பார்ப்பதை எந்த வகையில் நியாயப்படுத்த முடிகிறது. இன்று ஈழத்தமிழரது மொழி, இலக்கியம், பேச்சுவழக்கு, நாட்டார்பாடல், நாடகம், கூத்து, என்பவற்றில் காணப்படும் பிரதேசத் தனித்துவத்தால் அவை யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வன்னி, மலையகம், என வட்டாரப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. தற்போது ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே தமிழரின் பண்பாடு வேறுபட்டிருக்கும் போது அந்தவேறுபாடும் தனித்துவமும் ஏன் பண்டைய காலத்தில் இலங்கை, தமிழகத்தில் இருந்து வேறுபட்ட ஒரு நாடு என்ற வகையிலாவது இருந்திருக்க முடியாது. இவ்வாறான வரலாற்றுப் பார்வையின் பின்னணியில் ஈழத்தமிழர் வரலாற்று மீள்கண்டுபிடிப்புக்களில் தொல்லியற் சின்னங்கள் பெறும் முக்கியத்துவத்தை நோக்கலாம்.

### தொல்பொருட் சின்னங்கள் காட்டும் தமிழரின் தொன்மை

ஈழத்தில் மனிததோற்றம் எப்போது ஏற்பட்டது என்பதில் இற்றை வரை ஒரு தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது. ஆனால் பிரித்தானியர் காலம் தொட்டுத் தற்காலம் வரை உள்ள பல தொல்லியலாளர் இங்கு பழைய கற்கால (Paleolithic Culture), புதிய கற்காலப் (Neolithic Culture) பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். இதற்கு வடஇலங்கையில் இரணைமடு போன்ற இடங்களில் கண்டுபிடிக்கபட்ட நூற்று இருபத்தையாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட மேலைப் பழங்கற்காலக் கல்லாயுதங்களும் (Upper Paleolithic Stone Tools) சான்றாக உள்ளன. இருப்பினும் இப்பண்பாட்டு மக்களது சமூகவியல், மொழியியல், மானிடவியல் சான்றுகள் மற்றும் சமகால இந்திய மக்களுடன் இருந்திருக்கக் கூடிய ஒற்றுமை என்பன இற்றைவரை சரிவர உறுதிப்படுத்தப்படவில்லை. இப்பண்பாட்டுக்குரிய மக்களைத் தொடர்ந்து இடைக்கற்கால அல்லது நுண் கற்காலப் பண்பாட்டிற்குரிய (Mesolithic Culture) மக்கள் இலங்கையில் மலைநாடு தொட்டுத் தாழ் நிலம் வரை வாழ்ந்ததை மாதோட்டம், மண்டக் கல்லாறு, பூநகரி, மாங்குளம், பலாங்கொடை, கித்துக்கொட, பெலன்பண்டிபாஷா, பொம்பரிப்பு, அநுராதபுரம் போன்ற இடங்களில் கிடைத்த நுண்கற்காலக் கருவிகளும், பிற தொல்பொருட் சின்னங்களும் உறுதிப்படுத்துகின்றன. இப் பண்பாட்டுக்குரிய மக்களை ஆதி ஒஸ்ரலோயிற் இனத்தவர் எனவும், இவர்கள் பேசிய மொழி ஆதி ஒஸ்றிக் எனவும் கூறப்படுகிறது. இப்பண்பாட்டிற்குரிய மக்கள் தொல்லியல், மானிடவியல், மொழியியல் அடிப்படையில் தென்னிந்தியாவின் தென் பகுதியுடன் குறிப்பாகத் தமிழகச் சேரிக் கலாசார மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு காணப்பட்டனர். தமிழ்நாட்டில் இப்பண்பாட்டின் தோற்ற காலம் கி.மு 32000 ஆண்டுகளாகவும், இலங்கையில் கி.மு 28000 ஆண்டுகளாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இவ் ஒற்றுமைகளை அடிப்படையாக வைத்து இப்பண்பாட்டுக்குரிய மக்கள் தமிழகத்தில் இருந்தே புலம்பெயர்ந்து வந்திருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. பாளி இலக்கியங்கள் வடஇந்தியாவில் இருந்து மக்கள் குடியேறுவதற்கு முன்னர், ஈழத்தில் வாழ்ந்த இயக்கர், நாகரை மனிதப்பிறவிகள் அற்ற அமானுஜர்கள் எனக் கூறுகின்றன. தொல்லியலாளர் இவ்வின மக்களே இடைக்கற்காலப் பண்பாட்டுக்குரியவர்களாக இருந்திருக்க வேண்டும் எனக்கருதுகின்றனர். இதை உறுதிப்படுத்தும் வகையில் கி.மு 3ஆம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கும் கல்வெட்டுக்களில் இயக்கர், நாகர் குலம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தற்போது ஈழத்தில் வழக்கில் உள்ள சில சொற்கள், பண்பாட்டு அம்சங்கள் இடைக்கற்காலப் பண்பாட்டு மக்களோடு தொடர்புடையவை எனக் கருதுவதற்கு நம்பகரமான சான்றுகள் உண்டு. இதனால் தற்போதைய சிங்கள, தமிழ் மொழி பேசும் மக்களது மூதாதையினரின் ஒரு பிரிவினரை இப் பண்பாட்டு மக்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

இடைக்கற்காலப் பண்பாட்டு மக்களைத் தொடர்ந்து கி.மு 800 இல் இருந்து பெருங் கற் காலப் பண்பாட்டிற்குரிய (Megalithic Culture) திரா விட இன மக்கள் ஈழத்தில் பரவலாக வாழ்ந்துள்ளார் கள் என்பதைக் கந்தரோடை, ஆனைக் கோட்டை, களபூமி, பூநகரி, மாந்தை, பொம்பரிப்பு, கேகாலை, அக்குறுகொட, கிளிவெட்டி, இலங்காத்துறை, அநு ராதபுரம், வவுனியா போன்ற இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தொல்லியற் சின்னங்கள் உறுதிப் படுத்துகின்றன. தென்னிந்தியாவைப் போல் ஈழத் திலும் இப்பண்பாட்டுடன் நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்புச் – சிவப்பு மட்பாண் டங்களின் பயன்பாடு, நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன ஏற்பட்டதை இப்பண்பாட்டு மக்களது ஈமச் சின்னங்களிலும் வாழ்விடங் களிலும் பெறப்பட்ட சான்றுகள் எடுத்துக்காட்டு கின்றன.

இப்பண்பாடு தென்னிந்தியாவில் மட்டுமன்றி தென்கிழக்காசியா, கிழக்காசியா போன்ற நாடு களிலும் பின்பற்றப்பட்டிருந்தமை அண்மைக் கால ஆய்வுகளால் தெரியவந்துள்ளன. ஆயினும் திராவிட மொழிகள் பேசும் மாநிலமான தென்னிந் தியாவில் இப்பண்பாடு தனித்துவமான சில அம்சங் களைப் பெற்றிருந்ததைத் தொல்லியலாளர் சான்றாதாரங்கள் காட்டி நிறுவியுள்ளனர். ஈழத் தைப் பொறுத்தவரை இப்பண்பாடும், மக்களும் தொல்லியல், மொழியியல், மானிடவியல் அம்சங் களில் தென்னிந்தியாவை ஒத்த பண்பையே கொண்டுள்ளன. அதிலும் வடஇலங்கையில் வளர்ந்த பெருங்கற்காலப் பண்பாடு தமிழ் நாட்டுடன் இணைந்த பிராந்தியமெனக் கருதும் அள விற்குத் தென்தமிழ் நாட்டிலுள்ள ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு பெருங்கற்காலப் பண்பாட்டை ஒத் துள்ளன. மாதோட்டத்தில் இடைக்கற்காலப் பண் பாடு மறைந்து பல நூற்றாண்டுகள் சென்றதன் பின்னரே பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. அதேவேளை யாழ்ப்பாணத்தின் முதற் குடியேற்றமாக பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய மக்கள் காணப்படு கின்றனர். ஆனால் அநுராதபுரம், பொம்பரிப்பு போன்ற இடங்களில் இடைக்கற்காலப் பண்பாட் டுக்குரிய மக்களைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் நோக் கும்போது தென்னிந்தியாவில் இருந்து மக்கள் புலப்பெயர்வும், பண்பாடும் ஒன்றாகவும், வேறு வேறாகவும் ஏற்பட்டிருக்க வேண்டும். காலப்போக் கில் அவை ஈழத்திற்கேயுரிய தனித்தன்மையுடன் வளர்ந்ததை இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய குறியீடுகளும், கலை வடிவங்களும் பிற தொல் பொருட் சின்னங்களும் உறுதிப்படுத்துகின்றன.

தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிவழிப்பண் பாடு தோன்றியது போல் இலங்கையிலும் சிங்கள, தமிழ் மொழி வழிப்பண்பாடு தோன்றியது என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. அவற்றை உறுதிப் படுத்தும் வகையில் பெருங்கற்கால மக்கள் பயன் படுத்திய மட்பாண்டங்களில் தமிழ் எழுத்துக் களும், தமிழ்ப் பெயர்களும் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடு தனித்தன்மையுடன் வளர்ந்திருந்தாலும் அம்மக் கள் பயன்படுத்திய எழுத்துக்களுடன் கூடிய மட் பாண்டச் சாசனங்கள் தமிழகத்தில் மட்டுமே (அரிக்கமேடு, காவேரிப்பூம்பட்டிணம், கொற்கை, விழுப்புரம், மாளிகைமேடு, வல்லம், பூம்புகார், கொடுமணல், அழகன் குளம்) இதுவரை கிடைத் துள்ளன. இவை பெரும்பாலும் தமிழ்ப் பிராமிய எழுத்தில் எழுதப்பட்டிருப்பதுடன் அவற்றில் வரும் பெரும்பாலான பெயர்கள் சங்க இலக்கியத்தில் வரும் பெயர்களாகக் காட்சியளிக்கின்றன. இந்தியாவில் தமிழகத்திற்கே சிறப்பான இந்த அம்சம் சமகால ஈழத்திலும் பயன்படுத்தப்பட்டதை மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய், ஈழவூர், வீரபாண்டியன் முனை (பூநகரி வட்டாரம்), அநுராதபுரம் அண்மையில் கந்தரோடை போன்ற இடங்களில் பெறப்பட்ட பெருங்கற்கால மட்பாண்ட எழுத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் பூநகரி வட்டாரத்தில் கிடைத்த மட்பாண்ட எழுத்துக் களின் காலம் கி.மு 3 – 2 ஆம் நூற்றாண்டு களைச் சேர்ந்ததென தமிழகத்தின் முதன்மைச் சாசனவியலாளர்களில் ஒருவரான ஐராவதம்

மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். ஒரு மொழி தோன்றிப் பல ஆண்டுகள் சென்றதன் பின்னரே அம்மொழிக்குரிய எழுத்துக்கள் தோற்றம் பெறு கின்றன. சில மொழிகளுக்கு எழுத்துக்கள் தோன் றாமல் போனதற்கும் சான்றுகள் உண்டு. ஈழத்தில் கி.மு 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்று கள் கிடைத்து வருவது இக்காலத்திற்கு முன்னரே தமிழ் மொழி பேசிய மக்கள் இங்கு வாழ்ந்ததைத் திட்டவட்டமாக எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு மேலும் ஆதாரமாக இப்பெருங்கற்காலப் பண் பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கி.மு 3ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ் மொழிக்குச் சிறப்பான "ஈ", "ம", "ள", "ழ", "ற", "ன" போன்ற எழுத்துக்களும் பருமகள், பருமகன், மருக, மருமகன், மருமான் , ஆய், வேள் போன்ற தமிழ்ப் பெயர்களும் காணப்படுகின்றன.

தென்ஆசியாவில் முதன்முதலில் ஆரிய மொழிகளில் பிராகிருதம் கல்வெட்டு மொழியாகப் பயன்படுத்திய போது அதற்குச் சமமாக திராவிட மொழிகளில் தமிழே முதற்கல்வெட்டு மொழியா கத் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டது. சமகாலத் தில் இதன் செல்வாக்கு ஈழத்திலும் இருந்துள் ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தமிழ் நாடு தவிர இந்திய மாநிலங்களில் அசோக பிராமி எழுத்துப் பயன்படுத்தப்பட்டபோது அதே காலப் பகுதியில் தமிழகத்திலும், இலங்கையிலும் மட்டும் தான் அசோக பிராமி எழுத்துடன் தமிழ் பிராமி எழுத் தும் பயன்படுத்தப்பட்டது. திராவிட மொழிகளில் முதலில் வளமான இலக்கியம் படைத்த பெருமை தமிழ்மொழிக்கேயுண்டு. இதற்குச் சங்க இலக்கி யம் சிறந்த எடுத்துக்காட்டாகும். இச்சங்க இலக்கி யத்தைப் படைப்பதில் ஈழத்துத் தமிழ்ப் புலவர் களும் பங்குகொண்டுள்ளமை சிறப்பாகக் கவனிக் கத் தக்கது. தென்ஆசியாவில் கி.மு 3ஆம் நூற் றாண்டில் இருந்து தமிழகத்தை அடுத்துத் தமிழ ரோடும், தமிழ் ஆட்சியாளரோடும் தொடர்புடைய நாடாக இலங்கை இருந்ததைப் பல்வேறு வர லாற்று மூலங்களில் இருந்து உறுதியாகத் தெரி கிறது. இவற்றையெல்லாம் ஒன்று திரட்டிப் பார்க்கும்போது சிங்களமொழி படிப்படியாக உரு வாக்கம் பெறுவதற்குக் காரணமாக இருந்த பாளி, பிராகிருத மொழிகள் ஈழத்தில் பயன்படுத்தப்பட முன்னரே தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் ஈழத்தில் வாழ்ந்துள்ளார்கள் என்பது வெளிச்சமாகின்றது.

* * *

தோல்விக்கான காரணங்கள் தெரியாவிட்டால் அதை விதி விதி என்று சொல்லாதீர்கள், அப்படியே அது விதிதான் என நம்பினாலும் உங்கள் உறுதிமிக்க செயலால் விரைந்து சென்று விரட்டியடியுங்கள்.

*– எமர்சன்*

---

உலகிலேயே மிகப்பெரிய குற்றம், உழைக்காமல் வாழ்வதுதான். உலகிலேயே மிகப் பெரிய மனிதன் கருணையுடன் நடந்து கொள்கிறவன். பிற உயிர்களிடம் அன்பு காட்டி மனிதத் தன்மையுடன் வாழ்கிறவனே உண்மையான பெரிய மனிதன்.

*– நபிகள் நாயகம் (ஸல்)*



# யமுனா ஏரி - யாழ்ப்பாண அரசு கால நினைவுச் சின்னம்

**செல்வி சசிதா குமாரதேவன்**
தொல்லியல்
உதவி விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கை வரலாற்று இலக்கியங்களில் பண்டுதொட்டுத் தனித்து அடையாளம் காணப்பட்ட பிராந்தியங்களில் யாழ்ப்பாணத்திற்குத் தனியிடமுண்டு. இலங்கையின் முதல் பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் இப்பிரதேசத்தை நாகதீபம் எனவும், சற்றுப் பிற்பட்ட காலத் தமிழ் இலக்கியங்களான மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் நாக்நாடு எனவும் அழைக்கின்றன. இதை வல்லிபுரத்தில் கிடைத்த கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனமும், 1262 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியச் சாசனமும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு 2500 ஆண்டுகால வரலாறு யாழ்ப்பாணத்திற்கு இருப்பினும் இப்பிரதேசத்தின் பழைமையை எடுத்துக்காட்டும் நினைவுச் சின்னங்கள் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. இதற்கு யாழ்ப்பாணத்தின் பூர்வீக வரலாற்று மையங்கள் இருந்த இடங்களை இன்று மக்கள் குடியிருப்புக்களும், அரச கட்டடங்களும் ஆக்கிரமித்துக் கொண்டதே முக்கிய காரணமாகும். இதனால் எமது பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் மண்ணோடு மண்ணாக மறைந்து காணப்படுகின்றன. அவற்றுள் எஞ்சியுள்ள நினைவுச் சின்னங்கள் ஒரு சிலவாகும். அவற்றுள் ஒன்றே யாழ்ப்பாண அரசு காலத்தை நினைவுபடுத்தும் ஜமுனா ஏரியாகும். அது பற்றி விளக்குவதே இக்கட்டுரையாகும்.

ஆசியாவில் பல இன, மத, மொழி, பண்பாடு கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அவர்களுள் தமிழ், சிங்கள மொழி பேசும் மக்களுக்குத் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. இருப்பினும் சிங்கள மக்களோடு ஒப்பிடும்போது தமிழரின் பண்டைய வரலாறு மிகத் தொய்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. இதற்கு தமிழ்நாட்டுத் தமிழரைப்போல் இலங்கைத் தமிழரிடையே கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரை வரலாற்று இலக்கிய மரபு தோன்றாதிருந்தமை முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. இருப்பினும் சமீப காலங்களில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளால் இலங்கைத் தமிழரின் பண்டைய வரலாற்றிற்குப் புது வெளிச்சமூட்டும் அரிய பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இச்சான்றுகள் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து மொழியடிப்படையில் தமிழர் ஒரு இனக் குழுவாக வாழ்ந்து வருகின்றனர் என்பதற்குச் சான்றாக அமைகின்றன. பொதுவாக இலங்கைத் தமிழரிடையே கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பின்னரே அரச மரபு தோன்றியதென்ற கருத்து நீண்டகாலமாக இருந்து வந்தது. ஆனால் சமீப கால ஆய்வுகள் தமிழ் நாட்டைப் போல் சங்க காலத்திற்குச் சமகாலத்தில் இருந்தே இலங்கைத் தமிழரிடையே இனக் குழுத்தலைவர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்களின் ஆட்சி இருந்தமை தெரிய வந்துள்ளது. அண்மையில் தென்னிலங்கையில் இராஜாவிக்கிரமசிங்கே மற்றும் ஒஸ் மன்பொபி ஆராய்ச்சி ஆகியோர் இணைந்து மேற்கொண்ட ஆய்வின்போது கிடைத்த நாணய ஆதாரங்களில் இருந்து கி.மு. 2ஆம் நூற்றாண்டில் சடநாகராசன் என்ற தமிழ் மன்னன் ஆட்சி தென்னிலங்கையில் இருந்தமை தெரிய வந்துள்ளது. இவ்வரலாற்றுப் பின்புலம்தான் 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் நல்

லூரைத் தலை நகராகக் கொண்ட சுதந்திரத் தமிழ் இராசதானி ஒன்று எழுச்சி பெறக் காரணமாக இருந்ததெனக் கூறலாம்.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி ஈழத்து வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இக்காலத்தில் தமிழரின் ஆதரவோடு பொலன்னறுவையிலும், பின்னர் வட இலங்கையிலும் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், சாவகன் ஆகியோர் ஆட்சி சிங்கள மக்களுக்குப் பாதகமாகவும், தமிழருக்குச் சாதகமாகவும் இருந்ததால் 1300 ஆண்டுகளுக்கு மேல் இராஜரட்டையில் செழிப்பற்றிருந்த சிங்கள இராசதானியும், சிங்கள மக்களும் பாதுகாப்பிற்காக தம்பதேனியா, யாப்பகூவ, குருணாகல், கம்பளை, கண்டி, கோட்டை போன்ற இடங்களை நோக்கி நகர்ந்தபோது வட இலங்கையில் தமிழருக்குத் தனியரசு உருவானது. இருப்பினும் வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த சாவக மன்னன் தொடர்ந்தும் சிங்கள இராசதானிக்கு எதிராகப் படையெடுத்ததால் சிங்கள மன்னர் பாண்டியரின் உதவி பெற்று சாவகனை வெற்றிகொள்ள முனைந்தனர். இதன் அடிப்படையில் சிங்கள மன்னர்களுக்குச் சார்பாக 1260 அளவில் வீரபாண்டியன் தலைமையில் ஒரு படை நாகநாடான வடஇலங்கை மீது படையெடுத்து சாவகனைக் கொன்றது. ஆனால் சாவகனின் மைந்தன் பாண்டியருடன் சமாதானம் செய்து கொண்டதால் பாண்டியர் நாகநாட்டு அரச கொடி பறந்த திருகோணமலையில் தமது கொடியைப் பறக்கவிட்டு சாவகனின் மகனைத் தொடர்ந்து ஆட்சியில் இருக்க அனுமதித்ததாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலை என்ற இடத்தில் உள்ள பாண்டியரது 1262ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது. இருப்பினும் சமகாலத்தில் தமிழகத்தில் இஸ்லாமியரின் ஆதிக்கம் வலுப்பெறத் தொடங்கியதால் தமிழகத்தில் இழந்த பாண்டிய அரசை மீட்பதற்காக வட இலங்கை மீது படையெடுத்த பாண்டியப் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் இராசதானியை 13 ஆம் நூற்றாண்டின பிற்பகுதியில் உருவாக்கினர். இவ்வரசே சமகால, பிற்காலத் தமிழ் சிங்கள இலக்கியங்களிலும், போர்த்துக்கேய ஒல்லாந்த ஆவணங்களிலும் சிங்கை, சிங்கைநகர், நல்லூர், யாப்பாபட்டுன என அழைக்கப்படுகிறது. இவ்வரசே ஏறத்தாழ 350 ஆண்டுகள் அதாவது 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வட இலங்கையிலும், கிழக்கிலங்கையின் சில பகுதியிலும் மேலாதிக்கம் செலுத்தியது.

யமுனா ஏரி

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது இங்கு கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்னும் மூன்று இராசதானிகள் இருந்ததாகவும் அதில் யாழ்ப்பாண மன்னன் பொருள் வளத்திலும், இராணுவ பலத்திலும் மேலோங்கியிருந்ததாகவும் அவர்களது ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரசு தொடர்பாகப் பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் முதலான தமிழ் இலக்கியங்கள் யாழ்ப்பாண அரசர்கள் பற்றியும், அவர்களது சாதனைகள், மக்கள் குடியேற்றங்கள் பற்றிப் பல தகவல்களைத் தருகின்றன. அவ்விலக்கியங்கள்தான் யாழ்ப்பாண அரசின் முதல் தலைநகரைச் சிங்கை அல்லது சிங்கை நகர் எனக் குறிப்பிடுகின்றன. அதில் கனகசூரியனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அவன் மகன் சிங்கைப் பரராசசேகரன் என்பவனே சிங்கை என்னும் பெயரைத் தலைநகருக்குரிய பெயராகப் பயன்படுத்தினான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் காலத்தில்த்தான் யமுனா ஏரியும் கட்டப்பட்டதென்ற கருத்துண்டு.

இவன் தந்தையிலும் சிறந்தவனாய் நகருக்கு வடபாலில் சட்டநாதர் திருத்தளியையும், குணபாலில் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்தையும், தென் திசையில் கைலாசநாதர் ஆலயத்தையும், குட திசையில் வீரமாகாளி அம்மன் திருப்பதியையும் கட்டுவித்துத் தன் தலைநகரை முன்னையிலும் மணி பெற விளங்க வைத்தான். இவன் தனது சமய ஆர்வ மிகுதியினால் தானும் குடிமக்களும் நன்மை பெறக் கருதி

1478 இல் வட இந்தியாவின் யமுனை ஆற்றில் இருந்து திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளில் கொண்டுவந்து இங்கு ஓர் ஏரி அமைக்கப்பட்டு அவ் ஏரிக்குள் அப்புனித நீர் பெய்விக்கப் பட்டது. சங்கிலித்தோப்பு கல்தோரண வாசலுக்கு கிழக்கே சில யார் தூரத்தில் இந்த யமுனா ஏரி அமைந்துள்ளது. யாழ்ப்பாண வைபவமாலை யில் இவ் ஏரிக்கு இடப்பட்ட பெயருக்கான காரணம் பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. வட இந்திய யமுனை நதியின் தீர்த்தம் வருவிக்கப்பட்டு தலைநகர அந்தஸ்து டைய நல்லூரில் அமைக்கப்பட்ட ஏரியில் கலப் பித்து விட்ட நிலையில் அரச அந்தஸ்துடனாக் கப்பட்ட ஏரியாக யமுனா ஏரி பெயரிடப்பட்ட மையைக் காணலாம்.

பகர வடிவினதான இவ் ஏரி "யமுனாரி" எனவும் அழைக்கப்படுகின்றது. வயல் வெளி களையும், தென்னந்தோப்புக்களையும் சூழ வரக் கொண்டுள்ள இவ்வேரியைச் சுற்றித் தற் போது பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளதினால் கிட்ட அணுகுவது கடினமானதாகும். இருப்பி னும் இதன் அமைப்பும் கட்டடப் பொறிநுட்பமும் அக்காலத் தமிழ் மன்னர்களின் தொழில்நுட்பத் திறனினை எடுத்துக்காட்டுகின்றன. இவ் ஏரி பொழிந்த முருகைக் கற்களையும், வெள்ளைக் கற்களையும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக் கேணிக்குள் இறங்கிச் செல்ல வசதியாகச் சிறிய படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆபத் தான காலங்களில் அரசர்கள் தமது சொத்துக் களை இவ் ஏரியில் போட்டுவிட்டு ஓடியதற்கு ஆதாரங்கள் உள்ளன.

1992 களில் இவ் ஏரிக்குள் கண்டுபிடிக்கப் பட்ட மரத்தாலான அம்மன் சிலை இதற்குச் சிறந்த சான்றாகும். இவ் ஏரியில் அரசர்கள் தமது பாதுகாப்புக் கருதிச் சுரங்கங்களை அமைத் ததாகக் கூறப்படுகின்றது. அச்சுரங்கங்களில் ஒன்று மந்திரிமனையுடன் தொடர்புடையதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் இயற்கை அரண் இல்லாத யாழ்ப்பாணத்தில் அக்கால அரசர் கள் தமது பாதுகாப்புக் கருதி சுரங்கப் பாதை களையும், இயந்திரப் பொறிகளையும் அமைத் திருந்தனர் எனக் கூறுவதில் வியப்பில்லை. இவ் ஏரியைச் சுற்றிச் சில கட்டடத் தொகுதிகள் இருந்திருக்கலாம் என்பதை இங்குள்ள செங்கட்டி கள், கலை வேலைப்பாடுடைய சுண்ணாம்புச் சாந்தினால் ஆன தூண்கள். பழைமையான ஓடுகள், மட்பாண்டங்கள் என்பன உறுதிப்படுத்து கின்றன.

யமுனா ஏரியின் தோற்றம் யாழ்ப்பாண அரசு காலத்தில் தான் தோன்றியது? என்ப தற்கு உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஏனெனில் யமுனா ஏரி அமைந்த பிரதேசம் யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மக்கள் நடமாட்டத்திற்குரிய பிரதேச மாக இருந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இப்பிரதேசத்தில் கண்டுபிடிக் கப்பட்ட லஷ்மி நாணயங்கள் மற்றும் உரோமர் கால நாணயங்கள் இற்றைக்கு 1500 ஆண்டு களுக்கு முன்னரே இவ்விடத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேச வணிக உறவுகள் இருந்ததற் குச் சான்றாக அமைகிறது. மேலும் யமுனா ஏரிக்கு மேற்கே நாயன்மார்கட்டு, மணியந் தோட்டம், அரியாலை கிழக்கு ஆகிய பகுதி களில் கிடைத்த புராதன குடியிருப்புகளுக் குரிய தொல்லியற் சின்னங்கள் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே இப்பிரதேச மக்கள் நடமாட்டத்திற்குரிய பகுதியாக இருந்ததைக் காட்டுகிறது. இதனால் யமுனா ஏரி யாழ்ப் பாண அரசிற்கு முன்னரே இயற்கையாக அல்லது செயற்கையாகத் தோன்றியிருக்க வாய்ப்புண்டு. அது சிலவேளை யாழ்ப்பாண அரசு காலத்தில் அரசின் புனித தீர்த்தமாக மாற்றப்பட்டிருக்கலாம். அதேவேளை தற்போ துள்ள யமுனா ஏரியின் கட்டடத் தொழில்நுட்ப முறை யாழ்ப்பாண அரசு காலத்தொழில்நுட்ப முறையில் கட்டப்பட்ட கட்டடம் எனவும் திட்டவட்ட மாகக் கூறமுடியாது. ஏனெனில் அது தமிழ ரின் புனித சின்னமாகக் கடந்த 400 ஆண்டு கால வரலாற்றில் போற்றப்பட்டதால் அவ் ஏரி சீரழிந்து போகாதிருக்கக் காலத்திற்குக் காலம் பல தடவைகள் மீளமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அதனால் அதன் உண்மைத்

தோற்றத்திலும் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. யாழ்ப்பாண அரசு காலத்தில் யமுனா ஏரி சமய முக்கியத்துவம் வாய்ந்த புனித இடமாகவும், அரச மகளிர் நீராடும் அந்தப்புரமாகவும் விளங்கியதாக ஐதீகங்கள் உண்டு. ஆனால் ஐரோப்பியர் ஆட்சியில் இது வேறுபட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டதாகக் கருத்துக்கள் உண்டு. எவ்வாறாயி னும் இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பி ருந்தே யாழ்ப்பாண அரசுடன் இவ் ஏரி தொடர்பு படுத்திப் போற்றப்படும் வரலாற்று நினைவு (Historical Memory) காணப்படுவதால் இவ்வேரிக் கும் யாழ்ப்பாண அரசுக்கும் ஒரு நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டு என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

இலங்கையின் புராதன தலைநகரங் களான அநுராதபுரம், பொலன்னறுவை போன் றவை மறைந்து இற்றைக்கு 1000 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆயினும் அவற்றின் நினைவுச் சின்னங்கள் அழிந்து போகவிடாது பாதுகாக் கப்பட்டு வருகின்றன. அவ்விடங்களைக் காண வரும் வெளிநாட்டவருக்கும் அவை இவ்விடங் களில் வாழ்ந்து மறைந்துபோன பௌத்த சிங்களப் பண்பாட்டின் அடையாளச் சின்னங் களாகக் காட்சியளிக்கின்றன. அவை சிங்கள மக்களிடையே வரலாற்று உணர்வும், பண் பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆவலையும் வளர்ப்பதற்குக் காரணமாக உள் ளன. ஆனால் கடந்த 400 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரின் இராசதானியாக இருந்த நல்லூரில் தமிழரின் பண்பாட்டை அடையாளப் படுத்தும் ஒரு நினைவுச் சின்னம் தானும் இது வரை முறையாகப் பாதுகாக்கப்பட்டு அடை யாளப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் யாழ்ப் பாண அரசுடன் தொடர்புடைய எஞ்சியுள்ள யமுனா ஏரி போன்ற நினைவுச் சின்னங் களையாவது பாதுகாத்து எதிர்கால மக்களிடம் வரலாற்று உணர்வை வளர்ப்பது நம் எல் லோரினதுன் கடமையாகும்.

◆ ◆ ◆

## நட்சத்திரம் 27

| | | |
|---|---|---|
| 1. அசுவினி | 10. மகம் | 19. மூலம் |
| 2. பரணி | 11. பூரம் | 20. பூராடம் |
| 3. கார்த்திகை | 12. உத்திரம் | 21. உத்திராடம் |
| 4. உரோகிணி | 13. அத்தம் | 22. திருவோணம் |
| 5. மிருக சீரிடம் | 14. சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. சுவாதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. விசாகம் | 25. பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுஷம் | 26. உத்திரட்டாதி |
| 9. ஆயிலியம் | 18. கேட்டை | 27. இரேவதி |

## திதி பதினைந்து

| | | |
|---|---|---|
| 1. பிரதமை | 6. சட்டி | 11. ஏகாதசி |
| 2. துவிதியை | 7. சத்தமி | 12. துவாதசி |
| 3. திரிதியை | 8. அட்டமி | 13. திரியோதசி |
| 4. சதுர்த்தி | 9. நவமி | 14. சதுர்த்தி |
| 5. பஞ்சமி | 10. தசமி | 15. பௌர்ணமி/அமாவாசை |



# ஒலிம்பிக் வரலாறு பற்றிய ஒரு கண்ணோட்டம்

சு. இளங்கோவன்
ஆசிரியர் / யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்

கிரேக்க நகரில் முதலில் தோன்றிய விளையாட்டுக்கள் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் எனப் பெயர் பெறும். இப்போட்டிகள் கி.பி 6ம் நூற்றாண்டு வரை கிரேக்க நாட்டில் நடைபெற்றன. உலகின் அனைத்து நாடுகளும் ஒன்று சேரும் ஓர் மையமாகவும்பல கோடானகோடிரசிகர்களையும்ஆயிரக்கணக்கான வீர வீராங்கனைகளைக் கொண்டதும் 4வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிறப்பு அடையும் புது மலராகவும்பிரபல்யம்வாய்ந்த ஒரு விளையாட்டுப்போட்டியாகவும் இவ் ஒலிம்பிக்கானது காணப்படுகிறது.

ஒலிம்பியாவில் 'பிலோப்சு' (Pelops) என்பவரால் கி.மு 1370ல் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகள் 33 நூற்றாண்டுகளாக நடைபெற்றதற்கான சான்றுகள் உள்ளன. இருப்பினும் 9 ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இவை மறையத் தொடங்கின. எலிசு (Elis) நாட்டைச் சேர்ந்த 'கிங் இபிடாசு' என்பவர் அவ் விளையாட்டுக்குப்புத்துயிர் அளித்தார். அதனால் "ஒலிம்பிக் அமைதி" (Olympic Peace) எனப்படும் போர் நிறுத்த ஒப் பந்தம் கிரேக்க நாடுகளிடையே ஏற்பட்டது. கிரேக்க மக்கள் தங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த வேறுபாட்டையும் போர் மனப்பான்மையையும் மறந்து போட்டிகளில் பங்கேற்றனர். வெற்றியீட்டியவர்களிற்கு எண்ணற்ற மக்களின் ஒருமித்த பாராட்டும் ஒலிவ்மர இலையினாலான கிரீடமும்,தான் பரிசாக வழங்கப்பட்டது. ஒலிம்பிக், 4 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெற்று வெற்றி பெற்ற வீரரது பெயர் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது.

கிரேக்க நாட்டில் உள்ள ஒலிம்பியா நகரில் இப்போது "நவீன ஒலிம்பிக் கலைக்கழகம்" (Modern Olympic Academy) என்றழைக்கப் படும் மையம் இயங்கி வருகின்றது.

ஒலிம்பியாவில் கி.மு 776 முதல் நடைபெற்ற முதல் ஒலிம்பிக் விளையாட்டிலிருந்து கி.மு 728ல் நடைபெற்ற 13 ஆம் விளையாட்டுக்கள் வரை ஒரே நாளில் விளையாட்டரங்கப் பந்தயம் or ஒரு வழி ஓட்டம் மட்டும் நடைபெற்றன. பின்னர் நீண்டதூர ஓட்டமும், எறிதல், தாவுதல் போன்ற தடகளப் போட்டிகளும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடும் குத்துப்போர், மற்போர் போன்ற போட்டிகளும் சேர்க்கப்பட்டுப் பல நாட்கள் நடைபெற்றன. முதலில் கிரேக்கர்களுக்கு மட்டும் என்றிருந்த நிலை பின்னர் மாறுதலடைந்து கிரேக்கர்கள் சிசிலியர், கிரீடர் என்ற மற்ற இனத்தவரும் போட்டியில் பங்கேற்றனர். பிற்காலத்தில் விளையாட்டுப் போட்டி கைவிட்டுமாறி அவை சீர்குலையத் தொடங்கின. (உ+ம்) கி.பி 65ல் நடைபெற்ற போட்டியில் நீரோ தன்னோடு போட்டியிட இருந்த அனைவரையும் போட்டியிலிருந்து விலகிக்கொள்ள கட்டாயப்படுத்திப் பின் வெற்றி பெற்றதாகும்.

## நவீன ஒலிம்பிக்

ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்குப் புத்துயிர் கொடுத்து மறுமலர்ச்சி அடையச் செய்த பெருமை ஒலிம்பிக் விளையாட்டுக்களின் தந்தை என்றழைக்கப்படும் பிரான்சு நாட்டை சேர்ந்த 'பியாரி டி குபெர்டினைச்' சாரும். பண்டைய ஒலிம்பிக் விளையாட்டுக்கள் தடைப்பட்டுச் சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின் இவ் விளையாட்டுக்களைப் புதுப்பிக்கும் முயற்சிகள் வெற்றி பெற்றன. இதற்கேற்ப அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குழு (International Olympic Committee) அமைக்கப்பட்டு கி.பி 1896ல் எதென்சில் முதல் நவீன கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஒலிம்பிக் பந்தயங்கள் 4 ஆண்டுக்கு ஒரு முறை செவ்வனே நடத்த விளையாட்டையும், போட்டி நடத்தும் அனைத்து அமைப்பையும் ஊக்குவிக்கவும் உலக நாடுகளிலுள்ள விளையாட்டு வீரர்களிடையே நட்புறவைப் பேணுவதற்கும் ஆவண செய்ய ஒலிம்பிக் அமைப்பு செயற்படுகிறது. இதற்கு முக்கிய 3 பிரிவுகள் உள்ளன.

1. அனைத்து நாடுகளின் ஒலிம்பிக் குழு.
2. அனைத்து நாடுகளின் விளையாட்டுக் கழகங்களின் கூட்டமைவு.
3. தேசிய ஒலிம்பிக் குழு.

**ஒலிம்பிக் சட்டங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.**

- ✻ வயது வரம்பு இல்லை.
- ✻ ஒரு நாட்டின் குடியுரிமை பெற்றவர்களே அந் நாட்டின் மூலம் பங்கேற்கலாம்.
- ✻ ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு போட்டிக்கும் அதிகளவாக 3 விளையாட்டு வீரர்களை அனுப்பலாம்.
- ✻ மதம், இனம், அரசியல் போன்ற வேறுபாடுகள் காட்டப்படமாட்டா.
- ✻ 16 நாட்களில் அனைத்துப் போட்டிகளும் முடிவடையவேண்டும்.
- ✻ போட்டிகள் தனி விளையாட்டு வீரர்களிடையே நடைபெறுமாகையால் (நாடுகளிற்கிடையிலல்ல) வெற்றிப் புள்ளிகள் கணக்கிடப்படமாட்டாது.
- ✻ ஒலிம்பிக் விளையாட்டுக்களை நடத்துகின்ற உரிமை ஒரு நகருக்குத்தான் வழங்கப்படுமே அன்றி அந் நாட்டிற்கன்று.
- ✻ ஒலிம்பியேடின் (Olympiyad) முதல் ஆண்டிலேயே ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெற வேண்டும்.

**ஒலிம்பிக்கின் அடிப்படைக் கொள்கை**

4 ஆண்டுக்கு ஒரு முறை பொழுது போக்கிற்கும், மன மகிழ்ச்சிக்குமாகப் போட்டியிடுபவர்களே பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர். விளையாட்டு நடைபெறாமலிருக்கலாம். ஆனால் அதன் கால அளவு மாறாது. ஒலிம்பிக் விளையாட்டு எதென்சு நகரில் கி.பி 1896ல் நடைபெற்ற அவ் ஆண்டிலிருந்தே ஒலிம்பியேடுகள் கணக்கிடப்படும் ஆண்டாகக் கொள்ளப்படும். அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குழு தான் ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெறும் இடத்தை முடிவு செய்யும்.

ஒலிம்பிக் போட்டிகளில் முதலிடம் பெற்றுப் பதக்கம் பெறுவதை விட இப்போட்டியில் பங்கு பற்றுவதே வீரர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. அது மட்டுமன்றி நாடுகளிற்கிடையேயுள்ள வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமையை நிலைநாட்டுவதும் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

1920ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒலிம்பிக் கொடியில் 5 வளையமும் ஒன்றோடொன்று பின்னியிருப்பது போன்ற ஒவ்வொரு நாடும் இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்துக் கூறப்பட்டது.

நவீன ஒலிம்பிக்கின் கொள்கைச் சொற்றொடரை நோக்கின் லிட்டியஸ், அலடியஸ், ஃபோடியஸ் இதன் பொருள் அதிவேகம், அதிஉயர்வு, அதிவலிமை என்பனவாகும்.

பரிஸ்'க்கு அருகிலுள்ள ஒரு பாடசாலைத் தலைமை ஆசிரியரான 'ரெவண்ட் பாதர்யுடான்' என்பவர் இச் சொற்றொடரைப் பயன்படுத்தினார். அவரது நன்பரான 'பியரேடி பெர்டின்' இதை ஒலிம்பிக் விளையாட்டிற்குப் பயன்படுத்தினார்.

மேலும் இவ் ஒலிம்பிக்கின் நோக்கமாக உலகிலுள்ள அனைத்து மக்களையும் 4 வருடத்திற்கொருமுறை ஒன்று சேர்த்து அவர்களது திறமைகளை வெளிக்காட்டுவதும் வெளிக்காட்டும் திறமைகளை ரசிப்பதும், வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவிப்பதுமாக அமைகின்றது.

மேலும் ஆரம்ப கால ஒலிம்பிக்கில் (1896) பெண்களிற்கு இடமில்லை என்று கூறிவிட்டனர். ஆனால் 1900ல் நடைபெற்ற இரண்டாவது நவீன ஒலிம்பிக்கில் பெண்களிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இது நோக்கத்தின் அடுத்த படியாகும். இதில் டென்னிஸ், கோஃப், வில்வித்தை என்னும் 3 விளையாட்டுக்களில் பங்குபற்ற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு நவீன ஒலிம்பிக்கின் நோக்கமானது எத்திசையெங்கும் பரந்து விரிந்து காணப்படுகின்றது. நவீன ஒலிம்பிக்கின் அமைப்பினை நோக்கின் ஒலிம்பிக்வீரரின் சத்தியப் பிரமாணம், ஒலிம்பிக் கொடி அவற்றில் காணப்படும் 5 வளையங்களின் நிறம், அவை குறிக்கும் நாடுகள், ஒலிம்பிக் நீதி வாக்கியம் என்பன உள்ளடங்கலாக காணப்படும்.

ஒலிம்பிக் போட்டியின் தொடக்கத்திலே கொடியேற்றப்பட்டு உறுதி மொழி எடுக்கும் சம்பிரதாயம்

உண்டு. 1913ல் ஒலிம்பிக் கொடி உருவாக்கப்பட்டு 1920ல் நடைபெற்ற விளையாட்டு அரங்கத்தில் தான் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இக் கொடி வெண் கலப்பட்டாலான துணி. இதில் இடமிருந்து வலம் நீலம் (ஐரோப்பியா), மஞ்சள் (ஆசியா), கறுப்பு (ஆபிரிக்கா), பச்சை (அமெரிக்கா), சிவப்பு (அவுஸ் திரேலியா) என 5 கண்டங்களும் 5 வர்ணங்களில் ஒன்றோடொன்று பின்னிய நிலையிலும் 5 வர்ணங்கள் பல நாட்டுக் கொடிகளையும் குறிப் பிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் விளக்கு 1928ல் ஆம்சுடர்டாமில் நடைபெற்ற 9ம் விளையாட்டில் முதன் முதலில் உரிய சடங்குடன் ஒலிம்பிக் விளையாட்டின் போது ஏற்றிவைக்கப்பட்டது.

மேலும் ஒலிம்பிக் போட்டியானது 16-17 நாள்வரை ஒரு தொடராக நடத்தப்படுகின்றது. 1916, 1940, 1944ல் 1ம், 2ம் உலகப் போர் காரண மாக ஒலிம்பிக் நடைபெறவில்லை.

ஒலிம்பிக் விளையாட்டில் பல இடையூறுகளும் காணக்கிடக்கின்றது. ஜேர்மனி நாட்டில் மியூனிச் சில் 1972ல் நடைபெற்ற 20ம் ஒலிம்பிக்கின் போது பலஸ்தீனிய தீவிரவாதிகள் 11 இஸ்ரவேல் வீரர்களைக் கொன்று விட்டனர். ரசியா, அமெரிக்கா ஆகிய 2 வல்லரசு நாடுகளும் இப்போதுள்ள அரசியல் பின்னணியில் பங்கு கொள்ளாமை என்ற ஓர் இயக்கத்தை உருவாக்கியுள்ள நிலை மையும் ஏற்பட்டிருந்தது.

* மேலும் நவீன ஒலிம்பிக்கின் வளர்ச்சியின் போது 1900 ஆம் வருடம் தங்கப்பதக்கம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1913ல் ஐந்து கண்டங்களைக் குறிக்கும் ஐந்து வலயங்கள் இணைந்த ஒலிம்பிக் இலச்சினை அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1924ல் ஒலிம்பிக் நீதி வாக்கியம் (Olympic Motto) அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1894ல் IOC அதாவது International Olympic Committee என்ற குழு ஒன்று அமைக்கப்பட்டது.
* முதன் முதலாக ஒலிம்பிக் தீபமானது பெண் ஒருவராலேயே ஏற்றப்பட்டது, கெதிஃபீரிமன். பாலஸ்தீனம் முதன் முதலாக பங்கு கொண் டது. இதில் இரண்டு வீரர் பங்கு கொண்டனர். அதில் ஒருவர் பெண் ஆவார். ஏன் சிட்னியில் 2000ம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலாகப் பெண் ஒருவ ராலேயே ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது.

மேலும் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் புதிய தலைவராக பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த 'ஜாக்கி யுஸ் ரோஜ்' தெரிவு செய்யப்பட்டுள்ளார். விளை யாட்டுலகில் மிகச்சக்தி வாய்ந்த பதவியாக சர்வ தேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் பதவி கருதப்படு கிறது. முன்னாள் IOC இன் தலைவர் 'அன்ரா னியோ சமரஞ்' தனது 81வது வயதில் ஓய்வு பெற்றதன் பின் IOC இன் 8வது தலைவராக 'ஜாக்கியுஸ்ரோஜ்' 2001 ஜூன் மாதம் 16ம் திகதி நடைபெற்ற இப் பதவிப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது IOC அமைப்பில் 125 உறுப்பினர் அங் கம் வகிக்கின்றனர். இவர்களுள் 6 பேர் முன்னாள் உறுப்பினரின் வாரிசுகளாகவும் உள்ளனர்.

2000 ம் ஆண்டில் 27வது ஒலிம்பிக் போட் டிகள் அவுஸ்ரேலியாவின் தலைநகர் சிட்னியில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. இதில் 199 நாடுகள் பங்குபற்றின. இதில் ஆண்வீரர்கள் 6585 பேரும் பெண் வீராங்கனைகள் 4069 பேருமாக மொத்தம் 10651 பேர் பங்கு கொண் டனர். மொத்தம் 300 போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியை உலகம் முழுவதும் 6 மில்லியன் மக்கள் கண்டு களித்தனர். இதில் ஒரு இலட்சம் மக்கள் நேரடியாக அரங்கில் கண்டு களித்தனர்.

அடுத்து 28வது ஒலிம்பிக் போட்டி 2004ம் ஆண்டில் ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்கத் தின் தலைநகரான எதென்சில் ஒலிம்பியாக் கிரா மத்தில் ஆரம்பமானது. இவ் ஒலிம்பிக்கின் சின் னங்களாக "தெனா", "வீவேவொஸ்" எனும் கிரேக்க கடவுள்களின் உருவங்களே தெரிவு செய்யப்பட்டன. இப் போட்டியில் 202 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கு கொண்டார்கள். இவ் ஒலிம்பிக் போட்டியில்

17300 வீர வீராங்கனைகள் பங்கு பற்றினர். பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் உலக சாதனையை நிகழ்த்தியவர் அமெரிக்க வீராங்கனை "ஜோனா ஹேறாவாய்" ஆவார்.

அத்தோடு பெருந்தொகையான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டது. இவ் விளையாட்டு விழாவிற்கு 115 இலட்சம் உணவுப் பொதிகள் தயாரிக்கப்பட்டது. மொத்தச் செலவாக 116 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்பட்டது. 2004 ஒலிம்பிக் போட்டியில் வெடிகுண்டுப் புரளி ஏற்பட்டதன் காரணமாகப் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டது.

ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்காவும் ரஷ்யாவும் சவால் விடும் நாடுகளாக விளங்கின. தற்போது சீனாவும் அந்நிலையை எட்டியுள்ளது.

2008ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டி பீஜிங் மாநகரில் ஓகஸ்ட் மாதம் 8ம் திகதி இரவு பீஜிங் நேரம் 8.08 க்கு ஆரம்பமானது. இப் போட்டிகளில் 204 நாடுகள் பங்குபற்றின. 302 பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றது. இப் போட்டியில் அமெரிக்க நீச்சல் போட்டி வீரரான "மைக்கல் பொப்ஸ்" 8 தங்கங்களைப் பெற்று உலக சாதனையை நிலைநாட்டினார். இப் போட்டியில் உலகின் அதி வேக வீரராக 'ஜமேக்கா' நாட்டைச் சேர்ந்த 'உசையின் போல்ட்' தெரிவு செய்யப்பட்டார். இவ் ஒலிம்பிக் போட்டியை 440 கோடி பேர் கண்டு களித்தனர்.

இவ் 29வது ஒலிம்பிக் போட்டியில் சீனா அதிகபட்சமாக 51 தங்கப் பதக்கங்களையும், அமெரிக்கா 36 பதக்கங்களையும், ரஷ்சியா 23 பதக்கங்களையும் பெற்று முதல் மூன்று இடங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து 30வது ஒலிம்பிக்போட்டியானது 2012 ஆம் ஆண்டில் இலண்டன் மாநகரில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டியை நடாத்துவதற்கான பொறுப்பிற்குரிய ஒலிம்பிக் கொடியை இலண்டன் மேஜர் "வோரிஸ் ஜோன்சனி"டம் ஒப்படைக்கப்பட்டது.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 1948இல் 'டங்கன் வையிற்' என்ற இலங்கைவீரர் 400m தடை தாண்டல் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கமும் 2000ம் ஆண்டு நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக் போட்டியில் 'சுசந்திகா ஜெயசிங்க' 200m ஓட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றதும் எமது நாட்டின் விளையாட்டுத் திறனை எண்பிக்கிறது

மேலும் காது கோளாதோருக்கான மௌன ஒலிம்பிக் போட்டி 4 வருடத்திற்கு ஒரு முறை நடாத்தப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

**நவீன ஒலிம்பிக்கில் இடம்பெறும் விளையாட்டுக்களைப் பின்வருமாறு காணலாம்.**

1. அம்பெய்தல் or குறிபார்த்து எய்தல்
2. உதை பந்து
3. பூப்பந்து
4. பந்து விளையாட்டு
5. கூடைப்பந்து
6. குத்துச்சண்டை
7. படகுசெலுத்துதல்
8. சைக்கிள் ஓட்டம்
9. பாய்தல் போட்டி
10. குதிரைச்சவாரி
11. வேலி பாய்தல்
12. தசைப்பயிற்சி
13. குழக்கைப்பந்து
14. யூடோ
15. ஓட்டம், பாய்தல், எறிதல், மற்போர், விற்போர் போன்ற 5 விளையாட்டுக்கள்.
16. துப்பாக்கிசுடுதல்
17. மென்பந்து
18. நீச்சல்போட்டி
19. மேசைவரிப்பந்தாட்டம்
20. டெனிஸ்
21. கரப்பந்து
22. வோட்டர் போலோ (Water polo)
23. பழுத்தூக்கும் போட்டி
24. ரெஸ்லிங்
25. பொக்ஸிங்


போன்ற நிகழ்ச்சிகளாகும்.

**ஒலிம்பிக் இடம்பெற்ற நாடுகளும், நகரங்களும் அத்தோடு இடம்பெற்ற ஆண்டுகளும்**

| போட்டி | ஆண்டு | நகரம் | நாடு |
|---|---|---|---|
| 1 வது | 1896 | எதென்ஸ் | கிறீஸ் (கிரேக்கம்) |
| 2 வது | 1900 | பரிஸ் | பிரான்ஸ் |
| 3 வது | 1904 | செயின்ட்லூஜி | அமெரிக்கா |
| 4 வது | 1908 | லண்டன் | ஐக்கிய இராச்சியம் |
| 5 வது | 1912 | ஸ்டாக்ஹோம் | சுவீடன் |
| 6 வது | 1916 | (1ம் உலகயுத்தம்) | இடம்பெறவில்லை |
| 7 வது | 1920 | ஆன்ட்லெப் | பெல்ஜியம் |
| 8 வது | 1924 | பரிஸ் | பிரான்ஸ் |
| 9 வது | 1928 | அம்ஸ்டர் டாம் | ஹொலன்ட் |
| 10 வது | 1932 | லொஸ்ஏஞ்சல் | அமெரிக்கா |
| 11 வது | 1936 | பெர்லின் | ஜேர்மனி |
| 12 வது | 1940 | (2ம் உலகப்போர்) | இடம்பெறவில்லை |
| 13 வது | 1944 | (2ம் உலகப்போர்) | இடம்பெறவில்லை |
| 14 வது | 1948 | லண்டன் | ஐக்கிய இராச்சியம் |
| 15 வது | 1952 | ஹெல்சிங்கி | பின்லாந்து |
| 16 வது | 1956 | மெல்போர்ன் | அவுஸ்திரேலியா |
| 17 வது | 1960 | றோபர் | இத்தாலி |
| 18 வது | 1964 | டோக்கியோ | ஜப்பான் |
| 19 வது | 1968 | மெக்சிக்கோ | மெக்சிக்கோ |
| 20 வது | 1972 | மியூனிச் | ஜேர்மனி |
| 21 வது | 1976 | மொன்றியல் | கனடா |
| 22 வது | 1980 | மொஸ்கோ | சோவியத் ஒன்றியம் |
| 23 வது | 1984 | லொஸ்ஏஞ்சல் | அமெரிக்கா |
| 24 வது | 1988 | சியோல் | தென்கொரியா |
| 25 வது | 1992 | பார்சிலோனா | ஸ்பெயின் |
| 26 வது | 1996 | அட்லாண்டா | அமெரிக்கா |
| 27 வது | 2000 | சிட்னி | அவுஸ்திரேலியா |
| 28 வது | 2004 | எதென்ஸ் | கிரேக்கம் |
| 29 வது | 2008 | பிஜிங் | சீனா |
| 30 வது | 2012 | லண்டன் | பிரித்தானியா |

இவ்வாறாக ஒலிம்பிக்கானது நடைபெற்ற, நடைபெறப்போகும் ஆண்டுகளும் நகரங்களும் நாடுகளும் அமையப்பெறுகின்றன.

* * *



# தென்னாட்டின் மூல இசைமரபு - ஓர் ஆய்வு

தமிழ் இசைக் காவலர், இசைத்தமிழ் வேந்தர்
சங்கீத கலாநிதி
நா. வி. மு. நவரெத்தினம் M.Phil (SL), PhD(India)
மூத்த இசைப்பேராசான்,
யாழ். பல்கலைக்கழகம்.

பாட்டாற்றல் சிறப்புற்றது நம்பைந்தமிழ் மொழி. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என மிக நீண்டும் முல்லைக்கொருபாட்டு, குறிஞ்சிக்கொரு பாட்டு, பாலைக்கொரு பாட்டு என பண் பெயர் கொண்டு வகையுறும் பாங்கும் சிறுபாண், பெரும்பாண் என யாழ் வகையுறும் பாங்கும் சிலம்பு காவியத்தில் மிடறு யாழ், குழல், முழவின் இலக்கணம் அமைவுறு பாங்கும் சங்ககால இசையின் சார்பிலக்கணமூடு நம்மை ஆற்றுப் படுத்துவனவாகும்.

உலக நாகரீகத்தின் மூதாதையர் தமிழர். அவர் நாகர் என அழைக்கப்பட்டனர். இவர்களே பண்களின் காவலர்கள் என்பதைப் பரிபாடல் மிகத் தெளிவாகப் புகட்டுதல் காணலாம். உலகில் பண் பாடி வளர்ந்த நாகரிகத்தின் நிதியங்களாக நம் தமிழர்கள் போற்றப்படுகின்றனர். எனவே பண்பாட்டு வளர்ச்சிக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் உரித்துடைய பெருமை நம் மூதாதையர்களைச் சார்ந்து நிற்றல் காணலாம். இவர்களது கலைப் பண்பை உணர்வுறக் கூறுவதும் பண்டையிலிருந்துவரும் பாட்டிசை மரபைக் கூறுவதும் பண்பு இசை என்றும் பண்ணின் இசை என்றும் பண் பாட்டிசை என்றும் பண்ணாரின் தமிழ் மற்றும் பண்ணிசை என்றும் அறிஞர் கொள்வர். தொல் காப்பியம் சுட்டும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, நிலப்பண்கள் அந்நிலங்களில் வாழ்ந்த இசை மரபை, தாள மரபை, யாழ் மரபைக் காட்டுவன.

தொகை நூல்களில் பண்களும், யாழ் களும், தாளங்களும் பயிலப்பட்ட செய்தி நிறையக் காணப்படுகின்றன. இவை பண்டையிசையினது வரலாற்று மூலங்கள். இந்த வரலாற்றாலன்றிப் பாடல்களாகலியைந்த பண்களின் நிதியங்களா கக் காணப்படும் திருமுறை மற்றும் திவ்ய, பிர பந்த ஆசிரியர்களது காலம் குறிப்பாகப் பல்லவ காலம் பக்தி இலக்கிய காலம் எனப்படும். இக் காலத்தை கி.பி.4 முதல் 9ஆம் நூற்றாண்டு என ஆய்வறிஞர் கொள்வர். வரலாற்றில் பல்லவர்கள் தென்னகத்தை ஆண்ட காலம் கி.பி. 8 முதல் 9 வரை காணப்படுகின்றது. இவ்வரலாறு முற்காலப் பல்லவர் பிற்காலப் பல்லவர் என இரு வகையினுள் நிற்பதாக அறிஞர் கருதுவர்.

பல்லவர் காலப் பக்தி இலக்கியத்தில் சிவன் திருமால் ஆகிய தெய்வங்களை முதன்மைப் படுத்தி எழுந்த பாடல்கள், தேவாரங்கள் உட்பட ஏனையவை திருமுறைகள் என்றும், திவ்ய பிரபந்தங்கள் திருமறை என்றும் அழைக்கப் பட்டன. "

தேவாரங்களை இசையுடன் அருளிய மூலபுருஷர்களாக தமிழ் இசையின் மூல மூர்த்திகள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலிய அருளாளர்களும் ஏனைய (8 முதல் 12) திரு முறைகள் பாடல்களை அருளியவர்கள் மாணிக்க வாசக சுவாமிகள் முதல் சேக்கிழார் ஈறாக 24 பேர்கள் சுட்டப்படுதல் காணலாம். ஆக திருமுறை அருளிய ஆசிரியர்கள் இருபத்தேழ்வர் ஆவர்.

இதேபோன்று திவ்ய பிரபந்தமென்னும் திருமால் புகழ்போற்றும் பண்இசைப் பாடல்களை அருளியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் என அழைக்கப்படுதல் காணலாம்.

பல்லவர்காலப் பண்ணிசைப் பாமாலை களை அருளியவர்களில் முதன்மையராகவும் **பதிக இசைப் பெருவழியின் தந்தையாகவும் விளங்குபவர்.** கானத்தின் எழு பிறப்பு என சேக்கிழார் சுவாமிகள் சுட்டும் ஞானத் தமிழிசை மூலக் கருநிதியம் **திருஞானசம்பந்தப் பெருமான்** ஆவார். பண் நட்டபாடை பதிக முதல் பண் கௌசிக பதிகம் ஈறாக சுமார் 22 பண்களும்,

அவைசார் 384 பதிகங்களும் யாழ் முரி என்ற இயலிசை விகற்பம் பதிகமும் இவற்றுள் அடங்கும். நூற்றுக்கும் அதிகமான சந்த நுட்பங்களிலும், ஈரடி முதல் – திருவிருக் குறள் ஈறான பல்வகை இசை மூல இலக்கிய விகற்பங்களையும், நூற்றின் வகை வண்ண நுட்பங்களையும் முதல் மூன்று திருமுறை யில் காணும் பாடல்களூடு காண இயலும்.

4-6 வரையான திருமுறைகளைப் பண்ணு டனும் புதிய இயலிசை யாப்புவிகற்பத்துடனும் அருளியவர் நாவுக்கரசு சுவாமிகள் ஆவார். பண் கொல்லி, காந்தாரம், பியந்தைக்காந்தாரம், பழம்பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி என்ற பத்து பண்கள் அடங்கிய பதிகங்களுடன் சம்பந்தர் பாடிய பண்வகையினுள் கிடைக்காத புதிய வகையில் நேரிசை குறுந்தொகை, திருவிருத்தம், திருத்தாண்டகம் என்ற நால்வகை இசைப் பாவினங்களை அருளியுள்ளமை காணலாம். 4ஆம் திருமுறை மேற்கூறிய பண்கள் மற்றும் குறுந்தொகை தவிர்ந்த ஏனைய இசை விகற்பங்களுடன் கூடிய 118 பதிகங்களும் 5ம் திருமுறை திருக்குறுந்தொகைக்குரிய 100 பதிகங்களும் 6ஆம் திருமுறை திருத்தாண்டகம் மாத்திரம் அமைந்த 99 பதிகங்களும் ஆக 312 பதிகங்களுடன் இத்திருமுறை பல்லவர்கால பண் அமைந்த பாடல்களாகக் காணப்படுகின்றன. இப்பண்களில் அப்பர் பாடிய கொல்லி, தவிர்ந்த ஏனைய பண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சந்த இசை அமைதிகளைக் கொண்டு விளங்குதல் காணலாம்.

7ம் திருமுறையில் காணப்படும் இந்தளம் முதல் தக்கராகம், நட்டராகம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், பழம் பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கௌசிகம், பஞ்சமம், ஆகிய பண்களுடன் ஏனைய இருவரதும் திருமுறைகளில் பாடல்களாக கிடைக்கப்பெறாத பண் செந்துருத்தி உட்பட 17 பண்களில் காணும் 100 பதிகங்கள் 41 வகை சந்தங்களுள் இயைவு பெற்று நிற்பது காணலாம்.

காரைக்காலம்மையார் பாடிய பண் : இந்தளம் இவர் பாடிய முதல் பதிகத்தில் இடம் பெறுதல் காணலாம். பல்லவர்காலப் பண்ணிசை வடிவங்களுள் முதன்மை பெறுவது மூவரருளிய தேவாரங்கள், சான்றாகச் சம்பந்தர் அருளிய பண் நட்டபாடை "பண்ணும் பதம் ஏழும்" என்ற பாடலைக் காணலாம். இவ்வாறாக மூவர் பாடலுள்ளும், இசையும், இசைபாடுவாரும் பயனும் பாடுவதற் குரிய அடிப்படை அம்சங்களும், பாடல்கள் பெறும் உயர்வும், பாடல்களின் இசைவாண்மையும், தாளவாண்மையையும், தமிழ் வாண்மையும் பாவின வகை மாண்பும், இசைவிகற்பமாண்பும் கலியில் இப்பாடல்களது அவசியமும், பாடல் அமைந்த சூழலும் இவற்றின் மூலமான இறை வன்பெருமையும் உள்ளடக்கி நிற்றல் காணலாம். திருநேரிசை 2ம் பதிகம் 10ஆம் பாடலில் "பண்ணுண்ட பாடலோடும் பரமநீ ஆடுமாறே" என அப்பர் முன்மொழிந்ததை திருமொழிந்திடுதல் பண்ணின் பல்சிறப்பின் உயர்வுக்குரிய சான்றா கக் கொள்ளலாம்.

சம்பந்தர் அருளிய யாழ் முரி பதிகத்தில் "ஏழிசை பாடுவர்" என்ற (திரு.மு.1) கருத்து முன்வைக்கப்படுவதுடன், சுந்தரர் பாடிய திருக்கோலக்கா பதிகத்தில் "இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளமீந்து" என்று குறிப்பிடுவதும் "நித்தலும் தமிழோடிசை கேட்கும் இச்சையால்" என 67ஆம் பதிகத்தில் பாடியிருப்பதும் காண்க. தமிழை இசையை ஞானப் பாலாக்கி அம்மை ஊட்டியமை "ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி" எனச் சேக்கிழார் குறிப்பிடுவதினின்றும் பண் என்ற தமிழையும் இசையையும் ஞானப்பாலாகச் சம்பந்தர்க்கு ஊட்டினான் என்பதும் "பித்தா என்றே பாடு" எனச் சுந்தரர்க்கு அடி எடுத்துக் கொடுத்துக் கொள்வதும், மணிவாசகன் சொல்லச் சொல்ல அழகிய சிற்றம்பலவுடையான் எழுதியது என திருவாசகத்தை எழுதித் தமது திருநாமத்தை பொறித்ததும் தூய தெய்வீக உயர் சான்றுகள் ஆகும். பல்லவர் காலப் பண்ணிசை வடிவங்கள் வாயிலாக பண்ணிசை உயர்சிறப்பின் சான்றாகக் கிடைத்தல் காணலாம். 9ம் திருமுறைவரை தோத்திரப் பாடல்களுடன் பெரிய புராணமும் இணைந்து மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை காலத்தில் "பஞ்சபுராணம்" ஓதும் முறை வழக்கில் வந்தமையால் பதிக இசைமரபு

மீண்டும் அழிந்துவிட்டது. இதற்குப் புத்துயிர் கொடுக்க வேண்டிய அவசியம் இன்று நம்பால் எழுந்துள்ளது என்பது இன்றைய தேவையாகும்.

மூவர் திருமுறைப் பாடல்கள் முழுமையும் பண் நட்டபாடை முதல் செந்துருத்தி ஈறான 23 பண்களையும் யாழ்முரி என்ற இயல் இசை பதிகத்தினையும் 100க்கும் அதிகமான சந்தங்களையும், வண்ணங்களையும் மாலை மாற்று முதல் கூடற் சதுக்கம் ஈறான இயலிசை விகற்பங்களையும் திருக் குறுந்தொகை, திருவிருத்தம், திருநேரிசை, திருத் தாண்டகம் முதலிய புதிய யாப்பிசை விகற்பங் களையும் பண்களுடு கொண்டு விளங்குதல் காணலாம். இவை பற்றிய விரிவான ஆய்வுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்த வகையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும், சென்னைத் தமிழிசைச் சங்கமும், யாழ் பல்கலைக்கழகமும் திகழ்வது காணலாம். இவ்வாறான பண்களின் சந்தங்களின் நுட்பங்களை சுமார் ஆயிரம் ஆண்டு களின் பின்னர் ஆய்ந்து வெளிக்கொணர்ந்த பெருமை நமது பெருமதிப்பார்ந்த சுவாமி விபுலா னந்தரையே சாரும். சுவாமிகளது தொண்டுக்கு இன்று உலகமே பணிந்து நிற்பது ஈழத் தமிழர் களாகிய நமக்கு மிகுந்த பெருமையைத் தருகிறது. சுவாமிகளது திருநாமத்தில் உருவாகிய விபுலா னந்த இசை நிறுவனம் இப்பணியை உள்வாங்கி பண்ணிசை ஆய்வு நிறுவனமாகவும் உயர்ந்த ளவில் பயிற்று நிறுவனமாகவும் பன்னாட்டு ஆய்வாளர்களை உள்வாங்கும் நிறுவனமாகவும் அமைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

தென்னாடுடைய சிவனை எந்நாட்டவர்க்கும் இறைவனாக ஆற்றுப்படுத்தும் திருமுறைத் தேன் திருவாசகம் 51 பதிகங்கள் இசை அமைதி களுடன் காணப்படுகின்றன. திருவெம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக் கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பள்ளி யெழுச்சி என வரும் அனைத்துப் பதிகங்கள் எல் லாம் பண்டை இசை அமைதியுடன் விளங்கி இறை வனைப் பாடுமாறு ஆற்றுப்படுத்தல் காணலாம்.

விண்ணாளும் ... என்ற திருவெம்பாவை சுட்டும் பாடலில் "அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் எனும் அடிகளும் திருப்பொற்சுண்ணப் பதிகத்தில் காணும் அனைத்துப் பாடல்களும் இறைவனைப் பாடுமாறு சுட்டிநிற்றல் காணலாம்.

முத்து நல்தாமம் பூமாலை... என்ற பாடலில் வரும் "அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே" எனவரும் அடி களும் திருத்தெள்ளேணப் பதிகத்தில் "அரிக்கும் பிரமர்க்கும்" என்ற பாடலில் வரும் "சீரிக்கும் திறம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" எனவரும் அடிகளும், "திருப்பொன்னூசல் ஆடாமோ" என வரும் அடிகளும் மேற்கண்டவகையில் இறை வனைப் பாடிப் பணியுமாறு இசையால் ஆற்றுப் படுத்தல் காணலாம்.

ஒன்பதாம் திருமுறையில் பண் பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, நட்டராகம், இந்தளம் என்ற ஐந்து தேவாரத்தில் காணும் பண்களுடன் சாளரபாணி என தேவாரத்தில் காணப்படாத பண் ஒன்றும் காணப்படுகின்றன. திருமாளிகைத்தேவர் முதல் சேந்தனார் ஈறாக உள்ள ஒன்பதின்மரால் 29 பதிகங்களுடு மேற்கூறிய பண்புடன் இவை அருளப் பட்டிருத்தல் காணலாம்.

திருவாலிய முதர் கோயில் மீது பாடிய "அன்னநடையாள்" என்ற பாடலில்... "தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்" என இசையையும் தமிழையும் போற்றுதல் காணலாம்.

சேரமான் அருளிய பொன்வண்ணத் தந்தாதி 16ஆம் பாடல் இராவணன் பாடிய பண் காமாரம் என்று நிற்றல் "அரக்கன் என்னே கலையான் ஒருவிரல் தாங்க கில்லான்... காமாரம் பாட" எனவரும் அடிகள் புதிய கருத்தை தருதல் காணலாம்.

12ஆம் திருமுறையில் காணும் தேவார அடிகளை முதன்மையாகக் கொண்ட புராணப் பாடல்கள் அதே பண்ணமைப்பில் சந்த அமைப் பில் அருளப் பெற்றிருத்தல் காணலாம். சான்றாக கூறுவதனால் "கொத்தா மலர்க் குழலாளொரு கூறாயடியவர் பால்" என்பது வண்டார் குழல்... என்ற சம்பந்தர் பாடல் வண்ணமை திறனுடன் விளங்குதல் காணலாம். இவ்வாறாக பெரிய புரா

ணம் உட்பட திருமுறைகள் பண்ணமைதியுடனும் விரிவான சந்தங்களுடன் இயைந்து தமிழிசைப் பேராறாக பல்லவர் கால இசைவடிவங்களாக நிற்றல் காணலாம். இவற்றையே தொடக்கத்தில் "பாட்டாறு" எனும் பதத்தால் குறித்தனம்.

பல்லவர்கள் பண்ணிசை வளர்ச்சியில் திருமுறை இசையமைதிகளுடன் இயைந்ததாகக் காணப்படும் திவ்யப் பிரபந்தம் 4000 பாடல் களைக் கொண்டது. வைணவ பக்தியின் இசை யின் மூலமாகக் கருதப்படுவன.

இவை இசையுடன் பாடப் பெற்றிருப்பதற் கான ஆதாரங்கள் அப்பாடல்கள் சுட்டும் அடிகள் மூலம் காணக்கிடைக்கின்றது. 3ஆம் ஆயிரம் தவிர்ந்த 1, 2, 4 ஆயிரப் பாடல்கள் இசையுடன் இயைந்தவை என்பது பாடல்களிற்காணும் அகச் செய்திகளால் அறியப்படும். பெரியாழ்வார் சுட்டும் பாடல்களில் "பண் இன்பம் வரப்பாடும் பத்தர்" என வும் இன்னிசை மாலைகள் இவைபத்தும் எனவும் பண்பல பாடிப் பல்லாண்டிசைப்ப பண்டகர் வில்லி புத்தூர்க்கோன் எனவும் சுட்டப்பெறுதல் காண லாம்.

ஆண்டாள் பாடல்களில் "கோதை இன்னிசை யால் சொன்னமாலை" எனவும் குலசேகராழ்வார் பாடலில் "குலசேகரன் இன்னிசையில் மேவிச் சொல்லிய இன்தமிழ்மாலை" எனவும் திருமங்கை யாழ்வார் பாடலில் "பண்ணார் பாடல் பத்தும்" எனவும், "பண்கள் அகம் - பயின்ற சீர்பாடல்விழுமிய இசையினோடும் ஒலிசொலும் அடியவர்" எனவும், நம்மாழ்வார் பாடலில் "பால் ஏய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தில்" எனவும் குறித்து நிற்றல் திவ்ய பிரபந்தம் பண்ணில் தோய்ந்தவை என்பது பெறப்படும்.

மேற்கூறிய 3000 ஆயிரம் பாடல்களும் 19 தமிழ் பண்களால் இயன்றவை என்பது காணலாம். அவை பண் : முதிர்ந்த குறிஞ்சி, செருந்தி, இந்தளம், தக்கராகம், நாட்டம், பழந்தக்கராகம், பஞ்சமம், கைசிகப் பாலை யாழ், நட்டராகம், பாலையாழ், நட்டபாடை, வியந்தம், கொல்லி, புறநீர்மை, சீகாமரம், தக்கேசி, குறிஞ்சி, காந்தாரம், பழஞ்சுரம் என்ற வகையில் காணப்படுகின்றன.

இவற்றைவிட, நைவளம், அந்தாளி, தோடி கௌவாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் முதலிய பண்களும் பிற்கால திவ்ய பிரபந்த பதிப்புகளில் காணப்படுகின்றன. இவற்றை பொதுவாக நோக்கின், பண் இந்தளம், தக்கராகம், பழந்தக்கராகம், பஞ்சமம், நட்டராகம், கொல்லி, புறநீர்மை, சீகாமரம், தக்கேசி, குறிஞ்சி, காந்தாரம் எனவரும் 11 பண்கள் தேவாரத்தில் காணப்படு வன. ஏனையவை 103 பண்களுடன் இயைவுபட் டவை. **இவை திருமுறைகளில் நமக்கு கிடைக்காத பதிகங்களில் நிச்சயம் வழக்கில் இருந்திருக்கலாம்** என்பது சிந்திக்கற்பாலது. நாதமுனிகளினால் வகுக்கப்பட்ட திவ்ய பிரபந்த இசைமரபு பல்லவ காலத்தில் வைணவ பக்திக்குப் பெருந்துணை புரிந்துள்ளது. **திருமுறைகளிற் காணும் பண்ணிசையின் நுட்பங்களும், பாடல் வகை, தாள வகை என்பனவும் இந்திய இசை யின் மூலக்கருநிதியம் பண்ணாரின் தமிழ் தேவாரங்கள்தான் என்பதை கீழைத்தேய மேலைத்தேய ஆய்வு நிபுணர் அறிஞர்கள் பலரும் இன்று தெளிவாக ஏற்றுக்கொண் டுள்ளனர்.**

திருவாசக இசைமரபில் நாட்டுப்புற இசை வடிவங்கள் உள்வாங்கப்பட்டமை போன்று நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் பல்லாண்டுப் பாடல் பெரியாழ்வார் பாடலில் :

*"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
*பலகோடி நூறாயிரம்" (பெரியாழ்வார் திருமொழி)*
*அமைந்து நிற்பதும், தாலாட்டிசையில் அவர் பாடல்*
*"மாணிக்கம் பட்டி வயிரம் இடைகட்டி*
*ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச்சிறு தொட்டில்*
*பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்*
*மாணிக்குறளனே தாலேலோ*
*வையமாளந்தானே தாலேலோ".*

என்று அமைந்து நிற்பதும் இதேபோன்று பூச்சி காட்டுதல், காதுகுத்தல், காக்கை அழைப்பு, சீலைக்குதம்பைப்பாடல், திருப்பாவைப் பாடல், சந்த விருத்தப்பாடல், திருமாலைப்பாடல் (பச்சை மாமலை) குறிஞ்சிப் பண்ணமைந்த "வாலிமா வலம்" என்ற பாடல் பண் செந்துருத்தி அமைந்த "தாயாய் வந்த" என்ற பாடல் பண்சீகாமரத்தில

மைந்த 'கொங்கலர்ந்த" பண் மேகராக குறிஞ்சி யிலமைந்த "நீரார் கடலும்" என்ற பாடல் வகைகள் எல்லாம் தாளங்களுடன் திருமுறைப் பாடல் இசை மரபுக்கு இணையாகக் காணப்படினும் திவ்ய பிரபந்த பண்ணிசை மரபு திருமுறைப் பண்ணிசை மரபு வளர்ந்துள்ள அளவுக்கு வளர்ச்சி பெறமுடி யாமைக்கான காரணங்கள் அறியப்படல் வேண் டும்.

**பொதுவாக நோக்குமிடத்து பல்லவகால பண்ணிசை மரபு மற்றும் பதிக இசை மரபும் இன்று கோவில்களில் தசம வீதம் அளவில் மாத்திரம் பேணப்பட்டுவருதல் கண்கூடு. வைணவ ஆலயங்களிலும், இதர சைவ, வைணவ விழாக்களிலும் இவ்விசைக்குரிய முதன்மையும் ஆற்றுகை அறிஞர்களும், அரசும் சிறப்பாக மேற்கொள்வது மிக அத்தி யாவசியமாகின்றது.**

பல்லவ கால பண்சுமந்த பாடல்களது அனாதி மூல முதுமை, முதன்மை, தொன்மை இசை வரலாற்றில் அதியுன்னத தனித்துவம் கொண்டவை என்பது வரலாற்றாதாரங்களுடனும், ஆற்றுகை ஆதாரங்களுடனும் என்றும் காணமுடி யும் என்பது இங்கு ஆராயப்பட்டது.

**சங்ககால இலக்கியத்தோடு போற்றப் படும் பண்ணிசை மரபு பல்லவர் காலத்தில் சைவ திருமுறை ஆசிரியர்களாலும், வைணவ ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற பாடல்களா லும் அவை கொண்டிலங்கும் பண்கள், இசை நுட்பங்கள், இசை விகற்பங்கள், தாள நுட் பங்களது பன்முக கூட்டு மொத்த வளர்ச்சியே இந்திய இசையாக இராக நுட்ப இசையாக தாள இசையாக, சாகித்ய இசையாக பெருவளர்ச்சி கண்டுள்ளது என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது என்பது ஆய்வுத் தரவு களால் உறுதிபெறல் காணலாம்.**

**தென்னாட்டிசையின் (தேவார) நுண்மைகள்**

நாம் இதுகாறும் சுட்டிய தென்னாட்டிசை நம் தமிழ் இசை. தேவார, திவ்ய பிரபந்தம் என்ற வகையினுள் இசை நுட்பங்களின் தாள நுட்பங்களின் கிடக்கையாக இருப்பது நம்மனோர் அறியாத ஒன்றாக உள்ளது. இவற்றின் நுட்பங்களின் ஒரு சில பகுதிகளை இவ்வாய்வின் பிறிதொரு பகுதியாகக் காண்போம்.

எழுத்து, சொல், பொருள் சிறப்பின்பால் தமிழில் எழுந்த தொன்மை நூல் தொல்காப்பியம். காப்பிய நாயகன் தமிழ் மாமுனி அகத்தியரின் முதல் மாணவர். இசை நுண்மை முறைமையில் உயிர் எழுத்துக்களும் ஏனைய எழுத்துக்களும் எழுத்துக்குரிய கால அளவினைக் கடந்து ஒலிக்கும் என்பதை

"அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிய இசையொடு சிவணிய
நம்பின் மறைய என்மனார் புலவர்"
- எழுத் - 33

தொல்காப்பியம் குறிப்பாக இரண்டாம் சங்க நூலாகக் கொள்ளப்படுகிறது. முதற்சங்க காலத்தின் முன்னரே நம் மக்கள் இசையில் நுட்பமிகுதியுடையராய் இருந்தனர் என்பது மேற்சுட்டிய சூத்திரத்தின் முடிபாகும்.

நமது மக்கள் கையாண்ட நுட்ப சுருதிகளது மூலங்களாக
மிடறு, (96 சுருதி நுண்மை மிகுந்தது)
குழல் (96 சுருதி நுண்மை மிகுந்தது)
யாழ் (96 சுருதி நுண்மை மிகுந்தது)
முழவு (103 தாள நுட்பம்)
என்பன தொன்மையில் கையாளப்பட்டது.

சங்ககால இலக்கியங்களில் பாடுதுறை – யாழ் வகைகள், குழல் வகைகள், முழவு வகைகள் சீர் வகைகள் என்பன உள்ளீடாக இசைப் பாவ னைகள் இருந்தமைக்கான இசைத்தமைக்கான சான்றுகள் அளபிறந்து காணப்படுகின்றன. இவற்றினூடு நுட்ப அலகுகளை காணும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. 16 வகையான நுட்ப பண்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. பாலைப் பண்ணும் அவற்றின் திரிபுகளும் குறிப்பாக,

*ஆயப்பாலை 12 சுருதி நுண்மைகளையும்*
*வட்டப்பாலை 24 சுருதி நுண்மைகளையும்*
*திரிகோணப்பாலை 46 சுருதி நுண்மைகளையும்*

சதுரப்பாலை 96 சுருதி நுட்பங்களையும் கொண்டது. இசையின் அதிநுட்பங்களை இவ்

வாறு காண்பதற்கு பண்களின் இசை முதன்மை கள் இடம் தருகின்றன.

"பாலையாழ் உகந்தான் பாதாளீச்சரத்துள் ளானே" எனச் சம்பந்தரும் –

"பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்"

என அப்பர் சுவாமிகளும் திருமுறையில் பாலை யாழ் பற்றிய குறிப்பினைத் தந்துள்ளனர். குறித்த பாலை யாழ், மிடற்றாலும் கருவிகளாலும் பெறப்படுவதாகும். இவற்றின் பேரிலக்கணம் வரிவஞ்சித் தவிர்க்கப்படுகிறது.

திருமுறையிற் காணும் சங்ககாலப் பண்களில் ஒன்று செவ்வழி. இதை மாலைப் பண் என நூல்கள் குறிப்பிடுவது உண்மைப் பொருத்த முடையது ஆயினும் இப்பண் காலை, பகல், மாலை, இரவு ஆகிய காலங்களில் பாடக்கூடியது ஆகும் என்பது ஏட்டுப்பிரதிகளால் பெறப்படும் செய்தியாகும். செம்பாலைப் பண்ணின் கிளைப் பண்ணாகிய இப்பண் ஸரிமபதச் என்ற ஆரோசை யையும் ஸநிதபமகரிஸ என்ற அமரோசையை யும் கொண்டது. இப்பண்ணின் இணை கிளை பகை நட்பு நரம்புகளைப் பார்க்கும்போது –

ஸ ரிரி கக மம ப
12 12 12
தொடக்க நரம்பு
12 34 56 7

குரல் (ஸ) முதல் 7ம் நரம்பாகக் காண்பது இளி (ப) பஞ்சமமாகும். ஸரிகமபா என்பது இணைச் சுரத்தொடராகும்.

அடுத்து வருவது கிளைநரம்புத் தொடர் தொடக்க நரம்பிருந்து 5ம் நரம்பு கிளை நரம்பாகும்.

ஸ ரிரி கக ம

ஸரிகமா என்பது கிளை நரம்புத் தொடர். அடுத்து வருவது நட்பு நரம்புத் தொடர். இது தொடக்க நரம்பின் 4ம் நரம்பு என்பதைக் குறிக்கும்

ஸ ரி ரி கக

ஸரிகா என்பது நட்பு நரம்பின் தொடர். இந்த இராக சீவ நரம்புகள் குரல் – இளி – ரீ, மா ஆகிய இரு நரம்புகளும் ஒரு அலகு கூடுதலாக ஸரீ, மா என்று இசைக்கப்படுதலால் இப்பண்ணின் பிரகாசம் வெளிப்படுகிறது. அதேபோன்று தா, நீ முதலிய நரம்புகளும் ஓர் அலகு கூடுதலாக இசைக்கப்படுதல் காணலாம். முன்னையது அமுத வைப்பு. பின்னையது பாடலமுதம் என்று கொள்ளப்படும். ஒருமுகமாகக் கூறுதல் என்பது இப்பண்ணின் ரீ, மா, தா, நீ ஆகிய நரம்புகள் ஒரு நுட்ப அலகால் உயர்ந்து கூடி நிற்றல் காணலாம்.

திருஞானசம்பந்தப் பெருமான் 2ம் திருமுறை 113 – 122 வரையிலான பதிகங்கள் இப்பண்ணின் பெருமையைச் சுட்டுவனவாகும்.

பழந்தமிழிலக்கியம் சுட்டும் பண் நைவளம் பஞ்சமரபு மற்றும் நிகண்டுகள், தேவாரப் பாடல்கள், அற்புதத் திருவந்தாதி போன்ற நூல் களால் பண் நட்டபாடை என்று அழைக்கப்படுதல் காணலாம். இப்பண்ணின் தாய்ப்பாலை செம் பாலை என்று கொள்ளப்படும். செம்பாலை என்பது பண்டைய பிரசித்த யாழ்களில் ஒன்று. தற்காலம் செம்பாலைக்கு இணையாக சங்கரா பரண இராகம் கொள்ளப்படும். 103 பண்களில் செம்பாலைப் பண்ணின் கிளைப் பண்ணாக பண் நட்டபாடை கொள்ளப்படுகின்றது. இதன் தற்கால இணை இராகமாக கம்பீர நாட்டை கொள்ளப்படும். ஆரோசை ஸகமபநிஸ அமரோசை ஸநிபமநிஸ இதில்வரும் நி நரம்பு... அலகு கூடுதலாக ஒலிப்ப தால் இப்பண்ணின் நுட்பச்சிறப்பு வெளிக் காட் டப்படும். சம்பந்தர், சுந்தரர் முதலிய தமிழிசை மூர்த்திகள் இப்பண்ணில் அதிக பதிகங்களை அருளி உள்ளனர். குறிப்பாக சிவாலயங்களின் உள்வீதியில் இறைவன் திருவுலாவில் இப்பண் நாத சுரமாக (மல்லாரி) என்ற பெயரில் இசைக்கப்படுதல் காணலாம். இறைவனது நடன மென்மைக்கான இசை மொழி நாட்டிய பாஷை என்று வட நூலும் நட்டபாடை என்று தமிழ் நூலும் குறிப்பிடும் நீமா, நீகா, நீஸா, நீஸா, காஸா, ஸகா, ஸமா, ஸாபா போன்ற .... அலகு கூடிய நீ கா பிரயோகங்கள் இப்பண் ணின் நுட்பங்களை தெளிவுறுத்தும்.

பண்மேகராக குறிஞ்சி, பஞ்சமம், யாழ்முரி, கௌசிகம், தக்கராகம், தக்கேசி, வியாழக்குறிஞ்சி

எனத் தொடரும் கையில் கிடைத்திருக்கின்ற இரு பத்து மூன்று பண்களும், பாவின விகற்பங்களான திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம், திரு நேரிசை, திருவிருத்தம் என்பனவும் திருவாசகத் தில் காணப்படும் நாட்டார் புற பாவின வகைகளும் மிகுந்த நுட்பமான கேள்வி அலகின் மூல நுட்பங்களாக விளங்குபவை. இசை உலகில் இவற்றை வாய்க்கு வந்தவாறு கன்னாபின்ன மாக இசைக்கமுடியாது என்பது தெட்டத் தெளிவு. இவற்றின் நுட்பங்களை வெளிக் கொணர பாரிய அளவில் நமது முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப் பிடற்பாலது. இன்று உலகளாவி நிற்கும் சைவத் தமிழ் மக்கள் இம்முயற்சிக்கு பெரிதும் உதவிட முன்வரவேண்டும். இத்துறையின் துறை போகியவர்களை அணுகி, இவற்றை வளர்க்கும் மிகப்பெரிய திருப்பணியை இவர்கள் உளங்குளிர்ந்து சிவப்பணியாக ஆற்ற முன்வரவேண்டும் என்பது நமது பேரவா. சிவன் திருக்குறிப்பும் இதுவேயாம்.

❖ ❖ ❖

## கல்வி

- ஆசிரிய வகிபாகத்தின் 3T மாதிரி என்பது

  $T_1$ - Transmission Role
  $T_2$ - Transaction Role
  $T_3$ - Transformation Role

- **KASP** என்பது

  Knowledge
  Attitude
  Skill
  Practice



- **5E** என்பது

  $E_1$ - Engage
  $E_2$ - Explore
  $E_3$ - Explain
  $E_4$ - Elaborate
  $E_5$ - Evaluate

- **5S** என்பது

| | | |
|---|---|---|
| SEIRI | Sorting | தேர்ந்தெடுத்தல் |
| SEITON | Systematic | ஒழுங்கமைத்தல் |
| SEISO | Clean it immediately | சுத்தப்படுத்தல் |
| SEIKETSU | Standardizing | தரப்படுத்தல் |
| SHITSUKE | Self discipline | சுய ஒழுக்கம் |



# பண்டைத் தமிழர் இசைக் கருவிகள்

டாக்டர் மா. வேதநாதன், எம்.ஏ., பி.எச்.டி
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## அறிமுகம்

பண்டைத் தமிழர் வளர்த்தெடுத்த கவின் கலைகளுள் இசைக் கலைக்குத் தனிப்பெருஞ் சிறப்புண்டு. இசை என்னும் சொல் இசைவிப்பது அல்லது தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும் தமிழ்ச் சொல்லாகும். இனிமையான ஒலிகளின் சேர்க்கையால் பெறப்படுவது இசையாகும்.இது அனைத்து உயிர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. இனிமை பயக்கும் இயல்பினை உடையது. எழில் வாய்ந்தது. மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையும், எழுச்சியூட்டும் வன்மையும் அமையப் பெற்றதாய் இசை மிளிர்கின்றது. பண்டைத் தமிழர்களின் வாழ்வோடு இசை இரண்டறக் கலந்து விளங்கியது. இசையானது வாயிசை, கருவியிசை என இரு வகையில் நிகழும். பழந்தமிழர்கள் இசையை வாயாலும், இசைக் கருவிகளாலும் இசைத்து வந்தனர். தமிழர் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இசையும் இன்பமும் நகமும் தசையும்போல் இரண்டறக் கலந்து விளங்கியது. இசையின்பத்தைத் தரும் இசைக் கருவிகளாக தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள், மிடற்றுக் கருவிகள் எனப் பலவகையான இசைக் கருவிகளைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தினரென்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. சங்க நூல்களில் இசைக்கருவிகள் பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தோற்கருவிகள்

தோலால் போர்த்து வாரினாலும் கயிற்றினாலும் இழுத்துக் கட்டப்பெற்று இசை முழக்கம் செய்வன தோற்கருவிகள் ஆகும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தோற்கருவிகள் பற்றிய செய்திகள் பல இடம்பெற்றுள்ளன. பண்டைத் தமிழர்கள் பல வகையான தோற்கருவிகளைப் பயன்படுத்தியமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரவுரையில் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரவேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை முதலிய முப்பத்தொரு தோற்கருவிகளை அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். இவற்றின் பெயர்கள் யாவும் உருவத்தாலும் ஒலியாலும் அமைந்தவையாகும்.

தோற்கருவிகளில் சிறப்புடையது முழவு ஆகும். இக்கருவி ஆடவரின் திரண்ட தோளுக்கு உவமையாகக் கூறப்பட்டது. இது திண்ணியவாரால் விசித்துக் கட்டப்பட்டதென்பதை, "பண்ணமைத்துத் திண்வார் விசித்த முழவொடு" என்று மலைபடுகடாம் (மலைபடு : 2-3) கூறுதலால் அறிய முடிகின்றது. இதன் ஒரு புறத்தில் ஒருவகை மண் அமைக்கப்படும்.

இன்னிசைக்கு இதுவே காரணமாகும். இது 'மண்ணமை முழவு' (பொருந.109) எனப்பட்டது. முழுவு என்னும் தோற்கருவி மூதூர்களில் நடக்கும் விழாவின் கண்ணும், துணங்கைக் கூத்தின் கண்ணும், கூத்தர் விறலியர்களின் ஆடல் பாடல்களின் கண்ணும் முழக்கப்பட்டு வந்தது.

பண்டைத் தமிழர், மணவிழாவில் முழங்கிய இசைக் கருவிகளுள் ஒன்று முழவு ஆகும். திருமண நிகழ்வில் முழவினை "மணமுழவு" என அழைத்தனர்.

முழவு என்ற சொல் "தோற் கருவிகளில் ஒரு வகையைக் குறிப்பதாக இருந்தாலும், தோற்கருவிகள் எல்லாவற்றையும் குறிக்கும் பொதுப் பெயராகவும் கொள்ளப்படுவதாக அறிஞர் கூறுகின்றனர்.

முரசு என்பது பழமையும் பெருமையும் வாய்ந்த தோற்கருவியாகும். இதன் பழமையைக் காலத்தால் மிகவும் முற்பட்ட தொல்காப்பியத்தில் கூறப்படுதலானும் அறியலாம். இது வீரமுரசு, கொடை முரசு, மண முரசு என்று மூவகைப்படும். போரில் தோல்வியுற்ற பகை மன்னரின் காவல் மரத்தை வெட்டி அதனை முரசமாகச் செய்து வெற்றி முழக்கம் செய்வது வீரமுரசாகும். இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் தேசர் வேந்தன் பகைவரது காவல் மரமாகிய கடம்பினைத் தடிந்து முரசு செய்தமை பதிற்றுப்பத்தில் (11.12.6)

*"பலர் மொசிந் தோம்பிய திரள் பூங்கடம்பின்*
*கடியுடை முழுமுத றுமிய வேஎய்*
*வென்றெறி முழங்கு பனைசெய்த வெல்போர்*
*நாரறி நறவி னார மார்பிற்*
*போரடு தானைச் சேரலாத"*
என வருதலால் அறியப்படும்.

பண்டைத் தமிழரசர் இம்முரசினைத் தெய்வத் தன்மையுடையதாகப் போற்றி வந்தனர். இதனை மலர் பரப்பிக் கட்டிலில் வைத்துச் சிறப்புச் செய்வர். இதனை நாளும் இசை முழக்கத்துடன் நீர்த் துறைக்கு எடுத்துச் சென்று நீராட்டி, மாலை சூட்டி அலங்கரித்து வழிபாடு செய்வர்.

காளையின் தோலால் அமைக்கப்பட்ட பல்வேறு முரசுகள் அன்று வழங்கின. இது "கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக்கண் முரசம்" (மதுரை. 732-733) எனப் பேசப்படும். "விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம்" (புறம்.63) என்றும் இது பாராட்டப்படும்.

அரசர் போருக்குச் செல்லும்போதும், களத்தில் போர் நிகழும்போதும் முரசு முழக்கப்பட்டது. இடிபோல் முழங்கும் முரசு அரசரின் போர் வெற்றிக்கும் துணையாக அமைந்தது. அரசர் போர் செய்து வருந்தாமற் பகைவர்வெருவியோட முழங்கி அரசனுக்கு வெற்றி தன்றாலே படநின்ற முரசினை, 'வலம்படு வியன்பணை' என்று பதிற்றுப்பத்துக் கூறுகின்றது. அரசர் வீரமுரசுடன் நியாயமுரசு, தியாக முரசு என்னும் முரசுகளையும் உடையராயிருந்தனர். இது புறநானூற்றில்,

*"இமிழ்குரன் முரச மூன்றுட னாளுந்*
*தண்கெழு கூடற்றண் கோல்வேந்தே"*
என வருதலால் அறியப்படும்.

முரசு ஊளூர் கொண்ட சீர்கெழு விழாவின் கண்ணும் முழுக்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டிணத்தில் கடவுளுக்கு விழா எடுக்கப்பட்டபோது, யாழ், குழல், முழவு, முரசு என்னும் இசைக்கருவிகள் இயம்பின என்பது பட்டிணப்பாலையில்,

*"குழலகவ யாழ்முரல*
*முழவதிர முரசியம்ப*
*விழவறா வியலாவணத்து"*
என வருதலான் அறியப்படும்.

பணை என்ற தோற்கருவி ஒருவகை முரசம் ஆகும். நக்கீரனார் நெடுநல்வாடையில் யானையின் காலைப் "பணைமருள் நோன்றாள்" என்று கூறுதலின் இது யானையின் காலைப்போன்ற பருமனுடையது என்று உணரலாம். வணை என்பது முரசு என்ற பொருளில் வழங்கப்படினும் அது வேறானது என்பது, "குணில் பொரக் குளிறின முரசம் வெள்வளை வணை பரந்தார்த்தன" எனச் சீவக சிந்தாமணியில் வருதலால் அறியலாம்.

ஆகுளி என்ற தோற்கருவிக்குச் சிறுபறை என்றும் பொருள் கூறுவர். மெல்லிய நீர்மையையுடைய இப்பறை யாழ் முழவுகளோடு பொருந்தி ஒலித்தமை, "குரல்புணர் நல்யாழ் முழவோடொன்றி, நுண்ணீ ராகுளி யிரட்ட" என மதுரைக் காஞ்சியில் வருதலால் அறியப்படும். இதன் ஒலி பேராந்தையின் ஒலிபோன்றது என்பது,

*"விரலூன்று படுகணாகுளி கடும்பக்*
*குடிஞை யிரட்டும்"* (மலைபடு 140-1)

மகுளி என்பது பண்டைக்காலத்து வழங்கிய தோற்கருவிகளுள் ஒன்று. இதனை அடிக்கும் போது குறுந்தடியை இழுத்து அடிப்பர். இதனை "விசித்து வாங்கு பறை" என்று அகநானூறு கூறுகின்றது. இதன் ஓசையும் பேராந்தையின் குரல் போன்றதென்பது,

*"உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்கு*
*கடுங்குரற் குடிஞை"* (அகம் 275)
என்பதனாலறியப்படும்.

எல்லரி என்பது உத்தம தோற்கருவிகளில் ஒன்று. இது தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் வலியவாயையுடையதென்பது, "கடிகவர் பொலிக் கும் வல்வாய் எல்லரி" (மலைபடு 25) என்பதனா லறியப்படும்.

தட்டை என்பது ஒருவகைப் பறை. இது அரித் தெழும் ஓசையுடைத்தாதல் "அரிக்குரற் தட்டை" (மலைபடு 29) என்பதனாலறியப்படும். இது தவளை யின் குரல்போன்றதென்பது "தேரை, தட்டைப் பறையிற் கறங்கு நாடன்" எனக் குறுந்தொகை யில் வருதலான் அறியப்படும்.

பதலை என்பது ஒருதலைமுகமுடையதொரு தோற்கருவி. இதனைப் "பதலையொருகண்பை யென வியக்குமின்" எனப் புறநானூற்றில் வருத லானும் அறியலாம். இதனை ஒருகண் மாக்கிணை என்றும் ஒருதலை மாக்கிணை' என்றும் கூறுவர். இது மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடை யதென்பது நொடிதரு பாணிய பதலையும் (மலைபடு) என்பதனால் தெரிகிறது.

துடி என்பது மிக்க பழமையானதொரு தோற் கருவி. இதனைப் பாலை நிலத்துக்கு உரியதாகக் கூறுவர். இதனைக் கானவர் அடித்து வந்தனர் என்பது "வில்லோர் குறும்பிற் றதும்பும், வால் வாய்ச் சிறுதுடி" என அகநானூற்றில் வருதலான் அறியலாம். பகைவர் நிரையைக் கவர விரும்பும் வீரர்க்கு வெற்றியுண்டாகும்படி கொற்றவையைப் பரவும்போது துடியை அடித்தனர் என்பது.

*"மறங்கடை கூட்டிய துடிநிலை சிறந்த*
*கொற்றவை நிலையும்"*

எனத் தொல்காப்பியத்து வருதலான் அறியப் படும். துடி மறவரின் வெற்றிக்கு ஏதுவாதல், "துடி புணையாக வென்றிதந்து" எனப் புறநானூற்றில் வருதலான் அறியப்படும். கூத்தப்பிரான் திருக்கரத் திலுள்ளதும் துடியென்பது "தோற்றந்துடிய தனில்" என்பதனாலறியப்படும்.

இவைகளேயன்றிக் கிணை, தண்ணுமை, தொண்டகப்பறை, பம்பை முதலிய தோற்கருவி களும் பண்டைக்காலத்து வழங்கி வந்தன என்பது பழந்தமிழ் இலக்கியங்களால் தெரிகிறது.

பண்டைக்காலத்தில் ஆடவரேயன்றி மகளி ரும் யாழ் முதலிய இசைக்கருவிகளை வாசித்த லில் வல்லவர்களாய் விளங்கினார்கள். விறலி யாழ் வாசித்துப் பாடுதலில் வல்லவளாய் விளங்கினாள் என்பது,

*"வண்டுபடு கூந்தன் முடிபுனை மகளிர்*
*தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்*
*பணியா மரபி னுழிஞை பாட"*

எனப் பதிற்றுப்பத்தில் (46) வருதலானும் அறியலாம்.

விறலியர் ஆடும்போது யாழ், குழல், முழவு, மத்தரி, தடாரி தண்ணுமை முதலிய பலவகை இயங்களும் இயம்பின.

*"ஒத்த குழலி னொலியெழ முழவிமிழ்*
*மத்தரி தடாரி தண்ணுமை மகுளி*
*யொத்த ளந்து சீர்தூக்கி*
*அத்தக வரிவைய ரளத்தல் காண்மின்"*

எனப் பரிபாடலில் (12) வருதல் ஈண்டறியற் பாலது.

தமிழகத்தின் நானிலங்களுக்கும் நான்கு வகைப்பறைகள் இருந்தன. முல்லைப்பறை தடாரி என்றும், குறிஞ்சிப் பறை தொண்டகம் என்றும், மருதப்பறை கிணை என்றும், நெய்தற்பறை மீன்கோட்பறை என்றும் அழைக்கப்பட்டன. இக்காலத்துள்ள தோற்கருவிகளில் கஞ்சிரா, டோலக் என்பவை குறிப்பிடத்தக்கவை.

## துளைக் கருவிகள்

புல்லாங்குழல், நாதசுரம், முகவீணை, மகுடி, தாரை, கொம்பு, எக்காளை முதலியவை துளைக் கருவிகளாகும். இக்கருவிகள் மரத்தாலும் உலோ கத்தாலும் செய்யப்பட்டவை.

"குழல்" பண்டைத் தமிழரின் இசைக் கருவி களுள் மிகவும் பழமையானதாகும். காட்டில் நீண்டு வளர்ந்திருக்கும் மூங்கில்களில் வண்டுகள் துளைத்த துளைகளின் வழியே கோடைக்காற்றுப்

புகுந்து இயங்குவதால் இன்னிசை எழுந்தது. இவ்வினிய ஓசையைக் கேட்ட பண்டைத் தமிழர் குழலை அமைத்தனர். இதனை,

*"ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கில்*
*கோடையவ்வளி குழலிசை யாக"*

என அகநானூற்றில் (82) வருதலால் அறியலாம். இடையன் பசுத்திரளோடே காட்டில் தங்கித் தீக்கடைக் கோலால் புகை பிறக்கும்படி கையாலே தீயைக் கடைந்து அக்கடை கோலி லுள்ள தீயினால் துளையிட்டு மூங்கிலில் ஆக்கின குழலில் பாலைப்பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. மூங்கிற் குழலைக் கோவலரே பெரும்பான்மையும் ஊதி வந்தமை,

*"குழல் தொடங்கினரே கோவலர்"*

என நற்றிணையும் (371-9),

*"கல்லாக் கோவலரூதும்*
*வல்வாய்ச் சிறுகுழல்"*

என்று அகநானூறும் (219-15.6) கூறுதலால் அறியலாம்.

மூங்கிற்குழற்குப் புல்லாங்குழல் என்றும் பெயர். இது சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி முதலியவற்றாலும் செய்யப்பட்டது என்பது சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையினால் அறியலாம். மூங்கிற்குழல் தூம்பு, வங்கியம் என்னும் பெயர்களாலும் வழங் கப்பட்டு வந்தது. பண்டைக் காலத்திற் கூத்தர் தம் ஆடற்றுறைக்கு வேண்டிய இசைக் கருவிகளுள் ஒன்றாகத் தூம்பினையும் கொண்டு சென்றார்கள் என்பது பதிற்றுப்பத்து, மலைபடுகடாம் என்னும் நூல்களால் தெரிகிறது. "குறுநெடுந் தூம்பொடு முழவுப் புணர்ந்திசைப்ப... கோடிய ரிறந்த" என அகநானூற்றில் வருதலான் கூத்தர் குறுந்தூம்பு நெடுந்தூம்பு என இரண்டு வகையான தூம் பினைக் கொண்டு சென்றார்கள் என்று அறிய லாம். குறுந்தூம்பு "சிறுவங்கியம்" என்றும், பெருந் தூம்பு "பெருவங்கியம்" என்றும் வழங்கப்பட்டன. பெருவங்கியம் களிற்றின் கைபோலும் வடிவுடைய தென்பது "கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடு மின்" என்பதற்குக் "கண்திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெரு வங்கியத்தை இசையுங்கோள்" என்னும் புற நானூற்றுரையானும் அறியப்படும்.

ஏழ்துளையான வங்கியமும், ஐந்து துளை யான வங்கியமும் பண்டைக்காலத்தில் வழங்கி வந்தன என்பது, "ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த் தன்ன" எனப் பரிபாடலில் வருதலான் அறியலாம். கொன்றைக் குழல் முதலியனவும் பண்டைக்காலத்தில் ஊதப்பட்டு வந்தமை,

*"கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி"*
*"ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி"*
*"முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி"*

எனச் சிலப்பதிகாரத்து வருதலான் அறியப்படும்.

எக்காலத்தும் கரம் வேறுபடாமலிருப்பது குழலேயாம். யாழ் நரம்பு குளிர்ச்சியாலே தன் நிலைகுலைந்து ஓசை வேறுபடுதலுண்டு.

*"தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை*
*கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்*
*கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப"*

என நெடுநல்வாடையில் ஆசிரியர் நக்கீர னார் கூறுதல் காண்க. இங்ஙனம் ஓசை வேறு பட்டவிடத்துக் குழல் ஓசையின் துணையினால் யாழ் நரம்புக்கு இசைகூட்டினார்கள். இதனை, "நரம்பின் றீங்குரல் நிறுக்குங் குழல்போல்" எனக் கலித்தொகையில் வருதலானுமறியலாம். பாட்டி னைச் சுருதி குன்றாமல் கைக்கொண்டு நிற்பதும் குழலேயாதல், "விளிப்பது கவரும் தீங்குழல்" என்பதனாலும் அறியப்படும்.

பண்டைச் சான்றோர் இசைக்கருவிகளில் குழலினையே முதன்மையாகக் கொண்டனர் என்பது,

*"குழலகவ யாழ் முரல"*
*எனப் பட்டினப்பாலையிலும்,*
*"குழலினும் யாழினும்"*
*எனச் சிலப்பதிகாரத்தும்,*
*"குழலினிது யாழினிது"*

எனத் திருக்குறளிலும் குழலினை முதற் கண்வைத்துக் கூறுதலான் அறியலாம். குழலின் வழியே யாழ் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தன

என்பது,

*"குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்*
*தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்*
*பின்வழி நின்றது முழவே"* (3-139-41)

எனச் சிலப்பதிகாரத்து வருதலான் அறியப் படும். வயில் என்பது ஊதப்படும் இசைக்கருவி களுள் ஒன்று. இது "ஊது கொம்பு" என்றும் சொல் லப்படும். இது திண்ணிய வயிரத்தை உடையதென் பது திண்காழ் வயிர் எனத் திருமுருகாற்றுப்படை யிலும், ஓசை பரந்தெழும் பெரிய வாய் வட்டத்தை யுடையதென்பது "பாடுஏர் பெழுதரும் பகுவாய் மண்டிலத்து வயிர்" என அகநானூற்றிலும் வருவன வற்றால் அறியப்படும். இதன் ஓசை, கிளி, நாரை, மயில் இவற்றின் ஓசைபோன்றதென்பது சங்க இலக்கியங்களால் தெரிகிறது. இது ஆடு களத்திலும் ஊதப்பட்டமை "ஆடுகள வயிரின்" என்ற அகநானூற்றுக் குறிப்பால் அறியப்படும்.

வளை என்பது சங்கு. வயிரும் வளையும் பாசறையிடங்களிலும் போர்க்களத்திலும் ஊதப் பட்டு வந்தன என்பது முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, பதிற்றுப் பத்து என்னும் நூல்களால் தெரிகிறது. குறவர்கள் வயிரும் வளையும் ஊதி முருகக் கடவுளை வழிபட்டார்கள் என்று திருமுரு காற்றுப்படை கூறுகின்றது.

### நரம்புக் கருவிகள்

"யாழ்" பண்டைக்காலத்து வழங்கிய நரம்புக் கருவியாகும். மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்பிகள் பூட்டப்பட்டவை நரம்புக் கருவி களாகும்.

சங்க காலத்தில் சீறியாழ், பேரியாழ் என்னும் இருவகை யாழ்கள் வழங்கி வந்தன. சங்க இலக்கியங்களில் வரும்,

"பாணன் கையது பண்புடைச் சீறியாழ்" (நற்றிணை, 30), "பெரிது புலம்பினனே சீறி யாழ்ப் பாணன்" (ஐங்குறுநூறு, 475), "விளரி நரம்பின் சீறியாழ்" (அகநானூறு, 279), "அருந் துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்" (அகநா னூறு, 331), "கருங்கோட்டுச் சீறியாழ்" (அகநா னூறு, 316), "மண்ணமை முழவின் பண்ணமைச் சீறியாழ்" (பொருநராற்றுப்படை, 109), "இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ" (சிறுபாணாற்றுப்படை, 35), "ஏழ்புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ்" (மதுரைக்காஞ்சி, 559), "தொடைபடு பேரியாழ் பாலை பண்ணி" (பதிற்றுப்பத்து, 46), "இடனுடைப் பேரியாழ்" (பெரும்பாணாற்றுப்படை, 462), "வள்ளுயிர்ப் பேரியாழ்" (மலைபடுகடாம், 37) போன்ற பழந்தமிழ் இலக்கியக் குறிப்புகள் பண் டைத் தமிழரின் சீறியாழ், பேரியாழ் பற்றி அறியத் துணைபுரிகின்றன.

மகரயாழ், சகோடயாழ் என்பன சங்க காலத் திற்குப் பின்னர் தோன்றியனவாகும். இந்த யாழ் களைப் பற்றிச் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. பேரியாழ் 21 நரம்பையும், மகரயாழ் 19 நரம்பை யும், சகோடயாழ் 14 நரம்பையும், சீறியாழ் எனப் படும் செங்கோட்டி யாழ் 7 நரம்பையும் கொண் டவையாகும்.

மகர யாழிற்குப் பத்தொன்பது நரம்பு என்பது, "பத்தொன்பது நரம்பு கட்டின மகரயாழ்" எனச் சீவகசிந்தாமணியுரையில் (608 நச். உரை) வருதலானும் அறியலாம்.

"வில்யாழ்" என்னும் ஒருவகை யாழும் பண்டைத் தமிழர்களால் வாசிக்கப்பட்டு வந்தது. இதனை இடையன் வாசித்து வந்தான். குமிழங் கொம்பை வில்லாக வளைத்து மரல் நாரினால் திரித்த கயிற்றினை, நாணாகக் கட்டி வில்யாழை இடையன் செய்து அதில் குறிஞ்சிப்பண்ணை வாசித்தான் என்று (பெரும்பாணாற்றுப்படை 175, 184) குறிப்பிடுகின்றது.

### கஞ்சக் கருவிகள்

ஒன்றோடு ஒன்றைத் தட்டி ஒலியையுண் டாக்குவன கஞ்சக் கருவிகளாகும். தாளம், குண்டு தாளம், பிரமதாளம், ஜலார் ஆகியவை கஞ்சக் கருவி களாகும். இவை வெண்கலத்தால் செய்யப்படுபவை யாகும். பண்டைத் தமிழர்கள் கஞ்சக் கருவிகளை யும் இசைக்குப் பயன்படுத்தினரென்பது, "நுண் ணுருக் குற்ற வெள்ளடாப் பாண்டில்" என்று மலை படுகடாத்து வருதலால் அறியலாம்.

**முடிவுரை**

பண்டைத் தமிழர் வாழ்வில் இசைக்கலை பெருஞ்சிறப்புடன் விளங்கியமைக்கு அவர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் பெரிதும் காரண மாயின. பண்டைத்தமிழர்கள் இசைக்கருவிகளைப் புனிதப் பொருளாகக் கருதி வழிபட்டனரென்பதும், அக் காலத்தில் ஆண்கள் மட்டுமன்றிப் பெண் களும் இசைக்கருவிகளை இசைத்தனரென்பதும், இறைவழிபாட்டிற்கும், கோயில் விழாவிற்கும் இசைக்கருவிகள் பயன்பட்டன என்பதும், இசைக் கருவிகள் வெற்றியின் சின்னமாகவும் வெற்றிக் குப் பயன்படும் கருவியாகவும், முன்னறிவிப்பைத் தெரிவிக்கும் குறியீடாகவும் விளங்கின என்பதும் இவ்வாய்வால் தெரியவருகின்றது. பழந்தமிழரின் இசைக்கருவிகள் பல இக்காலத்தில் மறைந்துவிட்ட போதிலும், தமிழரின் இசைக் கருவிகளின் வர லாற்றில் பண்டைத் தமிழரின் இசைக்கருவிகளே முதன்மைச் சிறப்பைப் பெற்று விளங்குகின்றன. இன்றைய இசைக்கருவிகளின் பலவகையான வளர்ச்சி நிலைகளுக்கு பண்டைத் தமிழ் இலக்கி யங்களில் வரும் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளும், இசை நுட்பங்களும் அடிப்படை எனலாம்.

**துணை நூல்கள்**


1. ஆளவந்தார், ஆர்.,
   தமிழர் தோற்கருவிகள், உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

2. இளங்குமரன், இரா.,
   பாணர், பாவாணர் ஆராய்ச்சி நூலகம், மதுரை, 1987.

3. சிவபாலன், எஸ்.கே.,
   பண்ணிசைத் தத்துவம்.,
   சங்கீதாலயம், சென்னை, 1987.

4. வெற்றிச் செல்வன்,
   இசையியல்,
   மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.


❖ ❖ ❖

### ஆற்றுப்படை ஐந்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | 3. | பெரும்பாணாற்றுப்படை | 5. | தணிகையாற்றுப்படை |
| 2. | பொருநராற்றுப்படை | 4. | சிறுபாணாற்றுப்படை | | |

### இலக்கணம் ஐந்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எழுத்து | 3. | பொருள் | 5. | அணி |
| 2. | சொல் | 4. | யாப்பு | | |

### ஐம்பெருங் குரவர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அரசன் | 3. | தந்தை | 5. | மூத்தோன் |
| 2. | குரு | 4. | தேசிகன் | | |

### ஐவகைத் தந்தையர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பிறப்பித்தோன் | 3. | மணமுடித்தோன் | 5. | ஆபத்துக்குதவினோன் |
| 2. | கற்பித்தோன் | 4. | அன்னம் தந்தோன் | | |

### ஐவகைத் தாயார்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பாராட்டுந் தாய் | 3. | முலைத்தாய் | 5. | செவிலித்தாய் |
| 2. | ஊட்டுந்தாய் | 4. | கைத்தாய். | | |



# பரத நாட்டியம் - ஒரு வரலாற்று நோக்கு

பேராசிரியர் வி. சிவசாமி

ஆதி காலம் தொட்டுப் பரவலாக மக்களின் வாழ்க்கையிலே கலைகள் முக்கியமான ஓரிடம் வகித்து வந்துள்ளன. மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதிலும், வளம்படுத்துவதிலும், அழகியல் அம்சங்களை வலியுறுத்துவதிலும், அவற்றின் பங்களிப்புக்கள் குறிப்பிடற்பாலன. மனிதப்பண்பினை வளர்ப்பதிலும் கலைகள் நன்கு துணைபுரிந்துள்ளன. இக்கலைகளில் இசை, நடனம், கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இலக்கியம், நாடகம் முதலியன குறிப்பிடற்பாலன. இவற்றுள்ளே நடனம் மிகப் பழைய காலம் தொட்டு நிலவி வரும் கலைகளில் ஒன்றாகும். உலக வரலாற்றிலே எகிப்திலுள்ள நைல் நதிக் கரையிலும், ஈராக்கிலுள்ள யூப்பிரற்றிஸ், ரைகிறீஸ் ஆற்றுப்பள்ளத்தாக்கிலும், இந்தியாவிலே சிந்து நதிக்கரையிலும், சீனாவிலே குவாங்கோ சுற்றோரத்திலும் முகிழ்ந்து மலர்ச்சியடைந்த நாகரிகங்களில் நடனமும் இடம் பெற்றிருந்தது. சிந்து நதிக்கரையில் முகிழ்ந்து வளர்ந்த நாகரிகத்திலே, நடனமாதின் சிலை, சிவபெருமானின் நடனத்தோற்றத்தினை நினைவூட்டும். கல்லினாலானதும், தற்போது உடைந்த நிலையிலே காணப்படும் சிலையும், அந்நாகரிகத்தினைச் சேர்ந்த முத்திரைகளிலே காணப்படும் சில நடனக்காரரின் வடிவங்களும் குறிப்பிடற்பாலன. பிற்கால இந்திய நடனங்களின் சில முன்னோடிகளை இவற்றிலே காணலாம் எனக் கருதப்படுகின்றது.

சிந்து சமவெளிநாகரிகத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வேத கால நாகரிகத்திலும் நடனம், நடனக்கலைஞர் இசை, இசைக் கலைஞர் முதலியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, வைகறைப் பொழுதாகிய உஷைத் தெய்வம் பற்றிய பாடல் ஒன்றில் "ஆடை ஆபரணங்கள் நன்கு அணிந்து அரங்கிலே தோன்றும் அழகிய இளம் நடனமாது போல உஷைத் தெய்வம் அழகாகத் தோன்றினாள்" என்ற கருத்துப்படும் இருக்குவேதப் பாடல் ஒன்றினைக் குறிப்பிடலாம். இந்திய நடனவளர்ச்சிக் கட்டங்களைத் தொடர்ந்து எழுந்த இதிஹாஸங்கள், புராணங்கள் முதலியனவற்றிலும், பிற்கால நூல்களிலும், கட்டிடங்கள், குறிப்பாகச் சிற்பங்கள் ஓவியங்கள் ஆகியனவற்றிலும் காணலாம். இக்கலை வளர இதன் பிரதான அமிசங்கள் அறிமுறைகள் முதலியவற்றை விளக்கும் நூல்களும் தோன்றின. இவற்றுள் இன்று கிடைத்துள்ள, காலத்தால் முந்திய நூல் பரதரின் நாட்டிய சாஸ்திரமாகும். இது நாடகவியலைப் பற்றி விபரித்தாலும், நாடகத்தின் இன்றியமையாத அமிசங்களில் இரண்டான நடனம், இசை பற்றியும் நன்கு எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் ஏறத்தாழ கி.மு. 2ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதற்கு முன்னரும் சில நூல்கள் இருந்தமை பற்றி நூலில் அகச் சான்றுகள் உள்ளன; இந்நூல் வடமொழியில் எழுதப்பட்டிருப்பினும், இது கூறும் பொருள் ஏதோ வகையில் இந்தியா முழுவதற்கும் ஒரு பொருத்தமாகவும் காணப்படும். குறிப்பாக அவ்வப் பிராந்தியங்களுக்குரிய தனிச்சிறப்பான கலை அமிசங்களும் இதிலே கூறப்பட்டுள்ளன. பரதர் நாட்டிய சாஸ்திரத்திலே சம கால இந்தியாவின் வெவ்வேறு பிராந்தியங்களிலே நிலவிய நான்கு பிரவிருத்திகள் பற்றிக் கூறியுள்ளார். அவற்றுள்ளே தாஷிணாத்ய பிரவிருத்தி விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள இந்தியாவிலே நிலவியதாகக் கூறப்படுகின்றது. அதாவது "விந்திய மலைக்குத் தெற்கே வாழும் மக்கள் பலவகையான நிருத்தங்கள், கீதங்கள், வாத்தியங்கள் ஆகியனவற்றை விரும்புகிறார்கள் இவற்றிலே மிகக் கூடுதலாகக் கைசிகீ

விருத்தியும், திறமையான இனிய அழகிய அபி நயங்களும் காணப்படுகின்றன" என நாட்டிய சாஸ்திரம் கூறும் (14.36). மேலும் "கைசிகீ விருத் தியிலே பெரும்பாலும் நடிக்கின்ற அல்லது ஆடு கின்ற பெண்கள் கவர்ச்சிகரமான ஆடை அணி வர். இதிலே பலவகையான நடனங்களும், இசை யும் இடம்பெறும் இதிலே பயன்படுத்தப்படும் (நடிக்கப்படும் அல்லது ஆடப்படும்) விடயம் காதற்செயற்பாடு பற்றியதாகும். அல்லது அதனை அனுபவிப்பது சம்பந்தமானதாகவும் இருக்கும். இதனால் இவ்விருத்தி சிறப்பாக, கவர்ச்சிகரமாக இருக்கும்" எனப்பரதர் குறிப்பிட் டுள்ளார். (22.47). தென் பாரதத்தில் இன்றும் செழுமையுடன் நிலவுகின்ற சாஸ்திரீய நடனங் களிலே பரத நாட்டியத்திலேதான் மேற்குறிப் பிட்ட அம்சங்கள் நன்கு காணப்படுகின்றன.

இந்தியக் கலைகள் பற்றி நோக்குகையில் இரண்டு பிரதான அம்சங்களைக் கவனித்தல் நன்று. இக்கலைகளிலே சாஸ்திரீயக் கலை களிலே பாரததேசம் முழுவதற்கும் பொதுவான குறிப்பிட்ட அம்சங்கள் ஒரு வகையானவை. மற்றையவை அவ்வப்பிராந்தியங்களுக்கான தனிச்சிறப்பியல்புகளாகும். முன்னையவற் றிலே நீண்ட காலமாக இந்தியாவின் பொது மொழியாக விளங்கிய வடமொழியின் பயன் பாடு (கலைகள் பற்றிய கோட்பாடுகளைக் கூறும் நூல்களும், இசை, நடனம் போன்றவற்றிற் கான பாடல்களில் ஒரு பகுதியும் இம்மொழியில் உள்ளன). கலைகளை ரசிப்பதற்கான ரசக்கோட் பாடு போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இதே போன்று அழகியல் அம்சங்களையும் குறிப்பிட லாம். மற்றைய வகையில் அவ்வப்பிராந்தியங் களிலே நிலவும் மொழியின் பயன்பாடு, தனிச் சிற்பியின் அம்சங்கள், நாட்டுப்புறக்கலைகள் முதலியன அடங்கும். சமய நம்பிக்கைகள், மெய்யியல் மேற்குறிப்பிட்ட இரண்டு வகையி லும் காணப்படும்.

தமிழகத்திற்கே சிறப்பான பரத நாட்டி யத்தின் சில முக்கிய அம்சங்களைக் குறிப்பிட லாம். இந்நடனத்தின் அடிப்படை அலகு அடவு. இன்றைய பரத நாட்டியத்தில் சுமார் 120 அடவு கள் உள்ளன. இவை ஏற்கனவே நிலவி வந்தா லும், இற்றைக்குச் சுமார் இரண்டு நூற்றாண்டு களுக்கு முன் வாழ்ந்த பொன்னையா, சின் னையா, வடிவேலு, சிவானந்தம் எனும் தஞ்சைச் சகோதரர்களே இவற்றை ஒழுங்குபடுத்திச் செம் மையாக்கினார் எனக் கூறப்படுகின்றது. மேற் குறிப்பிட்ட 120 அடவுகளில் சுமார் 70 அடவு களே இன்று நடைமுறையில் உள்ளனவாகக் கூறப்படுகின்றது. ஆடும்போது பூமியிலே கால் சேர்வது தட்டு அடவு, நெட்டு அடவு, மெட்டு அடவு என மூவகைப்படும். இவ் ஆடல் பரதர் கூறும் கரணம் என்பதற்குச் சமமான தமிழ் நடனத்தின் அமிசமாகும் எனக் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் கருதுகின்றார். குறிப்பு மூன் றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1178 - 1233) குளத்தூர் சிவாலயத்திலுள்ள கல்வெட் டில் உள்ளது. பரதநாட்டியம் பெரும்பாலும் ஒரு தனிக் கலைஞரின் (ஆண் / பெண்) ஆடல் ஆகும். இது நிருத்தம் (அபிநயமற்ற ஆடல்), நிருத்தியம் (அபிநயங்கள், ரசனைகள் முதலி யனவற்றைப் பயன்படுத்தும் ஆடல்) என இரண்டு பகுதிகள் கொண்டதாகும். இக்கலைக்கான நிகழ்ச்சி நிரலிலே மேற்குறிப்பிட்ட இரண்டும் இடம்பெறும். இஃது ஆடல் நடிப்பு, பல அங்க அசைவுகள், வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை முதலிய ஒன்றிணைந்த கூட்டுக் கலையாகும். பண்ணிசையும், கர்நாடக இசையும் இதற் குரிய இசைவடிவங்களாகும். ஆனால் தற்காலத் திலே ஹிந்துஸ்தானி போன்ற வேறு சில இசை வடிவங்களுக்கும் இது சிலரால் ஆடப்படுகின்றது. இதற்கு யாழ், முழவு, புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், வயலின் முதலிய வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆண்களுக் குரிய உத்வேகமுள்ள தாண்டவம், பெண்களுக் குரிய மென்மையான நளினமான லாஸ்யம் என இருவகையாக ஆடப்பட்டாலும் காலம் தோறும் ஆண்கள் தாண்டவம் மட்டுமன்றி, லாஸ்யத்தையும், பெண்கள் லாஸ்யத்தை மட்டுமன்றித் தாண்டவத்தையும் ஆடிவந்துள் ளனர். எனினும் பரத நாட்டியம் லாஸ்யவலி வகையைச் சேர்ந்ததே. இந்நடனம் வளம்மிக்க

கலையாகும். ஒரு குறிப்பிட்ட பாடலை ஒரு சிறந்த ஆடற்கலைஞர் தனது அறிவாற்றல், மொழிப்புலமை, கற்பனைத்திறன் முதலியன வற்றைப் பயன்படுத்திப் பல்வேறு சஞ்சாரிபா வங்களை ஏற்படுத்தி அழகிய ஆடற்கோலங் களை நீண்டநேரம் ஆடிக்கொண்டேயிருக் கலாம். இத்தகைய தனிச் சிறப்புப் பலருக்கு வியப்பினை ஏற்படுத்தி வந்துள்ளது.

இந்நடனக் கலைக்குரிய பாடல்கள் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, ஹிந்துஸ்தானி முதலிய மொழிகளில் உள்ளன. இவற்றுள்ளே தமிழ் தமிழகத்திற்குரிய மொழி யாகும். ஏனையவை வெவ்வேறு காலங்களில் ஏற்பட்ட தொடர்புகளால் வெவ்வேறு அளவுகளில் பரத நாட்டிய மரபில் இவ்வாறு இடம்பெற்றுள் ளன. நாட்டிய சாஸ்திர மரபு வைதிக மரபுத் தொடர்பு போன்றவற்றாலும், வடமொழி ஒரு பொது மொழியாக வழங்கி வந்தமையாலும், தமி ழகத்தில் ஆட்சி செய்த பல்லவர், பாண்டியர், சோழர் ஆகியோரும் அவர்களுக்குப் பின்னர் ஆட்சி செய்த தெலுங்கு மொழி பேசிய விஜயநகர நாயக்க மன்னரும், மராத்தியரும் வடமொழி யையும் ஆதரித்து வந்தமையாலும் இத்தொடர்பு நிலவி வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட மன்னர்களுக் குக் கன்னடம், தெலுங்கு மொழிகள் நிலவிய மாநிலங்களின் தொடர்புகளிருந்தன. இவர் களிலே தெலுங்கர்களான விஜய நாயக்க மன் னர்கள் ஆட்சிக் காலத்திலே பரதநாட்டியம் அவர்களுடைய பேராதரவு பெற்றிருந்தது. தெலுங்குக் கலைஞர்கள் இக்கலைக்கு குறிப் பிடத்தக்க பங்களிப்புகள் செய்துள்ளனர். மேலும் பாரத நாட்டிற்கான பிரதான இசையாகக் கர்நாடக இசையே விளங்குகின்றது. அந்த இசைக்குரிய சாஹித்தியர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகளிலும் வடமொழியிலும் இருப்பதால், இம்மொழிகளி லுள்ள இசைப்பாடல்கள் தேவைக்கேற்றபடி இக்கலையிலிடம்பெற்றதில் வியப்பில்லை. மேலும் நடனத்துக்குரிய குறிப்பிட்ட ராக, தாள அமைப்பும், கருத்துச் செறிவும் உள்ள சிறந்த இசைப்பாடல்கள் தேவைக்கேற்றவாறு பயன் படுத்தப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. மேலும் பரத நாட்டியம் ஒரு மரபு வழிக்கலை யம்சமானபடியால், இம்மரபையொட்டிச் சில பிற மொழிப்பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது தமிழர்களின் சாஸ்திரீய நடனமாகை யாலே தமிழ் உருப்படிகளே பெரும்பாலும் சமகாலத்திலே பயன்படுத்தப்படுகின்றன.

சாஸ்திரீயம் அல்லது செந்நெறிக் கலையா தல் குறிப்பிட்ட வரையறையிலான விதிகள், வரம் புகள் ஆகியனவற்றிற்கேற்பவே இஃது ஆடப்படும். இவ் விதிகளை எவரும் தாம் நினைத்தவாறு மாற் றவோ மீறவோ முடியாது. ஆனால் குறிப்பிட்ட வரை யறைக்குள்ளே தான் காலத்திற்கேற்ற மாற்றங் களைச் செய்யலாம். புதியனவற்றைச் சேர்க்க லாம். மேலும் குறிப்பிட்ட வரையறையை விட்டு விலகாத காரணத்தினால், இதிலே வளர்ச்சிக்கு இடமில்லை என்ற தவறான கருத்தினையும் ஒரு சாரார் கூறுவர். குறிப்பிட்ட வரையறைக்குள்ளே இதிலே மாற்றம், புதுமை, வளர்ச்சி ஏற்பட இதன் சாஸ்திரத்திலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் நீண்டகால வரலாறே இதற்குச் சான்று பகரும்.

இக்கலை ஒரு புனிதமான கலையாக நிலவி வந்துள்ளதா? என்பதும் உற்று நோக்கற் பாலது. இந்திய பாரம்பரியக் கலைகள் பொது வாகச் சமய நிழலிலே வளர்ந்து வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. சாஸ்திரீயக் கலைகள் என் றால் என்ன, நாட்டுப்புறக்கலைகள் என்றால் என்ன அவற்றிலே சமயச்சாயல், புனிதத் தன்மை கவனிக்கப்பட்டு வந்துள்ளன. அவற் றிலே சமயச் சார்பற்ற இயல்புகள் காணப்படினும் சமயச் சார்புத்தன்மை பொதுவாக வலியுறுத் தப்பட்டு வந்துள்ளது. அந்தவகையிலே பரத நாட்டியமும் சமயச் சார்புள்ளதாகப் போற்றப் பட்டு வந்தாலும் அரச அவைகளிலும் வேறு சில இடங்களிலுமிது சமயச் சார்பற்றதாகவும் போற்றப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

சங்க காலத்திலேயே (சுமார் கி.மு. 200 - கி.பி. 300 வரை) பரத நாட்டியத்திற்கான சில முன்னோடிக்கருத்துக்களைச் சங்க நூல்கள் கூறும் சில கூத்துக்களிலே காணக்கூடியதாக

உள்ளதெனக் கருதப்படுகின்றது. சங்ககாலத்திலே நடனம் கூத்து, ஆடல் என அழைக்கப்பட்டது. இசையும் கூத்தும் பிறந்தபொழுதே இயல் தமிழாகிய இலக்கியமும் பிறந்திருக்கலாம். தமிழிலுள்ள சொற்களே போதிய சான்றுகளாகும். அசைதல் என்ற பொருள்படும் ஆடல் என்ற சொல்லும் ஆடலோடு பண்கலந்த செய்யுளைக் குறிப்பிடும் பாடல் (பாவோடு கலந்த ஆடல்) என்ற சொல்லும் ஆதிகாலத்திலே தமிழர்கள் முத்தமிழாகிய இயல், இசை, நாடகக் கொள்கையைப் பின்பற்றினர் என்பதற்குத் தக்கசான்றுகளாம் எனத் த. திருநாவுக்கரசு எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார். கூத்தும் (நடனமும்) இசையும் தமிழர்களின் முதுசொத்துகளாகத் தொன்றுதொட்டு நிலவி வந்துள்ளன.

சங்ககாலத்திற்குச் சற்றுப் பிந்திய காலத்திலெழுந்த சிலப்பதிகாரம் பழந்தமிழரின் ஓர் இசை, நடனக்களஞ்சியம் எனலாம். இது இயல், இசை, நாடகமாகிய முத்தமிழ்க் காப்பியமாகப் போற்றப்படுகின்றது. இதிலே வருணிக்கப்படும் இரு கதாநாயகிகளில் ஆடல், பாடல், அழகு குன்றாத மாதவி ஐந்து வயது தொடக்கம் ஏழாண்டு காலமாக வரன்முறைப்படி நடனம் கற்று சோழ மன்னன் கரிகாலன் முன்னிலையிலும் சான்றோராகிய ரசிகர் முன்னிலையிலும் "நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து" அரங்கிலே திறமையாக ஆடி அனைவரின் பாராட்டுக்களையும், அரசனிடமிருந்து 1008 கழஞ்சு பொன்னையும், தலைக்கோலிப்பட்டத்தையும் பெற்று ஆடலரசியாக விளங்கினாள். தென்னாசியக் கலைகளின் வரலாற்றில் இத்தகைய ஒரு சிறந்த நடன அரங்கேற்றம் பற்றிய வருணனையினைப் பிறிதொரு நூலிலே காணமுடியாது. "நாட்டிய நன்னூல்" என இங்கு கூறப்படுவது நாட்டியசாஸ்திரமெனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இக்காலம் தொட்டாவது பரதரின் நாட்டிய சாஸ்திரச் செல்வாக்குத் தமிழக நடனத்திலேற்பட்டதெனலாம். தமிழகத்திலே நிலவி வந்த ஆடல்பற்றிய கருத்துக்கள், நாட்டிய சாஸ்திரக்கருத்துக்களுடன் சில வகைகளில் ஒன்றிணைந்து புது மெருகு பெற்று, நேர்த்தியான நடனக்கலைவடிவம் உருவாக வழிவகுக்கப்பட்டதெனலாம். மாதவியின் ஆடல் தொகுதிகளில் கூறப்படும் பதினொரு ஆடல்களும் சிவபிரான், முருகன், திருமால், கொற்றவை, திருமகள், மன்மதன், இந்திராணி ஆகிய தெய்வங்கள் ஆடியவை என்பதும் குறிப்பிடற்பாலது. மேலும் இந்நூலிலுள்ள கடலாடுகாதை, கானல்வரி போன்றவற்றிலும் நடனம் பற்றிய சில முக்கியமான குறிப்புகள் உள்ளன. இந்நூலிலுள்ள ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய பகுதிகளிலே கிராமிய நடனப் பண்புகள் நன்கு தென்படுகின்றன. எனவே சாஸ்திரீய நடனம் பண்புகளும், கிராமிய நடனப் பண்புகளும் சிலப்பதிகாரத்திலே வருணிக்கப்பட்டுள்ளமை ஈண்டுக் குறிப்பிடற்பாலது. பிற்காலப் பரத நாட்டியத்தின் முன்னோடியான வடிவங்கள் சிலவற்றையாவது, மாதவி அரங்கேறி ஆடிய ஆடலிலே காணலாம். இன்றைய பரதம் போலவே இதுவும் ஒரு தனிக்கலைஞரின் ஆட்டமே. இதை "இளங்கோ அடிகளும் (சிலப்பதிகார ஆசிரியர்) அவரின் நூலுக்கு அரும்பத உரை எழுதியவரும், உரையெழுதியவரான அடியார்க்கு நல்லாரும் நாட்டியம் என்றே அழைத்துள்ளதிலிருந்து இன்று பெண்கள் ஆடும் ஆடலை "பரத நாட்டியம்" என்பதே பொருந்தும்" எனக் கலாநிதி இரா. நாகசுவாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏறக்குறைய கிரீதகாலப்பகுதியைச் சேர்ந்த (சுமார் 4ம் நூற்றாண்டளவில்) அரச்சலூர் எனும் இடத்தில் கிடைத்துள்ள இரண்டு தமிழ்ப்பிராமிக்கல்வெட்டுகள் குறிப்பிடற்பாலன. இக்காலப் பரத நாட்டியத்திலுள்ள தொடர்ச்சியான சில சொல்லுக்கட்டுக்கள் இவற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளன. பாத (கால்) அசைவு பாடப்பயிற்சி வகுப்புகளுக்காகக் கூறப்படுவதுபோல இவை தென்படுகின்றன. எடுத்துக்காட்டுகளாக:

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

என வந்துள்ளமையைக் குறிப்பிடலாம். தமிழக சாஸ்திரீய நடனத்தில் இஃது ஒரு மைல் கல் எனலாம்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டளவிலே தமிழகத் திலேற்பட்ட பக்தி இயக்கத்தின் விளைவாக இசை யும், நடனமும் இறைவனை ஒத்துதற்கான சிறந்த சாதனங்களாகப் பரவலாக முக்கியத்துவம் பெற்றன. காரைக்காலம்மையார், திருமூலர், சைவ நாயன்மார் பாடியுள்ள சைவத் திருப்பாடல் களிலும், ஆழ்வார்கள் பாடியுள்ள வைணவத் திருப்பாசுரங்களிலும் இசை, நடனம் பற்றிய குறிப்புகள் பரவலாக வந்துள்ளன. இக்காலத் திலே (கி.பி. 575 - 900 வரை) தமிழகத்தின் வடபகுதியிலே பல்லவரும், தென்பகுதியிலே பாண்டியரும் ஆட்சி செய்தனர். இப்பல்லவர்-பாண்டியர் காலத்திலே தமிழகத்தின் பல விட யங்களிலும் சைவ, வைணவக் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எழுந்த ருளியுள்ள இறைவனைப் பற்றி மேற்குறிப்பிட்ட அருளாளர்கள் திருப்பாடல்கள் இயற்றி மக்க ளோடு மக்களாய் ஊர்தோறும் சென்று இறை பக்தியை வளர்த்தனர். இதனால் இசை, நடனம் முதலிய கலைகளும் வளர்ந்தன. இவை முக்தி யளிக்கும் சாதனங்களாகப் போற்றப்பட்டன. எடுத்துக்காட்டுகளாக:

"பண்ணிமையாலே பாடியும் ஆடியும்
பயிலவல்லார்கள் பரலோகம் சேர்வரே
பண்ணியல்பாகப் பக்திமையாலே
பாடியும் ஆடியும் பயிலவல்லோர்கள்
விண்ணவர் விமானம் கொடுவர ஏறி
வியனுலகாண்டு வீற்றிருப்பரே" எனத்

திருஞானசம்பந்தர் கூறியுள்ளமையைக் குறிப் பிடலாம்.

சிலப்பதிகாரம் போன்று தேவாரங்களிலும் அரங்கு பற்றிய சில குறிப்புகள் வந்துள்ளன. எடுத்துக்காட்டுகளாக "அரங்கிடை நூலறிவா ளர் அறியப்படாததோர் கூத்து" எனத் திருநா வுக்கரசரும், "காந்தாரம் இசை அமைத்துக் காரிகையார் பண்பாடாக வினார்வீதி தேம் தேம் என்று அரங்கேறிச் சேயிழையார் நடமாடும் திருவையாறே" எனத் திருஞானசம்பந்தரும்,

"மண்ணார் முழவும் குழவும் இயம்ப
மடவார் நடமாடும் மணியரங்கும்" எனச்

சுந்தரரும் பாடியுள்ள தேவாரப் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

இக்காலத்திலே கோவில்களில் வழிபாட் டின்போது, முறைப்படி இசைபாடவும், நடனமாட வும் தேவரடியார் எனும் கலைஞர்கள் இக்கலைச் சேவையிலீடுபடுத்தப்பட்டனர். எடுத்துக்காட் டாக, பல்லவ மன்னனான இரண்டாம் நந்திவர் மன் காலத்தில் (கி.பி. 710 - 775) முத்தீஸ்வரக் கல்வெட்டின்படி முதலிலே 32 அடிகள் மாடும் (நடனமாதரும்) பின்னர் பன்னிரண்டு பேரும் சேர்க்கப்பட்டு 44 நடனமாதற் கலைப்பணி யும், சமயப்பணியும் செய்தனர் என அறியப்படு கின்றது.

இந்நடனக் கலையினைக் குறிக்கும் பரதம் எனும் பதம் முதன்முதலாகத் தமிழிலே திவாகரம் எனும் இக்காலத்தியத் தமிழ் நிகண்டிலே வந் துள்ளது. இங்கு கூத்து இந்நடனத்தினைக் குறிக் கும் சதிர் எனும் பதம் "நடம், சதிவழிவருவதோர் சதிரே, சதி வழிவருவதோர் சதிர் உடையீர்" எனத் தேவாரத்தில் வந்துள்ளது. மேலும் நடனத்துடன் தொடர்புள்ள சதி (ஜதி), லயம் போன்ற சொற் களும் "சரியின் முன்கை நன்மாதர் சதிபட மாநடமாடி" எனச் சம்பந்தரும் "கூடிய லயம் சதி பிழையாமை" எனச் சுந்தரரும் தேவாரங் களின் குறிப்பிட்டுள்ளனர்.

பல்லவர் - பாண்டியரைத் தொடர்ந்து தமி ழகத்திலேற்பட்ட சோழப்பெருமன்னர் ஆட்சிக் காலத்திலே (கி.பி. 900 - 1200 வரை) நடனம் உட்படப் பல்வேறு கலைகளும் இப்பெருமன்ன ரின் பேராதரவு பெற்றன. சோழப்பெருமன்ன னான முதலாம் ராஜராஜன் (கி.பி. 985 - 1015) தன்னுடைய ஆட்சிக் காலத்தில் அமைத்த தஞ்சைப் பெருவுடையார் (பிருஹதீஸ்வரர்) எனும் பெரிய சிவாலயத்திலே கலைப்பணியும்,

சமயப்பணியும் புரிவதற்கு 400 தேவரடியார் கள் நியமிக்கப்பட்டிருந்தமை பற்றிச் சமகாலக் கல்வெட்டுக்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. இக்கோவிலிற் போலவே வேறு பலகோவில் களிலும் தேவரடியார் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கான நிலமானியங்களும் வழங்கப் பட்டிருந்தன. நடன நிகழ்ச்சிகள், தலைக்கோலிப் பட்டம் வழங்குதல் போன்றவையும் இடம்பெற் றன. நாட்டியகரணங்கள் சிற்பங்கள் நன்கு அமைக்கப்பட்டன. சோழர்காலப் பேரிலக்கியங் களான கம்பராமாயணத்திலே

*"கைவழி நயனம் செல்ல கண்வழி மனமும் செல்ல*
*ஐய நுண்ணிடையார் ஆடும் ஆடக அரங்கு*
*கண்டார்"*

என வரும் செய்யுட் பகுதியும்,

பெரிய புராணத்திலே

*"கற்பகப் பூந்தளிரடி போங்காமருசாரிகை செய்ய*
*உற்பலமென் முகிழ் விரல் வட்டணையோடும்*
*– கைபெயரப்*
*பொற்புறுமக்கையின் வழிப்பொருகயற்கண் புடை*
*– பெயர*
*அற்புதப் பொற் கொடி நுடங்கி ஆடுவது போல*
*– ஆடினார்"*

என வரும் செய்யுளும் குறிப்பிடற் பாலன. சோழப் பெருமன்னர் கால முடிவில் எழுதப்பட்ட சைவ சித்தாந்த நூல்களிலொன் றான உண்மை விளக்கத்திலே சிவபிரானின் திருநடனம் 'பரதம்' எனக் குறிப்பிடப்பட்டுள் ளமை கவனித்தற்பாலது.

சோழப் பெருமன்னருக்குப்பின் ஒரு நூற் றாண்டுக்குப் பின் பாண்டியப் பெருமன்னரும், பின்னர் விஜயநகரப் பெருமன்னர் நாயக்கர் ஆட்சியும் (கி.பி. 1336 – 17ம் நூற்றாண்டு வரை) தமிழகத்திலேற்பட்டது. இவர்களைத் தொடர்ந்து மராத்தியர் முஸ்லிம்கள் ஆட்சி ஏற்பாட்டுக்குப் பின்னர் காலப்போக்கிலே பிரித்தானியரின் ஆதிக்கம் நிலவிற்று. மேற்குறிப்பிட்ட விஜயநகரப் பெருமன்னர், நாயக்கர் ஆட்சிக் காலங்களிலே வடமொழி குறிப்பாகத் தெலுங்குப் பண்பாட்டின் தாக்கம் தமிழகத்திலே நன்கு ஏற்பட்டது. ஏற் கனவே குறிப்பிட்டவாறு தெலுங்குமட்டுமன்றிக் கன்னட மராத்தியக் கலைச் செல்வாக்கு ஏற் பட்டது. வடமொழித் தொடர்பு மேலும் தொடர்ந்து நிலவிற்று. இக்காலத்தில் நடனம் பற்றிய நூல் கள், சாஹித்தியங்கள் முதலியனவற்றில் இப் போக்கினை அவதானிக்கலாம். தஞ்சை சரஸ் வதி மகால் நூலகத்தைச் சேர்ந்த அறிஞரான திரு. நா. விசுவநாதன் அந்நிறுவனச் சஞ்சிகை யிலே "பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சையில் பரத நாட்டியக்கலை எனும் தலைப்பில் இது பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இவரை விடப் பேராசிரியை சீதா. நாட்டியக்கலைஞர் முனைவர் ரா. கலாராணி, கலாநிதி இரா. நாக சுவாமி முதலியோரும் இது பற்றி எழுதியுள்ளனர். இக்காலகட்டமுடிவிலே கி.பி. 1750 – 1850 வரையுள்ள காலப்பகுதியிலே கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான சியாமா சாஸ்திரிகள் முத்துஸ்வாமி தீக்ஷிதர், தியாகராஜ சுவாமிகள் ஆகியோரும், பொன்னையா முதலிய தஞ்சை நாட்டிய சகோதரர்களும் வாழ்ந்து கர்நாடக இசை, பரத நாட்டியம் ஆகியனவற்றிற்குப் பெரும் பங்களிப்புகள் செய்துள்ளனர். தஞ்சை சகோதரர்களே இன்று நடைமுறையிலுள்ள பரத நாட்டியத்தை வகுத்தவர் எனக் கூறப்படு கின்றது. எனினும், ஏற்கனவே நிலவிவந்த நடனத்தினை காலத்திற்கேற்றவாறு இவர்கள் செம்மைப்படுத்தியும், வளம்படுத்தியும் உள்ள னர் எனக் கொள்ளலாம்.

இது ஒருபுறமிருக்க நாட்டியக் கலையிலே சில சீர்கேடுகளும் ஏற்பட்டு வந்துள்ளன. குறிப் பாக கலைஞர்களில் ஒரு சாராரின் ஒழுக்கக் கேடுகள் அதிகரித்தன. இதனால், இதற்கு நீண்ட காலமாக இருந்து வந்த சிறப்பும், புனித மும் குன்றின. ஒரு சாரார் இதனைக் கற்பது, பார்ப்பது தகாததெனக் கூறிவந்தனர். முற் காலத்தில் உருத்திர கணிகையர் எனும் சிறந்த ஒழுக்கம், பக்தியுள்ள நடனக்கலைஞர் (தேவ தாசிகளில் ஒரு பிரிவினர்) பலரின் மரியாதை யைப் பெற்றிருந்தனர். அத்தகையோர் காலப் போக்கில் குறைந்துவிட்டனர். இத்தகைய உருத் திர கணிகையரைப் பாராட்டியுள்ள நாவலர் பெரு மான் அப்பெயர்பெற்றவர்கள் அன்றி ஒழுக்கமற்

றோர் அக்காலத்தில் இருந்தபடியால் அவர் களைத்தான் கண்டித்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியிலே சீர்கேடுகள், ஒழுக்கமின்மை கொண்டுள்ள தேவதாசிகளுக்கெதிரான இயக்கம் ஏற்பட்டது. அதேவேளையில் இச்சீர்கேடுகளைக் களைந்து இந்நடனக்கலைக்குப் புதிய மெருகும், உத்வேக மும் அளித்து அதனை மேம்படுத்துவதிலே ஈ. கிருஷ்ண ஐயர், திருமதி ருக்மிணிதேவி அருண் டேல், முதலிய கலைஞர்கள் நன்கு செயற்பட்டு வெற்றி கண்டனர். இதன் விளைவாக, இதுவரை பொதுவாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் (தேவ தாசிகள் / கணிகையர்) ஆடிவந்த நடனத்தி னைச் சமூகத்தில் எவரும் குறிப்பாக மேல்தட்டு களில் உள்ளவரும் கற்கும் நிலை ஏற்பட்டது. குருகுல முறையிலே பெரிதும் கற்கப்பட்டு வந்த இக்கலையினை நிறுவனரீதியாகவும் கற்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. திருமதி ருக்மிணி தேவி அருண்டேல் நிறுவிய கலாக்ஷேத்திரம் ஒரு சிறந்த நடனக் கலை நிறுவனமாகும். தொடர்ந்து நடனக்கலை குருகுல முறைப்படி யும், நிறுவன ரீதியிலும் கற்பிக்கப்படுகின்றது. தமிழகத்தில் மட்டுமன்றி, இந்தியாவின் பிற மாநிலங்கள் சிலவற்றிலும், இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலே தமிழர் வாழும் பல நாடுகளிலும் பரதம் இன்று நன்கு கற்கப்படு கின்றன. அரங்குகளிலே பரத நாட்டியத்திற் கான சதங்கை ஒலி தொடர்ந்து கேட்கின்றது. பரத நாட்டிய நிகழ்ச்சி நிரலிலும் காலத்திற் கேற்றவாறு சில புதிய அம்சங்களும் இடம் பெறுகின்றன. தமிழரல்லாத வேறு சிலரும் இந்நடனத்தைக் கற்கின்றனர்.

இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட பரத நாட்டியம் தமிழர்களுக்குச் சிறப்பான சாஸ்திரீய நடனமாக விளங்குகின்றது. புனிதமான கலையாகப் போற்றப்படுகின்றது.

***சில உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்***


கலாராணி முனைவர் ரா: தஞ்சை வளர்த்த பரதக்கலை,
மதுரை, 2004
சிவசாமி பேராசிரியர் வி, பரதக்கலை
மூன்றாம் பதிப்பு, யாழ்ப்பாணம் 2005
நாகசாமி டாக்டர் இரா. சொன்மாலை,
சென்னை, 2000
The Journal of the Music, Academy Madras
The Journal of the Tanjore Serfojis
Sarasvati Mahal Library, Tanjore.


❖ ❖ ❖



**மொழிகளின் சிறப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1. | வணிக மொழி | - | ஆங்கிலம் |
| 2. | காதல் மொழி | - | பிரெஞ்சு |
| 3. | பக்தி மொழி | - | தமிழ் |
| 4. | இசை மொழி | - | இத்தாலி |
| 5. | சட்ட மொழி | - | கிரேக்கம் |
| 6. | கிராமிய மொழி | - | சிங்களம் |
| 7. | கவிதை மொழி | - | உருது. |





# பரத நாட்டியமும் இந்து சமயமும்

**திருமதி. கிருஷாந்தி இரவீந்திரா**
முதுதத்துவமாணி — நடனம்
முன்னாள் தலைவர்,
நடனத்துறை,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அகிலமெல்லாம் அசைந்து கொண்டே இருக்கின்றது. அண்ட கோளங்கள் எல்லாம் ஓய்வின்றிச் சுழன்று கொண்டே இருக்கின்றன. பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அசைவும் தாளம் தவறாமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. தாளம் தவறாத நாட்டியக்கலையில் மனித வாழ்வும் ஒரு மலர்ச்சி பெறுகின்றது.

இத்தகைய உன்னதக் கலையை இயக்குவித்து உள்ளும் புறமும் ஒரே ஆனந்தமயமாய் நிறைந்து விளங்குகின்றது. எல்லையில்லாததோர் எழிலருள். அந்த அருள் படைக்கும் பேரெழிற் கூத்தின் உருவகமாய் விளங்குவதே நடராஜ மூர்த்தம். உருவமாகவும் அருவமாகவும் நின்று அண்டசராசரங்கள் யாவற்றையும் இயக்கும் பரம்பொருளின் ஆடல் தத்துவத்தைப் புலப்படுத்தி நிற்கும் கலைவடிவமே நடராஜ நடனம்.

*உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே*
*ஓசையில் பிறந்தது இசையின் உயர்வே*
*இசையின் உயிர்ப்பில் ஆட்டத்து இயல்பு*
*ஆட்டத்து இயல்பிலிருந்து கூத்தினது அமைவு*
*கூத்தில் பிறந்தது நாட்டியக்கோப்பே.*

என்று கூத்த நூல் குறிப்பிடுகின்றது.

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் பூத்த குமிழ் நகையும், ஆகாய கங்கையும், பனித்த சடையும், பவளம் போன்ற திருமேனியும், அம் மேனியின் அழகுக்கு மெருகூட்டும் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் கண்டு களிக்கும் பேறு கிட்டினால் இவ்வுலகில் எத்தனை முறை வேண்டுமாயினும் பிறக்க ஆவல் கொண்டுள்ளேன் என்று தில்லையம்பலக் கூத்தப்பிரானின் ஆனந்தத் தாண்டவத்தைக் கண்ணுற்று மெய்மறந்து பாடுகின்றார் அப்பர் சுவாமிகள்.

உலகப் பொருள்கள் அனைத்தையும் தன்னுருவான எம்பெருமான் நிருத்தம் செய்யப் புகுந்தால் ஆயிரமாயிரம் கருத்துக்கள் தாமாகச் சென்று அந்நடனத்தை காண்புகாவோ! ஆம். அப்பெருமானின் நிருத்தத்தில் அரிய பொருள்களைக் கண்டு ஆன்றோர் விளக்கம் தந்துள்ளார்கள். சிவபெருமானை ஆடற்பொருளாகக் காட்டும் தோன்மங்களும் வழிபாடுகளும் அனுபூதிநிலை தரிசனங்களும் இலக்கியங்களும் கல்விச் செயற்பாடுகளிலே பரக்கக் காணப்படுகின்றன.

பரத நடன ஆற்றுகை அரங்கின் மூலமூர்த்தியாக நடராஜன் அமைந்திருத்தலும் ஆடலின் முதல் வணக்கம் அன்னவர்க்கே தரப்படுதலும் நடராஜ தத்துவத்திற்கும் பரதநடனத்திற்கும் உள்ள தொடர்புகளை மேலும் வலுப்படுத்துகின்றது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் இறைவனை அடைவதற்குரிய சைவசாதனங்கள் என்று குறிப்பிடப்படும். சைவசாதனங்களுள் முதற்படியாகக் கூறப்படுவது சரியையாகும். சரியை என்ற சாதனத்தை அடியொற்றிப் பரத நடனம் முகிழ்ந்தெழுகின்றது. சரியை நெறியில் சரீரத்தின் துணைகொண்டு இறைதொண்டு செய்தல் விளக்கப்படுகின்றது. பரத நடனம் ஆடுபவர் தன்னை அடிமையாகவும் இறைவனை ஆண்டானாகவும் தனது உடலைக் கருவியாகவும் கொண்டு ஆடல்வழியாக இறைவழிபாடு செய்கின்றார். இங்கு இவ் ஆடற் செயற்பாடும் சரியை மார்க்கமும் ஒன்றாகின்றன.

நம்முடைய பாரம்பரியம், சமயம் ஆகியவை சார்ந்த பழைய நூல்களின் படி இந்துசமய கடவுளர்கள் யாவரும் நாட்டியக்கலையை விரும்புபவர்களாகவே காணப்படுகிறார்கள். சில சமயங்களில் அவர்களே ஆடல் வல்லவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். பகவான் கிருஸ்ணர் காலிங்க நர்த்தனமும், ராசலீலையும் ஆடியதாகக் கூறப்படுகின்றது. அழகிய அங்கஷாரத்துடனும் நடையுடனும் ஆடிக்கொண்டே வந்த மகா விஸ்ணுவை இலக்குமிதேவி கண்டாள் என்று விஸ்ணுதர்மேந்திர புராணம் கூறுகின்றது.

விநாயகருடைய பெயர்களுள் ஒன்று நிருத்த கணபதி, கல்ப விருட்சத்தின் அடியில் அவர் ஆடியதாகக் கூறப்படுகிறது. லாஸ்ய நடனத்தின் சிறப்பினை அம்பாளுடைய ஆடல் மூலம் சொல் லப்படுகிறது. இவ்வாறு இறைவனுக்கும் ஆடலுக் கும் உள்ள தொடர்பினை இலக்கியங்கள், புரா ணங்கள் செப்புகின்றன. ஒரு நாட்டின் பெரு மையைப் பறை சாற்றும் ஊடகங்களாக அந்நாட் டில் முகிழ்ந்தெழுந்த கலைகளின் செம்மையும், பழமையும், சிறப்புமே விதந்துரைக்கப்படுகின்றது. அந்த வகையில் தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டும் கண்ணாடியாக ஆடற்கலையும் மிளிர்கின்றது என்று சொன்னால் அது மிகை யாகாது. ஒரு கலையின் பழமையும், வளமும், அழ கும், செம்மையும் அது வளர்ந்து செழித்த நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டும் கண்ணாடிகளா கும். தமிழ் நாட்டில் தொன்று தொட்டுப் பயிலப்பட்டு வரும் ஆடற்கலை வரலாற்றுக்கு முற்பட்ட காலத் திலிருந்தே விளங்கியதைச் சான்றுகள் நிறுவு கின்றன.

தமிழகத்தின் ஆரம்ப வரலாற்றுக்காலமாகக் குறிப்பிடப்படும் சங்க காலத்தில் ஆடல்கள் நிகழ்த்தப்பட்டமையை இலக்கியங்கள் செப்பு கின்றன. அக்காலத்தில் இறைவனை வேண்டி யும், ஆடல் புரியும் ஆடல்வல்லார் மீது இறைவன் உருக்கொள்வான் எனக் கருதியும் ஆடல்கள் நிகழ்த்தப்பட்டன. சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் இறைவனே ஆடலின் ஆரம்ப கர்த்தா (இயக்கத்தின் மூலகாரணன்) எனும் கருத்து தழைத்தெழுந்தது. பாண்டரங்கம், கொடுகொட்டி என்ற ஆடல் வகைகளைச் சிவபெருமான் நிகழ்த்தி னார் எனவும் மல்லாடல், குடக்கூத்து எனப்படும் கூத்து வகைகளைத் திருமால் நிகழ்த்தினார் எனவும் நம்பினர்.

அதாவது மக்கள் ஆடல்களாக இருந்த ஆடல்கள் இறையாடல்களாயின. இறைவனை முன்னிறுத்தி வணங்கியே ஆடல்கள் ஆரம்பமா கின. கண்ணனும் நப்பின்னையும் எருமன்றத்தில் ஆடிய பாலசரித நாடகங்களைப் பின்பற்றியே தாம் ஆடுவதாக ஆய்ச்சியர் நம்பினர். குன்றக் குரவரோ முருகன் அருஞ்செயல்களைப் பாடியாடினார்.

சங்கமருவிய காலத்து இலக்கியமான சிலப் பதிகாரம், ஆடல் பற்றிக் கூறும் உயரிய இலக்கிய மாகக் காணப்படுகின்றது. இவ் இலக்கியத்திலே வழக்குரை காதையில் இறைவனுக்கும் காளிக்கும் நிகழ்ந்த ஆடல் போட்டியை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். அந்த ஆடலுக்குப் பன்னிரண்டு இன்னியங்கள் இயங்கின எனக் கூறப்படுகின் றது. சுத்த நிருத்தம், அவிநயக்கூத்து – இவ்விரண்டி லும் சிவபெருமான் காளியை வென்றதாகச் சம் மந்த நாயனாரும் தனது தேவாரப்பதிகங்களில் குறிப்பிடுகின்றார். மண்டல நிலையில் நின்று உள்ளாளம்பாடி வீசி எடுத்த பாதம் அண்டம் உற நிமிர்ந்தாடும் இறைவனை — காரைக்கால் அம் மையாரின் மூத்த திருப்பதிகம் குறிப்பிடுகின்றது.

பக்தி நெறிக்காலத்தில் இறைபக்தியோடி ணைந்து மனவெழுச்சிகளின் ஆற்றுகை மேலும் கூர்ப்பு அடையத் தொடங்கியது. அதாவது பல்ல வர் காலத்தில் பக்திச் செயற்பாடுகள் ஆடலுக் கெனத் திட்டவட்டமான கருத்தியலை வகுத்தன. பக்திக் கருத்தியல் தழுவிய ஆடல் தெய்வீக நிறைவு கொண்ட உணர்வுகளை அநுபவிக்கும் ஆடலாக வளர்ச்சியுற்றது. உயர்ந்த உண்மையை நோக்கிய தேடலே பல்லவர் காலத்தய பரதத்தின் உன்னத இலக்காகக் கொள்ளப்பட்டது. பல்லவர் காலத்தில் பக்தியை வளர்க்கும் சாதனமாகப் பரதம் உருக்கொண்டது. ஆடல் பாடல்கள் மூலம் இறை வனது உன்னதநிலை உணர்த்தப்பட்டது. அது மட்டுமல்லாது நாயன்மார்களது பாடல்களிலும் ஆழ்வார்களது பாசுரங்களிலும் இவ்வாடலின் சிறப்புக்கள் இயம்பப்படுவதை நோக்கும்போது ஆடலுக்கும் இறைக்குமுரிய உயரிய தொடர்பு புலனாகின்றது.

சோழர் காலத்தில் இத்தகைய உயரிய ஆடலானது மேலும் தெய்வத்துடன் இணைவதை அக்காலத்து இலக்கியங்கள் செப்புகின்றன. சோழர் காலத்தில் ஆடல் போன்ற கலைகளை வளர்க்கும் கலைக்களஞ்சியங்களாகக் கோயில்கள் அமைந்திருந்தன. சோழர்காலத்தில் ஆடல்கள் இறைவனுக்கே அர்ப்பணிக்கும் மோட்சக்கலை யாக, இறைவழிபாட்டின் ஓர் அங்கமாக உருக் கொண்டது. கோயில்களில் ஆடல் பயிற்றுவிக்கப் பட்டது. இதற்கென்றே பல கோயில்களில் நிருத்தமண்டபங்கள் அமைக்கப்பட்டன. இங்கே நடனமாடுவதற்கு ஆடல் மகளிர் அமர்த்தப் பட்டனர். அவர்கள் தேவரடியார்கள் என அழைக்கப் பட்டனர். அதாவது தெய்வத்திற்கு தொண்டு

செய்யும் (சிவத்தொண்டு) அடியார்கள் எனப்பட்ட வர்களாவர். இன்னொரு பெயராக தளியிலார் என்றும் குறிப்பிடப்பட்டனர். தளி + இல் + ஆர் எனப் பகுத்து – "தளி" என்றால் கோயில் - "இல்" என்றால் வீடு – எனக் கொண்டு கோயிலையே வீடாகக் கொண்டு பலர் இருந்தனர் என சோழர் வரலாறு கூறுகின்றது.

பின் வந்த காலத்தில் பரத நாட்டியம் தனக்குரிய தெய்வீக நிலையை விட்டுக் கீழிறங்கியதால் இழிவுநிலையை அடைந்தது. அதற்குப் பின்னர் மீண்டும் தெய்வீக நிலையில் உருக்கொண்டு செம்மை பெற்றது. தவத்தினால் முனிவர்கள் அடை யும் அதி உன்னத நிலையை ஆடற்கலை மூலம் அநுபவித்துணரலாம் எனும் இலக்கைத் தன்ன கத்தே கொண்டு ஆடற்கலையானது தெய்வீகக் கலையாக உலகினை வலம் வருகின்றது.

பரத நாட்டியத்தில் குறிப்பிடப்படும் தியான ஸ்லோகத்தில் கீழே குறிப்பிடப்படும் ஸ்லோகம் பரதநாட்டியத் தொடக்கத்தில் பிரயோகிக்கப்படு கின்றமை பரத நாட்டியத்தின் முழுமையை உணர்த்தி நிற்கின்றது. அதன் கருத்துப் பின்வரு மாறு அமையும்

"அவன் அங்க அசைவில் அண்டங்கள் இசைய, அவன் வாக்கியப் பேச்சினால் பிரபஞ்சமே மொழிய, அவன் ஆபரணம் நட்ஷத்திரத் திங்களெனத் திகழ, மங்கள சிவன் அவனை வழிபடுவோமே" என்பதாகும்.அதே போல்

*சிவமாட சக்தியுமாட சகத்தில்*
*அவமாட ஆடாத அம்பலமாட*
*நவமான தத்துவ நாதாந்தமாட*
*சிவமாடும் வேதாந்த சித்தாந்தத்துள்ளே*

எனக் குறிப்பிடும் திருமந்திரம், ஆடலுக்கும் இந்துசமயத்திற்குமுள்ள உயரிய நிலையை உணர்த்தி நிற்கின்றது.

உடலினைக் கருவியாகக் கொண்டு தெய்வீக அநுபவங்களை வெளிப்படுத்தும் வகையில் பரத நாட்டியம் ஒரு வகையில் யோகக்கலைக்கு ஒப்பானது என்றும் கூறலாம். பரதநாட்டிய நிகழ்வில் அதன் நிகழ்ச்சி ஒழுங்கு முறையானது ஒரு பக்தன் கோபுர வாயிலினூடாகச் சென்று இறை தரி சனம் செய்வது போன்றே வடிவமைக்கப்பட் டுள்ளது. அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா என்ற ஒழுங்குமுறை தான் மரபு வழியாகப் பின்பற்றப்படும் முறையான பரத நிகழ்வொழுங்கு எனக் கொள்ளப்படுகின்றது.

இவ்வகையில் அலாரிப்பு என்ற வெளிக்கோபுர வாயிலினூடாக உள் நுழைந்து ஜதீஸ்வரம் என்ற அர்த்தமண்டபத்தினை ஊடறுத்து சப்தம் என்ற மண்டபங்களைக் கடந்து வர்ணம் என்ற நிகழ்வில் புனிதமான கர்ப்பக்கிருகத்தினை அடைந்து தெய்வதரிசனம் செய்வதாக அமைகின்றது. இங்குதான் நாட்டியக் கலைஞர் இராக, தாள, பல்லவி நிலைகளில் திளைத்து தன்னுடைய கற்பனை வளத்தின் செழுமைத்திறன் வாயிலாக நாட்டியக்கலை மரபுடன் ஒன்றித்து ஆனந்தம் என்ற தன்னிலை மறந்த தெய்வீக அனுபவங் களைத்தானும் அநுபவித்துப் பார்வையாளர்களை யும் அநுபவிக்க வைக்கும் உயர்நிலையை எய்தும் வாய்ப்பினைப் பெறுகின்றார். இதனைத் தொடர்ந்து வரும் பதம் என்ற நிகழ்வில் வெளிப்புற உணர்வு கள் மறைந்த சாந்தமும், அமைதியுடனும் கூடிய நிலையினை ஒருவர் அநுபவிக்கக் கூடியதாக அமைகின்றது. ஆலயங்களில் வழிபாட்டிற்குத் துணைசெய் ஆரவாரங்கள் ஓய்ந்து, மேளதாள ஒலி அடங்கி, தெய்வ அருகாமையில் புனித அருட்பாக்களை ஓதும் நிலையினுக்கு ஒப்பாகப் பதம் நிகழ்வின் ஆன்மாவை உருகச்செய்யும் இசையும் அபிநயமும் அமைகின்றது. இறுதியில் மேளதாள ஆரவாரத்துடன் கூடிய கற்பூர தீப ஆரத்தியுடன் வழிபாடு நிறைவடைவதைப்போல் தில்லானா பல தொடர்ச்சியான அழகிய ஒழுங்க மைந்த அசைவு நிலைகளினூடாக ஆடப்பட்டுப் பின் பக்திப்பாடலுக்குரிய ஆடலுடன் பரதநாட்டிய நிகழ்வு நிறைவு பெறுகின்றது.

எனவே பரதநாட்டியம் இந்துசமய தத்துவங்களு டனும், வழிபடும் முறைமைகளினுடனும் ஒன்றித்த வகையில் ஒப்பற்ற உயரிய தெய்வீக ஆடல் என்று சொன்னால் அது மிகையாகாது.

* * *

## கல்வியியல்

- யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை வரலாறு
- ஏழாலைக் கிராமப் பாடசாலைகள் பற்றிய வரலாற்று நோக்கு
- மீள் பாடசாலையாக்கற் சமூகம்
- முன்பள்ளி – ஓர் அறிமுகம்
- ஆரம்பக் கல்வியில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மாணவருக்கான வழிநடத்தலும் செயற்பாடும்
- பாடசாலைத் தலைமைத்துவம்
- பாடசாலைகளில் முழுத்தர முகாமைத்துவப் பிரயோகங்கள்
- பாடசாலை நிர்வாகத்தில் நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்
- பாடசாலைகளில் உள சமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு
- கல்வியின் முக்கியத்துவம்
- நல்லாசிரியனே ஞானவிளக்கு
- பரீட்சைகளில் வெற்றி பெறுதல்
- சுதந்திர இலங்கையின் கல்வி நிர்வாக மாற்றங்கள்
- அடிப்படை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நெறியின் அவசியம்



# யாழ் / ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை வரலாறு

சிவ. சண்முகவடிவேல்
பன்னிரு திருமுறை பாராயணச் செம்மல்
கலாபூசணம்.

ஏறத்தாழ இன்னும் ஓர் பதினோரு ஆண்டுகள் முன்னோக்கிச் சென்றால் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் பெருமை பெறும் நிலையில் உள்ளது ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை. எனவே இந்த வித்தியாசாலை 1919ம் ஆண்டில் நிறுவப்பட்டது எனலாம்.

ஏழாலையைச் சேர்ந்த சைவப் பெரியார் ஐயம்பிள்ளை பொன்னையா என்பார், கல்வித் துறையிலும் சித்த மருத்துவத் துறையிலும் சைவ சித்தாந்த நூல் பயிற்சியிலும் சைவ சமய அனுட்டானத்திலும் அபிமானத்திலும் பேரும் புகழும் பூத்துச் சீரும் சிறப்பும் பொலிந்த ஓர் அறிஞராகத் திகழ்ந்தார். அவரே ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையைத் தொடக்குநராவார்.

அவரை அவர் வாழ்ந்த காலத்திலும் இந்தியாவிலும் அன்போடும் மதிப்போடும் அனைவரும் பொன்னையாப் பரியாரியார் என்று வாய் பொரிய அழைப்பார்கள். அந்நாளில் பாடசாலைக் கல்வி என்னும் போர்வையில் மறைந்து நின்று சைவச் சிறார்கள் கிறிஸ்தவ மதத்தில் மாற்றப்படுவதைத் தடுப்பதை அடிப்படையாகக் கருத்தில் கொண்டே திரு. பொன்னையா அவர்கள் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை நிறுவக் கால் கோள் நாட்டினார் என்று இன்றும் விடயம் அறிந்த வித்தகர்கள் விளம்புவார்கள்.

திரு. பொன்னையா அவர்களுடைய சைவ சமய பண்பாட்டுப் பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கொள்கை உரத்திடாள் போலும் வித்தியாசாலைச் சூழல் மதமாற்றம் அடைந்தோர் இல்லாமை குறிப்பிடத்தக்கது. சைவ சன்மார்க்க வித்தியாசாலை உருவானதன் பின்பு அதன் நெறியாளுகைக்குச் சபை இன்றியமையாது வேண்டப்பட்டது. சபையை உருவாக்குவதற்கு இயக்குநராக முன்னின்று உழைத்துச் சபையைத் தொடக்கி, அச் சபைக்கு "சன்மார்க்க சபை" என்று பெயருமிட்டுத் தலைவராகவும் திரு.பொன்னையா அவர்கள் பணியாற்றி வந்தார்.

1919ம் ஆண்டில் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையை சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் அவர்கள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். கல்வி கற்கும் மாணவர்களாக முப்பத்தைந்து பேர் சேர்ந்து கொண்டார்கள். அன்றைய நாளில் புலவர் அவர்களே கற்பித்தலை மாணவர்களுக்குத் தொடக்கி வைத்தார். அந் நாட்களில் திரு.ஐ.பொன்னையா அவர்கள் திரு.வே.தம்பையா உபாத்தியார், திரு.ஐ. நாகமுத்து உபாத்தியார் ஆகியோர் கௌரவ ஆசிரியர்களாகப் பாடங் கற்பித்தார்கள்.

ஆறாம் ஆண்டு வரையிலான வகுப்புக்கள் அந்நாட்களில் நடைபெற்றன. திரு.அ.குமாரசாமிப் புலவர் அவர்களே உரிய நாட்களில் வந்து மாணவர்களுடைய கல்வி அறிவுத் திறனைப் பரீட்சிப்பது வழக்கமாக இருந்து வந்தது. வித்தியாசாலைக்கு அரச உதவியும் ஆசிரியர்களுக்கு வேதனமும் பெற்றுக் கொடுக்கும் எண்ணத்தில் சைவ சன்மார்க்க சபை தீர்மானம் எடுத்தது.

மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை முகாமையாளரும் பிரசித்த நொத்தாரிசுமாக விளங்கியவருமான திரு.தெ.செ.துரையப்பா அவர்களை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையினுடைய தற்காலிக பொது முகாமையாளராகச் சைவ சன்மார்க்க சபை ஏற்றுக் கொண்டது. ஏழாலையைச் சேர்ந்த திரு.நீ.கதிரிப்பிள்ளை அவர்களைத் தற்காலிக பிரதி முகாமையாளராகவும் சபை அங்கீ கரித்துக் கொண்டது.

சைவ சன்மார்க்க சபையினருடைய செயற்பாடு சோர்வடைந்தமையினால் வித்தியாசாலை வளர்ச்சியில் விழுக்காடு காணப்பட்டது.

அந் நிலையை மாற்றி வித்தியாசாலையை ஊக்கத்தோடு நடாத்துவதற்குப் பரோபகாரியான திரு.நீ.கதிரிப்பிள்ளை அவர்கள் முன்னின்று உழைத்தார். திரு.நீ.கதிரிப்பிள்ளை அவர்களு டைய விடாமுயற்சியாலும் ஊக்க முடைமை யினாலும் வித்தியாசாலை வெற்றிப் பாதையில் வீறுநடை போடத் தொடங்கியது. (1922 - 1925)

**நவராத்திரி விழா**

ஊரவர்களுடைய ஒத்துழைப்போடு நவராத் திரி விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந் நாள்களில் தொடங்கப் பெற்ற நவராத்திரி விழா இந் நாள் வரை தடைப்படாது ஆண்டுதோறும் நிகழ்ந்துவருவது மனதிற்கு மகிழ்வைத் தரும் செய்தியாகும்.

இதற்கிடையில் 1921 இல் வித்தியாசாலையில் ஆசிரியப் பணி ஆற்றி வந்த திரு.நாகமுத்து உபாத்தியார் தமக்கு ஏற்பட்ட மனக் கசப்புக் காரணமாக ஆசிரியத் தொழிலை விட்டகன்றார். அவர் விலகியதோடு நின்றுவிடாமல் அப்பால் சென்று மூன்று பர்லாங் கடைத் தூரத்தில் உள்ள கட்டுவிளானை என்னும் குறிச்சியில் ஒரு பாட சாலையை ஆரம்பித்தார். அக்காலத்தில் அரசிற் குக் கல்வி நிர்வாக ஆலோசனைச் சபை அங்கத் தவர்களாக விளங்கிய சேர்.பொன்.இராமநாதன் சிவியாதெருவைச் சேர்ந்த திரு.பொன்னம்பலம் ஆகியவர்களுடைய ஒத்துழைப்போடு திரு.நாக முத்து உபாத்தியார் தாம் புதிதாக ஆரம்பித்த பாடசாலைக்கு உதவியைப் பெற்றுக் கொண்டார். அதனால் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலைக்கு அரச உதவி கிடைக்க நாட்கள் நீடித்தது.

வித்தியாசாலை தொடங்கி ஆறு ஆண்டு களின் பின்னர் அரச மானியம் வழங்கப் பெற்றது. (1925) அரசினர் உதவி கிடைக்கப் பெற்றதும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த எஸ்.வி.கந்தையா அவர்கள் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையினுடைய தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அந் நாளில் ஏழாலை வடக்கி லிருந்தும் மாணவர்கள் வித்தியாசாலையில் சேர்ந்து கல்வி கற்று வந்தார்கள்.

எஸ்.வி.கந்தையா அவர்கள் பெற்றோ ரையும் மாணவர்களையும் வித்தியாசாலையின் பக்கம் கவர்ந்து இழுக்கச் சில புதிய உத்தி முறை களைக் கையாண்டார். மாணவர்களுக்குக் கோலாட் டம் ஆடுவதில் பயிற்சியளித்து, அவர்களை வீடு வீடாக அழைத்துச் சென்று கோலாட்டம் ஆடுவித்து மக்கள் மத்தியில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தி மகிழ்வித்தார்.

அதனால் வித்தியாசாலையினுடைய விருத்திகளுக்கு வருவாய் போதுமானது கிடைத் தது. அவர் எடுத்த முயற்சிகளில் நெல் நடுதல், வீட்டு விவகாரம், கப்பலோட்டம், உறி பின்னுதல் என்பன சிலவாகும்.

1928ம் ஆண்டில் ஆண்டு -8 (V.S.L.C) பரீட்சைக்குத் தோற்றிய வித்தியாசாலை மாண வர்கள் அனைவரும் விசேட சித்தி பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோன்று அடுத்து 1929ம் ஆண்டி லும் மேற்குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றிய வித்தியாசாலை மாணவர்கள் அனைவரும் சித்திபெற்றுத் திகழ்ந்தார்கள்.

அதே ஆண்டில் எஸ்.வி.கந்தையா அவர் கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல திரு.இராம லிங்கம் என்பார் தலைமை ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திரு. இராமலிங்கம் காலத்தில் சைவ சன்மார்க்க சபை மீண்டும் புத்துயிர் பெற் றது. அதன் பெறுபேறாக தெ.ச.துரையப்பா அவர்களிடமிருந்து வித்தியாசாலையினுடைய முகாமைத்துவத்தின் பொறுப்பை மேற்படி சபை பெற்றுக் கொண்டது.

சைவப் பெரியார் ஐ.பேரம்பலம் அவர்களை மேற்படி வித்தியாசாலையினுடைய முகாமைத் தலைவராகச் சபை நியமித்துக் கொண்டது. இவர் சைவப் பெரியார் ஐ.பொன்னையா அவர்களுடைய சகோதரராவார்.

1962ம் ஆண்டில் அரசு பாடசாலைகளைக் கையேற்கும்வரை இவரே முகாமைத்துவராகக் கடமை புரிந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவப் பெரியார் ஐ.பேரம்பலம் அவர்களுடைய முகாமைத்துவ காலத்தில் வித்தியாசாலைக்குரிய காரியாலயம் ஒன்றைச் சைவ சன்மார்க்க சபை கட்டிக்கொடுத்தது.

இராமலிங்கம் அவர்களுக்குப் பின்னர் ஏழாலை மேற்குப் பகுதியிலுள்ள தம்புவத்தை என்னும் குறிச்சியைச் சேர்ந்த திரு. நா. தம்பு அவர்கள் வித்தியாசாலையினுடைய தலைமையாசிரியரானார்.

நா. தம்பு அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கும் திட்டம் செயற்படத் தொடங்கியது. ஏது காரணமோ அயலிலுள்ள பாடசாலை மதிய போசன அரசினர் வழங்கிய உதவியை மறுத்துவிட்டது. அதனால் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையும் அரசினர் உதவியை ஏற்கவில்லை.

இருந்தும் ஊரவர்களுடைய ஊக்கத்தால் வித்தியாசாலை மாணவர்களுக்கு மதிய உணவு தடைப்படாமல் வழங்கப்படுவதாயிற்று. அந்த நல்ல செய்தியினைச் செவிமடுத்த அயலிலுள்ள பாடசாலை மாணவர்கள் சைவசன்மார்க்க வித்தியாசாலையை நாடிவரத் தொடங்கினார்கள். இதனால் மனம் வருந்திய அயற்பாடசாலையைச் சேர்ந்தவர்கள்; மாணவர்கள் வித்தியாசாலைக்கு மாறுவதை நிறுத்துமாறு அரசினரிடம் முறைப்பாடு செய்தார்கள். அரசினர் அதனை அங்கீகரிக்கவில்லை.

இந்த உண்மைகளை அலசி ஆராய்ந்து பார்க்காமல் வித்தியாசாலையில் ஊழல் நிகழ்வதாகவும் உணவு பரிமாறுதலில் மோசடி நடப்பதாகவும் மேலிடத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அதனை விசாரணை செய்வதற்கு வந்த அதிகாரி முறைப்பாட்டில் உண்மை ஏதும் இல்லை என்று அறிக்கை சமர்ப்பித்தார்.

அதிகாரியினுடைய விசாரணையின் சிபார்சினால் இதுகால வரையில் வித்தியாசாலை மாணவர்களுக்கு மதிய உணவிற்குச் செலவழிக்கப்பட்ட செலவுத்தொகை கிடைக்கப்பெற்றது.

சைவசன்மார்க்க வித்தியாசாலை ஆசிரியர்களும் சன்மார்க்க சபையாரும் கூடிக் கிடைத்த பணத்தை என்ன வழியில் செலவிடுவது என்று ஆலோசித்து ஓர் தீர்மானத்தை எடுத்தார்கள்.

***அத்தீர்மானம் இது :*** ஆண்டுதோறும் ஆடிச்சோதியில் மடாலயத்தில் கொண்டாடப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைக்குச் செலவு செய்வது என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானப் பிரகாரம் 1942ம் ஆண்டிலிருந்து இந்நாள் வரையில் ஏழாலை அருள்மிகு கருணாகரப் பிள்ளையார் மடாலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை உபயமாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருவது கவனத்திற் கொள்ளத் தக்கது.

அது ஒரு புறமிருக்க 1943ம் ஆண்டில் தலைமையாசிரியர் நா.தம்பு அவர்களுக்குப் பின்னர் அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த ஞா.சுப்பிரமணியம் அவர்கள் தலைமை ஆசிரியப் பதவியில் அமர்ந்தார். அவருடைய காலத்தில் வித்தியாசாலையினுடைய கல்வித் தரம் மேலும் உயர்வடைந்தது.

1945ம் ஆண்டில் 5ம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் தோற்றிய நான்கு மாணவர்களும் சித்தி பெற்றதோடு அமையாது பரிசில்களும் பெற்றுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் சி. குமாரசாமி அவர்களும் ஆசிரியப் பணிக்கு அங்கீகரிக்கப்பட்டார். அவருடைய அயரா உழைப்பினால் வித்தியாசாலையின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள பாலர் பாடசாலைக் கட்டடம் ஏனைய ஆசிரியர்களுடைய பொருள் உதவியோடு கட்டிமுடிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அந்நாளில் வித்தியாசாலையில் சிரேஸ்ட தராதரப் பத்திர (S.S.C) வகுப்பு வரையில் பாடம் கற்பிக்கப்பட்டது.

ஞா. சுப்பிரமணியம் அவர்களைத் தொடர்ந்து க. சுந்தரம் அவர்கள் தலைமையாசிரியரானார். இவர் நீ. கதிரிப்பிள்ளை அவர்களுடைய மகனா வார் என்பது கருத்தில் இருத்தற்குரியது.

இவருடைய பதவிக்காலத்தில் சி.த.பத்திர (S.S.C.) வகுப்பு சிறப்பாக இயங்கி வந்தது. மாண வர்களுடைய ஒழுக்கம் கல்வியில் அக்கறை காட் டல் வளர்ச்சியடைந்தது.

1972ம் ஆண்டில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட கல்வி மறுசீரமைப்பினால் சைவ சன் மார்க்க வித்தியாசாலையில் வகுப்பு 5இற்கு மேற் பட்ட வகுப்புகள் நிறுத்தப்பட்டது. 5ம் வகுப்பு வரை யான வகுப்புக்கள் வித்தியாசாலையில் இடம்பெற் றது.

வித்தியாசாலையின் மேற்குப் புறமாக அமைந்துள்ள மண்டபம் இரண்டு மேன்மாடிக் கட்டமாக அமைப்பதற்கு அடிகோலப்பட்டது.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த புகழ்பெற்ற பொறியியலாளர் திரு. மூ.சின்னத்துரை அவர் களுடைய நெறியாளுகையில் நிகழ்ந்தது. அதற் கான செலவுத் தொகை ஒவ்வொரு ஆசிரியரின தும் 1½ மாத வேதனத்தால் சமன் செய்யப்பட்டது என்னும் செய்தியை ஆசிரியப்பணி ஆற்றிய திரு. நா.வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் வெளியிட்டார். துரதிட்டவசமாகத் திட்டமிட்ட பிரகாரம் மேன்மாடி உருவாகவில்லை.

தலைமை ஆசிரியர் திரு.க.சுந்தரம் அவர் கள் திருநீலயனார் கதிரிப்பிள்ளை அவர்களு டைய மகனாராதலினாலும் வித்தியாசாலைக்கு அண்மையில் வசித்து வந்தவர் ஆதலினாலும் தலைமையாசிரியர் காலம் முழுவதையும் உரிமை யோடும் அக்கறையோடும் செலவிட்டு வந்தமை நினைவுகூரத்தக்கது.

வித்தியாசாலைச் சுற்றாடலைப் பேணு வதிலும் மாணவச் சிறார்களுடைய கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டும் வித்தியா சாலையில் சிறு சிறு அபிவிருத்திகளில் ஈடுபட்டும் செவ்வனே கண்ணுங் கருத்துமாகிக் கண்கா ணித்து வந்தமையால் நலம்விரும்பிகளும் அபி மானிகளும் 'சுந்தரவாத்தியார்' என்று அழைத் தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

க. சுந்தரம் அவர்கள் தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அளவெட்டி யைச் சேர்ந்த மாணிக்கம் அவர்கள், ஏழாலை யைச் சேர்ந்த நவரத்தினம் அவர்கள், உடுவிலைச் சேர்ந்த கந்தையா அவர்கள், இணுவிலைச் சேர்ந்த நல்லதம்பி அவர்கள், ஏழாலையைச் சேர்ந்த மு. பாலசுப்பிரமணியம் அவர்கள், மயிலணியைச் சேர்ந்த சோ. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள், ஏழாலையைச் சேர்ந்த நடேசன் அவர்கள் ஒருவர் பின் ஒருவராகத் தலைமை ஆசிரியர் பதவியில் அமர்ந்து அருஞ்சேவை ஆற்றி வந்தார்கள். அவர் களுடைய பதவிக் காலத்தில் வித்தியாசாலைப் பெயரான "ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை" என்னும் பெயர் மாற்றியமைக் கப்பட்டது.

"ஏழாலை தெற்கு மேற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை" என்னும் பெயர் அமுலுக்கு வந்தது.

பின்னர் 1979ம் ஆண்டில் பழையபடி, "ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி யாசாலை" என்னும் பெயர் நடைமுறைப் படுத்தப்பட்டு இதுநாள் வரை அப்பெயரோடு வித்தியாசாலை இயங்கி வருகின்றது.

முதல் வாத்தியார் என்று அழைக்கப்படும் தலைமையாசிரியர் என்னும் தொழிற் பெயர் அதிபர் என்று மாற்றம் பெற்றது.

1984ம் ஆண்டில் அதிபர் நா. நடேசன் பதவியில் அமர்ந்தார். அவர் காலத்தில் வித்தி யாசாலையின் கல்வி வளர்ச்சி மேலோங்கியது.

அதிபர் நடேசன், 1-5 வகுப்பு வரையிலான தரத்தில் வலிதெற்குப் பிரதேசத்தில் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை சிறந்தது என்னும் புகழ் நிலவ அரும் பாடுபட்டவர் என்றால் மிகையாகாது.

திரு. நடேசன் அதிபராக அமர்ந்த நாளில் ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை பவள விழாவைச் சிறந்த முறையில் கொண்டாடியது. (1995)

ஏழாலையைச் சேர்ந்த சைவப்பெரியார் மு.ஞானப்பிரகாசம் அவர்கள் பவளவிழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

விழாவில் யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமை மேலும் சிறப்பை ஏற்படுத்தியது. அவர் இந்த வித்தியா சாலையினுடைய பழைய மாணவர் என்பது பவள விழாவையும் சைவ சன்மார்க்க வித்தியாசாலை யினுடைய பேரையும் புகழையும் மேலும் ஒருபடி உயர்த்திப் பூத்துப் பொலிவித்தது.

வித்தியாசாலையினுடைய புகழ்பூத்த மாண வர்கள் சிலர் பவளவிழாவில் பாராட்டிக் கௌர விக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்விழா அநேக காலம் ஏழாலை கண்டிராத ஒரு பெருவிழாவாகச் சிறந்து விளங்கியது.

அதிபர் பதவியில் அமர்ந்து திறமை வெளிப்பட செயற்றிறனாற்றி திரு. நா. நடேசன் இடம்பெயர்வில் இடம்பெயர்ந்தார்.

இடப்பெயர்வு 1995ம் ஆண்டு புரட்டாதி மாதத்திலிருந்து 1996ம் ஆண்டு சித்திரை மாதப் பகுதி வரையாகும்.

இதற்கிடையில் அதிபர் நா. நடேசன் அவர்கள் 1996ம் ஆண்டில் தமது சேவையி லிருந்து ஓய்வுபெறும் நோக்கத்துடன் நாவலப் பிட்டிக்குச் சென்று அங்கு வதிந்து வந்தார்.

அந்நாட்களில் பதில் அதிபராகக் கடமை புரிந்துகொண்டிருந்த திருமதி உ. கனகராசா மீளக்குடியமர்வு பெற்ற பின்பு மாணவர்களுடைய பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் கல்வி யைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

1996 புரட்டாதி மாதம் 15ம் திகதி இன்றைய அதிபராகிய திரு.செ. சிவநடராசா அவர்கள் சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபராகப் பொறுப் பேற்றுக் கொண்டார். அந்நாளிலிருந்து இந்நாள் வரை அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

புதிய அதிபரின் வருகைக்குப் பின்பு சைவ சன்மார்க்க வித்தியாசாலை பல புதுமைகளைக் கண்டது. புதுப்பொலிவுடன் மறுமலர்ச்சியாகிய புத்துயிர் பெற்றது. அவை யாவும் எழுத்தில் வடிப் பதற்கு அடங்காது. சுருங்கக் கூறின் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பொற்காலம் திரு. செ. சிவநடராசா அதிபராகப் பணியாற்றும் ஆண்டுகள் என்று குறிப்பிடுவது மிகப் பொருந்தும்.

எத்தனையோ மாற்றங்கள், எத் தனையோ புதுமைகள், எத்தனையோ திருப்பங்கள், எத் தனையோ வளர்ச்சிகள், எத்தனையோ அபிவிருத்தி கள், எத்தனையோ கட்டடங்கள், எத்தனையோ தளபாட வசதிகள், எத்தனையோ விளையாட்டுகள், எத்தனையோ நவீன கல்வி வளர்ச்சி. அத்தனை யும் பற்றி அறிஞர்கள் பின்னால் ஆராய்வதனால் இத்தனை வரலாற்றுப் பின்னணியோடு என் பணியில் நிறைவுறுகின்றேன்.

இவை,

சுகிர்தம் என்னும் மலரில் (2001) திரு.ந.தெய் வேந்திரன் J.P. அவர்கள் எழுதிய ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வரலாறு பகுதி -1 என்னும் கட்டுரையிலிருந்து எடுத்துத் திரட்டியும் கேள்வி மூலமும் சம்பந்தப்பட்டவர்களி டத்தில் உசாவி அறிந்தவற்றையும் உண்மைக்கு மாறுபாடின்றியும் தொகுக்கப்பெற்றது.

குற்றம் இருப்பின் பொறுத்தும் குணம் இருப்பின் கொள்வதும் அறிஞர் கடனாகும்.

* * *

# பாடசாலை பற்றிய மேலதிக தகவல்கள்

## பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இற்றைவரை நிர்வகித்த ஸ்தாபகர், முகாமையாளர், அதிபர்களது விபரம்

| பெயர் | பதவி | காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| திரு ஐ. பொன்னையா | ஸ்தாபகர் | 1919 | |
| திரு நீ. கதிரிப்பிள்ளை | பிரதேச முகாமையாளர் | 1922 | 1925 |
| திரு தெ.துரையப்பா | தற்காலிக முகாமையாளர் | 1922 | 1927 |
| திரு ஐ.பேரம்பலம் | பிரதேச முகாமையாளர் | 1926 | 1962 |

## இப்பாடசாலையை நிர்வகித்த அதிபர்கள் விபரம்

| பெயர் | காலம் | |
|---|---|---|
| | இருந்து | வரை |
| திரு. S.V. கந்தையா | 1925 | 1928 |
| திரு. S. இராமலிங்கம் | 1929 | - |
| திரு நா.தம்பு | - | 1943 |
| திரு ஞா.சுப்பிரமணியம் | 1943 | 1955 |
| திரு க.சுந்தரம் | 1955 | 1967 |
| திரு மா.மாணிக்கம் | 1967.01.01 | 1969.10.31 |
| திரு வே.கந்தையா | 1969.11.01 | 1971.07.31 |
| திரு வே.நல்லதம்பி | 1971.08.01 | 1979.08.22 |
| திரு சோ.சோமாஸ்கந்த ஐயர் | 1980.02.01 | 1984.05.20 |
| திரு நா.நடேசன் | 1984.05.21 | 1996.09.24 |
| திரு செ.சிவநடராசா | 1996.09.15 | 2008.11.27 |

♦ ♦ ♦


நவராத்திரி விழா


ஒளி விழா


கால்கோள் விழா


கட்டாயக்கல்வி


இருமாடிக்கட்டடத் திறப்பு விழா


ஆசிரியர்த்தின விழா


பரிசளிப்பு விழா


இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது உடற்பயிற்சி



# ஏழாலைக் கிராமப் பாடசாலைகள் பற்றிய வரலாற்று நோக்கு

**செல்வி பிரதா நவரட்ணம்,**
உப அதிபர்,
யா/ ஏழாலை மேற்கு -
சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

பழம் பெருமைகளைப் பறைசாற்றும் கிராமங் களில் ஏழாலைக் கிராமமும் ஒன்றாகும். சமய பக்தி யும் கல்விச் செழுமையும் ஒருங்கிணைந்து வளர்ச்சி யுறும் வகையில் கோயில்களும் பாடசாலைகளும் செவ் வனே தமது பணியைச் செய்துவருகின்றன. அவற்றி னூடே கிராமத்தின் வளர்ச்சி மிக உன்னதமாக மேலோங்கி வருகின்றது. ஒருபுறம் கோயில்கள் ஆன்மீகத்தை வளர்க்க, மறுபுறம் கல்விச்சாலைகள் கல்வி நடவடிக்கைகள் ஊடாக நற்பிரசைகளை உரு வாக்கி வருகின்றன. புகழ்பூத்த பல கல்விமான்களை உருவாக்கிச் சாதனை படைத்த பாடசாலைகள் இக் கிராமத்தில் பல உள்ளன.

பாடசாலையானது அறிவை வழங்குகின்ற ஒரு நிறுவனமாக மட்டுமன்றி அந்தக் கிராமத்தினுடைய கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் ஒரு கூடமாகவும் விளங்குகின்றது. ஒரு பாடசாலை யின் மூலமே கிராமம் எதிர்பார்க்கும் முன்னேற்றம், மாற்றங்களைக் கொண்டுவரமுடியும். அந்த வகை யில் ஏழாலைக் கிராமத்திற்குட்பட்ட அரச பாடசாலை களாகப் பின்வரும் பாடசாலைகள் காணப்படுகின்றன.

## யா / ஏழாலை மகாவித்தியாலயம்

யா/ ஏழாலை மகாவித்தியாலயம் J/206 என்னும் கிராமசேவையாளர் பிரிவில் 1919ம் ஆண்டு ஆசிரியப் பணிபுரிந்த திரு ச.நாகமுத்து அவர்களால் ஆரம்பிக் கப்பட்ட இப்பாடசாலையானது, எவ்வித குறைபாடு களுமின்றி அரை நூற்றாண்டிற்குள் பல்வேறு துறை களிலும் வளர்ச்சியடைந்து வந்துள்ள நிலையில், 1922ம் ஆண்டளவில் அரச பாடசாலையாக அரசு பொறுப்பேற்றது.

இதன் வளர்ச்சிக் கட்டங்களை நோக்கும்போது 1927ம் ஆண்டு வரை ஆரம்பப் பாடசாலையாகக் காணப்பட்ட, இப்பாடசாலையானது 1928 - 1930 காலப் பகுதியில் தமிழ் கனிஷ்ட பாடசாலையாக வளர்ச்சியடைந்துள்ளது. 1930 - 1936ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் பண்டிதர் சு.இராசஜயனார் தலைமைப் பதவியேற்றிருந்த நிலையில் தமிழ்க் கல்வி வளமும் தமிழ் உணர்வும் அங்கு சிறப்பாக வளர்ந்து வந்துள்ளன. 1937 - 1943ம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டுச் சீவனக்கல்விமுறைப் பாட சாலையாக வளர்ந்து வந்த காலத்தில், திரு வி.கே.நாதன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள் ளார். கமத்தொழிற் பயிற்சி, சிறுகைத்தொழிற் பயிற்சி என் பன சிறப்பாக நடைபெற்றுள்ளன. 1944 - 1954ம் ஆண்டு வரையிலான காலம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலமாகும். தொழிற்பயிற்சிமுறைக் கல்விப் பாட சாலையாக மாற்றம் பெற்றது. அதிபராகப் பதவி யேற்றிருந்த திரு.என்.ஜோசெப் என்பவர் இருமொழி ஆசிரியப் பயிற்சியும் பாடசாலைப் பரிசோதகராயி ருந்த அனுபவச் சிறப்புமுடையவர். அவருடைய காலத்தில் ஆரம்பப் பாடசாலை, உயர்தரப் பாட சாலை என இப்பாடசாலை தனித்தனியான இரு நிர்வாகங்களில் இயங்கியது. அத்துடன் வளர்ந்தோர் கல்விக்கான இராப் பாடசாலையையும் நடாத்தினார். 1955 - 1968ம் ஆண்டு காலப்பகுதியில் ஆங்கில சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டபோது, அப்போதைய அதிபராக திரு கா.தில்லையம்பலம் செயற்பட்டிருந்தார். ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தகைமையில் வளர்ச்சிபெற்ற இப்பாடசாலையில் 1960இல் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் எழுந் தன. 1967ம் ஆண்டு வீட்டுப்பணி, தையல்வேலை பாட போதனைகளும் சாதனங்களும் அமைவு பெற்றன. இக்காலப் பகுதியில் அதிபராக திரு சு.அம்பலவாணர் பதவியேற்றுள்ளார். 1968ம் ஆண்டு நிகழ்ந்த பாடசாலைத் தரப்படுத்தல் விதிக ளுக்கு இணங்க இப்பாடசாலை மகாவித்தியாலய மாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இவரது காலப்பகுதி யில் மாணவர் தொகை இரட்டிப்படைந்திருந்ததோடு பௌதிக வளமும் பல்கிப்பெருகின.

1988ம் ஆண்டில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே திரு தோமா.டானியல் அதிபராகப் பொறுப் பேற்றிருந்தார். இடிந்த சுவரை உயர்த்தும் நிலையில் அதிபர் பொறுப்பேற்றபோதும், மனஞ்

| பாடசாலையின் பெயர் | வகை | கிராம சே.பிரிவு | ஸ்தாபிதம் | ஸ்தாபகர் | முகாமை | மகுட வாசகம் | பாடசாலைக் குறியீட்டு எண் | பரீட்சை எண் | தொகை மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யா/ஏழாலை மகாவித்தியாலயம் | I C | J/206 ஏழா.மத்தி | 1919 | திரு நாகமுத்து | 1922 இலிருந்து அரசுடைமை | கற்க கல்வியை கற்றாங்கு ஒழுகுக | 1010003 | 11075 | 09170 |
| யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் | II | J/204 ஏழா.கிழக் | 1940 | திரு சு.நடேசபிள்ளை | 1960 இலிருந்து அரசுடைமை | மெய்ப் பொருள் காண்பதறிவு | 1010009 | 11077 | 09181 |
| யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை | II | J/203 ஏழா.தெற் | 1955.11.11 | திரு கு.முத்தவி | 1955 இலிருந்து அரசுடைமை | கற்க கசடற | 1010012 | 11079 | 09186 |
| யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை | III | J/201 ஏழா.மேற் | 1919 | திரு ஐயம்பிள்ளை பொன்னையா திருவாளர் நீலயனார் கதிரிப்பிள்ளை | 1962 இலிருந்து அரசுடைமை | குருவே துணை | 1010018 | 11081 | 09194 |
| யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை | III | J/203 ஏழா.தெற் | 1888 | சேர்ஜசாக் போல் போதகர் | இ.அமெரிக்கமிஷன் தற்போது அரசுடைமை | நூல் பல கல் | 1010017 | 11078 | 09193 |
| யா/ஏழாலை சென் இசிதோர் வித்தியாசாலை | III | J/204 ஏழா.கிழக் | 1894.05.28 | திரு பீரிஸ் பொன்னையா | இ.றோ.க.மிஷன் தற்போது அரசுடைமை | கல்வியே உடைமை | 1010016 | 11080 | 09192 |
| யா/கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | III | J/202 ஏ.தெ.மே | 1961.02.06 | திரு சி.கிருஷ்ணர் | 1962 இலிருந்து அரசுடைமை | இளமையிற் கல் | 1010020 | 11152 | 09198 |
| யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை | III | J/205 ஏழா.வடக் | 1888.10.11 | தென் இந்தியத் திருச்சபை | தெ.இ.திருச்சபை 1963 இலிருந்து அரசுடைமை | கற்றனைத் தூறும் அறிவு | 1010015 | 11076 | 09191 |

சோராது உறுதியான மனநிலையுடனும், நம்பிக்கையுடனும் ஊண் உறக்கமின்றி அயராது பாடசாலைக்காக உழைத்தார். மாணவர்களுக்கு நல்ல நற்பண்புகள், ஒழுக்கங்களைப் புகட்டினார். தானொரு மாற்றுச் சமயமாக இருந்தும் எமது சமயப் பழக்கவழக்கங்கள், சிவசின்னம் அணியவைப்பதில் மிகவும் அரும்பாடுபட்டு உழைத்தார். தானே ஆங்கிலப் பாடத்தைக் கற்பித்து மாணவர்களுக்கு ஆங்கில அறிவை ஊட்டியதுடன் போட்டிகளிலும் பரீட்சைகளிலும் தேறவைத்து, வெற்றியீட்ட வைத்தார். சமய விழாக்களினை முன்னின்று நடாத்தி சமயப் பண்பாடு பழக்கவழக்கங்களை மாணவரிடையே ஏற்படுத்தினார். அவரது காலப்பகுதியில் தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டிகளில் மாணவர்கள் பங்குகொண்டு வெற்றியீட்டியதன் மூலம் பாடசாலை பெரும் பெயரைப் பெற்றது. அத்துடன் உயர்தர வகுப்புகளில் கலை, வர்த்தகம் இவ்வாறு வளர்ந்து வந்த காலப்பகுதியில் இறைவனுக்கும் பொறுக்கவில்லைப் போல திடீரென ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக 1992.02.29ல் இவ்வுலகைவிட்டு நீத்தார். இவரைத் தொடர்ந்து திருமதி சரஸ்வதி என்பவர் அதிபராக இருந்தார். அவருக்கு உறுதுணையாக திருமதி நா.கந்தசாமி ஆசிரியர் உபஅதிபராக இருந்து உயர்ந்த சுவரை இடியாது பாதுகாத்தார்.

1993.07.05 இலிருந்து திரு செ.செல்லையா அதிபராகப் பதவியேற்றார். இக்காலப்பகுதியிலும் மாணவர்கள் போட்டிகளில் வெற்றியீட்டிப் பரிசில் பெற்றனர். பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகள் கிடைத்தன. 1993 - 1994ம் ஆண்டுகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் வீதம் சித்தி பெற்றனர். வருடாவருடம் பல்கலைக்கழக அனுமதி மாணவர்களுக்குக் கிடைக்கப் பெற்றன. ஏறத்தாழ 900 மாணவர்கள் கல்விகற்றனர். 1995ல் ஏற் பட்ட இடப்பெயர்வுடன் மாணவர் தொகை குறைந்து 200 ஆகியது.

1997.12.30ல் இவர் உயர்பதவியேற்றுச் சாவகச்சேரி கல்விக்கோட்டப் பணிப்பாளராகச் சென்றார். தொடர்ந்து திரு.அ.தம்பித்துரை அதிபராகப் பதவியேற்றுச் சாதாரண மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியுடன் முன்னேறியது. எனினும் நீண்டகால இடைவெளியில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 2000ம் ஆண்டு ஒரு மாணவியும் 10 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளியும் பெற்றனர். பல்கலைக் கழகத்திற்குச் சராசரி இருவர் வருடாவருடம் சென்றனர். தமிழ்த்தினப் போட்டியில் மாகாண மட்டம் வரை மாணவர்கள் சென்று வெற்றியீட்டினர்.

இவ்வதிபரும் 2001.07.31ல் ஓய்வுபெற்றார். தொடர்ந்து 2001.08.15 இலிருந்து திரு அ.நடராஜ சுந்தரம் அதிபராகக் கடமையேற்றார். இவரது காலப் பகுதியில் மென்மேலும் பல வளர்ச்சிப்படிகள் ஏற்பட்டன. ஆரம்பப்பிரிவு உன்னதநிலை அடைந்துள்ளது. பாடசாலைக்குரிய ஆரம்பப்பிரிவு, இடைநிலைப் பிரிவிற்குரிய பௌதிகவளத் தேவைகள் நிறைவேற்றப் பட்டன. மின்சார ஒலி, ஒளி சாதனங்கள், பல பிறப் பாக்கிகள் கைவசம் கிடைக்கப்பெற்றன. ஆசிரியர்கள் மாணவர்கள் கல்வியுடனான தேவைகள் தனித் தனியாக நிறைவு செய்யப்பட்டன. குழாய்நீர் வசதிகள், மின்சார வசதிகள் செய்யப்பட்டன. இதனை விடத் தாமரைத் தடாகத்தில் சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டது.

கல்வி நிலையில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் என்றும் இல்லாதவாறு 2004ம் ஆண்டு இரு மாணவர்கள் சித்திபெற்றதுடன், மேலும் 06 மாணவர்கள் 100 இற்குமேல் புள்ளி பெற்றனர். க.பொ.த.சாதாரணதர, உயர்தரப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. போட்டிகளில் வெற்றிகள் பல கிடைத்தன. கவிதை, சித்திரம், கட்டுரைப் போட்டிகளில் இலங்கை ரீதியாக முதலாம், இரண்டாம் இடங்கள் கிடைத்தன. பல்கலைக்கழக அனுமதியில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தது. 2006ல் நடைபெற்ற உ/த பரீட்சையில் 04 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும், 03 மாணவர்கள் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் அனுமதிபெற்றனர். இதனைவிட உ/த பெறுபேறு என்றுமில்லாதவாறு உயர்பெறுபேறாக 6A, 2B கிடைத்தது. 80% மாணவர் சித்திபெற்றனர். அத்துடன் ஆங்கிலப் பாடத்தில் 10 மாணவர்கள் சித்திபெற்றனர்.

இவற்றைவிட கணனி அறை கட்டப்பட்டதுடன் கணனியும், தொலைக்காட்சி, CD Over Head Projector போன்றனவும் கிடைக்கப்பெற்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, பாடசாலை ஒரு சோலையாகவும் பூங்காவாகவும் மாற்றப்பட்டது. இந்நிலையில் 2006.11.12ல் இவ்வதிபர் ஓய்வுபெற திரு செ.ஞானச் சந்திரன் அவர்கள் அதிபராகக் கடமையேற்று தற்போது பாடசாலையை நடாத்தி வருகின்றார்.

**யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்**

இப்பாடசாலை 1940ம் ஆண்டு சித்திரைத் திங்கள் நன்னாளன்று ஆரம்பித்து வைக்கப்பட்டமை பலராலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இவ்வித்தியாலயத்தினை அமைப்பதற்குத் தமது அயராத உழைப்பினை நல்கிய பெருமை பேதமற்ற ஏழாலைக் கிராம மக்களுடன், உயர்திரு ஞானப்பிரகாசம் (B.A., பரமேஸ்வரக் கல்லூரி முன்னாள் அதிபர், ஏழாலை மேற்கு), பண்டிதர் கந்தையா (ஆசிரியர், ஏழாலை மேற்கு), உயர்திரு. முருகேசு (ஆசிரியர், ஏழாலை கிழக்கு), உயர்திரு. நா.கனகரத்தினம் (ஓய்வுபெற்ற தபாலதிபர், ஏழாலை கிழக்கு), உயர்திரு. க.சிவகுரு (விதானையார்-ஏழாலை), உயர்திரு. க.கணபதிப்பிள்ளை (சட்டத்தரணி, ஏழாலை வடக்கு), உயர்திரு. நா.இளையதம்பி (சிங்கப்பூர் பென்சனியர், ஏழாலை வடக்கு), உயர்திரு. சீ.தம்பையா (வர்த்தகர் ஏழாலை வடக்கு), உயர்திரு. க.சிவகுரு (வர்த்தகரும் முன்னாள் கிராம சபைத் தலைவரும்), உயர்திரு. இளையதம்பி (வர்த்தகர் ஏழாலை மத்தி) ஆகியோரின் பங்களிப்புடன் இவ்வித்தியாலயம் அமைக்கப்பட்டது. இவ்வித்தியாலயமானது 07ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் பிள்ளையார் ஆலயத்திற்கென அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட 09 பரப்புக் காணியில் அமைக்கப்பட்டதாகும். கிடுகுகளினால் வேயப்பட்ட கூரையையும் மண்ணால் மெழுகப்பட்ட நிலத்தையும் கொண்டதாக இவ்வித்தியாலயம் 80 மாணவர்களுடனும் 07 ஆசிரியர்களுடனும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் 08ம் வகுப்பு வரை வகுப்புக்களையும் கொண்டு விளங்கியது.

இவ்வித்தியாலய முதல் அதிபராக வித்துவான் பண்டிதர் உயர்திரு உ.சந்திரசேகரம் 1940ஆம் ஆண்டிலிருந்து 1960ம் ஆண்டுவரை சிறப்புடன் செயலாற்றி வந்தார். இவர் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டபோதும் தமது ஊர்ப்பாடசாலையென மனதிலிருத்தி கல்வி வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாகச் செயற்பட்டார். இருபது வருடங்கள் அயராது உழைத்தது மட்டுமன்றி பாடசாலையிலேயே தனது காலத்தைப் பெரும்பாலும் கழித்தவர். மாலை நேரவகுப்புக்களையும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்களையும் நடாத்தி கல்வி வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர் ஆவார். 1960ம் ஆண்டில் நாட்டின் ஏனைய பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டமை போன்று இவ்வித்தியாலயமும் அரசுடைமை ஆயிற்று. ஆரம்பம் முதல் 1953ம் ஆண்டு வரை 08ம் வகுப்பு வரை கல்விச்செயற்பாட்டினைக் கொண்டிருந்த இப்பாடசாலைக்கு 1954ம் ஆண்டுமுதல் சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திர வகுப்புகள் வரை நடாத்துவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றது.

1961ம் ஆண்டு திரு க.கணபதிப்பிள்ளை அதிபராகப் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுகளே கடமையாற்றியவர் எனினும் கண்டிப்பான தன்மையுடன் பாடசாலை முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். அரசுடைமையாக்கப்பட்ட இப்பாடசாலை, 1962ம் ஆண்டு தொடக்கம் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாக மாற்றம்பெற்று, வளர்ச்சி நோக்கி வீறுநடை போடலாயிற்று. பல்வேறுபட்ட திறமைகளுடன்கூடிய கல்விமான்கள் பலரையும் உருவாக்கி நின்ற இப்பாடசாலையில், மாணவர், ஆசிரியர் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து மேலோங்கியது. அவரையடுத்து 1966ம் ஆண்டு திரு. கந்தையா அவர்கள் பதவியேற்று 03 வருட காலத்தில் இப்பாடசாலை முன்னேற்றம் பலவற்றைக் கண்டது என்பதில் ஐயமில்லை. அவரைத் தொடர்ந்து 1969ம் ஆண்டு அதிபர் பதவியில் அமர்ந்த திரு. சண்முகம் அவர்களும் 03 ஆண்டு காலப்பகுதியில் கல்விச்செயற்பாட்டில் முன்னேற்றமடையச் செய்தது பேருண்மையாகும். 1972ம் ஆண்டு திரு தி.க.முத்துச்சாமி அவர்களது 07 வருட பதவிக்காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியில் மேலோங்கிய தன்மையை அடையாளப்படுத்தலாம். 1974ம் ஆண்டு க.பொ.த.சாதாரணதர வகுப்பு வரை வகுப்புகள் நடைபெறுவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றது. பரீட்சைப் பெறுபேறுகளும் படிப்படியாக உயர்வடைந்து உயர்கல்விக்காகப் பிற உயர்தரப் பாடசாலைகளை நோக்கிச் செல்லும் மாணவர்களது எண்ணிக்கையும் அதிகரித்தது. அவரை அடுத்து 1979ல் பதவியேற்ற திரு வீ.த.திருநாவுக்கரசு அவர்களது பதவிக்காலமும் சைவ மகாஜன வித்தியாசாலையின் வளர்ச்சியின் மேலோங்கிய காலமாகும். நாவேந்தன் எனும் புனைபெயர் கொண்ட அன்னாரது சேவை பலராலும் போற்றப்படுவதாகும். அவரையடுத்து 1992ல் திரு சே.இராசவல்லவன் அவர்களின் பதவிக்காலத்திலும் சைவ மகாஜன வித்தியாசாலையின் வளர்ச்சி தொடர்ந்தும் மேலாலோங்கிய தாகியது. கொத்தணி முறையமைப்பின்கீழ் அதிபர் நிலையில் பதவிவகித்த திரு சே.இராசவல்லவன் அவர்களின் பதவித்திறமை இன்றும் பலராலும் போற்றப்படுகின்றது. 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட வலிகாம இடப்

பெயர்வானது பாடசாலையின் பௌதிக நிலைமையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியபோதிலும், அது தனது கல்வி வளர்ச்சியில் பின்னடைவை அடையாது பாதுகாத்த பெருமை அவரையே சாரும். அவரைத் தொடர்ந்து 2000ம் ஆண்டில் பதவியேற்ற திரு. ந.சுப்பிரமணியம் அவர்களும் பாடசாலையின் பௌதிகவள வளர்ச்சியில் பெரும் பங்காற்றியதுடன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு, புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு ஆகியன சிறப்பாக அமைவதற்கு அயராது பாடுபட்டு வருகின்றார்.

## யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணம் என்னும் மாவட்டத்தில் உடுவில் உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் ஏழு ஆலயங்கள் ஒருங்கே அமையப்பெற்ற ஏழாலை என்னும் கிராமத்தில் இப்பாடசாலை அமைந்துள்ளது. புகழ்பூத்த பல கல்வி மான்களைத் தன்னகத்தே உருவாக்கிய பெருமையைக் கொண்டது ஏழாலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏழாலைக் கிராமத்தில் தென்திசையில் அவதரித்தவரே குருநாதன் மூத்தவி. இவர் நற்பண்பும், முற்போக்கும் கல்வியறிவும் கொண்டவர். தம் சூழலிலே உள்ளோர் படிப்பை அரைகுறையில் விடுதல், இந்துசமயப் பாடசாலை இன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலை ஒன்றைக் கட்டவேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டார். அதேகாலத்தில் அரசாங்கக் காணிகள் காணியற்றோருக்கு வழங்கப்பட்டது. பாடசாலை கட்டுவதால் அநேகர் நன்கொடை பெறலாம் என உணர்ந்தார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தன் மனவிருப்பத்தைப் பரமேஸ்வரக் கல்விச்சபைக்குத் தெரிவித்தார். அவர்களது அனுசரணையும் கிடைத்தது.

அப்பொழுது பாராளுமன்றத்தில் தபால் தகவல் மந்திரியாக மாண்புமிகு சு.நடேசபிள்ளை இருந்தார். அவரின் பேருதவியால் 30 பரப்புநிலம் பாடசாலைக்கென ஒதுக்கப்பட்டது. மந்திரி அவர்களினதும் கல்விப் பகுதியினரினதும் ஒத்துழைப்பு ஒருங்கே கிடைக்கப்பெற்றது. உடனே திரு.கு.மூத்தவி அவர்கள் தமது சமூக மக்களிடையே விடயத்தை விளங்க வைத்தார். சமூகத்தின் முற்போக்காளனின் பணவுதவியும் ஒத்துழைப்பும் நன்றாகக் கிடைத்தன. பாடசாலைக்கென ஒரு பெரிய கட்டடம் விரைவிலேயே தோன்றியது. திரு.கு.மூத்தவி அவர்கள் அயலிலுள்ள சிறார்களை ஒன்றுதிரட்டினார். பெற்றோரின் சம்மதத்துடன் 1955.11.11 சரஸ்வதிபூசை தினமன்று கற்கை நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

செல்வி நவமலர் கணபதி (பயிற்றப்பட்ட ஆசிரியர்) தலைமையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்றன. அவருக்கு உதவியாக திரு வைரமுத்து செந்தில்நாதன், செல்வி இன்பநாயகி சிவசம்பு, திருமதி நாகம்மா பாலசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள். பாடசாலை நிறுவுநரின் விடாமுயற்சியினாலும் ஆசிரியர்களின் தொழிற்பாட்டினாலும், மாணவரின் திறமையினாலும் பாடசாலை அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது. பாடசாலை ஆரம்பித்த (1955.11.11) அன்றைய தினத்திலிருந்தே அரச அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

இவ்விதமாகப் பாடசாலை இயங்கிவரும் வேளையில் திருவாளர் கு.மூத்தவி அவர்கள் கொழும்பில் இருந்து மாற்றலாகி அதிபர் பதவியுடன் பாடசாலைக்கு வந்தார். அப்பொழுது அரசாங்கத்தின் உதவியுடன் இரண்டு கட்டடங்கள் கட்டப்பட்டன. கிராமசேவை அங்கத்தவராக இருந்த திரு.பே.இ.சண்முகநாதனின் பேருதவியால் கிணறு ஒன்றும் வெட்டப்பட்டது. அவர் பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியராகவும் நியமனம் பெற்றார்.

இவ்வகையில் பாடசாலையானது பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றுவந்தது. அதிபராக இருந்த கு.மூத்தவி ஓய்வுபெற்றதும் திரு.குணரத்தினம் அதிபரானார். அவர் குறுகிய காலம் கடமைபுரிந்தார். அவருக்குப்பின் அரியமுத்து சிவபாதம் அதிபரானார். அவர் காலத்திலும் கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆசிரியர்களின் உதவியோடு அரச அனுமதியின்றி 06ம் வகுப்பை ஆரம்பித்தார். அதன்பின்னர் கல்விப் பகுதியினரால் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. விசேடபயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் நியமிக்கப்பட்டனர். க.பொ.த (சாதாரண) பரீட்சைப் பெறுபேறும் ஓரளவு கிடைத்தது. அவர் ஓய்வுபெற்றதும் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி லோகநாயகி ரகுபதி அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் காலத்திலும் பாடசாலை பல முன்னேற்றங்களைக் கண்டது. சீருடை ஒழுங்கை அவரே கொண்டுவந்தார். அவர் மாற்றம் பெற்றுக் கொழும்பு செல்ல, திருவாளர் கி.யோகசிங்கம் அவர்கள் அதிபர் பதவியேற்றார். இப்போது 04 கட்ட

டங்களையும் அதிக ஆசிரியர்களையும் கொண்ட மகிமை பெற்ற பாடசாலையாக விளங்குகின்றது. 1998.07.01 தொடக்கம் திருவாளர் நா.சிவசிதம்பர லிங்கம் அவர்களும், பின் 2007.03.21 அன்று திரு.மு.செல்வஸ்தான் அவர்களும் அதிபராகக் கடமையேற்றனர். இவருடைய காலத்தில் பாடசாலை பல பௌதிக வளங்கள், பரீட்சைப் பெறுபேறு, இணைப் பாடச் செயற்பாடுகளில் துரிதவளர்ச்சியடைந்து வருவது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையைச் சுட்டி நிற்கின்றது.

### யா/ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

ஏழாலை தெற்கில் விழிசிட்டி என்ற இடத்தில் ஏழாலை தெற்கு தென்னிந்தியத் திருச்சபையில் 1888ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த ஐசாக் போல் போதகர் அவர்களின் செயற்பாட்டாலும் ஷெவ்லாண்ட் பாதிரியாரின் தூண்டுதலினாலும் 1888ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலையின் ஸ்தாபகராக "சேர் ஐசாக் போல்" இருந்தார்.

இப்பகுதியில் மக்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வியை வழங்குவதற்காகவும் கிறிஸ்தவமதம் தொடர்பான போதனைகளை போதகர் வழங்குவதற் காகவும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் ஆரம்ப கால அதிபராக எம்மர்சன் தோமா அவர்கள் விளங்கி னார். எனினும் அக்கால ஆசிரியர், மாணவர் விபரங் களை அறியமுடியவில்லை. க.பொ.த.சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. கிறிஸ்தவசம யக் கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. எம்மர் சன் தோமா அவர்களின் ஓய்வின்பின் எம்மர்சன் தம்பாப்பிள்ளையும், தொடர்ந்து முதன்முதலாக எலைமா பொன்னம்மா சத்தியநேசன் என்ற பெண் மணியும், பின் உதவியாசிரியராக இருந்த திருமதி அன்னம்மா சின்னத்தம்பியும் அதிபர்களாக நியமிக் கப்பட்டனர்.

இவருக்குப்பின் 1965ம் ஆண்டில் திரு த.துரை ரத்தினம் அவர்கள் அதிபரானார். இவரது காலத்தில் முத்தமிழ் கலைகள் புகுத்தப்பட்டதுடன் எட்டாம் ஆண்டு வரை இயங்கிவந்த இங்கு பத்தாம் ஆண்டுவரை மாணவர் அனுமதிக்கப்பட்டனர். இவரது காலம் பாடசாலையின் பொற்காலமாகக் கருதப்பட்டது. 1971ம் ஆண்டளவில் திரு இ.யோ.நவரத்தினம் அதிபரானார். இக்காலப்பகுதியில் அருகில் சைவப் பாடசாலைகள் வளர்ச்சியடைந்து வந்தமையினால் இப்பாடசாலையில் மாணவர் வரவு சராசரியாக வீழ்ச்சி யுற்றது. 1981ம் ஆண்டு திரு ஐ.நவரத்தினம் அதிபரா னார். இவரது காலத்தில் முதன்முறையாக விளை யாட்டுப்போட்டி நடத்தப்பட்டதுடன் பாடசாலை அபி விருத்திச் சங்கமும் உருவாக்கப்பட்டது.

1990ம் ஆண்டு திரு பொ.கணேஸ்வரலிங்கம் அதிபர் பதவியை ஏற்றார். இவரது காலத்தில் முதன் முறையாக நவராத்திரி விழா கொண்டாடப்பட்டதுடன் சைவப்பிள்ளைகளும் கூடுதலாகக் கற்கத் தொடங்கி னார்கள். அத்துடன் இவரது காலத்திலேயே முதன் முதலாக புலமைப் பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் சித்தியடையத் தொடங்கினார்கள்.

1996ஆம் ஆண்டு திரு மு.செல்வஸ்தான் அதிபரானார். மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் சமுதாயத்தினரின் உதவியுடன் கல்வி மற்றும் பௌதிகவள அபிவிருத்தியை ஏற்படுத்தினார். அத்துடன் பாடசாலை நலன்புரிச்சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன அமைக்கப்பட்டுச் செயற் படுத்தப்பட்டன. 1990களின் பின் முதன்முதலாக 2003ம் ஆண்டுமுதல் ஒளிவிழா நடத்தப்பட்டு வருகின்றது. இவரது காலத்தில் மாணவர்கள் பல துறைசார்ந்த போட்டிகளில் பரிசுகள் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

2007ம் ஆண்டு முதல் திரு க.சிவகுமார் அதிப ராகக் கடமை புரிகின்றார். இவர் பாடசாலையின் முகப்பைக் கவின் நிலைப்படுத்தியதுடன் பாடசாலை யின் நீண்டகால அடிப்படைத் தேவையாக இருந்த குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தையும் ஆரம் பித்து வைத்தார். அத்துடன் மாணவர்கள் கல்வி மற்றும் இணைப்பாடவிதானப் போட்டிகளில் கோட்ட மட்ட, வலயமட்ட சாதனைகள் புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### யா/ஏழாலை சென் இசிதோர் பாடசாலை

18ம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை ஏழாலை யில் எப்பாடசாலையும் இயங்கவில்லை. திண்ணைப் பாடசாலைகளாவே இயங்கிவந்தன. வசதியான வர்கள் மட்டும் கல்வி கற்றனர். பிரிட்டிஷ் அரசாங்கம்

1806ல் கத்தோலிக்க மதத்தவர்க்குச் சிவில் உரிமை வழங்கியதன் மூலம் கத்தோலிக்க மிசன்மார் தம் சமயத்தைப் பரப்புவதற்குப் பல பாடசாலைகளை ஆரம்பித்தனர். இதற்காக ஒரு பாடசாலையில் ஆசிரியர் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாட சாலைக்காக நாட்டிலுள்ள அநாதைப் பிள்ளைகளை ஒன்றுசேர்த்துக் கல்வி பயிற்றுவித்தனர். இவ்வகை யில் ஏழாலையைச் சேர்ந்த பரமானந்தர் பொன்னம் பலம் என்பவர் கத்தோலிக்க மதத்தில் இணைக்கப் பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு 1884ல் பயிற்றப்பட்ட ஆசிரியராக மிசனறிப் பொன்னம்பலம் என்ற பெய ரோடு வெளியேறி, ஏழாலையில் திருமணம் செய்து, தனது வீட்டுப்புறத்தில் ஒரு பாடசாலையையும் ஒரு தேவாலயத்தையும் மிசனரிமாரின் உதவியோடு நடாத்தினார். பின்னர் 1892ல் இப்பாடசாலைக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு இப்பாடசாலையும் தேவாலயமும் அமைக்கப்பட்டு ஆரம்பத்தில் தரம் 1-5 வரை போதிக்கப்பட்டது. பொன்னம்பலம் என்ப வர் 1927ல் இளைப்பாறிய பின்னர் 1934இல் தரம் 6 -11 வரை (G.C.E O/L) கற்பிக்கப்பட்டு வந்தது. நல்ல பெறுபேறுகளும் கிடைத்தன.

1986ம் ஆண்டு திருமதி அகஸ்ரீன் அவர்களும், 1986 - 1995ம் ஆண்டுவரை திரு யே.சூசைதாஸ் அவர்களும், 1995 - 1997ம் ஆண்டுவரை திரு ச.பொன்னம்பலம் அவர்களும், 1997 - 2004ம் ஆண்டுவரை திரு க.ஜெயராசா அவர்களும் அதிபர் களாகப் பொறுப்பேற்றுப் பாடசாலையை நடாத்திவந் தனர். தொடர்ந்து இற்றைவரை திரு க.பாலசுப்பிர மணியம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடாத்திவருகின்றார். இவர் பாடசாலைக் கான பௌதிகவள வசதிகள் பலவற்றை ஏற்படுத்தி யுள்ளதுடன், இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய பௌதிகவளத் தேவைகள் பலவுள என்பது நோக்கத் தக்கது. அத்துடன் இப்பாடசாலை இணைப்பாடவிதா னச் செயற்பாடுகளில் சிறப்பாக இயங்கி வருகின்ற தும் குறிப்பிடத்தக்கது.

## யா/கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

இப்பாடசாலை யா/பொன்கந்தையா வித்தியா சாலை என்ற பெயரில் சுன்னாகத்திலுள்ள சூராவத்தை என்னும் கிராமத்தில் ஏழாலை தென்மேற்கு (யா/ 202) கிராம அலுவலர் பிரிவில் 38.6 பேர்ச் காணியில் கோட்டைக்காட்டைச் சேர்ந்த கிருஷ்ணர் என்பவரின் முயற்சியால் பொன்.கந்தையா என்னும் அரசியல் தலைவரின் பேருதவியுடன் 06.02.1961இல் தரம் 01 முதல் 08 வரையான வகுப்புக்களுடனும் 07 புதிய ஆசிரியர்கள் நியமனத்துடனும் ஆரம்பிக்கப்பெற்று அவ்வாண்டிலேயே பாடசாலையின் பெயர் யா/ கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.

முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுடன் ஆரம்பித்த இப்பாடசாலை, காலப்போக்கில் மாணவர் தொகையாலும் வகுப்புகளாலும் குறைந்து தரம் 01- 05 வரையான ஆரம்பப் பிரிவுப் பாடசாலையாகியது எனினும் பாடசாலையின் கல்வி வளர்ச்சியும் இணைப் பாடச்செயற்பாடுகளும் சிறந்த நிலையிலேயே இருந்து வந்தன. இங்கு கல்விகற்ற பலர் இன்று உயர்பதவி களில் இருப்பதும் இதற்கொரு சான்றாகும். 1965, 1985 ஆண்டுகளில் மேலும் இரு கட்டடங்கள் நிர் மாணிக்கப்பட்டன. 1961-1995 காலப்பகுதியில் 07 அதிபர்கள் இப்பாடசாலையை நிர்வகித்துள்ளனர்.

1995இல் பாரிய இராணுவ நடவடிக்கைகளி னால் பாடசாலையின் 70'x25' ஆரம்பகாலக் கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் ஆசிரியர்களும் 135 மாணவர்களும் பாரிய இடப்பெயர்வுக்குள்ளா கினர். 1996ல் யாழ் குடாநாட்டில் பாடசாலைகள் மீள ஆரம்பித்தவேளையில் இப்பாடசாலைக்கு அதிபர் தேவையேற்பட்டவிடத்து திரு.திருச்சி.நவரத்தினம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பெற்று இரு ஆசிரியர் களுடனும் 85 மாணவர்களுடனும் பாடசாலை ஆரம்ப மானது.

1996இல் பாடசாலைக்கான பெயர்ப்பலகை, சின்னம், மகுடவாசகம், கொடி, பாடசாலைக்கீதம் என்பன அதிபரால் அமைக்கப்பெற்றுத் தொடர்ந்து பௌதிகவள அபிவிருத்திகளும் கல்வி அபிவிருத்தி யும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கல்விப்பெறுபேறுகளும் முன்னரைவிட மேம்பட்டதாகக் காணப்படுகிறது. பல்வேறு காரணங்களால் இன்று 40 மாணவர்களுடன் பாடசாலை இயங்கி வருகின்றது. தரம் 06 முதல் கல்வியைத் தொடரும் மாணவரின் கல்விநிலைச் சிறப்புக்களும் க.பொ.த.சாதாரண தரம், உயர்தரப் பெறுபேறுகளும் இப்பாடசாலையின் ஆரம்பக்கல்விச் சிறப்பைத் துலக்கமாகக் காட்டி நிற்கின்றன.

## யா/ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

மண்வளமும், கல்விவளமும், வந்தோரை வர வேற்கும் பண்பாட்டுவளமும் சிறந்தோங்கும் ஏழாலைக் கிராமத்தில் யா/ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை எனும் நாமங்கொண்டு கல்வியில் வளர்ந்துவரும் இப்பாடசாலை, கல்விச் சேவை நோக்கோடு தென்னிந்தியத் திருச்சபை ஆதீனத்தின் நிர்வாகத்தின் மேற்பார்வையில் 1888.10.11இல் ஆரம்பிக்கப்பெற்று ஆங்கிலமும் தமிழும் சிறப்புற நீண்டகாலம் இயங்கிவந்தது. இக்காலப் பகுதியில் கல்வியில் சிறந்த பல சான்றோர்கள் உருவாக்கப் பெற்றதாக செவிவழி வரலாறு கூறுகின்றது.

தொடர்ந்துவந்த காலப்பகுதியில் அரசின் வர்த்தகமானி அறிவித்தலின்படி 1963.04.10 இலிருந்து இலங்கை அரசினால் சுவீகரிக்கப்பெற்று, ஆரம்பப்பாடசாலையாகத்தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புக்களைக்கொண்டு இயங்கி, அதிகளவான மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் இக்காலத்தில் அதிக மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி பெருமையையும் சேர்த்துள்ளனர்.

1990ம் ஆண்டளவில் இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பாடசாலையானது கல்விச்செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாத சூழலுக்குத் தள்ளப்பட்டது. இதன்காரணமாக யா/ஏழாலை புனித இசிதோர் பாடசாலையுடன் இணைப்புப்பெற்று ஐந்தாண்டுகளாக இயங்கி 1995.01.23ல் மூடப்பட்டது.

1996ஆம் ஆண்டின் பின்னர் இம்மண்ணில் மக்களின் வாழ்வியல் நடவடிக்கைக்கு ஓரளவு உகந்த சூழல் ஏற்பட்டபோது 2003.02.14ல் இப்பாடசாலை மீளவும் சொந்த இடத்தில் இயங்குவதற்கு அதிபராக திரு த.வாமதேவன் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 2004ம் ஆண்டில் தரம் ஒன்றில் மாணவரை இணைத்துக்கொண்டு கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, படிப்படியாகப் புதிய மாணவர்கள் தொடர்ந்துவந்த வருடங்களில் இணைக்கப்பெற்றனர். தற்போது இந்த ஆண்டில் (2008) தரம் 05 வரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. உயர் பாதுகாப்பு வலயத்தின் 600 m பகுதிக்குள் இப்பாடசாலை இயங்குவதால் மாணவர்களின் தொகை குறைவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடசாலையின் கல்விச்செயற்பாட்டிற்குச் சாதகமான சூழலுக்கு உறுதுணையாக அதிபர் திரு த.வாமதேவன் அவர்களின் முயற்சிகள், தலைமைத்துவம், தொடர்பாடல் திறன் என்பன இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு வலுச்சேர்க்கின்றன. 2004ம் ஆண்டிலிருந்து இப்பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், தமிழ், சமயம், ஆங்கிலம், பொது அறிவு, விளையாட்டுப் போட்டிகளில் குடும்பமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம் வரை சென்று வெற்றியீட்டிச் சான்றிதழ்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

* * *

### அதிக சத்தத்தினால் ஏற்படும் அபாயங்கள்

1. உடல் தளர்ச்சி ஏற்படும்.
2. விரைவில் செவிட்டுத்தன்மை ஏற்படும்.
3. கண் பழுதடையும்.
4. இரத்தக் குழாய்கள் பாதிப்படைந்து இரத்த அழுத்தம் ஏற்படும்.
5. தூக்கம் தடைப்பட்டு எரிச்சல் ஏற்படும்.
6. மனிதர்களின் இயற்கையான குணாதிசயங்கள் பாதிக்கப்படும்.
7. இதயம், நரம்பு ஆகியவற்றின் செயல்திறன்கள் பாதிக்கப்படும்.
8. கர்ப்பமுள்ள பெண்களின் கரு பாதிக்கப்படும்.



தரம் 1- I வகுப்பறை



தரம் 1-II வகுப்பறை



தரம் 2-I வகுப்பறை



தரம் 2- II வகுப்பறை



தரம் 3-I வகுப்பறை



தரம் 3-II வகுப்பறை



தரம் 4-I வகுப்பறை



தரம் 4-II வகுப்பறை



தரம் 4-III வகுப்பறை



தரம் 5 வகுப்பறை



பாடசாலை நூலகம்



மாணவத் தலைவர் அணி



# மீள் பாடசாலையாக்கற் சமூகம்

பேராசிரியர் சபா. ஜெயராசா

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இவான் இலிச் அவர்கள் "பாடசாலைக் கலைப்புச் சமூகம்" என்ற எண்ணக்கருவை முன்மொழிந்தார். பாடசாலைகள் எதிர்பார்த்த இலக்குகளை இழந்து விட்டன. அவற்றுக்குப் பதிலீடுகள் தோற்றம் பெற்றுவிட்டன என்ற திறனாய்வுகள் அவரால் எடுத்துரைக்கப்பட்டன. அவரது கருத்துக்களுக்கு மாறாக அண்மையில் டேவிட் ஹாட்லி என்பவர் **"மீள் பாடசாலையாக்கற் சமூகம்"** (Re-Schooling Society) என்ற கருத்தை ஆதார அணிகளுடன் முன்வைத்துள்ளார். மீள் பாடசாலையாக்கும் செயல்முறைகளின் வழியாக சமகாலத்தைய சமூக பொருளாதார பண்பாட்டு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியும் என்ற அவதானிப்பு மேலெழுச்சி பெறத் தொடங்கியுள்ளது.

மனத வளர்ச்சி எப்பொழுதும் முன்னோக்கிய பாய்ச்சலைக் கொண்டிருக்கும் என மார்க்சிய சமூகவியல் விளக்குகின்றது. சமூக வளர்ச்சியோடு இணைந்த வகையில் அறிவின் வளர்ச்சியும், அறிவைக் கையளிக்கும் நிறுவனங்களின் வளர்ச்சியும் மேம்பாடு கொண்டு வந்துள்ளன. பொருளாதார வளர்ச்சியோடு தொழில் வாய்ப்புக்களின் அதிகரிப்பும் அதேவேளை தீவிர போட்டிகளின் அதிகரிப்பும் ஏற்படத் தொடங்கியுள்ளன. பாடசாலைகள் எப்பொழுதும் சமூகம், பண்பாடு, அரசியல், அதிகாரம் முதலியவற்றைக் கடந்து செல்லமுடியாத நிறுவனங்களாகவும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியவையாகவும் இயங்கி வருதல் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் போட்டிச் சமூகத்தில் நிகழ்ந்து வரும் மாற்றங்களையும் மேம்பாடுகளையும் உள்வாங்கக் கூடிய உறுதி பெற்ற அமைப்பாக இருப்பதனால் பாடசாலைகளின் தேவையைக் குறைத்து அல்லது தாழ்த்தி மதிப்பீடு செய்ய முடியாது. பாடசாலைகளுக்குப் பதிலீடாகத் தோன்றிய நிறுவனங்களால் உரிய பதிலீடுகளாக இயங்க முடியாமலிருந்தாலும் பாடசாலைகளின் தேவையை மீள வலியுறுத்தி நிற்கின்றன.

"மீள் பாடசாலையாக்கல்" என்ற எண்ணக்கரு ஆரம்பம், இடைநிலைகளை மட்டுமன்றி உயர்நிலையான கல்வி நிலையங்களையும் உள்ளடக்கி நிற்கின்றது. பொருளுற்பத்தியில் வினைத்திறனும் தரச்சிறப்பும் நுகர்வோரைக் குவியப்படுத்தலும் என்ற செயற்பாடுகள் கல்வி நிலையங்களின் நடவடிக்கைகளுக்கும் விரிவு படுத்தப்படுவதால் அவை காலாவதியாகாது நிலைத்து நீடிக்கும் மீள்பாடசாலை மயமாக்கலை வளமாக்குகின்றன.

பொருண்மிய நிலையில் நிகழும் போட்டிகள், தனி மனிதப் போட்டிகளாகவும், கல்வி நிலையங்களுக்கிடையே நிகழும் போட்டிகளாகவும் விரிவாக்கம் பெறுகின்றன. போட்டித் தனிமனித வாதம் (Competetive Individualism) பல நிலைகளாலும் மேலெழத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் தனி நபர்கள் சமூக நோக்குடைய தனி மனிதர்களாக அன்றி, அதீத தன்னல நோக்குடைய நபர்களாக உருவாக்கம் பெறுகின்றனர். இந்த நிலையை மாற்றியமைப்பதற்குப் பாடசாலைகள் பங்களிப்புச் செய்ய முடியுமா? என்ற முனைப்பை மீள் பாடசாலையாக்கல் என்ற கருத்தாக்கம் முன்வைக்கின்றது.

மீள் பாடசாலையாக்கற் சமூகம் முதற்கண் கலைத்திட்டத்தைக் குவியப்படுத்துகின்றது. எதிர்கால அறிவுக்கையளிப்புத் தொழிற்பாட்டை முதன்மைப்படுத்துவதாய், பயன்கொள்நிலைப் பட்டதாய், ஆற்றுகை எழுச்சி (Perforativity) கொண்டதாய் இருக்கும் மாற்றங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வற்புறுத்தப்படுகின்றது. அறிவு வியாபார மயப்படுகைக்கு (Mercantilization)

கொண்டு செல்லப்படுகின்றது. படித்தவர்கள் "விற்கப்படக்கூடியவர்களா?" என்ற வினா எழுப் பப்படுதல் மட்டுமல்ல அதிகார முனைப்புக்களில் "அவர்கள் வினையாற்றல் கொண்டவர்களா?" என்ற இரண்டாவது வினாவும் எழுப்பப்படு கின்றது.

நவீன கலைத்திட்டம் பற்றி விளக்க வந்த டொல், (Doll, 1993) என்பவர் மூடிய தொகுதி, திறந்ததொகுதி என்ற இரண்டு எண்ணக்கருக் களை முன்வைத்துள்ளார். மூடிய தொகுதி மேலாதிக்கம் கொண்டதாய், மையப்படுத்தப் பட்டதாய், எதிர்மறைப்பண்பு கொண்டதாய், இலக்குகளை முதன்மைப்படுத்தும் காரணம், - விளைவு என்ற பொறிமுறைக்கு உட்பட்டதாய்க் காணப்படுகின்றது.சமகாலப்பாடசாலைகளின் கலைத்திட்ட இயல்பானது "மூடிய தொகுதியா கவே" உள்ளது. மீள் பள்ளிக் கூடமாக்கற் சமூ கம் இக்கலைத்திட்டத்தை விமர்சித்துத் தகர்ப் புக்கு உள்ளாக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் "திறந்த தொகுதி" பற்றிய கண்ணோட்டம் முக் கியம் பெறத் தொடங்கியுள்ளது. கலைத்திட்டம் பன்முகப்பாடுகளைப் பிறப்பிப்பதாகவும், ஆக்க மலர்ச்சியை ஊக்கப்படுத்துவதாயும், இடை வினைகள் வழியாக நிலைமாற்றங்களை ஏற் படுத்துவதாகவும் இருத்தல் திறந்த தொகுதியால் வலியுறுத்தப்படுகின்றது.

முன்னைய "குழந்தையை நடுவனாகக் கொண்ட" கல்வியானது போட்டிகள் குறைந்த அல்லது போட்டிகள் அற்ற சமூகத்தில் முன் னெடுக்கப்பட்டது. இன்றைய கல்வி தீவிர போட்டி களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலை யில் "குழந்தையை நடுவனாகக் கொண்ட புதிய கல்வியானது கூர்ப்படைந்து" "புதிய கற்போனை நடுவனாகக் கொண்ட கல்வி" என்ற எண்ணக் கருவாக முன்வைக்கப்படுகின்றது. இப்புதிய கல்வி முறை தீவிர போட்டிகளுக்கு முகம் கொடுக் கக்கூடிய மாணவரைப் பற்றிய சிந்தனைகளைக் குவியப்படுத்துகின்றது.

சமகாலத்திற்பெரும் நிலை மாற்றங்கள் உற்பத்தித்துறையிலும் நுகர்வுத்துறையிலும் ஏற்பட்டுவருகின்றன. இந்நிலையில் அவற்றுக்கு ஈடு கொடுக்கும் வகையில் பாடசாலைக் கல்வியும் மீள் கட்டுமானத்துக்கு உரியதாக்கப்பட்டு வரு கின்றது. இந்நிலையில் பாடசாலைகளில் நிலை மாற்றத் தொடர்ச்சியைப் பராமரிக்க வேண்டுமே யன்றி முறிவுகளை ஏற்படுத்துதல் பொருத்த மாகாது.

சமகாலச் சமூகத்திற் பொருட்கள் மட்டுமன் றிப் பண்பாடும் விற்பனைப் பண்டமாக மாறி யுள்ளது. இதன் தொடர்ச்சியாக மரபு வழி விழு மியங்களில் சிதைவுகள் ஏற்படும் நிலையில் அவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய பணி யும் பாடசாலைகளிடம் விடப்படுகின்றது. மீள் ஒழுங்குபடுத்திக் கட்டுமை செய்யப்படும் பாட சாலைகளில் "உள்ளீடாக (Core) இருந்து இயங் கும் ஆசிரியர்கள்" என்ற பிரிவினரும் பக்கபல மாக அல்லது "இணைந்து இயங்கும் ஆசிரியர் கள்" என்ற பிரிவினருமாக இருநிலை அமைப் பினர் வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளனர்.

சமகாலப் பாடசாலைகள் இருநிலைச் சிந் தனைகளை (Double thinking) வளர்க்க வேண் டிய நிலையைப் பொறுப்பேற்கத் தொடங்கியுள் ளன. அதாவது நல்லவற்றுக்கு ஆதரவான சிந்தனைக் களங்களையும், அதேவேளை நல்லவை அல்லாதவற்றுக்கு ஆதாரவான சிந்தனைகளையும் வளர்க்க வேண்டிய முர ணுறு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண் டிய நிலைக்கு உந்தப்படுகின்றன.

புதிய பொருண்மிய நடவடிக்கைகள் அவற் றுக்குச் சாதகமாகச் சமூகத்தை மீளுருவாக் கம் செய்து வரும் நிலையில் பாடசாலைகளும் அவற்றுக்கு இசைந்த மீளுருவாக்கத்தை மேற் கொள்ளுமாறு வற்புறுத்தப்படுகின்றன. இந் நிலையில் பொருண்மிய நிரற்கோடலுக்கும் (Economic Code) மரபு வழியான பண்பாட்டு நிரற்கோடலுக்குமிடையே இணக்க நிலையை ஏற்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. பொருண்மிய நிலை மற்றும் பண்பாட்டு நிலைகளிலே பெயர்ச்சிகள் ஏற்பட்டு வரும் வேளையில் அறிவு நிலையிலும் பெயர்ச்சி

கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. நவீன அறிவுப் பெயர்ச்சிகளைப் பின் நவீனத்துவச் சிந்தனை களிலே காணமுடியும்.

சமகாலப் பாடசாலைகள் நவீன சவால் களுக்கு முகம் கொடுக்கவேண்டிய "வினைப் படும் பாடசாலை" களாக மாற்றமுறும் பொழுது பின்வரும் செயற்பாடுகளுக்கு அதீத முக்கியத் துவம் கொடுக்க வேண்டியுள்ளன.

01. நவீன பொருண்மியச் சமூகம் வேண்டி நிற்கும் தேர்ச்சிகளை மாணவர்களிடத்து வளர்த்தெடுத்தல்.
02. சமூகம் பற்றிய தெளிவான புலக்காட்சி களை ஏற்படுத்தலும் முரண்பாடுகளைப் புலப்படுத்தலும்.
03. பன்முக வாழ்க்கைக் கோலங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய ஆற்றல்களை வளர்த்தல்.
04. கற்பதற்காகக் கற்கும் ஆற்றலையும், வாழ் க்கை முழுதும் கற்கக் கூடிய உளப்பாங்கை யும் மேம்படுத்தல்.
05. புத்தாக்கங்களுடன் இசைவு கொள்ளக் கூடிய திறன்களை மேம்படுத்துதல்.
06. மீள் சமூக மயமாக்கற் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
07. தம்மைத்தாமே முகாமை செய்து கொள்ளும் திறன்களை மேம்படச் செய்தல்.
08. அறிவை உள்வாங்குவோராக மட்டும் மாணவரை உருவாக்காது, அதனைக் கட்டுமானம் செய்பவர்களாக அவர்களை வளர்த்தெடுத்தல் – இந்த நோக்கை அடை யும் பொருட்டு ஐந்து 'E' மாதிரிகை (5E-Model)அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
09. முன்னைய பாடசாலை முறைமை நுண் மதியை ஒற்றைப் பரிமானத்தில் நோக்கி யது. மீள் பாடசாலையாக்கற் சமூகத்தில் "பன்முக நுண்மதி" என்பது ஏற்றுக் கொள் ளப்படுகின்றது.
10. பாடசாலையின் வினைத்திறன்களைத் தொடர்ந்து மீளாய்வுக்கும் மீள் கணிப் பீட்டுக்கு உட்படுத்துதல்.

மீள்பாடசாலையாக்கற் சமூகத்தில் மாண வரிடத்துத் தோன்றும் நேர் அறைகூவல் நடத்தை மற்றும் எதிர் அறைகூவல் நடத்தைகளை வினைத்திறனுடன் முகாமை செயற்பட வேண்டி யதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளும் ஆசிரியர்களும் தமக் குரிய ஆற்றல்களைத் தாழ்வாக மதிப்பீடு செய் யும் நிலையைச் சில ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வினைத்திறனுடன் தொழிற் படும் பாடசாலைகளைத் தாழ்வாகக் கருதும் முரண்பாடான நிலையும் காணப்படுகின்றது.

பாடசாலைகளின் கற்பித்தல் வினைத் திறனை அதிகரிக்கும்பொருட்டு விறேயும் விவிஸ் என்பாரும் 'Exit' மாதிரிகை ஒன்றை உரு வாக்கியுள்ளனர். கற்கும் நூலியத்தோடு இடை வினைகளை விரிவாக்குதலை இந்த மாதிரிகை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கற்பித்தலில் பத்துப்படிநிலைகளை இது முன்வைக்கின்றது. அவை:

01. முன்னைய அறிவைத் தூண்டல்.
02. நோக்கை நிறுவுதல்.
03. தகவல்களைக் கண்டறிதல்.
04. பொருத்தமான தந்திரோபாயத்தைக் கையாளல்.
05. நூலியத்தோடு இடைவினை கொள்ளல்.
06. விளக்கங்களை நெறிகை செய்தல்.
07. பதிவுகளைச் செய்தல்.
08. தகவல்களை மதிப்பீடு செய்தல்.
09. ஞாபகத்திறனுக்கு உதவுதல்.
10. தகவல்களைத் தொடர்பாடலுக்கு உட் படுத்துதல்.

வினைத்திறன்மிக்க கற்றலையும், வள மான கற்பித்தலையும், அடைவுமேம்பாடு களையும், நல்ல மனப்பாங்குகளையும், நல்ல தொழிற்பாடுகளையும் உருவாக்கும் பாட சாலைகள் நவீன கல்வியில் "உட்பொதிந்த பாடசாலைகள்" (inclusive Schools) என அழைக் கப்படுகின்றன. அனைத்தையும் உள்ளடக்கி வினையாற்றலுடன் இயங்குதல் உட்பொதிந்த பாடசாலைகளின் சிறப்புப் பண்பாகும்.

பாடசாலைகளை மேலும் உட்பொதிந்த வையாய் மாற்றியமைப்பதற்கு இலங்கையில் பாடசாலை மட்டத்தில் முகாமைத்துவம், மேற்

பார்வை, ஆசிரிய அணி மேம்பாடு, தர உள்ளீடு, கணிப்பீடு முதலியவை உருவாக்கப்பட்டுள் ளன. உலகளாவிய முறையில் உட்பொதிவை மேலும் சிறப்படையச் செய்ய, பல்வேறு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை:

01. சமத்துவத்தையும் சமூக நீதியையும் முன் னெடுத்தல்.
02. பெற்றோரின் தேவைகளுக்கும் மாண வரின் தேவைகளுக்கும் மதிப்பளித்தல்.
03. இனத்துவ மற்றும் பால்நிலை ஒடுக்கு முறைக்கும் வேறுபாடுகளுக்கும் இடமளி யாதிருத்தல்.
04. உயர்நிலை இலட்சியங்களை மாணவர் களிடத்து ஏற்படுத்துதல்.
05. கலைத்திட்டத்தையும் கற்றலையும் பொருள் பொதிந்ததாக ஆக்குதல்
06. ஆசிரியர் மற்றும் கல்விமுகாமைத்து வத்தைதை மேற்கொள்வோரிடத்து தன் னிலை மதிப்பீடுகள் செய்யும் நடவடிக்கை களை முன்னெடுத்தல்.

இவ்வாறான சூழமைவில் பாடசாலை களுக்கு மீண்டும் வலுவூட்டல் என்ற செயற் பாடும், பாடசாலைகளுக்குப் பதிலீடுகள் இல்லை என்ற ஏற்புடைமைகளும் எழுச்சி கொள்கின்றன.

**உசாவிய நூல்கள்:**


1. Bagley, W.C (1995) The Educative Process, New York, Macmillan.
2. Clegg, S. (1992) Modern and Post Modern Organizations, Social Review 24-28 April.
3. Doll, W.E. Jr. (1993) A Post - Modern Perspective on curriculum, New York, Teachers College Press.
4. Hartley, D. (1997) Re-Schooling Society, London, Falmer Press.
5. ஜெயராசா, சபா (2007) பின்வீனத் துவத்தை விளங்கிக் கொள்ளல், கொழும்பு, கைலாசபதி ஆய்வு வட்டம்.


❖ ❖ ❖

உங்கள் முகம் எப்போதும் சூரியனை நோக்கியே இருக்கட்டும். அந்த நிலையிலேயே இருந்தால் தான் நிழலைப் பார்க்கவேண்டிய சூழ்நிலையே ஏற்படாது.

*- ஹெலன் கெல்லர்*

---

அது கஷ்டமான காரியம் என்பதால்தான் முயற்றி செய்யவில்லை என்று நாம் சொன்னால் அது சரியல்ல. உண்மையில் நாம் சிறிதளவு முயற்சியும் செய்யாததால்தான் அந்தக் காரியம் கஷ்டமாகத் தெரிகிறது.

*- செனக்கா*

---

இருள் இருள் என்று சொல்லிக் கொண்டே சும்மா இருப்பதைவிட ஒரு சிறிய மெழுகுவர்த்தியைத் தேடவாவது முயற்சி செய்யுங்கள்.

*- கன்ஃபூஷியஸ்*



# முன்பள்ளி - ஓர் அறிமுகம்

திரு. அ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்

மூன்று வயது முதல் ஐந்து வயது வரையான பிள்ளைகளின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்தினை உருவாக்கும் ஆரம்ப நிலையங்களாக முன்பள்ளிகள் அமைகின்றன. இவை பிள்ளைகளை வாழ்க்கைக்குத் தயார் செய்வதில் பாரிய பங்கு வகிக்கின்றன. பொருத்தமான முன்பள்ளிக் கல்வி முறைமை இல்லாவிடின் கல்வியில் சமசந்தர்ப்பத்தை உருவாக்கும் சாத்தியக் கூறு குறைவாகக் காணப்படும்.

முன்பள்ளிக் கல்வி வழங்கும் நிறுவனங்களுக்குப் பொறுப்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் ஒவ்வொரு வலயக் கல்விப் பணிமனையிலும் நியமிக்கப்பட்டுள்ள போதும் அவருக்கு முன்பள்ளிக் கூடங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் எவையும் வழங்கப்படவில்லை. இன்றைய நிலையில் எவரும் ஒரு முன்பள்ளியினை ஆரம்பித்து நடாத்த முடியும். முன்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களின் தராதரம், ஆற்றல், பெற்றோரிடமிருந்து அறிவிடும் கட்டணம், வகுப்பறைச் சூழல், விஸ்தீரணம், விளையாட்டு வசதி, உபகரணங்கள் மற்றும் வழங்கும் கல்வியின் தரம் போன்றவற்றைப் பற்றி எவரும் கவலைப்படுவதில்லை. இது ஒரு பாரிய ஆரோக்கியமற்ற நிலைமையாகும். இதனைக் கருத்திலெடுத்த கல்விச் சீர்திருத்த ஆணைக்குழு (1997) பல விதந்துரைகளை முன்வைத்த பொழுதிலும் துரதிஸ்டவசமாக அவற்றில் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### முன்பள்ளியின் முக்கியத்துவம்

குழந்தைகள் ஒரு தேசத்தின் பெறுமதிமிக்க சொத்துக்களாகும். மனிதவள அபிவிருத்தியின் வருங்கால அடித்தளமாக இருக்கப் போகின்றவர்கள் இன்றைய சிறார்கள். எனவே இக்குழந்தைகளை உருவாக்குகின்ற நிலையங்களான முன்பள்ளிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. முன்பள்ளிக் காலப் பகுதியில் பிள்ளைகளின் உடல் இயக்கத்திறன், உணர்ச்சிகள், அறிக்கை, மொழித்திறன், சமூக மற்றும் ஆளுமை வளர்ச்சிகளுக்கான அடிக்கல் நாட்டப்பெறுகின்றது. ஆறு வயதிற்கு முன்பாகவே ஒருவரின் வருங்கால ஆளுமைக்கோலம் எவ்வாறு அமையப்போகிறதென்பது தீர்மானிக்கப்பட்டு விடுமென உளவியலாளர்கள் கூறுகின்றனர். மேலும் ஒரு குழந்தையின் முதல் மூன்று வயதில் 80 சதவீத மூளை வளர்ச்சி ஏற்படுவதாகவும் கூறுவர்.

இன்று போல் என்றுமே முன்பள்ளிக் கல்வி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததில்லை. பிள்ளையின் ஆளுமை விருத்தியில் முன்பள்ளிக் கல்வியின் வகிபங்கு நன்கு உணரப்பட்டுள்ளது. மேலும் ஆரம்பக் கல்வியிலும் இரண்டாம் நிலைக் கல்வியிலும் முன்பள்ளிக் கல்வி பாரிய தாக்கத்தினை உருவாக்குவதாகவும் கருதப்படுகின்றது. முன்பள்ளிக் காலப் பருவத்தில் உருப்பெற்ற பழக்க வழக்கங்கள் உளப்பாங்குகள் யாவும் சிறாரின் மனதில் ஆழப்பதிந்து விடுகின்றன. இக்காலப் பகுதியில் ஆக்கத்திறன், ஆராய்வூக்கம் (Curiosity) போன்றவை உச்சமட்டத்தில் காணப்படும். இவற்றினைக் கருத்திற் கொண்டு பிள்ளைகளின் பல்தரப்பட்ட வளர்ச்சியினை முன்னெடுப்பது முன்பள்ளிகளின் கடப்பாடாகும்.

### முன்பள்ளிகளின் தேவை

இன்றைய சமுதாயம் முன்னைய காலங்களைப் போலல்லாது மேலும் மேலும் சிக்கலாகின்றது. இன்றைய சிறுவர்கள் பலருக்கும் முதியவர்களுடனோ அல்லது தன்வயதினை ஒத்தவர்களுடனோ உறவாடும் சந்தர்ப்பம்

குறைவு. சில சமயங்களில் பெற்றோர் இருவருமே வேலைக்குச் செல்பவர்களாக இருக்கலாம். சிறார்களைப் பராமரிக்கக் கூடிய கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் தற்பொழுது அற்றுப் போய் விட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் கடந்த மூன்று தசாப்த யுத்தச் சூழலினால் பல சிறார்கள் தங்கள் பெற்றோர் இருவரையும் அல்லது ஒருவரை இழந்தநிலை காணப்படுகின்றது. எனவே பிள்ளைகளின் உடல் உள வளர்ச்சியில் இன்றைய கால கட்டத்தில் முன்பள்ளி முக்கிய பங்கு வகிக்கின்றது.

**பிரச்சினைகள்**

யாழ். மாவட்டத்தில் 681 முன்பள்ளிகளும் 1125 முன்பள்ளி ஆசிரியர்களும் இருக்கின்ற பொழுதிலும் இம் முன்பள்ளிகள் பலவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு :-


பயிற்றப்படாத ஆசிரியர்கள், குறைந்த சம்பளம், பொருத்தமற்ற சூழல், கட்டடக் குறைபாடு, வேலை உத்தரவாதமின்மை, அரசாங்கத்தின் பங்களிப்பின்மை, பிள்ளைகளின் அபிவிருத்தி சம்பந்தமான அறிவின்மை, விளையாட்டு உபகரணம் போதாமை, போசாக்கின்மை, பொருத்தமான தளபாடமின்மை போன்றனவாகும்.

முன்பள்ளிகளின் முக்கியத்துவம், தேவை மற்றும் அவற்றில் காணப்படும் குறைபாடுகள் என்பவற்றை நோக்கும்பொழுது, இவற்றில் பெரும் தொகையான நிதி முதலீடு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனை அரசாங்கத்தினால் மட்டுமே நிறைவேற்ற முடியும். எனவே அரசாங்கம் சகல முன்பள்ளிகளையும் பொறுப்பேற்று அபிவிருத்தி செய்யக் கடப்பாடுடையது.

♣ ♣ ♣

## தமிழில் கால நிறைவும் அது அழைக்கப்படும் விதமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு வருடம் | - | காகிதவிழா | 25 வருடம் | - | வெள்ளி விழா |
| இரு வருடம் | - | பருத்திவிழா | 30 வருடம் | - | முத்து விழா |
| மூன்று வருடம் | - | தோல்விழா | 40 வருடம் | - | மாணிக்க விழா |
| நான்கு வருடம் | - | பூ விழா | 50 வருடம் | - | பொன் விழா |
| ஐந்து வருடம் | - | மர விழா | 60வருடம் | - | மணி விழா |
| ஆறு வருடம் | - | கற்கண்டு விழா | 75வருடம் | - | பவள விழா |
| ஏழு வருடம் | - | செம்பு விழா | 80வருடம் | - | அமுத விழா |
| எட்டு வருடம் | - | வெண்கல விழா | 100வருடம் | - | நூற்றாண்டு விழா |
| ஒன்பது வருடம் | - | மணிக்கலச விழா | 1000வருடம் | - | மிலேனியம் விழா |
| பத்து வருடம் | - | தகர விழா | | | |



# ஆரம்பக் கல்வியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவருக்கான வழிநடத்தலும் செயற்பாடும்

திரு. வே. அன்பழகன்
ஆசிரியர்,
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

ஆரம்பக் கல்வி என்பது மாணவர்களின் அடிப்படை சார்ந்த கல்வியறிவையே குறித்து நிற்கின்றது. இங்கே 'ஆரம்பம்' என்ற பதம் அனைத்து விடயங்களிலும் முக்கியத்துவம் பெற்றது. எந்த விடயத்தை ஆரம்பித்தபோதும் அது சிறப்பான முடிவைத் தேடிய பயண மாகவே அமையவேண்டும். இதனடிப்படை யிலேதான் ஆரம்பக் கல்வியும் எதிர்கால முன்னேற்றத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்து அத்திவாரமிடுவதாக அமைந்து விடுகின்றது, அமைந்துவிடவேண்டும் என்பதும் கண்கூடு.

ஆரம்பக் கல்வி எவ்வாறு கல்வியின் அடி அத்திவாரமாக அமைகின்றதோ அதேபோல வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பமாகக் கூறப்படுகிறது. வளர்ந்து வரும் வருங்காலத் திற்கு வழிவகுக்கும் கல்வியாக இருக்கவேண் டும் என உணரப்பட்டது. ஆரம்பக் கல்வியைப் பிள்ளைகள் எப்படிக் கற்பது? அவர்களைச் சுற்றியுள்ள ஏனைய மக்களுடனும் உலகத் துடனும் சிறந்த பயனுள்ள உறவுகளை எப்படி விருத்தி செய்வது? என்பதையும் கற்றுக் கொடுக்க வேண்டும். சீரான ஆரம்பக் கல்வி இல்லாமல் உயர்தரக் கல்வி அர்த்தமற்றதாகி விடும் எனக் கண்டறிந்துள்ளனர். தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்கும் ஆரம்ப நிலைக்கல்வி வருடங்கள் முழுப்பாடசாலை வாழ்க்கையில் மிக முக்கிய காலப்பகுதியாக வற்புறுத்தப்படுகின்றது. அம்மாணவர்களின் அடிப்படை எண்ணக்கருக்கள் வளர்ப்பதில் ஆரம்பக்கல்வி அவசியமாகி நிற்கின்றது. இங்கே மாணவர்களின் வயதடிப்படையில் பார்க்கின்றபோது 6-10 வரையான வயதிலே குறிப்பாக 5 வருடங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரி யர்களுடன் சிறார்கள் கூடிக்குலாவி அறிவைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். இச் செயற்பாட்டு நிகழ்விலே நாம் பற்பல விடயங்களை கவ னத்திற்கொண்டு அவர்களின் அறிவுத் திறனை கட்டியெழுப்பவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தம் உங்கள் பிள்ளைகளிடம் உள்ளடங்கிய விசேட சாமர்த் தியம், உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய முயல்கின்றது. விரிவடைந்துவரும் உங்கள் பிள்ளையின் மனதை மேலும் விருத்தி செய்ய, சிந்தித்து வினாக்களைப் பிறப்பித்து அவற்றிற் கான பதில்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றலை விருத்தி செய்யவேண்டும். இச் செயற்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக தரம் 5 புலமை மாணவர் களிற்கு மேற்கொள்ளவேண்டிய வழிநடத்தற் செயற்பாடுகள் பற்றியதாகஇக்கட்டுரையானது அமைகின்றது.

**புலமைப்பரிசில் தேர்வு பற்றிய அறிமுகம்**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தின் சுற்று நிருபப்படி "பாடசாலைக்கு மாணவர் களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர் களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை" என இப்பரீட்சை வழங்கப்படுகின்றது.

அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்டதொரு அளவான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும், தேசிய மட்டத்திலே மேலும் சிறந்த வசதிகளையுடைய பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப்பரீட்சையிலே கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

புலமைப்பரிசில் தேர்வில் தோற்றுவதற்கான தகைமைகள் - இலங்கையராக, அரசாங்க, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் மாணவராக இருக்க வேண்டும். முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கு ஏற்ற வயதெல்லைக்கமைய பாடசாலையில் சேர்ந்து முதல் முறையாக 5ஆந் தரத்தில் படித்துக் கொண்டிருப்பவராகவும், பரீட்சை ஆண்டில் ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று 11 வயதிற்கு குறைந்தவராகவும் 10 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருக்கவேண்டும் என்கின்ற விதிமுறைகள் இச்செயற்பாட்டிற்கு அடிப்படையானவை.

புலமைப் பரிசில் பரீட்சை 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் தாய்மொழி , கணிதம் ஆகிய பாடங்களில் மட்டும் தனித்தனி இரண்டு வினாத்தாள்கள் உள்ளடங்கியதாக நடைபெற்று வந்தது. 1995ம் ஆண்டிலிருந்து இந்தப் பரீட்சை முறை மாற்றியமைக்கப்பட்டு பின்வரும் அடிப்படைகளில் பரீட்சை நடைபெறுகின்றது.

*வினாத்தாள் I - 45 நிமிடம் (100 புள்ளிகள்)*

*வினாத்தாள் II - 1 மணி 15 நிமிடம் (100 புள்ளிகள்)*

*வினாத்தாள்கள் தனித்தனியே வழங்கப்பட்டுப் பரீட்சை நடைபெறுகின்றது.*

வினாத்தாள் I பரீட்சிக்கப்படும் வினாக்கள் எந்த வகையில் தொகுக்கப்படுகின்றன என்பதைப் பின்வரும் அமைப்புக் காட்டுகின்றது.

### *வினாப்பத்திரம் I*

இவ்வினாப்பத்திரத்தின் மூலம் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகள் மதிப்பிடப்படும்.

**1. பிரதியீடு -**

ஒரு விடயத்தின் குறியீடு, நிலைமை, செயற்றிறன், என்பவற்றிற்கு மாற்றீடாக வேறொரு விடயத்தின் குறியீடு, நிலைமை, செயற்பாட்டுத்திறன் ஆகியவற்றை இனங்கண்டு தெரிதல்.

**2. வரைவிலக்கணம்**

ஒரு நிகழ்வை, சந்தர்ப்பத்தை, செயற்பாட்டை அல்லது ஒரு தரவை வரைவிலக்கணப் படுத்தும் அல்லது விளக்கும் ஆற்றலை மதிப்பிடுதல்.

**3. எதிர்வு கூறல்**

கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், தரவுகளை மையமாகக்கொண்டு எதிர்காலத்தில் நிகழத்தக்க ஒரு நிலைமையைப் பற்றி எதிர்வுகூறல்.

**4. மொழிபெயர்த்தல் -**

ஒரு சொல்லின், ஒரு கூற்றின், ஒரு படத்தின், ஒரு வரைபின் கருத்தை பொருள் வேறுபடாத வகையில் மாற்றியமைத்தல்.

**5. பிரச்சினை தீர்த்தல்**

ஒரு மாணவன் தான் பெற்ற அறிவு, திறன், மனப்பாங்குகளை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது பயன்படுத்தல்.

**6. தொடர்புபடுத்தல் -**

ஒரு ஆள், ஒரு பொருள், ஒரு கூற்று, சந்தர்ப்பம் ஆகியவற்றை வேறொரு ஆளுடன், பொருளுடன், கூற்றுடன், சந்தர்ப்பத்துடன் பொருத்தி ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணல்.

**7. காரண காரியத்தை இனங்காணல் -**

ஒரு காரியத்தினது அல்லது ஒரு விடயத்தினது காரணத்தை இனங்காணல்.

**8. தகவல்களை ஒழுங்கமைத்தல்**

ஒரு தகவற்றொகுதியில் அடங்கியுள்ள விடயங்களை ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் அமைத்தல்.

**9. புலக்காட்சி**

படம், உருவம், தகவல் ஆகியவற்றின் கோலங்களுடைய கருத்துப் பற்றி புலக்காட்சி பெறுதல்.

**10. அவதானித்தல் .**

படம், இலக்கம், குறியீடு, எழுத்து, வரைபு, உருவம் என்பவற்றின் குறை நிறைகளை அவதானித்தல்.

**11. இடைத் தொடர்புகள்**

ஒரு தகவல் அல்லது தகவற்றொகுதி ஒரு பொதுமையான விடயத்தின் பகுதி என்பதை இனங்காணல்.

**12. தர்க்கித்தல்**

தரவுகளை, தகவல்களை மையமாகக் கொண்டு ஒரு முடிவை எடுத்தல்.

**13. வெளித்தொடர்புகளை இனங்காணல்**

உள்ளத்தின் கோலங்கள், மனத்திலே தோன்றும் உருவங்கள் மூலம் பெறப்படும் தகவற்றொகுதியின் நுட்பமான தொடர்புகளைக் கண்டுபிடித்தல்.

**14. அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் -**

ஒரு அறிவுறுத்தலை, ஆலோசனையை, வாசித்து அதற்கேற்றவாறு செயலாற்றுதல்.

**வினாப்பத்திரம் II**

இவ்வினாப்பத்திரத்தின் இலக்குகள் பின்வருபவை ஆகும்.

1. ஆண்டு ஒன்று முதல் ஐந்து வரை உள்ள வகுப்புக்களில் கற்பிக்கப்படுகின்ற எல்லாப் பாடப் பரப்புக்களிலும் அடங்கியுள்ள விடயங்களின் துணை கொண்டு மாணவர்கள் பெற்ற அறிவு, திறன், மனப்பாங்குகளை நுணுகி ஆராய்தல்.
2. பாட நூல்கள் மூலம் மாணவர்கள் பெறுகின்ற அனுபவங்களை ஆராய்தல்.
3. கற்பித்தற் சாதனங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் மூலம் மாணவர்கள் பெற்றுள்ள அறிவு, திறன், மனப்பாங்குகளை அவர்களின் வயதுக்கேற்ப மதிப்பீடு செய்தல்.
4. பாடங்களின் ஊடாக மாணவர்கள் கற்ற கோட்பாடுகள் பற்றிய அறிவினைத் தமது வாழ்வின் நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்துகின்ற ஆற்றல்களை மதிப்பீடு செய்தல்.
5. வகுப்பறையில் கற்கும் கோட்பாடுகளைத் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துகின்ற ஆற்றல்களை மதிப்பீடு செய்தல்.
6. வகுப்பறையில் பல்வேறு குழு நடவடிக்கைகள், தனிப்பட்ட செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலம் அவர்கள் பெறுகின்ற கற்றல் அனுபங்களை ஆராய்தல்.
7. பாடத்திட்டம், பல்வேறு தொழிற்பாடுகள், அனுபவம் மூலம் மாணவர்கள் பெறுகின்ற ஆக்கத்திறன்களை மதிப்பீடு செய்தல்.

இவ் ஒழுங்கு முறையாவும் மாணவர்களை எப்படி வழிப்படுத்தவேண்டும் என்கின்ற அடிப்படைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. எனவே இவற்றுக்கான அடித்தளங்களை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும்? என்பதைப் பின்வருமாறு கண்டு கொள்ளலாம்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் தன்னம்பிக்கை, திறமை, நிதானம் பெற்றவர்களாகவும், பாடசாலையில் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து அதனைச் சுயமாக வெற்றிகொண்டு பாடசாலையின் தூரநோக்கினை அடையக்கூடிய உளநலம் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டியது மிக அவசியமாகும். அவர்கள் உளநலம் மிக்கவர்களாகத் திகழும்போது அவர்கள் உடல்நலம் மிக்கவர்களாகவும், ஆன்மீக சிந்தனை கொண்டவர்களாகவும், தமது செயற்பாடுகளில் திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டவர்களாகவும் இருப்பர். அத்துடன் தமது மாணவர்களையும் அதிபர் ஆசிரியர்களையும் வெகுவாக நேசிப்பவர்களாகவும் இருப்பர்.

பிள்ளைகளின் உள்ளத்தில் அமைதியை உண்டுபண்ணும் சீரிய நோக்கில் செயற்படும் ஆசிரியர்கள் தம் மனதில் ஆழமான சமாதான அனுபவத்தைப் பெறும்போது மட்டுமே அவர்களின் கற்றல் - கற்பித்தல் ஊடாகப் பிள்ளையின் உளநலத்தை விருத்தி செய்யமுடியும்.

**புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய பிள்ளைகளின் உளநலத்தில் அதிக சிரத்தை காட்டுதல்.**

உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் ஆரோக்கியமான நிலையில் உள்ள ஒருவர் பூரண சுகமுடையவராவார். ஆயினும் ஒருவர் உடல் நலத்தில் சிறந்து விளங்கியபோதும் உளநலத்தில் சிறந்து விளங்காது இருத்தல் கூடும். ஒருவரின் உளம் சார்ந்த தன்மையை அவருடைய நடத்தைகள், மனவெழுச்சித் தன்மைகள் மூலமே அறிந்துகொள்ள முடிகின்றது. பிள்ளையின் சுற்றாடலும், நடத்தைக் கோலங்களும் உளநலத்தின் பால் அதிக விளைவாக்கம் செய்கின்றன. அன்பு, காப்பு, கணிப்புப் போன்ற அடிப்படை உளத் தேவைகள் கிடைக்காமல் போவதனால் பிள்ளைகளிடையே விரக்தி, தாக்கும் தன்மை, முரண்பாட்டுச் சுபாவம் போன்ற துர்ப்பழக்க வழக்கங்கள் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. அதிகரித்த வேலைப்பளு காரணமாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பற்றிக் கவனம் செலுத்துவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகையால் பிள்ளைகள் தொடர்பாகக் கருத்தூன்றி ஆராய்ந்து அவர்களின் உளநலனைச் சீர்ப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்து நிற்கின்றது.

ஆசிரியர்கள் இவ் உள்ளம் சார்ந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரங்குசார் செயற்பாடுகளை மேற்கொண்டு இதற்கான பரிகாரங்களைத் தேடலாம். இங்கே மனங்களை மகிழ்ச்சிப்படுத்தி உளத்தாக்கத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாக்க வேண்டும். இது தொடர்ச்சியாகவும், அதேவேளை நம்பிக்கைக்குரியதாகவும் இருத்தல் சாலச் சிறந்தது.

மாணவர்களின் அடிப்படை அறிவுத்திறனை பெருக்கிக் கொள்வதற்கு முதலிலே மாணவர்களின் மனதை வெல்லவேண்டும். மனதை வெல்லும்போது அதற்கே உண்டான அறிவுத்திறனும் வெல்லப்பட்டுவிடும். மாணவர்களின் மனம் என்பது ஆரம்பக்கல்வி மாணவர்களைப் பொறுத்தவரை மென்மையானது, பக்கம் சாயக்கூடியது, தாக்கமடையக்கூடியது, குதூகலத்தையும், அரவணைப்பையும் எதிர்பார்த்து நிற்பது. எடுத்துக்காட்டாக ஒரு பரீட்சையை எழுதிவிட்டு, வருகின்ற புள்ளியைப் பெற்று அதனால் சோர்வடைந்து நடுக்கமடைந்து தன்னிலை மறந்து நிற்கின்றபோது இத்தருணத்தைக் கையாண்டு அவனுக்கு ஆறுதல் மொழியையும், அதிலிருந்து அடுத்த வெற்றிக்கு கிளர்ந்து எழவேண்டும் என்பதையும், நாங்கள் பசுமரத்தாணிபோல் பதிய வைக்க வேண்டும். இங்கே மடியிலே இருத்திக் கொடுக்கும் அரவணைப்பும், ஆறுதல் மொழியும், கிளர்ச்சியும் இன்னொரு புதிய உலகத்தையும், உத்வேகத்தையும் கொடுக்க அவன் சாதனை படைக்க உறுதி பூணுவான். இச் செயற்பாடு அவனின் ஆழ் மனதிலே பதிந்து அவனை வெற்றிப்பாதைக்கு இழுத்துச் செல்லும். எங்கள் அரவணைப்பு அவன் மனதிற்கு ஓர் ஆறுதலைக் கொடுத்து அவனைச் சாந்தப்படுத்தும். அவனது பெறுபேறு அவனது வாழ்க்கையின் முடிவல்ல ஆரம்பமும், தடைதாண்டல்களுமே என்பதை இச்செயற்பாடுகள் இலகுவாக உணர்த்திவிடும்.

மேற்கூறிய விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படும் ஆசிரியர் நிச்சயமாகப் பிள்ளையின் உள்ளத்தில் பிரவேசிக்கத் தக்கவராகின்றார். பிள்ளையின் உள்ளத்துள் பிரவேசித்த ஆசிரியரினால் வைக்கப்படும் முன்வைப்புக்கள் பசுமரத்தாணி போலப் பிள்ளையிடத்தே பதிந்துவிடுகிறது. இதுவே ஆரம்ப நிலையில் மாணவர் கல்வியில் ஆசிரியர்களின் பணி எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் துல்லியமாகக் காட்டி நிற்கும் சான்றாகும்.

- ஆசிரியர்கள் முதலில் இந்தப் பரீட்சைக்குரிய பாட உள்ளடக்கங்களை அறிந்திருத்தல் மிக அவசியமாகும். வினாக்கள் தொகுக்கப்படும் முறைகள் பற்றியும் எவ்வாறான

வினாக்கள் இடம்பெறும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

- மாணவர்களுக்கு வாசிப்பதற்குச் சந்தர்ப் பத்தையும், வாசித்தவற்றை கிரகித்துள் ளார்களா? என அறிவதற்கு வழிவகை களையும் மேற்கொண்டு மாணவர்கள் அதிலே மேம்பாடடைய வழிகாட்டல் செய்யவேண்டும்.

வினாத்தாள் I ஆனது 45 நிமிட நேரத் திற்குள் செய்துமுடிக்க வேண்டியது அதிலே 40 வினாக்கள் இடம்பெறு கின்றன. இங்கே வேகமும், விவேகமும் மாணவரிடத்தே ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், அந்த நேர அவகாசத்திற்குள் செய்துமுடிக்கும் திறனை மாணவரிடத்தே வளர்க்கவேண்டும். அதற்கான பல நுணுக்கமான இலகு பரீட்சை வழிகளை தொடர்ச்சியாக அவர்கள் பின்பற்ற உதவவேண்டும்.

தரம் 5 மாணவர்களுக்குப் பொருத்தமான நுண்ணறிவு, புதிர்கள் போன்ற மாணவ ருக்கு மிகவும் விருப்பமான பொது விவேகத்தை வளர்க்கும் விடயங்களைத் தேடிச் சேகரித்து வழங்கும் முயற்சி ஆசிரியர்களிடத்தே இருக்கவேண்டும்.

இன்று நாடெங்கும் சேவையாற்றும் ஆசிரியர்களிடையே பல்வேறு புறத்தாக்கக் கருவூலங்களால் பின்வரும் காரணிகளில் ஒன்றோ, பலவோ அவர்களின் உளச் சமா தானத்தைப் பாதித்து நிற்பது வெள்ளிடை மலை.

- தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பொருத்தமான கண்ணோட்டத்தில் நோக்காமை.
- பிரச்சினைகளைச்சரியாகப் பகுத்தாரா யாமை.
- பொருத்தமான தீர்வுகளை அமுல்ப்படுத்தத் தயங்குதல்.
- பொருத்தமான முடிவுகளை விரைவாக எடுக்க முடியாமை.
- எதிர்கொள்ளும் சவால்களுக்கு விரை வாக முடிவு காணமுடியாமை.
- தனியாள் இடைத் தொடர்புகளை ஆரோக் கியமாகப் பேண முடியாமை.
- ஏனையோரின் தேவைகளையும், உரிமை களையும் கருத்திற்கொள்ளாது செயற்பட முனைகின்றமை.
- பாடசாலையின் சமாதானச் சூழல் பாதிக் கப்படுவது பற்றிக் கவலைப்படாமை.
- மனித வளங்களினதும், பௌதீக வளங்க ளினதும் பெறுமானத்தை அறியாமை.
- தனது பலவீனங்கள் பற்றிய விமர்சனங் களை ஏற்றுக் கொள்ளாமை.
- தொடர்ச்சியான பிரதிபலிப்புச் சிந்தனை இல்லாமை.


என்பனவாகும்.

மேற்கண்ட நிலைமைகளில் இருந்து ஆசிரியர்கள் விடுபடும்போதுதான் ஆரம்ப நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனுடையதாக விருத்தி செய்யப் படும். ஆசிரியர்களின் பணி வாழ்க்கைத் தரத்தையும், உளநலத்தையும் விருத்தி செய்வதை முதல் நோக்காகக் கொண்டு ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து தரவட்ட அமைப்பை ஏற்படுத்தல் மூலம் இக் குறை பாடுகளை விருத்தி செய்யமுடியும். தரவட்ட அமைப்பின் மூலம் ஒன்றுகூடுதல் ஊடாக மகிழ்ச்சியடைதல் ஆசிரியர்களுக்கு அவசிய மானதாகும். நிரந்தர மகிழ்ச்சியும் மற்றவர் களின் நலனில் அக்கறையும் மானுட ஆக்கத் தின் மதிப்பையும் பெறுவதாக அமையும்.


வினாக்களை அறிமுகப்படுத்தும்போதும், அல்லது பயிற்சிப் பரீட்சை வினாக்களுக்கு விளக்கம் கொடுக்கும் போதும் அந்த வினா வின் முழுமைத் தன்மையை வெறும் செய்கை வழிகள் மூலம் விடைகாண முயற்சிப்பதை விடுத்து முதலில் அனுபவ ரீதியாக அதற்கு விடைகளை காண வழிகாட்டிய பின்பு செய்கை

வழிகளை பயன்படுத்துவதன் மூலம் மாண வர்கள் அதனை நம்பகத் தன்மையுடன் இலகுவாகப் புரிந்து கொள்ள வழிசமைக்க வேண்டும்.

உதாரணமாக சில வினாக்களும் வழிகாட்டல்களும்.




1 தொடக்கம் 6 வரையுள்ள இலக்கங் களைக் காட்டும் வகையில் புள்ளிகள் இடப் பட்டுள்ள ஒரு தாயக் கட்டையின் சில முகங்கள் பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன.



இவற்றை அவதானித்துப் பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள புள்ளிகளின் எண் ணிக்கையைக் கண்டு எழுதுக.

- முதலில் இவ்வாறான வினாக்களுக்கு சதுரமுகிகளைக் கையாளும் சந்தர்ப் பத்தை வழங்க வேண்டும்.
- அதிலே மாணவர்களை குறிப்பிட்ட இலக் கக் குறியீடுகளைக் குறிக்க வைத்தல்.
- அதன் பின்பு தரப்பட்ட தாயக்கட்டை அமைப்பின் தோற்றங்களைக் கொண்டு மேலதிக செயற்பாடுகளில் ஈடுபடல். அதன் மூலம் உண்மைப் பொருளில் இவ்வாறான போதிய விளக்கங்களைப் பெறுவதன் மூலம் விடையளிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இதன் பின்பு ஆசிரியர்கள் மாணவர்களின் திறமைகளுக்கு ஏற்ற வகையில் வேறுபட்ட விளக்கங்களை செய்கை முறைகளில் வழங்க வேண்டும். எல்லா மாணவர்களையும் தேர்ச்சி நிலைகளை அடையவைக்க ஆசிரியர் முயற்சிக்க வேண்டும்.

இந்த வினாவுக்கு வழங்கப்படும் வேறு ஒரு செய்கை வழி ⟶




இன்னும் சுருக்கமாக விளக்கம் கூறும் போது...

2க்கு எதிரே இருக்கக்கூடிய இலக்கங்கள்
2 ⟶ 1, 3, 4, 5, 6 என்பன வரலாம்.
1ஆவது படத்தின்படி
2 ⟶ 5, 1 என்பன வரமுடியாது.
2ஆவது படத்தின்படி
2 ⟶ 1, 3 என்பனவும் வரமுடியாது.
3ஆவது படத்தின்படி
2 ⟶ 3, 6 என்பன வரமுடியாது.
எனவே 1, 3, 5, 6 என்பன விடையாக வராது
4 என்பதே விடையாக வரும்.

எனவே இவ்வாறான விளக்கப் படிமுறை களில் ஒவ்வொரு வினாக்களையும் தெளிவாக வும் இலகுவாகவும்விடைகாண வழிகாட்ட வேண்டும். அதிக பரீட்சைகளையும், பயிற்சி களையும் கடமைக்குச் செய்வதை விடுத்து செய்யும் ஒவ்வொரு பயிற்சிகளையும் மிகவும் தெளிவாக அனுபவ ரீதியில் கற்றுக்கொள்ள வழிகாட்டுவது ஆசிரியர்களது கடப்பாடு.

இவ்வாறான வினாக்களிலும் மாணவர் கள் குறிப்பிட்ட அமைப்பில் உண்மைப் பொருட் களை காண்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் அதனை அனுபவ ரீதியாகக் கண்டு சரியான

தோற்றப்பாடுகளை அறிந்து கொள்ளமுடியும்.

சரியான விடைகளின் கீழ்க் கோடிடும் போது பொருத்தமில்லாத விடைகளை நீக்கி பின்பு உள்ளவற்றில் மிகச் சரியானதை முயற்சியுடன் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பங் களை இனங்காண வழிகாட்டுவதும் அவசியம்.

எனவே இவ்வாறான நடைமுறையில் விளக்கம் பெற்ற பின்பு தான் இலகுவழிகளை இனங்காண வழிகாட்டுவதால் மாணவர்கள் அவ்வழிகளைப் பின்பற்றலாம்.

**வினாத்தாள் II இற்கு வழிகாட்டலில் ஆசிரியர்களின் பங்கு.**

இவ்வினாப்பத்திரம் தரம் - 1 தரம் 5 வரை யுள்ள சமயபாடம்தவிர்ந்த ஏனைய எல்லா பாடப்பரப்புக்களையும் உள்ளடக்கியிருக்கும்.

முதலில் அடிப்படை விடயங்களான மொழி வாசிப்பு, எழுத்து, கணித கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்பவற்றில் போதிய விளக்கமும் தெளிவும் ஏற்பட வழி காட்டல் அவசியமாகின்றது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற கூற்றுக்கமைய ஒரு மாணவனின் அடிப்படை அம்சமாக எண்ணும் எழுத்தும் அமைய வேண்டும் குறிப்பாக "எழுத்து" என்பது முக்கியம் பெறவேண்டிய ஒன்று. ஒருவன் எழுத்தை திறம்பட வரிவடிவிலே எழுத முடிய வில்லை என்ற எண்ணம் அவன் மனதிலே தோன்றுகின்றபோது அதனைக் கண்டறிந்து அழகுற உறுப்பமைய எழுதவைத்தல் ஆசிரி யர், பெற்றோர் கடமையாகும். இங்கே எழுத்து வடிவில்லை என்ற மாத்திரத்தே பிரம்பை எடுத்து தண்டிப்பதை விடுத்து அவனின் மன எழுச்சிகளைத் தட்டிவிடும் வார்த்தைப்பிர யோகத்தைக் கையாள்வது மிகச் சிறந்த பெறு பேற்றைத் தரும். ஒரு மாணவனின் எழுத்தை உறுப்பமைய எழுத வைப்பதும் ஆசிரியரு டைய தலையாய கடமையாகும்.

தமிழ் அரச பாடத்திட்டத்தில் உள்ள விட யங்களை மிகவும் விளக்கமாகவும் தெளிவாக வும் கற்பதற்கு வழிகாட்ட வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் நகைச்சுவையாளராகவும், நடிகனாகவும் செயற்படவேண்டும்.

எழுத்துப் பிழையில்லாது எழுதுவதற்கு நாள்தோறும் பாடசாலையிலும் அத்தோடு பெற்றோர்களுக்கு ஊடாக வீட்டிலும் போதிய பயிற்சி அளித்தலுடன் மாணவன் தனது எழுத்து அழகாக வருகின்றது என எண்ணி எழுதிவரும்போது நாமும் அதை ஏற்றுக் கொண்டு இதை விட அழகுற எழுதிக்காட்டு என ஊக்கப்படுத்த வேண்டும்.

தரம் 5 மாணவர்களுக்குப் பொருத்த மான இலக்கண விடயங்களை மட்டும் கற் பித்தல் வேண்டும்.

**கணித பாடம்**

இதேபோன்று கணிதம் சார்ந்த அடிப் படை விடயங்கள் ஒரு மாணவனுக்குத் தெரிந்தி ருக்கிறதா? என்ற விடயம் ஆசிரியர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதன் அடிப்படை யிலே வாய்ப்பாடுகள், கணிதக் குறியீடுகள் அதன் செயன்முறை விளக்கங்கள் சரியான முறையிலே மாணவர்களைச் சென்றடைந் திருக்கின்றதா? என்ற வினாவுக்கு விடை கூறக்கூடிய வகையிலே கற்பித்தல் செயற் பாடுகள் அமையவேண்டும். ஆசிரியர்கைநூலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் வழிகாட்டல் விளக்கங்களுக்கு ஏற்ப மிகவும் ஆழமான முறையில் விளக்கங்களையும் உபகரணப் பயன்பாட்டையும் கொண்டு கற்றலுக்கு வழி காட்டுவது ஆசிரியர்களது கடப்பாடு ஆகும். ஆசிரியர்கள் வெறும் கரும்பலகை விளக்கத் துடன் வழிகாட்டுவார்கள் எனில் மாணவர்கள் கணித எண்ணக்கரு விருத்தி மிகவும் பின் தங்கிய நிலையிலே காணப்படும். இதனால் கணித வினாக்களுக்கு விடை காணமுடியாத நிலையும் ஏற்படும். எனவே மிக முக்கியமாக ஆசிரியர் கைந்நூல்களில் தரப்படும் கணித

எண்ணக்கரு முறையில் வழிகாட்டவேண்டும். கணித எண்ணக்கரு விருத்தி அதிகம் இருந்தால் வினாத்தாள் I இலும் அதிக வினாக்களுக்கு விடையளிக்கும் சந்தர்ப்பமும் ஆற்றலும் ஏற்படும்.

அத்தோடு இதற்கான செயற்பாடுகளாக புதிய முறைகளையும், நுட்பங்களையும் செயற்பாட்டினையும் ஆசிரியர்கள் கையாள வேண்டும்.

குறிப்பிட்ட ஒவ்வொரு கணித வினாவிலும் போதிய தேர்ச்சியும் பயிற்சியும் எடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும்.

**அடுத்து ஆங்கில பாட வினாக்களில்...**

பாடப்புத்தக ஆங்கில சொற்கள் அத்தியாவசியமாக அறிந்திருத்தல் வேண்டும். அத்தோடு வாய்மொழி மூல ஆங்கிலச் சொற்களையும் வசனங்களையும் கையாளச் சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக விளையாட்டு முறைகளூடாக அவற்றை ஞாபகப்படுத்தவும் வாய்ப்புக்கள் வழங்க வேண்டும்.

**சிங்களம்....**

ஆசிரியர் கைந்நூலில் தரப்பட்டுள்ள சிங்கள விடயங்களை மட்டும் அறிமுகப்படுத்தி அவற்றைச் சுற்றாடல் பாட அலகுகளினூடாக கற்றலில் புகுத்தவேண்டும். அத்தோடு நடைமுறையில் அவற்றினைப் பயன்படுத்துவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.


**சுற்றாடல் ...**

இப்பாடப் பரப்பில் மாணவர்கள் தாவரங்கள், விலங்குகள் மற்றும் தம்மைச் சூழ உள்ள பொருட்கள், தாங்கள் கையாளும் பாவனைப் பொருட்களில் உள்ள விடயங்கள், தகவல்கள் என்பவற்றை முற்றுமுழுதாக அனுபவ ரீதியில் அறியவேண்டும்.

குறிப்பாக தாவர, விலங்குகளை நேரடியாகப் பார்த்து அறிவதுடன் மட்டுமல்ல, அதைப் புகைப்படத்திலும், கோட்டுப்படத்திலும் இனங்காணும் திறன்களை வளர்ப்பதற்கு வழிகாட்டுவது அவசியமாகும்.

வீட்டுப்பாவனைப் பொருட்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் என்பவற்றின் தகவல்களை நேரடியாகப் பார்த்து அறிய வேண்டும்.

உதாரணமாக உப்புப் பைக்கற்றில் உள்ள விடயம்.




இது போன்று தீப்பெட்டி, சவர்க்கார உறை, கடித உறை, மின்சாதனப் பெட்டிகள் போன்றவற்றிலுள்ள விடயங்களை அன்றாட தேவைகளுக்காக அறியவேண்டும். அதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் உதவ வேண்டும்.

இவற்றோடு சூழலில் உள்ள தாவரங்கள், பிராணிகளின் அசைவுகளின் தொழிற்பாடுகளையும் அறியவேண்டும். எனவே இவ்வாறான சூழல் அவதான அனுபவங்களூடாகப் பெறப்படும் விடயங்களும் புலமைப்பரிசில் பரீட்சையில் வினாக்களாக வருகின்றன.

அழகியல், உடற்கல்வி, தையல், ஆக்கம் என்பனவற்றிலும் வினாக்கள் வருகின்றன.

எனவே அவ்வாறான விடயங்களிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

**மாணவர் கடமைகளும் அவர்களின் தயார் நிலையும்**

மாணவர்கள் தமது கல்வி மேம்பாட்டிற்கு ஆசிரியர்கள், பெற்றோர்களின் வழிநடத்தல்களை விருப்புடன் ஏற்கும் மனப்பக்குவத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இது உள, உடல் சார்ந்த வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிகரமான கற்றலுக்கும் உந்துசக்தியாக அமையும். இவ்விருப்பினை உருவாக்குகின்ற சிந்தனைப்போக்கும், பக்குவம் நிறைந்த மனப்பாங்கும் பெற்றோர், ஆசிரியர்களிடம் இருப்பது சாலச் சிறந்தது.

எனவே குறித்த ஒரு மாணவர் சமுதாயத்தை அறிவுத்திறன் வளர்ச்சியில் புலமைசார் நிறைவிற்குக் கொண்டு வருவதற்குச் சமூகம் சார்ந்த இணைப்போடு யாவருமே ஒன்று சேர்ந்த முன்னேற்றகரமான முயற்சியை மனவிருப்புடன் செய்யவேண்டும். இதற்குத் தொடர்ச்சியான பயிற்சிகளும், அதனூடாகக் கிடைக்கும் அனுபவங்களைப் பரீட்சைகளுமாக நடாத்தி அதன் பெறுபேறுகளை பெற்றோர்களுடன் சேர்ந்து கண்டுகொண்டு அப்பெறுபேற்றின் ஏற்ற இறக்கங்களை எல்லோரும் சேர்ந்து நிமிர்த்துவதற்கான முயற்சிகளைச் செயற்பாட்டடிப்படையில் செய்து வெற்றிகளையும் குவித்துக்கொள்வோம்.

✸ ✸ ✸

---

# தமிழ் இலக்க எழுத்துக்கள்

| வ | இ | ரு |
|---|---|---|
| ¼ | ½ | ¾ |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க<br>1 | உ<br>2 | ௩<br>3 | ச<br>4 | ரு<br>5 | சா<br>6 | எ<br>7 | அ<br>8 | கூ<br>9 | ய<br>10 |
| கக<br>11 | கஉ<br>12 | க௩<br>13 | கச<br>14 | கரு<br>15 | கசா<br>16 | கஎ<br>17 | கஅ<br>18 | ககூ<br>19 | கய<br>20 |
| உக<br>21 | ௩க<br>31 | சக<br>41 | ருக<br>51 | சாக<br>61 | எக<br>71 | அக<br>81 | கூக<br>91 | ள<br>100 | ளக<br>101 |
| உள<br>200 | ௩ள<br>300 | சள<br>400 | ருள<br>500 | சாள<br>600 | எள<br>700 | அள<br>800 | கூள<br>900 | கூ<br>1000 | கூக<br>1001 |
| உகூ<br>2000 | ௩கூ<br>3000 | சகூ<br>4000 | ருகூ<br>5000 | சாகூ<br>6000 | எகூ<br>7000 | அகூ<br>8000 | கூகூ<br>9000 | யகூ<br>10,000 | யகூக<br>10,001 |
| உயகூ<br>20,000 | ௩யகூ<br>30,000 | ச'பகூ<br>40,000 | ருயகூ<br>50,000 | சாயகூ<br>60,000 | எயகூ<br>70,000 | அயகூ<br>80,000 | கூயகூ<br>90,000 | ளகூ<br>100,000 | யளகூ<br>10,00,000 |

| ளளகூ |
|---|
| கோடி |
| 100,00,000 |



# பாடசாலைத் தலைமைத்துவம்
# SCHOOLS' LEADERSHIP

திரு. க. தேவராசா
பீடாதிபதி,
வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 1. 0 அறிமுகம்

நவீன உலகில் தலைமைத்துவம் சம்பந்தமான எண்ணக்கரு எல்லாவகையான நிறுவனங்களிலும்பிரபலம்பெற்று வருகின்றது. எந்தவொரு நிறுவனத்தின் இலக்கையும் (Goal) இலகுவில் அடைந்துகொள்வதற்குத் தலைமைத்துவமே வகை செய்யும் என்பதனால் சகல நிறுவனங்களும் தமக்கான தலைமைத்துவத்தின்மீது அக்கறை கொள்ளத் தொடங்கிவிட்டன. இன்றைய உலகில் பாடசாலைகள் தொழில் நிறுவனங்கள் போலவும், அதிபர் முகாமையாளர்கள் போலவும், கல்வி வணிகப் பண்டமாகவும் மாணவர்கள் வாடிக்கையாளர்களாகவும் கருதப்படும் நிலை தோன்றியிருப்பதனால் அதன் வெற்றிகரமான இயக்கத்திற்குத் தலைமைத்துவம் இன்றியமையாததாகிவிட்டது.

உலகமயமாக்கல் ஊடாகத் தற்காலத்தில் பாடசாலைகள் தமது மாணவர்களுக்குத் தரமான கல்வியை உறுதிப்படுத்தவும் தரமான உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளவும் நவீன கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி உயர் தரத்திலான கல்வியை வழங்கவும் முயன்று வருவதனால் அதற்கென நல்ல தலைமைத்துவத்தை வேண்டி நிற்கின்றன. முன்னர் தலைவர்கள் பிறக்கின்றார்கள் என்று கொள்ளப்படும் நிலை மாற்றமடைந்து இப்பொழுது தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்ற கருத்து நிலைபெற்றுவிட்டதனால் தலைமைத்துவப் பண்புகளைத் தலைவர்களிடையே வளர்ப்பதற்கும் அதன் ஊடாக ஆளுமை மிக்க தலைவர்கள் உருவாகுவதற்கும் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே பாடசாலை அதிபர்களும் நல்ல தலைமைத்துவத்தை வழங்கத் தமது தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். இதன் ஊடாகவே தலைமைத்துவம் ஆளுமை மிக்கதாகவும் சிறப்பானதாகவும் அமைய முடியும்.

## 2.0 தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணம்

நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அதனுடன் தொடர்பு பட்டவர்களை வழிநடத்திச் செல்லும் பணியான தலைமைத்துவத்திற்குப் பல அறிஞர்கள் பல வகையான வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளனர்.

"எவரேனும் ஒருவர் ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயற்படுகின்றாரோ அவரால் மேற்கொள்ளப்படும் கருமம் தலைமைத்துவம்" என ஸ்புறாட்ஸ் எனும் அறிஞர் தலைமைத்துவத்தை வரையறுத்துள்ளார்.

"தூய்மையாகவும் சிக்கனமாகவும் செயற்பட்டு தன்னைச் சார்ந்துள்ள மக்கள் கூட்டத்தின் மேல் அல்லது குழுவின்மேல் நேர்க்கணியமாகச் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய கருமம் எதுவோ அதுவே தலைமைத்துவம்" என மேர்வின் இசோ என்ற அறிஞர் தலைமைத்துவத்தை வரையறுத்துள்ளார்.

"தலைமைத்துவம் என்பது ஒரு நிலையின் உடமையாகவும், தனிநபரின் குணவியல்பாகவும், நடத்தையின் கூறாகவும் கொள்ளப்படமுடியும்" என டானியல் கற்ஸ், றோபேட் எஸ்கன் ஆகியோர் தலைமைத்துவத்தை வரையறுத்துள்ளனர்.

"தலைமைத்துவம் என்பது குழுவினர் மீது செல்வாக்கினைச் செலுத்தி அவர்களூடாக நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றும் கருமம்" என றிச்சாட் கொங்மன், நோர்மன் மைம் ஆகியோர் தலைமைத்துவத்தை வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

"தலைமைத்துவம் என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்குத் தனக்குக்கீழ்

இயங்கும் பின்பற்றுவோரை அல்லது உதவியா ளர்களை நெறிப்படுத்தும் கருமம்" என கூன்ஸ், ஒடோனல் ஆகியோர் வரைவிலக்கணப்படுத்தி யுள்ளனர்.

இவ்வாறு தலைமைத்துவத்திற்கு வழங்கப் பட்டிருக்கும் பல்வேறு வரைவிலக்கணங்களி னூடோ நிறுவனங்கள் தமக்கென உருவாக்கியி ருக்கும் இலக்கை அடைவதற்கு ஏனையோரை வழிப்படுத்தும் கருமமாகத் தலைமைத்துவம் கொள்ளப்படுகின்றது. இலக்கு என்பது பல பெயர் களினால் அழைக்கப்படுவதனைக் காணமுடியும். குறிப்பாக,

தூர நோக்கு - Vision
இலட்சிய நோக்கு - Mission
நோக்கம் - Objective
குறிக்கோள் - Goal

என நான்காக இலக்கு கொள்ளப்படுவத னால் அதனை அடைய நிறுவனங்களில் பணி யாற்றும் உதவியாளர்களையும் பின்பற்றுவோர் களையும் நெறிப்படுத்திச் செல்ல தலைமைத்து வம் அவசியமானதாக அமையும். அரச பாட சாலைகளில் அவற்றின் இலக்கை அமைச்சு, மாகாண அமைச்சு, வலயம், கோட்டம் என்ற பல அடுக்குகளில் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப் படுத்துமாறு அதிபர்களிடம் ஒப்படைக்கப்படுகின் றது. இந்த இலக்கினை அடைவதற்கு வசதியாக பாடசாலைத் தலைமைத்துவம் தொழிற்படுவத னைக் காணலாம். அதிபரிடம் இருக்கும் வலு ஏனையோர் மீது செல்வாக்கினைச் செலுத்தி இலக்கை அடைய உதவுகின்றது.

## 3.0 தலைமைத்துவ வகைகள்

தலைமைத்துவப் பணியை மேற்கொள் வதற்காக உருவாகும் தலைமைத்துவம் நான்கு வகைப்பட்டனவாக அமையமுடியும்.

### 3.1 கொடைத் தலைமைத்துவம்
### CHARISMATIC LEADERSHIP

இது பிறப்பிலிருந்தே தலைமை தாங்கும் பண்புகளைப் பெற்றுக்கொண்ட தலைமைத்துவ மாகும். இது கொடையாகப் பிறப்பிலிருந்து கிடைக் கும் ஆற்றல்களை அடக்குவதாகும். நெப்போலி யன், மஹாத்மா காந்தி, மாட்டின் லூதர்கிங் போன்றவர்கள் இவ்வகையான தலைவர்களே யாகும்.

### 3.2 பாரம்பரியத் தலைமைத்துவம்
### TRADITIONAL LEADERSHIP

பரம்பரையை மையமாகக் கொண்டு தலை மைதாங்கும் வாய்ப்புக் கிடைப்பதனைப் பாரம்பரி யத் தலைமைத்துவம் என்பர். ஒருவர் பிறந்த குடும் பம் அவருக்கான தலைமைத்துவத்தை இங்கு வழங்கும். குறிப்பாக இங்கிலாந்தில் எலிசபெத் மகாராணியின் குடும்பத்தவர் வகிக்கும் தலை மைத்துவம் பாரம்பரியத் தலைமைத்துவமாகும்.

### 3.3 தெரிவுத் தலைமைத்துவம்
### ELECTED LEADERSHIP

தெரிவு செய்யப்படும் வகையில் ஒருவருக்குத் தலைமை தாங்கும் வாய்ப்புக் கிடைக்குமெனில் அது தெரிவுத் தலைமைத்துவமாகும். குறிப்பாக தொழிற்சங்கத் தலைவர், அரசியல் தலைவர், சமயத் தலைவர் போன்றோர் தெரிந்த தலைவர் களேயாவர்.

### 3.4 நியமனத் தலைமைத்துவம்
### APPOINTED LEADERSHIP

நியமனம் செய்யப்படும் வகையில் உருவா கும் தலைமைத்துவம் இதுவாகும். பொதுவாக நிறுவனங்களில் காணப்படுவது நியமனத் தலைமைத்துவமேயாகும். இதன் காரணமாகவே பாடசாலைகளில் அதிபர்களது நியமனமும் இத்தகைய தலைமைத்துவமாகக் கொள்ளப்படு கின்றது.

இலங்கையில் இயங்கிவரும் பாடசாலை களான

1AB பாடசாலைகள்
1 C பாடசாலைகள்
பிரிவெனாப் பாடசாலைகள்
தனியார் பாடசாலைகள்

என்பனவற்றின் நியமனத் தலைமைத்து வமே இருப்பதால் பாடசாலைத் தலைமைத்துவம் நியமனத்தினூடாக இடம்பெறும் தலைமைத்துவ மாகவே காணப்படுகின்றது.

### 4.0 பாடசாலைத் தலைமைத்துவத்தின் பண்புகள்

இலங்கையின் பாடசாலைகளது அதிபர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் ஒரே மாதிரியானவை எனக் கூறப்பட்டாலும் உண்மையில் பாடசாலைகளின் வகை, தன்மை, அளவு, வளர்ச்சி நிலை என்பவற்றுக்கேற்ப தலைமைத்துவம் வேறுபடுகின்றது. இருந்தபோதும் எல்லாவகையான பாடசாலை அதிபர்களின் தலைமைத்துவப் பண்புகளும் ஒரே மாதிரியாகக் காணப்படக்கூடியவாறு அவை வளர்க்கப்படல் வேண்டும். அதிபர்களைப் பொறுத்தவரை பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அலுவலக ஊழியர், சிற்றூழியர், மாணவர் என்போரைவிட ஆசிரியர்களுக்கு வழிகாட்டுவதே தலைமைத்துவம் என இனங்காணப்படும். ஆசிரியர்கள் சாதாரண மனிதர்கள் என்பதனால் சுய தேவைகளும் தனிப்பட்ட இலட்சியங்களும் அவர்களிடையே காணப்படுவதுடன் பலவீனங்களும் அதனூடான பிரச்சினைகளும் அவர்களுடன் இணைந்திருக்கும். ஆசிரியர்களின் நடத்தைகள் பல்வேறுபட்டனவாக அமையமுடியும் என்பதனால் அதிபர்கள் தெளிந்த சிந்தனையுடன் தொழிற்பட்டாலே நல்ல தலைவர்களாக விளங்க முடியும். சிறந்த ஒழுக்கமும், நல்ல நடத்தையும், புலமைசார் அறிவும் கொண்டவர் தமது அதிபர் என ஆசிரியர்கள் கருதினாலே அவரால் தம்மை வழிநடாத்தமுடியும் என்ற நம்பிக்கை ஆசிரியர்களிடம் தோன்றி அவரது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வர். ஒரு அதிபரிடம் பின்வரும் தலைமைத்துவப் பண்புகள் இருத்தல் வேண்டும்.

### 4.1 நோக்க உணர்வு

பாடசாலைத் தலைமைத்துவத்தில் மிக முக்கியமாக வேண்டப்படுவது நோக்க உணர்வுத் தன்மையாகும். (Objectivity) எத்தகைய பணியை ஆற்றத் தொடங்கமுன்பும் தமது பாடசாலையின் நோக்கத்துக்கு முரணாக அது இல்லை என்பதைப் பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இந்த நோக்கத்தை இலகுவில் அடைவதற்கு வசதியாகத் தமக்குக்கீழ் இருக்கும் ஆசிரியர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பாடசாலைகள் கல்விச் செயற்பாடுகளிலும், இணைச் செயற்பாடுகளிலும் முதலிடம் பெறவேண்டுமென்ற இலக்கு அதிபரிடம் இருந்தால் அந்த நோக்கத்தை அடைய உதவக்கூடிய ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் என்போரிடையே "நோக்கத்தினால் முகாமை செய்தல் (MBO) என்ற கருதுகோளைத் தெளிவாக்கி விடுதல் வேண்டும். இது பாடசாலை இலக்கை அடைவதில் எல்லோரும் இணைந்து செயற்படவும் வெற்றி பெறவும் வகை செய்யும்.

### 4.2 மானிடத்திறன்

பாடசாலைத் தலைமைத்துவம் எப்பொழுதுமே மனிதரை விளங்கிக்கொள்ளும் மானிடத் திறன் (Human Skill) கொண்டிருத்தல் வேண்டும். இதற்காக உளவியல் அறிவை அதிபர்கள் விருத்தி செய்து ஏனையோர் மனதைப் புரியக்கூடிய மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பை (Empathy) வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். பாடசாலையில் அதிபர்கள் இப்பண்பைப் பெற்றுக்கொண்டால் ஏனையோரிடம் வேலைவாங்குவது மிக இலகுவாக இருக்கும். எல்லோரிடமும் தன்னிச்சையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பு அதிபர்களால் கற்றுக்கொள்ளப்படவேண்டும். இதற்காகவே ஆலோசனைச் சேவை போன்ற பயிற்சிகளை அதிபர்களுக்கு வழங்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

### 4.3 தொழில்நுட்பத்திறன்

பாடசாலைத்தலைமைத்துவத்திற்குப் பொறுப்பான அதிபர்கள் தொழில்நுட்பத் திறன் (Technical Skill) என்பதைக் கொண்டிருத்தல் வேண்டும். இத்திறன் வேலை தொடர்பான பரிபூரண அறிவை அதிபர் கொண்டிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. பாடசாலை தொடர்பான கல்விசார்ந்த, கல்வி சாராத எல்லாச் செயற்பாடுகள் பற்றியும் பூரண அறிவை அதிபர்கள் கொண்டிருத்தல் வேண்டும். இதற்காகவே எத்தகைய புதிய எண்ணக்கருக்களோ அன்றி நுட்பங்களோ அறிமுகப்படுத்தப்படும்போது அதிபர் அவற்றைக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக ஜப்பானிய முகாமைத்துவ நுட்பமான 5S என்பதையும், மேலைத்தேய நுட்பமான 5E என்பதையும் அதிபர் தெரிந்துகொண்டு ஏனையோரிடம் வேலை பெற்

றுக்கொள்வர். பொதுவாகவே அதிபர் வேலை தொடர்பான தெளிந்த அறிவைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும்.

### 4.4 தொடர்பாடல்திறன்

பாடசாலைத் தலைமைத்துவத்திலே தொடர் பாடல்திறன் என்பது Communication Skill முக்கிய மாகின்றது. முகாமைத்துவத்திலே தொடர்பாட லுக்கென தலைவர் தனது மொத்த வேலை நேரத்தில் 60-75% வரையான நேரத்தைச் செலவு செய்யமுடியும். ஆய்வுகளின்படி சொற் களில் அல்லாது மக்களிலேயே கருத்துக்கள் பொதிந்திருப்பதனால் வழங்கப்படும் எத்தகைய செய்தியும் சரியாகப் போய்ச் சேர்வதனை உறுதிப் படுத்துவது தலைவர்களின் பொறுப்பாகும். அதிபர், பெற்றோர், மாணவர், ஆசிரியர், பழைய மாணவர் எனப் பலதரப்பட்டவர்களுக்கு செய்தி களைப் பரிமாற்றுவதனால் வழங்கப்படும் செய்தி சரியாகவும் குறித்த நேரத்திலும் சென்றடை வதனை உறுதிப்படுத்துவது அதிபரின் கடமையா கும். இதற்கென பின்னூட்டி (Feed back) எனும் நுட் பத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். இதன் மூலம் பாடசாலையின் அகப்புறச் செயற்பாடுகளைத் திற னாக மேற்கொள்ள அதிபர் வகை செய்யமுடியும்.

### 4.5 தீர்மானமெடுக்கும் திறன்

பாடசாலைத் தலைமைத்துவத்தில் தீர்மான மெடுக்கும் திறன் என்பதும் வலியுறுத்தப்படுகின் றது. அதிபர் பாடசாலைக்கான பல தீர்மானங்களை எடுக்கவேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின் றார். இதனால் தீர்மானமெடுப்பாளர் (Decision Maker) என அதிபர் கொள்ளப்படுகின்றார். இவர் நிகழ்ச்சித்திட்டத் தீர்மானங்களையும் நிகழ்ச்சி யற்ற தீர்மானங்களையும் எடுப்பது மட்டுமன்றி தனித் தீர்மானங்களையும் குழுத் தீர்மானங் களையும் எடுப்பார். தீர்மானங்களை எடுக்கும் போது குழுத் தீர்மானம் எடுக்கும் முறையை அவர் கடைப்பிடித்தல் வேண்டும். குழு அங்கத்தவர்கள் பங்குகொண்டு தீர்மானம் எடுப்பதனை ஜப்பானிய முகாமைத்துவத்தில் 'றிங்கி (Rinhi) முறைமை' எனக் கொள்வர். இதன்படி பலரிடம் ஆலோசனை பெற்றுத் தீர்மானம் எடுக்கும் முறை அதிபரால் பின் பற்றப்படல் வேண்டும். பாடசாலையின் கல்வித் தரத்தை மேற்கொள்வதற்கான தரவட்டம் (Quality Circle) என்பது பாடசாலை அதிபரால் பின்பற்றப் படல் வேண்டும். இதன் மூலம் பாடசாலையில் மொத்தத் TQM தரக்கட்டுப்பாட்டு முகாமைத்து வத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து பௌதீக வளம், ஆசிரிய வளம், கல்வி அபிவிருத்தி ஆகிய வற்றை அடைய பாடசாலையின் தலைமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### 4.6 பயிற்றுதல்

பாடசாலைத் தலைமைத்துவத்துக்கு முக்கிய செயற்பாடாக அமைவது பயிற்சியளித்தலாகும். ஆசிரியர்களது திறனை விருத்தி செய்யவும் மாணவர்களது கல்வி விருத்தியைக் கொண்டு வரவும் வசதியாக காலத்துக்குக் காலம் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுப்பது அதிபரின் கடமை யாகும். பொதுவாகவே வேலைக்குப் பொருத்த மான ஆளை இனங்கண்டு அவர்களிடம் அப் பணியை ஒப்படைப்பதும், பணியை மேற்கொள்ள முடியாதவர்களுக்கு அதனை நிறைவேற்றுவதற் கான பயிற்சியை வழங்குவதும் அதிபரின் கடமை யாகும். பயிற்சிக்கான செலவு ஆசிரியர்கள் மீது செய்யப்படும் முதலீடு என்பதனால் பயிற்சியைத் தொடராக வழங்குவது அதிபரின் கடமையாக இருப்பதுடன் அது நீண்ட காலத்தில் ஆசிரியர் களின் திறனை விருத்தியுறச் செய்யும்.

### 4.7 கையளித்தல் (Delegation)

பாடசாலைத் தலைமைத்துவத்திறன் வெற் றிக்குக் காரணமாக அமையும் காரணிகளில் ஒன் றாகக் கையளித்தல் காணப்படுகின்றது. அதிபர் தனது வேலைச் சுமையைக் குறைத்துக் கொள்ளவும் மன அழுத்தத்திலிருந்து விடுபடவும் வசதியாகத் தனது பொறுப்புக்களில் ஒரு பகுதியைத் தனது உதவியாளர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு வசதியாக தனித்தனியான கடமைகளை நிறைவேற்ற பிரதி அதிபர்களையும் உதவி அதி பர்களையும் அதிபர் நியமித்துக் கொள்கின்றார். இத்தகையவர்களிடம் தனது பொறுப்புக்களில் ஒரு பகுதியைப் பிரித்து ஒப்படைப்பதுடன் அவை சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதும் அதிபரின் கடமை யாகும்.

ஆனாலும் முகாமைத்துவத்தில் அதிகாரங்கள் கையளிக்கப்படலாம். ஆனால் பொறுப்புக்கள் அவ்வாறல்லன இருப்பதனால் பொறுப்புக்கள் கையளிக்கப்பட முடியாதவை எனக் கொள்ளப்படுகின்றது. இதற்குக்காரணம் பொறுப்புக்களுக்கு வகை சொல்லும் (Accountability) தன்மை தொடர்ந்தும் பாடசாலைகளில் அதிபரிடமே இருக்கும் எனக் கூறப்படுவதனால் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதனை அதிபர் கண்காணித்தல் வேண்டும்.

## 4.8 விமர்சனங்களை ஏற்றல்

பாடசாலைத் தலைமைத்துவத்திலே அதிபர் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும். சமூகத்துடன் மிக நெருக்கமான அமைப்பெனப் பாடசாலைகள் கொள்ளப்படுவதனால் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என்ற பல தரப்பினரிடமிருந்தும் விமர்சனங்கள் தெரிவிக்கப்படும். இவ்விமர்சனங்களைக் கண்டு அதிபர் துவண்டுவிடக்கூடாது. சிறந்த தலைமைத்துவம் பாடசாலைகளில் தொழிற்படத் தொடங்கியவுடனேயே விமர்சனங்கள் தெரிவிக்கப்படும். அப்போது பாடசாலையின் அதிபர் தனக்கு எதிரான விமர்சனங்கள் எல்லாம் எதிர்கால விருத்திக்கான ஆலோசனைகள் தான் எனக்கருதும் மன நிலையை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இது தலைவனின் எதிர்கால விருத்திக்கான ஆலோசனைதான் எனக் கருதும் நேர்க்கணியக் கருத்தை வளர்த்தல் அதிபரின் பொறுப்பாகும்.

## 4.9 பக்கச் சார்பின்மை

பாடசாலைத் தலைமைத்துவத்திலே அதிபர் பக்கச்சார்பு ஏதுமின்றி தொழிற்படப் பழகிக் கொள்ளல் வேண்டும். தலைவன் நடுநிலையாளராகத் தொழிற்பட்டால் மட்டுமே எல்லா உதவியாளர்களதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் தலைவன் உதவியாளர்களிடையே எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள், ஆதரவான கருத்துக்களைக் கொண்டவர்கள் என இருசாராரைச் சந்திக்கவேண்டி வரும். இது உதவியாளர்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதுடன், வேலை நிறுத்தம் போன்ற ஆசிரியர் அமைதியின்மைப் பிரச்சினைகளும் தோன்றுவதற்கு ஏதுவாகும் என்பதனால் அதிபர் பக்கச் சார்பின்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

## 4.10 ஊக்கப்படுத்தல்

பாடசாலைத் தலைமைத்துவத்திலே அதிபர் பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட சகலரையும் ஊக்குவிக்கும் கடமைப்பாட்டைக் கொண்டுள்ளார். உதவியாளர்களிடம் எதிர்பார்த்த விளைவை அல்லது கூடிய விளைவைப் பெற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தல் அவசியமாகும். இதற்காகவே நிதி சார்ந்த நன்மைகளையும் நிதிசாராத நன்மைகளையும் உதவியாளர்களுக்கு வழங்க பாடசாலை அதிபர் முன்வருகின்றார். பொதுவாகப் பாடசாலைச் சமூகத்தவருக்கு என்ன தேவைகள் உள்ளன என அதிபர் இனங்கண்டு பின்னர் அவற்றைத் திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். முகாமைத்துவத்திலே மாஸ்லோ என்ற அறிஞரின் கருத்துப்படி எல்லா மக்களுக்கும் அடிப்படைத் தேவை, பாதுகாப்புத்தேவை, சமூகத் தேவை, கௌரவத்தேவை, தன்னலத்தேவை என ஐந்துவகையான தேவைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றும். இவற்றுக்குப் படிப்படியாக திருப்திகளை வழங்கிப் பூர்த்தி செய்தால் மக்கள் ஊக்குவிக்கப்படமுடியும். இதன் ஊடாகவே உயர்ந்த உற்பத்தித் திறனும் வேலைத் திருப்தியும் கிடைக்கமுடியும். மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழா, பெற்றோர்களுக்கான ஆலோசனைக் கூட்டம், பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் போன்றவை அதிபரால் ஒழுங்கு செய்யப்படுவதன் ஊடே பாடசாலைச் சமூகத்தவரை ஊக்குவிக்கும் வாய்ப்பு அதிபருக்குக் கிடைக்கும்.

## 4.11 நேர முகாமைத்துவம்

பாடசாலைக்கான சிறந்த தலைமைத்துவம் கிடைக்கச் செய்வதிலே நேர முகாமைத்துவமும் முக்கியம் பெறுகின்றது. பொதுவாகப் பாடசாலைகளில் நேரம் என்பது முதன்மை வளம் என்பதனால் அதிபர் பாடசாலை நேரத்திற்குள் எல்லா வகையான செயற்பாடுகளையும் நிறைவேற்றக் கடமைப்பட்டவராவார். சிறந்த நேர அட்டவணை

யைத் தயார் செய்து கல்விச் செயற்பாடுகளும் இணைச் செயற்பாடுகளும் குறித்த நேரத்திற்குள் நிறைவேற்றப்படுவதனை அதிபர் உறுதிப்படுத் திக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாடசாலை தொடங்கும் நேரத்திற்கு முன்பதாகவே பாடசாலைக்குச் சமுக மளிக்க வைப்பது அதிபரின் கடமையாகும்.இதில் காலதாமதம் ஏற்படுவோருக்குத் தண்டனை வழங்குவது என்பதைவிட ஆலோசனைகளை வழங்கி அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுவது அதிபரின் கடமையாகும். வேண்டுமானால் அவுஸ்ரேலியா போன்ற நாடு களில் பின்பற்றப்படுவதுபோல் நெகிழ்ச்சி கொண்ட நேரத்தை பின்பற்றுதல் பொருத்தமாக அமையமுடியும். இதேபோல் நேரமுகாமைத்து வத்தில் பச்சை நேரம் (Green and Red time) சிவப்பு நேரம் என இருப்பதனால் கடினமான பாடங்களை (கணிதம்) பச்சை நேரத்திலும் இலகுவான பாடங்களை (சித்திரம்) சிவப்பு நேரத்திலும் கற்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக திறனுள்ள நேர முகாமைத்துவத் திற்காக பாடசாலையில் ஆற்றப்படவேண்டிய வேலை கள் தொடர்பான அவசரத்தையும் (Ergency) அவசி யத்தையும் (Importancy) கருத்திற்கொள்ளுதல் வேண்டும். அவசரமானதும் அவசியமானதுமான வேலைகள் உடனடியாக பாடசாலை அதிபரால் செய் யப்படல் வேண்டும். அதேநேரம் அவசரமானதும் அவசியமற்றதுமான வேலைகள் உடனடியாக உதவியாளர் மூலம் செய்யப்படல் வேண்டும். மாறாக அவசரமற்றதும் அவசியமானதுமான வேலைகள் பிற்போட்டு அதிபரால் செய்யப்படும் போது அவசரமும் அவசியமுமற்ற வேலைகள் பிற்போட்டு உதவியாளர்களால் நிறைவேற்றப்பட அதிபர் முடிவெடுக்கலாம். பாடசாலை அதிபர் பாட சாலை நேரத்திற்கு மேலதிகமாகப் பணியாற்றுதல் அவரது அர்ப்பணிப்பான சேவையை எடுத்துக் காட்டுவதுடன் இது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்போருக்கிடையே நன்மதிப் பையும் உயர்த்தும்.

## 4.12 முரண்பாட்டு முகாமைத்துவம்

பாடசாலைத் தலைமைத்துவத்தில் முரண் பாடுகளைத் தீர்த்துவைத்தல் என்பதும் அதிபரின் பணியாகின்றது. தனிநபர்கள், குழுக்கள் என்ற வகையில் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என்போருக்கிடையே முரண்பாடுகள் தோன்றமுடியும். பழைய காலத் தில் முரண்பாடுகள் கெடுதியானவை என்பதனால் அவற்றை உருவாகவிடக்கூடாது என்பதில் தலைமைத்துவம் இறுக்கமாக இருந்தது. புதிய முகாமைத்துவத்தில் முரண்பாடுகள் உத்தம அளவில் இருப்பதே நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வகை செய்யும் என இணங்கப்பட்டுள்ளது. இதன்படி குறைந்த முரண்பாடுகளும் கூடிய முரண்பாடுகளும் ஆசிரியர் செயற்றிறன் அபி விருத்திக்கு உதவாது என்பதால் முரண்பாடுகளை உத்தம அளவில் வைத்திருப்பதே உதவியாளர் களின் செயற்றிறன் விருத்திக்கு உதவும் என்ப தால் ஆசிரியர்களையும் மாணவர்களையும் உற் சாகமாக வைத்திருக்க அதிபர் முரண்பாடுகளை உத்தம அளவில் வைத்திருத்தல் வேண்டும்.

## 4.13 தலைமைத்துவ இயல்பு

பாடசாலைத் தலைமைத்துவத்தில் நல்ல தலைமைத்துவ இயல்பைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகின்றது. குறிப்பாக

***பணிக்கும் இயல்பு***
***திணிக்கும் இயல்பு***
***கலந்தாலோசிக்கும் இயல்பு***
***பங்குபற்றும் இயல்பு***

என நான்கு இயல்புகள் இருப்பதனால் அதி பர் தான் எவ்வளவு அதிகாரத்தை வைத்திருக்க விரும்புகின்றார். உதவியாளர்களுக்கு எவ்வளவு சுதந்திரத்தை வழங்க விரும்புகின்றார் என்பதைப் பொறுத்து தலைமைத்துவ இயல்பு அதிபரால் தேர்ந்தெடுக்கப்படும். பணிக்கும் இயல்பிலே அதிபர் சர்வாதிகார முறையில் தீர்மானங்களை எடுத்து உதவியாளர்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பிப்பார். மாறாக திணிக்கும் முறையிலே அதிபர் தீர்மானங்களை எடுத்து எதேச்சாதிகாரமாக ஏற்றுக்கொள்ள வைப்பார். இங்கு உதவியாளர் சந்தேகங்களைக் கேட்டுத் தெளியலாம் என்றா லும் எடுக்கப்பட்ட தீர்மானம் மாற்றமடையமாட் டாது. அதேநேரம் கலந்தாலோசிக்கும் முறையிலே ஜனநாயகத் தலைமைத்துவ இயல்பை அதிபர் பெற்றுக்கொள்வார். இங்கு எத்தகைய தீர்மானங்

களும் அதிபர், ஆசிரியர்களுக்கிடையே கலந்தா லோசிக்கப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்படும். ஆனால் இன்றைய வளர்ச்சி பெற்ற நிலையில் மேலைத்தேய நாடுகளில் பின்பற்றப்படுவதே பங்குபற்றும் தலைமைத்துவமாகும். இதன்படி எத்தகைய செயற்பாடுகளுக்கும் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டு அணி வேலை (Team work) மேற்கொள்ளப்படும். இங்கு அதிபர் குழுக்களின் அங்கத்தவராக இருந்து குழுவுடன் இணைந்து தீர் மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துவ தனையும் கண்காணிப்பார். இதுவே பாடசாலை இலக்கை அடைவதற்கு எல்லோரது பங்களிப்பை யும் பெற்றுத்தரும் எனலாம். குழுத் தன்னியக்கம் (Group Dynamics) என்பது அடையப்படுவதற்கு அதிபர் தனது அதிகாரத்தை வெகுவாகக் குறைத்து உதவியாளர்களுக்கான சுதந்திரத்தை உயர்த்திக் கொள்வார். இதுவே ஆசிரியர்களின் ஒத்துழைப் பைப் பெறுவதற்கு பெரிதும்உதவும்.

### 4.14 நேர்க்கணிய முகாமைத்துவம்

அதிபர் எப்பொழுதும் ஆசிரியர் நலன்நோக் கிய தலைமைத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டுமென நவீன கோட்பாடு கூறுகின்றது. இதற்கமைய ஆசிரியர்களுடன் நேர்க்கணிய முகாமைத்துவத்தைக் கையாளல் வேண்டும். ஆசிரியர்களது நெருக்கடியான மனோநிலையில் நெகிழ்ச்சிப்போக்கைக் கையாளுதல் விரும்பத் தக்கது. இச்சந்தர்ப்பங்களில் விதிகள், பிரமா ணங்கள் பின்பற்றப்படத் தேவையில்லை. இதுவே ஆசிரியர்களில் உண்மையான ஒத்துழைப்பைப் பெற உதவும் நுட்பமாகும்.

### 4.15 வாழ்க்கை வட்ட தலைமைத்துவம்

சிறந்த பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு அதிபர் வாழ்க்கை வட்ட தலைமைத்துவம் என்ற கோட்பாட்டைப் பின்பற்றுதல் வேண்டும். ஹேர்சி, பிளஞ்சாட் ஆகிய அறிஞர்களது கருத்துப்படி ஆசி ரியர்களது முதிர்ச்சிக்கு ஏற்றவாறு தலைமைத்து வப் பாண்மை அதிபர் மாற்றுதல் வேண்டும். முதலில் அறிவுறுத்தலின்படி வேலைகளைச் செய்யுமாறு பணிக்கும் கடும்போக்கைக் கொண்ட தலைமையும் பின்னர் அவரது உற்சாகத்தை அதிகரிக்க ஊக்குவிப்புக்களையும் தொடர்ந்து சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கு கையளிக்கும் நுட்பத்தைக் கையாளவேண்டும். அத்துடன் ஆட் களுக்கிடையேயான உறவை அதிகரிக்க அதிபர் ஆசிரியர்களின் சொந்த வைபவங்களில் கலந்து கொண்டும், தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆலோ சனை வழங்குபவராகவும் இருத்தல் வேண்டும். இந்நிலை சிறந்த அதிபராக இல்லாவிட்டாலும் நல்ல மனிதர் என்ற நிலையைத் தோற்றுவித்து ஆசிரி யர்களின் ஒத்துழைப்பைப் பெற உதவும். அதிபர் தனக்குக் கிடைக்காத வசதிகளாயினும் ஆசிரியர் களுக்குக் கிடைக்க முடியுமெனில் அதனைப் பெற்றுக்கொடுக்க முன்வருதல் வேண்டும்.

### 5.0 முடிவுரை

பாடசாலைத் தலைமைத்துவத்திலே அதிபரி டம் இனங்காணப்பட்ட தலைமைத்துவ குணவியல்பு கள், தலைமைத்துவத்தை நேர்க்கணியமாக எடுத்துச் செல்லப் பெரிதும் உதவுகின்றன. நவீன உலகில் பாடசாலைகள் சிக்கல் நிறைந்தவை யாகவும் ஆசிரியர்கள் அமைதியற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். விஞ்ஞானத்தின் பிரமிக் கத்தக்க வளர்ச்சியும் அதனால் ஏற்பட்ட தொழில் நுட்ப மாற்றங்களும் ஆசிரியர் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் அதிகரிக்கச் செய்துவிட் டன. குறைந்த அளவிலான நேரத்திலும் குறைந்த பணச்செலவிலும் கூடிய திருப்தியையும் கூடிய பயன்களையும் பெற்றுக்கொள்ளவே ஆசிரியர் கள் விரும்புகின்றனர். வாழ்வியலின்பொதுவான விழுமியங்கள் காட்டி நிற்கும் கட்டுப்பாடு குறை வடைந்து செல்லுகின்றது. சகிப்புத் தன்மை, சமா தானம் என்பன அருகிவருகின்றன. "மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற கோட்பாட்டுக்கிணங்க சமூகப்போக்கு, மனித மனமாற்றங்கள் தலை மைத்துவத்திலும் பிரதிபலிக்கவே செய்கின்றது. இதன் காரணமாகவே தலைமைத்துவத்திற்கு புதிய அணுகுமுறைகளையும் நுட்பங்களையும் கண்டுகொள்ளவேண்டிய அவசியம் அதிபர் களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலால் எதிர்காலத்தில் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு புதிய முன் னெடுப்புக்கள் சிறப்புற எடுக்கப்படவேண்டி உள் ளன என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

* * *



# பாடசாலைகளில் முழுத்தர முகாமைத்துவப் பிரயோகங்கள்

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

பாடசாலைகளின் வாடிக்கையாளராகிய மாணவர்களின் திருப்தியை நோக்காகக் கொண்டு, பாடசாலையின் அனைத்துக் கூறு களின் தரமேம்பாட்டிலும் தொடர்புடைய முழு மையான முகாமைத்துவ செயலாற்றுகையே முழுத்தர முகாமைத்துவம் (Total Quality Management) எனப்படுகின்றது. இங்கு தரரீதி யாகவும், பண்பு ரீதியாகவும் அபிவிருத்தி நோக்கப்படுகின்றது. இவ் அபிவிருத்திக்குப் பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர், ஊழியர் அனைவரதும் ஒத்துழைப்புடன் கூடிய பணியாற்றுகை முதன்மைப்படுத்தப்படுகின்றது. இது வரை இலங்கைக் கல்வியமைப்பிலும், கல்வி நிர்வாக அமைப்பிலும் பாடசாலைகளின் முகாமைத்துவம் தொடர்பாகப் பல குறைபாடு கள் எடுத்துக்காட்டப்பட்டு அதனை நிவர்த்தி செய்யவே பாடசாலை ஆதார முகாமைத்துவத்தி னூடாக (School Based Management) முழுத்தர முகாமைத்துவப் பிரயோகங்கள் தற்போது நடை முறைப்படுத்தல் தொடர்பான செயலாற்றுகை கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## இலங்கைப் பாடசாலை முகாமை தொடர் பான குறைபாடுகள்

- பல பாடசாலைகள் மனித - பௌதீக வளங்களுக்கான ஊற்றுக்களைச் சரியாக இனங்கண்டுகொள்ளவில்லை.
- பாடசாலை தளநிலை கலைத்திட்ட முகா மைத்துவ செயலாற்றுகைகள் இன்மை.
- பெரும்பாலான பாடசாலைகள் தமது பிரச் சினைகளைத் தீர்க்கவும், உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யவும் முயற்சிக்க வில்லை.
- அதிகாரப் பரவலாக முகாமைத்துவ சீர் திருத்தங்கள் பல நடைமுறைக்கு வந்தும் குருட்டுத்தனமான, பொருத்தமற்ற சட்ட திட்டங்களைப் பின்பற்றி வருதல்.
- பாடசாலையை மையமாகக் கொண்ட தீர் மானம் மேற்கொள்ளும் வல்லமைகளைப் பிரயோகிக்கப் பயப்படும் அதிபர்.
- மிக வெளிப்படையாக இருப்பதன் மூலம் பாடசாலையின் மீது அக்கறையுடையோ ரின் கவனங்களை ஏற்படுத்தாமை.
- பொதுப்பரீட்சைகளிலும், கணிப்பீடுகளி லும் தகுந்த தகுதியான அடைவு மட்டத்தை யும், தேர்ச்சியையும் பெறாத மாணவர்கள்.
- ஆசிரியர் தொழில் தொடர்பான நவீன விருத்தி, மனப்பாங்கு மாற்றம், வாண்மை விருத்தியில் அக்கறை கொள்ளாமை.

எனப் பல குறைபாடுகள் காணப்படுவதைக் கல்வியமைச்சில் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின் றன. இவையனைத்தும் பாடசாலை பொதுமுகா மைத்துவத்தின் பலவீனங்களாகவுள்ளன. மேலும் இலங்கைப் பாடசாலைகளில் மாணவர் சேர்வு வீதம் ஒப்பீட்டு நோக்கில் குறைவடைந்து வருவதுடன் இடைவிலகல் உயர்ந்து செல்கின் றது. பொதுத் தேர்வுகளில் சித்தியடைந்தவர் களும், எதிர்காலத் தொழில் தொடர்பான தேர்ச்சி களைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் தொழில் அற்று இருப்பவர் தொகையும் அதிக மாகவுள்ளது. பாடசாலை - பல்கலைக் கழகங் களில் பயின்று வெளியேறியோர் தொழில் தொடர்பான தேர்ச்சியற்றவர்களாக உள்ளனர் எனத் தொழில் கொள்வோரும் குறைப்படுகின்ற னர். இந்நிலையில் மரபு ரீதியான பணியக ஆட்சித் தத்துவ (Bureaucratic) அதிகார முகாமைச் சம்பிரதாயங்களை மீறிச் சகலரும் விருப்புடன் செயலாற்றும் சூழலைப் பாடசாலையில் உரு வாக்குதல் மூலம் மேற்குறிப்பிட்ட பலவீனங்களைக் களைய முழுத்தர முகாமைத்துவப் பிரயோகங் கள் வழி சமைக்கின்றன. இது பாடசாலைச் செயல் ஒழுங்கின் முதன்மை வாடிக்கையாள ராகிய மாணவர்களை நோக்கிக் குவியப்படுத்தி

(Customer Focused) நவீன முகாமைத்துவ அணுகுமுறையாகப் படிம மலர்ச்சி பெற்று வரு கின்றது. இதன் முக்கிய பொருள், பராமரித்தல் முகாமைத்துவத்தால் பாடசாலை போன்ற கல்வி நிறுவனங்கள் எவ்வித முன்னேற்றங் களையும் காணமுடியாது. பாடசாலையில் மாணவர்கள் சார்பாக நடைபெறும் செயற்பாடு கள் அனைத்தும் தரமேம்பாட்டைக் (Quality Assurance) கொண்டிருக்க வேண்டும் என்ப தாகும். இம் முழுத்தர முகாமைத்துவப் பண்பு களாவன,

1. பாடசாலை அல்லது நிறுவனத்தின் நோக் கக் கூற்று (vision)ஆன அதன் எதிர்கால மேம்பாட்டு இலட்சியம் தொடர்பான சாச னமும், ஊழியர்கள் அதனை மனத்திருத் தலும்.
2. பாடசாலை அல்லது நிறுவனத்தின் செயற் கூற்றின் (mission) பண்புகளான - பாடசாலை செயற்படுவது எதற்காக? அதன் நம்பிக்கை எதிர்பார்ப்பு என்ன? என்பது பற்றிய தெளிவு காணப்படல்.
3. மேற்குறிப்பிட்ட இரு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு அதிபர், ஆசிரி யர், மாணவர் சகலரும் தமது தேர்ச்சிகளை இற்றைப்படுத்தி விருத்தி செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்தல்.
4. இதற்கு ஜப்பானிய 5S, அடிப்படியான மேம் பாடு (Kaizen), தரவட்டங்கள் (Quality Circles), Swot – பகுப்பாய்வு (Analysis), நேர முகாமைத்துவம், ஆகிய முகாமைத்துவ செயன்முறைகளைப் பாடசாலையில் நடை முறைப்படுத்தல். ஆக்க - அழகியல் திறன் களை விருத்தியாக்கல்.
5. நடைமுறைப்படுத்தும் விடயங்கள் அனைத் தினதும் தர உறுதிப்பாட்டைப் பேணுதல்.
6. அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைமைத் துவத்துடன் சகலரது முயற்சிகளையும் ஒன்றிணைத்துச் சரியான முன்னுரிமைக ளுக்கு ஏற்பக் கூட்டுத்தீர்மானம் மேற் கொள்ளல்.
7. சரியான புள்ளிவிபரங்களின்படி பொருத்த மான செயல்நிலை ஆய்வுகளை (Action Research) மேற்கொண்டு அதிபர் - ஆசிரி யர்கள் தனியாகவும், கூட்டாகவும் தம் பிரச்சினைகளைத் தீர்த்து வாண்மையை உயர்த்தல்.
8. சகலரதும் வினைத்திறனான ஒத்துழைப் புக்களைத் தரக்குழு (Quality team) மற்றும் அபிப்பிராயம் கூறும் முறை (suggestion), வெளிப்படையான தன்மை என்பவற்றைப் பயன்படுத்தி அன்னியப்படுத்தலைக் குறைத்தல்.
9. பாடசாலைகளில் பணியாற்றுவோர் ஒரு குழுவாகச் செயற்பட்டு ஆக்கபூர்வமான தம் ஆலோசனைகளையும் ஆக்கத் திறன் களையும் வழங்கித் தர ரீதியான சிக்கல் களைப் (Quality Problem) பாடசாலையி லிருந்து நீக்குதல்.

மேற்குறிப்பிட்ட அனைத்தும் பாடசாலை யில் இடம்பெறும் வகுப்பறைக் கற்றல், வகுப் பறைக்கு அப்பாலான கள வேலைகள், கல்விச் சுற்றுலாக்கள், முறைசாரா முறையில் இணைப் பாட விதானச் செயலாற்றுகைகள் மூலம் மாணவர்கள் பெறவேண்டிய அனைத்துத் தேர்ச்சிகளையும் தரமாக வழங்கவேண்டும் என்பதனை முழுத்தர முகாமைத்துவம் வலியு றுத்துகின்றது. எனவே இங்கு பாடசாலைக் கலைத்திட்ட முகாமைத்துவம் முதன்மை பெறு கின்றது. இலங்கைப் பாடசாலைகளிலும் கல்வித் துறையிலும் பல பிரச்சினைகளுக்குக் காரணம் சரியான கலைத்திட்ட, நிர்வாக, முகாமைத்துவ செயலாற்றுகைகள் போதாமையே என விமர் சிக்கப்படுகின்றது. இதற்குப் பாடசாலை களையே மையமாகக் கொண்டு செயற்படுத்தப் படும் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தக் கல்வி யமைச்சின் தர உறுதிப்பாட்டு அலகு "பாட சாலை உள்ளக மதிப்பீட்டு வழிகாட்டல்" செய லாற்றுகையைப் பாடசாலைகளில் அறிமுக மாக்கியுள்ளது.

### பாடசாலை உள்ளக மதிப்பீடு

பாடசாலை, பாடசாலையூடாகவே அபி விருத்தி அடையவேண்டிய நிறுவனமாகும். மாணவர்களுக்கான கல்விப் பிரயோகத்தை வழங்கும் அதிபர், ஆசிரியர்கள் தகைத்திறன்

கள், பலங்கள், பலவீனங்கள் மற்றும் சுய மதிப்பீடுகள் என்பவற்றைத் தாமே கணித்துத் தமது பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு களை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் உள் ளக மதிப்பீட்டு வழிகாட்டலைக் கல்வியமைச்சின் தரமேம்பாட்டுப் பிரிவு அறிமுகம் செய்துள்ளது. அத்துடன் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமும் தற்போது அறிமுகமாகியுள்ளது. உள்ளக மேற்பார்வையின் வழிவகைகளாக

☞ பாடசாலையின் கல்விசார் - கல்விசாரா ஆளணியினர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும், பொறுப்புக்களையும் உரிய வகையில் ஆற்றும் தகைமைத் திறன்களையும் நியதிகளையும் தீர்மானித்தல்.

☞ அந்நியதிகளின் மூலம் தற்போதைய மதிப்பீட்டை மேற்கொண்டு தற்போதைய தரத்தைக் கண்டறிதல்.

☞ மதிப்பீடு மூலம் கண்டறியப்படும் தகைமைத்திறன் தொடர்பான இடைவெளிகளை நிரப்புவதற்கு அல்லது செப்பனிடுவதற்கு மனிதவள அபிவிருத்தி வாண்மைத்துவ விருத்திசார் பயிற்சிகளை ஒழுங்கமைத்தல்.

☞ பாடசாலை ஆளணியினரை மையமாகக் கொண்ட மேலதிக தகைமைத் திறன் மதிப்பீடுகளை அறிமுகம் செய்து சேவை ஆளணியினரின் தரங்களை மேம்படுத்தல்.

☞ தகைமைத் திறன்களைச் சிறப்பாக வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதல்.

☞ அபிவிருத்திக் கலந்துரையாடல்கள் மூலம் பாடசாலை அதிபர் ஆசிரியர்களின் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க உதவியளித்தல்.

☞ முறையான வகுப்பறை அவதானிப்புக்கள் மூலம் ஆசிரியர் கற்பித்தல் - மாணவர் கற்றல் - மாணவர் எண்ணிக்கை - தன்மை, பாடங்களின் விடயங்கள் தொடர்பான விளக்கங்களைப் பெற்று அவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.

இவ்வகையில் மதிப்பீடுகள் மூலம் பலங்களை மேலும் விருத்தியாக்கிக் குறைபாடுகளைக் களைவதன் மூலம் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தலாம். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவச் செயற்பாட்டின் யதார்த்தம் இதுவாகும். பாடசாலையிலுள்ள சகலரும் இதற்கு ஒத்துழைப்பார்கள். பாடசாலைகளின் அபிவிருத்தி பாடசாலைகளில் உள்ளவர்களிலேயே தங்கியுள்ளது. அவர்களது செயலாற்றுகை தரமேம்பாடே பல்வேறு வகையான அடைவு மட்டங்களை உயர்த்தும் என்ற முழுத்தர முகாமைத்துவ அடிப்படை எண்ணக்கருவை முழுமையாக விளங்கிப் பிரயோகிக்கின்றபோது எமது எதிர்கால சந்ததிகளை மாணவர்களின் கல்வித் தகைமைத் தேர்ச்சிகளை, உயர்த்தலாம், சாதனைகள் படைக்கலாம். எனவே இம் முழுத்தர முகாமைத்துவம் தொடர்பான செயலாற்றுகைகளை எமது பாடசாலைகளை நோக்கி மேலும் பல விடயங்களில் விஸ்தரிக்க வேண்டியும் உள்ளது.

❖ ❖ ❖



விழுந்த இடத்தைப் பார்க்காதே; சறுக்கிய இடத்தைப் பார்.

*– சீனப் பழமொழி.*





# பாடசாலை நிர்வாகத்தில் நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

திரு.ஸ்கந்தவரதர் ரமேஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

அலுவலகங்களின் நிர்வாக வெற்றிக்கு முகாமைத்துவப் பண்புகள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவற்றுள் நேர முகாமைத்துவம் என்பது ஒரு முகாமைத்துவ நுட்பமாகும். பாடசாலை ஒன்றின் வெற்றிக்கு முகாமைத்துவ நுட்பமான நேர முகாமைத்துவம் எவ்வாறு தனது பங்களிப்பை வழங்கலாம் என்பது தொடர்பாகவே இக் கட்டுரை ஆய்வு செய்கின்றது. நேரம் என்பது இயற்கையால் வழங்கப்பட்ட நிலையான ஒன்றாகும். இது ஏழை, பணக்காரன், இனம், மதம், மொழி என்ற எந்த வேறுபாடுமின்றி ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. எனினும் ஒவ்வொரு தனி மனிதனும் அதனை வாழ்வில் எவ்வாறு சரியான முறையில் பயன்படுத்திக்கொள்கின்றான் என்பதிலேயே அவரது வெற்றிதங்கியுள்ளது.

இன்றைய கடும் போட்டி நிலவுகின்ற சூழலில் நாடுகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர் என்ற வேறுபாடின்றி அவர்களுடைய நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் என்பது ஓர் அத்தியாவசியமான விடயமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தாத விடத்து அழுத்தம், அடிக்கடி கோபப்படல், முரண்படல், விரக்தி ஆகிய விரும்பத்தகாத குணவியல்புகள் உருவாகி விரும்பிய அல்லது, வினைத்திறனான இலக்குகளை அடைவதற்குத் தடையை ஏற்படுத்தும். எனவே தான் ஒவ்வொருவரும் தமது சுமுகமான நாளாந்தச் செயற்பாடுகளில் நேரத்தைச் சரிவர முகாமை செய்யவேண்டிய கடப்பாட்டில் உள்ளனர்.

## நேரம்

நேரம் என்பதனை நோக்கின் அது நிலையானதும் கண்ணால் பார்க்க முடியாததும் பதிலீடு செய்ய முடியாததும் மிகவும் பெறுமதி வாய்ந்ததுமான ஒரு வரையறுக்கப்பட்ட இலவசக் கொடையாகும்.

## நேர முகாமைத்துவம்

நேரம் என்பதனைக் கட்டுப்படுத்தவோ (நேரத்தை நிறுத்தி வைத்திருக்கவோ அல்லது மெதுவாக்கவோ அல்லது விரைவாக்கவோ முடியாது) நேரத்தை நேரடியாக முகாமை செய்யவோ முடியாது. நாம் எம்மையும் எம்மால் பயன்படுத்தப்படும் நேரத்தையும் வினைத்திறனாக முகாமை செய்தல்தான் நேர முகாமைத்துவமாகும். ஒவ்வொருவரும் தமது கடமையை ஆற்றும் போது தனது பலம் என்ன? பலவீனம் என்ன? என்பதனை அறிந்து அக் கடமையை ஆற்றும் போது நேரம் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுவதுடன் அவரது இலக்கும் குறித்த கால எல்லைக்குள் சிறப்பாக எட்டப்படும்.

## நேர வீண் விரயம்

உண்மையில் பெரும்பகுதி மக்கள் இன்று முகம் கொடுக்கும் மிகப்பெரும் பிரச்சினையாக நேரவறுமை காணப்படுகின்றது. இந் நேர வறுமைக்குப் பிரதான காரணமாக நேரத்தின் வீண் விரயத்தினைக் கூறிக்கொள்ளலாம். பொதுவாக நேரவிரயம் உருவாகும் சந்தர்ப்பமாகப் பொருத்தமற்ற அல்லது இலக்கற்ற கூட்டங்களையும், முடிவில்லாத கூட்டங்களையும் கூறிக்கொள்ளலாம். இல்லை என்று சொல்வதற்கு இயலாமை - அதாவது, மேலதிகாரியை அல்லது, மற்றவரை வெறுக்கக்கூடாது என்பதற்காக இல்லை என்று சொல்வதற்குத் தயங்குதல், ஒவ்வொருவருக்கிடையிலான சரியான தொடர்பாடலின்மை, தேவையற்ற நீண்ட நேரத் தொலைபேசி அழைப்புக்கள், உயர் அதிகாரிகள் தங்கள் பணிகளை உடன் முடித்துத் தரும்படி வேண்டுதல், ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னுரிமைப்படுத்துவதில் உள்ள ஆற்றலின்மை, தகுதியற்ற உத்தியோகத்தர்கள், செயற்பாட்டினைக் காலம் கடத்துதல் அல்லது தாமதப்படுத்துதல் போன்றவை நேர வீண் விரயத்திற்கான மேலதிக காரணங்களாகக் கூறிக்கொள்ளலாம். எனவே தான் நேரம் என்பது எமது வாழ்க்கையின் ஆயுட்காலத்தைக் குறித்து

நிற்கின்றது. நேரத்தினை வீண் விரயமாக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் எமது வாழ்க்கைக் காலத்தை நாம் வீணடிப்பதற்குச் சமனாகும்.

### நேர விரயத்தை எவ்வாறு தவிர்த்தல்

இவ்வாறன நேர விரயத்தைத் தவிர்ப்பதற்கு நாம் சரியாகத் திட்டமிட்டுக் கருமத்தை ஆற்றுதல் வேண்டும். செயற்பாடுகளில் முக்கியத்துவமான செயற்பாடுகளையும், அவசரமான செயற்பாடு களையும் வேறுபடுத்தி அவற்றை முன்னுரிமைப் படுத்தி முதலில் செய்யப்படவேண்டிய பணி களைப் பட்டியற்படுத்துதல், இலக்கைச் சரிவர நிர்ணயித்து அட்டவணைப் படுத்துதல், எமது வேலைப்பழுவைச் சரியாக முகாமை செய்தல் மற்றும், தினக்குறிப்பேடு போன்ற நேரத் திட்டமிடற் கருவியைப் பயன்படுத்துதல், போன்ற செயற்பாடு களினூடாக இதனைச் சாத்தியமாக்கிக் கொள்ள முடியும்.

### ஆசிரியர்களும் நேர முகாமைத்துவமும்

ஆசிரியர்களுக்கு முன் இருக்கும் மிகப் பெரும் சவால் தங்களது நேரத்தையும், மாணவர் களது நேரத்தையும் முகாமை செய்தலாகும். கற்பித்தலின் மிக முக்கிய அம்சங்களான நாளை ஒழுங்கமைத்தல், வகுப்பறையை ஒழுங்கமைத்தல், ஒவ்வொரு பாட விதானத்தையும் எத்தனை தடவை கற்பிப்பது? மற்றும், எவ்வளவு காலம் கற்பித்தல்? என்பதனைச் சரியாகத் தீர்மானித்தல், மாணவ னின் முன்னேற்றங்களைப் பதிவு செய்தல், போன்ற இவ் அம்சங்களின் ஊடாக நேரம் தொடர்பாக எழும் அச்சுறுத்தலினைத் தவிர்த்துக் கொள்ளலாம். இல்லாவிடில், நேரம் அச்சுறுத்தலாக எழுவதினைத் தவிர்த்துக்கொள்ள முடியாது போய்விடும். எனவே தான் பாடசாலை நேரத்தின் பயனுறுதித்தன்மை என்பது வினைத்திறனான வகுப்பறை ஒழுங்கமைப்புடனும், முகாமைத்து வத்துடனும் ஆரம்பிக்கின்றது. வகுப்பறை நேர ஒழுங்கமைப்பு, என்பது கடதாசி வேலைகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல், திட்டமிடல், வீண டிக்கப்படும் நேரத்தை முற்றாக நீக்குதல், கற்பித்த லிற்குப் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துதல், மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து வேலையை ஒப்படைத்தல், வகுப்பறைச் சூழல், போன்ற விடயங்களை உள்ள டக்குவதாகும்.

### பாடசாலையும் நேர முகாமைத்துவமும்

மேற்கூறிய விடயங்களை உற்று நோக்கு கின்ற போது பாடசாலை ஒன்றுக்கு நேர முகா மைத்துவம் எவ்வாறு முக்கியத்துவமாக இருக்க முடியும் என்பதை இனி இங்கு நோக்கலாம்.

- ஆசிரியர்கள், ஏனைய அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்பாகவே தமது தளத்திற்குச் சமுகமளிப்பதானது அதிபருடன் ஏற்படும் முரண்பாடு, தேவையற்ற மன அழுத்தம், படபடப்பு போன்றவற்றைத் தவிர்த்துச் சுமுக மான நிர்வாகத்தினை நகர்த்த உதவியாக அமையும்.

- மாணவர்களது வரவு என்பது கற்பித்தலிலும், கற்பித்தல் நேரத்திலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் ஒரு விடயமாகும். எனவே மாண வர்களது வரவை முன்னேற்றத்தக்க வகை யில் ஆசிரியர்களது கற்பித்தல் பணி அமைய வேண்டும். இதனைத் தூண்டுவதற்குப் பாட வேளை முடிவடைதற்குச் சற்று முன் அடுத்த நாள் என்ன கற்க இருக்கின்றோம் என்பத னைத் தெளிவுபடுத்தி மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல்.
- பாடநேர அட்டவணை தயாரிக்கும்போது முதலில் கடினமான பாடம் என்ற அடிப்படை யில் பாடங்களை முன்னுரிமைப்படுத்துதல் வேண்டும்.
- ஆசிரியர்கள் நேரத்துடன் பாடவிதானங் களைத் தொடர்புபடுத்தித் திட்டமிடுவதுடன் அவற்றைத் திட்டமிட்ட நேரத்திற்குள்ளேயே நிறைவு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.
- பாடசாலை நேரத்தில் தேவையற்ற உரை யாடல்களை இயலுமான மட்டும் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
- ஆசிரியர்களது பிரச்சினைகளையும் மாண வர்களது பிரச்சினைகளையும் கலந்துரை யாடுவதற்கென அதிபர் தனியான நேரத்தை ஒதுக்கி வைத்திருத்தல் வேண்டும்.
- ஆசிரியர்களும் பாடசாலை நிர்வாகத்தினரும் எந்தவொரு செயற்பாட்டையும் பிற்போடலா காது. எந்த நேரத்தில் எந்த வேலையை ஆற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டதோ அந்த நேரத்தில் அது நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதாவது நாளை என்ற நிலை வரவேற்கப்படலாகாது.

- தேவைக்கதிகமான கூட்டங்கள் கூட்டப்படு வதனைத் தவிர்த்து கூட்டங்கள் எப்பொழுதும் வினைத்திறனாக இருப்பதனை உறுதிப் படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

- பாடசாலை வேளைகளில் நேரப் பயன்பாடு தொடர்பான தினக்குறிப்பேடு பேணப்பட்டு அதில் விரயமாக்கப்பட்ட நேரத்தையும் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்ட நேரத் தையும் கண்டறிந்து அதில் நேரம் விரயமாக் கப்படுகின்ற எல்லா நடவடிக்கைகளையும் ஆய்வுக்குட்படுத்துதல் வேண்டும்.

### மாணவனும் நேர முகாமைத்துவமும்

➢ ஒரு மாணவனைப் பொறுத்தவரையில்

- ஒரு மாணவன் தனது கல்வி கற்பதற்கான பொருத்தமான நேரத்தினை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அதாவது பாடத்தை உயர்வாகக் கிரகிக்கக் கூடியதாக இருப்பது காலை வேளையா? அல்லது மாலை வேளையா? அல்லது இரவு வேளையா? என்பதனைக் கண்டறிய வேண்டும். கிரகித் தல் குறைவான நேரத்தில் தனது வழமை யான கடமைகளை ஆற்றுதல்.

- சிக்கலானதும் கடினமானதுமான பாடங் களை முன்னுரிமைப்படுத்தி முதலில் கற்க ஆரம்பித்தல்.

- கற்கும் இடம் கற்றலிற்கு உகந்ததாக இருப் பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண் டும்.

- சந்தோசமாகவும் ஓய்வாகவும் இருப்பதற்குத் தனி அறை ஒன்றினை ஏற்படுத்துதல்.

- சரியான அளவு தூக்கமும் சரியாக உணவு உட்கொள்வதினையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவையிரண்டும் சரியாக இல்லாதவிடத்து எமது செயற்பாட் டின் வினைத்திறன் குறைவாகக் காணப்படும்.

- அன்றாடக் கடமைகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன் படுத்துதல். அதாவது செயற்பாடுகளை ஒன் றிணைக்க முயற்சித்தல். இதன்படி பாட சாலை பஸ்ஸில் பிரயாணம் மேற்கொள்ளும் போது வாசித்தல், குளியலறையில் இருக்கும் போது தேவாரம், பொழிப்பு, ஆங்கிலச் சொற்கள் போன்றவற்றை மனப்பதிவு செய் தல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

### உசாத்துணை

1. ரமேஸ் ஸ்.(2007) நினைவுப்பேருரை நவ மகாஜனாவின் சிற்பி அதிபர் திரு.தெ.து.ஜெய ரத்தினம் **"நேர முகாமைத்துவம்"**.
2. Gerard M Blair.(2006) "Personal Time Management for Busy managers"
3. Butler, G. & Hope, T. (1996). Managing Your Mind. New York : Oxford City Press.
4. Shailen Mistry (2003) "Time Management".
5. Joshua G. McIntosh (2005), "Formulas for success using Time Wisely".

* * *

அதிஷ்டம் என்ற சொல் எப்போதும் துணிச்சல் உள்ளவர்களின் பக்கமே நிற்கும்.

*- சீனப் பழமொழி*

---

நல்ல ஆட்டக்காரனுக்கு எப்போதும் பந்து கிடைக்கும்.

*- பிரெஞ்சுப் பழமொழி*



# பாடசாலைகளில் உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு

செல்வி. உதயகலா சிவபாதசுந்தரம்
உதவி வள நிலைய முகாமையாளர்,
வடமாகாண உளசமூக வளநிலையம்,
வலிகாமம் கல்வி வலயம், மருதனார்மடம்.

இன்றைய கல்விப் புலம் பரந்துபட்ட ஆய்வுகளோடும் புதுப்புதுக் கண்டுபிடிப்புக்களோடும் மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. அதனால், கல்வி முறைகளிலும் பாடக் கலைத்திட்டத்திலும் காலத்துக்குக் காலம் மாற்றம் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றது. நவீன யுகத்தில் கல்வியானது உலகக்கோள் மயமாக விருத்தி அடைந்துள்ளதனால், அதன் தாக்கம் உலக நாடெங்கணும் வியாபித்துள்ளதைக் காணலாம். அத்தகைய மாற்றங்களை உள்வாங்குவதற்கும், செயற் படுத்துவதற்கும் பல்வேறு பிரச்சினைகளைப் பாடசாலை எதிர்நோக்குகின்றது. அது மட்டு மல்லாமல் சனத்தொகைப் பெருக்கம், அன்றாடக் கருமங்களை ஆற்றுவதற்கான வளப் பற்றாக்குறை, பொருளாதார, நாட்டுப் பிரச்சினைகள், அனர்த்தங்கள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் ஆசிரியர்களும், மாணவர்களும் உளத்தாக்கங்களுக்கு உட்பட்டு வினைத் திறனும், விளைதிறனும் குன்றியவர்களாக உருமாறிக் கொண்டிருப்பதைத் தவிர்க்க அல்லது கையாள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில்தான் பாடசாலைகளில் உளசமூக இடையீடு மற்றும், ஆலோசனை வழங்கல் அலகு ஒன்றின் அவசியம் உணரப்பட்டுள்ளது. இதற்கு உளசமூகம் என்றால் என்ன? என்பதனை விளங்கிக் கொள்ளுதல் அவசியம்.

**உளசமூகம் என்பதன் வரைவிலக்கணம்**

ஒவ்வொரு மனிதருடையதும் அனுபவத்தினூடு எழுகின்ற எண்ணம், உணர்வு, நடத்தை போன்ற உளவியல் அம்சங்களுக்கும், பரந்துபட்ட குடும்பம், சூழல், சமூகத் தொடர்பு மற்றும், பாரம்பரியம், கலாசாரம் போன்ற சூழமைவுக்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை விளக்கும் எண்ணக்கருவே, உளசமூகம் ஆகும்.

**1977இல் யுனிசெப் இதற்குக் கொடுத்த வரைவிலக்கணம் வருமாறு:**

"உளசமூக" எனும் சொல் ஒன்றின் மேல் ஒன்று தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்துகின்ற உளவியல் ரீதியான விளைவுகளுக்கும், மற்றும் சமூக ரீதியான விளைவுகளுக்கும் இடையே நிலவும் சக்தி வாய்ந்த தொடர்பை வலியுறுத்துகின்றது.

மனிதர் தனித்து வாழ முடியாது. சேர்ந்து இயங்குவதுதான் அவர்களது பண்பாகும். அச்சந்தர்ப்பங்களில் உளவியல் ரீதியான எழுச்சிகளும், மாற்றங்களும், நிகழ்ந்து கொண்டே இருக்கும். மேற்கூறிய வரைவிலக்கணங்களும் இதனையே சுட்டுகின்றன.

ஒவ்வொருவரும் தத்தமது அடிப்படைத் தேவைகளான பசி, தூக்கம், ஒட்சிசன், நீர், பாலியல் போன்றன நிறைவேற்றப்பட்டு இருக்கும் நிலை, வயதுக்குப் பொருத்தமான உடல், நுண்ணறிவு, உணர்ச்சி போன்ற விருத்தித் தேவைகள் நிறைவேற்றப்பட்டும் இருத்தல், பொருளாதார, மற்றும் சூழல் சார்ந்த வளங்கள் இலகுவில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் போன்ற வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் நலமுடன் வாழுகின்ற நிலைமையை 'உளசமூக நலன்' என்று குறிப்பிடலாம். இவற்றில் குறைபாடு தோன்றுகின்றபோது அங்கே இடையீடு அல்லது தலையீடு செய்து, மேலுயர்த்த வேண்டிய தேவை எழுகின்றது.

- ❖ அறிவியல் பிரவாகம் அல்லது பெருக்கம் - தொழில்நுட்ப இலத்திரனியல் சாதனங்களின் மூலமான கல்வி விருத்தி.
- ❖ போட்டிச் சமூகம் - சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதனால் தன்னைத் தானே விருத்தி செய்வதற்காகப் போட்டியிடல்.
- ❖ தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ற கல்வி வழங்குதல் - மாணவர் ஒவ்வொருவரையும் ஆராய்ந்து கற்பிக்க வேண்டிய நிலை.
- ❖ ஆபத்து விளிம்பிலுள்ள கற்போரை மீட்டெடுத்தல்
- ❖ கற்றல் இடர்பாடுடையவர்களை இனங்காணுதலும் மீட்டெடுத்தலும்.
- ❖ மனமுறிவுகளும், முரண்பாடுகளும் - இவற்றைக் கையாளுதல் சமூகத்தின் சிக்கல் தன்மைகளினால் முரண்பாடுகளும் போட்டியும், அவற்றினால் மனமுறிவும் ஏற்படுதல்.
- ❖ மனவெழுச்சித் தளம்பல்கள் - அன்பு, காதல் போன்ற நேர் மனவெழுச்சிகள் ஆக்கத்திறன் களையும், கோபம், பயம், பொறாமை போன்ற எதிர்மனவெழுச்சிகள் எதிர் விளைவுகளையும் தோற்றுவிக்கும். எனவே, எதிர் மனவெழுச்சியை நேர் மனவெழுச்சியாக மாற்றுதல்.
- ❖ தெரிவுப் பிரச்சினைகள் - பாடங்கள், தொழில் போன்றவற்றைத் தனது ஆற்றலுக்கு ஏற்ப தெரிவு செய்தல்.
- ❖ படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தாமை - ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை அமைத்தல்.
- ❖ ஞாபகத்திறனும், கற்றல் இடமாற்றுந் திறனும் அல்லது பிரயோகத் திறன் குன்றியிருத்தல்.
- ❖ தொடர்பாடல் திறன் குறைவு - ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் - சமூகம் என்பவற்றுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தல்.
- ❖ பிறழ்வான நடத்தைகளிலிருந்து மீட்டல்.
- ❖ உளப் பிரச்சினைகளும் மெய்ப்பாட்டு முறைப்பாடுகளும்.

இவை மாத்திரம் அல்லாமல் கல்வியானது, மாணவர்களின் உளசமூகப் பாதுகாப்பிலும், நலனிலும் மிகமிக அவசியமான பூரணத்துவம் அடையச் செய்வதற்கான பங்கைக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான உளசமூக விருத்தியானது மாணவர் அனைவரும் கற்றுக் கொள்வதற்கும், தத்தமது உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கும் புதிய திறன்களை விருத்தி செய்வதற்கும், வாய்ப்புக்கள் கிடைக்கச் செய்ய உதவ வேண்டும். அதுமட்டுமல்லாமல், இவற்றை உறுதி செய்வதற்கான பாதுகாப்பான தூண்டலை ஏற்படுத்தக் கூடியதும், வளர்த்து ஆளாக்கக் கூடியதுமான சூழல்களை வழங்குவதிலே தங்கியுள்ளது.

ஆசிரியர்கள் கற்பித்தல், பகிர்ந்து கொள்ளல், விளையாடுதல், செவிமடுத்தல் என்பவற்றி னூடாக அவர்கள் விருத்தியடைவதற்கும், நெருக்கீடுகள் உருவாகும் சம்பவங்களிலிருந்து மீண்டும் இயல்பு நிலை அடைவதற்கும் உதவக் கூடிய தனித்துவமான நிலையில் உள்ளனர். மேலும் மாணவர்களிடம் இவற்றை மேம்படுத்துமுகமாகத் தரமான கல்வி, கற்றல் என்பவற்றை நெறிப்படுத்துவதன் மூலம் பாதுகாப்புக் கொண்ட சூழலாக வகுப்பறையை ஆசிரியர்கள் பயன்படுத்த முடியும். போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களில் வளர்ந்து வருகின்ற பாதிக்கப்பட்ட மாணவர்களின் பாதுகாப்பிற்கும், பராமரிப்பிற்கும் இது விசேடமானதாகும். நெருக்கீடுகளை உருவாக்கும் இம்மாதிரியான சம்பவங்கள், இடப்பெயர்வு, இழப்பு, எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மை, என்பவற்றைச் சகித்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தினால் மாணவர்களது சாதாரண விருத்தி தடங்கலுக்கு உள்ளாகின்றது. தப்பிப் பிழைப்பதற்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படினும், சீர்குலைவை உருவாக்கும் சம்பவங்களிலிருந்து மீளுவதற்கும், சாதாரணமாக விருத்தியடைவதற்கும், உணர்ச்சி, உளவியல் மற்றும் சமூகம் என்பன சார்பாக உதவி தேவைப்

படுகின்றது. எனவே, கல்வியானது மாணவர்களின் விருத்திக்கு வேண்டிய வாய்ப்புக்களை வழங்கக்கூடியதும், வளர்த்து ஆளாக்கக்கூடிய சூழலுக்கான ஆதரவைக் கொடுக்கும் இயலுமையையும் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் உளசமூகத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் முக்கியமான பாதுகாப்புச் செய்திகளை வழங்கவும், வயது வந்தவர்களின் பராமரிப்பு நடத்தைக்கு முன்மாதிரியாக இருக்கவும், மாணவரின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும், மாணவர் குணமடையக்கூடிய சூழ்நிலையை வகுப்பறையில் கட்டியெழுப்பவும் முடியும்.

பாடசாலையும், ஆசிரியர்களும் உணர்வு சார்ந்த ஆதரவை வழங்குதல், மாணவரின் சுய மதிப்பை மேம்படுத்தல், சமூகத்திறன்களை விருத்தி செய்தல் போன்றவற்றின் மூலம் மாணவர்களுக்கு உளசமூக உதவியை வழங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எனினும், ஆசிரியர்களும் சிரமமான காலங்களில் தாங்களும் ஆதரவு வேண்டி நிற்பவர்களாக அடிக்கடி உணருகின்றனர்.

எனவே, பெரும்பாலான ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தொழில்சார் உளநலப் பராமரிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழி கிடைக்காமல் இருப்பதனாலும், பாடசாலைச் சூழமைவில் அவர்களுக்கு ஆதரவை வழங்க முடியும் என்பதனாலும், பாடசாலைகளில் உளசமூக இடையீடு மற்றும், ஆலோசனை வழங்கல் அலகு என்பது விசேட முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

ஜனாதிபதி செயலணியின் பின்வரும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 1987ஆம் ஆண்டின் பொதுக் கல்விச் சீர்திருத்தங்களின் 13ஆவது பிரிவின் கீழ் ஆலோசனை வழங்கல் அலகு மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு (வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு என இப்போது குறிப்பிடப்படுகின்றது) நிறுவப்பட்டது.

01. பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் என்பவற்றில் விசேட பயிற்சி அளிக்கப்பட்டுத் தங்கள் பாடசாலையில் பாட நேர அட்டவணையின் ஒரு கூறாக இக்கடமைகளைச் செய்வதற்கு நியமிக்கப்படுவார்கள்.
02. பாடசாலைகளும் மற்றும், பாடசாலைக் குடும்பங்களும் அவை அமைந்திருக்கும் பிரதேசங்களில் கிடைக்கக் கூடியதாக உள்ள தொழில் மற்றும், தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் மற்றும் சாத்தியமான தொழில் வாய்ப்புக்கள் என்பன பற்றிய தரவுத் தளங்களை உருவாக்குவார்கள். தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், கிடைக்கக்கூடிய வாய்ப்புகளுக்குப் பொருந்தக்கூடியவாறான பொருத்தமான பாடநெறிகளைப் பிள்ளைகள் தெரிவு செய்ய அவர்களுக்கு உதவுவதற்காக அத்தரவுத் தளங்களைப் பயன்படுத்துவார்கள்.
03. தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் தனிப்பட்ட பிரச்சினைகள் பற்றி ஆலோசனை வழங்குவதற்குத் திட்டவட்டமான இடைக்காலங்களில் அல்லது தேவைக்கேற்பத் தங்களுடைய மாணவர்களைச் சந்திப்பார்கள். அத்துடன் தேவைப்பட்டால், மாணவர்களின் பெற்றோர்களுடனும் இடைத்தொடர்பாடலை மேற்கொள்வார்கள்.

மேலும், பாடசாலை முறைமையூடாக உளசமூக நிலைமையினைப் பொதுவாக்குவதற்காகத் தேசிய திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை இலகுவாக்கும் நோக்குடன் கல்வி அமைச்சில் உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு, வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகின் கீழ் 2005ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்கலும் என்ற எண்ணக்கருவினைப் பலர் தவறாகக் கொண்டுள்ளனர். எனவே, அதற்கான வரைவிலக்கணத்தைப் பார்ப்போம்.

**வழிகாட்டுதல் என்பதற்கு Traxler கொடுத்த வரைவிலக்கணம் வருமாறு:**


தனது திறன்களையும் விருப்புக்களையும் பற்றிய விளக்கத்தைத்தானே அறிந்து கொள்ளுவதற்கும்; முடியுமான அளவு அதனை வளர்த்துக் கொள்ளுவதற்கும்; வாழ்க்கை நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள அத்திறன்களை உபயோகித்துக் கொள்வதற்கும்; இறுதியில் தான் அடைய வேண்டிய இலக்குகளை அடைவதற்கும்; ஜனநாயக சமூகத்திலே சிறந்த பிரஜை ஆவதற்குமான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் உதவுதல் வழிகாட்டுதல் எனப்படும்.

**Crow & Crow கொடுத்த வரைவிலக்கணம் வருமாறு:**

வாழ்வைச் சீரமைத்துக் கொள்ள, எந்த வயது மட்டத்திலும் உள்ள ஒருவருக்கு, அவரின் வாழ்க்கையை நெறிப்படுத்திச் சொந்த அபிப்பிராயத்தை விருத்தி செய்து சுயமாக முடிவெடுக்கும் ஆற்றலை வளர்த்தும், தமது பிரச்சினையைத் தாமே தீர்க்கக் கூடியதாக, உருவாக்கும் வகையில் தகைமை உள்ள ஒருவரால், அளிக்கப்படும் உதவிக்கான ஆயத்தம் வழிகாட்டல் ஆகும்.

இவ்விரு வரைவிலக்கணங்கள் வாயிலாக வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும் என்பது, "ஒருவர் தனக்குத் தெரிந்த தனது சொந்தக் கருத்துக்களைத் தாராளமாக அள்ளி வழங்குதல் தான்" என எண்ணுவது தவறு எனப் புரிந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அனுபவ வாயிலாகவும், முன்மாதிரிகளைக் கொண்டும் அறிந்திருப்பர். எனினும், சிரமமான காலங்களில் உளக் கொந்தளிப்புக் காரணமாக உணர்வுகள் மேலோங்கிய நிலையில், தனது அறிவு ரீதியாக ஆராய்ந்து விளக்கம் பெற முடியாமல் வருவர். அவ்வேளையில் அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அவர்களாகவே முன்வைப்பதற்கான தூண்டல்களை வழங்கி விளக்கம் பெறச் செய்வதே வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும் (Guidance & Counseling) எனலாம்.

**பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் அமைப்பு**



கல்விசார் வழிகாட்டலின் நோக்கங்கள்

01. மாணவரின் கல்வி முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனித்து முன்னேற்றுதல்.
02. விசேட தேவைகள் உள்ளவர்களையும், கற்றல் குறைபாடுடையோர், மீத்திறனுடையோர், ஆக்கத்திறனுடையோர் ஆகியோரை இனங்கண்டு பொருத்தமான கற்றல் முறையினைக் கையாளல்.
03. தனிப்பட்ட பாடத்துறையில் குறைவுள்ள மாணவருக்கு விசேட உதவி வழங்குதல்.
04. கற்றல் சார்பான ஊக்கல் நிலையை மேம்படுத்தல்.
05. உயர் கல்வியைத் தொடர்ந்து கற்கவும், கற்றலை இடைநிறுத்தாது இருக்கவும் வழிப்படுத்துதல்.

தொழில் சார் வழிகாட்டலின் நோக்கங்கள்

01. தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்ய வழிகாட்டுதல்.
02. தொழில் தெரிவுக்குப் பெற்றோர்களது ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற்று வழிகாட்டுதல்.
03. தொழில் வாழ்க்கை சார் சகல தரவுகளையும் மாணவர்களுக்குத் தெரிவித்தல்.
04. தொழில் வாய்ப்புக்கள், பகுதி நேரத் தொழில் போன்றவற்றின் தகவல்களையும், உரிய நிறுவனங்களின் முகவரிகளையும் மாணவர்களுக்கு வழங்குதல்.

தனியாள் சார் வழிகாட்டலின் நோக்கங்கள்

01. சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.
02. தமது விருத்திக்குத் தாமே பொறுப்பேற்க ஊக்குவித்தல்.
03. மனவெழுச்சியில் சமநிலை பேண வழிகாட்டுதலும், ஆலோசனை வழங்குதலும்.
04. தனியாள் பிரச்சினைகள் தீர்க்க வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும்.

**உடல் நலம் சார் வழிகாட்டலின் நோக்கங்கள்**

01. உடல் குறைபாடுகளை இனங்கண்டால் சிகிச்சை பெறச் சிபார்சு செய்தல்.
02. மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உடல் ஆரோக்கியம், தடுப்பு மருந்துகள், போசாக்கு போன்றவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.
03. உடல் நலமும், உளநலமும் ஒன்றையொன்று சார்ந்தது என வலியுறுத்துதல்.
04. பாலியற் கல்வி வழங்குதல்.
05. போதைப் பொருள் (மது, புகைத்தல், ....) போன்ற தீய பழக்கங்களின் விளைவுகளை எடுத்துக் கூறல்.
06. உடல் அப்பியாசங்கள், விளையாட்டுக்களில் பங்கு கொள்ள ஊக்குவித்தல்.

சமூகம் சார் வழிகாட்டலின் நோக்கங்கள்

01. சமூக இசைவாக்கம் பெற உதவி செய்தல்.
02. சமூக முரண்பாடு தவிர்த்துச் சுமுகமான உறவு பேணல்.
03. சமூக விழுமியங்களை விருத்தி செய்தல்.
04. சமூகத் தேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
05. சமூக மேம்பாட்டுக்கு உழைப்பதற்கான மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.
06. குழுச் செயற்பாடு, தலைமைத்துவம், ஒத்துழைத்தல் போன்றவற்றுக்குப் பயிற்சியளித்தல்.

இணைப் பாட விதானச் செயல்சார் வழிகாட்டல்

01. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழித்தல்.

02. பொருத்தமான ஓய்வு நேரச் செயல்களை அவர்களின் உளச்சார்பு, மனப்பாங்கு, ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்து வழிகாட்டல்.

03. ஓய்வு நேரப் பொழுது போக்குக்கான வசதிகள், சந்தர்ப்பங்கள் ஏற்படுத்துதல்.

**உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு உருவாக்கப்பட்டதன் நோக்கம்:**

மாணவர்களின் நலனையும், விருத்தியையும் மேம்பாடடையச் செய்யும் உளசமூக அணுகு முறைகளையும், செயற்பாடுகளையும் ஒன்று சேர்த்தல் உள்ளடங்கலான மாணவர்களின் நட்பு ரீதியான கற்றல் சூழல்களைப் பாடசாலைகளில் உருவாக்குதல். இது அடுத்த சந்ததியைச் சேர்ந்த சிறுவர்களின் உடல், உள, சமூக, உணர்வு ரீதியான மேலும் கூடுதலான பலம் வாய்ந்தவர்களாக இருப்பதை உறுதி செய்து கொள்ளும்.

**இலக்கு:**

கல்வி முறைமையானது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் உளசமூக நலனைக் கவனத்தில் கொள்ளுவதற்கும் சகல பாடசாலைகளுக்கும் அதிகாரத்தை வழங்குகிறது.

**குறிக்கோள்:**

பாடசாலைத் தொகுதியினுள் உளசமூக நிகழ்ச்சித் திட்டத்தைப் பொதுவானதாக்கி ஒன்றிணைத்துக் கொள்ளுதல்.

**செயற்பாடுகள்:**

சுற்று நிருபம் 2001 / 06க்கு அமைவாக வழிகாட்டல் ஆசிரியர்களை நியமித்தல்.

300க்கும் மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட 1A, B மற்றும் 1C பாடசாலைகள் ஒரு முழுநேரப் பாடசாலை ஆலோசகரையும் 300க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 1A, B மற்றும் 1C பாடசாலைகள் பகுதி நேர ஆலோசகர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இவர்கள் வழிகாட்டல் ஆசிரியர்கள் என அழைக்கப்படுவர். இவர்களது வகிபங்கானது மாணவர்களைத் தனியாள்கள் எனும் ரீதியில் புரிந்து கொண்டு அவர்களின் பலத்தையும் மேலதிக உதவி தேவைப்படுவோரையும் தெரிந்து வழிகாட்டுதல் ஆகும்.

வழிகாட்டல் ஆசிரியர்களின் கடமைகளுள் சில வருமாறு:

❖ தொழில் சார்ந்த சேவைகள் தேவைப்படும் பிள்ளைகளை மதிப்பீடு செய்து, ஆதரவு வழங்க ஆலோசனை பெறுவதற்கு அனுப்புதல்.

அ) நடத்தை மாற்றத்துக்கான செயற்றிட்டங்களை உருவாக்குதல்.
ஆ) விசேட கல்விச் சேவைகள்.
இ) உடல் ரீதியான குறைபாடு உடையவர்களுக்கான சேவை
ஈ) மன நலத்துக்கு வேண்டிய சிகிச்சை.
உ) கிளர்ச்சியூட்டும் பதார்த்தங்களின் துஷ்பிரயோகத்துக்கான சிகிச்சை.
ஊ) குடும்ப சேவைகள்

ஆகியன தேவைப்படும் சிறுவர்களை ஆலோசனை பெற அனுப்புதல்.

❖ மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன்கள் பற்றிய பயிற்சிகளை வழங்குதல்

அ) சுய மற்றும் தனிப்பட்ட சிறப்பியல்புகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்தல்
ஆ) கையாளுதல் அல்லது சமாளித்தல் மற்றும் சுய கட்டுப்பாட்டுத் திறன்களை வளர்த்தல் (உணர்வுச் சமநிலை, கோபத்தைக் கையாளல், நெருக்கீடுகளைக் குறைத்தல், சுயவெளிப்பாடு) தீர்மானமெடுத்தலும், விமர்சன ரீதியாகச் சிந்திக்கும் திறன்களும் (பிரச்சினை விடுவித்தல் நுட்பங்கள்)
ஈ) பயனுறுதி மிக்க தொடர்பாடலையும், நபர்களுக்கு இடையேயான திறன்களையும் மேம்படுத்தல்.

❖ மாணவர்களுக்குத் தொழில் பற்றிய ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்குதல்.
   அ) வீடு – பாடசாலை – சமூகம் வேலைவாய்ப்புக்கள் என்பவற்றுக்கு இடையேயான தொடர்புகள் பற்றிய புரிந்துணர்வை அதிகரிக்கச் செய்தல்.
   ஆ) பாடசாலையில் மாணவர்களின் பயனுறுதி மிக்க கற்றலுக்குப் பங்களிப்புச் செய்யும் மனப்பாங்கு, அறிவு, மற்றும் திறன்கள் என்பவற்றின் விருத்திக்கு ஆதரவு வழங்கல்
   இ) தொடர்கல்வி வாய்ப்புக்கள் பற்றிய விழிப்புணர்வு.
   ஈ) பாடசாலைக்கும் சாத்திய வளத்தைக் கொண்ட தொழிற்பயிற்சி வாய்ப்புக்களுக்கும் இடையிலான தொடர்பை முன்னேற்றுதல்.
   உ) தொழில் மற்றும் திறன்கள் என்பவற்றை அடியொற்றிய பண்புகளை மாணவர்கள் அங்கீகரிப்பதை அதிகரிக்கச் செய்தல்.
   ஊ) தொழில் வாய்ப்புக்கள் பற்றி நன்கு புரிந்து கொள்ளப்பட்ட தீர்மானங்களை எடுக்கும் மாணவர்களின் செயலாற்றுத் திறனை முன்னேற்றுதல்.

❖ மாணவர்களின் உள சமூக நலனுக்காக விருத்தி செய்யப்பட்டுள்ள உளசமூக செயற்பாட்டு உபகரணப் பொதிகள், சாதனங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
   அ) பாதுகாப்பான, ஆரோக்கியமான பாடசாலைச் சூழலை மேம்படுத்தல்.
   ஆ) நடத்தை மாற்றத்தை இலகுவாக்குவதில் ஆசிரியர்களுக்கு உதவி வழங்குதல்
   இ) தேசிய திட்டத்தின் கீழ் விருத்தி செய்யப்பட்டுள்ள ஆதரவு வழங்கப்பட்டுள்ள வளங்களைப் பாடசாலை முகாமைத்துவத்துடனும், ஆசிரியர்களுடனும் பகிர்ந்து கொள்ளலும், மேம்படுத்தலும்.

❖ பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு ஆதரவு வழங்கும் செயற்பாடுகளை நடாத்துதல்.

அ) பிரச்சினை பற்றிக் கலந்துரையாடி அவற்றைப் பகிர்ந்து கொள்ளவும், இயல்பு நிலையை மீள அடைவதற்கு ஆதரவு அளிப்பதற்குமான வாய்ப்புக்களை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
ஆ) ஆதரவு வழங்குவதனூடாகத் தனிப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த கடமைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்தல்.

வழிகாட்டல் ஆசிரியர் தமது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கொடுக்கப்பட்ட தகவல்களையும், விருத்தி செய்யப்பட்ட சாதனங்களையும் பகிர்ந்து கொள்வதற்கும் பொறுப்பாயிருந்து இவற்றை நிறைவேற்றுவதற்கான மாதாந்த வேலைத்திட்டங்களைத் தயாரிப்பர்.

விசேட உதவி தேவைப்படும் தனிப்பட்ட மாணவர்களின் தேவைகளை ஆசிரியர்கள் மேலும் சிறந்த முறையில் கவனத்தில் கொள்ளுதல்.

- வகுப்பறை மட்டத்தில் உளசமூகச் செயற்பாடுகள் குழுச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டல் ஆசிரியர் வல்லவராக இருக்க வகுப்பாசிரியர் விசேட கவனிப்புத் தேவையான பிள்ளைகளை இனங்கண்டு தொடர் கணிப்பீடுக்காக வழிகாட்டல் ஆசிரியரிடம் அல்லது நிபுணத்துவம் வாய்ந்த ஒருவரிடம் ஆலோசனைக்காக அனுப்பி வைத்தல்.

- ஆலோசனை வழங்கல் தொகுதி ஒன்றை விருத்தி செய்தல். வழிகாட்டல் ஆசிரியர் போதிய தகமைப் பயிற்சி பெறாவிடின் உள்ளூரில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவக் கூடிய வளங்களை இனங்கண்டு இணைந்து செயற்படல். கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படும் உளசமூக வளநிலையம், சிறுவர் விருத்தி மற்றும் மகளிருக்கு வலுவூட்டும் அமைப்புகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சுகாதார அமைச்சு போன்ற ஏனைய அரசாங்க அமைச்சுக்களும், திணைக்களங்களும் இச்செயன்முறையின் ஒரு பகுதியாகவுள்ளன.

- இரகசியமான உரையாடல்களுக்குப் பாதுகாப்பான இடம் ஒன்றை இனங்காணுதல் வழிகாட்டல் ஆசிரியரும், சில சந்தர்ப்பங்களில் வகுப்பாசிரியரும் மாணவர்களுடன் உரையாடுவதற்காகப் பிரத்தியேகமான இரகசியமான இடமொன்று பாடசாலையில் இனங்காணப்படல் வேண்டும்.

இம்மாதிரியான இடமொன்றின் தேவை அதிபர்களின் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களில் சுட்டிக்காட்டப்படும்.

மேற்கூறிய வகையிலே, பாடசாலைகளின் உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு அமைய வேண்டும். இவ்வுலகின் தொழிற்பாடானது சகல பிள்ளைகளும் உய்யவும், மேம்பாடடையவும், தங்களின் உள்ளார்ந்த ஆற்றல்களைப் பூரணமாக வளர்த்துக் கொள்ளவும் இடமளிக்கக் கூடிய ஆரோக்கியமான பாடசாலைச் சூழலில் கற்பதற்குரிய வாய்ப்பை ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் கொண்டிருத்தல் வேண்டும் என்ற தொலைநோக்கை எட்டிவிடக் கூடியதாகச் செயற்படுதல் நன்று.


***உசாத்துணை :***

- 2007ல் கல்வி அமைச்சின் உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை அலகினால் வெளியிடப்பட்ட "தேசிய திட்டம்" கையேடு.

* * *

மிக உயர்ந்த சிந்தனைகளைச் செயற்படுத்துவன் மூலமே நாம் வெற்றி பெறுகிறோம். அச் சமயத்தில் நம் வாழ்க்கையில் செல்வமும், செல்வாக்கும் சேரத் தொடங்கும். ஆனால் அப்போதும் தொடக்க கால வாழ்க்கையைப் போலவே தொடர்ந்து எளிமையான முறையில் வாழ்ந்தால்தான் மன அமைதியும், பிற நன்மைகளும் தொடர்ந்து கிடைத்துவரும்.

***- அல்பேர்ட் ஐன்ஸ்டீன்***



# கல்வியின் முக்கியத்துவம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

உலகில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனும் பெறவேண்டிய செல்வங்களில் கல்விச் செல்வமே மிக உயர்ந்த செல்வமாகும். கல்வியினால் ஒருவன் பெற்றுக்கொள்ளும் அறிவு அவனுக்கு மூன்றாவது கண்ணாக ஞானக் கண்ணாக மிளிர்கிறது. அழியாத-யாராலும் அழிக்கமுடியாத, ஜீவிய பரியந்தம் ஒருவனுடன் தொடர்புபடுகின்ற, அவனுடைய பூதவுடல் அழிந்தாலும் புகழுடம்பின் பெருமையை நிலைநாட்டும் செல்வமாகக் கல்விச் செல்வம் காணப்படுகின்றது.

வள்ளுவர், கம்பர், ஷேக்ஸ்பியர், காளிதாசர் போன்ற பல இலக்கிய கர்த்தாக்கள் இவ்பூவுலகைவிட்டு மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால், அவர்கள் ஆக்கிவைத்த இலக்கியங்கள் இன்றும் அழியாப் புகழ்பெற்ற நூல்களாகத் திகழ்கின்றன. தமிழ்வேதம் எனப் போற்றப்படும் திருக்குறள் காலதேசச் சுவடுகள் அனைத்தையும் கடந்து, மானுடம் தழுவிய மகத்தான நூலாக உலகப்பொது மறையாக இன்றும் போற்றப்படுகிறது. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாரதியார் பெருமிதத்தோடு வள்ளுவன் புகழைப் பாடுகிறார்.

புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் அறிவியல் கலையாகிய விஞ்ஞானம் இன்று அபரிதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இலத்திரனியல் யுகமாக, கணணியுகமாக இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு வளர்ச்சியடைந்துள்ளது. புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்த நியூட்டன் மிதப்புத் தத்துவத்தைக் கண்டறிந்த ஆக்கிமீடிசு, தொலைபேசியைக் கண்டறிந்த அலெக்சாண்டர் கிரஹம் பெல் ஆகிய ஆய்வாளர்களை உலகம் இன்றும் போற்றுகிறது.

உயிர்வாழும்போது உள்ள புகழுக்கு ஒளி என்று பெயர். இறந்த பின்பு நிலை நிற்பதற்கு புகழ் என்று பெயர். இவ்விரண்டினையும் தருவது கல்விச் செல்வமே ஆகும். வாழ்க்கைக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் மக்கட்கு கல்வியானது ஒரு தெப்பம் போன்று உதவுகிறது. ஒருவனுடைய வாழ்க்கையில் என்றும் துணையாக இருப்பது கல்வியே என்பதைத் "துணையாய் வருவது தூய நற்கல்வியே" எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் குறிப்பிடுகிறது. அரசர்களுக்குத் தனது தேசத்தில் மட்டும்தான் சிறப்பு இருக்கும். கல்வி கற்ற அறிஞர்களுக்கு அவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்பு இருக்கும்.

*"மன்னனும் மாசறக் கற்றோனும் – சீர்தூக்கின்*
*மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்*
*தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்*
*சென்ற விடமெல்லாம் சிறப்பு".*

எனத் தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரும் குறிப்பிடுகின்றார். எக்காலத்திலும், எந்நாட்டிலும் எவ்வூரிலும் யாவராலும் போற்றச் செய்யும் கல்வியே பிள்ளைகளை விளக்கமுறச் செய்யும் நல்விளக்காகும்.

கல்விக்கும், ஒழுக்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. ஒழுக்கமில்லாத கல்வி வாசனை இல்லாத பூவிற்குச் சமன். ஒருவனிடம் நல்ல குணங்களை வளர்த்தெடுப்பதே கல்வியின் நோக்கமாகும். (Character building is the Essence of Education) எனப் பாரத நாட்டின் தேசபிதா மகாத்மா காந்தி

கூறுகிறார். எல்லாக் கல்விகள், எல்லாப் பயிற்சிகள் அனைத்தினதும் முடிவு ஒரு முழு மனிதனை உருவாக்குவதே (The end of all education all training should be man making) எனச் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

இளமைப் பருவம் வெறும் பெட்டி போன்றது, கள்ளமற்றது, கவலையில்லாதது. முதுமையோ அதற்கு எதிர்மாறானது. தன்னலம் பற்றிய கள்ளம் உள்ளது, கவலையும் நிரம்பியது. இளைஞர்கள் தம் இளமைப் பருவத்தில் செய்யவேண்டிய வேலை கல்வி கற்பதுதான். "இளமையிற் கல்" என்பதே ஔவையின் வாக்கும் ஆகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். கல்வி வேரூன்றிப் பதிதற்குரிய சிறப்புப் பருவம் இளமையே ஆகும். இளமைப் பருவம் கடந்து இல்லறத்தில் புகுந்துவிட்டால் வாழ்க்கையில் எவ்வளவோ போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். அச்சமயம் கல்வியில் கருத்துச் செல்லாது. கல்விப் பயிரும் எதையும் ஆற்றக்கூடிய இளமைப் பருவத்திலேயே கற்கப்பட்டு வேரூன்றினால் தான் மேலும் மேலும் வளர்ச்சி எய்திப் பயனளிக்கும்.

மாணவப் பருவத்தில் கல்வியை ஒழுங்காகப் பெறாத குடும்பத்தின் மூத்தபிள்ளை, எரிகின்ற நெருப்புப்போலப் பொறாமை பிடித்த அயலவன், குடும்பத்தின் கட்டுக்கோப்பை அழிப்பவளாகிய மனைவி ஆகிய முத்திறத்தாரும் அட்டமத்துச் சனிபோல அமைந்து விடுவார்கள். என்பதை

*"காலையிலே பல்கலை நூல் கல்லாத்தலைமகனும்*
*ஆலையெரி போன்ற அயலானும்*
*மனைக் கட்டழிக்கும் மனையாளும் – இம்மூன்றும்*
*தனக்கு அட்டமத்துச் சனி".*

என ஔவையாரின் பாடல் குறிப்பிடுகிறது.

படித்தும் கெட்டவர்களாய் நடப்பவர்களைப் படித்தவர்களாக எண்ணக்கூடாது. இவர்களைப் படித்த முட்டாள்கள் என்றே கூறலாம். கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை. எல்லோரும் கற்கவேண்டும். கற்பவற்றை சந்தேக விபரீதமின்றித் தெளிவாகக் கற்கவேண்டும். கற்றபின் கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும். கற்றபடி நடப்பவருடைய வாக்கும், வாழ்வும் ஒன்றானதாக இருக்க வேண்டும் என்பதையே

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

எனத் திருக்குறளும் கூறுகிறது.

உயர்ந்த ஞானமாகிய அறிவும், ஞானத்தினால் பெறும் உணர்வும் மிக மேலான செல்வங்களாகும். பொன்னைவிட ஞானத்தைப் பெறுவதே மேல், வெள்ளியைவிட உணர்வைப் பெறுவது மேல் எனக் கிறிஸ்தவ மதத்தவர்களின் புனித நூலாகிய பைபிள் குறிப்பிடுகிறது. தன்னடக்கம் இருக்கும் இடத்திலே தான் ஞானமும் இருக்கும். "இறுமாப்புக் கொண்டவர்கள் இகழ்ச்சி அடைவார்கள்" என்பதை "இறுமாப்பு வரும் முன்னே இகழ்ச்சி வரும் பின்னே" என பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நமக்குக் கெடுதியும் அழிவும் வருவதற்கு முன்பு நமது புத்தி நாசமாகிவிடும் என்பதை "விநாச காலே விபரீத புத்தி" என வடமொழிச் சுலோகம் குறிப்பிடுகிறது. "கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்பது தமிழில் உள்ள பழமொழி ஆகும்.

ஒவ்வொரு மனிதரும் வாழ்க்கையில் தேடவேண்டிய செல்வங்கள் பல உண்டு. ஆனால் நாம் தேடும் செல்வங்கள் பல கால வெள்ளத்தால் அழியும். சிலர் தமது வாழ்நாள் முழுவதும் பொருட்செல்வத்தைத் தேடுவதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு செயற்படுவார்கள். பணம் வாழ்க்கைக்கு அவசியம். ஆனால் பணம் மட்டும் வாழ்க்கை

யன்று என்பது நாம் அனைவரும் அனுபவ ரீதியாக அறிந்த உண்மையாகும். பொருட் செல்வம் வெள்ளத்தால் அழியும், வெந்தண னால் வேகும். கள்வரால் கவரப்படும், மாறுபட்ட பங்காளிகளாலும், பகைவராலும் பற்றப்படும், கொடுங்கோல் அரசரால் கொள்ளப்படும், கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்வியோ எவற்றாலும் அழியாது, எவராலும் கொள்ளப்படாது, கொடுக்கக் கொடுக்க வளர்ந்து கொண்டே போகும் என்பதைப் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

*"வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்*
*வேகாது வேந்தராலும்*
*கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்*
*நிறைவன்றிக் குறைவுறாது*
*கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு*
*மிக எளிது கல்வியென்னும்*
*உள்ள பொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்*
*பொருள் தேடி உழல்கின்றீரே".*

கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்யா விஹீன பசு) கல்வியே ஒருவர்க்குச் சிறந்த அணிகலன் (வித்யா ஸர்வஸ்ய பூஸணம்) என வடமொழிச் சுலோகங்கள் கூறுகின்றன. நமது உடலைப் பல அழகு சாதனப் பொருட்களால் நாள்தோறும் அழகு படுத்துகின்றோம். ஒரு சில மணித்தியா லங்களே அவை நிலைத்து நிற்கின்றன. கூந்தல் அழகோ, ஆடை அழகோ, மஞ்சள் பூசி முகம் மினுக்கும் அழகோ அழகல்ல, கல்வி யால் வரும் அழகே அழியாத அழகு என்பதை,

*"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து*
*நல்லம் யாம் எனும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு".*

எனப் பதினென் கீழ்க்கணக்கு நூல் களில் ஒன்றாகிய நாலடியார் குறிப்பிடுகிறது. கற்றவர்களின் முகத்தில் இருப்பதுவே கண். மற்றவர்களின் முகத்தில் இருப்பது கண் அல்ல புண் என்கிறார் வள்ளுவர்.

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்"*

எனத் தெய்வத் தமிழாகிய திருக்குறளும் செப்புகிறது.

"அறிவு வேறு ஒழுக்கம் வேறு" என்று சிலர் பிரித்துப் பார்க்கிறார்கள். அவன் நல்ல அறிவாளி. ஆனால் ஒழுக்கம் கெட்டவனாக இருக்கிறானே என்கிறார்கள். நல்ல அறிவுள்ள வன் ஒழுக்கமற்றவனாக இருக்கவே முடியாது. ஒழுக்கமற்றவனிடம் காணப்படும் கல்வி நச்சு மரத்திலே பழுத்த பழத்திற்கு ஒப்பானதாகும். "இதனால் தான் நல்லறிவே நல் ஒழுக்கம்" என்கிறார், கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானி யாகிய சோக்கிரடீஸ். மனித விழுமியங்களை யும், மானிட நேயத்தையும் மாணவனிடம் கல்வி உருவாக்குதல் வேண்டும். மிருக இயல்புகள் மனிதரிடம் வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு தடுப்பு அரணாகக் கல்வி அமை தல் வேண்டும்.

*12.05.2008இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கின் ஒரு பகுதி.*

* * *

வாய்ப்பு வரும் வரும் என்று யாரும் காத்திருக்க வேண்டாம். அந்த வாய்ப்புக்களை நீங்களே தேடித்தான் உருவாக்க வேண்டும். சந்தர்ப்பத்தை உருவாக்குங்கள்; வெற்றியை ஈட்டுங்கள்.

– ***பேர்ணாட்ஷா***

# நல்லாசிரியனே ஞானவிளக்கு

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியாகிய சோக்கிரடீஸ் ஆசிரியர்களை ஞான விளக்குகள் என்றே கூறுகிறார். அஞ்ஞானமாகிய அறியாமையை நீக்கி ஞானம் என்கிற அறிவை வழங்குபவர் ஆசிரியராகையால் ஆசிரியர்களை இறைவனாகப் போற்றும் பண்பு கீழைத்தேச நாடுகளில் நிலவியது. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். "ஆசார்ய தேவோ பவ" குருவைத் தெய்வமெனப் போற்று என்றே உபநிடதங்களும் கூறுகின்றன. ஒரு மாணவனுக்குப் பெற்ற தந்தை ஊனத் தந்தை என்றால் குரு ஞானத் தந்தையாகத் திகழ்கிறார். ஆசிரியர் மாணவர்களுக்கு உதாரண புருஷராகத் திகழ வேண்டும். தனி மனித வாழ்வில் ஒழுக்கத்தையும், நற்பண்புகளையும் பேணாத ஆசிரியர் ஆசிரியத் தொழிலுக்கே பொருத்தமற்றவராகி விடுகிறார். மனித விழுமியங்களை மதியாத ஒருவர் ஆசிரியராக இருந்தால் ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை எவ்வாறு உருவாக்க முடியும். "*ஒரு மாணவன் தவறுவிட்டால் அவனைக் கற்பித்த ஆசிரியனைத் தேடிக் கண்டுபிடித்து தண்டனையைக் கொடு*" என்பது சீனப் பழமொழி ஆகும்.

உயிருள்ள ஜீவன்களுடன் உறவாடும் உன்னதமான தொழிலைச் செய்பவர்கள் ஆசிரியர்கள். வெறும் கோவைகளுடனோ யந்திரங்களுடனோ பழகும் தொழிலாக ஆசிரியத் தொழில் அமைந்து விடவில்லை. சமுதாயத்தின் சிருஸ்டி கர்த்தாக்களாக இருக்கும் ஆசிரியர்கள் தங்கள் தொழிலின் புனிதத்துவத்தை உணர்ந்திருக்க வேண்டும். கூலிக்கு மாரடிப்பது போல ஆசிரியர்கள் தங்கள் தொழிலைச் செய்யக்கூடாது. உணவுக் கடையில் பணத்திற்கு உணவு போடும் சிலர் போலக் கல்வி கற்பிக்கக் கூடாது. பெற்ற தாய் பிள்ளைக்கு உணவு அளிப்பது போலப் பரிவுடன் கற்பிக்க வேண்டும்.

குழந்தைகளின் மனம் பச்சைக் களிமண், ஈர சீமெந்தைப் போன்றது. அதில் எப்படிப்பட்ட உருவத்தையும் செய்யலாம். கையெழுத்தைச் சரி செய்வதிலிருந்து தலையெழுத்தை முடிவு செய்வது வரை குழந்தையின் முன்னேற்றத்திற்குப் பல தளங்களில் ஆசிரியரால் உதவமுடியும். ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மாணவனுக்கு விருப்பம் ஏற்படுவதற்கு அந்தப் பாடத்தைக் கற்பித்த ஆசிரியரையும் அவர் கற்பித்த முறையையும் பிடித்ததே காரணமாக அமைந்திருப்பதைக் காணலாம். இதற்கு எதிர்மாறாகச் சில மாணவர்களுக்குச் சில பாடங்களில் வெறுப்பு ஏற்பட்டதற்குக் காரணம் அப் பாடத்தைக் கற்பித்த ஆசிரியரும் அவர் கற்பித்த முறையுமே ஆகும். ஆசிரியர்களில் சிலர் தங்களை இராணுவ அதிகாரிகள் போலவும் மாணவர்களைச் சிறைக் கைதிகள் போலவும் நினைக்கிறார்கள். இவர்கள் கற்பிக்கும் முறை வேப்பம் பட்டையை அவித்துப் பருகக் கொடுப்பது போலவும் காணப்படுகிறது. இதனால் மாணவனுக்குப் பாடத்திலும் ஆசிரியரிலும் மாத்திரமல்லாது கல்வியிலும் வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது.

கல்வி என்பது பல நேரங்களில் முறை சாராததாகவும் இருக்கிறது. வகுப்பிற்கு உள்ளேயும், வெளியேயும் ஆசிரியரின் நடை, உடை, பாவனை, பேச்சு அனைத்தையும் மாணவர்கள் கவனிக்கிறார்கள். கனிவான பேச்சும் கண்ணியமான நடத்தையும் உடைய ஆசிரியர்களை மாணவர்கள் நேசிக்கிறார்கள். அவரைப் பின்பற்றி வாழவும் நினைக்கிறார்கள். சுய ஒழுக்கம் நிறைந்த மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. தனி மனித ஒழுக்கத்தை வெறும் வார்த்தைகளால் கற்பித்து விட முடியாது. கடைப்பிடிக்கவும் முடியாது. வாழ்ந்து காட்டுபவர் தான் வழி நடாத்த முடியும். கல்வியோடு சேர்ந்து வாழும் கலையையும் கற்றுத் தரவேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது.

ஆசிரியர் உற்சாகத்தின் ஊற்றாக அமைந்து விட்டால் மாணவர்களின் வளர்ச்சி எளிதாகி விடுகிறது. ஆசிரியர் நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும், சுவைப்படப் பேசுபவராகவும் அமைந்துவிட்டால் மாணவர்களின் உற்சாகம் பன்மடங்காகி விடும். நல்லாசிரியருக்கு ஞாபக சக்தி, மன வலிமை, கருணை என்பன இருக்க வேண்டும். மாணவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தாமலும், அதே சமயம் அவர்களின் காயங்களைக் கண்டு பிடித்து மருந்து போடும் மருத்துவர்களாகவும் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு மாணவனின் இதயத்திலும் கல்வியோடு

சேர்ந்து அவரும் நிறைந்திருப்பது தான் ஆசிரியர்கள் பெறும் மிகச்சிறந்த விருது ஆகும்.

ஆசிரியர் கிணற்றுத் தவளையாகவோ சுய நலமியாகவோ இருக்கக்கூடாது. சுயநலமற்று பரந்த சிந்தனை உடையவராக இருத்தல் வேண்டும். எவனொருவன் சுயநலத்துடன் நிற்கிறானோ அவனிடத்தில் ஒழுக்கம் வராது. "பாவப் பாழ் மண்டபத்தின் முதல் படிக்கட்டே சுயநலம் தான்". சுயநலமுடைய ஆசிரியன் ஒரு நாளும் ஆசிரியத் தொழிலுக்கு வரக்கூடாது. அவருக்கு வட்டிக்கடை நடாத்துவதே மிகப் பொருத்தமான தொழில் ஆகும்.

ஆசிரியர்களுக்கு மாணவர்களிடம் கவலை வரலாமே ஒழியக் கோபம் ஒரு நாளும் வரக்கூடாது. அன்புள்ளவர்களிடம் ஏற்படுவது கவலை. எதிரிகளிடம் வருவதே கோபம். நல்லாசிரியன் தனது மாணவனை ஒரு நாளும் எதிரியாக்கக் கூடாது. மாணவர்கள் திணிக்கப்படும் பாத்திரங்கள் அல்ல, ஏற்றப்படும் தீபங்கள் என்பதை உணர்ந்து ஆசிரியர் கற்பித்தல் பணியினைச் செய்தல் வேண்டும்.

வகுப்பறையில் இன்று கல்வி கற்கும் மாணவர்களே தேசத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சிற்பிகள் என்பதை "ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்" எனக் குழந்தைக் கவிஞன் அழ-வள்ளியப்பா தனது பாடலிலே குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அறிவு வங்கியில் சேமிப்பு எப்பொழுதும் நிறைந்து காணப்படல் வேண்டும். தொடர்ந்து கற்க மறுக்கும் ஆசிரியர் தனது கற்பித்தற் பணியை அன்றே நிறுத்திவிட்டு வயிற்றுப்பிழைப்பிற்காக வேறு தொழிலைச் செய்யத் தயாராகி விட வேண்டும். ஆசிரியர்களின் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுக்குக் காலாவதியாகும் திகதி (Expiry Date) இடப்படல் வேண்டும் என்பது பேராசிரியர் ஒருவரின் கூற்றாகும். ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களில் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

மூன்று தசாப்தங்களுக்கு முன்பு யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிராமங்களில் உள்ள சமய, சமூக நிறுவனங்களின் தலைவர்களாகவும், தளபதிகளாகவும் ஆசிரிய தீபங்களே பிரகாசித்தார்கள். மக்களின் நம்பிக்கைக்கு உரிய சமூகத் தலைவர்களாக ஆசிரியர்கள் திகழ்ந்தார்கள். கல்விப் பணிகளை ஒழுங்காகச் செய்வதோடு சமுதாயப் பணிகளையும் சீராகச் செய்தார்கள். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். கூட்டுறவின் தந்தை எனப் போற்றப்படும் அமரர் வீரசிங்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்தார். மூட நம்பிக்கைகளைக் களைந்து சமுதாயச் சீரழிவுக்குச் சாவுமணி அடித்து யாழ்ப்பாண இளைஞர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி மறுமலர்ச்சி இயக்கமாக மலர்ந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் தலைவராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் திகழ்ந்தார். இத்தகைய சமுதாய உணர்வு மிக்க ஆசிரியர்கள் இன்று நமது சமூகத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள். சமூகப் பொருத்தப்பாடு எள்ளவும் இல்லாதவர்களாகச் சில ஆசிரியர்கள் மாறி வருகிறார்கள்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவில்லா தார்"

என்றே திருக்குறளும் கூறுகிறது. பெற்றோர் தமது பிள்ளைகளை ஆசிரியர்களை நம்பியே பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். ஆசிரியர் தனது குடும்ப வாழ்வில் நிம்மதியாக இருக்க வேண்டும். ஆனால் தனது தொழிலைத் தெய்வீகப் பணியாக நினைத்துச் செய்தல் வேண்டும். "முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். ஒவ்வொருவருடைய நாளாந்தச் செயற்பாடுகளையும் சரியாக மேற்பார்வை செய்யும் பரமகருணாநிதியாகிய இறைவன் அவரவருடைய செயலுக்கேற்ற பலனையும் கூட்டி வைப்பான். நாம் எந்த அதிகாரிக்கும் தப்பலாம். நமது தவறுகளைத் தெரியாமல் மறைக்கலாம். ஆனால் நீதிமானாகிய இறைவனின் பார்வைக்கு யாரும் தப்ப முடியாது. நித்திய தெய்வீகத் துலாக்கோலில் ஒவ்வொருவருடைய செய்கையும், நாளாந்தம் நிறுக்கப்படுகிறது. நல்லாசிரியர்களாகிய ஞான விளக்குகள் தங்கள் பணியைச் செவ்வனே ஆற்றின் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு அவர்களுக்குக் கிடைக்கும். ஆசிரியர்களின் சந்ததி தளைக்கும். இறை அருள் ஞான விளக்குகளாகிய ஆசிரியர்களைத் தொடர்ந்து பாதுகாக்கும்.

***12.05.2008இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கின் ஒரு பகுதி.*



# பரீட்சைகளில் வெற்றி பெறுதல்

**கோகிலா மகேந்திரன்**
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்.

வாழ்க்கையே ஒரு பெரிய பரீட்சைதான். அந்தப் பரீட்சையில் வெற்றி பெறத்தான் நாம் எல்லோருமே ஏதோ எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆயினும் இந்தக் கட்டுரை பேசுவது கல்விப் புலத்தில் மாணவர்கள் எதிர் கொள்ள வேண்டியிருக்கின்ற பரீட்சைகளைப் பற்றி மட்டுமே.

இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்வு மிகவும் போட்டி மிகுந்ததாகிவிட்டது. கூர்ப்புத் தத்துவம் பேசுவது போல இந்தப் போட்டியில் வெற்றி பெறும் மனிதர்கள்தான் தப்பிப் பிழைக்கிறார்கள். மற்றவர்கள் கஷ்டப்படவேண்டி இருக்கிறது. அல்லது அழிந்து போகவேண்டி இருக்கிறது. மனிதனது அடிப்படைத்தேவைகள் எல்லாவற்றுக்குமே வெளிப்படையாகவோ மறை முகமாகவோ போட்டி இருக்கிறது. அடிப்படைத் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்வதற்குக் கல்வி அவசியமாக இருக்கிறது. ஆகவே கல்விக்கும் போட்டி இருக்கிறது. அந்தப் போட்டியின் ஒரு முக்கிய அம்சமாகத் தான் பரீட்சைகள் அமைகின்றன. ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையும் பிள்ளைக்கு நிதியுதவியும் சிறந்த பாடசாலையில் அனுமதியும் கிடைக்கிறது. க.பொ.த சா/தரப் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெறுபவர் க.பொ.த உ/த படிப்பதற்கு நல்ல தரமுள்ள பாடசாலைக்குச் செல்ல முடிகிறது. க.பொ.த உ/த இல் நல்ல பெறுபேறு வந்தால் பல்கலைக்கழகம் புக முடிகிறது. மிகச் சிறப்பான பெறுபேறு என்றால் வெளி நாட்டின் சிறந்த பல்கலைக் கழகங்களில் புலமைப் பரிசில் கிடைக்கிறது. இப்படி எல்லாம் இருக்கும் போது பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிடைக்க வேண்டும் என்று பிள்ளைகளும் பெற்றோரும் விரும்புவதில் தவறு ஒன்றும் கிடையாது.

இலங்கையில் இவ்வாண்டு ஏறத்தாழ இரு நூற்று நாற்பதாயிரம் மாணவர்கள் க.பொ.த உ/த பரீட்சைக்குத் தோற்றினார்கள். இவர்களில் எட்டு வீதமானோர் மட்டுமே பல்கலைக்கழகம் ஒன்றிற்குள் நுழைவர். மீதி 92% ஆனோர் என்ன செய்வது என்பது பற்றி யோசிக்கவேண்டி இருக்கும். இந்த நிலையில் பரீட்சைகள் மிகப் பதற்றம் தருவனவாய் இருப்பது தவிர்க்க முடியாததாகிறது. சிறிதளவு பதற்றம் பரீட்சையைத் திறம்படச் செய்யவும் நன்கு ஆயத்தமாகவும் உதவக்கூடும். ஆனால் பெருமளவு பதற்றம் மாணவர்களின் வினைத் திறனைப் பெருமளவுக்குக் குறைத்து விடும். ஆகவே பரீட்சைகளைத் திறமையாகச் செய்யும் திறனைக் கற்றுக் கொள்வது அவசியமாகிறது.

ஒரு மாணவரிடம் காணப்படுகின்ற பாட அறிவுக்கு நேர்விகித சமனாகவே அவரது பெறுபேறு அமையும் என்பது எப்போதும் உண்மையாக இருப்பதில்லை என்பதை முதலில் கவனத்திற்கொள்ள வேண்டும். பல சந்தர்ப்பங்களில் குறைந்த அறிவு கொண்டவர் கூடிய பெறுபேற்றைப் பெற்று விடுவதை நாம் அவதானித்திருக்கின்றோம். அத்துடன் ஒரு பாடத்தில் ஒருவரது வாசிப்புத்திறன், கேட்கும் திறன், பேசும்திறன் இவை எல்லாம் புறந்தள்ளப் பட்டு எழுதும் திறன் மாத்திரமே அவரது பரீட்சை முடிவில் செல்வாக்குச் செலுத்தப் போகிறது என்பதையும் மறந்துவிட முடியாது.

இவற்றைவிட உளவியல் ரீதியாகப் பார்க்குமிடத்து வினாத்தாள் தயாரித்தவர், விடைத்தாள் திருத்துபவர், பரீட்சார்த்தி ஆகிய மூன்று பேருக்குமிடையில் ஒரு வெற்றிகரமான தொடர்பாடல் அமைந்துவிடுமானால் பரீட்சார்த்திக்கு நல்ல பெறுபேறு வரும். ஆகவே பரீட்சார்த்தி தனது பாடங்களைப் படித்துக் கொள்வதற்கு மேலே எழுதுந்திறனை நன்கு விருத்தி செய்து கொள்தலும், இந்த முக்கோணத் தொடர்பாடலை வினைத்திறன் மிக்கதாக ஆக்கிக் கொள்ளுதலும் வேண்டப்படுகின்றன.

விடைத்தாள் திருத்துபவரோடு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வதற்குச் (அவர் யாரென்றே எமக்குத் தெரியாத போதும்) சில வழிகள் இருக்கின்றன. அழகான எழுத்தில் பிழையற்ற முறையில் மொழியைப் பாவிப்பது முக்கியமானது. விடயங்கள் தெளிவாகவும், சுருக்கமாகவும் முன்வைக்கப் பட வேண்டும். ஒரு கட்டுரை எழுதுவதானாலும் முதல் வசனத்தில் ஒரு அசாதாரண கவர்ச்சி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

தேவையற்ற விடயங்கள் எதுவும் விடைத்தாளில் இருப்பது நல்லதல்ல. 'ஓம் ராம ஜெயம், ஓம் ராம ஜெயம்' என்று பல முறை எழுதப்பட்டிருப்பது

பரீட்சார்த்தியின் பயத்தையும், தன்னம்பிக்கை இன்மையையுமே வெளிப்படுத்தும். சிலர் "தயவு செய்து என்னைச் சித்தி அடைய வைக்கவும்" என்று விடைத்தாளில் எழுதியிருப்பர். அது ஒரு அநுதாபத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக 'நேர்மையற்ற முறைக்கு எம்மையும் இழுக்கப் பார்க்கிறார்' என்ற கோபத்தையே விடைத்தாள் திருத்துபவரிடம் ஏற்படுத்தும். அதைவிட முடிந்த வரை முயன்று பதில்களை எழுதியிருக்கும் பரீட்சார்த்தி மீது அதிக அநுதாபம் இருக்கும்.

பரீட்சை தொடர்பாக அதீத நம்பிக்கையும் இருக்கக் கூடாது. முற்றிலும் தன்னம்பிக்கை குறைந்து சுய கணிப்பு வீழ்ச்சியால் ஏற்படும் மனச் சோர்வுக்குள்ளும் வந்து விடக்கூடாது. எதுவுமே அளவோடு இருப்பது நன்று.

பரீட்சை தொடர்பான பதகளிப்பு, பதற்றம் காரணமாகப் படித்த விடயங்களும் மறந்து போகிற தன்மை அதிகரிக்கலாம். அதற்காக ஞாப கசக்தியை அதிகரிக்கும் முறைகளைப் பயின்று கொள்ளலாம். விடயங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் கற்கின்றபோதும், படமாக்கிக் கற்கின்ற போதும் ஞாபகம் வருவது சுலபம். உதார ணமாக இருபது சொற்கள் ஒழுங்கில் ஞாபகம் வரவேண்டும் என்றால் வீட்டில் உள்ள இருபது பொருட்களை ஒரு ஒழுங்கில் ஞாபகப்படுத்தி அவற்றோடு இந்தப்புதிய சொற்களைக் கொழுவி மனப்படம் ஒன்றைப் போட்டுக் கொள்ளலாம். Conscience என்ற சொல்லுக்கு Spelling மறந்து போகிறது என்றால் அந்தச் சொல்லுக்குள் Science என்ற சொல்லு இருக்கிறது என்பதை அவதானித் திருந்தால் சுலபமாக இருக்கும்.

சோதனைக்கு முந்திய வாரத்தில் படித்த பல விடயங்களையும் சுய ஒலிபரப்புச் செய்து பார்த்துக் கொள்ளலாம். நமக்கு முன்னே இல்லாத ஒரு சபைக்குப் பேசித்தள்ளி விடலாம். அல்லது உண்மையாகவே நண்பர் குழாமுக்குக் கற்பித் தால் விடயங்கள் நன்கு ஞாபகம் வரும்.

சோதனைக்கு முதல் நாள் ஓய்வெடுப்பது நல் லது என்று பலரும் கூறுவதுண்டு. ஓய்வெடுப்பது என்றால் நன்கு நித்திரை செய்வதைக் குறிக்கும். அதைத் தவறாகப் புரிந்துகொண்டு ஓய்வு என்ற பெய ரில் சினிமா பார்த்தல், பாட்டுக் கேட்டல், மது அருந்தல், புகைத்தல், கபீன் நிரம்பிய பானங்களை அருந்தல் போன்றவை அதிக அளவு நட்டத்தையே தரும்.

நன்றாகப் படித்து நன்றாகப் பரீட்சை செய்ய வேண்டும் என்ற இலக்கு இருப்பதில் தவறில்லை. ஆனால் ஒருவேளை சோதனை நன்றாகச் செய்யா விட்டால் வாழ்க்கையே இருண்டுவிடும் என்று நினைக்க வேண்டியதில்லை. வாழ்வின் வெற்றி என்பது படிப்பும் பட்டமும் நிறைய உடையவர்க ளுக்கு மட்டுந்தான் என்பதில்லை என்பதையும் நினைவில் கொண்டு ஒருவித தளர்வு உணர்வை யும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

பரீட்சைக் காலங்களில் பெற்றவர்களும், ஆசிரியர்களும் அதிக பதற்றமாக இருந்தால் பிள்ளைகளிடமும் அது தொற்றிக் கொள்ளும். ஆகவே பெரியவர்கள் சிறந்த விழிப்புணர்வைக் கொண்டிருப்பது முக்கியம்.

## சோதனைக்கு முன் அவதானிக்க வேண்டிய சில விடயங்கள் :-

"எனக்குப் பரீட்சை எழுதுவது விருப்பம், எனக்குத் தெரிந்ததைப் பரீட்சகருக்குக் காட்ட நல்ல சந்தர்ப்பம்" என்ற வசனத்தை அடிக்கடி சொல்லிக் கொள்வது நல்லது.

பரீட்சைக்கு முந்திய வாரங்களில் நித்திரை வட்டத்தை குழப்பாதிருப்பதே நல்லது. குறிப்பிட்ட நேரத்துக்குப் படிப்பதும் (இரவு 10 மணி) குறிப்பிட்ட நேரத்துக்கு எழும்புவதும் (காலை 5 மணி அல்லது 6 மணி) நிலை பெற வேண்டும். தனியே படிக்கும் போதுதான் வேகமாகப் படிக்கலாம். ஆயினும் தனியே படித்து அலுத்துப் போன நேரங்களில் குழுப்படிப்பிற்குப் போவது தவறில்லை.

ஒருவர் படித்த விடயங்கள் படித்த சூழலோடு தொடர்புபட்டு ஞாபகம் வருவது இலகுவானது. நாம் ஒரு விடயத்தை எந்த இடத்தில் இருந்து படித் தோமோ எந்த உடல்நிலையில் இருந்து படித் தோமோ, எந்த நேரத்தில் படித்தோமோ அதே இடம், அதே உடல் நிலை, அதே நேரத்தில் ஞாபகம் வரு வது சுலபம். ஆகவே பரீட்சை மண்டபம் போன்ற அமைப்புள்ள இடங்களில் கதிரையில் இருந்து படிப்பது சிறந்தது. பகல் நேரத்தில் நித்திரை செய்து இரவில் படிப்பது உகந்ததல்ல. ஏனெனில் சோதனை எப்படியும் பகலில்தான் வரும்.

தேவையில்லாத ஆண்டுகள், இலக்கங்கள் போன்ற விடயங்களை மிகக் கஷ்டப்பட்டு மூளை யில் நிறுத்தி வைத்திருக்க வேண்டியதில்லை.

சோதனை எழுதப் போகும் வருடத்துக்கு முந்திய பத்து வருட வினாத்தாள்களைக் கவனமாக ஆராய வேண்டும். அது வினாத்தயாரிக்கும் பரீட்சகர் பற்றிய ஒரு விளக்கத்தைத் தரும். அவர் எந்தெந்த விடயங்களில் அதிகம் அக்கறை உள்ளவராக இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த கால வினாக்களுக்கான சரியான விடைகளையும் தேடிக் கற்றுக் கொள்ள வேண்டும்.

பரீட்சை அண்மித்துவிட்ட நேரங்களில் புத்தகம் முழுவதையும் அல்லது நோட்ஸ் முழுவதையும் திருப்பிப் படிக்க முடியாமல் போகலாம். ஆகவே முதல் படிக்கும்போதே முக்கியமான விடயங்களை அல்லது அடிக்கடி மறந்து போகிற விடயங்களைக் கோடிட்டு வைத்துக் கொள்ளலாம். அல்லது அவற்றை ஒரு சிறு பயிற்சிக் கொப்பியில் குறித்துக் கொள்ளலாம். கடைசி நேரத்தில் அவற்றை மட்டும் பார்த்தால் போதும் என்ற நிலையில் இருந்து கொள்ள வேண்டும்.

பரீட்சைக்கு முதல் நாள் இரவே பரீட்சை மண்டபத்திற்குக் கொண்டுபோக வேண்டியவற்றை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். காலையில் பதற்றப்படாமல் இருக்க அது உதவும். இரண்டு பேனாக்கள், பென்சில், அடிமட்டம், றபர் ஆகியவற்றுடன் தண்ணீர்ப் போத்தலும் கொண்டு போகலாம். எல்லாவற்றையும் ஆயத்தமாக எடுத்து வைத்து விட்டு எட்டு மணி நேரம் நன்றாக உறங்கிப் புத்துணர்ச்சியுடன் காலையில் பரீட்சைக்குச் செல்ல வேண்டும்.

முடிந்தவரையில் நடந்து நடந்து படிப்பது, படுத்திருந்து படிப்பது போன்ற பழக்கங்களில் இருந்து விடுபட்டிருப்பது நன்று.

### பரீட்சைத் தினத்தில் கவனிக்க வேண்டிய விடயங்கள் :-

பரீட்சையில் அன்று காலையில் நேரத்தோடு நித்திரை விட்டெழுதல் வேண்டும். (5.30 மணி வரையில்) நன்றாகக் குளித்து உடல் சோர்வை நீக்கிக் கொள்ள வேண்டும். கட்டாயமாகச் சாப்பிட்டு விட்டுத்தான் பரீட்சைக்குப் போகவேண்டும். ஆயினும் அந்த உணவு அளவில் அதிகமாக இருக்க வேண்டியதில்லை. போஷணை மிகுந்ததாய் இருக்குமாறு பார்த்துக் கொள்ளலாம். பால் அருந்தி விட்டுச் செல்வது நல்லது. பரீட்சைத் தினத்தன்று காலையில் இறைவழிபாடு செய்ய வேண்டும். இறைவன் என்னோடு இருக்கிறான் என்ற பூரண நம்பிக்கையோடு பரீட்சை மண்டபத்திற்கு நேரத்திற்குப் போய் விட வேண்டும். பரீட்சை தொடங்கும் நேரத்திற்கு அரைமணி நேரம் முன்பதாகவே அங்கு நிற்குமாறு திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

பரீட்சை மண்டபத்தில் சுட்டிலக்கம் இடப்பட்ட மேசையைத் தேடி அமர்ந்து கொள்ளலாம். நேரம் இருந்தால் சிறு குறிப்புப் புத்தகத்தை ஒரு முறை புரட்டிப் பார்க்கலாம். "இந்தக் கேள்விதான் வருமாம். கஷ்டமாய்த்தான் வருமாம்" போன்ற கதைகளில் ஈடுபடாதிருப்பது நல்லது. மனதில் பதற்றமாக உணர்ந்தால் நண்பர்களுடன் சாதாரணமாகக் கதைத்துக் கொள்ளலாம்.

தலையிடி வரும் என்ற பயம் உள்ளவர்கள் தலையிடி மாத்திரைகளையும் அஸ்மா வரலாம் என்று நினைப்பவர்கள் உள் இழுப்புக் கருவியையும் (inhaler) பரீட்சை மண்டபத்திற்குள் கொண்டு செல்லலாம்.

பரீட்சை மண்டபத்தில் ஆசனத்தில் அமர்ந்து வினாத்தாள் வழங்கப்படுவதற்கு இடைப்பட்ட நேரத்தில்தான் அதிக பதகளிப்பு உணரப்படும். அந்த நேரத்தில் விடைத்தாள்களைப் பெற்று அவற்றில் சுட்டிலக்கம் எழுதும் வேலையைச் செய்து கொண்டிருக்கலாம். அல்லது பரீட்சை அனுமதி அட்டையை நிரப்பிக் கையெழுத்திடலாம். அந்த நேரத்தில் ஏதாவது செய்து கொண்டிருப்பது நல்லது ஒன்றும் செய்ய முடியாவிட்டால் ஆழ்ந்த சுவாசப் பயிற்சியைச் செய்து கொண்டே அமர்ந்திருக்கலாம். சுவாச வேகத்தை குறைத்து அதனை ஆழமாக்கும் போது பதற்றம் குறைந்தாக வேண்டும். கதிரையில் இருந்தவாறே தளர்வுப் பயிற்சியை மேற்கொள்வது, மனதிற்குள் உச்சாடனங்களைச் சொல்லிக் கொள்வது, அக அமைதிப் பயிற்சி மூலம் கற்பனையில் அழகான இடத்திற்குச் சென்று திரும்புவது போன்றவையும் மிகவும் உதவும்.

### பரீட்சை மண்டபத்தில் கவனிக்க வேண்டியவை :-

பரீட்சை மண்டபத்தில் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் போதிய வெளிச்சம் இல்லையாயின் அல்லது மழை நேரத்தில் நீர் வருகிறதாயின் அந்த இடத்தை மாற்றித் தருமாறு மேற் பார்வையாளரிடம் நீங்கள் கேட்கலாம். ஓர் அவசர நிலையில் உங்களுக்கு அருந்துவதற்கு நீர் தேவைப்பட்டால் அல்லது ஏதாவது மருந்து தேவைப்பட்டால் அல்லது கழிவறைக்குச் செல்ல வேண்டி இருந்தால் பொருத்தமான ஏற்பாட்டை மேற்பார்வையாளர்

செய்து தருவார். அவை பற்றிக் கூறப் பயப்பட வேண்டியதில்லை.

காலையும் மாலையும் பரீட்சை இருக்கிறதா யின் மதிய உணவை எடுத்துச் செல்வது நல்லது. பழக்கமற்ற புதிய இடத்தில் சாப்பிடுவது நல்லதல்ல.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட கதிரையில் நிமிர்ந்து இருத்தல் வேண்டும். கால்கள் நிலத்தில் ஒழுங்காகத் தொட வேண்டும். தேவையானபோது காலை முன்னோக்கி நீட்டக் கூடியதாக இருப்பது நல்லது. கதிரையை மேசைக்கு அண்மையில் போட்டுக் கொண்டால் எழுதுவதற்கான சக்தி இழிவளவை அடையும்.

மண்டபத்தில் இருக்கும்போது அவதானமும் கவனமும் முழுமையாகப் பரீட்சையில் இருக்கு மாறு விழிப்புடன் செயற்பட வேண்டும். பூரண சுய கட்டுப்பாடு இருத்தல் அவசியம். வெளியே நடை பெறும் எந்த நிகழ்வும் எமது கவனத்தைத் திசை திருப்ப அனுமதிக்க கூடாது.

வினாத்தாள் கிடைத்தவுடன் எமது சொந்த மணிக்கூட்டுடன் நேரத்தைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். விடை எழுதிக் கொடுக்க வேண்டிய விடைத்தாள்களை விட ஓரிரு மேலதிக தாள்கள் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். அவை சில விடயங்களை எழுதிப் பார்க்கவும் உதவும்.

வினாக்கள் அனைத்தையும் ஒரு முறை வாசித்தால் ஒரு வினாவுக்கு விடை எழுதிக் கொண்டிருக்கும் போது ஏனைய வினாக்களின் விடைகளை ஆழ்மனம் தேடிக் கொண்டிருக்கும்.

பல தேர்வு வினாக்களில் எந்த ஒரு வினாவுக் கும் விடை அளிக்காது விடுவது புத்திசாலித்தன மானதல்ல. ஊகத்திலேனும் விடை அளிப்பதே சிறந்தது.

எத்தகைய வினாவாக இருந்தாலும் பரீட்சகர் எதை எதிர்பார்க்கிறார் என்று கண்டுபிடிக்க முய லுங்கள். அந்த வினாவுக்கு விடை எழுதும் போது வினாவைத் திருப்பி எழுதி நேரத்தை விரயமாக்க வேண்டியதில்லை. அமைப்பு வினாக்கள் அல்லது கட்டுரை வினாக்களில் நன்கு விடை தெரிந்த வினாவை முதலில் எழுத ஆரம்பிப்பது நல்லது. சிறிது நேரத்தில் எழுதலாம். விரும்பினால் அதிக நேரமும் எடுத்து விரிவாக எழுதலாம் என்று இருக்கும் வினாவை இறுதியாக விடை அளிக்க வைத்துக் கொள்ளலாம்.

கட்டுரை வினாக்களை உங்களுக்குச் சொந்த மாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு மிகவும் பிடித்த சுவாரிசியமான தலைப்பைத் தெரிவு செய்யுங்கள். ரசித்து எழுதுங்கள். சிறிய வசனங்கள், சிறிய பந்தி கள், எழுத்துகள் இடைவெளி விட்டுப் பெரிதாக வாசிக்க இலகுவாக இருக்கட்டும்.

எந்தக் காரணம் கொண்டும் கேட்கப்பட்டதை விட அதிகமான வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டாம். பரீட்சை மண்டபத்தில் பார்த்தெழுதல், நோட்ஸ் வைத்திருத்தல், மற்றவர்களோடு கதைத் தல், ஆள் அடையாள அட்டையில் மோசடி செய்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு மனப்பத களிப்பை அதிகரித்துக் கொள்வதைப் போன்ற முட்டாள்த்தனம் வேறு கிடையாது. நேர்மையாக இருக்கும் போதே அமைதியாக இருக்க முடியும்.

விடைத்தாள் திருத்துபவர் கவனமாக வாசிக்க மாட்டார் என்ற எண்ணத்தோடு முதல் எழுதிய பந் தியை இடையில் திருப்பி எழுதுதல், பொருத்த மற்று அலம்புதல் போன்றவை பெறக்கூடிய புள்ளிகள் மேலும் குறையவே வழிவகுக்கும்

விடைகள் எல்லாம் எழுதப்பட்டதும் எல்லா வினாவுக்கும் விடை எழுதப்பட்டதா என்று கவனித் துக் கடதாசிகளை ஒழுங்காக அடுக்கிக் கொள்ள வேண்டும். ஆயினும் முழு விடைகளையும் திருப்பி வாசிக்க வேண்டியதில்லை.

பரீட்சை முடிந்தவுடன் யாரும் 'எப்படி?' என்று கேட்டால் 'நன்றாகச் செய்தேன்' என்பதோடு நிறுத்திக் கொள்வது நல்லது. அதற்கு மேல் கதைத்துப் பிழையான இடங்களை அறியப் போனால் அடுத்த பாடத்திற்கான பதற்றம் இன்னும் அதிகரிக்கலாம். பரீட்சைகள் எல்லாம் முடிந்த பிறகு ஆறுதலாக ஆசிரியர்களோடு கலந்துரையாடிப் பிழைவிட்ட இடங்களை அறிந்து கொள்வது எதிர் காலப் பரீட்சைகளுக்கு உதவும்.

எமது அறிவும் திறனும் எந்த மட்டத்தில் இருந்தாலும் சரி பரீட்சையில் வெற்றி பெறும் திறனைக் கற்றுக்கொள்வது வாழ்வில் எப்போதும் உதவிக் கொண்டே இருக்கும்.

❖ ❖ ❖



# சுதந்திர இலங்கையின் கல்வி நிர்வாக மாற்றங்கள்


கு. ஸ்ரீகுமரன் - MEd
ஆசிரியர்,
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.


அறிமுகம்

பொதுத்துறை நிர்வாகத்திலிருந்து 1950 களில் கிளைத்தெழுந்த தனித்துறையாகக் கல்வி நிர்வாகம் விளங்குகிறது. ஒரு நாட்டை நிர்வகிப்பதில் கல்வி அடியாதாரமாக விளங்குவதனால் கல்வி நிர்வாகத்தைச் சிறப்பான முறையில் மேற்கொண்டால் அது ஏனைய துறைகளின் வளர்ச்சிக்கும் உதவுவதாக இருக்கும். எனவேதான் பல ஆண்டுகளாக நிர்வாகச் செயன்முறைகளைப் பகுத்தாராய்ந்து புதியதொரு துறையாகக் கல்வி நிர்வாகம் என்பது ஏற்படுத்தப்பட்டது. இது கோட்பாடு அடிப்படையிலும், செயற்பாட்டு அடிப்படையிலும் அமைந்தவொன்றாகும். இது ஒரு பரந்த துறையாக இன்று காணப்படுகிறது. பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றை வரையறுத்து, கோட்பாட்டு ரீதியில் அவற்றை அணுகித் தீர்வு காண்பதற்கு இது உதவுகிறது. மேலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிந்து, பொருத்தமான தந்திரோபாயங்களை உருவாக்கிப் பிரயோகிப்பதற்குக் கல்வி நிர்வாகம் உதவுகின்றது.

இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலேயே கல்வி நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெற்றனவாயினும் அவை, தெளிவானவையோ, பூரணமானவையோ அல்ல. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 1869ஆம் ஆண்டில் மோர்கன் குழுவினரின் விதப்புரையின் பேரில் பொதுப்போதனைத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதன் பணிப்பாளராக ஜோன் ஸ்குவட் லோறி நியமிக்கப்பட்டார். இது இலங்கைப் பாடசாலைகளை ஒன்றிணைத்து நிர்வகிக்கும் அமைப்பாக இருந்ததுடன் தனியாரும் மதக்குழுக்களும் சுதந்திரமாக இயங்கிய நிலைமையையும் நிறுத்தியது. இதுவே இலங்கையில் கல்வி நிர்வாகத்தின் ஆரம்ப புள்ளி எனலாம்.

அதன் பின்னர் 1905ஆம் ஆண்டின் வேல்ஸ் ஆணைக்குழுவின் அறிக்கைப் பிரகாரம் "1906ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நகரப் பாடசாலைகள் சட்டமும், 1907இல் கொண்டுவரப்பட்ட கிராமப் பாடசாலைகள் சட்டமும்" பாடசாலை மாவட்டங்கள், குழுக்கள் என்ற அமைப்பினை உருவாக்கின.

1869இல் உருவாக்கப்பட்ட பொதுப் போதனைத் திணைக்களம் 1912ல் கல்வித் திணைக்களம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இதன் தலைவராக கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

1920 ஆம் ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டம் கல்விச் சபையினை உருவாக்குதல் மாவட்டக் கல்விக் குழுக்களுக்கு அதிகாரமளித்தல் என்பவற்றை வலியுறுத்தியது. 1839ஆம் ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டமும் இவற்றை மேலும் வலுப்படுத்த விழைந்தது.

கல்வி நிர்வாகக் குழுக்களை நிறுவுதல் தொடர்பில் 1947ஆம் ஆண்டின் கல்விச் சட்டத்திருத்தம் கவனம் செலுத்தியது. இவையாவும் சுதந்திரத்துக்கு முற்பட்ட கல்வி நிர்வாகம் தொடர்பான விதப்புரைகளாகவும், திட்டங்களாகவும் உள்ளன. எனினும், 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரே எமக்கான கல்வி நிர்வாகம் பற்றிய சிந்தனை மேலெழுந்தது எனலாம். ஆயினும் பிரித்தானிய மாதிரியின் தொடர்ச்சியாக, அதை அடியொற்றியதாகவே சுதந்திர இலங்கையின் கல்வி நிர்வாகச் செயற்பாடுகள் காணப்படுகின்றமையைத் தொடர்ந்து வந்த மாற்றங்கள் புலப்படுத்துகின்றன.

**சுதந்திர இலங்கை 1948 - 1960**

சுதந்திரத்தின் பின்னர் 1951ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கல்வித் திருத்தச் சட்டத்தில் முன்னர் அமைக்கப்பட்ட கல்விச் சபைகள் மத்திய ஆலோசனைச் சபைகளாக மாற்றப்பட்டன. வசதிக் கட்டணம் அறவிடுவதையும் இத்திருத்தம் அங்கீகரித்தது. அதன்பின்னர் 1960இல் கொண்டு வரப்பட்ட கல்வித் திருத்தச் சட்டம் கல்விப் பணிப்பாளர், உதவி பெறும் பாடசாலைகளது முகாமையாளராக இருப்பதற்கு வழி கோலியது. உதவி பெறும் பத்துப் பாடசாலைகள் அவரது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. உண்மையில் மத்திய கட்டுப்பாட்டை நோக்கியதாகவே இக்காலத்தின் கல்வி நிர்வாக மாற்றங்கள் காணப்படுகின்றன எனலாம்.

**1961 - 1970 வரையான காலம்**

1960 ஆம் ஆண்டு நாட்டின் சகல பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க விழைந்தது. இதைத்தொடர்ந்து உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் சட்டமூலம் (1960), உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் பற்றிய சட்டமூலம் (1961) என்பன கொண்டு வரப்பட்டன.

ஏற்கனவே கல்வித் திணைக்களத்தின் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்துக்குள் தனித் தனியாக ஒன்பது மாகாணங்களுக்கும் ஒவ்வொரு அதிகாரியாக நியமிக்கப்பட்டு இயங்கி வந்த நிர்வாக அமைப்பானது போதாததாகவே இருந்தமை உணரப்பட்டது.

இந்நிலையில் 1961ஆம் ஆண்டு ஏப்பிரலில் பண்டாரவளையில் நடைபெற்ற "கல்வி மாநாடு" முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. இம்மாநாட்டில் பிரதேசக் கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் கல்வி நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதையும், பிரதேச அலுவலகங்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதையும் வலியுறுத்துவதாக அமைந்தன. இம்முக்கிய திருப்பு முனையான மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பில் 1961இல் வெளியான தேசிய ஆணைக்குழுவின் அறிக்கையும் ஒரே கருத்தையே வெளிப்படுத்தியிருந்தது. வேலையைப் பரவலாக்குவது மட்டுமல்ல அதிகாரங்களையும் பரவலாக்குவது அவசியமென இவ்வறிக்கை வலியுறுத்தியது.

இதன் பிரகாரம் 1961ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் தலைமையில் 10 கல்விப் பிராந்தியங்களும், மாவட்டக் கல்வி அதிகாரியின் தலைமையில் 13 உப கல்விப் பிரதேசங்களும் நிறுவப்பட்டன. உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தமது பிராந்தியங்களின் கல்வி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்ததுடன் உபகல்விப் பிரதேசங்களை மேற்பார்வை செய்வதிலும் ஈடுபட்டனர். எனினும் பண்டாரவளை மாநாட்டின் எதிர்பார்ப்பைக் குறித்த நிர்வாகப் பரவலாக்கம் பூர்த்தி செய்யவில்லை என்ற கருத்தும் அக்காலத்தில் நிலவியது. இதனால் 1963இல் கல்வியமைச்சு நிர்வாகப் பரவலாக்கம் பற்றிய தனது கடமைகள், பொறுப்புக்கள் குறித்த விரிவான விதிக்கோவையினை வெளியிட்டது.

1966ஆம் ஆண்டில் பிராந்தியக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை பத்திலிருந்து பதிநான்காக உயர்த்தப்பட்டது. இவற்றுக்குப் பொறுப்பாகக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஒரு திணைக்களமாக ஆக்கப்பட்டு, அதிகளவு பொறுப்பும் அதிகாரமும் வழங்கப்பட்டது. அதேவேளை, உப கல்விப் பிரதேசங்களும் தரமுயர்த்தப்பட்டுப் பிரதம கல்வி அதிகாரியின் பொறுப்பில் இயங்க ஆரம்பித்தன.

இதுவரை காலமும் ஒருவழித் தொடர்பாக, மத்தியிலிருந்து கட்டளைகளைப் பெற்றுச செயற்படும் நிலை காணப்பட்டது. ஓரளவுக்கு கீழிருந்து மேல்நோக்கிய தகவல் பரிமாற்றத்துக்கான சந்தர்ப்பம் 1966இன் பின்னரே உருவானது. அவ்வகையில் இருவழித் தொடர்பு பேணப்பட்ட தெளிவான சந்தர்ப்பம் 1966இன் பின்னரே ஏற்பட்டது எனலாம்.

அதேவேளை கல்வியமைச்சும், கல்வி இலாகாவும் வெவ்வேறாக இயங்கிய நிலையும்

1966இல் மாற்றப்பட்டது. கல்வி இலாகாவின் தலைவர் கல்வித் திணைக்களத் தலைவராக கல்விப் பணிப்பாளர் நாயகம் என்ற பதவியில் அமர்த்தப்பட்டார். அதேவேளை அவரே கல்வி யமைச்சின் செயலாளராகவும் விளங்கினார். அவருக்கு அடுத்தபடி நிலையில் மூன்று உதவிக் கல்விப் பணிப்பாளர் நாயகங்கள் நியமிக்கப் பட்டு அவர்கள் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்களாக விளங்கினர்.

1968ஆம் ஆண்டில் கல்விப் பிராந்தியங் களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்ததுடன், உப கல்விப் பிரதேசங்களின் எண்ணிக்கை 9 ஆகக் குறைந்தது.

1961 முதல் 1970 வரையான ஒரு தசாப்த காலம் இலங்கையில் கல்வி நிர்வாகப் பரவ லாக்கத்துக்கும், கல்விச் செயற்பாடுகளில் நிர் வாக ரீதியாகக் காணப்பட்ட இடைவெளிகளை நீக்குவதற்கும் கவனம் செலுத்திய காலமென லாம். கல்வி நிர்வாகத்தில் இரு வழித்தொடர்பு பேணப்படுவதிலும் இக்காலம் முக்கியமான தாக இருந்தது. பெருமளவில் கல்விச் செயற்பாடு கள் நடைபெற்றமையும், அரசாங்கம் பாடசாலை களைப் பொறுப்பேற்று நடத்தியமையும் இக் காலப்பகுதியில் கல்வி நிர்வாக வலுப்படுத்த லுக்கும், பரவலாக்கலுக்கும் அடிப்படையாக அமைந்தன எனலாம்.

**1971 – 1980 வரையான காலம்**

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1970 கள் முக்கியமான காலகட்டமாக உள்ளது. இலங்கையின் கல்வி முறைமையில் முக்கியத் துவம் மிக்க “கல்வியில் புதிய பாதை” என்ற கல் விச் சீர்திருத்தம் 1972ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்பாக 1971ஆம் ஆண் டின் இறுதியில் “இலங்கைக் கல்விச் சேவை” ஆரம்பிக்கப்பட்டது. கல்வி நிர்வாகத்துக்கெனத் தனியான ஒரு சேவை ஆரம்பிக்கப்பட்டது. முதற் தடவையாக 14979/8 இலக்க, 12.10.1971 திகதிய வர்த்தமானி அறிவுறுத் தலின் பிரகாரம் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இச்சேவையில் உள்வாங்கப்படுவோர் பொதுத்தரம், விசேட தரம் என்ற இருநிலை யில் அமைந்தனர். நிர்வாக அதிகாரிகள் பொது வான தரத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். விசேட பாடத்துறைகளில் திறமை பெற்றவர்கள் விசேட தரத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இச்சேவையில் ஐந்து வகுப்புக்கள் இடம்பெற்றன.

அவ்வகையில் முதலாம் வகுப்பில் கல்வி வெளியீட்டு ஆணையாளர், பரீட்சை ஆணையா ளர், அமைச்சின் சிரேஷ்ட பணிப்பாளர் முதலான உயர் பதவிகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட் டனர். இரண்டாம் வகுப்பில் பிராந்திய கல்விப் பணிப்பாளர்கள் இடம்பெற்றனர். மூன்றாம் வகுப்பில் பிரதம கல்வி அதிகாரிகளும், நான் காம் வகுப்பில் கல்வி அதிகாரிகளும் ஐந்தாம் வகுப்பில் வட்டாரக் கல்வி அதிகாரிகளும் இடம் பெற்றனர். சேவை மூப்பு அடிப்படையில் இச் சேவையின் பதவியுயர்வு இடம்பெற வழிகோலப் பட்டது.

இக்கல்விச் சேவையில் பாடசாலை அதிபர் களும், ஆசிரியர்களும் உள்வாங்கப்பட்டனர். முன்னர் இவ்வாறான வாய்ப்புக்கள் இருக்க வில்லை. 1971இல் அறிமுகப்படுத்தப்பட்ட இச் சேவையின் பயனாகத் திறமை வாய்ந்த ஆசிரி யர்களும் அதிபர்களும் கல்விச் சேவை அதிகாரி களாக உருவாகும் நிலை ஏற்பட்டது. இந் நிலைமை காரணமாகப் பாடசாலை ஆசிரியர் களும் அதிபர்களும் கல்வியதிகாரிகளானமை மட்டுமல்ல, கல்வியதிகாரிகளும் பாடசாலை அதிபர்களாகும் நிலையும் ஏற்படுத்தப்பட்டது. இன்றுவரை நீடித்துக் காணப்படும் இச் சேவை யானது அனுபவம் வாய்ந்த, கீழ் நிலையிலி ருந்து படிப்படியாக முன்னேற்றம் காண்கின்ற பலரை அதிகாரிகளாக்கியதுடன், வலுவான நிர்வாக நடைமுறைப்படுத்தலுக்குத் துணை புரிந்ததாகவும் உள்ளது.

1972இல் ஏற்பட்ட மற்றொரு மாற்றம் இணைந்த நிர்வாக சேவை மூலம் பொதுத் துறையில் பணியாற்றியவர்களுக்கும் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் வாய்ப்பு அளிக்

கப்பட்டதாகும். நிர்வாகசேவை, கணக்காய்வாளர் சேவை, ஒன்றிணைந்த சேவை ஆகியவற்றிலிருந்து நிர்வாக அதிகாரிகளும், கணக்காளர்களும், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள் முதலியோரும் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றினர். இந்நடவடிக்கையானது கல்விசார் ஊழியர்களது நலன்களைப் பேணுவதற்கும், தடங்கலற்ற விரைவான நிர்வாக நடவடிக்கைகளுக்கும் வழிகோலியதெனலாம்.

1972ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்கள் கல்வியமைப்பிலும், கலைத்திட்டத்திலும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின. கலைத்திட்டச் செயற்பாடுகளை முகாமை செய்வது தொடர்பாக முன்னுள்ள சீர்திருத்தங்கள் கவனிக்காத நிலையில், இச்சீர்திருத்தங்கள் அதில் கவனம் செலுத்தின. அவ்வகையில் கலைத்திட்ட மாற்றங்களைப் பாடசாலை மட்டத்தில் வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கெனப் பாடவிதான அபிவிருத்தி நிலையம் அதிகாரமும் பொறுப்பும் மிக்க நிறுவனமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டது. பாடவிதான அபிவிருத்திக்குப் பொறுப்பாகக் கல்விப் பணிப்பாளரொருவரும் நியமிக்கப்பட்டார்.

இக்காலப்பகுதியிலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆசிரியர் தொழிற்சங்கம், எழுதுவினைஞர் தொழிற்சங்கம் ஆகியன உருவாக்கப்பட்டதன் விளைவாகக் கல்வித் திணைக்களப் பணியாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டதோடு, அவர்களுக்கான நலவுதவிகளும் பெற்றுக் கொடுக்கப்படும் நிலை உருவானது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டதாக விளங்கிய 1972ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தங்கள் கல்வி நிர்வாகம் தொடர்பிலும் பயனுள்ள புதிய மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பது முக்கியமானதாகும். 1971இல் ஏற்பட்ட இளைஞர் வன்முறை கல்வியினை வலுப்படுத்துவதன் இன்றியமையாமையை வெளிப்படுத்தியது. அத்துடன் அப்போது பதவியேற்ற கூட்டு அரசாங்கம் இடது சாரிகளைக் கொண்டிருந்ததுடன் இலங்கையின் சுதேசியத் தன்மைக்கு முக்கியத்துவம் அளித்திருந்தது. எந்தவொரு துறையினதும் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கல்வி அமையுமென்ற அடிப்படையில் 1972 அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களோடு ஒட்டியதாக கல்விச் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன எனலாம்.

1979இல் இலங்கைக் கல்விச் சேவைக்குழு நியமிக்கப்பட்டது. இது கல்விச் சேவை ஊழியர்களது நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள், பதவி நீக்கம் போன்றவற்றுக்கான அதிகாரம் மிக்க ஒரு சபையாக உருவாக்கப்பட்டது. ஓரளவுக்கு கல்வி நிர்வாகச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் நீதியான - நடுநிலையான - அதிகார அமைப்பொன்று உருவாக்கப்பட்டதென்று இச்சேவைக் குழுவைக் கூறலாம்.

**1981 - 1990 வரையான காலம்.**

1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கை வெளியிடப்பட்டது. அதுவரை கல்வியில் காணப்பட்ட நலிவுகளை இவ்வறிக்கை இனங்கண்டு வெளிப்படுத்தியது. பாடசாலை முறைமை, பரீட்சை, ஆசிரியர் சேவை, பாடசாலைகளுக்கிடையிலான இடைவெளி போன்ற அம்சங்கள் தொடர்பில் உள்ள நலிவுகளை இது வெளிப்படுத்தியது. இதனால் 1981 கல்விச் சீர்திருத்தங்கள் கல்வி நிர்வாகத்தைப் புனரமைத்து, வலுவுள்ள நிர்வாகமாக அதை மாற்றுவது குறித்துச் சிந்திக்கப்பட்டது. குறிப்பாகக், கல்வியை ஜனநாயகப்படுத்தியதால் அதிகளவில் மாணவர்கள் கல்வியைப் பெறுகின்ற சூழ்நிலையில், அதிக எண்ணிக்கையான பாடசாலைகளை நிர்வகிக்க வேண்டிய நிலையில் கல்வியைப் பன்முகப்படுத்தி மாவட்ட மட்டத்தில் அதிகார வலுமிக்க கல்வி நிர்வாக அமைப்புக்களைக் கட்டியெழுப்புவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. 1981இல் கொண்டு வரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற அரசியல் அதிகாரப் பகிர்வு முறையின் இணைந்த செயற்பாடாக

வும் இதனைக் கருதலாம். இதன்படி 1981ற்கும் 1985ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கல்வி நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1981ஆம் ஆண்டு 24 பிரதேசக் கல்வித் திணைக்களங்களும், 7 உபபிரதேசக் கல்விக் காரியாலயங்களும் அமைக்கப்பட்டன. மாவட்டங்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் பிரதேசக் கல்வித் திணைக்களங்கள் அமைக்கப்பட்டன. சில மாவட்டங்களுக்கு மேலதிகமாகப் பிரதேசக் கல்விக் காரியாலங்கள் அமைக்கப்பட்டன. இவை பிரதேசக் கல்வித் திணைக்களப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ்ப் பிரதம கல்வி அதிகாரியின் தலைமையில் செயற்பட்டன. நிர்வாகப் பன்முகப்படுத்தலில் இந்த ஏற்பாடுகள் முக்கியமானவையென அப்போது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

1983ஆம் ஆண்டில் இது 25 பிரதேசக் கல்வித் திணைக்களங்களாகவும். 6 உப பிரதேசக் கல்விக் காரியாலயங்களாகவும் உருவாக்கப்பட்டது. பிரதேசக் கல்வித் திணைக்களங்கள் பிரதானமாக ஐந்து வகையான கடமைகளை ஆற்ற வேண்டியிருந்தது.

01. கல்வி அபிவிருத்தி
02. பொது நிர்வாகம்
03. நிதி
04. கல்வி நிர்வாகம்
05. பாடசாலைக் கட்டிட வேலை

பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்திப் பணியினைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்ததுடன் பிரதம கல்வியதிகாரிப் பணிமனையையும் மேற்பார்வை செய்தார். பிராந்தியக் கணக்காளர், பொறியிலாளர், பொது நிர்வாக அதிகாரி ஆகியோரும் உப பிரதேசக் கல்வி அலவலகங்களின் செயற்பாடுகளில் தொடர்பையும் மேற்பார்வையையும் மேற்கொண்டனர்.

பிரதம கல்வி அதிகாரிகள் பின்வரும் விடயங்களில் தமது பொறுப்பைக் கொண்டிருந்தனர். அவையாவன :

01. பொது நிர்வாகம்
02. நிதி
03. பாடசாலைக் கட்டிட வேலைகள்

வட்டாரக் கல்வி அதிகாரிகளும் பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையிலேயே இயங்கினர்.

உண்மையில் மத்தியிலிருந்து பிரதேசத்துக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டபோதும் அவை மாவட்ட மட்டத்தில் பிரதேசக் கல்விப் பணிப்பாளரிடம் குவிந்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. பிரதம கல்வி அதிகாரிகள் அதிகளவில் அதிகாரமற்றவர்களாகக் காணப்பட்டமையும் குறைபாடாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் 1984ஆம் ஆண்டு கல்வியமைச்சினால் கல்வி முகாமைத்துவ அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையில் கல்விப் பணிப்பாளர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் கவனம் செலுத்திய அளவுக்கு கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இதனால் கல்வி நிர்வாகத்தை மேலும் கீழ் நோக்கிப் பரவலாக்க வேண்டும் என்று விதந்துரைக்கப்பட்டது. உப பிராந்தியங்களை நிறுவி நிர்வாக அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பில் முகாமைத்துவ அறிக்கை பல சிபார்சுகளை முன்வைத்தது.

01. உப பிராந்திய மட்டங்களை உருவாக்குதல்
02. பாடசாலைகளை வலயங்களாக்கி, அவற்றிற்குள் கொத்தணி முறையினை அமுலாக்கல்
03. மாவட்ட மட்டத்தில் முகாமைத்துவ நிலையங்களை ஏற்படுத்தல்
04. பிராந்திய அலுவலகங்களை மறுசீரமைத்தல்
05. நடைமுறையிலிருந்த வட்டாரக் கல்வி அதிகாரிப் பணியினை நிறுத்துதல்.

இச்சிபார்சுகளின் அடிப்படையில் புதிதாகக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுக்குள்ள பொறுப்பாகக் கோட்டக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். கோட்

டக் கல்வி அலுவலகங்களின் பொறுப்பில் பொது வாக 100 முதல் 150 வரையான பாடசாலைகள் இயங்கின. மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் இக்கோட்ட அலுவலகங் கள் இயங்கின. இதன்கீழ் 4 பிரிவுகள் செயற் பட்டன.

01. கல்வி அபிவிருத்திப் பிரிவு.
02. கல்வி நிர்வாகப் பிரிவு.
03. பொது நிர்வாகப் பிரிவு.
04. நிதிப் பிரிவு.

கோட்டக் கல்வி அதிகாரியின் நேரடிப் பொறுப் பில் கல்வி அபிவிருத்திப் பிரிவு இயங்கியது. திட்டமிடல் அதிகாரியொருவரின் பொறுப்பில் திட்டமிடலும் மதிப்பீடும் என்ற பிரிவும், கல்வி அதி காரி ஒருவரின் பொறுப்பில் கல்வி முகாமைத் துவப் பிரிவுமாக இக்கல்வி அபிவிருத்திப் பிரிவு இயங்கியது.

பாடசாலை நிர்வாக விடயங்களைக் கவ னிப்பதற்காக கல்வி நிர்வாகப் பிரிவு கல்வியதி காரி ஒருவரின் பொறுப்பில் இயங்கியது. பொது நிர்வாகப் பிரிவு தாபனக்கிளை, நிர்வாகக்கிளை என்ற இரு பிரிவுகளில் காரியாலய உதவியாள ரின் பொறுப்பில் இயங்கியது. நிதிப்பிரிவு நிதி உத வியாளரின் பொறுப்பில் நிதி விடயங்களைக் கையாளும் வகையில் இயங்கியது. இவை எல் லாவற்றுக்கும் பொறுப்பாளராக, இணைப்பாள ராகக் கோட்டக் கல்வி அதிகாரி விளங்கினார்.

இச்சிபார்சின் அடுத்த அம்சம் வலய அமைப் பாகும். பாடசாலைகளைக் கல்வி வலயங்களா கப் பிரிப்பது கல்வித் திட்டமிடலுக்கும், அபிவிருத் திக்கும் வழிசமைக்கும் என வலியுறுத்தப்பட்டது. கிராம சேவகர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு சில கிராம சேவகர் பிரிவுகளை உள் ளடக்கி இவ்வலயங்கள் அமைக்கப்பட்டன. சரா சரியாக ஒரு வலயம் 15 பாடசாலைகளை உள்ளடக்கும் விதத்தில் இது அமைக்கப்பட்டது.

காலப்போக்கில் இவ்வலயங்கள் கொத் தணிகளாக மாற்றப்பட்டன. போகொட பிரேம ரத்தின குழுவினரின் சிபார்சுக்கமைய அதிகவுடிய வினைத்திறனுடைய மிகச் சிறிய நிர்வாக அல காகக் கொத்தணி முறை அமையும் என எதிர் பார்க்கப்பட்டது. 10 முதல் 15 வரையான பாட சாலைகளை உள்ளடக்கி அமைக்கப்பட்ட கொத்தணியின் தலைவராக மூலதாரப் பாட சாலை அதிபர் விளங்கினார். 1987இல் இத் தகைய 477 கொத்தணிகள் உருவாக்கப்பட்டி ருந்தன. பௌதிக வளப் பகிர்வும், ஒன்றி ணைந்த செயற்பாடும் இவ்வமைப்பின் மூலம் சாத்தியமாகும் என எதிர்பார்க்கப்பட்டது. எனி னும் நேர்மையற்ற தலைமைகள், பாரபட்சங்கள் காரணமாக இம்முறை செயலிழந்து போனது.

இக்காலத்தில் எல்லாவற்றுக்கும் பொறுப் பாக மாவட்ட கல்வித் திணைக்களம் விளங்கியது. இதன்கீழ் பின்வரும் பிரிவுகள் செயற்பட்டன.

01. திட்டமிடற் பிரிவு
02. மேற்பார்வைப் பிரிவு
03. சேவைப் பிரிவு

திட்டமிடல் பிரிவு தகவல் தொகுதிச் சேவை, திட்டமிடலும் கட்டுப்பாடும் ஆகிய இரு பிரிவு களாக இயங்கியது. மேற்பார்வைக் கிளை கல்விப் பணிப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் மதிப்பீட்டுக் கிளையையும், பிரதம கல்வி அதிகாரியின் பொறுப்பில் செயற்பாட்டு முகா மைத்துவக் கிளையையும் கொண்டிருந்தது. சேவைகள் பிரிவு பொது நிர்வாகம், நிதி பாட சாலைக் கட்டிட வேலைப் பிரிவுகளை உள்ளடக்கி யிருந்தது. அத்துடன் மாவட்ட மட்டத்தில் இணைப் புக்குழு, இடமாற்ற ஆலோசனைக் குழு, செயற் பாட்டு மதிப்பீட்டுக்குழு என்பனவும் உருவாக்கப் பட்டுச் செயற்படுத்தப்பட்டன.

அதேவேளை வட்டாரக் கல்வி அதிகாரி பதவி ஒழிக்கப்பட்டு அவர்கள் கோட்டங்களுக் குள் உள்வாங்கப்பட்டனர். அவர்களது பொறுப் புக்கள் பலவும் கொத்தணி அதிபர்களுக்கு வழங்கப்பட்டன.

1984ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகம் முகாமைத்துவ பயிற்சிக் கல்லூரியை நிறுவியது. அதனைத் தொடர்ந்து மாவட்ட மட்டத்தில் முகா

மைத்துவ நிலையங்களும் அமைக்கப்பட்டன.

1985 ஆரம்பம் முதல் கல்விச் சேவை கல்வி, நிர்வாக சேவை என்ற பெயரில் மூன்று வகுப்புக்களாக மாற்றியமைக்கப்பட்டது. இதே போல மூன்று வகுப்புக்கள் கொண்ட அதிபர் சேவையும் உருவாக்கப்பட்டது. இதன் தொடர்ச் சியாக ஐந்து வகுப்புக்கள் கொண்ட ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 13 ஆவது சட்டத்திருத்தமானது மாகாணங்க ளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வகை செய்தது. அதன் பிரகாரம் கல்வி நிர்வாக நட வடிக்கைகள் மாகாண மட்டத்தில் வலுப்பெற் றன. அவ்வகையில் மாகாணக் கல்வியமைச் சின் நிர்வாகக் கடமைகளாகப் பின்வருவன அமைந்தன.

01. திட்டமிடல்.
02. நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல், மதிப்பீடு செய்தல், இயைபுபடுத்தல்.
03. மேற்பார்வை செய்தலும் தீர்மானம் எடுத்தலும்.
04. மனிதவளத்தை முகாமை செய்தல்.
05. நிதிக் கையாள்கையும், கணக்காய்வும்.
06. பொறியில் துறைச் சேவைகள் வழங்குதல்.

மாகாணக் கல்வியமைச்சரின் பொறுப்பில் மாகாணக் கல்விச் சபை கல்வி நிர்வாக நட வடிக்கைகளை மேற்கொள்ளும் உயர் சபையாக விளங்கியது. அமைச்சின் கீழ் மாகாணக் கல்வித் திணைக்களம் அமைக்கப்பட்டது.

அதற்கு அடுத்த நிலையில் மாவட்டக் கல்வித் திணைக்களங்களும், கோட்டக்கல்வித் திணைக்களங்களும் விளங்கின.

**1990 முதல் இன்று வரை**

1990களின் ஆரம்பத்தில் கொத்தணி முறை வலுவிழந்து போகக் கொத்தணி அமைப்பு நிறுத்தப்பட்டது. அத்துடன் கோட்டக் கல்வி அலு வலகங்களும் அதிகார பலம் குன்றியவையாக ஆக்கப்பட்டன. புதிதாக வலயங்கள் உருவாகின. அவ்வகையில் மாவட்டக் கல்வித் திணைக் களம் இல்லாது போயிற்று. அந்த இடத்தை வலயங்கள் நிரப்பின. வலயக் கல்வித் திணைக் களத்திற்கு அதிகாரங்கள் பல வழங்கப்பட்டன. வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் மாவட்டக் கல்வித் திணைக்களத்தின் பல அதி காரங்களையும் பெற்று அவை இயங்கின. அவ்வகையில் பிரதேசப் பரம்பலுக்கேற்ப மாவட் டத்தில் வலயக் கல்வி அலுவலகங்கள் அமைந் தன. நான்கு வரையான பிரதேச செயலர் பிரிவு களை உள்ளடக்கி வலயங்கள் அமைந்தன. இவ்வகையில் நாட்டில் 92 வலயங்கள் உருவாக் கப்பட்டன. வலயங்களின் கீழ் ஒவ்வொரு பிர தேசச் செயலர் பிரிவிலும் கோட்டக் கல்வி அலு வலகங்கள் அமைக்கப்பட்டன. கோட்டக் கல்வி அதிகாரிகள் இவற்றுக்குப் பொறுப்பாக நியமிக் கப்பட்டனர். நாடு முழுவதும் 302 கோட்டங்கள் இவ்வாறு உருவாக்கப்பட்டன.

அதேவேளை பாடசாலை மட்ட அபிவிருத்தி யிலும் கவனம் செலுத்தப்பட்டது. பாடசாலை அபி விருத்திச் சங்கங்கள் 1992 முதல் செயற்படுத் தப்பட்டன. பாடசாலை மட்டத்தில் கல்வி அபி விருத்தி, கல்வி நிர்வாகம் என்பவற்றை வலு வுள்ளதாக்குவது தொடர்பில் 1990களின் பின் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

1997 புதிய கல்விச் சீர்திருத்தங்களில் கல்வித் தரமேம்பாடு முக்கியத்துவப்படுத்தப் பட்டுள்ளது. அது பாடசாலை அமைப்பை இரண்டாக வகுக்க விழைந்தது.

01. சிரேஷ்ட பாடசாலை.
02. கனிஷ்ட பாடசாலை.

அத்துடன் தேர்ச்சி அடிப்படையிலான கற்றற் செயற்பாடுகள் செயற்பாட்டுக் கற்றல், ஆக்கத்திறன் வெளிப்பாடு முதலியவற்றையும் இது வலியுறுத்தியுள்ளது.

பாடசாலை முகாமைத்துவம் தொர்பான அதிகாரங்களைப் பாடசாலைகளுக்கு வழங்கு வது பற்றிப் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வலி யுறுத்துவதுடன் தேசிய கல்வி நிறுவகத்தின் வழிகாட்டலில் பாடசாலை முகாமைத்துவக்

குழுக்களுக்குப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள் ளன. பாடசாலை இயக்குநர் சபைக்கூடாகப் பாடசாலைகளை இயக்குவது சம்பந்தமாகவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சமூகத்தோடு இணைந்த நிகழ்ச்சித் திட்டங்களைப் பாடசாலை கள் மேற்கொள்வதற்கும் வலியுறுத்தப்பட் டுள்ளது.

2007 கலைத்திட்டச் சீராக்கத்தின் பிரகாரம் பாடசாலை மட்ட முகாமைத்துவம் மேலும் வலுப் படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பெருமளவு அதிகாரங்களையுடைய சக்தி வாய்ந்த அமைப் பாகப் பாடசாலைகள் விளங்கத்தக்கதாகப் பாட சாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் விஸ் தரிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

**முடிவுரை**

இலங்கையின் கல்வி நிர்வாகமானது காலத்துக்குக் காலம் மாற்றமுற்ற போதும் சுதந் திரத்தின் பின் அதிக ஜனநாயகத் தன்மையும், பன்முகப்படுத்தப்பட்ட அதிகார முறைமையும் கொண்டதாக இது வளர்ந்துள்ளது. அத்துடன் கல்வி அபிவிருத்தி, கல்வித்தர மேம்பாடு தொடர் பில் கல்வி நிர்வாகம் அதிகம் கவனம் செலுத்தி யும் உள்ளது. கல்விச் செலவுக்கேற்ப வினைத் திறன் மிக்க கல்வித்தரத்தை உருவாக்கும் நோக்கில் கல்வி நிர்வாகமானது இன்று மேலும் பரந்து விரிவடைந்து தாக்கமான துறையாகப் பரிணமித்துள்ளது என்பதே உண்மையாகும்.

**உசாத்துணைகள்**


1. Jeyasuriya, J.E., (1969) Education in Ceylon before and after independence. Associated Educational Publishers, Colombo.
2. Jeyasuriya, D.C., (1993) Education and the quality of life. Asian Pathfinder Publishers, Sri Lankan.
3. சந்திரசேகரன், சோ., கருணாநிதி, மா., (1992) இலங்கையின் கல்வி வளர்ச்சி சூடாமணி பிரசுரம், சென்னை.
4. தணிகாசலம்பிள்ளை, ச. நா., (1999) கல்வி நிர்வாகம். தணிகைப் பதிப்பகம். யாழ்ப்பாணம்.
5. குணசேகர, விஜயசேகர பி., (1996) பாட சாலை முகாமைத்துவம். தை, தனராஜ் (ed), தேசிய கல்வி நிறுவகம், மகரகம.
6. குருகே, லயனல்., (2004) இலங்கை யின் தேசிய இனத்துவப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும். மாற்றுக்கொள்கை களுக்கான நிலையம், கொழும்பு.
7. கல்வியில் புதிய பாதை - 1972 கலைத் திட்ட சீராக்கம்.
8. கல்வி வெள்ளையறிக்கை - 1981.
9. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் - 1997.


♦ ♦ ♦

*எதற்கெடுத்தாலும் அதிருப்தியுடனும் அவநம்பிக்கையுடனும் பேசுபவனிடம் எந்த அறிவுரையும் எடுபடாது. அவனை வழிக்குக் கொண்டுவர முயலாதீர்கள்; அப்படியே விட்டு விடுங்கள்; உங்கள் வேலைகளில் தலையிட அனுமதிக்காதீர்கள்.*

*- பீட்டர் பெய்டா*

---

*யாரைப் பார்த்தாலும் வீணாகப் பேசிக்கொண்டே இருக்காதீர்கள்! பலர் முன்னேற்ற மடையாததற்கு மிக முக்கியமான காரணம் பேசிப் பேசியே காலத்தை வீணாக்குவதுதான். பேச்சைக் குறையுங்கள். ஆழ்ந்து சிந்திக்க அதிக நேரம் ஒதுக்குங்கள். பிறகு ஆற்றலுடன் செயலாற்றவேண்டிய சூழ்நிலை தானாக வந்துசேரும்.*

*- ராபர்ட் ஆக்டன்*



# அடிப்படைத் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக் (ICT) கற்கை நெறியின் அவசியம்

**Mrs. T. Ananthakrishnan**
Accountant,
Zonal Education Office,
Valikamam.

இன்று தொழில்நுட்பமானது பொதுவாழ்க்கையின் ஓர் பெரிய அங்கமாகிவிட்டது. கணனி, கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் அஞ்சல் (e-mail), இணையம் (Internet) இன்றி எவ்வாறு எமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டோம்! என்று எம்மில் பலர் நினைத்து ஆச்சரியப்படவேண்டியுள்ளது. நாட்களாக அல்லது மணிக்கணக்காக செய்யப்பட்ட வேலைகளை இப்போது நிமிடங்களில் அல்லது செக்கன்களில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

கற்பனை பண்ணிப் பாருங்கள் கணனி, தொலைபேசி இல்லாத நிலையில், நீங்கள் உங்கள் நண்பரை உங்கள் வீட்டில் நடைபெற வேண்டிய விசேட நிகழ்விற்கு அழைக்கவேண்டி உள்ளது. கடிதம் ஒன்றை எழுதுதல் வேண்டும், அஞ்சல் செய்யவேண்டும், அது உரிய இடத்தைச் சென்றவடைவதற்குக் காத்திருக்க வேண்டும். பின்பு பதிலுக்குக் காத்திருக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் தொலைபேசிகளைப் பற்றிப் பேசிக்கொள்கின்றோம். கையடக்கத் தொலைபேசிகள் இல்லாத நிலைமையை எண்ணிப் பாருங்கள். உங்கள் நண்பர் வெளியில் சென்றிருந்தால் அவர் திரும்பும்வரை காத்திருக்கவேண்டும். அத்தோடு அவர் திரும்பும் சந்தர்ப்பத்தில் நீங்களும் வெளியே செல்லாது வீட்டிலிருக்க வேண்டும். அப்போதே உங்கள் தொடர்பு சாத்தியமாகும். இப்போது நாம் ஓர் இலத்திரனியல் அஞ்சலையோ அல்லது ஓர் குறுந்தகவலையோ (message) சில நிமிடங்களுக்குள் உலகின் எப்பாகத்திற்கும் அனுப்பக்கூடியதாக உள்ளது.

உலகின் பல பாகங்களில் நடைபெறும் நிகழ்வுகளை அவை எங்கே? என்ன நேரத்தில் நடைபெறுகின்றன? என்பதை விடுத்து, அவற்றை உடனுக்குடன் கண்டு, கேட்டு அறியக்கூடியதாக உள்ளது. ஆகவே இவ்வுயர் தொழில்நுட்பங்களை உருவாக்கித் தந்த அறிவுசார் பெருமக்களை நன்றியுடன் நினைவு கூருவோம்.

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது (ICT) எமது வாழ்க்கைக்குத் தேவையான பல சாதகமான நேர் விளைவுகளைக் கொண்டுள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக உள்ளது. இத்தொழில்நுட்பத்தை எவ்வாறு கற்றுக்கொள்வது, அல்லது இத்தொழில்நுட்பம் எமது திறனுக்கு அப்பாற்பட்டதா? என்ற அச்சம் எமக்கு ஏற்படுவதில் நியாயமில்லை. ஏனெனில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் உள்ள விடயம் என்னவென்றால், அதன் அடிப்படை அம்சங்களை ஒருவர் தெளிவாகக் கற்றுக்கொண்டு பயிற்சி பெற்றார் என்றால் மிகுதி அம்சங்களை விளங்கிக்கொள்வதோ அல்லது கையாள்வதோ இலகுவாகிவிடும்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் எவ்வாறு எமக்கு உதவப் போகின்றது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை நாம் கைக்கொண்டுவந்த பாரம்பரிய முறைகளிலிருந்து மாறியுள்ளது. அதாவது இலகுவாக்கியுள்ளது. மாணவர்களும், ஆசிரியர்களும் தங்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துச் சிறந்த முகாமைத்துவத்துடன் செயற்படுவதற்கு இத்தொழில்நுட்பம் உதவுகின்றது. கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளின்போது பல சந்தர்ப்பங்களில் ஏற்படும் நெருக்குதலுக்கு நாங்கள் நேரத்தை மீதப்படுத்துவதுடன், வாழ்க்கையை

இலகுவாக்கும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப வினைத்திறன்களை உபயோகிப்பதன் மூலம் நீண்டகாலத்திற்கு எம்மை இச்செயற்பாடு களில் நிலைநிறுத்திக் கொள்ளலாம். நீங்கள் கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேசம யம், உங்கள் பெறுமதிமிக்க நேரத்தையும், முயற்சிகளையும் சேமித்துக்கொள்வதற்கு இத்தொழில்நுட்பம் ஓர் வரப்பிரசாதமாகும்.

கல்வித்துறையில் உங்களுக்கு உதவக் கூடிய சில தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தின் அடிப்படைகளாவன :

1. உங்கள் கட்டுரைகளை word processor ஐப் பாவித்து எழுதுதல் (eg : Ms word)
2. பரவுதாள்களைப் (spread sheet) பாவித்துத் தரவுகளைத் தொகுத்து ஆய்வு செய்தலும், அவற்றின் முடிவுகளை வரைபு ரீதியாக வெளிப்படுத்தலும் (eg : Ms Excel)
3. அறிக்கைகள், கோவைக் கொத்துக்கள், கையேடுகள், சிற்றிதழ்கள் போன்றவற றைத் தயாரித்தல். (Desktop publishing)
4. Presentation slides ஐத் தயாரித்து அவற்றின் துணையுடன் விரிவுரைகளை நடாத்துதல்.
(eg : Ms Power point)
5. இணையத்தின் (internet) மூலம் தேடுதல் களை மேற்கொள்ளுதல்.
6. கல்வித்துறை சார்ந்த மற்றவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல் (e-mail).

எமது நாட்டில் இந்த அடிப்படைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை மாணவர் களிடையே மேம்படுத்துவதற்காக பாடசாலை களில் சாதாரணதர வகுப்புக்களிலும் (Gr10, Gr11) உயர்தர வகுப்புக்களிலும் தகவல் தொழில் நுட்பக் கற்கை நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. இந்தப் பாடப் பரப்புக்கள் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான சகல அடிப்படைகளையும் கொண்டமைந்துள்ளது. ஒரு மாணவன் இப்பாடங்களை உரிய முறையில் போதிய செய்முறைகளுடன் பயிலும்போது இவ்வடிப்படைகளை முழுமையாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மேலும் இப்போது இலத்திரனியல் கற்கை முறை (e-learning) மிகவும் பிரபல்யமாகி வருகின்றது. இந்த முறையில் ஆசிரியரும், மாணவரும் ஒரே இடத்திலோ அல்லது ஒரே நேரத்திலோ இருக்கவேண்டியதில்லை. அதா வது உலகின் வேறோர் இடத்தில் நடாத்தப்படும் கற்கைநெறியை நாம் எமது வீட்டிலிருந்தே பயிலலாம். இந்தக் கற்கை முறை பெரும்பாலும் இணையத் தளங்களின் மூலமே மேற்கொள்ளப் படுகின்றது. இணையத் தளங்கள் (web sides) ஊடாக மாணவர்கள் கற்கை முகாமைத்துவத் தொகுதி (Learning Management system - LMS) எனும் மென்பொருளை அணுகி அதனூடாகத் தமது கற்றல் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். அதாவது, கற்கைநெறி பற்றிய தகவல்களைப் பெறுதல், பதிவுகளை மேற் கொள்ளுதல், கற்பதற்குத் தேவையான மூல வளங்களாகிய விரிவுரைக் குறிப்புக்கள், கடந்த கால வினாத்தாள்கள், பயன்தரத்தக்க இணையத் தளங்கள், இலத்திரனியல் புத்தகங்கள் (e-book) மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை எழுத்து, படம், ஒலி, ஒளி போன்ற வெவ்வேறு வடிவங்களில் பெறுதல், மாணவர்கள், ஆசிரி யர்களிடையேயான தொடர்பாடல், குழுவாகச் செயற்பட்டு வேலை செய்தல், ஒப்படைகள், தொடர் பதிலீடுகள் போன்றவற்றைச் சமர்ப்பித் தல், பரீட்சைக்குத் தோற்றுதல், மற்றும் மறு மொழிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற வற்றை மேற்கொள்ளலாம்.

### வேலைத் தளங்களில் தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பம் எமக்கு எவ்வாறு உதவப் போகின்றது.

நீங்கள் ஓர் அலுவலகத்தைச் சுற்றிப் பார்ப் பீர்களாயின் தற்போது அங்கே அதிகமாகக் காணக்கூடிய ஓர் பொருளாக கணனி திகழ் கின்றது. இக்கணனியூடு இந்தத் தகவல் தொழில்நுட்பத்தைக் கையாள்வதன் மூலமே அங்கு ஏறத்தாழ அனைத்துக் கருமங்களும் ஆற்றப்படுகின்றன. நேரத்தையும், பணத்தை யும் சேமிக்கக்கூடிய மிகவும் பயன்தரத்தக்க வழிகளையே நிறுவனங்கள் நாடுகின்றன. மேலும் அவர்களது பிரார்த்தனைகள் யாவும்

இந்த அதிசயிக்கத்தக்க தொழில்நுட்பத்தால் நிறைவேற்றப்படுகின்றன. ஆகவே நிச்சயமாக உங்கள் தொழில் தருநர்கள் உங்களிடம் இந்தத் தொழில்நுட்பத்தைக் கையாள்வதற்குரிய திறமையை எதிர்பார்ப்பார்கள்.

வேலைத் தளங்களில் உங்களிடம் எதிர் பார்க்கப்படும், நீங்கள் அறிந்திருக்கவேண்டிய சில தொழில்நுட்பங்கள்:

1. இலத்திரனியல் அஞ்சலைக் (e-mail) கையாளுதல்.
2. work processing பொதிகளைப் பாவித்துக் கடிதங்களை எழுதுதல் மற்றும், அவற்றை இலத்திரனியல் அஞ்சல் ஊடாக அஞ்சல் செய்தல்.
3. word processing பொதிகளைப் (Ms word) பாவித்து அறிக்கைகளை எழுதுதலும் அவற்றை முன்வைத்தலும்.
4. கணனியூடாக Presentation ஐத் தயாரித்து வழங்குதல் (Ms Powerpoint)
5. பரவுதாள்களைப் (eg. Ms Excel) பாவித்துத் தகவல்களை ஒன்று சேர்த்து, தொகுத்து முன்வைத்தல் மற்றும் அவற்றை வரைபுகள் மூலம் வெளிப்படுத்தல்.
6. இலத்திரனியல் ஆவணங்களையும் (Documents), கோப்புக்களையும் (Files) முகாமை செய்தல்.
7. தகவல்களைப் பெறுவதற்கு இணையத் தளத்தைக் கையாளுதல் (Internet)

ஆகவே நீங்கள் கணனிசார்ந்த தொழிற் துறைகளில் இல்லாதவர்களாயினும் உங்களிடம் தகவல் தொழில்நுட்ப அறிவு இருப்பது இன்றிய மையாததாகும். உங்களுக்குத் தகவல் தொழில் நுட்பம் சம்பந்தமான மேற்கூறப்பட்ட விடயங்கள் தெரிந்திருக்குமாயின் வேலையொன்றில் நீங்கள் அமர்த்தப்படும்போது, வினைத்திறனு டன் வேலை செய்யும் உங்கள் ஆற்றலை நிரூபிக்கக்கூடியதாக இருக்கும்.

* * *

## கலைகள் அறுபத்து நான்கு

1. அக்கர இலக்கணம்
2. இலகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதி சாஸ்திரம்
8. சோதிட சாஸ்திரம்
9. தரும சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுன சாஸ்திரம்
13. சிற்ப சாஸ்திரம்
14. வைத்திய சாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சுத்தத பிரமம்
23. வீணை
24. வேணு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அத்திர பரிட்சை
28. கனக பரிட்சை
29. இரதப் பரிட்சை
30. கஜ பரிட்சை
31. அசுவ பரிட்சை
32. இரத்தின பரிட்சை
33. பூ பரிட்சை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்ல யுத்தம்
36. அக்ருஷணம்
37. உச்சாடனம்
38. வித்துவேஷணம்
39. மதன சாஸ்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரச வாதம்
43. காந்தர்வ வாதம்
44. பைபீல வாதம்
45. கௌதுக வாதம்
46. தாது வாதம்
47. காருடம்
48. நட்டம்
49. முட்டி
50 ஆகாயப் பிரவேசம்
51. ஆகாய கமனம்
52. பரகாயப் பிரவேசம்
53. அதிர்ச்யம்
54. இந்திர ஜாலம்
55. மகேந்திர ஜாலம்
56. அக்னித் தம்பம்
57. ஜல ஸ்தம்பம்
58. வாயுத் தம்பம்
59. சுக்கிலத் தம்பம்
60. கன்னத் தம்பம்
61. கட்கத் தம்பம்
62. அவத்தைப் பிரயோகம்
63. திட்டித் தம்பம்
64. வாக்குத் தம்பம்

# மருத்துவம்

- சிறுநீரிழிவு
- ஆரோக்கிய வாழ்க்கையும் சித்த மருத்துவ முறையும்
- அகுபங்சர்



# சிறுநீரிழிவு (Diabetes)

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்**
சிரேஷ்ட பேராசிரியர்,
உயிரிரசாயனவியல் துறை,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 1. முன்னுரை

சிறுநீரிழிவு இன்று எமது சமுதாயத்தில் மிகவும் அதிகளவில் காணப்படும் ஒரு நோயாகும். இதில் பல வகைகள் உண்டு என்பது பலரும் அறியாததொன்று. இந்நோய் ஏற்பட்டவர்கள் எத்தகைய உணவுகளை உட்கொள்ள வேண்டும், பழக்கவழக்கங்களைத் தினமும் மேற்கொள்ள வேண்டும் என்பது பல மருத்துவர்களால் எடுத்தியம்பப்பட்டாலும் சில அடிப்படை அறிவுகள் எம்மில் பலருக்கு இல்லை. எனவே இக்கட்டுரை சில அடிப்படை அறிவுகளைப் பலருக்குப் பயன்படுத்துவதற்கு உதவும் என்ற நம்பிக்கையுடன் எழுதப்படுகின்றது.

குருதியில் குளுக்கோசின் செறிவு அதிகரித்துக் காணப்படுவதால் வெல்லம் கொண்ட அதிக அளவான சிறுநீரினை இழப்பர். எனவே தான் இந்நோய் சிறுநீரிழிவு என அழைக்கப்படுகின்றது. குருதியில் குளுக்கோசின் செறிவு தொடர்ந்து அதிகரித்துக் காணப்பட்டால் பல வகையான சிக்கல்களை (Complications) உருவாக்கும். இது அனைத்து வயதினருக்கும் ஏற்படக்கூடிய நோய். சில சிறுநீரிழிவு நோயாளிகளில் இந்நோய்க்குரிய அறிகுறிகள் காணப்பட மாட்டா. எனினும் ஆய்வுகூடச் சோதனைகளின் மூலம் அவர்களுக்குச் சிறுநீரிழிவு உள்ளது என்பதனைக் கண்டறியலாம்.

## 2. இன்சுலின்

சிறுநீரிழிவு நோய்க்குரிய காரணம் ஒருவரின் உடலில் உருவாக்கப்படும் இன்சுலின் எனும் ஓமோனின் அளவு போதாமையேயாகும். இன்சுலின் எனும் ஓமோன் உடலின் சதையி எனும் சுரப்பியினால் உருவாக்கப்படுகின்றது. இன்சுலின் உடலில் நடைபெறும் பலவித அனுசேபத்தாக்கங்களை ஒழுங்கமைக்க உதவுகின்றது. இன்சுலின் பின்வரும் வகையில் தொழிற்படுகின்றது.

- ❖ சமிபாட்டின் மூலம் உணவிலுள்ள காபோவைதரேற்று சிறிய வெல்லங்களாகவும் (குளுக்கோசு உட்பட) புரதங்கள் அமினோ அமிலங்களாகவும், கொழுப்பு கொழுப்பமிலங்களாகவும் மாற்றப்படுகின்றன.
- ❖ உணவுண்டு சமிபாடடைந்தவுடன் குளுக்கோசும் அமினோ அமிலங்களும் அகத்துறுஞ்சப்பட்டுக் குருதிக்குள் விடப்படும். இதனால் குருதியிலுள்ள குளுக்கோசின் செறிவு திடீரென அதிகரிக்கும்.
- ❖ குருதியில் குளுக்கோசின் செறிவு அதிகரித்தவுடன் சதையச்சுரப்பியிலுள்ள கலங்களுக்குச் சமிக்ஞை அனுப்பப்பட்டு இன்சுலின் சுரப்பு ஏற்படுத்தப்படும். இந்த இன்சுலின் குருதியினை அடையும். உணவுண்டு 10 நிமிடங்களுக்குள் குருதியில் இன்சுலினின் மட்டம் அதி உயர் நிலையை அடையும்.
- ❖ இன்சுலின் குருதியில் அதிகரித்துக் காணப்படும் குளுக்கோசு, அமினோ அமிலங்கள் என்பவற்றை உடற்கலங்களுக்குள், முக்கியமாக தசை மற்றும் கொழுப்புக் கலங்களுக்குள் செல்ல உதவும். கலங்களுக்குட் சென்ற குளுக்கோசு மற்றும் அமினோ அமிலங்களைச் சேமிப்பாக மாற்றுவதோ அல்லது சக்தித் தேவைக்குப் பயன்படுத்துவதோ காணப்படும் இன்சுலினினதும் ஏனைய ஓமோன்களினதும் செறிவுகளில் தங்கியுள்ளது.
- ❖ இன்சுலின் செறிவு அதிகமாகக் காணப்படும்போது ஈரலில் குளுக்கோசு உருவாவதைத் தடுத்துத் தேவை ஏற்படும்போது பாவிக்கப்படக் கூடியதாகக் குளுக்கோ

சினைச் சேமித்து வைக்க உதவும்.

- குருதியில் குளுக்கோசின் அளவு குறையத்தொடங்கினால் சதையி இன்சுலின் உருவாக்கத்தைக் குறைக்கும்.
- உணவுட்கொண்டு கிட்டத்தட்ட 2 மணித்தியாலத்தின் பின்னர் குளுக்கோசினதும் இன்சுலினினதும் மட்டம் குறையும்.

**3. சிறுநீரிழிவின் வகைகள்**

சிறுநீரிழிவு நோயினை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

**3.1 வகை 1 சிறுநீரிழிவு (Type 1 diabetes)**

இது பொதுவாகக் குழந்தைகளில் காணப்படும். இவர்களில் இன்சுலின் மிகக்குறைவாக உற்பத்தியாகும் அல்லது உருவாவதில்லை. எனவே இவர்கள் தமது வாழ்க்கையில் தொடர்ந்து தினமும் இன்சுலினை ஊசி அல்லது பம்பி மூலம் உடலுக்குள் செலுத்தவேண்டும்.

**3.2 வகை 2 சிறுநீரிழிவு (Type 2 diabetes)**

இது வகை 1 இனை விட அதிகம் காணப்படும். இது பொதுவாக வளர்ந்தவர்களில் ஏற்படும். இவர்களில் உருவாக்கப்படும் இன்சுலின் அளவு குருதிமட்டத்தை சாதாரணமாகப் பேணுவதற்குப் போதுமானதாக அமையாது. மேலும் சிலரில் இன்சுலின் சுரப்பின் அளவு ஓரளவு இருப்பினும் அவர்களின் தசை மற்றும் கொழுப்புக் கலங்கள் இன்சுலின் ஓமோனின் தூண்டலுக்கேற்ப செயற்படமாட்டாது. அனேகமான இவ்வகை நோயாளிகள் தாம் பாதிப்படைந்துள்ளோம் என்பதனையும் அதனால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளையும் அறிந்திருக்கமாட்டார்கள். இந்தவகை சிறுநீரிழிவு அதிகரித்துக் காணப்படுதவற்குக் காரணம் மக்களின் வாழ்நாட்காலம் அதிகரிப்பதாலும், உடற்பயிற்சி அற்றவாழ்க்கை முறையை மேற்கொள்வதும், உடல்நிறை அதிகரிப்பதுமாகும்.

**3.3 கர்ப்பத்தின்போது ஏற்படும் சிறுநீரிழிவு (Gestational diabetes)**

சாதாரணமாகச் சிறுநீரிழிவு நோய் இல்லாத ஒரு பெண்ணுக்குக் கர்ப்ப காலத்தின் போது இந்நோய் ஏற்படும்.

பொதுவான சிறுநீரிழிவு நோயாளிகளில் 10%மானோர் வகை 1 இனாலும் 90%மானோர் வகை 2இனாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**4. சிறுநீரிழிவினை ஏற்படுத்தவல்ல காரணிகள்**

பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறுநீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைவிட மிக அதிகமானோர் சிறுநீரிழிவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுடையவர்களாகக் (Prediabetic) காணப்படுகின்றனர். பின்வரும் காரணிகள் ஒருவரில் சிறுநீரிழிவினை ஏற்படுத்தவல்லன.

- பெற்றோர் ஒருவர் அல்லது சகோதரன் அல்லது சகோதரி சிறுநீரிழிவு நோயாளியாக இருப்பின்.
- கொழுமை (Obesity) அல்லது உடல்நிறை அதிகரித்துக் காணப்பட்டால் (overweight).
- 45 வயதுக்கு மேற்பட்டால்.
- கர்ப்பகாலத்தின்போது சிறுநீரிழிவு ஏற்பட்டால் அல்லது 4.25 Kgக்கு கூடிய நிறையுள்ள குழந்தையைப் பெற்றால்.
- அதிக குருதியமுக்கம்.
- உயர்குருதிக் கொழுப்பு மட்டம் (Triglyceride)
- உயர் கொலஸ்திரோல் மட்டம்.
- உடற்பயிற்சியற்ற வாழ்க்கை.

45 வயதுக்கு மேற்பட்டோர் ஆகக்குறைந்தது ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒரு முறை சிறுநீரிழிவு ஏற்பட்டு உள்ளதா அல்லது ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளனவா எனத் தம்மைச் சோதனைக்குட்படுத்திப் பார்ப்பது அவசியமாகும்.

**5. குணங்குறிகள் (Symptoms)**

பொதுவாக இவர்களில் அதிகமாக இந் நோய்க்குரிய அறிகுறிகள் காணப்படுவதில்லை.

1. அதிக தாகம்.
2. அதிகமாகச் சிறுநீர் கழிதல்.
3. அதிக பசி.
4. களைப்பு.
5. பார்வைக்குறைபாடு.
6. தொற்று ஏற்பட்டால் அது நீங்குவது கடினம்.

6. சிகிச்சை முறைகள் (Treatments)

சிறுநீரிழிவு நோயினை முற்றாகக் குணப் படுத்த முடியாது. சிறுநீரிழிவு நோய்க்குரிய சிகிச்சையின்போது பின்வருவன கருத்திற் கொள்ளப்படுகின்றன. மருந்து வகைகள், உணவுப்பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி என்பன குருதிக் குளுக்கோசு மட்டத்தையும், அகத்துறிஞ்சலில் ஏற்படும் சிக்கல்களையும் குறைக்கும்.

7. சோதனைகள் (Tests)

7.1. சிறுநீர்ச் சோதனை (Urine Tests)

சிறுநீரில் வெல்லம் (குளுக்கோசு) காணப் படுகிறதா என்பதனைக் கண்டறிய வேண்டும்.

7.2. குருதிச் சோதனை (Blood Tests)

குருதியில் பட்டினிநிலையில் (இரவு உண வுண்ட பின்னர் காலையில் அல்லது 12 மணித் தியாலங்களின் பின்னர்) குளுக்கோசுச் செறி வினைக் கண்டறிய வேண்டும். இவ்வாறு பட்டினி நிலையில் குருதியில் குளுக்கோசின் செறிவு இரண்டுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் 126 mg/100ml ஆக இருப்பின் ஒருவர் சிறுநீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனக்கருதப் படும். குருதிக்குளுக்கோசு மட்டம் பட்டினி நிலை யில் 100க்கும் 126 mg/100ml க்கும் இடையில் காணப்பட்டால் அவருக்கு சிறுநீரிழிவு நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு (Prediabetic) உள்ளதெனக் கூறலாம். இந்த குருதிக் குளுக் கோசு மட்டம் பொதுவாக சிறுநீரிழிவு வகை 2ஐச் சேர்ந்த நோயாளிகளில் பொதுவாக ஒரு முடிவுக்கு வர உதவும்.

எழுந்தமானமாக ஏதாவது ஒரு நேரத்தில் எடுக்கப்பட்ட குருதிக் குளுக்கோசின் மட்டம் 200mg/100ml ஐ விடக் கூடுதலாக இருப்ப துடன் அதிகரித்த நீர் அருந்தும் தேவை, அதி கரித்த சிறுநீர் கழிக்கும் தன்மை, களைப்பு என் பன சிறுநீரிழிவுக்குரிய அறிகுறிகளாகும். இதனைப் பட்டினி நிலையில் குருதிக் குளுக் கோசின் மட்டத்தினை அளப்பதன் மூலம் உறுதி செய்யலாம்.

குருதியில் செங்குருதிக் கலங்களில் ஈமோகு ளோபின் (Haemoglobin) என்னும் நிறப் பொருள் காணப்படுகின்றது. இந்த ஈமோ குளோபின் (Hb) குளுக்கோசுடன் தாக்கம் புரிந்து கிளைக்கோசிலேற்றப்பட்ட ஈமோ குளோபின் (Glycosylated Haemoglobin) ஐ உருவாக்குகின்றது. இதனை Haemoglobin Alc (HbAlc) எனக் குறிப்பிடுவர். HbAlc யின் மட்டம் எமது குருதியில் கடந்த 2-3 மாதங் களில் குளுக்கோசின் மட்டம் எவ்வாறு காணப் பட்டது என்பது பற்றிய விபரத்தைக் குறிக்கும்.

அதிக காலத்துக்கு ஒருவரின் குருதியில் குளுக்கோசின் செறிவு அதிகரித்து இருப்பின் அவருக்கு பின்வரும் சிக்கல்கள் ஏற்படுவதை அவதானிக்கலாம்.

- கண் பாதிப்பு (Diabetic Retinopathy)
- சிறுநீரக பாதிப்பு (Diabetic Nephropathy)
- நரம்புப்பாதிப்பு (Diabetic Neuropathy)
- குருதிக் குழாய் நோய் (Peripheral vascular disease) உ+ம் குருதி உயர் கொலஸ்திரோல் மட்டம், உயர் குருதி அமுக் கம், குருதிக் குழாயில் கொழுப்பு படிவடை தல், இதயத்திற்குக் குருதியினை வழங்கும் குழாயில் கொழுப்புப் படிவடைதல்.

8. வகை 1 சிறுநீரிழிவு (Type 1 Diabetes)

இது இன்சுலினில் தங்கியுள்ள சிறுநீரிழிவு (Insulin Dependant Diabetes) அல்லது குழந்தைகளில் ஏற்படும் சிறுநீரிழிவு (Juvenile diabetes) எனவும் அழைக்கப்படும். இது பொதுவாக பிள்ளைகளில் சராசரியாக 12 வயதிலும் சிலரில் 20 வயதிலும் இந்நோய் கண்டறியப்படுவதுண்டு.

இந்நோயாளிகளுக்கு பொதுவாக மார டைப்பு, சிறுநீரகப் பாதிப்பு, உயர் குருதியமுக் கம், கண்பார்வை குறைதல், நரம்பு பாதிப்பு, முரசு நோய்கள் என்பன ஏற்படலாம். இந்நோ யாளிகளில் இந்நோயற்றவர்களை விட 2 - 4 மடங்கு அதிகமாக மேற்கூறப்பட்ட நோய்களின்

பாதிப்பு ஏற்படும் சாத்தியக்கூறுகளுண்டு. இந்நோயாளிகளின் கால்களுக்கும் பாதங்களுக்கும் போதியளவு குருதி செல்வது இல்லை. எனவே இந்நோயாளிகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்காவிட்டால் கால்களை அல்லது பாதங்களை அகற்ற வேண்டியநிலை ஏற்படுவதுண்டு. சரியான முறையில் சிகிச்சை பெறாத ஒரு நோயாளி கோமா நிலைக்கும்செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளன.

இந்நோயாளிகளில் சிலர் பொதுவாகத் திடீரெனப் பல நோய்களினால் பாதிக்கப்படுவதைக் காணப்படக்கூடியதாக உள்ளது. எனவே இவர்களின் வாழ்நாட்களை அதிகரிப்பதற்கும், சிறுநீரிழிவினால் ஏற்படும் பாதிப்புக்களையும் சிக்கலான பின்விளைவுகளைக் குறைப்பதற்கும், சிறுநீரகப் பாதிப்பு, கால்களைக் கழற்றுதல் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கும் பகுதி 6இல் சோதனைகளைச் செய்வது அவசியமாகும்.

### 8.1 வகை 1 சிறுநீரிழிவினைச் சேர்ந்தவர்கள் தம்மைப் பராமரிப்பது எப்படி?

ஒரு வருடத்துக்கு ஆகக்குறைந்தது 4 முறையாவது மருத்துவரைச் சந்திப்பதுடன், குருதிக் குளுக்கோசு, HbAlc என்பவற்றைச் சோதனை செய்ய வேண்டும். கொலஸ்திரோல் மட்டம், கொழுப்பு மட்டம் மற்றும் சிறுநீரகத்தின் தொழிற்பாடு என்பன வருடத்திற்கு ஒருமுறையாவது சோதனை செய்யப்பட வேண்டும். வருடத்திற்கு ஒரு முறை கண்சிகிச்சை நிபுணரின் சோதனைக்குட்பட்டு ஆலோசனை பெறவேண்டும். பல்மருத்துவரை 6 மாதங்களுக்கு ஒரு முறை அணுகி பற்களைச் சுத்தப்படுத்தி ஆலோசனை பெறவேண்டும். ஒவ்வொரு நாளும் பாதங்களைச் சோதனை செய்து அதில் ஏதாவது தாக்கங்கள் அல்லது கொப்பளங்கள் அல்லது தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிய வேண்டும்.

இந்நோயுள்ளவர்கள் தினமும் குருதிக் குளுக்கோசு மட்டத்தை அளக்கக்கூடிய வசதியிருப்பின் அதனை அளப்பது மிகவும் நல்லது. அவ்வாறு குருதிக் குளுக்கோசு மட்டம் சாதாரண அளவினை விட அதிகமாகக் காணப்பட்டால் இந்நோயாளி ஒரு மருத்துவரின் உதவியுடன் மேலதிகமாக சிறிய அளவு குறைந்த நேரத்தில் பலனைக் கொடுக்கக்கூடிய இன்சுலினை ஊசிமூலம் ஏற்றுவது சிறந்தது.

### 8.2 குருதிக் குளுக்கோசு மட்டத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

சிறுநீரிழிவு வகை 1இனால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுவாக மருத்துவர்களினால் சிபார்சு செய்யப்பட்ட அளவு இன்சுலினை ஊசிமூலம் ஏற்ற வேண்டும். பலர் குறைந்தநேரம் தொழிற்படும் இன்சுலினை உணவு உட்கொள்ள முன்னர் ஊசிமூலம் ஏற்ற வேண்டும். ஊசிமூலம் ஏற்றப்படும் இன்சுலினின் அளவு உள்ளெடுக்கப்படும் உணவிலுள்ள காபோவைதரேற்றின் அளவில் தங்கியுள்ளது. உள்ளெடுக்கவேண்டிய உணவின் அளவினையும் இன்சுலினின் அளவினையும் ஒரு மருத்துவரின் ஆலோசனையுடன் கருத்திற்கொள்வது அவசியம்.

இன்சுலின் ஊசிமூலம் ஏற்றப்படலாம். உடலுடன் பொருத்தப்பட்ட பம்பிகள் மூலம் ஏற்றப்படலாம். இன்சுலின் குளிசை வடிவில் இல்லை. இன்சுலின் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள சிறுநீரிழிவு நோயின் பாதிப்பின் அளவைப் பொறுத்து நாளொன்றுக்கு 1 – 4 முறைகள் ஏற்றப்படலாம்.

### 9. வகை 2 சிறுநீரிழிவு (Type 2 Diabetes)

இதுவே பொதுவாகக் காணப்படும் சிறுநீரிழிவாகும். இந்த வகை சிறுநீரிழிவும் மிகப்பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவல்லது. எனினும் போதிய கவனம் செலுத்தினால் சுகமான வாழ்வினை வாழலாம். இந்த வகையினை இன்சுலினில் தங்கியிராத சிறுநீரிழிவு (Insulin Independent Diabetes) அல்லது வயது வந்தவர்களுக்கு ஏற்படும் சிறுநீரிழிவு (Adult Onset Diabetes) எனவும் அழைக்கப்படும். இவ்வகை சிறுநீரிழிவு பின்வரும் அடிப்படையில் ஏற்படுகின்றது.

- ❖ 45 வயதுக்கு மேற்பட்டவரில்,
- ❖ முன்பு எப்போதாவது மருத்துவர்களால் குளுக்கோசினை சகிக்கும் தன்மை

குறைந்தவர் (Impaired glucose tolerance) எனக் கண்டறியப்பட்டவரில்,

- ❖ அதிக உடல் எடை உடையவரில் பொதுவாக இவ்வகை நோய் ஏற்பட்டுள்ளது என்பதனைக் கண்டறியும்போது நோயாளி எடை கூடியவர்களாக இருப்பது அநேகமாக அவதானிக்கத்தக்கது.
- ❖ உயர் குருதியமுக்கம் உள்ளவரில்,
- ❖ குருதிக் கொழுப்பின் அளவு 250 mg/100mlக்கு அதிகமாக உள்ளவர்களுக்கு,
- ❖ கருத்தரித்தபோது சிறுநீரிழிவு நோய் ஏற்பட்டவரில்,
- ❖ குடும்ப அங்கத்தவர்கள் சிறுநீரிழிவு நோய் பாதிப்புற்றவர்களாக இருப்பின் அவருக்கு 25 - 33% இந்நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.
- ❖ குறைந்த நிறையுடன் பிறந்த பிள்ளைகளுக்கு இது ஏற்படும் சாத்தியம் உள்ளது.

### 9.1 சிகிச்சை

- ❖ குருதிக் குளுக்கோசுச் செறிவினை அடிக்கடி அளந்து அதன் பதிவு பேணப்பட வேண்டும்.
- ❖ உணவுப் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளும் முறைகள், எவற்றை உண்ண வேண்டும் எனும் அடிப்படை அறிவு தேவை.
- ❖ இவர்களுக்கு பொதுவாக இன்சுலின் ஊசி மூலம் ஏற்றத் தேவையில்லை. ஆனால் மாத்திரைகள் உட்கொள்ள வேண்டும். அவை எந்தெந்த வேளைகளில் உட்கொள்ள வேண்டும் என்பது மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுத்த வேண்டும்.
- ❖ குருதிக் குளுக்கோசு செறிவு அதிகரித்தால் அல்லது குறைந்தால் அதனை அறிந்து ஏற்றவகையில் குருதிக் குளுக்கோசு மட்டத்தை சாதாரண அளவுக்குக் கொண்டுவர எத்தனிக்க வேண்டும். இதனை உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் செய்வது சிறந்தது.
- ❖ நோயுற்றவேளைகளில் எவ்வாறு தம்மைப் பராமரிக்க வேண்டும் என்பதனை அறிந்திருக்க வேண்டும்.
- ❖ சிறுநீரிழிவுக்குரிய மருந்து வகைகளை எவ்வாறு வாங்கி எப்படிச் சேமித்து வைப்பது, எவ்வகையில் பாவிக்க வேண்டும் என்ற அறிவுகளை வளர்க்க வேண்டும்.

### 10. கருத்தரித்த பெண்களில் ஏற்படும் சிறுநீரிழிவு (Gestational Diabetes)

இது சிறுநீரிழிவு வகை 2 இனை ஒத்தது. தற்காலிகமாக இது பொதுவாகக் கருவுற்ற பெண்களில் 6 மாதங்களின் பின்னர் ஏற்படும். முன்பு எப்போதும் சிறுநீரிழிவு இல்லாத பெண்களிலும் இது ஏற்படலாம். 4-5% கர்ப்பிணிகளில் இது காணப்படுகின்றது. அனேகமானோரில் பிரசவத்தின் பின்னர் இது இல்லாமல் போகும். ஆனால் 1/3 தொடக்கம் 1/2 வாசியான பெண்களில் 10 வருடங்களின் பின் சிறுநீரிழிவு திரும்ப ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய காரணம் கண்டறியப்படவில்லை. ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணினதும் குருதிக் கொலஸ்திரோல் மட்டம் 24 - 28 கிழமைகளுக்கிடையில் சோதிக்கப்பட வேண்டும். இந்த வகை சிறுநீரிழிவு வரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளவர்கள்.

- ❖ பெற்றோர் அல்லது சகோதரர் சிறுநீரிழிவு உள்ளவர்கள்.
- ❖ 25 வயதுக்கு மேல் கருத்தரித்த ஒருவர்
- ❖ இந்த கர்ப்பத்திற்கு முன்பு ஏற்பட்ட கர்ப்பத்தின்மூலம் குறைபாடுடைய குழந்தைகளைப் பெற்ற தாய்.
- ❖ இளவயதில் 5 - 12 kg உடல் நிறை கர்ப்பத்திற்கு முன்னர் அதிகரித்தல்.
- ❖ கொழுமை உடையவர்.
- ❖ முன்னர் பெற்ற குழந்தையின் எடை 4.25 kg க்கு அதிகமாக உள்ளவர்கள்.
- ❖ அடிக்கடி தொற்று ஏற்படுபவர்கள்.
- ❖ விளக்கமளிக்க முடியாத முறையில் கருக்கலைப்பு ஏற்பட்டவர்கள்.
- ❖ பிறந்தவுடன் குழந்தை இறந்தவர்கள்.

இவர்களுக்கு ஏற்படும் குணம்குறிகள் வகை 2க்கு கூறப்பட்டவாறு அமையும்.

### 10.1 கர்ப்பிணிகளில் இந்தவகைச் சிறுநீரிழிவு ஏற்பட்டால் அது குழந்தையைப் பாதிக்குமா?

பொதுவாகத் தாய்மாருக்கு இந்நோய் இருந்தால் இது குழந்தைகளில் எவ்வகைக் குறை

பாட்டையும் ஏற்படுத்த மாட்டாது. எனினும் தாய் போதியளவு கவனம் எடுக்காவிடின் குழந் தையைப் பாதிக்கும். குழந்தை தேவைக்கதிக மாக வளரும். குழந்தை எடை கூடியதாகப் பிறக்கும்போது தோள் பாதிப்படையும் சாத்தி யக்கூறு உண்டு. பிள்ளைகளில் சிலவேளை சுவாசப்பை விருத்தி பாதிப்படையும். குழந்தை பிறக்கும்போது செங்கண்மாலை நோய் ஏற் படும். குழந்தை பிறந்தவுடன் அதன் குருதியில் குளுக்கோசின் செறிவு குறைந்து காணப்படும். சிலவேளைகளில் கருவிலேயே குழந்தை இறக்க நேரிடும். பிள்ளை வளர்ந்த பின்னரும் கொழுமையுள்ள (obesity) பிள்ளையாக வரக்கூடும்.

- ஏனைய சிறுநீரிழிவு நோயாளியைப் போன்று இவர்களின் உணவுப் பழக்கவழக்கங் களும் கட்டுப்பாடு உள்ளவையாக இருத்தல் அவசியம்.
- குருதிக்குளுக்கோசு மட்டத்தை அடிக்கடி அளத்தல் அவசியம்.
- கருவின் வளர்ச்சி அடிக்கடி சோதிக்கப்பட வேண்டும்.
- போதியளவு உடற்பயிற்சி, நடத்தல் அவசியம்.
- இவர்கள் உணவுக் கட்டுப்பாட்டுடன் இருந் தால் மாத்திரைகள் உட்கொள்ளத் தேவை யில்லை.
- உடல் நிறை குறைவது மிகவும் நல்லது.
- உணவுடன் பலவகை பழவகைகளும் மரக் கறிகளையும் சேர்ப்பது நல்லது.
- உணவுடன் உட்கொள்ளும் சக்தியில் 30%க்கு குறைவான கொழுப்பினை உட் கொள்வது நல்லது.

### 11. உணவும் உடல் எடை குறைத்தலும்

#### 11.1 உணவுப்பழக்கவழக்கங்கள்

சிறுநீரிழிவு நோயாளிகளின் போசனைத் தேவை ஏனையோரினைப் போன்றதொன் றாகும். எனவே வளரும் பிள்ளைகளும் இளம் வயதினரும் தமது போசனைத் தேவையினை சரியான முறையில் பெற்றுக் கொள்வதற்குரிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். ஒருவர் தனது உடல் நிறையினை அவரின் உயரத் துக்கு ஏற்ப ஒருங்கமைத்துப் போசனைச் சம நிலையில் உள்ள உணவுகளை உட்கொள்வது அவசியம். உணவினைச் சரியான முறையில் உட்கொள்வதாலும் உடல் நிறையினைக் குறைக்க முடியும்.

நோயாளி ஒருவர் தனது நாளாந்த உண வுத் தேவையினைத் திட்டமிடும்போது உடலுக்கு ஊறுவிளைவிக்காத போதிய அளவினைச் சரியான நேரத்தில் உட்கொள்ள வேண்டும். ஒருவர் தனது உணவில் கொழுப்பு, புரதம், காபோவைதரேற்று, கனியுப்புக்கள், உயிர்ச் சத்துக்கள், நார்ப்பொருட்கள் என்பவற்றைக் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ் வாறு உணவுப் பழக்கவழக்கத்தை ஏற்படுத் திக்கொள்வதுடன் ஒருவர் தனக்கு விருப்ப மான தன்னால் உண்ணக்கூடிய உணவுகளை சரியான அளவுகளில் தேர்ந்தெடுப்பது அவசிய மாகும்.

சிறுநீரிழிவினால் பாதிக்கப்பட்டவர்கள் கொழுப்புக் குறைந்த, உப்புக் குறைந்த, இனிப்பு ஊட்டப்படாத உணவுகளை உட்கொள்ள வேண்டும். இவர்கள் சிக்கலான காபோவைத ரேற்றுக்களைக் கொண்ட குரக்கன்மா, ஆட் டாமா, தவிடு நீக்கப்படாத அரிசியில் செய்த உண வுகள், இலைவகைகளில் செய்யப்பட்ட கறிவகை களை உண்ணலாம். அதிகளவு மரக்கறிகளை உட்கொள்ளலாம். கிழங்கு வகைகள், பலாக்காய், ஈரப்பலா என்பன தவிர்க்கப்பட வேண்டியவை. வாழைப்பழங்களில் இதரை வாழைப்பழம் சிறந்தது. எவ்வாறாயினும் உண்ணப்படும் உணவின் அளவு குறைக்கப்பட வேண்டும்.

பொதுவாக இவர்கள் நிரம்பிய கொழுப்ப மிலங்களைக் கொண்ட தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால், நெய், பசுப்பால், முழு ஆடைப் பால்மா என்பவற்றைத் தவிர்க்க வேண்டும். நிரம்பாத கொழுப்பமிலங்களைக் கொண்ட சூரிய காந்தி எண்ணெய், சோயா எண்ணெய் என்பவற்றை மிகக் குறைந்த அளவுகளில் பாவிக்கலாம். தற்பொழுது யாழ்ப்பாணத்தில் விற்கப்படும் மரக்கறி எண்ணெய் சிறுநீரிழிவு நோயாளிக்கு பொருத்தமற்றதொன்றாகும்.

மேலும் இவர்களின் உணவுடன் கொலஸ்திரோல் அதிகம் கொண்ட முட்டை மஞ்சட்கரு, நெய், பாற்கொழுப்பு என்பவற்றைத் தவிர்ப்பது நல்லது. இறால், நண்டு என்பவற்றையும் மிருக இறைச்சிகளுடன் காணப்படும் கொழுப்புக்களையும் தவிர்ப்பது நல்லது.

உணவுடன் அதிக நார்ச்சத்தினைக் கொண்ட பயற்றங்காய், கீரைவகைகள், பப்பாப்பழம் என்பவற்றை உட்கொள்வது நல்லது.

புரதம் அதிகம் உள்ள உணவுகளான இறைச்சி, ஆடை நீக்கப்பட்ட பால், பருப்பு, உழுந்து, பயறு, கௌபீ, கடலை என்பவற்றை மேலதிகமாக உண்ணக்கூடாது.

உணவில் உப்பினைக் குறைத்து உண்ணுவது நல்லது.

வகை 1 இனால் பாதிக்கப்பட்டவர்கள் தமது உணவுப் பழக்கவழக்கத்தில் மாறாத வழக்கங்களைக் கடைப்பிடிப்பது அவசியம். அவர்கள் ஊசிமூலம் ஏற்றும் இன்சுலின் அளவு மாறாமல் இருப்பதால் உள்ளெடுக்கும் உணவிலும் அதிகளவு மாற்றங்களைச் செய்தால் பெரும் பாதிப்பு ஏற்படும்.

சிறுநீரிழிவு வகை 2 இனை உடைய ஒரு நோயாளி உணவுப்பழக்க வழக்கத்தைச் சரியான முறையில் ஒழுங்கமைத்தால் மாத்திரைகள் உட்கொள்வதைத் தவிர்க்க முடியும்.

**11.2 ஒழுங்கான உடற்பயிற்சி**

சிறுநீரிழிவு நோய் இருப்பின் ஒழுங்கான உடற்பயிற்சி அவசியம். எம்முடைய சூழலில் செய்யக்கூடிய மிக இலகுவான உடற்பயிற்சி விரைவாக நடப்பதாகும். ஒருவர் நாளொன்றுக்குக் காலையும் மாலையும் அரைமணிநேரமாகத் தொடர்ந்து (நாளொன்றிற்கு மொத்தம் ஒரு மணிநேரம்) நடப்பது மிகவும் நல்லது. நடந்து முடிந்த பின்னர் அதிக நீர் அருந்துவது மிக அவசியம். சீனி சேர்த்த பானம் அருந்துவது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

தற்போதைய பழக்கவழக்கங்களான ஒரே இடத்தில் இருந்து தொலைக்காட்சி பார்ப்பது, ஒரே இடத்தில் இருந்து வேலை செய்தல், போதியளவு உடற்பயிற்சியில் ஈடுபடாது இருப்பது என்பன உடலுக்குப் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தவல்லன.

**12. குருதிக் குளுக்கோசின் செறிவு குறைவடைதல்**

சில சிறுநீரிழிவு நோயாளிகள் அவர்களிற்குத் தகுந்த உணவுப் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளாது வைத்தியர் சோதனை செய்த போது குறிப்பிட்ட அளவு இன்சுலினை அல்லது மாத்திரைகளைப் பாவித்து வருவாராயின் அவரின் குருதிக் குளுக்கோசுச் செறிவு குறைவடையக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். குருதியில் குளுக்கோசின் செறிவு மேலதிக உடற்பயிற்சியின் மூலம் அல்லது உணவினைக் குறைத்து உண்பதன் மூலமும் ஏற்படலாம். சிறுநீரிழிவு நோயாளிகளுக்குக் குருதியில் குளுக்கோசின் செறிவு குறைவது சாதாரண ஒருவரை விட விரைவாக ஏற்படும். பின்வரும் அறிகுறிகள் குருதியில் செறிவு, 70 mg/100 ml இனை அடையும் போது ஏற்படும்.

1. *காரணமின்றிக் களைப்படைதல்.*
2. *அதிகமாகக் கொட்டாவி விடுதல்.*
3. *சரியான முறையில் கதைக்க முடியாது, யோசனை செய்யமுடியாது.*
4. *தசைகளின் செயற்பாட்டில் தொடர் பாடின்மை.*
5. *வியர்த்தல்.*
6. *பலவீனமுறுதல், தலையிடி, பசி.*

*மேற்குறிப்பிட்ட குணம் குறிகள் காணப்பட்டால் ஏதாவது இனிப்புப் பண்டம், பழரசம், குளிர்பானம் என்பவற்றில் ஒன்றினை உடனடியாக உட்கொள்ள வேண்டும்.*

மேலும் உடனிருக்கும் உறவினருக்கும், நண்பர்களுக்கும் குருதியில் குளுக்கோசுச் செறிவு குறைந்தால் எவ்வகையான உதவிகள் தேவை என்பது பற்றி அறிவூட்ட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் தென்பட்டால் வீட்டில் குருதிக்குளுக்கோசு அளவிடும் உபகர

ணம் இருப்பின் உடனடியாக குருதிக் குளுக்கோசு அளவைக் கணிப்பிடுதல் அவசியம். குருதி குளுக்கோசு அளவிட முடியாதவிடத்து மேற்குறிப்பிட்ட இனிப்பு கொண்ட உணவுகளையோ பானங்களையோ உட்கொள்வது அவசியம். மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் அகன்ற பின்னர் போதியளவு உணவினை உட்கொள்ள வேண்டும்.

**13. சிறுநீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய சிக்கல்களை எவ்வாறு தவிர்க்கலாம்?**

- ❖ குருதி அமுக்கம் 130 / 85 mmHg ஆக இருக்க வேண்டும்
- ❖ குருதி கொலஸ்திரோல் மட்டம் 200mg/100ml ஐ விடக் குறைவாக இருக்க வேண்டும்.
- ❖ கால்பாதங்களில் கவனம் செலுத்துவதுடன் ஏதாவது தொற்று ஏற்பட்டுள்ளதா எனக் கவனிக்கவேண்டும்.
- ❖ கண்களை ஒவ்வொரு ஆண்டும் சோதனை செய்ய வேண்டும்.
- ❖ பற்களைப் பரிசோதனை செய்ய வேண்டும்.

**14. முடிவுரை**

பெருளாதாரச் சுமைகளின் மூலம் ஏற்படும் அழுத்தங்கள், நாட்டுச் சூழலால் ஏற்படும் அழுத்தங்கள் போன்றவற்றுக்கு முகம் கொடுக்கும் ஒருவருக்குச் சிறுநீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக்கூறு மிக அதிகம். சிறுநீரிழிவு நோய் ஒருவருக்கு ஏற்பட்டால் அதன் தாக்கம் அவர் உடல் அதிகம் பாதிப்புற்ற பின்னர் கண்கூடாகக் காணக்கூடியதாக அமைகிறது. எம்முடன் உடன் இருந்து கொல்லும் ஒரு நோய் சிறுநீரிழிவு நோயாகும். எனவே ஒருவர் இந்நோய் ஏற்படுவதைத் தடுப்பது மிக அவசியமாகும். இந்நோய் ஏற்பட்ட ஒருவர் இந்நோயினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து தம்மைப் பாதுகாத்து சுகமான வாழ்வினை வாழமுடியும். எனவே மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உடனிருந்து கொல்லும் நோயாகிய சிறுநீரிழிவு நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாக!

❖ ❖ ❖

## வெற்றிக்கு வேண்டும் இவை

- ✷ ஒவ்வொரு கூறினையும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.
- ✷ காலம் தாழ்த்தக் கூடாது.
- ✷ நிதானமாகச் சிந்தித்து விரைந்து செயற்பட வேண்டும்.
- ✷ துணிந்து முன்னேற வேண்டும்.
- ✷ தொல்லைகளைப் பொறுமையுடன் ஏற்க வேண்டும்.
- ✷ நேர்மை புனிதமானது.
- ✷ பொய் சொல்லாதீர்கள்.
- ✷ வீண் தொடர்புகள் வேண்டாம்.
- ✷ இருப்பதைவிடப் பெரியவராக உங்களைக் காட்டிக் கொள்ளாதீர்கள்.
- ✷ கடன்களை ஒழுங்காக அடைத்து விடுங்கள்.
- ✷ உரிய நேரத்தில் துணிந்து முதலீடு செய்யுங்கள்.
- ✷ போதை தரும் மதுவை அருந்தாதீர்கள்.
- ✷ பயனுள்ள முறையில் நேரத்தைச் செலவிடுங்கள்.
- ✷ வராத வாய்ப்புகளை நம்பாதீர்கள்.
- ✷ எல்லோரிடமும் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள்.
- ✷ மற்றவர்கள் உங்களை அதையரியப்படுத்த இடம் கொடாதீர்கள்.
- ✷ கஷ்டப்பட்டு உழைத்தால், முன்னேறலாம்.

*– மெயர் ராத்ஸ்சைல்ட்*



# ஆரோக்கிய வாழ்க்கையும் சித்தமருத்துவ முறையும்

வைத்திய கலாநிதி
(திருமதி) மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன்
சிரேஸ்டவிரிவுரையாளர்,சித்தமருத்துவப்பிரிவு,
யாழ்பல்கலைக்கழகம்.

ஆரோக்கியம் என்பது நோய் நிலைகளிலும் இயலாமையிலும் இருந்து விடுபடும் நிலை மாத்திர மல்ல. ஒருவர் தமது உடல் உள சமூக ஆன்மீக நன் னிலை அடையக்கூடிய அதியுயர்ந்த நிலையாகும். ஆரோக்கியம் பற்றிய இவ்வரைவிலக்கணம் உலக சுகாதார நிறுவனத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளது.

சித்தமருத்துவம் என்பது தனியே நோயைக் குணமாக்கும் மருத்துவம் அல்ல. நீண்டகாலம் நரை திரை மூப்பு பிணி போன்றவை அற்று ஆரோக்கி யத்தையும் மகிழ்ச்சியையும் பேணுவதற்குரிய வழிவகைகளை எடுத்துக்கூறும் ஒரு விஞ்ஞான ரீதியான மருத்துவமாகும்.

ஆரோக்கியமாக வாழ்தற்குச் சித்தர்கள் பல நெறிமுறைகளை எமக்குக் காட்டியுள்ளார்கள். இதனைக் கடைப்பிடிப்பதன் மூலம் நோய் நொடிகளிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பலாம்.

இந் நெறிமுறைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன

1. தினசரியை
   அன்றாட வாழ்க்கையில் காலையில் துயிலெழல் தொடக்கம் இரவு நித்திரை செய்யும் வரை கடைப்பிடிக்க வேண்டியவை.
2. ருதுசரியை
   பருவகாலங்களுக்கேற்ப உணவு முறைகளை யும், வாழ்க்கை முறையையும் சூழ்நிலைக்கேற்ப அமைத்தல்.

**தினசரியை**

காலை 4 மணியைப் பிரம்மமூர்த்தம் என்றழைக் கப்படும். இவ்வேளை உயிர்த்தாதுக்களில் ஒன்றா கிய வாதம் அதிகரித்துக் காணப்படும். பிரம்ம மூர்த்த நேரத்தில் வாயு மண்டலத்தில் அதிகமாக பிராண வாயு இருப்பதால் அவற்றைச் சுவாசிக்கும் அனைவ ருக்கும் வியாதிகள் வராது. இதனால் உடல், மனம் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பது மாத்திரமல்ல, தெளி வான நிலையில் இருக்கும் காலமாகும். அத்துடன் அன்று முழுவதும் நல்ல நாளாக அமையும்.

சூரிய உதயத்திற்கு முன்னர் குளித்து தெய்வ சிந்தனையில் ஈடுபடுபவனுக்கு உடல் பலம், அழகு, நல்ல சரீரம், வாக்குவன்மை, நல்ல குணம், தர்ம சிந் தனை, செல்வம், புகழ் ஆகியவை தேடிவரும் என இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றது.

இரவு 8 மணி நேரம் கண்மூடியிருந்து, பார்வை நரம்புகள் பணியில்லாமல், உறக்கம் கொண்டிருந்த கண்ணுக்குத் திடீரென்று வெளிச்சம் தரக்கூடாது.

அதனால் கண் சிறிது சிறிதாக வெளிச்சத்தைப் படிப்படியாகப் பெற விடியலில் எழுந்திருத்தல் வேண்டும். இவ்விதம் செய்வது கண்ணுக்குப் பாதுகாப்பாகும்.

"உதயமுன் கண்விழித்தால் உள்ளத் துடலும்
இதமாய் எழிலனைத்தும் ஏற்பு"

மேலும் காலை குளிர்ந்த நேரம் என்பதாலும், அமைதியான நேரமென்பதாலும், எழுந்தவுடன் மனதிற்கு ஒரு இதமான தென்பு ஏற்படுகிறது.

"வைகறை துயிலெழு" என்ற ஔவை கூற்றுப்படி,

அதிகாலைக் காற்றில்தான் சுத்தமான பிராண வாயு கலந்திருக்கும். அதனால் தூயகாற்று வீசும். அக்காற்றால் உடலில் இரத்தஓட்டம் சிறந்த முறை யில் இயங்கும். மனஅமைதி கிடைக்கும். யோகாச னம், தியானம் செய்ய ஏற்ற அமைதியான சூழல் ஆகவும் அமையும்.

காலைக் கடன்களான மலவிசர்க்கம் போன்ற வற்றை நிறைவேற்றிய பின்னர் அரை மணித்தி யாலம் தியானத்தில் ஈடுபடவேண்டும். அதன் பின் னர் பிராணாயாமம், யோகாசனம் ஆகியவற்றில் ஈடுபடவேண்டும்.

"கதிர்கள் உலகின்மேல் காலைவிழும் நேரம்
கதிர்படாது சூரியனைக் காண்"

சூரிய நமஸ்காரம் செய்கின்றோம். இதனால்,

மண் - மண் மீது நின்று.
நீர் - நீர் கிழித்து வரும் சூரியனை.
நெருப்பு - நெருப்புக் கோளமாகிய சூரியன்.
ஆகாயம் - ஆகாயத்தில் பவனி வரும் சூரியன்.
காற்று - காற்று நிறைந்த புறவெளியில் நின்று இதமாகச் சுவாசித்தல்

இவ்வைந்து பூதங்களையும் நினைத்து, சூரிய நமஸ்காரம் செய்யும்போது சூரியகதிர்கள் உடல்மீது

படுவதால் நீண்ட ஆயுளையும் நிறைந்த பலனையும் பெறலாம்.

கடவுள் வணக்கத்தில் ஐம்பூதத்தை ஏற்புடைய தாக்கி வணங்குகையில் கற்பூரம் ஏற்றி தீப ஆரா தனை செய்யும் போது கற்பூரத்தில் காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய மூன்று பூதமும் தண்ணீர், தொட்டு மண்ணில் விழுவதால் இரண்டு பூதமுமாக ஐம்பூதங் களும் சிறப்புப் பெறுகின்றன.

"சாணம் தெளித்தல் தமிழரின் தொன்மையது
பேணும் பலநோய் பிசைந்து"

காலையில் வீட்டின் முன்வாயிலின் வெளிப்புறம் சாணம் தெளித்தல் தமிழரின் பழமையான நாகரி கம். பசுவின் சாணம் நீர்,பால்,தயிர், நெய் இவை யைந்தும் பஞ்சகௌவியம் என்ற பெயரில் மருத்து வப் பயனாக உள்ளது. இயற்கைக் காற்றின் மூலம் ஏற்படும் கதிர்வீச்சு நோய்கள் சாணம் தெளிப்பதால் வீட்டினுள் நுழையாமல் பாதுகாக்கப்படுகிறது. சித்த மருந்துகள் புடம் போடும் போது சாணவராட்டிகளால் எரிக்கப்படும். இதனால் மருந்தின் தன்மை வெளியே றாமல் பாதுகாக்கப்படுகிறது. வெளியே உள்ள தீயகதிர்வீச்சுத் தன்மைகள் உள்ளே நுழையாமலும் பாதுகாக்கப்படுகிறது.

"காலை எழுந்தவுடன் காலி வயிற்றில்நீர்
நாலுடம்ளர் நீகுடிக்க நாடு"

தூங்கி எழுந்தவுடன் இயற்கையாகச் சற்றுக் கூடுதலாக உஸ்ணம் உடலில் இருக்கும். அதைத் தணிக்க 4 குவளை நீர் குடிக்க வேண்டும். இதனால் மலச்சிக்கல் தீருவதுடன், சிறுநீரும் அதிகளவு கழிந்து சிறுநீரகநோய்கள் தீரும்.

**பல்துலக்கல்**

துவர்ப்பு, கார்ப்பு சுவையுடைய மூலிகைகளைக் கொண்ட பற்பொடியைப் பயன்படுத்தி பற்களைத் துலக்கவேண்டும். இதனால் பல் ஈறுகள் உறுதியடை கின்றன. சொத்தைப் பல், பற்கூச்சம், முரசு கரைதல் என்பன உருவாகாமல் தடுக்கலாம். வாய்நாற்றத் தையும் தடுக்கும்.

தினமும் ¼ கோப்பை நல்லெண்ணெய் வாயில் சிறிது நேரம்வைத்துக் கொப்பளித்தல் வேண்டும். இதனால் மேல், கீழ்வாய் தாடை என்புகள், குரற்பெட்டி ஆகியன வலிமை பெறும். உணவின் சுவையை நன்கு உணர்த்தும். உதட்டு வெடிப்புப் பற்கள் தேய்தல் ஆகியவற்றை நீக்கும்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

**ஆலங்குச்சியால் பல் தேய்ப்பதால்**

நாக்கு வெடிப்பு போகும்
வாய் வேக்காடு தீரும்
வாய்ப்புண் ஏற்படாது.
பல்ஈறுகள் இறுக்கமாகும்
பல்ஆட்டம் நீங்கும்

**வேலங்குச்சியால் பல்தேய்ப்பதால்**

பல்ஈறுகள் இறுக்கமாகும்.

**வேப்பங்குச்சியால் பல் தேய்ப்பதால்**

1-நோய்எதிர்ப்பு சக்தி ஏற்படும்
2-கோழைகள் நீங்கும்
3-பித்தம் சாந்தியாகும்

**நாக்கைப் பராமரித்தல்**

பற்களைத் துலக்கிய பின்னர் நாக்கை ஒரு உலோகத் தகட்டினால் சுத்தம் செய்யவேண்டும். பித்தளை அல்லது செம்பினால் ஆக்கப்பட்ட தகடை உபயோகிக்கவேண்டும். நாக்கைச் சுத்தம் செய்வ தால் வாய் சுத்தமாவது மாத்திரமல்ல, சமிபாட்டுத் தொகுதி முழுவதையும் துாண்டி, பசித் தீயையும் அதிகரிக்கும்.

**முகப்பராமரிப்பு**

தினமும் காலையில் முகத்தையும் கண்களை யும் குளிர்ந்த நீரினால் அலசவேண்டும். கஸ்தூரி மஞ்சள், சந்தனம், பால் இவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட களி அல்லது பசையை முகத்தில் பூசி 10 நிமிடம் விடவும். பின்னர் நீரினால் முகத்தைக் கழுவிவிடவேண்டும். இப் பசை துவர்ப்புச் செய்கை உடையதால் சருமத்தை இறுக்கமாக்கி சுருக்கம் ஏற்படாமல் பாதுகாக்கும்.

**நீராடல்**

ஒருவன் செய்யும் தொழிலினாலும், உடற்பயிற்சி யினாலும், உஸ்ணத்தினாலும் உடம்பில் தினந்தோறும் வியர்வையும் அழுக்கும் தோன்றுகின்றன. இவற்றை நீக்குவதற்குத் தினந்தோறும் குளிக்கவேண்டும்.

எம் முன்னோர்கள் தினந்தோறும் சூரிய உதயத் திற்கு முன்பே குளித்தல் உத்தமம் என விதித்துள் ளார்கள்.

*"காலை குளிக்கில் கடும்பசி நோயும்போம்*
*மாலை குளிக்கவிவை மத்திமமே-சோலையுடை*
*வாசநீர் சுத்தசலம் வன்னிநீ ராடுங்கால்*
*தேசமுடற் பேதமுன்னிச் செப்பு"*

இச் செய்யுளாலும் காலையில் குளித்தலே சிறந் தது என அறிகின்றோம். மஞ்சள் பூசிக் குளிப்பத னால் கற்றாழை நாற்றம், முகத்தில் உண்டாகின்ற நோய்கள், தீமையைத் தரும் சிலேஸ்மம், வியர்வை

இவைகள் நீங்கும். எண்ணெய் முழுக்கு செய்த தினம் பலக்குறைவாய்த் தோன்றியபோதும், பஞ்சேந் திரியங்களுக்குப் பலம், தெளிவு, சிரசு முழங்கைகட்கு வன்மை, ரோம வளர்ச்சி, நற்றொனி இவை உண்டாகும். தலைவலி நீங்கும்.

**மூலிகைப்பவுடர் கொண்டு குளிப்பதால்**

1- உள்ளுணர்வுகளுக்கு இன்பமளிக்கிறது.
2-உடலுக்கு ஆரோக்கியமளிக்கிறது.
3-தோலுக்குப் பாதுகாப்பும்,அழகும் தருகிறது.
4-சருமத்தில் வறட்சி ஏற்படாது.

**தேகப்பயிற்சி செய்தல்**

காலையில் அல்லது மாலையில் குறைந்தது ½ மணித்தியாலம் தேகப்பயிற்சி செய்தல் வேண்டும்.

**பலன்கள்.**

- உடல் நன்கு வளர்ச்சியடையும்.
- பசி உண்டாகும்.
- உடல் பருமன் குறையும்.
- உடல் சுறுசுறுப்படையும்.

**உடம்பைத் தேய்த்து விடல் (மர்த்தனம்)**

முறைப்படி உடம்பைத் தேய்த்து விடின் பின்வரும் நன்மைகள் ஏற்படும்.

- களைப்பைப் போக்கும்.
- மூட்டுகள் இலகுவாக அசைதல்.
- தோல் வெவ்வேறு உறுப்புகள் ஆகியவற்றின் குருதிச்சுற்றோட்டம் அதிகரிக்கும்.
- நரம்பு மண்டலத்தைத் தூண்டும்.
- ஆழ்ந்த உறக்கத்தை உண்டாக்கும்.
- நீண்ட ஆயுளைத் தரும்.

**உலாவுதல்**

- தேகப்பயிற்சி செய்ய முடியாதவர்கள் சிறிது நேரம் உலாவுதல் வேண்டும்.
- எழுந்தவுடன் காலை இரண்டுகிலோ மீற்றர் வழிநடத்தல் யார்க்கும் வனப்பு.

காலை எழுந்தவுடன் நடப்பது நன்று. ஓடுதல் நல்லதல்ல என்பது ஆய்வுமூலம் அறியப்பட்டுள் ளது. ஏனெனில் உறங்கும் போது இருதயம் சுலப மாக இயங்கிக்கொண்டிருக்கும். உடனே வேகமாக ஓடும்போது இருதயம் பாதிக்க வாய்ப்புண்டு.

**நடப்பதனால் ஏற்படும் பயன்கள்**

- கொழுப்புக் குறைகிறது.
- மூட்டுக்களுக்குப் பயிற்சியாக இருக்கிறது.
- சுவாசம் சுத்தமாகிறது.
- வியர்வையால் இரத்தசுத்தி ஏற்படுகிறது.

**உணவு உண்ணும் முறை**

உணவு என்பது உருசிக்காகவும், பசிக்காகவும் மட்டுமன்றி, உடல் வளர்ச்சிக்கும்,சக்திக்கும், ஆரோக் கியத்திற்கும் முக்கியமானதாகும். சித்தர்கள் உணவு உண்ணும் முறையை நன்கு விவரித்துக் கூறியுள்ள னர். தினமும் குறித்த நேரத்தில் உண்ண வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரத்தில் உண்ணக் கூடாது.

ஒருவர் உணவு உண்ணும் முன் நீராடித் தூய்மையான ஆடையணிந்து கொள்ள வேண்டும். உணவைப் பரிமாறும் பாத்திரங்கள்,உணவு அருந் தும் இடம், கை, கால்கள், வாய் இவற்றைச் சுத்தம் செய்து, தூயமனத்துடன், தாய், தந்தையர், குருமார் கள், விருந்தாளிகள், குழந்தைகள் இருப்பின் அவர் களுக்கு முதலில் அன்னமிட்டு அதன் பிறகுதான் உணவு அருந்த வேண்டும். மேலும் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய திசைகளில் ஏதேனும் ஒரு திசையில் அமர்ந்து உண்ணவேண்டும். சப்பணமிட்டு உண வருந்துதல் மிகச்சிறந்தது. நின்று கொண்டு அருந்து தல், உணவருந்தும் பொழுது, அதிகமாகப் பேசுதல், சிரித்தல் ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

உணவு உண்ண அகலமாயுள்ளதும்,எளிதில் கிடைப்பதுமான வாழை இலையின் நுனிப்பகுதி இடப் பக்கமாகவும், உணவைப் பிசைந்து சாப்பிடுவதற்கு வசதியாக அகலமான பகுதி வலப் பக்கமாகவும் இருக்க இடவேண்டும். பின் நீர் தெளித்துத் துடைத்து உணவை உண்பவரின் இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கமாகப் பரிமாற வேண்டும். முதலில் இடப் பக்கம் உப்பு, பின்பு ஊறுகாய், இனிப்பு, காய்கறிகள், கீரைகள், சாதமிட்டு, பருப்பு, நெய், வரிசையாகக் குழம்பு, இரசம், பாயாசம், தயிர் இட வேண்டும். உப்பு, ஊறுகாய் இடப்பக்கம் வைப்பதன் நோக்கம் இரண் டுமே அளவுடன் உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை. எனவே வலது பக்கம் உப்பை பரிமாறும் பொழுது எளிதாக உணவில் சேர்த்துக் கொள்வர். அதனைத் தடுப்பதற்காகவே இடப்பக்கம் வைப்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

"காலையில் இஞ்சி கடும் பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால்
கோலை ஊன்றிக் குறுகி நடப்பவன்
கோலை வீசி குலுக்கி நடப்பானே"

இதன்படி காலையில் சீரண சக்தி குறைவாக இருக்கும் பொழுது இஞ்சி சாப்பிட்டால் சீரண சக்தியைப் பெருக்கும்.

மதிய உணவில் வாயுப்பொருட்கள் இடம் பெறுவதால் அதை நீக்க - சுக்கைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாலையில் கடுக்காய் உட்கொண்டால் மலச்சிக் கல் இல்லாமல் அடுத்தநாள் இலகுவாக வயிறு கழியும்.

உணவு உட்கொள்ளும் போது ஒருவருக்கு ஏற்ற அளவில், இளஞ்சூடாக இருக்கும் போது அமைதியான மனத்துடன் சாப்பிடவேண்டும். முன்னர் உண்ட உணவு நன்கு சமிபாடடைந்த பின்னரே மறு போசனத்தை எடுக்கவேண்டும். சுத்தமான இடத்தில் இனிமையான நண்பர்களுடன் அளவிற்கு அதிகமான அளவாடல், சிரிப்பு போன்றவற்றைத் தவிர்த்து முழு மனதையும் செலுத்தி உணவு உட்கொள்ள வேண்டும். இங்ஙனம் சாப்பிடும்போது உணவு நன்கு சமிபாடாவதற்குக் காரணமான பித்தம் துாண்டப்படுகின்றது. இதனால் உணவு நன்கு சமிபாடடைவது மாத்திரமல்ல, வாதம் துாண்டப்பட்டு உணவைக் கீழ்நோக்கித் தள்ளுவதற்கும் துணைபுரிகின்றது.

சித்தர்கள் தமது நூல்களில் மோரைப் பெருக்கி, நெய்யை உருக்கி, நீரைக் காய்ச்சி அருந்த வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

மோரைப் பெருக்கி என்பது தயிரில் உள்ள வெண்ணெயை நீக்கி மோராக்கி அதனுடன் சரி பங்கு நீர் சேர்த்தலைக் குறிக்கின்றது. இவ்வாறு மோரைப் பெருக்குவதன் மூலம் மோரில் உள்ள "ரெனின்" உடலுக்குட் சென்று சமிபாட்டிற்கு உதவுகின்றது.

நெய்யை உருக்கி என்பது நெய் திடமானதும் நாம் மறுபடியும் சூடாக்கி (உருக்கி) உணவில் சேர்த்துக் கொள்கிறோம். அவ்வாறு உருக்கும்போது அதில் உள்ள நீளமான கொழுப்பு அமிலங்கள் சிறிய கொழுப்பு அமிலங்களாக மாற்றப்பட்டு எளிதில் சமிபாடடைய உதவுகின்றது.

நீரைக் காய்ச்சி என்பது நாம் அருந்தும் நீரை வடிகட்டி கொதி வந்த பின்னர் 5 நிமிடங்கள் மேலும் கொதிக்க வைத்துத் தெளிய வைத்து ஆறிய பின் அருந்த வேண்டும். இதனால் நோய்க் கிருமிகள் அழிகின்றன.

இரவு நேரங்களில் குறைவாகவே உணவு உண்ண வேண்டும். பின் சிறிது நடக்க வேண்டும். இதனால் உணவு நன்கு சமிபாடடையும். இதனால் கலோரிகள் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. இவை பயன்படுத்தப்படாவிட்டால் கொழுப்பு உடலில் சேர்ந்து உடல் பருமனடைந்து பல நோய்கள் உண்டாகின்றன.

இரவில் இஞ்சி, கீரை, பாகற்காய், கஞ்சி, தயிர், நெல்லிக்காய் ஆகியவற்றைச் சேர்க்கக்கூடாது. காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இஞ்சி சீரணசக்தியை அதிகரிக்கும். இரவில் சீரண உறுப்புகள் அதிக அளவில் வேலை செய்யக் கூடாது. இஞ்சி எடுப்பதனால் விரைவில் உணவு செரித்துப் பின் இரவில் பசி ஏற்படும்.

கீரை இது பெருங்குடலில் சீரணமாகின்றது. எனவே வயிற்றுப்போக்கு ஏற்படலாம். பாகற்காய் இது உணர்ச்சிகளை குறைத்துவிடும். தேள் போன்ற விசப்பூச்சிகள் கடித்தால் மருந்து உடனடியாகச் செயல்படாது.

வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம் இவைகளை உண்டவுடன் மோர், தயிர் சாப்பிடக்கூடாது. ஏனெனில் உணவு நச்சுத்தன்மை அடைகிறது. இதனால் சீரணக்கோளாறு ஏற்படும். அத்துடன் கோழிக் கறி, மாமிசம் உண்டவுடன் தயிர் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கண்ணுக்கு மையிடல்**

தினமும் "ஸௌவீராஞ்சனம்" எனும் மையை கண்களில் இடுவதனால் கண்கள் கூர்மையான பார்வையுள்ளதாகவும், அழகுள்ளதாகவும், தெளிவாகவும் தெரியும். அத்துடன் பிரகாசமான வெளிச்சத்தையும் தாங்கக் கூடிய ஆற்றலைக் கொடுக்கும். துாசு, அழுக்குகளைக் கண்களிலிருந்து அகற்றி கண் எரிவு, கண்ணீர் வடிதல் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாக்கும்.

**அஞ்சனம் செய்தல்**

30கிராம் அஞ்சனக் கல்லை இரும்புக்கரண்டியில் போட்டு சுடவைத்துத் திரிபாலாக் குடிநீர், தாய்ப்பால் தனித்தனியே 7 தடவை முழுகச்செய்து காயவைத்துக் கல்வத்திலிட்டு அரைத்துத் தேன்விட்டுக் குழம்பாகச் சேகரித்து வைத்தல்.

மையைக் கண்களிலிட்டுக் கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரத்தின் பின் திறத்தல் வேண்டும். மையிடுவதனால் உண்டாகும் வேதனை குறைந்த பின் கண்களை நீரினால் கழுவவேண்டும். இரவில் கண் விழித்தவனுக்கு மையிடக்கூடாது.

**நசியமிடல்**

மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட எண்ணெயை அல்லது நல்லெண்ணெய் தினந்தோறும் இரு மூக்குத் துவாரங்களிலும் சில துளிகள் இடுதலையே நசியமிடல் எனப்படும். சிறுவிரலில் 2 துளிகளை இட்டு இரு மூக்குத் துவாரங்களிலும் வைத்து மாறி மாறி உள்ளிழுக்க வேண்டும். தொடர்ந்து நசியம் செய்வதால் கண்கள், மூக்கு, தொண்டை ஆகியவை நோய்களிலிருந்து பாதுகாத்து, வினைத்

திறனுடன் செயலாற்றுவதையும் அதிகரிக்கும். தினமும் காலையில் அல்லது இரவு படுக்கைக்கு முன்பும் செய்யலாம்.

**அப்யங்கம்**

தலை, கால் உட்பட உடல் முழுவதும் எண்ணெய் பூசித் தேய்த்தல் அப்யங்கம் எனப்படும். ஒழுங்காக எண்ணெய் பூசித் தேய்த்து வந்தால் தோலில் மிகையாக உள்ள கொழுப்பு அகற்றப்பட்டு, தோல் தேஜஸ்யுடன் மிளிர்ந்து மிருதுவாக இருக்கும்.

ஒழுங்காகத் தலையில் எண்ணெய் தேய்த்து வந்தால் இளநரை, முடி உதிர்தல் ஏற்படாது. தலைக் கூந்தல் நீளமாகவும், கறுப்பாகவும் வளரும். ஆழ்ந்த உறக்கம் உண்டாகும்.

*தினந்தோறும் உடம்பிற்கு எண்ணெய் தேய்ப் பதனால்*

- உடல் வலியைப் போக்குகிறது.
- வாயுவைக் கண்டிக்கிறது.
- சர்மம் அழகு பெறுகிறது.

உடலிற்குத் தினந்தோறும் எண்ணெய் தேய்க்கமுடி யாவிடில் வாரத்தில் 2 அல்லது 1 தடவையோ செய்தல் வேண்டும்.

**மனஒழுக்கம்**

ஆரோக்கியமான சரீரத்தைப்போல ஆரோக்கிய மான மனதும் முக்கியமானது. உடலில் நடைபெறும் பல தொழில்கள் மனதினால் நடத்தப்படுகின்றது. மனதை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு மன தின் மூன்று குணங்களில் ஒன்றாகிய சத்வ குணத்தை அதிகரிப்பதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். சித்த மருத்துவம் மனதின் ஆரோக்கிய நிலையைப் பேணுவதற்கு விதிமுறைகளைக் கூறி யுள்ளது. அவையாவன :-

- அறம்
- அன்புடைமை
- நட்பு
- தற்காப்பு
- இனியவை கூறல்
- நடுவு நிலமை
- அடக்கமுடைமை
- ஒழுக்கம் உடைமை

**ருதுசரியை**

அண்டத்தில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் பருவகால மாற்றங்களினால் ஏற்படுகின்றது. இம் மாற்றங்கள் சகல உயிரினங்களையும் பாதிக்கின் றது. இவற்றில் சில மாற்றங்கள் நன்மை பயக்கக் கூடியவை ஏனையவை பாதகமானவை. சூழ்நிலை மாற்றங்களின் அதி உச்ச நன்மையைப் பெறுவதற் கும், தீங்குகளிலிருந்து பாதுகாப்பதற்கும் சித்த மருத்துவம் ஆனது உணவு, நடத்தை, ஒளடதங்கள் போன்றவற்றில் சில ஒழுங்கு முறைகளை வகுத்துள் ளது. இது ருதுசரியை என அழைக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முறைகள் யாவையும் கடைப் பிடித்து வாழ்வதால் ஆரோக்கியமாக வாழ்வதோடு நீண்டஆயுளையும் பெறமுடியும்.

✱ ✱ ✱

ஒருவனுக்கு அழவேண்டியடநிலை ஏற்பட்டால் அழுதுவிட வேண்டும். கண்ணீர்விட்டு அழுவதால் ஒருவனின் உடல் ஆரோக்கியமடைவதுடன் ஜீரண சக்தியும் அதிகரிக்கும். உடலில் புண்களோ காயங்களோ இருந்தால் அவை சீக்கிரமாக ஆறிவிடும். பென்சிலினைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் பிளமிங்தான் இதனைத் தெரிவித்துள்ளார்.

---

சுயநலம், தூய்மைக்கேடு, பொறாமை ஆகியவற்றைப் பெற்றுவிட்ட உள்ளம் எந்தவிதமான இடைஞ்சலுமின்றித் தீமையின் பக்கமே இழுத்துச் செயறபடுகிறது. அதைப்போல மனத்தூய்மை, சுயநலம் இல்லாமை, பெருந்தன்மை போன்ற குணங்களை உடைய உள்ளம் இன்பத்திற்கும், மகிழ்ச்சியான வாழ்வுக்கும் இழுத்துச் செல்லப்படுகிறது.

***- ஜேம்ஸ் ஆலன்***

# அகுபங்சர் (Acupuncture)

Dr. K. ரகுராம்

**அகுபங்சர்**

இது சுமார் 5000 வருடங்களுக்கு முற்பட்ட சிகிச்சை முறையாகும். இது பதினெண் சித்தர்களில் ஒருவராகிய 'போகர்' என்ற மாமுனிவரினால் முதன்முதலாக இவ் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய இதன் பூர்வீகம் இந்தியாவாகும். சீன தேசத்திற்கு இது எடுத்துச் செல்லப்பட்டது என்பதுவே உண்மையாகும்.

"Acus" ("அகஸ்") என்றால் ஊசி. "Puncture" ("பங்சர்") என்றால் துளையிடுதல் என்பது அதன் அர்த்தமாகும்.

மனித உடலில் 12 முக்கிய உள் உறுப்புக்களுண்டு. இந்த உள் உறுப்புக்களிற்கும் உடலின் வெளிப்பகுதியில் அமைந்த உடற்போர்வையாகிய தோலில் அமைந்துள்ள "சக்திப் பாதை" அல்லது "ஓடுபாதை" களிற்கும் சம்பந்தமுண்டு. பிரபஞ்சமானது பஞ்ச பூதங்களினால் ஆக்கப்பட்டது. (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) (சீன தத்துவப்படி ஆகாயமானது மரத்திற்கு ஒப்பிடப்படுகிறது)

மனித உடலானது இந்தப் பிரபஞ்சத்தில் ஓர் அம்சமாகும். அதற்கமைய மனித உடலும் இந்தப் பஞ்ச பூதங்களினாலேயே ஆக்கப்பட்டது.

மண்ணீரலோடு தொடர்பான ஓடுபாதையில் அமைந்துள்ள சக்திப் புள்ளிகளைத் தூண்டுவதன் மூலம் மண்ணீரலைச் சிறப்பாக செயற்பட வைக்க முடியும். எந்தப் புள்ளிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது நுட்பமான, செம்மையான நாடிப்பரிசோதனை மூலம் தீர்மானிக்கப்படும்.

குறிப்பிட்ட ஓடுபாதை, சக்திப் பாதையில் அமைந்துள்ள ஒவ்வொரு சக்திப் புள்ளியும் ஒவ்வொரு பஞ்ச பூதங்களோடு சம்பந்தப்பட்டுள்ளது. குறித்த நோயாளியின் நாடிப் பரிசோதனையில் எந்த எந்தப் பஞ்ச பூதங்களில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகவும், செம்மையாகவும் அறியப்பட்டு அதன்படி எந்தெந்த உறுப்புக்களுக்குச் சக்தியளிக்க வேண்டுமோ அந்த அந்த உறுப்புக்களோடு சம்பந்தப்பட்ட சக்தியோடு பாதைகளில் அமைந்துள்ள பொருத்தமான சக்திப் புள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு அந்தப் புள்ளிகள் ஊசிமூலம் தூண்டப்பட்டுப் பலவீனமான சம்பந்தப்பட்ட உள் உறுப்புக்களிற்குச் சக்தியளிப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட உள் உறுப்புக்களிற்குச் சக்தி ஊட்டப்பட்டு (புத்துணர்ச்சியும், உற்சாகமும் அதி கரிக்கச் செய்யப்பட்டு) நோய் களையப்படும். இதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கப்படு கிறது. இதில் எல்லோரும் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் இந்த சிகிச்சை முறை நேரடியாக நரம்புகளோடு சம்பந்தப்பட்ட சிகிச்சை முறை என்று தப்பான ஓர் அபிப்பிராயம் பரவலாக உண்டு. இது அறியாமை காரணமாக ஏற்படுகிறது. உண்மையில் ஊசி மூலம் சக்திப் புள்ளிகளே தூண்டப்படுகிறது. உண்மையில் நரம்புகளிற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

ஆயுர்வேத சாஸ்திரத்தில் கண்ணிற்குப் புலப்படாத 72,000 நாடிகள் மனித உடலில் அமைந்துள்ளன என்று கூறப்படுகிறது. உண்மையில் இதற்கும் அகுபங்சர் சிகிச்சை முறையில் கூறப்படுகின்ற சக்திப் பாதைகளிற்கும் சம்பந்த முண்டு என்பது திட்டவட்டமான உண்மையாகும்.

அதாவது 12 முக்கிய உள் உறுப்புக்களிற்கிடையேயான "சக்தித்தடை" யானது சக்திப்

புள்ளிகளைத் தூண்டுவதன் மூலம் இல்லாமல் செய்யப்பட்டு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கப்பட்டு உள் உறுப்புகள் முழுமையாகச் செயற்பட வைக்கப்பட்டு, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை மூலை முடுக்கெல்லாம் சக்தி ஊட்டப்பட்டு, புத்துணர்ச்சியும், உற்சாகமும் ஊட்டப்பட்டு "A" யிலிருந்து "z" வரையான அனைத்து நோய்களும் குணமாக்கப்படும். நோய்க்குப் பெயர் முக்கியமல்ல காரணம் தான் முக்கியம்.

இந்த சிகிச்சை முறை "மெய்ஞ்ஞானம்" நிறைந்த ஞானிகளினால் அறியப்பட்டது என்பதனால் சாதாரண மனித அறிவிற்கு எட்டாத எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத மிக உயர்ந்த விஞ்ஞானம் (Great Scientifice) நிறைந்த சிகிச்சை முறையாகும்.

குறித்த நோயாளிக்கு மரத்தின் ஆணி வேரினைப் போன்று ஒரேயொரு நோய் தான். அந்த நோயாளி கூறுகின்ற அனைத்து அறிகுறிகளும் அந்த மரத்தின் பல கிளைகளைப் போன்றது. ஆகவே சிகிச்சை ஒரு நோயாளிக்கு ஒன்றே ஒன்றுதான். அது நோயின் ஆணிவேரினைக் குறிவைத்துத் தாக்குவதாக இருக்கும்.

அதற்கமைய அகுபங்சர் சிகிச்சையில் அறிகுறிகளிற்கான "சிறப்பு சிகிச்சைப் பிரிவு" (Specialization) இல்லை.

உ+ம் காது, மூக்கு, தொண்டைப் பிரிவு, இருதயச் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு, சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவு, கணச் சிகிச்சைப் பிரிவு. மன நோய்ப் பிரிவு போன்றன இல்லை. அகுபங்சர் சிகிச்சையின் சிறப்பம்சம் யாதெனில் (உடல் + மனம்) இரண்டிற்கும் சேர்த்தே சிகிச்சை செய்யப்படுகின்றது.

ஒரு நோயானது, சிறு வயதிலிருந்து தவறான உணவுப் பழக்கங்கள் காரணமாக ஏற்படுகின்றது. முறையான பசியெடுக்காமல் உண்பது, தண்ணீர் அருந்தி அருந்தி உணவு உண்பது, செயற்கைத் தயாரிப்பு உணவுகள் (சீனி, குளுக்கோஸ், பால்மா வகைகள், கன்டோஸ் சொக்லேற் வகைகள், சகல சோடாவகைகள், குளிர்பான மென்பான வகைகள் போன்றன). நொறுக்குத் தீனிகள் உண்பது, அடிக்கடி உண்பது போன்ற பல்வேறு காரணங்களினால் ஆழமாக வேரூன்றி வளர ஆரம்பிக்கின்றது. குறிப்பிட்ட வருடங்கள் வரை வளர்ந்த பின்பு பலவிதமான அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றது.

அதாவது ஒரு நோயாளிக்கு நோய் ஒன்றே ஒன்றுதான். அதை ஆழமாக வேரூன்றிய மரத்திற்கு ஒப்பிடுவோமேயானால் பல வருடங்கள் வளர்ந்த பிறகு தோன்றும் அறிகுறிகளை அதன் கிளைகளிற்கு ஒப்பிடலாம்.

*உதாரணமாக:*

01. இரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பது.
02. தலையிடி, காய்ச்சல்.
03. B.P அதிகரிப்பது.
04. இடுப்புவலி, கழுத்துவலி.
05. கொலஸ்ரோல் அதிகரிப்பது.
06. கண்ணில் தோன்றும் நோய்கள்.
07. சுவாசப்பை சம்பந்தமான அறிகுறிகள்.

போன்ற சகல அறிகுறிகளும் அதன் கிளைகளே, ஆகவே ஒரு நோயாளி எத்தனை அறிகுறிகளைக் கூறினாலும் அதன் அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது ஒரேயொரு நோய்தான். அதாவது நோய் என்ற மரம் ஒன்றே ஒன்றுதான்.

ஆங்கில மருத்துவம் இந்த அறிகுறிகளை இல்லாமல் செய்யும் நோக்கத்திற்காகத்தான் இவ்வளவு காலமும் சிகிச்சை செய்து வருகிறது. இந்த அறிகுறிகளிற்குக் காரணமாக அடிப்படையாக அமைந்த நோய் என்ற மரத்தினை ஆங்கில மருத்துவம் இதுவரை தொடவில்லை என்பது மிகத் தெளிவான விடயம். அதாவது நோயின் விளைவுகளிற்குத்தான் சிகிச்சை செய்து வருகிறார்கள்.

அகுபங்சர் சிகிச்சையை நேர்த்தியாகவும் செம்மையாகவும் செய்பவர் பரிசோதனைக்

கருவிகளையோ, பரிசோதனை றிப்போட்டுக் களையோ, ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஏனெனில் பரிசோதனைக் கருவிகளோ, பரிசோதனை றிப்போட்டுகளோ நோயின் விளைவுகளைத்தான் படம் பிடித்துக் காட்டுமே தவிர நோயை அல்ல. நோயைப் பார்க்கவோ அவதானிக்கவோ முடியாது. ஏனெனில் நோயைக் கண்ணால் பார்க்க முடியாது. (Invisible) அது ஒரு சக்தி வடிவம். சக்தி வடிவமாக இருப்பதால் அதை உணரத்தான் முடியுமே தவிரப் பார்க்க முடியாது. (பிரசவம், விபத்து போன்ற நிலைமைகளை நோயாகக் கருதமுடியாது.)

குறிப்பிட்ட சக்தி வடிவமான நோய் ஒரு உறுப்பினைத் தாக்கத் தொடங்குகிறது. இப்போது சிறிது சிறிதாக அறிகுறிகள் வெளிப்பட ஆரம்பிக்கிறது. இந்த நிலையில் பரிசோதனைக் கருவிகளிற்கு எதுவுமே தென்படாது. நோயின் வளர்ச்சிப் போக்கில் நோயின் விளைவுகள் குறிப்பிட்ட காலப் பகுதியின் பின்பு தான் பரிசோதனைக் கருவிகளில் தெரிய ஆரம்பிக்கும். ஆகவே பரிசோதனைக் கருவிகளிற்கு நோயின் விளைவுகள் தெரிய வரும் காலம் வரை நோயாளிகள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

நோயின் விளைவுகள் பரிசோதனைக் கருவிகளிற்குத் தெரிய வராத காலத்தினுள் நோயாளி ஆங்கில மருத்துவரிடம் சென்றால் அவர் பின்வருமாறு கூறுவார். அதாவது "நாங்கள் உங்களைப் பரிசோதித்ததில் அந்த பரிசோதனை அறிக்கையின்படி உங்களுக்கு ஒன்றுமே இல்லை. ஆகவே நீங்கள் சிறந்த உளவியல் டாக்டர் (Pshychiatric Specialist) ஒருவரிடம் சென்று ஆலோசனை பெறுங்கள்" என்று அறிவுறுத்தப்படுகின்றார். அவர்கள் நோயாளி கூறுவதை நம்பமாட்டார்கள். பரிசோதனைக் கருவிகளைத் தான் முழுமையாக நம்புவார்கள்.

இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் சம்பந்தப்பட்ட நோய் -

1. கடுமையான தலையிடி.
2. கடுமையான வயிற்றுவலி.

போன்றன டாக்டரால் நேரில் பார்த்து உணர்ந்து அறிய முடியாத, நோயாளியினால் மட்டும் உணரக்கூடிய அறிகுறிகள் ஆக இருக்கும்.

*ஆனால்,*

1. வலிப்பு.
2. நடக்க முடியாத நிலை.
3. தலைச்சுற்று மயக்கம்.

போன்ற நேரில் பார்த்து உணரக்கூடிய அறிகுறிகளிற்கு இவ்வாறு உளவியல் டாக்டரிடம் ஆலோசனை பெறும்படி அனுப்ப மாட்டார்கள். மாறாக மருத்துவர்கள் குழம்பிப் போய் இருப்பார்கள். ஏனெனில் பரிசோதனை றிப்போட்டுகளில் ஒன்றுமே தெரியாது. இது பல நோயாளர்கள் அன்றாடம் சந்தித்து வரும் மாபெரும் அனுபவ உண்மையாகும்.

இந்த இடத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் நோயாளியின் உடலில் பஞ்ச பூத மாறுதல்களைத் தெளிவாகவும் துல்லியமாகவும் நாடிப் பரிசோதனை மூலம் அறிந்து செய்யப்படுகின்ற சிகிச்சைக்கு ***மட்டும்தான்*** வெற்றிகரமாக நோயைக் குணமாக்குகின்ற சக்தியுண்டு. (தொற்றுநோய்கள் உட்பட) (Infectious Diseas) என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மனித உடலில் பன்னிரண்டு முக்கிய உள்ளுறுப்புக்களும் சீராகவும், செம்மையாகவும், முழுமையான புத்துணர்ச்சியோடும் இயங்கினால் நோய் இல்லை. இதுவே தெளிவான அடிப்படை மருத்துவக் கோட்பாடாகும்.

அதாவது செய்யப்படுகின்ற சிகிச்சை நோயின் மூலவேரை ஆழமாகவும் வலிமையாகவும் தாக்கி நோயை முழுமையாக வெற்றி கொள்ளக் கூடிய விதத்தில் செய்யப்படுகின்றது. அகுபஞ்சர் சிகிச்சையின் சிறப்பம்சம் யாதெனில் (உடல் + மனம் இரண்டிற்கும்) சேர்த்தே சிகிச்சை செய்யப்படுகின்றது. மேலே கூறப்பட்டது போல ஒரு குறித்த நோயாளிக்கு ஒரேயொரு நோய் தான். அந்த நோயாளிக்குத் தோன்றும் பல அறிகுறிகளையும் பல நோய்களாகக் கருதி

ஒவ்வொரு அறிகுறியையும் தனித்தனி நோயாக்க் கருதி சிகிச்சை செய்ய முடியாது. செய்யப்படுகின்ற ஒரேயொரு சிகிச்சை நோய் என்ற மரத்தின் ஆணி வேரைத் தாக்குவதாக இருக்கும்.

10 நீரிழிவு நோயாளிகளை எடுத்துக் கொண்டால் ஒவ்வொருவருடைய நோயும் அவரவர்களுடைய தனித்தன்மை (Indivituality) வாய்ந்த உடல்வாகுக்கு ஏற்றவாறு தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். ஆனால் ஆங்கில மருத்துவத்தில் எல்லா நோயாளர்களுக்கும் ஒரே விதமான செயற்பாட்டைக் கொண்ட மருந்து தான் சிகிச்சையின் போது வழங்கப்படுகின்றது.

மேலும் கிருமிகள் காரணம் என்று கூறப்படுகின்றதும், நோயாளியைத் தாக்கித் தீவிரமான பாதிப்பை உண்டாக்குவதுமான நோய்கள் உண்மையில் தொடர்ச்சியான ஆங்கில மருந்துகள் பாவித்த பின்பு ஏற்படுகின்ற மருந்துகளின் தீய பின் விளைவுகளினால் ஏற்படுகின்றது என்பதையும் மறுக்க முடியாது. (உண்மையில் மருந்து மாத்திரைகளினால் சம்பந்தப்பட்ட அறிகுறிகளைத் தற்காலிகமாகவும் தொடர்ச்சியாகவும் அமுக்குவதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தி குறைக்கப்படுகின்றது.) அதாவது தொடர்ச்சியான மருந்து மாத்திரைகளின் பாவனை அவருக்குரிய தனித்துவமான நோய் என்ற மரத்தினை வலிமையடையச் செய்து தீவிரமாக வளரச் செய்கிறது.

சிலரின் (பெரும்பாலும் சிறுவர்களில்) தொடர்ச்சியாக ஏற்படுகின்ற காய்ச்சலை ஆங்கில மருந்துகள் கொண்டு அமுக்குவதன் "பின் விளைவாக" உடலில் சிறுசிறு கட்டிகள் உருவாகுவதனைக் குறிப்பிடலாம். (அதில் ஒரு வகையை "கசக்கட்டி" என்றும் மருத்துவர்களால் கூறப்பட்டிருக்கும்) இவ்வாறு கூறப்பட்ட நோயாளியின் கடந்த கால அறிகுறிகளை (Symptom's) ஆராய்ந்தால் கடந்த காலங்களில் அவர் பல கட்டங்களாக ஏற்பட்ட காய்ச்சலை ஆங்கில மருந்துகள் (Febrifuge) கொண்டு அமுக்கப்பட்டதன் பின்விளைவாக இருப்பதனைத் தெளிவாக அவதானிக்கலாம்.

இதற்கு ஆதாரமாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் J.A.M.A பத்திரிகையில் வெளி வந்த தகவல் பின்வருமாறு, (Journal of American Medical Association)
[Int. Med 1999 (P 1185 - 1194) JAMA]

இதுவரையும் மூளைக்காய்ச்சலுக்கு எப்போலா வைரஸ் என்றும் ஜப்பான் வைரஸ் என்றும் இன்னும் பலவிதமான கிருமிகளும் தான் காரணம் என்றும் கூறி வந்தார்கள். ஆனால் இன்று ஆராய்ச்சிகளின் மூலம் தொடர்ச்சியான மருந்து மாத்திரைகளின் பாவனை தான் காரணம் என்று கூறுகிறார்கள். அதாவது மருந்து மாத்திரைகள் மூளைக் காய்ச்சலைத் தூண்டுகிறது எனும் சாரப்பட வெளியிடப்பட்டுள்ளது.

**நோய்களும் அதன் அறிகுறிகளும் (Disease and Symptoms)**

ஒரு பூரண ஆரோக்கியமான நிலையில் இருக்கும் ஒரு மனிதன் உடல், உள, மன, சமூக, ஆத்மீக நன்னிலையில் இருக்கிறான்.

ஒரு நோயானது மனிதனில் பரிணமிப்பதற்குப் பல காரணிகள் எதுவாகின்றன. அதில் மிகவும் முக்கியமான காரணியாகத் தவறான உணவுப்பழக்கம் அமைந்துவிடுகிறது. பரந்துபட்ட மக்களிடையே காணப்படும் அறியாமை காரணமாக நோய் அறிகுறிகளை நோயாகக் கருதி அணுகும் தன்மை காணப்படுகிறது. உண்மையில் நோய் எதிர்ப்புச் சக்தி (Immune Power), நோயை எதிர்த்துப் போராடும்போது வெளிப்படுத்தப்படும் வெளிப்பாடுதான் நோய் அறிகுறிகள் ஆகும். உதாரணமாக ஒருவருக்குக் காய்ச்சல் (ஜுரம்) ஏற்படுகிறதென்றால், அது குறிப்பது யாதெனில் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி பலமாக இருக்கிறது. அந்த நோய் எதிர்ப்புச் சக்தி, உடலில் உந்த ஒரு மூலையிலும் நோய்த் தன்மை இருந்தால் அதை முறியடித்து வெற்றி கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறது என்பதைத் தான் அது குறிக்கிறது. உண்மையில்

ஒரு சிகிச்சை முறை எவ்வாறு இருக்க வேண்டு மென்றால் காய்ச்சல் என்ற நோய் அறிகுறியை ஏற்படுத்திய அந்த நோய்த்தன்மையை முழு மையாக முறியடித்து வெற்றி கொள்ளக்கூடிய வகையில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப் பதாக இருக்க வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்டவுடன் பெரும் பரபரப் பும், கவலையும் அடைந்துவிடுகின்றோம். காய்ச்சலைத் தணிப்பதற்காக மாத்திரைகளை உட்கொள்கின்றோம். காய்ச்சல் மாத்திரை களினால் (Anti Fever Medicines) ஏற்படும் விளைவுகள் என்ன என்பதனைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டிய நிலையில் இருக் கின்றோம். காய்ச்சல் என்பது நோய் எதிர்ப்புச் சக்தியின் உச்சமான இயக்கமாகும். உடலா னது தீவிரமாக நோயை எதிர்த்துக் கொண்டி ருக்கிறது. இந்த நிலையில் நோய் எதிர்ப்புச் சக்தியின் திறனுக்கேற்ப நோய் அழிக்கப்பட்டு வருகின்றது. முக்கியமான இந்த நிலையில் நாம் மாத்திரைகள் மூலம் உடல் வெப்பத்தை தணிக்கிறோம். அதாவது நோய் எதிர்ப்புச் சக்தியைக்கட்டுப்படுத்தி அதன் இயக்கத்தை (Function), அது நோயை எதிர்த்து நிற்கும் செயற்பாட்டை வலுவிழக்கச் செய்கிறோம். அதாவது நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக் கின்றோம். காய்ச்சல் என்பது ஒரு நோயின் ஆரம்ப அறிகுறிதான். இதற்குக் காரணமான அடிப்படை நோய்த்தன்மை உடல் முழுவதையும் ஒருசேரப் பாதிக்கின்றது. இதன் விளைவு பல அறிகுறிகளை (Symptoms) உதாரணமாக தொண்டை வலி, சளி, தொண்டைக் கரகரப்பு, போன்றவற்றினை உடலிலே தோற்றுவிக்கிறது. நோயின் காரணத்தை (Disease Force) நோயின் அடிப்படைத் தகைமையை (Pathogenie Force) உணரத்தான் முடியுமே தவிர, பார்க்கமுடியாது. பரிசோதனைக் கருவிகள் (Scientific diagno-sis) மூலம் நாம் பார்ப்பது, கண்டுபிடிப்பது அனைத்தும் நோயின் விளைவுகளைத்தானே தவிர, நிச்சயமாக நோயை அல்ல.

எந்த ஒரு நோயின் போதும் நமக்குக் காய்ச் சல் ஏற்படவில்லை என்றால் நிச்சயமாக நமக்கு ஒன்று புரிந்தாக வேண்டும். அது எதுவெனில் நாம் மிக முக்கியமான எதிர்ப்புச் சக்தியை இழந்து விட்டோம் என்பதுடன், வாழ்நாள் முழுவதும் குறிப்பிட்ட நோய்த்தன்மை எம்மைவிட்டுப்பிரியப் போவதில்லை என்பதுமாகும். இவ்வாறே எப்போது வெப்ப எதிர்ப்புச் சக்தியை இழக்கின் றோமோ அல்லது ஒவ்வொரு முறையும் காய்ச் சல் ஏற்படும்போது நோயைக் குணமாக்காமல் காய்ச்சலை மட்டும் ஒடுக்குகிறோமோ அப்போதே திட்டவட்டமாக ஒவ்வொரு நோயும் நமது உட லில் நிரந்தரமாகத் தங்க வழிவகுத்துக் கொடுக் கிறோம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

(Every disease becomes chronic when we loss fever Energy Producing capacity and Each we take anti fever medicines the dis-eases enter deep and deeper.

What Scientific Diagnosis is only Pathology i.e.... The Result of a Pathogenic force. The Pathogenic force or the disease force is an energy force and Thus is invisible. This force attacks any week tissue or organ in our body and causes tissue or organ distruction. This is the Pathogenisis. Add the end result of It is the Pathology i.e.....A visible organdamage.

B.P அதிகரிப்பது, இரத்தத்தில் குளுக்கோ சின் அளவு அதிகரிப்பது, தலைவலி, இடுப்புவலி, முழங்கால் வலி, கண்ணில் தோன்றும் அறி குறிகள், காதில் தோன்றும் அறிகுறிகள் எல் லாமே உடலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியின் செயற்பாடு மூலம், உடலினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு ஏற்பாடே (Self Protective Mechanism) ஆகும். கண்ணில் ஒரு நோய் அறிகுறி வெளிப்படின் அதற்குக் காரணமான நோய்த்தன்மை அமைந் துள்ள இடம் கல்லீரல் (கல்லீரலின் தோற்றமும் கண்ணின் தோற்றமும் ஒன்றாக இருப்பதைத் தெளிவாக அவதானிக்கலாம். அதேபோல காதில் நோய் அறிகுறிகள் வெளிப்படின் அதற் குக் காரணமான நோய்த்தன்மை அமைந்

துள்ள இடம் சிறுநீரகம், சிறுநீரகமும் காதின் வெளிப்புறப்பகுதியும் தோற்றத்தில் ஒன்றாக இருப்பதை அவதானிக்கலாம். வாய்ப்பகுதியில் ஏதாவது நோய் அறிகுறிகள் தோன்றினால் அதற்குக் காரணமான நோய்த்தன்மை அமைந்துள்ள இடம் இரைப்பை. அதேபோல கர்ப்பப்பையில் தோன்றுகின்ற, வெளிப்படுத்தப்படுகின்ற அறிகுறிகள் சிறுநீரகத்தின் பலவீனமான சோர்வான இயக்கத்தைக் குறிக்கிறது.

அதாவது சிறுநீரகத்திலுள்ள நோய்த் தன்மையின் வெளிப்பாடு கர்ப்பப்பையில் ஆரம்ப அறிகுறிகளாகவும் (தொடர்ச்சியான இரத்தப்போக்கு, மாதவிலக்குக் கோளாறுகள், வெள்ளைபடுதல்) இடுப்பு வலியாகவும் முழங்கால் வலியாகவும் வெளிப்படுகிறது.

உண்மையில் இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் யாதெனில் நோய்த்தன்மை அமைந்துள்ள இடம் ஒரு இடமாகவும், நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படும் இடம் வேறொரு இடமாகவும் இருக்கிறது.

ஆகவே நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படும் இடத்தில் சிகிச்சை செய்வது மருத்துவ அறிவியலிற்குச் சற்றும் பொருந்தாத விடயம் என்பது நோக்கத்தக்கது. சரியான சிகிச்சைமுறை நோய்த்தன்மை அமைந்துள்ள இடத்தில் அந்த நோய்த் தன்மையை நீக்குவதாக, வெற்றி கொள்வதாக இருக்க வேண்டும். அதற்குச் செய்ய வேண்டிய ஒரேயொரு செயல்முறை, சிகிச்சைமுறை நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பது என்ற ஒரேயொரு செயல்முறை மட்டும்தான். எந்தப் பகுதியில் உள்ள நோய்த் தன்மையையும் (Pathogenic force) எப்படி நீக்கவேண்டுமென்பதும், எந்தெந்த அறிகுறிகளாக வெளிப்படுத்தி நோய்த் தன்மையை இல்லாது செய்ய வேண்டும் என்பதையும் "உடல்" (நோய் எதிர்ப்பு சக்தி பார்த்துக் கொள்ளும்.

ஆத்மா, மனம் இருப்பதை மறுதலித்து விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி (Scientific approach) என்கிற போர்வையில், இரசாயனக் கலவைகளைக் கொண்டு தனியே எலும்புக்கும், சதைக்கும் நரம்புக்கும் சிகிச்சை செய்வது என்றுமே வெற்றியளிக்கப்போவதில்லை என்பது வெள்ளிடை மலை.

அதாவது "மனிதன் என்பவன் தனியே வெறும் உடலையும், சதையையும் எலும்புகளையும் கொண்ட ஒரு சதைப் பிண்டமல்ல. அவனுக்குள் மனம், ஆத்மா, உயிர்ச்சக்தி, உள்மனம், வெளிமனம், ஆழ்மனம், உணர்வுகள், எண்ணங்கள், அதீத உணர்ச்சிகள், கனவுகள், கற்பனைகள் என்று பல தொகுப்புகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு விசித்திரமான படைப்பாகும். இதை எந்த ஒரு மருத்துவ முறை முழுமையாகப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற படி சிகிச்சை அளிக்கிறதோ அது தான் சரியான மருத்துவமுறை. இதை விடுத்து வெறும் உடலிற்கும் சதைப் பிண்டத்துக்கும், உறுப்புகளுக்கும் வெறும் இரசாயன கலவைகளைக் கொண்டு "விஞ்ஞான பூர்வமானது" (Scientific Approach) என்கிற போர்வையில் செய்யப்படுகின்ற சிகிச்சையினால் நோய் அறிகுறிகளை அப்போதைக்கப்போது தற்காலிகமாக அமுக்க முடியுமே தவிர நோயாளி என்கிற முழுமனிதனைக் குணமாக்க முடியாது" (டாக்டர் ஜோசப் போல் (B.H.M.S, M.D ACU) ப (f) மிலி ஹெல்த் ஜுன் 99 பக் 32)

கர்ப்பப்பையில் ஏற்படுகின்ற கோளாறுகளுக்குத் (தொடர்ச்சியான ரத்தப்போக்கு, கர்ப்பப்பைக்குச் சிகிச்சை செய்வதோ, அல்லது கர்ப்பப்பையை அகற்றுவதோ அந்த நோய்நிலைமையைக் குணமாக்காது, மாறாக சிறுநீரகத்திற்குச் சக்தியளிப்பதன் மூலம் (முக்கியமான உறுப்புக்களையும் இயங்கச் செய்து) கர்ப்பப்பைக் கோளாறுகளைத் துரத்தியடிக்க முடியும்.

B.P அதிகரிப்பது என்ற விடயத்தை எடுத்துக் கொள்வோம். "உமக்கு B.P அதிகம்" என்ற இரத்த அமுத்தப் பரிசோதனை முடிவின் மூலம் ஏற்படுகின்ற பயமே அவருடைய ஆரோக்கியத்திற்குக் கேடாக அமைகிறது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

உதாரணமாகப் பூரண ஆரோக்கியமான நிலையிலுள்ள ஒருவரை "உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு (Scientific diagnosis) உட்படுத்தியதில் உங்களுக்கு "ABCD" என்ற ஆட்கொல்லி நோய் பீடித்திருக்கிறது. இன்னும் இரண்டு மாதத்தில் நீங்கள் இறந்து விடுவீர்கள்" என்று கூறினால் அவர் ஒரு மாதத்திலேயே இறந்து விடுவார். அதாவது ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணபயம் சமுதாயத்திலிருந்து தனிமைப் படுத்தல் இரண்டுமே மிகவும் ஆபத்தானது. உயிர்ச்சேதத்தை விரைந்து உண்டாக்கக்கூடியது என்பது தெளிவான விடயம்.

B.P ஒருவருக்கு அதிகரிக்கிறது என்றால் அது உடலின் பாதுகாப்பு ஏற்பாடுகளுள் ஒன்று. எமது உடலில் 12 முக்கியமான உள்ளுறுப்புக் களுண்டு.

பெருங்குடல் (Large Intestine), சிறுகுடல் (Small Intestine), இரைப்பை (Stomach), மண்ணீரல் (Spleen), தேகவெப்பக்கட்டுப்பாட்டு உறுப்பு (Thermo regulating system), இருதய மேலுறை (Pericardium), இருதயம் (Heart), கல்லீரல் (liver), பித்தப்பை (Gall bladder), சிறுநீரகம் (Kidney), சிறுநீர்ப்பை (Urinary bladder) இந்த உறுப்புகளுள் ஏதாவதொரு உறுப்பு ஏதோ ஒரு காரணத்தினால் சோர்வாக இயங்கினால் அந்த உறுப்பைப் பாதுகாப்பதற்காக இரத்த ஓட்டம் தற்காலிகமாக (அந்த உறுப்பிற்குக் கிடைக்க வேண்டிய சரியான சத்தியோட்டம் கிடைக்கும்வரை) இரத்த ஓட்டம் தற்காலிகமாக அதிகரிக்கப்படுகிறது. B.P ஐ அதிகரித்துத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவேதான் B.P கூடியிருக்கிறது. ஏதாவதொரு சிகிச்சை முறையானால் அந்த குறிப்பிட்ட உறுப்புகளுக்கான சக்தியோட்டம் சீராக்கப்பட்டு 12 உறுப்புகளும் எந்த கணத்தில் செயற்பட வைக்கப்படுகிறதோ அந்தக் கணமே அதிகரித்த இரத்த அமுத்தமும் சாதாரண நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது. இதே போலத்தான் கொலஸ்ரோல் (Cholesterol) என்ற கொழுப்பு உடலிலே தேக்கமடைவதும் (இரத்தக் குழாய்களில் படிவடைதல்) இதற்குக் காரணம் இந்தக் கொழுப்பு படிவடைவதைத் தடுப்பதற்குள்ள சரியானதும் நெறியானதுமான ஒரேவழி அந்த படிவடைந்துள்ள கொழுப்பை ஜீரணிக்கச் செய்யக்கூடியவாறு ஜீரண உறுப்புக்களை (சக்தியோட்டத்தை சமநிலைப்படுத்தி) முழுமையான இயக்கத்தில் செயல்படவைப்பதுதான் உள்ள ஒரே வழியே யல்லாமல் B.P ஐக் குறைக்கும் மாத்திரைகள் B.Pஐக் குறைப்பதும் கொழுப்பு நீக்கிய உணவுகள், கொழுப்பு நீக்கிய பால்மா (Non fat Anchor) உண்பதும் எந்த விதமான தீர்வையும் பலனையும் தரப்போவதில்லை.

*உதாரணமாக* B.P உடலிலே அதிகரிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தெளிவான பின்னணிக் காரணமுண்டு. B.P அதிகமாக இருக்கும் போது அதோடு சமாந்தரமாக வேறுபல அறிகுறிகளும் தோற்றுவிக்கப்பட்டிருக்கும். (தலையிடி, தலைச்சுற்று, மயக்கம்)

B.P அதிகரிப்பதும், மற்றைய அறிகுறிகளும் பிறிதொரு வலிமையான, தெளிவான பின்னணிக் காரணத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போலமைந்த சமாந்தர அறிகுறிகளாகும். "இரத்த அமுத்த நோய்" என்பது அர்த்தமுடையதா என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகிறது. அதாவது வழமையாகக் கூறப்படுவது போல B.P அதிகரிப்பதுதான் அதோடு சேர்ந்த மற்றைய அறிகுறிகளுக்குக் காரணம் என்பது மருத்துவத்திற்கு முரணான விடயம் என்பது மறுக்க முடியாததாகிறது. இதே போலத்தான் ரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதும் அதாவது ரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதுதான் அதோடு சேர்ந்த மற்றைய அறிகுறிகளுக்குக் {தலைச்சுற்று, மயக்கம், கோமா நிலை (Coma)} காரணம் என்பது உண்மையல்ல.

உண்மையில் இரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதும் அதோடு சேர்ந்த மற்றைய அறிகுறிகளும் பிறிதொரு வலிமையான தெளிவான காரணத்தினால் எற்படுத்தப்படுகின்ற ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போலமைந்த சமாந்தர அறிகுறிகள் ஆகும். அதாவது

ரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதுதான் நோய்க்குக் காரணம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் இதற்கான சிகிச்சை முறை எப்படி இருக்க வேண்டுமெனில், இதற்கான உண்மையான பின்னணிக் காரணத்திற்கு (ஜீரண உறுப்புக்களைப் பலப்படுத்துவது) அந்தச் சிகிச்சை முறை மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது அறிகுறியாக தோற்றுவிக்கப் படுகின்ற அதிகரித்த குளுக்கோஸை மருந்து மாத்திரைகள் மூலம் பலவந்தமாகக் குறைக்கும் விதத்தில் செய்வது உடலிற்கு ஆபத்தானது என்பது வெள்ளிடைமலை.

இதேபோலத்தான் நீரிழிவும், 45 வயதில் ஒருவருக்கு நீரிழிவு நோய் நிலைமைக்கான அறிகுறிகள் வெளிப்படுகிறதெனில் அந்த வயதில்தான் திடீரென்று அந்தநோய் நிலைமை தோன்றியதென்று அர்த்தமல்ல. 7 வயதிலிருந்து 45 வயதுவரை அவருடைய தவறான உணவுப்பழக்கமே காரணம். முக்கியமாக சீனி, பால்மா, ஐஸ்கிறீம், சோடா, சொக்லெட், இனிப்பு வகைகள் போன்ற செயற்கையான உணவுகள் உண்பது, முறையான பசியில்லாமல் உண்பது, அடிக்கடி உண்பது, நொறுக்குத் தீனிகள் உண்பது, உணவு உண்பதற்கு முன்பும் இடையிடையேயும் தண்ணீர் அருந்துவது, ஐஸ் தண்ணீர் (Ice Water), உடல் வெப்ப நிலையை விட அதிகமான வெப்பநிலையில் உள்ள (அதிகம் சூடான) உணவு உண்பது போன்ற தவறான உணவுப் பழக்கங்கள் முக்கியமான காரணமாக அமைகிறது. சிறுவயதிலிருந்து இந்தத் தவறான பழக்கத்தினால் முறையற்ற ஜீரணம் (Improper digestion) ஏற்பட்டுத் தவறான உணவுச்சத்துக்கள் (தரம் குறைந்த குளுக்கோஸ்) உடற்கலங்களினால், உடல் இழையங்களினால் ஏற்றுக்கொள்ள முடியாத அது நிராகரிக்கின்ற ஊட்டச்சத்துக்கள் உடலிலே தேக்கமடைந்து நோய் நிலைமை வளர்ச்சியடைந்து குறிப்பிட்ட வயதில் சில அறிகுறிகள் உடலில் வெளிக்காட்டப்படுகின்றன.

சதையி (Pancreas)யிலிருந்து இன்சுலின் சுரக்கவில்லையெனில் (Output) அதற்கு ஒரேயொரு காரணம் தரமான இன்சுலினை சுரக்கச் செய்யக்கூடியதாக சதையிக்குத் தரமான ஊட்டச்சத்துக்கள் (Input) உடலினால் (ஜீரண உறுப்புக்களினால்) வழங்கப்படவில்லை என்பதுதான் ஒரேயொரு காரணம். தரமான ஊட்டச்சத்துக்களை வழங்கக்கூடியதாக ஜீரண உறுப்புக்களுக்குச் சக்தி அளிக்கப்பட வேண்டும். அதாவது ஜீரண உறுப்புக்கள் சீராக இயங்கினால் எந்த நோயுமில்லை.

மண்ணீரலும் (spleen), இரைப்பையும் (stomach) நிலம் என்ற பஞ்ச பூதத்துடன் தொடர்பினையுடையது. அந்த இரண்டும் வளமாக ஆரோக்கியமாக இருந்தால் எந்த நோய் நொடியுமில்லாமல் நீண்ட ஆயுளோடு வாழலாம் எந்த டாக்டரும் இல்லாமல் வாழலாம்.

**இந்த இரண்டு உறுப்புக்களும் வளமாக இருப்பதற்கு:-**

01. "நிலத்தில்" விளைந்த கிழங்குகள், பழ வகைகள், தானிய வகைகளை நன்றா கப் பசித்திருக்கும்போது உண்ண வேண்டும்.
02. இரைப்பையினை எப்பொழுதும் காய்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.
03. மண்ணீரல் ஈரப்பதனாக இருக்க வேண்டும். இரைப்பை காய்ந்த நிலையில் (வரட்சி என்பது வேறு) வைத்திருக்க வேண்டுமென்றால் அதற்கான வழி உங்களுக்கு எப்பொழுது தாகம் எடுக்கவில்லையோ அப்பொழுது தண்ணீரின் பக்கம் திரும்பியே பார்க்க வேண்டாம். தண்ணீரின் தேவை, அறிவிக்கப்படாதவரை தண்ணீர் அருந்தக் கூடாது.

02. முறையான தாகம் எடுக்கும்போது மட்டும் உதடு நனையும்படியாக (வாய் வைத்து) தண்ணீர் அருந்த வேண்டும். உதட்டின் வடிவமும் (shape) மண்ணீரல் வடிவமும் ஒரே மாதிரி, இரண்டிற்கும் மிக மிக நெருங்கிய தொடர்புண்டு. உதடு நனையும் படியாகத் தண்ணீர் அருந்தினால் மண்ணீரல் ஈரப்பதனாக இருக்கும்.

மண்ணீரல் ஈரப்பதனாக இருந்தால், (அதேநேரம் இரைப்பை காய்ந்த நிலையில் இருக்க வேண்டும்.) ஜீரணம் ஒழுங்கான தாகவும், முறையானதாகவும் (Proper Function) அமையும். இவ்வாறு அமைந்தால் அதி லிருந்து கிடைக்கும் ஊட்டச்சத்து மிகவும் தர மானதாக (High quality) அமையும். இந்த ஊட்டச்சத்தின் "தரம்" (quality) தான் நீங்கள் நோயொடு வாழப்போகிறீர்களா? என்பதைத் தீர்மானிக்கின்றது. காலத்தின் போக்கில், ஒவ் வொரு நாளும் சேருகின்ற தரத்தின் குறைவின் (Less quality) காரணமாக இருக்கின்ற, வருகின்ற பாதிப்பு மண்ணீரலினால் படிப்படியாகப் பதிவு செய்யப்பட்டு நோயாகப் படிப்படியாக வளர்ச்சி யடைகின்றது. பிற்காலத்தில் ஆலமரம் போன்று பாரிய விருட்சமாக நோய் பரிணாமமடை வதற்கு ஏதுவாக அமைகின்றது.

**03. நன்றாகப் பசியெடுக்கும்போது மட்டும் உண்ண வேண்டும்.**

உங்களுக்குப் பசியில்லையென்று திட்டவட்ட மாகத் தெரிந்தால் உணவின் பக்கம் திருப்பியே பார்க்க வேண்டாம். உங்களுக்கு ஒரு வேளை பசியில்லையென்றால் அடுத்தவேளை வரை உணவு உண்பதனை ஒத்திப்போடுங்கள். ஒரு நாள் முழுதும் பசியில்லையா? கவலையை விடுங்கள். அடுத்தநாள் வரை உணவு உண் பதை ஒத்திப் போடுங்கள்.

உணவு என்பது தேவை என்று அறிவிக் கப்படாதவரை உங்களுக்கு உணவு அவசிய மில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுங்கள். அதேபோல தண்ணீர் தேவை என்று அறிவிக்கப்படாத வரை தண்ணீர் அவசியம் இல்லை என்பதனைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுங்கள்.

உணவு உண்பதற்கு முதல், மணித்தியா லமும் உணவு உண்டபின் அடுத்த, மணித்தி யாலமும் தண்ணீர் வயிற்றினுள் இருக்கக் கூடாது. அதாவது உணவு உண்டபின் 1 மணி நேரத்தின் பின் தாகம் எடுத்துத் தண்ணீர் அருந் தும் வரை சாப்பாடும், தண்ணீரும் சேராமல் பார்த்துக் கொள்வதன் மூலம் இரப்பையை காய்ந்த நிலையில் வைத்திருக்கலாம். அருந் தும் தண்ணீர் சுத்தமான கிணற்று நீர் எனின் பூமிமாதாவின் மடியிலிருந்து எடுத்து அதே குளிர்ச்சியில் அருந்த வேண்டும். இங்கு கொதித் தாறிய நீர் பொருத்தமில்லாத ஒன்று என்ப தனைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுங்கள்.

04. ஒரு விவசாய நிலத்தில் பயிர் வளருகின் றது. அந்தப் பயிரை ***மேவி*** அதன் மேல் வெள்ள மாக நீர் நின்றால் எப்படிப் பயிர் அழுகிப் போகுமோ, அதேபோல இரைப்பையில் விழு கின்ற சூழ்நிலை உணவின்மேல் தண்ணீர் ஆனது வெள்ளம்போல் நிற்கக் கூடாது.

தூறல் நீர்ப்பாசன முறையில் எப்படி நிலம் ஆனது ஈரலிப்பானதாக அமைந்து விளைச் சலை அதிகமாக்குகிறதோ அதேபோல மண் ணீரல் ஈரலிப்பானதாக இருக்க வேண்டும். மண்ணீரல் ஈரலிப்பானதாக இருக்க வேண் டும் என்றால் உதடு நனையும்படியாகத் தண்ணீர் அருந்த வேண்டும்.

யாருக்கு உதடு வறட்சியாக இருக்கிறதோ அவர்களுக்கு மண்ணீரல் வரட்சியாக இருக்கும். நாள்தோறும் அண்ணாந்து தண்ணீர் அருந்து வதன் காரணமாக மண்ணீரல் வரட்சியடை கின்றது. இதன் காரணமாக இரைப்பையின் உட்சுவர்களில் வெடிப்பு ஏற்படுகின்றது. இது தான் "அல்சர்" (ulcer) என்று கூறக்கூடிய வயிற்றுப் புண்ணாகும்.

இதனால் ஏற்பட்ட வெப்பம் காரணமாக வாயில் புண் போடுகின்றது. (அப்தஸ் அல்சர்) இந்த நிலையில் மாத்திரைகள் மூலம் வாய்ப் புண்ணைக் குணமாக்க முடியாது. வாய்ப்புண் ணிற்கான காரணம் வாயில்லை. இரைப்பை யின் உட்சுவர்களிலுள்ள வெடிப்புத்தான் வாய்ப் புண்ணிற்குக் காரணம்.

இரைப்பையிலுள்ள புண்ணை (gastric ulcer) மருந்துகள் மூலம் குணமாக்க முடியாது. ஏனெனில் இரைப்பையின் உட்சுவர்களில்

புண், வெடிப்பு ஏற்படுவதற்குக் காரணம். இரைப்பையின் உட்சுவர்களில்லை.

மண்ணீரலில் ஏற்பட்ட வறட்சிதான் இரைப் பைப் புண்ணிற்குக் காரணம். ஆகவே மருந்து கள் மூலம் இரைப்பைப் புண்ணையும் குண மாக்க முடியாது. இந்த நிலையில் தாகம் எடுக் கும்போது மட்டும் உதடு நனையும்படியாக தண்ணீர் அருந்தினால் படிப்படியாக அல்சர் நோயை விரட்டியடிக்கலாம்.

நிலம் என்ற பஞ்ச பூதத்திற்குரிய இரைப் பையும் மண்ணீரலும் "கவலை" என்ற மனக் குறியோடு ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங் கள்போலத் தொடர்பாக இருக்கின்றது. இரைப்பை யும், மண்ணீரலும் பாதிக்கப்படின் கவலையும் அதனோடு கூட உருவாகிவிடும்.

அதேபோல் அதீதமான கவலை இரைப்பை யையும், மண்ணீரலையும் பாதிக்கும்.

(1) இரைப்பை + மண்ணீரலின் பாதிப்பு (Drowsiness) ⟶ கவலை (Worries) (Stomach & spleen)

இதேபோல

(2) (Liver + Gall Bladder) ⟶ Anger
கல்லீரல் + பித்தப்பை ⟶ கோபம்

இதேபோல அதீதமான வலிந்த கோபம் கல்லீரல் உறுப்பைப் பாதிக்கும்.
மறுதலையாக ஏதாவது ஒரு காரணத்தால் *(உதாரணமாக* ஆங்கில மருந்துகளால்) கல் லீரல் பாதிப்படைந்திருந்தால் அந்த நிலையில் கோபம் அவருக்குரிய மனக்குறியாக இருக்கும்.

(3) இருதயம் ⟶ சந்தோசம் (*மகிழ்ச்சி*) (Happiness)

இருதயம் போதியளவு சக்தி நிலையில் ஆரோக்கியமாக இருந்தால் ஆனந்தமான நபராக இருப்பார். இருதயம் பலவீனமாக இருந்தால் சிறிதளவு சந்தோசத்தைத் தாங்க முடியாமல் மரணம் நிகழும் சந்தர்ப்பங்களும் உண்டு.

(4) சிறுநீரகம் + சிறுநீர்ப்பை ⟶ பயம் (Fear)

சிறுவர்களைப் பயமுறுத்தினால் அவர் களின் சிறுநீரகம் பாதிப்புறும்.
மறுதலையாக ஏதாவது ஒரு காரணத்தினால் *(உதாரணமாக* ஆங்கில மருந்துகளால்) பாதிப் படைந்திருந்தால் அந்த நிலையில் அவர் களுக்குப் "பயம்" ஆனது அவர்களுக்குரிய மனக்குறியாக இருக்கும்.

06. முறையான தாகம் எடுக்கும்போது சிறிது சிறிதாக நிதானமாக உதடு நனையும்படியாகத் தண்ணீர் அருந்தினால் 5 டம்ளர் தண்ணீர் தேவைப்படும் இடத்தில் 2 டம்ளர் தண்ணீரோடு தாகம் அடங்குதற்கு அனுபவரீதியாக உணர்ந்து கொள்ளுங்கள். இதிலிருந்து மிகுதி 3 டம்ளர் தண்ணீரும் அவசியமில்லாத ஒன்று என்பது தெளிவாகின்றது.

கடுமையான தாகம் எடுக்கும்போது அவ சர அவசரமாக "மடக்" "மடக்" என்று அண் ணாந்து குடிக்கும்போது இரைப்பையினுள் தண்ணீரானது தேவை என்று அறிவிக்கப் பட்டதற்கும் மேலாக அதிகளவில் விழுகின்றது. இதனைப் பின்வருவதோடு ஒப்பிடலாம்.

அதாவது நன்றாகப் பசியெடுக்கும்போது அவசர அவசரமாக மெல்லாமல் விழுங்கி னால் தேவை என்று அறிவிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக உணவு வயிற்றினுள் செல்ல ஏது வாகின்றது. அதே உணவை நன்றாக மென்று நிதானமாகச் சிறிது சிறிதாக மென்று உண்போ மாயின் குறைந்த அளவுடன் வயிறு நிறைந்து விடுவதுடன் ஒப்பிடலாம்.

இரைப்பையினுள் உணவு கூழாக இருக்க வேண்டும். கூழான நிலைக்குக் காரணமான ஈரப்பதன் உமிழ்நீரிலிருந்தும் இரைப்பையி லிருந்து சுரக்கின்ற ஜீரண நீரினாலும் மட்டும் ஏற்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது எந்தச் சந்தர்ப்பத்திலும் உணவும் தண்ணீரும் கலக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். ஜீரண (சமிபாட்டு) உறுப்புகள் மிகுந்த சக்தி யோடும் புத்துணர்ச்சியோடும் தன்னுடைய

செயற்பாட்டை நிறைவாக ஆற்றுவதற்குப் பின்வரும் உணவுப் பழக்கத்தைக் கடைப் பிடிக்க வேண்டும்.

01. நீண்ட நேரம் ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். உதாரணமாக 8 மணித்தியால ஓய்வு மிக மிகச் சிறந்தது. இந்த இடைவெளியில் எள்ளளவு உணவு கூட வயிற்றுக்குள் செல்லக்கூடாது. இதன் மூலம் ஜீரண உறுப்புக்களின் சக்தி உயர்வடைகின்றது. முறையான ஜீரணம் நடைபெறும்.

02. கசப்பு, துவர்ப்பு, உப்பு, இனிப்பு என்ற அடிப்படையில் உணவு உண்ணவேண்டும். கசப்பு - (பஞ்ச பூதம் "நெருப்பு") கரும்பச்சைப் பாகற்காய், கொவ்வைக்காய், கறிமுருங்கையிலை, அகத்தியிலை, பொன்னாவரசு, தவசி முருங்கையிலை போன்றன பச்சையாக உண்ணக்கூடிய பச்சைக் காய்கறிவகைகளைப் பச்சையாகவே உண்ண வேண்டும். உப்பு, புளி, சேர்க்கக் கூடாது. கறிமுருங்கை, அகத்தி, பொன்னாவரசு போன்ற இலைவகைகளை நீராவியில் அவித்து உப்பு, புளி சேர்க்காமல் (கசப்பை மறைத்து விடாமல் பாதுகாப்பதற்காகவும், அதன் தரத்தைக் குறையாமல் பேணுவதற்காகவும்) வெறும் சோற்றோடு (ஒரு பிடி) பசியிருக்கும்போது சிறிதளவாக உண்ண வேண்டும். ஒரு மேசைக்கரண்டி அவித்த இலை போதும். இந்தக் கசப்புச் சுவையானது உமிழ் நீரில் மெதுவாகக் கரையும்போது இருதயத்திற்கும், சிறுகுடலிற்கும் (பஞ்ச பூதம் - "நெருப்பு") புத்துணர்ச்சியையும், சக்தியையும் அள்ளி வழங்குகிறது. மருந்துகள், கிருமி நாசினி போன்றவற்றின் பாதிப்புகள் இல்லாத பச்சைக் காய்கறிகள் கீழே வருமாறு :

01. வாழைப்பூ, முருங்கையிலை, அகத்தியிலை, பனம்பழம், மரவள்ளி, முசுட்டை இலை, கொவ்வைக்காய், கொவ்வை இலை, கருணைக் கிழங்கு, தவசி முருங்கையிலை, பொன்னாவரசு, வாழைக்காய், பப்பாசிப்பழம், வெக்கரிக் காய், நீத்துக்காய், சுரைக்காய், பிசுக்கங்காய், முள்ளங்கி, கறிவேப்பிலை, தூதுவளை, மொசுமொசுக்கை போன்றன.

***இனிப்பு - (பஞ்சபூதம், "நிலம்")***

தானாகப் பழுத்த பழவகைகள், பீற்றூட் (பச்சையாக) போன்றன. சீனி, குளுக்கோஸ், சகல சோடா வகைகளும், சகல பால்மா வகைகளும், சகல ஐஸ்கிறீம் வகைகளும், சகல சொக்லெட், கண்டோஸ் வகைகளும், சகல சீனிசேர்த்த வகைகளும் மேற்கூறிய தரமான உணவுவகைகளின் வரிசையில் சேராது என்பதை மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்த இனிப்பான பழங்கள் உமிழ் நீரில் கரையும்போது மண்ணீரல் (Spleen) உறுப்பிற்கும், இரைப்பைக்கும் (பஞ்ச பூதம் - "நிலம்") சக்தியளிக்கின்றது. புத்துணர்ச்சி அளிக்கின்றது. இனிப்பான பழவகைகளையும், பச்சைக் காய் கறிகளையும் (அறுசுவை அடிப்படையில்) உணவு வேளையின் ஆரம்பத்தில் உண்ண வேண்டும். ஏனெனில் பச்சைக் காய்கறிகள், பழ வகைகளில் அடங்கியுள்ள மிகவும் தரமான உன்னதமான சக்தி முழுவதையும் கிரகிப்பதற்காக, அதன்பின்பு தன் ருசிக்காக, மனிதன் திருப்திக்காக சமைத்த உணவை உண்ண வேண்டும். சமைத்த உணவு மிகவும் தரக் குறைவானது. பச்சைக் காய்கறிகள் தானாகப் பழுத்த பழவகைகளில்; அடங்கியுள்ள ஊட்டச் சத்து மிகவும் சக்தி வாய்ந்த உயிரோட்டமான உன்னதமான நீண்ட ஆயுளோடு நோய்நொடி இல்லாமல் வாழச் செய்கின்ற ஆற்றலைக் கொண்டிருக்கின்றது என்பதனை முக்கியமாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். சமைத்த உணவை உண்டபின் அதாவது பசி அடங்கிய பின்பு பச்சைக் காய்கறிகளை உண்பது கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும். அதில் அடங்கியுள்ள உன்னதமான சக்தியைக் கிரகிக்கக் கூடிய ஆற்றல் முறையான உண்மையான பசி உணர்விற்கு மட்டுமே உண்டு.

**துவர்ப்பு (பஞ்ச பூதம் "காற்று")**

வாழைப்பூ, கரட், பீற்றூட், வல்லாரை, தூதுவளை, கடுக்காய், இஞ்சி, முழுநெல்லிக் காய், இது சுவாசப்பை பெருங்குடல் (பஞ்சபூதம்

"காற்று") போன்றவற்றிற்குச் சக்தியையும் புத் துணர்ச்சியையும் அள்ளி வழங்குகின்றது.

## புளிப்பு - (பஞ்சபூதம் "ஆகாயம்" அல்லது "மரம்")

எலுமிச்சம் பழம், பழப்புளி, மாங்காய் இது கல்லீரலுடனும் பித்தப்பையுடனும் தொடர்பு டையது. பெரும்பாலும் புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் பெரும் நன்மையைத் தரும். புளிப்பைத் தோற்றுவித்து பலவிதமான உடல் நோவுகளை யும், மூட்டு நோவுகளையும் தரக்கூடிய உணவுகள் பின்வருமாறு :

பால் (இது கன்றுக்குட்டி, குட்டிகளுக் கென்று மட்டும் பிரத்தியேகமாக இறைவனால் பொதியாக்கப்பட்ட உணவு) பாலும் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுகளும் மனிதனிற்கும் மனித ஆரோக்கியத்திற்கும் முற்றிலும் பொருந் தாத முழுக்க முழுக்கக் கேட்டையே தருகின்ற நன்மையைத் தர எள்ளளவும் தகுதியில்லாத ஒரு பதார்த்தம். அண்மையில் நடிகர் ரஜனிகாந் அவர்கள் தன்னுடைய இளமையின் ரகசியமாக பாலுணவுகளை (பால், தயிர், நெய், மோர்) உண் ணாமல் தவிர்ப்பதைக் குறிப்பிட்டிருந்தார்.

## உப்பு - (பஞ்சபூதம் "நீர்")

கெக்கரிக்காய், நீத்துக்காய், சுரைக்காய், பீசுக்கங்காய், முள்ளங்கி, வத்தாப்பழம் (Water Maloon), பசளி. இந்த நீர்ப்பிடிப்பான சதைப் பிடிப்பான காய்கறிவகைகளில் நீர்ப்பிடிப்பிற் குக் காரணமான "Na+" அமைந்திருக்கின்றது. இந்த இயற்கையான உப்புச் சுவைதான் எங் கள் உடலின் உயிர்ச்சக்தியைத் தோற்றுவிக் கின்ற ஜெனரேற்றர் போன்று அமைந்த, சக்தி மூலாதாரத்திற்கு ஆதாரமான மிகவும் முக்கிய மான மிக உயிரோட்டமான சக்தியை வழங்கு கின்ற அறுசுவைகளில் ஒன்றாகும். இது சிறு நீரகத்திற்கும் சிறு நீர்ப்பையிற்கும் சக்தியை அள்ளி வழங்குகின்றது. ஆகவே ஒவ்வொரு நாளும் கண்டிப்பாக ஒவ்வொருவரும் நாளாந் தம் இழந்து கொண்டிருக்கிற சக்தியைக் கணிச மான அளவு ஈடு செய்யும் நோக்கத்தோடு நன் றாகப் பசிக்கும்போது பசியின் ஆரம்பத்தில் பச்சையாகத் தனியே அந்த உணவை நன் றாக மென்று சாப்பிடும்போது அது உமிழ் நீரில் கரைந்து சிறுநீரகத்திற்கும் சிறுநீர்ப்பை யிற்கும் போதியளவு சக்தியை அள்ளி வழங்கு கின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் இது போன்ற பச்சைக் காய்கறி வகைகளை உண்ணும் போது கறி உப்பையோ வேறு ரசாயனப் பதார்த் தங்களையோ சேர்க்கக்கூடாது என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### மண்ணீரலைச் சோர்வடையச் செய்யும் உணவு வகைகள்

01. சீனி - இது நாக்கிலே இனிப்பைத் தரு கின்ற மிகக் கொடிய விஷமாகும். இது ஆங் கில மருந்துகளுக்கு ஈடிணையானது.
02. பால்மா (சகல வகைகளும்).
03. குளுக்கோஸ் (ஏனெனில் குளுக்கோஸ் ஆனது ஜீரணத்தின் இறுதி விளைவாகும். இது இயற்கை உணவுகளின் மூலம் ஜீர ணத்தின் இறுதியில் உருவாக வேண்டுமே தவிர நேரடியாக நாக்கில் போடுவது மகா மகா தவறாகும்.)
04. ஐஸ் தண்ணீர்.
05. பால்.
06. தண்ணீரும் உணவும் சேர்ந்து வயிற்றுக் குள் செல்லும் சந்தர்ப்பங்கள். அதாவது 2.00 - 2.30 வரை உணவு உண்பதற்குரிய நேரமாயின் 1.00க்கும் 3.00 க்கும் இடை யில் தண்ணீர் அருந்தக் கூடாது.
07. சோடா (சகல வகைகளும்).
08. சகல குளிர்பான வகைகள்.
09. தண்ணீர் கலந்து பழச்சாறுகளை அருந்து தல் (இளநீருடன் பழங்களைக் கலந்து பழச் சாறாகப் பசி வேளையில் மட்டும் அருந்துதல்.

### கல்லீரலைப் பாதிப்பவை

01. ஆங்கில மருந்துகள்.
02. பசியின் அளவை மீறி உண்டது.
03. செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற இர சாயனத் தன்மை வாய்ந்த உணவுகள்.

சிறுநீரகங்களைப் பாதிப்பவை

1. சகல வகை ஆங்கில மருந்துகளும் (விற்றமின் மாத்திரைகள் ரொனிக் வகை உட்பட).
2. அதீதமான உடலுறவு, அளவுக்கு மீறிய சிற்றின்ப பழக்கவழக்கங்கள் (இதன் மூலம் சிறுநீரகத்தின் சக்தி மோசமான அளவிற்குக் குறைவடைந்து உயிர்ச்சக்தி (நோய் எதிர்ப்பு சக்தி) மோசமான அளவிற்கு குறைவடைகின்றது. இதன் மூலம் மோசமான நோய்கள் ஆலமரம் போன்று விருட்ஷமாக விழுதுவிட்டு வளர ஏதுவாகின்றது.

07. உங்களுடைய இருதயம் அமைதியாகவும் நிதானமாகவும் இயங்கினால் எந்தவிதமான நோயுமில்லை. மூச்சுப்பயிற்சியின் மூலமும் தியானம் மூலமும் இதனை எளிதாக அடைந்து கொள்ளலாம். எங்களுடைய இருதயத்தின் அமைதியான இயக்கத்தில்தான் உங்கள் ஆனந்தமான வாழ்க்கையின் ரகசியம் முழுவதும் அடங்கியிருக்கிறது.

1) எளிமையான மூச்சுப் பயிற்சி

நீண்ட நேரம் பொறுமையாக வலியில்லாமல் அமர்ந்திருக்கக் கூடிய எளிதான ஆசனம் ஒன்றினைத் தெரிவு செய்து கொள்ளலாம். ஆழமாகவும் நிதானமாகவும் மூச்சை உள்ளிழுத்து (மூக்கின்வழி) நிதானமாக நீண்டநேரம் வாயினால் வெளிவிட வேண்டும். இங்கு மூச்சினை வெளிவிடுதல் உள்ளிழுக்கும் நேரத்திலும் நீண்டதாக அமைய வேண்டும். ஏனெனில் வெளிவிடும் வாயு $CO_2$ (கழிவு) என்பதனால்.

2) தியானம்

உங்களுடைய இருதயத்தில் உறைந்திருந்து உங்களை உயிரோட்டமாக வழிநடத்துகின்ற உங்களுடைய இறைவனை முதலில் விசுவாசமாக உணரவேண்டும். என்னுள் உறைந்து (இருதயத்தில்) என்னை உயிரோட்டமாகத் தேவைகளை அறிவித்து வழிநடத்திக் கொண்டிருக்கிறார். என்று முதலில் விசுவாசமாக உணர வேண் டும். உச்சி முதல் உள்ளம் கால் வரை புல்லரிக்கத்தக்கதாகக் கண்ணீரோடு பூரண சரணடைதலோடு உணர வேண்டும். பின்பு காலையும் மாலையும் அகக் கண்களால் பூரணசரணமடைதலோடு நான் என்ற ஆணவம் துளியுமில்லாமல் அகக் கண்களால் தியானித்து வரவேண்டும்.

இவ்வாறு தியானித்து வந்தால் உங்கள் இருதயம் வலிமையடையும் புத்துணர்ச்சியடையும். எங்கள் உடலில் இருதயத்திற்கு மிக உயர்ந்த ஸ்தானம் வழங்கப்பட்டிருக்கிறது.

❖ ❖ ❖

உற்சாகத்துடன் எப்போதும் நம் கடமையைச் செய்தல் வேண்டும். உலகில் 58 வீதத்தினருக்கு அவர்கள் விரும்பாத வேலைதான் கிடைத்துள்ளது. உற்சாகம் ஒன்றினால்தான் தாங்கள் விரும்பாத தொழிலில்கூடச் சாதனை படைத்திருக்கிறார்கள். ஊக்கமான குணம்தான் மற்ற எல்லாக் குறைகளையும் விரட்டியடிக்கின்றது.

*- நெப்போலியன் ஹில்*

---

திறமையுள்ள மாலுமி காற்றையும், அலையையும் தனக்குச் சாதகமாகத் திருப்பிக் கொண்டு கப்பலைச் சரியாகச் செலுத்திக் கரையை அடைந்துவிடுவான்.

*- எட்வர்ட் கிப்பன்*



# நெக்டெப் திட்டமும் அதன் செயற்பாடுகளும்

கிருஷ்ணானந்தன் பிரசன்னா
முகாமைத்துவ உதவியாளர்,
நெக்டெப்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

எமது நாடாகிய இலங்கை ஓர் அழகிய தீவு. இது மனித வாழ்க்கைக்குத் தேவையான பெரும்பாலான வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடாகிய இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்குப் பல வழிகளிலும் இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எனினும் பல வருடங்களாகத் தொடரும் யுத்த சூழ்நிலைகளும், 2004ம் ஆண்டு டிசம்பரில் பாரிய அழிவை ஏற்படுத்திய சுனாமியும் அரசின் முயற்சிகளுக்குத் தடங்கல்களாக அமைந்துகொண்டிருக்கின்றன, அமைந்துவிட்டன.

எமது நாடு பொருளாதார ரீதியில் பலமற்றதாகவுள்ள நிலையில் அரசு சர்வதேசத்திடம் உதவிகளை நாடி நிற்கின்றது. அதற்கிணங்க சர்வதேசமும் உதவிகளைச் செய்து வருகின்றது. அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியினைக் கடனாகவும், நன்கொடையாகவும் வழங்கி வருகின்றது. பெறப்பட்ட இந்நிதிகளைக் கொண்டு பல திட்டங்கள் நியாப் (NEIAP), நிகொட் (NECORD), நேர்ப் (NEHRP) போன்றன நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்கள் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே (யுத்தம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## நெக்டெப் (NECCDEP)

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களில் பின்தங்கிய, வறிய நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடடையச் செய்யும் நோக்குடன் 2005ம் ஆண்டின் நடுப்பகுதியில் "வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்" [North East Coastal Community Development Project (NECCDEP)] ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியின் பெரும்பகுதியை ஆசிய அபிவிருத்தி வங்கியே [Asian Development Bank (ADB)] ஒதுக்கித் தந்துள்ளது. அதாவது ஆசிய அபிவிருத்தி வங்கி 20 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகவும், நெதர்லாந்து அரசு 1.5 மில்லியன் அமெரிக்க டொலரை உதவியாகவும். இலங்கை அரசு 5.6 மில்லிய்ன அமெரிக்க டொலரைப் பங்களிப்பாகவும் மற்றும் திட்டப் பயனாளிகள் 1.3 மில்லியன் அமெரிக்க டொலரைப் பங்களிப்புமாக மொத்தம் 28.5 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுத் தேச நிர்மாண மற்றும் பெருந்தோட்ட உட்கட்டுமான அபிவி ருத்திக்கான அமைச்சினூடாக [Mininstry of Nation Building & Estate Infrastructure Development] இத்திட்டம் கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணத்தில் இன்னமும் இத்திட்டம் (நெக்டெக்) ஆரம்பிக்கப்படவில்லை.

இது இவ்வாறிக்க 2004ம் ஆண்டு டிசம்பரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களை விரைவாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் 28 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகத் தந்துதவியதனால் நெக்டெப் திட்டத்தின் ஒரு பகுதியாகிய (பகுதி பீ) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள் கட்டுமானம் செய்யும் திட்டம் [(ராப் - பீ - நெக்டெப்) TAARP - B - NECCDEP] 2005ம் ஆண்டின் பிற்பகுதியளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 06 மாவட்டங்களில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு. திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை) ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

நெக்டெப் திட்ட தலைமை அலுவலகம் திருகோணமலையிலும் மாவட்டத் திட்ட அலுவல கங்கள் அந்தந்த மாவட்டங்களிலும் அமைந் துள்ளன.

**நெக்டெப்பின் நம்பிக்கை**

- மக்கள் அறிவுள்ளவர்கள்.
- மக்கள் அனுபவமுள்ளவர்கள்.
- மக்கள் இயலுமையுள்ளவர்கள்.
- மக்கள் வளமுள்ளவர்கள்.
- மக்களால் அடையாளங் காணமுடியும்.
- மக்களால் தீர்மானம் எடுக்கமுடியும்.
- மக்களால் திட்டமிட முடியும்.
- மக்களால் சவால்களைத் தீர்க்க முடியும்.

ஆகவே அவர்கள் தங்களுடைய வாழ்க் கையை மாற்றியமைக்க முடியும்.

**நெக்டெப்பின் குறிக்கோள்**

திட்டத்தின் குறிக்கோளானது திட்டப் பகுதி களில் உள்ள சமூகத்தவர்களின் வறுமையைக் குறைப்பதுவும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமாகும்.

**நெக்டெப்பின் நோக்கம்**

திட்டத்தின் நோக்கம் திட்டப் பகுதிகளில் வறுமையில் வாழ்கின்ற சமூகத்தவர்களுக்கு முன் னுரிமை அளித்து நிலைபேண்தகு வாழ்வாதா ரத்தில் முன்னேற்றமடையச் செய்வதும், இயற்கை வளங்களைச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதும் ஆகும். அத்துடன் திட்டமானது பெண் களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங் களின் நலன்களுக்கும், மேம்பாட்டிற்கும் முக்கிய கவனம் செலுத்துகின்றது.

**யாழ் மாவட்டத்தில் ராப் - பீ - நெக்டெப்**

யாழ் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் நெக்டெப் திட்டத்தின் ஒரு பகுதியாகிய (பகுதி பீ) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள் கட்டுமானம் செய்யும் திட்டம் [ராப் - பீ - நெக்டெப் TAARP - B - NECCDEP] 2005ம் ஆண்டின் பிற்பகுதியளவில் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ராப் (TAARP) மாவட்டத் திட்ட அலுவலகம் யாழ் மாவட்ட செயலகத்தில் இயங்கி வருகின்றது. வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 17 கிராமங்களும், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் 15 கிராமங்களும் (வடமராட்சி கிழக்கில் 10 கிராமங் களில் தற்போதைய சூழ்நிலை காரணமாகத் திட் டம் தொடரப்படவில்லை) தெரிவு செய்யப்பட்டு ஆண்டு ரீதியாகப் (2005 - 08, 2006 - 05, 2007 - 09) பிரிக்கப்பட்டு அரச சார்பற்ற பங்காளி நிறுவ னங்களினூடாகத் (சேவா லங்கா மன்றம் - 16 கிராமங்கள், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபி விருத்திக்குமான நிறுவனம் - 06 கிராமங்கள்) திட்ட அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன.

யாழ் மாவட்டத்திற்கு உட்கட்டுமான அபிவி ருத்திக்காக ரூ. 160 மில்லியனும், சுயதொழில் முயற்சிகளினூடாக வாழ்வாதாரத்தை மேம் படுத்துவற்காக ரூ. 25.6 மில்லியனும், சமூக வலுவூட்டல்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆற்றல் மேம்படுத்தும் பயிற்சிகள், தொழில் திறன் பயிற்சிகள் போன்றவற்றிற்காகச் சில மில்லியன் களும் ஒதுக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கில் 10 கிராமங்களில் தற்போதைய சூழ்நிலை கார ணமாகத் திட்டம் தொடரப்படவில்லையாதலால் அவற்றிற்குரிய நிதியுடன் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் 22 கிராமங்களில் மிகுதியாகக் கிடைக்கும் நிதியையும், திட்ட தலைமை அலு வலகத்தினால் மேலதிகமாக ஒதுக்கப்பட்ட நிதி யையும் சேர்த்து அண்ணளவாக ரூ. 110 மில்லி யன் செலவில் பொதுச் சந்தைக் கட்டடமொன்று பருத்தித்துறை நகர மத்தியில் அமைக்கப்பட வுள்ளது. ராப் திட்டம் யாழ் மாவட்டத்தில் 2009ம் ஆண்டு யூன் மாதமளவில் பூர்த்தியடையவுள்ளது. எனினும், சமூகச் சூழ்நிலை தொடருமாயின் நெக்டெப் திட்டம் யாழ் மாவட்டத்தில் ஏனைய அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளது.

**ராப் - பீ - நெக்டெப்பின் கீழ் மேற்கொள் ளப்படும் திட்டச் செயற்பாடுகள்.**

**01. உட்கட்டுமானத் திட்டங்கள் .**

ராப் - பீ - நெக்டெப் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்படும் திட்டச் செயற்பாடுகளில் உட்கட்டு

மானத் திட்டங்கள் முக்கியமாகச் செய்யப்படு கின்றன. இவ்வுட்கட்டுமானத் திட்டங்களுக்கு ரூபா 110 மில்லியன் (5 மில்லியன் வீதம் 22 கிராமங் களுக்கு) ஒதுக்கப்பட்டபோதும் ரூபா 88 மில்லிய னுக்கான வேலைத் திட்டங்களே இனங்காணப்பட் டுள்ளன. அதன்படி 22 கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 74 உட்கட்டுமான உபதிட்டங் களில் 34 திட்டங்கள் நிறைவடைந்து மக்களின் பயன்பாட்டிற்காக மக்களிடம் கையளிக்கப்பட் டுள்ளன. மிகுதித் திட்டங்கள் இவ்வருட இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

இத்திட்டங்கள் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் கிராம மட்ட அமைப்புக்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலால் கிராம மக்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதுடன் பொருளாதார ரீதியிலும் பயனடைகின்றனர்.

இதற்கு மேலதிகமாக பருத்தித்துறை நகர மத்தியில் ரூ. 110 மில்லியன் செலவில் பொதுச் சந்தைக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

### திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் உட்கட்டுமானங்கள் சில....

1. பலநோக்கு மண்டபங்கள், சனசமூக நிலையக் கட்டடங்கள் அமைத்தல்.
2. முன்பள்ளிகள், சிறுவர் பூங்காக்கள் அமைத்தல்.
3. பொதுக் கிணறுகள், குடிநீர்த் தாங்கிகள் அமைத்தல்.
4. தொழிற் பயிற்சிக் கூடங்கள், உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.
5. பொதுச் சந்தைக் கட்டடங்கள், சிறு வீதிகள் அமைத்தல்.
6. பொது மலசல கூடங்கள், குப்பை கூழங்கள் சேகரிக்கும் தொட்டிகள் அமைத்தல்.

### 02. வாழ்வாதார மேம்பாட்டிற்காகச் சுழற்சிமுறைக் கடன் திட்டங்கள்

சமுதாய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் அடிப்படையாக உள்ள பிரச்சினை சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர்களுக்கிடையேயுள்ள நிதிப் (பணம்) பற்றாக்குறையாகும். சிறு தொழில் முயற்சிகளுக்கான கடன்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக, தெளிவாக இனங்காணப்பட்ட வருவாய் தரும் சிறு தொழில் முயற்சிகளுக்காக ராப் - பீ - நெக்டெப்பின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காகப் புதிதாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை உரு வாக்கியும், ஏற்கனவே உள்ள மாதர் கிராம அபி விருத்திச் சங்கங்களைப் பலப்படுத்துவதுடன் அவற்றின் செயற்பாடுகளை வலுப்படுத்தியும் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுச் சுழற்சிமுறைக் கடன்கள் வழங் கப்படுகின்றன. பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்பங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இவ்வாறு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு நன்கொடையாக வழங்கப்படும் நிதியானது அச்சங்கங்களினால் சுழற்சிமுறைக் கடன் நிதிகளாகப் பயனாளிகளி டையே பயன்படுத்தப்படும். இதனால் நிதியின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையும், பலருக்கும் பயன்படும் தன்மையும் உறுதிப்படுத்தப்படு கின்றது. யாழ் மாவட்டத்திற்கு வாழ்வாதார மேம்பாட்டிற்காகச் சுழற்சிமுறைக் கடன் திட்டங்களுக்குத் திட்ட அலுவலகத்தால் ரூபா 25.6 மில்லியன் ஒதுக்கப்பட்டு, அதில் ரூபா. 17 மில்லியன் 23 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக 776 பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயனடைந்த பயனாளிகள் ஆர்வத்துடன் சிறு தொழில் முயற்சிகளைச் செய்து வருமானங்களை ஈட்டி வருகின்றனர்.

### 03. விழிப்புணர்வு, ஆற்றலை மேம் படுத்தும் பயிற்சிகள்

இத்திட்டத்தின் கீழ் திட்டக் கிராமங்களிலுள்ள கிராம மட்ட அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுக்குத் தலைமைத்துவம், சூழல், பால்நிலை அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு, கணக்கு வைப்பு முறைகள், ஆற்றலை மேம்படுத்துதல் போன்ற பயிற்சிகள் நடாத்தப்பட்டு அவர்களின் ஆளுமை, வாழ்க்கைத் தரங்கள் உயர்த்தப்படுகின்றன.

**04. தொழில் திறன் பயிற்சி வகுப்புக்கள்**

திட்டக்கிராமங்களிலுள்ள இளைஞர்யுவதிகள், தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற் காகத் தொழில்திறன் பயிற்சி வகுப்புக்கள் வழங் கப்படவுள்ளன. இப்பயிற்சிகளுக்கான பயனாளி கள் தெரிவு செய்யப்பட்டு அந்தந்தத் திணைக் களங்களினூடாகத் துறைசார் வளவாளர்களினால் (Resource Person) பயிற்சிகள் வழங்க ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

01. மேசன் பயிற்சி,
02. தச்சுப் பயிற்சி,
03. அலுமினியம் பொருத்தும் பயிற்சி,
04. அழகுக்கலைப் பயிற்சி,
05. வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி,
06. கருவாடு பதனிடும் பயிற்சி,
07. வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி,
போன்றன.

இவ்வாறு கீழ்மட்ட, வறுமை நிலையிலுள்ள பின்தங்கிய மக்களைப் பல வழிகளிலும் வலுப் படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை இத் திட்டம் உயர்த்தியுள்ளது, உயர்த்தி வருகின்றது. எனவே வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு கிடைத்த பலன்கள் யாழ் மாவட்டத் தின் ஏனைய கரையோரப் பகுதிகளுக்கும் கிடைக்க நெக்டெப் திட்டத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள் யாழ் மக்கள்.

❖ ❖ ❖

ஜலதோசம் பிடித்தவர்கள் கைக்குட்டையால் மூக்குப் பாதையை அழுத்திப் பிடித்துக்கொண்டு மூச்கைச் சிந்துவர். இது தவறான பழக்கம் என்று டாக்டர்கள் கூறுகின்றார்கள். மூக்கை விரலால் அழுத்தும்போது வெளிவரவேண்டிய சளி உள்ளே போய்விடுகின்றது. பின்பு நடுச் செவியில் புகுந்துகொண்டு விடுகின்றது. இதனால் சைனஸ் தொந்தரவும், மூக்கு அழற்சியும் உண்டாகலாம் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

---

**எறும்புகள் ஏன் சாரை சாரையாகப் போகின்றன?**

எறுப்புக்குக் கண்பார்வை மிகக் குறைவு. ஆகவே அதன் உடலில் கசியும் ப்யூரமோன்-ப்யூமரிக் அமிலம் போன்ற இரசாயனப் பொருனின் வாசனையை நுகர்ந்தபடி ஓர் எறும்பு இன்னோர் எறும்பைப் பின்பற்றுகின்றது.

---

ஐந்து வெற்றிலை, ஒரு பாக்கு, கொஞ்சம் கற்பூரம், மூன்று தக்கோலம், கஸ்தூரி, கராம்பு, சங்கு சூரணம், சிறிது ஜாதிக்காய் சேர்ப்பதுதான் சரியான தாம்பூலமாகும்.

---

**ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவம் பத்து**

| | | | |
|---|---|---|---|
| 1. | காப்பு | 6. | வருகை |
| 2. | செங்கீரை | 7. | அம்புலி |
| 3. | தால் | 8. | சிறுபறை |
| 4. | சப்பாணி | 9. | சிற்றில் சிதைத்தல் |
| 5. | முத்தம் | 10. | சிறு தேருருட்டல். |

# Contributions in English

- Playing with parai Araivon (herald) in Kooththu (traditional theatre) of the thamils of Sri Lanka.
- Global warming and climate changes – an overview
- For banking on banks

# PLAYING WITH PARAI ARAIVON (HERALD) IN KOOTHTHU (TRADITIONAL THEATRE) OF THE THAMILS OF SRI LANKA

**S. Jeyasankar**
Senior Lecturer,
Eastern University.

**From Tradition to Reformulation : A Journey through Participatory Action Research.**

Parai (Drum) is the ancient percussion instrument of the Thamils but the people who are playing the musical instrument Parai being considered as outcastes of the heirachical community of the Thamils of Sri Lanka. The word used in Thamil for Parai Araivon was 'Valluvan'. Etymology of Va'l'luvan is from the root Va'l, which in old Thamil meaning 'big sound' and also note that the word Vi'l'luthal means expression. Va 'l'luva Muthumakan is another phrase used for a Paraiyar in old literatures.

The phrase used in Jaffna until recent times for the Paraiyar chieftain who was also the Government herald was 'Pirasiththa Mooppan' or 'Mooppannar'. Pirasiththam means announcing. Traditionally 'Moop pan' does the 'pirasitham' on behalf of the com munity and later his services were intro duced into Government practices too. But this has not produced any positive status to the community of the 'Paraiyar' but it has only been an extension of the traditional status.

Even though the 'Parai' and 'Paraiyar' has literary and epigraphical evidences from ancient time, the practive of casteism and its oppressive nature has provided only a mar ginalized space for the art to be practiced. Because of this negative atmosphere the power of this vibrant performing arts and the caste which played the parai (drum) for generations are not recognized as "High culture" and "High Caste" respectively.

The people, who are talking of Cultural Identity and National Culture, boast the po wer of the vibrant art, tha 'Parai' (Traditional Drum) and 'Parai Mela Kooththu' (Tra ditional Drum Dance) in their rhetoric but in practive there has been very little effort made to recognize this art form. There are strong voices to celebrate the power of National and Cultural Identity of the Thamils of Sri Lanka but the power of casteism is suppressing the art of 'Parai', 'Parai Mela Kooththu' and the Parayar caste.

The heart throbbing beats of 'Parai' with the rhythmical movements of 'Parai Mela Kooththu' are vanishing under the same roof of our cultural pride of Thamil Nationalism of the Sri Lanka Thamils.

Losing an ancient and vibrant art because of casteism and the willingness or the urge to shed the caste identities because of the oppressive nature of casteism is the biggest challenge faced by the people who are celebrating caste differences and identities in Multicultural societies.

There are socio-cultural and a political resistance throughout the years against the oppression of casteism in the socio-cultural history of the Thamils of Sri Lanka. However, the pace of transformation is being experienced in reality is limited. The wish to dislocate the caste identities from the art form which belongs to the caste

which publicly identifies the people with the caste is the strong example in this regard.

Two cases which will be narrated below will bring out the real and the complicated nature of this issue, one reporting the experience of a member of the wider community hence an outsider and the other reporting the experience of a member of the 'paraiyar' community as an insider respectively.

## Case one :

Most of the Gods and Goddesses of the "High Culture" of the Thamils of Sri Lanka are artists in nature but it's rare to see them playing Parai or carrying them in their hands or shoulders. It is within this context that the painting of "Pillaiyar Parai" by Kamala Vasuki makes a stand as one of the artistic protests in the cultural history of resistance against caste oppressions.

Pillaiyar the Artist God of the Thamils came out from his Temple and plays the Parai Mela Kooththu with the traditional drum player. Scripture says that the paraiyar community is barred from entering into a Pillaiyar Temple.

This depiction of Pillaiyar playing the parai aroused strong reactions among those who attended the exhibition. Lord Pillaiyar is a dancer and player of Maththalam or Mirudangam the percussion instrument of the High Culture. Pillaiyar is considered to be the Master of Arts and Knowledge too. So it is not unconceivable to portray Pillaiyar playing the parai. However, there were sentiments expressed along the lines of 'How can Pillaiyar play the Parai?", "Pillayar will not play Parai" and "He can't be depicted like that". These sentiments have their roots in casteism.

## Case Two :

Parasuraman of Kaluthavali, Madda kkalappu (Batticaloa), Sri Lanka is a living artist and exponent in Parai Melam and in Parai Mela Kooththu. He is clear and strong in his stand and facing challenges between two opposing and oppressive forces from within and outside.

The people who own the art want to throw it away as a shame on them but peo ple who value the power of the art of Parai and Parai Mela Kooththu are fighting for its survival. Parasuraman is one of those who have fought to preserve the art form bet ween the oppressions of the caste domi nation and the resistance against the caste oppression.

Section of the Paraiyar community banned the art from its practice and publicly requested, through pamphlets, the wider community not to invite the artists for the services of the social customs. They also declared that those who wish to preserve the art are welcomed to proceed with it while they insisted that they wanted to liberate themselves from the cursed art of Parai. They argued that they want to liberate the paraiyar community from the intolerable cultural burden of Parai and the associations made with that caste.

Those who banned the art from practice waged violence by damaging and burning the Parai Melam and forced the practicing artists into isolation from their own community in order to achieve their pur poses, leaving them in the middle of the river.

The Parai Melam players were forced to engage themselves in doing odd jobs is the outcome of it. Some of them turned to begging too. Section of the artists who were forced to give up their profession returned

to their old profession sooner or later for their mere survival.

Sections of the educated people from the Government and Non Governmental sector and students from Higher Education Institutions are directly and indirectly involved in the activity of banning of playing Parai Melam.

What made them to do so? Why are they letting their own caste and creed down in a vulnerable position? What made them feel that begging is far better that playing Parai? What made them throw away the cus toms that was being practiced for gene rations? How the customs were designed to make Paraiyar and Parai into a dege nerated situation?

How the people who are talking of Thamil culture cultural Identity of Sri Lankan Tha mils, National Culture and National Identity of Sri Lankan Thamils will respond to it? Why is an ancient art and the community forced into a crisis situation? Does this affect the community as a whole which is engaged in a national liberation struggle?

Is it a threat to the cultural status of the Sri Lankan Thamils facing existential and identity crisis within a country? How it reflects the state of cultural consciousness of the Sri Lanka Thamil community which engaged in a struggle for self determination? What is the place of a community which is being considered one of the ancient in the history of the Thamils in the cultural forma tion in socio-cultural politics of the modern period?

How the stake holders of the social development consider the social conflicts particular to local socio cultural contexts?

How the forces that commercialize the life of the people transform an art connected with community life into a commodity for tourist markets respond into this crisis?

Those who cannot overcome the cas teism, introduces electronic Parai in Tem ples. Invention of electronic Parai in not sim ply an electronic miracle to be excited with but to debate its socio-political and cultureal contrivances is unaviiodable.

This article concentrates on the role and portrayal of the character of Parai Arai von (Drummer) in Kooththu, the traditional theatre of the Thamils of Sri Lanka.

The traditional portrayal of Parai Araivon is always a problematic issue in the Kooththu space. There are stories of conflicts, clashes and compromises always part and parcel of the history of Kooththu.

The Pariayar caste is always against the traditional portrayal of Parai Araivon in Kooththu. Why the Paraiyar community is against the portrayal of Parai Araivon in Kooththu.

The understanding of the structure of performance of Parai Araivon in Kooththu performance will help us in this regard.

The arrival or appearance onto the 'Kalari' (round stage), the introduction of himself to the spectators, interaction with the 'Annaviyar', his performance to the spectators around the 'kalari' and the exit are clearly exposes the politics of artistic creation of the character of Parai Araivon.

Parai Araivon is drunkard and defor med, Articulates unparliamentarily words, making obscene gestures and body langu ages, clothed in drags, careless with his

professional instrument and finally a visible illiterate are the highlighted qualities denotes the character.

The literature composed for the Parai Araivon is the written evidence of my argu ment and the performance dialogue between the Mathalam playing Annaviyar and Parai Araivon is more intoxicated than the written one and it differs to area to area. There are two texts for the character of Parai Araivon one is the written one and the other oral.

The beat systems of his dances and the notations of his songs are also set to meet the characteristics of Parai Araivon including his spoken words in the text and the impro vised.

The role of Parai Araivon is not played by the person from Paraiyar caste but from a person particularly an experienced one from the community which is performing the kooththu will play that role. There is no place for people from other castes particularly from the oppressed.

The construction of Parai Araivon character is totally against the will of the Paraiyar community and it's also used to attack other castes too.

Why the character of Parai Araivon is constructed in a way not acceptable to the Paraiyar caste? Who is responsible for this type of construction and what is the purpose behind it? How are we going to reason out this act aesthetically or politically? What is the politics behind the construction of Parai Araivon?

The other question is, is it reasonable to perform the character of Parai Araivon in the traditional way? There are two sides for it. One is stick to maintain the tradition and the other is refused to accept it and demand a change on it or total rejection of that character from Kooththu.

If the Kooththu as an art form needs comic element, it is the responsibility of the artists of the communities to introduce a character free of caste negations.

There are possibilities of creating comic characters from the art and literatures of the Thamils from the historic period. 'Komali' is and appropriate replacement which is the missing element in Kooththu but a cultural feature of Sri Lankan Thamils.

There are possibilities of manipulating the Parai Araivon character in a way positive to theatre and society. The charac ter of Parai Araivon would be utilized to create dialogues between actors and spectators in theatre.

'Mooppar' is a term to denote the chieftain of Paraiyar caste. The term is also denotes a person who guides the events and ceremonies from the front. 'Mooppukku Nitral' is a popular usage means 'guiding from the front'. 'Mooppar' is also has a negative connotation which depicts the dominating characteristics ('ivar periya moopar'). Generally people with know ledgeable and manageable capacities are considered or recognized with this term. In brief she is Master of ceremonies.

The possibilities of transforming the character of Parai Araivon parallel to Bolian "Joker" is dicussed extensively and explored. Parai Araivon could be and appropriate re placement for Bolian "Joker." It will provide a new perspective not only to the character of Parai Araivon but also to the caste issue.

Transformation of a negatively constructed character that does the part of

an announcer or messenger into and animator or mediator is an important program in the process of Reformulation of Kooththu as an organic form of community Theatre.

All the above mentioned reasons, questions, challenges, possibilities guided to engage in the issue of Parai into a reformulation process. The importance is given to collectivity in creation and expression, direct interactions, social gatherings which are the essence of Koothtthu.

Reformulation of Kooththu as an organic form of community Theatre is an activism in order to revive these features which are lost in the world and the basic requirements for a sustainable world full of sustainable communities connected by sisterhood.

There are critiques to this stand point from the section of the Paraiyar community itself and raising the reasonable question towards Third Eye, "Why are you imposing the rejected art upon us and why not make it for others. We want to get rid of this cursed art which spoiled our generations of life. Its enough of the reward the society gave to us for generations". Third Eye is always sensitive to critiques and questions in order to make the journey on an appropriate path.

In order to meet the demands and challenges, the Reformulation process is extended to deconstruct the traditional portrayal of Parai Araivon and recreated the character with a new dimension.

The Reformulation of Parai Araivon is a continuous process but the first phase took four months to reformulate the traditional character of Parai Araivon.

Thirdeye invited traditional drummers and Annaviyars (the masters of kooththu), the traditional theatre performers from different villages and styles (vadamody and thenmody), people engaged in people's art and its politics, interested people from the University to the activist movements, men women experts of traditional arts in the villages and the villagers of Seelamunai.

Issues were introduced to the open forum and discussed in groups, seminars organized in the open spaces under the palm trees, initiated forum theatre, enacted improvised plays, invited speakers related on the issues, interacting with different activists groups working with marginalized people, stimulate the participants to express their views other than oral communication such as articles, poems, stories, illustrations and paintings. The creative expressions were published and publicized through exhibitions and performances.

Mini libraries with fictions and non – fictions on related issues and audio visual spaces were created in the houses of Seelamunai, Batticaloa and introduced with feature and documentary film screenings followed by discussions, improvisations and forum theatre practices, elders were connected with children and youths to get the oral stories of the issues and every kind of possible ways and means were innovated to stimulate dialogues.

Special attention was paid to the position of women in the oppressed side to get their stories. These unread or unheard stories narrate the tragedies how women were affected because of the humiliation experienced by their men in the public and professional spaces and how it reflects within their huts.

The above process had provided an environment to realize the importance of deconstruction and recreation of the charac

ter of Parai Araivon. It is the key point in the process of reformulation. The question or demand for a change must arise from the participants.

The process of transformation was made in a way to achieve a positive result. The ways and means were analyzed to brin ging in appropriate beat systems and move ments for the new portrayal of the character. Various suggestions were put forwarded to make the positive change in the portrayal of the Parai Araivon character. One is to borrow elements from Parai Mela Kooththu and the possibilities were tried out in open forums with Parai Melam players and Anna viyars.

The possibilities of executing the instrument like in Parai Melam Dance per formance also tried out and incorporated instead of symbolic beating of the drum in the traditional way. Application of this ele ment enriches the aesthetic valour of the cha racter and the Kooththu too. It was apprecia ted in the open forum and accepted that this also will give another space to preserve and exhibit the power of Parai in a different way.

In the process of the reformulation of Parai Araivon, one Annaviyar intervened with another idea and it was unanimously accepted and acted out. He said instead of bringing in elements from Parai Mela Kooththu its better just change the same beat system designed for the Parai Araivon in a fast mode. This change had brought a dig nified stature to the character and the execution of the instrument to the new beat system added strength to it.

The Parai Melam exponent Parasura man had provided with songs from their oral histories and expressed his views for the composition of songs for the transformed character of 'Mooppar'.


History and literary studies, oral stories, views of people from various strata was conceived into the process of reformulation to transform the character Parai Araivon into 'Mooppar' the creation of 'Mooppar' as character in place of Parai Araivon and character cum facilitator in Kooththu performances away from ritual spaces are the results of this Reformulation process.

It's a great opportunity to make the issue of Parai and Paraiyar in a collective space like kooththu (traditional theatre) in order to make it as a social issue. Taking up the issue of parai araivon and reformulate it in kooththu. Space is not only an aspect of reformulation of a character. It's a medium to initiate a discourse in an artistic way and collectively on a depressive issue.

But it's a never ending process and a continuous journey.

Soon after the completion of the Reformulation process of Parai Araivon one of the senior Annaviyar and long term participant of the Reformulation of Kooththu process expressed his satisfaction of the Reformulation of the character but voiced his reservation on the possibilities of bringing in the character of Parai Araivon with the 'kolu', the arrival of main characters such as King, Queen, Prime Minister, Comman der in Chief in a group.

* * *



# GLOBAL WARMING AND CLIMATE CHANGES - an overview

**K.Kunaratnam,**
Emeritus Professor of Physics,
University of Jaffna

The term Global warming refers to the increase in the average temperature of the Earth's near-surface air and oceans since the mid twentieth century and its projected continuation. The average temperature of the air near the Earth's surface has increased by about 0.75 $^{0}$C over the hundred years ending in 2005. This increase in average temperature is expected to continue in the future and is likely to produce effects including climate changes which impact on human society.

**Past Climates** Many natural phenomena, such as the growth rate of a tree for example, are climate dependent. As such, they provide natural archives of climate information. Some useful paleoclimate data can be found in sources as tree rings, ice cores, corals, lake sediments including fossil insects and pollen data and ocean sediments. Some of these, including ice cores and tree rings provide us also with a chronology due to the nature of how they are formed, and so high resolution climate reconstruction is possible in these cases. However, there is no comprehensive 'network' of paleoclimate data as the presently available instrumental coverage. So global climate reconstructions are often difficult to obtain. Nevertheless, combining different types of paleoclimate records, scientists have been able to piece together a picture of the Earth's climate dating back decades to millions of years ago. These studies show that the Earth's climate has changed throughout history. There were periods called ice ages when parts of the Earth were covered by ice sheets and periods when the Earth seems to have been free of ice sheets even in the poles. The earliest ice age occurred some 2,500 million years ago and the latest began about 2 million years ago. Within the ice age itself there were colder periods called glacials when significant portions of the earth were covered by ice sheets and warmer periods called interglacials when ice sheets retreated towards the poles. The most recent glacial entered its coldest period about 22,000 years ago and ended about 12,000 years ago. We are currently in an interglacial period known as Holocene period.

Recent climate research suggests that interglacial climates, such as the present, tend to be more stable than cooler, glacial climates. For example, the climate during the current and previous interglacial periods has been more stable than the most recent glacial period, known as the Last Glacial Maximum. This glacial period was characterized by a long string of widespread, large and abrupt or rapid climate changes (NRC, 2002). Abrupt climate changes tend to frequently accompany transitions between glacial and interglacial periods and vice versa. For example, a significant part of the Northern Hemisphere, particularly around Greenland, may have experienced warming rates of 8-16°C over several decades during and after the most recent glacial period (IPCC, 2007).

While abrupt climate changes have occurred throughout the Earth's history, such changes are unlikely to happen in the near future as we are currently in a stable interglacial period which according to some estimates is expected to last for another twenty to thirty thousand years.





*Fig.1.Different reconstructions of temperature for the past 2000 years given as departures from the mean temperature for the period 1961-1990*

During the last 2,000 years, the climate has been relatively stable. Scientists have identified three departures from this stability, known as the Medieval Warm Period or the Medieval Climate Anomaly, the Little Ice Age and the Industrial Era.

**The Medieval Warm Period**:

Between roughly 900 and 1300 AD, evidence suggests Europe, Greenland and Asia experienced relative warmth. While historical accounts and other evidence document the warmth that occurred in some regions, the geographical extent, magnitude and timing of the warmth during this period is uncertain (NRC, 2006). The American West experienced very dry conditions around this time.

**The Little Ice Age**:

A wide variety of evidence supports the global existence of a "Little Ice Age" between about 1500 and 1850 (NRC, 2006). This was not a true ice age since no new major ice sheets developed during this period. Average temperatures were possibly up to 1.1°C colder than today, but varied by region. Widespread cooling was observed through out the North Atlantic region. Winters were more severe in Europe and eastern North America and mountain glaciers advanced throughout Europe. The changes in climate at this time caused much hardship and famine.

Fig 1 shows temperatures reconstructed from paleoclimate data for the past two thousand years.

**The Industrial Era**:

Since records began around 1860, globally-averaged surface temperatures have been rising. A definite warming trend of about 0.6 to 0.9°C occurred from 1906-2005 (see Fig 2). This warming occurred in both the Northern and Southern Hemispheres and over the oceans (IPCC, 2007). There is a high level of confidence that the global average temperature during the last few decades was warmer than any comparable period during the last 400 years. Present evidence suggests that temperatures at many, but not all, individual locations were higher during the past 25 years than any period of comparable length since A.D. 900. Eleven of the warmest years on record have occurred since 1990, and the five warmest of all have occurred in the last seven years. Because of these recent extremes, the pace at which average global temperatures have been rising, which amounted to about +0.6°C over the past century, accelerated in the past two decades to an equivalent rate of +1.0°C per century.





*Fig 2 Average Global Temperatures since 1850 expressed as departure from the mean temperature for 1961-2000*

**Natural causes of climate change**

Known natural causes of climate change include, changes in the Earth's orbit, continental drift, changes in the sun's radiation output, and volcanic eruptions.

The Earth's orbit changes from a near circular one to a more elliptical one with a period of about 100,000 years. The tilt of the Earths' axis relative to the plane of the Earth's orbit changes with a period of about 41,000 years and the orientation of the tilt changes with a period of around 19,000 to 23,000 years. These changes affect the amount of sun's radiation received on the Earth's surface. The effect is greatest when the maxima or minima of the three cyclic variations coincide. Changes in the earth's orbit and tilt are thought to be the most significant drivers of ice ages according to the theory of Mulitin Milankovitch, a Serbian mathematician (1879-1958).

Drift of continents may result in climate changes due to changes in location of the continents relative to the equator and due to changes in ocean current distributions caused by the drift.

Climate changes occurring due to changes in Earth's orbit or tilt or due to continental drift occur on time scales so large (tens of thousands of years) that they have little impact on changes on a decade to century time scale.

Changes in energy output from the sun affect the intensity of the sunlight that reaches the Earth's surface. The change can cause either warming, for stronger solar intensity, or cooling, for weaker solar intensity. According to NASA research, reduced solar activity from the 1400s to the 1700s as indicated by reduced sunspot numbers during this period, was likely a key factor in the "Little Ice Age" which resulted in a slight cooling of North America, Europe and probably other areas around the globe. The coldest interval of Little Ice Age occurred when the sun was observed to have minimum sunspots.

Volcanoes can affect the climate because they can emit aerosols (minute particulate matter) and carbon dioxide into the atmosphere. Volcanic aerosols tend to block sunlight and contribute to short term cooling. Aerosols do not produce long-term change because they leave the atmosphere not long after they are emitted. According to the United States Geological Survey (USGS), the eruption of the Tambora Volcano in Indonesia in 1815 lowered global temperatures by as much as 2.2°C and historical accounts in New England describe 1816 as "the year without a summer."

Volcanoes also release into the atmosphere carbon dioxide which causes warming of the earth by a process called green house effect. A major portion of the sun's radiation is contained in the visible spectrum and lesser amounts in the ultraviolet, infrared and other parts of the electromagnetic spectrum. Greenhouse gases allow most of the sun's radiation to reach the earth and heat its surface. The earth reradiates energy mostly as long wavelength heat (infrared) radiation and this energy is absorbed by the greenhouse gases and reradiated to the earth. A reduction in the amount of these gases in the atmosphere can cause cooling and an increase can result in warming. If these gases were absent in the atmosphere, the average temperature of the Earth's surface would be about $-18^0$ C instead of the present $15^0$ C. Their presence in the atmosphere is therefore essential for life on earth. So the concern is not with the fact that we have $CO_2$ and other greenhouse gases in the atmosphere but whether human activities are leading to an increase in the concentration of these gases causing an increase in the Earth's average surface temperature. For about two-thirds of the last 400 million years, geologic evidence

suggests $CO_2$ levels and temperatures were considerably higher than present.

The above natural causes or "drivers" of climate changes often trigger additional changes or "feedbacks" within the climate system that can amplify or dampen the climate's initial response to them. For instance, when global temperatures become warmer due to external drivers, carbon dioxide is released from the oceans to the atmosphere. The resulting increase in carbon dioxide concentration may amplify the warming by enhancing the greenhouse effect. When temperatures become cooler, $CO_2$ enters the ocean and contributes to additional cooling. During at least the last 650,000 years, $CO_2$ levels have tended to track the glacial cycles (IPCC, 2007). That is, during warm interglacial periods, $CO_2$ level have been high and during cool glacial periods, $CO_2$ levels have been low.

Another important feedback process is ice-albedo feedback.When global tempera tures increase, ice near the poles melts at an increasing rate. As the ice melts, land or open water takes its place. Both land and open water are on average less reflective than ice, and thus absorb more solar radiation. This causes more warming, which in turn causes more melting, and this cycle continues until other processes intervene and stop the cycle.

**Climate changes due to human activities:**

While volcanoes may have raised pre-historic $CO_2$ levels and temperatures, $CO_2$ emission by them is relatively modest now compared to some earlier times. Human activities now emit 130 times as much $CO_2$ as volcanoes. In addition to carbon dioxide, human activities have also added other potent greenhouse gases like Methane ($CH_4$), Nitrous Oxide ($N_2O$), Fluorocarbons and Sulfur hexafluoride since the beginning of the industrial period.

Carbon dioxide enters the atmosphere through the burning of fossil fuels (oil, natural gas, and coal), solid waste, trees and wood products, and also as a result of chemical reactions in industrial activities (e.g., manufacture of cement). Carbon dioxide is also removed from the atmosphere when it is absorbed by plants as part of the biological carbon cycle. Therefore, deforestation can also result in an increase in $CO_2$ levels in the atmosphere.

Pre-industrial levels of carbon dioxide were about 280 parts per million by volume (ppmv), and current levels are greater than 380 ppmv and increasing at a rate of 1.9 ppm $yr^{-1}$ since 2000. During the period 1990-2004 carbondioxide emmissions increased by 20%. The global concentration of $CO_2$ in our atmosphere today far exceeds the natural range over the last 650,000 years of 180 to 300 ppmv. According to the IPCC Special Report on Emission Scenarios (SRES), by the end of the 21st century, we could expect to see carbon dioxide concentrations of anywhere from 490 to 1260 ppm (75-350% above the pre-industrial concentration). Fig 3a shows the variation in carbondioxide levels from 1960 to 2005 at one location (Mauna Loa, Hawai). Fig 3b shows the variation in the average concentration of $CO_2$ over the period 1744-2005.





*Fig 3a*





*Fig 3b*

Methane is emitted during the production and transport of coal, natural gas, and oil. Methane emissions also result from livestock and other agricultural practices and by the decay of organic waste in municipal solid waste landfills. Methane emissions decreased by 10% during the period 1990-2004. The decline in methane emissions are due to a variety of technological, policy, and agricultural changes, such as increased capture of methane from landfills for energy, reduced emissions from natural gas systems, and declining cattle populations.

Nitrous oxide is emitted during agricultural and industrial activities, as well as during combustion of fossil fuels and solid waste. Nitrous oxide emissions have decreased by 2% from 1990-2004. At least some of the decline in nitrous oxide emissions is due to improved emissions control technologies in cars, trucks, and other mobile sources

Hydro fluorocarbons, per fluorocarbons, and sulfur hexafluoride are synthetic, powerful greenhouse gases that are emitted from a variety of industrial processes. Fluorinated gases are sometimes used as substitutes for ozone-depleting substances such as Chlorofluro carbons. These gases are typically emitted in smaller quantities, but they are potent greenhouse gases, and have high global warming potential.

The addition of greenhouse gases and aerosols has changed the composition of the atmosphere. The changes in the atmosphere have likely influenced temperature, precipitation, storms and sea level (IPCC, 2007). However, these features of the climate also vary naturally, so determining what fraction of climate changes are due to natural variability versus human activities is challenging. While some scientists have attributed most of the increase in the average global surface temperature to increase in greenhouse gas concentrations others have estimated that variation in the radiation output from the sun may have contributed about 45–50% of the increase in the average global surface temperature over the period 1900–2000, and about 25–35% between 1980 and 2000.

In addition to changes in the atmosphere's composition, changes in the land surface caused by human activity can have important effects on climate. For example, a change in land use and cover can affect temperature by changing how much solar radiation the land reflects and absorbs. Processes such as deforestation, reforestation, desertifi cation and urbanization often contribute to changes in temperature, wind and precipi tation in the places they occur. These effects may be significant regionally, but reduced when averaged over the entire globe.

**Future trends**

Many, but not all, human sources of greenhouse gas emissions are expected to rise in the future. This growth may be reduced by ongoing efforts to increase the use of newer, cleaner technologies and other measures. However, the major greenhouse gases like $CO_2$ emitted by human activities remain in the atmosphere for periods ranging from decades to centuries. It is therefore virtually certain that atmospheric concen trations of greenhouse gases will continue to rise over the next few decades. In the coming decades, scientists anticipate that as

atmospheric concentrations of greenhouse gases continue to rise, average global temperatures and sea levels will continue to rise and precipitation patterns will change.

Virtually all published estimates of how the climate could change in the future are produced by computer models of the Earth's climate system. Confidence in models comes from their physical basis and their skill in representing observed climate and past climate changes. Models have proven to be extremely important tools for simulating and understanding climate, and there is considerable confidence that they are able to provide credible quantitative estimates of future climate change, particularly at larger scales. Models continue to have significant limitations, such as in their representation of clouds, which lead to uncertainties in the magnitude and timing, as well as regional details, of predicted climate change. Nevertheless, over several decades of model development, they have consistently provided a robust and unambiguous picture of significant climate warming in response to increasing greenhouse gases. Fig 4 shows the global warming projections up to 2100 by different computer models, assuming the greenhouse gas concentrations continue to increase at the present rate.





*Fig4 Global warming projections up to the end of the present century*

**Effects of Global Warming and their impact on human society**

Many elements of human society and the environment are sensitive to climate change. Coastal zones, agriculture, natural ecosystems, human health are some important examples of climate-sensitive systems.

Rising average temperatures are already affecting the environment. Some observed changes include shrinking of glaciers, thawing of permafrost, later freezing and earlier break-up of ice on rivers and lakes, lengthening of growing seasons, shifts in plant and animal ranges and earlier flowering of trees (IPCC, 2007).

Increasing global temperature will cause sea level to rise and is expected to increase the intensity of extreme weather events and to change the amount and pattern of precipitation.Other effects of global warming include changes in agricultural yeilds, species extinctions and increases in the ranges of disease vectors.

**Sea level rise:**

Global mean sea level has been rising at an average rate of about 1.7 mm/year over the past 100 years (see Fig 5). This is significantly larger than the rate averaged over the last several thousand years. Depending on which greenhouse gas increase scenario is used (high or low) sea-level rise is projected to be anywhere from 0.18, for low greenhouse gas increase, to 0.59 meters for the highest greenhouse gas increase scenario. However, this increase is due mainly to thermal expansion and contributions from melting alpine glaciers, and does not include any potential contributions from melting ice sheets in Greenland or Antarctica. Larger increases cannot be excluded but current understanding of ice sheet dynamics renders uncertainties too large to be able to assess the likelihood of large-scale melting of these ice sheets. If

all the ice sheets in Greenland or Antarctica were to melt the sea level would rise by 7m and 57m respectively!

Rising sea levels inundate wetlands and other low-lying lands, erode beaches, intensify flooding, and increase the salinity of rivers, bays, and groundwater tables. Some of these effects may be further compounded by other effects of a changing climate.

Fig.5. Variation of mean sea level from 1870-2004 expressed as departure from mean sea level for 1961-1990.





*Fig.5. Variation of mean sea level from 1870-2004 expressed as departure from mean sea level for 1961-1990*

## Agricultural yields

Several factors directly connect climate change and agricultural productivity.

Average temperature increase, change in rainfall amount and patterns, rising atmospheric concentrations of $CO_2$ and pollution levels such as tropospheric ozone, are some.

An increase in average temperature can lengthen the growing season in regions with a relatively cool spring and fall; adversely affect crops in regions where summer heat already limits production; increase soil evaporation rates, and increase the chances of severe droughts.

Changes in rainfall can affect soil erosion rates and soil moisture, both of which are important for crop yields.

The IPCC predicts that precipitation will increase in high latitudes, and decrease in most subtropical land regions—some by as much as about 20 percent.

While regional precipitation will vary the number of extreme precipitation events is predicted to increase (IPCC, 2007).

Increasing atmospheric $CO_2$ levels, driven by emissions from human activities, can act as a fertilizer and enhance the growth of some crops such as wheat, rice and soybeans. $CO_2$ can be one of a number of limiting factors that, when increased, can enhance crop growth. Other limiting factors include water and nutrient availability. While it is expected that $CO_2$ fertilization will have a positive impact on some crops, other aspects of climate change (e.g., temperature and precipitation changes) may temper any beneficial $CO_2$ fertilization effect (IPCC, 2007).

Higher levels of ground level ozone limit the growth of crops. Since ozone levels in the lower atmosphere are shaped by both emissions and temperature, climate change will most likely increase ozone concentrations. Such changes may offset any beneficial yield effects that result from elevated $CO_2$ levels.

## Ecosystems and species extinctions

Climate is an integral part of ecosystems and organisms have adapted to their regional climate over time. Climate change is a factor that has the potential to alter ecosystems and the many resources and services they provide to each other and to society. Human societies depend on ecosystems for the natural resources they provide.

In various regions across the world, some high-latitude ecosystems have already been affected by changes in climate. The Intergovernmental Panel on Climate Change reviewed relevant published studies of biological systems and concluded that 20 percent to 30 percent of species assessed may be at risk of extinction from climate

change impacts within this century if global mean temperatures exceed 2-3$^0$C relative to pre-industrial levels (IPCC, 2007).

Climate changes can cause adverse or beneficial effects on species. For example, climate change could benefit certain plant or insect species by increasing their ranges. The resulting impacts on ecosystems and humans, however, could be positive or negative depending on whether these species were invasive (e.g., weeds or mosquitoes) or if they were valuable to humans (e.g., food crops or pollinating insects).

**Health and environment:**

Throughout the world, the prevalence of some diseases and other threats to human health depend largely on local climate.

Climate change may increase the risk of some infectious diseases, particularly those diseases that appear in warm areas and are spread by mosquitoes and other insects. These diseases include malaria, dengue fever, yellow fever, and encephalitis. Higher temperatures, in combination with favorable rainfall patterns, could prolong disease transmission seasons in some locations where certain diseases already exist. In other locations, climate change will decrease transmission via reductions in rainfall or temperatures that are too high for transmission. The IPCC has noted that the global population at risk from vector-borne malaria will increase by between 220 million and 400 million in the next century. While most of the increase is predicted to occur in Africa, some increased risk is projected in Britain, Australia, India and Portugal (IPCC, 2007). However, socioeconomic factors such as public health measures will play a large role in determining the existence or extent of such infections.

The extent of climate change effects, and whether these effects prove harmful or beneficial, will vary by region, over time, and with the ability of different societal and environmental systems to adapt to or cope with the change.

The Intergovernmental Panel on Climate Change (IPCC, 2007) concludes that "impacts of climate change will vary regionally but, aggregated and discounted to the present, they are very likely to impose net annual costs which will increase over time as global temperatures increase." The IPCC estimates that for increases in global mean temperature of less than 1-3°C above 1990 levels, some places and sectors will see beneficial impacts while others will experience harmful ones. Some low-latitude and polar regions are expected to experience net increase in costs even for small increases in temperature. For increases in temperature greater than 2-3°C, the IPCC says it is very likely that all regions will experience either declines in net benefits or increases in net costs. Taken as a whole, the IPCC concludes, that the net damage costs of climate change are likely to be significant and to increase over time.

Although scientists are certain that the trend of global warming will continue, important scientific questions remain about how much warming will occur, how fast it will occur, and how the warming will affect the rest of the climate system such as ocean currents, wind patterns, precipitation patterns and storms. Answering these questions will require advances in scientific knowledge in a number of areas.

It is hoped that such advances will take place in the next decade or so. Scientists will then be able to construct climate models which predict the future trend in climate changes with less uncertainty.

***References:***

1) Report of the Intergovernmental Panel on Climate Change (IPCC), 2007
2) Reports of the National Research Council, USA (NRC) 2002 and 2006.

* * *



# For Banking on Banks

**R. Suntharalingam**
B.A., Econ, FCIB (Lond),
M.A. Econ (Jaf)

The purpose of this piece is to give a broad overview of the Banking scenario in our country and indicate a few salient suggestions to regain the pristine position of Banks as repositories of Confidence.

Why is a Bank important? All Econo mies do have exchange and are largely monetized. Introduction of money was the way out of the need for double coincidence of needs, the basis of barter. Money became the common denominator and the price of all the items for exchange were expressed in the common denominator. Inconvenience of money for large transactions, risk of storage, transport etc were relieved by the advent of the Bank. Suffice it to say that money in all its full blown incarnations or manifestations found accommodation in the Bank as to unit of value, medium of exchange, store of value and medium of deferred payment to summarize the salient features, Monetization too has its sophistications and chequeless society is not a distant dream. Banks create money, retain money, store money, save money, lend money, transmit money and facilitate the use of money in numerous forms. As for our country ours is a monetized Economy but the Banking sector is yet to reach its desirable develop ment to ensure the facilitation of economic development in real terms. Many a descrip tive epithet is being used to describe the role of the Banks in the Economy. A Society is a social entity. When its "everyday busi ness of life" or economic activity is taken into consideration it is an economy, a polity when its political aspect is focused. The same entity appears in different forms reflecting its myriad roles in the life of man. Our focus is on one of the most important aspects of economic life for purposes of veracity.

Most of the economies are mixed economies in the sense of their being neither 100% capitalistic nor 100% socialistic or communist. Since the latter has lost most of its blocks and the need to introduce capitalist form of production and distribution it has rendered most of the economies to manifest characteristics more urbane to capitalism. Capitalism does not mean 100% private enterprise nor is the other form fully state owned. The correct admixture with the private sector as the engine of growth has proved to be beneficial to many countries. Most of the least developed countries have copied the worst of both words. Take the government corporations for instance in our country. These were intended to contain the best of both, the efficiency, productivity, profitability etc of the private sector and service and utility orientation of the state sector. Unfortunately they imbibed the worst of both worlds and have become White Elephants to say the least. In a lighter vein the fear of an unfortunate result of the intended union as expressed by George Bernard Shaw to the beautiful actress wooed him, of his shaggy beauty and her puny brain has materialized here.

When focusing on the banking sector it is often referred to as the forerunner of economic development and also the index of development. In the developed country every 1 in 4 or less is said to channel their transactions through the Bank. The bank account reveals the most intimate details of their economic life. In such a country banking habit is said to be highly developed. In our country banking density has crossed the 50% border but has huge potential yet to be tapped. Non-expansion may be attributed partly to the prevailing volatile situation when banks are wary about going beyond the suburbs. The Metropolis and its hinterland could be considered as an area with a heavy concentration of Banks and their branches, and are referred to as over banked. All the head offices or controlling offices are located there and branches are spewed in almost all the main centers and even streets. This has pushed the national average higher than the actual when the non-metropolitan branches especially those beyond the suburbs are taken into account separately. Every 10,000 of the population has to get a branch through out the country as per the accepted index. Another index is the composition of the money supply. If bank deposits and not the notes and coins account for substantially larger proportion in the money supply then the banking sector is said to be developed. In our country it is almost even. Banking habit is yet to seep in. The government sector and big business dominates the banking sector as customers. Our banking sector is composed of the Central Bank (Apex bank, or the Bankers' Bank), the Commercial Banks, and the specialized banks. The financial institutions as a broader category has to include the finance companies but unfortunately except for a handful like the, The Finance, The Central Finance and a few others, others have ceased to function except to discharge their depositor obligations.

Our focus is on the commercial banks in the country. They are composed of the branches of multinational banks, Indian banks, state banks and private commercial banks.

The history of banking in the country is linked to the last of the colonial masters, Britain. They have successfully transplanted their unified administrative system, road and railway network, commercial establishments and systems plantations and the banking system among others. Their banking systems which is relevant to our discussion is meant for a developed economy. It was main source of short term credit for working capital purpose of established commercial and industrial organizations. Banks offered self-liquidating short term facilities of a recurring nature mainly secured that too twice over and unsecured where the cautious, calculating banker sees little or nor risk in that transaction. It will be interesting to note that the 1st Banking Commission appointed on the agitation of the national leaders of commerce, chaired by Sir Sorabji Pochkha nawala recommended mixed banking and not the British type of banking. Mixed banking was prevalent in the European continent and was thought to be more suitable for a least developed country which was yearning for development through the ingress of long tern and medium term facilities and investment funds for them to build up their industries or business which were in the formative stages. Contrary to this appropriate recommendation by the commission that has studied the country situation deeply; the colonial government

preferred the known English model. Incidentally the secretary to the Commission was none other than the professor of Econo mics of the University of Ceylon up to the late 50s. It was the first meaningful report in that it studied and analyzed the economy and recommended feasible proposals which even included institutionalizing 'Cheetu' to mobilize idle funds.

In conformity to the belief that it is the dominant class or the ruling class that determines the form and content of the institutions that adorn the machinery of governance, the government introduced the banking institution of their choice. Here the colonial interest outweighed the national interest and the national voice was stilled. What was introduced was the watered down version of the British model. Thus was born the 1st indigenous bank, the Bank of Ceylon to fend its way through the uncharted course for itself. The Exchange banks and Indian banks have already established themselves and were branches of lager units in the home countries. Nevertheless Bank of Ceylon forged ahead as intended as the provider of short term credit with the clipped wings, receiver of deposits, collector of instruments of exchange, transmitter of funds doing thus the core functions of any banking institution. The custumers or clientele never went below the upper crust, or the fringe of the middle class or more particularly the upper middle class or professionals. For them or course the bank was not the source of funds but repository of their funds. It is the business community which found the shroff system of the exchange banks more irksome and expensive that turned to Bank of Ceylon for funds.

Those who needed the funds, those who were too poor to raise their funds from even private sources, those who were in what was known as the vicious circle of poverty were those who remained outside the bank's catchments area and were neglected. This hiatus was officially realized only in the 50s and the Sir Authur Ranasinha Committee recommended a Cooperative Development Bank to replace the poorly endowed Cooperative Federal Bank and the largely independent group of Cooperative provincial and District Banks. The federal bank though named as such was not a secondary union of the Cooperative banks in the desired sense. The Cooperative banks were independent units serving their local customers which were the primary and secondary societies mainly and other cooperative societies like the credit and thrift societies and the special ones like fisheries and labour societies. Individuals could open saving accounts.

The lack of banking facilities to those who had to be dragged out of the morass and the need to provide better credit and banking facilities to the undernourished and splintered cooperative network was sought to be rectified by the Cooperative Development Bank. Due to political changes the concept underwent changes but the core idea of filling hiatus was pursued by opening the Peoples Bank in 1961. The main purpose was to nurture and develop the Cooperative movement and the small man. As an adjunct to the main purposes the Bank was authorized to do commercial banking as well. After the late 80s the last item became the primary concern and the bank emerged as yet another commercial bank with their primany objectives though continued were given

step motherly treatment relevant to our discussion is the role of these two state banks more than the other commercial banks of the commercial banks the multinational branches prosper mainly because of their sophisticated services to the sophisticated clientele. They have even succeeded in floating a massive loan to the government itself for it to tide over its crisis. Even the local commercial banks are reaping the benefits of the permissive environment of the open economy, opened up in the late 70sof the last century and continue to remain open if not more open. It is often said that it is the interest spread that enables the state banks to survive and the commercial banks to flourish. The interest spread in the difference between what the bank pays to the depositor and what it receives from its borrower. It is also observed that the spread is sufficient for the state banks to survive because their lending is not purely commer cial propositions. Loans are extended not as banking propositions but as handouts at the behest of the powers that be multiplied by the precedent seekers from within as well. Weakness in such lending has been so massive that the non-performing advances have smeared the commercial and reliance image of the state banks. The state banks are called upon to the source of finance for the individuals and / or organizations closer to the government in power irrespective of whether they come within the ambit of credit worthy customers or not. The commercial banks rarely fall into the trap for they are commercial organizations doing commercial banking. When the bank commence judging every proposition on the merits of the case, the clientele is obligation to the bank and bank alone and not to any other intermediary, interventional force, institutional loyalty and customer attachment will be built up.

The current position of the banks can be discussed under a few salient heads. It is neither exhaustive nor is it meant to be destructive. It is to be springboard for objective discussion.

The 1st and foremost thing to be discus sed is the composition of the Board of Direc tors. It is a concentration of all 3 estates of gover nance as far as that institution is concerned. It is also referred to as the head and shoul ders of the institution. There was a move to commercialize the functioning of these banks as far as their business and the connected activities are concerned. The longstanding Treasury approval blockade was superfi cially removed. However they were brought into the decision making process as direc tors. The directorate is purely a nominated body by the government in power. The nomination has nothing to do with their capacity to run the financial institution or even simple honest men who can take sane decisions with the welfare of the institution only at heart. They have no stake in the insti tution though most of them are occupying very high positions in the state private sector with one common thread of purported loyal ty to the nominating authority. They are there to do the bidding of the government in power. They do not take independent decisions except where the interested party clause stands in the way of approving facilities for those who are near and dear or to themselves.

The next one is the composition of the staff. The commercial banks follow the British tradition of 'Catch them young' with the basic entry point qualification and mould them as bankers by 'on the job training' or hands on approach, buttressed by relevant banking and lateral qualification like the associate ship of the Chartered Institute of

Bankers, Information technology, insurance, marketing of financial instruments and others useful for banking and high finance.

The bank of Ceylon has its own set of home grown products. Their orientation is trudging along and their position and promotions are based on the time honoured concepts of seniority in the grade and absence of adverse records. This had the advantage of their being absolutely loyal and submissive as long as the queue remained intact for their survival depended more on the good reports of their superiors rather than their actual individual performance. Performance is reckoned as that of the branch and the individual's contribution gets submerged in the general record. Branch performance is for all practical purposes the Manager's performance, the share of the others get recognized only if the manager condescends to bring it out into the open.

Unlike the above which was the 1st indigenous bank the Peoples Bank was the 2nd indigenous bank brought in to fill the hiatus left not only by the exchange and Indian banks but also by the 1st indigenous bank. The Bank of Ceylon head at that time was unfairly criticized for being 'the Chettiar of York Street'. They religiously confined themselves to the purpose for which they were established by the government at that time as a commercial bank in the traditional mould based on the British model. They could not have deviated from their legal constraints, however pressing need for changes was. The desired needs were subsequently atten ded to by the relevant amendment to their act Peoples Bank was ushered in with lot of fanfare to cater to the small man the environment was made conducive for its development by concessions not extended to others. The small man found the way into the portals of this bank and the banking world subsequently. The Bank architecture in the case of established commercial banks was formidable in the sense they manifested a Cathedral cum fortress appearance. This probably may be one of the reasons which prompted Peoples Bank to open branches in the bazaars to be like any other commercial establishment.

Pawn broking which was considered anathema by the dignified banking community was introduced by the Peoples Bank It was a boon to the common man. He got a reasonable amount to satisfy his requirement at a reasonable rate of interest with provisions to get the left over balance after the auction in case he fails to redeem or renew. At the end of 1 year the articles become the absolute property of the pawn broker and the fate of the article hangs on the tender mercy of the pawn broker. Licensed pawn broker is a rarity. It is more a cottage industry when the moneyed house holder or boutique keeper is the common pawn broker and is invariably without a license.

Almost all the banks have this service now with embellishments and concessions. The rapacious pawnbrokers may offer a higher advance but their average interest is 4 to 5% pm (48 to 60% pa) whereas the banks 'interest if reckoned in market terms is 2% pm or 24% pa. Even this is considered as high because if the interest is related to the security the security offered is not gilt edged but gold itself. However it is contended that the purpose is mostly for consumption or other non-productive expenditure and attendant expense factors are the determinants.

The delving into the composition of the staff of Peoples Bank may be a pointer to the cross purposes at which the bank's progress has been dotted with. The bank attracted staff from other commercial banks especially Bank of Ceylon with various incentives like a grade higher than they were in, continuity of service, pension for past services as well as marks for same to ensure further promotions, language proficiency concessions etc in spite of their severance and substitution of a fresh contract of employment. Net were the Cooperative Federal Bank staff which was absorbed under section 23 of the Peoples Bank Act, and thus were treated at par with the 1st category. The 3rd group was the Cooperative Bank staff absorbed at the formative stage in 1961 under section 24 of the act and the next group was the direct recruits with the requisite entry point qualifications yet they failed to come into their own positions and placements commen surate with their qualifications and track record, till about the 80s when the dominance of the non-home grown group was getting abated. The last and the least in importance was the Cooperative Bank staff absorbed from the left over Cooperative Banks in 1971 with the change of government. This along with the periodical injection of experts in various fields sans banking knowledge put the bank on a confused course almost directionless, yet drifting along with very good earnings purely because of the massive initial growth, loyalty of the core staff, and the protective care of successive govern ments. It flourished under a protective environment. To reiterate, in spite of the imposed weaknesses it grew because of the inherent strength of the customers it sought to serve. It is wondered how the bank prospered during the last 4 decades in spite of the weaknesses as to the composition of the staff who were at cross purposes with each other. The ex-commercial bank staff spawned a superiority based on their purported knowledge in commercial banking. This knowledge was learnt more on the job than through scientific imparting.

The unfortunate composition was made worse by the emerging politicization. The country was moving in that direction and the state banks were no exception.

It is often said about the nationalized banks in India that they were not there to make advances to the needy but to satisfy the political advancement of the needy leaders of the ruling party of the time. There were instances when nationalized banks were called upon to distribute loans to mark the birthdays of leaders. Though our situation was not that bad, branches were opened to satisfy the whims and fancies of political leaders. Branches normally are opened after a feasibility study, a mobile service and the relevant Central Bank approval. When the politician wants a branch at his doorstep even those preliminary steps are overlooked and the opening is fixed in a location chosen by the political leader, may be even the staff were chosen to satisfy the political leader.

Loans in such a branch will invariably be a one way flow and the nonperforming advances will be a bulky accumulation.

Politicization seeps in with the appoint ment not only the heads and shoulders but also of the other fulltime staff. Since they come with the silver spoon of political patronage they are beyond the pale of disciplinary controls. Even their misdemeanors and serious offences had been overlooked.

Banks as they are, are manifesting some or all the weaknesses enumerated above. The picture is bleak but not hopeless. What we have missed by the circumstances the country has gone through can be rectified and should be rectified.

There are certain norms the banks have to follow if they have to serve the country as they should. Though there is enough discussion about barefoot banking, grass roots and the living example of Professor Yoonus our banks are still security cum profit oriented traditional bankers of the outdated English model.

In this context in may be apt to refer to public passenger transport in the country. In the 50s it was in the private hands. Except for the South Western Bus company and a very few others services were far from desirable. With the nationalization of public passenger transport it became the state property. It had very good beginning under an efficient and dedicated civil servant. This was not to be continuously. Politicization, pilfering at various levels and the union hegemony among others brought the massive organization, the Ceylon Transport Board to a deplorable if not pathetic situation. It became a sick elephant. It had its good days even later but its bad days outnumbered it. It became an outlet for packing the unemployable henchmen. So much so the crew for a bus multiplied to over 21. This was the downfall of the public passenger transport system. Now it is neither privately owned nor publicly owned. It is in a parlous state. A private individual begs, borrows or pawns and buys a reconditioned vehicle and at end of 2 or 3 years he would have cleared his debts and invested in another vehicle. If an individual can do it why cannot it be successful on a larger canvas? May be state ownership has to be public ownership with the public as direct shareholders without room for concentration in the hands of a few through devious and dubious means.

Such a malady did not afflict the banking sector though the banking sector has its own problems. It is partly because of the nature of business (finance) its importance in the economy as the lubricant that moves all other components, the progressive automation and the need for computer literacy, globalization and also the need for alertness on the part of the clientele.

Banks as the are have many more undesirable development. If the country is to bank on the banks as vehicle of development we have to concentrate on the following at least.

1. Lending should be based purely on the principles of good lending.

2. The nonperforming loans should not be passed on to another institution. It should be reviewed and the root cause of the default has to be located instead of hiding behind influencing as the only reason for that lending. Most of the defaulted loans will have tell – tale evidence to point out the root cause and who caused it. The state and other agencies have to summon enough courage to bring the miscreants to book.

3. Recruitments should be the banks' responsibility to meet their requirements not creation of vote banks for the political leaders.

4. Inspections and inquiries must be routine items of control and not weapons

for vengeance. It should not be to white wash the favourites and punish the non-favourites. The inspectors should return to their kennels as watch dogs and not be roaming about as blood hounds on hunting expeditions.

5. Banks should be managed by bankers or technocrats with banking knowledge, or those receptive to professional banking advice with a dedicated team of tried and tested bank staff and not political nominees or even appointees It should also not be by run of the mill administrators rising from the ranks.

6. Central Bank should return to its original role of being the Bankers' Banker, the lender of last resort, and its banking supervision department must play a dynamic role and must be manned by staff sufficiently proficient in commercial banking practice and law.

7. The Trade Unions should serve their members that too positively and not their political mentors at the expense of the welfare of the members.

8. Branches should be opened where the banking services are required and not to boost anybody's image or to cause inter bank competition especially with the other state banks. The state banks should be complementary and not competitive, for both are state owned for the public welfare.

9. Staff should not be academically and / or professionally qualified only. Probation period is a valuable method of sifting the grain from the chaff. They should be competent knowledgeable workers having a proven track record before they could aspire for higher positions. The old queue system of seniority and absence of adverse record will continue ot be preferable if the qualifications are unrelated paper qualifications and are nor applicable and useful to their job in hand Graduation is and initial step. Graduates cannot afford to rest on their scrolls they have to continue to learn and learn to work as well.

The above exposition in not meant to be the last word on the subject. Neither is it an exhaustive and all inclusive analysis, diagnosis and prescription for sure fire cure. It is more intricate to be dealt with in such a concise piece.

Intention is not to spell out the full fledged recipe for the Banking on banks i.e. relying, depending, and looking for support on the banks to deliver the goods. As in any recipe there is no formula for quantifying all the ingredients. There is always the most important ingredient Salt. What does the recipe book say? "Add salt to taste" There is always something that can change the whole picture our Country needs it.

❖ ❖ ❖

There is nothing that wastes the body like worry, and one who has any faith in God should be ashamed to worry about anything whatsoever.

**- Mohandas Gandhi**




அதியர் செ. சிவஞானம்
மணி விழா

அதிபர் செ. சிவநடராசா

மணி விழா


அதிபர் செ. சிவஞானா

மணி விழா













Printed by: ANDRA DIGITAL IMAGE T.P: 021-4590288